D
V21,31 N66
N66.37
137842

RAu 1197/Sx/76
ASO83 2/2

D
V211,31'N66
N66.37
137842

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

EIGHTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18th, 19th, 21st, 22nd and 24th March 1966.

Volume XXXVII (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS

PAGES

Friday, 18th March 1966.

I Questions and Answers 1-16

II Announcement—Alleged distorted reporting in "The Hindu" .. 17

III Voting on Demands for Grants for 1966-67—(*cont.*)—
(1) Demand No. II—Motor Vehicles Acts—Administration .. 17-65
(2) Demand No. XXX—Road Transport Schemes ..
(3) Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes .. .. } 65-104

IV Papers laid on the Table of the House 104

Saturday, 19th March 1966.

I Questions and Answers 113-126

II Announcement—
Discussion for short duration on the order served on Sri Umanath, M.P. on parole 126-127

III Voting on Demands for Grants for 1966-67—(*cont.*)—
Demand No. III—General Sales Tax and other Taxes and Duties—Administration 127-183

IV Discussion for short duration on the order served on Sri Umanath, M.P. on parole 183-207

V Papers laid on the Table of the House 207-20

	PAGES.
Monday, 21st March 1966.	
I Questions and Answers	211–227
II Adjournment Motion— Repatriation of Ceylon nationals of Indian origin	227–231
III Privilege Matters—	
(1) Alleged distorted reporting in "The Hindu"	231–239
(2) Prosecution of a Member on his forwarding to the Chief Minister a petition containing allegedly false accusations against police officials	239–234
IV Announcements—	
(1) Privilege matter re action taken against an employee of the Madurai Meenakshi Sundareswarar Devasthanam ..	239
(2) Nomination to the Committee on Subordinate Legislation ..	245
V Calling attention to collection of betterment tax and consequent distress of ryots of Tirunelveli district	244–245
VI Government Resolution— Association of Council Members with the Committee on Subordinate Legislation	245
VII Voting on Demands for Grants for 1966-67—(*cont.*)— (1) Demand No. XIV—Medical .. (2) Demand No. XV—Public Health .. .. (3) Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.	245–336
VIII Papers laid on the Table of the House	336
Tuesday, 22nd March 1966.	
I Questions and Answers	361–383
II Request for Half-hour debate	384–386
III Voting on Demands for Grants for 1966-67—(*cont.*)— Demand No. XXV-Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes	386–488
IV Papers laid on the Table of the House	488
Thursday, 24th March 1966.	
I Questions and Answers	493–512
II Adjournment Motion—Failure of Government to prevent closure of Textile Mills	512–513
III Privilege Matter—Dismissal of a temple servant of Meenakshi Sundareswarar Devasthanam, Madurai	513–522
IV Voting on Demands for Grants for 1966-67—(*cont.*)— (1) Demand No. XXI—Cinchona .. (2) Demand No. XXXV—Forest Department .. .. (3) Demand No. XLV—Capital Outlay on Forests .. .. (4) Demand No. XXII—Khadi	522–562
(5) Demand No. X—Administration of Justice	562–582
V Papers laid on the Table of the House	582–604
	604–605

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the table of the House are indexed only under the Main heading "Papers laid on the table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading 'Chair'.

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.

G.D.	General Discussion.
H.A.H. Dis/H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 18th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சிறு தொழில் அபிவிருத்தி

*332 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறுதொழிலபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை உதவித் தொகை தந்து வளர்க்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை என்ன?

(இ) அந்த தொழிற்சாலைகளுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ள உதவித் தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) It is presumed that the Member is referring to the loans given under the State Aid to Industries Act, 1922. During the period from April 1956 to November 1965, covered by the II and III Five-Year Plans, 30,268 Small Scale Units received financial assistance to the tune of Rs. 2,39,59,574 in the shape of loans under the said Act.

திரு. வை. சங்கரன்: இந்தக் கடன்களுக்கு உதவி அளிப்பதில் எப்படிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டும், எந்தெந்தத் தொழில்களுக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்பதுபோன்ற விதிமுறைகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விதிகளெல்லாம் போடப்பட்டிருக்கின்றன. ஒன்று இரண்டு வேண்டுமானால் சொல்லுகிறேன்.

Construction of factory buildings or workshed.

Purchase of tools equipment and machinery.

Discharge of existing liabilities.

இதுமாதிரி கண்டிஷன்கள் இருக்கின்றன.

திரு. வை. சங்கரன்: "Already not attracted by private enterprises" அதாவது, ஏற்கெனவே நம் நாட்டில் ஆரம்பிக்கப்படாத புதுத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு விதிமுறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[18th March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுவும் ஒரு விதிதான்.

திரு. ஜே. மாதா கவுடர் : பாக்டரி பில்டிங் கட்டுவதற்கு உதவி செய்யப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பில்டிங் கட்டுவதற்கு அவர்கள் என்ன ஈடு கொடுக்கவேண்டும். சொந்த சொத்து ஜாமீன் கொடுக்கவேண்டுமா ? அல்லது வேறு ஏதாவது கொடுக்கவேண்டுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சொந்த சொத்து ஜாமீன் கொடுக்கவேண்டும். ஒரு கடனுக்கு சொந்த சொத்துக்களை மார்ட்கேஜ் அல்லது அடமானம் முதலியவை செய்து ஜாமீன் கொடுக்க வேண்டும்.

திரு. வை. சங்கரன் : கடன் தொகை ஒரே அடியாக மொத்தமாகக் கொடுக்கப்படுமா ? அல்லது இன்ஸ்டால்மெண்டாக அவ்வப்போது வேலை நடந்த பிறகு சரிப்பார்த்த பின் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது தேவையைப் பொறுத்தது. இயந்திரமாக இருந்தால் உடனடியாக எல்லாம் கொடுக்கப்படுகிறது. கட்டடம் முதலியவைகளாக இருந்தால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கப்படும்.

'சிமெண்ட்' தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி

* 333 கேள்வி.—**திரு. சா. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில்ளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் அரசினர் துறையில் புதியதாக செமெண்ட் தொழிற்சாலையொன்று துவக்கப்பட இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவு ?

(உ) நாளொன்றுக்கு எவ்வளவு சிமெண்ட் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*c*) An experimental small-scale cement plant is being set up in Tiruchirappalli district.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை டால்மியாபுரத்திற்கு அருகே துவங்கப்போவதாகத் தெரிகிறது. டால்மியாபுரத்தில் ஏற்கனவே ஒரு தொழிற்சாலை தனியார் துறையில் இருந்து வருகிறது. இந்தப் புதிய தொழிற்சாலையும் அங்கே திருவப்படுவதால், அங்கே கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சர்க்கார் துறையிலே ஸ்மால் ஸ்கேலிலே சர்க்கார் அமைக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலை. இதை அரியலூரில் அமைப்பதற்கு ஏற்பாடு

18th March 1966]

கிறோம். வேறு தொழிற்சாலையைப்பற்றி கனம் அங்கத்தினர் மனதில் வைத்திருந்தால், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்லப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சர்க்கார் துறையில் அமைக்கப்படும் செமெண்ட் தொழிற்சாலை எப்போது உற்பத்தியைத் தொடங்கும் என்று சொல்லமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது எக்ஸ்பெரிமெண்டல் தொழிற்சாலை என்று சொன்னேன். பைலட் ப்ராஜக்ட்டாக சர்க்கார் துறையிலே செமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தி அதை ஆராய்ச்சி செய்வதற்காகத்தான் இது பூர்வாங்கமான ஏற்பாடு என்று சொன்னேன். இப்போது எரக்ஷன் நடந்துக்கொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் முடியும் என்று சொல்வதற்கில்லை.

திரு. சா. ராமசாமி : டால்மியா செமெண்ட் தொழிற்சாலைக்கு ஒரு மைலுக்குப்பக்கத்தில் முருவத்தூர் என்ற இடத்தில் அரசாங்கம் செமண்ட் தொழிற்சாலைக்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அது எந்த முறையில் ஆரம்பிக்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருச்சி ஜில்லாவிலே சர்க்கார் துறையில் பெரிய தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான எந்த உத்தேசமும் கிடையாது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : செமண்ட் பிரச்சினை பெரிய பிரச்னையாக இருக்கிற காரணத்தினால் சர்க்கார் துறையிலும், தனியார் துறையிலும் எந்தெந்த இடங்களில் செமெண்ட் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் லிஸ்ட் வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜியலாஜிகல் சர்வே செய்திருக்கிறோம். எந்தெந்த இடங்களில் போதிய அளவு சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது என்று ஜியலாஜிகல் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்து தொழிற்சாலை வைப்பதற்கு யாரேனும் முன்வந்தால் சர்க்கார் உதவி செய்யும். இப்பொழுது இருக்கிற திட்டப்படி சர்க்கார் துறையிலே இராமநாதபுரம் ஜில்லாவிலே தொழிற்சாலை ஆரம்பிக்கிறோம். இராமேஸ்வரம் பக்கத்தில் ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : செமெண்ட் ஸ்மால் ஸ்கேலில் உற்பத்தி செய்யமுடியும் என்பதை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறதா ? அம்மாதிரி ஆரம்பிக்க தனியார் அனுமதி கேட்டால், அனுமதி அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறு வகையிலே செய்ய முடியும் என்பதுதான் சர்க்காருடைய நம்பிக்கை. அவ்வாறு பல தடவை இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். சர்க்காரே அதை நிரூபித்துக் காண்பிப்பதற்காக டெமான்ஸ்ட்ரேஷன்

[18th March 1966

பிளான்ட் ஆகப் போட்டிருக்கிறோம். தனியார் துறையில் இவ்வாறு அனுமதி கேட்பவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதற்காக மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்கிறோம். ஒன்று இரண்டு கிடைத்திருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : தனியார் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிற செமெண்டை சர்க்கார் கட்டடங்களுக்கு வாங்கிக் கொள்கிற காரணத்தால், செமெண்ட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால், சர்க்காருடைய கட்டடங்கள் பூராவும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

‘டாங்கி’க் தொழிற்சாலை, ஆவடி

* 334 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆவடியில் டாங்கித் தொழிற்சாலை நிறுவும் வேலை தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) அங்கு உருவாக்கப்படும் முதல் டாங்கி எப்போது வெளிவரும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) தொழிற்சாலை நிறுவும் வேலை திட்டப்படி நடந்தேறி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) விஜயாந்தா என்ற பெயர் சூட்டப்பட்டுள்ள முதல் டாங்கி 29-12-1965 அன்று தொழிற்சாலையிலிருந்து வெளி வந்தது.

திரு. வை. சங்கரன் : இது எத்தனை ஹார்ஸ் பவர் திறன் கொண்டதாக இருக்கிறது ? இதனுடைய சிறப்புக்கள் என்ன என்பதைப் பற்றி சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவையெல்லாம் டிஃபென்ஸ் மேட்டர். இதைப்பற்றி எந்தத் தகவலும் கொடுப்பதற்கில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : வருடத்திற்கு எத்தனை டாங்குகள் இதில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை சொல்ல முடியுமா ? பாட்டன் டாங்க்-களை முறியடிக்கக்கூடிய விதத்தில் இந்த டாங்க்கள் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பதில் அளிக்க இயலாது.

Defence oriented industries

* 335 *Q.*—**Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal for giving special consideration in respect of priority, financial help, etc., in starting defence oriented industries in the private sector; and

(*b*) if so, the details thereof?

18th March 1966]

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government of India have under consideration, a proposal to encourage industries to take up production of Defence Stores, Components and other technical products. For this purpose, they propose to extend necessary help in matters like supply of scarce raw materials.

திரு. வை. சங்கரன் : தனியார் துறையில் டிஃபென்ஸ்-க்கு இன்னின்ன ‘காம்போனன்ட்ஸ்’ வேண்டும், அதை தயாரிக்க வேண்டும், என்று ஏதாவது லிஸ்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அவ்விதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அவ்விதம் தயாரிக்க யாராவது முன் வந்திருக்கிறார்களா ? அதற்காக லைசென்ஸ் யாருக்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதுகாப்புக்குத் தேவையான உறுப்புகளை செய்வதற்காக அந்த இலாகா அதிகாரிகள் இங்கு வந்து ஸ்மால் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் போன்ற இடங்களில் தெரிவிக்கின்றார்கள். என்னென்ன தேவை என்பதை விளக்கக்கூடிய வகையில் தேவையான பொருட்களை எக்சிபிஷனில் வைக்கிறார்கள்—அதைப்பார்த்து, நம்முடைய சிறு தொழில் ஸ்தாபனங்கள் உறுப்புக்களை செய்யமுடியுமா, போதுமான அளவுக்கு சப்ளை செய்ய முடியுமா என்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இப்போது பிஸ்டல், ரிவால்வர், போன்றவை கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே திருச்சியில் பிஸ்டல், ரிவால்வர் போன்றவற்றை தயாரிக்க முடியுமா ? அதற்காக தனியார்கள் யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

போலீசாருக்கு இடவசதி

* 336 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போலீஸ் கான்ஸ்டேபிள்கள், ஹெட்கான்ஸ்டேபிள்கள் பணிபுரியும் இடங்களிலிருந்து, மாவட்டத் தலைநகரங்களுக்கு டூட்டியில் போகும்பொழுது தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அலுவல் முறையில் மாவட்டத் தலைமையிடங்களில் பணியாற்றச் செல்லும் தலைமைக்கான்ஸ்டேபிள்கள், போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு வடஆர்க்காடு, தஞ்சாவூர், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் இவர்கள் தங்குவதற்கென்று தனிப்பட்ட இடவசதி எதுவுமில்லை. மேற்படி

காரியத்திற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தாற்காலிக கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் இவர்களுக்கு தங்குமிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களிலும், குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் எப்போது இப்படிப்பட்ட வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்போது அமைக்கப்படும் என்று சொல்ல முடியாது. அரசாங்கத்தில் இருக்கின்ற நிதி வசதிக்கு ஏற்ப ஒவ்வொன்றாக எடுத்து ஒத்தாசை உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தாலுக்காக்களிலிருந்து தலைநகரங்களுக்கு போகிறபொழுது கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் இவர்கள் இரவு நேரங்களில் தங்கவேண்டுமென்றால், சப்-ஜெயிலில் அல்லது போலீஸ் ஸ்டேஷனில்தான் தங்கவேண்டியிருக்கிறது. இதை தவிர்ப்பதற்கு ஏற்ற முறையில் அவர்கள் தங்களுக்கு வசதியாக அவர்களைப்பற்றி குறைகள் வராத முறையில் தங்குவதற்கு உடனடியாக சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் போலீஸ் க்ளப் இருக்கிறதோ, அங்கே போலீஸ்காரர்கள் போகும்போது, அந்த இடத்தில் தங்கிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட வசதியில்லாத இடங்களில் போலீஸ் ஸ்டேஷனில் தங்குகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் தங்குவது நியாயமும் கூடத்தான். அரசாங்கம் அவ்வப்போது ஆலோசித்து இவர்கள் தங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறது. உடனடியாக எதுவும் செய்து விட முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், சில மாவட்டங்களில் இவர்கள் தங்குவதற்காக இடவசதி இருப்பதாகத் தெரிகிறது. இவ்விதம் அவர்கள் தங்கும்போது அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறதா அல்லது இலவசமாக தங்குகிறார்களா ? இது போன்ற மற்ற மாவட்டங்களின் தலைநகரங்களிலும் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க அரசாங்கத்தினிடம் திட்டங்கள் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : குறிப்பிட்ட போலீஸ் சம்பந்தப்பட்ட க்ளப்களில் தங்கினால்—அதாவது சென்னை போன்ற இடங்களில் இருக்கின்ற க்ளப்-களில் தங்கினால்—கட்டணம் வசூலிப்பதில்லை. ஆனால், அவர்கள் அங்கேயே சாப்பிட்டுக்கொள்வதற்கான வசதி இப்போது இல்லை. மேலும், எங்கெங்கு இவ்விதம் அமைக்க முடியுமோ அங்கெல்லாம் அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணியிருக்கிறது.

ஊர்க்காவல் படைகள்

*337 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊர்க்காவல் படைகள் எத்தனை அணிகளை ஏற்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது ?

(இ) எத்தனை அணிகள் ஏற்படுத்தப்பட்டன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 40,400 ஊர்க்காவல் படையினரைக் கொண்ட 367 ஊர்க்காவல் படை அணிகளை இம்மாநிலத்தில் ஏற்படுத்துவதென்ற ஓர் அளவை இந்திய அரசு நிச்சயித்துள்ளது.

(இ) 1965 டிசம்பர் 31-ம் தேதி வரையில் 9,890 ஊர்க்காவல் படையினரைக் கொண்ட 89 ஊர்க்காவல் படை அணிகள் இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை எந்த அடிப்படையில் அமைப்படுகிறது? ஜனத்தொகை அடிப்படையில் அமைப்படுகிறதா அல்லது வேறு எந்த முறையில் அமைக்கப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : ஜனத்தொகை அடிப்படையில் அமைக்கப்படுவதில்லை. குறிப்பாக, சமுதாயத்திற்கு பெருந் தொண்டு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அதிலும் நமது நாட்டுக்கு சோதனைகள் வந்த காலத்தில் இப்படிப்பட்ட படைகளின் உதவி நமக்குத் தேவையாக இருந்தது, போலீசுக்கு தேவையாக இருந்தது. இப்படிப்பட்ட பெரு நோக்கத்தோடுதான் இந்தப் படை அமைக்கப்படுகிறது.

சக்கம்பேட்டை பஞ்சாயத்து

*338 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் தலநிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், மரக்காணம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சக்கம்பேட்டை பஞ்சாயத்து 1963-64, 1964-65-ம் வருடங்களுக்கு ஆடிட் செய்யப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சக்கம்பேட்டை பஞ்சாயத்தின் 1963-64-ம் ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்குகள் 1964-ம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் தணிக்கை செய்யப்பட்டன. 1964-65-ம் ஆண்டுக்கான வரவு-செலவுக் கணக்குகள் இன்னும் தணிக்கை செய்யப்படவில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தணிக்கை செய்யப்பட்ட கணக்கில் பஞ்சாயத்து தலைவர் கையாடல் செய்திருப்பதாக கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எல்லா ஐட்டங்களிலும் இல்லை. ஒரு சில ஐட்டங்களில் பணம் கட்டவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சில ஐட்டங்களில் பஞ்சாயத்து தலைவர் தகுந்த பதில் தரவேண்டும் என்றும் வவுச்சர் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத் தில் பதில் அளிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்படுகின்ற பதில் திருப்தியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. திருப்தியாக இல்லாவிட் டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்?

திரு. ஆ. தங்கவேலு : எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முப்பது ரூபாய் ஒரு ஐட்டத்தில், 40 ரூபாய் இன்னொரு ஐட்டத்தில், பிற ஐட்டங்களைப்பற்றி எல்லாம் அவரிடமிருந்து பதில் வந்த பிறகு, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. கமலநாதன் : எந்தெந்த இனங்களில் இவ்வாறு தவருக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மரம் ஏலம் விடுதல், மீன் குத்தகை விடுதல், சாலை வீதி வேலைகள் இது போன்ற அம்சங்கள் தான். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

தேசியப் பாதுகாப்பு நிதி

*339 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :**
திரு. எம். எஸ். மணி : } கனம் முதல்
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சமீபத்தில் தமிழ்நாட்டு முக்கிய நகரங்களுக்கு சினிமா நடிகர்கள் யுத்த நிதித் திரட்டச் சென்ருர்களா ?

(இ) அவர்கள் சுற்று பிரயாணச் செலவு சர்க்கார் ஏற்றுக் கொண்டதா ?

(உ) ஆமெனில், மொத்தச் செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No.

(*c*) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த சினிமா நடிகர்கள் வசூலித்து கொடுத்த தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாடகங்கள் மூலமாகவும் மற்றும் பல ஜில்லாக்களிலும் வசூலித்த மொத்தத் தொகை ரூ. 15,10,415; இதற்கு ஆன செலவு ரூ. 63,869-42 பைசா. நிகர வருமானம் ரூ. 14,46,545-58 பைசா.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்த நிதி வசூலிப்பதில் எந்தெந்த நடிகர்கள் முக்கியமாக முயற்சி எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரங்களெல்லாம் என்னிடம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, யுத்த நிதி திரட்டச் சென்றபோது ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் கட்டாயமாக டிக்கெட்டுகளை விற்ருர்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது யுத்த நிதிக்காக அல்ல—ஜவான்களுடைய குடும்பங்களுக்கு வசதி தேடுவதற்காக, ஜவான் களுக்கு வசதி தேடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாரி கள் கட்டாயப்படுத்திப் பணம் வசூலித்தார்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு ஒன்றும் கட்டாயப்படுத்தப்படவில்லை. மக்கள் ஜவான்களுடைய குடும்பங்களுக்கு உதவி அளிக்கவேண்டும் என்று ஆர்வத்துடன் உற்சாகத்துடன் இருந்தார்கள். அதோடு சிறந்த நடிகர்கள் நாடகம் நடிக்கிருர்கள் என்ருல் அதைப் பார்க்கவேண்டுமென்றும் ஆசை. அப்படி இரண்டும் சேர்ந்து, மக்கள் தாராளமாக உதவி அளித்தார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, சினிமா நடிகர்கள் தாங்களாகவே முன் வந்து நிதி வசூலிக்க முற்பட்டார் களா ? அல்லது அரசாங்கம் கேட்டுக்கொண்டு அதன் பேரில் முன் வந்தார்களா ? அப்படியாளுல் எல்லா நடிகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கமாக ஒன்றும் செய்யவில்லை.

*340 **கேள்வி—திரு. ஜே. மாதா கவுடர் :**
திரு. செ. மாதவன் : } கனம் முதல்
திரு. கரு. சீமைச்சாமி :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இதுவரையில் யுத்த நிதிக்கு எவ்வளவு நிதி கிடைத் திருக்கிறது ?

(இ) இதில் ஜவான்களின் குடும்பங்களுக்கு என்னென்ன சவுகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The total collections made in the Madras State towards the National Defence Fund up to 28th February 1966 are Rs. 4,37,49,963. Besides this, a sum of Rs. 29,50,349 was also collected towards the Madras State Jawans' Relief Fund up to 28th February 1966.

[18th March 1966

(b) No amount is spent out of the National Defence Fund for the welfare of Jawans' families as the entire collections are periodically remitted to the Central Account of the National Defence Fund at New Delhi.

However, cash relief is afforded to the families of Jawans found missing, willed or wounded in enemy action subject to a maximum of Rs. 500 in each case.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், இந்தத் தொகையில் மாவட்ட வாரியாக எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

Welfare of families of Defence personnel

*341 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the extent of benefits, nature of concessions and other privileges proposed to be given to families of defence service officers and personnel hailing from this State who have been killed in action or incapacitated as a result of injuries sustained in action?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement* is placed on the Table of the House.

திரு. வை. சங்கரன் : சார், இது போன்ற கேஸ்களுக்கு நிலம் வழங்குவது, குழந்தைகளுக்கு கல்வி வசதி அளிப்பது ஆகிய வற்றுக்கு 'லம்ப்சம் கிராண்ட் அப்டு 500' என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. வயோதிகப் பெற்றோர்கள், சிறு குழந்தைகள் இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுக்குக் குடும்பப் பென்ஷனுகைப் போதிய தொகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட சந்தர்ப்பங்கள், குறிப்பிட்ட கஷ்டங்கள் அந்த ஜவான்கள் குடும்பங்களுக்கு ஏற் பட்டால் அப்போது பிரத்தியோகமாகக் கவனம் செலுத்தப்படும்.

*342 **கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மதுரை மாவட்டத்தில், 2, 3, மாதங்களாக ஜவான்களின் குடும்பத்திற்கு, ஜவான்களின் சம்பளத்தில் ஒரு பகுதி வந்து கொண்டிருந்தது நின்றுவிட்டது என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir. The Government, however, had the matter enquired into. It has been reported to them that the Secretary, District Soldiers', Sailors' and Airmens' Board, Madurai, had received 31 representations from

* Printed as Appendix on pages 105-111.

18th March 1966]

families of jawans about non-receipt of family remittances. He took up the matter with the Commanding Officers of the Units concerned to advise the serving personnel to arrange for the early remittance of money to their families. He has received replies from some of the Commanding Officers stating that they have advised the Jawans to send promptly family remittances and replies to letters. He has also kept the families informed of the position.

The Collector of Madurai has also received petitions from the dependents of jawans complaining about the non-receipt of family remittances for two or three months. In about 14 such deserving and hard cases, the Collector has sanctioned the payment of cash grants to the value of Rs. 1,788.55 from the Jawans Relief Fund. In other cases, he has requested the concerned Municipal Commissioners and Panchayat Union Commissioners to visit the families to ascertain their needs with a view to extend all possible assistance.

The question of making arrangements either for sending family remittances regularly or for sending intimation as to the reasons for stopping the remittances has been taken up with the Ministry of Defence.

*343 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ராணுவ வீரர்களின் குடும்ப நலத்தை கவனிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Government have constituted a Committee for Troops' Amenities and Welfare of Jawans' Families. The District Collectors have also formed similar Committees in their districts. The members of these Committees attend to the welfare and needs of the families of Jawans.

Bonus Act

*344 Q.—Sri G. E. CHINNADURAI : }
Sri J. MATHA GOWDER : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the Bonus Act has affected adversely the quantum of bonus payable to the Tea Plantation staff as well as the Tea Plantation Workers; and

(b) if so, whether there is any proposal under consideration to exempt the Tea Plantations from the purview of the Bonus Act, as provided for under Section 36 of the Bonus Act?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No

[18th March 1966

திரு. கே. பொன்னையன் : சார், இந்த போனஸ் சட்டப் பிரகாரம் நஷ்டம் ஆகிவிட்டாலும் கூட குறைந்தது 4 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாங்கள் இதுவரையில் 4 சத விகிதம் தான் வாங்கியிருக்கிறோம். ஆகையால் தேயிலைத் தோட்டங்களெல்லாம் நஷ்டத்தில் இருக்கின்றன என்று கொள்ளலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது இந்தக் கேள்வியிலிருந்து எழக்கூடியது அல்ல. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம்.

* 345 Q.—SRI V. SANKARAN :
SRI M. KARUNANITHI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Union Government have written to the State Government for their consideration of the feasibility of extension of the Bonus Act to the State owned Industrial Establishments also; and

(b) if so, the stand taken by the Government regarding the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. (a) Yes.

(b) The matter is under the consideration of the Government.

திரு. வை. சங்கரன் : இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள் முடியும் என்று எதிர்பார்க்கலாம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரிசீலனை கூடிய சீக்கிரத்தில் முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அரசாங்கத்தின் கீழ் நேரடியாக நடைபெறுகிற ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் போன்ற அந்த நிறுவனங்களுக்கும் இது பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னென்ன பொது நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது என்பது மொத்தத்தில் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், கனம் முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். என்ன விஷயம் பரிசீலனையில் இருக்கிறது ? போனஸ் சட்டத்தை அரசாங்கத்தின் கீழ் நடைபெறுகிற தொழில்களுக்கு அமல் நடத்தலாமா வேண்டாமா என்று பரிசீலனையில் இருக்கிறதா ? அல்லது எந்த எந்தத் துறையில் அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திரு எம். பக்தவத்சலம் : தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிக் கூறியது போல, இதை விட அதிகச் சலுகை குறிப்பிட்ட நிறுவனங்கள் அளித்துக்கொண்டு வந்தால், இதை

18th March 1966]

வேண்டுமென என்பது பரிசீலிக்கவேண்டியது. அந்த அந்த நிறுவனங்களில் உள்ளவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் 10 அல்லது 11 சத விகிதம் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். இப்போது போனஸ் சட்டப்படி குறைவாகத் தான் வரும். சர்க்கார் நடத்தும் குறிப்பிட்ட நிறுவனங்களில் அதை அமலுக்குக் கொண்டுவருவதென்றால் அனுகூலம் இருக்கிறதா, பிரதிகூலம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்து முடிவு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டும் அரசாங்கத்தின் நேரடி நிறுவனம் தான் ; தனியாக இருந்தாலும் கூட அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் போனஸ் கொடுப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறதா? அதன் மீது முடிவு செய்யப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டிலே இருக்கிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு முடிவு செய்யப்படும்.

திட்ட ஆலோசகர்

* 346 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசில் 'திட்ட ஆலோசகர்' என்ற புதிய பதவி ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) 'திட்ட ஆலோசகர்' என்பவர் திட்டமிட்ட வகையில் பொருளாதார வளர்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவார். நிறைவேற்றப்படும் திட்ட வேலைத்திட்டங்களை அவசியமெனக் கருதப்படும் அளவுக்கு ஆய்ந்து பார்த்து அவற்றை நல்ல முறையில் செயல்படுத்த தம் கருத்துரைகளை வழங்குவார். இந்திய அரசு திட்டக்குழு ஆகியவற்றுடன் இந்த அரசாங்கம் நடத்தும் முக்கியமான ஆலோசனைக் கூட்டங்களில் இந்த அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்று கலந்து கொள்வார்.

திரு. சா. கணேசன் : இந்த ஆலோசகர் எந்த அடிப்படையில் பொறுக்கப்படுகிறார் ? அவருடைய ஊதியம், உதவித் தொகை [illegible]து சம்பளம் என்ன ? அந்த ஆலோசகருடைய காரியாலயம் எத்தகைய எண்ணிக்கையோடு கூடிய உறுப்பினர்களை அல்லது பணியாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

9-00 a.m. **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த ஆலோசகர் திட்டங்களைப் பற்றி முதலிலிருந்து அனுபவப்பட்டவர். இதைப்பற்றி நன்றாக உணர்ந்தவர். அத்தகையோரைத்தான் ஆலோசகராக நியமித் திருக்கிறோம். அவர் முன்பு பிரதம காரியதரிசியாக இருந்தவர். அவர் விஜிலன்ஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். விஜிலன்ஸ் கமிஷன் என்ற ஸ்தாபனம் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதனால் அவர் விஜிலன்ஸ் கமிஷனராகப் பணி யாற்றுகிறார். அதற்குச் சம்பளம் இருக்கிறது. அதோடு அவர் நமக்கு ஆலோசகராக இருப்பது நலம், நல்ல அனுபவம் உள்ளவர் என்று தான் பிளானிங் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார் கள். அதற்குத் தனியாக ஸ்டாப், ஆர்கனைசேஷன் என்பது இல்லை. மொத்தத்தில் இருக்கிற இலாகாவினரைக் கலந்து கொண்டு, தம்முடைய ஆலோசனையைக் கூறுகிறார்கள். மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் தனியாகச் சம்பளம் கிடையாது.

திரு. மு. கருணாநிதி: இந்தத் திட்ட ஆலோசகர் பதவி தாற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா? தாற்காலிகமானது என்றால், எவ்வளவு ஆண்டுகளுக்கு?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவரை நிரந்தரமாகப் போட வில்லை. ஆனால், எவ்வளவு காலத்திற்கு அவசியம் இருக்கிறதோ அவ்வளவு காலம் ஆலோசகராக இருப்பார். இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆய்வு செய்யவேண்டியிருக் கிறது. இம்மாதிரி வேலையெல்லாம் இருக்கிறது. அனுபவம் உள்ளவரின் ஆலோசனை வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத் துடன் கலந்து பேசவேண்டியிருக்கிறது. ஆகையினால், இப் பொழுது அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நிரந்தரமாக என்று சொல்வதற்கு இல்லை. எவ்வளவு காலத்திற்கு அவசியம் இருக் கிறதோ அது வரைக்கும் இந்தப் பதவி இருக்கும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஏற்கனவே திட்டப் பிரிவு பினான்ஸ் டிபார்ட்மெண்டில் இருந்தது. இப்பொழுது தனியாக ஆலோசகர் நியமிக்கப்பட்டு, அந்தப் பிரிவு தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறதா? அது பினான்ஸ் டிபார்ட்மெண்டு மூலம் தான் இயங்குகிறதா அல்லது வேறு எந்தத் துறையின் மூலம் இயங்குகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுதும் இந்தப் பிரிவு நிதி இலாகாவில்தான் இருக்கிறது. திட்ட ஆலோசகரும் அந்த இலாகாவின் மூலம்தான் இயங்குவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஓய்வு பெற்ற பிரதம காரியத[illegible] திரு. வர்கீஸ் அவர்கள் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தகவல் தெரியவருகிறது. அது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் நிரந்தரமாகப் போட வில்லை என்று சொன்னேன். ஐந்தாண்டுகளுக்கு என்ற பிரச்னை கிடையாது.

திரு. வை. சங்கரன்: இந்த நியமனமானது மத்திய அரசாங்கத் தினுடைய யோசனை அல்லது விருப்பத்தின் கீழ் செய்யப் பட்டதா அல்லது நம்முடைய தேவைக்காக நம்முடைய அரசாங் கத்தினால் செய்யப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கத்தினுடைய யோசனை இதில் ஒன்றுமில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்தினர் தங்களுக்கு ஆலோசகராக இவரை வைத்துக்கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். இந்த அரசாங்கத்தின் தேவையை ஒட்டி இவரையே ஆலோசகராக வைத்துக்கொள்ளவேண்டும் என்பது இந்த அரசாங்கம் முடிவு செய்த விஷயம்.

திரு. இராம. அரங்கண்ணல்: திட்ட விவரங்களைக் கவனிப் பதற்காக நிதி இலாகாவில் ஒரு விங் இருந்துகொண்டிருக்கிறது. மாநிலத்திற்கு என்று ஒரு திட்டக் கமிஷன் தனியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த ஆலோசகரை நியமித்திருக்கிறார்கள். இந்த ஆலோசகரை நியமித்திருப்பதையொட்டி, இந்த மாநிலத்திற்கு என்று ஒரு தனித் திட்டக் கமிஷன் நியமிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த மாநிலத்திற்கு என்று ஒரு தனித் திட்டக் கமிஷன் நியமிப்பதாக இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை. திட்டம் வகுப்பது என்றால், அகில இந்திய ரீதியில் அதை வகுக்கவேண்டும். ஒவ்வொரு மாநிலமும் தனித் தனியாகத் திட்டம் வகுத்துக்கொள்வது என்றால், தானே அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை வேண்டும். ஆகவே, திட்டம் என்றால் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்க மும், இரண்டு பேர்களும் கலந்துதான் செய்யவேண்டும். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் இதற்கென்று தனியாக ஒரு திட்டக் குழு வைப்பதற்கு உத்தேசம் இல்லை.

திரு. மு. கருணாநிதி: திட்ட ஆலோசகர் பதவி இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறதா? அல்லது தமிழக மாநிலத்தில் மாத்திரம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மற்ற மாநிலங்களில் எவ்வாறு நடைபெறுகிறது என்பது எனக்குத் தெரியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் நம்முடைய ராஜ்ய தேவையை முன்னிட்டு இந்தப் பதவி ஏற்படுத் தப்பட்டதாகச் சொன்னார்கள். இப்பொழுது என்ன புதியதாக

இந்தத் தேவை ஏற்பட்டது? ஆலோசகர் ஒருவரை நியமித்து,
அவர்கள் மூலம் அபிப்பிராயம் கேட்டு, வேலை செய்யவேண்டும்
என்று சொன்னால், இன்னும் கொஞ்சம் காலதாமதம் ஆகாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காலதாமதம் ஒன்றும் ஆகாது.
இப்பொழுது புதியதாகத் தேவை என்னவென்றால், இதுவரையிலே
பிரதம காரியதரிசியாக இருந்தும், முன்பு நிதி இலாகா காரிய
தரிசியாக இருந்தும் வந்து, அவர்களுக்கு நல்ல அனுபவம்
இருக்கிறது. அவர் ஓய்வு பெற்றுவிட்டால், அவர் வாவில்லை
என்றால், அவருடைய ஆலோசனை நமக்குக் கிடைக்காது. அந்த
ஆலோசனை நமக்கு வேண்டியிருக்கிறது. ஆகையினால், இவரை
இப்பொழுது திட்ட ஆலோசகராக நியமித்திருக்கிறோம். பணி
யாற்றுவதிலே காலதாமதம் ஒன்றும் ஆகாது.

திரு. சா. கணேசன்: இந்தத் திட்ட ஆலோசகர் இனிமேல்
நடைபெறப்போகிற திட்டங்களுக்குரிய வழிவகைகளை அல்லது
தொகை முதலியவற்றை நிர்ணயிப்பாரா, அதில் கவனம் செலுத்து
வார்களா? அல்லது இதுவரையிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிற
திட்டத் துறைகளுடைய பலாபலன்களையும் ஆய்ந்து, லாப
நஷ்டத்தை கணித்து, மேலே மாற்ற வேண்டும், இப்படியே செல்ல
வேண்டும், இன்னும் விரிவாகச் செல்ல வேண்டும் என்பதற்கான
ஆலோசனைகளை தெரிவிக்கக்கூடிய உரிமை அவர்களுக்கு உண்டா?
அந்த அபிப்பிராயத்துடன், எண்ணத்துடன் அவர் நியமிக்கப்
பட்டிருக்கிறாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திட்டத்தைப்பற்றிய எல்லா
விஷயங்களிலும் தம்முடைய அனுபவத்தைக் கொண்டு அவர்
ஆலோசனை கூறவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்
ஆலோசனை கூறுவார். அரசாங்கம் அதற்கு மேலே முடிவு
செய்யும். அதோடு கூட இந்தத் திட்டத்தைச் சார்ந்தவை,
மொத்தத்திலே நிர்வாக இயந்திரத்தின் திறமையை அதிகப்படுத்து
வது, மாற்றி அமைப்பது, சிக்கனத்தைக் கையாள்வது, ஆகியவை.
ஒரு சிக்கனக் கமிட்டி போடப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்
களுக்குத் தெரியும். இந்த ஆலோசகரும் இதில் ஒரு அங்கத்தின
ராக இருக்கிறார். அதிலும் அவருடைய யோசனை கிடைத்துக்
கொண்டு வருகிறது.

திரு. மு. கருணாநிதி: திட்டங்களை வகுப்பதில் நிதி இலாகா
வினுடைய செயலாளர் பொறுப்பு என்ன, இந்த ஆலோசகருடைய
பொறுப்பு என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிதி இலாகாவினுடைய காரிய
தரிசி முக்கியமாக இதற்குப் பொறுப்பு வகிப்பார். அவருக்கு இவர்
ஆலோசகராக இருப்பார். அரசாங்கத்திற்கும் ஆலோசகராக
இருப்பார்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.**]

II. ANNOUNCEMENT.

Alleged distorted reporting in "The Hindu".

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a matter of privilege against the newspaper "The Hindu" namely, that the daily has reported in its issue, dated 18th March 1966 about the challenge of the Minister for Industries but has not referred to the acceptance of the challenge by the Members belonging to the Opposition in the course of the discussion on the Industries Demand on 17th March 1966 and thereby has given a distorted and incomplete version of the proceedings of the House. Tomorrow we are having discussion under Rule 57 of the Assembly Rules and we will be hard pressed for time. Therefore, I will take up this matter on 21st March 1966.

III. VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) Demand No. II—Motor Vehicles Acts—Administration.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 25,30,700 under Demand No. II—Motor Vehicles Acts—Administration."

திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, 'இந்தத் துறையில் ஏற்படும் லாப நஷ்டங்களையும் பலாபலன்களையும் கணித்தறிய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த' என்ற, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 25,30,700 under Demand No. II—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

திரு. ஆ. தங்கவேலு: கனம் தலைவர் அவர்களே, 'ரூட் பஸ்ஸை விற்றால் வண்டி பர்மிட்டை அரசாங்கத்தினிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதைப்பற்றி விவாதிக்க வேண்டும்' என்ற என்னுடைய வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 25,30,700 under Demand No. II—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demand and the cut motions are before the House for discussion. The time allotted for this Demand is two hours.

திரு. ஆ. தங்கவேலு: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மான்யத்தின்மீது எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகின்றேன். மக்கள் பெருக்கம் எவ்வளவு அதிகமாகிக்கொண்டிருக்கிறதோ அது,

[திரு. ஆ. தங்கவேலு] [18th March 1966

போலவே போக்குவரத்துத் துறையிலும், போக்கு வரத்து
அதிகமாகப் பெருகிக்கொண்டு வருகிறது. ஆனால், அதற்கேற்ற
அளவில் மக்களுக்கு இப்பொழுது போக்குவரத்து வசதி பொது
வாக செய்து கொடுக்கப்படவில்லை. குறிப்பாக பஞ்சாயத்து,
பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகு கிராமங்
களிலுள்ள மக்கள் பஞ்சாயத்து யூனியனுக்கும், தாலுகா
தலைநகரங்களுக்கும், மாவட்ட தலைநகரங்களுக்கும் பல அலுவல்கள்
நிமித்தம் அதிகமாக போகின்ற நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்
தினால், அவர்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாமல், நடந்தே
பல மைல்கள் செல்லக்கூடிய நிலையில், அவர்களுக்கு இன்றைக்கு
கஷ்டமாக இருந்துகொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள்
கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்
களுக்குப் பல இடங்களிலே பஸ் வசதியில்லாமல் இருக்கிறது.
இரண்டு மூன்று இடங்களில் பஸ் மாற்றிப் போக வேண்டிய
நிலைமை இருக்கிறது. பொதுவாக 15 மைல்களுக்குள்ளே
இருக்கும் ரூட்டுகளை காலதாமதம் இல்லாமல் பர்மிட்கள்
கொடுக்கப்பட்டு சீக்கிரமாக அனுமதி வழங்கினால், நலமாக
இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த பஸ் பர்மிட்
கொடுப்பதில் பொதுவாக பஸ் முதலாளிகளை மேலும் மேலும்
ஊக்குவித்து, பெரும் பெரும் கோடீஸ்வரர்களாக ஆக்கும் வகை
யில் பஸ் ரூட்டுகள் ஏற்கனவே வைத்து இருப்பதால், அவர்களே
மேலும் மேலும் பணக்காரர்களாக ஆகும் வசதி பெறுவதற்கு வழி
வகை செய்வதாகத்தான் இருக்கிறது. ஆனால் புது ரூட்டுகளைக்
கொடுக்கிறவர்களுக்குப் பரவலாகக் கொடுத்தால், நலமாக
இருக்கும். ஆகவே சட்டத்தை மாற்றி எல்லோருக்குமே, பஸ்களை
நடத்து வசதி உள்ளவர்களுக்குக் கொடுக்க முன் வந்தால், ஒரே
பஸ் அதிபர்கள் மேலும் மேலும் அவர்களே அதிகமாகப் பெருக்கு
வதைத் தடுத்து, எல்லோருக்குமே வாய்ப்புக் கிடைக்கும் வகையில்,
செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பஸ் பர்மிட்டுகள் கொடுக்கிறார்கள். அந்த பஸ்
பர்மிட்டுகளை அவர்கள் பஸ் ரூட்டோடு விற்று விடுகிறார்கள். இந்த
பஸ் பர்மிட்டை மாற்றுவதற்கு ஏற்கனவே ஆர்.டி.ஏ. அவர்களே
மாற்றிக் கொண்டு இருந்தார்கள். அதை இப்பொழுது அரசாங்கம்
எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது பஸ் பர்மிட்
மாற்றுவதற்கு அரசாங்கத்திடம் செல்ல வேண்டியிருக்கிறது.
அங்கே ஆர்.டி.ஏ.-யே மாற்றுவதானால், சுலபமாக மாற்றுவதற்கு
வழி இருந்தது. ஆனால் இப்பொழுது பஸ் உரிமையாளர்கள்
அரசாங்கத்தை நாடி, குறிப்பாக அமைச்சருடைய தயவு இருந்
தால்தான், பஸ் பர்மிட்டை மாற்றமுடியும் என்கிற நிலைமை இருக்
கிறது. அப்படி இருப்பதால், அமைச்சருடைய தயவை நாட
வேண்டியிருக்கிறது. அமைச்சருக்கும் உரிமையாளர்களுக்கும்
உள்ள உறவு முறையைப் பொருத்து, சலுகைகள் பெற வேண்டிய
நிலைமை இருக்கிறது. அதை மாற்றி ஏற்கனவே இருந்தபடி,
ஆர்.டி.ஏ. அவர்களே இதை முடித்து விடலாம் என்று இருப்பதே
ம்பத்தக்கது. அதிலும், பஸ் பர்மிட் மாற்றுவதில்

18th March 1966] [திரு. ஆ. தங்கவேலு]

சாதாரணமாக ரூ. 12.50 கொடுத்து பர்மிட்டை வாங்கலாம். ஆனால்
இன்றைக்கு அதுவே ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் என்று
விற்பதும், இன்றைக்கு பெரும் பெரும் பணக்காரர்களாக மாறு
வதற்கு வழியாகவும் இருக்கிறது. இதெல்லாம் அரசாங்கத்
திற்கும் தெரியும். பஸ் பர்மிட்டுகளை வண்டியோடு சேர்த்து,
இரண்டு, மூன்று லட்சம் என்று விற்றுவிடுகிறார்கள். யாராவது
பஸ் விற்றால், பர்மிட்டை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும்,
சரண்டர் செய்யவேண்டும் என்று ஒரு உத்தரவு இருந்தால்,
அவர்கள் இந்தவிதமாக விலை கேட்க வழி இருக்காது. ஆகவே,
பர்மிட்டை சர்க்காருக்கு சரண்டர் செய்யவேண்டும் என்கிற
கடுமையான உத்தரவு போடவேண்டும், அப்படி ஒரு உத்தரவு
பிறப்பித்தல் நலம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஓவர்-லோட் ஏற்றுகிற பஸ்களுக்கு ஏற்கனவே 'சஸ்பென்ஷன்'
மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. அதனால் அவர்களுக்கு ஒருவித
பயம் இருந்தது. 'சஸ்பென்ட்' ஆகிவிடுமே என்கிற பயமும்,
அதனால் பின்னால் பர்மிட் வாங்குவதற்கு முடியாது என்கிற
பயமும் பஸ் உரிமையாளர்களுக்கு இருந்தது. ஆகவே, ஓவர்-
லோடைக் குறைத்துக் கொண்டிருந்தார்கள். ரூட் பர்மிட் போய்
விடுமே என்று சங்கடப்பட்டு, உரிமை போய்விடுமே என்று
தயங்கினார்கள். ஆனால், இப்பொழுது, பஸ் சஸ்பெண்டு பண்ணு
வதை நிறுத்திவிட்டு, அவர்கள் ஏதாவது ஒரு தொகையை அபராத
மாகச் செலுத்தினால் போதும் என்கிற நிலைமை இருப்பதால், அவர்
களுக்குச் சுலபமாகப் போய்விட்டது. ஓவர்-லோட் ஏற்ற நாமே
வழி செய்ததாக ஆகிவிட்டது. மதுவிலக்குத் திட்டத்திலே குடித்த
வர்களுக்கு சிறைவாசம் தண்டனை என்று சொன்னபோது, பயந்து
குடிப்பதை, சாராயம் விற்பதை நிறுத்தியவர்கள் கூட, அபராதம்
என்றால், அது சர்வ சாதாரணமாகி அவர்களுக்கு பயம் இல்லாத
தன்மைதான் ஏற்படுகிறது. ஆகவே, அபராதம் போடுவது
என்பதை நீக்கி, ஓவர்-லோட் ஏற்றப்பட்டால், கடுமையாக அவர்
களுக்கு தண்டனை கொடுக்கப்படும், பஸ் சஸ்பெண்ட் செய்யப்
படும் என்கிற முறை இருந்தால்தான் சாதகமாக இருக்கும்
என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பஸ்களுக்கு ஒரு சீட்டுக்கு ரூ. 30 வரி விதிக்கப்பட்டிருக்கிறது.
ஆனால், லக்ஷுரி கோச்சுகளுக்குப் பெருவாரியாக அனுமதி கொடுக்
கப்பட்டிருக்கிறது. உல்லாச, சொகுசு வண்டிக்கு யாராவது பர்மிட்
கேட்டால் கொடுக்கிறார்கள். அதற்கு ரூ. 10 தான் ஒரு சீட்டுக்கு
வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஏன் இப்படிக் குறைக்கப்
பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. இவை பஸ் உரிமையாளர்
களுக்கு வசதி செய்து கொடுக்க என்று ஏற்பட்டதா? இந்த
லக்ஷுரி கோச்சுகள், சொகுசு வண்டிகள், ஏற்கனவே பஸ்
வைத்திருப்பவர்கள் ஸ்பேர் பஸ்ஸும் வைத்திருக்கிறவர்
களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ரூ. 10 தான்
என்று குறைந்த அளவு வரி இருப்பதால், மேலும் அவர்கள் லாபம்
அடையக்கூடிய வழியைத்தான் செய்திருக்கிறார்கள். ஆகவே,

[திரு. ஆ. தங்கவேலு] [18th March 1966

இந்த பத்து ரூபாயை மாற்றி குறைந்தது இருபது ரூபாய்
என்றாவது செய்ய வேண்டும் என்றும், அப்பொழுது தான் அது
சரியாக இருக்கும் என்றும் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்
திற்கு வரக்கூடிய வருமானம்தான் குறைகிறது. இப்படிக்
குறைத்து வரி போட்டிருக்கிறார்களே என்று அந்த உல்லாச
வண்டி உரிமையாளர்கள் பிரயாணிகளிடம் குறைத்து வாங்குகிறார்
களா என்றால், அதுவும் இல்லை. அவர்கள் பழைய அதிகப்படி
யான ரேட்டைத்தான் வாங்குகிறார்கள். ஸீட்டுக்குப் பத்து
ரூபாய் என்பதை மாற்றி அதிகப் படுத்தினால், அரசாங்கத்திற்கு
அதிக வருமானம் வரும்.

அரசாங்கம் பஸ் கட்டணத்தை சமீபத்தில் உயர்த்தி உத்தரவு
இட்டார்கள். அப்பொழுதே நாங்கள் ‘பஸ் கட்டணத்தை
உயர்த்துகிறீர்கள், அதனால் ஏழை, நடுத்தர மக்கள்தான்
பாதிக்கப்படுவார்கள், ஆகவே உயர்த்த வேண்டாம்’ என்று சொன்
னோம். அதற்கு நம்முடைய தொழில் அமைச்சர், டீசெல், பெட்
ரோல் விலை உயர்ந்து விட்டது, ஸ்பேர் பார்ட்ஸ் விலை உயர்ந்து
விட்டது, அவர்களுக்கு நஷ்டம் இல்லாமல் இருக்க, செலவைச்
சரிகட்ட, கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது என்று
சொன்னார்கள். அப்படிச் சொன்னது சரியில்லை என்பதுதான்
என்னுடைய குற்றச் சாட்டு. அவர்கள் இம்மாதிரி கட்டணத்தை
உயர்த்தியதால், சென்னையிலிருந்து திண்டிவனத்திற்கு, ஏற்கனவே
ரூ. 3 ஆக இருந்த டிக்கெட், இன்றைக்கு ரூ. 4 என்று உயர்த்தப்
பட்டிருக்கிறது. இந்த வாரம் ரூ. 3 என்றிருந்தது, அடுத்த வாரம்
போகும்போது ஒரு டிக்கட்டுக்கு ஒரு ரூபாய் அதிகம் வாங்கு
கிறார்கள். 50 ஸீட்டு வண்டிக்கு போக வர மேலும் ரூ. 100 அதிக
மாக ஒரு நாளுக்குக் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது. முப்பது
நாட்களுக்கு அவர்களுக்கு அதிகப்படியாக 3,000 ரூபாய்
கிடைக்கிறது. இது அதிகப்படியாக கட்டணத்தை உயர்த்தியதால்
கிடைக்கிற அதிக வருமானம். ஏற்கனவே இந்த பஸ் உரிமை
யாளர்கள் கட்டணத்தை ஏற்ற வேண்டுமென்றால், அரையணா
அல்லது ஒரு அணா அல்லது ஒன்றரை அணாதான் ஏற்றுவார்கள்.
அதற்கே பயந்தார்கள். ஆனால் இன்றைக்கு அமைச்சர் அவர்
கள் கொடுத்திருக்கும் தைரியத்தால், அவர்கள் ஒரு
டிக்கட்டுக்கு ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் என்று உயர்த்து
கிறார்கள். அதைத் தைரியமாகச் செய்கிறார்கள். அதனால்
பஸ்களை அதிகமாக உபயோகிக்கும் ஏழை, நடுத்தர மக்கள்தான்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

லாரிகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவற்றைத் தடுக்க
சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். லாரி ட்ரைவர்களுக்குத்
தனிப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஏற்கெனவே
லாரிகளில் ஐந்து டன்தான் ஏற்றிக் கொண்டு இருந்தார்கள். ஆனால்
1950-க்குப் பிறகு இப்பொழுது 12 டன் வரைக்கும் ஏற்றுகிறார்கள்.
அதனால்கூட விபத்துக்கள் ஏற்படலாம். இன்றைக்கு சாதாரண

18th March 1966] [திரு. ஆ. தங்கவேலு]

க்ளீனர்கள்கூட லாரி ஓட்டுகிறார்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சி இருப்பதில்லை. ஆனால் வண்டியை எடுத்து விடுகிறார்கள். அதனாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. கனம் ஸ்தலஸ்தாபன அமைச்சருடைய காருக்கு லாரியினால் ஏற்பட்ட விபத்திலிருந்து அவர்கள் தப்பித்துக் கொண்ட நிலைமை நமக்கெல்லாம் தெரியும். திடுக்கிட்டோம். அதனால் லாரி விபத்துக்கள் சாதாரணமாக ஏற்பட்டு விடுகின்றன. அவற்றைத் தடுக்க வழிவகை செய்யப் படவேண்டும். ஆகவே, லாரியில் ட்ரைவர்களாக வருகிறவர்கள் பயிற்சி அடைந்து பொருப்புணர்ச்சியோடு வேலை செய்யவேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தனியாக பயிற்சி கொடுக்க, ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இன்றைக்கு 12 டன் ஏற்ற உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கி இருப்பதால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த ட்ரைவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*** திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் சபாநாயகர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன். தமிழ்நாட்டில் போக்குவரத்து நிர்வாகம் நல்ல முறையில் நடந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்களே. சுமார் 500 பஸ்களுக்கு மேல் இந்த நிர்வாகத்தின் மூலம் நல்ல முறையில் நிர்வாகம் நடத்தி வருகிறார். ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர் அவர்கள் ரெவின்யூ போர்டு மெம்பராக இருந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறார். அவருக்குத் துணையாக ஜாயிண்ட் ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர் ஒருவர் இருக்கிறார். ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர் அதாரிடியாகவும் செயல்பட்டு வருகிறார். ட்ரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு உதவியாக டெபுடி ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர், அஸிஸ்டெண்ட் ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர், மோட்டார் வெகிகிள்ஸ் எக்ஸிக்யூடிவ் எஞ்ஜினியர், இன்னும் பல காரியதரிசிகள் சென்னையிலிருந்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். இதுபோலவே, கோயம்புத்தூரிலும், மதுரையிலும், திருச்சியிலும் மூன்று அஸிஸ்டெண்ட் ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர்கள் அவர்களுக்கு உதவியாக இருந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

நமது போக்குவரத்து நிர்வாகம் பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய பெரிய ஸ்தாபனமாக இன்று விளங்குகிறது. இவ்வளவு வருமானம் வரக்கூடிய ஒரு நிலையிலே, நல்ல ரஸ்தாக்கள் முக்கியமாக அமையவேண்டும். பல இடங்கள், குறிப்பாக வடாற்காடு ஜில்லா, நல்ல ரஸ்தாக்கள் இல்லாமல் இருக்கின்றன. கிராமப் புறங்களில் பஸ்கள் போகக்கூடிய பகுதிகளில் நல்ல ஜல்லி ரோடுகளைப் போட வேண்டும். ரோடுகளின் குறுக்கே தண்ணீர் போகக்கூடிய இடங்களில் எல்லாம், பஸ் போக்குவரத்துக்கு வசதியாக ஆறுகள், வாய்க்கால்கள் இவைகளுக்கு காஸ்வே, பாலங்கள் முதலியவை கட்டப் படவேண்டும்.

[திரு. சி. கோதண்டராம பாகவதர்] [18th March 1966

முக்கியமான இடங்களில் பஸ் நிலையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். சென்னையில் உள்ள பஸ் நிலையம் மிகவும் போதாமல் இருக்கிறது. பல வசதிக் குறைவுகள் இருக்கின்றன. வேலூர், ஆற்காடு, திருவண்ணாமலை போன்ற இடங்களில் பஸ் ஸ்டாண்டுகள் நல்ல நிலைமையில் இல்லாமல் இருக்கின்றன. சர்க்கார் பஸ் நிலையங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது போலவே மற்ற பஸ் நிலையங்களும் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டங்களின் காரணமாக, கிராமங்கள், நகரங்கள் எல்லாம் நல்ல முன்னேற்றம் அடைந்திருக் கின்றன. வியாபாரம் பெருகியுள்ளது. அரசாங்கம், பத்து சத விகிதம் பஸ்களின் எண்ணிக்கை அதிகப்பட வேண்டும், இன்னும் அதிக ஸீட்களுடைய பஸ்களைப் போட வேண்டும், தற்போதுள்ள பஸ்களுக்கு அதிக ட்ரிப்கள் வேண்டும், முக்கியமான இடங்களில் வேரியேஷன், எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டும் என்று உத்தர விட்டிருக்கிறார்கள். ஆனால், எல்லா ஜில்லாக்களிலும் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சில ஜில்லாக்களில் பத்து சதவிகிதம் உயர்த்தலாம். சில ஜில்லாக்களில் உயர்த்த வேண்டிய அவசியமே இல்லை. சில ஜில்லாக்களில் இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டியிருக்கிறது. முக்கியமாக, இதற்கு முன்பு ட்ரான்ஸ்போர்ட் கமிஷனருடைய கன்பர்மேஷன் இருந்தது. இப்பொழுது செக்ஷன் 47 (1) நோடிபிகேஷன் கூட அவசியம் இல்லை என்று இந்த அறிக்கையில் கண்டிருக்கிறது. ஒரு பஸ் மார்க்கம் வேண்டுமென்றால், 47 (1) செக்ஷன் பிரகாரம் நோடிபை செய்யவேண்டியது அவசியமா இல்லையா என்பதை முக்கியமாகக் கருத வேண்டும். இன்றைக்கு ப்ளானிங் அண்டு டெவலப்மெண்ட் விங்கில் அதிகாரிகள், இன்ஸ்பெக்டர்கள் இருக் கிறார்கள். அவர்கள் அந்த மார்க்கத்தில் சென்று, அந்த ரோடை இன்ஸ்பெக்ஷன் செய்து, ஆக்குபேஷன் ரேஷியோ, ஸ்டாடிஸ்டிக்ஸ் போன்றவற்றை எடுத்து, ஆர்.டி.ஏ.-க்கு அனுப்பி, ஆர்.டி.ஏ. தீர்மானம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப்ளானிங் அண்டு டெவலப்மெண்ட் விங்கில் ஒரு ஸ்பெஷல் ஆர்.டி.ஓ. இருக்கிறார். இந்த வேலை இன்னும் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்றால், இன்னும் ஒரு ஸ்பெஷல் ஆர்.டி.ஓ. நியமித்தால் இத்தகைய வேலைகள் இன்னும் நல்ல முறையில் நடக்கும்.

ஒரு மார்க்கத்தில் ஒரு பஸ் வேண்டுமென்றால் டெபுடி ட்ரான்ஸ் போர்ட் கமிஷனர் அல்லது ஜாயின்ட் ட்ரான்ஸ் போர்ட் கமிஷனர் அவர்களுடைய கன்பர்மேஷனாவது இருந்தால் மிகவும் நலம் என்று தான் கருதுகிறேன். முக்கியமாக, செக்ஷன் 47 (1) நோடிபிகேஷன் அவசியம் இருக்கவேண்டும் என்று நான்

18th March 1966] [திரு. சி. கோதண்டராம பாகவதர்]

போல் ஏதாவது ஒரு மார்க்கத்தில் அங்கே இருப்பவர்களுக்கு பர்மிட் வழங்கி விடுகிறார்கள். உடனே, எஸ்.டி.ஏ.-க்குச் சென்றால் அங்கு வேறு ஒருவருக்குப் பர்மிட் வழங்கிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு, ஹைகோர்ட்டுக்குச் சென்றால், இரண்டு பேரும் ஓட்டலாம் என்று உத்தரவு பிறப்பித்து விடுகிறார்கள். அதனால், அந்த மார்க்கத்தில் உள்ள பல பஸ் முதலாளிகளுக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகிறது. இதை உடனடியாக அரசாங்கம் கவனிக்க வேண்டும். யாராவது ஒருவருடைய பஸ் ஓட வேண்டும். ஒன்று ஆர்.டி.ஏ. க்ராண்டில் ஓட வேண்டும், அல்லது எஸ்.டி.ஏ. க்ராண்டில் ஓட வேண்டும். அந்த வகையில் மோட்டார் வாகன சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

போக்குவாத்து அதிகாரிகள் அடிக்கடி டைமிங்கை மாற்றி விடுகிறார்கள். அடிக்கடி மாற்றாமல், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை டைமிங் கான்பரன்ஸ் வைத்து, அதில் முடிவு செய்ய வேண்டும்.

ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அப்பெல்லெட் ட்ரைப்யுனல் இப்பொழுது சென்னை சிடி சிவில் கோர்ட் பில்டிங்கில் இயங்கி வருகிறது. பல ஊர்களிலிருந்து ஆர்.டி.ஏ. க்ராண்டுக்கு விரோத மாக அப்பீல் செய்ய வருகிறார்கள். கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை போன்ற ஜில்லாக்களிலிருந்தும் பஸ் முதலாளிகள் வர வேண்டியிருக்கிறது. வந்தாலும் உடனே வாய்தா போட்டுவிடு கிறார்கள். அதனால், எஸ்.டி.ஏ.டி. ஆங்காங்கு சென்று விசாரிக்க வகை செய்யவேண்டும். லேபர் ட்ரைப்யுனல் விசாரணை செய்வது போல, ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அப்பெல்லெட் ட்ரைப்யுனல் ஆங்காங்கு சென்று வழக்குகளை விசாரிக்க அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

முக்கியமாக, ஆர்.டி.ஓ-க்கள் அடிக்கடி ட்ரான்ஸ்பர் செய்யப் படுவதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. வடாற்காடு ஜில்லாவில் 1965-ம் ஆண்டில் ஐந்து போக்குவரத்து 'அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது போலவே, ஸ்டேட் ட்ரான்ஸ் போர்ட் அப்பெல்லெட் ட்ரைப்யுனலிலும், 1965-ம் ஆண்டில் மூன்று, நான்கு ட்ரான்ஸ்போர்ட் அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பொது மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பஸ் முதலாளிகளுக்கும் கால தாமதங்கள் ஏற்படுகின்றன.

முக்கியமாக போக்குவாத்து அலுவலகங்களில் நல்ல பேப்பர் கிடையாது. ரோனியோ மிஷின் கிடையாது. அவர்கள் அனுப்பும் ப்ரொஸீடிங்ஸ் எல்லாம் சரிவர எழுத்துக்களே தெரிவது கிடையாது. நான் அவர்களை அணுகி, விசாரிக்கும்போது ரோனியோ மிஷின் சரியாக இல்லை, பேப்பர் லைப்னை கிடையாது என்று போக்குவரத்து அதிகாரிகளும் புகார் செய்கிறார்கள்.

முக்கியமாக இப்பொழுது போக்குவரத்து அலுவலங்களில் கௌண்டர் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அது போலவே. டாக்ஸேஷன், சர்ச்சார்ஜ், ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம்,

டெம்பரரி பர்மிட் கட்டணம், ரென்யூவல் கட்டணம் இவற்றை யெல்லாம் 'ஆர்.டி.ஓ. ஆபீசிலே வாங்க அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

டாக்ஸேஷன், சர்ச்சார்ஜ் இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கட்டுவது நலமாக இருக்கும். டாக்ஸேஷன் ஒரு சீட்டுக்கு 45 ரூபாய், சர்ச்சார்ஜ் 25 ரூபாய் என்றால், இந்த இரண்டையும் சேர்த்து 70 ரூபாயாகக் கட்டினால், அரசாங்கப் போக்குவரத்து அலுவலகத்தில் வேலை குறையும். லாரி ஒன்றுக்கு மூன்று மாதங் களுக்கு வரி ரூ. 117 என்றால், 450 ரூபாய் சர்ச்சார்ஜ் கட்டு கிறார்கள். லாரிக்கு சர்ச்சார்ஜ் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அதனால் வேலைப் பளு மிகவும் குறையும் என்று நான் நம்புகிறேன்.

முக்கியமாக, விபத்து ஏற்படுவதற்கு காரணம் 'ஓவர்ஸ்பீடு' என்று சொல்லப் படுகிறது. ஓவர்ஸ்பீடு சென்றதாகச் சொல்லி பல ட்ரைவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு வருகிறார்கள். பர்மிட்டும் சஸ்பெண்டு செய்யப்படுகிறது. அதற்காக ஒவ்வொரு பஸ்ஸிலும், ஒவ்வொரு லாரியிலும் ஒரு டாக்காமீட்டர் பொருத்தப் பட்டிருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால், ஓவர்ஸ்பீடு போக முடியாது. அதனால், இவ்வளவு குற்றங்களும் விபத்துக்களும் ஏற்படாமல் இருக்கும்.

ஸ்பேர் பஸ்ஸுக்கு டூரிஸ்ட் பர்மிட் வழங்குகிறார்கள். அதை உடனடியாக நிறுத்த வேண்டும். அவர்கள் ரூட்டிலே பஸ்ஸை நிறுத்திவிட்டு, ஸ்பேர் பஸ்ஸுக்கு டூரிஸ்ட் பர்மிட் வாங்கிக் கொண்டு ஒரு மாத காலம் வெளியே போய்விடுகிறார்கள். ஸ்பேர் பஸ்ஸுக்கு பர்மிட் கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1965-66-ம் ஆண்டுக்கான மோட்டார் போக்குவரத்து மானியத்தின் மீது என்னுடைய கட்சியினர் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டம், வந்தவாசி, செய்யாறு தாலுக்கா மக்களுக்கு ரயில் வசதியே கிடையாது. தெற்கே செல்லவேண்டு மானால், திண்டிவனம் சென்று ரயில் ஏற வேண்டும். மேற்கே செல்ல வேண்டுமானால், காட்பாடி சென்று ரயில் ஏற வேண்டும். சென்னைக்கும் திருச்சிக்கும் இடையில் அரசாங்க துரித பஸ்கள் பல ஓடுகின்றன. அவற்றில் ஒன்றை, சென்னை--காஞ்சீபுரம்-- திருவத்திபுரம்--வந்தவாசி வழியாக ஓட்டுவதற்கு அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதுபோலவே, வேலூர்--நாகப்பட்டினம் அல்லது வேலூர்-- தஞ்சாவூர் வேலூர்--திருச்சி பஸ்களில் ஒன்றை வேலூர்-- ஆற்காடு--திருவத்திபுரம்--வந்தவாசி--திண்டிவனம் வழியாக ஓட்டு வதற்கும் அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும் என்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வடாற்காடு மாவட்டத்தின் தலைநகரம் வேலூர். வேலூரில் நடைபெறும் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்களுக்கு வர வேண்டிய நிலை ஏற்படுகிறது. வந்தவாசிக்கும் வேலூருக்கும் செய்யாறு, ஆற்காடு வழியாக ஐம்பது மைல் தூரம் தான் உள்ளது. ஆனால், பஸ் ஓடும் நேரம் மூன்று மணி என்று இருப்பதால், 'டிலே' ஆகிறது. இதைக் குறைக்கும் வகையில், துரித பஸ்கள் ஓட்டு வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

மேலும் வேலூரில் இருந்து வந்தவாசிக்கு மாலை ஐந்து மணிக்கு 9-30 a.m.
மேல் பஸ் கிடையாது. அரசாங்க அலுவல்களை முடித்துவிட்டு, அப்பொழுதே திரும்புவதற்கு வழி இல்லாத காரணத்தினால் 6 மணிக்கு மேல் வேலூரில் இருந்து ஆற்காடு, செய்யாறு வழியாக வந்தவாசிக்கு ஒரு துரித பஸ், விடவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெளியூரில் இருந்து சென்னைக்கு வரும் துரித பஸ்களில் --சென்னை வந்த பிறகு டிக்கெட் ஏற்றுகிறார்கள். அதனால் நெடுந் தூரத்தில் இருந்து வருகிற பிரயாணிகளுக்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது.. அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டு மென்றால் வெளியூர் பஸ்களில் சென்னைக்கு வந்த பிறகு டிக்கெட்கள் ஏற்றுவதைக் கண்டிப்பாகத் தடுக்கவேண்டும். அவ்வாறு ஏற்று வதைத் தடுக்கும்படி உத்தரவிடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வெளியூரில் உள்ள டாக்சிகளில் மீட்டர்கள் கிடையாது, அவற் றில் மீட்டர் இல்லாத காரணத்தினால் டாக்சி டிரைவர்கள் அவர் களுக்கு இஷ்டப்பட்டபடி கட்டணங்களை உயர்த்திக் கேட்கிறார் கள். ஆகவே வெளியூரில் உள்ள டாக்சிகளுக்கும் மீட்டர்களைப் பொருத்த வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

சென்னையில் டாக்சிகள் கிடைப்பது கஷ்டமாகிக் கொண்டிருக் கிறது. டாக்சிகளுக்காக அதிக நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சென்னையில் உள்ள டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துமாறு நான் மிகவும் தாழ்மை யுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அரசாங்கத்தில் வேலூரில் இருந்து மகாபலிபுரம் ஓடுவதற்கு இரண்டு எக்ஸ்பிரஸ் பஸ்கள் சாங்ஷன் செய்யப்பட் டிருக்கிறது. அந்த பஸ்கள் வேலூர், ஆரணி, வந்தவாசி, மதுராந் தகம், கருங்குழி, திருக்கழுக்குன்றம் வழியாக மகாபலிபுரம் போய்ச் சேரும்படியாக உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கொடுத்திருப்பதோடு, அதோடு இணைக்கும்படியான ட்ரெய்லர்களும் கொடுத்து வருகிறார் கள். ஆனால் அந்த டிராக்டர்களுக்கும், ட்ரெய்லர்களுக்கும் பர்மிட் வழங்குவதில் மிகவும் காலதாமதமாகிறது. அந்தக் கால

தாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால் அரசாங்கம் உடனடியாக அவற்றுக்குப் பர்மிட் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் விவசாயிகள் விவசாயத் திற்குரிய விதைகளையோ, உரங்களையோ அல்லது மற்ற தானியங் களையோ அவற்றில் ஏற்றிக் கொண்டு வந்தால் அவர்களைப் போலீசார்கள் விடுவது கிடையாது. அவர்கள் பேரில் பர்மிட் இல்லை என்றும், லைசென்சுகள் இல்லை என்றும் கேஸ்களைப் போட்டு மிகவும் துன்பத்திற்குள்ளாக்குகிறார்கள். இதனால் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க டிராக்டர்கள், ட்ரெய் லர்கள் எந்த கிராமத்தில் இருந்தாலும் அவற்றில் விவசாயிகள் பொருள்களை ஏற்றிச் செல்ல உடனடியாக பர்மிட் வழங்கவும் வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. ஈ. சின்னதுரை : கனம் சபாநாயகர் அவர்களே, போக்குவரத்து மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசலாம் என்று எண்ணுகிறேன். தமிழகத்திலே போக்குவரத்துத் துறை நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. பொருளாதார அமைப்புக்கு போக்குவரத்து மிகவும் முக்கிய மானது. அந்தத் துறையிலே இன்றைக்கு தமிழகம் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. அந்த முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்த கனம் அமைச்சர் அவர்களுக்கும், அதன் அதிகாரிகளுக்கும் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரி வித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத்துறை நல்ல முன்னேற்றம் காணவேண்டுமானால் எனக்கு முன்னால் பேசிய திரு. கோதண்ட ராம பாகவதர் குறிப்பிட்டுச் சொன்ன குறைபாடுகளை அகற்றுவது மிகமிக அவசியம். குறிப்பாக வரி கட்டுவதில் காலதாமதம் ஆகிறது. சர்சார்ஜ் என்று மாதத்திற்கு ஒரு முறை பஸ்களுக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது. அதோடு கூட 3 மாதத்திற்கு ஒரு முறை க்வார்டர்லி டாக்ஸ் என்று கட்ட வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு வரிகளையும் கட்டுவதற்குச் சிறிது காலதாமதம் ஆகிறது. டிரஷரியில் போய் பாஸ் செய்ய வேண்டியிருக்கிறது. ஸ்டேட் பாங்கில் கட்டவேண்டியிருக்கிறது. டிரஷரிக்குப் போனாலே ஒரு நாள் ஆகிவிடுகிறது. அடுத்த நாள் தான் ஸ்டேட் பாங்குக்குப் போக முடிகிறது. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய அந்த அந்த வட்டாரத்தில் உள்ள மண்டல போக்குவரத்து அதிகாரி அலுவலகங்களிலேயே இந்த வரியைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் சர்சார்ஜையும், வரியையும் ஒன்றாக இணைத்து 3 மாதத் திற்கு ஒரு முறை வசூல் செய்ய ஏற்பாடு செய்தால் பஸ் சொந்தக் காரர்களுக்கு சுலபமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில்

எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் டூரிஸ்ட் கோச்சு களுக்கு வரி குறைவாகப் போடப்பட்டிருக்கிறது, அதை அதிகப் படுத்தவேண்டுமென்று சொன்னார். ஆனால் டூரிஸ்ட் பஸ்களைக் கொண்டு வந்ததன் நோக்கமே உல்லாசப் பயணத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பது தான். ஆகவே தான் டூரிஸ்ட் பஸ்களைக் கொண்டுவந்து சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே அந்தச் சலுகை டூரிஸ்ட் கோச்சுகளுக்கு நீடித்துத் தரப்பட வேண்டுமென்பது மிகமிக அவசியம்.

இன்றைக்கு அரசாங்கத்துறையில் ஓடுகின்ற பஸ்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரசாங்கம் இன்றைக்கு 100 மைல்களுக்கு அப்பாற்பட்ட ரூட்டுகளை எடுத்துக் கொள்வது என்கிற கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறது. ஐம்பது மைல்களுக்கு மேற்பட்ட ரூட்டுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்பதாக நான் இன்றைக்குக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சில நகரங்களில் ஆட்டோ ரிக்ஷாக்களினால் விபத்துக்கள் அதிக மாக ஏற்படுகின்றன. எனவே ஓரளவுக்கு மேல் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக்கூடாது. அவற்றினால் நன்மை இருக்கின்றது என்றாலும், விபத்துக்களைக் குறைக்க ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஆட்டோ ரிக்ஷாக் களுக்கு லைசென்ஸ் வழங்கக்கூடாது. சென்னை, கோவை போன்ற நகரங்களில் அவை வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன, இருந்தும் ஆட்டோ ரிக்ஷாவை ஓட்டுபவர்கள் பயம் இல்லாமல் ஓட்டுகிறார்கள். அதுதான் விபத்து ஏற்படக் காரணமாக இருக் கிறது. ஆகையால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஆட்டோ ரிக்ஷா பர்மிட்டுகளை உயர்த்தக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மோட்டார் உறுப்புகள் விலை இன்றைக்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. சிறிய உறுப்புகள் கூடக் கிடைப்பதில்லை. எனவே, மோட்டார்களுக்குத் தேவைப்படுகிற என்ஜினியரிங் உறுப்புகளைத் தயார் செய்ய ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கோதண்டராம பாகவதர் அவர்கள் அப்பீல் விஷயமாக சில யோசனைகளைச் சொன்னார்கள். கோவையில் இருந்து அப்பீல் போடவேண்டுமென்றாலும், கன்னியா குமரியில் இருந்து போடவேண்டுமென்றாலும் சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. இதனால் அதிகக் கஷ்டங்கள் ஏற்படு கின்றன. எனவே, அப்பீல்களை அந்த அந்த ஊர்களுக்குச் சென்று விசாரணை செய்ய ஏற்பாடு செய்யலாம் அல்லது போக்குவரத்து ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்து கோவையில் ஒரு கமிஷனரையும் சென்னையில் ஒரு கமிஷனரையும் போடவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்து அப்பீல்களைத்

மாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு இந்த மானியக் கோரிக் கையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மோட்டார் போக்குவரத்துத்துறை மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னு டைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது புதிய பஸ் ரூட்டுகள் வழங்குவதில் அதிகக் கால தாமதமாகிறது. அனாவசியமாக ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்த்தாலேயே போக்குவரத்து எளிதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் முள்ளிக்குறிச்சி—ராசிபுரத்திற்கு இடை யில் பஸ் போடவேண்டும் என்பதைப்பற்றி பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இது இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டது. ரூட் கொடுக்கப்பட வேண்டிய ஒரு நிலையில் தான் இருக்கிறது. இருந்தும் அது பரி சீலிக்கப்படாமல் இருக்கிறது. இதைக்கண்டு ஆங்காங்குள்ள மக்கள் வேதனைப்படுகிறார்கள். அதுவும் குறிப்பாக, சந்தை நாட்களில் போக்குவரத்து வசதியின்றி படுகிற கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இதுபோன்று இன்வெஸ்டிகேஷன் செய்து பர்மிட் வழங்கப்படாமல் இருக்கிற ரூட்டுகளைப் பொறுத்தவரையில் அநாவசியமாக ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டு மென்று தெரிவித்துக்கொள்கிறேன். புதிய ரூட்டுகளையும் இன்வெஸ்டிகேஷன் செய்தாலும் உடனே ரூட் வழங்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். புதிய ரூட்டுகளைப் பரிசீலனை செய்வதிலும் பல தொல்லைகள் இருக்கின்றன. ஹைவேசில் காலதாமதமாகிறது. சில சமயங்களில் ரூட்டுகளைப் பார்க்காமல் கூட ஹைவேஸ் இலாகா வினர் "அந்த ரோடு பஸ் போக்குவரத்துக்குச் சரியில்லை" என்று பொய் சர்ட்டிபிகேட் கொடுத்துவிடுகிறார்கள். இந்தக் காரணத் தினாலே அங்கெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கேயுள்ளவர்கள் சிலர் பஸ் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக ஒரு சில பஸ்களைத்தான் விடவேண்டுமென்ற அளவில் பஸ் முதலாளிகள் இடைஞ்சல் செய்துவருகிறார்கள். இந்த இடைஞ் சல்களையெல்லாம் நல்ல முறையிலே நீக்கி அதிகமான அளவிலே நல்ல முறையிலே பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தி, சீக்கிரமாக மக்கள் பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல்-துறையூர் இந்த இரண்டு ஊர்களுக்கும் இடையிலே 10 ஆண்டுக்காலமாக ஒரு பஸ்கூட புதிதாக விடவில்லை. இந்த ரூட்டில் ஒருவருடைய பஸ்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. மொனாப்பொலியாக இருந்து வருகிறது. அதிகப்படியான பஸ்கள் விட்டால் வேறு ஒருவருக்கு லாபம் போய்விடும். லாபம் பூராவையும் தாங்களே ஈட்டிக்கொண்டு

பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு டிரிப் கூட அதிகம் விடாமல், ஒரு புதிய பஸ்கூட விடாமல் பத்து ஆண்டுக் காலத்திற்கு முன்பு என்ன இருந்ததோ அதையே விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்பொழுது ஜனத்தொகை பெருகியும்கூட அதே நிலைமைதான் அங்கு இருந்துகொண்டிருக்கிறது. இதைப் பல முறை தெரிவித்து டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் மூலமாக ப்ரப்போசல் அனுப்பியும்கூட அது செயல்படுத்தப்படாமல் இருப்பது வருந்தத் தக்கது. இந்த ரூட்களிலே எல்லாம் பஸ்கள் எங்கெங்கே தேவைப் படுகிறதோ அங்கெல்லாம் உடனடியாக பஸ்களை விடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பஸ் கட்டணத்தினாலே மக்கள் இப்பொழுது அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த விகிதத்தாலேயே மக்கள் பாதிக்கப்பட்டார்கள். எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு துறையில் ஒரு பஸ்ஸுக்கு ஒரு நாளைக்கு 200 ரூபாய் மிச்சம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுதுள்ள கட்டண உயர்வினாலே இப்பொழுது ஒரு நாளைக்கு 300 ரூபாய் மிச்சமாகக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. அமைச்சர் அவர்கள் எண்ணெய் போன்றவைகள் விலை உயர்ந்திருப் பதினாலே கட்டணம் உயர்த்தப்படும் என்றுகூடச் சொல்லலாம். 200 ரூபாய் லாபம் இருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் குறையுமே தவிர, எந்தவிதத்திலும் இதனால் அவர்களுக்குப் பாதகம் ஏற்படாது. இப்பொழுதுள்ள பஸ் கட்டணம் நியாயமற்றது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஆகவே, இதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பஸ் கட்டணத்தைக் குறைப்பதாலே யாரும் ரூட்களை சரண்டர் செய்யமாட்டார்கள் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறு சிறு கிராமங்களுக்கு, பெரிய பஸ்கள் போகமுடியாத கிராமங்களுக்கு ஜீப் பஸ் ரூட்களைப் போட்டாவது ஜனங்களுக்குப் பயன் ஏற்படும்படி செய்யவேண்டும். நல்ல ரோடுகள் சில கிராமங்களுக்கு அமைய முடியாத சூழ்நிலை இருக்கும். அங்கே உள்ள ஜனங்கள் 3, 4 மைல்கள் நடந்து மெயின் ரோட்டுக்கு வருவதற்குச் சிரமப் படுகிறார்கள். ஆகவே, இடையிலே இருக்கிற தூரத்தைக் கடப் பதற்கு ஜீப் ரூட்கள் விடவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வை. சங்கரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்திலே போக்குவரத்தானது நல்ல சிறப்பான முறையிலே நடந்துகொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக பஸ்களை எடுத்துக்கொண்டால் மற்ற ராஜ்யங்களைவிட நம்முடைய ராஜ்யத்தில் நன்றாக நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால் நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். விபத்துக்கள் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொது வாக நம்முடைய ராஜ்யத்திலே நடக்கும் ரோடு விபத்துக்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், லாரி ஆக்சிடெண்ட்ஸ்தான் அதிக மாக இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்திலே லாரி ஆக்சிடென்டே இல்லாத பக்கமே இருக்காது. லாரியினால்தான் மிகவும் அதிகமான

[திரு. வை. சங்கரன்] [18th March 1966

விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை நிச்சயமாகச் சொல்ல
முடியும். ஆகவே லாரிகள் நல்ல முறையில் ஓட்டிச் செல்வதற்கு,
லாரி ஆக்சிடென்ட்ஸ் இல்லாமல் இருப்பதற்கு நாம் நடவடிக்கை
எடுக்கவேண்டும். பல காலமாக இந்த விஷயம் அடிக்கடி கூறப்
படுகிறது. இரண்டு முக்கியமான காரணங்களை இதற்குக் குறிப்
பிடலாம். ஒன்று, இரவு நேரங்களிலே ஓட்டிச் செல்வதிலே
விபத்துக்கள் ஏற்படலாம். அதற்காக ஒரு வழி செய்யப்பட்டி
ருக்கிறது. அதாவது 200 கிலோ மீட்டர் தூரமாக இருந்தால்
லாரியை இரண்டு டிரைவர்கள் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்
பட்டிருக்கிறது. இரவு நேரமாக இருப்பதினாலே 200 கிலோ
மீட்டர் என்று வைத்திருப்பதை இன்னும்கூட குறைத்தால் நன்றாக
இருக்காதா என்பதை யோசிக்கவேண்டும். இதைத்தவிர லாரிகள்
ஓடும் வேகத்தைக் கூடக் குறைப்பதற்கு ஒரு இன்ஸ்ட்ருமெண்ட்
மூலமாக 30 மைல்களுக்குள்ளேயே போகத்தக்கபடி, ஆக்சிலரேட்
டர் அதற்குமேலே இயங்காமல் செய்வதற்கு ஒரு டிவைஸ் இருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. ஆகவே லாரிகளில் அந்த டிவைஸ்களைப்
பொருத்துவதின்மூலம் வேகத்தைக் குறைத்து விபத்துக்களைக்
குறைப்பதற்கு வழி செய்யலாம். இன்னொன்று என்னவென்றால்,
டிரைவர்கள் எல்லாம் ஒரு தடவை லைசென்ஸ் எடுத்துவிட்டால்
ஒவ்வொரு வருஷமும் ஆட்டோமேடிக்காக அவர்களுக்கு ரினியூவல்
வந்துவிடுகிறது. வெளிநாடுகளில் எல்லாம் லைசென்ஸ் கொடுப்
பதற்கு ஆண்டுதோறும் ஐ டெஸ்ட் வைக்கிறார்கள். கார் ஓட்டு
வதிலே ஆட்டோமேடிக்காக பழக்கம் வந்துவிடலாம். பழக்கம்
ஏற்பட்டு டிரெயினிங் ஜாஸ்தியாக இருக்கலாம். ஆனால் அதோடு
ஐ டெஸ்ட்டையும் செய்யவேண்டும். கண்பார்வைக் குறைவதால்
பல ஆக்சிடென்ட்டுகள் ஏற்படும் என்று அனுமானிக்கிறார்கள்.
ஏனென்றால் கண் பார்வை கெடுவது, வெள்ளெழுத்து ஏற்படுவது
எல்லாம் வயது முதிர முதிர வரத்தான் செய்யும். இரவிலே
ஓட்டக்கூடியவர்களுக்கு இந்தமாதிரியெல்லாம் குறை இருந்தால்
சரியாக ஓட்டிச்செல்ல முடியாது. ஆகவே ஒவ்வொரு வருஷமும்
ஐ டெஸ்ட் செய்வது நல்லதாக இருக்கும். அடுத்தபடியாக, வெளி
நாடுகளில் எல்லாம் டிராஃபிக் ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ்
சம்பந்தமாக எல்லா சினிமாக்களிலும் காட்சிகள் இருக்கும்.
இதை எல்லோரும் பார்க்கவேண்டுமென்ற அளவிலே அதைப்
பார்த்தபிறகுதான் டிரைவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கிறார்கள்.
அதைப் பார்த்துவிட்டு வந்த டிக்கெட்டை ப்ரொட்யூஸ் செய்தால்
தான் சைக்கிளுக்குக் கூட லைசென்ஸ் கொடுக்கிறார்கள். அந்த
முறையிலே டிராஃபிக் ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் சம்பந்தமாக
ஒரு காட்சி வைத்து அதைப் பார்த்து விவரங்களைத் தெரிந்து
கொண்ட பிறகுதான் லைசென்ஸ் கொடுப்பது என்ற முறையை
வைத்துக்கொள்ளலாம். டாக்சி வாங்குகிறார்கள். அதற்கு கறுப்புக்
கலரும், மஞ்சளும் கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது.
காரை அலாட்மெண்ட் பண்ணுகிறபொழுது வேறு கலர் உடைய
காரைக் கொடுக்கின்ற காரணத்தாலே அதை மறுபடியும் கறுப்புக்
கலர் பூசுவதற்கு 500 ரூபாய், ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு
அவர்களுக்கு செலவாகிவிடுகிறது. குறிப்பாக கார் அலாட்மெண்ட்

18th March 1966] [திரு. வை. சங்கரன்]

வேண்டுமென்று ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும். மொஃபச
லில் டாக்சிகளில் மீட்டர் முறை அமல் நடத்தப்பட வேண்டுமென்
பதை ஒத்துக்கொள்கிறேன். அதைச் சீக்கிரத்தில் அமல் நடத்த
வழி செய்யவேண்டும். இன்றைக்குள்ள நிலைமையிலே 'சிட்டீஸ்
ஆஃப் ஷார்ட் டிஸ்டன்ஸ்'-ல் 1 பர்லாங், 2 பர்லாங் அல்லது
1 மைல், அல்லது 2 மைல், 3 மைல்கள்தான் போகவேண்டி
யிருக்கும். அங்கே மைலுக்கு 6 அணு அல்லது 8 அணு என்ற
அளவில் கட்டணம் வைத்தால் அது கட்டுபடியாகாது. ஆகவே
மினிமம் 1 ரூபாய் என்றும் மைலுக்கு 75 ந.பை என்றும் மொபச
லில் வைத்துவிடவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்குக்
கட்டுபடியாகும். பொதுமக்கள் திருவிழாக் காலங்களில், கல்யாண
நேரங்களில் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். டாக்சிகள் நிறைய
இருக்கின்றன. ஆனால் மற்ற நேரங்களில் வரக்கூடியவர்களைக்
கையைப் பிடித்து இழுக்கக்கூடிய அளவுக்கு அங்கே உள்ளவர்
களிடத்தில் போட்டி ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரூட் பர்மிட்
வழங்குவதில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்தபிறகு எந்தவிதமான
விதிமுறைகளும் இல்லாத அளவுக்கு ஏற்பட்டுவிட்டது. பேசிக்காக
சில பிரின்ஸிபல்களை நாம் இன்சிஸ்ட் பண்ணவிட்டாலும்கூட, சில
நியாயமான அடிப்படையில் விதிமுறைகளை வைத்துக்கொள்ள
வேண்டும். ஷார்ட் டிஸ்டன்ஸ் சம்பந்தமாக, சிறு ஓனர்களுக்கு
ஆக்கம் அளிப்பதுபோன்று நாம் சில விதிமுறைகளை வைத்துக்
கொண்டிருந்தோம். நாம் சில அடிப்படை விதிகளை இனியும்
அமுல்நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

எல்லாவற்றையும் நேஷனலைஸ் பண்ணவேண்டுமென்று இப்
போது சொல்லுகிறார்கள். நம்முடைய சர்க்காருக்கு அது
போன்று எல்லாவற்றையும் ஒரேயடியாக நேஷனலைஸ் பண்ண
வேண்டுமென்ற கொள்கை இல்லை என்றாலும், நன்றாக நடக்கிற,
பொதுமக்களுக்குத் திருப்திகரமாக நடக்கிற பஸ் ரூட்டுகளை
அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது. மதுரையில் டி.வி.எஸ்.
பஸ் கம்பெனி இருக்கிறது. அது மிகவும் திருப்திகரமாக பொது
ஜனங்களுக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறது. அது
போன்ற பஸ் கம்பெனிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்
கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்சில் இருந்து வீக்
எண்டில் போய் அந்த ஜில்லாவிலுள்ள பிளான் டெவலப்மென்ட்
டை பார்த்து வருவதற்கு டூரிங் பஸ் ஒன்று வைத்தால் நலமாக
இருக்கும். அந்த ஜில்லாவாசிகள் திட்டப் பகுதிகளைப் பற்றி
அறிந்து கொள்வதோடு வெளியிலிருந்து வரக்கூடியவர்கள் அந்த
ஜில்லாவிலுள்ள திட்டப் பகுதிகளைச் சென்று பார்வையிடவும்
வசதியாக இருக்கும். அதற்கு ஒரு வசதியைச் செய்து தர
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை
முடித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, கிராமப்புறங்களில் போக்குவரத்துக்குச் சரியான
நிலைமை இல்லை. அப்படி இல்லாத இடங்களில் ஜீப் சர்வீஸ்
ஏற்படுத்தித் தரவேண்டும். திருச்சி மாவட்டம் உடையார்
பாளையம் பகுதியில் போக்குவரத்துக்கு எந்தவிதமான வசதியும்
இல்லாமல் இருக்கிறது. அங்கு ஜீப் சர்வீஸ் ஏற்படுத்தித் தர
வேண்டும். பொதுவாக, எங்கெங்கு பஸ் விட வேண்டுமென்பதைப்
பற்றியும் நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்
டால் நலமாக இருக்கும். மாவட்ட வளர்ச்சி மன்ற உறுப்
பினர்கள் ஆலோசனைக் குழுவில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டி
ருக்கிறது. அவர்கள் போக்குவரத்துத் துறையின் மீது எந்த
விதமான ஆலோசனையும் சொல்வதற்கான நிலைமை இல்லை.
மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் எந்தவிதமான தீர்மானம் கொடுத்
தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தாலும் எந்த
விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை.

என்னுடைய தொகுதியில் அரியலூர் வழியாக பி.ஆர்.எஸ். பஸ்
சர்விஸ் (பி) லிமிடெட் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலே
மூன்று பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அந்த சர்வீ
சானது மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. ஒவ்வொரு
நாளும் அந்த மூன்று வண்டிகளிலே ஏதாவது ஒன்றுக்காவது
ரிப்பேர் ஏற்படாமல் இருக்காது. திருமானூர், திட்டக்குடி வழியாக
மக்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. அரியலூரில் கலைக்
கல்லூரி, வழக்கு மன்றம் ஆகியவை அமைந்திருப்பதால் போக்கு
வரத்து அதிகமாக இருக்கிறது. தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்
களிலிருந்தும் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப்
பகுதியிலே இருக்கக்கூடிய போக்குவரத்து மிக மோசமான
நிலைமையில் இருக்கிறது என்று அதிகாரிகளிடத்தில் கூறியும் எந்த
விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை, மாவட்ட
வளர்ச்சி மன்றத்தில் பல தடவை எடுத்துச் சொல்லியும் இதுவரை
எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. உடனடி
யாக இதற்குத் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பஸ்களை பொறுத்த அளவில் சென்ற ஆண்டு போக்குவரத்துத்
துறை அதிகாரிகளும், வர்த்தகத் துறை அதிகாரிகளும் திடீர்
திடீரென்று சோதனைகள் நடத்தினார்கள். பிறகு அந்த முறையைக்
கைவிட்டு விட்டார்கள். முன்பு அந்தமாதிரி திடீர் பரிசோதனை
செய்ததன் மூலம் பலன் கிடைத்தது. இப்போது அந்த முறையை
நிறுத்தி விட்டதால் நிலைமை சரியாக இல்லை. மீண்டும் சோதனை
முறையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கையாள
வேண்டும். ரீஜினல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் என்று போட்டிருப்
பதை மாற்றி ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு டிரான்ஸ்போர்ட்
அதிகாரியை நியமித்தால், நலமாக இருக்கும். அதேபோன்று
ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒரு பிரேக் இன்ஸ்பெக்டர் போட
வேண்டும். இரண்டு மூன்று தாலூகாக்களில் சேர்ந்தாற்போல்
விபத்து ஏற்பட்டு விட்டால் மண்டல போக்குவரத்து அதிகாரி
எல்லா இடத்திற்கும் சென்று பார்ப்பதற்குள் நாலைந்து நாட்கள்
ஆகிவிடுகின்றன.

டிக்கட் முறைகளில் பலவிதமான மோசடிகள் நடைபெறு
கின்றன. குறிப்பாக அரியலூர் பி. ஆர்.எஸ். பஸ் சர்வீஸ் (பி)
லிமிடெட் பஸ்ஸில் எவ்வளவு அக்காமடேஷன் இருக்கிறதோ அந்த
அளவுக்கு புரோக்கர் டிக்கட்டை முதலிலேயே கொடுத்துவிடுகிறார்.
அதற்குப் பிறகு வருகிறவர்களுக்கு கண்டக்டர் தனியாக அதிகப்
படி டிக்கட் கொடுக்கிறார். இதனால் உள் அளவுக்கும் அதிகப்படி
யான டிக்கட்டுகள் கொடுத்தால் அதைக் கண்டுபிடிக்க முடிவ
தில்லை. இதை மாற்றியமைக்க வேண்டும். அரசாங்க பஸ்
சர்வீசைப் பொறுத்தும் பல மோசடிகள் நடந்து வருகின்றன.
அந்த நிலைமைகளையும் சரியாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். பஸ் ட்ரிப்புகளின் நேரத்தையெல்லாம் போலீஸ் ஸ்டேஷ
னில் பதிவு செய்கிறார்கள். பி. ஆர். எஸ். பஸ் சர்வீசைப்
பொறுத்தவரை போலீஸ் ஸ்டேஷனில் குறிப்பிடும் நேரம் ஒன்றாக
இருக்கும், போஸ்டாபீசுக்கு மெயில் வந்து சேருகிற நேரம்
ஒன்றாக இருக்கும். பஸ் வரும் நேரம் ஒன்றாக இருக்கும். பஸ்
ஒழுங்காக நேரத்தில் வருகிறதா என்பதை அதிகாரிகள் கண்
காணிக்கவேண்டும். அதிகப்படியான பஸ்களை விடுவதற்கும் ஏற்
பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்
கிறேன்.

திரு. ம. கமலநாதன் : கனம் தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்
தீர்ப்புக்குப் பிறகு பஸ் பர்மிட் கொடுப்பதிலே எந்தவிதமான
விதிமுறைகளும் செய்யவில்லை; செய்யக்கூடாது என்ற அளவுக்கு
துணைக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது அமைச்சர்
அவர்கள் கூறினார்கள். பஸ் பர்மிட் முன்பு வேண்டுமென்றால்,
ரூட் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நோடிபை செய்து
அதற்குப் பிறகு ரூட்டுக்கு ஏற்பாடு செய்வார்கள். பிறகு அப்ஜக்
ஷன் ஏதேனும் இருக்கிறதா என்று கேட்பார்கள். ஆனால்
தற்போது நேரடியாக அப்ளிகேஷன் 'காள் ஃபார்' செய்து ரூட்
கிராண்ட் செய்து விடலாம். கலெக்டர் அவர்கள் எந்த அடிப்
படையில் பஸ் பர்மிட் வழங்கவேண்டுமென்பதற்கு எந்த விதி
முறைகளும் கிடையாது. கலெக்டர் அவர்களுக்கு ஜுடிஷியல்
அதிகாரமும் இருப்பதால் அவர்கள் பஸ் பர்மிட் கொடுப்பதிலே
சந்தேகிக்க வேண்டியதில்லை. ஆனால் பாதகம் ஏற்படுபவர்கள்
அப்பீல் பண்ணலாம் என்று சொல்லப்படுகிறது. அப்பீலுக்குப்
போகிறவர்கள் எந்த அடிப்படையில் போவார்கள் என்பதுதான்
புரியவில்லை. இன்னாருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற
நிலையே இல்லாதபோது அப்பீலுக்கு எந்த கிரவுண்டில் போவது ?
முன்பே, அமைச்சர்களுக்கு வேண்டியவர்களுக்கும், ஆளுங்கட்சி
யில் செல்வாக்குள்ளவர்களுக்கும் பர்மிட்கள் ஏராளமாக வழங்கப்
படுகின்றன என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. இப்போது
கலெக்டர் பர்மிட் வழங்கும் முறையில் ஆளுங்கட்சிக்கு வேண்டிய
வர்களுக்கு பஸ் பர்மிட் கொடுப்பதற்கு நல்ல வழிவகை ஏற்பட்
டிருக்கிறது.

1964-65-லே பஸ் ஏகபோக உரிமையின் காரணத்தை ஆராய
வேண்டுமென்ற நோக்கத்தோடு—உதாரணமாக, டி.வி.எஸ். டவுன்
பஸ் ஏகபோகமாக நடத்தப்பட்டு வருகிறது. மக்கள் நிலைமை

[திரு. ம. கமலநாதன்] [18th March 1966

யைப் புரிந்து, உணர்ந்த அதிகாரிகளும்; பஸ் அதிபர்களும்
சந்தித்துப் பேசி புதிதாக 13 ரூட்டுகள் கொடுக்கவேண்டுமென்று
நோட்டிபை செய்யப்பட்ட பின்னர் அது கைவிடப்பட்டது.

இது அமைச்சர் அவர்களின் தலையீடு என்று சொன்னால் அதை
நிரூபிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும்.
இருந்தாலும் நோட்டிபை செய்யப்பட்ட ரூட்கள் இன்னும்
சாங்ஷன் செய்யப்படாததற்குக் காரணம் என்ன? படிப்படியாக
தேசியமயமாக்கும் திட்டத்தின் கீழ் சென்னை—தாம்பரம், சென்னை
—பல்லாவரம், ரூட்டுகளில் உள்ள பத்து பஸ்களை எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று இருந்தும் பின்னர் கைவிடப்பட்டதற்கான
காரணம் என்ன என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.
சென்ற ஆண்டு போட்டார் வரியை ஏற்றினோம், தூரத்தை அடிப்
படையாக வைத்து. அப்படி ஏற்றிய நேரத்தில் பொது மக்கள் மீது
இந்த வரி திணிக்கப்படமாட்டாது என்ற அளவிற்கு அமைச்சர்
அவர்கள் இந்த மன்றத்தில் உறுதி அளித்தார்கள். சென்ற
பெப்ரவரியில் அதிகபட்சமாக வரி 2½ யிலிருந்து 3 பைசா வரை
யில் போடலாம் என்று சொன்ன பிறகு எல்லாவிடங்களிலும் பஸ்
கட்டணம் உயர்ந்திருக்கிறது. சேலம் மாவட்டத்தில் ஒரு பெரிய
பஸ் முதலாளி, என். எஸ். கம்பெனி என்று பெருமிதத்தோடு
சொல்லிக்கொள்வேன், அவர்கள் பழைய கட்டணத்தைத்தான்
வசூலித்து வருகிறார்கள். ஆனால் மாவட்ட போக்குவரத்து
அதிகாரி, அரசாங்கம் விதித்திருக்கும் உயர்ந்தபட்ச அளவிற்கு
விதிக்க வேண்டுமென்று கேட்டும் அதற்கு அவர் மறுத்து குறைந்த
அளவு விகிதத்தில்தான் ஓட்டுவேன் என்று சவால் விடுத்து
நடத்துகிறார் என்பதற்காக பாராட்டினாலும், ஒன்று சொல்ல
விரும்புகிறேன். அவர் அந்தக் கம்பனியில் சில பஸ்களுக்கு
புக்கிங் ஆபீஸ் என்று வைத்துக் கொண்டு டிக்கட்டுகள் கொடுக்
கிறார்கள். பிறகு பஸ் போய்க் கொண்டிருக்கிற நேரத்தில் அந்த
அந்த டெஸ்டினேஷனில் ஒவ்வொரு பாஸஞ்சரிடமிருந்தும் க்ளார்க்
கொடுத்த டிக்கட்டுகளை கலெக்ட் செய்கிறார்கள். வருமான வரியை
ஏய்ப்பதற்காகத்தான் இது செய்யப்பட்டு வருகிறதோ என்னவோ
தெரியவில்லை.

மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்களைப் பற்றி குறிப்பிட
விரும்புகிறேன். பொதுவாக அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல
எதிர்காலம் முன்பு இருந்தது. ஆர்.டி.ஓ.-க்களாக அவர்களுக்கு
உத்தியோக உயர்வு கிடைத்து வந்தது. இப்போது ஆர்.டி.ஓ.
கிரேடில் உள்ள டெபுடி கலெக்டர்களை ஆர்.டி.ஓ.-க்களாக 13
மாவட்டங்களில் போட்டிருக்கிறார்கள். அப்படி ஆர்.டி.ஓ.-க்களை
போடுவதால் அவர்கள் வேலைகளை சரியாகச் செய்ய முடியாததால்
அவர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள் என்ற நிலை இப்போது
இருந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டு
மானால், வட ஆற்காடு மாவட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்
தவர், ஆர்.டி.ஓ. ராங்கில் இருந்த ஆர்.டி.ஓ. கன்னியாகுமரிக்கு
மாற்றப்பட்டு பிறகு தென் ஆற்காட்டிற்கு மாற்றப்பட்டு வேலை
செய்து வருகிறார். அப்படியே செங்கல்பட்டில் வேலை செய்து

18th March 1966] [திரு. ம. கமலநாதன்]

கொண்டிருந்த ஒருவரை இராமநாதபுரம், திருச்சி போன்ற இடங்
களுக்கு மாற்றப்பட்டு இப்போது அவர் மறுபடியும் பழைய
இலாகாவிற்கே வந்து விட்டார்கள். எம்.பி.எஸ்.சி. யிலிருந்து
ஆர்.டி.ஓ. பதவிக்கு தகுதியுள்ளவர்களாக நான்கு பேர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டும் அவர்கள் இன்னும் உத்தியோகம் கிடைக்க
முடியாத நிலையில் இருக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் தகுதியுள்ள
வர்கள் என்று சொன்ன பிறகும் அவர்களை நியமிக்காமல் ஆர்.டி.ஓ.
கிரேடில் உள்ளவர்களை போட்டு அவர்கள் நல்லமுறையில் நிர்
வாகம் நடத்த முடியும் என்று சொல்கிற நிலை ஏன் ஏற்பட்டது?
இந்த மன்றத்தில் அமைச்சராக இருந்தவர்களின் மகன், மருமகன்
போன்றவர்கள் ஆர்.டி.ஓ.-க்களாக நியமிக்கப்பட்டு அவர்கள் சரி
யாக வேலை செய்யவில்லை என்ற அடிப்படையில் ஆர்.டி.ஓ.-க்களை
போட வேண்டுமென்ற முடிவிற்கு வந்திருக்கக்கூடும். திரு. மாதவ
மேனன் என்ற அமைச்சருடைய மகன் அப்போது ஆர்.டி.ஓ. ஆக
நியமிக்கப்பட்டார். அமைச்சர் கோபால ரெட்டி அவர்கள் இருந்த
காலத்தில் அவரது காம்ப் க்ளார்க் ஆர்.டி.ஓ. ஆக நியமிக்கப்
பட்டார். டேனியல் தாமஸ் என்பவரின் மகன் ஆர்.டி.ஓ. ஆக
நியமிக்கப்பட்டார். இவர்கள் உத்தியோக உயர்வு பெற்றிருந்
தாலும் நேரடியாக நியமிக்கப்பட்டதால் வேலைகளை அவர்கள்
சரியாகச் செய்யவில்லை என்ற நிலையில் ஒருவேளை இப்போது
டெப்டி கலெக்டர் ராங்கில் உள்ளவர்களைப் போட வேண்டுமென்ற
ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கக்கூடும் என்று நினைக்கிறேன்.
இப்போது காங்கிரசில் பஸ் முதலாளிகளைச் சேர்க்கும் வேலை
தீவிரமாக நடந்து வருகிறது. பஸ் முதலாளிகள் காங்கிரஸ்
கட்சியில் இருந்தால்தான் வாழ முடியும். காங்கிரஸ் கட்சி பஸ்
முதலாளிகள் தயவு இருந்தால்தான் வாழ முடியும் என்றிருக்
கிறது. கிருஷ்ணகிரியில் பல காலமாக எந்தக் கட்சியிலும்
இல்லாத ஒரு பஸ் முதலாளியை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்
சென்ற வாரம் போய் பார்த்து அவர் வீட்டிலிருந்து காங்கிரஸ்
கட்சியில் அவரை சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்றால், ஒன்று
இன்று காங்கிரஸ் கட்சி பஸ் முதலாளிகளின் தயவு இல்லாமல்
வாழ முடியாது அல்லது பஸ் முதலாளிகள் காங்கிரஸ் கட்சியில்
சேர்ந்தால்தான் வாழ முடியும் என்ற நிலையை உருவாக்கி இருக்
கிறார்கள். ஆகவே பஸ் ரூட் வழங்குவதில் வேறு சில விதிமுறை
களைக் கைக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்
உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே,
போக்குவரத்து மான்யத்தின் மீது என் கட்சிக்காரர் தந்திருக்கிற
கட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள்
சொல்லலாம் என்று கருதுகிறேன். பொதுவாக பஸ் ரூட்
கொடுக்கிற நேரத்தில் புதிதாக வருகிறவர்கள் படுகிற அல்லல்களும்
தொல்லைகளும், பழைய முதலாளிகளிடத்தில் இருந்து அவர்கள்
தப்பித்து வருவது என்பதும் மிகவும் துர்லபமாக இருக்கிறது.
புதிதாக ஒருவருக்கு பஸ் ரூட் கொடுத்தால் பழைய முதலாளிகள்
[illegible] பேர்களும் சேர்ந்து கொண்டு புதிதாக வருகிறவர்களை
[illegible] அவர்களை அந்தத் தொழிலை விட்டு ஓடும்படி செய்து

விடுகிறார்கள். தனக்குக் கிடைத்த பெர்மிட்டை நிலைநிறுத்துவதற்காக புதிதாக வந்த முதலாளி எவ்வளவு கோர்ட்டுகளுக்கு ஏறவேண்டுமோ அவ்வளவும் ஏறி அதற்காக கடன் வாங்குகிறார்கள். கடைசியில் கடனை அடைக்க முடியாமல் அந்த முதலாளி அந்த பெர்மிட்டை விற்றுச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த அமைச்சர் அவர்கள் போக்குவரத்து இலாகா மீது ஒருமுறை பதில் அளிக்கிறபோது குறிப்பிட்டார்கள்—பஸ் பெர்மிட்டுகளை மாற்றுகிற நிலை மிகவும் மோசமாக இருக்கிறது, அவற்றை விற்று விடுகிறார்கள், ஆகவே இதை மாற்றியமைக்க வேண்டுமென்றும், பஸ் பெர்மிட்டுகளை விற்கக்கூடாது என்றும் தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு முறை இங்கு குறிப்பிட்டார்கள். அப்படி மாற்றாமல் இருப்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவரப் போகிறேன் என்றும் குறிப்பிட்டார்கள். அச்சட்டம் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. பஸ் முதலாளிகள் பல பஸ் பெர்மிட்டுகளை விற்கிறார்கள். அப்படி விற்கிறார்கள் என்று சொல்லும்போது ஒன்று வேடிக்கையாக இருக்கும், அதே சமயத்தில் அதிர்ச்சியையும் கொடுக்கிறது. ஒரு பஸ்ஸின் விலை சாதாரணமாக தேய்மானம் கழித்துப் பார்த்தால் 25,000 ரூபாய்க்கு மேல் இருக்கமுடியாது. திருவண்ணாமலை--பட்டணம் போகும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை அவர்கள் 2½ லட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். எப்படி விற்றிருக்கிறார்கள் என்றால் பெர்மிட்டிற்காக இரண்டு லட்சம் கொடுத்து அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. இப்படி சில பஸ் முதலாளிகள் கொள்ளை அடிக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த முன்பு ஒரு தடவை தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், யாரும் பெர்மிட்டை மாற்றக் கூடாது, யாராவது அதை நடத்தமுடியவில்லை என்றால் அதை சர்க்காருக்கு சரண்டர் செய்ய வேண்டும். பிறகு சர்க்கார் அதை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போகிறேன் என்று சொன்னார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஒரு சட்டம் இன்றுவரை வரவில்லை. அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓவர் ஸ்பீடிங் பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். அதையும் கண்காணிக்கவேண்டும். இப்போது லாரிகள் அதிக வேகத்தில் போவதைத் தடுக்க வழக்குகள் பதிவு செய்கிறார்கள். சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலிருந்து சம்மன்ஸ் அனுப்பப்படுகிறது. வந்து சேராவிட்டால் பத்து ரூபாய் அபராதம் என்றால் வராமலேயே பத்து ரூபாய் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். சம்மன்ஸை எடுத்துக் கொண்டு போகிற கான்ஸ்டபிள் சென்று பார்க்கும்போது ட்ரைவர் தூத்துக்குடியில் இருப்பார். ஆகவே ஆள் இல்லை என்று திரும்பி வருகிறார்கள். 100-க்கு 60 வழக்குகள் இப்படி தள்ளுபடி செய்யப்படுகின்றன. கிடைத்தால் பத்து ரூபாயை கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே ஓவர் ஸ்பீடிங் இருந்தால் அந்த பஸ் பெர்மிட்டையே சஸ்பென்ட் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் முதலாளிகள் ட்ரைவர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுவார்கள், அதிக வேகத்தில் போகக்கூடாது என்று.

அடுத்து ஓவர் லோடிங். லாரிகளில் அதிகமாக ஓவர் லோடிங் ஏற்றிச் செல்வதைப் பிடிக்கிறோம் என்று சொல்வார்கள். பஸ்களில் கூட அதிகமாக பாசஞ்சர்களை ஏற்றினால் அதையும் பிடிக்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆனால் பற்பல இடங்களில் இப்படிப் பிடிக்கப்படுவதில்லை. எங்கள் பகுதியில் குறிப்பாக சொல்ல வேண்டுமானால் பஸ்ஸுக்கு மேல் அதிகப்படியான மூட்டைகள் ஏற்றப்படுகிறது. ஒரு லாரி அளவிற்குள்ள மூட்டைகள் பஸ்ஸில் ஏற்றப்படுகின்றன. போலீஸாரிடம் கேட்டால் அதுபற்றி எங்களுக்கு கவலையில்லை என்கிறார்கள். ஒரு லாரி அளவிற்கு ஏற்றக் கூடிய மூட்டைகளை பஸ்ஸில் ஏற்றுவதால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஸ்டேட் எக்ஸ்பிரஸ் பஸ் துரிதமாக போக வேண்டியிருப்பதால் ஒதுக்கிச் செல்லலாம் என்றால் புளிய மரம் இடிக்கிறது. ஆகவே, முன்னும் பின்னும் போகமுடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, பஸ்களில் இப்படி அதிகப்படியான மூட்டைகளை ஏற்றக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு போட வேண்டும்.

இப்போது பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பது வருந்தத்தக்கது. சர்க்கார் பஸ்களில் கட்டணத்தை உயர்த்தினார்கள். அப்போது தொழில் அமைச்சர் அவர்கள், நாங்கள் நடத்துகிற தொழிலுக்கு இப்போதிருப்பது கட்டுபடியாகவில்லை, ஆகவே உயர்த்தவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். 60 ஸீட்டுகள் என்று இருந்ததை 35 ஸீட்டுகள் என்ற முறையில் குறைத்தார்கள். அதற்காக கட்டணத்தை உயர்த்தப்போகிறோம் என்று சொல்லி கட்டணத்தையும் உயர்த்தினார்கள். சர்க்கார் முதலாவது கட்டணத்தை உயர்த்தி, அதன்படி வசூலித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின்னால் தனியார்களும் கட்டணத்தை உயர்த்தினார்கள். இப்போது நண்பர் கமலநாதன் அவர்கள் ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்கள். அதாவது பஸ் முதலாளிகளிடம் நீங்கள் ஏன் பஸ் கட்டணத்தை உயர்த்தவில்லை என்று சர்க்கார் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சி கமலநாதன் அவர்கள் பகுதியில் மட்டுமல்ல, எங்கள் பகுதியிலும் பல பஸ் முதலாளிகளுக்கும் சர்க்காரிலிருந்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். குறைந்த கட்டணத்தில் ஓட்டிக்கொண்டிருக்கிறோம் என்று பஸ் முதலாளிகள் சொல்லும்போது இவ்விதம் சர்க்காரிலிருந்து அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியதின் அவசியமென்ன? திருவண்ணாமலைக்கும் பட்டணத்திற்கும் ஆறு ரூபாய் இருந்தது முன்னால். சர்க்கார் பஸ் விட்டவுடன், 7 ரூபாய் 20 பைசா என்று உயர்த்தினார்கள். தனியார் நடத்துகின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களில் 4 ரூபாய் என்று வாங்கினார்கள். அவ்விதம் வாங்கிக்கொண்டிருந்தவர்கள் 6 ரூபாயாக உயர்த்தினார்கள். இவ்விதம் பஸ் முதலாளிகளை கட்டணத்தை உயர்த்துமாறு இந்த சர்க்கார் தூண்டிவிடுகிறது. பஸ் கட்டணத்தை இப்போதுள்ள நிலையில் உயர்த்தவேண்டிய தேவையே இல்லை. டீஸல் ஆயிலின் விலை ஏறியிருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இவ்விதம்

கட்டணத்தை ஏற்றுவதின் மூலமாக சர்க்கார் கஜானுவுக்கு ஏதாவது வருவாய் வந்திருக்கிறதா என்று பார்த்தால் அதுவு மில்லை. அப்படியிருக்க இது தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்கு மேலும் லாபம் தேடிக்கொள்வதற்காகத்தான் வழிவகை செய்திருக் கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. சர்க்கார் கன்கரன்ஸ் கொடுப்பதின் மூலமாகத்தான் பஸ் முதலாளிகள் கட்டணத்தை உயர்த்த முடிகிறது. நண்பர் கமலநாதன் அவர்கள் பஸ் முதலாளி களுக்கு அவர்கள் வாழ்க்கையையும், வளத்தையும் பெருக்கிக் கொள்வதற்கு சர்க்கார் உதவி செய்கிறது என்று சொன்னார்கள், இப்படிப்பட்ட பஸ் கட்டணத்தை உயர்த்துவதற்கு சர்க்கார் கன்கரன்ஸ் கொடுத்திருப்பதே இவ்விதம் செய்கிறார்கள் என்பதற்கு ஆதாரம் என்கிற குற்றச்சாட்டைத்தான் நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

அடுத்து, டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி என்று மாவட்டந்தோறும் கமிட்டிகள் வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட கமிட்டிகளுக்கு பஸ் பெர்மிட் கொடுக்கின்ற அதிகாரத்தை வேண்டு மென்றால் கொடுக்கவேண்டாம், ஏனென்றால் இதில் அரசியல் கட்சிப் பிரச்னைகள் வரலாம் என்று சொல்லக்கூடும். ஆனால் புதிய ரூட்டுகளை திறப்பதற்கான அதிகாரத்தையாவது அருள்கூர்ந்து இந்தக் கமிட்டிக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் முதலாளிகள் சரியாக சர் சார்ஜ் கட்டுவதில்லை என்ற புகார் இருந்து வருகிறது. இதைக் கட்டுவதற்கு மூன்று நான்கு மாதங்கள் ஆகின்றன என்றும் சொல்லப்படுகிறது. திரு. கோதண்டராம பாகவதர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இதைப் பற்றி. அதாவது சர் சார்ஜையும் வரியோடு சேர்ந்து கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். வரி, சர் சார்ஜ் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வசூலிப்பதற்கு தகுந்த உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும். அப்போதுதான் ஓரளவுக்கு எவேஷன் நிற்கும், சர்க்காருக்கும் ஒழுங்காக பணம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புதிய பஸ் ரூட் கொடுக்கின்ற விஷயத்தில், எங்கள் தொகுதியில் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டது, அதாவது கொடுக்கப்பட்ட ரூட்டில் 208 மைல் நீளம் இருக்கிறது என்று பின்னால்தான் கண்டுபிடிக்கப்பட்டது, பெர்மிட் கொடுப்பதற்கு முன்னால் கண்டுபிடிக்கப்படவில்லை. டைமிங் கான்பரன்ஸ் வரும் போதுதான் இது கண்டுபிடிக்கப்பட்டது. ஆர்.டி.ஓ.-க்கு 200 மைல்-க்கு மேல் பெர்மிட் கொடுப்பதற்கான அதிகாரம் கிடையாது. அதற்காக இப்போது எக்ஸம்ஷன் கொடுக்கவேண்டும் என்று கேட்டு இங்கே பேப்பர் வந்திருக்கிறது. இதன் காரணமாக இரண்டு மூன்று மாதங்கள் பஸ் ஓடாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி சிறு சிறு தவறுகள் ஏற்படும் போது, அந்த லிமிட்டிலே யே மாற்றியமைப்பதற்கான வழிமுறைகள் செய்யவேண்டும். 200 மைல் என்று இருந்தாலும் கூட, அதோடு 8 மைல் சேர்ந்து விடுவதினால் எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிட முடியாது.

ஆகவே புதிதாக பஸ் விடுபவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையில் சில மாறுதல்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மான்யத் தைப்பற்றி யோசிக்கும்போது, தமிழ்நாடு மிகவும் சிறப்பாக முன் னேறி யிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள லாம். அன்செர்வட் ஏரியாவேயில்லை என்று சொல்லுகின்ற அள வுக்கு அமைந்திருக்கிறது. அந்த அளவுக்கு கிராமப்புறங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து வசதி செய்து கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அதன் காரணமாக இந்த ஆண்டு அதிகமான அளவில் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்க் கின்றோம். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் வந்ததிலிருந்து சில காலத்திற்கு வேலைகள் எல்லாம் தூங்கிக்கொண்டிருந்தன, அதன் பின்னால் அரசாங்கம் மாடிஃபை செய்து நோட்டிஃபிக்கேஷன் செய்த பின்னால் ஆர்.டி.ஏ.-க்கள் இப்போது நல்லமுறையில் ரூட்டுகளை கொடுப்பதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதில் மேலும் இருக்கின்ற சிறு சிறு குறைகளை தவிர்த்து விட்டால் இன்னும் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு இருந்த ஜீ.ஓ. வில் 15 மைல்களுக்குள் பஸ் விடுவதற்கான உரிமையை புதிதாக வருகின்றவர்களுக்கு கொடுக் கலாம் என்றும், 15 மைல் முதல் 75 மைல்கள் வரை ஐந்து பஸ்கள் வரை வைத்திருக்கின்றவர்களுக்கு கொடுக்கலாம் என்றும், அதற்கு மேல் ஐந்து பஸ்களுக்கு மேலாக வைத்திருக்கின்றவர்களுக்கு கொடுக்கலாம் என்றும் ஒரு வரையறை இருந்தது. இப்போது அந்த ஜீ.ஓ. செல்லாது என்று கோர்ட்டில் சொன்ன பின்னால்—அதாவது ஆர்.டி.ஏ.-க்கள், க்வாஷி ஜுடிஷியல் அத்தாரிட்டி என்ற முறையில் இருக்கின்றவர் என்று சொன்னபின்னால்—அவர்களின் அதிகாரத் தை ஜீ.ஓ.-க்கள் குறைக்கும் நிலை ஏற்படும் என்று கூறப் பட்டுள்ளது. இருந்தாலும் கூட ஓரளவுக்கு இவ்விதம் பிரித்து வைத்து ஷார்ட் ரூட், மீடியம் ரூட், லாங் ரூட் என்று பிரித்து வைத்துக் கொடுப்பதுதான் முறையாக இருக்கும். இதில் சில மாறுதல்களைச் செய்தால் நன்றாக இருக்கும். அதாவது இப்போது 75 மைல்களுக்கு மேல் பஸ்களை விட வேண்டுமென்றால் அரசாங்கம் தான் விடவேண்டும், தனியார்கள் விட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 100 பஸ்கள் 200 பஸ்கள் என்று வைத்திருக்கின்றவர்களுக்கு எந்தவித கவலையும், இல்லை. ஆனால் ஐந்தாறு பஸ்களை வைத்து தொழிலை நடத்திக்கொண்டிக்கின்றவர்களையும் ஃப்ளீட் ஓனர்ஸ் என்று நாம் சேர்த்திருக்கிறோம். இப்படிப்பட்டவர்களின் நிலை மோசமாகிக் கொண்டிருக்கிறது. அதாவது டீசல் ஆயிலின் விலை கூடவில்லை என்று சொன்னாலும், டயர், ஸ்பேர் பார்ட்ஸ் போன்றவைகளின் விலை அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. இந்த நிலையில்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [18th March 1966

இப்போது சர்க்கார் போட்டிருக்கும் திட்டத்தின் கீழ் இவர்கள் நல்லமுறையில் பஸ்களை ஓட்டவே முடியாது. 15 மைல்களுக்கு மேல் 75 மைல்களுக்குள்ளில் ஐந்து பஸ்கள் வரை வைத்திருப்ப வர்களுக்கு கொடுக்கலாம் என்றிருந்தது. ஆனால் இப்போது அவர்கள் மேலும் தங்கள் தொழிலைப் பெருக்கிக்கொள்ள முடியாத அளவில், 75 மைல்களுக்கு மேல் பஸ்களை விட வேண்டும் என்றால் அரசாங்கம்தான் விட வேண்டும் என்று சொல்லும்போது, இவர் களுக்கு அந்த ரூட்டுகளை கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்களுடைய நிலை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே இந்த க்ளாஸிபிக்கேஷனை ஓரளவுக்கு மாற்றி அமைத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று எண்ணுகின்றேன். அதேபோன்றுதான் 15 மைல்களுக்குள்ளில் இருக்கின்ற ரூட்டுகளில் புதிதாக வருகின்றவர்கள் பஸ் விடலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இப்போது செக்ஷன் 268 (எ)-ன் படி 15 மைல் வரையிலும் டௌன் பஸ்களை நீடித்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது . . .

One of the termini must be within the municipal area.

அதாவது இரண்டு முனைகளில் ஒன்று முனிசிபல் ஏரியாவில் இருந்து, அந்த ரூட் 15 மைல் அல்லது 25 கிலோ மீட்டர் அளவுக்கு இருந்தால் அதில் டௌன் பஸ் விடலாம் என்றிருக்கிறது. இப்படி வந்துவிடுவதால் ஷார்ட் ரூட்களில் பஸ் விட்டுக்கொண்டிருந்த வர்கள் இதிலும் வர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதாவது டௌன் பஸ் விட வேண்டும் என்றால், பெரிய ஆப்பரேட்டர்களாக இருந்திருக்கவேண்டும், ப்ரீவியஸ் எக்ஸ்பீரியன்ஸ் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர் களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று நீதிமன்றமும் தீர்ப்ப அளித்திருக்கிறது. இதன் காரணமாக முக்கியமான நகரங்களில் புதிதாக பஸ் விட வேண்டும் என்று விரும்பி வருகின்றவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமலே போய்விடுகிறது. ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்துப் பார்த்து, சில மாறு தல்களை செய்தால் நலமாக இருக்கும். அதாவது 20 மைல்களுக்கு உட்பட்டு இருக்கும் ரூட்டுகளை புதிதாக இந்தத் துறையில் வருகின்ற வர்களுக்கு கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். இந்த வகையில், ஷார்ட் ரூட்டில் 15 மைல் என்றிருப்பதற்குப் பதிலாக 20 மைல் என்று ஆக்கினால் சாலச்சிறந்ததாக இருக்கும். அதே போன்று 75 மைல்களுக்கு மேல் இருந்தால் அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்றிருக்கிறது. ஆகவே இதிலும் மாற்றம் இருப்பது நல்லது. 20 மைல்களிலிருந்து 65 மைல்கள் வரையிலும் மீடியம் ஆப்பரேட்டர்களுக்கு என்று ஒதுக்கிக் கொடுத்துவிடலாம். அதற்கு மேல் 75 மைல் வரை ஐந்தாறு பஸ்களுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கும் கொடுக்கலாம் என்று மாற்றிக் கொண்டால் மிகவும் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

18th March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

செக்ஷன் 47 (1)-ன் படி ஆர்.டி.ஓ. கிரான்ட்களை கொடுக்கலாம் என்று இருக்கிறது. பழைய ஜீ.ஓ. படி இல்லாமல் எதையும் செய்யலாம் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே மோட்டார் வெகிக்கிள்ஸ் சட்டத்தில் சில கட்டுப்பாடுகளை போட்டால், அதன் படி ஆர்.டி.ஓ. செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதுதான் நியாயமாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். அதுதான் மக்களுக்கும் நல்லது, நமக்கும் நல்லது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் விடுகின்றவர்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற வரி பெரும் சுமையாக இருக்கிறது, அதிகமாக இருக் கிறது என்று சொல்லப்படுகிறது. அதைக் குறைப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆலோசித்தால் நலமாக இருக்கும். அதோடு ஸ்பேர் பார்ட்ஸ் போன்றவைகள் வாங்குவதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையினால், ஒன்றிரண்டு பஸ்களை நம்பியிருக்கின்றவர்கள் இதையும் நம்பி கையில் இருக்கின்ற காசையும் செலவழித்துவிட்டு சும்மா இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே ஒரு பஸ், இரண்டு பஸ் ஆப்பரேட்டர்களுக்கு ஏதாவது டாக்ஸ் ரிலீஃப் கொடுக்க முடியுமா என்று யோசித்துப் பார்த்துக் கொடுத்தால் அவர்கள் மேலும் சிறப்பான பஸ்களைப் போட்டு, புதிய பஸ்களைப் போட்டு ஓட்டுவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அதேபோன்று பெரிய லக்ஷுரி கோச்சஸ் விடுகிறோம், டூரிஸ்ட் கார் விடுகிறோம். இப்போது பல பஸ் ஆப்பரேட்டர்ஸ், ஏற்கனவே பஸ் துறையில் இருக்கிறவர்கள் தங்கள் ஸ்பேர் பஸ்களையெல்லாம் டூரிஸ்ட் பஸ்களாக விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஸ்பேர் பஸ்களில் நல்ல வசதிகள் கிடையாது. யாராவது நல்ல டூரிஸ்ட் பஸ் விடுகிறேன் என்று முன்வந்தால்கூட அவர்களுக்குக் கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. காரணம், ஏற்கனவே இந்தத் துறையில் இருந்த பஸ் ஆப்பரேட்டர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஏற்கனவே பஸ் துறையில் இருக்கிறவர்கள் ஓட்டை, உடைசல் ஸ்பேர் பஸ்களையெல்லாம் டூரிஸ்ட் பஸ்களாக அனுப்பி விடுகிறார்கள். நாம் சொல்லுகிற அளவுக்கு, எந்த எந்த முறையில் இருக்கவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோமோ அந்த முறையில் கட்டப்படுகிற லக்ஷுரி கோச்சஸ் போட்டு நடத்துவதற்கு சாதாரண ஆள் முன் வந்தாலும், ஆப்பரேஷனல் ஃபெஸிலிட்டீஸ் என்று சொல்லுகிறோமே அதையெல்லாம் நல்ல முறையில் வைத்துக் கொண்டு லக்ஷுரி பஸ் போடுகிறேன் என்று சொன்னால் அவர்களுக்குக் கொடுக்க முன்வரலாம். அன்னிய நாடுகளிலிருந்து வருகிறவர்கள் நம் நாட்டைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படுகிறார்கள். இங்கே இருக்கக் கூடிய ஸ்பேர் பஸ்களை டூரிஸ்ட் பஸ்களாகப் போட்டு அவர்களை யெல்லாம் அதில் ஏற்றிக்கொண்டு 'கட, கட, கடா' என்று அழைத் துக் கொண்டு போனால் அது வருந்தத்தக்கதாக இருக்கிறது. நல்ல லக்ஷுரி கோச்சஸ் போட்டு, டூரிஸ்ட் டிராஃபிக் அதிகரிக்கவேண்டு மென்று, அன்னிய நாட்டினர் நம் நாட்டுக்கு அதிகமாக வருவதற்கு

வாய்ப்பு ஏற்படுத்தி, அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவது முதல் நோக்கமாக இருக்கவேண்டுமே தவிர வேறுவிதமாக இருக்கக் கூடாது. அந்த முறையில் ஏற்பாடு செய்தால் அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும். இந்தச் சிறந்த துறையில் திறமையாகச் செய்வதை விட்டு விட்டு ஸ்பேர் பஸ்களை டூரிஸ்ட் பஸ்களாக் வைத்துக்கொள்ளலாம் என்று இருப்பதை மாற்றி, யார் லக்ஷுரி கோச்சஸ் போட முன்வந்தாலும் அவர் களுக்கு பிற வசதிகள் இருந்தால், அவர்களுக்குக் கொடுப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்கமுடியாது என்று யோசித்துப் பார்ப்பது சிறந்ததாக இருக்கும்.

நான் எப்போதும் சொல்லுவது வழக்கம். ஆர்.டி.ஏ. அலு வலகத்தில் நல்ல கூடம் இருப்பது கிடையாது. கால் உடைந்த நாற்காலிகளும் மேஜைகளும்தான் அங்கே காட்சி அளிக்கின்றன. மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸில் அதிக வருமானம் அரசாங்கத் திற்கு இருக்கிறது. ஓரளவு வரவு-செலவுத் திட்டத்திலே நிதி நிலைமை அதிகரிக்கும் அளவுக்கு வாய்ப்புக் கொடுக்கிறது மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ். இந்தத் துறையில் 13 கோடி ரூபாய் எதிர்பார்த்து, 6-7 மாதங்களுக்குள்ளாகவே 9 கோடி ரூபாய் சம்பாதித்து விட்டோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளக்கூடிய முறையில் இருக்கிறது. அந்த அலுவலகத் திற்கு வருகிறவர்களுக்கு வசதி செய்து கொடுப்பது அவசிய மானது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 25 ரூபாய் அப்ளிகேஷனுக்கு வாங்குகிறார்கள். அவர்கள் ஆர்டர் எழுதி அனுப்பும் காகிதத்தைப் பார்த்தால், அந்தக் காகிதத்தில் மிட்டாய்க் கடையில் பொட்டலம்கூட கட்ட மாட்டார்கள். அவ் வளவு மோசம். அரசாங்கத்திற்கு என்ன பேப்பர் பஞ்சமா? நல்ல காகிதத்தில் அழகாக ஆர்டரை அடித்து அனுப்புவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இதை நான் எதற்காகச் சொல்லு கிறேன் என்றால், அங்கே உள்ளவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளுவதில்லை. எழுதியிருக்கும் எழுத்து தெரியும் அளவுக்கு எழுதி அனுப்பினால் என்ன? அதில் இருப்பதைப் படித்தால் நம் முடைய கண்ணே கெட்டுவிடும் அளவுக்கு எழுதி அனுப்புகிறார் கள் என்றால், அது நல்லதல்ல. எதைச் செய்தாலும் நன்றாகச் செய்யவேண்டுமென்ற ஆசை இருக்கவேண்டும். ஆர்டர் அனுப்புகிற பேப்பர் கூட மோசமாக இருப்பது என்பது நல்லதல்ல. அங்கே உட்காரக்கூட இடம் இருப்பதில்லை. வக்கீல்களும் பார்ட்டியும் வரும்போது, நெருக்கி அடித்துக்கொண்டு, ஜன்னல் மீதும், கதவைப் பிடித்துக்கொண்டும் நிற்கவேண்டிய நிலைமை இருக்கிறது. 13 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் தேடித்தரக் கூடிய துறையில் இந்த சிறிய வசதிகள்கூட செய்து கொடுக்க முடியவில்லை என்றால் எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? கூட்டம் நடத்துவதற்கு நல்ல கூடம் அமைத்து வசதிகளை யெல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தோமானால், தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம். இவைகளைச் செய்வது சாலச் சிறந்தது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

நகரத்தை எடுத்துக்கொண்டால் லாரி டிராஃபிக் மிக அதிகமாக இருக்கிறது. ஆயிரக் கணக்கான லாரிகள் ஓடுகின்றன. அவை களை நிறுத்தி வைக்க பார்க்கிங் ஸ்பேஸ் கிடையாது. ரோடில் நிறுத்தி வைத்து ஜன நடமாட்டம் வைத்துக்கொள்வதற்கே பய மாக இருக்கிறது. எல்லா இடத்திலேயும் வீட்டுக்கு முன்னால் லாரி ஷெட்டாக மாற்றி இருக்கிறார்கள். அவ்வளவு லாரிகளையும் ஷெட்டிலே நிறுத்த முடியாமல் தெருக்களில் நிறுத்திவிடுகிறார்கள். நாம் எவ்வளவு லாரிகளை அனுமதித்தோமோ அவைகளுக்கு பார்க் கிங் ஃபெஸிலிட்டீஸ் ஏற்படுத்த முன் வரவேண்டும். கார்ப்ப ரேஷனில் ஒரு ஷெட் வைத்திருக்கிறார்கள். அது நிறைந்து விடு கிற காரணத்தினால் லாரிகளெல்லாம் தெருக்களில் நிற்கின்றன. சிறு குழந்தைகள் பள்ளி சென்று திரும்பி வருவதுகூட கஷ்ட மாக இருக்கிறது. சென்ற பிள்ளை வீடு திரும்புமா என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எவ்வளவு வாகனங் களுக்கு அனுமதி அளிக்கிறோமோ அவைகளை நிறுத்தி வைக்க இட வசதி செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மற்றப்படி என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் தீர்த்து விட்டோம். புதிதாக ரூட்டுகள் திறக்கக் கூட 47 (1)-ல் தேவையில்லை என்று 57 (3)-ல் முடித்துக்கொள்ளலாம் என்று வைத்து விட்டோம். இந்த மாதிரி சில சில குறைகள் ஆங்காங்கே இருப்பதையும் தீர்த்துவிட்டால் தமிழகத்திலேயே போக்குவரத்துத் துறை ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதேபோன்று சுப்ரீம் கோர்ட் டெஸிஷனால் ரிமாண்ட் ஆன கேஸ்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அதற்காக அடிஷனல் ட்ரிப்யூனல் போட முன் வந்திருக்கிறார்கள். அது உண்மையிலேயே பாராட்டக் கூடியது என்று சொல்லி, இதை மனமார வரவேற்று, சிறு சிறு குறைகளையும் தீர்த்துக்கொடுத்தால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் தொழில் துறை அமைச்சர் அவர்களாலே சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற இந்த மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்தினைப் புலப்படுத்த முன் வருகிறேன்.

இந்தத் துறை பொதுமக்கள், சிறப்பாக நடுத்தர மக்கள், ஏழை மக்கள் பயன்படுத்துவதற்குரிய ஒரு துறை. இந் , துறையிலே சர்க்காரும் தனிப்பட்டவர்களும் பங்குகொண்டு பணியாற்றி வரு கிறார்கள். சர்க்கார் துறை பற்றி கவனிப்பதற்கு முன்னே தனியார் துறையிலே ஏதாவது சொன்னால் அமைச்சர் அவர்கள், நீங்கள் தனியார் துறைக்குத்தான் பேசுவீர்கள் என்று எல்லாம்கூட குறிப்பிடுவார்கள் . . . (கனம் திரு. வெ. ராமையா : யூகமா?) யூகம் அல்ல ; தினசரி நடக்கிற சங்கதி யைச் சொல்லுகிறேன். . . . (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :

செய்யவில்லையா என்ன?) செய்கிறோம்—இரண்டையும் செய்கிறோம். அங்கு இருக்கிற தவறையும் எடுத்துக் காட்டுகிறோம், இங்கு இருக்கிற தவறையும் எடுத்துக் காட்டுகிறோம். அமைச்சர் அவர்கள் எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

பஸ் ரூட்டுகளிலே பல இடங்களில் செம்மையாக நடைபெறலாம். சில பஸ் ரூட்டிலே உரிமம் பெற்றவர்கள் அதை எப்படி முறை தவறான நெறியிலே விற்றுப் பணம் ஆக்குகிறார்கள் என்பதை நாம் பலரும் அறிவோம். கொஞ்சகாலத்திற்கு முன்னே ரூட்டை விற்க ஆட்சி அனுமதித்து வந்தது. அது தடைப்படுத்தப் பட்ட பிறகு இப்போது தனிப்பட்ட நபர் தன் பேரிலே அந்த பர்மிட்டை வைத்துக்கொள்ளாமல், ஏதோ ஒரு கம்பெனி அல்லது டிரான்ஸ்போர்ட் என்று பெயரைப் போட்டு விட்டு, அதன் கீழ் 4 ரூட், 5 ரூட் என்று இப்படி வைத்துக் கொள்ளுவது, அப்படி வைத்துக்கொண்டு அந்த ரூட்டுகளை விற்காமல் அந்த கம்பெனியையே விற்று விட்டதாகச் சட்டத்தில் இருக்கிற ஓட்டையைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்கிறார். ரூட்டை விற்பதுதான் கம்பெனியை விற்பதும். அந்தக் கம்பெனிக்கு உள்ளது 50,000 பஸ்களோ, 5,000 பஸ்களோ, 500 பஸ்களோ, 100 பஸ்களோ அல்ல மொத்த பஸ்களைப் பார்த்தால் 2 பஸ்கள், 5 பஸ்கள், 6 பஸ்கள் என்று இவ்வளவுதான் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்காக, கம்பெனியை விற்பதாகச் சொல்லி—பஸ் ரூட்டுகள் ஒன்றோ, இரண்டோதான் இருக்கின்றன—அந்த முறையில் விற்று அதன் மூலமாக எல்லைக்கு மேற்பட்ட அளவுக்கு, கொள்ளை லாபம் என்று சொல்லுகிற அளவுக்குச் சம்பாதிக்கிறார்கள். இதைத் தடை செய்து இந்த மாதிரி தனி ரூட்டுகளை விற்பதைத் தடை செய்ததைப் போலவே, 2-4 ரூட்டுகளை வைத்துக் கொண்டிருக்கிற, கம்பெனிகள் என்று பதுங்கிக்கொண்டிருக்கிற அந்த வாணிபங்களையும் அல்லது விற்பனைகளையும் தடை செய்ய அரசாங்கம் முதலிலே முன் வரவேண்டும்.

இனி, இந்தத் துறை அரசாங்கத்தின் பல்வேறு வாணிகத் துறைகளைப் போலவே கமர்ஷியல் ஆடிட்டிங் முறைக்கு வந்தால்தான் செம்மையாக இருக்கும் . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளக்கூடிய மானியத்தில் வரும்.

திரு. சா. கணேசன்: இதைப் பற்றி அந்த மான்யக் கோரிக்கையின் மீது விவாதம் நடக்கும்போது அந்தக் கருத்துக்களைப் புலப்படுத்துகிறேன். இந்தத் துறை நிர்வகிக்கிற நிலையிலே
10-30 a.m. இருக்கிற சில குறைபாடுகளையும் நாம் கவனிக்க வேண்டும். அந்தக் குறைபாடுகள் அல்லது அதிகமாக வரி விதிப்பைச் செய்யும்பொழுது எங்கு சென்று, யாரைச் சென்று பாதிக்கின்றது என்பதை மறந்துவிடுவதற்கு இல்லை. கொஞ்சம், ஒரு அணா வரி ஏறினால், ஒரு அணாவுக்குப் பதிலாக இரண்டு அணா பஸ் கட்டணத்தை ஏற்றக்கூடிய நிலையிலே பஸ் நடத்துகிறார்கள். கூடுதலான வரிவிதிப்பைத் தொடங்குவதிலே சர்க்காருக்கு ஒரு அணா லாபம் வருமானம், பொது மக்களுக்கு இரண்டு

அணாவுக்கு மேற்பட்ட அளவுக்கு நஷ்டம் வருகிற ஒரு நிலை ஏற்படுவதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. அதே காலத்தில் சில பெரிய வசதி, வாய்ப்பு உள்ள போக்குவரத்துக் கம்பெனிகள் தங்களுடைய பஸ்களை செம்மையாக, திறமையாக வைத்துக் கொள்ளுவதைக் காண்கிறோம். சிறு கம்பெனிகளில் பல தங்களுடைய பஸ்களை செவ்வையான நெறிப்படி, விதிப்படி கண்காணிக்க அல்லது செயல்படுத்த முடியாத காரணத்தினால், அந்த பஸ்களில் ஏராளமான வசதிக் குறைவு மட்டும் அல்ல, பாதி வழியிலேயே நின்றுவிடும், குறித்த இடத்திற்கு போய்ச் சேர முடியாது, நிச்சயமாக குறித்த நேரத்தில் போய்ச் சேர முடியாது என்ற ஒருவிதமான அவ நம்பிக்கை ஏற்பட வழி செய்கிறது. இதற்கெல்லாம் நிர்வாகத்தைத்தான் குறை கூறவேண்டும். அவர்கள் தவறு செய்வார்களேயானால், தவறு செய்யக்கூடிய நிலை அல்லது வாய்ப்பு ஏற்படுமேயானால், அதைக் கண்காணிக்க வேண்டிய துறையினர் செம்மையாக கண்காணிக்காமல், ஏதோ கொஞ்சம் சலுகை அல்லது வேறு என்ன காரணங்களுக்காகவோ, ஏனோ தானோ என்று இருந்து விடுகிற ஒரு மனநிலை காரணமாகத்தான் இத்தகைய குறைபாடுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது.

அது போலவே, கார்களுக்கெல்லாம் டாக்ஸேஷன் முதலானவை போடுகிறபொழுது, பெரிய தாளில் எழுதிவிட்டு, நடுவிலே டிஸ்கை பிரிண்டு பண்ணியிருக்கிறோம். 100-க்கு 90 பேர்கள் டிஸ்கைத் தவிர பாக்கியையெல்லாம் கிழித்து எறிகின்ற நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். ஒரு சிகரட் டின் கனம் அல்லது தின் கார்டு போர்டு அல்லது திக் பேப்பர், அது மாதிரி இருப்பதில் இரண்டு பக்கமும் பிரிண்டு பண்ணி, முன் பக்கம் கார் நம்பர் வகையறா, பின் பக்கம் காருக்கு உரியவருடைய பெயர் முதலிய விவரங்கள், முத்திரைகள், போலீஸ் கமிஷனர் அல்லது டிரான்ஸ்போர்டு அதாரிடி, மற்றவர்கள் போடுகிற முத்திரைகள் இவைகளெல்லாம் இருக்கலாம். இப்பொழுது டிஸ்கை வெட்டியெடுத்து, டிஸ்க் ஹோல்டரில் ஒட்டுகிற பொழுது மற்றதெல்லாம் போய்விடுகிறது. நம்முடைய 'ஸி' சர்டிபிகேட்டைப் பார்த்துதான் இதற்கு வரி கொடுத்தவர் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பிற நாடுகளில் மிக அழகாக அச்சிட்டு வழங்குகிறார்கள். இதனால் சர்க்காருக்கு பிரமாதமான நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. அதிகப் பட்சமாக கணக்குப் போட்டுப் பார்த்தால்கூட, ஒரு டிஸ்க் 3 நயா பைசே ஆகும், அதுவும் ஆயிரக் கணக்கில், பத்தாயிரக் கணக்கில் அச்சிடுவதால். ஆகவே, இதைக் கருத்திலே கொள்ள வேண்டும். பேபரை ஒட்டினால் கிழிந்துவிடுகிறது. டிஸ்க் போட்டுக் கொடுப்பது நன்மையாகவும், சுலபமாகவும் இருக்கும். பல வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் வண்டிக்கும் வரி கட்டுபவர்கள் இருக்கிறார்கள். வெளிநாட்டு யாத்திரிகர்கள் கண்ணை உறுத்துகின்றது, இந்த தேசத்தில் இவ்வளவு அழகுக் குறைவாக் இருப்பது வேறு கடுமையாக நான் சொல்லவில்லை, அழகுக் குறைவாக இருக்கிறது என்று மட்டும்தான் சொல்லு

கிறேன். சுத்தமாகச் சொன்னால், கண்ணுக்கு விரசமாக என்று கூடச் சொல்லவேண்டும். கண்ணாருவி என்று சொல்லக்கூடிய முறையில் இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். அப்படியில்லாமல் நல்ல அழகாக இருக்கும்படிச் செய்வது நம்முடைய மாநிலத்திற்கும் நல்ல பெயர் கொடுக்கும், செலவு அரை நயா பைசா, ஒரு நயா பைசா கூட ஆகலாம். அது நம்மை பாதிக்கப்போவதில்லை. இதை மனத்திலே கொள்ள வேண்டும். இது மாதிரி பல்வேறு குறைகள் இருக்கின்றன. இந்தக் குறைகளையெல்லாம், அதாவது, அவ்வளவையும் நிவர்த்தி செய்துவிடுவது என்பது எப்பொழுதும் முடியாது. குறை வந்துகொண்டே இருக்கும். வர வர திருத்திக்கொண்டே இருக்க வேண்டும். திருத்ததிருத்த குறை வரும். குறை வர வர திருத்த வேண்டும். இது இயற்கையின் நீதி. காலப்போக்கில் நம்முடைய தேவைகளை, இருக்கிற வசதிகளை எவ்வளவோ பெருக்கிக்கொண்டாலும், அது போதவில்லை என்ற எண்ணப்பாடு இருப்பதினால், எப்பொழுதும் குறைகள், தேவைகள் இருந்துகொண்டே, வளர்ந்துகொண்டே வரும். தேவைகள் வளர வளர அவற்றை நிறைவு செய்யவேண்டும். குறைகள் வளர வளர அவற்றைக் குறைவு செய்யவேண்டும். இந்த நிலையிலே ஆட்சி செயல்பட வேண்டும் என்று கூறி, இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிற லாப நஷ்டத்தைக் கணிப்பதற்கு செம்மையான ஒரு வழிமுறையைக் கண்டு, இன்னென்ன செய்யவேண்டும், இன்னென்ன குறைகள், அந்தக் குறைகளை இன்னென்ன நெறியிலே, முறையிலே தவிர்க்க வேண்டும் என்றெல்லாம் வழிவகை செய்ய, இதற்குத் தக்க ஒரு குழு, பிரமாதமான செலவு இல்லாமல், மேற்பார்வையாகப் பார்த்து இருக்கிற கஷ்டங்கள், நஷ்டங்கள் தேவைகள் இவற்றைக் குறிப்பிட்டு, நல்ல ஆலோசனை சொல்லக்கூடிய ஒரு நிலையிலே, அமைத்து இரண்டு நாட்கள், 10 நாட்கள் இது பற்றி பரிசீலித்து நடைமுறைகளை கணிக்கவேண்டும்.

அதோடு, சர்க்கார் பஸ் பற்றி பின்னால் சொல்லுகிறேன். சர்க்கார் பஸ் நிறுவனத்தில் சில குறைகள் இருப்பதினாலே தனியார் பஸ்களிலும் அந்தக் குறைகள் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும், நடு ரோடிலே நிறுத்துவது என்பது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது சர்க்கார் பஸ்களைப் பொறுத்த வரையிலும் என்பதை நகரில் செல்லுகின்ற நாம் எல்லோரும் அறிவோம். பெரும்பாலும் ரோடு ஓரத்தில் நிறுத்துவதே இல்லை. இது மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக ஆகிவிட்டது. ஐயாவே செய்கிறார். அயலார் செய்தால் என்ன கேள்வி என்ற நிலை இருக்கிறது. பெரியவர்கள் செய்வதை பின்பற்றுவது மரபு. சர்க்கார் துறையிலேயே இப்படி செய்கிறார்கள் என்று கருதுகிற மற்றவர்களுக்கு ஒரு ஹத்து இல்லாமல் போய்விடுகிறது. இப்படித்தான் செய்யவேண்டுமா என்று கூட எண்ணும்படியான உள்ளத் துடிப்பு ஏற்பட்டுவிடுகிறது, பெரும்பாலும் பார்க்கலாம். பல இடங்களில் பெரிய டிரங்கு ரோடுகளில் கூட நடு ரோடில் காரை நிறுத்திவிட்டு, ஆளை இறக்கிவிட்டு, காப்பி சாப்பிட போய்விடுவார்கள். இதனால் பெரிய கஷ்டம் ஏற்படுகிறது. முன்பு ரோடுகளில்

கொஞ்சம் மார்க்காவது இருந்தது. அந்த மார்க்கு கூட இப்பொழுது அழிந்து போய்விட்டது. தேவையில்லை என்று விட்டுவிட்டார்களோ என்னவோ தெரியாது. பழைய காலத்தில் 'ஃபுட் பாத்துக்கு' ஒரு அடிக்கு அப்பால் நிறுத்தினால் அபராதம் விதிக்கப்படும். அது மாதிரி கொஞ்சம் கடுமையாக இதை கண்காணிக்கவேண்டும். அதற்காக அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டும் என்று சொல்லவில்லை. அந்த வகையான விதிகளை மீறுபவர்கள் மீது செயல் முறையில் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் ஏராளமான ஆக்சிடெண்டுகள் தடுக்கப்படும், காலதாமதம் தடுக்கப்படும். சர்க்கார் போக்கு வரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கும். அதன் மூலமாகவும் இத்தகைய இடையூறுகள் சில நீங்கும். இவற்றையெல்லாம் மனத்திலே கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டு, அமைகின்றேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையானது பல வகையிலே மிகவும் முக்கியமான ஒன்றாகும். நம்முடைய ராஜ்யத்தினுடைய போக்குவரத்துத் தேவைகளை கவனிக்கக்கூடிய ஒரு துறை, அரசாங்கத்திற்கும் கணிசமாக வருவாயை தேடிக்கொடுக்கக்கூடிய ஒரு துறை. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 14 கோடி அளவுக்கு வண்டிகளின் மீது விதிக்கக்கூடிய வரிகள் மூலமாக அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது மிகவும் சிறப்பாகவும், பெருமைப்படக் கூடிய முறையிலும் நடைபெறுகிறது என்று சில அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். ஆனால், நம்முடைய நாட்டில் ஏற்பட்டுள்ள தேவையோடு ஒப்பிட்டுப் பார்த்து, போதுமான அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்துத்தான் நாம் திருப்தி அடையவேண்டும். இன்னும் நாம் திருப்தி அடையக்கூடிய நிலைக்கு போவதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. அதுவும் கிராமப்புறங்களில் உள்ள தேவை பூராவையும் நிறைவேற்றக்கூடிய நிலை இல்லாமல் இருப்பதைப் பார்க்கிறபொழுது நாம் அஞ்ச நேரிடுகிறது. இந்தப் போக்குவரத்துத் துறையை இன்னும் திறமையாக நடத்துவதற்கு யோசனைகளை நாம் கூறுவதற்கு இந்தத் துறை இந்தச் சபை அங்கத்தினர்களுக்கு உதவி செய்வதில்லை. இந்தத் துறையைப் பற்றி தகவல்கள் தெரிந்துகொள்வதுகூட மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்திற்குப் பதிலாக சபை முன்பு வைத்திருக்கக்கூடிய அறிக்கையில் வேண்டுமானால் ஏதோ சொற்ப தகவல்கள் இருக்கின்றன. இந்தத் துறை தன்னுடைய ஆண்டு அறிக்கையை வெளியிடுவதே இல்லை, நிறுத்திவிட்டதோ என்னவோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. 1963-ம் வருஷத்திய அறிக்கையை 1965-ல் வெளியிட்டிருக்கிறார்கள், இரண்டு வருஷம் கழித்து. அதற்குப் பிறகு எந்த ஆண்டு அறிக்கையையும் வெளியிடவில்லை. ஆண்டு அறிக்கை வெளியிடுவதன் மூலம் பல முக்கிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், ஆலோசனை கூறுவதற்கும் உபயோகமாக

இருக்கும். இந்தத் துறை தகவல்களையெல்லாம் அவ்வப்பொழுது சேகரித்து வைத்திருக்கக்கூடிய ஒரு துறையாகும். காலம் கழித்து விவரங்கள் சேகரிக்கக்கூடிய ஒரு துறை அல்ல இது. ரெவின்யூ டிபார்ட்மெண்ட் வேண்டுமானால் இரண்டு வருஷம் விவரங்கள் தயாரிக்கலாம் என்று இருக்கலாம். ஆனால், இந்தத் துறை அப்படியில்லை. அவ்வப்பொழுது விவரங்களைச் சேகரித்து ஆண்டு அறிக்கையை வெளியிடவேண்டும், இந்த சபைக்கு கொடுக்க வேண்டும், சபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏன் அப்படிக் கொடுப்பதில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆகையினால் தகவல்கள் பல போதவில்லை. இது பஸ் போக்குவரத்திற்கு பர்மிட் கொடுக்கும் துறை மட்டுமல்ல, மற்ற ராச்சியத்தில் மோட்டார்கள் டிஸ்ட்ரிப்யூஷன், ஸ்பேர் பார்ட்ஸ், முதலிய எல்லா விவரங்களும் சேர்ந்துதான் விவாதிக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிலும் கஷ்டம் ஏற்பட்டிருக் கிறதா?

இந்தத் தொழில் மிக லாபகரமான தொழில். இந்தத் தொழில் அதிக முதல் இல்லாமல், குறைவான முதலிலே, கடன் வாங்கி இரண்டு அல்லது நான்கு பஸ்கள் வாங்கி, அவ்வப்பொழுது, சம்பா தித்து, வரியையும் கட்டி, கடனுக்கும் கட்டி, நல்ல வாழ்க்கை நடத்தலாம். இந்தத் தொழிலில் உற்பத்தியான சரக்கு தேங்கி விடும் என்கிற கவலை இல்லை. வண்டிகளில் எல்லாம் நல்ல வரு மானம் வருகிறது. சாதாரணமாக தனியார் வண்டிக்கு, கிட்டத் தட்ட வண்டி ஒன்றுக்கு ரூ. 500, ரூ. 600, ரூ 700 கூட வசூலாகும் அளவுக்கு வருமானம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஒவ் வொரு நாளும் ஓட்டக் கூடிய தூரத்தையும் 200 மைலுக்கு அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வண்டியிலும் 65 பேர்கள், ட்ரைவர் கண்டக்டர் அன்னியில், பிரயாணம் செய்யலாம். ட்ரைவர் கண்டக்டர் இருவரும் சேர்ந்து 67 பேர்கள் ஆகிறது. இடையில் செக்கிங் இன்ஸ்பெக்டர் என்று ஒருவன் வருவான் அவனையும் ஏற்றிக் கொள்ளலாம், இப்படி அதிகப் பேர் கள் பிரயாணம் செய்து லாபம் கிடைக்கக்கூடிய துறை இது. இவைகளையெல்லாம் சரியாகப் பார்த்து வருவாயைக் கருக்காக வசூல் செய்யவேண்டும் என்று கவலையோடு பணிபுரிந்தால், மூன்று நான்கு கோடி அதிகமாக வரும். வருமான வரியும் அதிகமாகக் கிடைக்கும். இதெல்லாம் என்னுடைய உத்தேச மதிப்பீடுதான். ஆராய்ச்சி பண்ணவில்லை. நாட்டில் நடக்கும் நடப்புக்களைப் பார்த்து ஓடும் பஸ்கள் பொறுத்தவரை மட்டும் சொல்லுகிறேன். ஆகவே, இதைக் கருக்காக வசூல் செய்து, கணக்குகள் வைத் திருக்கிறார்களா என்று பரிசீலிக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையின் அமைச்சருக்கு நான் சொல்லுகிறேன் என்கிற காரணத்தால், சொன்னவுடனேயே மறுத்துவிடலாம், அதைப்பற்றி யோசிக்கக்கூட வேண்டாம் என்கிற அபிப்பிராயம் இருக்கலாம். அப்படிப்பட்ட யோசனை கூட ஏற்படும். எவ்வளவோ யோசனைகள் கொடுத்தாகி விட்டது. பர்மிட் ஒன்று இஷ்யூ பண்ணி ஆறுமாதத்திற்கு ஒரு முறை

ப்ரொட்யூஸ் பண்ணி சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று ரெஸ்ட்ரிக்ஷன் வைக்கவேண்டும் என்று சொல்வதுகூட நல்ல யோசனை என்று சொல்லக் கூடிய, பாவம் அவர்களுக்கு செறிந்த மனது கிடையாது. அது போகட்டும்.

நண்பர் திரு. கமலநாதன் ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொன் னார்கள். சில ட்ரான்ஸ்போர்ட்டுகளிலே டிக்கட்டுகளை திருப்பி வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அவர் டிக்கட்டை வாங்கு வதாக மட்டும் தகவல் சொன்னார்கள். எனக்கு நேரிடை அனுபவமே இருக்கிறது. சேலம் ஜில்லாவில் என்.எஸ். பஸ்ஸிலே —என்னுடைய தொகுதி திருச்சியிலே, குடும்பம் சேலத்திலே; ஆகவே சேலத்திற்கும், திருச்சிக்கும் நானே பிரயாணம் பண்ணு கிறவன்—ஒரு தரம் சேலத்திலிருந்து திருச்சி வந்தவுடன், கண்டக் டர் டிக்கட் வேண்டும் என்று கேட்டார் 'எதற்கப்பா திருப்பிக் கொடுக்கவேண்டும்' என்று கேட்டேன். 'கொடுக்கவில்லை என்றால் என் வேலை போய்விடும், ஐயா' என்றார். நான் 'சரி கொடுக்கிறேன். ஆனால், இன்ன நெம்பர் டிக்கட் பெற்றுக் கொண்டேன் என்று எனக்கு ரசீது கொடு' என்றேன். அவர், 'ஐயையோ, இது என்னுங்க தொந்தரவு, நான் ஒரு தொழிலாளி; நீங்க யாருங்க? என்று கேட்டார். நான் சொன்னேன். அப்பொழுதுதான் அவர் நான் யார் என்று புரிந்து கொண்டார். 'என்ன பண்ணினாலும் சரி, நான் டிக்கட்டைக் கொடுக்கப் போவதில்லை. உனக்கு வேலை போச்சு என்றால், அதற்கு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லி திருப்பிக் கொடுக்க போவது இல்லை என்று சொல்லிவிட்டேன். இப்படித் தொடர்ச்சியாக இரண்டு மூன்று தடவை நடந்தது. இந்த மூன்று டிக்கட்டுகளையும் சேர்த்து, தபாலில் அனுப்பினால் கூட, போய்ச் சேருமோ சேராதோ என்று, நேரிலேயே கொண்டுவந்து கொடுத்தேன். இவ்வளவு அக்கறை யோடு திருப்பிப் பெற்றுக் கொள்ளுகிறார்களே அதுபற்றி கணக்கில் வைத்திருக்கிறார்களா என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நான் அந்த டிக்கட்டுகளை டிரான்ஸ்போர்ட் கமிஷனரிடம் நேரிடை யாகக் கொடுத்தேன். அவரும், என்க்ளோஷர் உள்படப் பெற்றுக் கொண்டேன் என்று அக்னாலெட்ஜ்மெண்டும் கொடுத்தார். அதை வேண்டுமானால் சபையில் வைக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவை இப்பொழுது என்னிடம் இல்லை. சென்னையில்தான் என் ஃபைலில் இருக்கிறது. வேண்டுமானால் கொடுக்கிறேன். இது நடந்து 8, 9 மாதங்கள் ஆகிவிட்டன. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று ஒன்றும் தெரியாது. அதைப் பற்றித் தகவல் இல்லை. விசாரணையில் இருக்கிறதா என்று தெரியவில்லை. அவர்கள் ரொம்பக் கட்டணத்தை குறைத்துக் கொள்ளுகிறார்கள். குறைப்பவர்களைக் கூட நிர்ப்பந்தப்படுத்தி உயர்த்தச் சொல்லு கிறது அரசாங்கம் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே, அவர்கள் கட்டணத்தை குறைக்கும் அளவுக்கு இருக்கும் ஆபரேடர்களாக இருந்தால் குறைக்கட்டும். ஆனால், மற்றவர்கள் கண்ணைக் கெடுக்க வேண்டும் என்று பொய்க் கணக்கை வைத்துக்கொண்டு, லாபத்தை மறைத்து, இந்த ராச்சி

யத்திலே சின்ன ஆபரேடர்களை ஒழிக்க வேண்டும் என்று ஜனங்களையும் அரசாங்கத்தையும் ஏமாற்றுகிறார்கள் என்றால் அப்படிப் பட்டவர்களுடைய செயல்களை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. பிரஸ்தாபத்தில் இருப்பவர், அவர் ஒருவர்தான் இந்த மாநிலத்திலேயே அப்படிச் சொல்வார் என்று நினைக்கிறேன். இந்த ஆர்.பி.டி. கம்பெனியார், 7, 8 கம்பெனியாக வைத்து, ஃப்ளிட் ஓனர் என்று இல்லாமல், மீடியம் ஆபரேடர் என்று தன்னை மாற்றிக் கொண்டு எவ்வளவு லாபம் கிடைத்தாலும் அதை மறைத்து, இருக்கக் கூடிய சிறிய ஆபரேடர்களை ஒழிக்கத் திட்டம்போட்டு வேலைசெய்கிறார்கள் என்றால், அவர்களுடைய தில்லுமுல்லுகளைப் புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்களிடம் அனுதாபம் காட்டுவது சரியாகாது.

அதே போல பஸ்-ரூட்டுகளை விற்பனைசெய்வது பற்றி, பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மதிப்பிற்குரிய திரு. சா. கணேசன் அவர்கள் இன்றைக்குத்தான் ஒத்துக் கொள்ளும்படியானதாகப் பேசினார்கள். என்றைக்குமே எங்கள் இரண்டு பேருக்கும் கருத்து முரண்பாடுதான். ஆனால், அவர் இன்றைக்குச் சொன்னதை அமைச்சரும், அரசாங்கமும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள், பஸ் பர்மிட்டிலே வியாபாரம் செய்ய முடியாமல், பஸ் கம்பெனியையே விற்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றார்கள். ரொம்ப சந்தோஷம், அதை வரவேற்கிறேன். ஆனால், இதெல்லாம் தனியார் துறைக்குக் கொடுப்பதால் வந்த வினை என்பதைத் தெரிவிக்கிறேன். ஆனாலும், அரசாங்கமே இதில் தலையிடவேண்டும்; பஸ் பர்மிட்டில் ட்ரேடிங் நடக்கிறது. பர்மிட் கொடுக்க வேண்டும், கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இப்படி ட்ரேடிங் நடக்கிறது. இப்படி நடப்பதை அரசாங்கம் தடுக்க வேண்டும்.

ஒரு அமைச்சர் சம்பந்தப்பட்ட கம்பெனி ஒன்று விற்கப் பட்டிருக்கிறது இந்த வகையாக; ப்ரூவ் பண்ணத் தயாரா என்றால், ப்ரூவ் பண்ணவும் தயாராக இருக்கிறேன். உண்மையில்லாததை நான் பேசுவது கிடையாது. ப்ரூவ் பண்ண வேண்டும் என்று சவால் விட்டால் ஏற்கத் தயாராக இருக்கிறேன். அமைச்சருடைய குடும்ப பஸ் ட்ரான்ஸ்போர்ட் விற்கப்பட்டிருக்கிறது. இது அமைச்சராக இருக்கும் போது நடந்திருக்கிறது, இந்த அமைச்சரவையில் இருப்பவர், போன அமைச்சரவையில் இல்லை; அவர் விற்றது எவ்வளவுக்கு? எவ்வளவு ஓபன், எவ்வளவு 'அண்டர் தி டேபிள்'? அதற்கு ப்ளாக் என்று பெயரில்லை; அண்டர் தி டேபிள் எவ்வளவு? ஓவர் தி டேபிள் எவ்வளவு? இதையெல்லாம் ப்ரூவ் பண்ணவும் தயார். வாங்கின ஆள் யார் என்றும் தெரியும். அமைச்சர் அதை விசாரிக்கத் தயாரா? மற்ற ஆபரேட்டர்கள் வைண்டப் செய்து விற்கிறது என்றால் அது வேறு விஷயம். அவர்களும் கம்பெனியை வைண்டப் பண்ணி விற்பது பற்றி ஆட்சேபனை இல்லை. அமைச்சரான பிறகு, பஸ் ஓட்டுவது கேவலம் என்று கம்பெனியை வைண்டப் பண்ணி விடுவது என்றால், ரொம்ப சந்தோஷம். அது பெருமைக்குரிய விஷயம்.

அப்பொழுது எப்படி விற்கவேண்டுமோ. அரசாங்கத்திடம் சரண்டர் செய்தால் என்ன? அமைச்சர் மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டாமா? மற்ற ஆபரேடர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டாமா அமைச்சர்? அமைச்சரவையில் இருப்பவரே இந்தக் காரியத்தில் இறங்கிவிட்டு, மற்ற ஆபரேட்டர்களுக்குச் சொன்னால், அதை யார் கவனிப்பார்கள்? காவேரிக்கரையில் இருப்பவர் உபதேசம் செய்ததுபோலத்தான்; அதை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? அப்பொழுது அரசாங்கத்தின் கொள்கைக்கு என்ன மரியாதை இருக்கும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இதற்கு மேற்கொண்டு, அமைச்சர் விரும்பினால், நிரூபிக்கத்தயாராக இருக்கிறேன். எனக்கு ஒன்றும் அக்கறை இல்லை. எனக்குப் பொது மேடை இருக்கிறது, கட்சிக் கூட்டம் இருக்கிறது. ஆனால், அமைச்சர் இதைச் சரிப்படுத்த விரும்பினால், நான் அதற்கு உதவி செய்யத் தயார். நான் என்ன சொல்லுகிறேன் என்பது அமைச்சருக்குத் தெரியாமல் இருக்காது. தெரிந்தும் சொல்லாமல் இருக்கலாம். நான் சொல்வது அமைச்சர் இதிலெல்லாம் உதாரணமாக இருக்க வேண்டும். அதைவிட்டு, நாம் ஜனநாயகம் பேசி என்ன பிரயோஜனம்? நேற்றுப் பேப்பரிலே பார்த்தேன், காங்கிரஸ் அக்கிராசனர் சொல்லியிருக்கிறார். இப்படி அராஜகம் நடந்தால், ராணுவ ஆட்சி வந்துவிடுமோ என்று பயப்படுகிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ரயில்களை எரிப்பது தவறு; போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீவைப்பது தவறு. இது, அராஜகம், புரட்சி அல்ல. இப்படிப்பட்ட அராஜகத்தினால் ஆட்சியை மாற்ற முடியாது. கலகம் செய்யலாம்; ஆனால் கலகமெல்லாம் புரட்சி அல்ல. ஆனால், அதைவிட ஆபத்தான அராஜகம் இது. சட்டங்களை மீறுவதும், கொள்கைகளை மீறுவதும் அதைவிட அராஜகம். இந்த அராஜகத்திற்கு எங்கே போய்ப் பரிகாரம் செய்வது? இப்படி அராஜகம் செய்யலாமா? இந்த அராஜகத்திற்கு அமைச்சரவை வழிகாட்டியாக இருக்கலாமா என்று தான் நான் கேடக விரும்புகிறேன்.

இந்த பஸ் ஆபரேட்டர்களிடம் போய் எதற்காக இவ்வளவு அனுதாபம்? சுதந்திரத்திற்காக நாம் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய காலத்தில், பஸ் ஆபரேட்டர்களை நம்பியா போராடினோம்? . மில் முதலாளிகளை நம்பியா போராடினோம்? அவர்களெல்லாம் பெரும்பாலும் வெள்ளைக்காரர்களுக்குத் துணையாக இருந்தவர்கள். அதே போல், இன்றைக்கு ஒரு புதிய சமுதாயத்தை அமைப்பதற்கென்று ஒரு இயக்கம் என்று இருக்குமானால், அதற்கு பஸ் ஆபரேடர்களை நம்பி, அவர்களுடைய பலத்தை நம்பி இருக்க முடியுமா? ஒரு அரசியல் கட்சியினுடைய இயக்கம் அவர்களை நம்பி இருக்குமானால், அரசியல் கட்சியினுடைய லட்சியத்திற்கே கோளாறு விளைவிக்கக்கூடியதாகத்தானே அது இருக்கும்? ஆகையால், பஸ் ஆபரேட்டர்களைப் பொறுத்த வரையில், அவர்களைப் பஸ் ஆபரேட்டர்களாகமட்டும் கருத வேண்டுமேயொழிய, அவர்களை அரசியல்வாதிகளாகக் கருதக் கூடாது. அவர்களுக்குப் பணிந்துபோய் நிர்வாகம் நடக்கலாமா?

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th March 1966

இப்பொழுது நடக்கிற நிர்வாகத்தை எடுத்துப் பார்த்தால், சில ஆபரேட்டர்களுக்காக நடக்கக்கூடிய நிர்வாகமா அல்லது அரசாங்கத்திற்காக நடக்கக்கூடிய நிர்வாகமா என்று சந்தேகமாக இருக்கிறது.

எவ்வளவு அடிஷனல் ரூட் போட்டார்கள்? பழைய ரூட்களில் அதிக பஸ்கள் எத்தனை விட்டார்கள்? புதிய பஸ் பாதைகள் திறக்கப்படவேண்டும். ஏற்கனவே இருக்கக்கூடிய பாதைகளில் அதிக பஸ்கள் விடப்படவேண்டும். இந்த இரண்டும் அவசியம். இந்த இரண்டையும் செய்தால், குறைந்தபட்சம் 500 பஸ்களாவது இந்த ஐந்தாறு வருஷங்களுக்குப் போடவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், எவ்வளவு போட்டிருக்கிறார்கள்? கிராம மக்கள் பஸ் போதவில்லை என்று எவ்வளவு கவலைப்படுகிறார்கள்? எவ்வளவு தேவை இருக்கிறது? மூன்று மைல், நான்கு மைல் கிராமத்தைவிட்டு ரோடிலே வந்து, மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருந்தாலும், பஸ்காரர்கள் கையை ஆட்டிவிட்டுப் போய் விடுகிறார்களே! அம்மாதிரி எத்தனை இடங்களில் நடக்கின்றது என்று நான் குறிப்பிட முடியும். முன்னேற்றம் அடைந்த ஜில்லாவிலேயே இப்படிப்பட்ட நிலை என்றால், பின் தங்கிய இராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை யோசிக்கவேண்டும். திருச்சி ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும், இம்மாதிரி நிலைமை இருக்கிறது என்பதை நான் அனுபவத்தில் பார்த்துச் சொல்லுகிறேன். அப்படி இருக்கும் போது, கிராமப் புறங்களில் பஸ் போக்குவரத்து நிலைமை எப்பொழுது அபிவிருத்தி அடையும் என்று சொல்ல முடியவில்லை.

நகரத்தின் நிலைமை தான் என்ன? திருச்சி நகரம், சேலம் நகரம், கோயம்புத்தூர் நகரம், மதுரை நகரம் ஆகிய நான்கு நகரங்களின் பஸ் போக்குவரத்து நிலைமை எப்படி இருக்கிறது? அரசாங்க பஸ் போக்குவரத்து இருக்கும் சென்னை நகரத்தில் எல்லோரும் குறை சொல்வார்கள். ஆனால், இந்த நான்கு நகரங்களைக் குறித்து யாரும் குறை சொல்வதென்றால் கஷ்டமாக இருக்கிறது. இந்த நகரங்களில் என்ன நிலைமை? எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது? எவ்வளவு நீண்ட க்யூ நிற்க வேண்டியிருக்கிறது? நெருக்கடிக்குக் காரணம் என்ன? எல்லாமே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால் நேர்ந்து விட்டதா? சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எதைக் கட்டுப்படுத்துகிறது? அந்தச் சமாதானம் இப்பொழுது சொல்ல முடியாது. அரசாங்க பஸ் போக்கு வரத்து இருக்கக்கூடிய பாதையைத்தான் கட்டுப்படுத்தும் என்று சொல்லாமே தவிர, புதிய பாதை திறக்க முடியாது, ஏற்கனவே இருக்கும் பாதையில் அதிக பஸ் போடக்கூடாது என்று எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? கடந்த இரண்டு, மூன்று வருஷ காலத்தைப் பார்த்தோமானால், புதிய பாதைகள் திறப்பதும், அதிக பஸ்கள் விடுவதும் ரொம்பக் குறைவாக இருந்திருக்கிறது. அதிலே முன்னேற்றமே கிடையாது. இதைப் பார்த்து எப்படி நாம் பாராட்டுவது? ஜனங்கள் எவ்வளவு திருப்தி அடைந்திருக்

18th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கிறார்கள்? கட்டணம் ஓரளவு உயர்ந்திருக்கிறது. எவ்வளவு கட்டணம் இருந்தாலும் ஜனங்கள் பிரயாணம் செய்ய அவசியம் இருக்கிறது. ரயில் போக்குவரத்துக்கும், பஸ் போக்குவரத்துக் கும் கூட நம்முடைய ராஜ்யத்தில் போட்டி இருப்பதாக நான் நினைக்கவில்லை. நீண்ட தூர ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் பஸ்கள் இவ்வளவு ஆரம்பித்தும்கூட, ரயிலோடு போட்டி இல்லை. பஸ் போக்குவரத்தினால் ரயில் போக்குவரத்து ஒன்றும் பாதிக்கப்பட வில்லை. காரணம், ரயிலில் போகிறவர்கள் ரயிலில் போகிறார்கள். பஸ்ஸில் போகிறவர்கள் பஸ்ஸில் போகிறார்கள். இந்த பஸ்கள் விடுவதனால் ரயில்வேக்கு வருமானம் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. ரயில்வேக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிற தென்றால், அது வேறு நிர்வாகக் காரணமாக இருக்கலாம். பஸ் போக்குவரத்து அதற்குக் காரணம் அல்ல. இன்னும் பஸ் போக்கு வரத்துக்குத் தேவை இருக்கிறது. அப்படியிருக்கும்போது, புதிய பாதைகள் திறப்பதில், கிராமப் புறத்தை எடுத்துக் கொண்டாலும் நகரப் புறத்தை எடுத்துக் கொண்டாலும், அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? என் போன்றவர்கள் பல ரூட்டு களைக் குறிப்பிட்டுப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். வேண்டு மானால், அந்த ஃபைலைக் கொடுக்கிறேன். எழுதின கடிதங்களை அதிகாரிகளுக்குத்தான் எழுதியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் "என்னிடம் கொடுத்திருக்கலாமே" என்று சொல்லக்கூடும். அப்படிக் கொடுத்தால்தான் எதாவது நடக்குமோ என்னவோ அது தெரியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கெல்லாம் எழுதியிருக் கிறேன். டெவலப்மென்ட் கவுன்சில் தீர்மானங்களும் இருக் கின்றன. எத்தனை ரூட்கள் திறக்கப்பட்டன? திறக்கப்படவில்லை யென்றால், ஏன் திறக்கவில்லை? ஐந்து வருஷங்களாகத் திறக்கப் படாத ரூட்களுக்கெல்லாம் யோசனைகள் இருக்கின்றன. இதெல் லாம் லாபம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஏன்? சில கனம் அங்கத்தினர்கள் சொன்னபடி, ஏற்கனவே, பஸ் பர்மிட் வாங்கிவிட்டவர்கள் புதிதாக அந்தப் பாதையிலே அதிக பஸ் வருமானால் அது தங்களுக்கு ஆபத்தாக இருக்கும் என்ற காரணத் தினால் அவர்கள் எதிர்க்கிறார்கள். தங்களுடைய ரூட்டுக்கு அருகில் புது ரூட் திறப்பது என்றாலே அவர்கள் எதிர்க்கிறார்கள். அரசாங்க பஸ் ரூட் அல்லது வேறு ஆபரேட்டர் வந்தாலும்கூட எதிர்க்கிறார்கள். தங்களுக்கே கிடைப்பதற்கு சான்ஸ் இருக்கு மென்றால் அப்பொழுது பேசாமல் இருப்பார்கள். இப்படி பஸ் ஆபரேட்டர்களுடைய சாம்ராஜ்யம் ஏற்பட்டுவிட்டது. அப்படி யாவது எல்லா ஆபரேட்டர்களுக்கும் சம சந்தர்ப்பம் இருக்கிறதா? ஒவ்வொரு ஜில்லாவிலும் எடுத்துக்கொண்டால் இரண்டு பேர், மூன்று பேர், இந்த பஸ் ஆபரேட்டர்கள் இருந்துகொண்டு, அவர் கள் சர்வாதிகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் வைத்தபடி தான் நடக்கிறது. அதற்கு என்ன என்ன சதி செய்ய முடியுமோ அதைச் செய்து, புதிய பஸ் ரூட்களோ, புதிய பஸ்களோ வராமல் செய்து விடுகிறார்கள். இதற்கு எவ்வளவு சான்றுகள் வேண்டு மானாலும் சொல்லலாம். அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் விசாரிக்கத் தயாராய் இருக்கிறாரா? அட்வைசரி கமிட்டி அரை

மணி நேரம் கூடும். அங்கேயும் இதைப்பற்றிப் பேச முடிவது இல்லை. அட்வைசரி கமிட்டியிலே, "மதுரை நகரத்தில் ஏன் இப்படி ஒரே மொனாபலி இருக்கவேண்டும்?" என்று ஏழு வருஷங்களாகக் கேட்கிறேன். என்னுடைய துரதிருஷ்டம்—ஏழு வருஷங்களாக நானும் அங்கே மெம்பராக இருக்கிறேன். ஏழு வருஷங்களில் பல விஷயங்களை எடுத்துப் பேசியிருக்கிறேன். சில வருஷங்களுக்கு முன்பு, ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்து, மதுரை நகரத்தின் போக்குவரத்துத் தேவையைப் பரிசீலிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டார்கள். அவர் சில சிபார்சுகளைச் செய்தார். அந்த சிபார்சுகள் எங்கே போய்விட்டன? அவை அமலுக்குக் கொண்டுவரப்பட்டனவா? மதுரையில் கடந்த பத்து வருஷங்களில் எத்தனை அதிக பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன? புதிய பாதைகள் எத்தனை திறக்கப்பட்டிருக்கின்றன? ஏற்கனவே இருக்கும் பாதைகளில் அதிக பஸ்கள்விட அனுமதி கொடுத்தது எத்தனை? இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்கவேண்டும். இந்த வளர்ந்து வரக்கூடிய நகரத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரத்தைக் கொடுப்பார்களானால் நான் அதை யோசனை செய்யத் தயாராயிருக்கிறேன்.

சில ஆபரேட்டர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அவர்கள் தங்களுக்கு இருக்கக்கூடிய வசதிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு என்ன என்ன செய்கிறார்கள்? ஃப்ளீட் ஓனர்ஸாக இருக்கக்கூடியவர்கள் நிறைய ஸ்பேர் பஸ்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்பேர் பஸ்ஸைப் பற்றியும் நாம் யோசிக்க வேண்டும். ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியிலே யோசித்து, ஸ்பேர் பஸ்ஸுக்குப் பர்மிட் கொடுப்பதையும் கூட ரெகுலேட் பண்ணவேண்டும்; ஒரு ஆபரேட்டர் எத்தனை ஸ்பேர் பஸ் வைத்திருக்கவேண்டும் என்பதை நிச்சயிக்க வேண்டும். பத்து ரூட்கள் வைத்திருக்கக் கூடிய ஒரு ஆபரேட்டர், தனக்கு இருக்கக்கூடிய இம்போர்ட், எக்ஸ்போர்ட் வசதியை வைத்துக்கொண்டு, இன்னும் சாஸீஸ் முதலியவற்றை இம்போர்ட் செய்யும் வசதியை வைத்துக்கொண்டு, பத்து ஸ்பேர் பஸ் கூட வைத்துக்கொள்ளலாம் என்று செய்யலாமா? ஸ்பேர் பஸ் என்று வைத்துக்கொண்டு, டூரிஸ்ட் ட்ராஃபிக்குக்குப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இன்னும், திருவிழாக் காலங்களிலும், பீக்-அவர் ட்ராபிக்கின்போதும், அவற்றை உபயோகப்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது. ஏதோ ஒன்றிரண்டு டெம்பரரி பர்மிட் வாங்கிக்கொண்டுவிட்டு, மற்றவற்றையெல்லாம் ஸ்பேர் பஸ் என்று வைத்துக்கொண்டு கணக்கிலே காட்டாமல் இருந்துவிடுகிறார்கள், ட்ராபிக் சர்வே எடுக்கப்போனால், ட்ராபிக் குறைவாக இருக்கிறது. போக்குவரத்து கட்டாது, புதிய ரூட் வேண்டியதில்லை, அதிக பஸ் வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடிய அளவிற்கு நந்தி மாதிரி உட்கார்ந்திருக்கிறார்கள். இப்படிப் பல ரூட்களில் நடக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி பண்ணாமல் என்ன திறமையாக நடத்துவதாகச் சொல்ல முடியும்? ஆந்திர ராஜ்யத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அங்கிருப்பதைவிட இங்கு ரோடு நன்றாக

இருக்கிறது என்று திருப்திப்பட்டுக்கொள்ளலாம். வண்டிகள் அங்கிருப்பதைவிட இங்கு நன்றாக இருக்கின்றன என்று கூடச் சொல்லித் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். இதனால் மட்டும் திருப்தி அடைவதற்கு என்னால் முடியவில்லை. அமைச்சர் வேண்டுமானால் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். அவர்கள் கட்சியைச் சார்ந்திருப்பவர்கள் வேண்டுமானால், ஒரு சிலர் திருப்திப் பட்டுக் கொள்ளலாம். ஆனால், மக்கள் திருப்திப்பட மாட்டார்கள். மக்களிடம் ஆளும் கட்சியினர் பேசும்போது, நான் பேசுகிற மாதிரி தான் பேசுகிறார்கள். டெவலப்மென்ட் கமிட்டியில் பேசும்போதும், நான் பேசுகிற மாதிரிதான் ஆளும் கட்சியினரும் பேசுகிறார்கள். ஒரு வேளை பஸ் ஆபரேட்டர்களாக இருப்பவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், வேறு விதத்திலே கூறியிருக்கலாம். மற்ற அங்கத்தினர்களைப் பொறுத்த வரையில் பார்த்தால் நான் சொல்லக் கூடிய முறையிலேதான் அவர்கள் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். எங்கே அபிவிருத்தி பண்ணியிருக்கிறார்கள்? எவ்வளவு அபிவிருத்தி பண்ணியிருக்கிறார்கள்? அபிவிருத்தி இல்லாததற்குக் காரணம் என்ன? மொனாபலி தான். பஸ் ரூட்களை சில பேர்கள் கையில் ஏகபோகமாக வைத்துக்கொண்டு, நம்முடைய நாட்டின் போக்குவரத்து வளர்ச்சியின் குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறம் அபிவிருத்தி அடைய வேண்டுமானாலும் விடமாட்டேன் என்கிறார்கள். நகரப்புறம் அபிவிருத்தி அடைய வேண்டுமானாலும் விடமாட்டேன் என்கிறார்கள். நீண்ட தூர பஸ் விடவேண்டுமானாலும் அதற்கும் விடமாட்டேன் என்கிறார்கள். இலாக்காவைப் புனிதமாக வைப்பதற்கும் அவர்கள் விடமாட்டேன் என்கிறார்கள். இலாக்காவில் இருக்கும் அதிகாரிகளைக் குறை சொல்லி என்ன செய்வது? 'என் கையெழுத்துப் போட்ட பர்மிட்டை வாங்கிக்கொண்டு போய், லட்சம் லட்சமாகச் சம்பாதித்து, தங்கள் இஷ்டம்போல், வீடு, பங்களா முதலியவை கட்டிக் கொண்டு சௌகரியமாக இருக்கிறார்களே, கையெழுத்து போட்ட என்னை இருந்த இடத்திலேயே வைத்திருக்கிறதே' என்று நினைத்தால், அதிகாரியின் குற்றமா அது? அந்த அதிகாரி எப்படி நாணயமாக வேலை செய்ய முடியும்? மொனாபலி பூராவையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் உடனே வற்புறுத்தவில்லை. (மணி அடிக்கப்பட்டது). சீக்கிரம் முடித்து விடுகிறேன். அவர்களுக்கு நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், பஸ் போக்குவரத்தில் தங்களுக்கு இருக்கும் மொனாபலி ஆதிக்கத்தை வைத்துக் கொண்டு, மற்றும், சேஸீஸ் ஏஜென்சி, ஸ்பேர் பார்ட்ஸ் ஏஜென்சி இதெல்லாம் வைத்துக்கொண்டு, மற்ற சிறிய ஆபரேட்டர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காத கஷ்ட நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால், பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது; வரிகள் சரியாக வசூலாகாமல் இருக்கின்றன. ஆகவே, ஸ்பேர் பார்ட்ஸ், டயர் டிஸ்ட்ரிப்யூஷன் சம்பந்தப்பட்ட வரையில், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கூட்டுறவு சொசைட்டி ஏற்படுத்தி, எல்லா ஆபரேட்டர்களுக்கும் சம சந்தர்ப்பம் இருக்கும் வகையில், ஒவ்வொரு

வருக்கும் அவசியமான கோட்டா நிர்ணயித்துக் கொடுத்தால், அவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். அதன் மூலம் இத்தகைய சாமான்கள் ப்ளாக் மார்க்கெட்டில் போவதைத் தடுக்கலாம்.

11·00 a.m. அதோடு அவசியமான அளவில் இன்னும் எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு சப்டிட்யூட்ஸ் கொடுக்க வேண்டும் என்பது குறித்து மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

அடுத்து ஜீப் பஸ் சர்வீஸ் விடுவதுபற்றிக் கூறினார்கள். ஜீப் பஸ் சர்விஸ் இன்றையதினம் இரண்டொரு இடத்தில் இருக்கிறதே தவிர அதிகமாக வரவில்லை. அநேகமாக தஞ்சை, திருச்சி என்பதாக இப்படி எல்லா மாவட்ட கிராமங்களுக்குமே இன்றையதினம் தேவைப்படுகிறது. இது எப்படி இருக்கவேண்டுமென்றால் அந்த அந்த கிராமத்தில் இருந்து அருகில் இருக்கும் பெரிய பஸ்கள் போகக்கூடிய சாலைகளோடோ, அல்லது ஊர்களோடோ, அல்லது ரயில்வே நிலையத்தோடோ தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக அமைய வேண்டும். ஆகவே, இத்துறையிலும் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடைசியாக ஒரு விஷயம்; அரசாங்கம் ஒரு டார்ஜெட்டை வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பஸ்களை அதிகப்படுத்த வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் செயல்பட வேண்டும். இந்தத் துறையில் மட்டும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 14 கோடி வருமானம் அல்லது 30 கோடி அளவுக்கு உயர்த்தக்கூடிய வகையில் பஸ் போக்குவரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற திட்ட அடிப்படையில் வேலை செய்தால்தான் அபிவிருத்தி ஏற்படும். ஒரு தனிப்பட்ட கம்பெனியின் ஏகபோக மொனாபலி உடைக்கப்பட வேண்டும். இப்படிச் சொல்வதால் எனக்கு எந்தத் தனிப்பட்ட நபர் பேரிலும் பொறாமை இருப்பதாக நினைக்கக் கூடாது. யார் பேரிலும் எனக்குப் பொறாமையும் கிடையாது. கெட்ட எண்ணமும் கிடையாது. ஆனால், நான் சுட்டிக்காட்டியபடி மதுரையில் ஒரு தனிப்பட்ட கம்பெனிக்கு மொனாபலி இருக்கிறது என்றால்—அதுவும் அவர் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கக்கூடிய ஒருவராக இருப்பதனால் ஆளும் கட்சிக்கும் கெட்ட பெயர். அவருக்கும் நல்லதல்ல. அப்படி மொனாபலி இருப்பதை உடைப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றால் சட்ட விதிகளை மாற்ற முடிந்தால் மாற்றி அல்லது திருத்தி ஆவன செய்வதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் சொன்னார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாகக் கொள்கை அளவில் என்ன என்ன ஏற்றுக் கொள்கிறேன் என்பதையும் சொல்வதற்குத் தயாராய் இருக்கிறேன்.

ஆண்டுதோறும் பஸ்களை விஸ்தரிக்க வேண்டுமென்பது சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை. குறைந்த பட்சம் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 10 சத விகிதம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கே இது தெரியும். அவர் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டி அங்கத்தினர். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டி கூட்டத்திலேயே "ஆண்டுதோறும் 10 சத விகிதம் பஸ்களை விஸ்தரிக்க வேண்டும். அவ்வாறு உயர்த்துவதன் மூலமாகத்தான் நாம் நம்முடைய மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்" என்று சொல்லி அந்தக் கமிட்டியிலும்கூட என் கருத்துக்கு ஆதரவு கொடுத்திருப்பது அவருக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் இப்படி ஆண்டுதோறும் 10 சத விகிதம் விஸ்தரிக்க முடிந்ததா என்று கேட்டால் முடியவில்லை. அதற்குக் காரணம் மோட்டார் வாகனச் சட்டமானது அவ்வளவு சிக்கல் உள்ள, பின்னல் உள்ள சட்டமாக இருக்கிறது. அது நம்முடைய ராஜ்ய சர்க்கார் சட்டம் இல்லை. மத்திய சர்க்கார் சட்டம். அந்தச் சட்டத்தின் காரணமாக இன்றைக்கு ஒரு புது ரூட் தரவேண்டுமென்றால் ஏற்படுகிற கங்கடங்கள் அளவிட முடியாது. மேலும் சுப்ரீம் கோர்ட்டார் ஆர்.டி.ஏ.-க்கள் க்வாஸி ஜுடிஷியல் அதாரிட்டி என்பதாகவும் ஒரு வழக்கில் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். 'ஆகவே, தான் சர்க்கார் தலையிட்டு உத்தரவு போடுவது என்பதும் சாத்தியமாக இல்லை. அப்படி ஏதாவது ரூட் திறக்க வேண்டுமென்று முயற்சி செய்தால் கூட தனிப்பட்டவர்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொல்லிக் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கி விடுகிறார்கள். ஆகவே தான், கொள்கை அளவில் 10 சத விகிதம் ஆண்டுதோறும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டாலும் நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டத்தில் உள்ள சிக்கல்கள் காரணமாக விஸ்தரிக்க முடியவில்லை. இதில் ஏதோ சர்க்காருக்கு விஸ்தரிக்கக் கூடாது என்ற கருத்து இருப்பதனால்தான் விஸ்தரிக்கவில்லை என்பதாகக் கனம் உறுப்பினர்கள் நினைப்பார்களானால் அது மிகமிகத் தவறான கருத்து என்பதை மிகத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரி கருத்து சர்க்காருக்குக் கிடையாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை அளவில் சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளது; பஸ் பர்மிட்டை மாற்றுவது தவறு, அதற்காக தவறான முறையில் பணம் வாங்கிக் கொள்வதையும் நிறுத்த வேண்டும் என்பதாகும். இதைப்பற்றியும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் பலமான விவாதங்களுடன் என்ன செய்யலாம் என்பது பற்றி யோசித்தோம். மத்திய சர்க்கார் மோட்டார் வாகனச் சட்டப்படி டிரான்ஸ்பர் செய்கின்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் பஸ் பர்மிட்டை டிரான்ஸ்பர் செய்வதைத் தடை செய்வதற்கோ, நிறுத்துவதற்கோ இந்தச் சர்க்காரிடம் எவ்வித அதிகாரமும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் சில விதிகளைப் போட்டாவது தவறான முறையில் பர்மிட் மாற்றப் படுவதைக் குறைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். காரணமாக இன்றைக்கு விதிகள் என்ன இருக்கின்றன

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [18th March 1966

என்று சொன்னால்—ரூட் மாற்றப்பட வேண்டும் என்றால்
லாபம் இல்லை என்பது ஆர்.டி.ஏ.-க்குத் தெரியவேண்டும். அப்படித்
தெரிந்து அவர் சிபார்சு செய்கிறபோதுதான் மாற்றுவதற்கு விதி
செய்திருக்கிறோம். இதுவரை மாற்றப்பட்டுள்ள பஸ்களை எடுத்
துப் பார்த்தால் முதலில் ஒரு கம்பெனியாக இருந்தவர்கள் தனித்
தனியாகப் பிரித்துக் கொண்டிருப்பார்கள். தகப்பனார் இறந்த
பிறகு பாகப் பிரிவினை ஏற்பட்டதாக இருக்கும். இதுபோல
குடும்பத்தில் ஏற்படுகிற ஒரு சூழ்நிலை காரணமாக மாற்றக் கோரு
வது இவை பற்றியெல்லாம் எவ்விதத் தடங்கலும் சொல்லாமல்
நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள்
பஞ்சவர்ணத்திலே பெற்று அதை டிரான்ஸ்பர் செய்வதற்கான
முயற்சி நடக்கிறது என்று கொஞ்சம் தெரிந்தால்கூடப் போதும்,
உடனடியாக அனுமதிப்பதில்லை. ஆனால் அவ்வாறுதான் நடக்
கிறது என்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது.
"நீங்கள் உடனடியாக அனுமதிக்காவிட்டால் நாங்கள் கோர்ட்டுக்
குப் போவோம்" என்பதாகக்கூட சில பேர்கள் கடிதங்கள் எழுதி
யிருக்கிறார்கள். ஆக இதைப் பொறுத்த வரையில் இந்த அரசாங்
கம் கண்காணிப்பாகத்தான் இருக்கிறது. சில விதிகளின் மூலம்
அத்தகைய முயற்சியைத் தடை செய்யத்தான் முயல்கிறது. முழு
வதும் தடை செய்வதற்கு நமக்குச் சட்டம் அனுகூலமாக இல்லை.
நாம் தலையிட வழியில்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, கனம் உறுப்பினர்களுக்கு
நான் தெளிவித்துக்கொள்வது யாரோ ஒருவர் தம்முடைய சொந்த
லாபத்திற்காகப் பஸ்களை மாற்றுவதற்கு அனுமதிப்பதில் சர்க்கா
ருக்கு என்ன நன்மை இருக்கிறது? சர்க்காருக்கு இதில் என்ன
விருப்பம்? இத்தகைய தவறான மாற்றத்தைத் தடுக்க வேண்டு
மென்றே, உண்மையில் இந்தச் சர்க்கார் நினைக்கிறது. எந்த
அளவுக்குச் சட்டப்படி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய
முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவதாக, கொள்கை அளவில் சர்க்கார் ஒப்புக்கொண்
டுள்ளது, மாறுதலும் அவ்வளவு அதிகமாக இல்லை என்று தெரிவித்
துக் கொள்கிறேன். கணக்குகளை நீங்கள் பார்ப்பீர்களானால்
டிரான்ஸ்பர்கள் மிகக் குறைவு. ஒன்றிரண்டு அனுமதிக்கப்
பட்டிருக்குமானாலும் ஆர்.டி.ஏ. அவர்கள் இதில் எந்த விதமான
ப்ரீமியமும் வாங்கப்படவில்லை, இந்த மாறுதல் தவறானது அல்ல
என்பதாகச் சிபார்சு செய்திருப்பார்கள். இதைத்தான் தெரிவித்
துக்கொள்கிறேன். இந்த இரண்டு விஷயங்களைப் பொறுத்த
வரையிலும் அதாவது பஸ்களை விஸ்தரிப்பதிலே, நியாயமற்ற
மாறுதல்களைத் தடுப்பதிலே, சர்க்கார் தொடர்ந்து அக்கறை காட்டி
வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாகச் சொல்லப்பட்டது கட்டண விகிதம்.
கட்டணங்களை எடுத்துக் கொண்டால் முன்பு 2½ நயா பைசா
கிலோ மீடருக்கு வைத்திருந்தார்கள். அது கட்டுபடியாகவில்லை

[...] March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்பதாக ராஜ்யம் பூராவிலிருந்தும் புகார்கள் வந்த காரணத்
தினால் சர்க்கார் அதைப் பூராவாகவும் பரிசீலனை செய்து—செலவு
எவ்வளவு ஆகிறது, வருமானம் எவ்வளவு வருகிறது என்பதை
எல்லாம் கணக்கெடுத்துப் பார்த்து, கடைசியில் கிலோ மீடருக்கு
3 நயா பைசா வரையிலும் உயர்த்திக் கொள்ளலாம் என்று ஏற்பாடு
செய்திருந்தோம். இந்த 3 நயா பைசா அளவுக்குக்கூட உயர்த்தக்
கூடாது என்று இடையில் தடை செய்து வைத்திருந்த உத்தரவைத்
தான் இப்போது தளர்த்தினோமே தவிர, கிலோ மீடருக்கு 3 நயா
பைசாவுக்கும் மேலாகக் கட்டணத்தை உயர்த்த சர்க்கார் அனுமதி
அளிக்கவில்லை. இந்த அளவுக்குப் பெருவாரியான பேர் உயர்த்தி
யிருக்கிறார்கள். ஒரு கம்பெனி சம்பந்தமாக கனம் உறுப்பினர்
பேசும்போது அவர்கள் கட்டணத்தை உயர்த்த முன்வரா
விட்டாலும் "நீங்கள் ஏன் உயர்த்தவில்லை?" என்பதாக அரசாங்கம்
அவருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள்.
இது சம்பந்தமான விவரங்களையும் நான் பார்த்தேன். ஓரிடத்தில்
ஓடுகின்ற எல்லா பஸ் கம்பெனிகளும் உயர்த்தியிருக்கிறார்கள்,
ஒருவர் உயர்த்தவில்லை என்றால் இதன் மூலம் ஒரு அன்ஃபேர்
காம்பெடிஷன் ஏற்படுகிறது. அதனால் அந்த ரூட்டில் உள்ள சிறு
ஆபரேட்டர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற அச்சம் ஏற்பட்ட
காரணத்தினால் ஆர்.டி.ஓ. அவர்கள் இந்தக் கம்பெனியையும் பொது
வாக உள்ள ரேட்டுக்கு உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால்,
பரவலாக என்ன தோன்றுமென்றால், "குறைந்த கட்டணத்திற்கு
ஓட்டுகிறேன் என்று சொல்லுகிறார்கள் சர்க்கார் செய்கிற அநியாயத்
தைப் பாருங்கள், அதிகமாகக் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று
சொல்கிறார்கள், அதற்காக நோட்டீஸ் கொடுக்கிறார்கள்" என்று
சொல்லத் தோன்றும். ஆனால், உட்கருத்தைப் பார்க்கும்பொழுது
நிர்வாகம் நல்ல முறையில் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான்
அப்படிச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
அதனால்தான் உயர்த்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது
என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனி, கனம்
உறுப்பினர்கள் தனித் தனியாகத் தெரிவித்த ஆலோசனைகளைப்
பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். லாரிகளை ஓட்டுவதற்கு ஸ்பெஷல் டிரெயினிங் கொடுக்க
வேண்டுமென்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. லாரிகளில்
விபத்துக்கள் அதிகமாக இருக்கிறது என்பதை சர்க்கார் ஒத்துக்
கொண்டு, அதைப் போக்கக்கூடிய வகையில் இப்பொழுது ஒரு விதி
பிறப்பிப்பதற்காக நோடிபிகேஷன் கொடுத்து இருக்கிறோம்
என்பதைக் கனம் உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள[illegible]
ஆசைப்படுகிறேன். அதாவது, இரவிலே லாரி ஓட்டும்பொ[illegible]ழுது
இரண்டு டிரைவர்கள் வைத்தால் விபத்துக்களைத் த[illegible]க்கலாம்
என்பது. அது கூடாது என்று சர்க்காருக்கு ஏரா[illegible]ர்மான லாரி
[illegible]னர்களிடமிருந்து மனுக்கள் வந்துகொண்டிருக்கி[illegible]றன. அவர்கள்
சொல்வது, "நாங்கள் பெரிய கம்பெனியல்ல, [illegible]ரிஸ்ர்ங்களே சொந்த
மாக லாரி ஓட்டிக்கொண்டிருக்கிறவர்கள், ஓன[illegible] டிரைவர்களாக
இருக்கின்ற காரணத்தினாலே டிரைவர் வைக்க [illegible] முடியாது, அதைத்
[illegible] இரவு நேரத்தில்தான் ஓட்டும்படியா[illegible] [illegible]நிலை எங்களுக்கு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [18th March 1966

இருக்கிறது" என்று சொல்லி வருகிறார்கள். இதைப் பரிசீலனை
செய்யவேண்டியிருக்கிறது. சர்க்காருடைய கடமை, ஏதாவது ஒரு
ரெப்ரசென்டேஷன் வந்தால் அதைக் கவனிக்கக்கூடிய பொறுப்பு
இருக்கிறது. ஏதோ முடிவு எடுத்துவிட்டோம், அதற்குட்பட்டு
எல்லோரும் போடவில்லை என்று கட்டாயப்படுத்தினால் அதனால்
பாதிக்கப்படுகிறவர்கள்தான் கஷ்டப்படுவார்கள். இதனால் நாம்
எந்தக் கஷ்ட நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்று நினைத்
தோமோ அதைவிடக் கஷ்டமான நிலைமை அதிகமாகப் போய்விடு
கின்ற நிலைமை ஏற்பட்டுவிடும்.

அடுத்தபடியாக, இந்த ரோடுகள் செம்மையாக விஸ்தரிக்கப்பட
வேண்டும், இல்லாவிட்டால் லாரி விபத்துக்கள், கார் விபத்துக்கள்
இவற்றையெல்லாம் தடுக்க முடியாது. உறுப்பினர்களுக்குத்
தெரியும், அவர்கள் எல்லோரும் ரோட்டிலே செல்லக்கூடியவர்கள்
தான். நம்முடைய நாட்டிலே ரோடுகளில் 'கேயாடிக் டிரான்ஸ்
போர்ட்' இருந்து கொண்டிருக்கிறது. ஒரு மாட்டுவண்டி, ஒரு
கோழி, எதிரே ஒரு பஸ், பின்னாலேயே ஒரு லாரி—இப்படிப்பட்ட
வகைகளில் பலதரப்பட்ட மாதிரி போக்குவரத்து இருந்துகொண்
டிருக்கிறது. மற்ற நாடுகளை விட நம்முடைய நாட்டில் ப்ரப்போர்ஷ
னேட்டாக ஆக்சிடென்ட்ஸ் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது.
பெருமளவுக்கு பெரிய ரஸ்தாக்களில் கூட விபத்துக்கள், சிறிய
விபத்துக்கள் அல்லது பெரிய விபத்துக்கள் ஏற்படுவதற்குக்
காரணம் நாய் ஓடுவது, கோழி ஓடுவது—இவற்றிக்காகத் திருப்பி
னால் எங்காவது போய் அடிபட்டுவிடுகிறது. இதை நாம் எப்படிக்
கட்டுப்படுத்துவது என்பது தெரியவில்லை. நகரங்களிலேதான்
அதிகமாகக் கஷ்டப்படுகிறோம். எனக்குத் தெரிந்த ஒரு அனுப
வத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பீச் ரோட்டிலே
முன்னால் பஸ் போய்க்கொண்டே இருக்கிறது, எதிரே டாக்சி வந்து
கொண்டிருக்கிறது, இடையிலே நான்கு எருமைகளை ஓட்டிவிட்டு
சிரித்துக் கொண்டு நிற்கிறான் ஒரு சிறுவன். கணப்பொழுதிலே
ஸ்டேட் டிரான்ஸ்போர்டு பஸ்ஸுக்கு ஏற்பட இருந்த ஆபத்து
தவிர்க்கப்பட்டது. ஏற்பட்டிருந்தால் பின்னால் சொல்வோம்,
ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தானே, அப்படித்தான் விபத்து ஏற்படும்
என்ற எண்ணம்தான் வரும். விபத்துக்களைத் தடுக்க வேண்டு
மானால் ரோடு டிசிப்ளின் மிகவும் அவசியம். அதை ஏற்படுத்து
வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்தாற்போல் எஸ்.டி.எ.டி. கோர்ட் எல்லாம் ஒரே இடத்தில்
இருக்கிறது, சென்னையில்தான் இருக்கிறது. ராஜ்யத்தில் பல
இடங்களிலும் அதை வைக்க வேண்டுமென்று ஆலோசனைகள் கூறப்
பட்டன. இதற்கு முன்பு சட்டசபையிலே இவ்விதமாக சேல்ஸ்
டாக்ஸ் சம்பந்தமாக ஆலோசனை கூறப்பட்டது, அதை ஏற்றுக்
கொண்டு பல இடங்களில் கோர்ட்டுகள் அமைத்திருக்கிறோம்.
ஆகவே, இதையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இதே
கோர்ட்டே மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களுக்குச்

18th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

சென்று வருவதா அல்லது அந்த அந்த இடங்களிலே இதுபோன்ற
கோர்ட்டுகளை ஏற்படுத்துவதா என்பதை யெல்லாம் பரிசீலனை
செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. முத்துலிங்கம் அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைப்
பற்றிச் சொன்னார்கள். மொபசல் பஸ்கள் வெளியிலிருந்து வரும்
பொழுது சிடியில் பல இடங்களில் நிறுத்துகின்ற காரணத்தால்
காலதாமதம் ஏற்படுகின்றது என்று சொல்கிறார்கள். இது மிகவும்
கஷ்டமான பிரச்னைதான். அதேமாதிரி சிடியிலிருந்து வெளியிலே
செல்கிற பஸ்கள் சிடியில் அங்கங்கே நிறுத்தப்படுவதால் கால
தாமதம் ஆகிறது என்றும் சொல்கிறார்கள். ஆனால் நேர் எதிராகச்
சிலர் சிடி பஸ் ஆக இருப்பதை இன்னும் எக்ஸ்டெண்ட் செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சர்க்கார், இந்தப்
பிரச்னையில் பொது நன்மை எது என்று பார்த்து எப்படிச் செய்
தால் நன்மையாக இருக்குமோ அப்படிச் செய்யும். இதைப்
பரிசீலனை செய்வதற்கு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கமிட்டியினுடைய
ஆலோசனையைக் கேட்க வேண்டுமென்றும் நினைத்திருக்கிறேன்.
சிடி பஸ்ஸை எக்ஸ்டெண்ட் பண்ணுவதினால் என்ன நன்மை, மொப
சல் பஸ் கொடுப்பதால் என்ன நன்மை என்பதை யெல்லாம்
பார்த்து நல்ல முடிவு எடுக்கப்பட வேண்டும். டிராக்டர்-ட்ரெயிலர்
வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நல்ல நன்மைகளை யெல்லாம்
செய்து கொடுத்திருக்கிறோம். அறிக்கையிலே 6-வது பக்கத்திலே
குறிப்பிட்டுள்ளதைப் போல விவசாயிகள் தங்கள் சொந்தமான
வேளாண்மைப் பொருள்களை டிரெயிலர்களில் ஏற்றிச் சென்றால்
அதற்கு வரி கிடையாது. மற்றவர்களுடைய வேளாண்மைப்
பொருள்களை ஏற்றிச் செல்ல அத்தகைய வண்டிகள் பயன் படுத்தப்
பட்டால் அவற்றிற்குச் சாதாரண வரி விதத்தில் மூன்றில் ஒரு
பங்குதான் வரி விதித்திருக்கிறோம். சமீபத்திலே செய்த மிக
முக்கியமான கன்செஷன் இது. இதனால் முன்னாலே இருந்த பல
பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன். வரி போடு
வதைப்பற்றி ஒரு அபிப்பிராயம் சொல்லப்பட்டது. வரி ஒருபுறம்
இருக்க சர்சார்ஜ் மற்றொருபுறம் இருக்கிறது. வரி ஒரு முறை
வசூலிக்கிறார்கள், சர்சார்ஜ் ஒரு முறை வசூலிக்கிறார்கள். இரண்
டையும் சேர்த்து ஒரே முறையில் வசூலிக்க வேண்டுமென்று
சொன்னார்கள். டாக்ஸேஷன் ஆப் பாஸஞ்சர்ஸ் அண்ட் குட்ஸ்
ஆக்ட் பிரகாரந்தான் வசூலிக்க வேண்டியிருக்கிறது. இந்த அறிக்
கையினுடைய பத்தாவது பக்கத்திலே

"The following are some of the proposals under consideration :—

(1) Receiving the tax amounts and issuing discs in respect of transport vehicles in the Regional Transport Offices instead of in the Treasuries and Sub-treasuries in select districts as an experimental measure;"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிரஷரிஸ், சப்-டிரஷரிஸ்
இவைகளுக்குப் பதிலாக ஆர்.டி.ஓ. ஆபீசிலேயே இவற்றை
வாங்கிக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர்கள் டிரஷரீஸ், சப்-டிரஷரீஸ் இவைகளுக்குப் போகக்கூடிய தொல்லை குறையும். இதைத்தவிர ஒன்றாகச் சேர்த்து வாங்க முடியாது. இரண்டும் வெவ்வேறாக இருக்கிறது. டாக்சேஷன் ஆப் பாசஞ்சர்ஸ் அண்ட் குட்ஸ் ஆக்ட் பிரகாரம் வரியைக் காம்பவுண்ட் செய்யலாம் அல்லது எத்தனை டிக்கட் விற்பனையாகியிருக்கிறதோ அந்த அளவுக்கு வரி வாங்க வேண்டியிருக்கிறது. மோட்டார் வரியைப் பொறுத்த வரையில் எவ்வளவு என்று சொல்லி உடனே வாங்கிவிடலாம். இருந்தாலும் இது சம்பந்தமாக வரி வசூல் செய்வதிலும் கஷ்டங்கள் இருந்தால் அதை நிவர்த்திப்பதற்கு இந்த இலாகா பொறுப்பெடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜீப் பஸ்களைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஜீப் பஸ்கள் விடவேண்டுமென்பதுதான் சர்க்காருடைய கொள்கை. அனுமதியும் அதற்குத் தாராளமாகக் கொடுக்கிறோம். ஆனால் இன்றைக்குள்ள நிலைமையில், யுத்தத்திற்குப் பிறகு ஜீப்கள் கிடைப்பது இல்லை. ஜீப்கள் வாங்குகிறவர்கள்கூட சாதாரண பஸ்கள் வேண்டுமென்று மனுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஆட்சேபணை இல்லை. சாதாரண பஸ்களுக்கு அனுமதி கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஜீப் பஸ்களை இந்த நிலைமையில் அதிகப்படுத்துவது சந்தேகமாகத்தான் இருக்கிறது. ஜீப் பஸ்களுக்குப் பதிலாக சாதாரண பஸ்கள் கொடுக்கும் விஷயத்திலே தாராளமாக இருக்கிறோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, டிரைவர்கள் பற்றிச் சொல்லும்போது அவர்களுக்கு ஒரு டெஸ்ட் வைக்க வேண்டும்; ஐடெஸ்ட் வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. நான் பார்த்த அளவில் இப்போது இருக்கும் விதிகளில் செக்ஷன் 12 பிரகாரம் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் தங்களை டெஸ்டுக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிற அதிகாரம் இருக்கிறது. இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு முறை டெஸ்ட் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இதை மாற்றியமைப்பது சாத்தியமாகும் என்று நினைக்கிறேன். அந்தத் துறையிலும் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ரூட்டுகள் கொடுப்பதிலே என்ன விதிகளின்படி கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. குறிப்பாக, முதலில் எந்தவிதமான விதிகளும் போடவில்லை. அப்போது ஹைகோர்ட்டில் விதிகள் போடவேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்தார்கள். அதற்காக விதிகள் போட்டோம். 15 மைலுக்கு மேல் உள்ள ஆப்பரேட்டர், மினிமம் ஆப்பரேட்டர், கம்பெனிக்கு ஒரு மார்க், கோவாப்பரேட்டிவ் சொசைடிக்கு ஒரு மார்க் என்றெல்லாம் போட்டோம். அது எல்லோருக்கும் நல்ல விதிகளாக இருந்தன. ஆனால் அவர்கள் சுயநலத்தின் காரணமாக சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்று விதிகள் செல்லாது என்று செய்து விட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டில், க்வாசி ஜுடிஷியல் அத்தாரிடியாக அவர்கள் எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல்

நியாயமான முறையில் தீர்மானம் செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரி விதிகள் மற்ற ராஜ்யங்களில் போடவில்லை, சென்னை ராஜ்யத்தில் மட்டும் ஏன் போடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு பழைய கதைதான் நினைவுக்கு வருகிறது. Old man, his son and the ass என்பது போல் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி விதிகளை எடுத்து விட்டோம். இன்றைக்கு இருக்கிற நிலையில் ஆர்.டி.ஏ. பர்மிட் கொடுப்பார்கள். அதற்கு மேல் அப்பீல் சர்க்காரிடத்தில் இல்லை; எஸ்.டி.ஏ.டி. யிடம் இருக்கிறது. அவர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் நிலையில் இருப்பவர். ஹைகோர்ட் ஜுரிஸ்டிக்ஷனில் இருப்பவர். அதற்கு மேலும் ஹைகோர்ட்டில் அப்பீலுக்கு இடம் இருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் விதிகளை எல்லாம் போட்டு பிரச்சினை இல்லாத இடத்தில் புதிய பிரச்சினைகளை உண்டாக்கி, விதிகள் செல்லுமா, செல்லாதா என்ற நிலையை ஏற்படுத்த வேண்டாமென்பதை இந்த மன்றத்தில் இருப்பவர்கள் ஆதரிப்பார்கள் என்று கருதுகிறேன்.

மதுரையில் சில ரூட்டுகள் சாங்ஷன் செய்யப்பட்டு இன்னும் போடப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த ரூட்டுகள் சம்பந்தமாக எல்லா அதிகாரத்தையும் ஆர்.டி.ஏ.-வுக்கு மாற்றி விட்டோம் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதற்கு முன்னால் ஒரு ரூட் திறக்க வேண்டுமென்று சொன்னால் டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அனுமதி பெற வேண்டும்; அதன்படி ஆர்.டி.ஏ. செய்ய வேண்டும். இப்போது விதிப்படி ஆர்.டி.ஏ. தானே ரூட்டை ஓப்பன் செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். அந்த உரிமை அவர்களிடத்தில் விடப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அப்பீல் எங்களுக்குக் கிடையாது; கோர்ட்டுக்கு விட வேண்டும். சர்க்காரைப் பொறுத்தவரை எப்படி பர்மிட் கொடுப்பதை ஆர்.டி.ஏ. விடம் கொடுத்துவிட்டு, அதற்கு அப்பீல் எஸ்.டி.ஏ.டி. என்று வைத்திருக்கிறோமோ அதே மாதிரி இதையும் விட்டிருக்கிறோம். இந்த ரூட்டுகளைத் திறக்கவில்லை என்று சொல்வதும் சரியல்ல. பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, திறக்கவில்லை என்பது முடிவாகிவிட்டது என்று சொன்னால் அது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேலத்தில் டிக்கட்டை விற்று விட்டுத் திரும்பி வாங்கிக் கொள்ளுகிறார்கள் என்ற புகார் சொல்லப்பட்டது. கனம் உறுப்பினர்களை நான் ஒன்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரிப் புகார்கள் சம்பந்தப்பட்டதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு உடனடியாக எழுதி அனுப்பினால் துரிதமாகக் கவனிக்க முடியும். அதிலிருக்கும் உண்மை, மற்றவைகளை அமைச்சர்கள் கவனிப்பதற்கு முடியும். சர்க்கார் அமைப்பின் முறை என்னவென்றால், ஒரு மனுவை கமிஷனரிடம் கொடுத்தால் அவரே டிஸ்போஸ் பண்ணிவிடுவார். அமைச்சருக்குப் புகாரைப் பற்றி எழுதினால், அதிலே 'மே பி எக்சாமின்ட்' என்று அமைச்சர் போட்டால் இலாகாவிலிருந்து அதற்கு என்ன பதில் எழுதப் போகிறார்கள் என்பது அமைச்சருக்கு வரும். இல்லா

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [18th March 1966

விட்டால் வராது. பொதுமக்கள் புகார்களை இலாகாவுக்குத்தான்
எழுத வேண்டும். ஆனால் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற
முறையில் அங்கத்தினர்கள் பலவிதமான உண்மைகளையும், விவ
ரங்களையும் நேரடியாக அமைச்சர்களுக்கு எழுதி அனுப்பினால்
அதைப் பரிசீலனை செய்து பதில் அனுப்ப உதவிகரமாக இருக்கும்
என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு செய்வ
தால் காலதாமதம் இல்லாமல் சில நடவடிக்கைகளைப் பற்றி
அமைச்சர்களுடைய கவனத்திற்கு வரும். இல்லாவிட்டால்
அவை அமைச்சர்களின் கவனத்திற்கு வரக்கூடச் சாத்தியம்
இருக்காது.

ரூட் ஓப்பன் செய்வது சம்பந்தமா டி.டி.சி.-யைக் கலந்தா
ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அந்த
முறையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்றும் நம்புகிறேன். அதைப்
பற்றி ரோடு டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியைக் கலந்தா
லோசிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. என்னைப் பொருத்த
அளவில் டி.டி.சி.-யைக் கலந்தாலோசிப்பதுதான் நலமாக இருக்கும்
என்று கருதுகிறேன். அங்குதான் பஞ்சாயத்துத் தலைவர்கள்
எல்லோரும் வருவார்கள்; அவர்கள் அந்தப் பகுதியின் தேவையை
எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே, அது அவர்களிடத்தில்
இருப்பதுதான் நல்லது.

திரு. ம. கமலநாதன்: டி.டி.சி.-யில் மன்ற உறுப்பினர்கள்
ஏதாவது புதிய ரூட் வேண்டுமென்று ப்ரொபோசல் கொடுத்தால்
அதைப் பற்றித்தான் ஆராய்கிறார்களே தவிர, ஆர்.டி.ஏ. கொடுக்கக்
கூடிய புதிய ரூட்டுகளைப் பற்றி டிஸ்கஸ் பண்ண ஏற்பாடு செய்வ
தில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் நாங்கள் ஸ்டேட்
டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் எடுத்த முடிவு. அதை
அமல் நடத்தத் தயாராக இருக்கிறேன். எந்த ரூட் ஓப்பன்
செய்வதாக இருந்தாலும் டி.டி.சி.-யில் கலந்து பேச வேண்டு
மென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே உள்ளவர்களுக்
குத்தான் அந்த ஊரைப் பற்றித் தெரியும். அதிலே வைத்து
ஆலோசனை செய்ய வேண்டுமென்று விதிகள் போட்டிருக்கிறோம்.

அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் வைக்கவில்லை என்று
சொன்னார்கள். எனக்கு வந்திருக்கிற தகவல் 1964-ம் வருஷ
அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் தயாராகி பிரிண்டில் இருக்
கிறது என்று சொன்னார்கள். எவ்வளவு சீக்கிரமாக வைக்க
முடியுமோ அதைச் செய்வார்கள் என்று இந்தச் சமயத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த விவாதத்திலே பல நல்ல கருத்துக்கள் சொல்
லப்பட்டன. அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்று
பதில் அறிக்கையிலே பல அண்டர்டேக்கிங்ஸ் கொடுத்திருக்
கிறேன். இன்னின்ன காரியங்களைச் செய்வதாகச் சொல்லியிருக்
கிறேன். இவைகள் எல்லாம் அஷ்யூரன்ஸ் ஆகும். மூன்று

18th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மாதத்திற்குப் பிறகு அஷ்யூரன்ஸ் கமிட்டியில் வரும். எவ்வளவு
தூரம் அவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை அது
ஆராயும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: As the hon. Member, Sri Saw Ganesan, is not in his seat, his cut motion to Demand No. II Motor Vehicles Acts—Administration is deemed to have been withdrawn.

The cut motion of Sri A. Thangavelu to Demand No. II Motor Vehicles Acts—Administration was put and lost.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 25,30,700 under Demand No. II—Motor Vehicles Acts—Administration."

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND NO. XXX. ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 8,70,97,100 under Demand No. XXX—Road Transport Schemes.'

புலவர் கா. கோவிந்தன்: அமையில் பஸ் கட்டண உயர்வு அதிக
மாகி விட்டதைச் சுட்டிக் காட்ட, என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட
வெட்டுப் பிரேரணையை முன் மொழிகிறேன்.

'That the allotment of Rs. 8,70,97,100 under Demand No. XXX—Road Transport Schemes be reduced by Rs. 100.'

(3) DEMAND NO. XLIV. CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,13,54,000 under Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes.'

புலவர் கா. கோவிந்தன்: ஓடத்தகாத வண்டிகள் ஓடுவதைக்
கண்டு நிறுத்தவும், அனுமதித்ததற்கு மேலான பிராயாணிகளை
ஏற்றிச் செல்வதைக் கண்டு நடவடிக்கை எடுக்கவும், கண்
காணிப்புப் பரவலாகவும், உடனுக்குடன் நடைபெற வேண்டும்
என்பதை வலியுறுத்த என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட வெட்டுப்
பிரேரணையை முன் மொழிகிறேன்.

'That the allotment of Rs. 2,13,54,000 under Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'

MR. SPEAKER : Now the Demands and the Cut Motions are before the House for discussion.

*திரு. காஞ்சி மணிமொழியார் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அரசினருடைய பஸ் போக்குவரத்து மூலதன மான்யத்தின் மீது எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழக அரசு இந்த பஸ் போக்குவரத்தை 19 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கி இப்போது கிட்டத்தட்ட 20 ஆண்டு அனுபவம் அதிலே பெற்றிருக்கிறது. இந்த இருபது ஆண்டு அனுபவத்திற்குப் பின்னால் நமக்கு இந்த ஆண்டில் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கைப் பார்க்கிறபோது வழக்கம்போலவே இந்த ஆண்டும் 28,93,000 ரூபாய் நஷ்டம் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. 1964-65-ல் ஏற்பட்ட நஷ்டம் 18,24,000 ரூபாய். அப்போது சர்க்கார் துறையில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் 1,076. நடப்பாண்டில் 1,300 பஸ்கள் ஓடுகின்றன. பஸ்களில் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டிருக்கிறது. நஷ்டம் அதற்கேற்றாற்போல் வளர்ந்திருக்கிறது. அந்த ஆண்டு துவக்கத்தில் அரசு எதிர்பார்த்தது நஷ்டம் அல்ல, லாபம். எதிர்பார்த்த லாபம் 37,78,000 ரூபாய். ஆனால் கிடைத்திருக்கிற நஷ்டம் 28,93,000 ரூபாய். ஆக எதிர்பார்த்த லாபத்தைவிட இடைவெளி ஏற்பட்டிருப்பது 66,71,000 ரூபாய். இதற்குக் காரணம் என்ன? அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சமாதானத்தைச் சொல்கிறார்கள். நகர்ப் புறங்களில் ஓடுகிற பஸ்கள் எந்தக் காரணத்தினாலும் லாபத்தில் ஓட முடியாது என்று சொல்கிறார்கள். ஆனால் தனியார் பலவிடங்களில் நகரப்புறங்களில் பஸ்களை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் ராஜா பஸ் சர்வீஸ் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் லாபத்தில்தான் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இங்கு சிட்டியில் மட்டும் சர்க்கார் பஸ்ஸில் நஷ்டம் ஏற்படுவானேன்? காஞ்சீபுரத்தில் ஓடுகிற ராஜா பஸ் சர்வீஸ் லாபத்தில் ஓடுவானேன்? சிட்டிகளில் ஓடுகிற பஸ்கள் நஷ்டத்தில்தான் ஓட முடியும் என்று சொல்வது சரியல்ல. அரசாங்க சிட்டி பஸ்கள் நஷ்டத்தில் ஓடக் காரணம் என்ன என்பதை அரசு தெளிவாக உணர்த்த வேண்டும். பிரயாணிகளின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது 1963-64-ல் சராசரி ஒரு பஸ்ஸில் 1,146 பேர்கள் பிரயாணம் செய்திருக்கிறார்கள். 1964-65-ல் 900 பேர்கள்தான் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இந்தக் குறைவிற்குக் காரணம் என்ன என்பது பற்றி இந்த அறிக்கையில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அது நிச்சயமாகத் தெரியவேண்டும்.

ஆங்காங்கு மக்களின் பிரயாணத்திற்கான வாகனத் தேவைகள் வளர்ந்து கொண்டு போகிறதே தவிரக் குறையவில்லை. பீக் ஹவர்களில மட்டுமல்லாமல் எந்த நேரத்திலும் பஸ்களில் ஏற முடியாதபடி மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே 1964-65-ல் பிரயாணிகளின் எண்ணிக்கைக் குறைவு ஏற்படக் காரணம் என்ன? சென்னை கிளையில் மட்டும் 2 கோடி பேர்கள் குறைவாகப் பயணம் செய்திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதைப் பரிசீலனை

செய்து காரணத்தைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் மட்டும் 534 பஸ்கள் ஓடுகின்றன. அதல்லாமல் துணை பஸ்களும் விடப்படுகின்றன. அதோடு புற நகரங்களில் ஓடுகின்ற பஸ்களும் இருக்கின்றன. அரசுக்குச் சொந்தமான 60, 70 லாரிகள் இருக்கின்றன. அதாவது சிவில் சப்ளைஸ் லாரிகள். தனியார் லாரிகள் ஏராளமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. டாக்சிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மிகவும் பளுவான லாரிகள் அதிகமாக ஓடுகின்றன. சுமையுடன் சேர்த்து 12 டன் அளவிற்குப் பளு உள்ள லாரிகள் கூட இன்றைக்கு இருக்கின்றன.

இவ்வளவு லாரிகள், பஸ்கள், டாக்சிகள் சென்னை நகரத்தில் ஓடுவதினால் சென்னை வீதிகள், ரோடுகள் இரண்டு மாதங்களுக்குள்ளாகப் பாழ்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். இம்மாதத்தில் புதிதாக ரோடுகள் போடுகிறார்கள். இரண்டு மாதங்கள் கழித்து அவற்றைப் பார்க்கிறபோது அவை குண்டும் குழியுமாக மிகவும் பாழாகிவிடுகின்றன. இதற்காக மாநகராட்சிக்கு இந்த அரசு தருகிற மான்யம் மிக மிகக் குறைவு என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு 21 லட்சம் ரூபாய்தான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். அது மிகக் குறைவு. சென்னை மாநகராட்சி இந்தப் பாதைகளைச் சீராக்குவதற்கு மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வரை செலவு செய்து கொண்டிருக்கிறது. அப்படிச் சீர்படுத்தப்படுகிற பாதைகளை, நம் சர்க்கார் பஸ்கள், மற்றும் தனியார் பஸ்கள், லாரிகள் இவை விரைவில் பாழாக்கி விடுகிறது. ஆகவே இந்த பஸ்கள், லாரிகள் மூலம் கிடைக்கிற லைசென்ஸ் கட்டணத்தில் 50 சத விகிதம் மாநகராட்சிக்குத் தரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க பஸ்களுக்கு ஸ்டேஜ் வைத்திருக்கிறார்கள். எந்த முறையில் அவைகளை நிர்ணயித்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. சில ஸ்டேஜ்களைப் பார்க்கின்றபோது அவை 2½ பர்லாங்கில் இருக்கின்றன. சில 2 மைல் தூரம் இருக்கின்றன. வட பழனியிலிருந்து லிபர்ட்டி வரையில் இரண்டு ஸ்டேஜ்கள். தூரத்தைப் பார்த்தால் 6 பர்லாங்கிற்குள்தான் இருக்கும். லிபர்ட்டியிலிருந்து ஸ்டர்லிங் ரோடு வரையில் பார்த்தால் 1¾ மைல் இருக்கிறது. அதற்கு ஒரு ஸ்டேஜ்தான் இருக்கிறது. ஆக இங்கு முக்கால் மைலுக்கு இரண்டு ஸ்டேஜ்கள், அங்கு 1¾ மைலுக்கு ஒரு ஸ்டேஜ். இந்தக் குறையை மக்கள் அடிக்கடி என்னிடம் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவற்றைப் பரிசீலனை செய்து பார்த்து இந்த ஸ்டேஜ்களை மாற்றியமைக்க வேண்டும்.

டைம் கீப்பிங் சரியாக இருப்பதில்லை. வட பழனியிலிருந்து 12 B வருகிறது என்றால் மூன்று பஸ்கள் ஒன்றாக வருகிறது. அதற்குப் பின்னர் முக்கால் மணி நேரத்திற்குப் பஸ் இல்லாமல் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது ஆகவே டைம் கீப்பிங்கைச் சரியாகக் கவனித்து பஸ்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சரியான நேரத்தில் விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

தொழிலாளர்களுக்குத் தனியார் துறையில் இல்லாத அளவிற்கு
போனஸ் கொடுத்து வருகிறோம் என்று சென்ற ஆண்டு பெருமை
யோடு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போனஸ் அளிப்பதை
வரவேற்கிறோம். தொழிலாளர்களுக்கு என்னென்ன செய்ய
வேண்டுமோ அதைச் சர்க்கார் தான் செய்து மற்றவர்கட்கு வழி
காட்ட வேண்டும். அட்டென்டன்ஸ் போனஸ் தரப்படுகிறது,
ஊக்க போனஸ் தரப்படுகிறது. அட்டென்டன்ஸ் போனஸ் யாருக்
குத் தரப்படுகிறது என்றால் முன்பு இரண்டு நாட்களுக்கு மேலாக
லீவ் எடுக்காமல் இருந்தவர்களுக்குத் தரப்பட்டு வந்தது. இப்
போது அதை மூன்று நாட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு
வாரத்தில் ஒரு நாளாவது லீவ் இருக்க வேண்டும். ஆகவே இந்த
மூன்று நாள் என்பதை நான்கு நாட்களாக உயர்த்தினால் பெரும்
பாலான தொழிலாளர்கள் அதைப் பெற முடியும். இப்போது
இதை ஒரு சிலர்தான் பெற முடிகிறது. ஏதாவது ரிமார்க்ஸ் இருந்
தால் அதைக் கூடக் கொடுக்காமல் கழித்து விடுகிறார்கள். ஆகவே
இதையும் கவனிக்க வேண்டும். அட்டென்டன்ஸ் போனஸையும்,
ஊக்க போனசையும் ஒன்றாக இணைத்திருக்கிறார்கள். அது கூடாது.
டிப்போக்களில் எவ்வளவு ஊக்கத்தோடும், திறமையோடும் அயரா
மல் பாடுபடுகிறார்கள் என்பதை மட்டும் கவனித்து இந்த ஊக்க
போனஸ் தரப்பட வேண்டும். இரண்டையும் இணைப்பது என்பது
சரியல்ல.

மாணவர்களுக்குக் கட்டணத்தைக் குறைத்து சீசன் டிக்கட்
தரப்படுகிறது. ஒரே பஸ்ஸில் ஒரு இடத்திற்குப் போவது என்றால்
அதற்குப் பத்து ரூபாய். இரண்டு பஸ்கள் மாறி மாறிப் போவதாக
இருந்தால் ஐந்து ரூபாய் அதிகமாகச் சேர்த்து 15 ரூபாய் என்று
வைத்திருக்கிறார்கள். ஒரு டெஸ்டினேஷனுக்குப் போக இரண்டு
பஸ்கள் ஏறினாலும் 10 ரூபாய் என்று வைத்தே சலுகை தர
வேண்டும். எம்.எல்.ஏ.-க்கள் சென்னையில் வந்து தங்குகிறார்கள்.
சென்னையிலேயே நாங்கள் பலர் இருக்கிறோம். சட்டசபை அங்க
த்தினர்கள் சென்னைக்குள்ளே பல பகுதிகளுக்கு அடிக்கடி பொது
மக்கள் வேலையாகச் செல்லவேண்டியிருக்கிறது. அப்படிச் செல்கிற
போது நாங்கள் கட்டணம் கொடுத்துச் செல்வது மிகவும் சங்கட
மாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. சில சமயங்களில் கண்டக்டர்
கள் எம்.எல்.ஏ.-க்கள் என்று கூடத் தெரியாமல் நடந்து கொள்
கிறார்கள். அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஆகவே
வெளிமாவட்டங்களிலிருந்து எம்.எல்.ஏ.-க்கள் சென்னையில் வந்து
தங்குகிறபோதும் இங்குள்ள எம்.எல்.ஏ.-க்களுக்கும் . .

MR. SPEAKER : Does the hon. Member want special privileges for the members?

திரு. காஞ்சி மணிமொழியார் : கட்டணம் இல்லாமல், அவர்கள்
தங்கள் அலுவல்களைக் கவனிக்க, அரசினர் பஸ்களில் பயணம்
செய்வதற்கான பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அப்படிக் கொடுப்பதனால் அவர்களுக்கு மரியாதையும்
கிடைக்கும், அவர்கள் யார் என்பதைக் கண்டக்டர்கள் புரிந்து
கொள்வதற்கும் உதவியாக இருக்கும். அதே நோக்கில் மற்ற
பிரயாணிகளுக்கும் மரியாதை கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு மேற்கு மாம்பலத்திற்கும் அங்கிருந்து கோடம்
பாக்கம் புதூருக்கும் பஸ் விட வேண்டும் என்று கேட்டுக்
கொண்டேன். அவ்வாறு உடனடியாக விட்டிருக்கிறார்கள், அதற்
காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று
இன்னொரு கோரிக்கை, அதாவது காஞ்சீவரத்திற்குச் செல்லுகின்ற
அரசினர் பஸ்கள் எல்லாம் பரங்கிமலை வழியாகச் செல்லுகின்றன.
இவற்றில் ஒன்றிரண்டை கோடம்பாக்கம் போரூர் வழியாகச் செல்
வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சென்னையைப் பார்ப்பதற்காக வெளியூரிலிருந்து
அனேகம் பேர்கள் வருகிறார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு
போய்க் காண்பிப்பதற்கு, 'கைட்' ஒருவரோடு ஒரு பஸ் காலை 5
மணிக்குப் புறப்பட்டு, மாலை 5 மணி வரையிலும் எல்லா இடங்
களையும் காண்பிப்பதற்கு வசதியாக, சர்க்கார் பஸ் தினந்தோறும்
விடுவதற்கு ஏற்பாடு செய்வது நலமாக இருக்கும் என்பதைக் கூறி,
என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சபாநாயகர் அவர்களே,
கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற
சர்க்கார் போக்குவரத்துத் துறை மான்யத்தை நான் ஆதரிக்
கிறேன். 20 வருஷங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்தத்
துறை, வருஷா வருஷம் வளர்ச்சி அடைந்து வருவதை நாம்
பார்க்கிறோம். குறிப்பாக இன்றைக்கு 1,300-க்கு அதிகமான
பஸ்கள் நமக்குச் சொந்தமாக இருக்கின்றன. 10 வருட காலத்தில்
இருந்து வந்திருக்கின்ற வளர்ச்சியைப் பார்த்தால் சுமார் 900
பஸ்கள் அதிகப்படுத்தி விடப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு
அதிகமான பஸ்கள்—துரித பஸ்களாக இருந்தாலும் சரி, சாதாரண
பஸ்களாக இருந்தாலும் சரி, சென்னையில் மட்டுமல்ல, கன்னியா
குமரி பகுதியிலும் பெரும்பாலும், சர்க்கார் துறையிலேயே இருந்து
கொண்டிருக்கின்றன. இந்தத் துறையில் ஏறக்குறைய 10 ஆயிரம்
தொழிலாளர்களும் சிப்பந்திகளும் ஈடுபட்டிருக்கிறார்கள். 10 கோடி
மூலதனம் போட்டு நடைபெறக்கூடிய இந்தத் துறையில்
10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய
நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் துறையில் கடந்த
இரண்டு மூன்று ஆண்டுகளாக சொல்லப்பட்டிருக்கின்ற புள்ளி
விவரங்களைப் பார்க்கும்போது, சில லட்சக்கணக்கான ரூபாய்கள்
நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நம்மால் பார்க்க முடி
கிறது. இதற்கு முந்திய வருடங்களைப் பார்க்கும் போது, ஓரள
வுக்கு லாபகரமாக இது நடந்து வந்திருக்கிறது என்பதையும் நம்
மால் புரிந்து கொள்ள முடிகிறது. 10 கோடி மூலதனம் இருக்கக்
கூடிய இந்த துறையில் ¼ கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்
கிறது என்பதைப் புள்ளிவிவரங்களிலிருந்து அறிந்து கொள்ள
முடிகிறது . . . .

(திரு. மா. தண்டாயுதபாணி தலைமை)

இதைப் பார்க்கிற பொழுது, இதிலுள்ள தொழிலாளர்களுக்கு
சமீபத்தில் கொடுக்கப்பட்ட பஞ்சப்படி உயர்வுக்காக 15 லட்சம்
ரூ. செய்திருப்பதும் தெரிகிறது. அதைப்போலவே மிகவும் வருத்

தப்படக்கூடிய இனமாகத் தெரிவித்திருப்பது, இந்தி எதிர்ப்பு போராட்ட காலத்தில் ஏற்பட்ட பஸ் சேதங்களுக்கான 6 லட்சம் ரூபாய் நஷ்டத்தை ஈடு கட்டப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் பொதுமக்களினுல் இப்படிப்பட்ட நஷ்டத் தைத் தவிர்க்க முடியும் என்பதையும் நம்மால் உணர முடிகிறது. இந்தத் துறையைப் பொதுத்துறையில் எடுத்துக்கொண்டு பார்த் தால், இதில் வரக் கூடிய லாப நஷ்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு இந்தத் துறையை நாம் மதிப்பிடலாகாது. எந்த அளவு க்கு ஜனங்களுக்கு அதிகமான வசதிகள் அளித்திருக்கிருர்கள் என்பதைத்தான் பார்க்கவேண்டும். 25 லட்சம் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் துறையில் இந்த வருடத்தில் மட்டும் 25 கோடி அளவுக்கு மக்கள் பிரயாணம் செய்திருக்கிருர்கள் என்பதைப் பார்க்கும் போது, இந்த நஷ்டத்தைக் கணக்கிடும் போது வருடம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 1 காசு வீதம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆகவே நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும்கூட பொதுமக்களுடைய வசதிகள் எந்த அளவுக்குப் பெருகியிருக்கின்றன என்பதையும் பார்க்கவேண்டும். மாணவர்கள் செல்வதற்கு விசேஷ கட்டணம், பொதுமக்களுக்கு விசேஷ வசதி இவைகளை எல்லாம் பெருக்கும் போது நஷ்டத்தைப் பொருட்படுத்தமாட்டோம். இந்த நஷ்டத்தை எப்படித் தேற்றுவிப்பது என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

சமீபத்தில் சென்னைக்கு அருகில் இருக்கக்கூடிய செங்கற்பட்டு ஜில்லாவில் பெரும் பகுதிக்கும் சர்க்கார் பஸ்களை விஸ்தரிக்கக் கூடிய வசதிகளை ஏற்படுத்தியிருக்கிருர்கள். மற்ற ராஜ்யங்களை எடுத்துக் கொண்டு பார்த்தால், இதே போல் தான் செய்து கொண்டு இருக்கிருர்கள் என்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. நமது ராஜ்யத்தின் அருகே இருக்கக்கூடிய ஆந்திராவின் தலைநகரான ஹைதராபாத்திலும் சரி, மைசூரில் பங்களூரிலும் சரி, பம்பாயில் பூனவிலும் சரி, கல்கத்தாவிலும் சரி, இப்படிப்பட்ட பெரிய நகரங் களில் எல்லாம் ஓடுகின்ற பஸ் சர்வீசை எடுத்துக்கொண்டு பார்த் தால், பெரும்பாலும் இது போலவே நஷ்டத்திலேயே ஓடிக்கொண் டிருக்கிறது என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதே சமயத்தில் இதில் ஏற்படுகின்ற நஷ்டத்தை வேறு ஒரு சர் வீசில் ஈடுசெய்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கவேண்டியது அவசியம். அத்தகைய வாய்ப்பை சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் எந்த அளவுக்கு, அதிகாரிகள் செய்திருக்கிருர்கள் என்பதை அறிந்து கொள்வதற்கான புள்ளி விவரங்களை அறிந்து கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு சென்னை யில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்கின்றவர்கள் என்ற முறை யில்—லீக்கேஜ்—என்ற அளவில்—பார்க்கும் போது 2 சத விகிதம் என்று தான் இருக்கிறது. பூனு நகரத்தை எடுத்துக்கொண்டால் 7 சத விகிதம் என்றிருக்கிறது. கல்கத்தா நகரில் 15 சத விகிதம் என்றிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் இந்த ராஜ்யத்திலுள்ள நம்முடைய மக்கள் பெரும்பாலும் முறையாகத் தான் நடந்து கொண்டிருக்கிருர்கள். அதே போன்று இந்த துறை

யில் பணியாற்றி வருகின்ற கண்டக்டர்களும் நடந்து கொண்டிருக் கிருர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதைப் பார்க்கும் போது, நஷ்டத்தைப்பற்றி ஓரளவுக்கு நம்மால் ஆறுதல் பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனுல் இந்த 2 சத விகிதம் இல்லாமல் இருப் பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி இந்தத் துறையினர் கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கத்தின் கவலை யும் அதுவாகத்தான் இருக்கவேண்டும். இதைத் தவிர்ப்பதற்காக ஸ்டாண்ட் கண்டக்டர்களை அங்கங்கே நியமித்து, பிரயாணிகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாத அளவுக்குப் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று கண்டக் டர்கள், உள்ளேயிருப்பவர்கள் டிக்கட் எடுக்காமல் இருக்கிருர்களா என்பதையும் ஓரளவுக்குப் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள் என்பது தெரிகிறது. இன்னும் இதில் அதிகமான கவனம் செலுத்துவதின் மூலமாக இதில் இருக்கின்ற லீக்கேஜ்களையும் ஓட்டை ஒடிசல்களை யும் தவிர்க்க முடியும். சென்னை நகரத்தில் ஓடுகின்ற பஸ்களில் தான் 24 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. துரித பஸ் சர்வீஸ்கள்—அதாவது வெளியிடங்களுக்கு செல்லுகின்ற பஸ்கள் லாபகரமாகவே இருக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்களி லிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. சமீபத்தில் நான் குஜராத் நகரத்திற்கு சென்றிருந்தேன், பம்பாய் நகரத்திற்கும் சென்றிருந் தேன். அந்தப் பகுதிகளில் எல்லாம், பெரும்பாலும், சென்னை ராஜ்யத்தைத் தவிர, குறிப்பாக ஆந்திரா ராஜ்யமாக இருந்தாலும் சரி, மகாராஷ்டிரா ராஜ்யமாக இருந்தாலும் சரி, மத்திய பிரதேச மாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் இதற்காக பிளானில் திட்ட மிட்டு, திட்ட இலக்காக, ஐந்து வருடங்களில் இத்தனை ஜில்லாக் களிலுள்ள பஸ்களைத் தேசியமயமாக்குவது என்று திட்டமிட்டு அதைப் பின்பற்றி வருகிருர்கள். இந்த ராஜ்யத்திலும் அதே போல், ஒரு கொள்கையை வகுத்து, எந்த அளவுக்கு எந்தெந்த ஜில்லாவில், கிராமப்புறங்களிலுள்ள இடங்களுக்கு எல்லாம் சர்க்கார் தங்கள் பஸ்களை விஸ்தரிக்க முடியும் என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்த வாறு விஸ்தரித்து, இந்தக் கொள்கையின் மூலமாக லாபகரமாக நடத்துவதற்கு முடியுமா என்பதையும் ஆலோசித்து, இதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குஜராத் ராஜ்யத்தில் 95 சத விகிதம் வரை தேசியமயமாக்கியிருக்கிருர்கள். அதோடு சில இடங்களில் முனிசிபல் பஸ்களும் ஓடுகின்றன. கூட்டுறவு முறையிலும் பஸ்கள் நடத்தப்படுகின்றன. கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரை, இப்போதைக்கு 75 சத விகிதம் சர்க்கார் தரப்பில் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதே போன்று சென்னைக்கு அருகில் இருக்கின்ற செங்கற்பட்டு ஜில்லாவில் பாதி அளவுக்குச் செல்லக் கூடிய முறையில் சர்க்கார் துறையை விஸ்தரித்திருக்கிருேம். இந்த நிலையில் கன்னியாகுமரி ஜில்லாவில் முழு அளவுக்கும், செங்கற் பட்டு ஜில்லாவில் சோராயமாக குறிப்பிட்ட அளவுக்கு அதிக பட்சமாக எடுத்துக்கொண்டு சர்க்கார் பஸ் போக்குவரத்துத் துறையை விஸ்தரிப்பதின் மூலமாக நமக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டத்தைப் போக்க முடியும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [18th March 1966

மற்றென்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திடீரென்று டாக்சி ஓட்டுகின்றவர்களால் ஸ்டிரைக் காலத்தில் பொது ஜனங்களுக்குப் பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நேரத்தில் டிரான்ஸ்போர்ட் இலாகாவிலிருந்து லக்ஷுவரி ஜீப் போன்ற கார்களை விடுவதாக முன்பே திட்டம் இருந்தது—அதை அமல் நடத்துகின்ற முறையில் குறைந்தது 100 டாக்சிகளையாவது சர்க்கார் துறையிலிருந்து விடுவதற்கு முன்வந்தால், பொது ஜனங்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களை நம்மால் தவிர்க்க முடியும். பஸ் ஸ்டாண்ட்களை விரிவு செய்வதில் தூத்துக்குடியில் ஒன்றிரண்டு ஏக்கர் நிலத்தை வாங்கி இதற்காக ஏற்பாடு செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. திருச்செந்தூர் தாலூகாவைப் பொறுத்த வரைக்கும், டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்டில் போடப்பட்டிருக்கும் 'மேப்' பில் திருச்செந்தூர் தாலூகாவே இல்லை, திருசெந்தூர் தாலூகாவில் சர்க்கார் பஸ்ஸை ஓடவில்லை—திருச்செந்தூர் தாலூகாவின் தலைநகரமாக இருக்கின்ற இடம்—திருச்செந்தூர் புண்ணிய க்ஷேத்திரமாக விளங்குகிறது. இப்படிப்பட்ட இடத்திலிருந்து பல பகுதிகளுக்கு சர்க்கார் பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் போலவே திருச்செந்தூரில் அரசாங்கம் நவீன பஸ் ஸ்டாண்ட் வசதியைத் துரிதமாகக் கொடுக்க வேண்டும்.

திருநெல்வேலியிலிருந்து மதுரை வரை எக்ஸ்பிரஸ் பஸ்களில் நான் பிரயாணம் செய்திருக்கிறேன்; திருநெல்வேலியிலிருந்து மதுரை வரையில் நம்முடைய பஸ்ஸுக்கும் பிறர் பஸ்களுக்கும் கட்டணத்தில் இரண்டு ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. நாம் பஸ் கட்டணத்தை ஏற்றி இருப்பதன் காரணமாக, மற்றவர்கள் ஏற்றாமல் இருப்பதன் காரணமாக இந்த வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கலாமா என்று பரிசீலிக்கவேண்டும். மதுரை நாகர் கோயில் வழியிலே இருப்பதிலே நாகர் கோயிலுக்கும் மதுரைக்கும் மத்தியில் கோவில்பட்டியில் நவீன பஸ் ஸ்டாண்ட் வசதி செய்து கொடுப்பதைப் பற்றித் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எட்டயபுரம், சாத்தூர் ஆகிய இடங்களில் பஸ் ஸ்டாண்ட்களில் சாதாரண சுகாதார வசதிகள் கூட இல்லாமல் இருக்கிறது. இதை மாற்றி அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வது நல்லது என்று நினைக்கிறேன்.

அதைப் போல கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரையில், தூத்துக்குடி வரையில் துரித பஸ் விடவேண்டுமென்றால், தற்போதைய திட்டப்படி 120 மைலுக்கு மேற்பட்ட ரூட்களில்தான் சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ் விடலாம் என்று இருக்கிறது. குற்றாலம், தென்காசி, தூத்துக்குடி, திருச்செந்தூர் பகுதிகளுக்கு கன்னியாகுமரியிலிருந்து துரித பஸ் விடும் வசதியைச் செய்து 120 மைலுக்கு உட்பட்டு இருந்தாலும் விதிவிலக்குக் கொடுத்து அந்த இடங்களுக்கு விசேஷ எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

18th March 1966] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இராமநாதபுரம் வரையில் இருக்கிற பஸ் வசதியை மண்டபம் வரையில் நீடித்து, இந்த வசதியைச் செய்து ராமேஸ்வரத்திற்கு இணைப்பு கொடுக்க முடியும் என்று நினைக்கிறேன்.

இந்தத் துறையிலே மற்றொரு புள்ளிவிவரம் கவனித்தேன். கன்னியாகுமரியில் மைலுக்கு 11 பைசா செலவு ஆனது 9 பைசாவாகக் குறைந்திருக்கிறது. சென்னையில் 12 பைசா, 12 பைசாவாக இருக்கிறது. துரித பஸ்களைப் பொறுத்த வரையில் 7 பைசா 7 பைசாவாக இருக்கிறது. கன்னியாகுமரியில் 2 பைசா குறைவதற்கு விசேஷமான காரணம் இருக்க முடியுமா என்று தீவிரமாகப் பரிசீலிப்பதன் மூலமாக, அந்த சிக்கன வசதி மற்ற இடங்களுக்கும் கிடைக்க முடியுமா என்று அரசாங்கம் தீவிரமாக யோசனை செய்யலாம்.

சென்னை நகரிலே இன்றைய தினம் இருக்கிற கட்டணத்தைப் பொறுத்த வரையில்—நான் மற்றப் பகுதிகளில் இருக்கிற கட்டணத்தையும் பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் 10 பைசா கட்டணம் என்றால் குழந்தைகளுக்கு 5 பைசா வாங்குகிறார்கள். சென்னையில் கூட அந்த முறையில் குழந்தைகளுக்குப் பாதிக் கட்டணம் என்று வைத்து, கட்டண விதாசாரத்தையும் 5 பைசா, 10 பைசா, 15 பைசா என்ற முறையில் மாற்றி அமைக்க முடியுமா, இதில் உள்ள சிரமங்களைப் போக்க முடியுமா என்று பார்த்து அந்த முறையில் துரிதமாக வளர்ச்சி அடைய, லாபம் அடைய முயற்சிக்கலாம்.

சென்னை தமிழ் நாட்டின் தலைநகரம். சென்னை நகரில் பஸ் கண்டக்டர்கள் ஒருவரை ஒருவர் 'நீ' என்று பேசக் கூடிய நிலைமை இருக்கிறது. கண்டக்டர்கள் மற்றவர்களோடு பேசும்போது 'நீ' என்பதற்கு பதில் 'நீங்கள்' என்றும், 'வா' என்பதற்குப் பதில் 'வாருங்கள்' என்றும் பேசும் முறையில் தமிழ் நாட்டின் தலைநகரில் பழகும் அருமை சிறப்பாக அமையக் கூடிய முறையில் அத்தகைய நல்ல பாஷையைத் தெரிந்துகொண்டு மக்களிடத்திலே மரியாதையாகப் பழகவேண்டும். இதன் மூலம் கண்டக்டர்கள் மற்றவர்களுக்கு வழி காட்ட முடியும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். முருகையன்** : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் போக்குவரத்துத் திட்டங்கள், போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவுகள் என்ற மான்யக் கோரிக்கைகளின் மீது எனது கட்சியைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நம் மாநிலத்திலே ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் 6,409 என்று புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சர்க்கார் துறையிலே ஓடக் கூடிய பஸ்கள் 1,300 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கார் துறையிலே ஓடக் கூடிய பஸ்களைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு நஷ்டம் என்று குறிப்பிடப்

பட்டிருப்பது ரூ. 28 லட்சம். அரசாங்கத்தில் நடத்தக் கூடிய பஸ்களில் நஷ்டம் கொஞ்சமாக இருக்கிறது என்று சொல்லலாமே தவிர, தனிப்பட்டவர்கள் நடத்தும் பஸ்களையும், சர்க்கார் பஸ்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தனிப்பட்டவர்கள் நடத்துகிற ஆறு ஆயிரத்து சொச்சம் பஸ்களில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 40 கோடிக்கு மேல் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் பஸ்களில் நஷ்டக் கணக்கு காட்டுகிறோம் என்றால், என்ன காரணம் என்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், 'அவர்கள் நடத்துகிற பஸ்கள் நல்ல வசதி உள்ளவை; நாங்கள் மக்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம்' என்று. ஆனால் உண்மையிலேயே மக்களுக்கு வசதி செய்து கொடுக்க . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய பஸ்களிலெல்லாம் கட்டணம் கிலோமீட்டருக்கு 2 பைசா, மற்றவைகளிலெல்லாம 3 பைசா.

திரு. எஸ். முருகையன் : அதாவது சர்க்கார் பஸ்களில் நகரில் மட்டும் குறைந்த கட்டணம் வாங்குகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வெளியூர் பஸ்களில் தனியார்கள் குறைந்த கட்டணம் வாங்கி, அவர்களுக்கு 40 கோடி ரூபாய் லாபம் வருகிறது. . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் நகர பஸ்களிலே நாம் கிலோமீட்டருக்கு 2 பைசா வாங்குகிறோம். தனியார் 3 பைசா வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அது தான் வித்தியாசம் என்று சொன்னேன். அதற்குக் காரணங்களைப் பின்னால் விளக்குகிறேன்.

திரு. எஸ். முருகையன் : நகர பஸ்களை மட்டும் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். வெளியிலே ஓடுகிற பஸ்களை எடுத்துக் கொண்டால் சர்க்கார் பஸ்களை விடக் குறைந்த கட்டணம் வாங்கி தனியார்கள் வருடம் ஒன்றுக்கு ரூ. 40—50 கோடி லாபம் சம்பாதிக்கிறார்கள் என்றால், சர்க்கார் பஸ்களில் நஷ்டம் வருகிறது. தனிப்பட்ட பஸ் முதலாளிகளை ஊக்குவிக்கிறதே தவிர இன்றைய தினம் சர்க்காரிலே பஸ்ஸை நடத்தி நஷ்டக் கணக்கை காட்டுகிறார்கள். இதற்கு வேறு காரணம் இருக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்கிறோம். தனியார்கள் செய்யவில்லை என்று சொன்னார்கள். இன்றைய தினம் தனியார் பஸ்களில் 60 பேர்களுக்கு மேல் ஏற்றிக்கொண்டு செல்லுகிறார்கள். குறிப்பாக காங்கிரஸ் பஸ் ஆப்பரேட்டர்கள் அந்த மாதிரி 60 பேர்கள் ஏற வேண்டிய இடத்தில் 120 பேர்களை ஏற்றிக் கொண்டு செல்லுகிறார்கள். அவர்களைக் கேட்டால், 'எங்களைச் சொல்லுகிறீர்களே, சர்க்கார் பஸ்கள் எப்படி ஓடுகின்றன என்று சென்னையில் போய்ப் பாருங்கள். 60 பேர்கள் போகக் கூடிய பஸ்களில் 100, 150 பேர்களை ஏற்றிக்கொண்டு செல்லுகிறார்களே, சர்க்காருக்கு ஒரு சட்டம், எங்களுக்கு ஒரு சட்டமா' என்று கேட்கிறார்

தனியார்களை ஊக்குவிக்க, அவர்கள் மேலும் மேலும் காங்கிரசை ஆதரிக்க. சர்க்கார் பஸ்ஸில் அதற்காகத் தான் நஷ்டக் கணக்கு காட்டப்படுகிறதே தவிர, உண்மையிலேயே நஷ்டத்திற்கு வேறு காரணம் என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, தனியார் பஸ்களில் எவ்வளவு லாபம் அடைகிறார்கள் ? சர்க்காரிலே ஏன் 120 மைல்களுக்கு அப்பால் உள்ள பஸ்களை மட்டும் எடுத்து நடத்துகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அதைக் குறைத்துக் கொண்டு வந்து, இந்த ஆண்டு 120 மைல்களுக்கு அப்பால் உள்ள பஸ்களை மட்டும் நடத்துவது. அடுத்த ஆண்டு 100 மைல்களுக்கு அப்பால் உள்ள பஸ்களையெல்லாம் நடத்துவது. அடுத்த ஆண்டு 75 மைல்களுக்கு அப்பால் உள்ள பஸ்களையெல்லாம் எடுத்து நடத்துவது என்று கொள்கையை வகுத்து கொஞ்சம் கொஞ்சமாக தேசியமயமாக்கினால் என்ன என்று கேட்க விரும்புகிறேன். இது போன்ற பஸ்களை சர்க்கார் எடுத்துக்கொண்டால் பஸ் முதலாளிகளுடைய ஆதரவு கிடைக்காது என்று பயம் இருந்தால், தனிப்பட்ட பஸ் முதலாளிகள் என்ன செய்ய முடியும்? அந்த மாதிரி பஸ்களையெல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு, பணமெல்லாம் அரசாங்கத்திற்கு வந்து, மேலும் பல திட்டங்கள் போட்டு பஸ் முதலாளிகளின் யதேச்சாதிகாரத்தைப் போக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. சர்க்கார் பஸ்கள் வெளியிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட முதலாளிகள் ஒவ்வொருவரும் ஸ்பேர் பஸ் என்று 4-5 பஸ்கள் வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் 'டூரிஸ்ட்' என்று போட்டு அதிகமாக லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்காரிலே ஒவ்வொரு ஸென்டரிலும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஆங்காங்கு டூரிஸ்ட் பஸ் என்று 2-3 பஸ்களை வைத்து நடத்தினால் உண்மையிலேயே அந்த லாபம் சர்க்காருக்கு வரும். அமைச்சர் அவர்கள் சொல்லலாம், இந்த பஸ்களிலேயே நஷ்டம் வருகிறதே என்று. எக்ஸ்பிரஸ் பஸ்களையே டூரிஸ்ட்டாக ஏன் வெளியில் விடுவானேன் ? என்று சொல்லலாம். சாதாரண பஸ்களையே 63 பேர் போகக் கூடிய பஸ்களையே தனியார் வைத்து நடத்துகிறார்களே அது மாதிரி சாதாரண பஸ்களை ஏன் நடத்தக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு சர்க்கார் பஸ்கள் திண்டிவனத்திலிருந்து சென்னைக்கு சிலநாள் சாதாரண பஸ் ஓடிக்கொண்டிருந்தது. சென்னையிலிருந்து வேலூருக்கு சாதாரண பஸ் ஓடிக்கொண்டிருந்தது. அவைகள் 20-25 நாட்கள் ஓடியதே தவிர இப்போது ஓடவில்லை. மக்களெல்லாம் இந்த பஸ்களில் விரும்பி வருகிறார்கள். கட்டணம் கூட தனிப்பட்டவர்களுடைய பஸ்களை விடக் குறைவாக இருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, பஸ் நின்றுவிட்டது. அந்தப் பகுதி பஸ் முதலாளிகளெல்லாம் சர்க்காரை அணுகி, எங்களுக்கு நஷ்டம் வருகிறது, அதனால் சர்க்கார் நடத்தக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படி நஷ்டம் என்றால் அதற்கு உரிய கணக்கைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், ஏனென்றால்

[திரு. எஸ். முருகையன்] [18th March 1966

நாங்கள் பார்த்த வரையில் வேலூருக்குச் சென்று வரும் நேரத்தில் பார்த்தபோது, ஏராளமான கூட்டம் அதிலே சென்று கொண்டிருந்தது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

12-00. noon ஆறு மாதங்களுக்கு முன்பாக 'மெயில்' பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. அதாவது சில பஸ் ரூட்கள் தேசியமயமாக்கப்படும் என்று. அந்த விளம்பரத்தில் திருவண்ணாமலை-சென்னை பஸ் ரூட் தேசியமயமாக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. வேறு எந்த பேப்பரிலும் அந்த விளம்பரம் வரவில்லை. ஆறு மாதங்களுக்கு மேலாகியும் அதனுடைய நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தனிப்பட்ட பஸ் முதலாளிகள் இந்த ரூட்டை சர்க்கார் எடுத்து நடத்தக்கூடாது என்று சொல்லி விட்டார்களா? சர்க்கார் பஸ்களை அந்த மார்க்கத்தில் நடத்தினால் நல்ல லாபம் வரும் என்று நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். சர்க்காருக்கு லாபம் வரக் கூடிய ரூட்கள் இவையெல்லாம். இந்த ரூட்களில் தனிப்பட்ட முதலாளிகள் லாபம் சம்பாதிக்கும்பொழுது ஏன் சர்க்கார் லாபம் அடையக்கூடாது?

அது மாத்திரமல்ல. எங்களுடைய பகுதியிலே சென்னைக்கும் கோவைக்கும் ஒரு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த பஸ் சென்னையிலிருந்து புறப்பட்டு, வேலூர் வந்து, போளூர்-செங்கத்திற்குச் செல்லுகிறது. செங்கத்திற்கும், போளூருக்கும் இடைவெளி 30 மைல். வழியிலே அந்த பஸ் எங்கும் நிற்பது கிடையாது. அப்படி நிற்காமல் இந்த பஸ் போய்க்கொண்டே இருக்கிறது. இடைவெளியில் பிரயாணிகள் ஏறவும், இறங்கவும் முடிவதில்லை. அதனால், பஸ் காலியாகவே சென்று கொண்டிருக்கிறது. இப்படி காலியாகச் சென்று கொண்டிருக்கிற காரணத்தினால், இந்த பஸ்ஸை போளூரிலிருந்து திருவண்ணாமலைப் பகுதிக்கு திருப்பி விட்டால் சர்க்காருக்கு நல்ல லாபம் வரும். ஏராளமாக பாசெஞ்சர்கள் ஏறுவார்கள் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் சமீபத்தில் சென்னைக்கும் கிருஷ்ணகிரிக்கும் பஸ் விடத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த பஸ் செய்யாறு, ஆரணி, போளூர், செங்கம் என்ற ரூட்டில் கிருஷ்ணகிரிக்கு விடுகிறார்கள். அந்த பஸ்ஸை திருவண்ணாமலைப் பகுதிக்குத் திருப்பிவிட்டால், சர்க்காருக்கு ஏராளமாக லாபம் வரும். அப்படி மாற்றி விடுவதால் 10 மைல் அதிகமாகும். ஆனால், அந்த 10 மைல் தூரத்திற்கு ஏராளமான டிக்கட்டுகள் திருவண்ணாமலையில் ஏறும், சர்க்காருக்கு அதிக வருமானம் வரும். இப்பொழுது திருவண்ணாமலையிலிருந்து கிருஷ்ணகிரிக்குத் தனிப்பட்டவர்கள் பஸ் விடுகிறார்கள். 4, 5 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த பஸ்களெல்லாம் 50 டிக்கட் ஏற்றிக்கொண்டு போகலாம் என்றால், 100, 125 டிக்கட் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். காரணம், அவர்கள் ஏற்ற முடியாது என்று மறுத்தால் கூட, பிரயாணிகள் தொல்லை கொடுத்து, 'எப்படியாவது எங்களை ஏற்றிக்கொள்ளவேண்டும், நாங்கள் பங்களூருக்குப் போகவேண்டும், கிருஷ்ணகிரி வரையில் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். சர்க்கார் பஸ் இரண்டு பஸ்களை திருவண்ணாமலைப் பகுதியில் திருப்பி விட்டால், மக்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். இப்படி பஸ்களை மாற்றிவிடுவதால் சர்க்காருக்கு அதிக லாபம் வரும்.

18th March 1966] [திரு. எஸ். முருகையன்]

அடுத்தபடியாக, நாகப்பட்டினத்திற்கும் ஜோலார்பேட்டைக்கும் பஸ் விட்டால், சர்க்காருக்கு அதிக லாபம் வரும். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் பங்களூருக்கு நேராகப் போக முடியவில்லை. நாகை, மாயூரம், சிதம்பரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை வழியாக ஜோலார்பேட்டை ஸ்டேஷனுக்கு பஸ் விட்டால் சௌகரியமாக இருக்கும். பங்களூருக்குப் போகவேண்டுமென்றால், அல்லது பங்களூரிலிருந்து வரவேண்டுமென்றால் இங்கெல்லாம் பஸ் வசதி கிடையாது. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதுபோல கடலூருக்கும் ஜோலார்பேட்டைக்கும் பஸ் விடவேண்டும். கடலூரிலிருந்து ஏராளமான பேர்கள் பங்களூரில் குடியேறியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்துவிட்டால், பஸ் கிடைக்காமல் பல தொல்லைக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. இரவில் பஸ் ஸ்டாண்டிலேயே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். காலையிலே தான் பஸ் கிடைக்கிறது. அவர்கள் தங்கள் பணத்தையும் பறிகொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, ஜோலார்பேட்டைக்கு பஸ் வசதி செய்துகொடுத்து விட்டால், ஜோலார்பேட்டையிலிருந்து பங்களூருக்கு ரயில் வசதி இருக்கிறது. ஜோலார்பேட்டைக்கு பஸ் விட முடியவில்லை என்றால், கிருஷ்ணகிரிக்குக் கூட அந்த பஸ்ஸை நீடித்தால் நிச்சயம் நல்ல வருமானம் வரும் என்று அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டங்களெல்லாம் சர்க்காருக்கு வருமானத்தைத் தேடித்தரக்கூடிய திட்டங்கள். ஆகவே, இவைகளைப் பரிசீலனைசெய்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதலில், அரசாங்கத்தினுடைய எக்ஸ்பிரஸ் பஸ்களை எடுத்துக்கொண்டால், அவை மிகவும் நன்றாக இருக்கின்றன. அவைகளில் வேலை செய்கின்ற டிரைவர்கள், கண்டக்டர்கள் ரொம்பவும் எக்ஸ்பெர்ட் என்று தான் சொல்லவேண்டும். 12-05 க்கு திண்டுகல்லுக்குப் போகவேண்டுமென்றால் அந்த நேரத்திற்கு திண்டுக்கல் போய்ச் சேர்ந்து விடுகிறது. அவர்கள் நல்ல முறையில் சேவை செய்கிறார்கள். இருந்தாலும் ரொம்ப ஆக்சிடெண்டுகள் எக்ஸ்பிரஸ் பஸ்கள் சம்பந்தப்பட்டவரை ஏற்படுகின்றன. அதுவும் என்னுடைய தொகுதியில் ரொம்ப

ஆக்சிடெண்டுகள் ஏற்பட்டுவிட்டன. அதற்குக் காரணம் என்னவென்று பார்க்கவேண்டும். நான் அது பற்றி எழுதிவைத்திருக்கிறேன். இன்றைக்கு அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். காரணம், ஹார்ன் சரியாக கேட்பதில்லை. முன்னாலே பஸ்ஸில் இருப்பவர்களுக்குக்கூட சரியாக கேட்பதில்லை. முன்னாலே போகின்றவர்களுக்கும் சரியாகக் கேட்கவில்லை. ரொம்ப ஹை ஸ்பீடில் போகும்பொழுது, ரொம்ப பெரிய பஸ்ஸாக இருப்பதினால், ஹார்ன் சரியாகக் கேட்பதில்லை. ஹார்ன் கேட்டு முன்னால் செல்பவர்கள் ஒதுங்குவது கிடையாது. பின்னாலே வருகின்றவர்களுக்கும் கார், பஸ், லாரி, எதுவாகஇருந்தாலும் சரி, ஸிக்னல் சரியாகத் தெரியவில்லை. முனுக்கு முனுக்கு என்று சிக்னல் ரொம்பவும் சிறியதாக இருக்கிறது. இந்த இரண்டையும் மாற்றி நல்ல முறையில் அமைத்தால் ஆக்சிடெண்டுகள் ஆவதை ஓரளவுக்குத் தவிர்க்க முடியும் என்று நான் மிகவும் பணிவன்போடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எக்ஸ்பிரஸ் பஸ் மதுரையிலிருந்து திருச்சிக்கு மாலை 6-40 ; 6-45க்குப் புறப்படுகிறது. அதே சமயத்தில் திருச்சிக்கு ரயிலும் இருக்கிறது. ஆகவே, அதே நேரத்திற்கு ரயில் இருக்கும்பொழுது ரயிலில் தான் பிரயாணம் செய்கிறார்கள். இந்த டயத்தை மாற்றி அமைத்தால் பஸ் மூலம் பிரயாணம் செய்வதற்கு அதிக வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மதுரை போன்ற பெரிய நகரங்களிலே தனியாக பஸ் ஸ்டாண்டு இல்லை. மதுரை சென்னைக்கு அடுத்து பெரிய நகரம். தற்சமயம் மதுரையில் அரசாங்க பஸ் நிலையம் இல்லை. பஸ் எத்தனை மணிக்கு, புறப்படுகிறது, எப்பொழுது வருகிறது என்றெல்லாம் கேட்டால், தகுந்த பதில் கிடைப்பது கிடையாது. அதுவும் அரசாங்க பஸ் நின்றால், அதைப் பார்த்தால் நம்முடைய பஸ், அதில் போகவேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது. பஸ் டைம் பற்றி எல்லாம் விவரம் சொல்லுவதற்குச் சரியான ஆள் இல்லை. மதுரையில் பஸ் ஸ்டாண்டிற்காக 5 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஜாரி பண்ணக் கூடிய நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்த வேண்டும். 1966-67-ம் ஆண்டிற்குள் மதுரையில் சர்க்கார் பஸ் நிலையம் ஒன்று தனியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

இப்பொழுது 75 மைலுக்கு மேலுள்ள ரூட்களைத்தான் அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. 75 மைல் என்று இருப்பதை மாற்றி, 50 மைலுக்கு மேலே உள்ள ரூட்களையும் தேசிய மயமாக்கி அங்கெல்லாம் சர்க்கார் பஸ்களை விடக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கினால் மக்களுக்கு நல்ல உதவி செய்தவர்களாவோம். மதுரை-பழனி, மதுரை-கொடைக்கானல், மதுரை-பெரியகுளம் பகுதிகளுக்கு அரசாங்கம் எக்ஸ்பிரஸ் பஸ்களை விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது எம்.பி.-க்களுக்கு ரயிலில் பாஸ் கொடுக்கிறார்கள். அதுபோல பஸ்களில் எம்.எல்.ஏ.-க்களுக்கு பாஸ் கொடுத்தால் நலமாக இருக்கும். காசு கொடுக்கவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அடிக்கடி எல்லாப் பகுதிகளுக்கும் நாம் போய்க் கொண்டிருக்கப்போவதில்லை. அதற்கு நேரமும் கிடையாது. ஆகவே, மத்திய அரசாங்கம் பாஸ் கொடுப்பதுபோல், மாநில அரசாங்கமும் பஸ்களில் போவதற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு பாஸ் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னையைப் பொறுத்த அளவிலே நமக்கு 24 லட்சம் ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது என்றால் அது மிகவும் வேதனைக்குரிய விஷயம். ஒவ்வொரு பஸ்ஸிலும் ஸிடிங் பாசெஞ்சர் 35 பேர்கள், ஸ்டாண்டிங் பாஸெஞ்ஜர் 25 பேர்கள் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நிற்பவர்கள் 25 பேர்களுக்குப் பதிலாக ஒவ்வொரு பஸ்ஸிலும் 70, 80, 90 பேர்கள் நிற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. கால் வைத்து ஏறக்கூடிய இடத்திலேயே 5, 6 பேர்கள் நின்றுக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி சமயத்தில் எல்லோருக்கும் டிக்கட் கொடுக்கிறார்களோ கொடுக்காமல் விட்டுவிடுகிறார்களோ, என்று தெரியவில்லை. இம்மாதிரி நிலைமையில் பஸ் டைமிங்கை மாற்றி, காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையில், மாலை 4 மணியிலிருந்து 7 மணிவரையிலும் ஒவ்வொரு பஸ் ஸ்டாப்பிலிருந்து 3 நிமிஷத்திற்கு ஒரு பஸ், 5 நிமிஷத்திற்கு ஒரு பஸ், அம்மாதிரி பஸ்களை விடக்கூடிய ஒரு நிலைமை உருவாக்கினால், இந்தக் கூட்டத்தை ஓரளவுக்குத் தவிர்க்க முடியும்.

பெண்கள் சீட்கள் பற்றிப் பல முறை சட்டசபையிலே கூறியிருக்கிறேன். நாங்கள் பெண் எம்.எல்.ஏ-க்கள் சைதாப்பேட்டைக்கு போகவேண்டும் என்றால் இங்கிருந்து டாக்சியில் போய்விடுகிறோம். கடைசியாக வேலையை முடித்துக்கொண்டு, மாலையில் திரும்பும் பொழுது எதற்காக அனாவசியமாக டாக்சிக்கு ரூ. 4, 5 கொடுக்க வேண்டும் 5 மணிக்கு மேல் ஆகிவிட்டதே, ஏதாவது பஸ்ஸில் போகலாம் என்று நினைத்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்தால், பஸ்ஸில் ஏற முடிவது கிடையாது. 25 பேர்கள் நிற்கக் கூடிய இடத்தில், 70, 80 பேர்கள் நின்றால், பெண்கள் சென்று நடுவிலே மாட்டிக்கொண்டால் எவ்வளவு பரிதாபகரமாக இருக்கும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் மனத்தில் வைத்து, இப்பொழுது பெண்களுக்கு 13 சீட்கள் என்று இருப்பதை 20 சீட்களாக உயர்த்த வேண்டும். அதாவது 35 சீட்களுக்கு 20 சீட்கள் பெண்களுக்கு என்று ஒதுக்க வேண்டும். நிற்கிறவர்கள் நின்று கொண்டிருக்கட்டும் ; பெண்களை உட்கார வைப்பதற்கு இம்மாதிரி பஸ்ஸில் வசதி செய்து கொடுத்தால் பெண்கள் பஸ்களில் வருவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

டிரைவர்கள், கண்டக்டர்களுக்கு வேலை கொடுக்கிறோம். எத்தனையோ பேர்கள் மிலிடரியில் வேலை செய்துவிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஹெவி வெஹிக்கிள் ஓட்டுவதற்கு லைசென்ஸ் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு டிபார்ட்

மெண்டுக்கு அப்ளிகேஷன்போட்டு, ஓராண்டுகாலம், இரண்டு ஆண்டு காலமாகியும் கூட வேலைக்கு ஆர்டர் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எக்ஸ்-சர்வீஸ்மென்னுக்கு சகல குவாலிபிகேஷன்களும் இருந்தால், அவர்களுக்கு உடனே டிரைவர், கண்டக்டர் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்

நான் பல முறை சட்ட மன்றத்தில் கூறியிருக்கிறேன். அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். ஹரிஜன மக்களுக்கு தனியார் நடத்தக்கூடிய துறைகளில் 25 சத விகிதம் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறேன். தனியார் நடத்துவது சென்டிரல் கவர்ன்மெண்டால் லைசென்ஸ் கொடுக்கக் கூடியது, ஆகவே அவர்களை அம்மாதிரிக் கட்டுப்படுத்த முடியாது என்று பல முறை பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டிலாவது, தகுதியுள்ள எல்லா க்வாலிபிகேஷனும் இருக்கும் அரிசன மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும். இப்பொழுது வந்திருக்கக் கூடிய மனுக்களைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் துறையில் அரிசன மக்களுக்கு வேலை கிடைக்க வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

(Mr. Deputy Speaker in the Chair.)

பஸ் ஏறும் போது, ஒரு காலைப் படியில் வைத்துக் கொண்டு, இன்னொரு காலைக் கீழேயிருந்து எடுப்பதற்குள்ளாகவே, 'ரைட்' கொடுத்து விடுகிறார்கள். அப்பொழுது திடீரென்று கீழே விழுந்து விடக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. கண்டக்டர்களுக்கு மரியாதை தெரிவதில்லை. மரியாதை வாரம் என்று நடத்துகிறோம். இருந்தாலும் இன்னும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். 'என்ன அம்மா, அங்கே போய் உக்காரு' என்று பேசக்கூடிய தன்மையைத்தான் பார்க்கிறோம். (குறுக்கீடு) அப்படி இல்லை; அந்த நிலையை மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் சென்னைதான் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகின்றது.

இன்னும் ஒரே ஒரு வார்த்தை. கிராமப் புறங்களிலே ஜீப் பஸ் விடுவதற்குத் தனியார் தயாராக இல்லையென்றால், அதை சர்க்காரே ஏற்று நடத்தலாம். கிராம மக்களுக்கு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. ஒரு ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும் என்றால், 5, 6 மைல்கள் கட்டை வண்டியிலோ அல்லது நடந்தோ தான் போக வேண்டும். ஆகவே, நமக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று சர்க்காரே அப்படி ஜீப் பஸ்களை விட வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : கனம் மன்றத் துணைத் தலைவர் அவர்களே இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சித் தோழர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த மானியத்தின் மீது நடைபெறும் விவாதத்திலே நாட்டிலே ஓடுகின்ற பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிவந்தோம். ஆனால், இன்றிலிருந்து, இந்த மன்றத்திலே அந்தக் கோரிக்கையைச் சொல்லுவது இல்லை என்ற முடிவை நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதற்குக் காரணம், நேற்றைய தினம் தொழில் அமைச்சர் குறிப்பிட்டார்கள், 'எங்கள் தேர்தல் பிரகடனத்தில், கலப்படப் பொருளாதாரம் தான் எங்கள் கொள்கை என்று கூறியுள்ளோம்' என்று. அப்படியானால், கலப்படப் பொருளாதாரத்தில் சோஷலிசத்தைப் பெறுவோமா என்பது சந்தேகம் தான். கொள்கை அளவில் கலப்படப் பொருளாதாரமாக ஏற்பட்டு விட்டால், என்றென்றைக்கும் சோஷலிசத்தைக் காணமுடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். அதன் காரணமாக, தேசியமாக்க வேண்டும் என்று சொல்லுவதை இங்கே நிறுத்திக் கொண்டேன்.

இப்பொழுது நட்டக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். இப்படி நட்டக் கணக்குக் காட்டியிருக்கிற நேரத்தில், எதனால் நட்டம் என்று விளக்கம் சொன்னார்கள். நகரத்தில் ஓடும் பஸ்களுக்கு இரண்டு பைசாதான் மைலுக்குக் கட்டணம் அதாவது கிலோமீட்டருக்கு என்றும், அதே நேரத்தில் வெளி ஊர்களில், நகரங்களில் ஓடும் பஸ்களுக்கு மூன்று பைசா வசூல் செய்கிறார்கள். அதனாலும் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக இந்த பஸ்களை ஓட்டுகிறோம் என்கிறார்கள். நாங்கள் இரண்டு பைசா வாங்குகிறோம். பொது மக்களுக்கு நன்மை செய்வதற்காக என்று சொல்லும் போது, வெளியூரிலே ஓடுகிற எக்ஸ்ப்ரஸ் பஸ்ஸுக்கும் அதே மாதிரிக் கட்டணத்தை ஏன் வாங்கக் கூடாது. தனியார் குறைத்துக் கட்டணம் வாங்குகிறார்களே ? பொது மக்களுடைய நன்மையைச்செய்கிறோம் என்கிற போது. அதையும் குறைத்தால் என்ன ? நகரத்தில், வெளியூரில் ஏன் இப்படியிருக்கிறது. என்பதற்குச் சரியான பதில் சொல்லவில்லை. நட்டம் ஏற்படவில்லை என்று காரணத்தோடு சொல்ல முடியும். பீக் அவர்சிலே அதிகக் கூட்டம் இருக்கிறது. மற்ற இடைவேளைகளில் கும்பல் அதிகம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பீக் அவர்சில் மக்கள் அதிகமாக ஏறுகிறார்கள் ; அவர்களுடைய எண்ணிக்கை அந்த வண்டியில் எவ்வளவு என்று பார்த்தால், 45, 50 பேர்கள் ஏறக்கூடிய வண்டியில், கிட்டத்தட்ட 90 பேர்கள் ஏறுகிறார்கள். கும்பல் இல்லாத நேரத்தில், குறையும்ஆட்களுக்கு அது சரிக்கட்டி விடும். ஏன் நட்டம் ஏற்படுகிறது ? நட்டம் என்றால், மற்ற நகரங்களில் தனியார் பஸ்களை ஸரண்டர் செய்திருக்கிறார்களா ? நட்டம் ஏற்பட்டால், ஸரண்டர் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. இதுவரையில் எவ்வளவு பேர்கள் அப்படி ஸரண்டர் செய்திருக்கிறார்கள் ? அந்தக் கணக்கைக் கொடுத்தால் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியும். அது இல்லாதவரை இந்த வாதத்தை என்னால் ஒத்துக் கொள்ள முடியாது, என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எம். எஸ். மணி] [18th March 1966

பொதுவாக, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கில் சென்னை கிளையைப் பொருத்த வரையில், 1,93,00,000 அளவுக்கு மக்கள் குறைவாக பிரயாணம் செய்திருக்கிருர்கள். அதேபோல கன்னியாகுமரி கிளையில் 50,000 குறைவாக பிரயாணம் செய்திருக்கிருர்கள். ஒரு துணைக் கேள்வி எழுப்பிய நேரத்திலே, கடந்த சட்ட மன்றக் கூட்டத்திலே, கட்டணம் உயர்த்தப் பட்டதன் காரணமாக மக்கள் அதிகமாகச் செல்வதில்லை என்பது அமைச்சருக்குத் தெரியுமா என்று நான் கேட்டபோது, அமைச்சர் அந்த நேரத்தில் குறிப்பிட்டார்கள். அங்கத்தினர் சொல்லுவது சரியில்லை. மக்கள் எப்பொழுதும் போலத்தான் பிரயாணம் செய்கிருர்கள், என்று. ஆனல் இன்றைக்கு கணக்குக் கொடுத்திருக்கிருர்கள், குறைவாக பிரயாணம் செய்கிருர்கள் என்று. இது அதிகக் கட்டணம் காரணமாக என்றும் சொல்லியிருக்கிருர்கள். இன்றைக்கு சென்னையிலிருந்து திருச்சிக்குப் போக ரூ. 13 கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதே நேரத்திலே ரெயில் கட்டணம் ரூ. 10 தான். ரெயிலிலே செல்வார்களா, பஸ்ஸில் செல்லுவார்களா, என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர் சொல்லலாம், லக்சுரி கோச்சுகள் வைத்திருக்கிருேம் என்று. அதில் போனல் தெரியும். உட்கார்ந்தால், காலை நீட்டி மடக்க முடியாது. ரெயிலிலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. போகும் போது ஒவ்வொரு ஸ்டேஷனிலும் நின்று இறங்கலாம், பண்டங்களை வாங்கித் தின்னலாம். நம்முடைய ஸ்டேட் பஸ்ஸிலே அப்படிச் செய்ய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவேதான் அவர்கள் ரெயிலோடு போட்டிபோடும் நிலையில் இல்லை.

சென்ற சட்டசபைக் கூட்டம் வரை, நான் பஸ்ஸிலேதான் போய்க்கொண்டிருந்தேன். காரணம், நம்முடைய பணம் மத்திய சர்க்காருக்குப் போகக்கூடாது, பஸ்ஸை வைத்து நடத்தும் மாநில சர்க்காருக்குத்தான் போக வேண்டும் என்பதற்காக, ஆனல் அதையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ரெயில்லே பிரயாணம் செய்வதைக் காட்டிலும், பஸ்ஸிலே பிரயாணம் செய்யும்போது கட்டணம் அதிகமாகக் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, ரெயிலிலே வருவதுதான் சௌகரியமாக இருக்கிறது. என்னைப் போலவே, வெளிப் போக்குவரத்தில், மக்கள் அதிகமாக இப்பொழுதெல்லாம் பஸ்ஸிலே பிரயாணம் செய்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைய தினம், இருக்கின்ற உத்தியோகஸ்தர்கள் அதிகமாக இருக்கிருர்கள். இன்ஸ்பெக்டர்களைக் குறைக்கலாம். செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இவ்வளவு பேர்கள் தேவையில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம், டி. வி.எஸ் கம்பெனியில் ஒரு முறையைக் கையாள்கிருர்கள். ட்ரெஸ் இல்லாத செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிருர்கள். அவர்கள் டிக்கெட்டு வாங்கிக் கொண்டு பஸ்ஸிலே போவார்கள். கண்டெக்டர் ஏதாவது தவருக யாருக்காவது டிக்கெட்டு கொடுக்க வில்லை, அப்படிப் பட்ட தவறு செய்தார் என்றுல் இந்த ட்ரெஸ் இல்லாத செக்கிங் இன்ஸ்பெக்டர், தன்னுடைய பாசைக்காட்டி, உடனே நடவடிக்கை எடுத்து

18th March 1966] [திரு. எம். எஸ். மணி]

அந்தக் குற்றவாளியை டிஸ்மிஸ் செய்கிருர்கள். ஆகவே டி.வி.எஸ். ஸ்தாபனத்தார் குறைந்த அளவு செக்கிங் இன்ஸ்பெக்டர்களை வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய கம்பெனியை நிர்வகிக்கிருர்கள். நம்முடைய பஸ் ட்ரான்ஸ்போர்ட்டில் ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஒரு செக்கிங் இன்ஸ்பெக்டர், கண்டக்டர் இடத்தில், கூடவே செல்கிருர். சரியாகவாவது செக்கிங் செய்கிருர்களா என்றுல் அதுவும் இல்லை. ஏன் என்றும் தெரியவில்லை. காரணம் என்ன என்றுல், அவர்களுக்குப்போதுமான பயிற்சி இல்லை. கண்டக்டராக இருந்தவர்களையே இன்ஸ்பெக்டராகப் போட்டால், அவர்களுக்கு எப்படி திருட முடியும், டிக்கெட்டு கொடுக்க முடியவில்லை என்றுல், அதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆகவே அப்படிக் குறைத்து, தெரிந்தவர்களைப் போட்டால், நாம் செலவைக் குறைக்கலாம். அப்படிப் பலபேரை அதிலிருந்து அனுப்பினலும், வேறு வேலை கொடுப்பதால், இந்த வகையில் செலவு குறையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மயிலாப்பூர் முதல் பாரீசுக்கும், மாம்பலம் முதல் பாரீசுக்கும் ஓடுகிற பஸ்களுக்குக் கட்டணம் குறைவு. மற்ற டிக்கட்டுகள் கூடுதலாக இருக்கின்றன. அது ஏன் என்று புரிந்து கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு) அரங்கண்ணல் இருக்கிருர் என்பதற்காகவா? ஏன் என்று எனக்கு காரணம் புரியவில்லை. இதை அமைச்சர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாணவர்களைப் பொறுத்தவரையில், நகரத்திலே ரூ. 10-க்கு பாஸ் கொடுக்கிருர்கள். அந்த சலுகை மாணவர்களுக்குக் கொடுக்கும் போது, அதே பள்ளிக்கூடங்களுக்கும் போகும், மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த சலுக்கை கொடுக்க வேண்டாமா? ஆகவே மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகையை ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் ஒவ்வொரு கூட்டத்திலும் நான் ட்ரைவர், கண்டக்டர்களுடைய குறைகளைச் சொன்னேன். அவற்றைக் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவில்லை, என்றே நான் கருதுகிறேன். தினசரி படி அவர்களுக்கு ரூ. 1.25 என்ற அளவுக்கு இருக்கிறது. தனியாரை பொறுத்த வரையில் அதிகமாக ஏற்றிவிட்டார்கள். ஆகவே படியைக் கூடுதலாக்கவேண்டும் என்ற காரணத்தைச் சொல்லி ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் அதை உடனடியாக அவர் கவனிப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. குறிப்பாக, நகரத்திலே உள்ள ட்ரான்ஸ்போர்ட்டிலே வேலை செய்கிற கண்டக்டர், டிரைவர்களுக்கு இரண்டு ரூபாய் படி கொடுத்தால்தான் அவர்கள் திருடாமல், நியாயமாக ஒழுங்காக வேலை செய்ய முடியும். அதே போல, எக்ஸ்பிரஸ் பஸ்ஸிலே செல்கிறவர்களுக்கு ஐந்து ரூபாயாவது தினசரி படி கொடுத்தால் தான் அவர்கள் திருப்தியாக வேலை செய்ய முடியும். சென்னையிலிருந்து திருச்சிக்குப் போய், திருச்சியிலிருந்

கோயமுத்தூருக்கும் நாகர் கோவிலுக்கும் செல்லவேண்டியிருக்கிற காரணத்தால், ஐந்து ரூபாயாவது படி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைச் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் ஒரு சவால் விடுவதைப் போல சொன்னார்கள். "தனியார் துறையிலே யாராவது அதிகமாகக் கொடுத்தால் நான் அதைக் கொடுக்கத் தயார்" என்று சொன்னார்கள். உள்ளபடியே அந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும். அரசாங்கம் கொடுப்பதை விட அதிகமாக எந்தத் தனியார் கம்பெனி கொடுக்கிறதோ, அதைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒத்துக்கொண்டால், அந்தக் கம்பெனிகள் என்ன என்ன என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

விபத்தைப் பற்றிச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் வருகிறபோதே ஒரு பையன் மாடுகளை ரோட்டில் ஓட்டிவிட்டு, அந்த பஸ் வருகிறபோது சிரித்துக் கொண்டிருந்தான் என்று சொன்னார்கள். இப்படிப் பல இடங்களில் நடைபெறுகின்றன. அவர் இங்கே அந்தக் குற்றத்தை ஒத்துக்கொண்டார் "டிரைவர் மீது குற்றம் இல்லை, யாரோ ஒரு பையன் மாட்டை ஓட்டிவிட்டு வேடிக்கை பார்த்தான்" என்கிறார்கள். ஆனால், நிர்வாகத்தில் உள்ளவர்கள், "நீ ஏன் மாட்டின் மீது வண்டியை மோதினாய்?" என்று கேட்டு, டிரைவர் மீது குற்றத்தைச் சுமத்தி, அந்தத் தொழிலாளரை சஸ்பெண்டு செய்து வைத்திருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். இப்படி விசாரணை இல்லாமல், நீண்ட நாட்களாகக் காலம் கடத்துவதை உடனடியாக நிறுத்தி, அதற்கென ஒரு கமிட்டி அமைத்து, உடனடியாக டிஸ்போசல் செய்யவேண்டும். ஒரு நீதிபதியின் தலைமையில், பொது மக்கள் பிரதிநிதி, தொழிலாளர் பிரதிநிதி இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து உடனுக்குடன் நல்ல தீர்ப்பு வழங்கினால், இந்தத் தொழில் தகராறு அங்கே ஏற்படாமல் இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை இந்த அளவோடு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. முனு. ஆதி: கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

நம்முடைய பஸ் போக்குவரத்தினுடைய நிலைமைகளைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னையில் இருக்கிற அரசாங்க பஸ்களெல்லாம், மக்களுடைய போக்குவரத்து

இடைஞ்சல்களைத் தவிர்த்திருக்கின்றனவா என்று பார்க்கின்றபோது, காலையிலும் மாலையிலும் மிக்க சங்கடமான நிலையில் தான் இருக்கிறோம் என்று பொது மக்கள் பேசிக்கொள்ளுகிற அந்த எண்ணத்தை நான் இங்கே சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்னையை ஒட்டியிருக்கும் 'பெல்ட் ஏரியா' என்ற வகையில், சுற்றுப்புறம் இருக்கும் ஊர்களிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் அரசாங்க அலுவலகங்களில் பணி புரிகிறவர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள். இவர்களுக்கு மின்சார ரயில் வண்டியும், இந்த பஸ் போக்குவரத்து வசதியும் தவிர வேறு ஒன்றும் கிடையாது. மின்சார ரயில் வசதியைப் பார்த்தால், நிற்கக் கூட இடமில்லாமல் பல வண்டிகளை விட்டுவிட்டு, ஐந்தாவது, ஆறாவது வண்டியில் ஏறிச் செல்லும் அளவு அதிக ஜனக் கூட்டம் இருக்கும் நிலையில் இன்றைக்கு ரயில் வசதி இருக்கிறது. சென்னையிலிருந்து ஏறக்குறைய இருபது, இருபத்தைந்து மைலுக்கு சுற்று வட்டாரத்தில் நம்முடைய அரசாங்க பஸ்களை விட்டு, அந்தப் போக்குவரத்து இடைஞ்சலைத் தவிர்ப்பது அரசாங்கத்தின் நல்லாய கடமையாகும்.

இப்பொழுது கவர்ன்மெண்ட் பஸ் ட்ரான்ஸ்போர்ட் மீனம்பாக்கம் விமான நிலையம் வரை வருகிறது. ஆனால், மீனம்பாக்கத்தையும் தாண்டி, பல்லாவரம், தாம்பரம், கூடுவாஞ்சேரி வரைக்கும் அதை விஸ்தரிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம், சென்னை நகரத்தில் உள்ள செக்ரடேரியட்டில் பணி புரியக்கூடிய ஆபீசர்கள் உட்பட, எத்தனையோ பேர்கள் பல்லாவரம், தாம்பரம் கூடுவாஞ்சேரி போன்ற பகுதிகளில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீனம்பாக்கம் வரையில் வரக்கூடிய கவர்ன்மெண்ட் ட்ரான்ஸ்போர்ட் பஸ்ஸைப் பல்லாவரம், தாம்பரம், கூடுவாஞ்சேரி வரையிலும் விடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். உண்மையிலேயே சென்னைக்கு அன்றாடம் வந்து வேலை செய்யக்கூடிய மக்களுக்குச் சங்கடம் இல்லாமல் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதே போன்று, தனியார் பஸ்கள் தாம்பரம் வரையில் செல்கிற பஸ்களுக்கும், சென்னையிலிருந்து மீனம்பாக்கம் வரையில் செல்கிற பஸ்களுக்கும் இருக்கும் கட்டண வித்தியாசத்தைப் பார்க்கும் போது தனியார் பஸ்களில் அதிகக் கட்டணமும், நம்முடைய கவர்ன்மெண்ட் ட்ரான்ஸ்போர்ட் பஸ்ஸில் மீனம்பாக்கம் விமான தளம் வருகிற வரையில் குறைவான கட்டணமும் இருக்கும்போது, இரண்டு வேறுபாடான எண்ணங்கள் மக்கள் மத்தியிலே ஏற்படுகின்றன. அரசாங்கம் ஏதோ நமக்குச் சலுகை தந்துவிடுவது போலவும், தனியார் துறையில் உள்ள முதலாளிகள் எல்லாம் கொள்ளையடிக்கிறார்கள் என்பது போலவும் பரவலாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால், இதற்கு அதிகாரமும் அனுமதியும் தந்தது நம்முடைய சர்க்கார்தான் என்பதை மக்கள் சிந்திக்க முடியவில்லை. கடந்த ஆண்டு, மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸ் தொழில் அமைச்சர் அவர்கள் போடுகிறபோது, "இப்படி போடு

[திரு. முனு. ஆதி] [18th March 1966

கிறீர்களே, இது பொது மக்கள் தலையில்தான் அதிகக் கட்டணம் என்ற பெயரில் வந்து விழப்போகிறது' என்று நாங்கள் சொன்ன போது, "அப்படி வராது" என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள். ஆனால், இப்பொழுது ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் ஆபீசருடைய அனுமதியின் பேரில், ஒரு கிலோமீட்டருக்கு மூன்று காசு விதத்தில் உயர்ந்திருக்கிறது. ஆனால், "மூன்று காசு வரையில்" என்று சொல்லிவிட்டு, அவர்கள் ஒரு ஸ்டேஜுக்கு 100 சதவிகிதம் உயர்த்தி வசூலிக்கிறார்கள். 15 காசு என்று இருப்பதை 30 காசு என்று வசூலிக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டர் தூரம் பிரயாணம் செய்து இறங்கினாலும் கூட, முதல் ஸ்டேஜுக்கு 30 காசு என்று அனுமதித்துவிட்டு, ஏதோ ஒரு அடிப்படையில் செய்திருக்கிறோம் என்று சொல்வது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. குறிப்பாக, நகரத்தின் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் மக்கள், அரை மைல், ஒரு மைல் போவதென்றாலும், பஸ்ஸை எதிர்பார்த்து, பஸ்ஸில் தான் போகவேண்டும் என்ற வகையில் பழகிவிட்டார்கள். அப்படிப் போகும்போது 30 காசுக்குக் குறைவு இல்லாமல் தரவேண்டியிருக்கிறது. ஆகையால், ரயிலுக்குப் போகிறார்கள். ரயிலிலே இட நெருக்கடி இருப்பதால், அதிகப் பேர் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஒன்று சத வீத அடிப்படையில் உயர்வு இருக்கவேண்டும் அல்லது கிலோமீட்டருக்கு ஒரு காசு கூடுதலாக விதித்திருக்கவேண்டும். இத்தனை மைலுக்கு இவ்வளவு கட்டணம் என்று ஒரு டேபிள் போட்டால் கூட நன்றாக இருக்கும். ஆனால் 50 சத விகிதம், 60 சத விகிதம், 75 சத விகிதம்கூட கட்டணம் உயர்த்திருக்கிறது. காஞ்சிபுரத்திற்குக் கட்டணம் ரூ. 1.25 என்று இருந்தது. இப்பொழுது ரூ. 1.75 வசூலிக்கிறார்கள். இப்படி 50 சத விகிதம், 60 சத விகிதம், 75 சத விகிதம் கூட கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசாங்க பஸ்களில் கட்டணம் குறைவாகவும், தனியார் பஸ்களில் கட்டணம் அதிகமாகவும் இருக்கிறது, அரசாங்க பஸ்களில் கட்டணம் குறைவாக இருப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது என்று சமாதானம் சொல்லுகிறார்கள். தனியார் துறையில் இருப்பவர்கள், ஏற்கனவே நம்முடைய சென்னை நகரத்தில் ராம விலாஸ் பஸ் சர்வீஸ் என்ற பெயரில், அன்றைய விலைவாசியில், அன்றைய பொருளாதாரத்தில், ஓரளவு லாபகரமாகவே ஓட்டினார்கள். அவர்கள் நஷ்டம் அடைந்ததாகச் சொல்லி, பஸ்களை நிறுத்திவிடப் போகிறதாகவும் சொன்னதில்லை. ஆனால், நம்முடைய அரசாங்க பஸ் சர்வீசைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு ஆண்டு நஷ்டம் வருகிறது என்று சொல்லும் போது எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. பஸ்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், "தனியார் துறையில் லாபத்தோடு ஓட்டுகிறார்கள், அரசாங்கம் பஸ் ஓட்டினால் நஷ்டம் ஏற்படுகிறது" என்று அரசாங்கத் தரப்பில் சொல்வதைப் பார்க்கும்போது, தனியார் துறை வளர்ச்சிக்கு மறைமுகமாக ஆதரவு தரவேண்டும் என்பது அரசாங்கக் கொள்கையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையைத் தவிர்ப்பதற்கு, தமிழ்நாடு பூராவிலும் தேசீயமயமாக்க வேண்டும் என்ற பிரச்னை இல்லாவிட்டாலும், சென்னை நகரத்தையொட்டி, சுற்று வட்டா-

18th March 1966] [திரு. முனு. ஆதி]

ரத்தில் இருக்கும் பகுதிகளிலாவது அரசாங்க பஸ்களை விஸ்தரிக்க வேண்டும். சென்னை மாநில அமைச்சராக டானியல் தாமஸ் அவர்கள் இருந்தபோது, பரவலான திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்கள். படிப்படியாக, மாவட்ட வாரியாக பஸ் ட்ரான்ஸ்போர்ட்டைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற திட்டம் ஒன்றை வகுத்து இருந்தார்கள். ஆனால், இடையிலே அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. நான் இப்பொழுது சொல்வது என்னவென்றால், தமிழ்நாடு பூராவிலும் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை தேசியமயமாக்கா விட்டாலும், சென்னையிலிருந்து இருபது மைல் சுற்று வட்டாரத்தில் நம்முடைய அரசாங்க பஸ்களை விடவேண்டும். சென்னையிலிருந்து தாம்பரம், சென்னையிலிருந்து அம்பத்தூர், ஆவடி, சென்னையிலிருந்து எண்ணூர் இப்படி சுற்று வட்டாரத்தில் இருக்கும் இடங்களுக்கு நம்முடைய அரசாங்க பஸ்களை விட்டு, சென்னையிலுள்ள அலுவலகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் வரக்கூடியவர்களுக்கு வசதியாக இருக்கும்படி தேசியமயமாக்கவேண்டும்.

குறிப்பாக, நான் பல முறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். திருவான்மியூரிலிருந்து முட்டுக்காடு வரை தார் ரோடு போட்டுவிடுவோம், கூடிய சீக்கிரம் பஸ் வந்துவிடும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது வரை பஸ் விட்டபாடில்லை. இதுபோல், சென்னையிலிருந்து மீனம்பாக்கம் வரையில் செல்லும் பஸ்ஸை தாம்பரம் வரையிலும், அதையும் தாண்டி, ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி இருக்கும் கூடுவாஞ்சேரி வரையிலும் செல்லும்படி விஸ்தரிக்கவேண்டும். கூடுவாஞ்சேரி வரையிலும் நகர்புறமாக மாறியிருக்கிறது. கூடுவாஞ்சேரி வெல்பேர் அசோசியேஷன் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில்கூட, கலெக்டர் கொடுப்பதற்கு தயாராயிருந்த போது, ப்ரைவேட் ஆப்பரேட்டர்கள் ஆட்சேபத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தோம். அந்த வட்டாரம் தொழில் பேட்டை நிறைந்த இடம், கட்டாயம் செய்ய வேண்டும் என்று கேட்டேன். நம்முடைய அரசாங்க பஸ்களை அந்த வட்டாரத்தில் விடவேண்டும்.

திருவொற்றியூர் வட்டாரத்தில் 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கே 6-டி, 28-பி, 6-சி, பஸ்கள் திருவொற்றியூர் டோல்கேட் வரை போய் நிறுத்தப்படுகின்றன. அதற்கப்பால் நிறைய தொழில்பேட்டைகள் இருக்கின்றன. எர்ணாவூர் கேட் வரையில் அந்த பஸ்ஸை விட்டால் நன்றாக இருக்கும். அதை முதலில் கவனித்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவொற்றியூரிலிருந்து சேக்காடு வரையிலும் பஸ்கள் விடப்படவேண்டும். அதுவும் தொழில் பேட்டை நிறைந்த இடம். அங்கே அரசாங்க பஸ்கள் விட்டு, அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்

கொள்ளுகிறேன். பக்கத்தில், பெட்ரோல் ரிபைனரி திட்டம் அமைத்திருக்கிறோம். நாம் எல்லா இடங்களிலும் பெரிய திட்டங்களை வைத்திருப்பதால், தொழிலாளர்கள் போக்குவரத்துக்கு வசதியாக, திருவொற்றியூரிலிருந்து சேக்காடு வரையில் அரசாங்க பஸ்கள் விடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

12-30 p.m. * திரு. ஜே. மாதா கவுடர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் பஸ்போக்குவரத்தைப் பொறுத்த வரையில் நகர்ப்புறத்தில் ஓடுகின்ற பஸ்கள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பது ஒன்று. இதன் காரணத்தினால் ஒட்டு மொத்தமாக சர்க்கார் துறையில் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்டுத் துறையே நஷ்டத்தில் இருப்பதாகச் சொல்வது தவறு. காரணம் துரித பஸ்கள் போகக்கூடிய இடங்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் தெரியும். அந்த இனத்தின்கீழ் நமக்கு லாபமே வந்திருக்கிறது. நகர பஸ் போக்குவரத்து மூலம் தான் நமக்கு லாபம் கிடைக்கவில்லை. லாபம் கிடைக்காததற்கும் காரணத்தை சொல்லியிருக்கிறார்கள். பீக் ஹவர்ஸில் காலையில் பலரும் தங்கள் காரியாலயம் போவதற்கும், மாலையில் வீடுகள் திரும்புவதற்கும் அதிகமான பஸ்கள் விடவேண்டியிருக்கிறது. அப்படி விடுகிறபோது காலையில் எடுத்துக் கொண்டால் நகரத்தை நோக்கிப் போகிற பஸ்களில் கூட்டம் இருக்கும். வருகிற பஸ்கள் நெரிச்சல் இல்லாமல் தான் வரவேண்டியிருக்கின்றன. அது போலவே மாலையில் எடுத்துக்கொண்டால் வீடு நோக்கி வருகிற பஸ்கள் கூட்டமாக இருக்கும். போகிற பஸ்கள் கூட்டமில்லாது தான். போய்விடுகின்றன. இந்தக் காரணத்தினால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இதுவிஷயத்தில் நாம் ஓர் அடிப்படை கொள்கையை வைத்துக்கொண்டுதான் செயல்படவேண்டியிருக்கிறது. மக்களுக்கு வசதி அளிப்பது தான் முக்கியம் என்றால் நஷ்டத்தைப் பொருட்படுத்தக்கூடாது. மக்கள் வசதி என்பது இரண்டாம் பட்சம் தான். மற்ற மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால் ஓரிடத்திற்கு மின்சாரம் விஸ்தரிக்கவேண்டுமா, அதற்காகும் செலவு 30 ஆண்டுகளிலாவது ஈடுகட்டிக்கொண்டு லாபம் வருமா என்று பார்ப்பார்கள். லாபகரமாக வரவில்லை என்றால் மின்சார சப்ளை கொடுப்பதில்லை. அது போல சர்க்கார் பஸ் துறை மூலம் லாபம் தான் வரவேண்டுமென்றால் சில சிக்கன முறைகளைக் கையாளவேண்டியிருக்கும். இதனால் ஏற்படுகிற அசௌகரியங்களை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதையும் நாம் ஆலோசிக்க வேண்டும். லாபத்தை மாத்திரம் நாம் இன்றைக்கு நம்முடைய முக்கிய குறிக்கோளாகக் கொள்ளவில்லை. இதை எதிர்க்கட்சிக்காரர்கள் மனதில் கொள்ள வேண்டும். நகர பஸ் போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் மக்களுக்கு வசதி அளிக்கவேண்டும் என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள நம் ராஜ்யத்தில் மட்டும் அல்ல, எல்லா ராஜ்யங்களிலும் அகில இந்தியாவிலும் நஷ்டம் தான் ஏற்படும், ஏற்பட்டு வருகிறது. அதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நஷ்டத்தை இப்படிக் காண்பித்து எதிர்க்கட்சிக்காரர்கள் தேசிய

மயமாக்க வேண்டும் என்கிறார்களே, அவர்களுடைய கோரிக்கைக்கு ஒரு முட்டுக்கட்டை போடுவோம்' என்று வேண்டுமென்றே சர்க்கார் நினைத்து இப்படிச் செய்வதாகச் சொல்கிற வாதங்கள் வெளியில் சொல்லப்படவேண்டிய வாதங்கள், தேர்தலுக்குச் சொல்லப் படவேண்டிய வாதங்கள், இந்தச் சட்டமன்றத்தில் பேசக்கூடிய வாதம் அல்ல. பஸ் போக்கு வரத்தில் லாபம் இல்லை என்பதாக இன்றைக்கு யாராவது பர்மிட்டை சரண்டர் செய்திருக்கிறார்களா என்று—திரு. மணி என்று நினைக்கிறேன்—கேட்டார்கள். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் என்னால் சொல்ல முடியும். இருபத்தைந்து மைல்களுக்குள் பஸ் விட ரூட் பர்மிட் பெற்றவர்கள்—அம்மாதிரி பஸ் விடுவது கட்டுப்படியாகவில்லை, ரூட் வேரியேஷன் கொடுத்தால் தான் கட்டுப்படியாகும் என்பதாகச் சொல்லி சரண்டர் செய்திருப்பதை நான் அறிவேன். இதே மாதிரி நிலை பல மாவட்டங்களிலும் இருக்கக்கூடும். இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் எந்த ஒரு தனிப்பட்ட முதலாளியும் சரி 25 மைல்களுக்குள்ள பஸ் விடுவது என்றால் நஷ்டம் அடையாமல் விடமுடியாது. அப்படி இருக்கும்போது, 5 மைல் 10 மைல்களுக்குள் போய்வருகிற நகர பஸ் போக்குவரத்திலே எப்படி லாபத்தை நாம் எதிர்பார்க்க முடியும்? எந்த தனிப்பட்ட நபர் ஒருவரிடம் கொடுத்தாலும் இதை எடுத்துக்கொள்ள முன்வரமாட்டார்கள். ஆக, நாம் இன்றைக்கு அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டியது லாபம் சம்பாதிக்கும் ஒரே நோக்கத்தோடே பஸ்விடுங்கள் என்பது அல்லது நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, மக்களுக்கு வசதியைக் கொடுங்கள் என்பது.

மின்சார ரயிலை எடுத்துக்கொண்டால் செங்கல்பட்டு வரை ஓரளவு வசதி இருக்கிறது. அதுபோல இன்றையதினம் அரக்கோணம் வரையில்—ஆவடி, அம்பத்தூர் என்பதாக இப்படி அரக்கோணம் வரை தொழிற்சாலைகள் பெருகிப்போய்க்கொண்டே இருக்கின்றன—மின்சார ரயிலை விடுவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகர பஸ் போக்குவரத்தை எடுத்துக்கொண்டால் நஷ்டம் ஏற்பட்டுவிட்டதே என்றால்—அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. டீசல் எண்ணை விலை உயர்ந்துவிட்டது. தொழிலாளர்களுடைய அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்தி எதிர்ப்புப் போராட்ட காரணமாக சில பஸ்களையே கொளுத்திவிட்டார்கள். சேதம் அடைந்த பஸ்களைச் செப்பனிடும் செலவும் அதிகமாகியிருக்கிறது.

சர்க்கார் பஸ்கள் என்றால் அவை சர்க்காருக்கோ, அமைச்சருக்கோ சொந்தமானது என்று நினைக்கக்கூடாது. அவை மக்களுடைய சொத்து. ஏதாவது நடந்தால் உடனே பஸ்களைக் கல்லால் அடிப்பது, பஸ்களை கொளுத்துவது அதில் பிரயாணம் செய்கிறவர்களுடைய நலனைக் கூடக் கருதுவதில்லை—என்ற அளவில் நாம் அரசியலை வளர்த்துக் கொண்டு போவது சரியல்ல. இவற்றினால் பொதுமக்களுடைய சொத்துத்தான் நஷ்டப்படுத்தப்படுகிறது. இதை மக்கள் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். நாமும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இன்றைன்று டயர்களைப் புதுப்பிப்பதற்காக ஆகும் செலவு கூடிக்கொண்டே வருகிறது. சென்ற மாதம் 45 ரூபாயாக இருந்தது இந்தமாதம் 55 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆகவே, சர்க்கார் துறையிலேயே டயர்களைப் புதுப்பிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் சர்க்கார் பஸ்கள் மாத்திரம் அல்ல, இன்னும் ஜீப்புகள், கார்கள் எல்லாவற்றின் டயர்களையும் புதுப்பித்துக்கொள்ள வழியேற்படும். அதையும் போக்குவரத்துத்துறையின் கீழேயே வைத்து நடத்தினால் நல்லது என்று சொல்கிறேன்.

அடுத்து, அதிகமான பஸ்களை விடுவதனால் ரோடுகள் சேதம் அடைகின்றன, அவற்றைப் பராமரிக்க என்று மாநகராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறோம். இப்படி ஒரு கோடி கொடுத்தும் எவ்விதப் பிரயோசனம் இல்லை. அவர்கள் அந்தப் பணத்தைச் சரியான முறையில் செலவிடுவதில்லை. ரோடுகள் போடுவதில்லை, பூந்தமல்லி ரோடை எடுத்துக்கொண்டாலும், மவுண்ட் ரோட்டை எடுத்துக்கொண்டாலும், நாஷனல் ஹைவேஸ் மூலம் போடப்பட்டிருக்கிற ரோடையும், மாநகராட்சி போட்டிருக்கிற ரோட்டையும் பார்த்தால் தெரியும். அங்கு நடக்கிற ஊழல்களை இந்த நகரத்துப் பொதுமக்களே பரவலாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாநகராட்சியிடத்தில் ஒரு கோடியை எடுத்துக்கொடுக்காமல் சர்க்காரே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது நல்லது. இப்போதுள்ள முறை நகர மக்களுக்கும் திருப்தி அளிக்கவில்லை என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக என் தொகுதி வழியாக ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பாக சர்க்கார் பஸ் என்பதே போனது கிடையாது. இப்போது சர்க்கார் பஸ் போகும்படியாகச் செய்திருப்பதற்கு கனம் அமைச்சர் அவர்களுக்கும் அந்த இலாகாவினருக்கும் என் பகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி சந்தைப் புதுப்பாளையம் என்பது. செங்கம் தாலுக்காவிலேயே அதிக ஜனத்தொகை உள்ள ஊர். அந்த ஊரைப் பொறுத்தவரையில் சர்க்கார் பஸ்ஸை இரண்டு இடங்களிலாவது நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதைத் தயவு கூர்ந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக வேலூரிலே சர்க்கார் பஸ்கள் நிற்கின்ற இடத்திலே கேன்டின் இல்லாத நிலைமை இருக்கிறது. பிரயாணிகள் அங்கிருந்து வேறு இடத்திற்குச் சென்று டிபன் செய்துவிட்டு வருவதற்கு அரை மணி நேரம் ஆகிவிடுகிறது. உடனே டிபன் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. பஸ்கள் சரியான நேரத்திற்குப் புறப்படுகின்ற நிலையிலே குறித்த நேரத்திற்குள் டிபன் செய்துவிட்டு வர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அங்கேயிருந்து கேன்டீன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேலூரில் அம்பீஸ் கபே வைத்து நடத்துகிறவர் அங்கே கேன்டீன் வைப்பதற்

காக உரிமை வழங்க வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள், அது பரிசிலனையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதற்கு உடனே அனுமதி வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் அணைக்கட்டுக்கு சென்னையிலிருந்து பலர் விக் எண்ட் ட்ரிப் என்று சொல்வார்கள், அதிகாரிகள் செல்கிறார்கள். அவர்கள் சர்க்கார் பஸ்சில் போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே சாத்தனூருக்கு திருவண்ணாமலை, போளூர், ஆரணி, ஆத்தூர் வழியாக ஒரு சர்க்கார் பஸ் விட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருவண்ணாமலையிலிருந்து இரண்டு பஸ்கள் திருப்பதிக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கின்ற வகையிலே நம்முடைய மாநிலத்தில் பஸ்கள் போக்குவரத்து உன்னதமாக சிறந்த முறையிலே நடந்துகொண்டு வருகிறது. காரிலே செல்வதற்குப் பதிலாக பஸ்களிலே போவது நல்லது என்று எல்லோரும் நினைக்கக்கூடிய நிலைமையிலே, தனியார் துறையினர் கூட பஸ்களை மிகச் சிறந்த முறையில் விடுவதற்கு எண்ணம் ஏற்படக்கூடிய முறையிலே நல்ல வகையில் இதை நடத்தி வருவதற்காக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அரசாங்க பஸ் போக்கு வரத்து சம்பந்தமாக என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இங்கே சில வார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன். ஆண்டுதோறும் இந்த மானியத்தை வைத்துப்பேசுகின்ற சமயத்தில் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நாங்கள், அரசாங்கப் போக்குவரத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நஷ்டக் கணக்கிலே ஓடிக்கொண்டிருக்கிறதே, இதை நிவர்த்தி செய்யக் கூடாதா என்று நாங்களும் கேட்க, நம்முடைய அமைச்சர் அவர்களும், கொடுக்கின்ற கணக்கு முறைகளை ஏற்றுக் கொள்ளாமல் கணக்குகளை வேறுவிதமாகப் போட்டுப் பார்க்கவேண்டும், லாபம் இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமையிலேயே இன்றைய தினமும் இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். தங்கள் மூலமாக நான் ஒன்று சொல்லிக்கொள்வேன், அரசாங்கம் பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தக்கூடிய சமயத்தில், தனியார்களிடம் நிறைய பணம் சேர்ந்துவிடுகிறது, சோஷலிஸத் தத்துவத்தை நாம் நிலை நிறுத்தவேண்டுமென்றால் பஸ்போக்குவரத்தை நாம் மேற்கொள்ளவேண்டும், அதன்மூலமாகக் கிடைக்கின்ற வருவாய், லாபத்தை வைத்துக்கொண்டு டெவலப்மெண்ட் ஆக்டிவிடீஸ்களுக்கு மாநிலம் பூராவிலும் செலவழிக்கலாம் என்ற எண்ணத்தில்தான் அரசாங்கம் சென்னையைப் பொறுத்தவரையில் பஸ்போக்குவரத்தை மேற்கொண்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் மேற்கொண்டதிலிருந்து ஒரு சில காலம், ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு வருஷங்கள் லாபக் கணக்குத்தான் வந்தது.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [18th March 1966

லாபம் வந்தது, ஆனால் காலம் செல்லச் செல்ல அந்த லாபக்
கணக்கு தேய்ந்துகொண்டே போகிறது. லாபம் வருவதற்குப்
பதிலாக நஷ்டக் கணக்கைப் பார்க்கிறோம். அரசாங்கம் போக்கு
வரத்தை எடுத்துக் கொண்டதின் மூலமாக நிறையப் பணம் வரும்,
அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு வேறு துறைகளிலே செல
வழிக்கலாம் என்று எண்ணியதற்குப் பதிலாக வேறு துறைகளி
லிருந்து பணத்தை எடுத்து ஆண்டுதோறும் இந்த பட்ஜெட்டுக்கு
ஒதுக்குகிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது அதற்காக நான்
உண்மையிலேயே என்னுடைய வருத்தத்தைத்தான் தெரிவித்துக்
கொள்கிறேன். அரசாங்கம் கொடுத்திருக்கிற கணக்குப் பிரகாரம்
1959-60-லே 561 பஸ்கள் ஓடின. அதன் மூலமாக 27 லட்சம்
ரூபாய் நிகர லாபம் கிடைத்தது என்று கொடுத்திருக்கிறார்கள்.
1960-61-லே 695 பஸ்கள் ஓடின. நிகர லாபம் 15 லட்சம் ரூபாய்
என்று கொடுத்திருக்கிறார்கள். 1961-62-லே 770 பஸ்கள் ஓடின.
லாபம் 18 லட்ச ரூபாய் கிடைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்
கிறது. 1962-63-லே 814 பஸ்கள் ஓடியிருக்கின்றன. லாபம் ரூபாய்
12 லட்சமாக குறைந்தது. 1963-64-ல் 950 பஸ்கள் ஓடின,
லாபம் இருந்ததா என்றால் இல்லை, நஷ்டமாகிலும் இல்லாமல் இருந்
ததா என்றால் அதுவும் இல்லை. 28 லட்ச ரூபாய் நஷ்டக்
கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். 1964-65-லே 1,076 பஸ்கள் ஓடின,
நஷ்டம் 18 லட்சம் என்று கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலே
கூட எதிர்பார்த்தபடி 1965-66-லே 1,300 பஸ்கள், சென்னையிலும்
கன்னியாகுமரி மாவட்டத்திலும் சேர்த்து, எக்ஸ்பிரஸ் பஸ்களையும்
சேர்த்து இந்த மாநிலத்திலே பெரிய அரசாங்க பஸ் ஆபரேட்டராக
இருக்கின்ற தொழில் அமைச்சர் இருக்கின்ற இந்த நேரத்திலே
1,300 பஸ்கள் ஓடக்கூடிய சூழ்நிலையில் சந்தோஷமான செய்தியை
அவர் தருவார் என்று எதிர்பார்த்தோம், ஆனால் அவர், சோகச்
செய்தியை, 28 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் நஷ்டம் என்று, சொல்
கிறார்கள். இது மிகவும் வேதனைப்படக்கூடிய விஷயம், நஷ்டம்
எதற்காக ஏற்பட்டது, ஏன் அதைத் தவிர்க்க முடியவில்லை, ஆண்டு
தோறும் நஷ்டத்தைக் காட்டுகிறீர்களே என்று தடவைக்கு
தடவை நாங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறோம், அமைச்சர்
அவர்களும் ஏதோ பதில் சொல்கிறார்களே தவிர, ஏன் நஷ்டம் வரு
கிறது என்பதை நன்றாக விளக்கவேண்டும். புத்தகத்திலே
கொடுத்திருக்கிறார்கள், ஜெனரல் அனலிஸிஸ் கொடுத்திருக்
கிறார்கள். நகரங்களிலே ஓடுகிற பஸ் போக்குவரத்திலே பொது
வாக நஷ்டம்தான் ஏற்படுமென்று சொல்கிறார்கள். 'The City
service is unremunerative throughout India.' இந்த வியாக்கியானம்
எப்படிக் கிடைத்ததோ தெரியவில்லை. 1958-59-லே கிடைக்காத
வியாக்கியானம், 1959-60-லே கிடைக்காத வியாக்கியானம் இப்
பொழுது கண்டுபிடிக்கப்பட்டு சிடி சர்விஸிலே நஷ்டம் தான்
வரும் என்று சொல்லுகிறார்கள். இரண்டாவது காரணம் அங்கே
இருக்கிறவர்களுக்கு டி.ஏ. உயர்த்தியிருக்கிறோம். இதனாலே
14 லட்சம் அதிகப்படியாக கொடுத்திருக்கிறோம் என்று சொல்லு
கிறார்கள். மூன்றாவதாகச் சொல்கின்ற காரணம், டீசல் எண்
ணெயின் விலை உயர்ந்துவிட்டது, நான்காவது சொல்கின்ற

18th March 1966] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

காரணம் டயர் விலை உயர்ந்துவிட்டது என்று சொல்
கிறார்கள். அடுத்த காரணம் ஆண்டுதோறும் சொல்கிற காரணத்
தைத்தான் சொல்கிறார்கள். சென்னையிலே மாம்பலத்திலிருந்து,
சைதாப்பேட்டையிலிருந்து, மயிலாப்பூரிலிருந்து பாரிஸ் வரை பஸ்
போகிறது. காலையில் போகும்பொழுது நிறையத்தான் போகிறது,
திரும்பி வரும்பொழுது காலியாகப் போகிறது, காலையிலே
அங்கிருந்து வருவார்கள் ஆகையால் திரும்பிவரும்பொழுது காலி
யாகப் போகிறது, மாலையிலே இங்கிருந்து போவார்கள், ஆகை
யால் அங்கிருந்து காலியாக வருகிறது. ஒன்வே டிராபிக் அல்லது
ஒன் சைட் டிராபிக் இருக்கிறது என்ற முறையிலே காரணத்தைச்
சொல்கிறார்கள். இன்னொன்றும் சொல்கிறார்கள், லீன் ஹவர்
டிராபிக் என்று, காலையிலே ஐந்து மணிக்கே பஸ் விடுகிறோம், இரவு
9½ மணி வரை விடுகிறோம்., அப்பொழுதெல்லாம் புவர் டிராபிக்
இருக்கிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கம் மட்டும்தானா
இப்படியெல்லாம் பஸ் விடுகிறது? பல்லாவரம், தாம்பரத்தில்
இருந்து பஸ் விடுகின்றவர்களுக்கும் இது பொருந்தாதா? பல்லா
வரத்திலிருந்து காலையிலே வரும்பொழுது டிராபிக் அதிகமாக
இருக்கிறது, திரும்பிச் செல்லும்பொழுது குறைகிறது. அதே
மாதிரி மாலையிலே பல்லாவரத்திற்கு அதிகமாக டிராபிக் இருக்
கிறது, அங்கிருந்து வருவது குறைவாக இருக்கிறது, அவர்களுக்கு
மட்டும் எப்படி பயனளிக்கிறது, லாபம் தருகிறது, ஆகவே இந்த
அனலிசிஸ் பொருந்தாது. அதேபோல்தான் பல்லாவரத்திலிருந்தும்
தாம்பரத்திலிருந்தும் காலையில் ஐந்து மணியிலிருந்து இரவில்
9½ மணி வரை பஸ் விடுகிறார்கள். ஆகவே அந்தக் காரணமும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாக இல்லை. அடுத்தபடியாக பீக்
ஹவர்ஸில் பஸ் விடுகிறோம் என்று சொல்கிறார்கள். 30 பேருக்கு
300 பேர் நிற்கிறார்கள் ஆகவே பீக் ஹவர்ஸில் டிராபிக்காக பஸ்
விடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். நிறைய பேர்கள்
நிற்கிறார்கள் என்றால் நிறையப் பேர்கள் டிராபிக் செய்வதால்
வருமானம் அதிகமாகத்தானே வரவேண்டும். காலையிலே இரண்டு
பஸ், மாலையிலே இரண்டு பஸ் விடுகிறார்கள். ஸ்பேர் பஸ்களாக
இருக்கின்ற பஸ்களைதானே பீக் ஹவரில் விடுகிறார்கள். ஸ்டூடன்ட்ஸ்
ஸ்பெஷல் விடுகிறோம், அதில் நஷ்டம் வரும் என்று சொல்லு
கிறார்கள். அதில் எப்படி நஷ்டம் வரும் என்று எனக்குத் தெரிய
வில்லை. ஆகவே இவர்கள் கொடுக்கக்கூடிய காரணங்கள் எதிர்க்
கட்சி அங்கத்தினர்களை மட்டுமல்ல, ஆளுங்கட்சியிலே உள்ள
அங்கத்தினர்களை மட்டுமல்ல, இந்த மாநிலத்திலே உள்ள பொது
மக்களைத் திருப்திப்படுத்தாது என்றுதான் சொல்வேன். அதே
சமயத்தில் இன்னொன்றும் சொல்ல வேண்டும். அரசாங்க பஸ்
களும், தனியார் துறையில் உள்ள பஸ்களுக்கும் இருக்கிற
வித்தியாசத்தைப் பார்க்கவேண்டும். பல பஸ் ஆப்பரேட்டர்கள்,
எம்.எல்.ஏ.-க்களாக இருக்கிறவர்கள் பஸ் ஆப்பரேட்டர்களாக
இருக்கிறார்கள்.

திரு. மகாலிங்கம் அவர்கள் பஸ் ஆப்பரேட்டராக இருக்கிறார்.
அவர்கள் லாபத்தில் இன்கம் டாக்ஸ் கட்டுகிறார்கள்; நாம் கட்டுவ
தில்லை. அவர்கள் ஒரு பஸ்ஸுக்கு குறைந்தது 1,000 ரூபாய்

விருந்து 1,500 ரூபாய் வரை இன்கம்டாக்ஸ் கட்டுகிறார்கள். நம்முடைய சர்க்கார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பஸ்களை நடத்தினாலும் கூட ஒரு பைசா இன்கம் டாக்ஸ் கூடக் கட்டுவதில்லை. இரண்டாவது, காபிடலுக்கு அவர்கள் மார்வாடியிடம் கடன் வாங்குகிறார்கள். 50,000 ரூபாய்க்கு 70,000 ரூபாய் ஹையர் பர்சேஸ் என்று போட்டு வட்டியைக் கணக்குப் பார்த்தால் 18 சதவிகிதம் ஓர்க் அவுட் ஆகிறது. ஆனால் நம்முடைய சர்க்கார் இதற்காகக் கொடுக்கக்கூடிய பணத்திற்கு வட்டி 5, 5½, 6 பர்சன்டுக்கு மேல் கிடையாது. அரசாங்கத்தில் வட்டி விகிதம் குறைவு. குறைவான வட்டியில் காபிடல் கொடுக்கிறது, சலுகைகள் நிறைய இருக்கின்றன. ஸ்பேர் பார்ட்ஸ் மற்ற பஸ் ஆப்பரேட்டர்கள் வாங்குகிற விலை வேறு; நாம் வாங்குற விலை வேறு. நமக்கு ரேட் காண்டிராக்டில் வாங்கப்படுகிறது. ஸ்டாண்டிங் பாசஞ்சர்கள் பிரைவேட் பஸ்ஸிலே கிடையாது; கவர்ன்மெண்ட் பஸ்ஸிலே உண்டு. அம்மையார் பொன்னம்மாள் அவர்கள் 'அரசாங்க பஸ்ஸிலே ஆடிக் கொண்டு தொங்குகிறார்கள்' என்று சொன்னார்கள். அது போல் ஒருவர் மேல் ஒருவர் ஏறிக் கொண்டிருக்கிறார்கள். ஓவர்லோடுக்கு கவர்ன்மெண்ட் பஸ்ஸில் ரெஸ்ட்ரிக்ஷன் கிடையாது; பிரைவேட் பஸ்ஸில் இரண்டு பேரை அதிகமாக ஏற்றிச் சென்றுவிட்டாலும் கூட பர்மிட்டை சஸ்பெண்ட் பண்ணி விடுவார்கள். அடுத்தது ஃப்யூவல் காண்டிராக்ட். டீசல் தனியார் வாங்குகிற விலைக்கும் நாம் வாங்குகிற விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அரசாங்க பஸ் துறைக்குச் சலுகைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் லாபம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க ஏதாவது வழிவகைகள் செய்திருக்கிறார்களா? இதற்கான காரணத்தை எவ்வாறு கண்டு பிடிக்கப் போகிறார்கள்? இரண்டு பர்சன்ட்தான் டிக்கட் லக்கேஜ் என்று சொல்லுகிறார்கள், பாராட்டுகிறேன். பின் நஷ்டம் ஏன் வருகிறது? கொடுக்கப்படுகிற டிக்கட் ஒழுங்காக இருக்கிறதா? அல்லது டூப்ளிகேட் டிக்கட்டா? வசூல் பண்ணக் கூடிய பணம் ஒழுங்காகக் கஜானாவுக்குப் போகிறதா? பில்ஃபரேஜ் இருக்கிறதா? வாங்கக் கூடிய ஸ்பேர் பார்ட்ஸ் ஒழுங்கான முறையில் வாங்கப்படுகின்றனவா? ஐயாயிரத்துக்கு வாங்கி ஏழாயிரத்துக்கு கணக்குக் காட்டுகிறார்களா? ரிட்ரீட் பண்ணிய டயரையே வாங்கி புது டயர் என்று சொல்லுகிறார்களா? சென்னையில் கிடைக்கக்கூடிய ஸ்பேர் பார்ட்ஸை வாங்காமல் பம்பாயில் போய் வாங்கக் காரணம் என்ன? அங்கு 20 சதவிகிதம் 25 சதவிகிதம் தள்ளித் தருகிறார்கள் என்பதற்காக அங்கு சென்று வாங்குகிறார்களா? இதையெல்லாம் துருவித் துருவிப்பார்க்க வேண்டும். நான் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய திறமையைக் கண்டு ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். அமைச்சர் அவர்களுடைய சொந்தக்காரர் டிரான்ஸ்போர்ட் டைரக்டராக இருப்பது பற்றியும் ரொம்பச் சந்தோஷம். எப்படியாவது நிறைய லாபத்தைக் காட்டுவார்களேயானால் அதுவே போதுமானது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர் அமைச்சருக்குச் சொந்தக்காரர் அல்ல.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: 'தாங்ஸ்'. சென்ற வருஷம் கொடுத்த கணக்கை விட இந்த வருஷம் லாபம் காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தால் பெருத்த ஏமாற்றந்தான் ஏற்பட்டிருக்கிறது. எஃபிஷியன்ஸி 85 சத விகிதம் என்று காட்டுகிறார்கள், பாராட்டுகிறேன். பத்து பஸ் வைத்திருப்பவர்கள் ஸ்பேர் பஸ்வைத்திருக்கிறார்கள் ஐந்து பஸ் வைத்திருப்பவர்கள் ஸ்பேர் பஸ் வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தில் 85 சதவிகிதம் எஃபிஷியன்ஸி இருக்கிறது என்று சொல்லும்போது வருமானத்தைப் பார்த்தால் 'நில்'. எங்கே போகிறது பணம்? சோஷலிசத்திற்கு விரோதமானவர்கள் யாரேனும் இந்த இலாகாவில் புகுந்து கொண்டிருக்கிறார்களா? தனிப்பட்ட முதலாளிகள் தங்களுடைய ஏஜண்டுகளாக இந்த இலாகாவில் வேலைக்கு அமர்த்தி நஷ்டக் கணக்குக் காட்டி மறுபடியும் தங்களுக்கு அதை விட்டு விட வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்கிறார்களோ என்னவோ தெரியாது! நஷ்டம் வருகிறது. இரண்டு வருஷத்திற்கு முன்னால் மெட்ராஸ் சிட்டி பஸ் கட்டணத்தை ரிவைஸ் பண்ணியிருக்கிறார்கள். 7 பைசாவை 13 பைசா, 13-ஐ 16 ஆக, 16-ஐ 19 ஆக, 19-ஐ 25 ஆக மாற்றியிருக்கிறார்கள். அவ்வாறு ரிவைஸ் பண்ணிய பிறகு நஷ்டம் வருவதற்குக் காரணம் என்ன? 1958-59, 1960-61-ல் 27 லட்சம் லாபம், 15 லட்சம் லாபம் என்று வந்து கொண்டிருந்த லாபம் கட்டணத்தை ரிவைஸ் பண்ணிய பிறகு நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன? இதை யார் ஒத்துக்கொள்ள முடியும்? மக்களுடைய வரிப் பணத்தை, ஏழை எளிய மக்களுடைய வரிப்பணத்தை இப்படிச் செலவு செய்கிறார்கள். அமைச்சர் ஒரு பெரிய பஸ் ஆப்பரேட்டர் என்று கூறுகிறார்கள். அதிலிருந்து வரக்கூடிய வருமானம் சரியாகக் கணக்குக்குக் கொண்டு வரப்படாமல் இருக்கக் காரணம் என்ன? அதிலே இருக்கக்கூடிய ஊழல்களைப் பரிசீலிக்கவேண்டும். உங்களால் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றால் ஆளுங்கட்சியில் மூவரும் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டு பேர்களும் கொண்ட ஒரு குழு போடுங்கள். எங்களுக்கு எந்தவிதமான ஊதியமும் வேண்டாம். லட்சக்கணக்கான பணத்தை வெளிக்குக் கொண்டு வருகிறோம். ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதில் ஊழல்; டீசல் ஒரு டாங்க் வாங்கப்பட்டால்—அரை டாங்க் வெளியே கொண்டு போய் விற்கப்படுகிறது என்ற புகார்கள் எல்லாம் வந்திருக்கின்றன. இவற்றைப்பற்றியெல்லாம் ஆராய அரசாங்கத் தரப்பில் இருந்து 3 பேரையும், எதிர்க்கட்சியிலிருந்து 2 பேரையும் போட்டு ஒரு கமிட்டியை நிறுவுங்கள். இந்த நஷ்டம் எப்படி வருகிறது என்று பரிசீலித்து அவர்கள் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கட்டும். அமைச்சர் அவர்கள் இதற்கு முன்வருவார்களா? இந்த இலாகா ஜெனரல் பட்ஜெட்டில் வரவேண்டாம், தனியான அண்டர்டேக்கிங் ஆக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். எலக்ட்ரிசிடி போர்டு மாதிரி, ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் போர்டு மாதிரித் தனியாக வையுங்கள். இன்கம் டாக்ஸ் கட்டுகிற பெரிய பெரிய ஆப்பரேட்டர்கள் எல்லாம் ஆப்பரேட்டிங் காஸ்ட் ஆக அரசாங்க பஸ் தொழிலில் ஆகும் ஆப்பரேட்டிங் காஸ்ட்டை அடிப்படையாகக் காட்டுகிறார்கள். அரசாங்கத்தின் கணக்கைக் கொண்டு போய் இன்கம் டாக்ஸ் ஆபீசில் காட்டுவதன் காரணமாக இன்கம்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [18th March 1966

டாக்ஸ் மூலம் வரவேண்டிய பணம் பெருமளவு குறைகிறது.
இவற்றையெல்லாம் ஏன் பரிசிலித்துத் தடுக்கக்கூடாது என்றுதான்
கேட்க விரும்புகிறேன்.

நான் கடலூரில் இருந்து வருகிறேன். அங்கு ஒரு பஸ்
ஸ்டாண்டு கட்டவேண்டுமென்று பலதடவை சொல்லியிருக்கிறேன்.
எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் சொன்னார்கள். பஸ் ஸ்டாண்டு
ஒன்று இப்போது இருக்கிறது. அரசாங்க பஸ் 20 பஸ்களுக்குமேல்
இருக்கின்றன. அப்படி இருக்கும்போது ஏன் பஸ்ஸை முனிசிபல்
சேர்மன் ஹோட்டல் முன் நிறுத்துகிறார்கள்? அங்கு விஜிடேரியன்
மீல்ஸ்தான்; நான்-விஜிடேரியன் கிடையாது. பழம் வாங்க
வேண்டுமென்றால் கூட முடியாது. அந்த ஹோட்டலிலே போடப்
படுகிற சாப்பாடானது நன்றாக இருக்கிறதா என்றால் இல்லை.
மாமண்டூரில் பஸ்ஸை நிறுத்துகிறார்கள். அங்கு நல்ல சாப்பாடு
போடுகிறார்கள். ஆனால் இந்த ஹோட்டலிலே பஸ்ஸில் ஏராளமாக
வருபவர்களை எக்ஸ்ப்ளாயிட் செய்கிற முறையில் மோசமான
சாப்பாடு போடப்படுகிறது. பஸ் ஸ்டாண்டு கட்டுவது ஏன்
அனுமார் வால் மாதிரி நீண்டுகொண்டே போகிறது. அந்த ஹோட்
டல் முன்னால் ஏன் பஸ்களை நிறுத்த வேண்டும்? ஒரு சமயம் மந்திரி
கள் அடிக்கடி வரும்போது முனிசிபல் சேர்மனுடைய பிருந்தாவன்
ஹோட்டலில் அடிக்கடி பார்ட்டி வைக்கிறார்களோ என்னவோ
எங்களுக்குத் தெரியாது. அதுதான் காரணமா?

1-0' p.m. இந்தக் குறைகளுக்குப் இடம் அளிக்காமல் தொழில் அமைச்சர்
அவர்கள் அவற்றை நிவர்த்தி செய்வார்கள் என்று கருதுகிறேன்.
இந்த நஷ்டத்தைத் தவிர்ப்பார்கள் என்று கருதுகிறேன். சர்க்கார்
பஸ்ஸில் வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு உட்கார முடியாது.
அந்த அளவு அழுக்காக இருக்கிறது. ஒரு வேட்டியை சலவைக்
குப் போட நாலணா ஆகிறது. உட்காருகிற இடங்களில் கை
வைத்தால் அழுக்காக இருக்கிறது. சீட்டில் கை வைத்தால்
அழுக்கு இருக்கிறது. அவ்வளவு டர்டியாக மெயின்டெயின் செய்-
கிறார்கள். பஸ்ஸின் நிலைமையும் டர்டியாக இருக்கிறது,
கண்டு பிடிக்கிற முறையும் டர்டியாக இருக்கிறது, இந்த இலாகா
வின் வருமானமும் டர்டியாக இருக்கிறது. இவற்றை எல்லாம் சீர்
திருத்தி அபிவிருத்தி செய்யவேண்டும். லாபம் வராததற்குள்ள
காரணம் என்ன என்று சொல்லப்படும் காரணங்கள் இந்த மாநிலத்
தில் உள்ள மக்களைத் திருப்திப்படுத்தாது. நியாயமான காரணங்கள்
கொடுக்கப்படவில்லை. ஊழல்கள் வெளியே கொண்டு வரப்பட
வில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டி என் உரையை முடிக்
கிறேன். வணக்கம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த விவாதத்தில் பேசப்பட்டது ஒரே ஒரு விஷயம்
தான். அது இந்த இலாகாவில் நஷ்டம் வந்திருக்கிறது என்பது.
அதுபற்றிப் பலப்பல வழிகளில் சொன்னார்களே தவிர, இறுதியாக
ஒரே விஷயம் இந்த இலாகாவில் நஷ்டம் வந்திருக்கிறது என்பது.
நஷ்டம் என்று சொல்லும்போது நான் ஏற்கனவே பல முறை

18th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

இங்கே விளக்கிச் சொல்லியிருக்கிறேன். சர்க்கார் துறையில்
கணக்குகள் வைப்பதற்கும், தனியார் துறையில் கணக்குகள் வைப்
பதற்கும் இடையே பல வித்தியாசங்கள் உண்டு. சர்க்கார் துறை
யில் கணக்கு வைக்கும்போது நாம் சில அதிகமான முதலீடுகள்
செய்கிறோம். அந்தவிதமான முதலீடுகள் தனியார் துறையில்
செய்ய முடியாது, அதற்கு அனுமதி இல்லை, செய்வதும் கிடையாது.
உதாரணமாக, நாம் டெவலப்மெண்ட் ஃபண்ட் என்று ஒன்று வைத்
திருக்கிறோம். பாசஞ்சர்ஸ் அமெனிட்டிஸ் ஃபண்ட் வைத்திருக்
கிறோம். ஹௌசிங் ஃபண்ட் என்று வைத்திருக்கிறோம். இதை
எல்லாம் தனியார் துறையில் வைக்க முடியாது. இந்தத் துறை
யில் நாம் சற்று அதிகமான ஒதுக்கீடுகள் செய்வதால் அவை
எல்லாம் தனியாக, பிரத்தியேகமாக நமக்கு அசெட்ஸாக
சேர்ந்து கொண்டிருக்கிறது. வருமானத்திலிருந்து காப்பிடல்
அசெட்ஸ்-ஆக மாறிக்கொண்டிருக்கிறது. டெப்ரிசியேஷன் போடு
கிற வழியைப் பார்த்தோமானால் தனியார் துறையில் போடுகிற
டெப்ரிசியேஷன் முறைக்கும், நம் முறைக்கும் இடையே வித்தியா
சம் உண்டு. நமது டெப்ரிசியேஷன் முறை ஐந்தாண்டுகளில் நாம்
அந்த பஸ்ஸில் வால்யூ பூராவையும் டெப்ரிசியேட் செய்து விடு
கிறோம். ரைட் ஆஃப் செய்து விடுகிறோம். தனியார் துறையில்
அவ்வாறு செய்ய முடியாது. ரெசிட்யூ 10 சத விகிதத்திற்கு மேல்
இருந்து கொண்டேயிருக்கும். ஆகவே, கணக்களவில் பார்த்தால்
நம்மிடத்தில் ஏதோ நஷ்டம் ஏற்பட்டதாகத் தோன்றினாலும் அந்த
அளவிற்கு நம்மிடத்தில் நஷ்டம் இல்லை. இதை கம்பெனி வைப்ப
தைப் போல் திருப்பி மாற்றியமைத்தால் நஷ்டம் லாபம் இல்லாத
அளவிற்குத்தான் இருக்குமே தவிர, நஷ்டத்தில் இந்த இலாகா
இருப்பதாகச் சொல்ல முடியாது. ஊரில் இருக்கிறவர்களுக்கு
நஷ்டம் இல்லை என்று காட்டுவதற்காக, நாம் அனுஷ்டித்து வருகிற
நல்ல கொள்கைகளை மாற்றிக்கொள்வது சரியல்ல. ஐந்து வருடங்
களில் ஒரு பஸ்ஸின் மதிப்பை நாம் டெப்ரிசியேட் செய்து விடுவோ
மானால் அது ஏழு ஆண்டுகளுக்கு ஓடும். அதனால் நம் பஸ் இலாகா
வின் கன்சீல்ட் அசெட்ஸ் இரண்டு ஆண்டு வால்யூ இருக்கும். டெப்ரி
சியேஷன் ஃபண்டுக்கே அதிகமாகப் போடுகிறோம். அதுவே எவ்
வளவோ அதிகம். அதற்கு மேல் டெவலப்மெண்ட் ஃபண்ட் இருக்
கிறது. அதிலிருந்து வாகனங்களை விஸ்தரிக்க வழிகளைச் செய்ய
முடியும். மேலும் ஹௌசிங் ஃபண்ட் இருக்கிறது, பாசஞ்சர்ஸ்
அமெனிட்டிஸ் ஃபண்ட் இருக்கிறது. ஆக, கணக்குகளைப் பார்க்கிற
போது ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தனியார்
துறைக் கணக்கில் இவ்விதமான ஃபண்ட்ஸ் கிடையாது. இவ்வளவு
அதிகமான டெப்ரிசியேஷனும் கிடையாது. இதை எல்லாம்
வைத்துத்தான் பார்க்கவேண்டும். இரண்டாவதாக, இந்த இலாகா
வில் நம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சிடி சர்வீசில் கிலோமீட்டருக்கு
2 பைசாதான் வசூல் செய்கிறோம். இந்தியாவிலேயே இதுதான்
குறைவான கட்டணம். அப்படிக் குறைவான கட்டணம் வாங்கி
நாம் நல்ல சேவை செய்து வருகிறோம் என்று சொல்வதற்குப் பதில்
சோஷலிசம் வேண்டுமென்று சொல்கிறவர்களும், தேசீயமயமாக்க
வேண்டுமென்று சொல்கிறவர்களும் நஷ்டம் வந்து விட்டது,
நஷ்டம் வந்து விட்டது என்று பேசுவது எனக்குச் சற்று ஆச்சரிய

மாகத்தான் இருக்கிறது. இன்று இதில் நாம் லாபம் சம்பாதிக்க
வேண்டுமென்று சொன்னால் மற்றவர்கள் எல்லாம் செய்வது போல,
ஊரில் இருப்பது போல் நாமும் மூன்று பைசா எனக் கட்டணத்தை
உயர்த்தினால் சற்றேரக்குறைய 1½ கோடி ரூபாய் மொத்த வருமா
னம் வரும். நிகர வருமானம் 30 லட்சத்திற்கு மேல் வரும். ஆனால்,
இதைச் செய்யலாமா, அப்படிச் செய்வது நியாயமா, அவ்வாறு
செய்வதுதான் நம் ராஜ்யத்திற்கும், நம் நகரத்திற்கும் செய்யக்
கூடிய சேவையா என்று பார்த்து முடிவு எடுக்க வேண்டும். ஏன்
குறைவான கட்டணத்தை நகரில் வைத்திருக்கிறோம்? சென்னை
நகரத்தில் இருக்கிறவர்கள் எல்லோரும் அன்றாடம், தினம் தினம்
வேலைக்கு வந்து திரும்பிப் போக வேண்டியவர்களாக இருக்கிறார்
கள். உணவு எப்படி அவசியமோ, உடை எப்படி அவசியமோ
அதே போன்று போக்குவரத்தும் ஒரு அன்றாட அத்தியாவசியம்
தான். அவர்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லாவிட்டால்
அவர்கள் பிழைப்பே இல்லை. ஆகவேதான், அவர்கள் வாழ்க்கைத்
தர புள்ளிச் செலவுகள் அதிகரிக்காமல் இருப்பதற்காகவே, பல
துறைகளில் நாம் பணம் ஒதுக்கீடு செய்வதால், ஓரளவு இதைச்
சமாளித்துக்கொண்டு இன்று இரண்டு நயா பைசாவாக வைத்திருக்
கிறோம், இதை அங்கத்தினர்கள் நன்றாக தெரிந்து கொள்ள வேண்
டும். அவர்கள் உண்மையாகவே மக்களுடைய பிரதிநிதிகள்.
மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டும் என்று நினைத்தால் இது
தான் சரி என்று சொல்ல வேண்டுமே தவிர, எப்படியாவது லாபத்
தைச் சம்பாதித்து விடுவது எல்லோரையும் போல், அதற்கு
வேண்டிய கட்டணத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று
சொல்வது சரியாகாது, முறையாகாது. நகர சர்வீஸ் நடத்து
வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. மொபஸல் சர்வீசை
எடுத்துக் கொண்டால் 200 மைல் ஓடும். நகர் சர்வீசை எடுத்துக்
கொண்டால் எட்டு ட்ரிப் அது செய்யும். ஒரு ட்ரிப்பிற்கு ஆறு
மைல் ஆவரேஜ். போக வர 12 மைல், 12×8=9 மைல்கள் ஓடும்
நகர சர்வீஸ் பஸ். நம் எக்ஸ்பிரஸ் பஸ்கள் லாபம் சம்பாதிக்கின்றன
என்று சொன்னால் அவை எல்லாம் 200, 250, சில 300 மைல்கள் கூட
ஓடுகின்றன. ஒரு பஸ் 200 மைல்கள் ஓடுவதற்குப் பதிலாக 96 மைல்
அல்லது 100 மைல் ஓடும்படியான நிலையில் வைத்திருந்தால் எப்படி
லாபம் சம்பாதிக்க முடியும்? இந்த ட்ரிப்களை அதிகரிக்கவேண்டு
மென்று சொன்னால் வேகத்தைக் கூட்ட வேண்டும். நகரத்தில் அப்
படி வேகத்தைக் கூட்டினால் ஆஸ்பத்திரிகளை விஸ்தரிக்க வேண்டிய
நிலைதான் ஏற்பட்டு விடும். நகரத்தில் உள்ள நெருக்கடி, ரோடுகள்
இருக்கிற நிலை, மற்ற பல தொல்லைகள், டிராபிக் இவற்றை எல்லாம்
பார்க்கிறபோது இதை விட வேகத்தை அதிகரிக்க முடியாது. அப்
படி அதிகரித்தாலும் ஒன்று அல்லது இரண்டு ட்ரிப்கள் அதிகமாகச்
செய்யமுடியும். எந்த பிரைவேட் ஆப்பரேட்டரையும் கேட்கிறேன்.
ஒரு பஸ்ஸை 100 மைலுக்கு குறைவாக ஓட்டி அவர்கள் லாபம் சம்
பாதித்ததாகக் காட்டட்டும்? காட்டவே முடியாது. சிடி ஆபரே
ஷனில் செலவு அதிகம் சாதாரணமாக வெளிநாடுகளில் எல்லாம்
ஒரு பர்லாங்குக்கு ஒரு ஸ்டாப் வைத்திருப்பார்கள். நம் சென்னை
நகரத்தில் பத்து தப்படிக்கு ஒரு ஸ்டாப் இருக்கிறது. இதனால்
வேகம் குறைகிறது ட்ரிப்கள் குறைகின்றன. ஆபரேஷன் காஸ்ட்
அதிகமாகிறது. கியர் போட்டு ஸ்டார்ட் பண்ணி பிக்கப் செய்வதற்

குள் அடுத்த ஸ்டாப் வந்து விடுகிறது. ஆயில் டீசல் கன்சம்ஷனில்
அதிகச் செலவாகிறது. வேர் அண்டு டேரும் அதிகமாகிறது.
எல்லாவற்றையும் நாம் பார்க்க வேண்டும். அங்கே ஓட்டை, இங்கே
ஓட்டசல், அங்கு ஒழுகிக் கொண்டிருக்கிறது. லீக்கேஜ் இருக்கிறது
என்று சொல்வதெல்லாம் அர்த்தமற்றவை. விஷயங்களை அறியாத
காரணத்தினால் சொல்லப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். முன்பு லாபம் வந்தது இப்போது ஏன் வரவில்லை
என்று கேட்டார்கள், அது நியாயமான கேள்வி. இந்தப் புத்தகத்
தில் இந்த விவரங்களை எல்லாம், எதிர்பார்த்துக் கொடுத்திருக்
கிறேன். 51-வது பக்கத்தில் பார்த்தால் தெரியும். 1955—56-ல்
'காஸ்ட் பெர் மைல்' .97 அதாவது 97 நயா பைசா. இன்றைக்கு
இருக்கும் காஸ்ட் ஆப் ஆப்பரேஷன் ரூ. 1.58. காஸ்ட் ஆப் ஆப்ப
ரேஷன் எப்படி அதிகமாயிற்று என்பதற்குள்ள விவரங்கள்
எல்லாம் இருக்கின்றன. சம்பள விகிதம் அதிகம். நம் சேஸிஸின்
விலை அகம். டீசல் விலை அதிகம். எல்லாத் துறையிலும் அதிகச்
செலவு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் காஸ்ட் ஆப் ஆபரேஷன் 97
நயா பைசா என்றிருந்தது இப்போது ரூ. 1.58 ஆக உயர்ந்திருக்
கிறது. அதே சமயத்தில் earning per mile -ஐப் பார்த்தால்
அன்று ரூ. 1.13 என்றிருந்தது இன்று 1.50 தான் இருக்கிறது.
இதிலிருந்து காஸ்ட் ஆப் ஆப்பரேஷன் எந்தளவிற்கு
உயர்ந்திருக்கிறதோ, அந்தளவிற்கு நாம் கட்டணத்தை உயர்த்த
வில்லை அல்லது கூட்டவில்லை என்பதைத் திட்டவட்டமாக இந்தப்
புள்ளிவிவரங்களிலிருந்து தெரிந்து கொள்ள முடியும். கட்ட
ணத்தை உயர்த்தியிருந்தால் earning per mile ரூ. 1.75, இரண்
டாகக் கூட ஆகியிருக்கலாம். ஆகவே, கட்டணத்தை உயர்த்தாத
காரணத்தால் 'எர்னிங் பெர் மைல்' என்றிருப்பது குறைவாகத்
தான் இருக்கும். இதை அதிகப்படுத்தவேண்டுமென்றால் கட்ட
ணத்தை உயர்த்த வேண்டும். அது சரியல்ல என்பதையும் தெரிவித்
துக்கொள்கிறேன். ஆகவே, நஷ்டம் என்று சொல்லுகின்ற
பொழுது, எந்த அளவுக்கு இந்தத் துறை மக்களுக்குச் சேவை
செய்ய முடியும் என்பதைத்தான் பார்க்கிறது. குறிப்பாக, நடுத்தர
வர்க்கத்தினர்தான் அதிகமாக பஸ்களை உபயோகிக்கின்றார்கள்.
மொபசிலில் இருக்கின்றவர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்றவர்
கள் அடிக்கடி பஸ்களை உபயோகிப்பதில்லை, ஏதாவது விசேஷங்
களுக்கு, வேலைகளுக்கு, மார்கெட் என்று குறிப்பிட்ட அவசியத்
திற்கு மட்டும்தான் உபயோகிக்கிறார்கள், ஒரு தரம்தான் அவர்கள்
செல்லக்கூடிய அவசியம் ஏற்படும், ஆகவே, அவர்கள் கொடுக்கின்ற
கட்டணத்தில் ஓரளவுக்கு ஏற்றியிருந்தால் அதை அவர்கள்
பொறுத்துக் கொள்ளக்கூடும். அதற்கான சக்தியும் அவர்களிடம்
இருக்கிறது. நகரத்திலுள்ளவர்களை எடுத்துக்கொண்டால், அன்றா
டம் பஸ்களில் தங்கள் காரியங்களுக்காகச் செல்லவேண்டியிருக்
கிறது. அன்றாடம் செல்லக்கூடியவர்களுக்குக் கட்டணத்தை அதிகப்
படுத்தினால் அவர்களது வாழ்க்கைத்தரச் செலவு அதிகரித்துவிடும்,
குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினர், லோயர்-மிடில் கிளாஸ் வகுப்
பிலுள்ளவர்கள் எந்த அளவுக்குச் சமாளிக்க முடியும் என்பது
பெரிய பிரச்னையாக ஆகிவிடும். ஆகவேதான் இதை எந்த அள
வுக்கு உயர்த்தி, சமமான நிலையில் வைத்திருக்க முடியுமோ அந்த
அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்

கிறேன் மேலும், நாம் சில ஃபண்ட்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அந்த முறையில் நம்முடைய அசெட்டுகளையும் லயபலிட்டீஸ்-களையும் பார்த்தால்—நமக்கு இருக்கின்ற கட்டடம், நிலங்கள், பஸ்கள் இவைகளை எல்லாம் பார்த்தால் அதிகமாக இருப்பதைப் பார்க்க முடியும். நம்முடைய காபிட்டல் சார்ஜ்ஜை விட 25 சத விகிதம் அதிகமாகவே இருக்கின்றது. ஆகவேதான் இதில் ஓரளவுக்குக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்த போதிலும் ஓரளவுக்கு நம்மால் சமாளித்துக்கொள்ள முடியும் என்கின்ற நிலைமையில்தான் இதை நிர்வகித்து வருகிறோம்.

இரண்டாவது சொல்லப்பட்டது, கட்டணம் சில ஆண்டுகளுக்கு முன்னால் தானே உயர்த்தப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் நாம் எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு 2 பைசா அளவுக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதுதான் இந்தியாவிலேயே மிகக் குறைவானது, வேறு எந்த ராஜ்யத்திலாவது இதைவிடக் குறைவாக இருக்கிறதா என்று பாருங்கள். ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசா என்றிருப்பதைவிடக் குறைவாக எங்காவது இருந்தால் இந்தக் குற்றச்சாட்டை நான் ஒத்துக்கொள்கிறேன். கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்பது நமது நோக்கம் அல்ல, பிரயாணிகளுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் நோக்கமாக இருந்து வருகிறது.

கட்டணம் மாறுதல் செய்ததில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். உதாரணமாக, மைலாப்பூருக்கு கட்டணம் குறைவாக இருக்கிறது என்று கனம் முனு ஆதி அவர்கள் சொன்னார்கள். சிடியைப் பொறுத்தவரையில், கட்டணத்தை நிச்சயிப்பதில் நாம் மேற்கொண்டிருக்கின்ற முறையை எடுத்துக் கொண்டால், இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு ஸ்டேஜ் என்று வைத்துவிட்டால் கட்டணத்தில் எந்த விதமான வேறுபாடும் இராது, ஆனால் உண்மையான பல கஷ்டங்கள் ஏற்படும். குறிப்பாக மக்களுக்கு அது பெரிய கஷ்டமாக வந்து சேரும். உதாரணமாக, நான் சொல்கிறேன். ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும் என்று சொல்கிறார்கள், எக்மோர் ஸ்டேஷனுக்கு போகவேண்டும் என்று சொல்கிறார்கள், ராயப்போட்டைக்குப் போக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த முறையில் பாரிஸ் கார்னரிலிருந்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும் என்று சொல்லும்போது, சரியாக ஸ்டேஜ்ஜை கணக்கிட்டுப் பார்த்து வைத்தால், ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவே வைக்கவேண்டும், அது மக்களுக்குக் கஷ்டமாகப் போய் நிற்கும். ஆகையால்தான் கூடிய வரைக்கும் பழைய ஸ்டேஜ்ஜிலேயே இருக்கவேண்டும் என்று கருதித்தான் அந்தந்த ஸ்டேஜ்களை ஏற்படுத்தியிருக்கிறோம். சரியாக இரண்டு கிலோ மீட்டர் அளவுக்கு ஒரு ஸ்டேஜ் என்று மாற்றி அமைத்தால் விக்டோரியா ஹாலுக்குப் பக்கத்தில் வந்துவிடும். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும் என்றால் மக்கள் அங்கிருந்து நடந்துதான்போக வேண்டும், அல்லது அடுத்த ஸ்டேஜ்ஜுக்குள்ள கட்டணம் கொடுக்கவேண்டும். அது

மாதிரிதான் பக்கத்திலிருந்து எக்மோர் ஸ்டேஷனுக்குப் போக வேண்டும் என்று சொல்லும்போது, சரியாக ஸ்டேஜ்ஜை கணக்கிட்டு மாற்றி அமைத்தால் மக்களுக்குத்தான் கஷ்டம் ஏற்படும். ஆகவே சென்னையைப் பொறுத்தவரையில், ரிக்கனைஸ்ட் ஸ்டேஜலாக இருக்கின்ற இடங்களை பெரும்பாலும் மாற்றவேண்டாம் என்று கருதித்தான் அதிலேயே வைத்திருக்கிறோம். இது ஒன்றும் வேண்டாம், ஃபுட் ரூல் எடுத்து அளந்து வைத்துவிடலாம் என்று சொன்னால்—அது தான் எங்கள் இலாகாவினுடைய சிபாரிசும்—ஆனால் நடைமுறையில் மக்கள் எந்தெந்த இடங்களுக்கு அதிகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்பதைப் பார்த்துத்தான் ஸ்டேஜ்களை—பத்து பைசாவுக்கு சற்றுக் குறைவான தூரம் இருக்கலாம், சில இடங்களில் பத்து பைசாவுக்கு அதிகமான தூரம் இருக்கலாம்—எப்படியும் மக்களுக்கு இதனால் பெரிய கஷ்டம் வரக்கூடாது என்ற எண்ணத்தில் இவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று நம்புகிறேன். இல்லை, இரண்டு கிலோ மீட்டர் என்று அளந்து ஸ்டேஜ் வைத்துக் கட்டணத்தை வசூல் செய்து கொள்ளுங்கள் என்று சட்டசபை அங்கத்தினர் சொன்னாலும் பொதுமக்கள் எவ்வளவு தூரம் இதை ஒத்துக்கொள்வார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்களில் (ஃபேர்) கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்கள் எல்லாம் லக்சுவரி கோச்சஸ்—இப்படிப்பட்ட பஸ்களில் அழுக்காக இருக்கிறது என்று சொன்னார்கள். இதைப்பற்றி சொன்ன அங்கத்தினர் அவர்கள் இந்த எக்ஸ்பிரஸ் பஸ்களில் போய், தனது அனுபவத்தின் மூலம் சொல்லியிருப்பார்களேயானால் எனக்கு அது ஆச்சரியத்தைத்தான் கொடுக்கிறது என்று தான் சொல்ல முடியுமே தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அகில இந்தியாவிலேயே நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்கள் மிகவும் சிறந்த முறையில் இருக்கின்றன என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். வெளியிடங்களிலிருந்து வருகின்றவர்கள் கூட நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பார்த்து விட்டு மிகவும் பெருமையாக நம்மைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். நகரத்தில் இருக்கின்ற பஸ்களில் வேண்டுமென்றால் அழுக்கு இருக்கிறது என்று சொல்லலாம், ஒரே பஸ் 8 டிரிப்கள், 10 டிரிப்கள் என்று போய்க்கொண்டிருக்கிறது. பஸ்களை ஸ்டாண்டில் நிறுத்தினவுடனேயே ஆட்கள் ஏற ஆரம்பித்து விடுகிறார்கள், கொஞ்சம் பொறுங்கள், இதைச் சுத்தம் செய்யவேண்டும் என்று சொன்னால் அங்கேயே பெரிய ரகளை ஏற்பட்டுவிடும். இது சாதாரணமாக ரஷ் நேரத்தில் நடைபெறுகிறது. பீக் ஹவர்ஸில் இந்த நிலைமை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதை சமாளிப்பதும் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது மாதிரி, எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் சரியாக இருந்தது, அது

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [18th March 1966

ஆடைகளை எல்லாம் கெடுத்துவிட்டது என்று சொல்லுவது, அவருடைய கற்பனை கலந்த ஒரு கற்பனைச் சித்திரமாக எழுதியதாகத் தான் என் மனதில் தோன்றிற்று.

கவர்ன்மென்டே டூரிஸ்ட் பஸ்களை விடவேண்டும் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், டூரிஸ்ட் ஸீயிங்-காக பஸ்களை வைத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனைகளின்படி எல்லா பஸ்களையும் விடவேண்டும் என்றால் குறைந்தது 150 அல்லது 200 கோடி ரூபாய் வேண்டும். அந்த நிதிக்கு எங்கே போவது, யார் நடத்துவது என்பதைப் பார்த்து தான் அதற்குப் பதில் சொல்ல முடியும். முக்கியமாக மக்களுக்கு அத்தியாவசிய சேவை செய்யவேண்டும் என்பதைத் தான் நாம் முதலில் பார்க்கவேண்டும். அதற்கு மேலாக யாராவது சேவை செய்வதற்கு முன்வந்தால் அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியதுதான்.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் சில இடங்களில் நிற்பதில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இதற்கென்று தனியாக விதிகள் இருக்கின்றன. 25 மைல்களுக்கு ஒரு இடத்தில் நிற்க வேண்டும் என்றிருக்கிறது. ஒரு சர்வீஸில் 250 மைல் இருக்குமானால் பத்து இடங்களில் நிறுத்தலாம். இப்படிப் பார்க்கும்போது சில இடங்களில் 10 மைல்களுக்கு உள்ளேயே நிற்கவும் முடியும். ஆனால் அடுத்த ஸ்டாப்பிங் முப்பது மைல்களுக்கு அப்பால்தான் இருக்கும். அந்த முறையில்தான் வசதிக்குத் தகுந்தபடி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கனம் உறுப்பினர்கள் பல நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள், இன்ஸ்பெக்டர்களைக் குறைக்கலாம் என்று சொன்னார்கள். செக் பண்ணுவது மட்டும் இன்ஸ்பெக்டர்களுடைய வேலையில்லை, வேறு சில ட்யூட்டிகளையும் செய்கிறார்கள், கண்டக்டர்களையும் டிரைவர்களையும் மாற்றிக் கொடுக்கவேண்டியது போன்ற வேலைகளையும் செய்கிறார்கள், இருந்தாலும் எந்த அளவுக்குக் குறைக்க முடியும் என்பதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இந்த யோசனைக்காக என் நன்றி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மப்டி செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போடலாம் என்ற யோசனையும் சொல்லப்பட்டது, அது சிறந்த யோசனை. அதையும் சர்க்கார் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைலாப்பூருக்கு குறைந்த கட்டணமாக இருக்கிறது, அது ஏதோ எனக்காகத்தான் வைத்திருக்கிறேன் என்று சொன்னார்கள், நான் பஸ்ஸில் பிரயாணம் செய்யவில்லை. அரங்கண்ணல் அவர்களுக்காக வேண்டுமென்றால் அப்படி வைத்திருக்கிறேன் என்று சொன்னால் அது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம் . . . (சிரிப்பு)

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, எந்தக் காரணத்திற்காக இந்தச் சலுகையை அரங்கண்ணலுக்கு தருகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாமா ? (சிரிப்பு)

18th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மைலாப்பூர் தொகுதியில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுடைய ஆதரவுகளையெல்லாம் பெற்று வந்திருக்கிற அங்கத்தினருக்கு இந்தச் சலுகைகூட செய்யக் கூடாதா ? (சிரிப்பு)

ஆகவே, இந்த மான்யக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் கூறிய எல்லா யோசனைகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான்காவது நிதிக் கமிஷனுக்கு நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட அறிக்கையிலே சர்க்கார் . . . .

Mr. DEPUTY SPEAKER : The hon. Member is introducing a new matter after the Hon. Minister has replied to the debate.

Sri K. A. MATHIALAGAN : It is not a new matter, Sir.

Mr. DEPUTY SPEAKER : It did not arise at all in the course of the debate. I think hon. Members should consider the point whether they could introduce new points after the debate has ended.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், எம். எல். ஏ.-க்களுக்கெல்லாம் பஸ்ஸிலே செல்லுவதற்கு பாஸ் கொடுக்கவேண்டுமென்று காங்கிரஸ் அங்கத்தினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்ல இருக்கிறார் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பதில் இல்லாதது, இல்லை என்பதற்கு அடையாளம். (சிரிப்பு)

திரு. காஞ்சி மணிமொழியார் : தலைவர் அவர்களே, இரண்டு கிலோ மீட்டருக்கு ஒரு ஸ்டேஜ் என்று சாதாரணமாக வைத்திருக்கிறோம், அல்லது கொஞ்சம் முன்னே பின்னே இருக்கலாம். ஆனால் கோடம்பாக்கத்தில் இரண்டு கிலோமீட்டருக்குக் குறைவாக இருப்பதற்கே இரண்டு ஸ்டேஜ்கள் வைக்கப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி நான் சொல்லுவதற்கு மறந்து விட்டேன். அதைப் பரிசீலிக்க நான் ஏற்பாடு செய்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தின் போது எழுப்பப்பட்ட விஷயங்களைப்பற்றித்தான் பதில் அளிக்கிறார்கள். நான் இப்போது சொல்ல விரும்புவது இது சம்பந்தப்பட்ட விஷயம் தான். நான் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். ஏனென்றால், இது இந்த விவாதம் சம்பந்தமனது. சர்க்காருடைய மூலதனத்தைப்பற்றி அவர்கள் சரியாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது வட்டியைப்பற்றிய சமாசாரம். டீசலுக்கு வரி போட்டிருப்

[திரு. கே. ஏ. மதியழகன்] [18th March 1966

படுதால் வட்டி கொடுக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அருள் கூர்ந்து விளக்கம் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

The cut motion to Demand No. XXX—Road Transport Schemes was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,70,97,100 under Demand No. XXX—Road Transport Schemes."

The Demand was put and carried and the Grant was made.

The cut motion to Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,13,54,000 under Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes."

The Demand was put and carried and the Grant was made.

1-24 p.m. MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other papers.

*60. *A Review of Industrial Development in Madras State 1965-66 (English and Tamil).*

*61. *A Review on the Progress made in the Handloom Industry (English and Tamil).*

* Despatched to Members on 16th March 1966.

18th March 1966]

APPENDIX

[*Vide* answer to starred question No. 341 at page 10.]

The following are the benefits and concessions given to families of defence service personnel hailing from Madras State, who have been killed in action, or incapacitated as a result of injuries sustained in action :—

(1) The loan amounts due to Government or Government Agency from the defence personnel who are killed or disabled in action will be waived with due regard to the circumstances of each case, taking into account the financial position of the family of such army personnel.

(2) Families of ex-servicemen who have been killed or disabled in action, are shown first in the order of priority in the matter of assignment of non-valuable Government land to landless and poor persons free of land value who are likely to engage themselves in direct cultivation.

(3) Ten disabled ex-servicemen are sent every year to the Queen Mary's Technical School, Kirkee, for vocational technical training in order to rehabilitate them in civil life. The cost of maintenance at the rate of Rs. 60 per mensem for trainee is met by the Madras State Ex-Service personnal Benevolent Fund.

(4) Widows and family dependents of Jawans wlll be trained in the Andhra Mahila Sabha in various vocational training courses. The cost of training at the rate of Rs. 50 per trainee will be met from the Madras State Ex-Service personnel Benevolent Fund.

(5) The children of defence service personnel killed in action or incapacitated, undergoing training in Industrial Training Institutes will be awarded stipends at the rate of Rs. 25 per mensem each.

(6) A separate fund under the title "The Madras State Jawans' Relief Fund" has been constitute with an initial grant of Rupees One Lakh from the State funds, which has been distributed among the 14 districts including Madras City, and the amounts credited to the Personal Deposit Accounts of the Collectors. The Collectors have been directed to credit to their Personal Deposit Accounts, voluntary subscription and donations given by the public for the specific purpose of giving relief to Jawans' families and dependents, and to sanction from the amounts available in their Personal Deposit Accounts, Cash relief up to a maximum of Rs. 500 in each deserving case to the families and other dependents of Jawans found missing, killed or wounded in enemy action. Cases requiring larger relief should be reported to Government but initial relief should not be delayed on this account.

[18th March 1966

(7) Children of defence service personnel belonging to the categories of Junior Commissioner Officers and other ranks below the rank of Junior Commissioner Officers and similar ranks in the Navy or Air Force, who are either killed or incapacitated in action, will be exempted from payment of tuition fees and all items of special fees in all grades of educational institutions until the recipient of the concession completes that particular course of education which he or she had taken up at the time of the grant of the concessions. They will be given an allowance for the purchase of books, etc., at the rate of Rs. 10 in elementary classes—Standards I to V, Rs. 15 in standards VI and VII and Rs. 25 in standards VIII to X.

In addition to these, the children studying in standards VIII to X in High Schools and Arts and Science Colleges, will be awarded scholarship at the rates specified below provided that they have obatined a II class or 50 per cent of marks in the aggregate in the previous annual or public examination. They should however, surrender the concessions referred to in paragraph 7 above.

No scholarship is proposed for study in Standard VII and below.

I.—STANDARDS VII TO X IN HIGH SCHOOLS AND ARTS AND SCIENCE COLLEGES.

Course of Study. (1)	Value of Scholarship. (2)
Standards VIII to X	Will cover (i) tuition fees and all items of special fees ; (ii) a book allowance of Rs. 25 per mensem for each student. Residential scholars will be paid in addition a maintenance allowance of Rs. 30 per mensem for a period of ten months in a year.
P. U. C. ..	(i) Tuition fees and all items of special fees; (ii) book allowance of Rs. 85 for the course for each student ; (iii) a maintenance allowance of Rs. 40 per mensem for a period of ten months in a year for residential scholars.
B. A. or B. Sc. ..	(i) Tuition fees and all items of special fees (ii) ; book allowance at the rate of Rs. 215 for the entire course ; (iii) maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.

II.—POLYTECHNICS AND PROFESSIONAL COLLEGES.

18th March 1966]

Course of Study. (1)	Value of Scholarship. (2)
Polytechnic (Diploma courses).	(i) Tuition fees and all items of special fees; (ii) book allowance of Rs. 180 for entire course; (iii) maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Agriculture—B.Sc. (Ag.)	(i) Tuition fees and all items of special fees ; (ii) book allowance of Rs. 650 for entire course ; (iii) maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Engineering ..	(i) Tuition fees and all items of special fees ; (ii) book allowance at rate of Rs. 550 for entire course ; (iii) a maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Medical	(i) Tuition fees and all items of special fees ; (ii) a book allowance of Rs. 1,081 for M.B.B.S., Rs. 1,087 for B.D.S., Rs. 487 for B. Pharmacy ; (iii) a maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Law	(i) Tuition fees and all items of special fees ; (ii) book allowance of Rs. 51 for F.L. Rs. 78 for B. L. ; (iii) maintenanee allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Teachers' Training.	(i) Tuition fees and all items of special fees ; (ii) maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.
Veterinary ..	(i) Tuition fees and all items of special fees ; (ii) book allowance of Rs. 1,000 for entire course; (iii) maintenance allowance of Rs. 40 per mensem for ten months in a year for residential scholars.

(8) Children of jawans killed in action or incapacitated are given preference in respect of admission to all Government hostels maintained by the Harijan Welfare Department in the State against the seats reserved for Backward Classes, provided they are eligible for admission to these hostels.

[18th March 1966

பதில்

போரில் உயிரிழந்த, அமர்களத்தில் ஏற்பட்ட விழுப்புண் களின் விளைவாக ஊனமுற்ற, இம்மாநிலப் படை அதிகாரிகள், வீரர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்குக் கீழ்க்கண்ட உதவிகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன :—

1. போரில் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற படைவீரர் ஒருவர் அரசாங்கத்துக்கு அல்லது அரசாங்க ஏஜென்சிக்குக் கடன் திருப்பிச் செலுத்த வேண்டியிருந்தால், அக்கடன் தொகை ஒவ் வொரு நிகழ்ச்சியின் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அவருடைய குடும் பத்தின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு தள்ளி விடப்படும்.

2. குறைந்த மதிப்பீடுள்ள அரசாங்க நிலத்தை நேரடிச் சாகுபடியில் ஈடுபடக்கூடிய நிலமற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் இலவசமாக வழங்குவதில், போரில் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களுக்கு முதற்சலுகை அளிக்கப்படுகிறது.

3. ஊனமுற்ற முன்னாள் படையினர் சமூகத்தில் மறுவாழ்வு பெறும் பொருட்டு, சிறு தொழிலில், தொழில் நுட்ப பயிற்சி பெற கிர்கியிலுள்ள மேரி இராலி தொழிலில் நுட்பப் பள்ளிக்கு ஆண்டு தோறும் பதின்மர் அனுப்பப்படுகின்றனர். ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய் வீதத்தில் மேற்படி, பயிற்சியாளர் களின் செலவு தமிழ்நாடு முன்னாள் படையினர் உதவி நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

4. படைவீரர்களின் விதவைகளுக்கும் அவர்களைச் சார்ந் துள்ள குடும்பத்தாருக்கும் ஆந்திர மகிளா சபையில் சிறு தொழில் களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் என்னும் வீதத்தில், பயிற்சிச் செலவு தமிழ்நாடு முன்னாள் படையினர் உதவித் தொகையிலிருந்து கொடுக்கப் படுகிறது.

5. போரில் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறு வதற்கு மாதத்துக்கு 25 ரூபாய் வீதம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படும்.

6. மாநில நிதிகளிலிருந்து ஒரு லட்ச ரூபாய் துவக்க மானியத்துடன் 'தமிழ்நாடு படைவீரர் துயர் துணிப்பு நிதி' என்று தனி நிதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது சென்னை நகர் உட்பட 14 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தொகைகள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவல் பெயர் வைப்பீட்டுக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளன. படை வீரர்களின் குடும்பத்தினர்களுக்கும், அவர்களைச் சார்ந்துள்ள வர்களுக்கும் உதவும் குறிப்பிட்ட நோக்கத்துடன் பொதுமக்கள் தாமாகவே வழங்கும் தொகைகளையும் நன்கொடைகளையும் தங்கள் அலுவல் பெயர் வைப்பீட்டுக் கணக்குகளில் வரவு வைத்துக்

18th March 1966]

கொள்ளுமாறும் பகைவருடன் எதிர்த்துப் போரிட்டதில் காணாமல் போன, உயிரிழந்த அல்லது ஊனமுற்ற படைவீரர்களின் குடும்பத் தினர், அவர்களைச் சார்ந்திருக்கும் மற்றவர் ஆகியவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு தங்கள் அலுவல் பெயர் வைப்பீட்டுத் தொகைக் கணக்கில் இருக்கக்கூடிய தொகையிலிருந்து அதிக அளவு 500 ரூபாய் வரை ரொக்க உதவி அளிக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தர விடப்பட்டுள்ளது. அதிக அளவில் உதவி கோருவோர் குறித்து அரசாங்கத்துக்கு அறிவிக்கவேண்டும். எனினும் தொடக்க உதவி அளிப்பதில் காலந்தாழ்த்தக்கூடாது.

7. போரில் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற ஜூனியர் கமிஷன் அதிகாரிகள், ஜூனியர் கமிஷன் அதிகாரிகள் பதவிக்குக் கீழ்ப் பட்ட ஏனைய பதவிகளைச் சேர்ந்தவர்கள், கப்பற்படை அல்லது விமானப்படையிலும் இதே பதவிகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோ ரின் பிள்ளைகளுக்கு எல்லா தரத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங் களிலும் கல்விக் கட்டணமும், ஏனைய சிறப்புக் கட்டணங்களும் செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்படும். இச்சலுகை, இது அளிக்கப்பட்டபொழுது மாணவன் அல்லது மாணவி எந்தபாட முறை வகுப்பில் சேர்ந்திருந்தார்களோ அந்தப்பாட முறையைப் பூர்த்தி செய்யும் வரையில் தொடர்ந்து அளிக்கப்படும். அவர் களுக்குப் புத்தகம் முதலியன வாங்குவதற்கும் அவர்களுக்குத் தொகை கொடுக்கப்படும். இத்தொகை **I** முதல் **V** வரை யுள்ள தொடக்க வகுப்புகளுக்கு 10 ரூபாய் என்னும் வீதத்திலும் **VI. VII** வகுப்புகளுக்கு 15 ரூபாய் என்னும் வீதத்திலும் **VIII** முதல் **X** வரையுள்ள வகுப்புகளுக்கு ரூபாய் 25 என்னும் வீதத்திலும் வழங்கப்படும்.

இவை மட்டுமன்றி, உயர்நிலைப் பள்ளிகளில் **VIII** முதல் **X** வரையுள்ள வகுப்புகளிலும், கலையியல் கல்லூரிகளிலும், அறிவியல் கல்லூரிகளிலும் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் முந்தைய ஆண்டுத் தேர்வில் அல்லது பொதுத் தேர்வில் இரண்டாம் வகுப்பு அல்லது மொத்தத்தில் 50 சதவிகிதம் மதிப் பெண்கள் பெற்றிருந்தால் அவர்களுக்குக் கீழ்க்கண்ட வீதங் களில் உதவிச் சம்பளம் வழங்கப்படும். ஆனால் அவர்கள் மேலே 7-வது பாராவில் குறிப்பிட்டுள்ள சலுகைகளைக் கைவிட்டு விடவேண்டும்.

VII-ம் வகுப்பிலும் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளிலும், கற்போருக்கு உதவிச் சம்பளம் அளிக்கும் செயற்குறிப்பு இல்லை.

VIII முதல் **X** வரையுள்ள வகுப்புகளிலும் கலையியல், அறிவியல் கல்லூரிகளிலும் கற்போருக்கு உதவிச் சம்பள வீதங்கள்.

வகுப்பு (1)	உதவி சம்பளத்தின் மதிப்பு, (2)
முதல் வரையுள்ள வகுப்புகள் ..	(i) இதில் (i) கல்விக் சட்டணமும், சிறப்புக் சட்டணங்கள் அனைத் தும் அடங்கும். (ii) ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 25 ரூபாய்வீதம் புத்தகப்படி. கல்வி

வகுப்பு. (1)	உதவி சம்பளத்தின் மதிப்பு (2)
	நிறுவனங்களில் தங்கி இருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக் கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் வீதம் பேணுதல் படி அளிக்கப்படும்.
கல்லூரிப் புகுமுக வகுப்பு ..	(i) கல்விக் கட்டணமும் சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) ஒவ்வொருவருக்கும் அப்படிப்புக்கு 86 ரூபாய் புத்தகப்படி. (iii) கல்வி நிறுவனங்களில் தங்கி இருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக்கால அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு 40 ரூபாய் வீதம் பேணுதல்படி அளிக்கப் படும்.
பி. ஏ. அல்லது பி. எஸ்ஸி. ..	(i) கல்விக் கட்டணமும், சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) முழுப் படிப்பிற்கும் ரூ. 215 என்னும் வீதத்தில் புத்தகப்படி (iii) கல்வி நிறுவனங்களில் தங்கி இருந்து கலவி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக் கால அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 40 பேணுதல்படி அளிக்கப் படும்.

II. பல தொழில் பயிற்சிப் பள்ளிகள்—தொழில் கல்லூரிகள்.

பல தொழில்—(டிப்ளமா பயிற்சிப் பள்ளிகள் பாட முறைகள்).	(i) கல்விக் கட்டணமும், சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) முழுப்படிப்பிற்கும் ரூ. 180 புத்தகப்படி (iii) கல்வி நிறுவனங்களில் தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக்கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 பேணுதல்படி அளிக்கப்படும்.
வேளாண்மை (பி.எஸ்ஸி.) வேளாண்மை	(i) கல்விக் கட்டணமும், சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) முழுப் படிப்பிற்கும் ரூ. 650 புத்தகப் படி. (iii) கல்வி நிறுவனங்களில் தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக் கால அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 43 பேணுதல்படி அளிக்கப்படும்.
பொறியியல்	(i) கல்விக் கட்டணமும் சிறப்புக் க்ட்டணங்கள் அனைத்தும் (ii) முழுப் படிப்பிற்கும் ரூ. 550 என்னும் வீதத்தில் புத்தகப்படி. (iii) கல்வி நிறுவனங்களில்

வகுப்பு. (1)	உதவி சம்பளத்தின் மதிப்பு. (2)
	தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில பத்து மாதக் கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 பேணுதல்படி அளிக்கப் படும்.
மருத்துவம்	(i) கல்விக் கட்டணமும், சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு ரூ. 108 புத்தகப்படி, பி,டி.எஸ், படிப்பிற்கு ரூ. 1,087 புத்தகப் படி. (iii) கல்வி நிறுவனங்களில் தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக் கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 பேணுதல்படி அளிக்கப் படும்.
சட்டம்	(i) கல்விக் கட்டணமும் சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) எப்.எல். படிப்பிற்கு ரூ. 51-ம், பி.எல். படிப்பிற்கு ரூ. 73-ம் புத்தகப்படி, (iii) கல்வி நிறுவனத்தில் தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் 10 மாதக் கால அளவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40. பேணுதல் படி அளிக்கப்படும்.
ஆசிரியர் பயிற்சி	(i) கல்விக் கட்டணமும், சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும். (ii) பயிற்சி நிறுவனத்தில் தங்கியிருந்து பயிற்சி பெறுவோருக்கு ஓர் ஆண்டில் 10 மாதக்கால அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 40 பேணுதல்படி அளிக்கப்படும்.
விலங்கின மருத்துவம்	(i) கல்விக் கட்டணமும் சிறப்புக் கட்டணங்கள் அனைத்தும் (ii) முழு படிப்பிற்கும் ரூ. 1,000 புத்தகப்படி. (iii) கல்வி நிறுவனங்களில் தங்கியிருந்து கல்வி கற்போருக்கு ஓர் ஆண்டில் பத்து மாதக்கால அளவுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 40 பேணுதல் படி அளிக்கப்படும்.

8. போரில் உயிரிழந்த அல்லது ஊனமுற்ற படைவீரர்களின் பிள்ளைகளுக்கு, இம்மாநிலத்தில் ஹரிஜன நலத்துறை வைத்துவரும் அரசாங்க விடுதிகளில், பின்னிலே வகுப்புகளுக்கு ஒதுக்கியுள்ள இடங்களில் இடம் அளிப்பதில முற் சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் இந்த விடுதிகளில் சேரத் தகுதி உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 19th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கவரப்பட்டு—தில்லைநாயகபுரம் ஜீப் பஸ்

* 347 கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், கொள்ளிடக்கரையிலுள்ள கவரப்பட்டிலிருந்து, வல்லம்படுகை, கருப்பூர் வழியாக தில்லை நாயகபுரம் வரையில் ஜீப் பஸ் விடும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

Express buses between Madurai and Cochin

* 348 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal before the Government to run Inter-State Express buses between Madurai and Cochin ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Chairman of the Kerala State Road Transport Corporation has now informed that they are not agreeable to the opening of the above inter-State route.

திரு. வை. சங்கரன் : இதுபோன்று மதுரையிலிருந்து கிருஷ்ணகிரி போகும் ரூட்டை பெங்களூர் வரை நீட்டுவதற்கு மைசூர் அரசாங்கத்துடன் நமது அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறதா? அப்படியிருந்தால் அது எவ்வளவு தூரம் பலன் அளித்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[19th March 1966

திரு. மீ. கலியாணசுந்தரம் : கேரள அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியதில் வைத்த யோசனை என்ன? நம்முடைய ராஜ்யத்திலிருந்து அவர்களுடைய ராஜ்யத்திற்கு எவ்வளவு பஸ்கள் ஓடுகிறதோ அதேமாதிரி அவர்களுடைய ராஜ்யத்திலிருந்து நம்முடைய ராஜ்யத்திற்கு விடவேண்டுமென்று பேச்சு வார்த்தை நடந்ததா? அவர்கள் மறுப்பதற்கு உரிய காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னை ராஜ்யத்திற்கும் கேரள ராஜ்யத்திற்கும் போக்குவரத்து சம்பந்தமாக ஒரு அக்ரிமெண்ட் இருக்கிறது. அந்த அக்ரிமெண்ட் பிரகாரம் எந்த ஒரு ரூட்டை எடுத்துக்கொண்டாலும் அந்த ஒரு ரூட்டில் ஈக்வல் நம்பர் ஆஃப் பஸஸ், சமமான பஸ்கள் இரண்டு பேரும் விடவேண்டும் என்று இருக்கின்றது. ஈக்வல் நம்பர் என்று சொல்லுகின்றபோது நம்பரைப் பார்த்து ஈக்வல் என்று சொல்லவில்லை. மைலேஜ்-ஐப் பார்த்துத்தான் ஈக்வல் என்று சொல்லவேண்டும். உதாரணமாக சென்னை ராஜ்யத்தில் மூன்றில் இரண்டு மடங்கு ரூட்டு இருக்குமானால் நமக்கு இரண்டு பஸ்கள் அவர்களுக்கு ஒரு பஸ் இருக்கும். அதற்கு மாறாக அவர்களுடைய பகுதியில் மூன்றில் இரண்டு பங்கு ரூட்டு இருக்குமானால் அவர்களுக்கு இரண்டு பஸ்களும் நமக்கு ஒரு பஸ்ஸும் இருக்கும். இது இரண்டு பேரும் ஒத்துக்கொண்டது. அதே பாரிடியிலே நாம் மதுரையிலிருந்து கேரளா வரை பஸ் ரூட்டை விடலாம் என்று யோசனை கூறினோம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக திருச்சூரிலிருந்து பழனி வரையிலும் விடலாம் என்று சொன்னார்கள். பெரிய ரூட்டாக இருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்ற காரணத்தாலே மதுரையிலிருந்து கொச்சி வரை விடவேண்டுமென்று சொன்னோம். இது திருச்சூர் பழனி எல்லாவற்றையும் கவர் செய்துகொண்டுபோகும். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மதுரையிலிருந்து கொச்சிக்கு எந்த மார்க்கத்தில் விடுவதாக யோசனை செய்யப்பட்டது என்ற விவரத்தை அறியலாமா?

THE HON. SRI R. VENKATARAMAN : We have said about Madurai–Tiruchur route which will cover the route which they have already mentioned. It will go to Tiruchur via., Palni.

திரு. வை. சங்கரன் : கேரள அரசாங்கம், எந்த டெஸ்டினேஷனிலிருந்து எந்த டெஸ்டினேஷன் வரை போவது என்பது சம்பந்தமாக வேறுபட்ட ஆலோசனை சொன்னார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாரிடி சம்பந்தமாக அக்ரிமெண்ட் இருக்கிறது. இதனால் வேறுபாடில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மதுரையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கு வழியாக கேரள ராஜ்யத்திற்கு செல்லக்கூடிய ரூட்டுகள் ஆலோசிக்கப்பட்டனவா? அதற்காவது சம்மதம் தெரிவித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

19th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுவரையிலும் அவர்கள் ஒரு சம்மதமும் தெரிவிக்கவில்லை. பல யோசனைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட யோசனை இருக்கிறதா என்று சொல்லமுடியாது. நாம் தமிழ்நாட்டிலிருந்து கேரள ராஜ்யத்திற்குப் போகக்கூடிய ரூட்டுகளைச் சொல்லியிருக்கிறோம்.

சாலை விபத்துக்கள்

* 349 **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாலைப் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க புதிய திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A statement[a] is placed on the Table of the House.

திரு. செ. மாதவன் : இந்த விபத்துக்கள் ஏற்படுவதற்கு மொஃபசலைப் பொறுத்தவரை ரோடில் தார் போடப்பட்ட பகுதி மிகவும் குறுகிய பகுதியாக இருக்கிறது, மற்ற பகுதி அதிகமாக இருக்கிறது. லாரிகள் ஹார்ன் கொடுத்தால் கேட்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டு மற்ற ஆலோசனைகளோடு சேர்த்துப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரோடுகளை விஸ்தரிப்பது கூட ஒரு ஆலோசனை. நிதி வசதி எவ்வளவு அனுமதிக்கிறதோ அதைப் பொறுத்திருக்கிறது. ஹார்ன் கொடுப்பதைப்பற்றி பல முறை கலந்தாலோசிக்கப்பட்டது. பின்னால் ஹார்ன் கொடுத்தால் கேட்கும்படியாக லவுட் ஸ்பீக்கர், மைக்ரோஃபோன் போன்ற எக்விப்மெண்டுகள் வைக்கலாமா என்று யோசனை செய்தோம். இந்த மாதிரி செய்தால் டிரைவர்களுடைய அடென்ஷன் டைவர்ட் ஆகிவிடும். பின்னால் என்ன சத்தம் கேட்டாலும் அது ரிஃப்லெக்ட் ஆகிவிடும். இந்த விபத்துக்களைத் தடுப்பதற்குப் பதிலாக அதிகப்படுத்திவிடும் என்று அஞ்சித்தான் அப்படிச் செய்யவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : There is a Highways Research Station in Guindy where research in road accidents is also done. May I know whether there is co-ordination between this Highways Research Station and the Traffic Department ?

THE HON. SRI R. VENKATARAMAN : I would like to have a separate question. I do not know in what manner they are co-ordinating.

புலவர் கா. கோவிந்தன் : சென்னையிலே மவுண்டு ரோடு புகாரி ஹோட்டலுக்கு வருபவர்கள் காரிலேயே இருக்கிறார்கள். காருக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு வேண்டிய சிற்றுண்டிகளை வழங்குகிறார்கள். அதனால் கூட்டம் சேருகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் வழி செய்யுமா?

---

a Printed as Appendix on page 7

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் அவர்கள் இது சம்பந்தமாக ஆலோசனை எழுதி அனுப்பினால், டிராஃபிக் கமிட்டி ஒன்று இருக்கிறது, அந்தக் கமிட்டியில் வைத்து இதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. செ. மாதவன் : கார் ஓட்டுவதற்குப் பயிற்சி கொடுப்பது சம்பந்தமாக அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்று யோசனை கூறப்பட்டதே, இப்பொழுது தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய டிரைவிங் ஸ்கூல்ஸ் அதிகமாக ஏற்பட்டிருப்பதால், அப்படிப்பட்ட பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது விதி முறைகள் இருக்கின்றனவா? அல்லது அம்மாதிரி விதிமுறைகள் இயற்றுவதற்கு யோசனை உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தப் பள்ளியில் படிக்க வேண்டும் என்று விதி ஒன்றும் கிடையாது. ஆனால், லைசென்ஸ் கொடுப்பதற்கு முன்னால் டிரைவிங் டெஸ்டு வைக்கிறார்கள். அந்த டெஸ்டை பாஸ் செய்துவிட்டால் எந்தப் பள்ளியில் படித்தார்கள், படித்தார்களா, படிக்கவில்லையா என்று கேட்கவேண்டிய அவசிய மில்லை. இந்த டெஸ்டை இன்னும் கடுமையாகச் செய்ய வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. ஆனால், இந்தப் பள்ளிகள் சம்பந்த மாக, சர்க்காரே ஏதாவது பயிற்சி அளிக்க முடியுமா என்பதையும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

கள்ள நோட்டுகள்

*350 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நவம்பர் திங்களில் மதுரை மாவட்டம் திண்டுக்கல்லில் கள்ள நோட்டுகள் ஓடும் காரிலிருந்து கைப்பற்றப்பட்டனவா?

கனம் திரு. பூ. கக்கன் : ஆம்.

திரு. இராம. அரங்கண்ணல் : கள்ள நோட்டுகள் புழக்கம் அதிக மாக இருக்கிற காரணத்தினால், கள்ள நோட்டுகள் அடிப்பதற்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்களைக் கண்டு பிடிப்பதற்கும் அவர்களைத் தண்டிப்பதற்கும் தீவிர கவனம் செலுத் துவதில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் தீவிர கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? அவர்களுள் பஞ்சாயத்து யூனியன் தலைவரும் ஒருவரா?

கனம் திரு. பூ. கக்கன் : மொத்தம் 11 பேர்கள் பேரில் கேஸ் இருக்கிறது. இதில் 9 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இரண்டு பேர்கள் மட்டும் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிலே பஞ்சாயத்து யூனியன் சேர்மனும் ஒருவரா என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. மு. கருணாநிதி : கைப்பற்றப்பட்ட கள்ளநோட்டுகள் எத்தனை ரூபாய் நோட்டுகள்? எவ்வளவு பெறுமானமுள்ளவை அப்படி கள்ளத்தனமாக அடிக்கப்பட்ட நோட்டுகள்? கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : போலீஸ் இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்துவிட்டது. The car was also searched and a suit-case was found containing 3,970 forged ten-rupee currency notes in 44 bundles. எல்லோரும், பார்த்தவுடன் ஓடிப்போய்விட்டார்கள். இராமலிங்கம் என்ற ஒருவர் தான் அகப்பட்டுக்கொண்டார். அவரிடமிருந்து 1,026 பத்து ரூபாய் ஃபோர்ஜ்டு நோட்டுகள், திருட்டு நோட்டுகள் அகப்பட்டன. அதுவும் அரசாங்கத்தினிடத் தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கால்நடை நோய்

*351 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ராணிப்பேட்டை கால்நடைகளுக்கான ஆராய்ச்சி நிலையத்தில், கால்நடைகளுக்கு வரும் கோமாரி, தொம்மை நோய் சம்பந்தமாகப் புதிய மருந்துகள் கண்டுபிடிக்க முயற்சிகள் ஏதேனும் நடத்தப்பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) &(இ) கால்நடைகளைக் கோமாரி நோயினின்றும் பாதுகாக்கத் தற்போது இந்த நிலையத்தில் எந்த அம்மைப் பாலும் தயாரிக்கப்படவில்லை. இந்த அம்மைப்பால் முக்தேஸ்வரில் உள்ள இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்படுகிறது. ஆயினும், இராணிப்பேட்டை யில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையம் தெலுங்கில் "தொம்மை நோய்" எனப்படும் "ஆன்த்ராக்ஸ்" நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கான அம்மைப்பால் தயாரிக் கிறது. தெலுங்கில் "தொம்மை நோய்" எனப்படும் "ஆன்த்ராக்ஸ்" நோயைத் தடுக்க புதுடெல்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் முன்னிலும் சிறந்த அம்மைப்பாலை உருவாக்கவும் இந்த நிலையத்தில் ஆராய்ச்சித் திட்டம் நிறைவேற்றப் பட்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கால்நடைகளுக்கு வரும் இம்மாதிரி வியாதிகளைத் தடுப்பதற்கு, "தொம்மை நோய்" அல்லாத வேறு வியாதிகளைத் தடுப்பதற்கு ராணிப்பேட்டை கால்நடைகளுக்கான ஆராய்ச்சி நிலையத்தில் வேறு புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : தொம்மை நோய் என்பதற்கு ஆங்கிலத்தில் 'ஆன்த்ராக்ஸ்' என்ற பெயர் இருக்கிறது. அதற்கும் குறிப்பாக ராணிப்பேட்டை நிலையத்தில் தயாரிக்கப்படுகிற மருந்து உபயோகப்படுத்தப்படும். கால்நடைகள், ஆடு, மாடு களுக்கு வரும் இந்தத் தொம்மை நோய் சம்பந்தப்பட்ட மட்டும் அங்கு எந்த மருந்துகள் தயாரிக்கப்பட்டு, உதவி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Foodgrains control

* 352 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the steps taken to enforce the maximum whole-sale and retail prices fixed for the Andhra and Madras varieties of rice in the orders of the Government of India promulgated on 31st July 1964 : and

(b) the steps taken for un-earthing hoarded stocks of rice and other food grains?

The Hon. Sri V. RAMAIAH : (a) A Civil Supplies Intelligence Cell has been formed under the charge of Deputy Inspector-General of Police (C.I.D.). The Civil Supplies Organisations have been strengethened to enforce the price control orders vigorously.

(b) The Government have issued an order called the Madras Paddy and Rice (Declaration and Requisitioning of Stocks) Order 1964 according to which every person who is in possession of more than 40 quintals or more of paddy or 25 quintals or more of rice is obliged to declare his stocks to the authorised Officer in the form prescribed in that order. Under the same order, powers have also been delegated to the Commissioner of Civil Supplies, Secretary to the Commissioner of Civil Supplies, District Collectors, District Supply Officers and Revenue Divisional Officers to requisition paddy or rice by an order in writing, require any person, holding any stock of paddy or rice or both, within his jurisdiction to sell the whole or a specified part of the stocks at the controlled price to the Government or to an officer or agent of the Government as may be specified in the order, in accordance with such requisition.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உப கேள்வி கேட்பதற்கு முன்பு ஒரு விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இந்தக் கேள்வி முதன் முதலில் போடப்பட்டது 1—8—1964-ம் தேதியன்று. பதினெட்டு மாதங்கள் கழித்து ஆன்ஸர் வருகிறது. இதை இரண்டு தரம் ரென்யூ பண்ணியிருக் கிறேன்.

Mr. SPEAKER : So, the question lapsed and it was renewed.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அசெம்ப்ளி ப்ரோரோக் ஆனதால் லாப்ஸ் ஆகிவிட்டது. திரும்பவும் அப்படி இரண்டு தரம் ரென்யூ பண்ணியிருக்கிறேன். பதில் அனுப்புவதற்கு பூராவும் 18 மாதங்கள் ஆகிவிட்டது என்று சொல்லவில்லை. பதினெட்டு மாத

காலம் ஓடியிருக்கிறது. ஆன்ஸர் வந்திருந்தால் லிஸ்டில் சேர்த்து விடுவார்களே? ஆன்ஸர் வாராததினால் தான் ப்ரோரோக் ஆனதும், லாப்ஸ் ஆகி, திரும்பவும் நான் ரென்யூ பண்ணவேண்டியிருந்தது.

கனம் சபாநாயகர் : இன்றைக்கு சபை கவனிக்கவேண்டிய வேறு அலுவல் இருக்கிறது. டைம் ஆகிறது. ஆகையால் நாம் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் இதை சபாநாயகர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதற்கு அடுத்த கேள்வி 28-9-1964-ல் கொடுத்தது. இப்பொழுது ஆன்ஸர் வருகிறது. கிட்டத்தட்ட 14 மாதங்கள் கழித்து ஆன்ஸர் வருகிறது.

Mr. SPEAKER : Does the hon. Member think that the answers are not very much useful at the present moment?

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலைப் பார்த்தால் டிஸ்ட்ரிக்ட்களிலிருந்து அதிக மாகத் தகவல் சேகரிக்க வேண்டிய பதிலாக இல்லை. அப்படி யிருந்தும் இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகவேண்டும்? செக்ரடேரியட் ஃபைல்களில் இருந்துதான் தகவல் சேகரிக்க வேண்டியிருந்திருக்கும்; பல டிஸ்ட்ரிக்ட்களிலிருந்து தகவல் சேகரிக்கவேண்டியதில்லை. இதற்கு ஏன் 18 மாதம் தாமதம் ஆக வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

Mr. SPEAKER : Yes, the Hon. Minister will take note of all the arguments of the hon. Member.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் உணவு தான்யங்களை பதுக்கிவைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற விவரங்களைப்பற்றிக் கூறினார்கள். அந்தச் சட்டப்படி இதுவரையில் எத்தனை பேர்கள் பதுக்கி வைத்திருந் தார்கள் என்று பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்? ஏதாவது வழக்குப் போடப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : எத்தனை பேர்கள் பிடிக்கப் பட்டார்கள், எத்தனைப் பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது என்பதற்கான விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. என்னிடம் இருக்கக்கூடிய தகவல்—

A sizable quantity of stocks have been seized, the cost of which approximately works out to Rs. 10 lakhs.

Mr. SPEAKER : The hon. Member can renew the question if he wants details or he can put a separate question.

* 353 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the approximate requirements of Andhra rice for Madras City each month; and

[19th March 1966

(b) the steps taken by the Government for regular supply of Andhra rice?

THE HON. SRI V. RAMAIAH : (a) 5,000 tonnes per month.

(b) The Government of India agreed to supply one lakh tonnes of Andhra rice during 1965. A quantity of 58,000 tonnes of rice was accordingly received from Andhra from January 1965 to November 1965. Due to the failure of monsoon, the Andhra Government were not in a position to move the balance. The position was reviewed in December 1965, and since it was considered that no useful purpose would be served in pressing the Andhra Government for moving the balance due, the matter was treated as closed.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், கனம் அமைச்சரவர்கள் ஆந்திராவிலேயிருந்து அரிசி கொடுப்பதாக இருந்ததில் பாதிதான் வந்திருக்கிறது, அதையும் கைவிட்டு விடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். அப்படியென்றால், அங்கே உணவு உற்பத்தி குறைந்திருக்கிறதா அல்லது அவர்கள் கையாளும் கொள்முதல் முறையில் ஏதாவது கோளாறா? அப்படி என்றால், மீண்டும் மத்திய சர்க்காரோடு ஆலோசனை செய்து, வற்புறுத்தி நமக்கு வரவேண்டியதைப் பெற முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister of this State cannot answer a question about the defect, if any, in the administration or procurement in the Andhra State.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்படியானால், கவர்ன்மென்டுக்கு கவர்ன்மென்ட் ப்ரொக்யூர் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் போட்ட உத்தரவின் நோக்கம் என்ன ஆவது?

கனம் திரு. வெ. ராமையா : நம் அரசாங்கம் அரிசி இல்லை யென்று அந்த கவர்ன்மென்டிடம் போகவேண்டியதில்லை. ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்தம் மத்திய சர்க்காரோடு. ஆகவே, இதிலே கவர்ன்மென்டுக்கு கவர்ன்மென்டு என்கிற சமாசாரம் ஒன்றும் இல்லை. குறிப்பிட்ட அளவு அவர்கள் கொடுக்கிறார்கள். மொத்தமும் அவர்களால் கொடுக்க சாத்தியம் இல்லை.

* 354 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government obtained ratification of the Government of India for the Madras Paddy and Rice Movement Control Order, 1965 issued in January 1965; and

(b) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) 11th June 1965.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பாதுகாப்பு விதிகளின் மூன்றாவது அமெண்ட்மெண்டுக்குப் பின்னால் இந்த ஆர்டர் போட்டிருக்கிறது. ஏற்கனவே போடப் பட்டிருந்தால், 30 நாட்

19th March 1966]

களுக்குள்ளாக அனுமதி வாங்கவேண்டும் என்று திருத்தம் வந்திருக்கிறது. அந்தத் திருத்தப்படி இந்த சர்க்கார் அனுமதி வாங்கவில்லை என்று சமீபத்திலே நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கியிருப்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டதா?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மூன்றாவது திருத்தத்திற்குப் பிறகு 30 தினங்களுக்கு முன்பு உத்தரவு போட்டிருந்தால் அதற்கு மத்திய சர்க்காரிடம் அனுமதி பெறவேண்டும். அந்த அடிப்படையில் நாம் வாங்கிவிட்டோம். முப்பது நாட்களுக்குள்ளே மத்திய சர்க்காருடைய அனுமதி கிடைத்து விட்டது. ஆனால், அந்த வழக்கு நடக்கும்போது, கெஜெட்டு நோடிஃபிகேஷன் ஆனது பற்றி, தகவல் சம்பந்தப்பட்ட நீதிபதிக்குச் சேர்க்கப்படுவதில் குறைபாடுகள் இருந்திருக்கின்றன.

Polishing of rice

* 355 Q.—SRI S. NANJUNDA ROW : } SRI K. CHEEMAICHAMY : } Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal under the consideration of the Government to prevent fine polishing of rice in rice mills, in view of the acute shortage of rice?

THE HON. SRI V. RAMAIAH : Rule 7 of the Rice Milling Industry (Regulation and Licensing) Rules, 1959, prohibits the licensee from removing more than 5 per cent or less than 3 per cent of bran from the paddy in a rice mill.

SRI S. NANJUNDA ROW : Sir, at present all the rice millers are polishing rice up to 10 per cent. So, will the Government set up a special agency to enforce the rule that ricemillers should not polish the rice beyond the prescribed percentage?

THE HON. SRI V. RAMAIAH : I do not think I have received any complaint about the polishing of rice upto 10 per cent. Now, we are taking steps to see that the prescribed percentage is adhered to.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, generally the hullers are not in a position to restrict the polishing of rice. So, will the Government consider the desirability of allowing the shellers to do this polishing as it would be more useful, in that they do not polish the rice to the maximum extent?

THE HON. SRI V. RAMAIAH : I do not know the difficulty in regard to this matter. If the hon. Member writes to me about this matter, I will look into it.

[19th March 1966

திட்டக்குடி நகர பஞ்சாயத்து

* 356 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம், திட்டக்குடி நகர பஞ்சாயத்தில் தற்காலம் இருந்துவரும், நிர்வாக அதிகாரியின் நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல் குறை, மோசடி புகார்களின்பேரில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் முடிவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் மேல் சில புகார்கள் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்துள்ளன. அவை பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஒரு அதிகாரி மீது ஒரு புகார் எழுப்பினால், அந்த அதிகாரியை அங்கேயே வைத்துக்கொண்டு புகாரை விசாரிக்கிறார்களே, அதனால் நியாயத்தைக் கண்டு பிடிக்க முடியாது என்பதால், அப்படிப்பட்ட அதிகாரியை மாற்றிவிட்டு புகாரை விசாரித்தால் நலமாக இருக்கும் என்பதை சர்க்கார் கவனிப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அந்த அதிகாரி ஏற்கனவே மாற்றம் செய்யப்பட்டுவிட்டார்.

பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்புகள்

* 357 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளில் நடைபெறும் உடற்பயிற்சி வகுப்புகளின் போது உபயோகப்படுத்தும் உத்தரவுகள் ஹிந்தியிலேயே இனி சொல்ல வேண்டுமென்று திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) & (இ) பள்ளிகளில் நடைபெறும் "தேசீய உடற்பயிற்சிப்படை" வகுப்புகளில் பயன்படும் ஆணைச் சொற்கள் மட்டுமே ஹிந்தியில் இருக்கும். விளக்க உரைகள், போதனை மொழியைப் பொருத்து ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ இருக்கும்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆங்கிலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட சொற்கள், இந்தியில் சொல்லவேண்டும் என்று வற்புறுத்தப்படுவதால், எங்களுடைய தமிழ் உணர்ச்சி பாதிக்கப்படுகிறது என்று மாணவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்களா? அப்படித் தெரிவித்திருந்தால், அதன் மீது எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

19th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திடீரென்று இது மாற்றப்படவில்லை. 'கமான்ட்ஸ்', ஆணைச் சொற்கள் மட்டும், அகில இந்தியாவிற்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்று, ஆங்கிலத்தை விட்டு, நாட்டிலே தேசீய மொழியான இந்தியில், 'கமான்ட்' தான் இருக்கும், 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' தமிழிலேயே இருக்கும் என்று நானே சொல்லியிருக்கிறேன். அது ஆங்கிலத்திலும் இருக்காது. இந்தியிலும் இருக்காது.

N.C.C. Training

* 358 *Q.*—SRI V. SANKARAN: SRI S. MADHAVAN: } Will the Hon. the Chief Minister be pleased to state the ways and means proposed to be adopted for the strict and compulsory enforcement of N.C.C. training in Colleges?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Instructions have already been issued that students to whom the compulsory N.C.C. training is applicable should put in a minimum of 75 per cent attendance at parades to qualify themselves for taking their annual final academic examinations.

திரு. செ. மாதவன்: இந்தக் கட்டாயப் பயிற்சி அண்மையில் ஏற்பட்ட யுத்த நெருக்கடி காரணமாகக் கொடுக்கப் பட்டது. மாணவர்களுக்கு அதை நிரந்தரமாக அளிக்க சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நெருக்கடி நிலை நாட்டிலே ஏற்பட்ட பிறகு இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர்கள் மட்டுமல்லாமல், மாணவிகளும் இந்த என்.ஸி.ஸி. பயிற்சி வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது மாணவ மாணவிகளுக்கு நல்லது என்று கருதப்படுகிறது. கட்டாயமாகவே பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அது தாற்காலிகமானது என்று சொல்லவில்லை.

திரு. வை சங்கரன்: அடுத்த ஆண்டிலிருந்து, தொழில் இயல், பொறி இயல், விஞ்ஞானக் கல்லூரிகளில் சேர வேண்டியவர்கள், தீவிரமாகப் படிக்க வேண்டியிருப்பதால், பி.யூ.ஸி. வகுப்பில் படிக்கிறவர்களுக்கு அவர்கள் விரும்பினால் விதிவிலக்கை அளிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கடைசி ஆண்டு, பி.யூ.ஸி. முதலிய வகுப்புகளில் இருப்பவர்களுக்கு எடுத்துவிடலாம் என்கிற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

Concessions to poor students

* 359 *Q.*—SRI V. SANKARAN: SRI S. MADHAVAN: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government to provide free clothes, free books and free boarding and lodging to poor students in the State; and

[19th March 1966

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) There is already a programme to organise in a concerted manner free supply of clothing to poor children. A further development in the scheme is that free clothing to children should consist of school uniform. The Government have already sanctioned the scheme of free mid-day meals for elementary school children with financial assistance. There is a proposal under the consideration of Government for the supply of free books to poor pupils from 1966–67. There is no proposal to provide free boarding and lodging to poor students.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், ஏழை மாணவர்களுக்கு மட்டுமன்றி, எல்லோருக்குமே கல்லூரிப் படிப்பு வரை இலவசமாகப் பாடப் புத்தகங்கள் கொடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் காமராஜர் சொல்லி இருக்கிறாரே, அந்தக் கருத்தைப் பரிசீலனை செய்து, அதன் மீது என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: காங்கிரஸ் தலைவர் கூறுகிற சீரிய கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அவ்வப்பொழுது பரிசீலனை செய்து, எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியும் என்று பார்த்து அந்த அளவுக்கு அவற்றில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. அவர்களுடைய கருத்துக்கள்பற்றி கனம் உறுப்பினர் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அரிஜன மாணவர்களுக்கு இலவசப் புத்தகம் அளிப்பது என்பது தொடக்கப் பள்ளியில் மட்டுமா, அல்லது உயர்நிலைப் பள்ளியிலும் இலவசப் புத்தகம் அளிக்கத் திட்டம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது அரசாங்கம் முடிவு செய்திருப்பது, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருப்பது போல, முதல் மூன்று வகுப்புகளில் ஏழை மாணவர்களுக்கு, ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு பெறும் குழந்தைகளுக்கு ஏப்ரல் ஒன்றும் தேதி முதல், இலவசமாகப் பாடப் புத்தகம் அளிப்பது என்பதுதான்.

-00 a.m. **திரு. வை. சங்கரன்:** இப்பொழுது இல்லாவிட்டாலும் நிதி வசதி பெருகின பின்னராவது கவனிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நல்ல காலம் பிறக்கும் என்றுதான் நம்புகிறோம். நிதி நிலைமை அபிவிருத்தி ஆனாலும், இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது. செய்தது சிறிய அளவுதான். அதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆகையால், கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைத்தால், எந்த வரிக்கும் ஒரு ஆட்சேபணை செய்வது என்ற கொள்கையைக் கைவிட்டு விட்டால், இன்னும் நிதி நிலைமை சீராகும்; இன்னும் பல நல்ல காரியங்கள் முக்கியமாக ஏழைக் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் செய்யலாம்.

19th March 1966]

Seminars on Planning

* 360 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have any proposal to organise regional seminars on planning for students in the State; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Regional Seminars of Planning Forums have been held as follows:—

13th and 14th November 1965 at Presidency College, Madras.

29th and 30th January 1966 at Madurai.

5th and 6th February 1966 at Tiruchirappalli.

19th and 20th February 1966 at Coimbatore.

22nd and 23rd February 1966 at Tirunelveli.

திரு. செ. மாதவன்: அக்கருத்தரங்குகளில், ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களையோ அல்லது தீர்மான முறையிலோ அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்திருக்கிறார்களா? அல்லது, அரசாங்கத் திட்டத்திலே ஏதாவது குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்களா? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாணவர்களைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சியினராக விளங்குவதில்லை; மாணவர்கள் குறைபாட்டைப் பார்த்துக்கொண்டிருப்பது இல்லை. நான் பார்த்த வரைக்கும் இதுதான் நிலைமை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். திட்டத்தைப்பற்றி முக்கியமாக மாணவர்கள் அக்கறை கொள்ளுகிறார்கள். இந்தக் கருத்தரங்கிலே மாணவர்கள் உற்சாகத்தோடு, சூட்சும அறிவோடு, அக்கறையோடு பங்கெடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்தக் கருத்தரங்கு மாணவர்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கிறது என்று நாம் உணர்ந்திருக்கிறோம். மாணவர்களும் உணருகிறார்கள்; வரவேற்கிறார்கள். இந்தத் திட்டக் கருத்தரங்குகளைக் குறித்துப் பரிசீலனை செய்வதற்காக, மாநில ரீதியில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஆசிரியர்கள், ப்ரின்ஸிபால்கள், மாணவர்கள், மற்றவர்கள் இருக்கிறார்கள். சிறந்த வகையிலே இது பணியாற்றி வருகிறது.

புலவர் கா. கோவிந்தன்: இந்தக் கருத்தரங்கிலே திட்டங்களை விளக்கிச் சொல்வதற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே செல்கிறார்களா? எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இடம் இல்லாமல் இல்லை. ஆனால், எதிர்க் கட்சிக்காரர்கள் என்று நினைத்துக் கொண்டு அங்கே போனால் காரியம் கெட்டுப் போய்விடும். அதையும் அரசாங்கம் மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

[19th March 1966

திரு. வை. சங்கரன் : இந்தக் கருத்தரங்கில் ஈடுபட்டு, நன்றாகச் செயல்படும் மாணவர்களுக்குப் பிற்காலத்தில், நாட்டில் சேவைக்குப் பயன்படும் வகையில், ஏதாவது ஊக்கமோ சலுகையோ அளிக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்களே உணருகிறார்கள். இதிலே அக்கறை எடுத்துக்கொண்டால், பின்னால் அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதை உணர்ந்து தான், இதிலே அக்கறை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

Penalty on students failing in examination

* 361 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have any proposal to levy penalty fee on students in Secondary School classes who fail more than once; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BRAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) A penalty fee of Rs. 30 will be collected in future, from those students in standards IX to XI who fail more than once in a standard. The amount will be collected in three equal instalments which will be payable before 31st July, 30th November and 28th February of the particular academic year.

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT.

DISCUSSION FOR SHORT DURATION ON THE ORDER SERVED ON SRI UMANATH, M.P. ON PAROLE.

MR. SPEAKER : Hon. Members are aware that we will be having a discussion under Rule 57 between 1 p.m. and 2 p.m. to-day. In that connection I would like to make a few suggestions for the benefit of the hon. Members. How long would the hon. Deputy Leader of the Opposition require?

SRI M. KARUNANITHI : Sir, I may require about fifteen minutes for my speech during the discussion under Rule 57.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may require fifteen minutes and some members from our side also would like to talk.

MR. SPEAKER : All right. I allot half an hour for each side, fifteen minutes for the hon. Member who raises the matter and initiates the discussion and fifteen minutes for reply by the Hon. Chief Minister.

SRI RAMA. ARANGANNAL : I may require only ten minutes, Sir.

19th March 1966]

MR. SPEAKER : For the Opposition I allot half an hour and for Government side I allot half an hour. With that half an hour each side may decide about the number and name of speakers.

SRI C. CHIRANJEEVULU NAIDU : For ' Independent ' Members also, the Hon. Speaker may kindly give a chance.

MR. SPEAKER : ' Independents' may have a chance if there is time. I want to remind hon. Members that in the course of the discussion under Rule 57, the main crux of the question is the propriety or impropriety of the order and not whether it has been considered as a breach of privilege or not in the Lok Sabha. The main crux of the question is whether this Government is justified in passing the order and whether a grievous error has been committed. Hon. Members need not discuss about breach of privilege and what all happened in the Lok Sabha. Hon. Members may kindly bear this in mind and prepare their points for the discussion.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

DEMAND NO. III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move —

" That the Government be granted a sum not exceeding Rs. 1,15,79,600 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration."

திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, " நெருக்கடி நிலை காரணமாகப் போடப்பட்ட வரிகள் அனைத்தையும் நீக்க வேண்டும் என்பதை வற்புறுத்த " என்னும் என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரேபணையை நான் முன்மொழிகின்றேன் :—

" That the allotment of Rs. 1,15,79,600 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

May I suggest to the hon. Deputy Leader of the Opposition that if the Opposition wants to press for a division under this Demand, we have to start the same at 12-45 p.m. Because, the division should not interfere with the discussion under Rule 57, scheduled to start at 1 p.m. today. If hon. Members belonging to the Opposition want to press for a division, they may indicate that to me before fifteen minutes to 1-00 p.m. Otherwise, I will take only a voice vote and decide.

* திரு. பி. வி. ஸ்ரீராமுலு : கனம் தலைவர் அவர்களே, விற்பனை வரி மானியத்தின் மீது எனது கட்சி உறுப்பினர் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன்.

விற்பனை வரியைப்பற்றிக் கூறும்போது, சென்ற ஆண்டு 33 கோடி ரூபாய் வந்திருக்கிறது என்று இந்த மன்றத்திலே புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 46 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் குறிப்பாக 13 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது என்றால், சென்ற ஆண்டு மத்தியிலே தேசீய நெருக்கடியின் காரணமாக உயர்த்தப்பட்ட வரியைப் பார்க்கும்போதும், சென்ற ஆண்டு விற்பனை வரிக் கமிஷனரால் கொண்டுவரப்பட்ட திட்டங்களின்படி வந்ததைப் பார்க்கும்போதும், 13 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது. ஆனால், அத்தனை கோடி ரூபாய் உயர்ந்திருந்தும் கூட, அதற்காகக் கேட்கப்பட்ட மானியத்தைப் பார்க்கும்போது, ஒரு கோடி 16 லட்சம் ரூபாய் தான் ஆகிறது. அதைப் பார்த்தால், மூன்று சத விகிதத்திற்கும் குறைந்ததாக இருக்கிறது. இவ்வளவு வரி வசூல் செய்தும் கூட, நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு அந்த இலாகா உதவி செய்திருக்கிறது என்பதைப் பார்க்கும் போது, அந்த ஆபீஸ்களில் சென்றாலும் சரி, அந்தப் பக்கத்திலே இருக்கும் வியாபாரிகளிடத்திலே சென்றாலும் சரி, அதிகாரிகள் மரியாதைக் குறைவாகவும், கவனக் குறைவாகவும் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைப்பற்றி நான் கூற முற்படுகிறேன். வியாபாரிகளுக்கு அதிகாரி சம்மன் போட்டுவிடுகிறார். குறிப்பிட்ட ஒரு தேதியை நிர்ணயித்து, அந்தத் தேதியில் எங்களிடத்தில் வந்து பார்க்க வேண்டும் என்று சம்மன் போட்டு விடுகிறார். ஆனால், அங்கு போனால் அதிகாரி இருப்பதில்லை. சம்மன் போட்டு விட்ட காரணத்திற்காக, காலை 11 மணியிலிருந்து இரவு 12 மணி, ஒரு மணி ஆனாலும் சரி, அதிகாரி வந்த பிறகுதான், கேட்டுவிட்டுப் போகவேண்டும் என்ற விதி இருக்கிறது. அப்படி அதிகாரிகள் ஏதாவது வெளி ஊருக்குச் செல்லவேண்டும் என்று அவர்கள் ஏற்கெனவே டூர் ப்ரோக்ராம் போட்டிருந்தும் கூட, எந்த எந்த நாட்களில் எந்த எந்த ஊர்களில் செல்லவேண்டும் என்ற நிபந்தனை இருந்தும் கூட வியாபாரிகளிடத்திலே அவர்கள் சுமுகமாக நடந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், வியாபாரிகளை வரச் சொல்லிவிட்டு, அவர்கள் வேறு அலுவல்களுக்குச் சென்று விட்டால், வியாபாரிகள் அந்த இடத்திலேயே தொல்லைப்பட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள்.

அதோடு கூட அந்த இலாகாவைச் சேர்ந்த அலுவலகத்தில் சென்று பார்த்தால் உட்காருவதற்குக் கூட இடம் இல்லை. டேபின் இல்லை. பெஞ்சும் இல்லை. வேதனைப்பட்டுக் கொண்டு அவரவர்கள் பகுதியிலேயே உட்கார்ந்து கொண்டு காரியங்கள் செய்ய வேண்டியது கஷ்டமாக இருக்கிறது. அதோடுமட்டும் அல்ல. விற்பனை வரியின் நோக்கத்தை நாம் பார்க்க வேண்டும். முதன் முதலாக இந்த மாநிலத்தில் தான் மதுவிலக்குக் கொண்டுவரப் பட்டது. அந்த மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்ததன் காரணத்தினால் இந்த மாநிலத்திற்கு வந்துகொண்டிருந்த பல கோடி ரூபாய் இழப்பை ஈடு செய்ய இந்த வரியைக் கொண்டு வந்து அரசாங்கத்தை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வரி

விதிக்காமல் ஆட்சி செய்ய முடியாது. ஆனால் வரி விதிக்க வேண்டிய முறையைப்பற்றிப் பார்க்கும்போது சற்று உன்னிப்பாக கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஓரளவு வரி போட வேண்டியது தான். வரியைவிட லாபம் பெரியதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றையதினம் இந்த அரசாங்கம் போட்டிருக்கிற விற்பனை வரி லாபத்தைவிட அதிகமாக இருக்கிறது.

குறிப்பாக, இன்றையதினம் ஒரு வியாபாரி 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய் லாபம் வந்தால் போதும் என்று வியாபாரம் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறான். அவனுக்கு நாம் 100 ரூபாய்க்கு எட்டணா வரி போட்டால் அவனால் சுலபமாகக் கட்டிவிட முடியும். இப்படி லாபத்தைவிட வரி குறைவாக இருந்தால் தான் நல்லமுறையில் அதை வசூல் செய்ய முடியும். அதைவிட்டு நாம் இன்றைக்கு 3 சத விகிதம் வரி போடுகிறோம். லாபத்தைவிட வரி அதிகமாக இருக்கும்போது அதை அவர்களால் கட்டமுடிவதில்லை. வரி வசூலாகாமல் போகிறது.

அதேபோல 'ஸி' பாரம் என்று இருக்கிறது, வேறு மாநிலத்தில் இருந்து இந்த மாநிலத்திற்குச் சரக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்கு வியாபாரிகள் ஆர்டர் கொடுத்தால் அதற்கு அவர்கள் 'ஸி' பாரம் பெறவேண்டும். அது மத்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கமாவது, அல்லது மாநில அரசாங்கமாவது ஒரே ஒரு வரி என்று போட்டால் பரவாயில்லை. மாநில சர்க்காரும் வரி போடுகிறார்கள். மத்திய சர்க்காரும் ஒரு வரியைப் போட்டுக்கொண்டு வியாபாரிகளை வற்புறுத்துகிறார்கள். குறிப்பாக நான் சொல்கிறேன். மத்திய பிரதேசத்தில் இருந்து ஒரு வாகன் சரக்கு ஒருவர் தருவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். 'ஸி' பார கண்டிஷன் இருக்கிறது. இரண்டு சத விகிதம் கட்டிதான் நேரில் சென்று சரக்கு வாங்கினதாகக் கணக்குக் காட்டி பில் போட்டு வாங்குகிறார்கள். 'ஸி' பாரம் வேண்டுமென்றால், 'ஸி' பாரத்தினுடைய கண்டிஷன், நடக்கும்படியான கொள்கையைப்பற்றி ஆராய வேண்டும். கண்டிஷன் 'ஸி' பாரம் வைத்துக்கொண்டு வியாபாரத்தில் 1 சத விகிதம் குறைக்க வேண்டுமென்று செய்தால், அங்குள்ள லோகல் டாக்ஸ் 2 சத விகிதம் வந்தால் மத்திய சர்க்காருக்குப் போகிறது. ஆனால் 'ஸி' பாரம் என்ற கண்டிஷனுக்கு வந்தால் நமக்கு பங்கு கிடைப்பதன் காரணமாக கிடைக்கும்படியான வரிகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். 'ஸி' பாரத்தைப் பொறுத்த வரையில் கண்டிஷன் இருந்தாலும் சர்க்காருக்குக் கிடைப்பதில்லை. இதைப் பற்றி மத்திய சர்க்காருக்கும் கூறி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 'ஸி' பாரத்தைப்பற்றி ஒன்று குறிப்பிடுகிறேன். விற்பனை வரி இலாகா ஒன்றை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். 'ஸி' பாரம்படி கேரள ஸ்டேட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஒருவர் ஆர்டர் கொடுக்கிறார், அந்த வியாபாரி கேரளத்தில் 'ஸி' பாரம் வைத்துக் கொண்டிருந்தவர். ஏதோ காரணத்தினால் 'ஸி' பாரம் ஆகிவிட்டது. சேல்ஸ் டாக்ஸ் ஆபீசருக்கு அந்த மாநில சர்க்கார்

[திரு. பி. வி. சீராமுலு] [19th March 1966

மூலமாகவும் பெற்று, இந்த மாநில வியாபாரிக்கு 'ஸி' பாரம் அனுப்பி வைக்கிறார்கள். அனுப்பும்போது ஆர்டர் பிரகாரம் வாங்கிக்கொண்டு விடுகிறார். கேரளத்தில் 'ஸி' பாரம் கிடைக்க வில்லை. 'ஸி' பாரம் கொடுக்கிற தேதி 26-ம் தேதி என்று வைத்துக் கொண்டால், முதல் தேதி ஆர்டர் கொடுத்து 8-ம் தேதி சரக்கு பார்சல் செய்யப்பட்டுவிட்டது என்றால், அந்தத் தேதியில் 'ஸி' பாரம் அவரிடத்தில் இல்லை. 'ஸி' பாரம் கொடுத்த தேதிக்கு முன்பே சரக்கு போய்விட்டது, ஆகவே இங்குள்ள அதிகாரி 7½ சத விகிதம் வரி கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். 'ஸி' பாரத்தின் கண்டிஷன் இப்படியா? 'ஸி' பாரம் இல்லை என்று சொன்னால் 7½ சத விகிதம் வரி போடலாம். ஆனால் 'ஸி' பாரம் அந்தச் சரக்குக்கு இருந்தும் குறிப்பிட்ட தேதியில் இல்லை என்பதற்காக இந்தச் சர்க்கார் மக்களிடத்தில் 7½ சத விகிதம் வாங்கிக்கொண்டு வருகிறது. இதனை எல்லாம் அரசாங் கமும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற கூட்டத் தொடரில் மேலை நாட்டு வியாபாரத்தைப் பற்றி கனம் அமைச்சர் பேசுகின்றபோது அமெரிக்காவைப் பற்றிப் பேசினார். நியூயார்க்கு முதல் சான்பிரான்சிஸ்கோ வரையில் அங்குள்ள வியாபார ஸ்தாபனங்கள் ஒரே விற்பனை வரி வாங்கப்படுகிறதென்று. அது முற்றிலும் பொருந்தும். அந்தச் சர்க்கார் அந்த வியாபாரியிடத்தில் அந்தச் சட்டப்படி வாங்குகிறார்கள். நமது மாநில சர்க்காரோ அந்தச் சட்டத்தை இங்கு நிறைவேற்ற முடியவில்லை. ஒரே வியாபாரி இத்தனை பிராஞ்சுகளை வைத்து நடத்துவார்களானால் அவர்கள் பேரில் நம்பிக்கை இல்லை. அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

அதே வியாபாரிக்கு பலவிடங்களில் வேண்டாம். ஒரே இடத்தில் கடலைக் கொட்டை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். கடலைக்கொட்டைக்கு பர்சேசிங் டாக்ஸ் விதிக் கிறார்கள். அதே சரக்கை அதே வியாபாரி எடுத்துக் கொண்டால் மணிலா வாங்குகிற அதே தலைப்பிலேயே அதற்காக 2½ சத விகிதம் கட்ட வேண்டும். அவற்றை எண்ணெய் ஆட்டுகிற இடத் திற்கு அதே காம்பவுண்டுக்குள்ளேயே கொண்டு வந்தவுடனே 2½ சத விகிதம் கட்ட வேண்டும். எண்ணெய் ஆட்டியவுடனே பிண்ணாக்கு மேல் 2½ சத விகிதம் கட்ட வேண்டும். ஆக 2½ யோடு 2½ பர்செண்டைச் சேர்த்து, அதோடு 1-1/2 சத விகிதத்தை சேர்த்தால் 6½ சத விகிதம் டாக்ஸ் வந்துவிடுகிறது. இந்த 6½ சத விகிதம் டாக்ஸ் எப்படிக் கட்ட முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நூற்றுக்கு ஒரு ரூபாய் லாபம் கிடைத்தால் போதும் என்று நினைக்கிற வியாபாரிகளுக்கு நூற் றுக்கு 6½ சத விகிதம் டாக்சே கட்ட வேண்டும் என்ற நிலை வருகிறபோது எப்படி நேராகக் கணக்குக் காட்டி வரியைக் கட்டக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

அதோடு மட்டும் அல்ல. இன்னொரு பக்கத்தில் அது ஒற்றை மாட்டுச் செக்கா, இரட்டை மாட்டுச் செக்கா, அல்லது [illegible]

19th March 1966] [திரு. பி. வி. சீராமுலு]

மில்லா என்கிற பிரச்சினை எழுகிறது. அரசாங்கம் இன்றைய தினம் திட்டமிட்டு மாட்டுச் செக்கு எண்ணெய்க்கு விற்பனைவரி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவன் ஒரு பக்கத்தில் மில்லை வைத்துக்கொண்டு, இன்னொரு பக்கத்தில் மாட்டுச் செக்கை வைத்திருக்கிறான். மில்லில் ஆட்டுகிற எண்ணெயை நாட்டுச் செக்கில் ஆட்டியதாகக் கணக்குக் காட்டுகிறான். இது நாட்டுச் செக்கு எண்ணெயா, மில் எண்ணெயா என்பதைத் தெரிந்து கொள்ள என்ன பாலுக்கு டிகிரி போட்டுப் பார்ப்பது போல கருவி இருக்கிறதா? இந்த அளவுக்கு அரசாங்கச் சட்டத்தில் ஓட்டை இருக்கிறது. மில்லில் ஆட்டுகிற எண்ணெய்க்கு 6½ சத விகிதம் வரி, நாட்டுச் செக்கு எண்ணெயாக இருந்தால் ப்ரியாக விற்கலாம் என்பதனால் இப்படிப்பட்ட ஒரு நிலை சமுதாயத்தில் உருவாகிறது. சிறு தொழில்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்றால், ரிபேட் அளிக்க வேண்டுமென்றால் கொடுக்கலாம். இது சம்பந்தப்பட்ட கணக்கை விற்பனை வரி இலாகா தனியாக வைத்து எவ்வளவு ப்ரொடெக்ஷன் செய்கிறார்கள், எவ்வளவு விற்றுமுதல் செய்கிறார்கள் என்று பார்த்து நாம் சலுகை கொடுத்தால் அது இன்றையதினம் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயனாகவும் இருக்கும். அதுபோல இல்லாமல் தற்கால முறையில் செய்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டு மக்களுக்கு இன்றைக்கு அத்தியாவசியமான பொருள்கள் என்ன என்று பார்த்து, அந்த அத்தியாவசியப் பண்டங்களுக்கு விற்பனை வரி போடாமல் இருந்தால் ஓரளவு விலைவாசி குறையக்கூடும். அந்த அளவுக்கும் விலைவாசியைக் குறைக்க சர்க்கார் முன் வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல; விற்பனை வரி விகிதாச்சாரத்தைப் பார்க்கும்பொழுது தேசிய நெருக்கடியின் காரணமாக முன்பு 2½ சதவிகிதமாக இருந்ததை 3 சதவிகிதமாக உயர்த்தி விட்டார் கள். மத்திய அரசாங்கம் தேசிய நெருக்கடியை எடுத்து விட வேண்டுமென்று நோக்கத்தில் இருக்கும்பொழுது, என்று மத்திய அரசாங்கம் தேசிய நெருக்கடி இல்லை என்று சொல் கிறார்களோ, அன்று விற்பனைவரி விகிதாச்சாரத்தை, உயர்த்திய ½ சத விகிதத்தைக் குறைத்துக்கொள்ள முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விற்பனை வரியில் ஓரளவுக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரிவிலக்குக் கொடுக்க வேண்டும். மார்க்கட்டிங் சொஸைடி என்றால் நல்ல விலையில் விற்றுக் கொடுக்கவேண்டு மென்று செயல்படுகிறது. மார்க்கட்டிங் சொஸைடி மூலமாக வியாபாரிகள் வாங்கினால் கமிஷன், 2 சத விகிதம் அல்லது 3 சத விகிதம் சேல்ஸ்டாக்ஸ் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு வியாபாரி ஆளாகிறான். வியாபாரி அதைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தாலும், விற்க வேண்டிய பொருள்களை அந்த அளவுக்கு விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. மார்க்கெட்டிங் சொஸைடிகள் மூலம் வியாபாரிகள் வாங்கும்பொழுது கமிஷன் 1 சத விகிதம், சேல்ஸ் டாக்ஸ் 3 சத விகிதம், எல்லாம் சேர்த்து 4 சத விகிதம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தனிப்பட்ட

[திரு. பி. வி. சீராமுலு] [19th March 1966

வியாபாரிகளிடம் வாங்கும் பொழுது, 2 சத விகிதம் டைரக்டாகக் கொடுத்துவிடுங்கள், வியாபாரத்தை முடித்துத் தருகிறேன் என்று சொல்கிருர்கள். விற்பனை வரி அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பதால் மார்க்கெட்டிங் சொஸைடி நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வரி போடலாம். ஆனல் கூட்டுறவுச் சங்கங்கள் வியாபாரிகளுக்கும் வேண்டியது, அதே நேரத்தில் தரமான விலைக்கு தரமான பொருள்களை விற்பதற்கும் அவை தேவைப்படுகிற காரணத்தாலே ஏதோ செஸ்ஸோ அல்லது ½ சத விகிதம் என்ற அளவுக்குப் பேருக்கு வரியை விதிக்க முற்படு வார்களானல் மார்க்கெட்டிங் சொஸைடிகள் மூலமாகப் பல கோடி ரூபாய்கள் கிடைக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். லாரிகளிலே சரக்குகளைக் கொண்டு போகும்பொழுது விற்பனைவரி கட்டி அந்த ரசீதைக் கொடுத்து அனுப்புகிறோம். ஆனல் செக்போஸ்ட்களிலே லாரிக்காரர்களைத் தொந்தரவு செய்கிருர்கள். ஒரிஜினல் ரசீது இல்லை, அதைக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி லாரியை அங்கேயே நிறுத்திவிடக்கூடியபடி செய்துவிடு கிருர்கள். ரசீதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போங்கள் என்று சொல்கிருர்கள். லாரிக்காரர்கள் போக்குவரத்தை ஒரு நாளைக்கு நிறுத்திக் கொண்டால், அதன் காரணமாக 300 ரூபாய், 400 ரூபாய் என்ற அளவுக்கு நஷ்டம் வரும். மார்க்கட் ஃப்ளக்சுவேஷன் அதாவது லாரியிலே ஏற்றிச்செல்லப்பட்ட பொருள்களின் விலை மார்க்கெட்டில் ஏற்றமாக இருந்தால் பரவாயில்லை. ஆனல், இந்தப் பொருள்களின் விலை இறக்கமாக இருந்தால், சரக்கை நிறுத்தி விடுவதால், வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. லாரிக்காரர்களை நிறுத்தி, அங்கேயே டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சொல்வதால் வியாபாரிகள் விலைச் சரிவு ஏற்படுவதன் காரணமாக நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனல் விற்பனை வரியிலும் நஷ்டம் ஏற்படுகிறது. ஒருவருக்கு 10,000 ரூபாய் வருமானம் வருகிறது என்று சொன்னல் அதில் 1,000 ரூபாய் இன்கம்டாக்ஸ் கட்டவேண்டுமென்று சொன்னல் கட்டிவிடலாம். ஆனல் விற்பனை வரி அப்படியல்ல. ஒரு பொருள் 100 ரூபாய்க்குத்தான் விற்கிறது, அதன் விலை எவ்வளவு கூடினலும் குறைந்தாலும் விற்பனை வரி கட்டியே ஆகவேண்டும் என்ற சூழ்நிலை இருக்கிறது. தவிர, இதையெல்லாம் எந்த வியாபாரியும் தன்னுடைய சொந்தக் கையிலிருந்து கட்டுவது இல்லை, பொது மக்கள் தலையில் விவசாயிகள் தலையில்தான் இது விழுகிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, தேசிய நெருக்கடி சமயத்தில் உயர்த்தியதை, அதை நிறுத்தும்பொழுது விற்பனை வரியைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். ராமசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனைவரி மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரி என்பது இந்த நாட்டிலே புதிதல்ல. எந்தக் கிராமத்திலே சென்றாலும் ஒற்றுமையுள்ள கிராமங்களிலே அவர்களாக விற்பனை வரியை ஏற்படுத்தி இருக்கிருர்கள். ஆனல்

19th March 1966] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

பெயர் மட்டும் மகிமை என்று இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. அளக்கப்படும் பொருள்களுக்கும், நிறுக்கப்படும் பொருள்களுக்கும், அளவுக்கு ஏற்றவாறு, நிறுவைக்கேற்றவாறு விற்பனை வரியை வாங்கி வருகிருர்கள். ஒரு குவிண்டால் மிளகாய் வத்தல் என்றால் 4 ரூபாய் வாங்குகிருர்கள். ஒரு குவிண்டால் பருத்தி என்றால் 2 ரூபாய் வாங்குகிருர்கள். ஒரு மூட்டை தானியமாக இருந்தால் 8 அணு வாங்குகிருர்கள். ஆகவே இந்த வரி கிராமங்களில் இருந்து வருகிறது. நம்முடைய நாட்டிலே விற்பனை வரி புதிதல்ல. நாட்டிலே இப்படி விற்பனைவரி கொடுத்துப் பழக்கம் இருக்கிறது என்பதாலே சர்க்காருடைய விற்பனை வரியைக் கொடுத்து வருகிருர்கள், சர்க்காருக்கும் அதன் மூலம் லாபம் வரக்கூடிய நிலையில் இருப்பதால் விற்பனை வரியைக் குறை சொல்வதற்கில்லை. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் பேசும்பொழுது அவர் தெரிவித்த தத்துவங்கள் என்ன, அபிப்ராயங்கள் என்ன என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்வதற்கில்லை. பண்டில் ஆஃப் கண்ட்ரடிக்ஷன்ஸ் (Bundle of contradictions) என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே அதைப் போல அவர்கள் முன்னலே சொன்னதற்கும் பின்னலே சொன்னதற்கும் ஒன்றுக்கொன்று முரணன கொள்கைகளைத்தான் சொன்னர்களே தவிர விற்பனை வரியில் செய்யவேண்டிய திருத்தங்களைப் பற்றிச் சொல்லவில்லை. வியாபாரிகளைப் பாதிக்கிறது என்று அவர்கள் சொன்ன அதே நேரத்தில் வியாபாரிகளைப் பாதிக்கவில்லை, விவசாயிகளைப் பாதிக்கிறது என்று சொன்னர்கள். இதற்கு என்ன அர்த்தம் என்று புரியவில்லை. வியாபாரிகள் சரியாகக் கணக்கைத் தயாரிக்காமல் பொய்க் கணக்கைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னர்கள். வியாபாரிகளுக்கு ஆகப் பேசினரா அல்லது விவசாயிகளுக்காகப் பேசினரா என்று தெரியவில்லை. கடைசியிலே அதெல்லாம் விவசாயிகள் தலையில்தான் வந்து விழுகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். தங்களுக்குக் கிடைக்கின்ற ஆதாயத்திலே விற்பனைவரி கொடுக்க வேண்டியிருக்கிறதே என்ற காரணத்திற்காக உண்மையான கணக்குகள் தயார் செய்வதில்லை என்று சொன்னர்கள். அது உண்மையல்ல. அவர் வியாபாரி, அதனல்தான் அப்படிச் சொன்னர்கள். தங்களுடைய பங்காளியை ஏமாற்றுவதற்காக ஒரு கணக்கு இருக்கும். விற்பனைவரியை ஏமாற்றுவதற்காக ஒரு கணக்கு இருக்கும். தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளக் கூட ஒரு கணக்கு வைத்துக்கொண்டிருப்பார்கள். யாரோ நினைக்கிருர்கள் என்று சொல்லி எங்கிருந்தோ ஒருவர் ஓலம் போட்டாராம் என்று சொல்வார்கள். விவசாயிகள்தான் அதைக் கொடுக்கிருர்கள் என்று சொல்லிவிட்டு பிறகு வியாபாரிகள்தான் கொடுக்கிருர்கள் என்று சொல்வது சரியல்ல. அவர்களே சொன்னர்கள், விற்பனைவரி கடைசியில் விவசாயிகளின் தலையில்தான் விழுகிறது என்று. வியாபாரிகள் வாங்கிக் கொடுக்கிருர்களே தவிர தங்கள் கையிலிருந்து கொடுக்கவில்லை. விற்பனை வரிக்காக உண்மைக் கணக்கை எழுதாமல் பொய்க் கணக்கை எழுதுவதில் அர்த்தமே இல்லை.

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [19th March 1966

விற்பனைவரி இப்பொழுது நிதானப்படுத்தப்பட்டு, வகைப் படுத்தி வாங்கப்பட்டு வருகிறது. அதிலே இன்னும் கஷ்டங்கள் இருக்கிறது என்று சொன்னால் உண்மைக் கணக்கு வைத்துக் கொள்ளும் பழக்கம் நம்முடைய நாட்டிலே இல்லாத காரணத் தினால்தான் நல்ல முறையில் வியாபாரம் செய்து ஆதாயத்தில் ஒரு ஒரு பங்கைக் கொடுப்பதற்கு முன்வராமல் பொய்க் கணக்கை வைத்துக்கொண்டு சர்க்காரை ஏமாற்றக்கூடிய நிலைமை நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. விலை மிஞ்சிய பொருள்களை எல்லாம் கணக்கிலே தாக்கல் செய்யாமல் விற்பனை வரியை ஏமாற்றுவதற் காக அதையெல்லாம் கணக்கிலே தாக்கல் செய்யாமல் கணக்கிலே எப்படியோ காட்டி வரவு-செலவு செய்து கொள்கிறார்கள். 10 குவிண்டால் மிளகாய் வத்தலை கமிஷன் வியாபாரிகளிடம் கொடுத் தால் அதைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி நல்ல முறையில் கொடுப்பது இல்லை. ஏதோ ஒரு வெள்ளைத்தாளிலே 10 குவிண்டால் என்றுதான் எழுதிக் கொடுக்கிறார்கள். அது எப்போது விற்கப் படுகிறது, என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதற்குப் 9-30 a.m. பட்டியல் கிடையாது. மிளகாய் 200 ரூபாய் குவிண்டால் விற்கப்படுகிறது என்றால் வரி அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக் குமென்று இருந்தால் வரிக் கணக்கில் இருந்து தப்பித்துக் கொள்ள இந்த மாதிரிப் பழக்கம் இருந்து வருகிறது. இந்த மாதிரி செய்வது விவசாயிகள் கஷ்டப்படாமல் இருப்பதற்காக என்று திரு. சீராமுலு அவர்கள் சொன்னார்கள். வியாபாரி விற்பனை வரி உள்ள அளவுக்குக் குறைத்து வாங்காவிட்டால் விவசாயிக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான விலை கிடைக்காமல் போய்விடும் என்று சொன்னார்கள். இது ரொம்பவும் தவறு. வாங்குபவர்கள் தங்களுடைய ஆதாயத்திற்காக அப்படி வாங்குகிறார்களே தவிர, விவசாயிகளுடைய சாதகத்திற்காக அவ்வாறு வாங்குவதில்லை. தங்களுக்குக் கமிஷன் போக ஆதாயம் இருக்கும் என்ற முறையில் வாங்குகிறார்கள். விவசாயிகள் ஊரிலே விற்கும் பொருள்களுக்கு விற்பனை வரி கொடுப்பதைப் பற்றியோ, அதனால் தங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருப்பதைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. சர்க்காரானது திட்டமிட்டு பல அனுகூலங்களை விவசாயிகளுக்குச் செய்து வருகிறது. இந்த வரிகளின் காரணமாகப் பல வசதிகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருப்பதன் காரணமாக, இந்த வரியை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் விவசாயிகள். இது வரை விற்பனை வரி சம்பந்தமாகப் புகார் வந்ததா, குரல் எழுப்பப் பட்டதாக என்றால் இல்லை. விவசாயிகளுக்காக என்று சொல்லி வியாபாரிகள் குரல் எழுப்புகிறார்களே தவிர, விவசாயிகள் கஷ்டத்தைச் சொல்லவில்லை.

இந்த விற்பனை வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதைத் தடுப் பதற்கு ரெகுலேடெட் மார்க்கெட்டுகளை நல்ல முறையில் செயல் படுத்த முன் வரவேண்டும். அதன் காரணமாக விற்பனை வரி மூல மாக அதிகமாக வருவாய் கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல் வேன். இன்றைக்கு பருத்தி, மிளகாய், நிலக்கடலை போன்ற பொருள் கள் எல்லாம் இரண்டொரு இடங்களில் தவிர, மற்ற இடங்களில்

19th March 1966] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

எல்லாம் கணக்குக்கு வராமல் போய்விடுகின்றன. அவை எல்லாம் ரெகுலேடெட் மார்க்கட் யார்டுக்குள்ளே வந்து விற்பனையானால் சர்க்காருக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய விற்பனை வரி கிடைத்துக் கொண்டே இருக்கும். சர்க்கார் கொஞ்சம் சிரமம் எடுத்து எந்தெந்த இடங்களில் ரெகுலேடெட் மார்க்கெட்டுகளை ஏற்படுத்த வேண்டுமென்பதைப் பற்றிப் பரிசீலித்து அந்த இடங்களில் எல்லாம் கட்டாயமாக ரெகுலேடெட் மார்க்கெட்டுகளை ஏற்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் தலைமை)

அதை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய நிலைமையில் சிலவற்றைக் கவனிக்க வேண்டும். விவசாயப் பொருள்கள் ரெகுலேடெட் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும்போது அவை விற்பனை ஆகவில்லை என்றால் அதற்கு ஈடாகக் கடன் கொடுக்கும் ஸ்தாபனம் இல்லாத காரணத்தால் ரெகுலேடெட் மார்க்கெட்டுக்குச் சரக்குகள் வருவது குறைவாக இருக்கிறது. கொண்டு வரும் பொருள்கள் சாயங்காலம் வரை விற்பனையாகாமல் இருக்குமானால், அதற்கு ஈடாகப் பணம் கிடைக்கும் என்ற வசதி இருந்தால் அந்த மார்க்கெட்டுக்குப் பொருள்களைக் கொண்டுபோய், தாங்களும் ஆதாயம் அடைந்து, சர்க்காருக்கும் கிடைக்கக்கூடிய வரியும் நியாயமாகக் கிடைக்கச் சந்தர்ப்பம் ஏற்படும். ரெகுலேடட் மார்க்கெட் இல்லாத காரணத்தால் விவசாயிகள் நேரடியாகப் பருத்தியைக் கொண்டு போய் விற்க முடியாமல் வியாபாரிகளிடம் கொடுக்கிறார்கள். வியாபாரிகள் இன்ன விவசாயியினுடைய பருத்தி என்று தனியாகப் பத்து பில்களைப் போட்டு விற்பனை வரியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். இந்த மாதிரித் தப்பித்துக் கொள்ளச் சாதகமாக இருப்பது ரெகுலேடெட் மார்க்கெட் சரியான நிலையில் இயங்காததுதான். எந்த இடமானாலும் சரி கட்டாயமாக ரெகுலேடெட் மார்க்கெட்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதிக விலையுள்ள பொருள்களுக்கு விற்பனை வரியைக் குறைத்தால் வியாபாரிகள் களவு செய்ய லாயக்கு இல்லாமல் இருக்கும். இன்று எண்ணெய் ஒரு படி 8 ரூபாய் 9 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஒரு டின் எண்ணெய்க்கு ஐந்து ரூபாய் வரி ஆகிறது. சிறு வியாபாரிகள் வந்து எண்ணெய் வாங்கும்போது எண்ணெய்க் கடைக்காரன் 'பில் வேண்டுமா ?' என்று கேட்கிறான். பில் வேண்டுமென்றால் ஐந்து ரூபாய் அதிகமாகும் என்றும், பில் வேண்டாமென்றால் ஐந்து ரூபாய் குறைத்துக் கொடுக்கிறேன் என்றும் கூறுகிறான். அதனால் அவர்கள் பில் இல்லாமல் வாங்கிக் கொண்டு போகிறார்கள். இதனால் சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வரி கிடைக்காமல் போய்விடுகிறது. அந்த வரியின் பளு குறையுமானால் விற்பனை வரியை நல்ல முறையில் கொடுக்க முடியும். இதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டு மென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் அவசியமான விஷயம்.

சில பொருள்களுக்குப் பல இடங்களில் வரி விதிக்கப்படுகிறது. எங்கள் பகுதியில் தீப்பெட்டிக்குச் சர்க்கார் ஒரு வரி, மத்திய சர்க்கார் ஒரு வரி விதிக்கிறார்கள். டெப்போ வைத்து நடத்தினால் ஒரு வரியிலிருந்து விலகிக் கொள்ள வாய்ப்பு இருக்கும். சிறு தீப்பெட்டித் தொழிற்சாலை வைத்து நடத்துபவர்கள் சரியானபடி டெப்போ வைத்து நடத்த முடிவதில்லை. இப்போதுதான் சிறு தீப்பெட்டித் தொழில் நடத்துபவர்கள் எல்லாம் சேர்ந்து விற்பதற்கு விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஐந்தாறு வருஷங்களாக அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையைச் சாதகமான முறையில் பரிசீலிப்பதாகச் சர்க்கார் வாக்களித்திருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய வரியையும் மாநில வரியையும் சேர்த்து, மாநில வரி 3 ரூபாய், மத்திய வரி 6 ரூபாய் என்றால், வரி 9 ரூபாய் என்று நிச்சயமாக வைத்துக் கொண்டு, உற்பத்தி ஸ்தானத்திலேயே அதை வாங்கி எந்தெந்தச் சர்க்கார் எவ்வளவு பகிர்ந்துகொள்ள வேண்டுமோ அதை அவர்களுக்குள்ளாகப் பகிர்ந்து கொண்டால் வியாபாரிகளுக்குத் தொல்லை இல்லாமல் இருக்கும். இது விஷயத்தில் சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சற்றுப் பரிசீலித்து முன்னால் போன விவகாரங்களுக்குப் பரிகாரம் தேடிக் கொடுத்து விட்டு ஒரே வரியாகப் போட்டு எடுத்துக் கொள்ளவும், டெப்போ வைத்து விற்பனை செய்ய என்னென்ன முறையில் டெப்போக்கள் இருக்க வேண்டுமென்பதற்கும் நிச்சயமான வழிகளை வகுத்துக் கொடுத்து அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரியை வசூல் செய்யும் விற்பனை வரி உத்தியோகஸ்தர்கள் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அது அவ்வளவு பொருத்தமாக இல்லை. கொடுக்க வேண்டிய முறையில் கணக்கைக் கொடுத்துவிட்டால் அவர்கள் விற்பனை வரியை லேசாக அஸெஸ் பண்ணிவிடுவார்கள். அதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. இந்த விற்பனை வரி சர்க்காருக்கு நல்ல முறையில் வசூலாக வேண்டுமென்றால், ரெகுலேடெட் மார்க்கெட்டுகளை அமைக்க வேண்டும். அதிக விலையுள்ள பொருள்களுக்கு வரிச் சலுகை செய்யவேண்டும், தீப்பெட்டி போன்ற தொழில்களுக்கு ஒரே வரியாகப் போட்டு மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் பகிர்ந்து கொள்ளவேண்டும். இந்த விஷயங்களை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***புலவர் கா. கோவிந்தன்:** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய சர்க்கார் சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றும், அதை பலாத்கார முறையிலே அல்லாமல், ஜனநாயக முறையிலே அமைக்க வேண்டுமென்றும் கூறி அதற்கு வழி செல்வந்தர்களிடத்தில் இருக்கின்ற பொருளை வரி மூலம் வாங்கி ஏழை எளியவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று

கூறுகிறார்கள். ஆனால் அந்த முறை கையாளப் படுகிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. விற்பனை வரியைப் பற்றிச் சொல்லும்போது எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. ராமசாமி நாயுடு அவர்கள் மகிமை தருகிற நிலைதான் விற்பனை வரி என்று சொன்னார்கள். உண்மைதான். மகிமை தரும் முறை பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அவர்கள் இந்த விற்பனை வரியை எந்தெந்தப் பொருள்களுக்குப் போடவேண்டும், எந்த எந்த அளவு குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மகிமை கொடுக்கும் நேரத்தில் எந்தப் பொருள்களுக்குக் கொடுப்பது, எந்தப் பொருள்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று பேசுவதில்லை. காரணம், மகிமைக்கும் இந்த வரிக்கும் கொஞ்சம்கூடச் சம்பந்தம் இல்லை. இந்த வரியை வியாபாரிகளிடத்தில் இருந்து வாங்கி, ஏழை எளியவர்களுக்கு வசதி செய்து தரப்படுகிறது என்று சொன்னார்கள்.

ஆனால், உண்மையில் இந்த வரிகளை வியாபாரிகள் தருகிறார்களா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. பெயர்தான் விற்பனை வரி. வியாபாரிகள் விவசாயிகளிடத்திலும், ஏழை எளியவர்களிடத்திலும் வரியை வாங்கி அதைச் சர்க்காருக்குத் தருகிற இடைத்தரகர்களாக இருக்கிறார்கள். எந்த வரியானாலும் அந்தப் பொருள்களை வாங்கும் ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் இவர்கள் தலையில் தான் விழுகிறது. இதைச் சர்க்கார் மறுக்காது என்று நினைக்கிறேன். இந்த வரியிலிருந்து கிடைப்பது, ஏழை எளியவர்கள், பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள், குறிப்பிட்ட வருவாய் உள்ளவர்கள் இவர்களிடமிருந்து கிடைக்கும் தொகைதான் அதிகம். நாட்டில் உற்பத்தியாகிற உணவுப் பொருள்கள் அதிகமாக வாங்குகிற மக்கள் தொகை அவர்கள்தான். ஆகவே, இந்தப் பொருள்களின் மீது விதிக்கிற வரிகளை எல்லாம் வியாபாரிகள்தான் தருகிறார்கள் என்று சர்க்கார் கருதக் கூடாது. அதேபோல் ஒவ்வொரு வரியும் இருப்பதைப் பார்க்கலாம்.

எரி பொருள்களுக்கு வரி போடுகிறார்கள். அப்படி போட்டவுடனே பஸ் கட்டணம் உயருகிறது. பஸ் கட்டணம் உயர்ந்தவுடன் எரி பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியை பஸ் கட்டண உயர்வு மூலம் அவர்கள் பெறுவதால் அந்த வரியை பஸ்ஸில் செல்லும் மக்கள்தான் கொடுக்கிறார்கள். கேளிக்கை வரி போடுகிறார்கள். அதைக் கூட படம் பார்க்கச் செல்கிற ஏழை எளிய பாட்டாளி மக்கள்தான் கொடுக்கிறார்கள். புகையிலைக்கு வரி போடுகிறார்கள். அந்த வரியையும், புகைபொருளாகவும், பொடியாகவும், வாய்ப்புகையிலையாகவும் பயன்படுத்துகிற ஏழை எளிய பாட்டாளி மக்கள்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த வரிகளை எல்லாம் விற்பனை வரி என்று சொன்னாலும் அதைத் தருகிறவர்கள் ஏழை எளியவர்கள்தான் என்பதைச் சர்க்கார் மறுக்கக் கூடாது. ஆகவே நுகர்பொருள்களுக்கு ஏழைகளான அந்த நுகர்ப்பவர்களுக்கு வரி போடுகிற முறையைக் கைவிட வேண்டுமென்று என் வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[புலவர் கா. கோவிந்தன்] [19th March 1966

தப்போ சரியோ விற்பனை வரி போட்டாகி விட்டது. வியாபாரிகள் பொது மக்களிடமிருந்து வாங்குகிற இந்த விற்பனை வரியைச் சர்க்காருக்குக் கொடுக்கிற இடைத்தரகர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி பொது மக்களிடமிருந்து வாங்குகிற விற்பனை வரியைச் சர்க்காருக்குக் கொடுப்பதில் கொஞ்சம் மறைப்பதோ அல்லது அடியோடு ஏமாற்றுவதோ கூடாது என்று நான் இங்கு அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டில் ஒரு பழமொழி உண்டு. பிச்சை எடுத்தாலும் பெருமாள் அதைப் பிடுங்கினாலும் அனுமான் என்று சொல்வதுண்டு. அதேபோன்று விற்பனை வரி என்று சர்க்கார் ஏழைகளிடம் பிச்சை எடுக்கிறது. இதை இடையில் உள்ள வியாபாரிகள் அபகரித்துக் கொள்ளக் கூடாது. இன்று வரி ஏய்ப்பு இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், அதை மறுக்கவில்லை. ஆனால் வரி ஏய்ப்பைத் தடுக்க சர்க்கார் எடுக்கிற நடவடிக்கைகளைப் பார்த்தால் வாணிப திமிங்கிலங்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். பெட்டிக் கடைக்காரர்களும், சின்னச்சின்ன வியாபாரிகளும்தான் அந்த வலையில் அகப்பட்டுக் கொள்கிறார்கள். இதை அரசாங்கம் உணர வேண்டும். எந்த முறையில் செய்தால் இதிலிருந்து ஏழை எளியவர்களையும், சின்னச்சின்ன வியாபாரிகளையும் பாதிக்காமல் செய்ய முடியும் என்பதைச் சர்க்கார் உணர்ந்து பார்க்க வேண்டும். அடுத்து, வரி ஏய்ப்பதின் மூலம் வியாபாரிகள் சேர்த்து வைக்கிற பணத்தை விட கள்ள மார்க்கெட் வியாபாரம் மூலம் சேர்த்து வைக்கிற பணம்தான் அதிகம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு மூட்டை நெல் 34½ ரூபாய்க்கு வாங்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் விற்கிற நேரத்தில் ரூபாய்க்கு இரண்டு காசு என்ற முறையில் 70 காசு கூட்டி விற்க வேண்டுமென்று நிலை இருக்கிறது. 34½ ரூபாய்க்கு வாங்கி 35½ ரூபாய்க்கு விற்கும்போது அதில் சர்க்காருக்குச் செலுத்தக் கூடிய வரி 54 காசுதான் வரும். அந்த வியாபாரம் கணக்கில் வராமல் போனால் சர்க்காருக்குக் கிடைக்காமல் ஏமாற்றப்படுவது 54 காசுதான். ஆனால் அவர்கள் 34½ ரூபாய்க்கு வாங்கி 45 ரூபாய்க்கு விற்கிறார்கள். அப்போது இந்தக் கணக்கில் வாராத முறையில் சர்க்காரை வரிமூலம் ஏமாற்றியது 54 காசுதான். கள்ளச் சந்தை மூலம் அவர்களுக்குக் கிடைப்பது பத்து ரூபாய். பத்து ரூபாயைக் கண்டுபிடிக்க சர்க்கார் வழிவகை செய்ய வேண்டுமே தவிர 54 காசுக்காக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டாம், வேண்டாம் என்று கூடச் சொல்லவில்லை. முதலில் கள்ளச்சந்தை மூலம் கிடைத்த பணத்தை வெளியே கொண்டு வர வழிவகை செய்ய வேண்டும், பின்னர் ஏய்த்திருக்கக் கூடிய வரிப் பணத்தை வெளியே கொண்டு வர முயற்சிக்க வேண்டும். யானை வேட்டை முதலில் செய்யுங்கள், பூனை வேட்டைக்கு பிறகு செல்லலாம். சர்க்கார் பூனை வேட்டை ஆடுகிற சமயத்தில் யானை வேட்டை ஆட முற்படுவதில்லை என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

19th March 1966]

* SRIMATHI B. LAKSHMINARASAMMA : Madam Chairman, I rise to say a few words in support of the Demand now before the House.

More than a quarter of a century has rolled by since the Commercial Tax Department came into existence. But I regret to say that so far as this Department is concerned, it has become more and more tax-minded, harsh, wooden and technical. The race at all levels of this Department has been not how to enforce fair and just assessments, but how to increase the revenue receipts and earn the appreciation of the higher authorities. The policy should be to collect neither a rupee more nor a rupee less than justified and to see that no more hardship or suffering than is necessary is caused to the tax-payer. There have been too many shackles and red tape has had free play. The result is that there is no evidence of courage to do the just and right things and pass fair and correct assessment orders among the assessing officers.

It may be true that a section of the traders evade payment of the tax due to the Government. It may also be true that the number of such tax evaders may be larger than can be tolerated in any healthy tax system. It is but right that these tax evaders should be exposed and punished. No one will grudge this. But the present tendency among the officials of this Department is agonising and distressing. Unable to detect evasions, they universalise the entire merchant community as dishonest and look upon them with contempt and hatred. At the time of final assessment, they only tighten the noose round the necks of the honest tax-payers, by indiscriminate additions in the total turnover and tax them heavily. There is a tragic irony in this move of the assessing officers. This greatly distresses and annoys worthy, responsible and honest managements of established and reputed firms.

Madam, if the present discontent and dissatisfaction among the comTenced community is to be removed and remedied and if the Government wants that the commercial tax payers who swell the revenue of the State, should be treated more honourably and respectably, it should advice its officers to temper their firmness in administration with courtesy and justice. The Government should see that this department gives a good account of itself from now on and ceases to be the nightmare of the merchants.

Madam, under the present changed conditions of trade, the sales tax on foodgrains can conveniently be dropped. The Civil Supplies Department which is the main bulk buyer of foodgrains considers the wholesale licencees as its agents only and refuse to pay sales tax on its purchases. The District Supply Officers on whom bills are drawn do not allow merchants to include sales tax in their invoices. But the Commercial Tax Department insists on payment of sales tax on all supplies to the Civil Supplies Department. That is the position in my district of South Arcot. In view of the buoyancy of the revenue of our State, it will be a

[Srimathi B. Lakshminarasamma] [19th March 1966

very fine, timely and welcome gesture, if the Government abolish the sales tax on foodgrains. If this concession or relief cannot be granted, the Government should advise its Civil Supplies Department to pay sales tax on its purchases of foodgrains with retrospective effect. It should be noted here that it will be an unnecessary work for the foodgrain traders to collect the sales tax from one department and remit it into another department. I request the Government to look into this matter in detail immediately and see the folly in the continuance of sales tax on foodgrains. I do hope that the Government will do the needful early and abolish the sales tax on foodgrains with retrospective effect.

Thank you, Madam.

* திரு. ர. ஜீவரத்னம்: தலைமை வகிக்கும் தலைவி அவர்களே, இந்த விற்பனை வரி மான்யக் கோரிக்கையை ஆதரித்து நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மான்யத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் ராஜ்ய நிதியில் விற்பனை வரிதான் பெரிய வருமானம். இவ்வளவு தொகை வருமானம் வரக்கூடிய இந்த இலாகாவிற்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் முதலிலேயே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் விற்பனை வரி இலாகாவிற்குச் சொந்தமாகக் கட்டடம் கிடையாது. பலவிடங்களில் இலாகாக்கள் சிதறுண்டு கிடக்கின்றன. மத்திய இலாகா என்று ஒன்று இருக்கிறது. அது தவிர, பாக்கி இரண்டு இடங்களும் தனித்தனியாக வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அந்த இடங்களில் கூட போதுமான வசதிகள் கிடையாது.

இரண்டாவதாக, அங்கு செல்லக்கூடிய வியாபாரிகள் தங்கி தங்களுடைய கணக்கை ஒழுங்காகப் பார்ப்பதற்கான சூழ்நிலை இல்லை. எப்போதும் வியாபாரிகள் தன்னுடைய கணக்கை இன்னொருவர் பார்ப்பதற்கு விரும்ப மாட்டார்கள். இந்த நிலையில் விற்பனை வரி இலாகாவுக்குச் சென்றால் அவர்கள் எல்லோருடைய கணக்கையும் ஒன்றாகத்தான் பார்க்கிறார்களே தவிர தனித் தனியாகப் பார்ப்பதில்லை. அதிகாரிகளிடத்தில் தனித்தனியாகக் கணக்கை ஒப்படைப்பதற்கான சூழ்நிலை இல்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்து தரவேண்டும் என்றும், வியாபாரிகள் தங்குவதற்கும், சரியான முறையில் தங்கள் கணக்கைக் காண்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், வியாபாரிகள் தங்குவதற்கு நல்ல வசதியாகக் கட்டிடங்களை கட்டிக் கொடுக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு தாலூகா தலைநகரங்களிலும் ஒவ்வொரு ஜில்லா தலைநகரங்களிலும் இந்த வசதிகளை எல்லாம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய வரி, மாநில வரி என்று இரண்டு வரிகள் இருக்கின்றன. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஆந்திர ராஜ்யத்திலிருந்து சென்னை ராஜ்யத்திற்கு ஒரு [illegible]

19th March 1966] [திரு. ர. ஜீவரத்னம்]

தன்னுடைய வீடு கட்டுவதற்காக மரங்கள் வாங்கி வந்தால் அதற்கு 7 சத விகிதம் விற்பனை வரி கொடுக்க வேண்டும் என்றிருக்கிறது. பக்கத்து ராஜ்யத்திலிருந்து மரங்களை கொண்டு வரவேண்டும் என்றால் அதற்கு 'ஸி' பாரம் கொடுத்தால் வரி கொடுக்க வேண்டியதில்லை. இதை வியாபாரிகள் தான் உபயோகப்படுத்துகிறார்களே தவிர தனிப்பட்டவர்கள் உபயோகிப்பது கிடையாது. ஆகவே இந்த முறையைப்பற்றி அதிகாரிகளுக்குச் சரியான முறையில் தாக்கீது பிறப்பிக்க வேண்டும். சொந்த உபயோகத்திற்காக இந்த மாதிரி மரங்களைக் கொண்டு வந்தால் அதற்காக 'ஸி' பாரம் கொடுக்க வேண்டியதில்லை, சொந்த உபயோகத்திற்கு என்று நிரூபித்தால் போதுமானது, [illegible] வேண்டிய பில்லைக் காண்பித்தால் அதை மட்டும் எழுதிக் கொண்டா[illegible] போதுமானது. இப்படிப்பட்ட தடங்கல்களை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காட்டிலாகாவிலிருந்து வியாபாரிகள் மரங்களை வாங்குகிறார்கள். அவ்விதம் வாங்கும் போது, அதற்காக பாராஸ்ட் இலாகா பில் கொடுக்கப்படுகிறது. இவ்விதம் மரங்களை மலைகளிலிருந்து கொண்டு வரும்போது, சோதனை சாவடிகளில் லாரிகளைச் சோதனை போடுவதற்கு என்று தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். இவ்விதம் தடுத்து நிறுத்தி அதற்கென்று ஒரு வரியையும் தனியாகப் போட்டுவிடுகிறார்கள். அவர்களிடத்தில் கமிஷனரிடத்திலோ அல்லது அஸிஸ்டன்ட் கமிஷனரிடத்திலோ இதைப்பற்றி அப்பீல் செய்து கொள்ளுங்கள், அதன் பிறகு அங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இது மிக தொந்தரவான விஷயம். கொடுக்கப்பட்ட பணத்தை பின்னால் வாங்குவது என்பது மிகப் பெரிய கஷ்டம். இந்த மாதிரி இல்லாமல் நல்ல முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன், நாலைந்து தினங்களுக்கு முன்பு மைசூர் காட்டிலாகாவிலிருந்து வாங்கிய மரங்களைக் கொண்டு வரும்போது, ராணிப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு வந்து, அங்கிருந்து எட்டு வண்டிகள் மூலமாகக் கொண்டு வரப்பட்டது. இதற்கு வவுச்சர், பில் எல்லாம் இருந்தது, அப்படியிருந்தும் தனியாக இதற்கென்று விற்பனை வரியை அங்குள்ள 'ஸ்பெஷல் கோட்' என்கிறவர்கள் தடுத்து எட்டு வண்டிகளுக்கும் 200 ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். இதற்காக ரசீதும் கொடுத்திருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால் வேண்டுமென்றால் அப்பீல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இது சரியான முறையல்ல, அவர்கள் தெரிந்து செய்தார்களோ, தெரியாமல் செய்தார்களோ தெரியவில்லை. இந்த மாதிரி சம்பவங்கள் நடைபெறாதவாறு தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுப்பொருட்களுக்கு இருந்து வருகின்ற விற்பனை வரியைத் தளர்த்துவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உணவு தான்யங்களின் விலை விஷம் போல் ஏறிக்கொண்டே

[திரு. ர. ஜீவரத்னம்] [19th March 1966

போகிறது. அந்த நிலையில் விற்பனை வரியையும் கூட்டிக் கொண்டு போனால் மத்திய தர மக்களும், ஏழை மக்களும் மிகவும் கஷ்டப் படுவார்கள். ஆகவே இருக்கின்ற ½ சத விகித வரியையும் ரத்து செய்துவிட முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தான்யங்களை ரெகுலேட்டட் மார்க்கெட் கமிட்டியில் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் என்று அதாவது மணிலாக்கொட்டையைக் கொடுக்க வேண்டும், மிளகாயைக் கொடுக்க வேண்டும், வெல்லத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, இதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற வியாபாரி களிடத்தில் இருக்கின்ற [illegible]க்களின் நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதில் முடிவு எடுப்ப தற்கு முன்பு இப்போது வியாபாரிகளிடத்தில் எத்தனை குமாஸ் தாக்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஊதியம் கொடுக்கப் படுகிறது? ரெகுலேட்டட் மார்க்கெட் கமிட்டிக்கு இந்தத் தானியங்களைக் கொடுக்க வேண்டும் என்று வந்தால் இவர்களுக்கு வேறு வேலை கொடுக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது சர்ச்சைக்குரிய விஷயம். வியாபார சமூகத்தின் மீது ஓரளவுக்கு நம்பிக்கை வைத்தால் தான் அரசாங்கம் சரியாக நடக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். ரெகுலேட்டட் மார்க்கெட் கமிட்டிக்கு தானியங்களைக் கொண்டு போக வேண்டும் என்று சர்க்கார் உத்தரவும் பிறப்பித்து இப்போது அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் கரும்பு போட வேண்டும் என்று சொன்னால் அல்லது மிளகாய் போட வேண்டும் என்று சொன்னால் அவர்களிடத்தில் பணம் இருக்க வேண்டும், அல்லது மணிலாக் கொட்டை போட வேண்டும் என்று சொன்னாலும் அதற்கும் பணம் இருக்க வேண்டும். இதற்கு விவசாயிகள் கூட்டுறவு சொஸைட் டியை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. அல்லது கடன் கொடுக்கும் பாங்குகளை மட்டும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. தங்களுடைய நகைகளை அடகு வைத்துத்தான் பணத்தைப் பெற வேண்டும். அதற்கும் இப்போது முடியாது. காரணம் தங்கக் கட்டுப்பாடு சட்டம் வேறு இருந்து கொண்டிருக் கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் ரெகுலேட்டட் மார்க்கெட் கமிட்டிக்கு தங்கள் தானியங்களைக் கொண்டு போக வேண்டும் என்றால் அதனால் பலவித இடைஞ்சல்கள் ஏற்படும். இதைப்பற்றி சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

வியாபாரிகளுடைய கணக்கைப் பார்க்கும்போது, விற்பனை வரி இலாகாவில் கூட்டிப்போடும் முறை ஒன்றை வைத்துக்கொண் டிருக்கிறார்கள். இதைப் பெரிய வியாபாரிகளிடத்தில் சொல்வ தில்லை. 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளிடத்தில் உங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கூட்டிப் போட்டுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். இந்தச் சிறிய வியாபாரிகளும் பயந்து போய், 'சரி சாமி' என்று

19th March 1966] [திரு. ர. ஜீவரத்னம்]

சம்மதித்துவிட்டு வந்துவிடுகிறார்கள். இதன் காரணமாகப் பல வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஒழுங்காக இருக்கும் கணக்கைப் பார்த்து, ஒழுங்கான முறையில் வரியைப் போட வேண்டுமே தவிர கூட்டிப் போட்டுக்கொள்வது என்று இருக்கக் கூடாது. வியாபாரிகள் என்றால் சர்க்காருக்கு அவர்களிடத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். சர்க்கார் என்றால், சர்க்கார் சிப்பந்தி கள் அனைவருக்கும் வியாபாரிகளிடத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும், அந்த நம்பிக்கையோடு கணக்கைப் பார்க்க வேண்டும். அந்த நிலையில், கூட்டிப்போடும் முறையை ரத்துசெய்து, இப்படிப் பட்ட பழக்கத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத் திலிருந்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வியாபாரிகளுக்கு இப்போது கொடுக்கப்பட் டிருக்கின்ற எல்லையை சற்று உயர்த்தவேண்டும். 50 ஆயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விலக்கு கொடுத்தால் சிறு வியாபாரிகள் யாதொரு தொந்தரவும் இல்லாமல் வாழக்கூடிய நிலைமை ஏற்படும். அவர்கள் வேறு தொழில் இல்லாததன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட வியாபாரத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் கஷ்டப்பட்டு செய்யப் படும் வியாபாரத்திற்கு அதிகாரிகள் இடைஞ்சல்கள் ஏற்படுத்தக் கூடிய நிலையை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாபார சமூகத்தின் கஷ்டங்களைப்பற்றியும், அவர்களைப் பற்றியும் பேசுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. வியாபார சமூகத்தை நிச்சயமாக நம்பவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இன்று நம்மிடையே காட்சி தருகின்ற கூட கோபுரங்கள், கல்விக் கூடங்கள், பல கல்லூரிகள் இவையெல்லாம் வியாபார சமூகம் அளித்த நன்கொடையின் மூலமாகவும், வியாபார சமூகம் செய்த தர்மங்களின் மூலமாகவும்தான் காட்சி அளிக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவு தர்ம உள்ளம் படைத்த வியாபார சமூகத்தை நம்பி காரியங்களைச் செய்ய வேண்டும், இன்று அவர்களிடத்தில் தவறுதல்கள் நடைபெறு கின்றன என்றால், ஏன் இவ்விதம் நடைபெறுகிறது என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் மூலகாரணம், இப்போதிருக்கின்ற விற்பனை வரி முறைதான் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போதுள்ள விற்பனை வரி விதிப்பு முறை சிறு வியாபாரிகளை மிகவும் பாதிப்பதாக இருக்கிறது. ஆகவே, சிறு வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக் கின்ற எல்லையை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். இதைப்பற்றி இதற்கு முன்னால் இந்த மன்றத்தில் தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆகவே, மத்திய சர்க்காரிடத்தில் அணுகி விற்பனை வரி முறைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[19th March 1966

திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்: கனம் தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற விற்பனை வரித்துறை மான்யத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக உணவுப்பொருட்கள் மீது இருக்கின்ற விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் என்று இதற்கு முன்பாக இந்த மன்றத்தில் எடுத்துப் பேசியிருக்கிறோம். உணவுப் பொருட்களை எடுத்துக்கொள்ளும்போது, அதை உண்டுபண்ணுகின்ற விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்கள் உற்பத்தி செய்தும் இன்றைக்கு நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில் மேலும் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும் என்றால் உணவுப் பொருட்களின் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய சர்க்கார் வெல்லத்தின் மீது வரி விதிக்கப் போவதாகத் தகவல் இருக்கிறது. இது அடுத்த மாதத்திலிருந்து விதிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் வெல்லத்தின்மீது விற்பனை வரி என்று வந்தால், அது விவசாயிகளுக்கு மிகவும் பாதகமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வெல்லம் என்பது எங்கள் பகுதியில் ஒரு குடிசைத் தொழிலாக இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் பெரும்பாலும் விவசாயிகள் 'வெல்லத்தை' தான் நம்பியிருக்கிறார்கள். காரணம் தண்ணீர் வசதியில்லாத இடம், ஆற்றுப் பாய்ச்சல் கிடையாது, கிணற்றுப் பாசனத்தின் மூலமாகத்தான் விவசாயம் செய்யவேண்டும். ஒன்றிரண்டு மாதங்கள் தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட, கரும்புப் பயிர் வந்துவிடும் என்று
10-00 a.m. நினைத்துத்தான் இந்தக் கரும்பை உற்பத்தி செய்கின்றார்கள். ஆனால் இப்போது விற்பனை வரி அதன் மீது வந்தால் அது மிகவும் வியாபாரிகளைப் பாதிக்கும் என்று இந்த நேரத்தில் தங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வியாபாரிகளுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்தால் விற்பனை வரி கட்டவேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. இப்போது விலைவாசிகள் எல்லாம் ஒன்றுக்குப் பத்தாக ஏறி இருப்பதால் 30,000 அல்லது 50,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களுக்குத் தான் விற்பனை வரி உண்டு என்ற திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசியை எடுத்துக்கொண்டால் முன்பு மணிலா பயறு 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் இருந்தது, இன்றைக்கு 145 ரூபாய், 150 ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. 100 மூட்டை மணிலா பயறு வியாபாரம் செய்தால் அவனுக்கு விற்பனை வரி கட்ட வேண்டிய நிலைமை வந்து விடுகிறது. அதைத் தவிர்த்து அரசாங்கம் 50,000 ரூபாய்க்கு மேற்பட்டு வியாபாரம் செய்கிறவர்களுக்கு மட்டும் விற்பனை வரி என்ற நிலைமை இருக்கவேண்டும்

19th March 1966] [திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்]

என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சிறு வியாபாரிகளுக்கு அது ரொம்பவும் நன்மையாக இருக்கும் என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உணவு தானியங்களின் மீதுள்ள வரிகளைக் குறைப்பதோடு, இப்போது எமர்ஜென்சிக்காக விற்பனை வரியை அதிகரித்திருப்பதைத் தளர்த்தவேண்டும். இப்போது எமர்ஜென்ஸி நீங்கியிருக்கிறது. அதிகரித்துள்ள விற்பனை வரியைத் தளர்த்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வை. சங்கரன்:** தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் விற்பனை வரி மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு உள்ள நிலையிலே 1966-67-ம் ஆண்டுக்கு ரூ. 38 கோடி வசூலாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது, நம்முடைய விற்பனை வரி. அதே போன்று இன்னொரு வகையிலே எடுத்துக் கொண்டு பார்த்தாலும், அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டியை எடுத்துக்கொண்டால், மொத்த விற்பனை வரியில் நம் மாநில அளவு 11.3 சத விகிதம் என்று மத்திய அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டு விதத்திலும் எடுத்துக்கொண்டு பார்த்தாலும், இந்த இரண்டையும் அளவு கோலாக எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அந்த அளவுக்கு நம் நாட்டிலே தொழில்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு வியாபாரம் பெருகி இருக்கிறது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. 10 ஆண்டுகளுக்குள் விற்பனைவரி மூன்று மடங்கு அதிகரித்து இருக்கிறது. ரேட்டும் அதிகரித்து இருக்கிறது என்று சொல்லலாம். இதற்கு முக்கிய காரணம், வியாபாரமும் தொழிலும் பெருகி இருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

மொத்தத்தில் இந்தியாவை எடுத்துக்கொண்டு பார்த்தால், விற்பனை வரியானது நம் நாட்டிலே மொத்தத்தில் வரக் கூடியதில் ஒன்பதில் ஒரு பங்காக இருக்கிறது என்பது தெரிகிறது. அதுவே நாம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறோம் என்பதற்குச் சான்று ஆகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய விற்பனை வரியை 2½ சத விகிதத்திலிருந்து 3 சத விகிதமாக உயர்த்த இருக்கிறார்கள். அதனால் ஒரு சில விளைவுகள் இருக்கும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸின் தத்துவம் என்ன என்றால், நம் வரியை விட சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் குறைவாக இருக்கும். அப்போது 'ஸி' ஃபார்ம் வைத்து வாங்குவதால் அனுகூலம் இருக்கும் என்பதுதான். ராஜ்யத்திற்கு ராஜ்யம் வியாபாரம் நடப்பதை வளர்க்கவேண்டும், அதனால் அனுகூலம் கிடைக்க வேண்டும் என்பதுதான் அதன் தத்துவமாக இருக்கிறது. ஆனால் 2½ சத விகிதத்தை 3 சத விகிதமாக ஆக்கிய பிறகு, நம் ராஜ்யத்திலே மல்ட்டி-பாயிண்ட் டாக்ஸ் 2½ சத விகிதமாக இருக்கிறது. அதை விட சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக இருக்கிறது. 'ஸி' ஃபார்ம் இருப்பதின் அர்த்தம்

[திரு. வை. சங்கரன்] [19th March 1966

இல்லாமல் போய்விடும். அதனால் ஏற்படக்கூடிய விளைவு என்ன ஆகும் என்றால் ராஜ்யத்தில் 2½ சத விகிதம் மல்ட்டி பாயிண்ட் டாக்ஸைக்கூட 3 சத விகிதமாக உயர்த்தும் நிர்ப்பந்தம் ஏற்படும். அது பொருந்தாத, விரும்பத்தகாத விளைவாக இருக்கலாம். நாம் 2½ சத விகிதம் ஆக்கியதே, யுத்தத்தை முன்னிட்டு, நமக்கு அதிக வருமானம் வேண்டும் என்றுதான். ஏனென்றால் 2 சத விகிதமாக இருந்தபோதுகூட 2 சத விகிதமே அதிகம் என்று பல பக்கங்களிலிருந்து குரல் வந்து கொண்டிருந்தபோது, 2 சத விகிதத்தையே அதிகபட்சமாக வைத்துக்கொண்டிருந்தபோது, யுத்தத்தின் காரணமாக 2½ சத விகிதம் ஆக்கினோம். இப்போது ஸி.எஸ்.டி.-யை 3 சத விகிதம் ஆக உயர்த்துவதால் நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய 2½ சத விகிதத்தையும் 3 சத விகிதமாக ஆக்கும் நிலைமை வந்து விடும் என்று அபாய எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. அதை நமது ராஜ்யம் உணர்ந்து செயல்படவேண்டும். பத்திரிகைகளில் கூட செய்தி வந்தது, நம் ராஜ்யம் உட்பட பல ராஜ்யங்கள் ஏற்கெனவே முறையீடு செய்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது. வலுவாக ஸி.எஸ்.டி.-ஐக் குறைக்க, முன்பு மாதிரியே இருக்க, நம் அரசாங்கம் ஆக்கமாகச் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, இன்றைக்கு ஷுகருக்கு 8 ரூபாய்க்கு மேல் கூட்டியிருக்கிறார்கள். அதில் எந்த அளவுக்கு நமக்குப் பங்கு கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

நாம் இரண்டு கமிட்டிகள் போட்டோம். த்ரீமென் கமிட்டி ஒன்று சிம்ப்ளிஃபிகேஷன் ஆப் ரூல்ஸுக்காகப் போட்டோம். அந்தக் கமிட்டியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக அறிகிறேன். அதன் மீது மேற்கொண்டு என்ன செய்யப்பட்டிருக்கிறது, என்ன செய்யப்பட இருக்கிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன். அதே போன்று டாக்டர் லோகநாதன் கமிட்டி, சேஞ்ச் ஆஃப் ரேட்ஸ் பற்றி ஆராய்வதற்காக அப்பாயின்ட் செய்யப்பட்டது. பரிசீலித்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாக அறிகிறேன். மேற்கொண்டு என்ன செய்யப்பட்டிருக்கிறது, அல்லது என்ன செய்ய இருக்கிறது என்ற அந்த விவரங்களையும் அறிய விரும்புகிறேன்.

நான் முதலிலே சொன்னது போல 38 கோடி ரூபாய் அளவுக்கு, 10 ஆண்டுகளுக்குள் மூன்று மடங்குகளாக நமது சென்னை ராஜ்ய விற்பனை வரி அதிகரித்திருக்கிறது. 15 கோடி ரூபாய்க்கு வியாபாரிகள் உறுதி கொடுக்க முடியும் என்று சொன்னால், சலுகைகள் கொடுக்க; வரியைக் குறைக்கக் கூட முயற்சிக்கிறேன் என்று அமைச்சர் முன்பு சொன்னது உண்டு. அந்த வாக்குறுதியைப் பூரணமாக இப்போது அளிக்கமுடியாது இருக்கலாம். காரணம் இப்போது தொழில் வளர்ச்சி எல்லாம் ஏற்பட்டு, எவ்வளவோ திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு அதே நிலைமையைச் சொல்ல முடியாது. சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக ஆகிக்கொண்டு போகவேண்டியதுதான். ஆனால் This is an occasion for showing small mercies—

19th March 1966] [திரு. வை. சங்கரன்]

அமைச்சர் நினைத்தால் ஓரளவு சிறு சிறு சலுகைகள் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. இப்போது வருமானம் மூன்று மடங்காக அதிகரித்திருக்கும்போது 1 கோடி ரூபாய், 2 கோடி ரூபாய் அளவுக்கு, நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு பொருள்களுக்கு வரியை நீக்கவோ அல்லது குறைக்கவோ கண்டிப்பாக யத்தனம் எடுத்துக்கொள்ளலாம். நாட்டிலே பல திட்டங்கள், பல காரியங்கள் செய்யவேண்டுமென்றாலும், எதிர்பார்த்ததைவிட அதிகமாகக் கிடைத்திருப்பதால் ஒரு சில சலுகைகளைக் கொடுத்து, சமுதாய நலனைக்கருதி, பொது மக்களுடைய நலனைக்கருதி, பொது மக்களிடத்தில் நல்ல பெயர் சம்பாதிக்க நல்ல காரியங்கள் செய்யலாம். உதாரணமாக எடுத்துக் கொண்டால் ஃபுட்க்ரெயின்ஸ் சம்பந்தமாக, அதன் மீது உள்ள வரியை எடுக்க வேண்டுமென்று பல காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். அரசாங்கத்தில் நல்ல முடிவு எடுக்கப் போவதாகச் செய்திகள் வந்தன. அதைச் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. உணவு தானியங்களுக்கு வரியை எடுப்பதோடு இன்றைக்குப் பாலை எடுத்துக்கொண்டால் வரியை எடுக்க இரண்டு விதத்தில் நல்ல காரணங்கள் இருக்கின்றன. அது ஒரு உணவுப் பொருள் என்பது ஒன்று. அத்தியாவசியமாக குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் தேவைப்படும் உணவுப் பொருள் அது. இன்னொன்று, உணவுப் பொருள் என்று இல்லாமல் பெரிஷபிள் என்று கூட எடுத்துக் கொள்ளலாம். காய்கறிகளுக்கு எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருப்பது போல் தான் இதற்கும் கொடுக்க வேண்டும். பாலை ஒரு சில மணிகளுக்கு மேல் வைக்க முடியாது. ஃபுட்க்ரெயின்ஸுக்கு வரியை எடுக்கும்போது பாலுக்கும் வரியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது சொன்ன அளவுக்கு இல்லாவிட்டாலும், இதையும், கவனிக்கலாம். அதாவது ஃப்யூயல் உணவுப் பொருள்களைத் தயாரிக்க உபயோகப்படும் பொருள். மற்றதைப் போல வலியுறுத்த முடியாது என்றாலும், இதையும் பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் லிமிட்டை எடுத்துக்கொண்டால் 10,000 ரூபாய்க்கு எக்ஸெம்ப்ஷன் லிமிட் போட்டிருக்கிறார்கள். நல்ல முறையில் எதிர்பார்த்ததற்கு மேல் வரி வந்திருப்பதால் இந்த லிமிட்டைக் கூட 25,000 என்று வைத்தால் கூட கெடுதல் ஒன்றும் வராது என்பது உறுதி. அதே போன்று கம்பவுண்டிங் லிமிட் 50,000 என்று இருக்கிறது. அதை 75,000 ஆக மாற்ற முடியுமா என்று பரிசீலிக்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வளவு வாய்ப்பு இருக்கும்போது அதைச் செய்வதில் தவறு இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வை. சங்கரன்] [19th March 1966

அதே போன்று இன்றைக்கு 2½ சத விகிதமாக ஆக்கியிருக்
கிறோம். 2 சத விகிதம் என்பதை 2½ ஆக ஆக்கும்போது
எல்லோரும் கேட்டுக்கொண்டோம். எமர்ஜென்ஸி என்ற
காரணத்தை வைத்துக்கொண்டு உயர்த்தவேண்டுமென்று சொல்ல
லப்படுகிறது, எமர்ஜென்ஸி முடிந்தவுடன் மறுபடியும் 2 சத விகித
மாக ஆக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். கிடைத்த
வருமானத்தை விட்டு விடக் கூடாது என்று 2½ சத விகிதத்தி
லேயே எமர்ஜன்ஸிக்குப் பிறகும் இருக்கக் கூடாது. எமர்ஜென்ஸி
முடிந்தவுடன் அதை 2 சதவிகிதமாக ஆக்கவேண்டும். அப்புறம்
2½ சத விகிதம் வைத்துக்கொள்வதற்கு எந்த விதக் காரணமும்
நியாயமும், வாதமும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையில்
இப்பொழுது எமெர்ஜன்ஸி அநேகமாக முடிந்துவிட்ட நிலைமையில்
2½ என்பது பழையபடி 2 ஆக மாற்றப்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஷெட்யூலில் எக்ஸைஸ் டியூட்டி
லிருந்து எக்ஸெம்ப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது
ஷெட்யூலில் ஐந்தாவது ஐட்டெம் 'ஷுகர் இன்க்ளுடிங் ஜாகரி
ஆண்டு கர்' என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது நாட்டு
வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகிய பொருள்களுக்கும் சர்க்கரை
யோடு சேர்த்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.' போர்டில்
இது சம்பந்தமாக ஒரு சந்தேகம் கிளப்பப்பட்டிருக்கிறது.
மதுரை சேம்பர் ஆப் காமர்ஸ் வரையிலும் கூட கம்யூனிகேஷன்
வந்திருக்கிறது. அதிலே போட்டிருக்கக் கூடிய மற்ற பொருள்கள்,
அதாவது டொபாகோ, மற்றும், கார், ஸ்பிரிட் ஆகியவைகளுக்
கெல்லாம் எக்ஸைஸ் டியூடி இருப்பதினால் தான் எக்ஸெம்ப்ஷன்
கொடுக்கப்பட்டிருக்கிறது, ஜாகரி ஆண்டு கர் என்பது தவறாகச்
சேர்க்கப் பட்டிருக்கவேண்டும், 'இன்க்ளுடிங் ஜாகரி ஆண்டு கர்'
என்பதை தோட்டு ஷெட்யூலிலிருந்து எடுத்துவிட்டால் என்ன?
அது தவறுதலாகத் தான் உள்ளே போயிருக்கும் என்று ஒரு
சந்தேகம் கிளப்பப்பட்டு, வியாக்கியானம் தரப்படுகிறது. அது
காரணமல்ல. உண்மையிலேயே நாட்டுச் சர்க்கரை தயாரிப்பது
என்பது ஒரு கைத்தொழிலாக இருப்பதினால் அதற்கு எக்ஸெம்ப்
ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்
தான் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. போடப்
பட்டுள்ள இடம் தவறாக இருந்தாலும், அதற்குக் கிடைக்கக்கூடிய
நியாயமான சலுகையை எடுத்துவிடக்கூடாது. இதுபோன்ற ஒரு
சந்தேகத்தைக் கிளப்பி இன்றைக்கு மதுரை—இராமநாதபுரம்
சேம்பர் ஆஃப் காமர்ஸுக்கு இது சம்பந்தமாக ஒரு கம்யூனிகேஷன்
வந்திருக்கிறது என்று அறிகிறேன். ஜாகரி ஆண்டு கர்-க்கு கிடைக்
கக்கூடிய சலுகையை, அதாவது எக்ஸெம்ப்ஷன் கொடுத்
திருப்பதை எடுத்துவிடக்கூடாது.

அடிஷனல் எக்ஸைஸ் டியூடி சம்பந்தமாக ஏற்கனவே சொல்லி
யிருக்கிறேன். பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறேன்.
இப்பொழுதுள்ள போர்த் பினான்ஸ் கமிஷன் சிபார்சு மூலம்
நமக்குச் சற்று அதிக அளவு கிடைக்க இருக்கிறது. 1961-ம்

19th March 1966] [திரு. வை. சங்கரன்]

ஆண்டு வருமானத்தை பேஸாக வைத்துக்கொண்டு ரூ. 2 கோடி
85 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருந்தது. போன மூன்றாவது
கமிஷன் அதற்கு மேலே 9 சத விகிதம் உள்ளதைப் பகிர்ந்து
கொடுக்கலாம் என்று சிபார்சு செய்திருந்தார்கள். இந்த விகிதா
சாரப்படி 11.3 சதவிகிதம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்
மூலம் ரூ. 4 கோடி சொச்சம் இந்த ஆண்டு வரக்கூடியது என்று
நாம் எதிர்பார்க்கலாம். இருந்தபோதிலும், 1956-லிருந்து இது
வரைக்கும் நம்முடைய இதர பொருள்களின் மீது உள்ள விற்பனை
வரி வருமானம் 4 பங்கு அதிகரித்திருக்கிறது. இப்பொழுது உள்ள
நிலைமையை எடுத்துக்கொண்டால் இரண்டு பங்கு வரையில் தான்
இது போன்ற எக்ஸைஸ் டியூடி மூலமாக நமக்குக் கிடைக்கிறது.
எக்ஸைஸ் டியூடி மூலமாக நமக்கு லாபம் இல்லை. சுலபமாக
கலெக்ட் பண்ணலாம் என்ற ஒரு வசதியைத் தவிர. ஆனால்,
இதனால் நமக்கு ஒரு சில கோடி ரூபாய்கள் நஷ்டம். இதுபற்றி
மத்திய சர்க்காரிடத்திலே எடுத்துக் கூற வேண்டும். பினான்ஸ்
கமிஷனிடம் கூறியிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்
கிறது. இருந்த போதிலும், இதன் மூலம் நமக்கு லாபம் இல்லை.
ஆண்டுதோறும் ஒரு சில கோடி ரூபாய்களை நாம் இழந்து
விடுகிறோம் என்பதை மனத்திலே கொண்டு மேலும் எதாவது
பொருளை ராஜ்ய விற்பனை வரியிலிருந்து எக்ஸைஸ் டியூடியாக
மாற்றினால் அந்த அளவுக்கு நமக்கு வருமான இழப்பு ஏற்படு
கிறது என்பதை நாம் நன்றாக உணரவேண்டும் என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

என்டர்டைன்மென்டு டாக்ஸ் சம்பந்தமாக ஒரு சில
வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமங்களில் டூரிங்
சினிமாக்கள் நடைபெறுகின்றன. அவைகள் பஞ்சாயத்துகளுக்கு
என்டர்டைன்மென்டு டாக்ஸ் கொடுக்கவேண்டியிருக்கிறது. அது
ஓரளவுக்கு அதிகமாகப் போய்விட்டது. ரூரல் டூரிங் சினிமாஸ்
சம்பந்தப்பட்டவரையில் போடக்கூடிய முதல், வருமானம், செலவு
இவைகளைப் பார்த்தால், அவைகளுக்குக் கட்டுபடியாகவில்லை
என்ற பெரிய மனத்தாங்கல் இருந்துகொண்டிருக்கிறது. 'இட்
வில் பி கில்லிங் தி கூஸ் தட் லேஸ் தி கோல்டன் எக்' என்ற
அளவுக்குப் போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
அதாவது ஓரளவுக்கு ரேட்டைக் குறைப்பது பற்றிப் பரிசீலனை
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பெட்டிங் டாக்ஸ். முன்னால் இது சம்பந்தமாக
தத்துவ அடிப்படையில் பேசப்பட்டிருக்கிறது. நமக்கு இதன்
மூலம் ரூ. 60 லட்சம்தான் வருமானம் வருகிறது. ரூ. 60 லட்சம்
வருமானம் வருகிறது என்பதற்காக நாம் குதிரைப் பந்தயத்தை
வளர்ப்பதா? அதற்கு ஆக்கம் கொடுப்பதா என்பது ஒரு முக்கிய
மான விஷயம். இதற்கு ஒரு சாக்கு சொல்லப்படுவது
என்னவென்றால், நல்ல குதிரைகள் வளர்க்கப்படுவதற்கு இம்மாதிரி
குதிரைப் பந்தயங்கள் தேவை, அப்பொழுது தான் நல்ல
குதிரைகள் வளர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பது. நல்ல
குதிரைகளை வளர்க்கவேண்டுமென்றால், அதற்கு என்று தனியாக

[திரு. வை. சங்கரன்] [19th March 1966

சில லட்ச ரூபாய் ஒதுக்கினால் கூடப் பரவாயில்லை. மறைமுகமாக
இதற்காக மக்கள் பணத்தை விரயம் செய்து, மக்களுடைய வாழ்க்
கையைக் கெடுக்கக்கூடிய, பாழாக்கக்கூடிய குதிரைப் பந்தயத்
திற்கு நாம் ஆக்கம் கொடுக்கக் கூடாது. நாட்டு மக்களுடைய
வாழ்க்கையைக் கெடுத்து, அதன் மூலம் மறைமுகமாக நமக்கு
ரூ. 60 லட்சம் வருமானம் வரவேண்டிய அவசியமில்லை. இது ஒரு
மகா பாதகம். பல பேர்களுடைய வாழ்க்கை இதனால் பாழாகிப்
போய்விடுகிறது. ஆகவே, குதிரைப் பந்தயத்தை எடுத்துவிட்டு,
நல்ல குதிரைகளை வளர்ப்பதற்காக வேண்டுமானால் சில லட்ச
ரூபாய்களைத் தனியாக ஒதுக்கலாம் என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய நகரத்தில் கமர்ஷியல் டாக்ஸ்
ஆபீஸுக்கு ஒரு நல்ல கட்டடம் வேண்டும் என்பது பற்றி பல
ஆண்டுகளாகச் சொல்லி வருகிறேன். மந்திரி அவர்களிடம் கூடச்
சொல்லியிருக்கிறேன். கட்டடம் கட்டுவதற்கு இடம் கூடத் தேர்ந்
தெடுக்கப்பட்டுவிட்டது, எமெர்ஜென்ஸி என்று ஒரு வேளை டெபர்
பண்ணிவிடப்படுமோ என்ற ஐயம் இருக்கிறது என்று
கூறினார்கள். இப்பொழுது அநேகமாக எமர்ஜென்ஸி நிலைமை
தீர்ந்துபோய்விட்டது என்று நாம் கருதவேண்டும். ஆகவே,
ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற இடத்தில் உடனே
கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸுக்கு ஒரு நல்ல கட்டடத்தைக் கட்டிக்
கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

'ஸி' பாரம் சம்பந்தமாக ஏற்கனவே ஒரு 'கன்ஃப்யூஷன்'
இருக்கிறது. இதுபற்றி கவர்ன்மெண்டுக்கு 'ரெபர்' பண்ணி,
'கிளாரிபிகேஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. மாதா மாதம்
'ஸி' பாரம் அனுப்பவேண்டும் என்று நடுவில் வந்ததால் வியாபாரி
களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இப்பொழுது வருஷத்
திற்கு ஒரு தரம் அனுப்பினால் போதும் என்று சொல்லப்படுகிறது.
இந்த முறை இந்த வருஷம் என்று இல்லாமல் நிரந்தரமாக
இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் பார்த்தால் 'பிஸினஸ்'
வீக்காக இருக்கிறது. நாட்டில் பணம் சம்பந்தமாக மந்தம்
ஏற்பட்டிருப்பதால், வியாபாரத்திலும் ஓரளவுக்கு மந்தம்
ஏற்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் 30 சத விகிதத்திற்கு கூட்டிப்
போடுகிறார்கள். ஓரளவுக்குக் கொஞ்சம் சலுகை காட்டவேண்டும்,
கொஞ்சம் தாட்சண்யம் காட்டவேண்டும். இன்றைக்கு பிஸினஸ்
நன்றாக ஓடவில்லை. பழைய நிலைமையை மனதில் வைத்துக்
கொண்டு 30 சத விகிதம் எஸ்டிமேட் போடக்கூடாது. இஷ்டம்
போல எஸ்டிமேட் போடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.
பிஸினஸ் வீக்காக இருப்பதினால் எஸ்டிமேட் அதிகமாக போடக்
கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். [illegible]
டிபுடி அதிகமாகப் போடுவதைப் பற்றி மத்திய [illegible]
இனிடம் எடுத்துக் கூறவேண்டும். [illegible]

19th March 1966] [திரு. வை. சங்கரன்]

ஓரளவுக்கு வியாபாரம் பாதிக்கப்படும். இந்த ராஜ்யத்திலுள்ள
நிலைமையை மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறவேண்டும் என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ளுகிறேன். பப்ளிக்
ரிலேஷன்ஸ் ஆபீஸர் என்ற ஒரு ஆபீசர் இருந்தால், அதுவும்
முக்கியமான நகரங்களில், ஜில்லா தலைநகரங்களில், அம்மாதிரி
உத்தியோகஸ்தர்கள் இருந்தால் வியாபாரிகள் எல்லோரும்
ஓரளவுக்கு நிலைமையைப் புரிந்துகொண்டு செயல்படுவதற்கு வாய்ப்
பாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எப்பொழுதும் வரி அதிகமாக இருந்தால் எவேஷன் இருக்கும்.
வரி குறைந்தால் அதிகமாக வசூல் ஏற்படுகிறது என்று சொல்லப்
படுகிறது. வரியை அதிகரித்தால் எவேஷன் இருக்கத்தான்
செய்யும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து,
என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. சி. பொன்னுசாமி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் விற்பனை வரி
டிமாண்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்
படுகிறேன். ஒரு காலத்தில் மது விலக்கைக் கொண்டு வரவேண்டும்
என்பதற்காக இந்த விற்பனை வரி ஏற்பட்டது என்பதை
எல்லோரும் அறிவோம். ஆரம்ப காலத்தில் அதுவும் குறிப்பாக
உலகத்திலே இல்லாத ஒரு புதிய வரியாக இது தமிழ் நாட்டில்
கொண்டுவரப்பட்டது. நாளடைவிலே இது நல்ல வரியாக
அமைந்துவிட்டது மட்டுமல்ல. பல ராஜ்யங்களும் அதைப்
பின்பற்றக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. அந்த வகையில்
நான் அதை வரவேற்கிறேன், ஒத்துக்கொள்ளுகிறேன். ரூ. 18 கோடி
யாக ஆரம்பத்தில் இருந்த வருமானம் இன்று ஏறக்குறைய ரூ. 41
கோடியாக உயர்ந்துவரக்கூடிய நிலைமையில் இந்த வரி இருக்கிறது.
இவ்வளவு அதிகமாக வருமானம் வந்தும் கூட, சாதாரணமாக
வெல்லம் போன்ற கிராமப்புறங்களிலுள்ள உணவுப் பொருள்
களுக்கும் இந்த வரியை விதிப்பது என்று ஏற்பட்டால், அது
கண்டிக்கக்கூடியது. இது ஒரு கைத்தொழில் மட்டுமல்ல, லட்சக்
கணக்கான கிராமத்திலுள்ள பாமர மக்கள் இதைப் பயன்படுத்து
கிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்
படி ஏதாவது ப்ரொபோசல் சர்க்காரிடத்தில் இருந்தாலும்,
அதைத் தயவு செய்து பரிசீலனை செய்து அதைக் கொண்டு வரா
மல் நிறுத்தி வைப்பது நல்லதாக இருக்கும் என்று சொல்ல
விரும்புகிறேன். நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக, இலங்
கைக்கு நம் ராச்சியத்திலிருந்து, ஏராளமாக அச்சுவெல்லம்,
மண்டை வெல்லம் எல்லாம் போய்க்கொண்டு இருந்தது. ஆனால்
அதிகாரிகள், இந்தச் சரக்கு மருந்துக்கு உபயோகமாகிறது என்று
இதைத் தடை செய்து உத்தரவைப் போட்டார்கள். அதற்குப்
பிறகு நாங்கள் ஒரு டெபுடேஷன் சென்று அதிகாரிகளிடம் எடுத்
துச் சொன்னோம், இது ஒரு குடிசைத் தொழில் என்று. அவர்
[illegible] முடிவு செய்கிறோம் என்று சொன்னார்

கள். விசாரித்த பிறகு, மண்டை வெல்லம் என்ருல், குறிப்பாக விவசாயிகள் கிராமங்களில் பல மைல்கள் கரும்பை மில்களுக்குத் தூக்கிச் சென்று, அதை விற்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அவர்கள் குடிசைத் தொழிலாகச் செய்துக் கொண்டிருக்கும், கிராமக் கைத்தொழில் இது என்றும் மண்டை வெல்லம் இங்கேயும், ஆந்திராவிலும் லட்சக்கணக்கான டன் இருக்கிறது என்றும் கண்டுகொண்டு தந்தியில் ஆர்டர் போட்டு, அந்தத் தடையை ரத்து செய்தார்கள், அதேபோன்று இன்றைக்கும் அது கிராமக் கைத்தொழில். அதைப் பற்றி நன்கு பரிசீலனை செய்து, எந்த விதமான புதிய வரியும் இந்தக் குடிசைத் தொழிலின் பேரில் ஏற்படுத்தக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

விசேஷமாக, முக்கியமாக, உத்தியோகஸ்தர்கள் பற்றிப் புகழ்ந்தாலும், ஒரு சில உத்தியோகஸ்தர்கள், மேல் அதிகாரியின் உத்தரவு பெற்ருே அல்லது அவர்களாகவேயோ சில காரியங்களைச் செய்கிருர்கள். அதனுல் வியாபாரிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன ள்ன்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பாக எனக்கு தூத்துக்குடியிலிருந்து ஒரு ஃபோன் மெஸேஜ் வந்தது. அங்கே ரத்தினம் **Foodstuff Supply Company** என்ற பெயரில் ஒருவர் கம்பெனி வைத்திருக்கிருர். அவர்கள் சிக்கரி போன்ற பொருள்களை உற்பத்தி செய்கிருர்கள். அதனுல், இறக்குமதி குறைகிறது, அந்நியச் செலாவணி லாபம் கிடைக்கிறது. அவர்கள் ரூ. 14,000 வரி கட்டவேண்டும் என்று போடப்பட்டது. அவர்கள், ரூ. 7,000 கட்டிவிட்டு, பாக்கித் தொகையைக் கட்ட தவணை வாங்கியிருக்கிருர்கள். அந்தத் தவணை முடிவில் அவர்களால் கட்ட முடியவில்லை. இன்னும் கொஞ்சநாள் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிருர்கள். ஆனுல், அங்கே உள்ள அதிகாரி "உங்களுடைய சாமான்களை ஜப்தி செய்வோம்; உங்களை அவமானப்படுத்தினுல்தான் கொடுப்பீர்கள்; அவமானப்படுத்த வேண்டும் என்று உத்தரவு" என்று சொல்லி அவரிடமிருந்து சாதாரணமாக ரூ. 300, 400 அல்லது அதிகம் போனுல் ரூ. 700 பெறக்கூடிய டைப் மெஷின்களை எடுத்துச் சென்றிருக்கிருர்கள். அந்த வியாபாரி மதுரையில் கமிஷனரிடம் சென்று ஸ்டே ஆர்டர் வாங்கி வந்திருக்கிருர். இந்த முறையில் நிர்வாகத் துறையினர் நடந்து கொண்டால் மக்களிடத்தில் அது ஒரு கெட்ட எண்ணத்தை சர்க்கார்மேல் ஏற்படுத்திவிடுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இது பற்றி உடனடியாக விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுத்தால்தான், இது போன்று மேலும், மேலும் நடக்காமல் பாதுகாக்க முடியும். அப்படிச் செய்யாவிட்டால் ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை குறைந்துபோகும் நிலைமைதான் உருவாகும். அவர் எவ்வளவோ கண்ணியமான வியாபாரி. எந்தக் குற்றமும் செய்தவர் அல்ல, வியாபாரத்தில் இறக்குமதியைக் குறைத்துவிடும் அளவுக்கு இக்கரி போன்ற பொருளை உற்பத்தி செய்கிருர்கள். அப்படி அவர்கள் தயார் செய்து பவுடராக மாற்றி விற்பனைக்கு வெளிப்

பதால், அந்நியச் செலாவணி பெரும் அளவிற்கு, மிச்சம் ஆகும் அளவுக்குச் செய்கிருர்கள். அப்படிப்பட்டவரை இப்படி நடத்துவது, தமிழன் பண்புக்கே, சர்க்காருடைய பண்புக்கே குறைவாக இருக்கிறது. ஆகவே, இது பற்றித் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

செக் போஸ்டுகளில், லாரிகளை நிறுத்தி, நிர்ப்பந்தம் செய்கிருர்கள் 10 மணி, 12 மணி நேரம், நிறுத்தி விடுகிருர்கள். அது மட்டுமல்ல, பெனல்டி, 1,000, 1,500 என்று போட்டுவிடுகிருர்கள். பிற்பாடு ரெகார்டுகளைப் பார்த்து சரி என்று கண்டதும், அந்தத் தொகையைத் திருப்பிவாங்க மாதக் கணக்கில் ஆகிவிடுகிறது. நானே அப்படிப் பட்ட நிலையை அனுபவித்திருக்கிறேன். 17, 18 லாரிகளை, செக் போஸ்டில் ரெகார்டுகளைக் காணவில்லை என்று இப்படித்தான் நிறுத்திவிட்டார்கள். இம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சரிடம் வந்தேன். அவர்கள் உடனடியாக அதிகாரியிடம் விஷயங்களை விசாரித்துப் பார்த்தில், இப்பொழுது, ஒரு பாரம் வைத்திருக்கிருர்கள், 'கன்சைனர்-கன்சைனி' பாரம் வைத்திருக்கிருர்கள், அதைப் பூர்த்தி செய்து இருந்தால் கஷ்டம் இல்லை என்று தெரிந்தது. இந்த விஷயத்தை ஏ.ஸி.டி.ஓ. சொல்லியிருக்கலாம். சொல்லாமலேயே செய்வதால் தான் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

ஏழை விவசாயிகள், நெல் பிடிக்க, சாக்குகளை, 20, 30 என்று கையில் கொண்டு போகும் போது, அதற்கு வரி என்று பிடித்து விட்டு, 'மந்திரியிடம் போய்ச்சொல்லு; போ, அப்பீல் பண்ணிக் கொள்' என்று சொல்லுகிருர்கள். சிறிய விவசாயிகளை இப்படி நிர்ப்பந்தம்செய்து அவமானப் படுத்தும் சூழ்நிலை விற்பனை வரி இலாகாவினரிடம் இருக்கிறது. அப்படிப் பட்ட கோளாறுகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப் பட்ட கோளாறுகளைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் விசாரணை செய்து, அப்படி இருந்தால், அது மக்களுடைய மனதில் கஷ்டத்தை ஏற்படுத்தும் என்று கருதி அவற்றைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

போடும் வரியைக் கட்டத் தயார், யாராவது "இவேட்" செய்தால் அதற்கு எந்த விதமான தண்டனை கொடுத்தாலும், அதை ஏற்கத்தயார். அனுவசியமாக வியாபாரிகளைத் தொந்தரவு செய்வது என்ருல், அது மக்களிடையே பரபரப்பை உண்டாக்கும், அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் தலைவர் அவர்களே, விற்பனை வரி நம்முடைய ராச்சியத்திற்கு வருமானம் அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான வரியாக இருக்கிறது. ஆகையினுல்தான் முன்பு இதை ஒருவர் காமதேனு என்று கூறினர். இப்பொழுது இந்த வரி நிலைத்து விட்ட காரணத்தினுல், இந்த வரி நியாயமானதா இல்லையா

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [19th March 1966

என்ற பிரசினைக்கு இடம் இல்லை. அரசாங்க வருமானத்தில் கிட்டத் தட்ட 20 சதவிகித வருமானம் விற்பனைவரிகள் மூலம் கிடைக் கிறது. ஆகவே, இந்த வரியை நியாயமான அளவிற்கு விதித்து, கறாராக வசூல் செய்து பெறவேண்டிய அளவு வருமானத்தைப் பெற வேண்டும் என்கிற ஒரே நோக்கத்தில்தான் இந்த மானியக் கோரிக்கை பற்றிப் பேச விரும்புகிறேன்.

இதுவரை இந்த வரி இனத்தின் மூலம் கிடைக்கும் வருமானத் தைப் பார்க்கும்போது ஏற்கனவே ஒரு தரம் சுட்டிக்காட்டியது போல, எந்த அளவிற்கு நம் நாட்டிலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு விற்பனை வரி வசூல் பிரதி பலிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போன்று இப்பொழுது பார்த்தாலும்கூட, 1961-லிருந்து, 1964- வரைக்கும், வசூல்களைப் பார்க்கும் போது, விற்பனை வரியில் அதிக மான வசூல் ஏற்படவில்லை. ஆனால், 1965-க்குப் பிறகு, வசூல் அதிகரித்திருக்கிறது. 1963-லே ரூ. 28,65,00,000 வசூல் ஆகியிருக் கிறது ; 1965-66 ரிவைஸ்ட் எஸ்டிமேட்டின் படி, ரூ. 38,29,00,000 என்றிருக்கிறது. 1966-67-ல் எதிர்பார்ப்பது, ரூ. 38,32,00,000. இது நம்முடைய ராச்சிய விற்பனை வரி மூலம் மட்டும் ; இந்த அதிகமாக எதிர்பார்ப்பது, இப்பொழுது விதித்திருக்கும் விகிதாசாரப்படி பூராவாக வசூல் செய்தால் கிடைக்கும் என்று அல்லது சமீபத்திலே ½ சதவிகிதம் உயர்த்தியதனாலா இந்த அதிகப்படியான உயர்வு எதிர்பார்க்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். கடந்த ஆண்டிலே, கொஞ்சம் துரிதமாக, கடுமையாக, கறாராக வசூல் செய்யவேண்டும் என்று எடுத்த முயற்சிகள் காரணமாக ஏராள மான பலன்கள் கிடைத்திருக்கின்றன என்பதுதான் 1965-ல் அதிக வசூல் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம். இந்த வரியைக் கறாராக வசூல் செய்ய வேண்டும் என்றால், சிறிய வியாபாரிகளைத் தொந்த ரவு செய்ய வேண்டும் என்று அர்த்தம் இல்லை. சிறிய வியாபாரி கள் மோசடி செய்கிறார்கள் என்கிற காரணத்திற்காக நடவடிக்கை எடுத்த காலத்தில் இந்த சபையிலேயே பல கனம் அங்கத்தினர் கள், இந்த வரி வசூலிக்கும் இலாகாவையே குறை கூறியதும் உண்டு. சிறிய வியாபாரிகள் அவர்களுடைய கஷ்டம், தொந்தரவு தாங்கமுடியாமல், அதிகமாக வரி செலுத்தக் கூடிய மொத்த வியா பாரிகளோடு சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்த காலமும் உண்டு. அதற்கு ஓரளவு செவி சாய்த்து நம்முடைய அரசாங்கமும், பல கட்ட விற்பனை வரியாக இருந்ததை பல பண்டங்களுக்கு ஒரு கட்ட விற்பனை வரியாகவும் கொண்டு வந்தார்கள். இப்பொழுது கிளர்ச்சி எப்படி ஆரம்பித்திருக்கிறதென்றால், ஒரு முனை விற்பனை

10-30 a.m. வரியிலிருந்து பலமுனை விற்பனை வரியாக மாற்றவேண்டும் என்ற கிளர்ச்சியும் ஆரம்பமாகி இருக்கிறது. இன்னொரு பக்கத்தில், கடுமையாக வசூல் செய்வதற்கு எடுத்த முயற்சியை எதிர்த்து எல்லா வியாபாரிகளும் ஒன்று சேர்ந்து கூக்குரல் போட்டார்கள். அதற்குப் பின்னால் அரசாங்கமும் என்ன செய்துவிட்டது? வரி வசூலிப்பதற்காக அரசாங்கம் மேலும் அதிகாரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட்டு,

19th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பேரில், அந்த மசோதாவும் வாபஸ் பெறப்பட்டது. அதற்குப் பின்பு இந்த வியாபாரிகள் வாக்களித்தபடி அதிகமாக வசூலாகும் என்பதற்கு என்ன அறிகுறி இருக்கிறது? அரசாங்கம் போடும் பட்ஜெட் எஸ்டிமேட் எப்படி இருக்கவேண்டும்? வியாபாரிகளு டைய வார்த்தையை நம்பித்தான் அரசாங்கம் பட்ஜெட் எஸ்டிமேட் தயார் செய்வதா? 15, 20 வருஷங்களாக, வியாபாரிகளுடைய சரித் திரத்தை எடுத்துப் பார்த்தால், வரி 'எவேஷன்' தான் அதிகமாக இருக்கிறது. அரசாங்கம் விதிக்கக்கூடிய வரியை, வியாபாரிகள் ஜனங்களிடத்திலிருந்து வசூல் செய்து கொடுக்கிறார்களே தவிர, எந்த வியாபாரியும் தன்னுடைய லாபத்திலிருந்து கொடுத்து விடுவதில்லை. ஜனங்களிடமிருந்து விற்பனை வரியாக வசூல் செய்து, அப்படி வசூல் செய்த தொகையைத்தான் அரசாங்க கஜானாவுக்குக் கட்டவேண்டும். அப்படியிருக்கக்கூடிய வரியிலே 'எவேஷன்' செய்வதைத் தடுக்கவேண்டும் என்பதிலே அரசாங்கத்திற்கு எங்களைவிட அக்கறை அதிகமாக இருக்கவேண்டும். வரி 'எவேட்' பண்ணுவதைத் தடுக்கவேண்டும் என்பதை நான் எதற் காகச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், புதிய வரிகள் போடக் கூடாது என்பதற்காகத்தான். போட்ட வரியைச் சரியாக வசூல் செய்யாமல், அதை ஏய்க்க இடம் கொடுத்துவிட்டு, அதற்காக நடவடிக்கை எடுக்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுத்துவிட்டு, புதிய வரிகள் போட வேண்டும், அதிக வரிகள் போட வேண்டும் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

விற்பனை வரி வசூலிப்பதிலே அதிகாரிகள் கடுமையாக நட வடிக்கை எடுத்தார்கள். பல பெரிய இடங்களில் சோதனை செய் தார்கள். பெரிய இடங்களில் சோதனை செய்த காரணத்திற்காக, என்ன இப்படி பெரிய இடத்தில் எல்லாம் இவர்கள் சோதனை செய்து அரசாங்கத்திற்கு நண்பர்களாக இருக்கக்கூடியவர்களுக் கெல்லாம் துன்பத்தை உண்டாக்குகிறார்களே என்ற எண்ணம் ஏற்பட்டதோ என்னவோ, அதனால், சோதனைகளையெல்லாம் திடீ ரென்று நிறுத்தப்பட்டுவிட்டன. அந்தச் சோதனைகள் இப் பொழுது செய்வது இல்லை. இன்னும் நான்கு வருஷம், ஐந்து வருஷம் கழித்துத்தான் இதனுடைய பலன் பின்னால் தெரியப் போகிறது. அந்த பெரிய மனிதர்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு ஏதோ வாக்குறுதி கொடுத்தார்களாம். 1967 பொதுத் தேர்தல் இருக்கிறது, அந்தச் சமயத்திலே அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகவேண்டாம், அவர்களுடைய கோபத்திற்கு ஆளானால், தேர்தல் நிதி கிடைக்காது, ஆகவே, அந்தப் பெரிய மனிதர்களிடம் போகக்கூடாது என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு இருக்கலாமா? அரசாங்க கஜானாவிற்குப் பணம் வரவேண்டியது முக்கியமே தவிர, ஆளும் கட்சியின் தேர்தல் நிதிக்குப் பணம் வரவேண்டியது முக்கியம் அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

போட்ட வரியைக் கறாராக வசூலிக்கவேண்டும் என்பது கவனத் தில் இருக்கவேண்டும், அரசாங்கமாகட்டும், அமைச்சர்க ளாகட்டும், அதிகாரிகளாகட்டும் எல்லோருக்கும் இதில்தான் கவனம் இருக்கவேண்டும். வரி ஏய்ப்பதே ஒரு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [19th March 1966

யாகிவிட்டது. இந்தக் காலத்திலே ரொம்ப சௌகரியமாக இருக்கிறவர்கள் யார் என்றால், விற்பனை வரி விஷயத்தில் ஈடு பட்டிருக்கின்ற ஆடிட்டர்கள், அதற்காக ஆஜராகக்கூடிய வக்கீல் கள் இவர்கள்தான். அவர்களுக்குத்தான் நல்ல வருமானம் இருக் கிறது. இது எதை எடுத்துக்காட்டுகிறது என்றால், இந்த வியா பாரிகளுக்கு, எப்படி எப்படிக் கணக்கு வைத்து வரியை ஏமாற்ற லாம் என்பதற்கு உதவி செய்யக்கூடிய திறமை உள்ளவர்கள் அதிகமாக லாபம் அடைகிறார்கள். இதெல்லாம் நம்முடைய சமு தாயத்திற்கு நன்கு கண்ணுக்குத் தெரிகிறது. நிரூபிக்க முடியுமா என்றால் எப்படி நிரூபிக்கலாம்? பலர் புது புது கட்டடங்கள், மாளிகைகள் கட்டுகிறார்கள் என்றால், இப்படியெல்லாம் சேர்ந்து வைத்த கறுப்புப் பணம் தானே? என்ன என்ன எங்கெங்கே வசூ லிக்கிறார்கள் என்பதையெல்லாம் அமைச்சர்களும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே விதித்த வரியைச் சரியாக வசூலிக்காமல் விட்டு விட்டு, புதிய வரி போடுவது அல்லது வரியை உயர்த்துவது என்றால் அதில் அர்த்தம் இல்லை. ஆகவே, போட்டி ருக்கும் வரியைக் கறாராக வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால், அதற்காகச் சட்டத்தைத் திருத்தவேண்டுமானாலும், இந்தச் சபையில் உள்ள எதிர்க்கட்சி யினர், அதுவும் குறிப்பாக என் போன்றவர்கள் நிச்சயமாக அதற்கு ஆதரவு திரட்டித் தருவோமே தவிர, அதற்கு எதிர்ப்புக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறிய வியாபாரிகளின் எண்ணிக்கைதான் அதிகம். அவர்க ளுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப் போம் என்றால், அதைப்பற்றிக் கூட ஆட்சேபனை இல்லை. சிறு சிறு வியாபாரிகளைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் கூறிய மாதிரி, பத்தா யிரம் ரூபாய் என்று இருப்பதை 25,000 ரூபாய் வரையில் உயர்த்தி னால், பல சிறிய வியாபாரிகள் நன்றி தெரிவிப்பார்கள்; அவர்க ளுடைய ஆதரவைப் பெறலாம். சிறிய வியாபாரிகளுக்கு வரியை ஏய்ப்பதற்குச் சந்தர்ப்பம் அதிகம் இல்லை. அப்படியே எய்த் தாலும் நூற்றுக் கணக்கில்தான் இருக்கும். லட்சக் கணக்காக ஏமாற்றுகிறவர்களை விட்டு விட்டு, நூற்றுக்கணக்கில் ஏமாற்றுகிறவர்களைப் போய் விரட்டிக் கொண்டிருப்பது சரியல்ல. ஆகவே, இந்த லிமிட்டை 25,000 ரூபாய் வரைக்கும் உயர்த்தலாம் என்ற கோரிக்கை பல ஆண்டுக காலமாக இந்தச் சபையிலே வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிற ஒன்றாகும். ஆனால், இன்னும் பத்தாயிரம் ரூபாய் என்றே இருக்கிறது. விலை வாசி உயர்வை எடுத்துப் பார்க்கும்போது, பழைய அளவிலே வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல. விற்பனை வரி ஏற்பட்ட நேரத்திலே நிர்ணயிக்கப்பட்ட ஒரு லிமிட் இது. ஆனால், இப் பொழுது விலைவாசி உயர்ந்திருக்கும் இந்த நேரத்தில், பத்தாயிரம் ரூபாய் லிமிட்டையே இன்னும் வைத்துக்கொண்டிருப்பது சரி யல்ல. எல்லாவிதக் காரணத்தைக் கொண்டு பார்க்கும்போதும், பத்தாயிரம் ரூபாய் என்று இருப்பதை 25,000 ரூபாய் அளவுக்கு

19th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உயர்த்துவதுதான் நியாயமாக இருக்கும், விலைவாசி ஏற்றத்தைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே போன்று, கறாராக வசூல் செய்ய நடவடிக்கை எடுத்து, சமீபத்தில் உயர்த்திய அரை பர்சென்ட் வரியைக் குறைத்து, ஏற்கனவே உள்ளபடி, 2 சதவிகிதம் ஆக பல கட்ட விற்பனை வரியை அமைப்பதுதான் சரியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் சில சலுகைகள் கொடுக்க வேண்டியதும் அவசிய மாகிறது. வரி அதிகமாக வந்துவிட்டது, ஆகையால் சலுகை கொடுங்கள் என்று சொல்லவில்லை. இன்னும் அதிகமாக வசூலிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் சலுகைகள் அதிக மாகக் கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்கின்றேன். முக்கியமாக, உணவு தானியங்கள் பூராவுக்கும் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்குக் கொடுக்கவேண் டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். அழுகிப் போகக் கூடிய பொருள்கள் எல்லாவற்றுக்குமே விதி விலக்கு கொடுக்க வேண்டும். முன்பு சில சலுகைகள் அளிக்கப்பட்டன. காய்கறி, புஷ்பம் போன்றவற்றுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டது. அந்தச் சமயத்திலும் பாலுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று அரசாங்கம் முயற்சி செய்கிறது. பால் வியாபாரத்தில் ஈடு பட்டிருக்கக்கூடியவர்கள் சாதாரண சிறிய மூலதனம் வைத்துத் தொழில் செய்யக்கூடியவர்கள். அவர்களுக்கு விற்பனை வரியி லிருந்து விதி விலக்கு கொடுத்து, உற்சாகப்படுத்தினால்தான், இன்னும் பலர் பாலைச் சேகரம் செய்து, விநியோகம் செய்ய முன் வருவார்கள். அதிலே ஓரளவு ரிஸ்க் இருக்கிறது. பால் கெட்டுப் போகக்கூடிய பொருள். பாலுக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளிப்பது பால் உற்பத்தியைப் பெருக்குகிறவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு உற்சாகமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இம்மாதிரி சீக்கிரத்தில் அழுகிப் போகக்கூடிய பொருள்கள் எல்லாம் என்ன என்ன என்று பார்த்து, அவற்றுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு கொடுக்கவும், உணவுத் தானியங் களுக்கு விதி விலக்கு கொடுப்பதும் அவசியம். இதனால் வருமானத்திற்குப் பெரும் நஷ்டம் வந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. சில லட்சம் ரூபாய் தான் குறையக்கூடும். இவ் வளவு பெரிய வருமானம் வரக்கூடிய இந்தத் துறையில், உணவுப் பொருள்களுக்கு விதிவிலக்கு அளிப்பதன் மூலம் சில லட்சம் ரூபாய் குறைவதனால் பெருத்த நஷ்டம் வந்துவிட முடியாது. ஆகவே, விதிவிலக்கு அளிப்பது பற்றி ஆலோசிக்கவேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அடுத்து, நிர்வாகத்திலே செலவு இவ்வளவு ஏன் அதிகமாகிறது என்பதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்

என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். விற்பனை வரி வசூலைப்
பற்றிச் சொல்லும்போது, இவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று
லும், இந்த வருஷம் அவ்வளவு அதிகமாக இல்லை என்று நான்
சொன்னேன். மூன்று மடங்கு ஆகியிருக்கிறது என்று சொல்லலாம்.
ஆனால், பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது
அதிகம் என்று சொல்ல முடியாது. கலெக்ஷன் சார்ஜ்ஜஸ்ஸைப்
பார்க்கும்போது, 1960-61-இல் 56 லட்சம் இருந்தது, இப்பொழுது
1966-67-இல் 1 கோடி 4 லட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.
சென்ற வருஷத்தில் 1 கோடி 6 லட்சம் ஆக இருந்தது. இதில்
2 லட்சம் இந்த வருஷத்திலே குறைவாக மதிப்பிடப்பட்டிருக்
கிறது. குறிப்பாக, கடந்த மூன்று வருஷ காலத்திலே வெகு வேக
மாக அதிகரித்திருக்கிறது. 1964-65-இல் 93 லட்சம். 1965-66-இல்
106 லட்சம். 1966-67-இல் 104 லட்சம். இவ்வளவு அதிகமாகப்
போய்க்கொண்டிருப்பதனுடைய காரணம் என்ன? இந்தத் துறை
யில் செலவு அதிகப்பட்டதற்குத் தகுந்த அளவுக்கு ஆதிகமாக வரி
வசூல் செய்யப்பட்டு கறாராக வசூலிக்கப்பட்டு வரி ஏய்ப்புத் தடுக்
கப்பட்டிருக்குமானால், அதை நான் ஓரளவுக்குப் பாராட்ட
முடியும். ஆனால், வரி வசூலுக்கு ஆகக்கூடிய செலவு அதிகரித்துக்
கொண்டே போய், அதற்குள்ள பலன் ஏற்படாமல் இருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.
வணக்கம்.

* திரு. கே. ஏ. மதியழகன்: கனம் துணைச் சபாநாயகர் அவர்
களே, நம்முடைய கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்திருக்கும் இந்த விற்பனை வரி பற்றிய மானியக் கோரிக்கையின்
மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து
என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரி நம்முடைய மாநிலத்தினுடைய நிதி ஆதார
திற்கு எந்த அளவுக்கு நல்ல வகையிலே உதவி செய்கிறது,
எவ்வளவு நல்ல செல்வ ஆதாரத்தைக் கொடுக்கிறது என்பதைப்
பற்றியெல்லாம் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மிக
விளக்கமாக இங்கே நமக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்த
விவாதத்தின்போது, பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்
பினர்களானாலும் சரி, எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களா
னாலும் சரி, ஒரு விவாதத்தில் மிக ஒற்றுமையாகப் பேசினார்கள்.
இந்த வரி இன்னும் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு முக்கிய
ஆதாரமாக அமைந்திருக்கிறது, இந்த வரியினத்தின் மூலமாக
நாம் நல்ல பல பெருமையான காரியங்களைச் செய்யவேண்டும் என்
றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இதைச் சொல்கிற நேரத்தில்
இன்றைக்கு விற்பனை வரியின் மூலமாக இந்த மாநிலம் எவ்வளவு
பயன்படுகிறது, இந்த இலாகா எந்த வகையில் செயல் படுகிறது
என்பதைப்பற்றியெல்லாம் இந்த மன்றத்திலும் சரி, இந்த மன்றத்
திற்கு அப்பாற்பட்டும் சரி நடக்கிற விவாதங்கள் ஆகியவை
பற்றிய வரலாற்றை ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அந்த வரலாற்றை ஆராய முற்படுவதற்கு முன் ஒன்றிரண்டு
முக்கியமான கருத்துக்களைத் தொழில் அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது என் அடிப்படையான
கடமை என்று கருதுகிறேன்.

முதலாவதாக உணவு தானியங்களின் மீது இருக்கிற விற்பனை
வரியை நீக்கவேண்டும். அந்த வரி ஏழை எளிய விவசாயிகளைப்
பாதிக்கிறதென்ற காரணத்தினால் இந்த மன்றத்தில் இன்றைக்கு
அல்ல நேற்று அல்ல நெடுநாளாக இது எடுத்துச் சொல்லப்படு
கிறது. என்னுடைய கவனம் சரியாக இருக்குமானால் என்னுடைய
தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்—இந்த மாமன்றத்தில் அப்
போது கனம் சுப்பிரமணியம் அவர்கள் இந்த இலாகாவுக்கு
அமைச்சராக இருந்தார் என்று நினைக்கிறேன்—(கனம் திரு. ஆர்.
வெங்கட்டராமன் நான் தான் இருந்தேன்) கடந்த பத்து வருஷங்
களாக இருந்து நல்ல அனுபவத்தைப் பெற்று, எல்லா விஷயங்களை
யும் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் கனம் வெங்கட்ட
ராமன் அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்கிறேன்—அப்போது
அண்ணா அவர்கள் "உங்களுக்கு இதன் மூலம் அல்பமான தொகை
தான் கிடைத்திருக்கிறது. இந்தத் தொகை வேண்டாம் என்று
நிறுத்திவிடுவீர்களானால் ஒவ்வொரு ஏழையும் ஒவ்வொரு கவளச்
சாதத்தைச் சாப்பிடும்போது கனம் வெங்கட்டராமன் அவர்களை
வாழ்த்துவார்கள், கனம் சுப்பிரமணியம் அவர்களை வாழ்த்துவார்
கள்" என்று சொன்னார். இன்றையதினம் விலைவாசி உயர்வு எத்
தனை மடங்கு ஏறிப்போய் இருக்கிறது என்பதைப்பற்றி சொல்லித்
தெரியவேண்டியதில்லை. இந்த நேரத்தில் உணவு தானியங்களின்
மீது விதிக்கப்படுகிற வரியை எடுக்க அரசாங்கமும், கனம் அமைச்
சர் அவர்களும் முன்வருவார்களானால் மக்கள் வாழ்த்துவார்கள்.
இத்துறையில் கொஞ்சம் அக்கறை காட்டி, மீண்டும் இதைச் பரிசீ
லனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேமாதிரி இந்த மன்றத்தில் பேசிய பல உறுப்பினர்கள்
சாதாரணமாக வியாபாரம் நடத்துகிறவர்களுக்கு அதிகாரிகளினால்
ஏற்படுகிற சங்கடங்களைப் பற்றிச் சொன்னார்கள். அவற்றை
யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. சாதாரணமாக
இன்றைக்கு நேர்மையான முறையில் தொழில் நடத்துகிறவர்
களுக்குத்தான்—ஏழை எளிய சிறு, நடுத்தர வியாபாரிகளுக்கு
அதிகாரிகளினால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதிகாரிக
ளுடைய கரங்கள் இவர்கள் மீதே பாய்கின்றன. இவர்களுக்குப்
பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றால்—மதுரை உறுப்பினர் திரு.
சங்கரன் அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் வரை விதிவிலக்கு அளிக்க
வேண்டுமென்று சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு.
கலியாணசுந்தரம் அவர்களும் இதனை ஆதரித்தார்கள். என்னுடைய
கணக்குப்படி இன்றைக்கு இருக்கும் விலைவாசி உயர்வை எல்லாம்
கணக்கெடுத்துப் பார்த்தால் 50 ஆயிரம் ரூபாய்வரை விதிவிலக்கு
அளிக்கலாம் என்று சொல்வேன். அப்படியானால் இந்த வரியினால்
ஏற்படும் நஷ்டம் என்ன ஆகிறதென்று கேட்பார்களேயானால் நான்

[திரு. கே. ஏ. மதியழகன்] [19th March 1966

சொல்வதற்குத் தயாராய் இருக்கிறேன். அவ்வளவு பெரிய ஆசை
வேண்டாம் என்றாலும் 25 ஆயிரம் ரூபாய் அளவுக்காவது விதி-
விலக்கு அளிக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கை இன்றையதினம்
மிக முக்கியமாக கவனத்தில் இருக்க வேண்டிய ஒன்ருக இருக்
கிறது. அந்த விதிவிலக்கையும் அளிக்கவேண்டும்.

அதற்கடுத்தபடியாக ஒன்றை முக்கியமாகச் சொன்னார்கள்.
இதில் இரண்டு கட்சிக்கும் வித்தியாசம் கிடையாது. ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சியைச்
சேர்ந்தவர்களாக இருந்தாலும், இதில் கருத்து வேறுபடவில்லை.
குறிப்பாக திரு. சங்கரன் அவர்கள் நான் நிதிநிலை பொது
விவாதத்தின்போது இந்த மன்றத்தின் முன்னால் வைத்த கருத்
துக்களை அழுத்தம் திருத்தமாக ஆதரித்து நல்ல முறையில் எடுத்
துச் சொன்னார்கள். அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். அவரே
இன்றையதினம் அரசாங்கத்திற்கு படுகிற வகையில் எக்ஸைஸ்
ட்யூட்டியைப்பற்றி சொன்னார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற
நிலை என்ன? பருத்தி நூல்—பருத்தித் துணி, சர்க்கரை, புகையிலை
இந்த மூன்று வரியினங்களும் முன்பு மாநில அரசாங்க வரி அதிகா
ரத்தின் கீழ் இருந்தது. இதை நாம் மத்திய சர்க்காரிடத்தில்
சரணகதி செய்தோம். பருத்தி நூல், சர்க்கரை, புகையிலை ஆகிய
வற்றின் மீது நாம் விதித்து வந்த வரி உரிமையை மத்திய சர்க்கா
ருக்கு அடைக்கலமாக்கினோம். இன்றையதினம் நான் நிச்சயமாகச்
சொல்வேன், அந்த மூன்று வரி இனங்களும் நம்மிடத்தில் இருந்
திருக்குமானால் கடந்த நவம்பர் மாதத்தில் 8 கோடிக்கு நாம் வரி
போடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதே, அது வந்திருக்காதென்று.
நான் இதை சொல்கிற நேரத்தில் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு
விளக்கம் தருவார்கள். "இவை ஒரே மாநிலத்திற்குள் நடைபெறு
கிற வியாபாரம் இல்லை, இண்டர் ஸ்டேட் வியாபாரமாக இவை
அமையும். ஆகவேதான் மத்திய சர்க்காரிடத்தில் விட்டுவிட்டோம்"
என்று சொல்லலாம். இந்த வாதத்தை நான் ஓரளவு புரிந்து
கொள்ள முடியும். அதை ஒத்துக்கொண்டு நான் சொல்வது என்ன
வென்றால்—சாதாரணமாக முன்பு இந்த இனத்தின் கீழ் மத்திய
சர்க்காருக்கு பத்து லட்சம் ரூபாய் பருத்தி நூலில் மட்டும் வந்தது
என்றால் இன்றைக்கு பத்துகோடி ரூபாய் வருகிறது. மாநிலத்
திற்குக் கிடைத்தது என்ன? பூஜ்யம். பருத்தி நூல், சர்க்கரை,
புகையிலை ஆகிய இந்த மூன்று வரி இனங்களில் இருந்து கிடைக்கக்
கூடிய வருமானத்தை மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுக்க
வேண்டுமென்பதை நான்காவது பைனான்ஸ் கமிஷன் வந்தபோதும்
வற்புறுத்தப்பட்டது. அங்கே நமது அமைச்சர் என்ன சொன்னார்
கள் என்பதுபற்றிய அறிக்கை என்னிடமும் இருக்கிறது, அவரிட
மும் இருக்கிறது. அவற்றினால் நமக்கு ஏற்படுகிற நஷ்டத்தைச்
சுட்டிக்காட்டி, அவற்றில் இருந்து கிடைக்கிற வருமானத்தில் 50
சதவிகிதம் நமக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்
கிறார்கள். ஆனால் இன்றைக்கு டெல்லி சர்க்கார் 20 சதவிகிதம்
எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறார்கள். எப்படி
பணம் வரும்? எப்படி இதனால் பயன் பெற முடியும்? அந்த வரி
இனங்களை நாமே திரும்பப் பெற வேண்டுமென்பதில்லை. அந்த வரி

19th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

வசூல் செய்கிற பொறுப்பு அவர்களிடமே இருக்கட்டும். ஆனால்
அந்த வரியை வசூல் செய்வதற்கு அவர்களுக்கு ஆகும் செலவு
போக பாக்கியுள்ள 98 சதமும் மாநிலங்களுக்குத் தரப்பட
வேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். இல்லை
என்றால் எதிர்காலத்தில் நம்முடைய நிலை என்ன? இவர்கள்
கேட்டதே 50 சதவிகிதம், அவர்கள் ஒத்துக்கொண்டது 20 சத
விகிதம். இதிலும் கூட டெல்லி சர்க்கார் பல தந்திரோபாயங்களைக்
கையாள்கிறது. எக்ஸைஸ் ட்யூட்டி என்றால் டாக்ஸ் வேறு, அடிஷ
னல் டாக்ஸ் வேறு, சர்சார்ஜ் வேறு—இப்படிப் பல ரூபங்களின்
கீழ் வரி போட்டுவிடுகிறார்கள். குறிப்பாக புகையிலையை எடுத்துக்
கொண்டால் 1 ரூபாய் 60 காசு டாக்ஸ். முப்பது புதுக்காசு
சர்சார்ஜ். இந்த சர்சார்ஜ் முழுவதும் மத்திய சர்க்காரைச் சேர்ந்
தது. மாநில சர்க்காருக்கு சர்சார்ஜில் எவ்விதப் பங்கும்
கிடையாது. அப்புறம் 6 பைசா என்று அதிக வரியைக் கூட்டி
ஒரு ரூபாய் 96 பைசா வரி கொடுக்கப்படுகிற ஒரு இனத்தில்
6 பைசாவான அதிகப்படி வரியை மட்டும் பங்கு போட்டு 20 சத
விகிதம் எல்லா ராஜ்யங்களுக்கும் பிரித்துக்கொடுக்கிறார்கள்.
இப்படி எல்லாம் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே நமது
அமைச்சர் அவர்கள் அந்த இனத்தின் கீழ் மத்திய சர்க்கார்
இன்றையதினம் பெறுகிற வருமானத்தின் முழுத்தொகையையும்
பெற்றுத்தர கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, இந்த விற்பனை வரியைப் பற்றி ஒரு வரலாறு சொன்னார்
கள். அந்த வரலாறு இன்றைக்கு எங்கே போய் நின்று
இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அதுவும் இரண்டு மூன்று
வருஷங்களாக இது பலபல அவதாரங்களை எடுத்திருக்கிறது.
அவற்றிலே ஆழ்ந்து கவனம் செலுத்துவதற்குக் கூட அவகாசம்
இருக்கிறது என்று கருதுகிறேன். விற்பனை வரியிலே ஏமாற்று
ஏய்ப்பு செய்யப்படுகிறது, மோசடி செய்யப்படுகிறது, இதனாலே
பெரிய இடைஞ்சல்கள்—அரசுக்கு பண இழப்பு ஏற்படுகிறது என்ற
ரீதியிலே அரசாங்கம் நல்ல சில முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தது.
ஆரம்பித்தவுடனேயே நாம் பல நிலைமைகளைப் பார்த்தோம். பல
அவதாரங்களைப் பார்த்தோம். திடீரென்று சோதனைகள் ஆரம்பிக்
கப்பட்டன. அதன் பயனாக பெரிய அதிகாரிகளின் ஆர்வமான
பணிகளினால் பலன் கிடைத்தது. அந்தப் பலனுக்கு எதிர்மறை
விளைவாக எங்கிருந்தோ கிளர்ச்சி கிளம்பியது. ஹை கோர்ட்டுக்கு
தாவா போனது, கருணைக் காலம் காட்டப்பட்டது. முதலிலே
சர்க்கார் ஒரு மசோதாவைக் கொண்டுவரலாமென்ற முடிவுக்கு
வந்தார்கள். அது செலக்ட் கமிட்டி வரையிலும்கூடப் போனது.
பிறகு யுத்தம் குறுக்கிட்டது. திரும்ப மசோதாவைப் பெற்றுக்
கொண்டார்கள். இவ்வளவு அவதாரங்களுக்குப் பிறகு நாம்
இன்றைக்கு இதைப்பற்றி விவாதிக்க இங்கே கூடியிருக்கின்றோம்.
நான் ஒன்றை ஞாபகப்படுத்திக்கொள்கிறேன், நம்முடைய
தொழில் அமைச்சர் அவர்களும் அதை ஞாபகப்படுத்திக்கொள்
வார்கள் என்று கருதுகிறேன். இதே மன்றத்தில் கடந்த
ஆண்டிலே இந்த விவாதத்திலே நான் சில முக்கியமான உண்மை
களை தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்

கொண்டு வந்தேன். விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்த
வேண்டியதன் அவசியத்தைப்பற்றி, அதிலே இருக்கின்ற
கோளாறுகளைப்பற்றி, சட்டத்திலேயுள்ள பலவீனத்தைப்
பற்றி, அதனாலே, சாதாரண ஏழை, நடுத்தர வியாபாரிகள்
எல்லாம் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதைப்
பற்றி, கொள்ளை லாபக்காரர்கள், வர்த்தகச் சூதாடிகள் எப்படித்
தப்பித்துக் கொள்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துக்
கூறி, இதற்கு ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமென்று வாதாடிய
நேரத்திலே தொழில் அமைச்சர் அவர்கள், நாங்கள் தாவா போட்
டிருக்கிறோம், அப்பீலிலே ஜெயித்துவிடுவோம், சட்டம் சரியானது
தான் என்று சொன்னார்கள். நான் அன்றைக்கு இதே மன்றத்திலே
சொன்னேன். "இன்றைக்கு கோர்ட்டிலே போட்டிருக்கிறார்கள்.
இந்தச் சட்டத்திலே ஊனம் இருக்கிறது. விற்பனைவரிச் சட்டத்
தின் 41-வது பகுதியிலே பலவீனம் இருக்கிறது. அதிலே ஒரு
லக்கூனா (குறைபாடு, ஓட்டை) இருக்கிறது, 'பாட் டிராஃப்டிங்
காக' இருக்கிறது. இதிலே சில தவறுகள் இருக்கின்றன" என்று
சொன்னேன். அப்பொழுது அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே
வாதாடியது எல்லாம், "நான் 15 வருஷங்கள் கோர்ட்டிலே வக்கீ
லாக இருந்து இருக்கிறேன், ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து
இருக்கிறேன், இவர் யார் சொல்வதற்கு, என்னைவிட சட்ட
நிபுணரா என்ன?" என்றெல்லாம் சொன்னார்கள். ஐக்கிய நாடுகள்
சபையில் அவர்கள் இருந்ததையும், வக்கீலாக இருந்ததையும்
நாங்களும் பெருமையாகத்தான் கூறிக்கொண்டிருக்கிறோம். இது
அமைச்சர் சொல்லித் தெரியவேண்டிய அளவு பஞ்சம் ஏற்பட்டு
விடவில்லை. ஆனால் ஹைகோர்ட் கூறிய கருத்து என்ன?

'All accounts, registers, records and other documents main-
tained by a dealer in the course of his business, the goods in his
possession, and his offices, shops, godowns, vessels or vehicles
shall be open to inspection at all reasonable times by such officer:

Provided that no residential accommodation (not being a place
of business-*cum*-residence) shall be entered into and searched by
such officer . . .'

என்ற பகுதியிலே விதிமுறையிலே மேலே மூலப்பகுதியில் இன்ஸ்
பெக்ஷன் என்று போட்டுவிட்டு கீழே ஸெர்ச் (search) என்று
போடப்பட்டிருக்கிறது. கீழே அப்படி வரக்கூடாது என்பது
தான் ஹைகோர்ட் சொன்ன தீர்ப்பு.

'If any such officer has reason to suspect that any dealer is
attempting to evade the payment of any tax, fee or other amount
due from him under this Act, he may, for reasons to be recorded
in writing, seize such accounts, registers, records or other docu-
ments of the dealer as he may consider necessary, and shall give
the dealer a receipt for the same. The accounts, registers, records
and documents so seized shall be retained by such officer only for
so long as may be necessary for their examination and for any
enquiry or proceeding under this Act.'

என்ற மற்றொரு விதிமுறையைப்பற்றி அவர்கள் விமர்சனம்
செய்யும்பொழுது இது அதிகமான அதிகாரத்தை சாதாரண
ஏ.சி.டி.ஓ. வுக்குக் கொடுக்கிறது. 'too wide a power' என்று
ஹைகோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. 'He may seize and
confiscate' என்றால் சாதாரண ஏ.சி.டி.ஓ. செய்து விடலாம் என்று
சொன்ன நேரத்தில்

'Any such officer shall have power to seize and confiscate any
goods which are found in any office, shop, godown, vessel, vehicle,
or any other place of business or any building or place of the
dealer, but not accounted for by the dealer in his accounts, regis-
ters, records and other documents maintained in the course of
his business.'

என்ற ஒரு விதிமுறையைப்பற்றியும் விமர்சனம் செய்து ஹை
கோர்ட் சொல்லியது. நான் அவர்களிடத்திலே சொல்லும்
பொழுது இன்கம் டாக்ஸ் துறையிலே இன்கம் டாக்ஸ் கமிஷனர்
கையெழுத்துள்ள உத்தரவின் மூலம்தான் சோதனை போடலாம்
என்று இருப்பது போல் ஓர் உயர்ந்த அதிகாரியின் எழுத்து மூல
மான உத்தரவின் பேரில்தான் சோதனை போட வழிவகை காண
வேண்டும் என்று சொன்னேன். அதை நான் இப்பொழுது ஞாபகப்
படுத்திக்கொள்கிறேன். இன்றைக்கு ஹைகோர்ட் என்ன தீர்ப்பு
வழங்கியிருக்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சப்இன்ஸ்பெக்டர்,
ஏ.ஸி.டி.ஓ. இவர்கள் எந்த பெரிய அதிகாரியிடமும் கையெழுத்து
வாங்காமல் எந்த இடத்திலும் புகலாம், திடீர் சோதனை செய்யலாம்
என்று இருக்கிறது. இதெல்லாம் தவறு, ஆபத்தான சட்டம், துஷ்
பிரயோகத்திற்கு இடமுண்டு, இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டு
மென்று வாதாடினேன். அந்தவிதமான உத்தரவு போலீஸ் சப்-
இன்ஸ்பக்டர், கிராம மணியத்திற்கு அடுத்தபடியாக இருக்கக்
கூடிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர், விற்பனை வரி இலாகாவைச்
சேர்ந்த ஏ.ஸி.டி.ஓ. ஆகியோர் எந்த இடத்திலும் புகலாம் என்ப
தற்கு 41-வது விதியின் கீழ் அதிகாரம் கவர்னர் மூலம் பிறப்பிக்கப்
பட்டிருக்கிறது.

'Notification under section 41 conferring powers to order pro-
duction of accounts and powers of entry, inspection, etc., S.R.O.
No. A/1796 of 1959, dated 23rd March 1959:—In exercise of the
powers conferred by section 41 of the Madras General Sales Tax
Act, 1959 (Madras Act I of 1959) and in supersession of all the
existing notifications on the subject the Governor of Madras hereby
empowers—

(i) all Officers of the Commercial Taxes Department not
lower in rank than an Assistant Commercial Tax Officer to require
any dealer, for the purposes of this Act, to produce before him the
accounts, registers and other documents and to furnish any other
information relating to his business;

(ii) all Officers of the Commercial Taxes Department not
lower in rank than an Assistant Commercial Tax Officer, all officers

[திரு. கே. ஏ. மதியழகன்] [19th March 1966

of the Revenue Department not lower in rank than a Revenue Inspector and all Officers of the Police Department not lower in rank than a Sub-Inspector. . . .'

என்பது கவர்னருடைய உத்தரவு.

ஒரு சாதாரண ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஒரு சாதாரண போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், அல்லது ஏ.ஸி.டி.ஓ. புகலாம் என்று விற்பனைவரிச் சட்டத்திலே அதிகாரம் அளிக்கப்படுகிறது. எனவே விற்பனைவரிச்சட்டத்தை திருத்த மசோதா கொண்டுவர வேண்டுமென்று அமைச்சரிடத்திலே வற்புறுத்தினேன். சென்ற மார்ச் மாத விவாதத்தில் விளக்கமாகப் பேசினேன். அப்பொழுது என்னிடம் அவர்கள் கோபித்துக்கொண்டார்கள்; ஆனால் அடுத்த சட்டசபைத் தொடரில் விற்பனைவரி திருத்த மசோதாவை அமைச்சரே கொண்டுவந்தார்கள். ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெளி நாட்டிலிருந்து வந்த ஒரு பத்திரிகை நிருபர் என்னைப் பேட்டி கண்டார். சட்டசபையைப்பற்றியெல்லாம் அவர் விவரங்களைக் கேட்டார். அப்படிக் கேட்ட நேரத்திலே மந்திரிகளைப்பற்றியும் கேட்டார். மற்ற மந்திரிகள் கோபித்துக்கொள்ளக்கூடாது நான் சொன்னேன்—ஒரே அமைச்சர் இருக்கிறார், அவர்தான் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள். மற்ற அமைச்சர்களிடம் இல்லாத ஒரு அருங்குணம் அவர்களிடத்திலே இருக்கிறது. அமைச்சர்கள் எல்லோரும் தவறு செய்கிறார்கள், அது தவிர்க்கமுடியாதது. தவறு என்று தெரிந்துகொண்டால் தொழில் அமைச்சர் அவர்கள் திருத்திக் கொள்வார்கள், தயங்கமாட்டார்கள், கீழே இறங்கி வருவார்கள், அதற்காக வெட்கப்படமாட்டார்கள். அவரை விட பெரிய அமைச்சர்கள் எல்லாம் கூட மந்திரி சபையிலே இருக்கிறார்கள். அவர்கள் சுபாவம், தவறு என்று தெரிந்தும் அதனை நிலைநாட்ட விரும்புவது. நானும் 4 ஆண்டுகளாக முதலமைச்சரிடம் ஓர் நல்ல சகுணத்தை எதிர்பார்க்க தவம் கிடக்கிறேன். நடக்கவேயில்லை. கனம் வெங்கட்ராமன் அப்படியல்ல.' என்று கூறினேன். இங்கே நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. அவர்கள் விற்பனைவரி மசோதாவைக் கொண்டுவந்தார்கள். அந்த மசோதாவைப்பற்றி வாதிக்கும்பொழுதும், பொறுக்குக் குழுவிலே பணியாற்றுகின்ற போதும் பெருவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த விற்பனை வரித் துறையைப் பொறுத்தவரையில் நான்கு கூறுகள் இருக்கின்றன. ஒன்று அரசாங்கம், இரண்டு வரி கொடுக்கிற பொது மக்கள், மூன்று சிறு, நடுத்தர வியாபாரிகள், நான்கு பகற் கொள்ளைக்காரர்கள், கள்ளச்சந்தைக்காரர்கள், கொள்ளை லாபம் அடிப்பவர்கள், பொருளாதாரத்தை உறிஞ்சுகின்ற குபேரபுரியினர் கருப்புப் பண கனதனவான்கள். திடீர் சோதனைகளின்போது
11-00 கா. திடுக்கிடும்படியான தகவல்கள் அகப்பட்டன. எட்டுக்கோடி ரூபாய் அதிக வருமானம் வந்தது என்று அவர்கள் இங்கே கணக்குச் சொன்னார்கள். நாம் எல்லாம் நன்றியோடு மந்திரி அவர்களுக்கு மாலைபோட்டோம் . . . . . .

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: மாலை போடவில்லை.

19th March 1966]

திரு. கே. ஏ. மதியழகன்: பூமாலை போடாமல் இருக்கலாம், ஆனால் எங்கள் இதய அன்பு மாலையை போட வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு சிரமப்பட்டு வாதித்துக் கொண்டிருக்கிறேன்.

நாவல்களிலே வரும் தகவல்களைவிட பரபரப்பான தகவல்கள். கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்களுடைய தொகுதியான ஈரோட்டிலே ஜெய் ஹிண்ட் கம்பெனி என்ற ஒரு பெரிய வடநாட்டு எண்ணெய் வியாபாரி அவர் இரண்டு கோடி ரூபாய் டர்ன் ஓவரை ஏமாற்றியிருக்கிறார். நம்முடைய சட்டமன்றத்திலிருந்து 2½ பர்லாங் தூரத்திலுள்ள தம்புச் செட்டித் தெருவில் நெவதியா என்ற கம்பெனி, கல்கத்தாவுடன் மணிலா எண்ணெய் கள்ள வியாபாரம் செய்கின்றவர்கள் 2 கோடி ரூபாய் டர்ன் ஓவரை ஏமாற்றியிருக்கிறார்கள். ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி என்ற வெளிநாட்டுக் கம்பெனி அந்நியச் செலாவணியை பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏமாற்றி இருக்கிறது நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவருடைய கம்பெனி, சினிமா எடுப்பவர்களுக்கு கொடுமையான வட்டிக்கு பணம் கொடுக்கும் லேவாதேவி கம்பெனி லட்சக்கணக்கான ரூபாய்க்கு கணக்கேட்டில் கணக்கு காட்டவில்லை. கைத்தறி நெசவாளர்களுக்காக சாயப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற கம்பெனி பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு கணக்குக் காட்டவில்லை. மாதவரத்திற்கு அருகிலுள்ள செனித் லாம்ப்ஸ் அண்டு எலக்ட்ரிக்கல்ஸ் (Zenith Lamps and Electricals) என்ற கம்பெனி. ஒரு பெரிய பத்திரிகை அதிபர்—இந்தியாவிலுள்ள பத்து கோடீஸ்வரர்களில் ஒருவர் என்கிறார்கள்—அப்படிப்பட்ட கோயங்கா தொடர்பு கொண்டு ஒரு கோடி ரூபாய் மூலதனமிட்டிருக்கிற அந்தக் கம்பெனிக்குள் சோதனைசெய்ய நுழைய முடியாதவாறு அதிகாரிகளை நிறுவன ஆட்கள் அடித்தார்கள், விரட்டினார்கள். வழக்கு கூட நடந்தது. குளிக்கும் அறையிலே கணக்குகளை மறைத்து வைத்தார்கள், பூஜை அறையிலே மறைத்து வைத்தார்கள், மனைவியின் புடவைகள் வைக்கும் பீரோக்களிலே மறைந்து வைத்தார்கள் என்றெல்லாம் கூறப்பட்டது. இதையெல்லாம் நான் சொல்லுவது வெறும் வருணனைக்காக அல்ல. இந்த வகையிலே பல கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் வரியை ஏமாற்றியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது. இப்படியெல்லாம் வரி ஏமாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்ட நேரத்தில் பெரிய கூச்சல் கிளப்பப்பட்டது. உரிமை பாதிக்கப்படுகிறது என்றார்கள்; மந்திரி மீது பாணம் தொடுத்தார்கள். ஏழை எளியவரிப் பணத்தை, இந்த நாட்டு அரசாங்கத்தின் கஜானாவுக்குச் சேர வேண்டிய வரிப் பணத்தை இந்த சமுதாயத்திலுள்ள புல்லுருவிகள், மக்கள் துரோகிகள், நாட்டுப் பகைவர்கள் நம்மிடமும் விடாமல், அரசுக்கும் ஒப்படைக்காமல், மோசடி செய்து கொண்டிருந்தனர்.

இந்தமாதிரி வரியை ஏமாற்றி வந்தவர்களைக் கண்டு பிடித்த அதிகாரிகளுக்கு இந்த மன்றத்திலே பாராட்டுக்கள் தெரிவிக்கப்

பட்டிருக்கிறது. வரி ஏமாற்றுபவர்களைக் கண்டு பிடிக்க வழிவகை செய்யவேண்டுமென்பதற்காகவே கனம் அமைச்சர் அவர்களே ஒரு மசோதாவை இந்த மன்றத்தின் முன்னால் கொண்டு வந்தார்கள். அந்த மசோதா இந்த மன்றத்திற்கு வந்த நேரத்தில் நான் சொன்னது நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. 'இது மதியழகன் மசோதா' என்றுகூட பெயரிடலாம், அந்த அளவிற்கு நான் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள் என்று சொன்னேன். கனம் அமைச்சர் அவர்களும் அதைப் பெருமிதமாக எடுத்துக் கொண்டார்கள். நாம் எல்லோருமே அந்த மசோதாவுக்குப் பெருத்த ஆதரவைக் கொடுத்தோம். அந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குப் போனவுடன் என்னவாயிற்று? நாட்டிலே இருக்கக்கூடிய 40, 50 பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் மகஜர்களைக் கொடுத்தார்கள். அந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி எல்லோருடைய ஆதரவும் இருந்தது. கனம் வெங்கட்டராமன் அவர்கள் கரத்தை வலுப்படுத்துவோம் என்று நாங்கள் எல்லாம் அவர் பின்னாலே இருந்தோம். பாழாய்ப்போன பாகிஸ்தான் படையெடுப்பு குறுக்கிட்டது. அதன் காரணமாக ஒரு நிலைமை ஏற்பட்டது. இந்த மசோதாவை எதிர்த்து நடந்த கிளர்ச்சிகளுக்கெல்லாம் அமைச்சர் அவர்கள் மசியவில்லை! மயங்கவில்லை. நாட்டிலே யுத்த நிலைமை ஏற்பட்டபோது இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்கு வந்தது. 'இன்றைக்கு காலச் சூழ்நிலை சரியாக இல்லை; நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இந்த மசோதாவை என்ன செய்யலாம்?' என்று அமைச்சர் அவர்கள் எங்களை கேட்டார்கள். அன்றைக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லை. போர்க்கோலம் பூண்டிருக்கும் நிலையில், சுதந்திரத்தை நிலைநாட்டப் போராட வேண்டிய நிலையில், மண்ணுரிமையை நிலைநாட்ட வேண்டிய நேரத்தில் இந்த மசோதாவைப்பற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இதைக் கொஞ்சம் ஒத்தி வைக்கலாமா என்று எங்களை யோசனை கேட்டார்கள். இந்த மசோதாவின் மூலம் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் மிக நல்ல காரியந்தான்; ஆனால் டைம் ஃபாக்டர், காலம் நமக்கு கெடுதலாக இருக்கிறது; பெரும் காரியத்திலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்; எனவே இதனை வாபஸ் பெறலாம் என்றார்கள். அப்போது நான் இந்த மசோதாவை ஒத்திவைப்போம், 'We can defer the Bill' என்று சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்கள் 'டெபர்' ஒத்திவைப்பு என்று வேண்டியதில்லை, சட்டமன்றத்திலே ஒரே நாளிலே கூட வேண்டுமானால் அந்த மசோதாவைக் கொண்டு வந்து விடலாம்; அதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது, நீங்கள் எல்லாம் ஒரு மனதாக ஆதரித்தால் நெருக்கடி நிலையை உத்தேசித்து வாபஸ் பெறலாம்; சில உறுதியையும் வியாபாரிகளிடம் கேட்போம் என்று சொன்னார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீங்கள் அறிவீர்கள், கடந்த நவம்பர் மாதத்திலே . . . .

MR. DEPUTY SPEAKER: The unanimous recommendation of the Select Committee was accepted by the House.

திரு. கே. ஏ. மதியழகன் : நெருக்கடி நிலையையொட்டி மன்றம் ஏற்றுக்கொண்டது.

அந்த அறிக்கை இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் திருவாளர் நெடுஞ்செழியன் அவர்கள், இதை இப்போதைக்கு ஒத்தி வைத்து ஓராண்டு கழித்து மறுபடியும் கொண்டுவர வேண்டுமென்று பேசினார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு படி அதிகமாகச் சென்று ஒரு வருஷம் என்று கூட அல்ல; அவசியமானால் ஆறே மாதத்திலே கூட கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். நான் இவற்றையெல்லாம் இன்றைக்கு எடுத்துச் சொல்லக் காரணம்—இன்றைக்கு நெருக்கடி நிலை நீங்கியிருக்கிறது. இங்கே காண்பிக்கப்பட்ட கணக்குகள் எல்லாம் போன வருஷத்துக் கணக்குகள். அவை எல்லாம் அதிகாரிகளின் திறமை காரணமாகக் கண்டு பிடிக்கப்பட்டு வந்த கணக்குகள். இந்த ஆண்டே அது சுருங்கப் போகிறது. வியாபாரிகள் அன்று வாக்குறுதி அளித்தார்கள் என்று கூறலாம். ஆனால் இப்போது கேட்டால் அவர்கள் அதற்கு 'நாங்கள் என்றைக்கு வரியைக் கொடுக்காமல் ஏமாற்றினோம்' என்று கூட வியாக்கியானம் சொல்லக்கூடும். அதிலே பெரிய மாறுதல் ஏற்படவில்லை. நல்ல மாறுதலைப் பார்க்க முடியவில்லை. இன்றைக்கு எங்களுடைய கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் 'நெருக்கடி நிலைமை காரணமாகப் போடப்பட்ட வரிகள் அத்தனையையும் நீக்கவேண்டும்' என்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. பக்தவத்சலம் ஆட்சியில் புதிதாக 19 வரிகள் போடப்பட்டு 60 கோடி ரூபாய் அதிகப்படியான வருமானம் வந்தது. போடப்பட்ட புது வரிகள் 18; வசூலானது 60 கோடி ரூபாய். வரி ஏமாற்றுபவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மிக நன்றாகச் சொன்னார்கள். இப்படி வரியை ஏமாற்றுகிறவர்களையெல்லாம், முதலாளிகளை எல்லாம் கோடீஸ்வரர்களாக ஆக விட்டு விட்டு, ஏழை எளிய மக்கள் மீது இன்றைக்கு புதிதாக கொடுமையான வரியைப்போடுகிறீர்கள். நவம்பர் மாதத்திலே வரி போட்டார்கள். ஏழை மக்கள் உபயோகப்படுத்துகிற அத்தியாவசியப் பொருள்களுக்கெல்லாம் 25 சதவிகிதமாக வரி உயர்வு. ஆடம்பரப் பொருள்களுக்கு, ரெப்ரிஜிரேட்டார், ரேடியோ, கிரமபோன், காமிரா போன்றவற்றுக்கு பத்து சதவீத வரிதான் உயர்வு. இதிலே கூட ஏழை பணக்காரன் தாரதம்மியம். இந்தக் குறைகள் இல்லாமல் ஆட்சி நடத்த அரசு தவறிவிட்டது. தவறிவிட்டது என்றால் அது சாதாரணக் குற்றச்சாட்டு, ஆனால் நீங்கள் அவர்களுக்கு, கொள்ளை லாபக்காரனுக்குக் கள்ளச் சந்தைக்காரனுக்கு வர்த்தக சூதாடிக்கு, தங்கத்தை பதுக்குபவனுக்கு உடந்தையாக, அனுகூலமாக மாறிவிட்டீர்கள். இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் இதற்கு காரணஸ்தராக இருந்த அப்பாவி அதிகாரி மீது உங்கள் கவனம் சென்றது. எங்கிருந்து இந்த நிர்ப்பந்தம் வந்தது? இவைகளுக்குப் பின்னாலேயுள்ள அந்த மர்ம மனிதர்கள் யார்?

[திரு. கே. ஏ. மதியழகன்] [19th March 1966

என் இப்படிச் செய்தீர்கள்? க்ரேஸ் பீரியட் (கருணைக் காலம்) என்று கொடுத்தீர்கள். பணம் வந்ததா? ஒரு வாரத்திற்கு முன்னர் மத்திய அமைச்சர் கொடுத்த பதிலில், 3,000 கோடி கறுப்புப் பணத்தில் எவ்வளவு வந்தது என்று கேட்டபோது 100 கோடிதான் வந்தது என்றும் நாங்கள் கண்டு பிடித்தது 50 கோடிதான் என்றும் சொன்னார்கள். உங்கள் அரசியல் சாம்ராஜ்யத்திற்கு வெளியில் அவர்கள் ஒரு கருப்பு நிற பொருளாதார சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மூன்றரை கோடி மக்களின் கட்டளையை, இந்த மன்றத்தின் கட்டளையை வெளியே அவர்கள் உதாசீனப்படுத்துகிறார்கள். அவர்கள் பங்களாக்களின் குளிர் அறைகளில் இருந்துகொண்டு கட்டளை போடுகிறார்கள். நீங்கள் கைச்சாந்து போடுகிறீர்கள். இந்த நிலையில் பலஹீனம் எங்கே இருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். சிறிய, நடுத்தர வியாபாரிகளை விட்டு விடுங்கள். வந்திருக்கிற இந்த அறுபது மகஜர்களில் 40 மிகச் சாதாரணமானவர்களுடையது. பெரிய வர்த்தக நிறுவனங்கள், கோடிக்கணக்கான ரூபாய்களை இன்று மோசடி செய்கிறவர்கள்—இதனை கையாடல் என்று கூடச் சொல்லலாம்—இப்படிப்பட்ட கொடும் குற்றம் செய்யும் அவர்களுக்கு இந்த அரசாங்கம் ஆசீர்வாதம் செய்யலாமா? ஏழைகளை கசக்கிப் பிழிகிறவர்களுக்கு அரசாங்கம் இண்டாவதாக என் கருணைக்காலம் கொடுத்தார்கள்? அப்படிக் கொடுத்ததையாவது கொள்ளை லாபக்காரர்கள் பயன்படுத்தினார்களா? அரசாங்கத்தின் மீதுதான் அவர்கள் போர் நடத்தினார்கள். தேர்தலில் உங்களை மிரட்டப்போகிறோம் என்ற அடிப்படையில் வர்த்தகக் கழகம் படுகுழி தோண்டியது. விவசாயிகள் மீதுள்ள வரிகளை ரத்து செய்யுங்கள் என்று சொன்னால் கோபித்துக் கொள்கிறீர்கள். எவ்வளவோ தடவை அமைச்சர் அவர்கள் வர்த்தக ஸ்தாபனங்களில் பேசியிருக்கிறார். விற்பனை வரி சரியாக வந்தால், வரி ஏய்ப்பு இல்லாவிட்டால் என்றுதான் உபதேசம் செய்கிறார்கள். உபதேசம் என்ன ஆனது? புலியின் வரிக்கோட்டை மாற்ற முடியுமா? விஷப்பாம்பை கடிக்காதே என்று சொல்ல முடியுமா? தேளை கொட்டாதே என்று கூறமுடியுமா? ஆக, ஏமாற்றமான பதிலை இந்த மன்றத்தில் மந்திரிகள் அளிக்கும் வகையில்தான் முதலாளிகள் நடவடிக்கைகள் அமைந்தன. அரசியல் சட்டத்திற்கு மந்திரிகள் விசுவாசமாக நடக்க வேண்டாமா? செல்வம் ஓரேயிடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பெரிய பெரிய பண முதலைகள், ஏகபோகம், செல்வக்குவியல் ஓரே இடத்தில் பெருகக் கூடாது என்பதுதான் அரசியல் சட்டத்தின் சித்தாந்தம். அந்த சித்தாந்தத்தை எங்கே கடைபிடித்தோம்? (கனம் முதலமைச்சர் சபையில் நுழைந்தார்). முதல் மந்திரி அவர்கள் வந்து விட்டார்கள். சரியான நேரத்தில் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய ஒரு அறிக்கையை இங்கு கொடுத்தார்கள். மிக அழகான புத்தகம். பெரிய புத்தகம். அது இப்போது என்னிடம் இல்லை. அதிலுள்ள முதல் குறிப்பைப் பார்க்க வேண்டும். என்னை அது மிகவும் கவர்ந்தது. நிதி ஆதாரத்திற்கான பொருளாதார சூத்திரக்

19th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

திற்கான பொருளாதார சூத்திரக் கயிற்றை விளக்கியிருக்கிறார். ஆயிரம் கோடிக்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. எங்கிருந்து இதற்கான பணத்தை எடுக்கப் போகிறார்கள் என்று தேடித் தேடிப் பார்த்தேன். இதற்கான நிதி ஆதாரங்களை எங்கிருந்து திரட்டப் போகிறார்கள் என்று பார்த்தேன். வரி ஏய்ப்பு எத்தர்களைக் கண்டு பிடிப்பதன் மூலம் அதாவது, நெவெதியா, பிரியகாந்த், ஜெய்ஹிந்த் போன்ற பெரிய கம்பெனிகளில் இருந்து வரி ஏய்ப்பு பணத்தைக் கண்டு பிடிப்பதன்மூலம், நிர்வாக சிக்கனச் சீரமைப்பு மூலம் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன் என்று சொன்னார்கள். இது ஒரு ஏமாற்றுச் சொற்றொடர் என்றும் பின்னர் ஏழைகளின் மீதுதான் வரி போடப்போகிறார்கள் என்றும் அன்றே சொன்னேன். இன்றும் அதைத்தான் சொல்கிறேன். அன்று சொன்னதைப் போன்று இன்றும் சொல்கிறேன், இதெல்லாம் இனிப்பான வார்த்தைகள்தான். முதல் அமைச்சர் அவர்கள் பதவி துறப்பதற்கு முன், அவர்கள் பதவி துறந்து விட வேண்டும் என்பது ஆசையல்ல, இப்படி கோட்டையிலே கொலுவீற்றிருக்கும் மந்திரிகள் மீது தங்கள் எண்ணங்களை, அபிலாஷைகளை திணித்து வெற்றி கொள்ளும் பெரிய நிறுவனங்களின் வரி ஏய்ப்புகளை கண்டு பிடித்து அந்தப் பணத்தைப் பெறுவார்களானால் ஏழைகளின் மீது நாம் இப்போது நவம்பரில் விதித்துள்ள எட்டு கோடி ரூபாய் வரியின் வசூல் தேவையே இருக்காது. ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை எடுங்கள், இந்த மன்றம் உங்களை அதற்காக வாழ்த்த இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் ஏழை மக்களின் மீதுள்ள வரிகளைக் கூட வாபஸ் பெற முடியும். சாதாரண வியாபாரிகள் கூட வேண்டாம், லட்சம் ரூபாய் வரை டேர்ன் ஓவர் செய்கிற வியாபாரிகள் கூட வேண்டாம். பெரிய வியாபாரிகளின் கள்ளக் கணக்கை கண்டு பிடியுங்கள். அவர்கள் கையில் இருப்பது யாருடைய பணம்? ஏழை எளியவர்களின் வரிப் பணம்தான் அது. அந்தப் பணம் கஜானாவிற்கும் போய் சேரவில்லை, மக்களிடத்திலும் தங்கவில்லை, நடுவில் எங்கேயோ சுரண்டல்காரனுக்கு, மோசடி செய்பவனுக்குப் போய்விட்டது. அப்பணம், பெரிய பெரிய மாளிகைகளாகவும், வைர அட்டிகைகளாகவும், பளபளப்பான கார்களாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. இதற்கு நான் இரண்டே இரண்டு காரணங்கள்தான் சொல்ல முடியும். ஒன்று, நீங்கள் இன்று நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து விட்டீர்கள். அமைச்சர் அவர்கள் எங்களை நடு வழியில் கொண்டு வந்து விட்டு விட்டு வேறு திசையிலே சென்று விட்டார்கள். ஏழைகளுக்காக பாடுபடலாம், நன்மை செய்யலாம் என்று எங்களோடு கை கோர்த்து நிற்கிற வேளையில் யாருடைய நிர்ப்பந்தத்தினாலோ அவர்கள் எங்களை விட்டு போய் விட்டார்கள். அந்த மர்ம மனிதர் யார்? என்னை கோபித்துக் கொள்ளக் கூடாது. எனக்கு தனிப்பட்ட முறையில் கனம் தொழில் அமைச்சர் அவர்களுடன் எந்தவித வருத்தமும் குறையும் கிடையாது. முன்பே நான் இங்கு கூறியிருக்கிறேன். விற்பனைவரித் துறையில் ஒரு டாக்ஸ் உண்டு. டாக்ஸ் ஆன் டாக்ஸ் என்று அதற்குப் பெயர். விற்பனை வரிமீது வரி. சுப்ரீம் கோர்ட் வரையில் தாவா போனது. 1963-ல் சுப்ரீம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [19th March 1966

கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கிற்று. நான் இந்த மன்றத்திலேயே
பேசியிருக்கிறேன். டி.வி.எஸ், கம்பெனியை எடுத்துக் கொள்வோம்.
அவர்கள் பர்கூசன், பார்கோ, லே லாண்ட் லாரிகள் விற்கிறார்கள்.
அந்த லே லாண்ட், பார்கோ லாரிக்கு விலை 40,000 ரூபாய் என்றால்
4,000 ரூபாய் வரி போட்டு அதன்படி விற்பனையாளரான டி.வி.எஸ்.
நிறுவனத்தார் 4,000 ரூபாய்க்கு வரி சேர்த்து 4,400 ரூபாய்க்கு வரி
கொடுக்கவேண்டுமென்பது சட்டம். இது சரியான சட்டம், 400
ரூபாய் சேர்த்து வரி கட்டவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு
வழங்கியது. இப்போது சட்டமே மாறி விட்டது, மாற்றி
விட்டீர்கள். ஆனால் இந்த இடைவெளியில் டி.வி.எஸ். கம்பெனி
மட்டும் இந்த வரி மூலமாக பாக்கி பத்து லட்சம் ரூபாய்க்கு மேல்
ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு கொடுக்காமல் இருந்தது.
ஆக இரண்டு ஆண்டுகளாக டி.வி.எஸ். 20 லட்சம் ரூபாய் பழைய
பாக்கி வரி கொடுக்கவில்லை, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் வந்த
வுடனே ஒன்று சட்டத்தை திருத்தியிருக்கவேண்டும் அல்லது
பழைய பாக்கி வரியை வசூலித்திருக்க வேண்டும். அப்போது
அதை ஆட்சேபித்திருக்கமாட்டோம். அப்படி உடனே சட்டத்
தைத் திருத்தாமல் 1965 வரையில் அதை வைத்துக்கொண்டிருந்த
தோடு, கொடுக்க வேண்டிய வரியை வசூல் செய்யாததால் இந்த
மாநிலத்திற்கு மொத்தம் ஒரு கோடி ரூபாய் வருமானம் குறை
கிறது. டி.வி.எஸ். கம்பெனி ஒன்று மட்டும் 20 லட்சம் ரூபாய்
வரியை ஏமாற்றி, சொந்த லாபம் அடைவதற்கு அமைச்சர்
வெங்கட்டராமன் உடந்தையாய் இருந்திருக்கிறார் என்று நான் பல
மாக குற்றஞ்சாட்டுகிறேன். இது சம்பந்தமான அரசாங்க தஸ்தா
வேஜுகளை அரசாங்கம் காட்ட முடியுமானால் இங்கேயே. இப்போதே
நான் அதை நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். பெரிய பெரிய
நிறுவனங்களான இவர்களுடைய தயவு தேர்தல் காலத்தில்
வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் செய்யப்படுகிறதே தவிர
வேறு என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்கள். பொது
மக்களுக்கு பணி செய்வதற்காக இங்கு உறுப்பினர்களாக தேர்ந்
தெடுக்கப்பட்டு வந்திருக்கிற பல சட்டமன்ற அங்கத்தினர்களின்
இல்லங்களும் சோதனை செய்யப்பட்டன. என்றால் நன்றாகச்
சொல்ல முடியும், எப்படி நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்து
விட்டார்கள் என்பதைப்பற்றி. சேலம் தொகுதி அங்கத்தினர்
திரு. வெங்கட்டராமன் அவர்களின் தொழில் நிலையம் சோதனை
யிடப்பட்டது. ஆத்தூர் தொகுதி அங்கத்தினர் திரு. அங்கமுத்து
நாய்க்கரின் இல்லம் சோதனையிடப்பட்டது. ஸ்ரீரங்கம் தொகுதி
அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்களின் வியாபார நிறு
வனம் சோதனையிடப்பட்டது. இதற்கெல்லாம் மேலாக, பெரும்
தொழிலதிபர்களான கோதாரி, இண்டியா சிமெண்ட்ஸ்,
முருகப்ப செட்டியார், டி.வி.எஸ். போன்றவர்களின் நிறுவனங்களை
இவர் சோதனையிட உத்தரவுகள் தயாராகிவிட்டது. அது நடந்து
விட்டால் வருகிற பொதுத்தேர்தலிலே கிடைக்கப்போகிற 20, 25
இடங்கள் கூட வராதே என்ற பயம் உங்களை கப்பிக் கொண்டது.
இந்த இரகசியம்தான் விற்பனைவரி மசோதாவை திருப்பப்
பெற்றதற்கு உண்மையான காரணம், வேறு என்ன காரணத்தைக்

19th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

சொல்லப் போகிறீர்கள். எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை சொல்
லும்போது அமைச்சர் அவர்கள் 'சாக்கடை' என்று சொல்லி
விடுகிறார்கள். . . (குறுக்கீடு) . . . அமைச்சர் அவர்கள் எதிர்
கட்சிகளை சொல்லவில்லையென்றாலும், நாட்டில் இன்றைக்கு இருக்
கின்ற நிலைமை என்ன? நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் இன்றைய
தினம் சந்தனக் காடுகளில் வாழவில்லை. கோடானுகோடி ஏழை
மக்களான நாங்கள் சாக்கடையருகேதான் வாழ்ந்து கொண்டிருக்
கிறோம். அமைச்சர்கள் வேண்டுமென்றால் சந்தனக் காடுகளில்
வாழலாம். ஆனால் அங்கே சர்ப்பங்கள்தான் அவர்களை சூழ்ந்து
கொண்டிருக்கின்றன. காட்டிலாகா அமைச்சர் மன்றாடியார் அவர்
களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். சந்தனக்காடு
களில் ஏராளமான சர்ப்பங்கள் இருக்கும். அப்படிப்பட்டவர்கள்
தான் உங்களை மந்திரி பீடத்தை சுற்றி வளைத்திருக்கிறார்கள். அவர்
களை மட்டும் நினைத்துக்கொண்டிருக்காமல் இந்த நாட்டிலுள்ள
ஏழை மக்களை காப்பாற்றுகின்ற வழியில் நீங்கள் வேலை செய்யுங்
கள். இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களின் வாங்கும் திறன், சக்தி
இவைகளை எல்லாம் விட்டு விட்டு, முதலாளித்துவத்திற்கு காவலர்
களாகவும், அவர்களுக்கு அனுசரணையாகவும், பணக்காரப் பெரு
வெள்ளத்திற்கு மதகுக் கதவுகளை திறந்து வருபவர்களாகவும்.
அவர்களுடைய ஆபத்பாந்தவர்களாகவும் இருந்து கொண்டு
இந்த நாட்டிலுள்ள கோடானுகோடி ஏழை மக்களின் வாழ்வை
கெடுத்து விடாதீர்கள். இன்றையதினம் மத்திய சர்க்காரிடத்தில்
பல வரிகளை நீங்கள் ஒப்படைத்துவிட்டு சரணடைந்திருக்கிறீர்கள்.
அதன் மூலமாக இந்த நாட்டில் உலவி வருகின்ற கள்ளமார்க்கெட்
பணம், கறுப்புப் பணம், பதுக்கல் தங்கம் இவைகளுக்கெல்லாம்
பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில், பணக்கார திமிங்கிலங்களுக்கு
ஆலவட்டம் வீசிக் கொண்டு இந்த நாட்டை அடைமானம் வைத்து
விட்டீர்கள். அவர்களுக்கு இன்றைக்கு உங்களிடம் மதிப்பு
கிடையாது. 50 ஆயிரம், 2 லட்சம் என்று எங்கெங்கோ இருந்த
பணங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்படிப்பட்ட
பெரும் புள்ளிகள் மீதுள்ள நடவடிக்கைகள் எல்லாம்
இன்றைக்கு எங்கேயோ போய் விட்டது. உங்கள் பெரும் தலைவர்
திரு. காமராஜ் பேசி வருகின்ற சோஷலிசத்திற்கு இது
உகந்ததுதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன். நான்
இந்த மன்றத்தின் மூலமாக மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.
இந்த கடைசி நேரத்திலாவது இப்படிப்பட்ட பெரிய வர்த்தக
நிறுவனங்களில் இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெளியே
கொண்டுவரவேண்டும். இருக்கின்ற கள்ளநோட்டுகள் வெளியே
வந்தாக வேண்டும். பதுக்கல் தங்கங்கள் வெளியே வந்தாக
வேண்டும். இவ்விதம் கொண்டு வந்தீர்களேயானால் உங்களை இந்த
நாட்டிலுள்ள ஏழை மக்கள் நிச்சயம் வாழ்த்துவார்கள். எதிர்கட்சி
என்ன செய்து விடுமோ என்று உங்களுக்கு இருக்கின்ற பயமும்
நீங்கும். உங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகும். உங்களுடைய
சொந்த நலனை முன்னிட்டாவது இப்படிப்பட்ட நல்ல காரியத்தை
செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அருமை
நண்பர் [illegible] அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தம் என்ன?

[திரு. கே. ஏ. மதியழகன்] [19th March 1966

நெருக்கடிநிலை காரணமாகப் போடப்பட்ட வரிகள் அத்தனையும் நீக்கப்படவேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட வரியை ஏழை மக்களிடமிருந்து வாங்கவேண்டியதில்லை, இதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், இப்படிப்பட்ட வரி யை கோதாரியிடமிருந்து பெறுங்கள், இண்டியா சிமெண்ட்ஸ் இட மிருந்து பெறுங்கள் அல்லது முருகப்பச் செட்டியார், டி.வி.எஸ். போன்ற நிறுவனத்திடமிருந்து பெறுங்கள். அந்த முறையில் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசாங்க கஜானாவிற்குக் கொண்டு வரக்கூடிய திருத்த மசோதாவை மீண்டும் கொண்டு வாருங்கள். அதே நேரத்தில் ஏழை வியாபாரிகளுக்கு குறிப்பிட்ட அளவி லிருந்து விலக்கு அளிக்கவேண்டும். அப்போதுதான் உண்மை யான பணம் சர்க்கார் கஜானாவுக்குப் போய்ச் சேரும், அதன் மூலம் இந்த நாட்டிலுள்ள வர்த்தக சூதாட்டங்களைத் தடுக்க முடியும், பொருளாதார சீர்குலைவை முறியடிக்க முடியும் என்று கூறிக்கொள்ளுகின்ற நேரத்தில், புது மசோதாவை இந்த சட்ட மன்றத் தொடரிலேயே அறிமுகம் செய்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது தேர்தல் வருஷம். சர்க்கார் என்ன செய்தாலும் தேர்தலுக்காகச் செய்தார்கள் என்று சொல்லுவது, சர்க்கார் செய் யாவிட்டாலும் தேர்தலுக்காகச் செய்யவில்லை என்று சொல்லுவது, இது ஜனநாயகத்தில் ஒரு மரபாக இருக்கிறது. ஆனால், இது தேர்தலுக்காகச் செய்யப்பட்டதா இல்லையா என்பதைப் பற்றிய கருத்துக்களை வெளியில். அதாவது சட்டமன்றத்திற்கு வெளியில் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெறுகின்ற காலத்தில் தீவிரமாக இரண்டு கட்சிகளும் பேசிக் கொள்ளலாம் என்று சொல்லி, நான் அந்த விஷயங்களை எல்லாம் ஒதுக்கிவிடுகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்தை, அதாவது விற்பனை வரி சோதனை சட்டத்தை அரசாங்கம் வாபஸ் செய்தது என்பதைப்பற்றிய கருத் துக்களை சற்று தீவிரமாக திரு. மதியழகன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் வேகமாகவும், கடுமையாகவும் பேசினார்கள். இவ்விதம் பேசினாலும் 100-க்கு 70 சர்க்கார் செய்ததை ஆதரிக் கின்ற முறையில்தான் அவர்களுடைய பேச்சு இருந்தது. அவர் களுடைய பேச்சில் அவர் உபயோகித்த மொழி, தொனி இவைகள் கொஞ்சம் கோபமாகத் தோன்றினாலும் 100-க்கு 70 சர்க்கார் செய் திருப்பதற்கு ஆதரவாகத்தான் பேசினார்கள். என்ன சொல்லப் பட்டது என்றால், 'புதிதாகச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னோம், அது வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள், பெரிய நிபுணர் என்று நினைத்துக்கொண்டு, அப்பீல் போட் டிருக்கிறோம், அதிலேயே சரியாகப் போய்விடும் என்று சொன் னார்கள். பின்னால் தாங்களாகவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்' என்று சொன்னார்கள். இது திரு. மதியழகன் அவர் களுக்குப் பெருமையல்லவா என்று கேட்கிறேன். ஜனநாயகத்தை மதித்து செய்யப்பட்டது அல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

19th March 1966] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

என்னுடைய அபிப்பிராயம் அப்பீலில் நம்முடைய ரூறிக்கோள் ஜெயிக்கும் என்று இருந்தாலும், சட்டசபை அங்கத்தினர்கள் எல்லாம் இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்று சொன்னதை ஏற்றுக் கொண் டேன். அது கூடத் தவறா? அதற்காக ஏன் கோபப்படவேண்டும் என்று தெரியவில்லை. ஆகவே, ஜனநாயகத்தின் அடிப் படையில்தான் இது கொண்டுவரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு ஏன் வாபஸ் வாங்கப் பட்டது என்பதைப்பற்றி கனம் மதியழகன் அவர்கள் கொஞ்சம் தீவிரமாகப் பேசினார்கள். 'நாம் எதற்காக வாபஸ் வாங்கினோம்—பாழாய்ப்போன பாகிஸ்தான் படையெடுப்பின் காரணமாகத்தான்'—நல்ல அடுக்குமொழியில்—அலிட்ரேஷனுக— அவர்களே சொன்னார்கள். நல்ல மொழியில் திறமையாகவும், அழகாகவும் எதற்காக இது வாபஸ் பெறப்பட்டது என்பதை அவர்களே எடுத்துச் சொன்னார்கள். பாகிஸ்தான் படையெடுப்பின் போது நாட்டில் கலவரங்கள், கிளர்ச்சிகள் ஏற்படக் கூடாது, நாட்டிலுள்ள மக்கள் அத்தனைபேருடைய ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் இந்த நிர்வாகத்தை நடத்தவேண்டும், ஆகவே இதை வாபஸ் பெறலாம் என்று கமிட்டியில் சொன்னார்கள். கனம் மதியழகன் அவர்களும் அந்தக் கூட்டுக் கமிட்டியில் இருந்து ஏற்றுக்கொண்டார்கள். சட்டசபையிலும் ஏற்றுக் கொண்டார் கள். ஆகவே, இதில் சர்க்கார் செய்த தவறு என்ன என்பது தான் எனக்குத் தெரியவில்லை . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: வாபஸ் வாங்கவேண்டும் என்று முடிவு செய்ததே பெரிய தவறு . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த பத்து ஆண்டுகளில் எந்த நேரத்திலாவது நான் கனம் அங்கத்தினர் திரு. கலியாண சுந்தரம் அவர்களுக்கு பதில் சொல்லாமல் இருந்திருக்கிறேனா என்பதை கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களைப்பற்றி சொல்ல வரும்போது அவர்களுடைய கருத்துக்களுக்கு பதில் சொல்லுகிறேன். இப்போது கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களுக்கு பதில் சொல்லுகிறேன். அதாவது இந்த மசோதாவை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். சர்க்கார் என்ன சொல்லியது? அவசியம் ஏற்படுகிறபொழுது மீண்டும் இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு சர்க்கார் தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. நெருக்கடி நிலை தீர்ந்து விட்டது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். தீர வில்லை என்று நான் சொல்லுகிறேன் நாட்டின் நெருக்கடி நிலை அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறதே தவிர தீர்ந்துவிட்ட தாகத் தெரியவில்லை. டாஷ்கண்ட் ஒப்பந்தத்தினால் மட்டும் பாகிஸ்தான் தொல்லைகள் தீர்ந்துவிட்டன என்று நினைப்போமானால் அது சரியாக இருக்காது என்பதை பல்வேறு அறிகுறிகளிலிருந்து நம்மால் கண்டு கொள்ள முடிகிறது. இதைக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லுகின்ற காலத்தைப்பற்றி கருத்து வேற்றுமை இருக்

இறதே தவிர வேறு எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக திரு. மதியழகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் பல பெரிய புள்ளி களிடம் கணக்கை சோதனை போட்டார்கள் என்று அவர்களே சொன்னார்கள். எப்படியும், சோதனை போட்டது இந்தச் சர்க்கார் தானே. இதிலிருந்து எந்தப் பெரிய புள்ளியாக இருந்தாலும் சோதனை போடக்கூடிய நிலையில் இந்த சர்க்கார் இருக்கும், வேண்டுமென்றால் சோதனை போடும் என்பதை கனம் மதியழகன் அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோதனை போடவில்லை என்று சொன்னால்தான் அதைக் குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ள முடியும். இவர்கள் மீது போட்டார்கள், அவர்கள் மீது போட் டார்கள் என்று சொல்லிவிட்டு, இவர்கள் மீது என் சோதனை போடவில்லை என்று கேட்டால்தான் குற்றச்சாட்டு ஆகும். இவர் களை எல்லாம் சோதனை போட்டார்கள், செர்ச் செய்தார்கள் என்று சொல்வது குற்றச்சாட்டாக ஆகாது. ஆகவே 100-க்கு 70 பங்கு சர்க்கார் செய்ததற்கு ஆதரவாகத்தான் அவர்கள் பேசினார்களே தவிர எதிர்த்துப் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

11-30 a.m. சில முக்கியமான விஷயங்களைப் பற்றி இப்போது நாம் கவனிக்கலாம். ஒன்று, இந்த 41-வது பிரிவு, சட்டத்தில் ஓட்டை இருக்கிறது என்று சொன்னேன் என்று சொன்னார்கள். எப்போது சொன்னார்கள்? ஹைக்கோர்ட்டிலே, அது செல்லாது என்று சொன்னபோதுதான் சொன்னார்கள். ஹைக்கோர்ட்டிலே சொன்ன பிறகுதான் சொன்னார்களே தவிர, ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துச் சொன்னது போல . . .

திரு. கே. ஏ. மதியழகன் : ஓட்டை என்றுதான் சொன்னேனே தவிர நான் பெரிய சட்ட நிபுணன் என்று சொல்லவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் நம் ராஜ்ய சட்ட ஆலோசகர், நம்முடைய ராஜ்யத்தினுடைய சட்ட சபையின் பொறுக்குக் கமிட்டி, இன்னும் இது சம்பந்தமாக மத்திய நிர் வாகத்தில் இருக்கிற ஆலோசகர் எல்லோரையும் கலந்து ஆலோ சித்தது என்று அப்போதே சொன்னேன். நம்முடைய செலெக்ட் கமிட்டியில் சொல்லியிருந்தாலும்—அப்போது கனம் அங்கத்தினர் மதியழகன் மெம்பராக இல்லை, அவர் வருவதற்கு முன்னால் ஏற் பட்ட சட்டம்—அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், அப்போது இருந்தவர்கள் சொல்லியிருந்தாலும் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களை எல்லாம் சொல்லியிருப்பேன். முன்கூட்டியே, பின்னால் வருவதையெல்லாம் சொல்லும் எதிர்க் கட்சியினர் இருக்கிறார்களே என்று பெருமை கூட அடைந்திருப் பேன். ஹைக்கோர்ட் சொன்ன பிறகு, நாங்கள் சரியில்லை, சரி யில்லை என்று சொல்லுகிறோம் என்று சொல்லும்போது, சரியில்லை என்பதற்கு இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன, அது தீர்க்கப்பட வேண்டிய இடம் வேறு ஒரு கோர்ட் என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டிபற்றிச் சொன் னார்கள். நம்முடைய நாட்டிலே ஷுகர், டெக்ஸ்டைல்ஸ், டொபாக்கோ இந்த மூன்று பண்டங்களும் பரவலாக எல்லா இடங் களிலும் உபயோகப்படுகிற காரணத்தினால் ஒவ்வொரு ராஜ்யத் திலும் தனித்தனியாக விற்பனை வரி போட்டு, அந்த விற்பனை வரி யை வசூலிப்பதிலே ஏற்படுகிற கஷ்டங்களையெல்லாம் போக்கு வதற்கு மத்திய சர்க்கார் தான் விதிக்கிற எக்ஸைஸ் ட்யூட்டி ஒன்றைப் போட்டு அதற்கு மேல் அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி என்று ஒன்றையும் சேர்த்து வசூலித்து, அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி வருமானத்தை ராஜ்யங்களுக்கு விதாசாரப்படி பங்கிட் டுக் கொடுப்பது என்ற திட்டத்தை ஏற்றுக்கொண்டோம். அடிஷ னல் எக்ஸைஸ் ட்யூட்டி என்பது சில பண்டங்களுக்கு மாத்திரம் போட ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு செய்வதன் மூலமாக நமக்கு ஓரளவு வருவாய் பெருகி வந்திருக்கிறது. அதே சமயத் தில் உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்படக் கூடிய தடைகள் எல்லாம் குறைந்திருக்கின்றன. இன்றைக்கு பல ராஜ்யங்களிலிருந்து பல தொழில் ஸ்தாபனங்களெல்லாம் இந்த மூன்று பண்டங்கள் மீது மாத்திரம் விதித்திருக்கும் வரி போதாது, பல பண்டங்கள் மீது அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி போட்டு விற்பனை வரியை எடுத்து விட வேண்டுமென்று பெரிய குரல் எழுப்பி இருப்பதை நான் கனம் மதியழகன் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். பல ராஜ்ய சர்க்கார்கள் கூட அந்தவிதமான அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த சர்க்காரைப் பொறுத்த அளவில், நாங்கள் அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி போட்டு, விற்பனை வரியை அதிலிருந்து நீக்குவதற்கு, சில வெகு சுலபமான பண்டங் கள் தவிர, மற்ற பண்டங்களுக்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டோம். அதுவும் டில்லியில் நடந்த நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்களில்—கனம் அங்கத் தினர் திரு. மதியழகன் இந்த சட்ட சபையில் அங்கத்தினராக வருவதற்கு முன்பே—சொல்லப்பட்டது என்று மிகத் தாழ்மை யாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி போடலாமா வேண்டாமா என்றால், அது சர்ச்சைக்கு உரிய விஷயம். போடுவதால் சில நன்மைகள் இருக்கின்றன. அப்படிப் போடாமல் இருப்பதால் சில நன்மைகள் இருக்கின்றன. போடுவதால் இருக்கக் கூடிய நன்மைகள் வியாபாரத்தில் வேக மாகப் பண்டமாற்று ஏற்படுவதற்கும், வரித் தொல்லைகள் இல்லா மல் இருப்பதற்கும் உபயோகமுள்ளதாக இருக்கும். அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி இல்லாமல் சேல்ஸ் டாக்ஸ் போட்டால், நம் ராஜ்ய வருமானம் நெகிழ்ச்சி உள்ளதாக—எலாஸ்டிஸிடி ஆஃப் ரெவின்யூ உள்ளதாக—இருக்கும். இன்றைக்கு நமக்கு இருக் கிற முக்கிய வரி செல்ஸ்-டாக்ஸ். அதில் நமக்கு நெகிழ்ச்சி வேண் டும். அதிலிருந்து வருகிற வருவாயை அதிகமாக்கிக் கொள்ள, அல்லது குறைத்துக் கொள்ள சக்தி பெற்றிருக்க வேண்டும் என்ற காரணத்தினால் அதிகமான பண்டங்களை எக்ஸைஸ் ட்யூட்டிக்கு மாற்றுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

அடுத்தாற்போல அவர்கள் சொன்னார்கள், அத்தியாவசியப் பண்டங்கள் மீது 25 சத விகிதம் உயர்த்தியிருக்கிறோம் என்று. அத்தியாவசியப் பண்டங்கள் என்று சொன்னால் என்ன என்று குறிப்பிடவில்லை. உணவுப் பொருட்களைப் பொறுத்த அளவிலும் நாம் வரியை ஏற்றவே இல்லை. மற்ற பண்டங்களுக்கு விற்பனை வரியை ஏற்றவே இல்லை. மற்ற பண்டங்களுக்கு 2 சத விகிதத்தில் இருந்து 1 சத விகிதம் ஆகக் குறைத்தோம்—அந்த குறைக்கப்பட்ட வரிதான் இன்றைக்கு அமலில் இருக்கிறது. மற்ற பண்டங்கள் மீது உயர்த்துவதற்குக் காரணம் அதற்கான மசோதாவைக் கொண்டு வந்தபோதே விளக்கிச் சொன்னேன். நாட்டில் இருக்கிற நெருக்கடி காரணமாக, புரிந்த சேவைகள் எல்லாவற்றுக்கும் நிதி திரட்ட அது அத்தியாவசியமாக இருக் கிறது. நெருக்கடி நிலைமை தீருமானால் இதைப் பரிசீலிக்கலாம் என்று சொன்னேன், எடுத்து விடுவதாகச் சொல்லவில்லை. நெருக்கடி நிலைமை என்பது தீர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. இன்றைக்கு இருக்கிற நிலைமையில் பரிசீலிக்கும் காலம் கூட வரவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டு சொன்னார் கள். டாக்ஸ் ஆன் டாக்ஸ் நாங்கள் போடவில்லை என்று சொன் னார்கள். போடாததுதான் குற்றச்சாட்டு . . .

திரு. கே. ஏ. மதியழகன் : டாக்ஸ் ஆன் டாக்ஸ் இருந்தது. அதைப் பற்றி தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் டாக்ஸ் ஆன் டாக்ஸ் இருந்த போது வசூலிக்கவில்லை. நவம்பர் மாதத்தில் சட்டம் கொண்டு வந்தார்கள். சட்டத்தை முன்னமேயே கொண்டு வந்திருக்கலாம். சர்க்காருக்குக் கிடைக்க வேண்டிய வரியை டாக்ஸ் ஆன் டாக்ஸ் இருந்தபோது வசூலித்திருக்கலாம் என்றுதான் சொன்னேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் டாக்ஸ் ஆன் டாக்சை அப்போஸ் செய்கிறார்கள். வெகு நன்றி. கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் விற்பனை வரி மீது வரி வாங்கு வது சரியல்ல என்று ஏற்றுக் கொள்ளுகிறார்கள் . . .

திரு. கே. ஏ. மதியழகன் : அது ஏற்கெனவேயே சொன்ன விஷயம்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏனென்றால், எனக்குக் கொஞ்சம் கன்ஃப்யூஷன். விற்பனை வரி மீது வரி போடக் கூடாது என்பது என்னுடைய திட்டவட்டமான அபிப்பிராயம். ஆண்டு தோறும் இது சம்பந்தமாகப் பிரச்னைகள் வருகிற நேரத்திலெல் லாம், இது வியாபாரிகள் மீதான வரியல்ல. இது உபயோகிக்கின்ற வர்கள் மீது போடுகிற வரி, ஆகவே இதை உபயோகிக்கிறவர்கள் தான் கொடுக்கிறார்கள், வியாபாரிகள் கொடுப்பதல்ல. அவர்கள் இதற்கு எதிர்ப்புக் காண்பிப்பது தவறு, உபயோகிக்கிறவர்கள் கொடுக்கிற பணத்தைச் சுருட்டி வைத்துக்கொண்டால் அது மிஸ் அப்ரோப்ரியேஷன் என்று சொல்லியிருக்கிறேன். அதில் எந்த

விதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஆனால் இது சம்பந்தமாகப் பல சட்டப் பிரச்னைகள் இருந்தன. சுப்ரீம் கோர்டில் ஒரு தீர்ப்பு, அதே சமயத்தில் ஹைக்கோர்ட்டில் ஒரு தீர்ப்பு எல்லாம் பெண்டிங்காக இருந்த காரணத்தினால், என் அபிப்பிராயம் என்ன என்று பல இடங்களில் சொல்லும்போதெல்லாம், சட்ட பூர்வ நடவடிக்கை கோர்ட் தீர்ப்பு முடிந்த பிறகுதான் எடுக்க முடியும் என்று சொன்னேன். அதுதான் காலதாமதத்திற்குக் காரணம். இன்றைக்கு வரியின் மீது வரி போட்டு வாங்குவது என்று உண்டாக்குவோமானால், அவர்கள் மீது வரி என்று ஏற்படும். வர்த்தகர்கள் கொடுக்கும் நிலைமை ஏற்படும். அந்த விதமான நிலைமை இல்லை சேல்ஸ்-டாக்சைப் பொறுத்த வரையில் என்று ஆரம்பத்திலிருந்து சொல்லி வந்திருக்கிறோம். கனம் உறுப்பினர்கள் சிலர் சொல்லும்போது ½ சத விகிதம் லாபம் வரும் இடத்தில் கூட 3 சத விகிதம் வரி போட்டு வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். லாபத்திற்கும் விற்பனை வரிக்கும் சம்பந்தம் கிடையாது, ½ சத விகிதம் லாபம் வந்தாலும் அல்லது நஷ்டமே வந்தாலும், மக்களிடத்திலிருந்து அரசாங்கத்தின் ஏஜெண்ட்டாக இருந்து அவர்கள் வாங்கிக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இன்கம் டாக்ஸ் என்பது வருமானத்தின் மீது போடுகிற வரி, பிசினசாக இருந்தால் லாபத்தின் மீது வரி, தனி நபராக இருந் தால் அவருடைய சொந்த வருமானத்தின் மீது வரி. இன்றைக்கு விற்பனை வரி அந்த மாதிரி இல்லை. எந்தப் பண்டத்தை விற்றாலும், விற்பனை மீது வரி போடுவது என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், விற்பனை வரி மீது வரி போடுவது சரியாகாது என்றுதான் சொன்னேன். அதற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. நாட்டில் பல நடக்கும். சட்டபூர்வ காரியம் சர்க்கார் செய்து கொண்டிருக்கும்போது சிலர் பாதிக்கப்படுவார்கள், சிலர் நன்மை அடைவார்கள், சிலருக்கு லாபம் இருக்கும், சிலருக்கு நஷ்டம் இருக்கும். ஒன்றொன்றுக்கும் ஒரு காரணம் கற்பித்து, மோட்டிவ் கற்பித்து இந்த மாதிரி எல்லாம் பேசுவது . . (திரு. கே. ஏ. மதி யழகன் குறுக்கீடு) நீங்கள் அவ்வளவு நேரம் சொல்லிக்கொண் டிருந்தபோது நான் பேசாமல் இருந்தேனே, நான் ஒரு நிமிஷம் சொல்லக் கூடாதா? ஏன் இந்த மாதிரி குறுக்கிடுகிறீர்கள்? ஒவ் வொன்றுக்கும் ஒரு மோட்டிவ் கற்பித்து, உட்கருத்து கற்பித்து, இதற்காக சர்க்கார் செய்தார்கள், அதற்காக சர்க்கார் செய்தார்கள் என்று சொல்லுவது சரியல்ல. ஒரு நாளைக்கு நாங்கள் 100, 120 ஆர்டர் 'டிஸ்கிரீஷனரியாக' போட்டுக்கொண்டிருக்கிறோம். யார் என்று தெரியாது. ஃபைல் வருகிறது. அப்பொழுது ஞாபகம் வரும். கீழே போட்டவுடன் அது இன்னது என்று தெரியாது. இதற்கெல்லாம் ஒரு மோட்டிவ் கற்பித்து, அதற்காக போட்டார்கள். தேர்தலுக்காக போட்டார்கள், பணம் வாங்கிக்கொண்டு போட்டார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு போவது அவ்வளவு நல்லது அல்ல. இந்த விதமான குற்றச்சாட்டுகள் ஜனநாயகத்தில் எல்லோர் மீதும் வரும். அதற்கெல்லாம் பாதுகாப்பு வேண்டும். 'இன்றைக்கு நாம் குற்றச்சாட்டுகளைச்

சொல்லக்கூடும், இன்றைக்கு அவர்கள் இருக்கிறார்கள்' என்று வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்லிவிட்டால், பிற்காலத்தில் இதேவிதமான குற்றச்சாட்டுகளை மற்றவர்கள் சொல்லக்கூடும். இப்பொழுது நாங்கள் அதற்குப் பதில் சொல்லக்கூடும். ஆனால் பிற்காலத்தில் குற்றச் சாட்டுகளைச் சொன்னவர்களே என்ன பதில் சொல்லுவார்களோ? அதைத் தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

இன்றைக்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக வருவாய் பெருகி இருக்கிறது என்று நான் சொன்னேன். கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எந்த அளவுக்கு இந்த ராஜ்யத்திலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ அந்தப் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப வரி வளர்ச்சி ஏற்பட வில்லை, அதனால் வரி ஏய்ப்பு இருக்கிறது, லீக்கேஜ் இருக்கிறது, அதை வசூப்பதிலே குறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த ராஜ்யத்தினுடைய வரித் திட்டத்தைப் பரிசீலனை செய்வ தற்கு பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்களை நாம் நியமித்தோம். முதல் முறை ஒரு தரம் நியமித்தோம். இரண்டா வதாக 1964-ம் ஆண்டில் நாம் நியமித்தோம். அவர்களுடைய அறிக்கையிலே கண்டிருப்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

Between 1961-62 and 1963-64 the net output at current prices increased from Rs. 1,227 crores to Rs. 1,407 crores revealing a growth of 15 per cent in the net output. As against an increase of 15 per cent of the State (இதுதான் தேசிய வருமானம்) secondary and agricultural income, sales tax revenue increased by 22 per cent (from Rs. 15.5 crores to Rs. 18.9 crores); rate of increase in the revenue was 50 per cent higher than the rate of increase of State income.

இதை நான் சொல்லிவிட்டு, மேலும் இதற்கு விளக்கம் தேவை யில்லை என்று இதை இத்தோடு முடித்துக்கொள்ளுகிறேன். இந்த ராஜ்யத்தில் தேசிய வருமானம், ராஜ்ய வருமானம் வளர்ச்சி அடைந்தது 15 சத விகிதம். சேல்ஸ் டாக்ஸ் வருமானம் வளர்ச்சி அடைந்தது 22 சத விகிதம். ஆகவே, அதிகமாக இருந்திருக்கிறது என்று நிபுணர் கூறியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சோதனை போடுகிற மசோதா சம்பந்தமாக பேசுகிறபொழுது அதை நாம் கைவிட்டது தவறு என்று சொன்னார்கள். இந்த அபிப்பிராயத்தை அவர் ஒருவர்தான் சட்டசபையிலும் சொன்னார்கள். மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுடைய கட்சி யினுடைய அபிப்பிராயமாக இருக்கலாம். ஆனால், இன்றைக்கு நாட்டிலே இருக்கிற பொதுவான அபிப்பிராயம், கனம் திரு. மதியழகன் அவர்கள் சொன்னது போல, நெருக்கடி நிலைமையை ஒட்டி இந்தச் சோதனையை விடவேண்டும் என்பதுதான். ஆகவே தான், அது கைவிடப்பட்டது என்று கனம் கலியாணசுந்தரம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இனி, தனியாகச் சொல்லப்பட்ட சிறு, சிறு குறைகளைப்பற்றி சில விவரங்கள் கூற விரும்புகிறேன். ஒன்று, வெல்லத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் போடுகிறார்களா என்ற ஒரு கேள்வியைக் கேட் டார்கள். இப்பொழுது நாம் போட்டிருக்கிற வரிகளைத் தவிர ஒன்றும் போடுவதில்லை என்று நான் சொன்னதாக ஞாபகம். ரெவின்யூ போர்டு இதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய் தாலும், நான் சட்டசபையில் திட்டவட்டமாக சொல்ல விரும்பு கிறேன். வெல்லத்திற்கு விற்பனை வரி போடப்போவதில்லை. மத்திய சர்க்கார் போடுகிற வரிக்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை. விற்பனை வரியைப் பொறுத்தவரையில், இதற்கு வரி போடப்போவது இல்லை என்று நான் திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்: வெல்லத்தின் மீது மத்திய சர்க்கார் விற்பனை வரி போடப்போவதாகத் தெரிகிறது. நமது சர்க்கார் மத்திய சர்க்காரோடு வெல்லத்தின் மீது விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று எதிர்த்துப் போராடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அப்படிப் போடுவதாக எனக்குத் தகவல் இல்லை. சட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், சில பண்டங்களை நாம் அடிஷனல் எக்ஸைஸ் டியூடிக்குக் கொடுத்தோம். அவ்வாறு கொடுத்ததிலே வெல்லமும் சேர்ந்திருக்கிறது. வெல்லத்தை நாம் விலக்கி விடலாமா, அதன் மூலம் நம்முடைய ராஜ்யத்தின் வருமானம் சற்று பெருகுமா என்ற பிரச்னையை இந்த ராஜ்ய சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக் கிறது. திட்டவட்டமாக நான் சொல்லுகிறேன், இந்த ராஜ்ய சர்க்கார் அதை விலக்கி, அதன் மூலம் விற்பனை வரி போடப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, செக் போஸ்டைப்பற்றி சில கஷ்டங்கள், குறைகள் இருப்பதாகச் சொன்னார்கள். செக் போஸ்டு சம்பந்தமாக நாம் அடிக்கடி இந்த ராஜ்யத்தில் இருக்கிற ஸேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டியுடன் கலந்து ஆலோசித்து, பல விதிகளில் மாறுதல்கள் செய்திருக்கிறோம். சந்தேகமாக இருக்குமானால், அவர்கள் பணத்தை டெபாஸிட் செய்துவிட்டு, பண்டங்களை எடுத்துக் கொண்டு போகலாம், அங்கே பிடித்து வைத்துக்கொள்ளவேண்டிய தில்லை என்ற நிலைமையையும் சொல்லியிருக்கிறோம். பின்பு வரி கட்டவேண்டியதில்லை என்று ஏற்பட்டால் அந்த டெபாசிட் பணத்தை ரீபண்டு செய்வதற்கும் ஏற்பாடுகளை இப்பொழுது செய் திருக்கிறோம். அதனால் செக் போஸ்டு சம்பந்தமாக இருந்த கஷ்டங்களெல்லாம் இன்றைக்கு குறைக்கப்பட்டு, தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, புலவர் கோவிந்தன் அவர்கள் தன்னுடைய புலமை யின் அடிப்படையிலே சில கருத்துக்களைச் சொன்னார்கள். யானையை வேட்டையாடுவதை விட்டுவிட்டு பூனையை வேட்டை

யாடுகிறார்கள் என்று சொன்னார்கள். பூனை பால் குடிக்குமானால் பூனையையும் வேட்டையாடவேண்டும். யானை நாட்டை அழிக்குமானால், யானையையும் வேட்டையாட வேண்டியிருக்கிறது. பூனையையும் வேட்டையாட வேண்டும், யானையையும் வேட்டையாடவேண்டும். யானை வேட்டை என்று சொன்னார்கள். பெரிய புள்ளிகளின் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்குச் சான்று கனம் மதியழகன் அவர்களே கொடுத்தார்கள். பூனை வேட்டையாடவேண்டும் என்ற அவசியம் இருக்குமானால், அதையும் செய்கிறோம். ஆனால் ஒன்று, நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு உத்தரவு கொடுத்திருக்கிறோம். கூடுமான அளவுக்கு ரூ. 50,000-க்குக் குறைவாக வருவாய் இருந்து, கணக்குக் கொடுத்தால், அந்தக் கணக்குகளை பொதுவாக ஏற்றுக்கொள்ளவேண்டும், அவர்களுக்கு அதிகத் தொல்லை, தொந்தரவு கொடுக்கக்கூடாது என்ற விதியை ஏற்படுத்தியிருக்கிறோம். ஏதாகிலும் ஒன்றிரண்டு பேர்கள் தவறு செய்திருந்தால், அது கண்டிக்க வேண்டியதுதான். அதைச் சர்க்கார் கவனிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் ஸ்ரீமதி லக்ஷ்மிநரசம்மா அவர்கள் வெகு அழகாக இன்றைக்கு சில கருத்துக்களைச் சொன்னார்கள். முக்கியமாக, கண்மூடித்தனமாக 'இன்டிஸ்க்ரிமினேட்'-ஆக அவர்கள் கொடுக்கின்ற கணக்கில் அதிகமாக 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று போட்டுவிடுகிறார்கள், அது தவறு என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். கண்மூடித்தனமாக யாருக்கு வேண்டுமானாலும் 15 சதவிகிதம் கூடச் சேர்த்து போடவேண்டும் என்பது சரியல்ல. கணக்கில் தவறுகள், அல்லது காட்டப்படாதவைகள் இருக்கின்றன என்ற சந்தேகம் எழுந்தால் அல்லாமல், அவர்களுக்கு தோராயமாக 15 சதவிகிதம் 20 சதவிகிதம் சகட்டு மேனிக்கு அதிகமாகப் போடுவது சரியல்ல. அவ்வாறு செய்யக்கூடாது என்று உத்தரவு மூலம் என்னுடைய இலாகாவுக்கு எழுதியனுப்பத் தயாராக இருக்கிறேன். . . .

திரு. டீ. கலியாணசுந்தரம்: 'பெஸ்டு ஆஃப் ஜட்ஜ்மெண்டு' என்று போடுகிறார்களே, அம்மாதிரி போடுகிறபொழுது காரணம் ரெக்கார்டு பண்ணவேண்டாமா? அதற்கு மேலே அப்பீல் பண்ணுவதற்கு உரிமை இருக்கிறதே?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஸ்ரீமதி லக்ஷ்மிநரசம்மா அவர்கள் சொன்ன குறை வேறு. திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லுவது வேறு, அதிகாரிகள் வந்து கணக்குகளை பார்க்கிற பொழுது, ரூ. 10,000-க்கு கணக்கு காட்டியிருக்கிறார்கள் என்றால், 'நான் இன்னும் 20 சதவிகிதம் உங்களுக்கு அதிகமாகப் போடுகிறேன். ரூ. 12,000-க்கு அஸெஸ் செய்கிறேன்' என்று ஒன்றும் காரணம் இல்லாமலேயே சொல்லுவதாகச் சொன்னார்கள். அது தவறு என்று சொன்னேன். 'பெஸ்ட் ஆஃப் ஜட்ஜ்மெண்ட்' வேறு. அதில் காரணம் காட்ட வேண்டும் என்று சட்டத்திலே

போட்டிருக்கிறோம். காரணம் தவறாக இருந்தால், அப்பீல் இருக்கிறது. ஸ்டேட் அப்பலேட் டிரைப்யூனல் இருக்கிறது. அதற்கும் மேலே ஹைக்கோர்ட் இருக்கிறது. அப்படிப் போகலாம் என்று சட்டம் செய்திருக்கிறோம். அவர்கள் சொன்னது வேறு. சகட்டு மேனிக்கு போட்டுவிடுகிறார்கள் என்கிற குறையைச் சொன்னார்கள். அந்த விதமாகப் போடக் கூடாது என்று உத்தரவு போடத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன்.

வரி கொடுப்பவர்கள் இந்த நாட்டின் மன்னர்கள். அவர்களிடம் நியாயமாக நடக்க வேண்டும் என்று மீண்டும், மீண்டும் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கிறது. ஆபீசுகளுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று தீர்மானங்கள் எடுத்தோம். ஆனால் நெருக்கடி ஒன்றன் பின் ஒன்றாக வந்ததன் காரணமாக அவற்றை செயல்படுத்த முடியவில்லை. சேல்ஸ் டாக்ஸ் ஆபீஸ்களுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று இடங்கள் கூட பல இடங்களிலேயும் ஏற்பாடு செய்யப்பட்டது. வருகிறவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தோம்; அங்கே "வாட்டர் கூலர்ஸ்" வைத்துக் கொடுக்க வேண்டும், தங்குவதற்கு இடம் வேண்டும், அவர்கள் தங்கும் இடங்களில் ஃபேன் போடவேண்டும் என்றும் உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறோம். அவர்கள் உட்காருவதற்காக சேர் முதலியவைகள் போட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும், எங்கெங்கு அதிகரிக்க வேண்டுமோ அங்கெல்லாம் அப்படிச் செய்யவும் சர்க்கார் தயார்.

கனம் உறுப்பினர்கள் திரு. சங்கரன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும், இரண்டு பேர்களும் எக்ஸெம்ஷன் லிமிட்டை ரூ. 25,000-க்கு உயர்த்த வேண்டும் என்று சொன்னார்கள். அது நம்முடைய நிதி நிலையைப் பொறுத்தது. இன்றைக்கு இருக்கும் வருவாயைப் பார்த்துச் செய்து விட்டால், அளவை உயர்த்திவிட்டால், பின்னால் வருவாய் குறைந்துவிடும். ஆகையினால் அதை அவ்வளவு சுலபமாகச் செய்துவிட முடியாது. எப்படி இருந்தாலும் இந்த ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய முடியாது.

அடுத்து, கம்பௌண்டிங், ரூ. 75,000 வரை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்த கம்பௌண்டிங் ப்ரொவிஷனையே நான்தான் அவசியமாகப் போடவேண்டும் என்று, நிபுணர்களிடம் அதற்கு வழி சொல்லுங்கள் என்று கேட்டு, அவர்கள் சொன்ன பிரகாரம் செய்யப்பட்டது. ஆனால், இந்த கம்பௌண்டிங் ப்ரொவிஷனை பலபேர்கள் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ரூ. 50,000 உள்ளவர்கள் கம்பௌண்டிங் செய்யலாம் என்று இருப்பதில் 25 சதவிகிதம் வியாபாரிகள்தான் இதைச் செய்திருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் கணக்கைக்காட்டுகிறார்கள். அந்த வகையில் அதிகமாக உபயோகிக்காத வரையில், அந்த லிமிட்டை அதிகரிப்பதில் அர்த்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [19th March 1966

'லி' பாரம் பற்றி பல உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறோம், நம்முடைய ராச்சியத்தின் வர்த்தகம் தடை படாமல், இந்த 'லி' பாரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அந்த ஆண்டு இறுதிக் குள்ளாக 'லி' பாரம் கொடுக்கவில்லையென்றால், முழு வரியும் கொடுக்க வேண்டும் என்று இருப்பதை, ராஜ்ஜிய சர்க்கார் தளர்த்தி, அஸெஸ்மெண்ட் செய்கின்ற வரை 'லி' பாரம் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறோம். ஏனென்றால் 'லி' பாரம் பிற இடங்களிலிருந்து, பிற ராஜ்ஜியங்களிலிருந்து கிடைக்கவே கஷ்டம் இருக்கிறது என்கிற காரணத்தால் அதை நாம் தளர்த்தியிருக்கிறோம்.

இது மிகக் கஷ்டமான இலாகா என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். வருமான வரி என்பது ஒரு வரி; ஆனால் விற்பனை வரி என்றால், அது ஒரு பெயராக இருந்தாலும், அது ஒரு லட்சம் வரி; பல பண்டங்கள் பேரில் போடப்பட்டிருக்கும் வரி, பல விதமாக வசூல் செய்ய வேண்டிய வரி, பல கிளாசிபிகேஷன்கள் பல இடங்களிலிருந்து வருகின்றன. ஒவ்வொன்றுக்கும் வேறு வேறு சிக்கல்கள் இருக்கின்றன. சிக்கல்கள் இல்லை என்று சொல்ல முடியாது. சிக்கல்கள் மிகுந்த வரிதான் இது. அப்படிப்பட்ட சிக்கல்களை எந்த அளவுக்குத் தீர்க்க முடியுமோ அந்த அளவிற்குத் தீர்த்துக்கொண்டு வருகிறோம், என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு முறையும் அங்கத்தினர்கள் அந்த கமிட்டிக்கு 40, 50 விஷயங்கள் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

இறுதியாக ஒரு விஷயம். இந்த இலாகாவின் செலவு அதிகம் என்று குறிப்பிட்டார்கள். ரூ. 41 கோடி வருமானம் வருகிற இலாகா. (திரு. மீ. கலியாணசுந்தரம்: வசூல் செலவைச் சொன்னேன்) ஆமாம். ஒரு கோடிக்கு வசூல் செலவு ஆகிறது. அது அதிகமாக இருக்கிறது என்றார்கள். இப்பொழுது திடீரென்று 'ட்ரைவ்' ஏற்படுத்தியிருப்பதால், அப்படி ஏற்படுத்தி விட்டு பேசாமல் இருக்க முடியாது. அதற்காக ஆடிட்டர்களை நியமித்திருக்கிறோம். அதனாலெல்லாம் செலவு ஏற்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக எல்லா உறுப்பினர்களாலும், எல்லாத் தரப்பிலிருந்தும் கோரப்பட்டது. உணவுப் பண்டங்களின் பேரில் இருக்கும் விற்பனை வரியை நீக்கவேண்டும் என்று . . .

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், ஆடிட்டர்களை நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆடிட்டர்கள், அஸெஸ் பண்ணிய ரெக்கார்டுகளை பரிசீலனை செய்யப் போகிறார்களா அல்லது ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்யப்படுகின்ற அஸெஸ்மெண்டு கணக்குகளைப் பரிசீலிப்பார்களா?

19th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது அஸெஸ்ட் கணக்குகளைத்தான் பரிசீலிக்கப் போகிறார்கள். ஆனால், அவர்களைப் பர்மெனண்டாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற யோசனை இருக்கிறது. ஏராளமாகக் கணக்குகள் இருக்கின்றன. அதைப் பற்றிப் பிற்பாடு பரிசீலிக்கலாம்.

கடைசியாக, எல்லா அங்கத்தினர்களும் ஒரு முகமாக, கட்சி மாறுபாடின்றி, காங்கிரஸ் கட்சியிலிருந்தும், எதிர்க்கட்சிகளிலிருந்தும், கேட்டார்கள். உணவுப்பண்டங்கள் மீது இருக்கும் வரியை நீக்கிவிடவேண்டும் என்று; நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து, ராஜ்ஜியத்தின் நிதிநிலை, வருவாய் இவை எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, வெகு சீக்கிரத்தில் ஒரு முடிவு எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லி (குறுக்கீடு) ஆம், உணவுப் பண்டங்கள், பால் இரண்டையும் பற்றிதான் பரிசீலனை செய்வதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; நிதி நிலை, நமக்கு இருக்கும் வருவாய், நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற நிர்வாகச் செலவு, புதிதாக சர்க்கார் சிப்பந்திகளுக்கு டி. ஏ. அதிகமாகக் கொடுப்பது, எல்லாவற்றையும் பார்த்து அவர்கள் முடிவு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முடிவை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி, இந்த மானியத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த விவாதத்தில் பங்கு கொண்ட எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும், ஆங்காங்கே இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்லி நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த உதவி செய்ததற்காக அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்திக் கொண்டு முடிக்கிறேன்.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,15,79,600 under Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration".

The Demand was put and carried and the Grant was made.

IV.—DISCUSSION FOR SHORT DURATION ON THE ORDER SERVED ON SRI UMANATH, M.P. ON PAROLE.

MR. DEPUTY SPEAKER: The Hon. Speaker has fixed 1 o'clock as the time for taking up the discussion under Rule 57 or earlier if the voting on the Demand for Grant is over before that time. I think the House has no objection to take up the discussion now, as the discussion on the Demand for Grant is over.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், விதிகளின் படி, நம்முடைய சட்டசபை நூல்களில் அதற்கு இடைஞ்சலாக எதுவும் கிடையாது.

[19th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விற்பனை வரியைப் பற்றி விவாதம் நடத்த சாதாரணமாக நான்கு மணி நேரம் போதாது. இன்றைக்கு,

(கனம் சபாநாயகர் தலைமை)

காலை 9 மணிக்கு ஆரம்பித்து, அங்கத்தினர்கள் குறையாமல் பேசி, குறைந்த பட்சம் ஒரு மணி வரை ஆகும் என்று கணக்குப் போட்டு 1 மணி முதல் 2 மணி வரை இந்த விவாதம் என்று நினைத்திருந்தோம். ஆனால்,—விற்பனை வரி இலாகாப் பொறுப்புள்ள என்னுடைய சக அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்—இந்த விற்பனை வரி நிர்வாகத்திலே இன்னும் அதிகமாகக் குறைகூற, வார்த்தைக்கு இடமே இல்லை என்கிற வகையில், விவாதம் நடந்திருக்கிறது. இதுவரை நேராத விஷயம் இது. ஒவ்வொரு ஆண்டிலும் இருக்கும் நேரமே போதாது, அதிகமாக வேண்டியிருக்கும். ஒரு மணி நேரம் குறைவாகவே இன்றைக்கு முடிந்து விட்டது. ஆகவே இந்த 57-ம் விதியின் கீழ் உள்ள விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம். கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இசைவு தந்திருக்கிறார்கள்.

12-00 noon MR. SPEAKER : Unlike in an ordinary substantive motion, no motion is moved in this case. This is only a notice, and there can only be a discussion. There is no right of reply to the Member who raises the matter and there is no voting.

* **திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் தலைவர் அவர்களே, கீர்த்தி மிக்க நிர்வாகத்திற்குப் பெயர்போன தமிழக அரசின் மீது கடந்த 14-3-1966 அன்றையதினம், நம்முடைய தாய் என்று கருதப்படுகிற இந்தியப் பாராளுமன்றம் தன்னுடைய ஐயும், Censure- ஐயும், செய்திருப்பதை நாமெல்லோரும் அறிவோம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : Displeasure என்பது பார்லிமெண்டில் கூறப்பட்டது. censure- என்பது பத்திரிக்கையில் கூறப்பட்டது. இரண்டையும் ஒன்றோடொன்று இணைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். Censure என்று இந்த மன்ற கனம் அங்கத்தினர்கள் கூறவேண்டுமென்றால் கூறலாம். ஆனால், இரண்டையும் சேர்த்து பார்லிமெண்டின் மீது குற்றஞ்சாட்ட வேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தலைப்புகளைப் பற்றி எனக்குப் பிரச்னை இல்லை. ஆனால், அதன் மூலமாகக் கிடைத்திருக்கும் விளக்கம், ஜனநாயகத்திற்கு வழிகாட்டுவதிலே முதல்தரமாக நிற்கக்கூடியதும், கீர்த்திமிக்க நல்லதொரு நிர்வாகப் பாரம்பரியத்திற்குப் பெயர் பெற்றதுமான தமிழக அரசுக்கு ஒரு களங்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதே என்னுடைய கருத்தாகும்.

19th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

இந்த விவாதம், சட்ட மன்றத்தில் 9-ந் தேதி எழுப்பப்பட்ட நேரத்தில், அவசரத்தைத் துணைக்கழைத்துப் பதிலளிக்க முற்பட்ட நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் "சம்பந்தப்பட்ட எம்.பி.-க்கு சர்க்காரிலிருந்து புதிய உத்தரவு எதுவும் செல்லவில்லை, அங்கே இருக்கின்ற சப்-இன்ஸ்பெக்டரும் எந்தவிதமான தாக்கீதும் தரவில்லை" என்று சொன்னார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அவ்வாறு சொல்லவில்லை. "சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்தார் என்பது எனக்குத் தெரியாது" என்று சொன்னேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : இரண்டுக்கும் பொருள் வேறல்ல. இங்கிருந்து "உத்தரவு ஏதும் செல்லவில்லை, சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்தார் என்பது எனக்குத் தெரியாது" என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், மார்ச் 15-ந் தேதி, இதே மன்றத்தில் அவர்கள் பதிலளித்த நேரத்தில், சப்-இன்ஸ்பெக்டர் ஒரு கம்யூனிகேஷனைக் கொண்டுபோய்க் கொடுத்தது உண்மை, பப்ளிக் டிபார்ட்மெண்டிலிருந்து ஒயர்லெஸ் மூலமாக அங்கே தகவல் சென்று, அங்கே திரு. உமாநாத் அவர்களுக்கு அந்த விளக்கம் தரப்பட்டது என்ற தகவலை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி அவர்கள் எடுத்துச்சொன்ன நேரத்தில், அனுப்பப்பட்டது ஆர்டர் அல்ல என்கிற வாதத்திற்குள் அவர்கள் சென்றார்கள். அதற்கு முன்னதாக, இதே மன்றத்தில் அவர்கள் பேசின நேரத்தில், "பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கே பல குற்றச்சாட்டுகளைச் சொரிந்திருக்கிறார்கள். பேசுகின்ற உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுப்பை உணர்ந்து . . . "

கனம் சபாநாயகர் : 'ஆர்டர்' 'பாஸ்' பண்ணினதாகச் சொன்னால், அந்த ஆர்டர் சரியா, தப்பா என்று சொல்லலாமே தவிர, அதற்கு மேல், பாராளுமன்றத்தைக் குறித்துப் பேச வேண்டாம். அவர் என்ன சொன்னார், இவர் என்ன சொன்னார் என்று பேசிக்கொண்டே இருந்தால், குறிப்பிடவேண்டிய விஷயத்திற்கு நேரம் இல்லாமல் போய்விடும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாராளுமன்ற உறுப்பினர்களைப்பற்றி நான் குறை சொன்னதாகக் கனம் அங்கத்தினர் சொல்வது முறையல்ல. பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று நான் ஒருகாலும் சொல்லவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்ற முறை அவர் பேசிய கருத்தை எடுத்துச் சொன்னேன். இப்படி என் உரையின்போது குறுக்கிட்டுக்கொண்டிருந்தால் எனக்குத் தாங்கள் அளித்திருக்கும் நேரம் போதாமல் போய்விடும்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் விஷயத்திற்கு வர வேண்டும்.

[19th March 1966

திரு. இராம. அரங்கண்ணல் : " தகவல்களை நல்ல முறையில் புரிந்துகொண்டு பொறுப்போடு பேசவேண்டும் " என்று முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த உண்மையையும் நியாயவாதத்தையும் கேட்கிறேன். ஆனால், தாங்கள் அளித்திருக்கும் உரிமை பிரச்சினை பற்றிய தீர்ப்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல நேரம் எடுத்துக்கொண்டு சபைக்கு அவர்கள் அந்தத் தகவல்களைச் சேகரித்து வழங்கி இருக்கக்கூடும். என்ன காரணமோ, நமக்கெல்லாம் போதிக்கின்ற அந்தப் பொறுப் புணர்ச்சியையும், தகவல் அறிந்து தருகிற அந்த நிலைமையையும் விட்டுவிட்டு, அவர்கள் நமக்கு பதிலளித்தார்கள். பதிலளித்த நேரத்தில் அவர்கள் குறிப்பிட்டது, " உமாநாத் அவர்களுக்கு அனுப்பபட்டது ஆர்டர் அல்ல, அது ஒரு விளக்கம் " என்பதாகும். அதற்கு முன்னதாக அவர்கள் சொன்ன விளக்கம், ஆர்டர் என்று சொன்னால் . . .

MR. SPEAKER : The point is whether the order or communication sent is correct or not.

ஆர்டரோ, கம்யூனிகேஷனே எதுவாக இருந்தாலும், அது சரியா, தப்பா என்ற விஷயத்திற்கு வராமல் பேசிக்கொண்டிருந் தால் என்ன அர்த்தம் ?

திரு. இராம. அரங்கண்ணல் : " ஆர்டர் " என்று சொன்னால், " அரசாங்கத்திலிருந்து செல்லக்கூடியது தான் ஆர்டர் " என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் தெரிவிக்க விரும்புவது —அவர்கள் சொன்ன பதிலிலேயே இங்கிருந்து ஒயர்லெஸ் மூலமாக டெபுடி செக்ரடரியிடமிருந்து அங்கே இருக்கின்ற எஸ்.பி.க்குச் சென்று, உறையூர் சப்-இன்ஸ்பெக்டர் ஒரு விளக்கத்தைத் தந்திருக் கிறார்கள். இந்த விளக்கம் அனுப்பப்பட்டது, சப்-இன்ஸ்பெக்டரே தந்த விளக்கம் அல்ல. ' எலுசிடேஷன் ' என்றாலும் அதுவும் சப்-இன்ஸ்பெக்டரே செய்ததல்ல. கோட்டையிலே குந்தியிருக்கிற பப் ளிக் டிபார்ட்மென்டிலிருந்து அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அனுப்பப்பட்டிருப்பது ஆர்டர் அல்ல என்ற வாதத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், எந்தத் தகவலை இங்கிருந்து அனுப்பினாலும் அது ' ஆர்டர் ' என்கிற அந்தப் பிரச்சினை மீது தான் வரும்.

You are informed that if you do something, you will meet the consequences.

என்கிற தோரணையில் ஒரு தகவல் அனுப்பப்படுகிறது என்று சொன்னால், அந்தத் தகவலை ஆர்டர் என்றுதான் நாம் ஏற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமின்றி, திரு. உமாநாத் அவர்களைப் பரோலில் விடுகிறபோது, சில நிபந்தனைகள் மீது விட்டிருக்கிறோம். அந்த நிபந்தனைகளில், அவர் திருச்சிக்குள்ளேயே இருக்கவேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். அந்த நிபந்தனையை அவர் மீறக் கூடாது என்பதை நிச்சயமாக அவர் அறிவார். ஏனென்றால் திரு. உமாநாத் ஒரு சராசரி பிரஜை அல்ல ; சட்டங்களை ஆக்கு

19th March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

கின்ற பாராளுமன்ற உறுப்பினர். அப்படியிருக்கும் திரு. உமாநாத் அவர்களுக்கு அவசரம் அவசரமாக, பாராளுமன்றத்தில் இந்த பிரச்சினை விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் 2-ந் தேதி அன்றைய தினமே இங்கிருந்து ஒரு விளக்கத்தை அவருக்கு அனுப்ப வேண்டியதன் அவசியம் என்ன ? அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அவசரத் தகவல்களைச் சொல்வதற்கு நம்முடைய கோட்டையிலே இருக்கின்ற டிபார்ட்மென்டிலிருந்து ஒயர்லெஸ் தகவல் செல்லும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படி ஒயர்லெஸ் மூலமாக அவசரம் அவசரமாக திரு. உமாநாத் அவர்களுக்கு விளக்கத்தைத் தர வேண்டிய அந்த அளவுக்கு அவசரம் என்ன ஏற்பட்டது என்பது என்னுடைய கேள்வியாகும். என்ன காரணத்தினால், திரு. உமாநாத் அவர்கள் மீது அவ்வளவு அக்கறை ஏற்பட்டது? நாம் முன்பே ஒரு ஆர்டர் போட்டிருக்கிறோம். அந்த ஆர்டருக்கு மேலே, ' எலுசிடேட் ' செய்வதற்காக இன்னொரு ஆர்டர் இங்கிருந்து அனுப்பப்பட வேண்டிய அவசியம் என்ன என்பது தான் என்னுடைய கேள்வி. அந்த ஆர்டர் அனுப்பப் பட்டதற்குக் காரணமாக அமைந்தவர்கள் யார் ? என்பதும் என்னுடைய கேள்வியாகும். இப்படி அங்கே ஆர்டர் சென்று, அதன் விளைவாக நிலைமைகள் ஏற்பட்டதையெல்லாம் நாம் நன்றாக அறிவோம். இது என்னுடைய முதலாவது குற்றச்சாட்டு ஆகும். இப்படிப்பட்ட அவசரம் ஏன் நம்முடைய பப்ளிக் டிபார்ட்மென்டுக்கு ஏற்பட்டது ? இந்த ஆர்டர் அனுப்பியதற்கு யார் பொறுப்பாளி ? இது என்னுடைய முதல் குற்றச்சாட்டாகும்.

இரண்டாவது குற்றச்சாட்டு—இங்கிருந்து இந்தியப் பாராளுமன்றத்திற்குத் தகவல் தரப்பட்டதா ? திரு. உமாநாத் அவர்களுக்கு விளக்கம் தருவதிலே அவசரம் காட்டிய நம்முடைய இலாக்கா, பாராளுமன்றத்திற்கு இங்கேயிருக்கின்ற தகவல்களையெல்லாம் எடுத்துச் சொன்னதா ? டெலிபோன் காத்துக் கொண்டிருக்கிறது, சென்று தகவல் தரப்போகிறோம் என்று மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் என்ன தகவலை அங்கே சொன்னார்கள் ? சொன்ன தகவல்களை அங்கேயிருக்கும் மந்திரிகள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையா ? புரிந்துகொள்ளாத காரணத்தால்தான் இந்த நிலையா ? அங்கே கனம் சபாநாயகர் அவர்களேகூட தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். " மாநிலத்திலிருந்து சரியான தகவல்களைப் பெறத் தவறிவிட்டீர்கள் " என்று டில்லி மந்திரிகளைப் பார்த்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். டில்லியில் இருக்கிற மந்திரிகள் செய்கிற குற்றத்திற்குத் தமிழ்நாடா அவமானப்பட வேண்டும்? அல்லது, அவர்கள் சரியான முறையிலே விளக்கவில்லையென்றால், அது அவர்களுடைய தப்பாகுமே தவிர, மாநிலத்தினுடைய தப்பாகாது என்று அந்த அளவில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்து வாதாடி இருக்கிறார்களா என்பதை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. குற்றங்குறைகளைக் கண்டுபிடித்துச் சொல்வது , எதிர்க்கட்சியின்

[திரு. இராம. அரங்கண்ணல்] [19th March 1966

போக்கு என்று சொன்னாலும், தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பெருமை களும், அந்தப் பெருமைகளை அனுபவிப்பதிலும் எங்களுக்கும் பங்கு இருக்கிறது. அந்தப் பங்கை எங்களுக்கு மறுக்கமாட்டார் கள் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே இங்கிருந்து பப்ளிக் டிபார்ட்மென்ட் அனுப்பிய ஆர்டர் சரியா? அல்லது, இங் கிருந்து மத்திய சர்க்காருக்கு நாம் சொன்ன தகவல் சரியா? இதைச் சரிவரச் செய்யாதது யார்? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதத்தின் நோக்கமாகும்.

என்னுடைய கருத்து—இன்றைய தினம் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையில், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அரசியல் கைதிகளைப் பிடித்து எப்படி வேண்டுமானாலும் அடைக்கலாம், அப்படி அடைக்கின்ற நேரத்தில், அந்த அரசியல் கைதிகளுக்கு என்ன என்ன தொல்லைகளைக் கொடுக்க முடியுமோ அந்தத் தொல்லை களைக் கொடுத்தால்தான் அமைச்சரவையினுடைய நல்ல பெயரை நாம் பெற முடியும் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டதன் விளைவாக இந்த முறையில் அதிகாரிகள் ஈடுபட்டு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தார்களா? அல்லது, அமைச்சரவையே இந்தக் காரியத்தைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டதா? தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற களங்கத்திற்குப் பொறுப்பு நம்முடைய அமைச்சர் அவையா? அல்லது இந்த களங்கத்தை தேடிக்கொடுத்தவர்கள் நம் முடைய அதிகாரிகளா? இதற்குத்தான் நான் முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் பெற விரும்புகிறேன். அதற்கான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்றும் நான் எதிர் பார்க்கிறேன். இது ஏதோ சாதாரணமான சம்பவம் அல்ல. நம் முடைய தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத ஒரு களங்கம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் இந்தியப் பாராளுமன்ற நியதிகளுக்குள்ளேபுக விரும்பவில்லை. டில்லியில் இருக்கும் அரசும் இந்தியப் பாராளுமன்றத்திற்குத் தகவல்கள் சரியாகத்தர வில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. அங்கேயிருக்கும் டில்லி அரசும் சரியாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. இதற்கெல்லாம் பொறுப்பான பதிலை, சரியான பதிலை தமிழ்நாட்டின் தன்மானத்தைக் காக்கக்கூடிய பதிலைக் கனம் முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து பெற வேண்டும் என்பதுதான் இந்த விவாதத்தைத் துவக்கி வைக்கின்ற என்னுடைய நோக்க மாகும்.

*திரு. ஏ. பி. சி. வீரபாகு: கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக சட்ட பதங்களிலோ, உத்தரவிலோ தெளிவு இல்லாமல் இருந்தால், ஒன்றுக்கு மேற்பட்ட அபிப்பிராயம் இருந்தால், இந்தச் சட்டம் அல்லது இந்த உத்தரவுக்கு காரணமாக இருந்தவர் களுடைய நோக்கங்களையும், விளக்கங்களையும் பார்ப்பது தான் சட்ட மரபு. இன்றைய தினம் விவாதத்திற்குரிய உத்தரவைப் பற்றி இருதரப்பினர்களாலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இதன் உள்நோக்கத்தைத் தெரிந்துகொள்வதற்கு, எந்தச் சந்தர்ப்பத்தினால் இத்தகைய உத்தரவு போட நேர்ந்தது என்ப

19th March 1966] [திரு. ஏ. பி. சி. வீரபாகு]

தற்கு யார் அந்த உத்தரவைப் போட்டார்களோ அவர்கள் கொடுக் கிற சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமே தவிர அதற்கு மேலும் அது இன்னவாறுதான் இருந்திருக்க வேண்டும் என விளக்கம் கொடுப்பது சட்ட மரபு அல்ல என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

இன்றையதினம் உள்ள விவாதம் இரண்டாம் தேதி போட்டது உத்தரவா, கம்யூனிகேஷனா, எலுசிடேஷனா, அதைப் போட்டதற்கு பொறுப்பு யார் என்பதெல்லாம் எழுகிறது. அது உத்தரவு என்றே கொண்டாலும் என்னுடைய வாதம் எல்லாம் இந்த உத்தரவு பொருத்தமான காரணங்களால்தான் போடப்பட் டிருக்கிறது என்பதாகும். முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பே விளக்கம் கொடுக்கும்போதும் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பொறுப்பான பார்லிமெண்டு அங்கத்தினர், அதுவும் நம் முடைய பரோல் விடுதலைக்காக அவர் ரிட்டனுகவே என்ன என்ன நிபந்தனைக்கு உட்படுவதாக எழுதிக்கொடுத்திருக்கிறார்களோ, அந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடந்துகொள்ளாவிட்டால் சங்கடங் கள் வருமே என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் தவறு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கம் கூறப் பட்டிருக்கிறது. அவருடைய கவனக்குறைவினாலும் தவறு ஏற்பட்டுவிடக்கூடும், அதனால், அனாவசிய விளைவுகள் ஏற்பட்டு, அவருக்கு சிரமங்களும் ஏற்படக்கூடும். ஆகவே விளக்கம் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற நிபந்தனை களை மாற்றி இன்னொரு உத்தரவு போடப்பட்டதாகக் கருத இடமில்லை, இது எல்லாம் இந்த உத்தரவைப் போட்ட சர்க்காரே கொடுத்துள்ள விளக்கம். சர்க்கார் இந்த விளக்கத்தை நமக்குக் கொடுப்பதற்கு முன் நமக்கு அதன்பேரில் தவறான கருத்துக்கள் தோன்றியிருக்கலாம். ஆனால், அரசாங்கத்தின் சார்பில் விளக்கம் தந்த பிறகு இன்னும் என்ன என்ன காரணத்தினால் நமக்கு வேறு அர்த்தம் தோன்றுகிறது என்பதைப்பற்றி இன்றய தினம் விவாதத்தைத் துவக்கி வைத்தவர் விளக்கம் கொடுக்கவில்லை. இன்ன இன்ன காரணங்களால் இந்த உத்தரவு தவறானது என்பதை எடுத்து விளக்கியிருந்தால் பொருத்தமாக இருந்தி ருக்கும்.

இன்னொன்று. இரண்டாம் தேதி போட்ட உத்தரவில் This is to inform you, you should not proceed to Delhi under the present conditions என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதை எதற்காகச் சொல்ல வேண்டும்? "ஏற்கனவே நீங்கள் கொடுத்துள்ள நிபந்தனைகளின்படி நீங்கள் டில்லிக்குப் போக முடியாது" என்று சொல்வதற்குப் பதிலாக "நீங்கள் டில்லி போகக்கூடாது" என்று சொல்லியிருந்தால் அது வேறு விஷயம். இதுபற்றி முதல் அமைச்சர் அவர்களே விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். அவர்களுடைய கவலை எல்லாம் பரோலில் வருவதற்கு அவரே சில கண்டிஷன்களுக்கு உட்படுவதாக எழுதிக் கொடுத் திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளின்படி நடந்துகொண்டால் அப்படி எழுதிக்கொடுத்து அனுமதி கேட்டால்கூட சர்க்கார்

[திரு. ஏ. பி. சி. வீரபாகு] [19th March 1966

ஒன்றும் இல்லை. டெல்லி போகவேண்டும் என்று விரும்பினால் கொடுத்துவிடலாம். அப்படியின்றி அவர் டெல்லி போய்விட்டால் அதன்பேரில் எஸ்டாப்பல் (estoppal) நடவடிக்கை எடுத்துக் கொள்வதன் மூலம் அவர் நிலைமை மட்டும் அல்ல, சர்க்கார் நிலைமையும் சங்கடமாகும் என்பதற்காகத்தான் விளக்கம் கொடுக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். இதைவிட அரசாங்கத்தினிடத்தில் இருந்து நமக்கு வேறு என்ன விளக்கம் வேண்டும்? அரசாங்கமே டெல்லிக்குப்போக நீங்கள் அப்ளிகேஷன் கொடுங்கள், நாங்கள் அனுமதிக்கிறோம் என்று அவருக்கு எழுதி யிருக்கவேண்டும் என்று சொல்ல முடியுமா ? குறிப்பாக அவர்கள் எப்படி நடந்துக்கொள்ளவேண்டும் என்பதை சூசகமாகக் காட்டி யிருக்கிறார்கள். "இப்போதுள்ள நிபந்தனைகளின்படி போக முடியாது" என்றால் அவர் அரசாங்கத்திடம் டெல்லி போக தனி யாக அப்ளிகேஷன் கொடுக்க முடியும் என்று அர்த்தம். அரசாங்கம் அவருக்கு அனுமதி அளிக்கக்கூடத் தயாராக இருந்தது என்ப தாக முதல் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால், இது உத்தரவு அல்ல. இந்த விளக்கம் நியாயமான தும் ஆகும் என்று நான் கருதுகிறேன்.

காரணம், திரு. உமாநாத் அவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர். பொது ஜனங்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளை அவர் ஆற்று வதற்கு உதவிகரமாக இருக்கவேண்டியது இந்தச் சர்க்காரின் கடமை. சட்டசபை உறுப்பினராக இருந்தாலும், பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தாலும் ஜனநாயக முறைப்படி அவர்கள் பணியாற்றுவதற்கு உதவிகரமாக இருக்கவேண்டியது சர்க்காரின் பொறுப்பு. நாம் பல புள்ளிவிவரங்களை கேட்கிறோம். விவாதத்திற்கு முன் விவரமான அறிக்கைகள் கொடுக்கப்படு கின்றன. இப்படிச் சர்க்கார் உறுப்பினர்களுக்கு பலவகையிலும் உதவிகரமாக இருக்கிற காரணத்தினால்தான் உறுப்பினர்கள் தம் கடமையை நிறைவேற்ற முடிகிறது. இந்த வகையில் பார்த்தா லும் சர்க்கார் திரு. உமாநாத் அவர்களுக்கு சரியான நேரத்தில் உதவி செய்வதற்காகவே விளக்கம் கொடுத்ததாக முதல் அமைச்சர் அவர்களே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி செய்தது தப்பு என்கிறார்களா என்றுதான் புரியவில்லை. அப்படி விளக்கம் கொடுப்பது இந்த சர்க்கார் கடமை இல்லையா ? அவருக்கு இருக்கக்கூடிய நிலைமையை ஞாபகப்படுத்தாமல் இருந்திருந்தால் என்ன ஆகும் ? அஜாக்கிரதையினால் அவர் டெல்லி போய்விட்டார் என்றால்—பார்லிமெண்ட் உறுப்பினர் ஒருவர் இந்தமாதிரி பரோலில் வெளிவருவதற்கு சில கண்டிஷன்களுக்கு உட்படுவதாக எழுதிக் கொடுத்துவிட்டு, அவற்றை மீறுவது என்றால் அவர் மீது எஸ்டாப் பல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியான ஒரு சங்கட நிலைமை ஏற்பட்டிருக்கும். பல சங்கடங்களை நீக்கவேண்டும் என்கிற நல்ல நோக்கத்துடன்தான் இந்த விளக்கம் கொடுக்கப்பட்டது என்று கருதுகிறேன். முதல் அமைச்சர் விளக்குவதற்கு முன் அதுபற்றி நமக்கு எப்படித் தோன்றியிருந்தாலும் அவர் இந்தச் சபையில் விளக்கம் கொடுத்தபிறகு அதில் சந்தேகமில்லை.

19th March 1966] [திரு. ஏ. பி. சி. வீரபாகு]

திரு. உமாநாத் டெல்லி போக அனுமதி கோரினால் அதையும்கூட கொடுப்பதற்கு இந்தச் சர்க்கார் தயாராக இருந்தது என்று கூறிய பிறகு இதில் என்ன தவறு இருக்கிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை. 2-ஆம் தேதி பார்லிமென்டில் விவாதம் நடந்தபோது இங்கே ஏன் சொல்லவில்லை—என்றெல்லாம் கேட்டால் இரண்டும் ஒரே தேதி. விளக்கம் கொடுத்த பிறகும் குற்றச்சாட்டுக்கு தக்க காரணங்களைக் கொடுக்காமல் கற்பனையாக பலவற்றை நினைத்துக் கொண்டு குற்றம் சாட்டிக்கொண்டே போனால் அவற்றுக்கு யாரும் பதில் சொல்ல முடியாது.

இந்த 2-ம்தேதி விளக்கம் முதல் அமைச்சர் கொடுத்த விளக்கத் தோடு கவனிக்கப்படுகிறபோது முன் ஜாக்கிரதையாக அவருக்கு உதவிகரமாக கொடுக்கப்பட்ட ஒன்று ; அப்படி உதவி செய்வது இந்தச் சர்க்காரின் பொறுப்புமாகும். ஆக, இதில் ஒன்றும் தவறான, முறைப் பிசகான காரியம் நடந்துவிடவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சிக்கலாக மாறியதற்கு முக்கியமான காரணம் 2-ம் தேதி அன்றைய தினம் உறையூர் சப்-இன்ஸ்பெக்டர் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. உமாநாத் அவர் களுக்கு கொடுத்த—விளக்கக் குறிப்போ, உத்தரவோ, எலுசி டேஷனோ அதற்கு என்ன பெயரைக் கொடுத்தாலும்— காகிதம்தான். அதுதான் இவ்வளவுக்கும் காரணம். இது சரியா, முறையா என்பதை இந்தச் சபை பரிசீலிக்கவேண்டும். இதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதை முதல் அமைச்சர் அவர் கள் பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள். அதன் தன்மையைப் பற்றிக் கவலை இல்லை. அது என்றைக்குக் கொடுக்கப் பட்டது ? இரண்டாம் தேதி இரவு கொடுக்கப்பட்டது. அதற்குள் 2-ம் தேதி அந்த விளக்கம் கொடுக்க வேண்டிய காரணம் என்ன ? திரு. உமாநாத் அவர்கள் படிக்காத புள்ளி அல்ல. அவருக்கு ஆங்கிலமும் நன்றாகத் தெரியும். "நீ கொடுத்திருக்கக்கூடிய அண்டர்டேக்கிங்ஸ்க்கு இதுதான் அர்த்தம்" என்று இங்குள்ள டெபுடி செக்ரடரி விளக்கம் கொடுக்கவேண்டும் என்பது இல்லை. இங்குள்ள டெபுடி செகரடரிக்கு எவ்வளவு ஆங்கில அறிவு உண்டோ, அவ்வளவு ஆங்கில அறிவு அவருக்கும் உண்டு. அவருக்கு அதனுடைய கான்சிகுவன்ஸஸ் எல்லாம் தெரியும். அப்படி இருக்கிறபொழுது அவருக்கு என்ன எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றால் 'under present conditions, you should not proceed to Delhi' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 'இப் பொழுது இருக்கிற நிலைமைகளைப் பொறுத்து' என்றால், தேசத் திலே இப்பொழுது இருக்கிற நிலைமைகளைப் பொறுத்து என்று கூட எடுத்துக்கொள்ளலாம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Under present conditions of parole.

[19th March 1966

SRI M. KALYANASUNDARAM. ' Under present conditions of parole, he should remain in Tiruchirappalli if that was their intention—or he should not leave Tiruchirappalli என்று சொல்லியிருந்தால் அர்த்தம் வேறு. ஆனால், You should not go to Delhi.' என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாம் தேதி இரவு அவருக்கு இதைத் தெரிவிக்கவேண்டிய காரணம் என்ன? எவிடன்ஸை வைத்துப் பார்க்கின்றபொழுது, இரண்டாம் தேதி அங்கே சபையிலே காலையிலே விவாதம் நடைபெற்றிருக்கிறது. லோக் சபையிலே இந்த விஷயம் கிளப்பப்பட்டு அங்கே திரு. சத்தியநாராயண் சின்ஹா அவர்கள் நாளையே அறிக்கை வைக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாம் தேதி காலையில் நடந்த விவாதம் வந்திருக்கிறது. அதே போல் அடுத்த நாள் நடந்த விஷயம்பற்றியும் அரசாங்கத்திற்குத் தகவல் தெரிந்திருக்கிறது. உமாநாத் அவர்கள் டெல்லிக்குப் போகக்கூடாது, பார்லிமெண்டில் கலந்து கொள்ளக்கூடாது என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருந்த காரணத்தால்தான் அவருக்கு 'டெல்லிக்குப் போகக்கூடாது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. விளக்கக் குறிப்புப்படி பார்த்தாலும்கூட அவர் காலையிலே திருச்சியிலே இருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து அன்றைக்கே டெல்லிக்குபோய்விட்டு மறுபடியும் மாலையிலே சென்னைக்குத் திரும்பி திருச்சிக்கு உடனே போய் அன்றைக்குள் போலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்துப்போட்டால் குற்றமில்லை. டெல்லிக்குப் போனால் குற்றம் என்று அவருடைய நன்மைக்காகச் செய்கிறார்கள் என்றால் அவருக்கு இல்லாத கவலை அரசாங்கத்திற்கு என்ன வந்தது? அவருக்கு நன்மை என்ன, தீமை என்ன என்பதெல்லாம் தெரியும்; பார்லிமெண்ட் உறுப்பினருக்குள்ள பொறுப்புக்களையெல்லாம் அறிந்து அவரே செய்துகொள்வார். விளக்கக் குறிப்பு அல்லது புதிய பரோல் நிபந்தனைகளைப் போடுவது என்றால் அது புதிய அர்த்தம் கொடுக்கக்கூடிய முறையில் செய்யப்பட்ட விவேகமற்ற செயலால் வந்த ஒழுங்கீனம் தான். இது பாராளுமன்ற உறுப்பினருக்கு கேவலமானது என்பதெல்லாம் வேறு விஷயம். பார்லிமெண்ட் மெம்பரை தினசரி போலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்துப்போடச் சொல்வது அவசியமில்லை. அவசியம் இருக்கிறது என்று சொன்னால் ஏன் அவரை விடுதலை செய்யவேண்டும்? இந்த இரண்டையும் கவனிக்கவேண்டும். பார்லிமெண்ட் மெம்பர் அவர், பொறுப்புள்ளவர். அவர் தவறு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுங்கள்; அதைவிட்டுவிட்டு ஏன் இப்படிச் செய்யவேண்டும்? இரண்டாம் தேதி உத்திரவானது, பார்லிமெண்டிலே நடந்த விவாதத்தின் விளைவாக வந்ததுதான். அவர் டெல்லிக்குச் சென்று பார்லிமெண்டில் கலந்துகொண்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் ஏற்பட்டு அவர்கள் செய்த தவறு தான் இது. இது நடந்தது இரண்டாம் தேதி. அதற்குப் பிறகு, ஏழு தினங்களுக்குப் பிறகு கூட அதைக் கொடுத்தது—அது விளக்கக் குறிப்பு என்றே வைத்துக்கொள்ளலாம் அந்தத் தகவலே முதலமைச்சர் அவர்களுக்கே தெரியாத

19th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அளவுக்கு டிபார்ட்மெண்டில் உத்திரவு போடுகிறார்கள் என்றால் அது முற்றிலும் தவறு. இந்தத் தவறை மற்றவர்கள் கண்டித்தாலும் கண்டிக்காவிட்டாலும் இந்தச் செயலுக்கு நான் சென்னை அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, the elucidation or the clarification given on the matter before the House on 2nd March 1966 is pure and simple and it is in keeping with the best traditions that are observed in implementing the provisions of the existing laws. So far as the elucidation is concerned, there have not been any excesses on the part of the concerned Department or the Government in the issue of instructions or clarification with regard to this matter, and the Department or the Government have only exercised the powers that have been vested in the existing laws or the Defence of India Rules. Of course, criticism may be levelled against the law that is now existing but that is a different matter and we have to change the law. So far as the conditions of parole imposed with reference to the Defence of India Rules are concerned, the elucidation given on the part of the Government to the concerned person is correct and it is incumbent on the part of the Government and it is also necessary in the present democratic set-up to inform that person—whomsoever he may be—and give clarifications regarding the conditions of parole. Now, whether that clarification was necessary or not, is a matter for consideration. It was necessary in the context in which it was reported to the Government and it has been properly clarified to that person who has been released on parole.

So far as the censure is concerned, it was not a censure on the Madras Government and it could be taken only as a censure against the Central Government. As the Hon. Speaker of the Lok Sabha has pointed out, it only concerns the Central Government and it does not concern the Madras Government. An opportunity should and could have been given to the Madras Government and the Hon. Chief Minister to explain the circumstances in which the clarification was communicated to him. But that opportunity has not been given to the Madras Government and the Hon. Chief Minister who has been keeping up the best traditions of the Parliamentary Democracy. He has been anxious to inform this House then and there the particulars available with him and he has not, in any way, degraded the dignity of the House or infringed the privileges of the House. With these words, I conclude my speech.

* திரு. மு. கருணாநிதி: கனம் தலைவரவர்களே, 57-வது விதியின் படி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விவாதத்தில் இதற்கு முன்பு கூறப்பட்ட கருத்துக்களுக்கும், நான் கூற இருக்கின்ற கருத்துக்களுக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பதில் கூறுவதற்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறார்

[திரு. மு. கருணாநிதி] [19th March 1966

கள். இந்த விவகாரம் எத்தகைய அடிப்படையிலே ஆரம்ப
மானது என்பதை ஒரு முறை நாம் நினைவு கூர்வது இந்த விவாதத்
திற்குத் துணை புரியும் என்று நான் கருதுகிறேன். தோழர்
உமாநாத் அவர்கள், பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு
சிறையிலே வைக்கப்பட்டவர், பரோலில் சில பல காரணங்களுக்
காக விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்ட
நேரத்தில், ஒவ்வொரு நாளும் அவர் உறையூர் போலீஸ் ஸ்டேஷ
னுக்குச் சென்று அங்கே ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனை
யொன்றும், சதி வேலைகளிலே ஈடுபடுவதோ அல்லது சதி வேலை
களைத் தூண்டுவதோ கூடாது என்ற ஒரு நிபந்தனையும் ஆக இந்த
இரண்டு நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. இந்த இரண்டு நிபந்
தனைகளும் விதிக்கப்பட்ட நேரத்தில், டெல்லிப் பாராளுமன்றத்
திலே கேட்கப்பட்ட கேள்விகள், பாராளுமன்றக் கூட்டத்தில்
திரு. உமாநாத் அவர்கள் விரும்பினால் கலந்து கொள்ளலாமா
என்ற முக்கியமான விஷயத்தைக் கோடிட்டுக் காட்டின. இந்தக்
கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்பு, உள்துறை அமைச்சர் அவர்கள்
அங்கே "இதிலுள்ள சிக்கல்களை நான் ஆராயவேண்டும், இதற்கு
போதுமான அவகாசம் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.
நமது முதலமைச்சர் அவர்களைப்போல அவசரப்படாமல்
டெல்லியிலே உள்ள உள்துறை அமைச்சர் அவர்கள் இதிலுள்ள
சிக்கல்களையெல்லாம் ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் முடிவு
கூறுவேன் என்று கூறினார். இந்தப் பிரச்னை ஆலோசனையில்
இருக்கிறது என்று உள்துறை அமைச்சர் கூறிய கருத்துக்கு
அடுத்து, திருச்சியிலே உள்ள திரு. உமாநாத் அவர்களுக்கு
மார்ச் இரண்டாம் நாள் 'நீங்கள் டெல்லிக்குச் செல்லக்கூடாது'
என்ற அறிவிப்பு—முதலமைச்சர் அவர்களுடைய மொழியிலே
அறிவிப்பு என்றும், டெல்லி சபாநாயகர் அவர்களுடைய மொழி
யிலே அதற்கு உத்தரவு என்றும் பெயர் வைக்கலாம்—அந்த
உத்தரவு அவருக்கு வழங்கப்பட்டபோது, இது சபையினுடைய
உரிமையைப் பாதிக்கிறது என்ற முறையிலே டெல்லிப் பாராளு
மன்றத்திலே உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டது. இந்தப் புதிய
உத்தரவு பழைய உத்தரவிலிருந்து மாறுபட்டதோ அல்லது புதிய
நிபந்தனையோ அல்ல, பழைய உத்தரவின் விளக்கம்தான்; அதன்
பொருள், அவர் தனது இல்லத்திலேயே தொடர்ந்து இருக்க
வேண்டும் என்பதே என்று அங்கே உள்துறை அமைச்சர் அவர்கள்
கூறினார்கள். முதலமைச்சர் அவர்கள் அது போலத் தகவல்
அளித்திருந்த காரணத்தால் உள்துறை அமைச்சர் தவறான வகை
யில் இந்தப் பதிலைக் கூறவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்.
இந்தப் புதிய உத்தரவை—டெபுடி செகரட்டரி தமிழகத்தின் தலை
நகரத்திலிருந்து அனுப்பிய வயர்லெஸ் தகவலை—போலீஸ் அதிகாரி
கள் திரு. உமாநாத் அவர்களுக்கு அளித்ததைப்பற்றி டெல்லி
உள்துறை அமைச்சருக்குத் தொலைபேசிமூலம் தெரிவித்த முதல
மைச்சர் அவர்கள் 9-ம் தேதியன்று இங்கே கேள்வி கேட்ட
நேரத்தில் இந்த மன்றத்திலே தெரிவிக்காதது உள்ளபடியே
வியப்பிற்குரியது; வருந்தத்தக்க ஒன்றாகும்.

19th March 1966] [திரு. மு. கருணாநிதி]

மத்திய சர்க்காரில் இருக்கின்ற உள்துறை அமைச்சர் அவர்கள் 12-30 p.m.
பழைய விளக்கத்திற்குத்தான் புதிய பொருள் தரப்பட்டு உத்தரவு
என்ற பெயரிலே அனுப்பப்பட்டிருக்கிறது என்ற அளவில் டில்லி
யிலே கூறியிருக்கிறார்கள். அந்தத் தகவலை நம்முடைய முத
லமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார். அதே நேரத்தில் இந்த
மன்றத்தில் கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் இந்த விஷயம் முழு
வதையும் முதலமைச்சர் அவர்கள் சபை உறுப்பினர்களுக்குத்
தெரிவிக்க மறுத்து விட்டார்கள். டெல்லிக்குச் சொன்ன தகவலை
இந்த மன்றத்திற்குத் தெரிவித்திருக்கக் கூடாதா? என்பதுதான்
அடிப்படையான கேள்வி. இதையொட்டி டெல்லியில் சபாநாயகர்,
மதிப்புக்குரிய ஹுகும்சிங் அவர்கள் வழங்கிய தீர்ப்பு இங்கு
எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற விவாதத்திற்கு மிக, மிக அனு
சரணையானது என்பதால் இங்கே அதை எடுத்துக் காட்ட விரும்பு
கிறேன்.

"மார்ச் 2-ம் தேதி தரப்பட்ட உத்தரவு, தகாத அக்கறை
யுள்ள ஒரு பொருளைத் தந்துள்ளது. புதிய உத்தரவு—விளக்கம்
தான் என்றால், அது அனாவசியமானது!"

என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். நண்பர் வீரபாகு அவர்கள்
எடுத்துச் சொன்னார்கள்—'அது விளக்கம்தானே' என்று. அதை
உத்தரவு என்று நாங்கள் சொன்னால் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்
என்பதற்காகத்தான் டெல்லி பாராளுமன்றத்தில் வீற்றிருக்கின்ற
பெருமை வாய்ந்த சபாநாயகர் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கும் வரி
களைப் படித்துக் காட்டுகிறேன்.

"மார்ச் 2-ம் தேதி தரப்பட்ட உத்தரவு, தகாத அக்கறையுள்ள
ஒரு பொருளைத் தந்துள்ளது. புதிய உத்தரவு—விளக்கம் தான்
என்றால், அது அனாவசியமானது! அது புதிய நிபந்தனையை விதிப்
பதாக இருந்தால், சபை அந்தப் பிரச்சினையை ஆராய்ந்து கொண்
டிருக்கும்போது—இது போன்று செய்வது முறையற்றது."

'அனாவசியமானது, முறையற்றது' என்ற இப்படிப்பட்ட சொற்
கள் எல்லாம் முதலமைச்சர் அவர்கள் மீது பாய்கிற நேரத்தில்,
உள்ளபடியே, முதலமைச்சர் அவர்கள் மீது அன்பு காட்டுகிற
எங்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை, சபாநாயகர் அவர்
களே, சகித்துக்கொள்ள முடியவில்லை.

"மூலக் கட்டுப்பாட்டு முதல் விதியின்படி, உமாநாத் விமானம்
மூலம் டெல்லியை அடைந்து—சபையில் கலந்துகொண்டு—
போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்த் திரும்ப ஆஜராகலாம்"

என்ற நிலையையும், 'ஆனால் மார்ச் 2-ம் தேதி உத்தரவுப்படி
அவர் கலந்து கொள்ள இயலாது' என்பதையும் டெல்லியில்
சபாநாயகர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்
னொன்றையும் வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், டெல்லி
சபாநாயகர் அவர்கள்,

[திரு. மு. கருணாநிதி] [19th March 1966

"உமாநாத், உள்ளூர் போலீஸ் நிலைய எல்லைக்குள் நடமாடுவது குறித்தும், அவர் எல்லையைக் கடந்திடக் கூடாது என்பது குறித்தும், மூல உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை மார்ச் 2-ம் தேதி உத்தரவு தெரிவிக்குமானால், அவை தேவையற்ற விளக்கங்கள் என விவாதிக்கப்படலாம்—ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நிச்சயமாக அவர், சபை நடவடிக்கையில் பங்கேற்க டெல்லி செல்லக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட புதிய உத்தரவு இதுவெனக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை"

என்று டெல்லி சபாநாயகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

திரு. ஏ. பி. சி. வீரபாகு: 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்,' சார், கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவாதத்திற்கு மேற்கோளாக லோகசபை சபாநாயகர் அவர்களுடைய ரூலிங்கைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்கள். அப்படிப் பேசினால் திருப்பி அந்த ரூலிங்கைப் பற்றிப் பேச வேண்டிய நிலைமை வந்துவிடும். இதைச் சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

SRI K. A. MATHIALAGAN: This is not a discussion on the ruling of the Hon. Speaker of the Lok Sabha. It is only a reference.

கனம் சபாநாயகர்: அந்த 'ரூலிங்'—கைச் சுட்டிக்காட்டிப் பேசினால் அதைப் பற்றி ஆர்க்யுமெண்ட் பண்ணக்கூடிய நிலைமை வரும்.

SRI A. P. C. VEERABAHU: The whole speech of the Hon. Deputy Leader of the Opposition is based on the reasoning of the Hon. Speaker of the Lok Sabha.

கனம் சபாநாயகர்: பார்லிமெண்ட் ஸ்பீக்கருடைய ஒவ்வொரு ரூலிங்-கையும் ரீசன் சரிதானா, இல்லையா என்ற ஆர்க்யுமெண்டுக்குப் போகக் கூடாது. அது சரியல்ல. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்து இங்கே உள்ள நிலைமையை மட்டும் பேச வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: பாராளுமன்ற சபாநாயகருடைய தீர்ப்பு சரி, விளக்கம் சரி என்று அங்கு டெல்லியில் ஆளுங்கட்சியில் இருக்கக்கூடியவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் சின்ஹா அவர்கள் அந்த உத்தரவின் அடிப்படையில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர்: இங்கே ஆர்டர் போட்ட முறையிலே என்ன தப்புப் பண்ணினார்கள், எவ்வாறு தப்புப் பண்ணினார்கள் என்பதைக் குறித்துப் பேசவேண்டும். இந்த ஆர்டர் 'சஸ்டெய்னபிள்' அல்ல, தப்பு என்ற முறையில் பேசவேண்டும்.

19th March 1966]

திரு. மு. கருணாநிதி: இது உத்தரவா, விளக்கமா என்பதற்கான சர்ச்சையை இங்கு கிளப்பிய காரணத்தினாலே தான் நான் பாராளுமன்ற சபாநாயகர் எடுத்துக் கூறிய அந்த வாதத்தை எடுத்து வைக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாயிருக்கிறேனே தவிர, வேறல்ல.

"புதிய விளக்க உத்தரவு கொடுக்கப்பட்டதை அறிந்தபோதும், மத்திய அரசு மாநில அரசுக்கு அந்தக் குறிப்பிட்ட உத்தரவை ரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ ஆலோசனை கூறவில்லை" என்ற அடிப்படையில் வாதம் எழுப்பப்பட்டு அதைத் தொடர்ந்து பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் தம்முடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். "தமிழக அரசு பரோல் உத்தரவுக்குப் புதிய விளக்கம் தந்துவிட்டது என்பது விசித்திரமாக இருக்கிறது' என்பதைத்தான் பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. உமாநாத் அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் தினந்தோறும் ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனை போடப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் இங்கே 9-ந் தேதி அளித்த பதிலில் குறிப்பிட்டார்கள். அப்போது நான் எழுந்து முதலமைச்சர் அவர்களைக் கேட்டேன்—'அந்த நிபந்தனை அவர் பரோலில் விடுதலை கேட்கிற நேரத்தில் போடப்பட்டதா? அல்லது அவர் வெளியே வந்த பிறகு போடப்பட்டதா?' என்று. அப்போதே திட்டவட்டமாக, தெளிவாக முதலமைச்சர் அவர்கள் 'அந்த நிபந்தனை வெளியே வந்த பிறகு அல்ல, முதலிலேயே போடப்பட்டது' என்று கூறினார்கள். இவ்வாறுதான் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அந்த விளக்கத்திற்குப் பொருள்கூறும் வகையில், நிபந்தனைக்குப் பொருள் கூறும் வகையில் இன்னொரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்ற உண்மையை முதலமைச்சர் அவர்கள் இங்கு எடுத்துச் சொல்லவில்லை.

"இந்த வகையிலுள்ள வழக்கு, இது முதல் வழக்கு என்பதால், இத்தகாத செயலுக்கு இச்சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறப்படுகிறது" என்று பாராளுமன்ற சபாநாயகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தத் தகாத செயல் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் ஏற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பரோலில் விடுவிக்கப்பட்ட பிறகு போலீஸ் ஸ்டேஷனிலே அவர் தினந்தோறும் கையெழுத்துப் போட வேண்டுமென்று சொல்கிற அளவுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக் குறைவாக, கவுரவக் குறைவாக நடத்தப்படுகிற அளவுக்கு தகாத செயல் உருவெடுத்திருக்கிறது. இதைப் பற்றிப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட பிறகு, திரு சென்று ஒரு உத்தரவு கோட்டையில் இருந்து குதித்தோடிச் செல்கிறது என்றால், அது அவர் டெல்லிக்குப் போகக் கூடாது என்று தடைபடுத்துகிற உத்தரவே தவிர வேறல்ல.

சப்-இன்ஸ்பெக்டர் 'போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டு மென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? வெளியூருக்குப் போகக் கூடாது; உள்ளூரிலேயேதான் இருக்கவேண்டும்' என்று விளக்கம் கூற முடியுமா? எங்கே மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் 'பாராளுமன்ற நடவடிக்கைகளில் உமாநாத் அவர்கள் கலந்து கொள்ளலாம்' என்று சொல்லி விடுவார்களோ, அப்படிச் சொல்லி விட்டால், எங்கே உமாநாத் அவர்கள் டெல்லிக்குப் போய்விடுவார் களோ, என்று பயப்பட்டதன் அடிப்படையில், அதற்கு அணை போட்டுத் தடுப்பதற்காக, முன்கூட்டியே இத்தகைய உத்தரவு கோட்டையில் இருந்து அங்கே சென்றிருக்கிறது என்பதையும், அதை சப்-இன்ஸ்பெக்டர் நிறைவேற்றியிருக்கிறார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இப்போது நமக்குள்ள முக்கியமான பிரச்னையெல்லாம்— முதலமைச்சர் அவர்கள் தனக்குத் தெரியாமல் இந்த விளக்கம் போய் விட்டது என்று குறிப்பிட்டார்கள். பிறகு பதில் சொல்லு கின்ற நோக்தில், "இந்த அறிவிப்பு போனது தனக்குத் தெரியும்" என்று கூறுகிறார். இவ்வாறு அறிவிப்பு தெரியும், உத்தரவு தெரியாது என்று இப்படி முதலமைச்சர் அவர்கள் மழுப்புகிறார்கள் என்பதும் இந்த மன்றத்திலே எடுத்துக் காட்டப்பட்டது.

இப்போது கூட இதிலே ஒன்றும் ஆபத்து வந்து விடவில்லை. தங்களுக்குத் தெரியாத காரணத்தால் செய்த தவறுக்காகப் பாராளுமன்றத்தில் உள்ள அமைச்சர் திரு. சின்ஹா அவர்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது போற்று தலுக்குரிய ஒன்றாகும். அதைப் போல் கேரள மாநிலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சர்க்கார் இருந்த நேரத்தில், திரு. நம்பூதிரிபாட் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஏற்பட்ட தவறுக்காகப் பகிரங்கமாக வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண் டிருக்கிறார்கள். ஜாம்ஷட்பூர் சிறையிலிருந்து, எஸ்.எம். பானர்ஜி யும், இந்திரஜித் குப்தா என்பவரும் பொறுப்பில் விடுதலையான போது, மாவட்ட நீதிபதியும், எஸ்.டி.ஓ.வும் சபைக்கு அறிவிக்க வில்லை என்று திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் சபாநாய காக இருந்தபோது பாராளுமன்றத்தில் உரிமைப் பிரச்னை கொண்டு போகப்பட்டு, அந்த உரிமைப் பிரச்னையைத் திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்களும் ஏற்றுக் கொண்டு, அதை உரிமைக் குழுவுக்கு விடுவதற்கு முன்பாக பீகார் அரசாங்கத்தை விளக்கம் கேட்டார். ஏற்பட்ட தவறுக்காக பீகார் அரசாங்க உள்துறை அமைச்சரும், உள்துறைச் செயலாளரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பெருந்தன்மைக்கு வரலாறு இருக்கிறது. இப் போது இங்கே நடந்தது, அமைச்சரவைக்குத் தெரியாமல் சப்- இன்ஸ்பெக்டரே எடுத்துக் கொண்ட நடவடிக்கையா? அமைச்ச ருக்குத் தெரியாமல், அரசாங்கத்திற்குத் தெரியாமல் டெபுடி செகரட்டரி இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுத்துக் கொண்டார் களா? இதிலே அவர்களுக்கு ஏற்பட்ட தனி அக்கறை என்ன? அப்படியானாலும் இப்படிப்பட்ட ஒரு [illegible] [illegible]

சர்க்காருக்குத் தானே. அப்படி சர்க்காருக்குத் தெரியாமல் நடந்திருந்தால் இந்தச் சர்க்கார் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இல்லை, தானும் பொறுப்பாளி என்றால் நம் முதல் அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்வார்களா? என்பதுதான் என் கேள்வி. அப்படி வருத்தம் தெரிவித்துக் கொள்வது உள்ளபடியே மிகப் பெரியவர்களுடைய பண்பாடு. முதல் அமைச்சர் அவர்கள் பெரியவர், ஆழ்ந்த அனுபவ அரசியல் வாதி, காந்தி வழிவந்த தொண்டர். காந்தி அடிகள் பலமுறை ஏற்பட்டுவிட்ட தவறுகளுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொண் டிருக்கிறார்கள். அப்படி வருத்தம் தெரிவிப்பதன் மூலம் இந்த மன்றத்தின் புகழ் மேலும் மேலும் ஓங்கி வளரவும், மங்கிவிட்ட நிலையிலுள்ள, மாசுபடிந்த நிலையிலுள்ள இந்தச் சூழ்நிலை மாறு வதற்கு வழிவகுக்கவும் முதல் அமைச்சர் அவர்கள் ஆவன செய் வார்களா? என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது ஏதோ என்னிடத்தில் அன்பு இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதைக் கண்டு ஏமாற மாட்டேன். உண்மையில் அவர்களுக்கு என்னிடம் அன்பு இருப்பதாக நான் ஒப்புக் கொள்வதாக இருந் தால் என் தகுதியைப் பற்றி நான் தீவிரமாக சிந்திக்கவேண்டி யிருக்கும். அவர்கள் அன்பிற்கு நான் பாத்திரமானவனல்ல என் பதை உணர்ந்திருக்கிறேன். இந்த விவாதத்தைக் கொண்டு வந்த கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தவேண்டும். ஏனெனில் இது எனக்கு மேலும் ஒரு வாய்ப்பை அளிக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், நிலையை மேலும் விளக்கு வதற்கு இது ஒரு வாய்ப்பளித்திருக்கிறது. அதற்காக நான் அவர் களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

முதலில் நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன், கனம் உறுப்பினர்களுக்குத் தெரியாததல்ல. அது இந்த நாட்டின் அரசியலமைப்பு. இந்த நாட்டின் அரசியல் அமைப்பு இரண்டு அரசாங்கங்களை இணைந்ததாக இருக்கிறது. ஒன்று மத்திய ஆட்சி; மற்றொன்று மாநில ஆட்சி. மத்திய ஆட்சிக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன. மாநில ஆட்சிக்கு வேறு சில அதிகாரங்கள் இருக் கின்றன. அதுமாதிரி இந்த மன்றமும் பாராளுமன்றமும். இந்த மன்றத்திற்கு சில சட்டங்கள் செய்யக் கூடிய உரிமை இருக்கிறது; அதில் வேறு யாரும் பிரவேசிக்க முடியாது. அதேமாதிரி பாராளு மன்றத்திற்கும் சில சட்டங்கள் செய்யும் உரிமை இருக்கிறது. ஆனால் சில சட்டங்கள் கன்கரண்ட் லிஸ்டில் இருக்கின்றன, இரண்டு பேர்களும் செய்யவேண்டியது. இம்மாதிரி அரசியல் அமைப்பில் உரிமை இருக்கிறது. இந்த மாநில ஆட்சியைப் பொறுத்தமட்டில் பரிபூர்ணமான ஆட்சி உரிமை இந்த அரசாங் கத்திற்கு இருக்கிறது. அதையும் நாம் உணரவேண்டும். அதாவது '[illegible] அத்தாரிட்டி'; இந்த மாநில ஆட்சியைப் பொறுத்த

மட்டில் ஸாவரின் அத்தாரிட்டி இருக்கிறது. மத்திய ஆட்சிக்கும் 'ஸாவரின் அத்தாரிட்டி' இருக்கிறது. இல்லையென்று நான் சொல்லவில்லை. மாநிலத்தைப் பொறுத்தமட்டில் நமக்கு பரிபூர்ண ஸாவரின் அத்தாரிட்டி இருக்கிறது. அந்த அத்தாரிட்டியை அளிப்பது, அதைக் கண்காணிப்பது இந்த மன்றம். இந்த மன்றத்திற்கும் அத்தகைய மகத்தான உரிமை இருக்கிறது. இந்த மாநில ஆட்சிக்கு வேண்டிய அதிகாரத்தை அளிக்கக் கூடிய அதிகாரம், உரிமை இந்த மன்றத்திற்கு இருக்கிறது. அதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். பாதுகாப்பு விதிகளைப் பொறுத்தமட்டில், டிஃபென்ஸ் ரூல்ஸ், டிஃபென்ஸ் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அதை பாராளுமன்றம்தான் செய்திருக்கிறது. இருந்தாலும் அந்தப் பாதுகாப்பு விதிகள், பாதுகாப்புச் சட்டம் அதை நடத்தக் கூடிய, அதற்கு வேண்டிய நடவடிக்கைள் எடுத்துக் கொள்ளக் கூடிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த அரசாங்கத்திற்குள்ள பொறுப்பு பரிபூரணமான பொறுப்பு; யாரும் தலையிடக் கூடாதது. வழக்கு மன்றம் தலையிடலாம். அல்லது சட்டத்தை மாற்றியமைக்க முடிந்தால் இந்த மன்றம் அதில் கவனம் செலுத்தலாம். தவறுகள் இருந்தால் வழக்கு மன்றங்கள் தலையிடலாம். அப்படி வழக்குகள் தொடரப்படுகின்றன. தீர்ப்புகளும் கூறப்படுகின்றன. இந்தப் பாதுகாப்பு விதிகளின்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக்கூடிய பொறுப்பு, அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு பரிபூர்ணமாக இருக்கிறது. அந்த அதிகாரத்தின் கீழ்தான் சிலபேர்கள் டிட்டென்யூ—பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு சிலர் மீது தகுந்த காரணம் இருப்பதினால் டிட்டென்ஷன் ஆர்டர் போடும் அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை யாரும் குறைத்துப் பேச முடியாது. டிட்டென்யூவாக வைத்து விட்டால் எப்போது விடுதலை செய்வது என்பதற்கு விதிகள் இருக்கின்றன. எப்பொழுதெல்லாம் ரெவ்யூ செய்யவேண்டுமோ, அதெல்லாம் நடக்கிறது. வழக்குமன்றம் இது தவறு, டிட்டென்ஷனில் வைத்திருப்பது தவறு என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது; அதற்குக் குறுக்கே அரசாங்கம் வராது. அதல்லாமல் விடுதலை செய்யும் உரிமை—உரிமை என்று சொல்லவில்லை—அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு பரிபூர்ணமாக இருக்கிறது. பரோலில் விடவேண்டுமென்றால் விடலாம், விடாமலும் போகலாம். விடக்கூட அதிகாரம் இருக்கிறது. நிபந்தனை என்றால், எந்த நிபந்தனை மீது விடுவது என்பதற்கான அந்த அதிகாரமும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. நிபந்தனையை மீறி நடந்தால் பரோலை கான்ஸல் செய்யும் அதிகாரமும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதையெல்லாம் கனம் உறுப்பினர்கள் மனத்தில் இருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த அரசாங்கம், அந்த அரசாங்கம் என்று சொல்ல நான் வரவில்லை. மத்திய ஆட்சி என்ன செய்தது, பாராளுமன்றத்தில் என்ன சொன்னார்கள் என்பதை எல்லாம் பற்றி நான் சொல்லவில்லை. தாங்கள் நேற்று

ஒரு கருத்தைத் தெரிவித்தீர்கள். கவனிக்கப்படவேண்டிய கருத்து அது. இம்மாதிரி ஒரு விவாதம் சங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்துகிறது. இருந்தாலும், வேறு ஒரு மன்றம், அதுவும் பாராளுமன்றம், அந்த மன்றத்தின் நடவடிக்கைகளைப்பற்றி அதிகமாகக் குறிப்பிட்டுப் பேசுவது முறையல்ல என்று தாங்கள் சொன்னீர்கள். அதை எடுத்துக் கொண்டால், அது தவறு என்பது நமக்கு மனதில் தோன்றினால், தவறு என்று சொல்லும் நிலை ஏற்படும்; அங்கே செய்தது தவறு என்று சொல்லலாம்; அப்படிச் சொல்வது முறை அல்ல என்பதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். அன்று கூட நான் கூறினேன், பாராளுமன்ற நடவடிக்கைகளைக் குறிப்பிடாமல் பேசுவது, நம் விவாதத்தை நடத்துவது, நலம் என்று சொன்னேன். ஆனால், அடியோடு அதைக் குறிப்பிடாமல் இருப்பதற்கும் இல்லை. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளையொட்டித்தான் திரு. மதியழகன் அவர்களாலும், கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களாலும் இது இந்த மன்றத்திலே விவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்போதும் கூறுகிறேன், அரசாங்கத்தின் நிலையை விளக்கவேண்டும்; இந்த மன்றம் எல்லாவற்றையும் கலந்து ஆலோசித்து நம் டிஸ்ப்ளெஷரைத் தெரிவிக்கவேண்டியது என்று நான் ஒருகாலும் கூறமாட்டேன். தவறுகள் எங்கேயோ நடந்தது என்றிருக்கலாம். கனம் எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அரசாங்கம் தவறு செய்து விட்டது என்று சொல்வது போல், அரசாங்கம் தவறு செய்யவில்லை. அரசாங்கத்தின் மீது தவறு செய்து விட்டார்கள் என்ற கருத்தையோ அல்லது இந்த சங்கடமான நிலையில் இப்படி ஒரு காரியத்தில் தவறு செய்து விட்டார்கள் என்று கூறவேண்டுமென்றோ நான் ஒருகாலும் கூறமாட்டேன். அது கூடாது என்றுதான் சொல்ல வேண்டும். பாராளுமன்ற ஸ்பீக்கர் அவர்கள் கொடுத்த ரூலிங் பற்றி குறிப்பிட்டார்கள். அன்று நான் குறிப்பிட்டதுபோல், பாராளுமன்றத்தில் ஒரு கனம் உறுப்பினர், சென்னை அரசாங்கம் என்ன சொல்ல இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல், அல்லது முதல் மந்திரி அவர்கள் என்ன சொல்ல இருக்கிறார்கள் என்று தெரியாமல் இப்படி ஒரு ரூலிங் கொடுப்பது முறையா என்று கேட்டதற்கு பாராளுமன்றத் தலைவர் அவர்கள், My ruling concerns Central Government என்று ரூலிங் கூறியிருப்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அங்கே, சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ மன்னிப்பு கோரியதைப் பற்றி கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பத்திரிகைகளில் வந்தது. அவர்கள் மன்னிப்பு கோரிய வாசகத்தைப் படித்தேன். 'நான் மத்திய அரசாங்கம் சார்பாக மன்னிப்பு கோருகிறேன்' என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நான் ஏதோ மறைத்துப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றும் மறைக்கவில்லை. நான் எதையும் மறைக்கவில்லை. [illegible] கட்சித் தலைவர் திரு. சா. கணேசன்

[திரு. எம். பக்தவத்சலம்] [19th March 1966

அவர்கள் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நடவடிக்கைகள், அங்கு தெரிவித்த கருத்துக்கள் இவற்றை எல்லாம் குறிப்பிட்டு நிலைமையை விளக்கினார்கள். அப்போதெல்லாம் குறிப்பிடப் பட்டது, 'வேறு ஒரு உத்தரவு போடப்பட்டதா' என்பது. அப்படி ஒரு உத்தரவைப் போடவில்லை என்று சொன்னேன். அல்லது அப்படி சப்-இன்ஸ்பெக்டர் ஒரு உத்தரவைப் போட்டாரா என்று கேட்டார்கள். அவரும் அப்படி உத்தரவு போட வில்லை என்று சொன்னேன். அது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவர் என்ன சொன்னார், எழுதிக் கொடுத்தாரா, வாயால் சொன்னாரா என்றால், அந்த விவரங்கள் எனக்கு தெரியாதே தவிர, உத்தரவு போடவில்லை என்று சொன்னேன். அவர் என்ன செய்தார் என்றால், சப்-இன்ஸ்பெக்டர் எழுத்து மூலம் கொடுத்தாரா, வாயால் சொன்னாரா என்றால், அது எனக்குத் தெரியாது என்று சொன்னேன். இந்த அரசாங்கத்திற்குத் தெரியாமல், எனக்குத் தெரியாமல் ஒரு உத்தரவும் போட்டிருக்கமுடியாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகவே, அரசாங்கம் ஒரு உத்தரவும் போடவில்லை, சப்-இன்ஸ்பெக்டர் ஒன்றும் போடவில்லை என்று சொன்னேன். மற்றொன்று குறிப்பிட விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டில் ஒரு கேஸில், பாராளுமன்ற அங்கத்தினர்கள்—உமாநாத்தும் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்—டிட்டென்யூவாக இருப்பதால், அவர்கள் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு ஒன்றும் உரிமை இல்லை, அப்படி உரிமை இருப்பதாகக் கோர முடியாது என்று ஒரு தீர்ப்பு இருக்கிறது. அதையும் கனம் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்களை நாம் பரோலில் விட்டது அவரது மனைவியார் தனக்கு உடல்நிலை சரியாக இல்லாததினால் தம்மை கவனித்துக்கொள்ள அவர்களை விட வேண்டுமென்று கேட்டார்கள். எந்தக் காரணத்திற்காகக் கேட்கிறார்களோ அதற்குத் தக்கபடி கண்டிஷன்ஸ் இருக்கும். ஒருவர் தன் மகனுக்கு பெண் தேட வேண்டுமென்று கேட்டார்; எங்கெங்கு போகவேண்டும் என்று பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் பரோலில் விடப்பட்டார். இவரது மனைவியாருக்கு தேகநிலை சரியாகயில்லை என்று பரோலில் விடப்பட்டார். இன்னின்ன காரணம் என்று ஜெயிலரிடம் அட்டெஸ்ட் செய்து கொடுத்தார்கள். பின் பரோல் ஆர்டர் சர்வ் ஆயிற்று. 'உங்கள் மனைவியாரின் தேகநிலை சரியாக இல்லை என்று சொல்கிறீர்கள், இன்னின்ன கண்டிஷன்ஸ்படி நடக்கவேண்டும்' என்று சொல்லி அதில் அவர் கையெழுத்திட்டு விட்டு அன்றாடம் போலீசிடம் போய் சொல்கிறேன் என்பது அண்டர்டேக்கிங்.

இரண்டாம் தேதி பார்லிமெண்டில் பிரஸ்தாபம் வந்தது. பார்லிமெண்டில் என்ன நடந்தது என்பதைப்பற்றி இந்த அரசாங்கத்திற்கு அப்போது தெரியாது. எனக்கும் தெரியாது. காரியதரிசிக்கோ அல்லது டெபுடி செக்ரட்டரி அவர்களுக்கோ தெரியாது. முதல் தேதி சில தகவல்கள் வந்தன. அதன்படி பார்லிமெண்ட் உறுப்பினர் அவர்கள்,

19th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

யும் மீறி டெல்லிக்குப் போகக்கூடும் என்கின்ற தகவல் வந்தது. அவ்விதம் அவர்கள் நிபந்தனையை மீறி டெல்லிக்குப் போனால் பரோலை ரத்து செய்யவேண்டியிருக்கும், அதற்கான சங்கடமான நிலைமை ஏற்படும், ஆகவே, ஜாக்கிரதையாக இருக்கட்டும் என்ற முறையில்தான் க்ளாரிஃபிகேஷன் என்ற அளவில்—இப்போதும் சொல்லுகிறேன், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது க்ளாரிஃபிகேஷன்தான்—அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதெல்லாமல் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. உத்தரவு போடுவது என்றால், அரசாங்கம் உத்தரவு போடவேண்டும். சப்-இன்ஸ்பெக்டரா உத்தரவு போடுவது? சப்-இன்ஸ்பெக்டர் உத்தரவு போட முடியாது. நான் இதைப்பற்றி விசாரித்தேன். கலெக்டர் அவர்களுக்குக்கூட டெலிகேஷன் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இவ்விதம் கொடுக்கப்பட்டது ஆர்டர் அல்ல என்பதைத் திருப்பித் திரும்பிச் சொல்கிறேன். முதலாவது கொடுக்கப்பட்ட ஆர்டரைத் தவிர வேறு எந்தவிதமான ஆர்டரும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் பரோல் நிபந்தனைகளை மீறி நடந்து கொண்டால் சங்கடமான நிலைமை ஏற்படும், அதிலும் மனைவிக்கு உடம்பு சரியில்லை, அதற்காக பரோல் வேண்டும் என்று கேட்டு வந்திருக்கிறார்கள், இதில் சங்கடமான நிலைமை இருக்கவேண்டாம், அப்படி அவர்கள் மீறிப் போவதாக இருந்தால் பரோலை ரத்து செய்ய வேண்டியிருக்கும், நிபந்தனையை மீறாமல் அவர்கள் எங்கு போனாலும் அதைப் பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை, அந்த நிலைமை வரவேண்டாம் என்று எண்ணித்தான் அவர்களுக்கு க்ளாரிஃபிகேஷன் தெரிவிக்கப் பட்டது. இது அவரிடமிருந்த கருணையினால் தெரிவிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் கனம் அங்கத்தினர்களே முடிவு செய்து கொள்ளலாம். அரசாங்கத்திற்குச் சங்கடம் வரக் கூடாது என்பதற்காகத்தான் இவ்விதம் தெரிவிக்கப்பட்டதே தவிர வேறு ஒன்றுமில்லை. . . .

திரு. மு. கருணாநிதி: சுப்ரீம் கோர்ட்டில் சட்டரீதியாக பரோலில் இருக்கும்போது, பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கும்போது, திரு. உமாநாத் அவர்கள் பாராளுமன்றத்திற்குப் போகவேண்டும் என்று விரும்புவாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு என்ன? பாராளுமன்றத்திற்குப் போகவேண்டும் என்று சொல்வதற்கான உரிமை கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் போக வேண்டுமென்றால் போகலாம்; அந்தத் தீர்ப்பில் போகக்கூடாது என்று சொல்லப்படவில்லை. போகலாம், போகாமலும் இருக்கலாம். பாராளுமன்றத்திற்கு போவதற்குள்ள உரிமையைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் பாராளுமன்றத்திற்குப் போகக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருப்பதாகவும், அதற்காகப் புதிதாக நிபந்தனைகள் போட்டிருப்பதாகவும் பலர் சொல்லுகிறார்கள்; இவையும் சொல்லப்பட்டது. அவர்கள் 15-ம் தேதி தந்தி கொடுத்திருக்கிறார்கள்; அதில் என்ன கேட்டிருக்கிறார்கள்?

[திரு. எம். பக்தவத்சலம்] [19th March 1966

" Kindly refer my letter, dated 13th—Stop—Request modification of condition to enable me to proceed to Lok Sabha urgently "

'மாடிஃபிக்கேஷன் ஆஃப் கண்டிஷன்'—என்ன கண்டிஷன் ? என்ன சொல்லப்பட்டிருக்கிறது ?

'Under present conditions of parole please inform that Sri Umanath should not go to Delhi.'

இது தான் சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்தது—இது தவிர எந்தவிதமான உத்தரவையும் போடவில்லை. இதில் கேன்சல் செய்கின்ற பிரச்னையே எழவில்லை. வாதத்திற்கு வேண்டுமென்றால் எதையும் சொல்லலாம். முதலில் போட்ட உத்தரவைத் தவிர வேறு எந்த உத்தரவையும் போடவில்லை என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். முதலாவது போட்ட நிபந்தனைகளில் அவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அந்த நிபந்தனைகளை மீறி டெல்லிக்குப் போகக்கூடாது என்கின்ற தகவலைத்தான் சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை . . . .

திரு. கே. ஏ. மதியழகன் : உமாநாத் அவர்களுடைய கடிதத்தையும் படித்துக்காட்டுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முடியாது ; அது என்னிடமில்லை. அவர் அனுப்பியிருக்கும் தந்தியைத்தான் படித்துக் காட்டினேனே ! இதைத் தவிர வேறு என்ன வேண்டும் ? டெல்லிக்குப் போகவேண்டும் என்று கேட்டால், எதை மாற்றுவது, என்ன கண்டிஷனை மாற்றச் சொல்லுகிறார் ? என்ன கண்டிஷன் இருக்கிறது. ஏதோ இரண்டாவதாக பாராளுமன்றத்திற்குப் போகக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாக நினைத்துக்கொண்டு, கேட்பது சரியில்லை. இரண்டாவது எந்த உத்தரவையும் போடவில்லை. இரண்டாம் தேதி பாராளுமன்றத்தில் இதைப்பற்றி விவாதித்தபின்னல்தான். இந்தத் தகவல் கொடுக்கப்பட்டதா என்றால், அப்படியில்லை. இரண்டாம் தேதி என்ன நடந்தது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியாது. எனக்கும் தெரியாது. அதற்கு முந்தின நாளே கிடைத்த தகவல்களை வைத்துக்கொண்டு, இப்போது இருக்கின்ற நிபந்தனைகளின்படி டெல்லிக்குப் போகக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இது இரண்டாம் தேதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னல் தெரிவிக்கப்பட்டதும் அல்ல. நான் எதையோ சொல்லி மழுப்புவதாகச் சொன்னார்கள். அப்படி ஒன்றும் மழுப்ப வேண்டிய அவசியமில்லை. தெளிவாகத்தான் தெரிவித்து இருக்கிறேன். அரசாங்கத்திலிருந்து தெரிவித்தது அறிவிப்புத்தான் ; உத்தரவு அல்ல. இது உத்தரவாக எப்படியிருக்க முடியும் ? இல்லை இது உத்தரவுதான் என்று யாராவது தவறாக நினைத்துக்கொண்டால் அதற்கு நான் பொறுப்பில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் . . .

19th March 1966]

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. . . .

MR. SPEAKER : What is the point of order ? The hon. Member should state it straight away without taking the time of the House.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உத்தரவு சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. டெபுடி செக்ரட்டரிதான் இந்த உத்தரவைப் போட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படியானல் அந்த ஒரிஜனல் ஆர்டரைக் காட்டும்படி கேட்டோம். அது ரகசிய ஆர்டர், அதைக் காட்ட முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் கேட்கிறார் என்பதற்காக செக்ரட்டரியேட்டிலுள்ள எல்லா ஃபைல்களையும் அவர்களிடம் வைத்துவிட முடியாது. பரோல் உத்தரவு போடப்பட்டிருக்கிறது, அதற்கான நிபந்தனைகளும் போடப்பட்டிருக்கின்றன. சப்-இன்ஸ்பெக்டர் கொடுத்த கடிதத்தையும் தெரிவித்தாய் விட்டது. காண்பிப்பதற்கு வேறு என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) இதையெல்லாம் இன்னொரு தடவை பேசலாம் ; ஆங்கிலத்திலும் பேசலாம், தமிழிலும் பேசலாம். . .

கனம் சபாநாயகர் : இப்படிக் குறுக்கிட்டுப் பேசினல், எப்படி குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க முடியும் ? இதையெல்லாம் முன்பே சொல்லியிருக்க வேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதோ பார்லிமெண்டில் இந்த அரசாங்கத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது என்று சொன்னல், அதை எடுத்து வைத்துக்கொண்டு ஏதோ குற்றச்சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை. அதற்கு எந்தவிதமான இடமும் இதில் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அப்படி எந்தவிதமான தவறும் செய்யவில்லை. தகாத காரியம் எதையும் செய்துவிடவில்லை. இந்த அரசாங்கத்தின் வரம்புக்குட்பட்டுத்தான் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். யாரோ எதையோ சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது 'ஸாவரின் அத்தாரிட்டி' கொண்டது ; அதை 'அப்யூஸ்' செய்கிற முறையில் எதையாவது செய்திருக்கிறோமா என்பதைத்தான் இந்த மன்றம் கவனிக்கவேண்டும். அங்கே வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள் என்றால் இந்த அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்பதைத் தெரிந்துகொண்டு சொல்லியிருக்கவேண்டும். இந்த அரசாங்கம் என்ன சொல்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு, கருத்துக்களைச் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கேட்டபோது, நான் விளக்கம் கூறினேன். சப்-இன்ஸ்பெக்டர் என்ன கொடுத்தார், 'ஓலாகச்' சொன்னாரா, எதன் மூலம் தெரிவித்தார் என்பதையெல்லாம் தெரிந்து

கொண்டு, அவருக்கு விளக்கம் கூறினேன். இதைப்பற்றி பார்லி மென்டில் நடைபெற்ற விவாதத்தின்போது, ஒரு கனம் அங்கத் தினர்—பாராளுமன்ற அங்கத்தினர்—'சென்னை அரசாங்கத்தி லிருந்து இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா' என்று கேட்டிருக்கிறார். அதற்கு கனம் சபாநாயகர் அவர்கள் பதில் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? 'நான் கொடுக் கின்ற ரூலிங் மத்திய அரசாங்கத்திற்குத்தான்; ஆகவே, மாநில அரசாங்கத்தினர் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்குத்தான் ரூலிங் கொடுக்கிறேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் சொல்லுகிறேன். இரண்டாம் தேதி என்ன நடந்தது என்பதைப்பற்றி இந்த அரசாங் கத்திற்குத் தெரியாது. முதல் தேதி கிடைத்த சில தகவல்களை வைத்துக்கொண்டு நிபந்தனைகளை மீறிப் போனால் அதற்காக நட வடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதை எண்ணி, கம்யூனிகேஷன் அனுப்பியிருக்கிறார்கள். பரோலில் இருக்க வேண்டும் என்றால், சில நிபந்தனைகள் இருக்கின்றன. பாராளு மன்ற உறுப்பினர்கள் என்று சொன்னால் சில நிபந்தனைகள் இருக் கின்றன. அதை மாற்றினால் ஒழிய, இந்த நிபந்தனைகளை அவர் கள் மீறக்கூடாது என்கின்ற வரையில், தான், அவர்களுக்கு விளக்கம் கூறப்பட்டது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எந்த அதிகாரியும் வரம்பு மீறி எந்த விதமான காரியத் தையும் செய்துவிடவில்லை. வரம்புக்குட்பட்டுத்தான் நடந்திருக் கிறார்கள். இதில் தவறும் ஏற்பட்டுவிடவில்லை. இந்த அரசாங் கத்தைப் பாதிக்கின்ற வகையில், யார் என்ன சொன்னாலும் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது, இந்த மன்றமும் ஏற்றுக் கொள்ளாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். . . .

திரு. மு. கருணாநிதி: கனம் முதலமைச்சர் அவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களோடு தொலைபேசியில் பேசிய நேரத்தில் திரு. உமாநாத் அவர்களுக்கு இவ்விதம் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்தார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போலீஸ் என்ன தெரிவித்தது என்பதைத் தெரிவித்தேன் . . (எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பக்கத்திலிருந்து சிரிப்பொலி கேட்டது) இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? சிரித்தால் என்ன பிரயோசனம்? சப்-இன்ஸ் பெக்டர் என்ன க்ளாரிபிக்கேஷன் கொடுத்தார்கள் என்பதைச் சொன்னேன். முதலாவது போடப்பட்ட உத்தரவைப்பற்றிச் சொன்னேன். இரண்டாவது எந்த விதமான உத்தரவும் போட வில்லை; அவர்கள் நிபந்தனையை மீறக்கூடாது என்பது தான் தெரிவிக்கப்பட்டதே தவிர வேறு ஒன்றுமில்லை. இப்போது போடப்பட்டிருக்கும் நிபந்தனைகளை மாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டுமென்றால், அதை மாற்றக்கூடிய பரிபூரண உரிமை இந்த அரசாங்கத்திற்கு இருக்

கிறது. அதில் யாரும் தலையிட முடியாது. அப்படித்தான் செய்ய வேண்டும், இப்படித்தான் செய்யவேண்டும் என்று சொல்வதற்குத் தேவையில்லை; அதை கோர்ட்டார்தான் சொல்லவேண்டுமே தவிர, வேறு யாரும், அவர்கள் எவ்வளவு தான் பெரியவர்களாக இருந் தாலும், இந்த அரசாங்கத்தின் அதிகாரங்களில் தலையிட முடியாது, கோர்ட்தான் அவ்விதம் சொல்ல முடியும். சட்டம் செய்யவேண்டும் என்றால், அதற்கான உரிமை இந்த மன்றத்திற்கு இருக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டு தான் இந்த அரசாங்கம் காரியங்களை நடத்தி வருகிறது. அந்த முறையில், இந்த அரசாங்கம் இதுவரை நடந்து கொண்டதில் எந்தவிதமான தவறும் இல்லை. எதிர்க்கட்சி கள் ஏதாவது இதிலிருந்து தங்களுக்குச் சாதகமாகக் கிடைக்காதா என்று பார்த்துக்கொண்டிருக்கலாம். என்னவெல்லாமோ குற்றச் சாட்டுக்கள் சொல்லப்படுகின்றன. குற்றச்சாட்டுகள் வளர்ந்து கொண்டே போகின்றன. அவை எப்படிப் போய் நிற்குமோ தெரிய வில்லை. ஏதோ பத்திரிகையில் வந்துவிட்டால் எல்லாம் சரியாக போய்விட்டது. இந்தப் பிரச்னையில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் சரியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 21st March 1966. 1-00 p.m.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A Statutory Rules and Orders.

* 168. *Notification issued with G.O. Ms. No. 2456, Public (Services), dated the 27th December 1965, amending the Madras Public Service Commission Regulations, 1954, in so far as it relates to the Madras General Subordinate Service published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954, at pages 759 to 768 of Part I of the* Fort St. George *Gazette, dated the 9th June 1954 as subsequently amended to include the Inspector of Weights and Measures within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]*

* 169. *Notification issued with G.O. Ms. No. 2465, Public (Services-A), dated the 28th December 1965 amending the Madras Public Service Commission Regulations, 1954, in so far as it relates to the Madras General Service published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954, at pages 759 to 768 of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June 1954, as subsequently amended relating to posts of Assistant Secretary to the Board of Revenue (Food Production). [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution*

[19th March 1966

170. *37th Annual Administration Report of the Madras State Electricity Board for the year* 1963–64. [*Laid on the Table of the House under section* 75(1)(*A*) *of the Electricity (Supply) Act,* 1948 (*Central Act* 54 *of* 1948).]

B. Reports, Notifications and other papers.

† 62. *A review on Nationalized Transport in the Madras State* 1965–66 (*Tamil and English*).

† 63. *A review on Road Transport in Madras State* 1965–66 (*Tamil and English*).

* Laid on the Table of the House on 18th March 1966.

† Despatched to Members on 17th March 1966.

APPENDIX

[*Vide* answer to starred question No. 349 at page 3]

Measures taken to Prevent Road Traffic Accidents

The following proposals are under examination—

(1) Opening of traffic police stations in important towns over and above a population of fifty thousand with a view to enforce and regulate the traffic and minimise accidents.

(2) Opening of two State-owned schools, one each at Madurai and Coimbatore to impart training in driving heavy duty vehicles. The schools will start functioning in 1966–67.

(3) To amend the Madras Motor Vehicle Rules so as to provide that no driver shall be allowed or caused to be allowed to drive a vehicle for more than 200 kilometres in any one stretch between 6 p.m. on one day and 6 a.m. on the succeeding day.

(4) To utilise the services of the American Traffic Plan experts Messrs. Willbar Smith and Associates, for preparation of a Master Traffic Plan for Madras City.

2. The Government have recently sanctioned the erection of traffic signs at the approaches to 321 unmanned railway level crossings in the State.

3. The Government have asked the Corporation of Madras to provide parking places for cars in selected areas in the Madras City and to follow the procedure adopted for cycle stands for purposes of collecting parking fees in the City.

பதில்

சாலை விபத்துக்களைத் தவிர்க்க மேற்கொண்டுள்ள முறைகள்

கீழ்கண்ட செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன :—

(1) போக்குவரத்து விதிகளைச் செயல்படுத்தவும், போக்குவரத்தை முறைப்படுத்தவும் விபத்துக்களைக் குறைக்கவும் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கட் தொகையுள்ள முக்கிய நகரங்களில் போக்குவரத்துப் போலீஸ் ஸ்டேஷன்களை ஏற்படுத்துதல் ;

(2) லாரி போன்ற கனரக வண்டிகளை ஓட்டுவதற்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக அரசாங்க பயிற்சிப் பள்ளிகள் இரண்டினை நிறுவுதல். 1966-67-ல் இவை செயல்படத் தொடங்கும்.

(3) டிரைவர் ஒருவர் மாலை 6 மணியிலிருந்து மறுநாள் காலை 6 மணிவரை ஒரே தடவையில் 200 கிலோ மீட்டருக்கு மேல் ஒரு வண்டியை ஓட்ட அனுமதி அளிக்கவோ, அனுமதி அளிக்கச் செய்யவோ கூடாத வகையில் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்துதல்.

(4)சென்னை மாநகருக்காக விரிவான வண்டிப் போக்குவரத்துத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க அமெரிக்கப் போக்குவரத்துத் திட்ட வல்லுநர்களான மெஸர்ஸ் வில்பர் ஸ்மித் அவர்தம் நண்பர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுதல்;

2. இம்மாநிலத்தில் காவலர் அற்ற 321 சாலை இருப்புப் பாதைச் சந்திப்பிடங்களில் அடையாளங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

3. சென்னை மாநகரில் குறிப்பிட்ட சில இடங்களில் மோட்டார் வண்டிகளை நிறுத்துவதற்காக வகை செய்து, அதற்கென்று அவைகளிடம் கட்டணம் வசூலிப்பதற்காக, சைக்கிள் ஸ்டாண்டுகளில் கட்டணம் வசூலிக்கும் முறையைப் பின்பற்றுமாறு அரசாங்கம் மாநகராட்சியைக் கேட்டுக் கொண்டுளளது.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 21st March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மின்சார விநியோகம்

** 362 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1965-ம் ஆண்டு, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலூகாவில் விவசாயத்திற்காகவுள்ள பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் ஒரே சீரான வகையில் வழங்கப்படாமலும், முன் அறிவிப்புமின்றி நிறுத்தப்பட்டு வந்ததும் குறித்து திரு. எஸ். ஜே. ராமசாமி, எம்.எல்.ஏ-விடமிருந்து அண்மையில் புகார் ஏதேனும் வந்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A complaint was received by the Madras State Electricity Board.

(*b*) On investigation the Board found that the interruptions were due to low voltage conditions prevailing at that time. To improve the voltage conditions a new 33 K. V. Sub-station was under construction and this was commissioned on 30th Noember 1965. After commissioning this Sub-Station the voltage conditions have improved considerably.

** 363 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் 33 K.V. *சப்-ஸ்டேஷன்கள் அமைக்கும் திட்டம் பரிசீலனையிலுள்ளது ?*

(இ) அரக்கோணம் தாலூகா, தக்கோலத்தில் 33 K.V. *சப்-ஸ்டேஷன் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையில் செங்கல்பட்டு திட்டத்திலிருந்து இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது ?*

(உ) அவ்வேலை எப்போது முடிவு பெறும் ?

[21st March 1966

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (c) The answer[a] is placed on the Table of the House.

புலவர் கா. கோவிந்தன் : செய்யார் வட்டத்தில் பெருங்காட்டூர் என்ற இடத்தில் 33 கே. வி. சப்-ஸ்டேஷன் வைப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. முதல் பகுதியில், அதே பகுதியிலுள்ள சிறுங் காட்டூர் என்ற பகுதியில் 110 கே. வி. சப் ஸ்டேஷன் வைப்பதாக திட்டம் இருக்கிறது. இது தேவைதானு என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 33 கே.வி. சப்-ஸ்டேஷன் வேறு, 110 கே.வி. சப்-ஸ்டேஷன் வேறு. ஹை வோல்டேஜ்க்கு 110 கே.வி.-யிலிருந்து லைன் கொண்டு போகிறோம். அதற்காகத்தான் அதை வைக்கிறோம். 33 கே.வி.-க்கு ஸ்டெப் டவுன் செய்தால் எல்.டி. லைன்ஸ் கொடுக்கமுடியும்.

புலவர் கா. கோவிந்தன் : மூன்றுவது பகுதியில், வந்தவாசி வட்டத்தில் டி.வி. புரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வந்தவாசி வட்டத்தில் அல்ல செய்யார் பகுதியில் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எலெக்ட்ரிசிட்டி போர்ட்டுக் காகவென்று இவ்விதம் பிரித்திருக்கிறார்களோ என்னவோ தெரியாது.

பேட்டை நூற்பாலைகள்

* 364 கேள்வி.—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலிப் பேட்டையிலுள்ள நூற்பாலைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்தே எடுக்கப்படுகின்றனரா ?

(இ) பிற மாவட்டங்களில் இருந்துதான் அதிகமாக எடுக்கப் படுகிறார்கள் என்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம். திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து அதிகமாக தொழிலாளர்கள் எடுக்கப்படு கின்றனர்.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த மில்லில் தொழிலாளர்களை எடுப்பது எந்த அடிப்படையில் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக கோவாப்ப ரேடிவ் மில் வைக்கின்ற இடத்திலே 50 சத விகிதம் நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். பல

[a] Printed as Appendix I on pages 338 and 339

21st March 1966]

நெசவாளர் சங்கங்கள் மூலதனம் போட்டிருக்கிறார்கள். நெசவாளர் சங்கங்களிலிருப்பவர்கள் தங்களுடைய பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவார்கள். மற்ற பகுதியில் அந்தந்த ஜில்லாக் களிலுள்ள கோவாப்பரேடிவ் சங்கங்கள் பணம் போட்டால் அவர் களுக்கும் சலுகை கொடுக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : பொதுவாக எல்லா மாவட்டங் களிலும் ஏற்படுத்தும் தொழிற்சாலைகளில் அந்தந்த மாவட் டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறதா ? அல்லது திருநெல்வேலிக்கு மாத்திரம் தனிச் சலுகையா. அந்த மாதிரி உத்தரவு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிச் சலுகையில்லை. சிப்பந்திகளை எடுக்கிற நேரத்தில் இம்மாதிரி எடுப்பார்கள். இம்மாதிரி எடுக்க வேண்டும் என்று உத்தரவு கிடையாது.

புலவர் கா. கோவிந்தன் : நூற்பு ஆலைகள் வைக்கின்ற நேரத் திலே நெசவாளர்கள் எங்கே அதிகமாக வாழ்கிறார்கள் என்று பார்த்து அந்தப் பகுதியில் வைக்காத காரணத்தால்தான் வேறு இடங்களிலிருந்து நெசவாளர்களைக் கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையால் பணம் யார் போட்டாலும் நெசவாளர்கள் வாழ்கிற இடத்திலேயே நூற்பு ஆலைகளை வைப்பதற்கு அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது சரியான கொள்கை யல்ல. எந்த இடத்தில் நூல் விநியோகம் அதிகமாக இருக் கிறதோ, டிஸ்ட்ரிப்யூஷன் அதிகமாக இருக்கிறதோ, எந்த இடத்தில் அதிகமாகப் பணம் போடுகிறார்களோ, அந்த இடமாகத்தான் பார்க்கவேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு : நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதற்கு நிலங்களை எடுக்கிறார்கள். நிலங்களை எடுத்துக்கொள்வதால் அதில் வேலை செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு நெசவாலை களில் வேலை கொடுப்பதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறதா ? அல்லது, இனிமேலாவது உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உத்தரவிடவில்லை. ஆனால், அந்தக் கருத்தும் மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக அம்பத்தூர் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை எடுத்துக்கொண்டால், அங்கே இருந்தவர்களுக்கு பாதிக்குமேல் வேலை கொடுக்கப்பட்டு, அவர்கள் முன்பு சம்பாதித்ததைவிட 5, 6 மடங்கு வருவாய் பெற்று வருகிறார்கள். ஆனால், அவ்வாறு எடுக்கவேண்டுமென்று உத்தரவு போடமுடியாது.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டையில் நெசவு ஆலை வைத் திருப்பது அங்கே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைட்

[21st March 1966

போக்குவதற்காகத்தான். அப்படியிருந்தும் வேலைக்கு ஆள் எடுக்கும்போது மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களையும் எடுக்கிறார்கள் எனத் தெரிகிறது. அப்படி மற்ற மாவட்டங்களிலிருந்தும் வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள் என்பது உண்மையானால், திருநெல்வேலியில் அந்த நெசவாலை நிறுவப்பட்டதன் நோக்கமே மாறுபடுகிறதல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருநெல்வேலி கூட்டுறவு நெசவாலையில் 'ஏ' மில், 'பி' என்று இருக்கின்றன. 'ஏ' மில்லில் 582 தொழிலாளர்கள் எடுத்ததில், 490 பேர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்கள். 'பி' மில்லில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எந்தெந்த சொசைடியில் அதிகமாகப் பணம் போடுகிறார்களோ, அந்தந்த சொசைடிகளில் உள்ள நாமினீஸ்களுக்குக் கொடுக்கிறார்கள். திருநெல்வேலிக்குத்தான் அதிகமாக இடம் கிடைக்கும். இதைச் சட்டபூர்வமாகச் செய்யமுடியாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கூட்டுறவு மில்களில் அந்தந்த ஏரியாக்களில் இருக்கக்கூடியவர்களுக்கு இத்தனை சதவிகிதத்திற்கு வேலை கொடுக்கவேண்டுமென்று நியதியை ஏற்படுத்திவிட்டால், அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் நிலைமை இருக்காது. ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் அந்தந்த ஜில்லாக்களில் 'செர்டன் பர்சன்டேஜ்' கொடுக்கலாம் என்று மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மறு பரிசீலனைக்கு ஒன்றும் இல்லை. ராஜ்யம் பூராவும் ஒன்று. கூடுமானவரை அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு சலுகை கொடுக்கிறார்கள். ஆனால் அதற்கு உத்தரவு போடமுடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த மில்லுக்கு பங்குத் தொகை செலுத்தியிருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் எத்தனை சொசைடிகள் எவ்வளவு பங்குத்தொகை செலுத்தியிருக்கிறார்கள்? மற்ற ஜில்லாக்களில் எவ்வளவு பங்கு செலுத்தியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கங்கள் பங்குத் தொகை கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்தில் இருக்கும் கூட்டுறவு சங்கங்கள் இதுபோன்று மற்ற மாவட்டங்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். பங்குத் தொகை அடிப்படையில் ஆள் எடுக்கிறார்கள் என்றால், அடுத்த மாவட்டத்தில் இருக்கும் மில்களில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை ஏன் எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் எந்த இடத்தில் என்று எழுதினாலோ அல்லது கேள்வி கேட்டாலோ பதில் சொல்கிறேன்.

21st March 1966]

Silk Weavers' Societies

* 365 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Handloom Co-operative Silk Weavers' Societies functioning in the State, district-wise;

(b) the number of looms run by each society ; and

(c) the income earned by each society during 1964–65?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) to (c) A statement [a] is placed on the Table of the House.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இந்த அறிக்கையிலே 21 சங்கங்களிலே 8 சங்கங்களில் பெருவாரியான தொகை நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய முற்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒவ்வொன்றுக்கும் காரணங்கள் பார்த்துக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே முதலில் இருக்கிற ஆறு சொஸைட்டிகளும் காஞ்சீபுரத்தில் இருக்கும் சொஸைட்டிகள். அவற்றில் லாபம் வந்திருக்கிறது. அடுத்து வந்திருப்பது ஆரணி, ஆரணியையொட்டி உள்ள சொஸைட்டிகள். அங்கு லாபம் வராததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆரணி சில்க் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியில் நஷ்டம் வந்ததற்குக் காரணம்

SLUMP IN THE MARKET, STAGNATION OF STOCK

சௌடாம்பிகா சில்க் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி, ஒண்ணுபுரம்—இதைப் பொறுத்தவரையில் இங்கே

LACK OF SKILLED WORKERS, STAGNATION OF STOCK

வாலாஜாபேட்டை சில்க் வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியைப் பொறுத்தவரையில்

SOCIETY'S INABILITY TO PRODUCE ATTRACTIVE DESIGNS, DISPROPORTIONATE OVERHEADS

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இனியாவது நஷ்டம் இல்லாமல் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? சர்க்காரிலிருந்து ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறதா? என்ன ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கு இருக்கிற டெபுடி ரிஜிஸ்டிரார் அவர்களுக்கு இதைக் கண்காணிக்கும்படி விவரங்கள் எழுதி இருக்கிறோம்.

---

[a] Printed as Appendix II on pages [illegible] to 342.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, பொதுவாக வெளியூரிலிருந்து வருகிற வியாபாரிகள் காஞ்சீபுரத்திற்கும் வருகிறார்கள், ஆரணிக்கும் வருகிறார்கள். அவர்கள் எந்தவிதமான வேற்றுமையும் காட்டுவதில்லை. ஆரணியில் மட்டும் இவ்வளவு மந்தம் இருக்கக் காரணம் என்ன? அவர்கள் தயாரிக்கும் சேலைகள் காஞ்சீபுரத்தில் தயாரிக்கும் சேலைகளோடு ஒத்த முறையில் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏன் மக்கள் வாங்கவில்லை என்பதற்குக் காரணம் என்னால் சொல்ல முடியாது. ஆரணியில் இத்தனை தேக்கம் ஏற்பட்ட காரணத்தினால், விற்பனை ஆகாத காரணத்தினால், அந்த வருஷக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விற்பனை ஆகியிருந்தால் நஷ்டம் இருந்திருக்காது. ஏன் விற்பனை ஆகவில்லை, ஏன் மக்கள் வாங்கவில்லை என்பதற்கு என்னால் காரணம் சொல்ல முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டில் மட்டும் இவ்வளவு நஷ்டமா? முன்னால் உள்ள வருஷங்களில், 1963-64-ல் 1962-63-ல் இந்தச் சங்கங்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்லலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பட்டு நெசவு நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஒரு புராதனமான கலை என்று கூடச் சொல்லலாம். இந்த சொஸைட்டிகளில் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் அதைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் யோசித்திருக்கிறது என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான் முன்பே சொன்னேன். டெபுடி ரிஜிஸ்ட்ராருக்கு சொஸைட்டிகளை நன்றாகக் கண்காணிக்கும்படி உத்தரவு போட்டிருக்கிறோம்.

தத்துவநேரித் திட்டம்

* 366 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்**: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நம்பியாற்றிலுள்ள புலிமான் குளம் அணைக்கட்டின்கீழ் புதிதாக தத்துவநேரித் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) & (இ) ஆம், இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) அவர்களின் புலனாய்வில் உள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஸார், உத்தேசமாக மதிப்பீடு எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: 2,86,000 ரூபாய்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: அதனால் பயன் அடையும் விஸ்தீர்ணத்தின் அளவு என்னவென்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: 272 ஏக்கர்.

Ayyankulam tank at Vedasandur

*367 Q.—SRI S. NANJUNDA ROW: Will the Hon. the Minister for Home be pleased to state whether any scheme for the restoration of the Ayyankulam tank at D. Gudalur in Vedasandur area, Madurai district is under the consideration of the Government?

கனம் திரு. பூ. கக்கன்: ரூ. 39,000 மதிப்பீட்டுச் செலவில் இந்த ஏரியைச் சிறப்பாகச் செப்பம் செய்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர் (உணவு உற்பத்தி) ஒப்புதல் அளித்துள்ளார். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக, இது மதுரை நிர்வாகப் பொறியாளருக்கு (உணவு உற்பத்தி) அனுப்பப்பட்டுள்ளது.

ஈரோடு தாலுகாவில் அணைக்கட்டுகள்

* 368 **கேள்வி.—திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்**: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஈரோடு தாலுகாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குரங்கன் பள்ளம், பெரும் பள்ளம் அணைகளில் வேலை துரிதமாக நடப்பதற்கு ஆவன செய்யப்படுமா? பாசனத்திற்குத் தண்ணீர் எப்பொழுது விடப்படும்?

கனம் திரு. பூ. கக்கன்: அந்த வேலைகள் நல்ல முறையில் நிறைவேறி வருகின்றன. 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் அவ்வேலைகள் முடிக்கப்பட்டுவிடும் என்று நம்பப்படுகிறது. அதன்பின் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படும்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு? அதனால் பயன்பெறப்போகிற நிலப் பரப்பின் அளவு என்ன? எந்த எந்த கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்? என்ற முழு விவரங்களைத் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. பூ. கக்கன்: எந்த எந்த கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் என்ற விவரம் என்னிடம் இல்லை. குரங்கன்பள்ளம் பொறுத்தவரையில் ரூ. 8,00,000. பெரும்பள்ளத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட ரூ. 7.90 லட்சம். அதனால் 6,045 ஏக்கர் பயன் அடையும்.

திரு. க. ர. நல்லசிவம்: தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களிலேயும் கீழ் பவானி நீர்க்கசிவுத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இரண்டு போகம்

பயிர் செய்யும்போது வரக்கூடிய தண்ணீர் குறைந்து போகும். இந்த 6,000 ஏக்கர்களில் சரி பாதிக்குத் தண்ணீர் கிடைக்காது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதற்காக மாற்று ஏற்பாடுகள் செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும் வரையில் கொடுக்கப்படும். அங்கு தண்ணீர் குறைந்தால் இங்கும் குறையும். அது நடைமுறையில் கண்ட உண்மைதானே.

டாக்டர் பி. சி. ராய் நினைவுச்சின்ன நிதி

* 369 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டாக்டர் பி. சி. ராய் நினைவுச்சின்ன நிதிக்கு தமிழ் நாட்டில் வசூலான தொகை எவ்வளவு?

(இ) மாவட்டவாரியாக எவ்வளவு வசூல் ஆயிற்று?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) டாக்டர் பி. சி. ராய் நினைவுச்சின்ன நிதிக்குத் தமிழ் நாட்டில் வசூலான மொத்தத் தொகை ரூ. 39,080.49. இதைத் தவிர மாநில அரசும் ரூ. 10,000-ம் கொடுத்திருக்கிறார்கள்.

(இ) விவரங்கள் பட்டியல்* சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்த வசூலில் நல்ல செல்வம் கொழிக்கும் மாவட்டம் என்று சொல்லுகிற கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றுமே இல்லை. வறுமை நிறைந்த வட ஆற்காடு மாவட்டத்தில் ரூ. 20,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் இவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறதா? இவ்வளவு ஏற்றத் தாழ்வு இருக்கக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்டத்திற்கு மாவட்டம் குறிப்பிட்ட தொகை வசூலிக்கவேண்டும் என்று எந்த வித உத்தரவும் இல்லை. டாக்டர் பி. ஸி. ராய் ஃபண்டுக்கு ஓரளவு பணம் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் நினைத்திருந்த போதிலும், குறிப்பிட்ட தொகை வசூலிக்கவேண்டும் என்று நிர்ணயிக்கவில்லை. வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் பெருந்தன்மையான முறையில் அதிகப்படியாக வசூலித்திருக்கிறார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் வசூலிக்கப்பட்ட ரூ. 20,000 டாக்டர் பி. ஸி. ராய் ஃபண்டுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி ஜவான்கள் நிதிக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? ஜவான்கள் நிதிக்குக் கொடுக்கப்பட்டது எவ்வளவு? டாக்டர் ராய் ஃபண்டுக்குக் கொடுக்கப்பட்டது எவ்வளவு?

* 344-347-ம் பக்கத்தில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குறிப்பிட்ட ஒரு நிதிக்கு என்று வசூல் செய்கிற பணம் குறிப்பிட்ட நிதிக்குச் செல்லுகிறதே யொழிய மற்றதற்கு டைவர்ட் செய்வது கிடையாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, 20-12-1965 வரையில் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதற்குப்பிறகு கூட வசூலித்தார்கள். பிறகு வசூலித்த தொகை எவ்வளவு என்று தெரிவிப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பிறகு வசூலித்த தொகை பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்த நிதிக்கு மாநில அளவில் ஏதாவது கமிட்டி போடப்பட்டதா? டாக்டர் பி. ஸி. ராய் நிதிக்கு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்விஸஸிடமிருந்து ரூ. 42 தான் வந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸஸ் இதை வசூல் செய்கிற அத்தாரிட்டி அல்ல. டைரக்டர் ஆஃப் ட்ரெஷரீஸ் அன்ட் அக்கவுண்ட்ஸை அட்மினிஸ்ட்ரேட்டராகப் போட்டு டாக்டர் பி. ஸி. ராய் அவார்ட்ஸ் ஃபண்ட் என்று அமைத்திருக்கிறோம். மற்றவர்கள் ஏதாவது டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்விஸஸுக்குக் கொடுப்பார்களானால் அதை டிராஃப்ட்டாகக் கொடுக்க கூறப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தனிப்பட்ட முறையில் வசூல் செய்யவில்லை.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் ரூ. 20,000 வசூலிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சரியான அக்கறை எடுத்துக் கொள்ளாததால் வசூலிக்க முடியவில்லையா? வேறு காரணம் இருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்டத்திற்கு மாவட்டம் அதிகப்படி தொகை வசூலிக்காததற்குக் காரணங்கள் ஒன்றும் இல்லை, பலரில் சிலர் ஊக்கம் காட்டி வசூலித்தார்களே தவிர வேறு எந்தவிதக் காரணமும் இல்லை என்று கூற விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : மாவட்டவாரியாகத் தரப்பட்டிருக்கிற இந்த வசூல் தொகையில் சென்னையில் மாத்திரம் ரூ. 42 வசூலாகியிருக்கிறது. சென்னையிலே உள்ளவர்கள் இடத்தில் அதற்கு ஊக்கம் காட்டப்படவில்லையா? என்ன காரணம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்னையிலே அரசாங்கமே ரூ. 10,000 கொடுத்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் இது வற்புறுத்தி வாங்கக்கூடிய பணம் அல்ல. யாருக்கெல்லாம் கொடுப்பதற்கு மனம் இருக்கிறதோ அவர்களெல்லாம் கொடுத்தார்கள். அதனால்தான் அது குறைவாக இருக்கிறது.

[21st March 1966

திரு. மு. கருணாநிதி : இது வற்புறுத்தப்பட்டு வாங்கப்பட்ட ...ணம் அல்ல என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ...ப்படியானால் வேறு நிதிகளெல்லாம் வற்புறுத்தி வாங்கக்கூடிய ...ணமா?

MR. SPEAKER : That question does not arise.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மற்றவைகளெல்லாம் ...டாயம் என்று அர்த்தமல்ல. பாதுகாப்புக்காக வேண்டு ...மன்றால், எல்லோரும் தேசத்திற்கு அவர்களுடைய பங்கைக் ...காடுக்கவேண்டும், நாட்டிலுள்ளவர்களுக்கு அதிலே பொறுப்பு ...ருக்கிறது என்ற நிலையிலே மற்ற நிதிகள் வசூலிக்கப்படுகின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கேள்விக்கு சுகாதார ...மைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள். டாக்டர் பி. ஸி. ராய் ...றந்த தேச பக்தர், விடுதலைப் போராட்டத்தில் பணியாற்றி ...ருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர் பெயரில் நிதி ...சூலிக்கப்படுகிறதா? அல்லது அவர் ஒரு சிறந்த வைத்தியர் ...ன்பதை நினைவு கொள்ளுவதற்கு சுகாதார இலாகாவின் மூலம் இந்த நிதி வசூலிக்கப்படுகிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இண்டியன் மெடிக்கல் கவுன்சில் இதற்காக ஒரு குழுவை அமைத்து, டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் ஒரு சிறந்த தேச பக்தர், சேர்ந்தார்போல் அவர் ஒரு நல்ல டாக்டர் என்ற முறையிலும், அவருடைய பெயரில் ஒரு நிதி திரட்டி, வரக்கூடிய பணத்தைக் கொண்டு பல துறைகளிலே பல மாநிலங்களிலே பல மருத்துவக் கல்லூரிகளிலே பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு அவார்ட் கொடுக்கவேண்டுமென்ற காரணத்திற்காக இது ஏற்படுத்தப்பட்டது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் ஒரு தொகை 'இயர் மார்க்' செய்து ஒரு அவார்டு கொடுக்க வேண்டும் என்ற நிலையில், நம்முடைய மருத்துவக் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு முதன்மையான பரிசு கிடைப்பதன் மூலம், நம்முடைய ராஜ்யத்திற்கும் இதில் பங்கு உண்டு என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன்.

Development of Minor Ports

* 370 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the particulars and details of development of Minor Ports proposed to be carried out during 1966, in the State, and the expenditure estimated therefor ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A statement [a] is placed on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்ட விவரப்படி 1966-67-ல் என்ன வேலைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[a] Printed as Appendix IV on pages 345–347.

21st March 1966]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிற்குள் குறிப்பிட்டிருக்கக்கூடிய எல்லாச் சிறு துறைமுகங்களுடைய வேலைகளையும் அரசாங்கம் முடித்து விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்பொழுது 'நியூ ஸ்கீம்ஸ்' ஆவன . . .

New Schemes are—Acquiring various items of floating crafts for the Cuddalore and Nagapattinam Ports, laying mooring buoys at Kulasekarapattinam Port, preliminary works for the development of a Minor Port at Ennore and deepening of existing boat channel, extending northern stone groyne and construction of wharf and provision of additional tug for Tuticorin Port.

அதே மாதிரி 'காரி ஓவர் ஸ்கீம் ஸும்' அதிலே இருக்கிறது.

'In the Fourth Five-Year Plan, the Government of Madras have proposed a provision of Rs. 6.09 crores for the development of Minor Ports in the State. It is proposed to develop Ennore and Veppalodai as Minor Ports. It is proposed to develop Punnaikayal into an Oil Port provided an Oil Refinery is sited at Tuticorin.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த அறிக்கையில் பார்க்கிறபொழுது உதாரணமாக குலசேகரப்பட்டினம் மைனர் போர்ட்டில் நங்கூர வசதிக்காக இந்த ஆண்டு ஒரு லட்ச ரூபாய் செலவு செய்ய இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் அமைச்சர் அவர்கள் இப்பொழுது வாசித்த குறிப்புப்படி இருக்கக்கூடிய வேலைகளையெல்லாம் குறிப்பிட்ட மைனர் போர்ட்டுகளில் அரசாங்கம் மேற்கொண்டு நடத்துவதற்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஒவ்வொன்றுக்கான தனிப்பட்ட விவரம் வேண்டும் என்று சொன்னால், தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. இர. பொன்னப்ப நாடார் : குளச்சல் துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கு நடப்பு ஆண்டில் ஏதாவது வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் படித்துச் சொன்ன அளவுதான். குளச்சலைப் பொறுத்து வேறு தனியாக ஒன்றுமில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி : நாகப்பட்டினம் துறைமுகத்தில் செய்யப்படும் வேலையைப்பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு நிலையமும், இழு படகு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கப்பல்கள் துறைமுகத்திற்கு இரண்டு மைல் தூரத்திலே நிற்கின்ற காரணத்தினால், கப்பலிலிருந்து தரையிலே இறங்குவதற்கு வேண்டிய வசதி செய்யப்படுமா ?

[21st March 1966

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :

The present passenger sheds are open type with low A.C. sheets roofing. These sheds are totally inadequate to meet the requirements of the passengers now using the port. In order to provide sufficient accommodation, with necessary amenities, an estimate for Rs. 8 lakhs has been sanctioned for the construction of a passenger terminal station.

திரு. சி. பொன்னுசாமி : சிறிய துறைமுகங்களின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வந்திருக்கும் புன்னக்காயலில் நான்காவது திட்ட கால ஆரம்பத்தில், ஏப்ரல் மாதத்தில் வேலைகள் ஆரம்பிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : 'Provided an oil refinery is sited at Tuticorin.' என்று சொன்னேன். அது உறுதிப்படுகிறபொழுது புன்னக்காயலில் வேலை ஆரம்பிக்கப் படும்.

1964-65 மதிப்பீட்டுக்குழு அறிக்கை

* 371 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-65 மதிப்பீட்டுக்குழு அறிக்கையில் கிராம சகாயக்குகள் சம்பந்தமாகவும், உணவு உற்பத்தி முயற்சியில் பஞ்சாயத்துக்கள் நடந்துகொள்ளுகிற விதங்களைப்பற்றியும் கண்டு அறிவித்துள்ள குறைபாடுகளைப் போக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேவையான விவரங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது.

விழிப்புக் குழு

* 372 கேள்வி.—**திரு. செ. மாதவன் :**
திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு உஷார் கமிஷன் ஏதேனும் அமைக்கப் பட்டுள்ளதா?

(இ) இதன் விவரங்கள் யாவை?

(உ) அதற்கு அதிகப்படியான செலவு எவ்வளவு?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) பொதுவாக, அரசாங்கப் பணிகளில் லஞ்சப் பழக்கத்தைத் தடுப்பது பற்றிய பெரிய நிர்வாகச் சிக்கல் குறித்தும், தனித்தனி லஞ்ச வழக்குகளில் எவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்தும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதே இக்கமிஷனின் முக்கிய பணியாகும்.

(உ) ஆண்டொன்றுக்கு நடைமுறை செலவு ரூ. 57,000.

21st March 1966]

திரு. செ. மாதவன் : ஏற்கனவே உஷார் கமிஷன் இருக்கிறது, லஞ்சத்தடுப்பு இலாகா இருக்கிறது. இப்பொழுது ஏற்படுத்தப் பட்டிருக்கிற உஷார் கமிஷன் அரசாங்க அலுவலர்களைப்பற்றியும் விசாரிக்குமா, அல்லது பொதுவாக நாட்டிலே உள்ள ஊழல்களைப் பற்றி பரிசீலிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏற்கனவே உஷார் கமிஷன் இல்லை. முதலில் லஞ்சத்தடுப்பு இலாகா இருந்தது. அந்தப் பெயர் மாற்றப்பட்டு உஷார் இலாகா நெறியாளர் என்ற பெயர் வந்தது. அதற்குப் பிறகு அது உஷார் கமிஷனாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க இலாகாக்களிலுள்ள லஞ்ச ஊழல்கள் மட்டுமல்ல, வேறு பொது ஸ்தாபனங்களில் உள்ளது பற்றிக் கூட, அதாவது அரசாங்கம் சம்பந்தப்பட்ட பொது ஸ்தாபனங்களில் உள்ளதைப்பற்றிக் கூட அது விசாரிக்கும்.

திரு. செ. மாதவன் : அரசாங்க அதிகாரியாக இருந்து பணியாற்றிய ஒருவரே இதற்குத் தலைவராக போடப்பட்டிருக்கிறார். அரசாங்க சிப்பந்திகள் சம்பந்தமாக உள்ள ஊழல்களைப் பரிசீலிப்பதற்கு சுதந்திர உரிமை (இண்டிபெண்டண்ட் ரைட்) கொண்ட ஒரு நீதிபதியை நியமிக்காமல் அரசாங்கத்தில் பணியாற்றிய ஒரு அதிகாரியையே நியமித்ததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்து பணியாற்றியவர் இவர். ஆகையினால் அவரே பொருத்தமானவர் என்று அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த உஷார் கமிஷன் பொது வாழ்க்கையில் பதவி வகிப்பவர்கள் ஏதாவது குற்றங்கள் செய்யாமல் இருப்பதற்கு விழிப்புடன் இருந்து கவனிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொது வாழ்க்கையைப்பற்றி இது கவனிக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கமிஷனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரங்கள் என்ன? சில அதிகாரிகள் மீது புகார் வந்தால், இது தானாகவே பரிசீலனை செய்ய முடியுமா அல்லது அந்தத் துறை சம்பந்தப்பட்ட அரசாங்க காரியதரிசி அல்லது தலைமை அதிகாரியைக் கலந்துதான் பரிசீலனை செய்ய முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The State Vigilance Commission will have jurisdiction and powers in respect of matters to which the executive power of the State extends—

(i) to undertake an enquiry into any transaction in which a public servant is suspected or alleged to have acted for improper purpose or in a corrupt manner.

(ii) to cause an enquiry or investigation to be made on any complaint that a public servant has exercised or refrained from exercising his powers for improper or corrupt purposes.

(iii) to collect such information or statistics as may be necessary.

[21st March 1966

(iv) to call for any information from any department or undertaking of the Government or from any public servant, on matters within its judisdiction including information on the action taken on the recommendations.

9-00 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஐயா, இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகு எத்தனை புகார்கள் வந்தன. எத்தனை வழக்குகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உஷார் கமிஷன் நியமிக்கப்படுவதற்கு முன்பே, புகார்கள் வந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பின்னும் புகார்கள் வந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஐயா, உஷார் கமிஷனைச் சேர்ந்தவர்கள் பணத்தைக் கொடுக்கச் சொல்லி, கொடுக்கும்போதுதான் பிடிக்கிறார்கள் என்கிற புகார் வருகிறதே. வேறு புகார்களை அவர்கள் எடுப்பதில்லை என்றும் கூறப்படுகிறதே. பணம் கொடுக்க சொல்லித்தான் பிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புகார்கள் வருகிறது என்று நடவடிக்கை எடுக்க முடியாது. வரும் புகார்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளவும் முடியாது. லஞ்ச ஊழல்கள் இருக்கின்றன என்றால், அதற்கு ஆதாரம் வேண்டும். எந்த வகைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த வகையில் எடுக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: இந்தக் கமிஷனுக்கு புகார் செய்து கொள்வதற்கு ஏதாவது விதிகள் இருக்கின்றனவா? அப்படியிருந்தால் அவை எந்த வகையில் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கென்று தனியாக விதிகள் இல்லை. புகார் செய்கிறவர்கள் அரசாங்கத்திற்கு எழுதினாலும் அது அந்தக் கமிஷனுக்கு அனுப்பப்படுகிறது. புகார் என்று இல்லாமலேயே கூட கமிஷன் விசாரணை செய்கிறது. சர்க்காருக்கும் எழுதலாம். கமிஷன் நெறியாளருக்கும் எழுதலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு கோட் ஆஃப் காண்டக்ட் உருவாக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா, ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி முன்பே சொல்லியிருக்கிறேன். கனம் சபாநாயகர், அந்த மன்றத்தின் தலைவர், மற்ற எல்லா எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆக எல்லோரும் சேர்ந்து எவ்வாறு கோட் ஆஃப் காண்டக்ட் நிர்ணயிப்பது என்பதுபற்றி பூர்வாங்கமாக யோசித்தார்கள். அந்த மன்றத் தலைவர் அவர்களும், கனம் சபாநாயகர் அவர்களும் பூர்வாங்கமாக எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி ஒரு நகல் தயாரிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டது, அந்த நிலையில் இருக்கிறது.

21st March 1966]

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தக் கமிஷனுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் நேரிடையாக எழுதி அனுப்பலாமா அல்லது அரசாங்கத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நேராகவே கமிஷனுக்கு எழுதலாம். 'கமிஷன்' என்றும் எழுதலாம், 'டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ்' என்றும் எழுதலாம்.

திரு. செ. மாதவன்: இந்தக் கமிஷனுக்கு புகார் அனுப்பியவர்கள் மீதே வழக்குகள் போடுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படி புகார் அனுப்பியவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் கொடுப்பார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித் தகவல் இல்லை.

MR. SPEAKER: He is subject to the common law. Because he wrote to the Commission, he cannot escape the legal liability.

இலஞ்சக் குற்றம்

*373 **கேள்வி—திரு. பி. முருகையன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் லஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட அதிகாரிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் எத்தனை பேர்?

(இ) அதில் அரசாங்க பதிவு செய்யப்பட்டவர்கள், படாதவர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) கைது செய்யப்பட்ட 134 பேர்களில் ஹரிஜன-ஆதிவாசி வகுப்புகளைச் சார்ந்தோர் அறுவர்.

(இ) அரசிதழ் பதிவு பெற்ற அரசாங்க அதிகாரி—ஒருவர். அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க அதிகாரிகள்—ஐவர்.

திரு. செ. மாதவன்: இந்த நபர்கள் மீது என்ன லஞ்சக் குற்றச்சாட்டு? என்ன முடிவு எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தத் தகவல்கள் என்னிடம் இல்லை.

Long-term Projects

*374 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Union Government has advised the State Government to keep building construction to the minimum and to postpone long-term projects unless they help to attain self-sufficiency in food or to meet the defence needs; and

(b) if so, the details thereof?

[21st March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Planning Commission has advised, *inter alia*, that expenditure on construction works and on projects requiring use of scarce materials should be kept to the minimum. Special emphasis has to be given to quick yielding schemes for raising agricultural and industrial production. All efforts should be made to make the maximum use of existing capacity or potential created in all sectors of the economy. Programme which would augment production or yield benefits only after a period of years have to be slowed down or discontinued especially if they are dependent on imported equipment.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டடப் பணியிலே குறைந்த அளவே செய்ய வேண்டும் என்பதை வன்மையாக மேற்கொண்டு இருக்கிறவர்கள், கனம் சுகாதார அமைச்சர் ஒருவர் தான் என்று தோன்றும் அளவு அவர்கள் மருத்துவத் துறைக் கட்டடங்கள் பற்றிச் சொல்லும்போதெல்லாம், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தத் துறைக்காவது விலக்கு அளித்து மருத்துவ மனைகள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினர் வரவு செலவு திட்டத்தில் கவனித்திருக்கலாம், மருத்துவ மனைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை.

Review of Projects and Schemes

* 375 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to review such of the proposed projects and schemes which cannot be executed without imported equipment; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No. Only schemes for which reasonably firm arrangements have been made for foreign exchange have been taken up for implementation in the first year of the State's Fourth Plan.

(b) Does not arise.

Technical posts

* 376 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the list of technical posts in the various departments of the Government the incumbents of which will be considered for re-employment after superannuation up to the age of 58; and

(b) the underlying basis

21st March 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) A list* of posts so far declared as technical is placed on the Table of the House.

(b) The basis for declaring a post as technical is whether the post needs to be handled by persons with special qualifications training, experience, etc.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்க ஊழியர்கள் வேலையில் இருக்கும் வயது மாவட்ட நீதிபதி விஷயத்தில் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல, மாவட்ட முன்சீப், சப்-ஜட்ஜ் இவர்களுடைய வயதும் உயர்த்தப்படுமா ?

கனம் திரு. எம் பக்தவத்சலம் : மாவட்ட நீதிபதிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ஐ.ஏ.எஸ். போன்றவர்களுடைய சலுகைகள் கொடுக்க வேண்டும் என்கிற முடிவு இருக்கிறது. மற்றவர்களுக்கு, பொதுவாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உயர்த்திக் கொடுத்தால், அவர்களுக்கும் கொடுக்கப்படும். ஆனால், அம்மாதிரி கொடுக்கும் ஒரு முடிவு இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாவட்ட நீதிபதிக்கு நேர்முக ஆளெடுப்பில் உத்தியோக உயர்வு ஜாபிதாவில் சப்-ஜட்ஜிலிருந்து வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படியிருக்கும் போது ஒருவருக்கு மட்டும் வயதை உயர்த்திக் கொடுத்தால், உத்தியோக உயர்வுக்கான வாய்ப்பு குறைக்கப்படாதா ? ஆகவே, அரசாங்கம் அதைப் பற்றி மறுபரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது உயர்நீதிமன்ற நீதிபதிகளுடைய வயது 60-லிருந்து 62 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக விசேஷமாக பாராளுமன்றத்தில் ஒரு சட்டமும் செய்தார்கள். மாவட்ட நீதிபதிகளுக்கு உயர்த்தியிருக்கிறது என்றால், அது ஐ.ஏ.எஸ். காரர்கள் போன்று கொடுக்க வேண்டிய நிமித்தம் ஏற்பட்டது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

REPATRIATION OF CEYLON NATIONALS OF INDIAN ORIGIN.

* **திரு. செ. மாதவன்** : கனம் தலைவர் அவர்களே, இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினர் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை எப்படி நடத்த வேண்டும், அவர்களை எப்படி ரிபாட்ரியேட் செய்ய வேண்டும் என்று இந்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கிறது. அவர்கள் என்ன முறையில் அனுப்பப்படவேண்டும், என்னென்ன வசதிகள் கொடுக்கவேண்டும் என்று பரிசீலனை செய்வது முதலிய அந்த திட்டத்தின் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த உடன்பாட்டிற்கு மாறாக, அண்மையில் ஒரு செய்தி வந்திருக்

* Printed as Appendix V on page 348–350.

கிறது. இலங்கை காவல்கைதி முகாமில் இந்திய வம்சாவளியினர் 'ஸ்டேட்லெஸ் பெர்ஸன்ஸ்' அடிக்கப்பட்டு, மிருகங்கள் போல அடைக்கப்பட்டு, ஒரு துவாரம் போட்டு. . .

MR. SPEAKER : Let not the hon. Member go into all those details. It is enough if he says they are ill-treated.

திரு. செ. மாதவன் : சமீபத்திலே ஒருவர் அடிக்கப்பட்டு உயிர் இழந்திருக்கிறார். அவர் தமிழ் நாட்டு மண்ணிலே பிறந்தவர். இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி. இதிலே இந்த மாநில அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறதா இல்லையா. இந்தத் திட்டம் வகுக்கும்போது இந்த அரசாங்கமும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. ஆகவே, அந்த வகையில் இந்த அரசாங்கத்திற்கும் பங்கு இருக்கிறது. வெளி நாட்டில் தமிழர், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்கிற முறையிலும், இந்த அரசாங்கத்திற்கு மத்திய சர்க்காரோடு பேசுவதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும், அந்த முறையில் இந்த அரசாங்கத்திற்கு ரெஸ்பான்ஸிபிலிடி இருக்கிறது என்கிற காரணத்தினால், இதை விவாதிக்க, இந்த சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இலங்கையில் வாழும் தமிழ் மக்களோ, இந்திய மக்களோ அல்லது பிரஜாவுரிமை இல்லாத மக்களோ, அவர்களிடத்தில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இல்லாமல் இல்லை. அது மட்டுமல்ல. அவர்கள் பிரச்னையைப்பற்றி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளாமல் இல்லை. ஆனால், இந்த அரசாங்கமே இதை எடுத்துக்கொண்டு, இந்த மன்றத்திலே விவாதிப்பது முறையல்ல என்று தான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பத்திரிகையிலே போட்ட செய்தியை வைத்துக்கொண்டு கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இது விவாதிக்கப்பட வேண்டிய ஸ்தலம் பாராளுமன்றம். இது மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிற விஷயம். ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், இதிலே என்ன என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறது. மேலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் மத்திய ஆட்சியுடன் கலந்து வேறு என்ன கவனம் செலுத்த வேண்டுமோ, அதைச் செலுத்தும். எப்படியும் இது ஒத்திவைப்பு பிரேரபணைக்கு உரியது அல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த ஒத்திவைப்புப் பிரேரபணை குறித்து சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். முதல் அமைச்சர் அவர்கள், "இது மத்திய சர்க்காருக்கு உரியது, ஆகவே அங்கே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று" என்று குறிப்பிட்டார்கள். அது, சட்ட ரீதியாக, அரசியல் நிலை ரீதியாக, அங்கே விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்றாலும், இங்கு அது விவாதிக்கப்படுவதன்

மூலம், மத்திய சர்க்காரினுடைய கவனத்தை அது ஈர்க்கக்கூடும் என்கிற அந்த நல்ல காரணமாகத்தான் இங்கு அதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஏனென்றால், சாமிநாதன் என்கிற ஒரு தமிழ் மகன் அங்கு காவல் துறையினரால் காவலில் வைக்கப்பட்டிருக்கிற நேரத்திலே அடிக்கப்பட்டு, வதைக்கப்பட்டு மரணம் அடைந்திருக்கிறார். இது தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளையும் சார்ந்த தமிழர்களுடைய நெஞ்சத்தையே உலுக்குகின்ற செய்தியாகும். ஒரு தமிழ் மகனுக்கு ஏற்பட்ட கொடுமை இது. மேலும் இப்படிப்பட்ட கொடுமைகள் நிகழா வண்ணம் பாதுகாப்பதற்கு அனுசரணையாக இங்கு விவாதிப்பது சாலச் சிறந்த ஒன்றாக இருக்கும். அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, இது பாராளுமன்றத்திலே விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னை என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கவனத்தை ஈர்க்கவும் மத்திய சர்க்காரினுடைய கவனத்தை ஈர்க்கவும் இது மிகப் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால் இதை இங்கே விவாதிக்கத் தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னை இந்தச் சபையிலே எழுப்பப்பட்டு விட்ட பிறகு, இந்தச் சபையிலே இது குறித்த விவாதம் நிராகரிக்கப்பட்டது என்ற செய்தி வருமானால், அது அந்தப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நல்ல பயனை அளிக்காது. ஆகவே, "இதை நிராகரிக்கிறேன்" என்று கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு கூறாமல், என்னுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். என்னுடைய யோசனை என்னவென்றால், கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையைக் குறித்து உடனடியாக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, அதனுடைய விவரங்களையாவது, ஒரு ஸ்டேட்மென்ட் என்ற வகையில், இந்தச் சபைக்குக் கொடுக்கலாம். அந்த ஸ்டேட்மென்டை இந்தச் சபையில் இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக வைப்பது நல்லது. அதன் பிறகு, 'நானபிஷியல் ரிஸல்யூஷன்' மூலமாகவோ, அல்லது வேறு எந்த முறையிலோ விவாதித்து ஏதாவது முடிவு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் சபாநாயகர் : சட்ட ரீதியாக இந்தச் சபையிலே அது விவாதிக்கப்பட முடியாது எனக் கருதுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : Technically it is a matter relating to a foreign country. ஆகவே, பாலிமென்டில் பேசவேண்டியது, அதுபற்றி இங்கு விவாதிக்கக் கூடாது என்று சொல்லலாம். ஆனால், நிலைமையைக் கவனிக்கவேண்டும். நம் நாட்டில், மக்கள் பல மொழி பேசக்கூடியவர்கள், பல மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இவ்வளவு பேர்களுடைய நலன்களிலும் பார்லிமென்டோ மத்திய அரசாங்கமோ சம கவனம் செலுத்த முடியுமா என்பதையும் யோசிக்கவேண்டும். பஞ்சாப் பிரச்னை,

வங்காளப் பிரச்னை, இப்படிப்பட்ட பிரச்னைகளிலும், கலைகளிலும் அவர்கள் இருக்கும் இந்தச் சமயத்தில் நம்முடைய ராஜ்யத்திலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்தி நினைவுறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இலங்கை சர்க்காரைப்பற்றி நாம் இங்கே விவாதிக்க வேண்டாம். அந்த மக்கள் இன்னும் தமிழ் நாட்டுப் பிரஜைகளாகத்தான் இருக்கக்கூடியவர்கள். ஆகவே, இந்தச் சபையில் விவாதிப்பது ஓரளவு பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி: நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, இந்த விவாதம் நிராகரிக்கப்பட்டது என்ற நிலை இல்லாமல், முதல் அமைச்சர் அவர்களே "இதை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்வேன்" என்கிற அளவுக்கு இங்கு இந்தச் சபைக்கு உறுதி அளிப்பார்களானால், எங்கள் கட்சிச் சார்பில் தரப்பட்டிருக்கிற இந்தப் பிரேரபணையை நாங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் தயாராயிருக்கிறோம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புதிதாக உறுதி அளிக்க வேண்டும் என்பதில்லை. முன்னமேயே அதைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

கனம் சபாநாயகர்: இந்தச் சபையில் இது நிராகரிக்கப்படுகிறது என்றால், இந்த விஷயத்தில் இந்தச் சபைக்கு அக்கறை இல்லை என்று அர்த்தம் அல்ல. இன்றைக்கிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டப்படி, இராஜ்ய சட்டசபைகளும் பார்லிமெண்டும் என்ன என்ன விஷயங்களை விவாதிக்கலாம் என்ற வரையறைகள் இருக்கின்றன. அவற்றின்படி தான் விவாதிக்க வேண்டும். இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது இன்னொரு நாட்டினுடைய பிரச்னையாகவும் இருப்பதால், அதைப்பற்றி நாம் இங்கு விவாதிப்பதற்கில்லை. இப்பொழுது இங்கே இந்த விஷயத்தை நாம் விவாதிக்கவேண்டுமென்றால், இன்னொரு நாட்டைப் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்கலாம். என்ன நடக்கிறது என்பதையும் இங்கே விரிவாகப் பேசக்கூடிய நிலைமை ஏற்படலாம். அந்தப் பொறுப்பைப் பார்லிமெண்ட்டில் உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு அவசரப் பிரேரபணை இங்கு கொண்டுவருவதென்றால், அது குறித்த விஷயத்தில் இந்த அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருந்து, அந்தப் பொறுப்பிலிருந்து இந்த அரசாங்கம் தவறிவிட்டால்தான், கொண்டுவர வேண்டும். அம்மாதிரி ஒன்றும் இல்லை என்று தான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் முதலில் தெரிவித்தபடி, இது விஷயத்தில் அப்போதைக்கப்போது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. இம்மாதிரி ஒரு சம்பவம் நடக்கிறது என்றால், மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து, நடவடிக்கை அவர்கள் எடுக்கிறார்களா என்பதில் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டுவருகிறது. புதிதாக உறுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசாங்கம் கவனம்

செலுத்தாமல் இல்லை. தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இது அவசரப் பிரேரபணைக்குரியதல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: குறிப்பிட்ட பிரச்னை மீது தகவல் தான் என்ன என்று இந்தச் சபை அறிந்துகொள்வதற்காக . . .

கனம் சபாநாயகர்: தகவல் வேண்டும் என்று கேட்பதும், 'அட்ஜார்ன்மெண்ட் மோஷனு'க்கு 'கன்ஸென்ட்' வேண்டும் என்று கோருவதும் ஒன்று தானா? அவசரப் பிரேரபணையிலே இதை எடுத்துக் கொள்ள முடியாது. வேறு வழியிலே ஏதாவது எடுத்துக் கொள்ள முடியுமானால் எடுத்துக் கொள்ளலாம். அவசரப் பிரேரபணையிலே இதை எடுத்துக் கொள்ள முடியாது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு நாங்கள் தலைவணங்குகிறோம். ஆனால், நாங்கள் இவ்வளவு எடுத்துக்கூறியும், முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு உறுதி அளிக்க இயலாது. . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 'ஸெஷன்'-இல் இதுவரைக்கும் வெளிநடப்பு என்பது இல்லை. கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எதற்காக இப்பொழுது வெளிநடப்பு செய்யவேண்டும்? ஆனால், அதெல்லாம் அவர்கள் பிரியத்தைப் பொறுத்தது. நான் உறுதியளிக்கவில்லை என்று சொல்லவில்லை. என்ன என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டிருக்கிறோம், மேலும் செய்வோம் என்று சொன்னேன். அப்படிச் சொல்லியிருந்தும், அவர்கள் ஏதோ செய்வதற்கு என் பேரில் பழி சுமத்த வேண்டாம். உட்கார்ந்திருப்பதும், வெளியே போவதும் அவரவர்கள் பிரியம். அவர்கள் ஏதோ செய்வதற்காக வீண் பழியை முதல் அமைச்சர் மீது சுமத்த வேண்டாம். பத்திரிகையில் வரும், வெளியே போய்ப் பேசலாம் என்பதற்காகப் பேசுவது முறையல்ல என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

III.—PRIVILEGE MATTER.

(1) ALLEGED DISTORTED REPORTING IN "THE HINDU"

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, 'ஹிந்து' போன்ற ஒரு பத்திரிகையின்மீது இம்மாதிரி இந்தச் சபை முன்பு ஒரு உரிமைப் பிரச்னை கொண்டுவர வேண்டியது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இருப்பினும், பிரச்னையினுடைய முக்கியத்துவத்தை முன்னிட்டு நான் இதை இந்தச் சபை முன் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

தொழில் மானியக் கோரிக்கை மீது விவாதம் நடந்த அந்த சமயத்தில், தாங்கள் இந்தச் சபையிலே இல்லாவிட்டாலும் கூட, நிகழ்ச்சிகளைப்பற்றிப் பின்னால் பார்த்திருப்பீர்கள், தங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். கனம் [illegible] திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள், சில பத்திரிகைகளில் இருக்கும் தகவல்களைச் சொல்லி, அவைகளைப்பற்றிப் பேச

ஆரம்பித்தார்கள். அப்பொழுது இங்கு கனம் உதவித் தலைவர் அவர்கள் இருந்தார்கள். அவர்களே, "அதைப் பத்திரிகையிலிருந்து படிக்கக் கூடாது" என்று குறுக்கிட்டார்கள். ஆனால், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் எழுந்து, சிறிது பதட்டத்துடனே. . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மற்ற கனம் அங்கத்தினர் யாரும் பதட்டத்துடன் பேசவில்லை போலும்.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் நடந்ததைச் சொல்லலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தொழில் அமைச்சர் அவர்கள், வெகு நிதானத்துடன், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு தான். . .

கனம் சபாநாயகர்: 'பதட்டம்' என்றும் குறிப்பிட வேண்டாம். 'நிதானம்' என்றும் குறிப்பிட வேண்டாம். அன்று என்ன நடந்தது என்று சொன்னால் போதும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அவர் இதை உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று வற்புறுத்தினார். உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டிய பிரச்னையா, இல்லையா என்பதைக் கனம் சபாநாயகர் பார்த்துச் சொல்லவேண்டியது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம். அந்த விவாதம் அதோடு இருந்தது. பிறகு, நான் பேசுகிறபோதும், "அதை எந்த விசாரணைக்கு வேண்டுமானாலும் விட நான் பொறுப்பேற்கத் தயாராயிருக்கிறேன்" என்றும் சொன்னேன். கடைசியாகப் பேசிய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கனம் அங்கத்தினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்களும், "அமைச்சரவர்கள் விரும்புகிறபடியே இதனை உரிமை கமிட்டிக்கு வேண்டுமானாலும் விடலாம்" என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள். சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லியிருக்கிறார்கள்.

"இந்தியன் எக்ஸ்ப்ரஸ்" பத்திரிகை ரிபோர்ட்டரும் அதே நேரத்தில் குறிப்பு எடுத்திருக்கிறார். அவர்கள் கிட்டத்தட்ட சரியாகப் பிரசுரித்திருக்கிறார்கள். மற்றும் சில பத்திரிகைகள் நான் பேசியதைப் பற்றியும், திரு. இராம அரங்கண்ணல் பேசியதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்துப் பத்திரிகையில் மட்டும் 'மினிஸ்டர்ஸ் சாலென்ஜ்' என்பதாக ஹெட்லைன் போட்டார்கள். உள்ளே அந்தச் சவாலை நான் ஏற்றுக்கொண்டதைப் பற்றியோ, திரு. இராம. அரங்கண்ணல் ஏற்றுக்கொண்டதைப்பற்றியோ, போடவில்லை. "எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலும் 'Gutter charges' says Minister என்பதாக மந்திரியினுடைய சவாலை தலைப்பில் போட்டிருக்கிறார்கள் என்றாலும் எதிர்க்கட்சியினருக்கும் ஓரளவு நியாயம் வழங்கியிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் சொன்ன தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் "இந்து"ப் பத்திரிகையில் ஒருதலைபட்சமாகவே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியினருக்கு ஒரு சவால் கொடுத்திருக்கிறார்கள். அதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பின்தயங்கவில்லை. எதிர்க்கட்சியினர் ஏற்றுக்கொண்டதை அமைச்சர் அவர்கள் தான் ஏற்றுக்கொள்ளத் தயங்கி இருக்கிறார்கள். காரணம் நான் சொன்னபடி உரிமைப் பிரச்சினைக்கு விடுவது பற்றி நான் அன்றைக்கு இறுதியில் சுட்டிக் காட்டியும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைக்கே கூட இதையே ஒரு சந்தர்ப்பமாக அவர் ஏற்றுக்கொண்டு உரிமைப் பிரச்னைக்கு விடுவதற்கு ஏற்றுக்கொள்ளலாம். நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதெல்லாம் அன்றைக்கு 'இந்தச் சபையில் குறிப்பிடப்பட்ட ஒரு முக்கியமான விஷயம் விடப்பட்டிருக்கிறது. இந்தச் சபையில் நாங்கள் குறிப்பிடுகிற எல்லா விஷயங்களும் அப்படியே பிரசுரிக்கப்படவேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை. அவர்களுக்கு ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையை ஒட்டித்தான் விட்டிருப்பார்கள் என்பது என் அபிப்பிராயம். ஆகையால் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பு கனம் சபாநாயகருக்கு இருக்கிறது. அன்றைக்கு அமைச்சர் அவர்கள் விட்ட சவாலை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதைக்கூட குறிப்பிடாத காரணத்தினால் பொதுமக்களிடத்தில் எதிர்க் கட்சியினர் பொறுப்பற்ற முறையில் குற்றஞ்சாட்டுவது போன்ற ஒரு ஐயப்பாடு எழக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகையால், இந்தச் சபையிலே இந்தப் பிரச்னைகளை எழுப்பிய எதிர்க்கட்சியினர்களுக்கும் நியாயம் வழங்கியதாகவும் ஆகாது. இப்படி டிஸ்டார்டெட்டாக பிரசுரித்திருக்கிற காரணத்தினால் பத்திரிகையில் இருக்கக்கூடிய பெரிய முதலாளிகள் கிட்டத்தட்ட அமைச்சர் அவர்களுடைய கருத்துக்குச் சாதகமாக இருக்கலாம் என்ற அனுமானத்தினால் அவர்கள் வேண்டுமென்றே இதை விட்டிருக்கிறார்கள் என்றும் ஐயப்பட இடமிருக்கிறது. காரணம், இந்தப் பிரச்னையை நான் இங்கே எழுப்பியவுடனேயே—தவறாகப் பிரசுரித்திருந்தார்கள் என்றால் ஒரு திருத்தம்—அமைச்சர் கொடுத்த சவாலை எதிர்க்கட்சியினர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்பதைப்பற்றி பிரிசுரித்திருக்கலாம். கடந்த இரண்டு மூன்று தினங்களில் அதற்குச் சந்தர்ப்பம் இருந்தும் அவர்கள் எத்தகைய திருத்தத்தையும் பிரசுரிக்கவில்லை. ஆகவே தான், வேண்டுமென்றே—சப்ரஷன் ஆப் பாக்ட்ஸ்—உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது. அது இந்தச் சபையின் உரிமை சம்பந்தப்பட்டது. இந்தச் சபையின் நிகழ்ச்சிகளை திரிபு இல்லாமல், திரித்துக் கூறாமல், உண்மைக்கு மாறுபடாமல் அப்படியே கொடுக்கவேண்டும், எல்லாவற்றையும் கொடுக்கவேண்டும் என்பது இல்லை. உண்மையான கருத்துக்களைப் பிரசுரிக்க வேண்டிய பொறுப்பு பிரசுரகர்த்தர்களுக்கு உண்டு. 'இந்து'ப் பத்திரிகை துரதிருஷ்டவசமாக அந்தக் கடமையில் இருந்து தவறியிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

MR. SPEAKER: Let the hon. Member Sri Kalyanasundaram see the report in the 'Indian Express'. It is said therein :—

"Mr. Kalyanasundaram observed that newspapers might publish right or wrong things, but it was for the Minister to clear himself. He would suggest a five-member committee of the House to go into these as well as other defects . . . ."

[Mr. Speaker] [21st March 1966

இது கனம் அங்கத்தினர் சாலென்ஜை ஏற்றுக்கொண்டதாக எப்படி ஆகும்?

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் சொன்னதை அப்படியே போடாமல் இருக்கலாம். என்னுடைய கருத்து அங்கே இருக்கிறது.

கனம் சபாநாயகர் : எக்ஸ்பிரஸ் பேப்பரில் கனம் அங்கத்தினர் சாலென்ஜை ஏற்றுக்கொண்டதாக எங்கே இருக்கிறது?

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் சொன்னது அப்படியே இருப்பதாகச் சொல்லவில்லை. நான் சொன்னதன் சிக்னிபிகன்ஸ் இருக்கிறது.

கனம் சபாநாயகர் : எப்படி அதிலே இருக்கிறது?

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்போது எக்ஸ்பிரஸ் பற்றியும் உரிமைக் கமிட்டிக்குவிடவேண்டுமென்று கனம் சபாநாயகர் குறிப்பிடுகிறாரா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

கனம் சபாநாயகர் : நான் அறிய விரும்புவது எக்ஸ்பிரஸில்—கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல சாலென்ஜை ஏற்றுக் கொண்டதாக எங்கே இருக்கிறது என்பதுதான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் குறிப்பிட்டதை அப்படியே என் பெயரில் போடவேண்டுமென்ற குறுகிய புத்தி எனக்கில்லை. நான் குறிப்பிட்டதைப்பற்றி இல்லாவிட்டாலும் திரு. இராம அரங்கண்ணல் குறிப்பிட்டதை அப்படியே போட்டிருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : நானும் narrow mind-ஓடு சொல்லவில்லை. அதில் கனம் அங்கத்தினர் சாலென்ஜை ஏற்றுக்கொண்டதாக எங்கே இருக்கிறது?

Even in 'The Hindu' it is stated—

"Mr. M. Kalyanasundaram said the Minister was trying to frighten the member. Mr. M. Karunanidhi said the allegations were made in an article in the *Janasakthi* and it was open to the Minister to challenge the newspaper and ask it to prove the charges."

Mr. Kalyanasundaram's observation that the Minister was trying to frighten the member and Mr. Karunanithi's observation are reported in '**The Hindu**'.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மந்திரி சவால் கொடுத்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன்.

கனம் சபாநாயகர் : எங்கே சொன்னீர்கள்?

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் பேசுகின்றபோது தெளிவாகச் செல்லியிருக்கிறேன்.

கனம் சபாநாயகர் : நம்முடைய அபிஷியல் ரிப்போர்ட்டிலும் அவ்விதம் இல்லையே.

21st March 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம் : அஃபிஷியல் ரிப்போர்ட்டை நான் இன்னும் படிக்கவில்லை, கரெக்ட் பண்ணவில்லை.

கனம் சபாநாயகர் : அதிலே கனம் அங்கத்தினர் "நான் ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு வரத் தயார். எந்தக் கமிட்டி போட்டாலும் நான் வரத் தயார்" என்பதாகத்தான் சொல்லியிருக்கிறார்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதன் அர்த்தம் என்ன? 'நான் ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு வரத் தயார்' என்பதன் அர்த்தமே இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்பதுதானே.

கனம் சபாநாயகர் : எதையும் ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம். கனம் அங்கத்தினர் சவாலை எங்கே ஏற்றுக்கொண்டிருக்கிறார்? What is the challenge?

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் தொழில் அமைச்சர் அவர்கள், "இதைப் ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு விடலாம். அங்கே இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபித்தால் நான் ராஜிநாமாச் செய்யத் தயார். நிரூபிக்கப்படாவிட்டால் அவர்கள் ராஜிநாமா செய்யத் தயாரா?" என்றார்கள். அதுதான் சாலென்ஜ். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று சொல்லியிருக்கிறேன்.

MR. SPEAKER : Let the hon. Member please hear me. The Hon. Minister has said : "If the hon. Member is prepared to take the responsibility for proving that what is published in the newspapers is true, then I am prepared to have the matter referred to the Privileges Committee". Has any member stated here that he takes the responsibility for all the matter reported in the newspapers ? When there is a challenge, it must be made clear. I agree that there is some omission; I agree also that it ought to have been reported.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், பத்திரிகையில் வந்திருக்கக் கூடிய விவரங்களைப் ப்ரூப் பண்ணவேண்டுமென்பதுதான் சவால்.

கனம் சபாநாயகர் : சவாலை எங்கே ஏற்றுக்கொண்டீர்கள்?

திரு. மீ. கலியாணசுந்தரம் : சவாலை நானும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அடுத்தாற்போல திரு. இராம. அரங்கண்ணல் அவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு இந்தப் பிரச்சினைகளைவிடத் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கூறியதைப் பத்திரிகையில் போடாது விட்டார்கள் என்றாலும் போகட்டும். திரு. இராம அரங்கண்ணல் குறிப்பிட்டதையும் போடவில்லை. அபிஷியல் ப்ரொசீடிங்சை எடுத்துப் பார்த்தால் பத்திரிகையில் வந்ததற்கும் அதற்கும் உள்ள வேறுபாடு தெரியும். மற்ற, மற்ற பத்திரிகைகளில் அதைப்பற்றிக் குறிப்பாகப் போட்டிருக்கிறார்கள் என்றாலும் இந்துப் பத்திரிகை
முற்றிலும் மறைத்து இருக்கிறது. திரு. இராம அரங்கண்ணல் 9-30
கூறியது பூராவும் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்துவிலே a.m.
தெரிந்தோ தெரியாமலோ தவறு நடந்திருக்கிறது. மூன்று நாள் அவகாசம் இருந்திருக்கிறது, அதைக்கூட அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது இன்னும் சந்தேகத்தை ஊர்ஜிதமாக்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[21st March 1966

கனம் சபாநாயகர்: இன்னும் யாராவது பேசவேண்டுமென்றால் பேசலாம்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவரவர்களே, நான் ஒரே ஒரு கருத்தை அறிய விரும்புகிறேன். அன்றைய தினம் அமைச்சர் அவர்களுக்கு விடுத்த சவாலுக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் உரிமைக் கமிட்டிக்கு விடுவதாய் இருந்தால் என்னுடைய கட்சியின் பொறுப்பில் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அந்தப் பேச்சு அபிஷியல் ரிப்போர்ட்டில் இருக்குமென்று கருதுகிறேன். அதைத் தாங்கள் விளக்கினால் நன்றாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: அஃபிஷியல் ரிப்போர்டில் இருப்பது "இதை உரிமைக் கமிட்டிக்கு விட முடியுமா என்கிற அளவில் கேட்டார்கள். என்னுடைய கட்சியின் சார்பில் நான் அதைப் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்லுகிறேன், அவர்கள் விரும்புவார்களேயானால்—சபையின் முதல்வர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள்—அவர்களும் விரும்பினால் இந்தப் பிரச்னையை உரிமைக் கமிட்டிக்கு விட நாங்கள் தயாராக இருக்கிறோம்."

This is the hon. Member's speech.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னைபற்றித் தாங்கள் தீர்ப்புக் கூறுவீர்கள். நான் இது உரிமைப் பிரச்னைக்கு உரியதா, இல்லையா என்று விளக்கவில்லை. ஆனால் சில பொதுவான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கனம் உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் சொன்னதையும் தாங்கள் படித்துக் காட்டினீர்கள். என்னைப் பொறுத்தவரையில் சவால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. சவால் என்றால் எனக்குத் தெரிந்தவரையில், ஆதாரம் இருந்தால் நிரூபியுங்கள் என்று சொன்னால் அதை நிரூபிக்கிறேன் என்று சொன்னால்தான் சவாலை ஏற்றுக்கொண்டதாக ஆகும். ஆனால் உரிமைக் கமிட்டிக்கு விடுவதற்குத் தயார் என்றால் அது சவால் இல்லை. உரிமைக் கமிட்டிக்கு வரலாம். அங்கே என்ன வேண்டுமானாலும் முடிவு செய்யலாம். ஆகவே, அது சவாலை ஏற்றுக்கொள்வதாகக் கருதமுடியாது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தப் பிரச்னையில் பத்திரிகைகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு நான் பேசவில்லை, ஆனால், அப்படிப் பேசினாலும் அதில் தப்பில்லை. பத்திரிகைகளிலே தவறான செய்திகள் வந்தால் நாம் பாதிக்கப்படுகிறோம். பத்திரிகைக்கு உரிமை இருக்கிறது, ஆனால் சில சங்கடங்கள் இருக்கின்றன, அதையும் நாம் உணர்வோம் இங்கே நடவடிக்கை நடக்கிறது, எல்லாவற்றையும் அப்படியே அவர்கள் போடுவதற்கு முடியாமல் போய்விடுகிறது. உரிமைப் பிரச்னைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால் ஏதாவது தவறாகப் போட்டிருக்கிறார்களா, மிஸ்லீடிங் ஆக இருக்கிறதா, டிஸ்ட்-

21st March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

டார்ஷன் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். ஆனால் டிஸ்ட்டார்ஷன் இருக்கிறதா, மிஸ்லீடிங் ஆக இருக்கிறதா அல்லது உண்மைக்கு மாறாக இருக்கிறதா, இதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். அம்மாதிரி ஒன்றும் ஹிந்து பத்திரிகையிலே போடவில்லை, டிஸ்ட்டார்ஷன் இல்லை, 'மிஸ்லீடிங்' இல்லை. உண்மைக்கு மாறாக இல்லை, ஆனால் 'நாட் எக்ஸாஸ்டிவ்' ஆக இருக்கிறது. 'நாட் எக்ஸாஸ்டிவ்' ஆக இருக்கிறது என்பதற்காக உரிமைப் பிரச்னை வராது. எக்ஸாஸ்டிவ் ஆகப் போட்டால் நல்லது தான், அதை நான் வரவேற்கிறேன். நான் கூட பாதிக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் உரிமைப் பிரச்னையைக் கிளப்பவில்லை. அன்று 19-ஆம் தேதி 57-வது விதியின் கீழ் விவாதம் நடைபெற்றது. நான் அப்பொழுது ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னேன். அதைத் தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். மார்ச் இரண்டாம் தேதி போலீசுக்குத் தகவல் அனுப்பப்பட்டு சப்-இன்ஸ்பெக்டர் தெரிவித்தார். இங்கிருந்து அனுப்பப்பட்டபொழுது, இரண்டாம் தேதி பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்ட விஷயம் அரசாங்கத்திற்கோ, அரசாங்க இலாகா டெபுடி காரியதரிசிக்கோ தெரியாது என்று சொன்னேன். பார்லிமெண்ட்டில் நடந்த விவாதத்தைப்பற்றித் தெரியாது என்று நான் சொன்னது மிகவும் முக்கியம். பார்லிமெண்டிலே இது விவாதிக்கப்பட்டபொழுது இந்த நிலையை எடுத்துச்சொல்ல எனக்கு வாய்ப்பில்லை. இதைப்பற்றி அங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மெயிலில் நன்றாகப் போட்டிருக்கிறார்கள். ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் இன்னும் ஒன்றிரண்டு தமிழ் பத்திரிகைகளிலே போடவில்லை. நான் அன்று விடையளித்தபோது சொல்லியிருக்கிறேன், அரசாங்கத்திற்குத் தெரியாது, பார்லிமெண்டில் நடந்த விவாதம் தெரியாது என்று சொல்லியிருக்கிறேன். அது முக்கியம், அதைப் போடவில்லை. அவர்கள் வேண்டுமென்று போடவில்லையா, அல்லது அக்கறையில்லையா, அல்லது இடம் இல்லை என்ற காரணத்திற்காகப் போடவில்லையா என்பது தெரியாது. நான் அதற்காக உரிமைப் பிரச்னையைக் கிளப்பவில்லை. அவர்களுக்கு அக்கறை இல்லாமல் இருக்கலாம், முடியாமல் இருக்கலாம், கவனிக்காமல் இருக்கலாம். ஒரு பத்திரிகையிலே வந்தது, மற்றவைகளில் வரவில்லையென்றாலும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்ளலாம். இதனால் நான் ஆட்சேபிக்கவில்லை. ஆகவே இதெல்லாம் உரிமைப் பிரச்னையாகாது, தவறாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டும். இதுதான் நான் தெரிவிக்க விரும்பிய கருத்து.

திரு. மீ. கலியாணசுந்தரம்: முதலமைச்சர் அவர்கள் வெகு நாசூக்காக தங்கள் குறையைத் தெரிவிக்க இதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் இப்படிப் பயன்படுத்திக் கொண்டதற்கு மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமான கருத்துக்கள் பத்திரிகைகளிலே விடாமல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் நோக்கம் கற்பிக்கக்கூடாது. அவர்கள் எக்ஸாஸ்டிவ் ஆக இருந்தால் . . .

[21st March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நோக்கம் ஒன்றுமில்லை. மாட்டர் ஆப் ஃபாக்ட். இதற்காக சந்தேகப்பட்டு காரண காரியம் சொல்வது என்னுடைய வேலை என்று நினைக்கிறார்கள். பத்திரிகையில் எக்ஸாஸ்டிவ் ஆக வரமுடியாது என்று தான் சொன்னேன். எக்ஸாஸ்டிவ் ஆக வந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நாங்கள் எக்ஸாஸ்டிவ் ஆக வர வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் பேசினால் அவர்களுடைய பேச்சு 2 காலம், 3 காலம் பத்திரிகைகளில் வருகிறது. நாங்கள் பேசியது 2 அல்லது 3 லைன்ஸ் தான் வருகிறது. இது அல்ல பிரச்னை. முதலமைச்சர் அவர்கள் மிஸ்லீடிங் ஆக இருக்கிறதா, டிஸ்டார்ஷன் இருக்கிறதா என்று பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். டிஸ்டார்ஷன் இரண்டு விதமாக இருக்கலாம். கூறிய ஒன்றை வேறு விதமாகப் பிரசுரிப்பது டிஸ்டார்ஷன் தான், சில முக்கியமான விஷயங்களை விட்டுவிடுவது டிஸ்டார்ஷன்தான். ஆகவே, டிஸ்டார்ஷன் இருக்கிறது. மிஸ்லீடிங் ஆகவும் இருக்கிறது. இப்படி விட்டு விடுவதால் தவறான அபிப்பிராயம் பொதுமக்களிடத்திலே ஏற்பட்டு விடலாம். கட்டாயம பொதுமக்களிடத்திலே என்னைப்பற்றி, திரு. இராம. அரங்கண்ணலைப்பற்றி, அன்பில் தர்மலிங்கம் அவர்களைப்பற்றி தவறான அபிப்பிராயம் உண்டாகும். ஆகவே, இது மிஸ்லீடிங் தான். ஹிந்து பத்திரிகை நல்ல பத்திரிகைதான், நான்கூட ஹிந்து பத்திரிகையை வாசித்து விட்டுத்தான் வருவேன். நல்ல செய்திகளைக் கொடுக்கக்கூடிய பத்திரிகை தான். காலையிலே ஹிந்து பத்திரிகையைப் படித்தால் எனக்கு ஒரு திருப்தி எற்படும். இருப்பினும் தவறு இருந்தால் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். பெரிய பத்திரிகைதான். முதலிலேயே முதலமைச்சர் அவர்களைப்பற்றி தவறாக ஒரு பத்திரிகை பிரசுரம் செய்தது இங்கே கொண்டுவரப்பட்டு உரிமைப் பிரச்னைக்கு அதை விட்டிருக்கிறோம். ஆகவே, பெரிய பத்திரிகைக்கு ஒரு நியாயம், சிறிய பத்திரிகைக்கு ஒரு நியாயம் இருக்கக் கூடாது. பெரிய பத்திரிகையாக இருந்து மற்ற பத்திரிகைகளுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஆகவே இதைத் தாங்கள் யோசனை பண்ணி இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : On a perusal of the proceedings of the House recorded by the Official Reporters, I find that there is a challenge by the Minister and there is a sort of qualified acceptance by the Members though not immediately but some time afterwards in the course of the discussion. I cannot take it as a regular and direct acceptance of the challenge. In a way they have said that they were prepared to go before the Privileges Committee. When a newspaper gives the heading as 'challenge', necessarily it must look into in what manner, in what fashion and to what extent the opposition Members have gone to accept the challenge. It would have been better and it is reasonable that we expect the newspaper

21st March 1966] [Mr. Speaker]

to have at least mentioned that either Sri Kalyanasundaram or Sri Rama. Arangannal had stated that they were prepared to go before the Privileges Committee, if not on behalf of themselves, on behalf of their party or something on those lines even though they have not told that they were prepared to guarantee the truth or accept the responsibility for the truth of the allegations in the newspapers referred to above. Of course, there is some omission. Under the circumstances, I hope the newspaper will look into it and will not commit such mistakes hereafter. I think it is not necessary to refer the matter to the Privileges Committee.

IV.—ANNOUNCEMENT.

(1) PRIVILEGE MATTER *re* ACTION TAKEN AGAINST AN EMPLOYEE OF MADURAI MEENAKSHI SUNDARESWARAR DEVASTHANAM.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of another matter of privilege against the Executive Officer of Madurai Meenakshi Sundareswarar Devasthanam for taking action against an employee on the basis of his letter on behalf of the employee to the Trustees. I will take it up to-morrow.

III.—PRIVILEGE MATTER—*cont.*

(2) PROSECUTION OF MEMBER ON HIS FORWARDING TO THE CHIEF MINISTER A PETITION CONTAINING ALLEGED BY FALSE ACCUSATIONS AGAINST POLICE OFFICIALS.

MR. SPEAKER : Now, I am giving the ruling on the matter of privilege raised on 10th March 1966 by the hon. Member, Sri S. Madhavan, against the Deputy Superintendent of Police, Cuddalore.

The notice of privilege given by Sri S. Madhavan, M.L.A. is against the Deputy Superintendent of Police, Cuddalore. The gist of the notice is that Sri V. Krishnamurthi, M.L.A. received a petition from his constituency alleging corruption against some Police officials, and that with his endorsement on the petition to make an enquiry into the matter, he presented the petition to the Chief Minister when he was in this House. Later on, after enquiry, on the ground that there are false and malicious allegations against the police officials in the petition, Member Sri Krishnamurthi has been prosecuted by the Deputy Superintendent of Police before the Chief Presidency Magistrate, Madras, and I believe the matter is pending in the Court.

The point raised by Sri Madhavan is whether a Member, who writes a letter or forwards a letter or a petition to the Minister, containing accusations against officers or others, is protected under the privilege of the House or its Members.

The attempt of Sri Madhavan is to make this presentation of a petition in the House to the Minister a part of the proceedings of this House in order to bring it under the cover of privilege of the Member. His further point is, in this case, Sri Krishnamurthi

has not written the letter, but has only forwarded with an endorsement, and that he has done only his duty as a legislator, and as such he must be protected from legal action.

The Chief Minister contended that under the existing rules of the Constitution this matter will not come under privilege and no new privilege can be created by referring the matter to the Committee of Privileges.

Members are aware that Article 194 of the Constitution deals with powers, privileges and immunities of the House and its members.

Clause (1).—This deals with the freedom of speech in the Legislature.

Clause (2).—This deals with the privilege or immunity from any legal action in a court of law for anything said or any vote given or for anything published under the authority of the Legislature.

Clause (3).—We have to follow the rules and decisions of the House of Commons in the United Kingdom in all matters which are not covered by Clauses (1) and (2) till we make law in this country for privileges.

Admittedly the matter raised by Sri Madhavan does not come under clauses (1) or (2) of Article 194. Now, let us examine whether such a privilege as the one claimed in the notice of Sri Madhavan exists in England in the House of Commons and its members so that we can bring it under clause (3) of Article 194 of the Constitution.

There is a similar case which arose in the House of Commons in 1958, in what is known as " Straus " case. It was referred to by Sri Madhavan and also relied on by the Chief Minister in the discussion of this notice. In that case one Mr. Straus, a Member of the Parliament, submitted a letter complaining about the administration of the London Electricity Board to the Minister concerned for enquiry. Later on the Electricity Board issued a notice to the Member as to why he should not be prosecuted for libel as the allegations in the letter were groundless. Mr. Straus sought the protection of the House of Commons under the cover of privilege or immunity from legal action and also for consequent proceedings against the Electricity Board for breach of privilege for issuing the notice of prosecution. The committee of privileges in the House of Commons reported its conclusions that the letter written by Mr. Straus comes under the proceedings of the Parliament and hence the member is entitled for protection. But, after a long discussion on 8th July 1958, the House of Commons did not accept the verdict of the committee and resolved that the member is not entitled to any immunity from legal action by the Electricity Board as his letter is not part of the proceedings in Parliament.

As a consequence of the ruling given by the House of Commons on 8th July 1958, there was a discussion on 30th July 1958 in the House therein which Mr. Hugh Gaitskell raised the question " whether a member who forwards his constituents " letters in good faith is adequately protected? That is exactly the point now before us. Whether he is protected by the doctrine of qualified privilege in the Courts or whether he would not be taken to court at all? The reply of Mr. R. A. Butler, Secretary of State for Home Department and Lord Privy Seal, was " If a member forwards a letter in good faith he would be covered by qualified privilege in the courts." He also said " That is the position of law which has prevailed over a number of years in relation to members' letters and their correspondences." Asked whether there is a danger of Hon'ble members appearing in Court, Mr. Butler said " That is a matter which I cannot control and upon which I cannot comment ". He gave an advice to the members of the individual responsibility that they have to exercise the greatest care in writing to the ministers or forwarding letters. He gave a useful warning to the Honourable Members of the House of Commons that there is a danger in members forwarding letters which are in themselves malicious. That is the position in the House of Commons in England and that is what we are bound to follow under Article 194 of the Constitution.

In the course of the discussion, Sri Madhavan, Sri Saw. Ganesan and the Deputy Leader of the Opposition, Sri M. Karunanithi, made a suggestion that the matter may go to the Privilege Committee since it is an important matter affecting the day-to-day duties of the Members in disposing of the letters and petitions which they receive from their constituency.

We have to consider the request in two aspects : (1) whether the Privilege Committee can make out a new privilege not existing now under the rules and (2) whether that is reasonable or desirable in practice?

Regarding the constitutional provision about creating new privileges, I like to mention the following matters of importance :—

Parliamentary privilege is the sum of peculiar and special rights which are exemptions from the ordinary law of the land. We see from the history of the House of Commons in England that there were extensive privileges for the Members of Parliament at the beginning. It will be surprising to note that in 1753 some unfortunate person was committed for fishing in the fishing pond of a Member of Parliament. In 1757, the plaintiff, his attorney and another were committed to the custody of the Sergeant-at-Arms for serving a writ for trespass on a Member of the Parliament. But gradually, it seems, on account of the growth of Parliamentary democracy and realisation of the rights of the citizens and also the maturity of political wisdom several of the privileges had been cur-

bed or given up. Even in 1704, both Houses of Parliament in England, have resolved not to create any new privilege. Even to-day they cannot, by vote or declaration, create a new privilege not warranted by known laws or customs of Parliament. But, they can only expound the law of privileges and vindicate their rights.

Immediately after the ruling in Straus case, it seems in 1958, a member of the House of Commons brought in a Bill to create privilege and immunity in the matter of correspondence, as the one before us now. But that was rejected. In the same way a similar Bill called "The Parliamentary Privilege Bill" was introduced in our Parliament by a Member in 1959, to define a privilege of this sort by legislation. His aim was to get over the rulings in the "Straus" case. In the discussions he said "the issue is whether we are going to keep the position as it is in the House of Commons or are we going to depart from the practice of the House of Commons and confer upon our Members a larger measure of immunity."

Sri A. K. Sen, Minister for Law, opposed the Bill. He has stated "It is not by trying to extend our privilege or by making them arbitrary or by trying to curb the rights of ordinay citizens to seek remedy in a court of law that we sustain the foundations for the privileges which we enjoy, but by imposing on ourselves restraint, caution and prudence that we sustain the great body of privileges—What would be the consequences of this Bill? It says "the citizen will have no remedy whatsoever in a court of law against any malicious and premeditated attack which may be canalised through a member, though such communication may not be part of the proceedings of the House." He has also stated that any Member writing a letter or forwarding a letter in good faith will be protected by the qualified privilege in the court of law. If absolute privilege is granted, even letters and petitions found to be wrong or forwarded not in good faith will be protected. That would be robbing the citizens of their very valuable right to seek redress in a court of law." He states "after all there is a country outside this House and the citizens' rights are as important as ours and their rights may be very severely prejudiced if bad faith on the part of the members of this House is sought to be covered by the law passed in this House. I doubt, subject to correction, whether a court would sustain a law of this nature. I am opposing it on a far wider ground, on the ground of the more valuable rights which we as members of Parliament must reserve for the citizens outside the House, and on the ground that this House should not be instrumental in protecting acts of bad faith even if they be of Members themselves." Finally the Bill was rejected by the Lok Sabha.

Then, coming to the practical aspect of this matter of creating a new privilege, I like to make out certain points. It is true we have got absolute privilege such as freedom of speech in the legislature, raising points of order, raising motions and asking questions,

etc. But we are not to exercise this unlimited right in an unguided fashion, or in an uncontrolled manner. There are rules made under the provisions of the Constitution and decisions and conventions to regulate and control the procedure in the House and not to allow misuse of these privileges, not to speak unparliamentary words, not to interfere with the proceedings by raising unnecessary points of order, not to use indecent, treasonable or abusive words, not to ask objectionable questions, etc. In practice we see what is going on, and to what extent it is necessary that this absolute privilege must be regulated by the Chair and the House under the rules. Let us, for a moment, assume that absolute privilege is created for letters and petitions written by or forwarded by the Members, *containing* allegations or accusations against others. These letters or petitions are written with *unrestrained emotion or* spirit of their own outside the Legislature. They may be genuine or not. Then authenticity may be questioned whether they are forgery or they are *psudonymous*. The contents of these documents may be true or false. They may be in good faith or may be motivated by bad faith. All these are questions of fact about which this Legislature has no control nor can it sit in judgment over these facts. Officials or non-officials outside this House may be seriously affected by such accusation if they are not true. Even Parliamentarians may be seriously affected if they are accused unnecessarily or maliciously in such petitions for their personal or private activities outside this House. We cannot deny that these correspondences assume importance when they are written by members or forwarded by members for purpose of enquiry into the matters. At the same time we do not guarantee any safeguard for those affected by such letters if they are false. In such circumstances, if we deny the right of citizens to go before a court of law, if he is affected by these accusations, is it reasonable in a democracy? I think it is not fair to restrict their rights.

Of course, the point raised by Sri Madhavan is a general one affecting the Parliamentarians as well as the public and as such it is of great importance. I gave careful consideration whether I can make out a case for referring it to the Committee of Privileges. But, I have to accept my inability to do so. Under the circumstances, I find that there is no *prima facie* case to be referred to the Committee of Privileges.

But, without a reference from a specific case like the one before me, I think there is nothing wrong for the Committee of Privileges to consider this question in a general manner, if it feels so inclined. Or, it may be discussed by a Committee of eminent politicians and statesmen or by a Committee under the Commonwealth Parliamentary Association, or by the Presiding Officers as the Chief Minister suggested, so that they can solve this problem in a more satisfactory manner in the interest of setting up a healthy parliamentary tradition, by amending the laws, if necessary.

[21st March 1966

V.—CALLING ATTENTION TO COLLECTION OF BETTERMENT TAX AND CONSEQUENT DISTRESS OF RYOTS OF TIRUNELVELI DISTRICT.

SRI M. S. SELVARAJAN: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely:—

"the steps taken by the Revenue officials for levy and collection of Manimuthar betterment tax in Tirunelveli district during the present drought conditions and the consequent distress on the part of the ryots of the district."

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, the Madras Irrigation (Levy of Betterment Contribution) Act, 1955 (Madras Act III of 1955) empowers the Government to levy betterment contribution on the landholders of lands benefited by the construction, expansion or alteration by the Government on or after the 1st January 1947 of any irrigation or drainage work the cost of which exceeded Rs. 25,000. The Act was brought into force with effect from 16th March 1955. The preliminary work involved in determining the betterment levy as laid down in the Act and the rules framed thereunder was found considerable and complicated. It was, therefore, decided not to proceed further with the implementation of the Act until it was amended and the procedure for determining the betterment contribution was revised and simplified. The original Act has since been amended by the Madras Irrigation (Levy of Betterment Contribution) Amendment Act, 1963 (Madras Act 32 of 1963) with a view to provide for a simplified procedure raising also the cost of works liable to the levy of betterment contribution from Rs. 25,000 to Rs. 1,50,000. The amendment Act came into force on 1st July 1964. Betterment contribution can be levied only after two years from the date of notification of the completion of the work.

Manimuthar Reservoir project, which stabilises the entire ayacut under the Tambaraparani delta and also the ayacut lands under 313 rainfed tanks fed by the Manimuthar Main Canal and Thayarmadam sluice in the five taluks of Ambasamudram, Tirunelveli, Nanguneri, Srivaikuntam and Tiruchendur is the first work in Tirunelveli district taken up for implementation of the provisions of the above Act. The entire ayacut has been treated as 'improved old ayacut' and the rate of betterment contribution is Rs. 50 per acre and the contribution is collectable in ten equal annual instalments of Rs. 5 per acre. Both Papanasam and Manimuthar Reservoir received full supply during the pishanam season of fasli 1375 and the paddy crop under the Tambraparani and Manimuthar rivers will be successfully harvested. Drought conditions do not prevail in areas fed by Tambaraparani and Manimuthar. The first instalment of the contribution shall be Rs. 5 per acre and the collection of this small amount may not cause any hardship on the part of the ryots in this area.

As regards the steps taken for betterment levy, notification under Rule 7 (3) of the Rules framed under the Act, will be published in batches in the District Gazettes from 10th March

21st March 1966] [Sri V. Ramaiah]

1966 onwards. After the publication of the notification, notices in Form I, appended to the above rules intimating the rate of betterment contribution and inviting suggestions and objections within 15 days will be issued. After the expiry of the statutory period of 15 days and after hearing the suggestions and objections, betterment contribution will be fixed and orders communicated in Form II. Finally demand notices in Form No. IV will be issued to each landholder. All this process will take about two months and the actual collection of the first instalment is likely to commence from May 1966. As the pishanam harvest will be covered by this time, there may not be any difficulty on the part of the ryots to pay the betterment contribution, which is only 1/10th of the total betterment levy at a time.

IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) NOMINATION TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER: Under Rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following members of the Assembly to be members of the Committee on Subordinate Legislation for the year 1966-67:— 10-00 a.m.

Sri K. Parthasarathy;
Sri K. Narayanaswami Pillai;
Sri V. Sankaran;
Sri R. Ponnappa Nadar;
Sri V. Krishnamoorthy;
Sri M. V. Karivengadam;
Srimathi A. Suares;
Sri N. Shanmugasundaram;
Sri K. R. Sambandam;
Sri Saw. Ganesan.

Under Rule 202 of the said rules, I nominate Sri K. Parthasarathy, Deputy Speaker, to be the Chairman of the Committee.

VI.—GOVERNMENT RESOLUTION.

ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That this House recommends to the Legislative Council that they do nominate three Members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1966-67 and communicate to this House the names of the Members so nominated.'

The motion was put and carried.

VII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

(1) DEMAND No. XIV—MEDICAL, (2) DEMAND No. XV—PUBLIC HEALTH AND (3) DEMAND No. XXXVIII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 10,98,50,600 under Demand No. XIV—Medical.'

புலவர் கா. கோவிந்தன் : தாலுகா தலைநகர் மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் எக்ஸ்ரே, இரத்த சோதனை வசதிகள் உடனடியாக அமைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்த என்னும் காரணம் காட்டப்பட்டிருக்கும் என்னுடைய வெட்டுப் பிரே பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 10,98,50,600 under Demand No. XIV—Medical—be reduced by Rs. 100.'

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, on the recommendation of the Governor, I move--

'That the Government be granted a sum not exceeding Rs. 5,46,75,700 under Demand No. XV—Public Health'

திரு. சா. ராமசாமி : திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்திற்குக் குடிதண்ணீர் வசதி அளிக்கும் பொருட்டு கொள்ளிடம் ஆற்றிலிருந்து தா. பழூர், ஜெயங்கொண்டாம் ஆகிய இடங்களுக்குக் குடி நீர் வழங்குவதுபற்றி விவாதிக்க என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 5,46,75,700 under Demand No. XV—Public Health—be reduced by Rs. 100.'

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 80,900 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.'

புலவர் கா. கோவிந்தன் : கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரும்போது வெறும் கிணறுகளை மட்டும் வெட்டித் தந்து விடாது, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வகை செய்ய வேண்டியதன் இன்றியமையாமையினைச் சுட்டிக்காட்ட என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 80,900 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health—be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

Who is winding up the debate on behalf of the Opposition?

SRI M. KARUNANITHI: Sri Rama. Arangannal will wind up the debate, Sir.

MR. SPEAKER: I have got a list of 32 speakers. Even if the House sits till 2 o'clock, we have got only four hours. How much time does the Hon. Minister, Sri Rama. Arangannal and Sri M. Kalyanasundaram require?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: I will require about 45 minutes.

SRI RAMA. ARANGANNAL: I will require about 20 minutes.

SRI M. KALYANASUNDARAM: I will require about 20 minutes.

MR. SPEAKER: Each Member can take about five to six minutes.

***திரு. ம. கமலநாதன் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஜனநாயக அடிப்படையில் உடல் நிலை அபிவிருத்தியை உண்டாக்க வேண்டும் என்கின்ற குறிக்கோளில் அரசாங்கம் நிர்வாகத்தை நடத்த மறுக்கிறார்கள். நகரங்களைப் போன்று கிராமங்களில் எல்லா விதமான வசதிகளையும் செய்து தரவில்லை. நகரங்களிலுள்ள மருத்துவ மனைகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. தனிப்பட்ட மருத்துவ நிலையங்களைப் பல விதமான வசதிகளுடன் தனிப்பட்ட டாக்டர்கள் நடத்துகின்றார்கள். கிராமப்புறங்களில் டாக்டர்கள் போவதற்கு மறுத்து வருகிறார்கள். காரணம் கேட்டால், அவர்களுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்றும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் கிராமப்புறங்களில் இல்லை என்றும் சொல்லி வருகிறார்கள். நகரங்களில் வாழ்க்கை நடத்தும் டாக்டர்களுக்குத் தேவையான, கவர்ச்சிகரமான சம்பளம், வீட்டுவசதி போன்றவைகள் செய்து கொடுத்தால், அவர்கள் கிராமப்புறங்களுக்கு வருவதற்குத் தயங்க மாட்டார்கள். ஆகவே இதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது டாக்டர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாது என்ற காரணத்தினால் மேல் படிப்புக்காக மேல் நாடுகளுக்குப் போகின்றவர்கள் அங்கேயே இருந்து விடுகின்றார்கள். இந்த நிலையில் அமெரிக்காவில் 4,000 இந்திய டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும், பிரிட்டனில் 2,000 இந்திய டாக்டர்கள் இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அங்கே மேல்படிப்புக்குப் போகின்றவர்கள். அங்கே கொடுக்கப்படும் கவர்ச்சிகரமான சம்பளத்தை உத்தேசித்து, அங்கேயே இருந்து விடுகின்றார்கள்.

ஸ்தல ஸ்தாபனங்களில் இருக்கின்ற மருத்துவ மனைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொண்டால் அன்றி மருத்துவ மனைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், நான்காவது திட்டத்தில் மூன்று மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவதாகத் தான் சேலத்தில் கல்லூரி அமைக்கப்படும் என்று சொல்லுகிறார்கள்.

[திரு. ம. கமலநாதன்] [21st March 1966

சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்கே 25 லட்சம் ரூபாய் ரயில்வே செஸ் நிதியிலிருந்து இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியைக் கல்லூரிக்காகப் பயன்படுத்த முடியாது என்று சொல்லியிருந்த போதிலும், அந்த மாவட்டத்திலுள்ள மக்கள் ரயில்வே செஸ் நிதியை இதற்காக உபயோகப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

1,000 செவிலியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். இவ்விதம் கொடுக்கப்படும் பயிற்சியில் 1,000 பேர்களும் பெண்களாக இருப்பது நலம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். துப்புரவு செய்வதில் அக்கறையுள்ள இவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மருந்து கலப்பவர்களில் எத்தனைப் பேர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படும் என்பது தெரியவில்லை. கம்பவுண்டர்களாக வேலைக்கு வருகின்றவர் கள் அந்த வேலையிலேயே இருந்து சாகவேண்டியதுதான். அப்படிப்பட்ட நிலையில்லாமல், அவர்களுக்கு டிப்ளமோ போன்ற பயிற்சி கொடுத்து கிராம வைத்தியர்களாக அனுப்புவதற்கு ஏதாவது வழிவகை செய்வது நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்துகள் வாங்குவது பெரிய பிரச்னையாக இருக்கிறது. தாலூகா மருத்துவ நிலையங்களாக இருந்தாலும் சரி, ஜில்லா மருத்துவ நிலையங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மட்ராஸ் கோடவுனிலிருந்துதான் வாங்க வேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக இன்டன்ட் போட்டு, அதை டி.எம்.எஸ். அப்ரூவ் செய்த பின்னால்தான் மருந்தைப் பெற முடிகிறது. அதிலும் அங்கிருந்து அனுப்புகின்ற லிஸ்ட்படி முழுவதும் மருந்துகளையும் அனுப்புவதாகத் தெரியவில்லை. அப்படி வரும்போது, ரீ-இன்டன்ட் போடவேண்டியதாக இருக்கிறது. இல்லையென்றால், அந்த மருந்துகள் ஸ்டாக் இல்லை என்று சர்டிபிக்கேட் கொடுத்தால்தான் வெளியில் பர்சேஸ் செய்து கொள்ளமுடியும். அதிலும் தாலூகா தலைநகரங்களில் இருக்கின்ற டாக்டர் 50 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது, டி.எம்.ஓ. 2.000 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இதன் காரணமாக, தேவைப்படுகின்ற மருந்துகள் சரியான நேரத்தில் கிடைப்பதில்லை.

இந்திய மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக சில விஷயங்களை நான் விளக்க விரும்புகிறேன். அதாவது இந்திய மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் இதற்கு ஸாங்ஷன் செய்யப்பட்ட (ஸ்ட்ரெங்க்த்) எண்ணிக்கை 60. இந்தக் கல்லூரியில் ஆயுர்வேதம், சித்தா, யுனானி, இந்த மூன்று முறை மருத்துவங்களும் கற்றுக்கொடுக்கப்படும் என்பது திட்டம். இதில் 61 பேர்கள் படிக்க முன் வந்தார்கள். அதில் சித்தா, யுனானி இந்த இரண்டுக்கும் பயிற்சி கொடுப்பதற்கான வழிவகை செய்யப்

21st March 1966] [திரு. ம. கமலநாதன்]

படாத காரணத்தால் இந்த 61 பேர்களுக்கும் ஆயுர்வேத முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சித்தா, யுனானி, இந்த இரண்டு படிப்பும் கற்றுக்கொடுப்பதற்கு, சமஸ்கிருதம், உருது இந்த மொழிகள் தெரிந்த ஸ்காலர்கள் இல்லை என்ற காரணத்திற்காக இந்த இரண்டு ஸிஸ்டங்களும் அங்கே இப்போது சொல்லிக் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்திய மருத்துவக் கல்லூரியின் நோக்கம் சரியாக வெற்றிபெறாத நிலையில் இருக்கிறது. முதல் ஆண்டில் 30 மாணவர்கள் இந்தக் கல்லூரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். பின்னால் வந்த 61 மாணவர்களையும் ஆயுர் வேதத்திற்குத்தான் எடுத்துக்கொள்ள முடியும் என்ற அளவில் மாணவர்களை எடுத்திருக்கிறார்கள். இங்கு இருக்கின்ற ஆசிரியர்கள் 5 பேர்கள், பிரின்சிபால், வைஸ்-பிரின்சிபால் இவர்கள்தான் கல்லூரியை இப்போது நடத்துகின்றார்கள். மற்ற ஆசிரியர்கள் பாடங்களை எடுப்பதில்லை. அவர்களுக்கு ஏன் வகுப்புக்கள் கொடுக்கப்படவில்லை என்று கேட்டால், அவர்கள் மாணவர் களிடத்தில் போய் ஆங்கில மருத்துவ முறைதான் சிறந்தது என்று சொல்லிக்கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள், மாணவர்களிடையே இடைஞ்சல் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தைச் சொல்லி மாணவர்கள் இவர்களைச் சந்திக்க முடியாத நிலையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இப்போது பிரின்ஸிபாலும், வைஸ்-பிரின்ஸிபாலும் தான் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். அது மட்டுமல்ல. அரசாங்கத் திட்டப்படி இந்திய மருத்துவம் தமிழில் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அங்கே இந்திய மருத்துவம் சொல்லிக்கொடுக்கப்படவில்லை. ஆங்கில மருத்துவம்தான் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதுவும் நோட்ஸ்தான் கொடுக் கிறார்கள். முதல் ஆண்டு மாணவர்களைக் கொண்டு இரண்டாவது ஆண்டு மாணவர்களுக்கு நோட்ஸ் டிக்டேட் செய்வதைத் தவிர, வேறு ஒன்றும் நடைபெறவில்லை. அந்தக் கல்லூரி மூடிவிடக் கூடிய சூழ்நிலையில் இயங்குவதாக இருக்கிறது. மாணவர்கள் ஆங்கில மருத்துவம்தான் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதாக பிரின்சிபால் சொல்லிக்கொடுக்கிறார். மாணவர்கள் எங்கள் தலைவிதி இப்படி ஆகிவிட்டதே, இந்திய மருத்துவமே சொல்லிக்கொடுக்கப்படவில்லையே, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் என்ன செய்வது, நீங்களாவது ஏதாவது செய்யுங்கள் என்று எங்களிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கில மருத்துவம் இல்லை என்றால் மதிக்கப்படுவதில்லை. ஆகையால் ஆங்கில மருத்துவம்தான் சொல்லிக்கொடுக்கப்படவேண்டுமென்று அவர் அபிப்பிராயப்படுகிறார்.

அங்கு டெக்ஸ்ட்-புக்குகள் பிரிஸ்க்ரைப் செய்யவில்லை என்றும், யுனிவர்ஸிட்டி அதற்காகக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகிறது. டெக்ஸ்ட்-புக் இல்லாமல் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. டெக்ஸ்ட்-புக் இல்லாமலேயே கல்லூரி நடை பெறுகிறது. தலைவரைப்பற்றிக் குறிப்புக் கொடுத்தால்தான் கல்லூரி எப்படி இயங்குகிறது என்பது தெரியும். அவர் தன்னைப் பெரிய தியாகி என்று சொல்லிக்கொள்ளுகிறார். நேருவுக்கு ரொம்பவும் வேண்டியவர் என்று சொல்லிக்கொள்ளுகிறார். வெளி

நாட்டு தூதராகச் செல்லும்படி கேட்டுக் கொண்டதாகவும், இந்திய மருத்துவத்தில் உள்ள அக்கறையினால் இங்கேயே இருப்பதாகச் சொல்லிவிட்டதாகவும் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறார்.

• • • • "

இந்திய மருத்துவப் படிப்பு அங்கு சொல்லிக் கொடுக்கப்படுவதே இல்லை. குற்றாலத்திலே லான்ட் அக்வயர் செய்யப்பட்ட பிறகு அங்கே கல்லூரி அமைக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு அமைக்கப்படுவதை விட, சென்னையில் அமைக்கப்பட்டால் ஓரளவுக்கு இந்திய மருத்துவத்தைச் சிறப்பாகச் சொல்லிக் கொடுக்க முடியும் என்று சொல்லலாம். கேட்பார் அற்ற முறையில் தாற்காலிகக் கட்டடத்தில், சர்வாதிகாரப் போக்கில், ஏகபோக முறையில் கல்லூரித் தலைவர் நடந்துகொண்டிருக்கிற காரணத்தினால் இதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன். அவர் திடீரென்று ஒரு நாள் ஒரு நோட்டீஸ் போட்டார். அரசாங்கம் இந்த இரண்டாவது ஆண்டு மாணவர்களை வெளியே போகச் சொல்லலாம் என்றும், ஆனால் தான் அந்த கோர்ஸைக் கன்டின்யூ செய்ய அனுமதிப்பதாகவும், மீண்டும் ஏதாவது கலாட்டா செய்தால் கல்லூரியை மூடிவிடக்கூடும் என்றும் போட்டிருந்தார். ஏன் இப்படிப் போட்டீர்கள் என்று கேட்டால், டெபுடி செக்ரட்டரி வந்ததாகவும், மாணவ-மாணவியர் கலாட்டா இருக்கிறது என்று சொன்னதாகவும், அப்படியானால் கல்லூரியை மூடி விடுங்கள் என்று அவர் சொன்னதாகவும், ஆகையால் தான் இப்படிப்பட்ட உத்தரவைத் தான் போட்டதாகவும் சொன்னார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மருத்துவ, சுகாதாரத் துறையையொட்டி கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் நான் பேச ஆசைப்படுகிறேன்.

மருத்துவ, சுகாதார இலாகாக்கள் இரண்டையும் ஒன்றாக இணைக்கவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக வரவு-செலவுத் திட்டத்திலேயே குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். இதைப் பற்றி நான் மீண்டும் அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இந்த இரண்டு இலாகாக்களிலும் வேலைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு புறத்தில் மருத்துவத் துறையிலும் வேலை அதிகம். அதேபோன்று சுகாதாரத் துறையிலும் வேலை அதிகம். எல்லாவற்றையும் பிரித்து, ஒழுங்காகச் செய்யவேண்டுமென்ற எண்ணம் இருக்கும் போது இரண்டையும் இணைத்தால் நிர்வாகத்தில் செலவு சிக்கனம் ஏற்பட்டாலும் வேலைகள் கெடத்தானே செய்யும் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அகில இந்தியாவில் எப்படி இருந்தாலும், சென்னையைப் பொறுத்தவரையில் நாம் எல்லாத் துறைகளிலும் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

* Expunged as the Ordered by the Chair.

இன்றைய தினம் புரியாத நோய்கள் பரவிக்கொண்டிருக்கும்போது எப்படி நோய்கள் வந்த பின்னால் அவைகளைத் தீர்ப்பதற்கு வழி வகை செய்கிறோமோ, அதேபோல அவை வராமல் இருக்க தடுப்பு வேலைகள் முக்கியம் என்று பார்த்தால் இப்படி இணைப்பது தேவையில்லாதது. இன்னும் இதனால் நல்ல முறையில் வேலைகள் செய்ய முடியுமா என்று பார்த்தால், அப்படி இணைப்பதால் வேலை களை நல்ல முறையில் செய்ய முடியாது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, சுகாதாரத் துறையில் டாக்டர்களையெல்லாம் போட்டு வீணாக்குகிறார்கள். தடுப்பு வேலைகளுக்கு டாக்டர்கள் தேவையா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அமெரிக்கா போன்ற இடங்களில் சானிடேரியன்ஸ் என்று தனியாகத் தயாரித்து அனுப்புகிறார்கள். அந்த மாதிரி மருத்துவர்கள் போதவில்லை, 5,000 அல்லது 10,000 மக்கள் தொகைக்கு ஒரு டாக்டர் தேறுவாரா என்ற நிலையில் இருக்கும்போது டாக்டர் களைக் கொண்டுபோய்த் தடுப்பு வேலைகளுக்குப் போட்டு, சுண்ணாம்பு தெளித்து சானிட்டரி வேலை பார் என்று சொல்லுவது நமது திறமைக்குச் சான்றாக இருக்காது. தனியாக சானிடேரியன்ஸ் கோர்ஸ் ஆரம்பித்து, அதில் பட்டப் படிப்பு முடிந்தவர்களை ஈடுபடுத்த முயற்சி எடுப்போமானால் ஒரு புதிய அத்தியாயத்தை இந்த இலாகாவில் தோற்றுவித்தோம் என்ற பெருமைக்கு ஆளாக முடியும். அதையும் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக இந்தத் தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்படும் இன்ஸ்பெக்டர்களை மாநிலம் பூராவிலும் மாற்றிக்கொண்டிருக் கிறார்கள். இதற்கு அவசியம் கிடையாது. அந்தந்த மாவட்டத் தில் உள்ள பிளாக்குகளில் மாற்றினால் போதும். மாநிலம் பூராவிலும், ஜில்லாவிட்டு ஜில்லா மாற்றினால் அவர்கள் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் பெரிய சம்பளம் அல்ல. அதைக்கொண்டு இரண்டு குடும்பங்கள் நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். பிளாக்குக்கு பிளாக் மாற்றும் சூழ்நிலையை ஏற்படுத்தினால் நடுத்தர வகுப்பினருக்கு உள்ள பல தொல்லைகளைத் தீர்க்க முடியும் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றைக்கு ஃபுட் அடல்ட்ரேஷன் அதிகமாக இருக்கிறது. என்னதான் மத்திய சட்டத்திலே இரண்டாவது குற்றம் செய்கிற வர்களுக்குச் சிறை தண்டனை கொடுக்கவேண்டும் என்று இருந் தாலும், இரண்டாவது தடவை அல்லது பல தடவைகள் குற்றம் செய்தாலும் மாட்டிக்கொள்ளாமல் இருக்க முயற்சிக்கிறார்களே தவிர, அடல்ட்ரேஷன் செய்யாமல் இருப்பது இல்லை. அதற்கு அதிக ஆட்களைப் போட்டு, சோதித்துப் பார்க்க பல லாபரட்டரிகள் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [21st March 1966

அடுத்தபடியாக, மெடிக்கல் காலேஜஸ், மெடிக்கல் துறைக்கு வரும்போது, நமக்குப் பல ஆஸ்பத்திரிகள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு மெட்டர்னிட்டி ஆஸ்பத்திரி இருப்பது அவசியம். ஏன் என்றால் இன்றைக்கு அதிக மக்கள் தொகை இருக்கும் பஞ்சாயத்துக்களில்கூட மெடர்னிட்டி ஆஸ்பத்திரி இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக நான் கமுதி என்ற ஊருக்குச் சென்றிருந்தபோது ஒரு அம்மையார் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நிலையில், பக்கத்தில் மெட்டர்னிட்டி ஆஸ்பத்திரி இல்லாமல், 30 மைல்களுக்கு அப்பால் உள்ள மதுரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார்கள். வழியில் அந்த அம்மையார் செத்துவிட்டார்; குழந்தையும் செத்தது. இப்படிப்பட்ட பாவங்களைப் பார்க்கும்போது 50-60 மைல்கள் தூக்கிக்கொண்டு போனால்தான் மருத்துவ வசதி என்று இந்த 20-ம் நூற்றாண்டில் இருப்பது மிகவும் வேதனைக்கு உரியதாக இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு மெட்டர்னிட்டி ஆஸ்பத்திரி என்று வைத்தால் பல உயிர்களைக் காப்பாற்ற முடியும். அதற்கு நமக்குப் பணம் இல்லை என்றால், பஞ்சாயத்து யூனியனில் உள்ள நான்கு பணக்காரர்களைச் சந்தித்துப் பணத்தைப் பெற்று மருத்துவ வசதி ஏற்படுத்த முன்வரவேண்டுமே தவிர, 60 மைல்களுக்கு அப்பால் கொண்டு போய் வழியில் செத்து மடியும் நிலைமையில், மக்கள் நன்மைக்காக உழைக்கிறோம் என்றால் சந்தேகிக்கும் நிலைமை ஏற்படும். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மெடிக்கல் காலேஜ் அட்மிஷன்ஸ். மெடிக்கல் காலேஜில் ஒரு சீட் வாங்குவது என்றால் இமாலய மலையில் ஏறிவிட்டு இறங்குவது போல் இருக்கிறது. எத்தனை கமிட்டிகள் போட்டாலும், ஒவ்வொரு கமிட்டியின் பேரிலும் பல புகார்கள், பல குற்றச்சாட்டுகள் சாட்டப்படுகின்றனவே தவிர, மக்கள் மத்தியில் மன நிம்மதி இல்லை. இந்த ஆண்டு அட்மிஷனிலேகூட பல குறைகளை மக்கள் சொன்னார்கள். இந்த நிலை இனிமேலாவது மாறவேண்டும். மாவட்டத்திற்கு இவ்வளவு சீட் என்று கொடுக்கிறோம்; பிற்பட்ட வகுப்பாருக்கு இவ்வளவு சீட் என்று வைத்திருக்கிறோம்; முற்பட்ட வகுப்பாருக்கு இவ்வளவு சீட் என்று வைத்திருக்கிறோம். அதன்படி ஒதுக்கி வைத்து, மார்க் படி, அதிகமாக யார் மார்க் வாங்கியிருக்கிறார்களோ அந்த முறையில், பிற்பட்ட வகுப்பாருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சீட்டுகளுக்கும் அவர்கள் யார் அதிக மார்க் வாங்கியிருக்கிறார்களோ அந்த முறையில் மார்க்கும் வாங்கி பிற வகையிலும் தகுதி பெற்றவர்களாக இருக்கும்போது அவர்களை ஏன் எடுக்கக் கூடாது என்று, ஏன் அந்த முறையை கையாளக் கூடாது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கமிட்டியைப் போட்டு அவர்கள் மீது செய்கிற புகார்களைக் கேட்கும்போது மன வேதனை ஏற்படுகிறது. இனிமேல் அந்த மாதிரி செய்யக்கூடாது. அந்த முறையில் அட்மிஷனில் குறையே இல்லாமல் இருப்பது அவசியம் மாத்திரம் அல்லாமல் அவசரமும் கூட என்று சொன்னால் அது மிகையாகாது.

21st March 1966] [திருமதி டி. என். அனந்தநாயகி]

அதேபோன்று, சென்னை நகரத்தில் இருக்கிற தண்ணீர் சப்ளை பற்றியும் அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறோம். அங்கிருந்து கொண்டுவரலாமா, இங்கிருந்து கொண்டுவரலாமா என்று சிந்தித்துக் கொண்டிருப்பது சரியல்ல. நிரந்தரமான ஒரு ஏற்பாடு இப்பொழுது இல்லை. இப்பொழுது இருக்கிற மாதிரி மீண்டும் பூண்டி ரிசர்வாயருக்குத் தண்ணீர் வரவழைக்கலாமா அல்லது அண்டர் கிரௌண்டு வாட்டரை எடுக்கலாமா என்று யோசனை இருக்கிறது. முடிந்தவரையில் ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்தால் தான் சென்னை நகரத்தில் குடிதண்ணீர் பிரச்னை இல்லாத அளவுக்குத் தீர்க்க முடியும். ஆந்திர அமைச்சர் இங்கு வரும்பொழுது 'எங்களுக்குக் கொஞ்சம்கூட தடை இல்லை, தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்றுதான் சொல்லுகிறார். இதையெல்லாம் துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். கில்பாக் மெடிகல் காலேஜில் உள்ள தமிழ் மருத்துவப் பகுதியைத் தயவு செய்து மூடவேண்டாம். அதை இன்னும் விஸ்தரிப்பதுபற்றி சிந்திக்க வேண்டும். குற்றாலத்தில் தமிழ் மருத்துவத்தைப்பற்றி சோதிக்க வேண்டுமென்றால் அதற்கு பேஷண்டுகள் கூட கிடைக்குமா என்பது சந்தேகம். அங்கு இருப்பது அங்கேயே இருக்கட்டும். இங்கு இருப்பதை எடுக்காமல் இன்னும் தீவிரப் படுத்தி, மத்திய அரசாங்கம் தமிழ் மருத்துவ ஆராய்ச்சிக்காகப் பணம் கொடுப்பதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு, தமிழ் மருத்துவ முறையில் இன்னும் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திருமதி அ. கிருஷ்ணவேணி**: கனம் தலைவரவர்களே, மாதர் குல மாணிக்கம் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேனியில் ஒரு அரசாங்க மருத்துவ மனை கட்டுவதற்காக சுமார் ரூ. 9,51,800 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகக் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், தேனி வட்டாரத்திலுள்ள பொது மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், தேனி வட்டாரப் பொது மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். தேனியில் உள்ள தொழில் பேட்டைக்கு அருகில் அரசாங்க நிலம் இருக்கிறது. அதில்தான் இந்த மருத்துவ மனைக்கான கட்டடம் கட்டவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அங்கு கட்டினால்தான் நல்ல சுகாதார வசதி கிடைக்கும்.

அடுத்தபடியாக, அமச்சியாபுரத்தில் ஏழை ஹரிஜனங்கள் இருக்கிறார்கள் என்பது சுகாதார அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எங்கள் கிராமமாகிய அமச்சியாபுரத்திற்கு கனம் சுகாதார

அமைச்சர் அவர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கு ஒரு தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேற்படி விடுதியில் திறமையான பணியாளர்கள் பணியாற்றி வந்தார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரசவம் சேதம் ஆகாமல் நல்ல முறையில் பெண்கள் பிரசவித்து, 4, 5 நாட்களுக்கு அந்த விடுதியில் தங்கி, தாயும், குழந்தையும் சுகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அது இப்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. சுகப் பிரசவமாக இருந்தால், ஏதோ ஆண்டவன் கிருபையால் சுகப் பிரசவம் ஆகிவிடுகிறது. கொஞ்சம் கஷ்டப்படக்கூடிய பிரசவமாக இருந்தால், அந்த கிராமத்திலுள்ள மருத்துவர்கள் பல அம்மையார்கள் இருக்கிறார்கள், சரியாக மருத்துவம் பார்ப்பதற்கு வசதி கிடையாது. கஷ்டப்படக்கூடிய பிரசவ கேஸ்களை மதுரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லக்கூடிய நிலைதான் இருக்கிறது. இல்லாவிட்டால் தேனிக்கு போகவேண்டும். மேற்படி கிராமத்திலிருக்கும் பெண்கள் ஏழைப் பெண்கள், வசதி இல்லாதவர்கள். ஆகவே, கனம் சுகாதார அமைச்சர் அவர்களை நான் மன்றாடி பணிவோடு பெண்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், அமச்சியாபுரத்தில் ஒரு தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்த வேண்டுமென்பதுதான்.

அடுத்தபடியாக, ஆண்டிபட்டியில் தற்சமயம் இருக்கும் ஆஸ்பத்திரி பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அதில் ஒரு டாக்டர் இருக்கிறார். ஆண்டிபட்டி ஆஸ்பத்திரியில் வரக்கூடிய நோயாளிகளுக்குத் தகுந்த மருந்துகள் கிடையாது. அவர்களெல்லாம் அரசாங்க ஆஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மதுரை அல்லது பெரியகுளம் ஆஸ்பத்திரிக்குச் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. மேலும் வைகை அணைக்கட்டு, கண்டமனூர், கடமலைக்குண்டு ஆகிய போலீஸ் ஸ்டேஷன்களின் எல்லைக்குள் தற்கொலை செய்து கொண்ட, அடித்துக் கொல்லப்பட்ட பிரேதங்கள் ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி, ஆண்டிபட்டி ஆஸ்பத்திரிக்கு போஸ்ட் மார்டெம் பரிசோதனைக்காகக் கொண்டுவரப்படுகின்றன. ஆகவே, தயவு செய்து ஆண்டிபட்டி பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியை அரசாங்க ஆஸ்பத்திரியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கனம் சுகாதார அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திருமதி செகதாம்பாள் வேலாயுதம்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுகாவில் குடிதண்ணீர் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது என்று பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். கொள்ளிடம் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு இப்பொழுது ஒரு ஸ்கீம் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதைத் துரிதப்படுத்தி ஜெயங்கொண்டான், உடையார்பாளையத்திற்குத் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உடையார்பாளையத்தில் பல ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளில் படித்து பாஸ் செய்த மாணவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நாடி வெளி ஊர்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. முசிறி, திருச்சி ஆகிய இடங்களுக்குப் போகவேண்டியிருக்கிறது. இரண்டு, மூன்று சீட்டுகள்தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. கனம் முதல் அமைச்சர் அவர்களை நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், என்னுடைய தாலுகாவிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. படித்து பாஸ் செய்த மாணவர்களுக்கு அதிகப்படியான சீட்டுகள் ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் உடையார்பாளையம் தாலுக்காவில் ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

உடையார்பாளையம் தாலுகாவில் ஜயங்கொண்டான் மருத்துவமனை மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த மருத்துவ மனையின் கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கான எந்தத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அது சேர்க்கப்படவில்லை. ஜெயங்கொண்டான், தாலுகா தலைநகரம். அங்கே பெண்களுக்கு நல்ல முறையில் மருத்துவ வசதி கிடையாது. பெண் டாக்டர் நியமிக்கப்படவேண்டும். மின்சார வசதி இதுவரையிலும் செய்து கொடுக்கப்படவில்லை. லைன் வருகிறது. ஆகவே, இம்மாதிரியான வசதிகளையெல்லாம் இந்த மருத்துவ மனைக்குச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெயங்கொண்டான், உடையார்பாளையம் பகுதிக்கு குடிதண்ணீர் வசதி உடனடியாகச் செய்துகொடுக்கவேண்டும். உடையார் பாளையம் தாலுகாவில் பல இடங்களில் போலீஸ் நிலையங்கள் இருக்கின்றன. போலீஸ்காரர்கள் சில இடங்களில் போக்குவரத்தை முன்னிட்டு நிற்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய நிழலுக்கான குடை வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உடையார்பாளையம் பகுதியில் குடிசை வாழ் பகுதி அதிகமாக இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு தீயணைப்புப் படை அவசியமாக ஏற்படுத்த வேண்டும். மீஞ்சுரிட்டி அவுட்-போஸ்டாக இருக்கிறது. அதை ஒரு சப்-போலீஸ் ஸ்டேஷனாக மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது தாலுக்காவில் தீயணைக்கும் படை மிக அவசியம். குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியம். உடையார்பாளையத்தில் $1\frac{1}{2}$ மைலில் முதலியார் தெருவில் ஒரு ஓவர்ஹெட் டாங்கு கட்டி குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை என்னுடைய தாலூக்கா மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லாப் பகுதிகளுக்கும் நன்மை செய்திருக்கிறார்கள். என்னுடைய பகுதிக்கு நன்மை ஒன்றும் செய்யப்படவில்லை. கட்சி மனப்பான்மையை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் கொள்ளக்

[திருமதி செகதாம்பாள் வேலாயுதம்] [21st March 1966

கூடாது. கட்சி மனப்பான்மை இல்லாமல் எங்கள் பகுதிக்குக் குடிதண்ணீர் வசதி, மருத்துவ வசதி, தீயணைக்கும் படை வசதி ஆகிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

10-30 a.m. * SRIMATHI A. SUARES : Mr. Speaker, Sir, I support the Demand under 'Medical' in the new Budget. One of the Departments that has made great strides in progress and expansion has been the Medical Department. The budget allotment has increased from Rs. 9,74,53,309 to Rs. 10,98,50,600 which works out to an increase of about 12 per cent. The increases have been mostly under Hospitals and Dispensaries, Medical Colleges and the Fourth Plan provision. Expansion of Government hospitals in urban areas presents few problems but the extension of the Primary Health Centre Scheme bristles with difficulties.

The main difficulty in the establishment of a Primary Health Centre is not the resources but the dearth of doctors who are willing to serve in rural areas. To overcome this difficulty, greater amenities should be provided for the doctors serving in rural areas. A suitable house with water supply, electricity and sanitation is the bare minimum requirement. Schooling and market facilities are also necessary. The term of service of a doctor in a Primary Health Centre may be less than the period of a doctor in other hospitals so that the doctors will put up with the difficult conditions of living in a village for a limited period. The special allowance for such doctors in rural centres does not compensate them enough.

There are 210 Primary Health Centres at present. In the next year a sum of Rs. 61 lakhs has been provided for the establishment of 120 additional Primary Health Centres. It is hoped that a sufficient number of doctors will offer their services to work in such hospitals in a true spirit of service to the country.

There has been an increase in the number of students in the medical colleges from 700 to 936 with the setting up of two new colleges at Chingleput and Tirunelveli.

The greatest achievement in the Public Health Department during the current Plan period has ben the eradication of malaria which till recently was one of the major scourges of the country.

In the new Budget a provision of Rs. 170 lakhs has been made for the water supply schemes of the Madras Corporation as loans and grants. Besides this, another sum of Rs. 170 lakhs has been provided for other urban water supply schemes. This will ease the situation with regard to water-supply.

In the Fourth Plan it s proposed to train the House Surgeons of the City Medical Colleges in Public Health in the Primary Health Centres of the Chingleput district. This will have beneficial results both by giving practical training to the House Surgeons in Public Health and by giving prominence to Primary Health

21st March 1966] [Srimathi A. Suares]

Centres. Further prominence will be given to the Primary Health Centres when they become the focus for each area under the maintenance phase of the National Malaria Eradication Programme.

Provision of quarters for doctors is a long felt need. There seems to be no provision and no phased programme to meet this need. It is a fact that when hospitals are now constructed a start is being made to construct a few quarters for doctors. But this barely touched the fringe of the problem. The older hospitals have little or no provision for quarters. A premier hospital like the General Hospital provides quarters only for the R.M.O. and the Assistant R.M.O. In some City Hospitals there are quarters for Superintendents, R.M.Os. and in one case, the Dean. But no definite proposal has been put up for the construction of quarters for doctors. We are now at the end of 15 years of planning. It is time that a start is made in the matter of quarter. I would suggest that a start should be made in the Primary Heath Centres by constructing suitable and simple houses with minimum comforts.

There are doctors transferred to places where residential houses are not available even if they are prepared to pay abnormally high rents. Getting a house through the Accommodation Controller sometimes takes a whole year. During this period, families of doctors have to be left behind and double establishments have to be maintained for an indefinite period. Provision of quarters will minimise such difficulties. I understand that in Waltair, a colony has come up with quarters of various types for doctors in various categories. This must be a great boon to the staff. A scheme like this for the City of Madras where housing space is limited may be considered and the flat system may be introduced. At present there are open spaces attached to some Government hospitals or to Government quarters. Those spaces could be utilised for building flats. If no spaces are available, houses could be requisitioned in the vicinity of hospitals.

Expansion has been provided for the Employees State Insurance Scheme in this year's Budget. The phased programme provides for hospitals and dispensaries, both ordinary and mobile. There are full-time as well as part-time doctors and several part-time specialists. The Government have decided to extend gradually the medical benefits of the E.S.I. Scheme to the families of insured persons first in the Madras City and its suburbs and then to other industrial centres. The question of extending the scheme to the employees of the commercial establishments in the Madras City is also under the consideration of the Government.

The expenditure on the provision of medical benefits under the E.S.I. Scheme is being initially met by the State Government and then shared between the E.S.I. Corporation and the Government of Madras. This is a non-Plan Scheme sponsored by the State Government. The out-patients in hospitals are increasing in numbers for they know the value of free medical treatment. The expansion of the E.S.I. scheme will relieve the congestion in the Government hospitals.

[Srimathi A. Suares] [21st March 1966

In conclusion, I wish to express our thanks to the Madras Government for having extended medical benefits from year to year. Three more medical colleges will be opened in the Fourth Plan period and the facilities for post-graduate studies will be extended. Several new hospitals will be opened in the coming year and 3,500 additional beds will be provided in the Fourth Plan.

Thank you, Sir.

***திரு. செ. மாதவன்** : கனம் தலைவர் அவர்களே, பதினெட்டு ஆண்டு கால ஆட்சியில், பல கோடி ரூபாய்களைத் திட்டங்களுக்குச் செலவழிக்க தீவிரமான திட்டங்கள் போட்டு, குடி தண்ணீர்த் திட்டம் என்கின்ற பெயராலே ஒன்று மட்டுமல்ல, பலவகைப்பட்ட திட்டங்கள் போட்டு, குடிதண்ணீர்த் திட்டம், தேசிய பாதுகாப்புத் தண்ணீர் அளித்தல், இப்பொழுது அண்டர்-கிரௌண்ட் வாட்டரைப் பரிசீலிக்க ஒரு குழு என்று இப்படிப் பல ஏற்பாடுகள் செய்தும் இன்னும் நம்முடைய நாட்டில் குடி தண்ணீர்த் திட்டம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கனம் அமைச்சர் கூறும்போது, வியாதிகள் வராமல் தடுப்பதுதான் சர்க்காரின் நோக்கம். ஆகவே, குடிதண்ணீர்த் திட்டத்திலேதான் நாங்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு செலவழிக்க, இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே நம் அரசாங்கம் பல திட்டங்களையும் செயல்படுத்தும் சிரத்தை இல்லாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1958-லே கிராமப் புறத்திலே சுகாதார வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டது. இது 1958-லே. ஆனால் இன்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தத் தொகை செலவழிக்கப்படாமல், அப்படியே வாங்கிய கருவிகள், சாதனங்கள், அத்தனையும் பாழாகக் கிடந்தன என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு அன்மையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதில் ஏற்பட்ட நட்டம் ரூ. 23,000. இதற்கு டிபார்ட்மெண்ட் என்ன விளக்கம் கொடுக்கிறது ? இந்தக் குடி நீர்த் திட்டத்திற்காக சுகாதார வசதியைப் பெருக்குவதற்காக, ஜி.ஐ. பைப்ஸ், எம். எஸ். ராட்ஸ் போன்றவைகள் ரூ. 7,18,000-க்கு வாங்கப்பட்டன. டெண்டர் கால்ஃபார் பண்ணிச் செய்வதற்கு மாறாக, அவசர அவசரமாக இதை நிறைவேற்றப் போகிறோம் என்று, ரூ. 1,21,000 அதிக விலை கொடுத்து இந்தச் சாதனங்களை வாங்கியது அப்பொழுது. பல ஆண்டுகளுக்குப் பிறகும், இவை உபயோகப்படாமல், இந்தத் திட்டம் அரசாங்கத்தினால் கைவிடப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் கைவிடப்பட்டதினால் இந்தச் சாதனங்கள் வேறு திட்டங்களில் இணைக்கலாமா என்று பரிசீலிக்கப் படுகிறது என்று தெரிகிறது. இந்தத் திட்டங்களைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறியிருக்கிறார்கள்: 405 கிராமங்களில் திட்ட வேலையை எடுத்துக் கொண்டோம், 1,039 திட்டங்களைப் போட்டோம் என்று கூறிவிட்டு

21st March 1966] [திரு. செ. மாதவன்]

நின்றுவிட்டார்கள். அந்த 1,039 திட்டங்களில் எத்தனை திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள் என்பது தெளிவாக்கப்படவில்லை. இது கிராமங்களைப் பொறுத்த மட்டில் உள்ள நிலைமை.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், பல முறை இந்த மன்றத்தில் வற்புறுத்தி, அரசாங்கம் பகிரங்கமாக இந்தச் சட்ட மன்றத்திலேயே, "நாங்கள் 1961-ம் ஆண்டிலேயே சென்னை மாநகராட்சிக்குத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டத்தைப் பரிசீலித்தோம், இதற்காக ஸெபரேட் இலாக்கா ஏற்படுத்தி, அதனிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தோம், இன்வெஸ்டிகேஷன் செய்யச் சொன்னோம்", என்று சொல்லியிருக்கிறது. அப்படித் திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்காகவே சென்னை மாநகராட்சி நிர்வாகத்திலிருந்து 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் இந்த அரசாங்கம் பெற்றிருக்கிறது. அரசாங்கம் திட்டங்களைச் செயல் படுத்த, திட்டங்களை நிர்மாணிக்க மாநகராட்சியிலிருந்து ரூபாய் பெற்றது. ரூபாய் பெற்றதற்குப் பின்னர், 11 கோடி சொச்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை இந்த அரசாங்கத்தைச் சார்ந்த இலாக்கா உருவாக்கியிருக்கிறது. காசு கொடுக்க வேண்டும் மாநகராட்சி. திட்டத்தை உருவாக்குவது அரசாங்க இலாக்கா. அரசாங்க இலாக்கா திட்டத்தை உருவாக்கிவிட்டு, கடைசியில் அனுப்பிய பதில் என்ன? "நாங்கள் இப்படி ஒரு பெரிய திட்டத்தைப் போட்டோம்; அந்தத் திட்டம் பயன்படாது" என்று அரசாங்கத் தரப்பிலிருந்து கூறுவதைத்தான் நாம் முடிவாகக் கண்டோம்.

கனம் அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருப்பது என்ன? இந்த மாநகர மக்களின் நன்மைக்காகப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விளக்கம் சொல்லும்போது, "பல லட்ச ரூபாய்களை மாநகராட்சிக்குக் கொடுக்கிறோம்; தண்ணீர்த் திட்டத்திற்காக, சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்குகிறோம், ஆனால் மாநகராட்சி செலவழிக்கவில்லை" என்ற குற்றச்சாட்டு வெளியிலே மேடையிலும் இங்கே சட்ட மன்ற உறுப்பினர்களாலும் சொல்லப்படுகிறது. உண்மை என்ன? அரசாங்கத்திற்கு இதுபற்றி அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சிக்கு ஒரு முறை ஒதுக்கிய பணம் 225½ லட்ச ரூபாய். செலவழித்த பணம் 165 லட்ச ரூபாய், மீதப்பட்ட பணம் 59½ லட்ச ரூபாய். இந்த 59½ லட்ச ரூபாய் அரசாங்கம் மாநகராட்சிக்குக் கொடுத்ததாகக் கணக்குக் காண்பித்தது. ஆனால், மாநகராட்சி செயல்படுத்தவில்லை என்று மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உண்மை என்ன அரசாங்கத்தினுடைய அங்கமாக இருக்கும் மாநகராட்சி அதிகாரி இதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் அரசாங்கம் கடன் வழங்குவதற்கு மனுப் பெறுகிறது. மனுப் பெறுவது என்றால், அந்த ஆண்டு இறுதியிலே மனு பெறப்படுகிறது. மனு போட்டதற்குப் பின்னால் சிவப்பு நாடா (ரெட் டேபிஸம்) முறை வந்துவிடுகிறது. பல மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக மாநகராட்சிக்கு இந்த அரசாங்கம் கொடுக்கக்கூடிய பல லட்ச ரூபாய் உதவி கிடைக்காமல்போய், திட்டத்தை நிறை

வேற்ற முடியாத சூழ்நிலையை இந்த அரசாங்கம் உண்டாக்குகிறது, காரணம் என்ன? 17 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, இங்கேயே அதை மறுக்கிறார்கள், கடனைக் காலத்தில் கொடுக்காமல் போனதனால் திட்டத்தை மாநகராட்சி செயல்படுத்த முடியவில்லை. நம்முடைய திட்டங்களை நிறைவேற்றக் கூடாததற்குக் காரணம் பத்தாண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் மாநகர ஆட்சி நிர்வாகத்தில் இருக்கிறது என்ற தீய நோக்கம் இருக்கிறதோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அரசாங்கம் தனிப்பட்ட கட்சியைப்பற்றிச் சிந்திக்காமல், இந்த மாநகர மக்களுடைய பொது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பள்ளிச் சிறுவர்களுக்குச் சுகாதார வசதி செய்ய வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை. காரணம் என்ன, விளக்கம் என்ன என்று கூறப்படுகிறது இலாக்காவால்? பஞ்சாயத்து நிர்வாகமும் அரசாங்க இலாக்காவும் ஒத்துழைக்க மறுக்கிறதா? பஞ்சாயத்து நிர்வாகம் தனி அல்ல. அதற்கென்று தனி இலாக்கா அரசாங்கத்திடம் இருக்கிறது. அரசாங்கத்திலுள்ள இரண்டு இலாக்காக்கள் ஒன்றுக்கொன்று ஒத்துழைக்க மறுக்கலாமா? ஒதுக்கிய தொகை 1 லட்சம் 82 ஆயிரம் ரூபாய். 30,000 ரூபாய் செலவழிக்கப்படாததற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதைப்பற்றிப் பல முறை இந்த மன்றத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டப் போகிறோம் என்று திட்டம் போடுகிறோம். எமர்ஜன்ஸி வந்ததனால் கட்டடங்களைக் கட்ட முடியவில்லை, ஆதனால் வாடகைக் கட்டடங்களிலே ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே, கட்டிய கட்டடங்கள் எல்லாம் ஒழுங்காகக் கட்டப்படுகின்றனவா என்பதைப் பரிசீலிப்பதற்கு இந்த அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. திருச்சி மாவட்டத்திலே ஒரு நிகழ்ச்சி, 27,000 ரூபாயில் கட்டடம் கட்டப்பட்டது. கட்டிய சில ஆண்டுகளில் அது இடிந்து விழுந்து விட்டது. உடனே, ஸ்தல நிர்வாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர் பரிசீலித்தார். 27,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடத்திற்கு ரிபேர் செய்வதற்கு செலவு 18,000 ரூபாய் ஆகும் என்று இந்தச் சர்க்கார் திட்டம் தீட்டியது. இது எப்படிப் பொருத்தமாக அமையும்? ஆனால், இதுவரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. காரணம் என்ன? யார் இதற்குப் பொறுப்பாளி? உடனே (ட்யூவல் ஸிஸ்டம்) இரட்டை ஆட்சி முறை வந்துவிடுகிறது. பஞ்சாயத்து நிர்வாகமும் பொது சுகாதார இலாக்காவும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படாதது காரணமா? யார் இதற்குப் பொறுப்பாளி? இதைத் தீர்மானிக்காததனால் அரசாங்க இலாக்காவுக்கும் குழப்பமான நிலை ஏற்படுகிறது என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளிச் சிறுவர்களுக்குத் தொத்து நோய் பரவுதலைத் தடுக்க வேண்டும் என்று பல லட்ச ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டது. அந்தத் தொகை இந்த அரசாங்கத்தால் இதுவரை செலவழிக்கப்படவில்லை. 1962-63-ல் 2 லட்சம் 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1963-64-ல் 2 லட்சம் 7 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதுவரை அந்தத் தொகைகள் செலவழிக்கப்படவில்லை. காரணம் என்ன? சர்க்கார் சொல்லக்கூடிய பதில், எந்த வாக்ஸினை உபயோகப் படுத்துவது என்பது பற்றித் திட்டவட்டமான முடிவு ஏற்படாததால் இவ்வளவு லட்ச ரூபாய்க்குத் திட்டம் போட்டும் செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்று சுட்டிக் காட்ட நான் ஆசைப்படுகிறேன்.

கிராமப்புறங்களில் மாவட்டக் கழக ஆட்சியில் இருந்த ஆஸ்பத்திரி நிறுவனங்களை இப்பொழுது டிஸ்பென்ஸரிகளாக மாற்றியிருக்கிறார்கள். அவற்றைப் பஞ்சாயத்து யூனியன்களுடைய நிர்வாகத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். ஒரு பக்கம் அரசாங்கமே மருத்துவ விடுதிகளை நடத்துகிறது. இன்னொரு பக்கம், பஞ்சாயத்து நிர்வாகம் நடத்துகிறது. இந்த இரண்டுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, சில டிஸ்பென்சரிகளில் மருந்து இல்லை, டாக்டர் இல்லை என்ற குறை இருக்கிறது. டாக்டரைப் போடுவதில், எப்படிப்பட்ட டாக்டரைப் போடுவது என்பதில் குழப்பம் இருக்கிறது. இதனால் பல டிஸ்பென்சரிகள் மருந்து இல்லாமல் இருக்கின்றன. இந்த இரண்டு இலாக்காக்களும் ஒன்றாக இணைந்து செயல்பட இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மருத்துவம், பொதுச் சுகாதாரம் முதலிய மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கிறேன். தேசம் முழுவதற்குமாகப் போடப்பட்டிருக்கிற ஐந்தாண்டுத் திட்டங்களைக் கவனித்துப் பார்க்கிறபோதுகூட, மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிட்ட பணத்தைவிட அதிகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்த இனத்தின் பேரால் செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்டிருப்பது தெரியும். இந்த ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் கூட, இந்தச் செலவினங்கள், வருஷா வருஷம் திட்டமிடுகிறபோது, ஐந்தாண்டுத் திட்டங்களிலே, அதிகரித்தே வந்திருக்கின்றன.

ஒரு துறையை எடுத்தால்கூட, ஆரம்பத்தில் 8,000 படுக்கைகள் இருந்தன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அது 12,000 ஆக உயர்ந்தது. அடுத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20,000 ஆக உயர்ந்தது. 24,000 படுக்கைகளாக விஸ்தரிப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் வகுத்திருக்கக்கூடிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்குகிற

பணத்தைப் பார்க்கும்போது, இந்த இனத்தில் செவ்வனே இருந்தாலும்கூட, இன்னும் ப்ரொபோர்ஷனேட்டாக, விகிதாசாரப்படி அந்தப் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு நாள்காவது திட்டத்தில் ஒதுக்கீடு போதுமா என்பதை அரசாங்கம் தீவிரமாக யோசிக்க வேண்டும்.

சமீபத்தில் தேச பந்தோபஸ்துக்காக நம்முடைய ராஜ்யத்திலிருந்து ஏராளமான டாக்டர்கள், நர்ஸ்கள், சிப்பந்திகள் அனுப்பப்பட்டார்கள். அவர்களுக்கெல்லாம்—மற்ற ராஜ்யங்களில் கொடுக்கிறார்களோ, கொடுக்கவில்லையோ குடும்பப் பென்ஷன் ரூ. 250 கொடுத்திருப்பது மிகவும் சாலச் சிறந்த ஏற்பாடாகும். நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய டாக்டர்கள், சுகாதார சிப்பந்திகள், அந்தத் துறையிலே பயின்று முன்னேறி நிற்கக்கூடிய நுணுக்க அறிஞர்கள், உலகத்தில் உள்ளவர்களோடு ஒப்பிடத்தகுந்த அளவு வல்லவர்கள் என்ற நல்ல பெயரை ஈட்டியிருக்கிறார்கள். இந்த ராஜ்யத்திற்கு என்று பட்ட மேல் படிப்பு இன்ஸ்டிட்யூட் அமைப்பதற்குக் கடந்த பல வருஷங்களாக ஒரு முயற்சி இருக்கிறது. பட்ட மேற்படிப்புக்கான அத்தகைய திட்டத்திற்கு ஐந்து கோடி ரூபாய் செலவாகலாம், இந்த ராஜ்யத்திற்கு பெற முயற்சித்திருக்கிறோம் என்ற செய்தியை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இது போதாது. எப்படியேனும், மத்திய அரசாங்கத்திலிருந்து அதைப் பெற்று இந்த ராஜ்யத்தில் காலா காலத்தில் அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருநெல்வேலி ஜில்லாவிலே காச நோய்க்காகத் தனியான ஆஸ்பத்திரி நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். தொழு நோய் சிகிச்சைக்காகச் சில ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறார்கள். திருச்செந்தூர் தாலுக்கா, பரமன்குறிச்சி, சீருடையார்புரத்தில் ஸப்ஸிடியரி சென்டர் இருக்கிறது. அந்த இடத்தில் வியாதியஸ்தர்கள் தங்கி சிகிச்சை பெற காலாகாலத்தில் வசதி செய்யவேண்டும். தொழுநோய் சிகிச்சைக்காகத் தனியார் துறையிலே முயற்சி செய்திருக்கக்கூடியவர்களுக்கும் எந்த அளவிற்கு அதிகப்பட்ட உதவியும் ஊக்கமும் உற்சாகமும் கொடுக்க முடியுமோ அதையும் அரசாங்கம் ஆராய்ந்து போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காயல்பட்டினம் தண்ணீர் ஸப்ளைத் திட்டம், 37½ லட்சம் ரூபாய் செலவில், 11 கிராமங்களுக்காகத் திட்டமிடப்பட்டது. அது பல காலத்திற்கு முன்பு நிறைவேறியிருக்கிறது. திட்டத்தில் சேர்க்கப்பட்ட எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் உள்ள பகுதிகள் விடுபடாமல் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை. அப்படிப்பட்ட பல பகுதிகள் இருக்கின்றன, தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படுகிறது, ஆனால் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அதனால் பஞ்சாயத்துக்களுக்கு வீணான சிரமம் ஏற்படுகிறது. மக்களுக்குக் கஷ்டமிருக்கிறது. ஆகையால் பஞ்சாயத்துக்கள் எல்லாப் பகுதிகளுக்கும் காலா காலத்தில் இத் தண்ணீர் திட்டத்தை விஸ்தரித்துக் கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏற்கனவே ஒரு

திட்டம் இருக்கிறது. வீரபாண்டியன் பட்டணம் ரூரல் பஞ்சாயத்தில் 5 குழாய்களும், ஆறுமுகநேரி பஞ்சாயத்தில் 18 குழாய்கள் வைப்பதற்கும், வேறு சில பஞ்சாயத்துக்களில் விடுபட்ட பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட ரூரல் வாடர் சப்ளை ஸ்கீம்படி தண்ணீர் வசதியை ஏற்படுத்துவதற்கும் திட்டம் இருக்கிறது. இத் தண்ணீர் திட்டப் பராமரிப்பை பஞ்சாயத்துக்களின் நிர்வாகப் பொறுப்பாக ஆக்கிவிட்ட காரணத்தினால் அரசாங்கத்திற்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்று தட்டிக் கழிக்கக் கூடாது. பஞ்சாயத்துக்களால் இவற்றை விஸ்தரிப்பது என்பது முடியாத காரியம். ஆகவே இந்தப் பொறுப்புக்களை அரசாங்கமே மேற்கொள்ளுவது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் 50 முனிசிபாலிட்டிகளில் ஹெல்த் ஆபீசர்கள் இல்லை என்று நினைக்கிறேன். போதுமான ஹெல்த் ஆபீசர்களும் இல்லாத காரணத்தினால், சீனியர் சானிடரி இன்ஸ்பெக்டர்களை பரீட்சார்த்தமாகப் போடலாம் என்பது என் அபிப்பிராயம். சீனியர் சானிடரி இன்ஸ்பெக்டர்களை, சீனியர் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை இத் துறையில் நியமனம் செய்து பரீட்சித்துப் பார்ப்பது வெற்றிகரமாக இருக்கும்.

மற்ற எல்லாத் துறைகளுக்கும் அகில இந்திய கவுன்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நர்சுகள் கவுன்சில், பார்மஸிஸ்ட் கவுன்சில் என்றெல்லாம் இருப்பதுபோல சுகாதாரத் துறையின் கீழ் இருக்கிற சிப்பந்திகளைப் பொறுத்தவரையில் அகில இந்திய கவுன்சில் அமைப்பதற்கு இந்த ராஜ்ய அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

உணவுக் கலப்படத்தைப் பொறுத்தவரையில் அதைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் மத்திய அரசாங்கத்தால் வெகுநாளைக்கு முன் கொண்டு வரப்பட்டதாகும். ராஜ்ய அரசாங்கமும் போதுமான அளவுக்கு இதில் கவனம் செலுத்தவில்லை என்பது என் எண்ணம். ராஜ்ய மட்டத்தில் அதற்கென்று ஒரு குழு அமைத்து—ஸ்க்குவாட் அமைத்து நகர்ப்புறப் பகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இன்றைய தினம் நடவடிக்கை எடுக்கப்படுமானால்—சாதாரண சிறிய வியாபாரிகள் தான் நியாமற்ற முறையில் வழக்குத் தொடரப்பட்டு பல கேஸ்களுக்கு உள்ளாகிறார்கள், ஆனால் கலப்படம் செய்யப்படுகிற மூல இடத்திலேயே சரியான கண்காணிப்பு வேண்டுமென்று நினைக்கிறேன்.

கடைசியாக மருத்துவ, சானிடரி துறைகளை ஒன்றாக இணைப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். அது சிக்கனமாகவும் இருக்காது. அதிகச் செலவுதான் ஆகும். அந்த அந்த இலாக்காக்களில் உள்ள சிப்பந்திகளுடைய உயர்வு நிலைமையைப் பார்த்தாலும் கஷ்டம் ஏற்படும். ஜில்லா போர்டு சிப்பந்திகளுடைய நிலைமை இன்னும் முடிவாகவில்லை. கேரளாவில் இருந்து வந்த சிப்பந்திகளுடைய நிலைமை இன்னும் தீர்க்கமான முறையில் முடிவு செய்யப்

[திரு. எம். எஸ் செல்வராஜன்] [21st March 1966

படவில்லை. உதாரணமாக கேரளாவிலிருந்து வந்த ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் மாதம் ரூ. 150 பெற்று வந்தவர்கள இங்கு ரூ. 100 பெறுகிறார்கள். இன்றைக்கு இந்த இரண்டு துறைகளை இணைப்பது என்று போகிறபோதும் பல சங்கடங்கள் ஏற்படலாம். மெடிகலைப் பொறுத்த வரையில் அது மிக நுணுக்கமான துறை. பப்ளிக் ஹெல்த் என்கிறபோது அதுவும் அவ்வளவு இல்லாவிட்டாலும் ஒரு நுணுக்கமான துறை. வேடிக்கையாகப் பார்த்தால் சுகாதாரத் துறை செம்மையாக இயங்க ஆரம்பித்துவிட்டது என்றால் மெடிகல் துறையில் உள்ளவர்களுக்கே வேலை போய்விடும். இந்த இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைப்பது என்கிற யோசனை சரியல்ல, அதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

* **திரு. அ. அப்பாவு தேவர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஆதரித்து சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன.

தஞ்சை ஜில்லாவில் மருத்துவக் கல்லூரி நல்லமுறையில் நடந்து வருகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் நல்ல வசதிகள் இருக்கின்றன. நல்ல டாக்டர்களும் இருந்து வருகிறார்கள். அதனால் அது நல்லமுறையில் நடந்து வருகிறது. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அடுத்தபடியாக அதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அதற்குத் தஞ்சாவூரில் இருந்தும் மற்ற கிராமங்களில் இருந்தும் போய் வர சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் முனிசிபாலிட்டியில் குடிதண்ணீர் வசதி மிகக் குறைவாக இருக்கிறது. இந்த வருஷம் குடிதண்ணீர் இல்லாமல் தஞ்சைவாசிகள் மிகக் கஷ்டம் அடைந்தார்கள். இப்போதும் தஞ்சை நகரில் சாயந்திரம் நான்கு மணிக்கு மேல் தான் குடிதண்ணீர் வருகிறது. வந்தாலும் ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் தான் தண்ணீர் வருகிறது. அதனால் ஜனங்கள் இந்த வருஷத்தில் கஷ்டத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். தஞ்சை குடி தண்ணீர் வசதிக்காக அந்த முனிசிபாலிட்டியில் இருந்து இதற்கு முன் பல திட்டங்களை வகுத்து அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களில் எது நன்மையைத் தரக்கூடியதோ அந்தத் திட்டத்தை உடனடியாக அவசியம் செய்ய வேணுமாய் அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தஞ்சை முனிசிபாலிட்டியில் சுகாதாரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதையும் கவனிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி சில கிராமங்களில் குடிதண்ணீர் வசதியும், சுகாதார வசதியும் குறைவாக இருக்கிறது. அவைகளையும் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சில கிராமங்களில் ஹரிஜனங்கள் இருக்கும் இடங்களில் குடிதண்ணீர்

21st March 1966] [திரு. அ. அப்பாவு தேவர்]

வசதியும், சுகாதார வசதியும் குறைவாக இருக்கிறது. குறிப்பாக என் தொகுதி சாலியமங்கலம் பகுதியில் உள்ள கிராமங்களில் அவைகளை உடனடியாகச் செய்துகொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சாலியமங்கலம் தொகுதியில் தாய் சேய் நலம் சம்பந்தப்பட்ட விடுதி 5 கிராமத்திற்கு ஒன்றாக இருக்கிறது. அவைகள் நல்ல பணியாற்றி வருகின்றன. அந்த விடுதிகளுக்குக் கட்டடம் சொந்தமாக இல்லை. கிராமப் பஞ்சாயத்து கட்டடங்களில் இருந்து வருகின்றன. அவைகளுக்குத் தனியாகக் கட்டடம் அமைத்துக் கொடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய சாலியமங்கலம் தொகுதியில் சில ப்ளாக்குகளில் கிராம ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அவைகளில் சில ஆஸ்பத்திரியில் மருந்துகள் கிடையாது என்று டாக்டர்கள் குறை கூறுகிறார்கள். போதுமான மருநது சப்ளை கிராம ஆஸ்பத்திரிகளுக்குச் செய்ய வேண்டும். அந்த ஆஸ்பத்திரி டாக்டர்களும், சிப்பந்திகளும் காலத்தில் வந்துபோகும்படியும் செய்யவேண்டும். நோயாளிகளைச் சரிவர கவனிக்குமாறும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை அம்மாப்பேட்டை ப்ளாக்கில் ஆரம்பிப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தெரியவருகிறது. அந்த ஆரம்பச் சுகாதார நிலயத்தை அம்மாபேட்டை டவுன் பஞ்சாயத்தில் ஆரம்பிப்பதை—15 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் இருக்கும் இடம் அது. அங்கே இப்போது ஆஸ்பத்திரி இருந்து வருகிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் அதை அம்மாப்பேட்டையிலேயே கொண்டு வரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது அம்மாபேட்டை ப்ளாக்கைச் சேர்ந்த—மெலட்டூர் பஞ்சாயத்தில் ஏற்படுத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன் தஞ்சை ஜில்லாவில் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீசர் ஹெட் குவார்டர்ஸ் இருந்தது. அதை இப்பொழுது நாகப்பட்டினத்திற்கு மாற்றி விட்டார்கள். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அந்த இடத்திற்குப் போய்வர மிக கஷ்டமாக இருக்கிறது. அதை கும்பகோணத்திற்குக் கொண்டு வந்தால் மிக சௌகரியமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் அறந்தாங்கி முதலிய இடங்களில் இருந்து நாகை போவது சிரமமாக இருக்கிறது. ஆகவே டி.எம்.ஓ. ஆபீசைக் கும்பகோணத்திற்கு அருகில் கொண்டுவர வேண்டும். அடுத்தபடியாக கொசு உபத்திரவம் கிராமங்களில் இருந்து பெரிய நகரங்கள் வரையில் அதிகமாக இருக்கிறது. அதை ஒழிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

[21st March 1966

11-00 a.m. * திரு. ப. உ. சண்முகம்: கனம் சட்ட மன்றத் தலைவரவர்களே, சுகாதார மானியத்தின்மீது எனது கட்சிக்காரர்கள் தந்திருக்கின்ற வெட்டுப்பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். எனக்கு முன்பு பேசிய பல நண்பர்கள் குடிதண்ணீர்ப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை என்று மெத்த வருத்தப்பட்டுச் சொன்னார்கள். பதினெட்டு ஆண்டுக்கால ஆட்சிக்குப் பிறகுகூட கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்கவில்லையென்று சொன்னால் வரி வசூலித்தும் நிர்வாகத்திலே கோளாறு இருக்கிறது என்பதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதார மானியத்தின் மீதும், மருத்துவ மானியத்தின் மீதும் என்னுடைய நண்பர்கள் சொல்லிய கருத்துக்களை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லையென்பதால் நான் அந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்வதற்கு முற்படலாம் என்று நினைக்கிறேன். டாக்டர்கள் மீது குறை சொல்வதால் ஏதோ ஊரிலே உள்ள அத்தனை டாக்டர்களும் வேண்டாதவர்கள் என்ற யாரும் கருதிவிட வேண்டாம். நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லாமல் இருக்க முடியாது. நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன் தூரிஞ்சாபுரம் தொகுதியில் மங்களம் என்ற ஊரில் ஒரு ஆளுக்கு அடிபட்டிருக்கிறது. மங்களத்திலே உள்ள மருத்துவ மனைக்கு அவரைக் கொண்டு போய் போட்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள டாக்டர் ஏ.டி.எஸ். இஞ்செக்ஷன் போடுவதற்குத் தவறிவிட்டார். அவர் ஏ.டி.எஸ். போடாமல் அவரைத் திருவண்ணாமலைக்குக் கொண்டு போய் ஊசி போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். அடிபட்டதை அவர் அப்படியே விட்டுவிட்டார். ஒரு வாரத்திற்குப் பிறகு அவருக்கு ஜுரம் அதிகமாக வந்து டிடனஸ் ஏற்பட்டு மறுபடியும் திருவண்ணாமலை மருத்துவ மனைக்குக் கொண்டு போகப்பட்டு அங்கே இறந்துவிட்டார். திருவண்ணாமலையில் மரண விசாரணை நடந்திருக்கிறது. அந்த டாக்டர் சொல்லியிருக்கிறார், மங்களம் மருத்துவ மனையில் அன்றைக்கு ஏ.டி.எஸ். இஞ்செக்ஷன் போட்டிருந்தால் அவர் இறந்திருக்கமாட்டார் என்று தெளிவாகச் சொல்லிவிட்டார். ஒருவேளை இந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் ஏ.டி.எஸ். வைத்துக்கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. அங்கே ஏ.டி.எஸ். வாங்கி வைத்திருக்கிறார்கள், என்று சொன்னார்கள். அடிபட்டவனுக்கு ஏ.டி.எஸ். கொடுப்பது என்பது முக்கியம் என்று கருதப்படுவதால் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அது இருக்க வேண்டும். பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இருக்கிற டாக்டர்கள் ஒரு நாளைக்கு 50 ரூபாய்க்கு மருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று இருந்தும், அவர்களுக்கு ஒரு வேன் கொடுத்திருந்தும் கூட அவனைத் திருவண்ணாமலைக்குக் கொண்டுவந்துகூட ஏ.டி.எஸ். போட்டு இருக்கலாம். அவன் இறந்துவிட்டதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டியது அரசாங்கம். நான் அதைப்பற்றிச் சொல்ல வரவில்லை. டாக்டர்கள் சில சமயங்களில் [illegible]

21st March 1966] [திரு. ப. உ. சண்முகம்]

கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். எனக்கு முன்பாகப் பேசிய நண்பர் ஒருவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் உள்ள நகரசபைகளில் சுகாதார அதிகாரிகள் மிகமிகக் குறைவாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதைத் தவிர அங்கே ஓய்வுபெற்றவர்களைப் போடுகிறார்கள். ஓய்வுபெற்றவர்கள் வருகிறார்கள் என்பதற்காக நான் வருந்தவில்லை. ஆனால் வேலை திறமையாக நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. திருவண்ணாமலையில் அம்மை நோய்த் தடுப்புக்காக ரஷிய அரசாங்கம் இனாமாக அளித்த ரஷியன் லிம்ஃப் நிறையப் போட்டிருக்கிறார்கள். கார்த்திகை மாதம் என்று நினைக்கிறேன், ஒருவருக்கு இந்த அம்மை குத்தியதற்குப் பிறகு, அது வெற்றியோடு பொங்கி எழுந்தது. ஒரு வீட்டில் அம்மை குத்தியதற்குப் பிறகு உடல் நன்றாக ஆனதற்குப் பிறகு அவனுக்கே பெரிய அம்மை வியாதி வந்து இறந்துவிட்டார். இதுமாதிரி திருவண்ணாமலை நகரசபையில் பல நடைபெற்றிருக்கின்றன. சுகாதார அதிகாரிகளை நானே இதைப்பற்றிக் கேட்டேன். ரஷியன் லிம்ஃப் அவ்வளவு நலமாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். யாரோ இனாமாகக் கொடுக்கிறார்கள் என்பதற்காக அவற்றை வாங்கி விநியோகம் செய்வதற்குப் பதிலாக இங்கே கிண்டியிலே தயாரிக்கப்படுவதை விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஊக்குவிப்பதின் மூலம் இந்த அம்மை வியாதியைப் போக்க முடியும்.

திருவண்ணாமலை மருத்துவமனை விஸ்தரிப்பு நீண்டகாலமாக இருந்து வருகிற ஒரு பிரச்னையாகும். ஒவ்வொரு வேளையும் இதைப் பற்றிக் கேட்டபொழுது யுத்த நெருக்கடியை ஒட்டி இதைத் தள்ளி கொண்டே வந்தார்கள். அங்கே மூன்று டாக்டர்கள் வேலை செய்கிறார்கள். அவ்வளவு பெரிய மருத்துவ மனை ஆனதற்குப் பிறகும் கூட அதை விஸ்தரிக்காமல் அது புறக்கணிக்கப்படுவது உள்ளபடியே சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் சண்முகம் எதுவும் கேட்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு நான் பதிலளிக்கும்பொழுது நான் கேட்டால் கொடுக்கமாட்டீர்கள் என்பதற்காகத்தான் நான் கேட்கவில்லை என்று சொன்னேன். அவர்கள் அப்படியும் சொல்லக் கூடாது என்பதற்காக நான் இப்பொழுது இதைக் கேட்டு வைக்கிறேன். நான் கேட்டுவிட்டேன் என்பதற்காகக் கொடுக்காமல் இருந்துவிட வேண்டாம். திருவண்ணாமலை மருத்துவ மனையை விஸ்தரிப்பதற்கு அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. என். பழனிசாமி கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

[திரு. கே. என். பழனிசாமி கவுண்டர்] [21st March 1966

நம்முடைய ராஜ்யத்தில் ஒன்றிரண்டு ஆண்டுகளாகவே வைத்திய வசதியும், சுகாதார வசதியும் செய்து கொடுத்து, நல்ல குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்து, தொத்துநோய்கள் பரவாமல் இருக்கக்கூடிய முறையில் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்துகின்ற கனம் முதலமைச்சர் அவர்களுக்கும், சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்து இந்தத் துறை உத்தியோகஸ்தர்களைப் பாராட்டுகிறேன். இன்றைய தினம் சுகாதாரத்திற்கும், வைத்தியத்திற்கும் 15, 16 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இது கூடக் குறைந்த தொகை. இதையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவசியமாகவும்; அவசரமாகவும் வேண்டியது வைத்தியமும், சுகாதாரமும். அந்த வகையிலே 15 கோடி ரூபாய் குறைவான தொகை என்பதால் இன்னும் உயர்ந்த தொகை கொடுப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டும். ராஜ்யத்திலே மற்றத் துறைகளில் வளர்ச்சி ஏற்படுவதற்கும் இந்தத் துறை அவசியமானது. கல்வி போன்ற மற்ற துறைகள் வளர்ச்சியடையவில்லையென்றால் அதற்குக் காரணம் இந்தத் துறை போதுமான வளர்ச்சியடையாததுதான் என்று கருதுகிறேன். ஆஸ்பத்திரிகளை எடுத்துக்கொண்டால், சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகள்தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் திருப்பூர் போன்ற முனிசிபல் நகரங்களிலே, தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் எல்லாம் விஸ்தரிக்கப்படவில்லை. திருப்பூர் ஆஸ்பத்திரி 25 ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்ததோ அப்படியே இன்றும் இருக்கிறது. அந்த நகரத்திலே ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. அந்த நகரம் இன்னும் திருப்பூர் தாலூகாவைச் சேர்ந்த இடங்களை யெல்லாம் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் 5 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அங்கேயுள்ள இ.எஸ்.ஐ.-யில் 5,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் 5 லட்சம் மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு ஆஸ்பத்திரி தான் இருக்கிறது. 5,000 தொழிலாளர்கள் இருக்கக் கூடிய இடத்தில் இரண்டு டாக்டர்கள் என்று சொன்னால், அதே நேரத்தில் ஐந்து லட்சம் மக்கள் தொகை கொண்ட இடத்திற்கு ஒரு ஆஸ்பத்திரி என்று சொன்னால் அது வருந்தக்கூடிய விஷயமாக இருக்கிறது. அந்த தாலூகாவினுடைய ஆஸ்பத்திரியை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள், டைரக்டரும் பார்வையிட்டார்கள். அந்த ஆஸ்பத்திரிக்குள் நோய் இல்லாதவர்கள் போனாலே நோய் வந்துவிடும், அந்த வகையிலே இருக்கிற அந்த ஆஸ்பத்திரியைச் சீர்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். எனக்கு முன்னால் சில நண்பர்கள் பேசினார்கள். சில சமயங்களில் ஆஸ்பத்திரிகளிலே போதிய டாக்டர்கள் இல்லை என்று சொன்னார்கள். அது உண்மைதான். சென்னை சர்க்கார் 850 மாணவ மாணவிகளைப் பயிற்சியளித்து அனுப்புகிறார்கள். ஆகவே டாக்டர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். மேலும் அவர்கள் பிரத்தியேகமாகச் சென்று தொழில் நடத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். சென்னையிலே படிக்கின்றவர்களுக்கு அவர்களைக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளும்

21st March 1966] [திரு. கே. என். பழனிசாமி கவுண்டர்]

பொழுது அவர்கள் படித்தவுடன் 5 அல்லது 7 ஆண்டுகள் சர்க்கார் ஆஸ்பத்திரியில் பணியாற்ற வேண்டுமென்று அக்ரிமெண்ட் எழுதி வாங்கிவிட வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் பயிற்சி பெற்றவுடனே 7 ஆண்டுகள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுவார்கள். கிராமங்களிலே போதிய பொழுதுபோக்கு இல்லாததால் அவர்கள் அங்கே போக விரும்பவில்லை. ஆகவே மாணவர்களைச் சேர்க்கும்பொழுதே அப்படி எழுதிவாங்க வேண்டும். இன்றைய தினம் மற்றைய ராஜ்யங்களிலே எல்லாம் பிரத்தியேகமாகக் கல்லூரிகளில் சேருவதற்கு 5 ஆயிரம், 7 ஆயிரம் என்று ப்ரீமியம் வாங்குகிறார்கள். ஆனால் நாம் ஏழை மாணவர்களுக்கு, பாக்வர்ட் க்ளாஸ், ஷெட்யூல் கிளாஸ் மாணவர்களுக்கு எல்லாம் சலுகை கொடுக்கிறோம். அவர்களிடம் 7 ஆண்டுகள் சர்க்கார் ஆஸ்பத்திரியிலே வேலை பார்க்க வேண்டுமென்று அக்ரிமெண்ட் எழுதி வாங்க வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய ராஜ்யத்தில் சுகாதாரத் துறையையும், வைத்தியத் துறையையும் ஒன்றாக இணைக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். மக்களுக்கு வைத்திய வசதி அளிப்பது டாக்டர்களைப் போட்டு ஆஸ்பத்திரிகளிலே மருத்துவ வசதி அளிப்பது போன்றவற்றை வைத்தியத் துறை கவனிக்க வேண்டும். சுகாதாரத் துறை, காலரா, பிளேக் போன்ற தொத்து நோய்கள் பரவாமல் தடுக்கவும், சுகாதார நிலைமைகள் சீராக இருப்பதைக் கவனித்துக் கொள்வதுமான காரியங்களைச் செய்யவேண்டும். இந்த இரண்டையும் சேர்க்கும் நேரத்தில் சில சிக்கல்கள் ஏற்படும். பி.டபிள்யூ.டி. டிப்பார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால் முன்பு ஒரு சீப் எஞ்சினியர் இருந்தார். இப்போது இலாக்கா வாரியாக ஐந்து சீஃப் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். கல்வித் துறையை எடுத்துக் கொண்டால் செகண்டரி கல்விக்கு ஒரு டைரக்டர். உயர் கல்விக்கு ஒரு டைரக்டர் என்று இரண்டாகப் பிரிந்திருக்கிறார்கள். எஞ்சினியரிங் இலாகாவிலே இன்று டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் என்று தனியாக வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் சுகாதாரத் துறையையும், மருத்துவத் துறையையும் ஒன்றாகச் சேர்ப்பது கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். சர்க்கார் நினைப்பது போல் ஆட்களைக் குறைத்துச் செலவை மிச்சம் செய்ய முடியுமா என்றால் அதுவும் முடியாது. சர்க்கார் இதைப்பற்றிக் கவனித்து ஒன்றாகச் சேர்க்காமல் தனித் தனியாகவே இருப்பதற்கு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு ஆபீசராக இரண்டு பேரைப் போட்டிருக்கிறார்கள். புதிய ஆபீசரைப் போட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

***திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் சபாநாயகர் அவர்களே, மருத்துவ துறையைப்பற்றிப் பேசும்போது எவ்வளவு தூரம் ஜனத்தொகை பெருகிக் கொண்டிருக்கிறதோ, நாடு எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறதோ அந்த அளவுக்கு மருத்துவத் துறைக்கு அதிகமான செலவு செய்வதோடு கண்ணும் கருத்துமாக [illegible] செய்ய வேண்டும். குறிப்பாக, ஒவ்வொரு ஜில்லாவிலும்

ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் ஒரு அட்வைசரி கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அதில் 'நான்-அபிஷியல், அபிஷியல்' எல்லோரும் இருக்கிறார்கள். மாயவரம் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி அட்வைசரி கமிட்டி 40 படுக்கைகளைப் போட வேண்டுமென்று தீர்மானித்தது. இப்போது நோயாளிகள் வராண்டாவில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள். படுக்கைகளை அதிகரிக்க வேண்டுமென்று டி.டி.சி. கூட்டத்தில் கூடச் சிபாரிசு செய்யப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பேரளம் ஆஸ்பத்திரியைக் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை கொண்டு வரப்பட்டு டி.டி.சி. கூட்டத்தில் எல்லோரும் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். நாளதுவரை அதைப் பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரியாக இருந்ததை கவர்ன்மெண்ட் எடுத்துக் கொண்டபோது அதில் இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்குச் சம்பளத்தை ரெகுலரைஸ் செய்து சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கக்கூடியவர்களுக்குக் கொடுப்பது போல் கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றி கோரிக்கை அனுப்பியதோடு கூட அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்தேன். நானே நேரில் எழுதிக் கொடுத்தேன். இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொறையார் ஆஸ்பத்திரியில் குடிதண்ணீர் கிடையாது. பேஷண்டுகள் ஒரு தம்ளர் தண்ணீர் ஓரணா காசு கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் பற்றிப் பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டது. சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நானும் அங்குள்ள 'விஸிட்டர்ஸ் புத்தகத்தில்' எழுதியிருக்கிறேன். நாளது வரை அதற்கு ஒன்றும் ஏற்பாடு செய்யவில்லை. ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய நோயாளிகள் கண்ட தண்ணீரைக் குடித்து இறப்பது என்றால் எதற்காக ஆஸ்பத்திரி இருக்கவேண்டும்?

பஞ்சாயத்திலே லோகல் டிஸ்பென்சரிகளை ஆரம்பிக்கிறார்கள்; ஆனால் அங்கே போதுமான மருந்து இல்லை. எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் அங்கே வருவதில்லை. ரிடையர் ஆனவர்களைக் கொண்டு போய்ப் போடுகிறார்கள். அங்கு மருந்து கூட இல்லாமல் அவர்கள் ஏதோ பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது அவர்கள் பொழுது போக்குகிற இடமாக இருக்கிறதே தவிர, பாமர மக்களுக்குச் சரியானபடி வைத்தியம் செய்யப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் டாக்டர்களையாவது அங்கு ஒரு மணி நேரம் வந்து வைத்தியம் செய்ய வசதி செய்யவேண்டும். போதுமான மருந்து கொடுக்கவேண்டும். டாக்டர்கள் ஸ்லிப் எழுதிக் கொடுத்து, மருந்து வாங்கி வா என்று சொல்கிறார்கள். கிராமத்தில் வசிப்பவர்களில் வசதியுள்ளவர்கள் பிரைவேட் டாக்டர்களிடம் போகிறார்கள்; வசதி இல்லாதவர்கள் தான் இங்கே வருகிறார்கள். ஆகவே, அவர்களை மருந்தை நகரத்திலிருந்து வாங்கி

வரவேண்டுமென்று சொன்னால், அந்த மருந்தை வாங்க முடியாமல் பல நோயாளிகள் இறந்து விடுகிறார்கள். மக்களிடத்தில் தற்போது எந்த நோய் வந்தாலும் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும், வெறும் மாத்திரை மட்டுமல்ல, ஊசி போட்டுக் கொள்ள வேண்டும், நோயைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் நிலைமையைச் சீராக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சையில் டி.பி. சானடோரியம் இருக்கிறது. சிறு சிறு சானடோரியம், மாயூரம், கும்பகோணம் போன்ற முனிசிபல் ஏரியாக்களில் திறக்கப்பட்டிருக்கின்றன. பொது ஜனங்கள் பணம் கொடுத்து நல்ல கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டு இருக்கிறது. மருந்துகள் கிடையாது. வைத்தியத்திற்கு எந்த வித வசதியும் செய்யப்படவில்லை. இதில் எல்லாம் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பேஷண்டுகளுக்கு பால் முக்கியம்; நாட்டு மக்களுக்கும் முக்கியமாக இருக்கிறது. அதிலே கலப்படம் இல்லாமல் இருக்கவேண்டுமென்பதிலே அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். அழுகுகிற பொருள்களுக்கு வரியை எடுத்து விட்டது போல் இந்தப் பாலுக்கும் போட்டிருக்கக்கூடிய வரியை எடுத்துவிட வேண்டும். இந்தப் பாலிலே எல்லா வைடமின்களும் இருக்கின்றன என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். முக்கியமாக, நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் இருக்கின்ற மொத்தப் பணத்தில் கிட்டத்தட்ட 10-ல் ஒரு பகுதி இந்த மானியத்திற்காகக் கோரப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாகக் கோரினால் கூடப் பரவாயில்லை, கொடுத்து விடலாம் என்று சொல்லக்கூடிய முக்கியமான கோரிக்கை இது. சமுதாயத் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமென்றால், திடசித்தத்துடன் நிறைவேற்ற சுகாதார அமைப்போடு கூடிய பிரஜைகள் வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எல்லாத் திட்டங்களுக்கும் அடிப்படையாக, சமுதாயத்தில் இருக்கும் மக்கள் நோயற்றவர்களாக இருக்க வேண்டுமென்ற திட்டம் இருப்பதால் இந்தக் கோரிக்கையை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். மருத்துவக் கோரிக்கைக்காக கிட்டத்தட்ட 11 கோடி ரூபாய் கேட்கிறார்கள். பொதுநலத் துறையிலே 5 கோடி ரூபாய்க்குக் கேட்கிறார்கள். மொத்தம் 17 கோடி ரூபாய் வரை கோரப்படுகிறது. முக்கியமான ஒரு இடுக்கணைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

மருத்துவக் கல்லூரிகளை நாம் வேகமாக ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். முதல் திட்ட காலத்தில் 2 கல்லூரிகளாக இருந்தவை இன்று 7 கல்லூரிகள் அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. இன்னும் மூன்று கல்லூரிகள் நான்காவது திட்ட காலத்தில் துவக்கப்பட

இருக்கின்றன. 1962-ல் 600 மாணவர்களாக இருந்த எண்ணிக்கை 936 அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்த வேகமான முன்னேற்றத்தைப் பாராட்டுகிறேன். பல மாதங்களுக்கு முன்பு நான் பத்திரிகையில் பார்த்தேன். இங்கிலாந்து தேசத்திற்குச் சென்று டாக்டர்களாகப் பணியாற்றக்கூடிய இந்தியர்களை நமது அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொள்ளுமானால், அங்கிருக்கும் டிஸ்பென்சரிகள் என்னாவது என்று கேட்கக்கூடிய அளவுக்கு நமது நாட்டு மருத்துவம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைக் கேட்கும்போது நாம் பெருமிதம் அடைகிறோம். இந்த இலாகா அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டை முழு மனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கிராமங்களுக்குச் செல்ல மறுக்கிறார்கள். அங்கே அவர்களுக்குச் சவுகரியம் இல்லை. கட்டட வசதி, மின்சார வசதி இருந்தாலும், அந்தச் சூழ்நிலையில் போய் குடியிருக்க முடியவில்லை என்ற மனக் குறையின் காரணமாக, டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குப் போக மறுக்கிறார்கள்.

அவர்கள் குழந்தைகளை இங்கிலீஷ் மீடியத்தில் படிக்க வைக்க தாலுகாக்களில், கிராமங்களில் படிப்பு வசதியில்லை. ஆகவே, டாக்டர்கள் கிராமப்புறங்களுக்கு போக முன்வருவதில்லை. இருபத்தொன்பது ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலிருந்து டாக்டர்களை மாற்றியிருப்பதைப் பார்க்கிறோம். திருநெல்வேலி ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலிருந்து இரண்டு டாக்டர்களை எடுத்திருக்கிறார்கள். கோவில்பட்டியிலிருந்து இரண்டு டாக்டர்களை எடுத்திருக்கிறார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டரிலிருந்து ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு எடுப்பது, இங்கிருந்து அங்கு அனுப்புவது என்றுதான் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்று சொல்லலாம். கிராமப்புறங்களில் டாக்டர்கள் சேவை செய்யவேண்டும் என்று அவர்களை ஊக்குவிக்க அவர்களின் சம்பள சௌகரியங்களை ஏன் கூட்டக் கூடாது என்று கேட்கிறேன். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர்கள் குடும்ப நிலையை உத்தேசித்து அவர்களுக்கு, அந்த டாக்டர்களுக்கு 250 ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அதேபோன்று கிராமப்புறங்களுக்குச் செல்லும் டாக்டர்களுக்கும் இம்மாதிரி ஒரு அலவன்ஸ் கொடுத்தால் அவர்களை ஊக்குவிப்பது மாதிரியிருக்கமுடியுமே. இங்கிருந்து டாக்டர்கள் அயல்நாடுகளுக்குப் போய் விடுகிறார்கள். நம் நாட்டில் மெடிக்கல் காலேஜஸ் எல்லாம் வைத்து படிக்க வைக்கிறோம். அப்படி அவர்கள் படிப்பு முடிந்து விட்டு பட்டம் பெற்றவுடன் ஒரு மூன்றாண்டு காலம் இங்கிருந்துவிட்டு அவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று விடுகிறார்கள். இவ்வளவு நாம் கஷ்டப்பட்டு செய்தும், கிராமப்புறங்களுக்கும் டாக்டர்கள் கிடைப்பார்கள் என்று நாம் இவ்வளவு செய்தும் அடுத்த நாடுகளுக்கு போய் இவர்கள் சேவை செய்வார்களானால் நாம் இலவு காத்த கிளி போன்ற நிலைமைக்கு வந்துவிடுவோம். (மணியடிக்கப் பட்டது.)

ஹெல்த் விஸிட்டர்ஸ் பற்றி ஒரு வார்த்தை. அவர்களுக்கு சம்பளம் குறைவாக இருக்கிறது. மாநிலம் பூராவும் மாற்றப்படக் கூடிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ரூபாய் 105 சம்பளம் வாங்கும் அவர்களை திருநெல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்கு மாற்றினால் அவர்கள் என்னவிதமாகக் கஷ்டப்படுவார்கள் என்று சிந்திக்க வேண்டும்.

காச நோய் தடுப்பிற்கு இன்று புது முறையில் ஒரு திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். கூழைக் குடித்துக் கொண்டு வீட்டில் இருந்தாலும் அவர்களுக்கு அங்கு பில்ஸ் கொடுக்கிறார்கள். மேட்டுப்பாளையத்தில், பின்தங்கிய மக்கள் வசிக்கும் அந்த இடத்தில் இந்தமாதிரி ஒரு ஏற்பாட்டை செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஹெல்த் இன்ஸ்பெக்டர் பார்த்து வந்த வேலையை இன்று தாசில்தாரிடம் கொடுத்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஜில்லா கலெக்டர் இதை மேற்கொண்ட பின்னர் 22,000-க்கு மேல் குடும்பக்கட்டுப்பாடு சிகிச்சை செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஹெல்த் இலாகாவே இதைச் செய்வதுதான் பொருத்தமானது. ரெவின்யூ இலாகாவினருக்கு ஏற்கனவே வேலை அதிகம். இப்போது டெப்டி தாசில்தார்கள் அந்த வேலையைப் பார்ப்பதாக கேள்விப்படுகிறேன். அதை மாற்ற வேண்டும். கம்பவுண்டர்களுக்கு வருடா வருடம் அவர்கள் ரெஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். வருடாவருடம் நர்ஸஸ் ரெஜிஸ்டர் செய்து கொள்ளவில்லை, டாக்டர்கள் வருடா வருடம் ரெஜிஸ்டர் செய்துகொள்ளவில்லை, மிட் வொய்ப்ஸ் வருடா வருடம் ரெஜிஸ்டர் செய்துகொள்ளவில்லை. ஆனால், இந்த மருந்து கலக்குபவர்கள் மட்டும் வருடா வருடம் ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்ற கட்டாயம் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. "அவர்களை விட எங்களை எல்லாம் மட்டமாக்கி விட்டார்களே" என்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி வருடா வருடம் அவர்களை ரெஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்வது பொருத்தமாகாது என்று கூறி அமைச்சர் அவர்களை பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சுகாதார மான்யத்தின் மீது நான் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். குடிதண்ணீர் பிரச்னையைப் பற்றி பல பேர்கள் எடுத்துச் சொன்னார்கள். குடிதண்ணீர் பிரச்னை குறிப்பாக கிராமப்புறங்களில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. குடிதண்ணீர் பிரச்னையினால்தான் அதிகமான நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதிலும் கிழக்கு இராமநாதபுரத்தில் திருவாடானை போன்ற என் தொகுதியில் குடிதண்ணீர் பிரச்னை மிகவும் மோசமாக இருக்கிறது. கேணி வெட்டினால் அங்கு நல்ல குடிதண்ணீர் கிடைப்பதில்லை. சென்ற ஆண்டில் கூட தொண்டி போன்ற மேஜர் பஞ்சாயத்துக்களில் குடிதண்ணீர் நிலைமை மிகவும் மோசமாக இருந்த நிலை நமக்கு கண்கூடாகத் தெரியும். திருவாடானை தாலுகாவைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர்

கேணிகளை கிராமங்கள் தோறும் வெட்டிக் கொடுக்கவேண்டும். அம்மாதிரி இடங்களில் குழாய் கேணிகள் மூலம் குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால்தான் வசதியாக இருக்கும். அங்கு உப்புத் தண்ணீர் அதிகமாக இருப்பதால் பூமிக்கடியில் உள்ள தண்ணீரையாவது குழாய்கள் மூலம் கொண்டு வருவதற்கு ஸ்பெஷலாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்து எங்கள் தாலுகாவில் உள்ள தண்ணீர் பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இல்லை என்று எங்கு பார்த்தாலும் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு வீட்டு வசதிக் குறைவு இருப்பதுதான். அவர்களுக்கு நல்ல வீட்டு வசதியில்லை, குழந்தைகள் படிக்க வசதியில்லை. ஆகவே அம்மாதிரி வசதிகளை எல்லாம் அவர்களுக்குக் பெருக்கிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் டாக்டர்கள் அங்கு போய் இருந்து நல்ல வேலைகளைச் செய்ய முடியும். ஆகவே ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் உள்ள இடங்களில் எல்லாம் கட்டாயமாக டாக்டர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். ஆஸ்பத்திரிகளுக்கே நல்ல கட்டடங்கள் இல்லை. டாக்டர்களுக்கு வாடகைக் கட்டடம் கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. சுகாதார வசதியோடு கூடிய கட்டடங்கள் கிராமங்களில் இல்லை. ஆஸ்பத்திரிக்குள்ள கட்டடமே நல்ல சுகாதார வசதியோடு கூடியதாக இல்லை என்று சொன்னால் எப்படி இந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு வந்து அவர்கள் நல்லமுறையில் பணியாற்ற முடியும்? ஆகவே கிராமங்களிலுள்ள ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கும் இடங்களில் உடனடியாக கட்டட வசதியும், டாக்டர்களுக்கு வேண்டிய வீட்டு வசதியும் செய்து கொடுக்க வேண்டும். ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் உள்ள இடங்களில் போக்குவரத்து வசதியும், மின்சார வசதியும், இவை போன்ற வசதிகள் செய்து கொடுக்கப் பட வேண்டும். டாக்டர்களைப் போட்டு விட்டு அங்கு மின்சாரம் இல்லாததால் வெறும் எண்ணெய் லைட்டைக் கொளுத்தி வைத்தால் அவர்கள் லீவ் போட்டு விட்டு போய்விடுகிறார்கள். ஆகவே ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருக்கும் கிராமங்களில் மின்சார வசதி உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டும். அதோடு போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

கிராமப்புறங்களில் பிரசவ ஆஸ்பத்திரி இல்லாமல் தாய்மார்கள் ஆஸ்பத்திரிக்கு போகிறபோது வழியில் செத்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னார்கள், அது நூற்றுக்கு நூறு உண்மை. பலயிடங்களில் பத்து அல்லது இருபது மைல் தூரத்தில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும்போது தாய்மார்களும் சிசுக்களும் இறந்து போயிருக்கிறார்கள். இந்த நிலை கிராமங்களில் அதிகமாக இருக்கிறது. ஆகவே கட்டாயமாக ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் உள்ள இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யூனியன் ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைப்பதில்லை. ஆஸ்பத்திரிகள் மூடிக் கிடக்கின்றன. யூனியன் ஆஸ்பத்திரிகளை

கவர்ன்மென்டே எடுத்துக் கொள்ளவேண்டும். யூனியனால் செலவழிக்க முடியவில்லை. உள்ள தொகையை வைத்து அவர்களால் வைத்திய வசதியைப் பெருக்க முடியவில்லை, ஆகவே யூனியன் ஆஸ்பத்திரிகளை சர்க்காரே எடுத்து கட்டட வசதி, டாக்டர்களுக்கு வீட்டு வசதி, மின்சார வசதி போன்ற வசதிகளை செய்து கொடுத்தால் அவை நல்லமுறையில் நடக்கும். இவற்றையெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மதிப்பு மிக்க கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இன்று கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி அல்லது நகரங்களாக இருந்தாலும் சரி, வைத்திய வசதிகளை ஓரளவிற்கு அதிகமாகச் செய்து கொடுத்திருப்பதின் காரணமாக மனிதர்களின் நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு அவர்களின் வயதைக் கூட நாம் அதிகமாக்கியிருக்கிறோம் என்பதற்காக இந்த இலாகா அமைச்சர் அவர்களை நாம் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிகமான டாக்டர்களை நாம் உற்பத்தி செய்து கிராமப்புறங்களில் அவர்கள் சென்று தங்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தியிருந்தும் இன்னும் 300, 400 இடங்களில் டாக்டர்கள் இல்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், இந்த டாக்டர்களை ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு அப்பாயிண்ட் செய்வது டி.எம்.எஸ். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பது, டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுப்பது, அவர்களை ஸஸ்பெண்ட் செய்வது போன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் டி.பி.எச். அதை எடுத்துக் கொள்வது என்ற நிலைமையிலிருப்பதால் அங்கு டாக்டர்கள் ஏதாவது ஒரு சிறிய தவறு செய்தாலும் —அவர்கள் ஐந்தாறு ஆண்டுகள் கஷ்டப்பட்டு படித்து அரசாங்கம் கொடுக்கிற பணத்தோடு கூட வீடுகளில் இருந்தும் பணம் போட்டு கஷ்டப்பட்டு படித்து முன்னுக்கு வந்து கிராமப்புறங்களில் டாக்டர்களாக பணியாற்ற முன்வருகிறார்கள் என்றாலும்—அவர்களை ஒருவித விசாரணை இல்லாமலே ஸஸ்பெண்ட் செய்திருக்கிறேன் என்று உத்தரவு போட்டால் அது வேதனைப் படக்கூடிய ஒன்று, என்பதை இங்கு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பிறகு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து டி.பி.எச். செய்தது தப்பு என்று சொல்லி மீண்டும் ஆர்டர் போட்டிருக்கிறார்கள் என்றால் அந்த டாக்டர் அங்கிருப்பதற்கே பயப்படுகிறார்கள். ஆகவே, மூன்று ஆண்டுகள் வேலை செய்து விட்டு பின்னர் ப்ரைவேட் ப்ராக்டீஸ் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலையை நாமே உருவாக்கும் நிலை இருக்கிறது. ஆகவே இதை பரிசீலனை செய்து பார்த்தால் கிராமப்புறங்களில் டாக்டர்கள் இல்லை என்ற பிரச்னையை நாம் ஓரளவிற்கு தீர்க்கமுடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் 1
தாலூகா தலைநகரங்களில் எல்லாம் ஆசுபத்திரியை கட்டி வைத்திருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [21st March 1966

ஆசுபத்திரிகளுக்கெல்லாம் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று பணம் ஒதுக்கியிருக்கிறோம். அப்படியிருந்தும் வேலை நடைபெறாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதைக் கவனித்து ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை எந்தெந்த தாலுகா ஆசுபத்திரிகளில் செலவு செய்ய வேண்டுமோ அவைகளில் எல்லாம் செலவு செய்து வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரை, சோழவந்தானில் ஜன நெருக்கம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு ஆசுபத்திரி கட்டித்தரவேண்டும் என்று முன்பே கேட்டிருக்கிறேன். அங்கே ஒரு கவர்ன்மெண்ட் ஆசுபத்திரி அமைப்பதற்கான கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலக்கோட்டையில் நல்ல கட்டடம் இருக்கின்றது. அதில் செய்ய வேண்டிய இதர வசதிகள் செய்து கொடுப்பது சாலச்சிறந்தது. வத்தலக்குண்டில் இருக்கின்ற ஆசுபத்திரிக் கட்டடம் மோசமாக இருக்கிறது. மழை வந்தால் நோயாளிகள் எல்லாம் கஷ்டப் படக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கவனித்து, இந்த கட்டட வசதிகளை எல்லாம் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: கனம் சபாநாயகர் அவர்களே, மருத்துவம், பொதுச் சுகாதாரம் என்கின்ற தலைப்பின் கீழ் நடைபெறுகின்ற இந்த மான்ய விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தளவில், பொதுச் சுகாதாரம், மருத்துவம், ஆகிய துறைகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன, அதற்காக அந்த இலாகாவினரை பாராட்டிக்கொள்கிறேன். ஆனால், குடி தண்ணீர் வசதியைப் பொறுத்த மட்டில் பல கிணறுகள் பொதுச் சுகாதாரத் துறையின் மூலம் அமைத்துக்கொடுத்தாலும், குடித் தண்ணீர் வசதி சரியாக இல்லை. குளச்சல் ஏழைகள் மிகுதியாக வாழும் சிறிய ஒரு நகரம், அதோடு பக்கத்திலிருக்கின்ற கிராமங்கள் எல்லாம் மக்கள் தொகை நிரம்பியதாக இருக்கின்றன. இரணியல், தலக்குளம், நெய்யூர் போன்றவை எல்லாம் பெரிய கிராமங்களாக இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம் குடி நீர் வசதி சரியாக இல்லாத காரணத்தால் யானைக்கால் என்ற நோய் பரவிக் கொண்டிருக்கிறது. இதை தடுக்கின்ற முறையில் அங்குள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் ஒரு திட்டத்தை கொடுத்தோம். அந்த ஊருக்கு அருகாமையில் ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்கி குடி நீர் திட்டத்தை நிறைவேற்றலாம். அதாவது மாம் பழத்துறை அணை என்று ஒரு அணை கட்டி அங்கிருந்து குடிநீர் எடுத்து குளச்சல் நகரசபைக்கும், அருகிலுள்ள இரணியல், தலக்குளம், நெய்யூர் போன்ற கிராமங்களுக்கும் கொடுக்க முடியும் என்று திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தத் திட்டம் இப்போது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதை சீக்கிரமாக பரிசீலனை செய்து, முடிவு எடுத்து அதை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

21st March 1966] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

குளச்சலில் ஒரு அரசாங்க ஆஸ்பத்திரி இருந்து கொண்டிருக்கிறது. குளச்சல் நகரசபை பகுதியில் இப்போது ஜனநெருக்கம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கேற்ற அளவில் அந்த ஆஸ்பத்திரியில் வசதி கிடையாது. 20 படுக்கைகள் கொண்ட ஒரு மருந்தகம் போடவேண்டும் என்று பட்ஜெட்டில் உட்படுத்தப்பட்டது. ஆனால் இதுவரையிலும் அதற்காக எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இதை உடனே நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாகர்கோவிலில் மாவட்ட தலைநகர் ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இதை அங்கிருந்து மாற்றி 30 ஏக்கர் அளவிலுள்ள இன்னொரு இடத்திற்கு கொண்டு போய் ஆஸ்பத்திரியை விஸ்தரித்தால் மிகவும் நலமாக இருக்கும். நாகர்கோவிலில் இப்போது இருக்கும் ஆஸ்பத்திரியை தாய்-சேய் நல மருத்துவ நிலையமாக வைத்துக்கொள்ளலாம். அதற்கேற்ற முறையில் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலில் நகரசபையைப் பொறுத்தவரையில், குடி தண்ணீர் வசதி வர வர குறைந்து கொண்டே வருகிறது. காலையில் 5 முதல் 8 மணி வரையிலும் தண்ணீர் கொடுக்கிறார்கள். மாலையிலும் ஒரு சில மணி நேரம் தண்ணீர் கிடைக்கிறது. இந்த நிலையை மாற்றி அதிக அளவில் தண்ணீர் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்காக அரசாங்கத்தினிடம் கடன் கேட்டு நகரசபையார் மனு கொடுத்திருக்கிறார்கள். இப்போது நடைமுறையில் இருக்கின்ற திட்டம் வெகு காலத்திற்கு முன்னால் போடப்பட்ட திட்டம். இப்போது பட்டிணம் பெரிதாகி ஜனத் தொகை மிகவும் பெருகிவிட்டது. ஆகவே இங்கேயும் குடிநீர் வசதியை பெருக்குவதற்காக போடப்பட்டிருக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. கார்ச்சா கவுடர்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மான்யக் கோரிக்கைகளை நான் ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். இப்போது இந்த இரண்டு துறைகளையும் அதாவது மருத்துவத்துறையையும், பொது சுகாதாரத் துறையையும் இணைக்கப்போவதாகத் தெரிகிறது. இதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். சமீபத்தில் தான் கல்வி இலாகாவில் டைரக்டர் ஆப் ஹையர் எஜுகேஷன் என்றும் டைரக்டர் ஆப் செக்கண்டரி எஜுக்கேஷன் என்றும் தனித்தனியாக பிரித்தோம். அதேபோன்று இதிலும் டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸ், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் என்று இருந்தது, அதோடு இப்போது டைரக்டர் ஆப் மெடிகல் எஜுக்கேஷ

என்று மூன்று பேர்களை வைத்திருக்கிறோம், இந்த நிலையில் இன்னும் இதை மாற்றவேண்டும் என்று கொண்டு வரப்படுகின்ற திட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 7 கல்லூரிகளை அமைத்திருக்கிறோம். 1962-ல் 600 பேர்களை சேர்த்துக்கொள்வதாக இருந்த நிலை மாறி, இப்போது 936 பேர்களை சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமையைப் பெற்றிருக்கிறோம். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோவை, திருச்சி, சேலம் இந்த மூன்று இடங்களிலும் கல்லூரிகள் அமைக்கப்போவதாக குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அமைச்சரவையை பாராட்டுகிறேன். மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை சேர்க்கின்ற விஷயத்தில் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு பெரிய குறையை அமைச்சர் அவர்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை, பத்து வருடங்களுக்கு முன்னால் ஆறு பேர்களுக்கு அட்மிஷன் கொடுத்தார்கள், இப்போதும் அதே ஆறு பேர்களுக்குத்தான் அட்மிஷன் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று அங்கு பெரிய போராட்டம் ஆரம்பிக்கலாமா என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையையும் அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மலை பிரதேச மக்களுக்கு அதிகமான அளவில் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற முறையில், நீலகிரி ஜில்லாவுக்கு இன்னும் அதிகமான ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வர வர போலி மருந்துகள் நாட்டில் பரவிக் கொண்டு வருகின்றன. இதை கட்டுப்படுத்துவதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நாட்டில் வருகின்ற டாக்டர்கள் எல்லாம் அரசாங்க சேவையை விட்டுவிட்டு, வெளியே போய் நிறையச் சம்பாதிக்கிறார்கள் என்கின்ற நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு பென்சிலினோ, ஸ்ட்ரெப்டோமைசினோ இன்ஜெக்ஷன் போடவேண்டும் என்றால் ஆஸ்பத்திரியில் 37 பைசா அல்லது 40 பைசா தான் ஆகிறது என்று சொல்கிறார்கள். அதே பென்சிலினோ அல்லது ஸ்ட்ரெப்டோமைசினோ போட்டுக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கு நான்கு ரூபாய் வாங்கிக் கொள்கிறார்கள் பிரைவேட் டாக்டர்கள். இந்த அளவில் மக்கள் கொடுக்க முடியாமல் இருப்பதால், தகுந்த முறையில் ஒரு குறிப்பிட்ட தொகைதான் பிரைவேட் டாக்டர்கள் இஞ்செக்ஷனுக்கு வாங்க வேண்டும் என்று கட்டுப்படுத்தக்கூடிய முறையில் ஒரு சட்டம் கொண்டு வந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, உதகைக்கு—உதகை ஒரு டூரிஸ்ட் சென்டர் என்ற முறையில்—உலகில் பல பாகங்களிலிருந்து மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் உதகையில் இப்போது இருக்கும் ஆஸ்பத்திரி பழைய கட்டடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது.

இப்போது இருக்கின்ற இடம் சரியாக இல்லை என்ற காரணத்தால் இந்த ஆஸ்பத்திரியை, நவீனமயமான ஒரு புதிய கட்டடத்திற்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலைவாசிகளுக்கு மொபைல் மெடிக்கல் யூனிட் என்று ஒரு வண்டியை வைத்திருந்தார்கள். அது மிக பழைய வண்டியாக ஆகிவிட்டதால், அங்கு ஒரு புதிய வண்டியை கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். ஆனால் புதிதாக வண்டி கொடுப்பதற்குப் பதிலாக, புதிய என்ஜினை வாங்கி பழைய வண்டியிலேயே போட்டிருக்கிறார்கள். இப்போது பழைய பாடியை பிரித்து புதிய பாடியை போடலாம் என்று சொல்லியிருப்பதாக தெரிகிறது. இப்படி மாற்றிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை, இதற்குப் பதிலாக ஒரு புதிய வண்டியை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலப்படத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முட்டையைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களிலும் கலப்படம் இருந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்களும் வருத்தப்பட்டு குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் கலப்படம் செய்கின்றவர்கள் எல்லாம் சமூக விரோதிகள் என்று பிரகடனப்படுத்தி, அவர்களை எல்லாம் கழுவில் ஏற்றினாலும் நான் வருத்தப்பட மாட்டேன். அந்த விதத்தில் இப்படிப்பட்ட சமூக விரோதிகளுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர் பிரச்னையைப் பொறுத்தளவில், வியக்கத்தக்க அளவில் நாம் முன்னேறியிருந்தாலும் கூட, கிராமப் புறங்கள் எல்லாம் குடிதண்ணீர் விஷயத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்கிற அதிருப்தி நிறைய இருந்து கொண்டிருக்கிறது. இந்த அதிருப்தியை மாற்றுவதற்கு அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதகை நகரத்தைப் பொறுத்த வரையில் உதகை உலக பிரசித்தி பெற்ற ஒரு யாத்திரை ஸ்தலமாக விளங்குகிறது. அப்படிப்பட்ட உதகை நகரத்தில் மழையின்மையின் காரணமாக குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, இதைப்பற்றி பத்திரிகையிலும் செய்தி வந்திருந்தது. அங்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கு 'கோரிஷிலா' திட்டம் என்ற ஒரு திட்டம் போடப்பட்டு அதற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை அமலுக்கு கொண்டு வந்து உதகை நகரத்தில் இருக்கின்ற தண்ணீர் கஷ்டத்தை போக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்திலே நான் பேசுவதற்கு முன்பு இதைத் தனித்தனி இலாகாவாகப் பிரித்திருப்பது போல், தனித்தனியாக ஒவ்வொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளுவது நல்லது என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள் இந்த இணைப்பைப் பற்றி. பிரிவினை எதிலுமே கூடாது என்ற கொள்கை அடிப்படையிலேயோ என்னவோ இதையும் ஒன்றாக ஆக்கவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மெண்ட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நகராட்சி மன்றங்கள் ஏறத்தாழ அதிகமாக இருக்கின்றன. அதோடு மேற்பார்வை பார்க்க வேண்டிய பஞ்சாயத்து யூனியன்களும் அதிகமாக இருக்கின்றன, ஆகவே இது தனி இலாகாவாக இயங்குவது சாலச் சிறந்தது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மருத்துவத் துறையைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி இருக்கிற காரணத்தினால், டாக்டர்கள் நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்து விட்டு, 'உனக்கு என்ன செய்கிறது?' என்று கேட்பது போல நான்கையும் ஒன்றாக இணைத்துக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி இருப்பது வருந்தத் தக்கது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். . .

கனம் சபாநாயகர் : மந்திரி பேரில் வருத்தப்பட்டுக் கொண்டு பிரயோசனம் இல்லை. இதற்கெல்லாம் நேரத்தை அலாட் செய்வதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. அது தான் நேரத்தை ஒதுக்கியிருக்கிறது, மந்திரி அல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பொதுவாக மருத்துவத் துறையில் இருக்கிற குறைகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இப்போது மருந்துகளில் ஏற்பட்டிருக்கிற கலப்படங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சமீபத்திலே கூட நான் பத்திரிகையிலே ஒரு செய்தி படித்தேன். தமிழ்நாட்டிலே காச நோய்க்காக வட நாட்டுக் கம்பெனியால் கொடுக்கப்பட்ட வில்லைகளில் ஏறத்தாழ 12 லட்சம் வில்லைகள் சப்ளை செய்யப்பட்டு, அதிலே 1.77 லட்சம் வில்லைகள் கைப்பற்றப்பட்டிருப்பதாக பத்திரிகையிலே பார்த்தேன். உண்மையிலேயே சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்னக எடுக்கவேண்டுமென்று சொல்லுவதை விட ஏற்கெனவேயே இதையெல்லாம் பரிசோதித்துப் பார்க்க, நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருந்தும் கூட இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுவதைப் பார்க்கும்போது, சட்டங்களைத் தீவிரமாக அமல் நடத்தவேண்டுமென்று தான் கேட்டுக்கொகிறேன்.

இப்போது மருத்துவ மனைகளுக்கு வழங்குகிற மருந்துகள் அத்தனையும் பயன் அற்ற மருந்துகள். நாளுக்கு நாள் நோயாளிகள் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, ஆண்டுக்கு ஆண்டு அதற்காகச் செலவு செய்வதில் மான்யக் கோரிக்கைகள் கூடியிருப்பதைப் பார்க்கும்போது, நோயாளிகள் தொகை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது என்றால், மருந்துகளாலேயே பலருடைய உடல் நிலை கெட்டு விட்டதோ என்று நான் அஞ்சுகிறேன் எந்த டாக்டரிடம்

போனாலும் ஆஸ்பத்திரியில் கொடுக்கிற மருந்து மோசமாக இருக்கிறது, வெளியிலேயிருந்து வாங்குங்கள் என்று சொல்லுகிறார்கள். எம்.எல்.ஏ.-க்களுக்கு மருத்துவ வசதி இலவசம் என்று சொன்னாலும் கூட, மருத்து மனைக்குப் போனால் வெளியிலேயிருந்து மருந்து வாங்கினால் உடல் தேறுமே தவிர இல்லாவிட்டால் உடல் தேறாது என்று நேரடியாகச் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே ஏழைகளுக்கு நல்ல மருந்து வழங்குகிறோமா என்று யோசிக்க வேண்டும். இதற்கு ஒரு டிப்பார்ட்மென்ட், மெட்ராஸ் ஸ்டேட் ட்ரக்ஸ் டிப்பார்ட்மென்ட் என்று வைத்திருக்கிறார்கள். அந்த டிப்பார்ட்மென்டையே ஒழித்து விட வேண்டும். டெண்டர் கால் பார் பண்ணி லோயஸ்ட் கொட்டேஷன் கொடுத்தவர்களிடமிருந்து வாங்குகிறார்கள் என்றால், மருந்தில் லோயஸ்ட் பார்க்கக் கூடாது. உயர்ந்ததைத் தான் பார்க்கவேண்டும். திருவனந்தபுரத்தில் அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பதாக அறிகிறேன். சம்பந்தப்பட்ட கம்பெனிகளுடன் இந்த இந்த மருந்துகளை இந்த இந்த விலைக்குக் கொடுப்பது என்று ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு, மருத்துவ இலாகாவிலிருந்து அதை எல்லோருக்கும் தெரியப்படுத்தி, நேரடியாக ஒவ்வொரு மாவட்ட தலைமை அலுவலர்களும் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லுவதால் பல சவுகரியங்கள் இருக்கின்றன, காலதாமதத்தைக் குறைக்க வழி இருக்கிறது, நேரடியாக வாங்கிக்கொள்ளுகிற காரணத்தினால். தரமில்லாத மருந்துகளைக் கொடுத்து அதிக நாள் நோயாளிகளை வரச்சொல்லி கூட்டத்தைச் சேர்ப்பதை விட, நல்ல மருந்து கொடுத்து நல்ல முறையில் செய்வது பயன் அளிக்கும் என்ற யோசனையையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதைப் போலவே குடி தண்ணீர்த் திட்டத்தையும் இதிலே சேர்த்திருக்கிறார்கள். குடி தண்ணீர்த் திட்டங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது எல்லோருக்கும் தெரியும். சுதந்திரம் பெற்று 18 ஆண்டு காலம் ஆகியும் கூட, குடிக்கத் தண்ணீர் இல்லை என்று சொல்வது நமது சுபிட்சத்தைக் காட்டாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடிக்கத் தண்ணீர் இல்லை, குடிக்கத் தண்ணீர் இல்லை என்று வளமான இந்த நாட்டிலிருந்து பேசுவது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை இதைப் போக்க மனம் இல்லையோ என்று தான் என்ன வேண்டியிருக்கிறது. ஏனென்றால் உடையார்பாளையம், ஜெயங்கொண்டம் பற்றி எங்கள் கட்சியைச் சேர்ந்த திருமதி செகதாம்பாள் வேலாயுதம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இது இன்வெஸ்ட்டிகேஷனில் இருக்கிறது. அதற்காக திரு. நடராஜன் என்ற சூபரின்டெண்டிங் என்ஜினியரை நியமித்தார்கள். அங்கு பம்பைப்போட்டு கழற்ற பயன்பட்டிருக்கிறதே தவிர தண்ணீர் கொடுக்கப்படவில்லை. எங்கள் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழில்களுக்குக் கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டு போய்க் கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளிகளாக இல்லாத காரணத்தினாலோ என்னவோ 19 ஆண்டுகளாகக் குடிக்கத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. உணவைப் பற்றி பிற்பாடு எடுத்துக்கொள்வோம்;

உடையைப் பற்றி பிற்பாடு எடுத்துக்கொள்வோம். குடிக்கக் கூட தண்ணீர் கொடுக்க முடியாத சர்க்கார் சுபிட்சமான சர்க்காரா என்று யோசிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. குடி தண்ணீர்த் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு கூட, பஞ்சாயத்துக்களுக்கு தேசிய குடி தண்ணீர் திட்டங்களில் கழிவு நீர்ப் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், கழிவு நீரைக் கொண்டு போக வாய்ப்புக்கள் இல்லாமல் ஆபாசமான நிலை ஏற்பட்டு அங்கே நோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. பஞ்சாயத்துக்களில் தேசியப் பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மேல் மட்டத் தொட்டியிலிருந்து தண்ணீர் கொடுக்கும்போது சாக்கடைத் தண்ணீர் போக வடிகால் வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. ராஜகோபாலசாமி:** கனம் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் சபையிலே சமர்ப்பித்திருக்கிற மருத்துவத் துறை, சுகாதாரத் துறை மான்யங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் தங்கள் உரையிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே புதிதாக மூன்று மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் கோவைக்கு முதலிடம் அளித்திருக்கிறார்கள். அதற்காக கோவை ஜில்லாவின் சார்பில் என்னுடைய நன்றியறிதலை கனம் சுகாதார அமைச்சர் அவர்களுக்கும், கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடுமலை தாலூகா தலைநகர ஆஸ்பத்திரி சுமார் நூறு ஆண்டுக்கு முன் டிராவெல்லர்ஸ் பங்களாவாக இருந்ததை மாற்றி ஆஸ்பத்திரியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1962-ம் வருஷத்திலே மருத்துவத் துறை மான்யக் கோரிக்கையின் போது இதை புதுப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகச் சொன்னார்கள். பின்னால் 1962-ம் ஆண்டு பிற்பகுதியில் அமைச்சர் அவர்களும் நேரில் பார்வையிட்டார்கள். பிறகு மருத்துவத் துறை நெறியாளர் அவர்களும் பார்வையிட்டு ஆவன செய்வதாகச் சொன்னார்கள். எஸ்டிமேட், மாஸ்டர் ப்ளான் எல்லாம் தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷம் கூட செய்யப்படவில்லை. இந்த வருஷம் பட்ஜெட்டிலே வரும் என்று எதிர்பார்த்தேன், அதிலும் காணவில்லை. சப்ளிமென்டரி பட்ஜெட்டிலாவது இதைச் சேர்த்து இதை இந்த ஆண்டு நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உடுமலைப்பேட்டை தாலூகா, ஜல்லிப்பட்டி சர்க்கார் ஆஸ்பத்திரியில் சிறு ஆப்பரேஷன் தியேட்டர் கூட இல்லை, ஆண்களுக்கு இன்-பேஷன்ஸ்ட் வார்டு கூட இல்லை. இதை சீக்கிரம் அவசியம் செயல்படுத்த வேண்டுகிறேன்.

உடுமலை நகரசபையிலே குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரிக்க சர்க்காருக்கு நகரசபை கடன் கேட்டு இருக்கிறது. அதையும் கவனித்து சீக்கிரத்தில் உதவ ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வழியில் நான்கு கிராமங்களுக்கும் உடுமலை குடிதண்ணீர் வசதி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மூன்று கிராமங்களுக்கு பைலட் ஸ்கீமாக, கிராமங்களுக்கு இரண்டு குழாய்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காம்ப்ரெஹென்சிவ் ஸ்கீமுக்கு ஷாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே உள்ள பஞ்சாயத்துக்கள் சிறு பஞ்சாயத்துக்களானதால், மான்யத்திற்காகவும், கடனுக்காகவும் விண்ணப்பித்திருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகியும் கவனிக்கப்படாமல் இருக்கிறது. இந்த ஆண்டாவது அதற்கு வழி செய்து, திட்டத்தை நிறைவேற்றி வழியில் உள்ள நான்கு கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி உடுமலையில் கட்டப்பட்டு வருகிறது. ஏற்கெனவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் கட்டியிருக்கிறார்கள். அதற்கு முன்புறம் இப்போது டிஸ்பென்சரி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டுக்கும் நடுவில் குறுகிய அளவு பாதை இருக்கிறது. இருபது அடி கூட இல்லை. அது பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்குப் போக இடைஞ்சலாக இருக்கிறது, டிஸ்பென்சரிக்குப் போகவும் இடைஞ்சலாக இருக்கிறது. டிஸ்பென்சரி காம்பவுண்டைத் தள்ளிப் போட்டுக் கொண்டால் பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கும் டிஸ்பென்சரிக்கும் போக வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். மதிப்புக்குரிய உணவு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு வந்தபோது உடுமலை பஞ்சாயத்து யூனியன் ஆபிசில் விவசாயிகளை சந்தித்துப் பேசினார்கள். அவரும் கூட அங்கு உள்ள அதிகாரிகளிடம் சொல்லி விட்டு வந்தார். இதையும் அவசியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். இதை நல்ல முறையில் நிறைவேற்றவில்லை என்று கருதுகிறேன். இதைத் தீவிரப் படுத்தவேண்டும். வேண்டுமானால், இதற்காகச் சட்டம் செய்தாவது இதைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன். இந்த இரண்டு இலாகாக்களையும் ஒருங்கே இணைக்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கிறதே, அது உண்மையிலேயே நல்லது அல்ல என்று நான் நினைக்கிறேன். ஏனென்று கேட்டால், ஒரே இடத்தில் அதிகாரம் குவிந்து போய்விடும், ஒரே இடத்தில் பேப்பர்கள் குவிந்துபோய் விடும். அப்படிச் செய்யும்பொழுது வேலைகள் முறையாக நடக்காது என்று நினைக்கிறேன். இருந்தாலும் கூட இப்பொழுது இருக்கிற

[திரு. பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்] [21st March 1966

முறை, அதாவது மருத்துவ அதிகாரி பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டாக்டர்களை கொடுப்பது என்றும், அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு பப்ளிக் ஹெல்த் இலாகாவில் இருக்கும் என்பதைப் பார்க்கும்பொழுது, அது சீரான முறையிலே வேலைகள் நடப்பதற்கு இடைஞ்சலாக, இடையூறாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே, யார் டாக்டர்களைப் போடுகிறார்களோ, அந்தப் பொறுப்பு யாரிடம் இருக்கிறதோ அவர்களே தான் அவர்களை, கண்காணிக்க வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் இல்லாமல் பப்ளிக் ஹெல்த் இலாகாவிற்கு சுகாதார முறைகள், நோய் வரக்கூடியதை தடுப்பதற்கான முறைகள் இவைகளையெல்லாம் பார்த்துக்கொள்ள அதிகாரம் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ் படிக்கிறவர்களுக்கு இந்த ஆண்டு மூன்று ஆண்டு பட்டப் படிப்பாக ஆக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் இருப்பதாகத் தெரியவருகிறது. எம்.எஸ். எம்.டி. கோர்சுக்கு சீனியர் ஹவுஸ் சர்ஜன்ஸி முடித்தவர்கள் இரண்டு வருஷங்கள் படித்தால் போதும் என்று ஏற்கனவே இருந்த மாதிரி, இரண்டு வருஷப் படிப்பாக இருந்தால் போதும் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது மூன்று வருஷ கோர்சாக மாற்றியபிறகு ஹவுஸ் சர்ஜனாக மட்டும் முடித்திருந்தால் போதும் என்று இருக்கிறது. ஏற்கனவே இருந்தமாதிரி சீனியர் ஹவுஸ் சர்ஜனாக வேலை பார்த்தவர்கள் இரண்டு வருஷங்கள் படித்தால் போதும் என்ற நிலையே இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் டாக்டர்களாக கிடைப்பதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. டி.எம். ஆண்டு எஸ். பட்டம் பெற்றவர்களை பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு டாக்டர்களாகப் போடுவதன் மூலம் அந்தக் குறையை ஒருவாறு நிவர்த்தி செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மன நோயைக் குணப்படுத்துவதற்குரிய சில ஊசி மருந்துகள், மாத்திரைகள் சில மருத்துவ மனைகளில் கிடைப்பதில்லை. ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட அளவு இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளிலும், மதுரை போன்ற இடங்களிலுள்ள பெரிய ஆஸ்பத்திரிகளிலும் அந்த மருந்து இல்லாமல் கஷ்டப்படவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மன நோயைக் குணப்படுத்தக்கூடிய மருந்துகளை அதிகமாக இறக்குமதி செய்து, சாதாரண கடைகளிலும், பெரிய ஆஸ்பத்திரிகளிலும் கிடைக்கக்கூடிய அளவிலே வசதி செய்யப்படவேண்டும் என்பதையும் இந்த இடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காச நோய் மிக அதிகமாகப் பரவி வருவதை நாம் பார்க்கிறோம். ஜனநெருக்கடியான நகரங்களில், அதாவது சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில் இந்த நோய் அதிகமாகப் பரவி வரு

21st March 1966] [திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்]

கிறது. இதைத் தடுப்பதற்காக ஸ்பெஷலாக முயற்சி எடுத்துக் கொண்டாலும்கூட, அது இன்னும் அதிகமான அளவிலே பயன் பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, காச நோய் வந்தவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்தவேண்டும். ஒரு சில படுக்கைகள் இருக்கின்றன என்று ஒத்துக் கொள்ளுகிறேன். அது போதுமானதாக இல்லை. வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு போகிறவர்களுக்கும் ஊசி மருந்து, மாத்திரைகள், முட்டை, பால் ஆகியவைகளை ஆஸ்பத்திரியில் கொடுப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

குடிநீர் சம்பந்தப்பட்டவரையில் மதுரை போன்ற பெரிய நகரங்களில் இன்னும் கஷ்டப்படக்கூடிய ஒரு நிலைமை தான் இருக்கிறது. குடிநீருக்காகப் பணம் செலவழிக்கக்கூடிய நிதி வசதி மதுரை நகரசபைக்கு இல்லை. ஆகவே, பல லட்சக்கணக்கான ரூபாய் மதுரை நகரசபைக்குக் கடனாகக் கொடுக்கப்பட வேண்டும். குடிநீர் கொண்டுவருவதற்குக் குழாய்களை அமைப்பதற்கு வசதி செய்யக்கூடிய அளவில் மதுரை நகரசபைக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் கடன் கொடுத்து உதவவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ், உணவுக் கலப்படம் செய்தவர்களுக்கு எந்தவிதமான தண்டனை கொடுத்தாலும் அது நியாயம்தான் என்று சொன்னாலும் கூட, முழு மஞ்சளைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். முழு மஞ்சளில் கலப்படம் எங்கே நடக்கிறது, எங்கே செய்யப்படுகிறது, என்பதைக் கவனிக்காமல், எங்கே விற்கப்படுகின்றதோ அங்கே சென்று சிறு சிறு சில்லரை வியாபாரிகளைப் பிடித்து, அவர்கள் பேரில் கேஸ் போட்டு, அவர்களுக்குத் தண்டனை அளிக்கக்கூடிய நிலைமைதான் இப்பொழுது இருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ளுகிறேன். எனவே எங்கு அந்த மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறதோ, எங்கு கலப்படம் செய்யப்படுகிறதோ அந்த இடத்தில் அவர்களைப் பிடித்து தண்டனை கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அறுவை சிகிச்சை சம்பந்தமாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். வேகம் வேகமாக ஆண்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது, அதனால் சில கோளாறுகள் ஏற்படுகின்றன. அந்த முறையில் அவசரம் அவசரமாக அறுவை செய்யாமல், நிதானமான முறையில் செய்யவேண்டும். எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக அவசரம் அவசரமாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எண்ணிக்கை கொஞ்சம் குறைவாக இருந்தாலும்கூட, பின்னால் அதன் காரணமாக தப்பு, தவறுகள் ஏற்படாத வண்ணம் நிதானமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

[21st March 1966

* திரு. ர. சம்பங்கி: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தப் பொது சுகாதார மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர்கள் குறிப்பாக பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டத்தைப்பற்றி இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவில், சென்ற ஆண்டு மான்யக் கோரிக்கை விவாதத்தில் நான் பேசும்பொழுது ஆம்பூர் நகராட்சி சம்பந்தப்பட்ட வரையில், குடி நீர்த் திட்டத்தைப்பற்றி நான் விரிவாக எடுத்துச் சொன்ன சமயத்தில் கனம் மதிப்பிற்குரிய பொது சுகாதார அமைச்சர் அவர்களும் நகராட்சி மன்ற அமைச்சர் அவர்களும் 'ஆம்பூர் நகராட்சி கட்ட வேண்டிய தொகையைக் கட்டவில்லை. ஆகவே, அதைச் செயல்படுத்த முடியவில்லை' என்று சொன்னார்கள். உரிய அதிகாரிகளைச் சந்தித்து அதற்கு உரிய ரீ-எஸ்டிமேட் தொகை ரூபாய் இருபத்து ஒன்பதாயிரத்து சொச்சம் என்ற அளவில் கட்டி முடித்துவிட்டிருக்கிறோம். எனவே, இப்பொழுதாவது அந்தக் குடி நீர்த் திட்டத்தை ஆம்பூர் நகராட்சிக்குச் சம்பந்தப்பட்ட அளவிலே செய்து முடிப்பார்கள் என்று நான் முழு மனத்துடன் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நகராட்சிக்கு இருக்கிற ஒரு தொல்லையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு முன்னால் 'டி.டி.டி' என்ற மருந்தை பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டார் சப்ளை செய்து கொண்டிருந்தார்கள். அது மலேரியா ஒழிப்பிற்கு மிகவும் சாதகமாக இருந்தது. அதை விட்டு பிறகு ஆயில் சப்ளை செய்து வந்தார்கள். அதுகூட இப்பொழுது இல்லை. இப்பொழுது அந்த ஆயில் வாங்கவேண்டுமென்றால், நகராட்சி இண்டெண்டு போட்டு டிபார்ட்மெண்டு மூலம் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு கிடைத்திருக்கிறது. மூன்றாம் தர நகராட்சி மன்றங்கள் அவற்றில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்களுக்கு 5-ம் தேதி முதல் 15-ம் தேதி வரையில் சம்பளம் கொடுக்கக்கூடிய அலைநிலை இருந்துகொண்டிருக்கின்றது. அப்படியிருக்கும் பொழுது அவர்களே இண்டெண்டு போட்டு வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவது, வேகமாகப் பரவும் மலேரியா நோயை தடுத்து நிறுத்த முடியாது என்ற அளவுக்குத்தான் பயன்படும். ஆகவே, இந்த முறையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கலப்பட சட்டத்திலிருந்து பொதுவாக பெரிய வியாபாரிகள் தப்பித்துக்கொள்ள வழிவகைகள் இருக்கின்றன. கடைசி நிலையில் ஆப்பக் கடை வைத்துக்கொண்டிருக்கும் ஏழை மக்கள் தான் அந்தச் சட்டத்தின் கீழ் சிக்கிக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. நகராட்சி மன்றங்களில் இருக்கக்கூடிய ஒரு சானிடரி இன்ஸ்பெக்டர் ஒரு மாதத்திற்கு இரண்டு கேஸ்கள் பிடிக்க வேண்டும் என்ற நிலை இருப்பதன் காரணமாக இம்மாதிரி ஏழைகள்

21st March 1966] [திரு. ர. சம்பங்கி]

இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாத ஒரு அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியான விருஞ்சிபுரத்தில் நான்கு யூனியன்கள் இருந்தும், ஒரு யூனியனில் கூட பிரைமரி ஹெல்த் சென்டர் இல்லை. பலமுறை இந்தச் சட்ட மன்றத்தில் கூறியபடி, ஒழுகத்தூர் பகுதியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும் பொழுது ஆம்பூர் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொண்டு, அங்கே 100 படுக்கைகள் ஏற்படுத்தி விஸ்தரிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லக் கூடத் தயாராக இருக்கிறேன், கடமைப்பட்டிருக்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஒப்ப சர்க்கார் இந்த ஆஸ்பத்திரியை எடுத்துக்கொண்டு, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் மெடிக்கல், பப்ளிக் ஹெல்த் ஆகிய இரண்டு இலாகாக்களையும் . . . . (மணி அடிக்கப்பட்டது)

* திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே,

மன்னுயிரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை,

என்ற திருக்குறள் வாக்கியத்திற்கு இணங்க, மருத்துவ முறை, சுகாதார முறை ஆகிய இரண்டின் கீழ், இரண்டு தலைப்பின் கீழ், வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை நான் மன நிறைவுடன் வரவேற்கின்றேன். சாதாரணமாக உலகத்திலே, அன்பு என்ற பண்பு சிறந்தது. அதனினும் தாயன்பு சிறந்தது; என்பது மரபு. அந்தத் தாயன்புக்கு நிலைக்களமாக இருப்பது பெண்பால்; அந்தப் பெண்பாலைச் சேர்ந்த கனம் அம்மையார், மருத்துவ, சுகாதாரத் தலைவராக இருந்து பணியாற்றுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்திருக்கின்றது, அது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகின்றேன். கம்பன் கூடச் சொல்லுகிறான்,

கன்று பிரிந்துழி கறவை ஒப்பக் கரைந்து
கலங்கினான்,

என்று தயரதனைப் பற்றியும்,

பால் நினைந்து ஊட்டும்,
தாயினும் சாலப்பரிந்து

என்று திருவாசகத்திலே மாணிக்கவாசகப் பெருமானும் கூறினர்கள். ஆகவே, தாயன்பின் நிலைக்களமாக அம்மையார்

இந்தத் துறைகளுக்குத் தலைமை தாங்கி நடத்துவதை வரவேற்கின்றேன். நம்முடைய தமிழ் நாட்டிலே நடைபெற்றிருக்கின்ற 'மருத்துவம்' என்கின்ற முறை ஆங்கில முறையைப் பின்பற்றிய ஒரு நல்ல முறையாக, ஒருவரையறுக்கப்பட்ட, ஒரு திட்டமான முறையாக இருந்து வருகின்றது. அந்த முறைகளெல்லாம் ஆங்கில மொழியிலேயே போதிக்கப்பட்டு வருகின்றன. அந்த முறையை மாற்றக்கூடாது. அவசரப்பட்டு, ஆங்கிலத்தைக் கைவிட்டு, இந்த மருத்துவ முறையைத் தமிழிலோ அல்லது இந்தியிலோ ஆக்கி விடவேண்டாம் என்று சொல்ல விரும்புகின்றேன். நாட்டின் வகையிலே ஒருமுகமாக இயங்குவதற்கும், உலக வகையிலே மருத்துவ முறையில் கண்டு பிடிக்கப்படுகின்ற நுணுக்கங்களை உடனுக்குடன் தெரிந்து அவ்வப்பொழுது பணியாற்றவும், மாணவர்களுக்கு ஆங்கிலத்திலேயே மருந்துவ முறையைக் கற்பிப்பது சாலச் சிறந்ததாக அமையும். ஆகவே, இந்த மருத்துவ முறை ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது இந்தச் சுகாதார முறையையும், மருத்துவ முறையையும் ஒன்றாக இணைக்கின்ற பான்மை வருகின்றது. என்னைப் பொறுத்த வரையில், அதை நான் வரவேற்கின்றேன். காரணம் இந்த இரண்டு முறைகளும் ஒன்றாக இயங்கினால்தான், கிராமப் பகுதிகளுக்கு மிகுந்த நலமாக இருக்கும் என்று நான் உணருகின்றேன். இந்த இரண்டு முறைகளும் ஒன்றாக இயங்குகிறது பிரதம சுகாதார நிலையங்கள். இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பது கிராமங்களிலே. கிராமங்களிலே பிரதம சுகாதார நிலையங்கள் செய்யும் பணிகள், ஒன்று நோயைத் தடுப்பது; நோய் வந்த பின்பு சிகிச்சை செய்வது மற்றொன்று. ஆக இந்த இரண்டு வகைகளிலும் நன்றாகச் செயல்பட்டு வருகின்றன. ஆகையினால் இந்த இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைப்பது நலன் பயக்கும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

அத்துடன் அமைச்சருக்கு நல்வாழ்த்துக்கள் சொல்லி, இந்த இலாகாவினருக்கும் நல்வாழ்த்துக்கள் சொல்லி, இந்த மருத்துவ, சுகாதாரத் துறைகள் தங்கள் பணிகளை மிகவும் நன்றாகச் செய்கிறது என்பதற்கு நன்றி கூறி, நோய் வராமல் தடுப்பதில், முக்கியமாக தொழு நோய், பரவலாக வருகின்ற தொத்து நோய், காலரா, பெரியம்மை போன்றவை இப்பொழுது மிகவும் கட்டுக்குஅடங்கியிருக்கின்றன என்பதைக் கூறிக்கொண்டு, இந்த நல்ல பணியாற்றுகின்றவர்கள் பணிகளை வரவேற்று, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, மருத்துவ சுகாதார மானியங்களை ஆதரிக்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு இந்தத் துறை அதிக முன்னேற்றம் கண்டிருக்கிறது. எங்கள் திருநெல்வேலி ஜில்லாவைப் பொருத்த வரையில்,

ஏற்கனவே மருத்துவ மனை ஒரு சிறிய இடத்தில் இருந்து, மக்கள் அவதிப்பட்டார்கள். இன்றைக்கு அது ஒரு நல்ல இடத்திலே அமைக்கப்பட்டு, எல்லோரும் வைத்தியம் செய்துக் கொள்ளக் கூடிய வசதியான இடத்தில் அமைந்திருக்கிறது, என்பதைப் பெருமையோடு சொல்ல முடியும். அது மாத்திரமல்ல, மருத்துவக் கல்லூரிகளும் அதிகரித்திருக்கின்றன. ஏற்கனவே இரண்டு கல்லூரிகளே இருந்த மாநிலத்தில், இன்றைக்கு 7 கல்லூரிகள் வரை இருக்கின்றன. திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் மருத்துவத் துறை நல்ல பணி ஆற்றிவருகிறது. அங்குள்ள அதிகாரிகளும் நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள் என் பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எத்தனை கல்லூரிகள் அமைத்தாலும், வெளியேறுகிறவர்கள் தரத் தைப் பொருத்திருக்கிறது நம்முடைய பெருமை. நம் மாநிலத்தி லிருந்து வெளியேறும் மாணவர்கள், மிகவும் நல்ல முறையிலே பணியாற்றி நற்பெயர் எடுக்கிறார்கள். இப்பொழுது ராணுவ சேவை யில் கூட, நம்முடைய மருத்துவத் துறையிலிருந்து சென்றவர் கள், அடுத்த மாநிலங்களிலிருந்து சென்றவர்களை விட, நம்முடைய டாக்டர்கள், நல்ல மதிப்பும் பெருமையும் உள்ளவர்களாக இருக் கிறார்கள். அதைக் கண்டு நாமும் பெருமை அடைகிறோம் என் பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதன் காரணமாக நம் மாநிலத்திலிருந்து சென்றவர்களுக்கு பேமிலி அலவன்ஸ் ரூ. 250 கொடுக்கப்படுகிறது. அதைத் பற்றிச் சந்தோஷம். ஆனால், இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குக் கனம் அம்மையார் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அலவன்ஸ் எல்லா டாக்டர்களுக்கும் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஒரு சில டாக்டர்கள், அதாவது அப்படியே கல்லூரியிலிருந்து சென்றிருக்கிறவர்களுக்கும் அந்த அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. அதற்குத் தெளிவான விளக்கம் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடி நீர்த் திட்டம் பற்றி எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். கிராமங்களில் குடி நீர், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அவசியம் என்று செய்கிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் கூட, ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித் தனித் திட்டம் என்று இருப்பது அவ்வளவு நலமாக இல்லை. ஒரு கிராமத்தில் தண்ணீர் உப்பாக இருக்கிறது என்றால், அது பிரயோசனப்படாது. ஆகவே, இரண்டு மூன்று கிராமங்களுக்குச் சேர்ந்த திட்டமாகப் போட்டால் நல்லது என்பது என் அபிப்பிராயம். அந்த மாதிரி திருநெல்வேலியில், காட்டூர், திம்மராஜபுரம் முதலிய கிராமங்களை இணைத்து ஒரு திட்டம் அனுப்பினார்கள். ஆனால் அதற்கு அங்கிகாரம் கிடைக்கவில்லை. அதிலே ஒரு டெக்னிக்கல் கஷ்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பரிசிலனை செய்வது நல்லது. அதோடு எனக்கு முன்னால் பேசிய அன்பர்கள் குறிப்பிட்டபடி, குடி நீர் மாத்திரம் அளித்தால் போதாது. கிராமங்களில் தெருக்களெல்லாம் அசுத்தமாக இருக்கின்றன. ஆகவே வடிகால் திட்டம், சாக்கடைத்

திட்டமும் உடனடியாகச் செய்யப் படவேண்டும், அப்படிச் செய்வது மிகவும் நல்லது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். இன்னும் சில இடங்களில் அம்மாதிரித் திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலே விக்கிரமசிங்கபுரம் ஒரு மேஜர் பஞ்சாயத்து. சுமார் 20,000 ஜனத்தொகை கொண்டது. தொழிலாளர்கள் இருக்கும் இடம். எத்தனையோ ஆண்டுகள் ஆகியும், அந்த இடத்திற்கு இன்னும் குடி நீர்த் திட்டம் சாங்ஷன் செய்ய வில்லை. இன்றைக்கு வருகிறது, நாளை வருகிறது என்று நாளைக் கடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதைச் சீக்கிரம் செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரி நாங்குநேரி குடி தண்ணீர்த் திட்டமும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. அதையும் பார்த்துச் சீக்கிரம் செய்யவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சமயத்தில் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வைத்திய வசதி செய்து கொடுத்து, நாட்டு மக்களை நல்ல பலப்படுத்துவதன் காரணமாக, ஜனத்தொகை அதிகமாகப் பெருகும். அப்படிப் பெருகி வருகிறது. ஆகவே குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக நடத்தப் படவேண்டும். நாம் எல்லோரும், அது வேண்டுமா வேண்டாமா என்று ஏனோ தானோ என்று கருதி செயல்படுவது போதாது. அதற்கு வேண்டிய முழு அக்கறையும் செலுத்தி, அதற்காகப் பணம் அதிகமாகவே செலவழிக்கிறார்கள். இருந்தாலும், அதிகாரிகள் மாத்திரம் அக்கறை செலுத்துவது போதாது, எல்லோரும் ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. முனு. ஆதி : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சரால் கொண்டு வரப் பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

மருத்துவ நிலையங்களைப் பார்க்கும்போது, அவை எல்லா இடங்களிலேயும் பரவலாக அமைக்கப் பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். குறிப்பாக, தாம்பரம் நகராட்சியாக மாறியதற்குப் பின்னும், நீண்ட காலமாக தாலுகா ஆஸ்பத்திரியை 50 பெட்கள் கொண்டதாக அமைக்க அனுமதி தந்திருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது ஒரு பெரிய நகரமாக வளர்ந்திருக்கிறது, கிட்டத்தட்ட 50,000 ஜனத்தொகையைக் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அந்த வேலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கனம் சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய சென்னை மாநிலத்திற்குக் காச நோய் மருத்துவ மனை ஒன்று தாம்பரத்தில் இருக்கிறது. அங்கே அவுட்-பேஷன்ட் டிபார்ட்மென்ட் தேவை என்று நீண்ட காலமாக நான் சொல்லி

கொண்டு வருகிறேன். அதற்குக் கனம் சுகாதார அமைச்சர் அவர்கள், "சென்னை நகரத்தில் சேத்துப்பட்டில் இருக்கிறது. அங்கே வந்து பார்த்துக்கொள்ளட்டுமே" என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால், தாம்பரத்தின் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்களெல்லாம், தாம்பரத்தில் உள்ள காச நோய் மருத்துவ மனையில் வந்து ஆரம்பத்திலேயே பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஒரு அவுட்-பேஷன்ட்ஸ் டிபார்ட்மென்ட் தேவை என்று சொல்வதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் அவுட்-பேஷன்ட்ஸ் டிபார்ட்மென்ட் வைப்பதைப்பற்றிக் கூறவில்லை. 'அட்மிஷன்' பற்றிக் குறிப்பிட்டார்கள். ரிஜிஸ்டர் செய்துவிட்டு, அந்த வரிசையாக 'கால்-ஃபார்' பண்ணுவார்கள் என்று சொன்னேன்.

திரு. முனு. ஆதி : கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் அவ்வாறு சொன்னால், இனிமேலாவது தாம்பரத்தில் உள்ள காச நோய் மருத்துவ மனையில் அவுட்-பேஷன்ட்ஸ் டிபார்ட்மென்ட் ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தாம்பரம், ஆலந்தூர், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாமல் சுகாதாரக் கேடான நிலையில் இருக்கின்றன. நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். அந்த நகரங்களில் உடனடியாக பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கும், தாம்பரம் காச நோய் ஆஸ்பத்திரியில் அதிகமான படுக்கைகளை உண்டாக்குவதற்கும் ஆவன செய்யவேண்டும். அங்கே இட வசதி இருக்கிறது. இருக்கும் டாக்டர்களை வைத்துக் கொண்டு பரீட்சித்துப் பார்க்க முடியும். இப்பொழுது எதைக் கேட்டாலும், சூபரின்டென்டென்ட் அவர்கள், "படுக்கை இல்லை" என்று சொல்லிவிடுகிறார்கள். மேலும் பல வார்டுகளைக் கட்டி படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருவொற்றியூர் குடி தண்ணீர்த் திட்டத்தை ஏற்பாடு செய்து அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே ஓவர்ஹெட் டாங்க் கட்டுவதற்கு இடமில்லாமல் அவதிப்பட்டு, அங்கே ஆதித் திராவிடப் பொது நல சங்கத்தார் ஒரு இடத்தைக் காட்டி, அங்கே பரந்த இடம் இருக்கிறது, அந்த இடத்தில் ஓவர் ஹெட் டாங்கைக்கட்ட முடியும் என்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்கவேண்டும்.

தாம்பரம் குடி தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையில், முதல் அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். அது எப்போதோ நிறைவேற்றப்படும் என்ற நிலையில் இருந்தது. இன்னும் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளாதது ஏன் என்று தெரியவில்லை. உடனடியாக அந்தத் திட்டத்தை

அமல் நடத்துமாறு பணிவுடன் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். பைப் வந்து இறங்கியிருக்கிறது. ஆனால், நடைமுறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கும்போது, இடையில் நிறுத்தப்பட்டது போன்று தெரிகிறது. அதையும் உடனடியாக துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். தாம்பரத்திற்குத் தாலுக்கா மருத்துவ மனை வருவதை நான் பாராட்டுகிறேன். அதை உடனடியாக ஐம்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அமைக்கக்கூடிய முறையில் துரிதப்படுத்த வேண்டும் என்றும், பாதாள சாக்கடைத் திட்டத்தையும் அங்கே நிறைவேற்றித் தரவேண்டும் என்றும், சென்னை நகரத்தை ஒட்டியிருக்கும் பெரிய நகரமாக இருப்பதால், இதையெல்லாம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை நான் ஆதரிக்கிறேன். இந்த மருத்துவத் துறையையும் சுகாதாரத் துறையையும் இணைக்கக் கூடாது என்ற கருத்தினை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே நான் இந்த மன்றத்தில் தெரிவித்தேன். அன்றைக்குக் கைவிட்டுவிட்டு, மறுபடியும் ஏன் இந்த யோசனை இப்பொழுது வருகிறது என்பது எனக்குப் புரியவில்லை. இது மேல் நாடுகளிலேயே பரீட்சார்த்தமாகப் பார்க்கப்பட்டு வெற்றி பெறவில்லை என்று கைவிடப்பட்டது. அதை நம் நாட்டிலே கொண்டுவந்து புகுத்துவதற்கு அவசியமா என்று பார்க்கவேண்டும். சிக்கனத்திற்காக ஏதோ செய்யலாம் என்ற அடிப்படையில் ஒருக்கால் அரசாங்கம் இந்த ஏற்பாடு செய்கிறதோ என்று நான் கருதுகிறேன். சிக்கனத்திற்குப் பல வழிகள் இருக்கின்றன. வேறு அவசியம் இல்லாத இலாக்காக்கள் இருக்கின்றன. அந்த இலாக்காக்களை வேண்டுமானால் எடுத்துவிடலாமே அல்லாது, இந்த இலாக்காக்களை இணைப்பதனால் வேலைகள்தான் தாமதப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில், குடி தண்ணீர்த் திட்டம், சுகாதாரத் திட்டம், மருத்துவம் என்றெல்லாம் வருகின்றன. இவற்றையெல்லாம் ஒன்று சேர்ப்பதால், பிரச்னைகள் உடனுக்குடன் தீராத நிலை தான் ஏற்படும். ஆகவே, இந்த இலாக்காக்களைச் சேர்ப்பதால் நன்மை ஏற்படுமா என்பதை மறுபடியும் யோசித்து, இணைக்கும் யோசனையைக் கைவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டவரையில் ஒன்றிரண்டு கருத்துக்களையும் இந்தக் குறுகிய நேரத்தில் சொல்லிவிடுகிறேன். நீலகிரி ஜில்லாவில், குன்னூரில் லாலி ஆஸ்பத்திரி இருக்கிறது. அது ஏற்பட்ட நாளிலிருந்து இதுவரை அதே கட்டடத்தில்தான் இருந்து வருகிறது. அபிவிருத்தி எதும் செய்யப்படவில்லை.

அபிவிருத்தி செய்யலாம் என்ற யோசனை சர்க்காருக்கு வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. அதை அபிவிருத்தி செய்வது பற்றி அரசாங்கம் சிந்திக்கவேண்டும். லாலி ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி குறைவு. சென்னை நகரத்தில் ஒருக்கால் படுக்கை வசதி இல்லையென்றாலும், தரையிலே பாயைப் போட்டு பேஷன்டைப் படுக்க வைத்துவிடலாம். ஆனால், நீலகிரி ஜில்லாவில் கட்டில் இல்லாமல் பேஷண்டைக் கீழே போடவேண்டும் என்றால், ஓரளவு நன்றாக இருக்கும் நோயாளிகூட, ஆஸ்பத்திரிக்கு வந்ததற்குப் பின் சாகவேண்டுமே தவிர, உயிரோடு வீட்டுக்குப் போக முடியாது. கட்டடம் கட்ட முடியவில்லையென்றாலும், அதிகப்படியான கட்டில்களாவது போடக் கூடாதா என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். லாலி ஆஸ்பத்திரிக்குத் தேவையான வசதி செய்து கொடுக்க வேண்டும். படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

நெடுகுளா ப்ரைமரி ஹெல்த் சென்டருக்கு கவர்னர் திரு. மேதி அவர்கள் அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். அந்த அஸ்திவாரக்கல் அப்படியே இருக்கிறது. இன்னும் கட்டடம் கட்டாததற்குக் காரணம் என்ன? ஒருக்கால் நமக்கு இருக்கக் கூடிய நெருக்கடி நிலை என்று சொல்லக்கூடும். நெருக்கடி ஓரளவு தீர்ந்திருக்கிறது என்பதை அனுசரித்து நாம் கட்டடங்களை ஓரளவு கட்டிக் கொண்டு வருகிறோம். ஆகவே, இதையும் உடனடியாகக் கட்டி முடிப்பது பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோத்தகிரி வாட்டர் சப்ளை திட்டம் சம்பந்தமாக நான் ஏறாத படி இல்லை; பார்க்காத அமைச்சர் இல்லை. பார்க்காத காரியதரிசி இல்லை. எத்தனையோ பிரயாசைகளை நான் சென்ற ஒன்பது ஆண்டுக் காலமாக எடுத்துக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு பி.டபிள்யூ.டி. அதிகாரியிடத்தில் போகும்போது, "சர்க்காருக்கு அனுப்புகிறேன்" என்று சொல்லுகிறார். அமைச்சர் அவர்களிடத்திலும் குறிப்பு கொடுத்திருக்கிறேன். தயவு செய்து, அதை இந்த ஒரு வாரத்திற்குள்ளே சாங்ஷன் செய்து அனுப்பவேண்டும் என்று நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தனை வருஷங்களாக நான் பிரயாசை எடுத்துக்கொண்டும் இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. குன்னூர், கோத்தகிரி, உதகை இம்மூன்றும்தான் ஹெல்த் ரிஸார்ட்டாக இருக்கின்றன. ஆகவே கோத்தகிரியில் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்கவில்லையென்றால், எப்படி அது அபிவிருத்தியாகும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

தூனேறி வாட்டர் ஸப்ளை ஸ்கீம் கவர்ன்மெண்டில் பெண்டிங்காக இருக்கிறது. அதையும் தயவு செய்து பாருங்கள் என்று நான் மறுபடியும், மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஆதிவாசி மக்களுக்குக் கொடுத்திருக்கும் வண்டியைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் சொன்னார்கள். வண்டி ஒரு புறம் இருக்கட்டும். அவர்களுக்கு என்ன வியாதி

என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். வெனீரியல் டிஸீஸ் அவர்களுக்குப் பரம்பரையாக வந்த வியாதியாக இருக்கிறது. ஆயிரத்திற்கும் குறைவாக உள்ள அந்தக் குடும்பங்களுக்குள்ள வெனீரியல் டிஸீஸைப் போக்கியிருக்கிறார்களா? போக்குவதற்கு ஒரு எக்ஸ்பெர்ட்டை வைத்திருக்கிறார்களா? சாதாரண சிப்பந்திகளையோ நர்ஸையோ வைத்துக்கொண்டு நாம் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடமுடியுமா? தோதவர்களுடைய வெனீரியல் டிஸீஸைத் தீர்த்திருக்கிறோமா? அன்னிய நாட்டுக்குச் சென்று அங்கிருந்து யாராவது எக்ஸ்பர்ட்டைக் கூட்டிக்கொண்டு வந்தாவது, வெனீரியல் டிஸீஸினால் அவஸ்தைப்படும் ஆயிரத்திற்கும் குறைந்த அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். அங்குள்ள அத்தனை பேர்களும் வெனீரியல் டிஸீஸினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வெனீரியல் டிஸீஸைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சில இடங்களில் கட்டுப்படுத்துலதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சில இடங்களில் கட்டுப்படுத்தியிருக்கிறோம். பூரணமாகக் கட்டுப்பாடு செய்யவேண்டும். ஆதிவாசி மக்கள் தானே என்ற காரணத்திற்காக அவர்களை ஒதுக்கிவிட முடியுமா? தனியாக, சிறப்பாக அவர்களைக் குறித்து என்ன அக்கறை எடுத்துக்கொண்டோம் என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

சென்னையில் இருக்கும் ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்கு நான் ஒரு சிறு ஆபரேஷன் செய்துகொள்ளுவதற்காகப் போயிருந்தேன். ஆபரேஷனுக்கு சென்றால் ஒரேயடியாக வியர்க்கிறது. நானோ நீலகிரியில் இருந்தவன். ஆபரேஷன் தியேட்டரில் சென்றவுடன் ஒரே வேக்காடாக இருந்தது. காரணம் என்ன என்று கேட்டதில், ஏர்க்கண்டிஷன் சாதனம் ரிபேராக இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுவும் மூன்று மாதமாக ரிபேர் செய்யப்படாத நிலையில் ஒரு ஆபரேஷன் தியேட்டர் இருக்கலாமா? ஏர்க்கண்டிஷன் மெஷின் சரியாக இல்லையென்றால், அதை உடனே தூக்கியெறிந்துவிட்டு புதிதாக ஒன்றை வாங்கிப் போடவேண்டியது தானே? ரிபேர் செய்வதற்காக என்று மூன்று மாதமாக அப்படியே வைத்திருப்பதென்றால், அந்த ஆபரேஷன் தியேட்டரில் செய்யும் ஆபரேஷன் எப்படி உருப்படும் என்பதையெல்லாம் சற்றுச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு யார் யாரையோ போட்டுவிடுகிறோம். அதற்குப் பயிற்சி பெற்றவர்களைத்தான் போடவேண்டும். ஆந்திர மகில சபாவில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பெண்களைக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்குப் போடாமல் யார் யாரையோ போட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவரம் தெரியாதவர்களையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று நான் கேள்விப்படுகிறேன். ஆந்திர மகில சபாவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டப் பயிற்சி இரண்டு ஆண்டு பெற்று, பரீட்சையிலே தேறியவர்கள் போடப்படாததற்குக் காரணம் என்ன சொல்லப்படுகிறது

என்றால், அவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாம். கல்யாணம் ஆகியிருந்தால் என்ன? ஆகாமல் இருந்தால் என்ன? பயிற்சி பெற்று பரீட்சையில் தேறுவது தானே முக்கியம். பயிற்சி இல்லாதவர்களை இதில் போடுவானேன்? பயிற்சி பெற்றவர்களைப் பார்த்து, கல்யாணம் ஆனவர்களா, ஆகாதவர்களா என்று கேட்பதில் அர்த்தம் இல்லை. இந்த நாட்டிலே மிக முக்கியமான பிரச்னை ஜனத்தொகைப் பெருக்கம். ஆகவே, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டுவருவதுபற்றி சற்றுச் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. எஸ். மணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள், இன்றைய தினம் கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மருத்துவம், சுகாதாரம், குடிதண்ணீர் திட்டம் சம்பந்தமான மானியக் கோரிக்கைகளுக்கு எங்கள் கட்சித் தரப்பில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய வட்டாரத்தில் இருக்கும் சில குறைபாடுகளை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய வட்டாரத்தில் பெரம்பலூர், அரியலூர் ஆகிய இடங்களில் அரசாங்க மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. அந்த மருத்துவ மனைகளில் 15, 20 பேர்கள் தான் படுக்க முடியும். 100 பேர்கள் வெளியிலே படுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் மருத்துவ மனையை நல்லமுறையில் விஸ்தரிக்கவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் மூலமாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. நான் இந்த மன்றத்திற்கு வந்தவுடனேயே 1962-இல் அங்கே என் பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. ஐந்து வருஷமாக அந்த வேலை முடியவில்லை. இன்னும் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. திட்டம் ஏட்டளவில் தான் இருக்கிறது. வேப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இடம் எது என்ற பிரச்சினையில் ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்தும் திட்டம் நிற்கிறது. அரசாங்கத்திற்கு இடத்தைப்பற்றி அக்கறை இருக்கலாம். எங்களுக்கு நோயைப் பற்றி மிகுந்த கவலையாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது எங்கள் வட்டாரத்தில் உணவுப் பிரச்சினையைவிட் கொடுமையானதாக இருப்பது குடிதண்ணீர்ப் பிரச்சினை. உடையார் பாளையம், ஜெயம்கொண்டம், அரியலூர் ஆகிய இடங்களில் கிணறு எடுத்தால் உப்புத் தண்ணீர்தான். குளத்து ஜலத்தையும், ஏரித் தண்ணீரையும்தான் குடித்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவேயே அதற்கு ஒரு திட்டத்தை கனம் ராமசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் வெள்ளாற்றில் இருந்து, கொள்ளடத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதாகும். அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். மேலும் பஞ்சாயத்து யூனியனில் இருந்து பாதி கிராண்டு வாங்கி, நாங்களே பொதுமக்களிடத்தில் இருந்து இரண்டாயிரம், மூவாயிரம் கடன் வாங்கி நாங்களே ஒரு கிணறு எடுத்திருக்கிறோம். அந்தக் கிணற்றில் இருந்து ஓவர்ஹெட் டாங்க் கட்டி பைப் மூலம் தண்ணீர் போக வசதி செய்து கொடுத்தால் அந்த வட்டாரத்தில் உள்ள பத்துப் பதினைந்து கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி அளிக்கலாம். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து அந்தப் பகுதி மக்களுடைய குடிதண்ணீர் பிரச்சினையைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. துரையரசன்: கனம் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சிக்காரர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தாலுக்கா தலைநகர அறந்தாங்கி (ஹெட் குவார்டர்ஸ்) மருத்துவமனை வேலை துவக்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக துவக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மணல்மேடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரை நியமித்து அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. இருந்தும் இதுவரை டாக்டர் அங்கே வந்து சேர்ந்தபாடில்லை. உடனடியாக டாக்டரைப் போடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொன்போத்தி ஆரம்ப சுகாதார நிலைய வேலை ஆமை வேகத்தில் நடைபெறுகின்றது. அதைத் துரிதப்படுத்தவேண்டும். அறந்தாங்கி ப்ளாக்கில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தும் அது நாகுடியிலா, சிலட்டூரிலா என்ற பிரச்சினை இரு பகுதி மக்களிடையே எழும்பி இருக்கிறது. இரண்டும் முக்கியமான இடங்களாதலாலே நாகுடியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும், சிலட்டூரிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி நகரத்தைப் பொறுத்த வரையிலும் குடிதண்ணீர் சப்ளை போதவில்லை. இதைப்பற்றி ஊராட்சி மன்றத்திலே தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டுள்ளது. உடனடியாக அடிஷனலாக—மேல்மட்டத் தொட்டி கட்டித்தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர்கள் பட்டம் பெற்றவுடனே கட்டாயமாக கிராமங்களில் சேவை செய்யவேண்டும். அதற்கான உறுதிமொழியை மெடிகல் காலேஜில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போதே அவர்களிடம் வாங்கவேண்டும்.

கிராமப்புறங்களில் வைத்திய வசதியைத் தீவிரமாக்கவேண்டும். தற்போது ஹோமியோபதி டாக்டர்கள் கிராமங்களில் இருக்கிற காரணங்களினால் ஓரளவு வைத்திய வசதி பெற முடிகிறது. அந்த ஹோமியோபதி வைத்தியப் படிப்பு நல்ல முறையில் வளர்ச்சி பெறுவதற்கும், அதன் மூலம் படித்தவர்கள் ஜனங்களுக்கு சேவை செய்ய விரும்புகிற ஆர்வத்தையும் நாம் பெருக்கவேண்டும். வேண்டிய உதவிகளையும் அளிக்கவேண்டும். ஹோமியோபதியை அங்கீகரித்து குறுகிய கால பயிற்சி தர அரசினர் முன்வர வேண்டும்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை என்னுடைய வட்டாரத்தில் கடுமையாக இருக்கிறது. கடலோரப் பகுதியில் முஸ்லிம் ஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க ஆவன செய்துதர வேண்டுமாய்க் கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. NANJUNDA ROW: Mr. Deputy Speaker, Sir, during the budget speech the Hon. Chief Minister mentioned about the Government policy of integrating Medical and Public Health Departments. During the four or five days budget discussion that followed, I do not think that any hon. Member showed divergent views on the floor of the House so far as that integration proposal was concerned. But today it is so strange that divergent views have been expressed on that proposal, on the floor of the House. Even though I feel that both Public Health and Medical Departments are two sides of the same coin, left to myself I welcome this policy of integration. But that if Integration is brought about in this State, let that be in the natural way and let it not be brought about in any artificial way. But still, I welcome the policy of integration.

I met the Director of Medical Services with a request, ten days back. I requested her to recommend to Government to start two Government dispensaries in Eriyodu and R. Vellodu in my area. Her reply was "Where are the doctors, friend?". If the Government were to open two more dispensaries, then more doctors are needed. There is dearth of doctors. Even for big hospitals in places like Dindigul, sufficient number of doctors are not there. The D.M.S. therefore said that she was not in favour of starting more hospitals, at present. This problem of dearth of doctors is a difficult problem. I want to state only one thing. There are 936 candidates undergoing training in medical colleges at present. All the 936 candidates, before leaving the medical colleges, should give an undertaking that they will take to only Government service after passing. These new doctors when they come out of the medical colleges should not be permitted to open their own private dispensaries. Some years back the Health Minister of the Government of India said that Government was spending Rs. 25,000 on each medical student. Having spent so much, why should Government permit the doctors to open their

[Sri S. Nanjunda Row] [21st March 1966

own private dispensaries? My suggestion amounts to this. Let medical service be nationalised and let all medical graduates be forced to take to Government service. During the recent armed conflict with Pakistan, medical graduates were requested to join the Army and special concessions were shown to them. But even then sufficient number of candidates were not forthcoming. So, I would request Government to recommend to the Military Department to start medical colleges and candidates joining such military medical colleges might be taken in the Army after finishing the course. The problem could be solved in that way.

I want to mention another point. In big hospitals what is known as 'consultation fee' sometimes—ranging from Rs. 50 to Rs. 100—is being charged by the experts. I think this is an indirect way of bribery. When we have a socialistic pattern of society, this consultation fee should be abolished.

There is the leprosy problem. In the cities and towns on Tuesdays and Fridays there is a long procession of two or three leprosy patients in a row, begging for money. This should be stopped and leprosy problem should be promptly tackled and the Madras State Hind Kusht Nivaran Sangh Advisory Committee should be treated as a first class committee of the State Government.

Dindigul hospital has become a headquarters hospital. Still it is not having all the departments and there are not many beds. So I request Government to arrange expansion of that hospital. The Medical Department is spending about Rs. 10 crores a year and its income is Rs. 1 crore only per year. If we go to big hospitals, everybody wants A ward or B ward or special ward. I think this tendency should be stopped since we live under a socialistic pattern of society. If persons want special wards, let them join Health Insurance Scheme which could provide for special treatment. All the ordinary people should be given free treatment. In a socialistic pattern of society, medicines also should be given free just as education is free.

About drinking water-supply in my constituency, there are two places called Mammanuyur in Ayyalur Hill area and Pallanatham which comprises a Harijan locality. There is no drinking water supply to these places. All the Engineers dealing with the National Water Supply Scheme have tried and I do not think they have still come to a conclusion. I request that the said backward villages should be provided with drinking water. With these words, I conclude my speech.

12-30 p.m. * Sri C. CHIRANJEEVULU NAIDU: Sir, it is said in the printed note circulated to the Members 'In a Welfare State, the maintenance of the health of the community and the provision of adequate facilities for medical treatment are matters of vital concern. The Government have therefore been constantly striving to make the Medical Services more efficient and progressive, as the

21st March 1966] [Sri C. Chiranjeevulu Naidu]

ultimate success of a democratic administration depends upon the sound health of the Nation.' To achieve this aim, I say that a radical reform in the set up of the Medical Department is necessary. A radical reform is necessary in respect of personnel, their emoluments and service conditions. We see that the Civil Assistant Surgeons and other Government medical officers concentrate more on private practice than on attending to patients coming to the hospitals. This has become a regular phenomenon and also a regular menace in society. No doctor is paying as much attention to those patients who come to the hospitals at those who consult him privately and pay him money. Engineers are not allowed to have private consultation, and teachers are not allowed to have tuition except with the permission of the higher authorities. When such is the case, I do not see any reason why the Government should allow private practice to Government medical officers. I do not object to their being paid higher emoluments, to providing them a proper atmosphere and to making their service conditions more attractive. In the socialistic country of Britain, medical service has been nationalised. Madras State may become the forerunner in the matter of nationalising medical service.

Regarding clinical and non-clinical staff, there is a lot of injustice done and there is disparity. In the matter of promotion, the non-clinical or teaching side should be provided adequate safeguards.

Regarding primary health centres, they are most important in providing postive health in rural areas. They must be sufficiently strengthened and they must be given proper accommodation facilities. There is no use of opening primary health centres without adequate accommodation. There should be adequate accommodation at least for the hospitals.

Sanction has been accorded for the construction of the Tiruttani Headquarters hospital. I request the Government to expedite the construction of the buildings.

Pallapatti is a sub-taluk headquarters. The local fund dispensary there may be upgraded into a regular headquarters hospital.

Regarding the Primary Health Centre at Poonimangadu, I request the Hon. Minister to look into it. It is not a new work and the ground of 'emergency' need not be applied to it. I request the Hon. Minister to see that the construction of all the incomplete buildings is completed and that proper amenities are provided there.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: கனம் தலைவர் அவர்களே, மருத்துவம், பொதுசுகாதாரம் மானியக் கோரிக்கையின் மீது நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவசியத்தையும் தேவையையும் உணர்ந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க [illegible] அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய

[திரு. செ. கோ. விஸ்வநாதன்] [21st March 1966

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவ மனைகளிலே கொடுக்கப்படுகின்ற உணவுப்பொருள்களின் தரம் மோசமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். குறிப்பாக, இன்றையதினம் நோயாளிகளுக்குக் கைக்குத்தல் அரிசி கொடுக்கப்படுகிறது. ஏறக்குறைய 1 மாதம் அல்லது 10 நாட்களுக்கு இருக்கிற புதிய நோயாளிக்கு கைக்குத்தல் அரிசி சாதம் கொடுக்கின்ற நேரத்தில் அது சாப்பிடப்படாமல் வீணாகக்கூடிய நிலையிலேதான் மருத்துவமனைகளிலே உணவுப்பொருள்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பணம் கொடுத்தவர்களுக்கு நல்ல சாதமும், பணம் கொடுக்காத சாதாரண நோயாளிக்கு கைக்குத்தல் அரிசியும் கொடுப்பது ஏற்றத்தாழ்வைக் காட்டக்கூடிய முறையில் இருக்கிறது. ஆகவே, நல்ல சாதத்தை நோயாளிக்குக் கொடுக்க முன்வரவேண்டும். உணவுப் பொருள்கள் சப்ளை செய்கின்ற முறையானது மோசமாக இருக்கிறது. தரக்குறைவான உணவுப்பொருள்களைத்தான் கண்ட்ராக்டர்கள் சப்ளை செய்துகொண்டு இருக்கிறார்கள். அதிகாரிகள் திடீரென்று பார்வையிடுவதன்மூலம் இந்த நிலைமையைப் போக்குவதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழுநோய் உள்ளவர்கள் மூன்று மாவட்டங்களிலே உள்ள ரயில்வே நிலையங்களிலும் மற்ற இடங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளியிலே சுற்றிக்கொண்டிருக்கின்றவர்களைப் பராமரிப்பதற்கு தகுந்த நிலையங்களை ஏற்படுத்தி அங்கே கொண்டுபோய் ஒதுக்கி வைத்தால், ஓரளவு அந்த நோயைத் தடுத்து நிறுத்தமுடியும் என்று கருதுகிறேன். செங்கல்பட்டில் உள்ள மருத்துவ மனையில் ஒரு டி.பி. வார்டு இருக்கிறது. அந்த வார்டில் ஏறக்குறைய 20 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது அதை நீக்கிவிட்டு அது வராண்டாவிலே இயங்கிக்கொண்டு இருக்கிறது. அப்பால் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும்பொழுது, அதிலே இதற்கு ஒரு தனிவார்டு—டி.பி. வார்டு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரத்திலிருந்து சென்னை நகரம் வரைக்கும் உள்ள சாலையிலே அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த விபத்துக்களைக் கண்காணிப்பதற்கு ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பித்து சிகிச்சை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவுப்பொருள்களில் கலப்படம் அதிகமாகிவிட்டது. எல்லா உணவுப் பொருள்களிலும், தேங்காய் எண்ணெயிலிருந்து கலப்படம் இருந்துகொண்டு வருகிறது. இதைக் கண்காணிக்க இப்பொழுது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தாலும், இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் உணவுப்பொருள் தரமாகக் கிடைப்பதற்கு வழிசெய்யமுடியும்.

அடுத்தபடியாக, மருந்துகள், போலி மருந்துகள் பல கடைகளில் அகப்படுகின்றன. போலி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூட செய்தி வந்திருக்கிறது. போலி மருந்துகளை விற்காமல் தடைசெய்வதற்குப் புதிய யுக்திகளைக் கையாண்டு அதன்மூலம்

21st March 1966] [திரு. செ. கோ. விஸ்வநாதன்]

தரமான மருந்துகள் கிடைக்க வேண்டிய முயற்சியை அரசாங்கம்
எடுக்கவேண்டும். செங்கல்பட்டு விரைவாக வளர்ந்து வருகின்ற
நகரம். அங்கே ஏற்கனவே ஒரு குடிதண்ணீர் திட்டம் நடை
பெற்றுவருகிறது. இன்னொரு குடிதண்ணீர் திட்டமும்
சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே விரை
விலே குடிதண்ணீர் சப்ளை செய்வதற்கு சர்க்கார் எல்லா நடவடிக்
கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. இராசாங்கம்: கனம் சட்டமன்ற உதவித் தலைவர்
அவர்களே, 1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தத் துறையிலே
பலமாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட
துறைகளில் அதாவது இன்டக்ரேட்டட் பி.இ., பி.வி.எஸ்.ஸி.,
பி.டி.எஸ். இவைகளுக்கு எல்லாம் ஒரு பொதுவான விதியை
வைத்து இருக்கிறார்கள்.

The first year integrated course student should pass the first
year subject out of three chances within two years from the date
of admission.

பொறியியலில் ஒரு முறை தோல்வியுற்றால், தொடர்ந்து படிக்க
லாம். விவசாயத் தொழிற் கல்வியில் இரண்டு பாடங்களில்
தோல்வியுற்றால், மறுபடியும் கல்லூரியில் சேர்ந்து தொடர்ந்து
படிக்கலாம். மிருக வைத்தியத்தில் மூன்று பாடங்களில் தோல்வி
யுற்றால், தொடர்ந்து படிக்கலாம். ஆனால் மருத்துவத்திலும் பல்
வைத்தியத்திலும் ஒரு முறை தோல்வியுற்றால் அவர்களுடைய
அதோ கதி தான். அந்த மாணவர்கள் அப்படி சூழ்நிலையின்
காரணமாக தோல்வியடைந்தால், அவர்களுடைய வாழ்க்கை
பிரயோஜனமில்லாமல் போகிறது. இந்த இனங்களையெல்லாம்
கவனித்து மருத்துவம், பல்வைத்தியம் போன்ற துறைகளில்
படிக்கின்ற மாணவர்களுக்கும் மற்ற தொழிற் கல்விகளில் இருக்
கின்ற அத்தனைச் சலுகைகளையும் கொடுக்கவேண்டும். சென்னைப்
பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கின்ற மத்திய அரசாங்கத்தால்
நடத்தப்படுகின்ற பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரியில் நாம்
எந்த விதியைத் தளர்த்த வேண்டுமென்று சொல்கிறோமோ,
அதற்கான விதி அங்கே இருக்கின்றது. அந்த விதியை நாமும்
பின்பற்றவேண்டும்.

இந்தப் பல் வைத்தியத்திற்கும் மருத்துவ படிப்புக்கும் உள்ள
விதி முறைகளைத் தளர்த்தவேண்டும்; மாற்றவேண்டும்.
முதலாண்டு மாணவர்கள் முதலாண்டு தேர்ச்சியுறவிட்டாலும்,
தொடர்ந்து கல்லூரியிலேயே படிக்க வேண்டுமென்ற முறையில்
விதியை மாற்றவேண்டும். அதைப் பொருத்து சர்க்காருக்குச் சில
அபிப்பிராயங்களைக் கூற விரும்புகிறேன்.

1960-ம் ஆண்டிலிருந்து இதுவரை தொடர்ச்சியாக இந்த
விதியின் காரணமாக வெளியேற்றப்பட்ட மாணவர்கள், பிரைவேட்
கல்லூரியில் மாதத்திற்கு 200, 300 என்று கொடுத்து படிப்பதற்கு

[திரு. நா. இராசாங்கம்] [21st March 1966

வசதி இல்லாமல் விட்டு விட்டார்கள். அப்படிப்பட்ட மாணவர்களிடமிருந்து, டாக்டர் பட்டம் பெற்றவுடன் கண்டிப்பாக இத்தனை ஆண்டுகள் ராணுவத்திலே பணியாற்ற வேண்டுமென்ற நிபந்தனையை வாங்கிக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கல்லூரியிலேயே படிக்க அனுமதிக்கலாம். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தோல்வியுற்ற மாணவர்கள் அபராதம் கட்ட வேண்டுமென்று விதித்திருக்கும் வகையில், இவர்களும் தவறினால் அபராதத் தொகையைக் கட்ட வேண்டுமென்று கூறி அவர்கள் தொடர்ந்து கல்லூரியிலேயே படிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கலாம். அந்த மாணவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மருத்துவத் துறைக்குச் சுமார் 11 கோடி ரூபாயும், சுகாதாரத் துறைக்குச் சுமார் 5½ கோடி ரூபாயும் இப்போது கோரப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையைத் தலைகீழாக மாற்றுவதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது, சுகாதாரத் துறைக்குப் 11 கோடி என்றும், மருத்துவத் துறைக்கு 5½ கோடி என்றும் மாற்ற வேண்டும். (திரு. மீ. கலியாணசுந்தரம் : ஏன் குறைக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள்? சுகாதாரத் துறைக்கு அதிகமாக்க வேண்டுமென்று கூறுங்களேன்.) நான் தொகையைக் குறைக்கவேண்டுமென்ற அர்த்தத்தில் கூறவில்லை. சுகாதாரத் துறைக்குக் கொடுக்கப்படக்கூடிய முக்கியத்துவம் அதிகமாக இருக்கவேண்டும்; அந்த வகையில் முன்னேற வேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். நான் சொல்ல விரும்பியது இந்தத் தொகையைப் பற்றியதல்ல. சுகாதாரத் துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்; நோய் வந்த பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக நோய் வாராமலே தடுப்பதற்கான நடவடிக்கைகளை, முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன்.

அதற்கு என்ன செய்யவேண்டும்? ஒன்று, சாத்தியப்பட்டவரை பெருவாரியான மக்களுக்கு வயிறார உண்ண உணவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது, போஷாக்கான உணவைப் பெற வழிவகைகள் செய்யவேண்டும். இப்போது மக்கள் எல்லோரும் போஷாக்கான உணவை உட்கொள்ளுகிறார்கள் என்று சொல்லமுடியாது. போஷாக்கான உணவு எது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். அரிசியை மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வரையில், ஆரோக்கியத்தைக் காப்பாற்ற முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, உணவுப் பழக்கத்திலே மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

தேகப் பயிற்சியைப் பிரதான அம்சமாக்கவேண்டும். தேகாப்பியாசம் என்றால், ஏதோ பள்ளிக்கூடத்தில் படிக்கும் வரையில் ஓடியாடினால் போதுமானது என்று கருதி விடக்கூடாது. மனித வாழ்க்கைக்குத் தேகாப்பியாசம் ரொம்ப அவசியம் என்பதை உணர்ந்து, தீவிரமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். முன்னேறி

21st March 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

யுள்ள நாடுகளைப் பார்த்தால் ஒவ்வொரு சராசரிக் குடும்பமும் தேகப்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று வழி செய்திருக்கிறார்கள். சட்ட பூர்வமாகக் கூட வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய சர்க்காரும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க சர்க்கார் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் அது போதுமானதல்ல. கர்ப்பத் தடைக்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டபோதிலும் ஐந்து, பத்து, பதினைந்து குழந்தைகள் உள்ள குடும்பங்கள் நிறைய இருக்கின்றன. இதைப் பொறுத்த வரையில் வாயிலே சொல்லிக் கொண்டிருப்பதோடு, தடுப்பதற்காகச் சட்டமே கொண்டு வந்தால் கூட நல்லது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கத் தயாராக இருக்கிறேன். பெண்களுக்கும், ஆண்களுக்கும் அறுவை சிகிச்சை, கர்ப்பத் தடை மாத்திரைகள், ரப்பர் பைகள் ஆகிய வற்றுக்கெல்லாம் இலவசமாகவே ஏற்பாடுகள் செய்திருந்தும், பெருவாரியான மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். நான் உண்மையைப் பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், கர்ப்பத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக கர்ப்பச் சிதைவைத்தான் பெருவாரியான மக்கள் செய்கிறார்கள். இது அவர்களின் நோய்களுக்கு ஆதாரமாக இருக்கிறது. பெண்களுக்குக் கான்சர் எங்கே வருகிறது என்று பார்த்தால், பெரும்பாலும் கர்ப்பப் பையில்தான் வருகிறது. அதற்கு அடிப்படையான காரணம் கர்ப்பச் சிதைவு. இதனால் பெருந் தொல்லை கொடுக்கக்கூடிய நோய் பெண்களுக்கு ஏற்படுகிறது. மருத்துவத் துறையினர் இதைப் பற்றி நன்கு பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். கர்ப்பத் தடையைச் சட்ட பூர்வமாக்கவேண்டும். ஏதோ ஒழுக்கம் கெட்டுப் போகும் என்று வேதாந்தம் பேசலாம். எனக்கு அதிலே நம்பிக்கை இல்லை. அவ்வாறு பேசுவதில் தீவிரம் இருக்கிறதே தவிர, எந்த அடிப்படையில் தவறுகள் நடக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கர்ப்பத் தடையைச் சட்ட பூர்வமாக்கவேண்டும். மக்கள் கர்ப்பத் தடையைப் பற்றிச் சுலபமாகப் புரிந்து கொள்வதற்கு மருத்துவ இலாகாவினர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போது ஒவ்வொரு நகரத்திலும் அதிகார பூர்வமற்ற பலர் கர்ப்பச் சிதைவைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சர்வே செய்து வேண்டுமென்றாலும் அதைப் பார்க்கலாம்.

நாட்டு வைத்திய முறைகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். சித்த வைத்தியம் தமிழ் நாட்டு வைத்தியம் என்பதற்காக மட்டுமல்ல; அதிலுள்ள பெருமைக்காகச் சொல்ல வரவில்லை. அதில் இருக்கக் கூடிய பச்சிலைகள், மூலிகைகள், வேர்கள், உலோகங்கள் ஆகியவற்றைச் சரியாகக் கையாண்டால் நல்ல பலன் கிடைக்கும். ஆங்கில வைத்திய முறையை விடக் குறைந்த செலவில் ஜனங்களுக்கு வைத்திய உதவி செய்ய முடியும். சித்த வைத்தியத்திற்குப் போதுமான சலுகைகள் கிடையாது. மதிப்புக்குரிய சக அங்கத்தினர்

[திரு. க. ர. நல்லசிவம்] [21st March 1966

பேசும்போது, ஆங்கிலமொழி வேண்டாமென்று சொல்லும்போது ஆங்கில வைத்தியத்தை மட்டும் வைத்துக் கொள்ளலாமா என்று பேசினார்கள். நான் அந்த விஷயத்திற்குள் புக விரும்பவில்லை.

சித்த வைத்தியத்திற்காக ஒரு கல்லூரியைக் குற்றாலத்தில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். முன்னதாக பாளையங்கோட்டையில் துவங்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சர்க்கார் சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரை இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டவேண்டும். மூலிகைகள், பச்சிலைகள் ஆகியவற்றை மந்திர தந்திரமாகக் கருதாமல் விஞ்ஞான பூர்வமாகப் பரிசீலிக்க வேண்டும். சித்த வைத்தியத்தின் மூலம் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று சொல்லப்படுகிறது. அதைப் பரீட்சித்துப் பார்க்கும் வகையில் காச நோய், கான்சர் போன்ற நோய்களுக்கு எல்லாம் வைத்தியம் செய்ய தனித் தனியாக ஏற்பாடு செய்து, அந்த நோய்களிலிருந்து நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த வைத்தியத்திலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

காச நோய் ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை ராஜ்யத்தில் தனியார் துறையில் பல இருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில் தஞ்சை ஜில்லாவில் தனியார் துறையில் சில இடங்களில் இதற்காக ஆஸ்பத்திரி வைத்திருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரிகளுக்கெல்லாம் சர்க்கார் உதவி அதிகமாக இருக்கவேண்டும். நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வதற்கே ஆறு மாதம், ஒரு வருஷம் ஆகிறது, அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் வசதிகளை அதிகப்படுத்த முடியும்.

கலப்படத்தைப் பொறுத்தவரை கடுமையாகத் தண்டிக்கப்படக் கூடிய ஒன்றுதான். மஞ்சளைப் பொறுத்தவரை, திருச்சி, கோவை, ஜில்லாக்களிலே அது உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்கிற இடத்திலேயே கலப்படம் ஏற்படுவதாகப் பிரேரேபணை செய்து சிலர் கூறுகிறார்கள். ஆனால் நிச்சயமாக, உற்பத்தி செய்கிற இடத்திலோ, ஹோல்சேல் டீலர்கள் நிலையிலோ கலப்படம் நடைபெற வழியில்லை. அப்படிக் கலப்படம் இருக்குமானால், சில்லரையாக விற்கும் இடத்திலேதான் இருக்க முடியும். ஆகவே, மஞ்சளை உற்பத்தி செய்யும் ஸ்தலத்திலேயே கலப்படம் இருக்கிறதா என்று கண்டு பிடிக்கக்கூடிய முறையை நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: 'கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வருடத்திற்கு அதிகமாக மருத்துவத் துறைக்கும், பொதுச் சுகாதாரத் துறைக்கும் நிதி ஒதுக்கவேண்டுமென்று கோரியிருந்தபோதிலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தமாகப் பார்க்கிறபோது நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் முதல் வருடமாகிய 1966-67-ல் ஒதுக்கியிருக்கக்கூடிய தொகையை பல பிரிவுகளில் பார்க்கிறபோது மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. நான்காவது திட்டத்தின் ஆரம்பமே பல துறைகளிலும் மந்தமாக இருக்கிறமாதிரி

21st March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மருத்துவத்துறையிலும், பொது சுகாதாரத் துறையிலும் மந்தமாகத்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தொண்ணூற்றொரு கோடி பதினெட்டு லட்சம் ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்திற்காக ஐந்து வருடங்களுக்கு அவுட்லே போட்டாகிவிட்டது. 1966-67-க்கு 6 கோடி 60 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பதால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் எவ்வளவு செலவழிக்கப்போகிறோம் என்பது, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்று சொல்வதுபோல், நான்காவது திட்ட அளவு குறையப்போகிறது என்பதற்கு இது ஒரு அடையாளமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மருத்துவத்துறை, பொது சுகாதாரத் துறை இவை இரண்டின் சாதனைகளைப் பற்றிக் கூறுவதற்கு முன்பு இந்த இரண்டு துறைகளையும் இணைப்பது சம்பந்தமாக என் கருத்தைக்கூற விரும்புகிறேன். நான் ஒரு பெரிய வைத்திய நிபுணன் அல்ல, அந்தத் துறையை ஆராய்ந்து பார்த்தவனும் அல்ல. மற்ற நாடுகளில் என்ன நடக்கிறது என்பதைச் சிறிய அளவு தெரிந்து கொண்டிருப்பவன் நான். இந்த இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைப்பது என்பது மருத்துவத் துறைக்கும், பொது சுகாதாரத் துறைக்கும் உகந்ததாக இருக்குமா? என்ன காரணத்திற்காக இவற்றை ஒன்றாக இணைக்க வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் தம் பட்ஜட் உரையிலேயே குறிப்பிடக் கூடிய அளவிற்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று என்று அறிய விரும்புகிறேன். இது அவசியம் இல்லாதது என்பது மட்டுமல்ல காலக்கிரமத்தில் தவறானதாகக் கூட முடியும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதன் அர்த்தம் பொது சுகாதாரத் துறை திறம்பட நடக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்வதாக நினைக்க வேண்டாம். அவற்றில் குறைபாடுகள், தவறுகள் இருக்கலாம், அவற்றை, நான் பேசுகிறபோது சுட்டிக் காட்ட தயாராயிருக்கிறேன். தனியாக இருந்தே அந்தத் துறை எந்தவிதமான கவனமும் செலுத்தமுடியாவிட்டால், இந்த இரண்டையும் இணைத்தால் இரண்டு பகுதிகளிலும் சமமான திறமைக்குறைவு, சீர்கேடுகள் இவை ஏற்படும் என்று அஞ்சுகிறேன். இவை இரண்டும் தனித்தனியாக இயங்கி இரண்டும் ஒன்றோடொன்று போட்டி போட வேண்டிய இடத்தில் போட்டியிட்டு, ஒத்துழைக்கவேண்டிய இடத்தில் ஒத்துழைத்து நோய்களைத் தடுப்பதில் பொது சுகாதாரத் துறை தீவிரமாக வேலை செய்தும், நோய் ஏற்பட்டால் அதைக் குணப்படுத்துவதில் மருத்துவத் துறை தீவிரமாக வேலை செய்தும், இப்படி நம் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய பணிகளை அவர்கள் செய்யவேண்டும். இதுபற்றிக் குறைகூறுகிறபோது, நமக்கு உள்ள சங்கடங்களை உணராதவன் அல்ல நான். வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில், 150 வருடங்களாக இந்த இரண்டு துறைகளும் எதற்காகப் பயன்பட்டன என்றால், டாக்டர்களை சிருஷ்டித்து, மருத்துவக் கல்லூரிகளை நடத்தியது என்பதல்ல. ஜெர்மனியில், அல்லது பிரட்டனில், அல்லது அமெரிக்காவில்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [21st March 1966

உற்பத்தியாகக் கூடிய பெரும் முதலாளிகளின் மருந்துகளை விற்பனை செய்யும் ஏஜென்டுகளாகத்தான் இவர்களைத் தயார் செய்தார்களே தவிர, மருத்துவத் துறையிலும், பொது சுகாதாரத் துறையிலும் அபிவிருத்தி அடையக் கூடிய காரியத்தைச் செய்யவில்லை. இந்த மூன்று திட்ட காலத்தில் நாம் நம் சொந்த பலத்தை நம்பி, நம் நாட்டு வசதிகளை நம்பி இந்த இரண்டு துறைகளையும் பலப்படுத்தவேண்டியிருந்தது, வேண்டியிருக்கிறது. அதில் சங்கடங்கள் இருக்கலாம். இன்று உலகத்திலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நம் நாட்டிலுள்ள வசதிகளைப் பயன்படுத்தி, பிற நாடுகளில் இருந்து சில உதவிகள் கிடைப்பதையும் பயன்படுத்தி தொத்து நோய், கொள்ளை நோய், மற்றும் பரவக்கூடிய நோய்கள், அபாயகரமான நோய்கள் இவற்றைத் தடுப்பதில் ஓரளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், எந்த அளவிற்கு அவை பலன் அளித்திருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

குறிப்பாக, நான் இங்கு எடுத்துக் சொல்ல விரும்புவது, டி.பி. டி.பி. யைப் பற்றி பல அங்கத்தினர்கள் கூறினார்கள். டி.பி. நோய்க்குச் சிகிச்சை செய்ய, நம் ராஜ்யத்தில் 2,500 நோயாளிகள் ஏக காலத்தில் சிகிச்சை பெறத்தான் வசதியிருக்கிறது. 1940-ம் ஆண்டிலே தயாரித்த அறிக்கைபடி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒரு கோடிக்கு 500 படுக்கை வீதம் பெருக்கிக் கொண்டு போக வேண்டுமென்று இருக்கிறது. டி.பி. பரவி வரும் வேகத்தைப் பார்க்கிறபோது 2,500 படுக்கைகள் இருப்பதில், கிட்டத்தட்ட 1,000 படுக்கை தனியார் துறையில் இருக்கின்றன. இதில் அரசாங்கத்திற்கு கண்ட்ரோல் கிடையாது. இப்படியிருக்கிறபோது பரவி வரும் இந்த வியாதிக்கு எப்படி சிகிச்சை அளிக்க முடியும்? இந்த நோயை கண்டிரோல் செய்து பரவாத அளவுக்கு பொது சுகாதாரத்துறை விருத்தி அடைந்திருந்தால் அது வேறு விஷயம். ஆனால் பொது சுகாதாரத் துறை அந்த அளவிற்கு விருத்தியடையவில்லை. மக்கள் ஆரோக்கியக் குறைவான குடியிருப்புகளில் வசிப்பதாலும், ஆரோக்கியக் குறைவான உணவை உண்ணக் கூடிய காரணத்தினாலும், நம் உணவுச் சத்தே குறைந்திருப்பதாலும் மூன்று திட்டங்களின் பயனாக உணவு உற்பத்தியில் அபிவிருத்தி இருந்தாலும், ஒரு உண்மையை ஒப்புக் கொள்ளவேண்டும். கலப்படம் பற்றி பலர் பேசினார்கள். கலப்படத்தின் காரணமாகவும் தரம் குறைந்திருக்கிறது. விலைவாசி காரணமாகவும் மக்கள் பண்டங்களை உபயோகிக்கும் சக்தி குறைந்து விட்டது. இதனால் உடல்நிலையைப் பாதிக்கும் வியாதிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து, கிராமங்களிலிருந்து வரும் நோயாளிகளைப் பார்க்கிறபோது கவலையாக இருக்கிறது. அவர்களுக்கு எந்த விதமான உதவியையும் செய்ய முடியவில்லை. எம்.எல்.ஏ, ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று நம்மை கேட்கிறார்கள். நாங்கள் ஒரு சிபார்சு கடிதாசி கொடுத்தால், அவன் செத்த பிறகுதான் அவனுக்கு அட்மிஷன் கார்ட் வரும் நிலையைப் பார்க்கிறேன். அப்படியிருக்க என்ன சொல்வது? ஒருவருக்கு டி.பி. இருக்கிறது என்று கண்டு பிடித்த பிறகு அவரை சமுதாயத்தில் மற்றவர்

21st March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

களுடன் பழக விடுவதால், வேறு ஒருவருக்கு அது பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் செய்யவில்லை. சிகிச்சை பெற்று வெளியே வந்த பிறகு சமுதாயத்தில் பழகும் நிலையை ஏற்படுத்த வேண்டும், அதையும் செய்யவில்லை. பேய் அடித்து செத்துப் போனான் என்று நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள் கிராமங்களில் அவர்கள் டி.பி.-யால் செத்துப் போனவர்கள். இந்த வியாதி கண்ட்ரோலில் இருப்பதாக நினைக்க வேண்டாம். அதற்கு சிகிச்சை முறையும் வேண்டும். கண்ட்ரோல் செய்யும் நடவடிக்கைகளும் வேண்டும்.

மலேரியா பொறுத்தவரை, அதிகப்பணம் செலவு செய்து நாம் தடுப்பு நடவடிக்கைகளை ஏற்று வெற்றி கண்டிருக்கலாம். தொழு நோய் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை செய்துகொள்வதற்கும் வசதி குறைவாக இருக்கிறது. தடுப்பு நடவடிக்கைகளும் குறைவாக இருக்கிறது. இந்த நோய் கண்டவர்களைப் பார்க்கவே மனிதாபிமானம் உள்ளவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. இது போன்ற நோய்களைத் தடுப்பதில் பொதுச் சுகாதாரத் துறை முன்னேறியிருப்பதாகச் சொல்லி திருப்தி அடைய முடியாது. எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளைச் சமாளிக்க நமக்குள்ள சக்தியைப் பார்க்கிறபோது இந்த இரண்டு துறைகளிலும் அதற்குள்ள சக்தியும் வசதியும் குறைவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

பெரிய நகரங்களில் கூட குடிதண்ணீர் வசதி, சாக்கடை வசதி, அசுத்தங்களைத் துப்புரவு செய்யக்கூடிய வசதிகள் இவை எல்லாம் எவ்வாறு இருக்கின்றன? சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களை எடுத்துக் கொண்டால் அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் 18 காலனாவது தினந்தோறும் கொடுக்க முடியுமா என்று பார்த்தால். கோடை காலம் வந்து விட்டால் அவர்களுக்கு 18 லிட்டர் கூட கிடைக்குமா என்பது சந்தேகமே. குடிதண்ணீர் வசதி அவ்வளவு குறைவாக இருக்கிறது. இதற்காக செலவு செய்திருக்கிற பணத்தைப் பார்க்கிறபோது பணம் நிறைய செலவு செய்யப்பட்டிருக்கிறது. திருச்சியில் நான்கு பூஸ்டர் டாங்ஸ் கட்டினார்கள். அவை கட்டி முடிந்தாகிவிட்டன. இரண்டு வருடங்களாகின்றன. அதனால் என்ன அபிவிருத்தி என்று சொன்னால் எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லை. இந்த ஆண்டு தண்ணீர் குறைவாக இருக்கலாம். தண்ணீர் பம்ப் செய்யும் சக்தி குறைந்துவிட்டதா? ஏன் தண்ணீர் கொடுக்க முடியவில்லை? ஏன் இது வெற்றிகரமாக நடக்கவில்லை என்பதைப் பரிசீலிக்க வேண்டும். பெரிய நகரங்களில் தண்ணீர் வசதி மிகக் குறைவாகத்தான் இன்னும் இருக்கிறது. அதை எல்லாம் செய்யாமல் ரொம்ப அபிவிருத்தி செய்து விட்டதாகக் கூறிக் கொள்ள உரிமை கிடையாது. சாக்கடை வசதியை எடுத்துக் கொண்டால், தனிப்பட்டவர்களின் வீடுகளில் கட்டியிருக்கும் கக்கூஸ்கள், தெருவில் நடந்தால் கன்றாவியாக இருக்கிறது, தெருப்பக்கமே திருப்பித் திறந்து வைக்க அனுமதித்திருக்கிறார்கள். பெரிய பல நகரங்களில் இதனால் ஏற்படும் நாற்றம், அசுத்தம் சகிக்க முடியவில்லை.

முனிசிபாலிட்டிகள் கட்டியிருக்கும் பொது கக்கூஸ்கள் தினசரி அதை க்ளீன் செய்கிறார்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது. இருநூறு பேர்கள் ஒதுங்கும் இடத்திற்கு ஒரு ஆளைப் போட்டால் போதாது. ஒருவன் 24 மணிநேரமும் வேலை செய்யவேண்டுமென்றால் அது எப்படி நடக்கும்? பொது கக்கூஸ் உள்ள இடங்களில் ஒரு மைல் எல்லைக்கு நாற்றம் அடிக்கிறது. அமைச்சர் அவர்கள் என்னோடு அந்தமாதிரி இடங்களுக்கு வரட்டும். காண்பிக்கத் தயார். இந்த மாதிரி பெரிய நகரங்களில் கூட ஆரோக்கியக்குறைவான நிலை இருக்கிறது. காரணம் என்ன? போதுமான நகரசுத்தி தொழிலாளிகள், ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டிய தொழிலாளிகள் போதுமான அளவிற்கு, ஜனத்தொகை எவ்வளவு பெருகியிருக்கிறது, வீடுகள் எவ்வளவு பெருகியிருக்கின்றன என்று பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் இவர்களின் எண்ணிக்கை எந்த நகரத்திலும் கிடையாது. வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. டவுன் ப்ளானிங் டிப்பார்ட்மென்டின் வேலையே, யார் யாரை ப்ராஸிக்யூட் செய்யலாம், யார் யாருக்கு அனுமதி கொடுக்கலாம் என்பதுதானே தவிர, ஒரு ஸ்கீம் சாங்ஷன் செய்தால், இதனால் இவ்வளவு வீடுகள் அதிகரித்திருக்கின்றன அதற்குத் தகுந்தாற்போல் சாக்கடை வசதியிருக்கிறதா, துப்புரவு தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு, அதை அதிகமாக்க முனிசிபாலிட்டிக்கு நிதி வசதி இருக்கிறதா, இல்லாவிட்டால் என்ன செய்வது என்று இதை முதல் வேலையாக செய்ய வேண்டுமென்று எந்த நிபுணரும் கவனம் செலுத்துவதை நான் பார்க்கவில்லை. இது ஒரு ப்ராஸிக்யூட்டிங் டிப்பார்ட்மெண்டாக இருக்கிறதே தவிர, மக்களுக்கு வசிப்பதற்குள்ள என்னென்ன வசதிகளைச் செய்ய வேண்டும் என்று பார்க்கிற ஒரு இலாகாவாக இந்த டவுன் பிளானிங் இலாகா இல்லை என்று இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று கிராமப் புறங்களில் குடிதண்ணீர் பிரச்னையைப்பற்றி பலர் குறிப்பிட்டு பேசினார்கள். காவேரி கரையோரமாக இரண்டு பக்கத்திலும் அந்த நீரை நேரடியாக உபயோகித்தால், காலரா என்ற நோய் வந்துவிடுகிறது என்று சொல்லி அதை
p.m. நேரடியாகக் குடிக்கக் கூடாது என்று சொல்லி, தண்ணீரைப் பம்ப் செய்து தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று குழாய்களைப் போட்டார்கள். இவ்விதம் போடப்பட்ட திட்டத்தினால் இன்றைக்கு எத்தனை கிராமங்கள் பயன் அடைந்தன என்று யாராவது பார்த்திருக்கிறார்களா? வேண்டுமென்றால் ஒன்றிரண்டு கிராமங்கள் பயன் அடைந்திருக்கலாம். இதைப்பற்றி ஏதாவது ரெவ்யூ செய்தார்களா, இவ்வளவு பணம் செலவு செய்ததில் எந்த அளவுக்குப் பலன் கிடைத்திருக்கிறது என்பதை யாராவது பார்த்தார்களா என்பது தெரியவில்லை. பெரிய நகரங்களை எல்லாம் எடுத்துக்கொண்டால், நகரங்களைச் சுற்றி கிராமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன, இவைகளிலெல்லாம் பொதுச் சுகாதாரம் மிகவும் குறைவாக இருந்துகொண்டிருக்கிறது. திருச்சியை எடுத்துக்கொண்டால், பக்கத்திலுள்ள கோல்டன் ராக், போன்ற இடங்களில், எங்கு போய் பார்த்தாலும் வீடுகளைக் கட்டிக்கொண்

டேயிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான அளவில் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு, சுகாதார வசதி பெருகியிருக்கிறதா என்றால் இல்லை. இதே நிலை தான், மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களின் அருகாமையில் இருக்கும் இடங்களில் ஜனநெருக்கம் பெருகிக்கொண்டே போகிறது. தங்கள் இஷ்டம் போல் வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். இந்த முறையில், அராஜகமான முறையில், வளர்ந்துகொண்டே போகிறது. டவுன் பிளானிங் இலாகாவினர் இதையெல்லாம் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். நகரப்புறங்கள், அருகிலுள்ள கிராமங்கள், அதே போன்று தூரத்தில் இருக்கின்ற கிராமங்கள் இவற்றிலுள்ள பொதுச் சுகாதாரம் எந்த நிலையில் இருக்கிறது என்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதில் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டியது நல்ல உணவு கிடைக்கவேண்டும் என்பதில் தான். போதுமான உணவு கிடைக்க வில்லையென்றாலும், கிடைக்கின்ற உணவு ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய உணவாக இருக்கவேண்டும் என்பது தான். நம்முடைய சக்திக்குத் தகுந்தவாறு உணவு கிடைத்தாலும் கூட, கலப்படம் இல்லாத உணவாக, சத்துள்ள உணவாக கிடைக்க வேண்டும். நம்முடைய நாட்டில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக வேகமாக உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று முயற்சிகளைச் செய்து வருகிறோம். அதே நோக்கில் அதைவிட வேகமாக எந்த அளவுக்கு உணவு உற்பத்தி பெருகியிருக்கிறதோ, அதே போன்று இன்னும் அதைவிட வேகமாக ஒவ்வொரு பொருளிலும் எப்படி கலப்படத்தைச் சேர்க்கலாம் என்பதும் வளர்ந்து வருகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டால் மட்டும் போதாது, இதற்காக வியாபாரிகள் தலையில் பழியைப் போட்டுவிட்டால் மட்டும் பிரயோசனம் இல்லை. நேர் மாறாக இது எங்கிருந்து நடக்கிறது? இதை எவ்வாறு தடுப்பது? என்பதில் சரியாகத் தீவிர கவனம் செலுத்தவேண்டும். தேங்காய் எண்ணெயில் கடலை எண்ணெயைக் கலந்தால் கூட பரவாயில்லை, மண்ணெண்ணெயைக் கலப்பதாக எனக்கு தகவல் வந்தது. (குறுக்கீடு) இப்போதல்லவா மண்ணெண்ணெய்க்கு கஷ்டம் வந்தது; லிட்டர் நாலணாவாக விற்றபோது, ஏராளமாக இவ்விதம் நடந்திருக்கிறது. அதிலும் இப்போது இதற்கென்றே ஒரு சப்சிடிட்யூட் ஆயில், வொயிட் ஆயில் என்று வந்திருக்கிறது. இதை எதற்காக கொண்டு வரவேண்டும், தனியாக எதற்கு இதை இறக்குமதி செய்திருக்க வேண்டும் என்று தெரியவில்லை. கலப்படத்திற்கு உபயோகப்படக்கூடிய இப்படிப்பட்ட பொருட்களை விற்பதற்கு எதற்காக அனுமதிக்க வேண்டும்? எவன் இதற்கு எஸென்ஷியல் சர்டிபிக்கேட் கொடுத்தான்? அதோடு இதைப்பற்றிக் கண்காணிக்கின்ற இலாகா எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் இன்னும் விநோதமாக இருக்கிறது. இப்படிக் கலப்படம் செய்கின்றவர்களைக் கழுவில் ஏற்றிப்பார்க்க வேண்டும்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [21st March 1966

என்று கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் ஆசைப்
படுகிறார்கள். ஆனால், இவ்வளவு அநியாயமாக நடக்கின்றவர்களைக்
கண்டுபிடிப்பதற்கு இந்த கண்காணிப்புத் துறை என்னென்ன
செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், இதற்காக கிடைத்
திருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்த்தால், 1965-ம் ஆண்டில் கலப்
படம் செய்தவர்கள் என்று பிடிக்கப்பட்ட சம்பவங்கள் 4,914.
இதில் பால் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் 3,746, இதில் பிராஸிக்யூட்
செய்தவை 1,879, பால் சம்பந்தப்பட்டவை 1,474. இதைப்
பார்த்தால் பாலில் கலப்படம் செய்தது, அதாவது தண்ணீரைச்
சேர்த்ததுதான் முக்கியமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.
பாலில் தண்ணீரைத்தான் கலக்கிறார்கள், அங்கங்கே குழாய்த்
தண்ணீரைக் கலக்குகிறார்கள். வயதானவர்களுக்கு அது ஆரோக்
கியமாகக் கூட இருக்கும். இதற்காக பாலில் தண்ணீர் சேர்ப்பதை
நான் ஆதரிக்கிறேன் என்று அர்த்தமல்ல.. ஆனால் இதைவிட
அபாயகரமாக இருக்கக் கூடிய பொருட்களைச் சேர்க்கிறார்கள்.
அவற்றையெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.
நான் குறிப்பிட்டது, மாநிலம் பூராவுக்கும் இருக்கின்ற புள்ளி
விவரத்தைப் பற்றியது. இதைப் பரிசீலித்துப் பார்த்தால்,
கண்காணிக்கிறவர்கள் எந்த அளவுக்கு வேலை செய்திருக்கிறார்கள்
என்பதுதான் தெரிகிறது, அதாவது கக்கூஸ் சரியாக சுத்தம்
செய்திருக்கிறார்களா என்று பார்க்காமல், சாக்கடையைச் சரியாக
வைத்திருக்கிறார்களா என்று பார்க்காமல், தெருக்களைச் சரியாக
சுத்தம்செய்து வைத்திருக்கிறார்களா என்று பார்க்காமல், பால்
காரர்களை மிரட்டுகின்ற வேலையில்தான் இவர்கள் அதிகமாக
ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைப் பிடிப்பதில்தான் கவனம்
செலுத்தியிருக்கிறார்கள், அதன் மூலமாகத்தான் மாமூலும் சரியாக
கிடைத்துக்கொண்டிருக்கிறது என்று இதிலிருந்து நன்கு
தெரிகிறது. அதற்கு நேர் மாறாக அபாயகரமான பொருள்களை
எல்லாம் கலப்படம் சேர்ப்பதை இவர்கள் கண்டுபிடித்திருப்ப
தாகத் தெரியவில்லை. 1,879 சம்பவங்களில் 1,474 சம்பவங்கள்
பால் சம்பந்தப்பட்டவை என்று சொன்னால், உணவுப் பொருள்கள்
சம்பந்தப்பட்டவை 400 வழக்குகள். மற்றபடி, டீ-யில் கலப்படம்
நடக்கிறது, காபி பவுடரில் கலப்படம் நடக்கிறது, அரிசியில்
கலப்படம், சமையல் செய்து ஹோட்டலில் விநியோகிப்பதில்
கூட கலப்படம் நடக்கிறது. மாடு தின்னக் கூடிய 'டாப்பியாக்கோ'
வினுடைய சக்கையை எடுத்து பவுடராக்கி, மைதா மாவில், வீட்
ப்ளவர்—இவைகளில் கலந்து மனிதர்கள் சாப்பிடக்கூடிய
அளவுக்கு நிலைமை மோசமடைந்து இருக்கிறது. மாடு தின்னக்
கூடிய பொருட்களைக்கூட உணவுப்பொருட்களில் சேர்த்து நம்மை
தின்ன வைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் செய்கின்ற
குற்றங்களிலிருந்து தப்பித்துப் போய்க்கொண்டிருக்கிறார்கள்
என்பதைத்தான் இப்படிப்பட்ட புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.
இதைப் பார்க்கின்றபொழுது, கலப்படம் செய்வதைக் கண்காணிக்
கின்ற—அதைத் தவிர்க்க—எடுக்கப்படும் நடவடிக்கைகள்—இவை
களைப் பார்த்தால், இந்தத் துறை வெகு குறைவாக நடக்கிறது

21st March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

என்று சொல்ல முடியாது. இந்தப் பிரச்னை மிகவும் சீரியஸான பிரச்னை. இது இன்னும் அபாயகரமான நிலைமைக்குப் போய்க் கொண்டிருந்தால், மக்களுக்குப் பாதகம் ஏற்படும். அற்ப ஆயுளில் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மக்கள் இன்னும் சீக்கிரமாகவே போய்விடுவார்கள். ஆகவே, இதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் மருத்துவத் துறையைப்பற்றிப் பல விஷயங்கள் பேச வேண்டும் என்று நினைத்தேன், நேரம் போதவில்லை. மருத்துவத் துறை ஓரளவுக்கு முன்னேறியிருந்தாலும்கூட, தாலூக்கா தலை நகரங்களிலுள்ள ஆசுபத்திரிக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் திட்டமிடுகிறபடி செலவு செய்வதில்லை என்று தெரிகிறது. இப்படிப்பட்ட ஆசுபத்திரிகளுடைய தரம் உயரவேண்டும், ஒதுக்கப்படுகின்ற பணம் சரியான முறையில் செலவு செய்யப்பட வேண்டும், இருக்கின்ற ஆசுபத்திரிகளில் எல்லாவிதமான வசதிகளையும் கொடுப்பதற்குத் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த இரண்டு டிப்பார்ட் மெண்டுகளையும் இன்டக்ரேட் செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். டெல்லியில் வேண்டுமென்றால் இதை ஒன்றாக ஆக்கிக்கொள்ளட்டும், ராஜ்ய அளவில் இதை அவ்விதம் செய்ய வேண்டாம். வேண்டுமென்றால், மருத்துவம், சுகாதாரம் இந்த இரண்டு துறைகளைப் பற்றியும் ஆலோசிப்பதற்கு என்று வைத்திய ஆலோசனை போர்டில் விவாதத்திற்கு வைக்கட்டும். அதில் இதைப்பற்றிச் சாவகாசமாக விவாதித்து முடிவு எடுக்கலாம். இல்லையென்றால் இன்னொரு யோசனை, அதாவது ரெவின்யூ போர்டு போன்ற ஒரு போர்டை அமைக்கட்டும். அதாவது ஸ்டேட் ஹெல்த் போர்டு என்று வைத்துக் கொள்ளலாம். அதில் டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த், டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸ், டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன், பப்ளிக் ஹெல்த் செக்ரட்டரி, இன்னும் ஒன்றிரண்டு பேர்களைச் சேர்த்து போர்டு அமைத்துக்கொள்ளலாம். ஏதாவது தகராறு ஏற்படு மானால் இந்த போர்டில் வைத்து, அதனுடைய முடிவுதான் ஃபைனலாக இருக்கும், அதைத்தான் அரசாங்கம் முடிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வைத்துக்கொள்ளலாம். இதல்லாமல் இப்போது நினைத்திருக்கின்ற இணைப்பு இன்னும் நிலைமையைச் சிக்கலாக்கிவிடும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இராம. அரங்கண்ணல்: கனம் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து கருத்துக்களை வழங்கியவர் களும், இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஆளும் கட்சியின் சார்பிலிருந்து பேசிய கருத்துக்களை வழங்கியவர்களும், இன்னும் எந்தெந்த துறைகளில் குறைகள் இருக்கின்றன என்பதைப் பற்றியும், எப்படி வருமுன் காப்பது, எப்படி வந்த பின் காப்பது என்கின்ற வேலையில் ஈடுபட்டிருக்கின்ற சுகாதாரப் பிரிவு,

[திரு. இராம. அரங்கண்ணல்] [21st March 1966

மருத்துவப் பிரிவு இவைகளில் இருக்கின்ற பல குறைகளைக் களைந்து நல்ல முறையில் செயல்படவேண்டும் என்கின்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக மாநிலத்தினுடைய சுகாதாரம், மருத்துவம் இரண்டும் நம்முடைய இந்திய அரசியல் சட்டப்படி மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பாகும். ஆனால், இந்தப் பொறுப புக்களை மாநிலம் நிர்வகிக்கின்ற நேரத்தில் மாநிலத்தினுடைய அதிகாரங்களில் அடிக்கடி மத்திய அரசு தலையிடுகின்ற சம்பவம் தொடர் கதையாக இருந்துகொண்டிருக்கிறது. நான் ஒரு குறிப்பைப் பார்த்தேன், மத்திய அரசில் சுகாதார இலாகாவில் கிட்டத்தட்ட 50 கமிட்டிகள் இருப்பதாகவும், அதில் 696 உறுப் பினர்கள் இருந்து யோசனை சொல்லிக்கொண்டிருப்பதாகவும் பார்த்தேன். மாநிலத்திற்கு இருக்கின்ற பிரச்னைகளில் உரிமை களில் மத்திய அரசு தலையிடுகின்ற காரணத்தால்தான் மாநிலங் களில் காரியங்கள் சரியாக நடைபெறாமல் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மன்றத்தில் தமிழ்நாட்டின் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யூனானி வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம் இப்படிப்பட்ட வைத்திய முறைகளுக்கும், நவீன மருத்துவ முறைகளுக்கும், தனித்தனியே கௌன்சில்கள் இதற்காக ஏற்படுத்தவேண்டும் என்று இதே மன்றத்தில் நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, அதைப் பரிசீலனை செய்யலாம் என்று செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, அங்கே செலக்ட் கமிட்டியில் பல நாட்கள் இதைப்பற்றி விவாதிக்கப்பட்டும் அதற்குப் பிறகு, டெல்லியில் இருக்கின்றவர்களுடைய கருத்துக்கு நம்முடைய மசோதா ஏற்றதாக இல்லை என்று சொன்ன காரணத்திற்காக இந்த மசோதா இந்த மன்றத்திலேயே திருப்பிப் பெறப்பட்டதும் மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் நினைவு இருக்கும். அது மட்டுமன்றி, ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின்கீழ் பரீட்சார்த்தத் திட்டம் ஒன்று 'யுனிசெஃப்' ஸ்தாபனத்தின் ரூ. 10 லட்சம் உதவியோடு மதுரை மாவட்டத்தில் ஆத்தூருக்கும் வத்தலகுண்டுக்கும் இடையில் உள்ள 35 கிராமங்களில் செய்து பார்க்க திட்டமிட்டு, அதற்கு இந்த அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. டபிள்யூ.எச்.ஓ. ஸ்தாபனத்தின் நிபுணர்களும் அதை நிறைவேற்றலாம் என்று அங்கீகாரம் அளித்து விட்டார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை நாம் மேற்கொண்டிருக்கிறோமா என்றால், நாம் இன்னும் மேற் கொள்ளாத சூழ்நிலைதான் இருக்கிறது. அதற்குக் காரணம், மத்திய சர்க்கார் அப்ரூவல் கிடைக்கவில்லை என்று காத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்னைகளில் மட்டுமல்ல, அங்கு இருக்கிற மத்திய சர்க்காரில் இருக்கிற அமைச்சர்களுக்கு ஏதாவது ஆவல் அல்லது ஆசை இருக்குமானால், அதனுடைய விளைவுகளையெல்லாம் தாங்க வேண்டியதாக நம் மாநிலம் இருந்து கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், இந்த மன்றத்தில் எதிர்க் கட்சியிலிருந்தும் பேசினார்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கலியாணசுந்தரம் அவர்களும் பேசினார்கள்; எதிர்க்கட்சித்

21st March 1966] [திரு. இராம. அரங்கண்ணல்]

தரப்பில் பேசப்பட்ட கருத்துக்கள் மட்டுமல்லாமல், ஆளும் கட்சி உறுப்பினர்களும் அதே கருத்தினை வலியுறுத்திப் பேசினார்கள். எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும், எல்லோருமாக வற்புறுத்திச் சொல்லிய கருத்து நம் மாநிலத்தில் இருக்கிற சுகாதாரத் துறை, மருத்துவத் துறை இரண்டையும் இணைக்கக் கூடாது என்பது ஆகும். இந்த இரண்டு துறைகளையும் இணைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பது ஒருபுறம் இருக்க, இதை இணைக்க வேண்டும் என்பதிலே யார் ஆர்வம் காட்டு கிறார்கள், எதற்காக ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதையும், அப்படி இணைப்பதால் என்னென்ன நன்மைகள் வரும் என்பதை யும் பார்க்கவேண்டும். இரண்டு இலாகாக்களும் நீண்ட காலமாகத் தனித்தனி முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற இலாகாக்கள்; அதிலும் சுகாதாரத் துறையைப் பொறுத்த வரையில் அலுவலர்களாக இருக்கிறவர்களும் டாக்டர் பட்டம் பெற்றவர்கள்தான், எம்.பி.பி.எஸ். படித்து டாக்டர் பட்டம் பெற்றவர்கள்தான். அவர்கள்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுகாதாரத் தலைமை அதிகாரியாக இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் டி.எம்.ஓ.-க்கள் இருக்கிறார்கள். அவர்கள் பணி தனி; இவர்கள் பணி தனி. வேலைகளை எடுத்துப் பார்த்தாலும் வருமுன் காப்பது என்ற பணியில் ஈடுபட்டிருக்கிற சுகாதாரத் துறையில், அந்தத் துறையிலே இருக்கிறவர்கள் பணி மிகவும் அதிகமாக இருக்கிறது. அதே நேரத்தில் மருத்துவத் துறையிலே இருக்கிறவர்களுடைய பணியைப் பார்த்தால் கல்லூரிகளின் நிர்வாகங்களைக் கவனிப்பதும், ஆஸ்பத்திரிகளை நிர்வகிப்பதும், இப்படிப்பட்ட காரியங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக் கின்றன. இரண்டு இலாகாக்களும் பிரிந்து பிரிந்து வேலை செய்வதால் என்ன தொல்லைகள் வந்திருக்கிறது என்று அமைச்சர் அவைக்கு ஏதாவது வந்திருக்கிறதோ தெரியாது. பொது மக்களாக இருக்கிற நமக்கு நன்றாகத் தெரிகிறது. தனித்தனியாக வேலை செய்கிற காரணத்தினால் எந்த விதத் தொல்லைகளும் அல்லது சிரமங்களும் ஏற்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. ஆகையினால் அந்தக் கருத்துக்களையெல்லாம் வலியுறுத்திப் பேசியிருக்கிற காரணத்தினால், கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் திட்டவட்டமாக இதைப் பற்றிய யோசனையை இந்த அரசாங்கம் தள்ளிப் போட்டு விட்டது என்று சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த யோசனை நிறுத்தப்பட மாட்டாது என்று முடிவு செய்வதானால், இதை இவ்வளவு அவசரக் கோலமாக, யாருக்கோ ஏற்படுகிற ஆசையைப் பூர்த்தி செய்ய முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப் பற்றி தீர ஆலோசித்து, பிறகு முடிவு எடுக்க இதைத் தள்ளிப் போட்டு காரியங்களைச் செய்யலாம் என்ற முடிவை அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய மான்யக் கோரிக்கையின் மீது தரப்பட்டிருக்கிற விளக்கங்களைப் பார்க்கிற நேரத்தில், கல்லூரிகள் 7-ஆக உயர்ந் திருக்கிற ஒரு நிலையினை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்லூரிகள் 7-ஆக உயர்ந்திருக்கிறது, ஆனல் மாணவர்கள் தொகை எந்த அளவு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால் 336 பேர்கள் அளவுக்குத் தான் உயர்ந்திருக்கிறது. 1962-ம் ஆண்டில் நான்கு கல்லூரிகள் இருந்து 600 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 1965-ம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 936 ஆக ஆகி இருக்கிறது. அன்றைக்கு மூன்று கல்லூரிகளாக இருந்தது ஏழு கல்லூரிகளாக உயர்ந்திருக்கிற நேரத்தில், நான்கு கல்லூரிகள் அதிகரிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், மூன்று கல்லூரிகள் இருந்தபோது சேர்த்துக்கொள்ளப் பட்ட மாணவர்கள் 600-ஆக இருந்தது, 936 ஆக இன்றைய தினம் அதிகரித்து, நான்கு கல்லூரிகள் மூலம் 336 மாணவர்கள் தான் அதிகமாக ஆகியிருக்கிறார்கள். அது மட்டுமன்றி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் மூன்று இடங்களில் மூன்று கல்லூரிகள் துவக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டில் இருக்கிற டாக்டர்கள் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் தயாரிக்கிற டாக்டர்கள் தொகை அதிகமாக இல்லை என்பதை நம்முடைய புள்ளிவிவரங்கள் நன்றாக எடுத்துக் காட்டும். நம்முடைய நாட்டைப் பொறுத்த அளவில், குறைந்த அளவுக்கு உலகத்திலேயே சிகிச்சை பெறுகிற நாடு உண்டு என்று சொன்னல் அது இந்தியாதான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் இருக்கிறவர்கள் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 28-க்கு மருந்து வாங்கி தங்களைப் பிணிகளிலிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள் என்றும், வெஸ்ட் ஜெர்மனியில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 43-க்கு மருந்து வாங்கித் தங்களைப் பிணிகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள் என்றும், அமெரிக்காவில் இருக்கிற வர்கள் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 83-க்கு மருந்து வாங்கி தங்களைப் பிணிகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள் என்றும், இந்தியாவில் இருக்கிறவர்கள் ஆண்டு ஒன்றுக்கு மூன்றே ரூபாய்க்குத்தான் மருந்து வாங்கி சிகிச்சை பெறும் கட்டத்தில் இருக்கிறார்கள் என்றும் புள்ளிவிவரங்களிலிருந்து காணக் கிடைக்கிறது. அந்தத் துறையிலே நாம் வளரவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க சமுதாயத்தில் ஏற்படுகிற வளர்ச்சியை யொட்டியே அந்நிலை உருவாகும் என்பது ஒருபுறம் இருக்க, டாக்டர்கள் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டாலும், இந்தியாவில் 5,800 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்று கணக்கு தரப்பட்டிருக்கிறது. ரஷ்யாவில் 535 பேர்களுக்கு ஒரு டாக்டரும், ஜெர்மனியில் 733 பேர்களுக்கு ஒரு டாக்டரும், பார்த்தால் 591 பேர்களுக்கு ஒரு டாக்டரும், இத்தாலியில் பார்த்தால் 900 பேர்களுக்கு ஒரு டாக்டரும் ஜப்பான் நாட்டில் இருக்கிறார்கள். ஆனல், அந்த நாடுகளோடு இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவில் 5,800 பேர்களுக்குத்தான் ஒரு டாக்டர் இருந்து கொண்டிருக்கிறார். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 1,75,000 டாக்டர்கள் தேவைப்படும். அப்போது 3,500 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற முறையில் அமையும் என்று கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால்

இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு உலக நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு டாக்டர்களைப் பெற இருக்கிறோமோ, நமக்கே புரியவில்லை.

அது மட்டுமின்றி இன்றைக்கு இந்தத் துறையில் பல அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. போஸ்ட்-கிராஜுவேட் ஸ்டடிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மதுரை ஆஸ்பத்திரியில் ந்யூரோ சர்ஜரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. இவற்றையெல்லாம் வரவேற்க நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆஸ்பத்திரிகளில் இருக்கிற குறைகளைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். இருக்கிற ஆஸ்பத்திரிகள் போது மானதாக இல்லை. இருக்கிற ஆஸ்பத்திரிகளில் உள்ள வசதிகள் போதுமானதாக இல்லை. ஆயிரம் பேர்களுக்கு 49 படுக்கைகள் என்ற விதத்தில்தான் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாறி, எல்லோருக்கும், யார் யார் வியாதியுடன் வருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் வசதி தேடிக் கொடுக்கும் நல்ல சூழ்நிலை உருவாகவேண்டும். இருக்கிற ஆஸ்பத்திரிகளில் செல்லுகிற நேரங்களில் எல்லா வசதிகளையும் பெற முடிகிறதா என்று பார்த்தால், பெற முடியவில்லை. உதாரணத்திற்கு நம் மாநகரத்தை எடுத்துப் பார்த்தால், சாதாரண ஏழை ஜெனரல் ஆஸ்பத்திரி அல்லது ஸ்டான்லி ஆஸ்பத்திரிக்குச் சென்று ஒரு இலாகாவைத் தேடிப் பிடித்து, அவசரமாகக் கவனிக்க வேண்டிய கேஸாக இருந்தால் 10 நிமிடங்களில் அட்மிட் செய்ய முடிகிறதா என்றால் அப்படிச் செய்யக் கூடியதாக இல்லை. ஒரு குழந்தைக்கு ஒரு வியாதி வந்து விடுகிறது. அதுவும் அவசரமாகக் கவனிக்க வேண்டிய வியாதி என்று வைத்துக்கொள்ளுங்கள். திடீரென்று சென்று அட்மிட் செய்ய முடியாது. இடத்தைத் தேடிக் கண்டு பிடிக்க அரை மணி அல்லது முக்கால் மணி ஆகிறது. இந்தக் குறையைப் போக்க ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் என்.ஜீ.ஓ.-க்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி வைக்கவேண்டுமென்று ஒரு திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்திலே ராயப்பேட்டை ஆஸ்பத்திரியையொட்டி என்.ஜீ.ஓ.-க்களுக்குத் தனியாக மருந்தகம் ஏற்பாடு செய்வது என்ற யோசனை இருந்தது. அதற்கென்று 47 லட்சம் ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனல் இப்போது அந்தத் திட்டத்திற்கு 65 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. முன்பு 1966-67-ல் பார்ட்-2 ஸ்கீமாகக் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இப்போது 1967-68-ல் பார்ட்-2 ஸ்கீமாகக் கவனிக்கப்படும் என்று சொல்லப் படுகிறது. நிச்சயம் 1967-68-லாவது என்.ஜீ.ஓ.-க்களுக்கு உதவி செய்யும் வகையில், ராயப்பேட்டையில் ஏராளமான இடம் இருக்கிறது, அந்த இடத்தில் ஆஸ்பத்திரி நிறுவுவதை விரைவு படுத்தத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்று கனம் சுகாதார

[திரு. இராம. அரங்கண்ணல்] [21st March 1966

அமைச்சர் அவர்களையும், சீக்கிரமாகக் கட்டடங்களைக் கட்டி முடிக்க வேண்டுமென்று கனம் மராமத்து அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோடம்பாக்கத்தில் ரூ. 50 லட்சம் செலவில் ஒரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டும் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப்பற்றி இப்பொழுது தகவலே இல்லாமல் இருக்கிறது. அதனுடைய நிலைமை என்ன என்பதை நமது அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், மைலாப்பூரில் 'ஃபோர் ஷோர் எஸ்டேட்டில்' ஒரு ஆஸ்பத்திரி துவக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரியை நமது முதல் அமைச்சர் அவர்கள்தான் துவக்கி வைத்தார்கள். ஒரு சிறிய அறையில் அங்கே இருக்கிற டாக்டர் நகர்வதற்குக் கூட முடியாமல் மிகவும் சங்கடமான நிலை இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரி சர்க்கார் ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு துவக்கப்பட்டு இருந்தாலும், அருகாமையிலே இருக்கிற மீனவர்கள் ஏழை குடிசைவாழ் மக்கள், மத்தியதர மக்கள், எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஒரு நல்ல ஆஸ்பத்திரியாக இருக்கிறது. அதற்கு 'ஃபோர் ஷோர் எஸ்டேட்டில்' இடம் இல்லாமல் இல்லை. ஸ்டேட் ஹவுசிங் போர்டு ஆக்கிரமித்துக் கொண்டு, அவர்களுக்குத் தேவையில்லாத ஆபீசை அங்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை வாங்கி அங்கே ஒரு நல்ல மருத்துவகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சுகாதார அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல் வியாதியைப் போக்குவதற்குப் பற்பல நல்ல முறைகள் நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், முன்பு ஒரு யோசனை சொல்லப்பட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு மொபைல் டெண்டல்வானைக் கொண்டு ஆங்காங்கு அனுப்பி பல் வியாதியைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப் பட்டது. இப்பொழுது தெரியவருகிறது, அங்கே இருக்கிற மொபைல் டென்டல் வான் அவுட் ஆப் ஆர்டராக இருக்கிறது, அது பயன்படுத்தப்படவில்லை என்று. அப்படியில்லாமல் அந்த வானை புனரமைப்புச் செய்து எல்லோருக்கும் பயன் அளிக்கக்கூடிய விதத்தில் மாவட்டம்தோறும் அந்த வான் சென்று, அதில் டாக்டர் சென்று, எல்லோருக்கும் நல்ல வைத்தியத்தைச் செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவிலே நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது சித்த மருத்துவம் என்பது. ஆனால், அந்த மருத்துவத் துறையைப் பொறுத்த அளவில் நல்ல முறையில் கவனம் செலுத்துவதாக இல்லை. தமிழ் நாட்டிற்கே உரியது சித்த வைத்திய முறை. ஆயுர்வேத முறையும், யூனானி முறையும் வட நாட்டிற்குரிய முறைகளாகும். அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற

21st March 1966]

B. Reports, Notifications and other papers.

† 64. Speech by Minister for Public Health on Demand for Public Health Grants, 1966-67 (Tamil and English).

† 65. Speech by Minister for Public Health, while moving the Demand No. XXXVIII—Capital Outlay on Public Health (1966-67) (Tamil and English).

*Laid on the Table of the House on 19th March 1966

† Circulated separately on 19th March 1966.

[21st March 1966

Appendix I.

[*Vide* Answer to Starred Question No. 363 at pages 1 and 2].

A.—(*a*) 1. The following 33/11 K. V. sub-stations in North Arcot district are under investigation:—

a. Peranambut in Gudiyatham taluk.

b. Kilpennathur in Tiruvannamalai taluk.

c. Kilkodungalur in Wandiwash taluk.

d. Malaiyur in Wandiwash taluk.

e. Perungattur in Cheyyar taluk.

2. The following 33/11 K. V. sub-stations in North Arcot district have been sanctioned and are to be taken up for construction :—

a. K. V. Kuppam in Gudiyatham taluk.

b. Alangayam in Tiruppattur taluk.

c. Natrampalli in Tiruppattur taluk.

3. The following 33/11 K. V. sub-stations in North Arcot district have been sanctioned and are under construction :—

a. Peranamallur in Wandiwash taluk.

b. Thellar in Wandiwash taluk.

c. Melpadi in Wallajapet taluk.

d. T. V. Puram in Wandiwash taluk.

(*b*) Rs. 73,768.

(*c*) The sub-station has been energised on 30th November 1965.

(அ) 1. வட ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 33/11 K. V. சப்-ஸ்டேஷன்கள் அமைப்பதற்காகப் பரிசீலனைகள் நடத்தப்பட்டு வருகின்றன:—

a. குடியாத்தம் வட்டத்திலுள்ள பேரணம்பட்டு.

b. திருவண்ணாமலை வட்டத்திலுள்ள கீழ்பென்னாத்தூர்.

c. வந்தவாசி வட்டத்திலுள்ள கீழ்க்கொடுங்களூர்.

d. வந்தவாசி வட்டத்திலுள்ள மலையூர்.

e. செய்யாறு வட்டத்திலுள்ள பெருங்காட்டூர்.

2. வட ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 33/11 K. V. சப்-ஸ்டேஷன்கள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன:—

a. குடியாத்தம் வட்டத்திலுள்ள கே. வி. குப்பம் (கீழ்வைத்திணாங் குப்பம்).

b. திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஆலங்காயம்.

c. திருப்பத்தூர் வட்டத்திலுள்ள நாட்ராம்பள்ளி.

21st March 1966]

3. வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 33/11 K. V. சப்-ஸ்டேஷன்கள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டு, அவை அமைக்கப்பட்டு வருகின்றன:—

a. வந்தவாசி வட்டத்திலுள்ள பெரணமல்லூர்.

b. வந்தவாசி வட்டத்திலுள்ள தெள்ளாறு.

c. வாலாஜாபேட்டை வட்டத்திலுள்ள மேல்பாடி.

d. வந்தவாசி வட்டத்திலுள்ள டி. வி. புரம்.

(இ) ரூ. 73,768.

(உ) இந்த சப்-ஸ்டேஷன் 1965-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந் தேதியன்று செயலுக்கு வந்தது.

Appendix II.

[*Vide* Answer to Starred Question No. 365 at page 5.]

(a) *The number of silk weavers' co-operative societies functioning in the State, district-wise* :—

Serial number and name of the district.	Number of silk weavers' co-operative society.
(1)	(2)
1 Chingleput	6
2 North Arcot	3
3 South Arcot	1
4 Salem	2
5 Thanjavur	9
Total ..	21

(b) *Number of looms run by each society* (1964–65):—

Serial number and name of silk weavers' co-operative society.	Number of looms run by the society.
(1)	(2)
1 Kancheepuram Kamakshiamman Silk Weavers' Co-operative Society.	364
2 Kancheepuram Murugan Silk Weavers' Co-operative Society.	296
3 Kancheepuram Thiruvalluvar Silk Weavers' Co-operative Society.	260
4 Kancheepuram Varadarajaswamy Silk Weavers' Co-operative Society.	120
5 Kancheepuram Silk Handloom Weavers' Co-operative Marketing Society.	174
6 Kancheepuram Silk Weavers' Co-operative Society ..	272
7 Arni Silk Weavers' Co-operative Society	178
8 Wallajapet Silk Weavers' Co-operative Society ..	130
9 Onnupuram Sowdambiga Silk Weavers' Co-operative Society.	102

[21st March 1966

Serial number and name of the silk weavers' co-operative society. (1)	Number of looms run by the society. (2)
10 Mokshakulam Laxmi Silk Weavers' Co-operative Society.	118
11 Salem Silk Weavers' Co-operative Society	187
12 Chinthamani Silk Weavers' Co-operative Society ..	181
13 Tirubuvanam Silk Weavers' Co-operative Society ..	144
14 Kumbakonam Silk Weavers' Co-operative Society	87
15 Patteeswaram Silk Weavers' Co-operative Society ..	100
16 Darasuram Silk Weavers' Co-operative Society ..	125
17 Ammapet Silk Weavers' Co-operative Society	165
18 Ayyampet Silk Weavers' Co-operative Society	94
19 Ammaiyappan Silk Weavers' Co-operative Society ..	90
20 Manambuchavadi Cotton and Silk Weavers' Co-operative Society.	106
21 Mannargudy Cotton and Silk Weavers' Co-operative Society (only silk looms).	4
Total ..	3,297

(c) *Income earned by each society during 1964–65 (co-operative year)*:—

Serial number and name of the silk weavers' co-operative society. (1)	Profit or loss sustained by the society. Profit (Rupees) (2)	Loss (Rupees) (3)
1 Kancheepuram Kamakshiamman Silk Weavers' Co-operative Society.	52,200 00	..
2 Kancheepuram Murugan Silk Weavers' Co-operative Society.	33,402 96	..
3 Tiruvalluvar Silk Weavers' Co-operative Society.	20,007 00	..
4 Kancheepuram Varadarajaswamy Weavers' Co-operative Society.	4,086 71	..
5 Kancheepuram Silk Handloom Weavers' Co-operative Marketing Society.	2,206 00	..
6 Kancheepuram Silk Weavers' Co-operative Society.	51,040 61	..
7 Arni Silk Weavers' Co-operative Society.	..	1,958 00
8 Onnupuram Sowdambiga Silk Weavers' Co-operative Society.	..	14,386 00
9 Wallajapet Silk Weavers' Co-operative Society.	..	12,868 00

21st March 1966]

Serial number and name of the silk weavers' co-operative society. (1)	Profit or loss sustained by the society. Profit. (2) RS. P.	Loss. (3) RS. P.
10 Mokshakulam Laxmi Silk Weavers' Co-operative Society.	15,081 90	
11 Salem Silk Weavers' Co-operative Society.	9,699 86	
12 Chinthamani Silk Weavers' Co-operative Society.		23,629 40
13 Tirubuvanam Silk Weavers' Co-operative Society.	33,449 74	
14 Kumbakonam Silk Weavers' Co-operative Society.		25,497 71
15 Patteeswaram Silk Weavers' Co-operative Society.		51,291 32
16 Darasuram Silk Weavers' Co-operative Society.	15,802 38	
17 Ammapet Silk Weavers' Co-operative Society.	7,103 10	
18 Ayyampet Silk Weavers' Co-operative Society.		18,679 90
19 Ammaiyappan Silk Weavers' Co-operative Society.	13,045 77	
20 Manambuchavadi Cotton and Silk Weavers' Co-operative Society.		12,295 00
21 Mannargudy Cotton and Silk Weavers' Co-operative Society.	272 54	

(அ) இம் மாநிலத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட வாரி எண்ணிக்கை :—

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும் (1)	பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை. (2)
1. செங்கற்பட்டு	6
2. வட ஆற்காடு	3
3. தென் ஆற்காடு	1
4. சேலம்	2
5. தஞ்சாவூர்	9
மொத்தம் ..	21

(இ) ஒவ்வொரு சங்கமும் கையாளும் தறிகளின் எண்ணிக்கை (1964-65):

தொடர் எண்ணும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பெயரும். (1)	சங்கம் கையாளும் தறிகளின் எண்ணிக்கை. (2)
1. காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	364
2. காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	296
3. காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	260
4. காஞ்சிபுரம் வரதராஜஸ்வாமி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	120
5. காஞ்சிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்	174
6. காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	272
7. ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ..	178
8. வாலாஜாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	130
9. ஒண்ணுபுரம் சௌடாம்பிகா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	102
10. மோக்ஷகுளம் லக்ஷ்மி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	118
11. சேலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ..	187
12. சிந்தாமணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ..	181
13. திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	144
14. கும்பகோணம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	87
15. பட்டீஸ்வரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	100
16. தாராசுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	125
17. அம்மாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	165
18. அய்யம்பேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	94
19. அம்மையப்பன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	90
20. மானம்புச்சாவடி பருத்தி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	106
21. மன்னார்குடி பருத்தி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (பட்டுத் தறிகள் மட்டும்)	4
	3,297

(உ) 1964-65-ல் ஒவ்வொரு சங்கத்திற்கும் கிடைத்த வருமானம் (கூட்டுறவு ஆண்டு) :

தொடர் எண்ணும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பெயரும்.	சங்கத்தின் லாபம் அல்லது நஷ்டம்	
	லாபம் ரூ. பை.	நஷ்டம் ரூ. பை.
(1)	(2)	(3)
1. காஞ்சிபுரம் காமாக்ஷி அம்மன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	52,200·00	
2. காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	33,402·96	
3. திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	20,007·00	
4. காஞ்சிபுரம் வரதராஜஸ்வாமி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ..	4,086·71	
5. காஞ்சிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ..	2,206·00	
6. காஞ்சிபுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	51,040·61	
7. ஆரணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		1,958·00
8. ஒண்ணுபுரம் சௌடாம்பிகா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		14,386·00
9. வாலாஜாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		12,868·00
10. மோக்ஷகுளம் லக்ஷ்மி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	15,081·90	
11. சேலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	9,699·86	
12. சிந்தாமணி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		23,629·40
13. திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	33,449·74	
14. கும்பகோணம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		25,497·71
15. பட்டீஸ்வரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		51,291·32
16. தாராசுரம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.	15,802·28	
17. அம்மாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	7,103·10	
18. அய்யம்பேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		18,679·90
19. அம்மையப்பன் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		13,045·77
20. மானம்புச்சாவடி பருத்தி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்		12,295·00
21. மன்னார்குடி பருத்தி, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	272.54	

APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 369 at page 8.]

District-wise collection to Dr. B.C. Roy National Award Fund:—

	RS.	P.	*As* on.
Madras (collected by the Director of Medical Services)	42	00	18—12—65
Chingleput	335	00	24—12—65
South Arcot	9,293	49	18—11—65
North Arcot	20,000	00	20—12—65
Tiruchirappalli	2,980	00	20—11—65
Salem	1,193	25	2—10—65
Dharmapuri	1,417	00	19—11—65
Thanjavur	225	00	19—11—65
Madurai	833	25	29—11—65
Tirunelveli	Nil		18—11—65
Ramanathapuram	727	00	3—12—65
Coimbatore	Nil		19—11—65
The Nilgiris	901	50	18—11—65
Kanyakumari	1,133	00	10—2—66
	39,080	49	

டாக்டர் பி.சி. ராய் நினைவுச் சின்ன நிதிக்குத் தமிழ் நாட்டில் மாவட்ட வாரியாக வசூலான தொகை.

	ரூ.	பை.	
சென்னை (டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் அவர்களால் வசூலிக்கப் பட்டது).	42	00	18—12—65
செங்கற்பட்டு	335	00	24—12—65
தென் ஆற்காடு	9,293	49	18—11—65
வட ஆற்காடு	20,000	00	20—12—65
திருச்சிராப்பள்ளி	2,980	00	20—11—65
சேலம்	1,193	25	2—10—65
தர்மபுரி	1,417	00	19—11—65
தஞ்சாவூர்	225	00	19—11—65
மதுரை	833	25	29—11—65
திருநெல்வேலி	..		18—11—65
இராமநாதபுரம்	727	00	3—12—65
கோயம்புத்தூர்	..		19—11—65
நீலகிரி	901	50	18—11—65
கன்னியாகுமரி	1,133	00	10—2—66
மொத்தம்	39,080	49	

APPENDIX IV

[*Vide* Answer to Starred Question No. 370 at pages 10]

A.—The following are the details of the schemes for the development of Minor Ports in the State proposed to be taken up during 1966–67 :—

Name of the schemes. (1)	Amount proposed for 1966–67. (2) (RUPEES IN LAKHS.)
NEW SCHEMES.	
I. Cuddalore Port—	
(i) Provision of Inspection-*cum*-Survey launch.	1·00
(ii) Purchase of 50 ton steel water barge with equipment.	0·80
(iii) Purchase of a grab dredger with necessary punts.	3·10
(iv) Provision of a 300 h.p. tug for towing lighters.	8·00
(v) Purchase of a 12″ cutter suction dredger with pipeline for internal dredging to replace the present dredger 'Erskine' which is 28 years old.	17·50
(vi) Construction of an overhead reservoir of 200 ton capacity including ground reservoir and cost of necessary pump and pipeline from Municipal storage tank.	2·00
II. Nagapattinam Port—	
Provision of a tug for passenger lighters.	3·00
III. Ennore (new port to be developed)—	
(i) Acquisition of land required for wharf, stacking area and buildings.	2·00
(ii) Conducting model studies.	0·60
(iii) Provision of 2 sheet pile groynes at entrance of the river.	1·00
IV. Kulasekarapattinam Port—	
Laying of mooring buoys for mooring sailing vessels.	1·00
V. Tuticorin Port—	
(i) Deepening the existing boat channel at the Port to 15·00 feet below L.W.O.S.T.	5·00
(ii) Extending the northern stone groyne and constructing a wharf.	3·50

Name of the schemes. (1)	Amount proposed for 1966-67. (2) (RUPEES IN LAKHS.)
.—*Tuticorin Port*—cont.	
(iii) Provision of additional tug for assisting sailing vessels.	8·00
	56·50

CARRY-OVER SCHEMES.

I. Cuddalore Port—	
Construction of breakwaters and River Training Works—Estimate Rs. 120·74 lakhs.	42·40
II. Nagapattinam Port—	
Construction of passenger terminal station—Estimate Rs 8 lakhs.	6·50
Total ..	48·90

யதில்.—1966–67-ல் இம் மாநிலத்தில் நிறைவேற்ற எண்ணியுள்ள சிறு
றமுக வளர்ச்சித்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

திட்டங்களின் பெயர். (1)	1966–67-ல் செலவிட எண்ணியுள்ள தொகை. (2) (ரூபாய் லட்சத்தில்.)
ார் துறைமுகம்— புதிய திட்டங்கள்	
(i) மேற்பார்வை—ஆய்வு விசைப்படகு ஒன்றை வாங்குதல்.	4·00
(ii) உருக்காலான 50 டன் படகு (யந்திர சாதனங்களுடன்).	0·80
(iii) மணல்வாரி ஒன்றை வாங்குதல் (தேவையான படகுகளுடன்).	3·10
(iv) சிறு கப்பல்களை இழுப்பதற்காக 300 குதிரைத் திறனுள்ள இழுபடகை அமைத்தல்.	8·00
(v) 28 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய பழைய "எர்ஸ்கின்" மணல்வாரிக்குப் பதிலாக, குழாய் உள்ள 12" உறிஞ்சு மணல் வாரி வாங்குதல், இது உட்பகுதியில் மணல் வாரப் பயன்படுத்தப்படும்.	17·50
(vi) தரைமட்ட நீர்த்தேக்கம் உள்பட, 200 டன் கொள் அளவுள்ள மேல் நிலைத் தேக்கம் ஒன்றைக் கட்டுவதற்கும், தரைமட்ட நீர்ச் சேமிப்புத் தொட்டியிலிருந்து நீர் இறைப்பதற்கு வேண்டிய விசை ஏற்றத்தையும் குழாய்களையும் அமைப்பதற்கும் ஆகும் செலவு.	[illegible]

திட்டங்களின் பெயர். (1)	1966–67-ல் செலவிட எண்ணியுள்ள தொகை. (2) (ரூபாய் லட்சத்தில்.)
நாகப்பட்டினம் துறைமுகம்—	
பயணக்கப்பல்களுக்கு இழுவைப் படகு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தல்.	3·00
எண்ணூர்—	
(புதிய துறைமுகமாக மேம்பாடு செய்யப் பட வேண்டியது.)	
(i) தோணித்துறை (சரக்கு) அடுக்குமிடம், கட்டிடங்கள் முதலியவற்றிற்காக நில ஆர்ஜிதம்.	2·00
(ii) மாதிரி ஆராய்ச்சிகளை நடத்துதல்.	0·60
(iii) ஆற்றின் முகப்பில் 2 அடுக்கு அலைத் தடுப்புகளை அமைத்தல்.	1·00
குலசேகரப்பட்டினம் துறைமுகம்—	
நங்கூரக் கப்பல்களுக்கு நங்கூர மிதவைகளை அமைத்தல்.	1·00
தூத்துக்குடி துறைமுகம்—	
(i) அலைத் தடுப்புச் சுவரின் நீர் மட்டத்திலிருந்து 15 அடிக்குக் கீழே துறைமுகத்தில் தற்பொழுதுள்ள படகு வாய்க்காலை ஆழப்படுத்துதல்.	5·00
(ii) வடக்குப்புறததில் உள்ள கல் அலைத் தடுப்பியை மேலும் விரிவு படுத்துதலும், தோணித்துறையைக் கட்டுதலும்.	3·50
(iii) கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு உதவும் வகையில் கூடுதல் இழுவைப்படகுகளுக்காக வகை செய்தல்.	8·00
	56·50

தொடர்ந்துவரும் வேலைத் திட்டங்கள்

கடலூர் துறைமுகம்—	
அலைத் தடுப்புகளையும் ஆற்றுப்பயிற்சி பணிகளையும் கட்டுதல். மதிப்பீடு ரூ. 120·74 லட்சம்.	42·40
நாகப்பட்டினம் துறைமுகம்—	
பயணிகள் வந்து இறங்கும் நிலையத்தைக் கட்டுதல். மதிப்பீடு ரூ. 8 லட்சம்.	6·50
மொத்தம் ..	48·90

[*Vide* Answer to Starred Question No. 376 at page 17] [21st March 1966

A.—(a) A list of posts so far declared as technical is placed on the Table of the House.

(b) The basis for declaring a post as technical is whether the post needs to be handled by persons with special qualifications, training, experience, etc.

List of posts so far declared as technical for the purpose of utilisation of services beyond the age of superannuation.

Agriculture Department.

1. Dean, Agricultural College and Research Institute, Coimbatore.
2. Associate Dean, Agricultural College and Research Institute, Coimbatore.
3. Professors and Readers in the Regional Post-graduate Research Institute, Coimbatore.
4. Horticulturist and Associate Professor of Horticulture, Agricultural College and Research Institute, Coimbatore.
5. All Crop Specialists, Regional Research Stations.
6. Cotton Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.
7. Oilseeds Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.
8. Paddy Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.
9. Millet Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.
10. Pulses Specialist, Agricultural College and Research Institute, Coimbatore.
11. Sugarcane Specialist, Central Sugarcane Research Station, Cuddalore.
12. Horticulturist, Fruit Research Station, Periakulam.
13. Entomologist and Associate Professor of Plant Pathology, Coimbatore.
14. Agricultural Chemist and Associate Professor of Soil Science, Coimbatore.
15. Systematic Botanist and Associate Professor of Botany, Coimbatore.
16. Nematologist, Agricultural College and Research Institute, Coimbatore.
17. Cotton Agronomist, Srivilliputhur.
18. Associate Professor of Agricultural Economics, Coimbatore.
19. Secretary, Research Council of Agricultural College and Research Institute, Coimbatore.

[21st March 1966]

Agriculture Department—cont.

20. Plant Virologist, Agricultural College and Research Institute, Coimbatore.
21. Cytogeneticist, Banana, Annona and Guava Scheme, Coimbatore.
22. Plant Protection Specialist, Thanjavur.
23. Agricultural Meteorologist.
24. Assistant Research Officers and Lecturers, Coimbatore.
25. Lecturer in Entomology, Mycology, Chemistry and Botany, Coimbatore.
26. Assistant Entomologists.
27. Assistant Mycologists.
28. Crop and Plant Protection Officers (Mycology) and Entomology).
29. Assistant Botanists.
30. Algologist.
31. Assistant Agricultural Chemists.
32. Assistant Soil Chemists.
33. Assistant Horticulturists.
34. Assistant Paddy Specialists.
35. Assistant Cotton Specialists.
36. Assistant Oilseeds Specialists.
37. Assistant Millet Specialists.
38. Assistant Pulses Specialists.
39. Banana Research Officer, Aduthurai.
40. Agricultural Bacteriologist.
41. Field Officer, Thanjavur.
42. Plant Physiologists.
43. Cytogeneticist.
44. Assistant Agronomists (Sugarcane).
45. Assistant Agronomists.
46. District Investigation Officer.
47. Investigation Officer.
48. Agricultural Meteorologists.
49. Superintendents, Agricultural Research Stations.
50. Assistant Chillies Specialist, Kovilpatti.
51. Curator, Botanical Gardens, Ootacamund.

Animal Husbandry Department.

1. Director of Animal Husbandry.
2. Dean, Madras Veterinary College.
3. Deputy Directors of Animal Husbandry.

Animal Husbandry Department—cont.

4. Superintendent, Institute of Veterinary Preventive Medicine, Ranipet.

5. Professors in the Madras Veterinary College (including the Professor of Animal Husbandry in the Agricultural College and Research Institute, Coimbatore).

6. Lecturers in the Madras Veterinary College other than Lecturer in Chemistry including the Lecturer in Animal Husbandry in the Agricultural College and Research Institute, Coimbatore.

7. District Veterinary Officers.

8. All Superintendents of Farms including Poultry and Sheep Farms, Sheep and Goat Development Officer and Poultry Development Officers.

9. Special Officer for Artificial Insemination and Inspector of Key Villages.

10. All Research Officers including Veterinary Disease Investigation Officers (Cattle, Sheep and Goats and Poultry).

11. Forest Veterinary Officer.

12. Veterinary Assistant Surgeons.

Forest Department.

1. All posts in the Madras Forest Service.

2. Rangers (in the Madras Forest Subordinate Service) trained in Rangers' College and holding a degree in Science of any recognised University.

3. Post of Forest Veterinary Officer.

4. Posts of Draughtsmen in the Madras Forest Subordinate Service.

Fisheries Department.

1. Mechanical Engineer (Marine).
2. Marine Foreman.
3. Fisheries Skipper.
4. Engineer for the tug "Valampuri".

Cinchona Department.

1. Director, Cinchona Department.
2. Manufacturing Chemists.
3. Assistant Chemists.
4. Factory Overseer.
5. Mechanical Foreman.
6. Engine Driver.
7. Checkmeasuring Overseer.

Madras Dairy and Milk Project.

1. Special Officer for Milk.
2. Dairy Engineer.
3. Assistant Dairy Engineer.
4. Dairy Chemist.

Police Department.

(POLICE RADIO BRANCH)

1. The Police Radio Officer, Madras.

2. The Technical Assistant to the Police Radio Officer, Madras.

3. Radio Supervisor.

4. Technician in the Police Radio Branch

(FINGER PRINT BUREAU)

1. Technical Officer, Photography, Special Branch, Criminal Investigation Department.

2. Assistant Photographer, Finger Print Bureau, Vellore.

Forensic Science Department.

1. Director, State Forensic Science Laboratory, Madras.

2. Additional Director, State Forensic Science Laboratory, Madras.

3. Assistant Director, State Forensic Science Laboratory, Madras.

Labour Department (Factories).

1. Chief Inspector of Factories.
2. Deputy Chief Inspector of Factories.
3. Inspector of Factories, Grade I.

Co-operation Department.

1. Dairy Officer.
2. Assistant Dairy Officer.
3. Dairy Assistant.
4. Dairy Chemist.
5. Milk Tester.

Employment and Training Department.

1. Joint Director (Craftsmen Training).
2. Joint Apprenticeship Adviser.
3. Deputy Director (Stores Purchase).
4. Deputy Apprenticeship Adviser.
5. Deputy Director (Training).

[21st March 1966

Employment and Training Department—cont.

6. Inspector of Technical and Industrial Schools.
7. Inspectors of Training.
8. Principals of Industrial Training Institutes.

State Transport Department.

1. General Foremen.
2. Electrical Foremen.
3. Foremen.
4. Stock Verifier.
5. Workshop Superintendent.

Industries and Commerce Department.

1. Joint Director of Industries and Commerce (Small-Scale Industries).

2. Joint Director of Industries and Commerce (Planning and Development).

3. Joint Director of Industries and Commerce (Handicrafts).

4. Administrative Officer, Industrial Estate, Ambattur and Ex-Officio Joint Director of Industries and Commerce.

5. Joint Director of Industries and Commerce (Chemical Engineering and Testing).

6. Joint Director of Industries and Commerce (Engineering).
7. Chief Ceramic Technologist.
8. General Manager, Handloom Parts Factory, Salem.
9. Superintendent, Structural Workshop, Ambattur.
10. State Geologist.
11. Foundry Expert.
12. Die Sinking Expert.
13. Industrial Engineer, Central Office.
14. Deputy Director (Small-Scale Industries).
15. Additional Deputy Director (Small-Scale Industries).
16. Deputy Director (Machinery).
17. Regional Deputy Directors.
18. Ceramic Expert.
19. Glass Technologist.

20. General Superintendent, Scientific Glass Apparatus Factory, Guindy.

21. Deputy Director (Industrial Co-operatives).
22. Deputy State Geologist, Guindy.
23. Chief Chemist, Guindy.

24. General Superintendent, Tool Room Servicing Shop, Guindy.

21st March 1966]

Industries and Commerce Department—cont.

25. Superintendent, Unit for the manufacture of Fractional Horse Power Electrical Starters, Guindy.

26. Works Manager, Handlooms Parts Factory, Salem.

27. Superintendent, Forge and Heat Treatment Shop, Guindy.

28. General Superintendent, Tool Room Shop, Madurai.

29. General Superintendent, Pressed Metal Products, Madras-1.

30. Works Superintendent, Co-operative Metal Rolling Mills, Tiruchirappalli.

31. Superintendent, Common Lease Shop, Guindy.
32. Superintendent, Cycle Assembly Unit, Thanjavur.
33. Superintendent, Model Foundry, Guindy.
34. Wood Working Expert, Central Office.
35. Superintendent, Wood Working Unit, Guindy.

36. Superintendent, Tool and Die Designing Training Centre, Dindigul.

37. Superintendent, Electrical Goods Unit, Guindy.
38. Superintendent, Textile Mill Parts Unit, Madurai.
39. Chief Designer, Die and Tool Design Section, Guindy.
40. Deputy Superintendent, Structural Workshop, Ambattur.
41. Superintendent, Technical Training Centre, Guindy.
42. Administrative Officer, Industrial Colony, Madurai.
43. Administrative Officer, Industrial Colony, Erode.

44. Chief Technician, Common Facility Centre, Industrial Estate for Leather Goods, Madhavaram.

45. General Superintendent, Tool Room Shop, Ambattur.

46. General Superintendent, Pressure Die Casting Unit, Guindy.

47. General Superintendent, Galvanising Plant, Mettur Dam.

48. Superintendent, Tool Room Shop, Coimbatore.

49. General Manager, Wool Processing Centre, Vinnamangalam.

50. Administrative Officer, Industrial Estate, Guindy.

51. Manager-*cum*-Editor, Technical Information Section, Guindy.

52. Deputy Director (Commerce).

53. Metallurgist, Chemical Testing and Analytical Laboratory.

54. Mechanical Engineer, Chemical Testing and Analytical Laboratory.

[21st March 1966

Industries and Commerce Department—cont.

55. Superintendent, Service Centre for Pressed Metal Products, Madras.

56. Assistant Superintendent, Tool Room Shop, Guindy.

57. Section Superintendent, Forge and Heat Treatment Shop, Guindy.

58. Assistant Superintendent (Designs and Pattern) Model Foundry, Guindy.

59. Superintendent, Common Finishing Shop, Guindy.

60. Assistant Engineer (Electrical), Industrial Estate, Guindy.

61. Administrative Officer, Industrial Estate, Perambur.

62. Assistant Superintendent, Electrical Motors and Starters Unit, Guindy.

63. Designs Engineer, Electrical Motors and Starters Unit, Guindy.

64. Designer Grade I, Die and Tool Designing Section, Guindy.

65. Assistant Superintendent (Design and Planning), Structural Workshop, Ambattur.

66. Assistant Superintendent (Works), Structural Workshop, Ambattur.

67. Assistant Engineer (Civil), Industrial Estate, Guindy.

68. Assistant Engineer (Sanitation), Industrial Estate, Guindy.

69. Administrative Officer, Servicing Corporation, Industrial Estate, Guindy.

70. Assistant Superintendent, Wood Working Unit, Guindy.

71. Assistant Superintendent (Die Casting), Pressure Die Casting Unit, Guindy.

72. Assistant Superintendent (Designs), Pressure Die Casting Unit, Guindy.

73. Assistant Engineer, Electrical Goods Unit, Guindy.

74. Information Officer, Technical Information Section, Guindy.

75. Chief Instructor, Technical Training Centre, Guindy.

76. Design Engineer, Common Lease Shop, Guindy.

77. Assistant Director of Industries and Commerce, Madras.

78. Additional Assistant Director of Industries and Commerce, Madras (North).

79. Additional Assistant Director of Industries and Commerce, Madras (South).

80. Assistant Director of Industries and Commerce, Chingleput at Madras.

81. Designer, Designing Section, Central Office.

21st March 1966]

Industries and Commerce Department—cont.

82. Assistant Director of Industries and Commerce (Ceramics), Central Office.

83. Superintendent, Artificial Limb Centre in the Government General Hospital, Madras.

84. Assistant Geologist.

85. Geologist.

86. Drilling Engineer, Geology Branch.

87. Superintendent, General Purpose Engineering Workshop, Vellore.

88. Superintendent, Small Workshop, Tiruvannamalai.

89. Superintendent, Model Foundry, Katpadi.

90. Superintendent, Tool Room Shop, Katpadi.

91. Assistant Director of Industries and Commerce, Vellore.

92. Superintendent, Industrial Co-operative Workshop for the manufacture of Bolts and Nuts, Sriperumpudur.

93. Superintendent, Government Carpentry and Smithy Workshop, Cuddalore.

94. General Superintendent, Ceramic Training Centre, Vridhachalam.

95. General Superintendent, Salt Glazed Pipe Factory, Vridhachalam.

96. Superintendent, General Purpose Engineering Workshop, Villupuram.

97. Administrative Officer, Industrial Estate, Vridhachalam.

98. Superintendent of the Service Unit, Small Service Centre for the benefit of Small Entreprenuers, Vridhachalam.

99. Principal, Ceramic Training School, Vridhachalam.

100. Assistant Director of Industries and Commerce, Cuddalore.

101. Superintendent, Brassware Unit, Kumbakonam.

102. Superintendent, Government Carpentry and Smithy Workshop, Mannargudi.

103. Assistant Superintendent, Cycle Assembly Unit, Thanjavur.

104. Superintendent, Model Foundry, Thanjavur.

105. Superintendent, Tool Room Shop, Thanjavur.

106. Superintendent, General Purpose Engineering Workshop, Mayuram.

107. Assistant Director of Industries and Commerce, Thanjavur.

108. Superintendent-*cum*-Master—Craftsman, Training-*cum*-Service Centre for Development of Art Metal Industry, Swamimalai.

[21st March 1966

Industries and Commerce Department—cont.

109. Officer-in-charge, Farm Implements Unit, Tiruchirappalli

110. Superintendent, Tool Room Servicing Shop, Tiruchirappalli.

111. Superintendent, Common Lease Shop, Tiruchirappalli.

112. Superintendent, General Purpose Engineering Workshop, Karur.

113. Assistant Director of Industries and Commerce, Tiruchirappalli.

114. Superintendent, Common Lease Shop, Madurai.

115. Assistant Engineer (Electrical), Industrial Colony, Madurai.

116. Superintendent, Raw Materials Depot, Madurai.

117. Superintendent, Service Centre for Pressed Metal Products, Palni.

118. Superintendent, General Purpose Engineering Workshop, Kodaikanal.

119. Administrative Officer, Industrial Estate, Dindigul.

120. Chief Instructor, Tool and Die Designing Training Centre, Dindigul.

121. Assistant Engineer (Civil), Industrial Colony, Madurai.

122. Assistant Director of Industries and Commerce, Madurai.

123. Superintendent, General Purpose Engineering Workshop, Chekkanurani.

124. Superintendent, General Purpose Engineering Workshop, Rajapalayam.

125. Superintendent, Tool Room Servicing Shop, Virudhunagar.

126. Assistant Director of Industries and Commerce, Ramanathapuram at Madurai.

127. Assistant Director of Industries and Commerce, Sivaganga.

128. Superintendent, Government Carpentry and Smithy Workshop, Pettai.

129. Superintendent, Tool Room Servicing Shop, Pettai.

130. Superintendent, Common Lease Shop, Pettai.

131. Superintendent, Model Foundry, Pettai.

132. Superintendent, General Purpose Engineering Workshop, Tuticorin.

133. Superintendent, Cycle Assembly Unit, Tuticorin.

134. Assistant Director of Industries and Commerce, Tirunelveli.

135. Superintendent, General purpose Engineering Workshop, Nagercoil.

21st March 1966]

Industries and Commerce Department—cont.

136. Assistant Director of Industries and Commerce, Nagercoil.

137. Superintendent, Model Bolts and Nuts Factory, Erode.

138. Superintendent, Common Central Tool Room and Servicing Centre, Erode.

139. Assistant Engineer (Electrical), Industrial Colony, Erode.

140. Superintendent, General Purpose Engineering Workshop, Tiruppur.

141. Superintendent, Common Lease Shop, Coimbatore.

142. Superintendent, Raw Materials Depot, Coimbatore.

143. Assistant Superintendent, Forge and Heat Treatment Shop, Coimbatore.

144. Assistant Director of Industries and Commerce. Coimbatore.

145. Superintendent, Wood Working Unit, Pollachi.

146. Superintendent, Quartz Crushing Plant, Salem.

147. Assistant Superintendent, Government Galvanising Plant, Mettur Dam.

148. Shift Superintendent, Government Handloom Parts Factory, Salem.

149. Superintendent, Tool Room Shop, Salem.

150. Superintendent, General Purpose Engineering Workshop, Namakkal.

151. Superintendent, Cycle Assembly Unit, Krishnagiri.

152. Assistant Director of Industries and Commerce, Salem.

Medical Department.

1. All categories of posts of Medical Officers.
2. First Physicist.
3. Second Physicist.
4. Professor of Pharmaceutics and Pharmaceutical Chemistry.
5. Assistant Professor of Pharmaceutics.
6. Assistant Professor of Pharmacognosy.
7. Bio-Chemist, Government Hospital for Women and Children, Madras.
8. Bio-Chemist, Government General Hospital, Madras.
9. Bio-Chemist, Anti-Toxin Department, King Institute, Guindy.
10. Clinical Psychologist.
11. Non-Medical Lecturer in Bio-Chemistry.

Medical Department—cont.

12. Non-Medical Assistant to the Professor of Bio-Chemistry.
13. Non-Medical Serologist-*cum*-Bacteriologist.
14. Senior Chemical Assistant, King Institute, Guindy.
15. Statistician (Gazetted).
16. Non-Medical posts held by science graduates with M.Sc. qualification in the following medical faculties:—

M.Sc. Anatomy.

M.Sc. Physiology.

M.Sc. Bacteriology.

M.Sc. Bio-Chemistry.

M.Sc. Pharmacology.

Public Health.

1. Health Officers and Medical Officers (Maternal and Child Health).

Public Health Engineering Department.

1. Sanitary Engineer.
2. Superintending Engineer (Public Health).
3. Chief Head Draughtsman.
4. Head Draughtsman.
5. Draughtsman, Grades I and II.

Public Works Department.

1. Chief Engineers.
2. Superintending Engineers.
3. Chief Head Draughtsman.
4. Civil Draughtsmen, Grades I and II.
5. General Foreman, Public Works Workshops, Madras.
6. Foreman, Public Works Workshops, Madras.
7. Mechanical Draughtsmen, Public Works Workshops, Grades I and II.
8. Special Grade Draughtsman.
9. Research Officer.
10. Assistant Consulting Architect.
11. Head Draughtsman (Draughtsman Special Grade).
12. Architectural Draughtsman.
13. Assistant Research Officer.

Highways and Rural Works Department.

1. Chief Engineer.
2. Superintending Engineers.
3. Head Draughtsmen in the Office of the Chief Engineer (Highways and Rural Works), Civil Draughtsmen I, II.
4. Foreman in Repair Yards.
5. Research Officer.
6. Assistant Research Officer.

Port Department.

1. State Port Officer.
2. Port Officers.
3. Inspecting Dredging Engineer.

Stationery and Printing Department

1. Works Manager.
2. Deputy Works Manager.
3. Machine Maistry.
4. Foreman (Electrical).
5. Foreman (Mechanical).
6. Lino Operators.
7. Mono Operators.
8. Senior Machine Minder.
9. Top Senior Binder.
10. Chief Electrician.
11. Chief Mechanic (Lino).
12. Head General Mechanic.
13. Head Lino Mechanic.
14. Head Mono Mechanic.
15. Fitter Maistry.
16. Senior Electrician.
17. Senior Lino Mechanic.

Electrical Inspectorate.

1. Chief Electrical Inspector to Government.
2. Senior Electrical Inspector.

Public Health, Engineering and Municipal Works Department.

1. Chief Engineer, Public Health, Engineering and Municipal Works.

2. Municipal Engineers, Grades I, II and III.

Town-Planning Department.

1. Joint Director of Town-Planning.
2. Town Planner (Special).
3. Town Planner.
4. Junior Town-Planning Expert.
5. Junior Town Planner.
6. Town-Planning Assistant (Senior).
7. Town-Planning Assistant (Junior).
8. Senior Architectural Draughtsman.
9. Junior Architectural Draughtsman.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 22nd March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Sirkali Major Panchayat

* *S.No Q. No.* 7.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to change Sirkali Major Panchayat in Thanjavur district into a municipality; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : அதிகமாக ஜனத்தொகை இருக்கிற காரணத்தினாலும், வருமானம் அதிகமாக இருக்கிற காரணத்தினாலும் ஏற்கனவே இதை முனிசிபாலிடி ஆக்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. என்ன காரணத்தினால் இது நிறுத்தப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இம்மாதிரி கனம் அங்கத்தினர் சொல்லுவதுபோல் ஜனத்தொகை அதிகமாக இல்லை. மக்கள் தொகை சீலிங்குக்கு கீழே ஆயிரம் குறைவாக இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : என்ன ஜனத்தொகையிருந்தால் முனிசிபாலிடியாக்கப்படும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மக்கள் தொகை இருபதினாயிரம் இருக்கவேண்டும். ஒரு லட்சம் ரூபாய் வருமானம் இருக்க வேண்டும். அங்குள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பவேண்டும். அந்தத் தீர்மானத்தை சர்க்கார் நன்றாக பரிசீலனை செய்து முனிசிபாலிடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். முருகையன் : மேஜர் பஞ்சாயத்துக்களை நகர சபையாக மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறபோது பக்கத்தில் ஒன்று இரண்டு கிராமத்தை சேர்த்துக்கொண்டால் அதை நகர சபையாக மாற்றமுடியாதா ? சர்க்கார் ஏன் அப்படிச் செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்குப் பஞ்சாயத்து சம்மதம் அளிக்கவேண்டுமே. விதிப்படி அவர்களும் சம்மதம் அளிக்க வேண்டும்.

புதிய பஸ் வழிகள்

* 377 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதியிலிருந்து இதுவரை சென்னையிலிருந்து வெளியூர்களுக்குப் புதிதாக பஸ்கள் அரசாங்கத்தால் விடப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஊர்களுக்கு விடப்பட்டன ?

(உ.) மேலும் எந்தெந்த பாதைகள் மூலமாக விட திட்டமிடப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (c) The answer[a] is placed on the Table of the House.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, விடுமுறை நாட்களிலே சென்னைக்கும்-வேலூருக்கும், சென்னைக்கும்-திண்டிவனத்திற்கும் பஸ்கள் ஓட்டப்பட்டனவே, இப்போது இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தகவல் என்னிடம் இல்லை. நிறுத்தப்பட்டதாக ஞாபகம். தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஆ. தங்கவேலு : பஸ் முதலாளிகள் தலையீட்டினால் மேற்படி பஸ்கள் நிறுத்தப்பட்டன என்று கூறப்படுகிறதே அது உண்மையா ? இப்பொழுது கலியாண சீசன் கூட்டம் அதிகமாக இருப்பதினால் மீண்டும் இப்போது பஸ்கள் விடப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக, எந்தக்காரியத்தைச் செய்தாலும் அதற்குக் குற்றம் சாட்டுவது வழக்கமாகப் போய்விட்டது. இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கத் தயாராய் இல்லை.

திரு. எஸ். முருகையன் : முதலிலே இந்த பஸ்கள் பொதுமக்கள் கோரிக்கையின்பேரில் விடப்பட்டனவா ? அல்லது, சர்க்காரே பரீட்சார்த்தமாக பஸ்களை விட்டுப்பார்க்கலாம் என்று இந்த பஸ்களை விட்டார்களா ? இதை நிறுத்தியதற்குச் சரியான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது வேலூருக்கு பஸ் விடுவது சம்பந்தமானது. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

[a] Printed as Appendix I on [illegible]

திரு. மீ. கலியாணசுந்தரம் : புதிதாக கொடுக்கயிருப்பதாகச் சொல்லப்படும் ரூட்டுகளிலே, இரண்டு ரூட்டுகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னைக்கும்-பங்களூருக்கும், பங்களூருக்கும்-திருச்சிக்கும், பங்களூருக்கும்-மதுரைக்கும் வேண்டிய புதிய பாதைகள் ஆரம்பிப்பதற்கு எடுத்த முயற்சி என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது இண்டர் ஸ்டேட் ரூட்டுகள். மற்ற ராஜ்யத்துடன் பஸ்-பாரிடி இன் மைலேஜ் இருக்கிறதா என்று பார்த்து அதன்பிரகாரம் எதை எடுத்துக் கொள்ள முடியுமோ அது எடுத்துக்கொள்ளப்படும்.

Manufacture of brass vessels

* 378 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industsies be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the cottage industry of manufacture of brass vessels in the State, is threatened with extinction due to stoppage of the entire quota of metal sheets got by the manufacturers; and

(b) if so, the action proposed thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Pursuant to the directions of the Government of India, supply by the Indian Copper Corporatoin of commercial quality standard brass and copper sheets to the vessel industry had been totally discontinued from 1st April 1965. Thereupon, this Government addressed the Government of India pointing out the hardship caused to the Brass Utensil-making Industry by the decision of the Government of India and suggested that the supply of raw materials might gradually be reduced spread over a period of 3 to 5 years and in the alternative to place at the disposal of the State Directorate all the available brass scrap produced in the State for distribution to Rolling Mills, who in turn would feed the vessel manufacturing units. The Government of India, however, took the view that the utensil-making industry was not an essential industry and that indigenous aluminium sheets might be used in place of brass sheets.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம் தமிழ்நாட்டு பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் விரோதமாக இருக்கிறதே. தாமிரம், பித்தளைப் பாத்திரங்கள் உபயோகப்படுத்துவது இங்கு வழக்கமாக இருக்கிறது. எவர் சில்வர் ஷீட்கள் கேட்டாலும் கொடுப்பதில்லை. பித்தளை கிடையாது, காப்பர் கிடையாது, அலுமினியம் மட்டும்தான் உபயோகப்படுத்தவேண்டும் என்பது மத்திய சர்க்காரின் எண்ணமா ? இதைப் பற்றி நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[22nd March 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தெரிவித்திருக்கிறது என்று மூலக்கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொல்லிவிட்டேன். தொழில்கள் பாதிக்கப்படாத அளவிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் ஒரு வேளை நாமெல்லாம் நவீன மாக மாறி, கிளாஸ், பீங்கான், பிளாஸ்டிக் பாண்டங்களை உபயோகிக்கிறோம் என்று நினைத்திருக்கலாம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, it is not merely a question of encouraging the Utensil Industry. The people, who have been using those utensils for a very long time, have got certain liking and even respect for these vessels. They may be said to have some sort of affection also for these utensils. Will the Government therefore take this aspect also into consideration while considering this question?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, when a Nation advances, when the economic prosperity of the country progresses, we must put to better use all the available valuable scarce materials. To-day, brass and copper are all scarce materials, which are used for highly valuable industries like the Electrical Industry for coil winding and several other such more important industries. Personally, I am of the opinion that we should use these materials for better and more advanced technological industries rather than use them for mere pots and pans.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, பித்தளைப் பாத்திரத் தொழிலை நிறுத்திவிட்டால் அதில் அதிகமாக ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் வேலை இழந்துவிடுவார்கள் என்பது ஒருபுறம் இருக்க ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்கிற காலத்தில் ஒரு தவலை, சட்டி, தாம்பாளம் ஆகிய பித்தளைப் பாத்திரங்களை வைத்து கலியாணம் செய்தால்தான் மணச் சடங்கு நிறைவேறியதாகக் கருதப்படுகிறது. ஆகையால், இந்தப் பித்தளைப் பாத்திரத்தொழிலில் ஈடுபட்டவர்கள் வேலையிழந்து விடாமல் இருப்பதற்கு இத்தொழிலை ஊக்குவிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பழைய வழக்கத்தை மாற்றிக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். பித்தளைப் பாத்திரம் கொடுத்துத்தான் கலியாணம் செய்யவேண்டுமென்று சொன்னால் அது நல்ல திருமணம் என்று நான் நினைக்கவில்லை. பாத்திரங்கள் செய்வதற்காக விலையுயர்ந்த பாண்டங்கள் உபயோகப்படுத்துவது அவ்வளவு பொருத்தமாகாது. செம்பு, பித்தளை எல்லாவற்றையும் இயந்திர சாதனங்கள் செய்யக்கூடியத் தொழில்களுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறது. அதேசமயத்தில் அலுமினியம் ஷீட்ஸ் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். உடனடியாக இந்தத் தொழில்கள் பாதிக்கப்படாத அளவிற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

22nd March 1966]

கனம் சபாநாயகர் : பித்தளைப் பாத்திரங்களைக் கொண்டு பெண்கள் சமாதானம் அடைவதில்லை. அதைவிட விலையுயர்ந்த சாமான்களையே வாங்கச் சொல்கிறார்கள். அவர்கள் பித்தளைப் பாத்திரங்களுடன் விடுவதில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : பித்தளைப் பற்றாக்குறை இருப்பதால் நம்முடைய நாட்டில் பித்தளை மூலப்பொருள் எடுப்பதற்கு வேண்டிய ஆராய்ச்சி செய்யப்பட்டதா? பாத்திரம் செய்வதற்கு இல்லாவிட்டாலும் மற்ற தொழிற்சாலை மின்சாரம் முதலியவற்றிற்கு அவசியம் என்று சொல்லப்படுவதால் மூலப்பொருள் கொடுப்பதற்கு என்ன முயற்சி எடுக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : Copper is a metal which is in short supply throughout the world. கனம் உறுப்பினருக்குத் தெரியுமோ என்னவோ இந்த உலோகங்கள் நம்முடைய நாட்டில் மிகக் குறைவாக கிடைக்கின்றன. வெளிநாடுகளில் இருந்து நாம் வாங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்னிய செலாவணி தேவைப்படுகிற காரணத்தாலும் இந்த உலோகங்கள் பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலும் அவற்றை நல்ல உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய தொழில் தேவைக்கு வேண்டிய அளவிற்கு பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு என்று சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவிற்கு நாம் விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : திருமணத்திற்கு பித்தளை பாத்திரம் கொடுப்பது என்பது திருமணச் சடங்குகளில் ஒன்று. சடங்கு இல்லாமல் திருமணம் நடக்காது. இதை உத்தேசித்தாவது பித்தளை பாத்திரத்தை கட்டுப்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கட்டுப்படுத்தக் கூடிய அளவில் சட்டம் ஒன்றும் போடவில்லை. திருமணச் சடங்குக்கு பெயரளவுக்கு ஒரு டம்ளர் வைத்துவிட்டால் போதுமானது.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : பித்தளை பாத்திரத்தில் தண்ணீர் இருந்தால், கெட்ட கிருமிகள் எல்லாம் இறந்து விடும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே சுகாதாரத்தை முன்னிட்டாவது, பித்தளை பாத்திரத் தொழிலை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கிடைக்காத காரணத்தால் தான் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : சிறு தொழில் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று இந்தப் பித்தளை பாத்திரத் தொழில் நடந்து வருகிறது. கூட்டுறவு முறையில் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலமாகவும் இந்தத் தொழிலை நடத்தி வருகின்றார்கள்.

[22nd March 1966

இப்போது இந்தத் தொழிலுக்கான மூலப்பொருட்கள் கிடைக்க
வில்லை என்ற காரணத்திற்காக வேலைநிறுத்தம் ஏற்பட்டால் அதை
தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு நான் முன்பே பதில்
சொல்லியிருக்கிறேன். பித்தளைக்கு பதிலாக அலுமினியம் கொடுப்
பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு பழைய
பித்தளை பாத்திரங்களை ரீ-ரோலிங் செய்து அதை உபயோகித்துக்
கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்
யத்திலே இவ்விதம் கிடைப்பதை வைத்துக்கொண்டு உபயோகித்
துக்கொள்ளலாம். கும்பகோணத்தில் ஒரு யூனிட்டில் அவர்களே
ரீ-ரோலிங் செய்கிறார்கள். வெளியிடங்களிலிருந்து ஸ்க்ராப்
கிடைக்க முடியாது. ராஜ்யத்திற்குள்ளேயே அங்கங்கே கிடைப்
பதை உபயோகித்துக்கொள்ளலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லும் போது, நம்முடைய மாநிலத்திலுள்ள மக்கள் நவீன
முறையில், நவீனமான பாத்திரங்களை எல்லாம் உபயோகித்துக்
கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்துத்தான் மத்திய சர்க்கார்
இவ்விதம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய
நாட்டு மக்களின் பழக்கவழக்கத்தையே தெரியாத மத்திய சர்க்கார்
எடுத்துக்கொண்ட முடிவு நியாயமானதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் சொல்லாததை கேள்வி
யில் கேட்பதில் பிரயோசனமில்லை. நான் சொன்னது, "இந்த
ராஜ்யத்திலுள்ள மக்கள் நவீன முறையில் 'மோர் மாடர்ன்'
ஆகவும், 'மோர் ஸிவிலைஸ்ட்' ஆகவும், பீங்கான், க்ளாஸ் போன்ற
வைகளைத் தான் உபயோகிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்
கிறார்களோ என்னவோ என்று சொன்னேன்".

கழிவு நீரை உரமாகப் பயன்படுத்துதல்

* 379 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் உள்துறை
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்
பாரா—

(அ) கழிவு நீரை உரமாக மாற்றவும், உரத்திற்குப் பயன்
படுத்தவும் புதிதாக திட்டம் ஏதேனும் இம்மாநில அரசாங்கத்தின்
பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இத்தகைய திட்டம்
எதுவும் தற்போது மாநில அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.
(2) ஆயினும், வேளாண்மை வளர்ச்சிச் சிறப்புத் திட்டத்தின்
கீழ் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாக, பத்து ஸ்தல ஸ்தா
பனங்களில் கழிவு நீரைப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றிற்கு
மாநில அரசாங்கம் கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஒப்புதல்
அளித்துள்ளது. 1965-66-ம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்
படுத்துவதற்கு 32·30 லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்
பட்டுள்ளது. கழிவு நீர் வடிகால் அமைப்பது, அல்லது தற்போ

22nd March 1966]

துள்ள வடிகால் முறையை மாற்றியமைப்பது, தூய்மைபடுத்து
வதற்காக, கழிவு நீரைச் சேகரிப்பது, சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தா
பனம் வைத்து வர வேண்டிய கழிவு நீர்ப் பண்ணையில் பாசனத்துக்
காக அதைப் பயன்படுத்துவது ஆகியவற்றிற்கு இத்திட்டம் வகை
செய்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : சென்னை மாநகராட்சி மன்றம் ஒரு கோடி ரூபாய் அளவில் ஸூவேஜ் திட்டம் ஒன்று போட்டு, அதாவது சென்னை நகரத்திலுள்ள கொசுத் தொல்லையை ஒழிப்பதற்காக திட்டம் போட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அது அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கிறதா? அதை சர்க்கார் பரிசீலனை செய்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

Plantation Crops

* 380 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government has envisaged any scheme for introduction of M.Sc. Course in research on tea and similar plantation crops at the agricultural colleges of the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) தமிழ்நாடு வேளாண்மை நெறியாளர், கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் தேயிலைத் தோட்ட நிர்வாகம் பற்றிய பட்டமேற்படிப்பு ஒன்றைத் தொடங்குவதற்குரிய செயற்குறிப்புகளை 1965 ஏப்ரலில் அனுப்பினார். இதற்கு வேண்டிய நிதி முழுவதையும் தேயிலை வாரியம் (Tea Board) அளிக்கும். இதற்கு ஐந்தாண்டுக்கால அளவுக்கு மொத்தம் ரூ. 5,11,000 செலவாகும் என நெறியாளர் மதிப்பிட்டுள்ளார். செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வது பற்றி அதன் இசைவைத் தெரிவிக்குமாறு தேயிலை போர்டுக்கு எழுதப்பட்டுள்ளது. இன்னும் பதில் வரவில்லை. மாநிலத்திலுள்ள வேறெந்த வேளாண்மைக் கல்லூரியிலும் இது போன்ற மலைத் தோட்டப் பயிர் குறித்து படிப்பு எதையும் தொடங்கும், செயற் குறிப்பு எதுவுமில்லை.

நிலங்களைப் பண்படுத்தல்

* 381 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நிலத்தைப் பண்படுத்தி, உற்பத்தியைப் பெருக்க திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தனி நிறுவனம் ஒன்றிற்கு கொடுத்த மானியத் தொகையை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்தியது காரணமாக மானியத் தொகை ரூ. 1,40,000, வட்டி ரூ. 79,000-த்துக்கு ஈடாக அரசு கைப்பற்றிக் கொண்ட 713 ஏக்கர் நிலத்தில் 518 ஏக்கர் நிலம் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே தரிசாகக் கிடப்பது உண்மையா?

கனம். திரு. பூ. கக்கன் : விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு தனிப்பட்ட கம்பெனிக்கு 1961 ஏக்கர் ரிக்ளெய்ம் செய்வதற்காக பண உதவி அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்திற்கு யார் உத்திரவாதம் கொடுத்தார்கள், அதில் சரியான முறைப்படி ரிக்ளெய்ம் செய்யாமல் இருந்தால் அவர்களுக்கு கொடுத்த தொகை திரும்ப பெறுவதற்கு எவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : ஸார், உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக இந்த அரசாங்கம் தனிப்பட்ட நபர்களுக்கு சப்ஸிடி கொடுத்து உதவ முன் வந்தது. இதில் கிள்ளிக்குளம் சம்பந்தப்பட்ட நிலங்களை சொந்தமாக அடைய நிலச்சுவான்தார் ஒருவருக்கு இந்த உதவியைச் செய்ய அரசாங்கம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் நியமித்திருந்த நிபந்தனைகளின் படி அவர்கள் நடந்து கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அரசாங்கம் அவர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபாயை மதிப்பிட்டு, அதற்கு கூடுதலாக மதிப்பு பெறும்படியான அளவில் நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. பப்ளிக் அக்கௌன்ட்ஸ் கமிட்டியிலும் இதைப்பற்றி பரிசீலனை செய்து ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட இந்த 1961 ஏக்கர் நிலத்தில் சர்க்கார் எடுத்திருக்கின்ற 712.84 ஏக்கர் நிலம் ஒன்றுக்கும் பயனில்லாத நிலம் என்று கூறப்படுகிறது. மீதமுள்ள 1249 ஏக்கர் நிலமும் நல்ல நிலம் என்று தெரிகிறது. நல்ல நிலத்தைவிட்டு விட்டு இப்படிப்பட்ட உபயோகமற்ற நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டதற்கு என்ன காரணம்?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் ஒத்துக்கொண்ட நிபந்தனைப்படி சரியாக நடைபெறாததால் தான் நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிறது. இது நல்ல நிலமா கெட்ட நிலமா என்கிற பிரச்சினையை பொறுத்த வரையில் நானே நேராகப் போய் பார்த்திருக்கிறேன். இப்போது சர்க்கார் கொடுப்பதாக இருந்தால் அவர்களே எடுத்துக்கொள்வார்கள். அது அவர்களுக்குத்தான் லாபம். ஒரு சில இடங்களைத் தவிர பெரும்பாலும் அரசாங்கம் எடுத்திருக்கின்ற நிலம் நல்ல நிலமாகத்தான் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: இப்படி 2½ லட்சம் ரூபாய் உற்பத்திப் பெருக்கத்தின் பெயரால் மோசடி நடந்திருக்கிறது. இந்த அக்ரிகல்சுரம் ஃபார்மின் உரிமையாளர்கள் யார் யார் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க கேட்டுக்கொள்கிறேன். அதோடு அமைச்சர் அவர்கள் இந்த நிலத்தை நேராகப்போய் பார்த்திருப்ப

* 490–492 பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தாகச் சொன்னார்கள். அதோடு அரசாங்கம் எடுத்த நிலத்தை இப்போது அவர்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள், அவ்விதம் கொடுத்துவிடுவதாக சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் ஏதேனும் இருக்கிறதா? இப்படியெல்லாம் செய்வதைவிட இந்த 2½ லட்சம் ரூபாயையும் ரைட் ஆஃப் செய்துவிடலாம். பப்ளிக் அக்கௌன்ட்ஸ் கமிட்டி அங்கே போய் பார்த்திருக்கிறது, அதைப்பற்றி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த நிலச் சொந்தக்காரரின் பெயர் எனக்கு இப்போது ஞாபகமில்லை, ஒரு ஐயர் தான் இதற்கு சொந்தக்காரர் என்று எண்ணுகிறேன். நான் சொன்னது என்னவென்றால் இந்த நிலத்தை இப்போது திரும்பவும் எடுத்துக் கொள்ள தயாராக இருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தால் அவர்களுக்குத் தான் லாபம். River Pumping திட்டத்தின் கீழ் மேல் மட்ட தொட்டி கட்டி அங்கிருந்து நிலங்களுக்கு தண்ணீர் வரும்படி செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லுகிறேன். அரசாங்கம், கமிட்டி கொடுத்த ரிப்போர்ட்டை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தியா சிமின்ட் கம்பெனியைச் சேர்ந்த திரு. சங்கரலிங்க ஐயர் தான் இந்த ஃபார்மின் சொந்தக்காரர், அவருடைய குடும்பத்திலுள்ளவர்கள்தான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : நான் மறுக்கவில்லை, இப்போதுதான் அவருடைய பெயர் ஞாபகத்திற்கு வருகிறது, சங்கரலிங்க அய்யர் என்று. அவர்கள் கேட்டுக்கொண்டதின்படி அரசாங்கம் உதவி செய்ய முன்வந்தது, அரசாங்கம் போட்ட கண்டிஷன்படி நடந்து கொள்ளாததால் அவர்களுடைய ஒரு பகுதி நிலத்தை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழே இவ்வளவு பெரிய லிமிட்டெட் கம்பெனிக்குக் கொண்டு போய் சகாயத் தொகை கொடுக்கவேண்டிய அவசியம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : உணவு உற்பத்தியைப் பெருக்க தனிப்பட்டவர்களுக்கு சப்சிடி கொடுத்து உற்பத்தி செய்யவேண்டும் என்று ஏற்கெனவே அரசாங்கம் பரிசீலனை செய்தது. அந்த முறையில் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்போது இவர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு நினைவு இருக்கிற வரையில்—நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது—அந்த டிரான்சாக்ஷன் இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த டிரான்சாக்ஷன் முன்பு தான் ஏறபட்டது. ஆனல் இவ்வளவு வருஷங்களாக பெரிய முதலாளி யாக இருக்கிற நிறுவனம் அந்தக் தொகையை வேறு இடத்திற்கு மாற்றி, நிலம் தரிசாகக் கிடந்திருக்கிறது. அதை அதிகாரிகள் கவனிக்கவில்லே. பொறுப்பைத் தட்டிக் கழித்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர்கள் என்ன சமா தானம் சொல்லுகிருர்கள் ? அதிகாரிகள் உடந்தையாக இருந்து இருக்கிருர்களே அவர்கள் என்ன சமாதானம் சொல்லுகிருர்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விஷயத்தைப் பற்றி பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்திருக்கிறது; ரிப் போர்ட் கொடுத்திருக்கிறது. அவர்கள் என்னென்ன சிபாரிசு செய்திருக்கிருர்களோ அவையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, கனம் உள் துறை அமைச்சர் அவர்கள், இந்த நிலத்தை வாங்கிக்கொண்டது ஒன்றும் பெரிய காரியம் இல்லே, அவர்களே எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். அதை அவர் களிடத்திலேயே கொடுத்துவிட்டு, அவர்களிடமிருந்து பணத்தை வசூலிப்பது நல்லது. அந்த மாதிரி அவர்களிடமிருந்து பணத்தை வசூலிப்பதாக அமைச்சர் அவர்கள் உறுதி மொழியை அளிப்பார் களா ?

கனம் சபாநாயகர் : இப்போது அவர்களிடம் கொடுத்தால் அவர்களுக்குத்தான் லாபம் என்று சொல்லுகிருர்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இல்லே என்பது என்னுடைய கன் டென்ஷன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், முதல் அமைச்சர் அவர்கள் இது இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றதற்கு முன்பே நடந்த நிகழ்ச்சி என்று சொன்ஞர்கள். எந்த வருஷம் நடந்தது? கடனுகக் கொடுத்த பணத்திற்கும் வட்டிக்குமாக எவ்வளவு தொகை வரவேண்டும்? அந்தத் தொகைக்கு இந்த நிலம் ஈடாக இருக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு நினைவு இருக்கிற வரையில், இது 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. ஜனநாயக ஆட்சி வருவதற்குமுன்பே தொடங்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். அது சரியாக நினைவில் இல்லே. குறைந்தது 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, சாகுபடிக்கு லாயக்கான இடங்களை அவர்களிடத்தில் விட்டு விட்டு, லாயக்கு இல்லாத இடங்களைச் சர்க்கார் ஏற்றுக்கொண்ட காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு நினைவு இருக்கிற வரையில், பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி இதைப் பரிசீலித்து இந்த மாதிரி ஒழுங்கீனம், தவறு, மோசடி இருந்ததாகக் கருத்து தெரிவித்ததாக எனக்கு புலப்படவில்லே.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, ரூ. 1,40,000 கொடுத்துவிட்டு, 15 ஆண்டுகள் கழித்து ரூ. 1,52,000 மதிப்புள்ள நிலத்தை எடுத்துக்கொண்டிருக்கிருேம். கொடுத்த தொகைக் கும் வட்டிக்கும் ஏற்ற அளவுக்கு இன்னும் கொஞ்சம் நிலத்தை எடுத்துக்கொண்டிருக்கக்கூடாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே மத்திய அரசாங்கத் தின் கன்ட்ரிப்யூஷன் கூட இருக்கிறது. இந்த அரசாங்கம் மட்டும் கொடுக்கவில்லே.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 1,961 ஏக்கர் நிலத்தை யும் சர்க்காரே கொடுத்ததா ? அல்லது ரெக்ளமேஷன் செய்ய பண உதவி செய்து கொடுத்ததா ? பிறகு 712 ஏக்கர் நிலம் அவர்களிட மிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலம் நல்ல நிலம் என்று அமைச்சர் அவர்கள் பார்த்ததாகச் சொன்ஞர்கள். 712 ஏக்கர் நிலத்தில் 194 ஏக்கர் நிலம் தான் விவசாயத்திற்கு வந்திருக்கிறது. சொச்ச நிலம் இது வரையில் விவசாயத்திற்கு வரவில்லே என்ப தற்கு என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : 'Out of the extent of 712,84 acres of lands surrendered by the Agricultural Farms Limited, Tirunelveli, an extent of 258.96 acres was allotted to the Agricultural Department for opening a State Seed Farm.

நானே போய்ப் பார்த்திருக்கிறேன். நன்ருகப் பயன்படக் கூடிய தாகத்தான் இருக்கிறது. பக்கத்தில் இருக்கிற கிராமத்தார்கூட எங்களுக்கு விட்டு விடுங்கள் என்று சொன்ஞர்கள். அங்கே விதைப் பண்ணைக்கு ஏற்பாடு செய்திருக்கிருேம். பக்கத்தில் ஒரு வாய்க்கால் இருக்கிறது. அதிலிருந்து ஓவர்ஹெட் டாங்க் கட்டி தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பக்கத்தில் ஒரு குளமும் இருக்கிறது. அதையும் ரிப்பேர் செய்தால் நல்ல முறையில் இந்த நிலத்தைப் பயன்படுத்தலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, ஓவர்ஹெட் டாங்க்கை நானும் பார்த்தேன். 500 ஏக்கரில் விதைப் பண்ணை வைக்கலாம் என்று சொல்லுகிருர்கள். விதைப் பண்ணை வைத் தால் அந்த இடத்தில் பயிர்வளராது. அங்கே மண்ணே 500 ஏக்கரும் மலைப் பிரதேசம். வாய்க்கால் தண் ணீர் கிடையாது. இதைப் பற்றி புனர் ஊரை எடுத்து சோதனையில் ஈடுபடாமல் இதைப் பற்றி பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது விதைப் பண்ணைக்கு வேண்டுமா, வேண்டாமா, நல்லதா, கெட்டதா என்று ஆலோசித்து, வேளாண் மைத் துறை அதிகாரிகள் இந்த நிலம் நல்லதுதான், விட்டு விட வேண்டாம் என்று சொன்னதன் பேரில்தான் வைத்துக்கொண் டிருக்கிருேம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

[22nd March 1966

திருமங்கலம் தலைக்கால்வாய்

* 382 கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா திருமங்கலம், முக்கிய வைகைக் கால்வாயில் எந்த மாதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது ?

(இ) எவ்வளவு தண்ணீர் விடப்படுகிறது ?

(உ) எந்த அடிப்படையில் (வைகையிலிருந்தா அல்லது பெரியாற்றிலிருந்தா) விடப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Supplies are allowed normally in the Tirumangalam Main Canal on 1st June every year, provided there is a combined gross storage of 10.000 M. cft. in the Periyar Reservoir, Periyar Water in the Vaigai Reservoir and in the tanks in Periyar area on that date

(b) The supply will be allowed in the channel depending on the storage in the tanks, crop condition and rainfall in the irrigated area. Normally a total supply of about 1,650 M.cft. is allowed for the whole of the irrigation season.

(c) The supply is allowed from Periyar waters stores in Vaigai Reservoir and also from Periyar Reservoir.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சார், கடந்த இரண்டு ஆண்டு காலமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி ஜூன் மாதம்தான் தண்ணீர் விடுவது என்று இருந்தும் விடாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : அதாவது, இந்த ஸ்கீம் ஏற்பட்ட காலத்திலிருந்து முறையாக அந்தத் தேதியில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வருஷம், நான் முதல் கேள்விக்கு பதில் சொன்னது போல, விதிகளின்படி, போதிய தண்ணீர் வைகையில், பெரியாற்றில் இல்லாத காரணத்தினால் ஜூன் மாதம் 1-ம் தேதி திறந்து விட முடியவில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சார், போதுமான தண்ணீர் இல்லாததால்தான் தண்ணீர் விட முடியவில்லை என்று சொன்னார்கள். மழை இல்லாத போது அதே ஆயக்கட்டு பகுதிகளுக்கு விடப்பட்டிருக்கிறதே, காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : விதிகளின்படி-தான் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : சார், வைகை ஆயக்கட்டு சம்பந்தப்பட்ட தண்ணீரை பெரியாறு ஆயக்கட்டுக்கு உபயோகப்படுத்துவது உண்டா ?

22nd March 1966]

கனம் திரு. வெ. ராமையா : சாதாரணமாக அப்படி ஒன்றும் கிடையாது. வைகை ஆயக்கட்டு தண்ணீரை பயிர்களைக் காப்பாற்றுவதற்காகக் கொடுத்தால்கூட பிறகு அதற்கு ஈடு செய்து கொள்ள முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, வைகை அணைக்கட்டுப் பகுதியில் சரியாக மழை இல்லை. காட்ச்மெண்ட் ஏரியாவான கண்டமநாயக்கனூரில் உள்ள 4,000 ஏக்கர் நிலங்களை ஜெகவீர பாண்டியன் என்பவருக்கு ஏலத்தில் விட்டு மரங்கள் அழிக்கப்பட்டதால்தான் மழை இல்லை என்பது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக்கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. பருவ மழை ராஜ்யம் பூராவிலும், நாடு பூராவிலும் தவறி இருப்பதுதான் காரணம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பெரியாறு, வைகை பகுதியைச் சேர்ந்த மற்ற ஆயக்கட்டுகளில் பல லட்சம் ஏக்கர்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கு மழை இல்லாத போதே குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் எங்கிருந்து விடப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : அந்தப் பகுதிக்கு விட்டோம் என்று சொன்னால், விதிகளின்படி அவர்களுக்கு உரிமை இருக்கிறது, விட்டோம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஏற்கெனவே திருமங்கலம் வைகை கெனால், மெயின் கெனால் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் திட்டமிடப்பட்டிருக்கிறபடி, கரண்ட் உற்பத்தி செய்கிற தண்ணீர் இதிலே விடப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். சென்ற ஆண்டில் கரண்ட் உற்பத்தி செய்யப்பட வில்லையா ?

கனம் திரு. வெ. ராமையா : கரண்ட் உற்பத்தி செய்கிற தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்று இல்லை. பெரியாறு தேக்கத்திலும் வைகை தேக்கத்திலும் குறிப்பிட்ட அளவுக்குமேல் தண்ணீர் இருந்தால் திருமங்கலம் கெனாலுக்குத் திறந்து விடவேண்டும் என்பது தான் உள்ள நிலை. குறைவாக இருக்கும்போது முன்பே இருக்கிற ஆயக்கட்டுக்குத்தான் உரிமை உண்டு.

கழிவுநீர்ப் பாசனம்

* 383 கேள்வி.—திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஈரோடு தாலுகாவில் உள்ள கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியில் ஓடைகப் பள்ளங்களில் ஓடும் கசிவு நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதைச் சர்க்காரால் ஆட்சேபிக்கப்பட்டுத் தண்டத் தீர்வை விதிக்கப்படுவது உண்மையா ? ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : Irrigation with drainage water by direct flow is generally permitted and not penalised. In such cases, temporary permits are issued. Irrigation of fields by drainage water without water permits and cases where drainage water is let into wells and then lifted for irrigation are alone penalised. Cases in which the conditions of the water permit are contravened will also be penalised.

9-00 a.m. **திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** சின்னச் சின்ன கழிவு நீரோட்டங்கள் அவர்களுடைய பட்டா நிலங்களில் போவதற்குக் கூட அனுமதி வழங்க மறுக்கப்பட்டு, தண்டத் தீர்வை விதிக்கப்படு கின்றது. ஆகவே, இதை நேரில் பார்த்து வழி காணுவதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு முறை ஈரோடு தாலுகா கீழ் பவானி அணைக்கட்டுப் பகுதிக்கு சுற்றுப்பிரயாணம் வருவதற்கு வழி ஏற்படுத்துவாரா என அறிய விரும்புகின்றேன்.

MR. SPEAKER : This is not a question. It is only a request and a suggestion.

கனம் திரு. வெ. ராமையா : நான் சுற்றுப் பிரயாணம் வரும் வரைக்கும் அங்கத்தினர் காத்திராமல் உடனடியாக எந்த இடத்தில் அவருடைய மனதிலே நியாயமாக வாட்டர் பெர்மிட் கொடுக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அதையெல்லாம் எழுதி அனுப்பிவைக்கும் பட்சத்தில் அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்யச் சொல்லுகிறேன்.

கங்கை-காவிரி இணைப்பு

* 384 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கங்கையையும் காவிரியையும் இணைக்கும் திட்டத்தை அரசாங்கம் மத்திய அரசிடம் பரிசீலிக்கும்படி கேட்டுள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

திரு. செ. மாதவன் : வட நாட்டிலே இருக்கக்கூடிய நதிகள் அதிகமாக வெள்ளப் பெருக்கு எடுத்து சேதம் உண்டாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நதிகளையும், தென்னாட்டில் இருக்கக்கூடிய நதிகளையும் இணைத்தால், இந்த வெள்ளத்தை தடுப்பதுமாகும், இங்கேயும் தண்ணீர் வருவதுமாகும். ஆகவே, இது பற்றி மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திரு. வெ. ராமையா : வட நாடு, தென்னாட்டிலுள்ள நதிகளை இணைப்பது மட்டுமல்ல, தேசத்தில் இருக்கக்கூடிய எல்லா நதிகளில் உள்ள உபரித் தண்ணீரை தேசத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு பயன்படுத்தத்தக்க முறையில் பயன்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை உருவாக்குகிறார்கள். ஆனால், நிதிநிலைக்குத் தகுந்த முறையில் அவ்வப்போழுது இருக்கக்கூடிய தேவைக்குத் தகுந்த முறையில், எதை எதைச் செய்ய முடியுமோ அதற்கு

பிரையாரிடி கொடுக்கப்பட்டு வருகிறது. நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நமது ராஜ்யத்து எல்லையிலே ஓடக்கூடிய மிக முக்கியமான நதிகளில் இருக்கக்கூடிய தண்ணீரை பயன்படுத்தியாகிவிட்டது. அதே நேரத்தில் மற்ற ராஜ்யங்களில் அந்த நிலை இல்லை. அவர்கள் இன்னும் அவர்கள் ராஜ்யத்தின் எல்லைக்குள்ளே ஓடக்கூடிய ஆறுகளில் அணைக்கட்டுகளைக் கட்டி தண்ணீரை பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்கு அடுத்த கட்டம்தான் பொதுவாக தேசத்தில் இருக்கக்கூடிய தேவைக்குத் தகுந்தபடி திட்டங்களை உருவாக்குவது என்பது.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் இம்மாதிரி திட்டங்களை ஆராய்ந்து திட்டமிடுகிறார்கள். பொதுவாக இதுவரைக்கும் இருந்துவந்த நிலை ஒரு பள்ளத்தாக்கு தண்ணீரை அந்தப் பள்ளத்தாக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து இருந்தது. இப்பொழுது அந்தக் கருத்து மாறி ஒரு பள்ளத்தாக்கிலிருந்து மற்ற பள்ளத்தாக்குகளுக்கும் தண்ணீர் கொண்டு போகலாம் என்ற ஒரு புது நிலையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டு, தேவைக்குத் தகுந்தமாதிரி வளர்ந்து, ஒரு பள்ளத்தாக்கு மற்ற பள்ளத்தாக்கு என்று நின்றுவிடாமல் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற முறையில் தீவிரமாக ஆராயப்பட்டு, தேவைக்குத் தகுந்த மாதிரி, பண வசதிக்குத் தகுந்தமாதிரி எடுத்துக்கொள்ளப்படவேண்டிய விஷயம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் அண்டை மாகாணங்களுக்குப் போக மீதித் தண்ணீரை மற்ற மாகாணங்களுக்குக் கொண்டு போவதற்கு திட்டம் போடுவதற்கு நாள் ஆகலாம் என்று சொல்லுகிறார்கள். பொருளாதார நிபுணர் திரு. லோகநாதன் அவர்கள் அண்டை மகாணத்திலுள்ள குறிப்பாக ஆந்திர மாகாணத்திலிருந்து நமது மாகாணத்திற்கு தண்ணீர் கொண்டுவர திட்டம் போட்டால், நமது பகுதியில் 20 லட்சம் ஏகரா பாயக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது, அதில் உடனே ஈடுபடலாம், அதனால் நமது மாகாணத்தில் செழிப்பு ஏற்படும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வைத்திருந்தார்களே? அதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்தார்களா ? அதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : நமது தேவை அதிகரித்திருக்கிறது. அதற்குத் தகுந்த முயற்சி நாம் மட்டும் எடுத்தால் போதாது. மற்ற மாகாணங்களில் இருப்பவர்களுக்கு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. அவரவர்களது ராஜ்யத்திற்கு பிரயோசனப்படுகிற வகையில் முதலில் திட்டத்தை நடத்திக்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதைவிட முக்கியமான இண்டர் வாலி ஸ்கீம்சில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

[22nd March 1966

திரு. கே. ஏ. மதியழகன் : இதனுடைய முதல் கட்டமாகவாவது குறைந்தபட்சம் கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரை பெண்ணையாற்றோடு இணைத்து, செங்கற்பட்டு, தென்னாற்காடு ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய வசதியை ஸ்திரப்படுத்த முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நாம் மட்டும் முயற்சி எடுத்தால் போதாது. அந்தந்த ராஜ்யத்தில் விவசாயத்தை பெருக்குவதற்கும் விவசாயத்திற்குத் தகுந்த முறையிலும் போக்குவரத்திற்குத் தகுந்த முறையிலும் பல திட்டங்களை உருவாக்குகிறார்கள்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :

" தான்போம் வழியெல்லாம் தர்மமொடு பொன் விளைக்கும்
வான் போந்த கங்கையென வாழ்த்து "

என்று பாரதியார் கூறிய வண்ணம் கங்கை நதி என்பது பாரத நாட்டிற்கே உரிமையானது. " நடந்தாய் வாழி காவேரி " என்று சிலப்பதிகாரத்தில் சொல்லியது போல, காவேரி வெள்ளத்தோடு கங்கைப் பெரு வெள்ளத்தை இணைப்பது தேசீய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்திருக்கும். ஆகவே, அதை மனதில் கொண்டு காரியங்களைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை தூண்டுமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. வெ. ராமையா : காவேரியையும், கங்கையையும் இணைக்கவேண்டும். அதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்பதில் எந்தவிதமான கருத்து வேற்றுமையும் கிடையாது. அதோடு நிறுத்திவிடக்கூடாது. தேசத்திலுள்ள ஜீவநதிகளில் கிடைக்கக் கூடிய உபரித் தண்ணீரை நாட்டிலுள்ள சுமார் 57 கோடி மக்களுக்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உண்டுபண்ண வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கேரள ராஜ்யத்திலிருந்து மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு தண்ணீர் கொண்டுவருவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டதே ? அதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டதா ? அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : நமது ராஜ்ய பிரதம என்ஜினியரும், கேரள ராஜ்ய பிரதம என்ஜினியரும் இதைப்பற்றி பரிசீலனை செய்து எந்த இடத்தில் தண்ணீர் எடுக்க முடியும் என்பதுபற்றி ஆலோசனை சொல்லி, நமது அரசாங்கமும் அதைப் பரிசீலித்திருக்கிறது, கேரள அரசாங்கமும் அதைப் பரிசீலித்திருக்கிறது. தொடர்ந்து இரண்டு ராஜ்ய அரசாங்கங்களும் பேசி முடிக்க வேண்டும். அதற்கு ஒரு தக்க சூழ்நிலை ஏற்படவேண்டும்.

22nd March 1966]

திரு. ஜே. மாதா கவுடர் : வட நாட்டுத் தண்ணீரைத் தென்னாட்டுக்குக் கொண்டுவரும்பொழுது, வட நாடு, தென்னாடு என்று பேசிக்கொண்டிருந்தவர்கள் எங்களுக்கு வட நாட்டுத் தண்ணீர் வேண்டாம், பயன்படுத்தமாட்டோம் என்று சொல்லிவிட்டால் இது பிரயோசனம் ஆகாதே ?

கனம் திரு. வெ. ராமையா : வட நாடு, தென் நாடு என்று ஒன்றும் கிடையாது. இந்திய மக்களுக்கு இந்தியாவிலுள்ள நதிகளின் தண்ணீர் பயன்படும்.

திரு. செ. மாதவன் : இண்டர்வாலி ஸ்கீம்ஸ் உருவாக்குவதற்குப் பணம் செலவாகும் என்று சொல்லப்பட்டது. எந்தத் திட்டத்தை யாவது பரிசீலிக்கும்படி மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்காரிடமிருந்து யோசனை தெரிவிக்கப்பட்டதா ? எல்லா மாநிலங்களும் இப்படிப்பட்ட இண்டர்வாலி ஸ்கீம்ஸ் வேண்டும் என்று சொன்னார்களா ? கங்கை, காவேரி நதிகளை இணைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : கங்கை, காவிரி இண்டர்வாலி ஸ்கீம் மட்டுமல்ல, எத்தனையோ இண்டர் வாலி ஸ்கீம்ஸ் சம்பந்தமாக ஒவ்வொரு ராஜ்யத்திலுள்ள தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு, நீர்ப்பாசனத்திற்கு மட்டுமல்ல, போக்குவரத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளுவதற்கு, இதையெல்லாம் அடிப்படையாகக்கொண்டு தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள், சில சந்தர்ப்பங்களில் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. நமது ராஜ்யத்தில் இல்லை. மற்ற ராஜ்யங்களில் தண்ணீருக்கு உரிமை இருக்கிறது, உரிமை இல்லை என்பது பெரிய சர்ச்சைக்கு இடமளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. இவையெல்லாம் நமது சக்திக்குத் தகுந்த முறையில், வசதிக்குத் தகுந்த முறையில் ஆராயவேண்டிய விஷயங்கள். மத்திய அரசாங்கத்தில் நீர் மின்சாரப் பிரிவில் ஏராளமான நிபுணர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் அவர்கள் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீர் தென்னகத்திற்கு வரவேண்டும் என்று டாக்டர் லோகநாதன் அவர்கள் சிபார்சு இருக்கிறது. அந்த அடிப்படையில் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம், மிக முக்கியமானது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, இதைவிட முக்கியமான திட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இப்படிக் கூறுவதினால் இது முக்கியம் இல்லை என்று கருதுகிறார்களா ?

(பதில் இல்லை.)

திரு. பி. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபொழுது கேரளாவோடு பேசி நமது மாநிலத்திற்குத் தண்ணீர் கொண்டுவருவதற்குச் சரியான சூழ்நிலை இல்லை என்று

[22nd March 1966

சொன்னார்கள். சரியான சூழ்நிலை என்றால் எதைக் குறிப்பிடு கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : முன்பு கேரளாவில் மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி இருந்த பொழுது, சங்கர் மினிஸ்டிரி காலத்தில் நானும், தொழில் அமைச்சர் அவர்களும், அவர்களோடு கலந்து பேசிப் பல ஆலோசனைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டன. அதற்குப் பிறகு நிபுணர்கள் ஆலோசனை கூறியிருக் கிறார்கள். அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கத்தில் இதெல்லாம் பூர்வாங்க வேலையாக இருக்கக்கூடிய காரணத்தினால், அவர்கள் முடிவு எடுப்பதற்குத் தயங்குகிறார்கள். பாபுலர் மினிஸ்டிரி அமைந்த பிறகு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

Loan to Rice-mill owners

* 385 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have proposed to offer aid by way of loan to Rice-mill owners for purchase of modern machinery for drying paddy; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) A sum of Rs. 2 lakhs has been sanctioned by the Government for the grant of loans to Rice-mill owners in Thanjavur district and in the neighbourhood of Madras City so as to enable them to install mechanical driers in their Rice-mills. Another sum of Rs. 40,000 has also been sanctioned for granting loans to Co-operative Societies in Thanjavur district to install mechanical driers in the Rice-mills in Tiruvarur, Mayavaram, Thanjavur and Mannargudi. The mechanical driers when installed are expected to make a significant impact on quality control of paddy particularly, Kuruvai. Applications for loan assistance have been called for by the Director of Industries and Commerce and they are awaited by the Government.

திரு. செ. மாதவன் : இந்த அரிசி ஆலைகளைத் தேசிய மயமாக்கும் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக் கிறதா ? திட்டத்திற்கு முரணைக்க் கடன் வழங்குவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கும் முறையில் கூட்டுறவு சொசைடிகளுக்குப் போதுமான ஆதரவு கொடுத்து, மில்கள் அமைக்க ஏற்பாடு செய்கிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know whether the benefit of the loan assistance will be extended to the other districts ?

22nd March 1966]

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது முன்னோடியாக தஞ்சாவூரில் செய்தாலும், அரசாங்கத்தின் நோக்கம், அது எங் கெங்கே தேவைப்படுகிறதோ அங்கே செய்யலாம் என்பதுதான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த வகையான நவீன இயந்திரங் களை அரசாங்கமே ஆரம்பிக்கலாம் என்று இருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : கூட்டுறவு முறையில் திருவாரூரில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு, தேவைக்குத் தகுந்தாற்போல வேறு இடங்களிலும் அமைக்க யோசனை இருக்கிறது.

Regional Printing Presses

* 386 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to set up additional regional printing presses in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், சேலத்தில் மற்றொன்று மாக இரு வட்டார அச்சகங்களை நிறுவ 1964 டிசம்பரில் அரசாங் கம் அனுமதி வழங்கியது. திருச்சிராப்பள்ளியில் இந்த அச்சகம் 1965 மார்ச் முதல் இயங்கி வருகிறது. சேலத்தில் வட்டார அச்சகம் விரைவில் செயல்படத் தொடங்கும். மேலும் வட்டார அச்சகங்கள் நிறுவுவது பற்றித் தனியே ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

பகுதிநேர ஆசிரியர்கள்

* 387 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதிகால கைத் தொழில் ஆசிரியர்களைப்பற்றி தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் 27-12-1963-தேதிக் கூட்டத்தில் நிறைவேற்றி ஆர்.சி. என். ஏ3/1312/64 என்ற எண்ணிட்டு அரசுக்கு அனுப்பப்பட்ட சிபார்சின் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றம், 27—12—1963 தேதியன்று நடைபெற்ற தனது கூட்டத்தில், ஐந்து மைல் சுற்றளவிற்குள் அமைந்துள்ள இரண்டு அல்லது மூன்று பள்ளிகளுக்குச் சேர்த்து ஒரு கைத் தொழில் ஆசிரியரை (Craft Instructor) முழுநேர அடிப் படையில் நியமிக்கலாம் எனப் பரிந்துரைத்தது.

அந்தப் பள்ளிகள் ஒரே நிர்வாகத்தின்கீழ் இருக்குமானால் இத்தகைய ஏற்பாட்டிற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட் டுள்ளது. எனவே, அதன் மீது ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை.

[22nd March 1966

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பள்ளிகளில் நெசவு, தச்சு முதலிய தொழில்களுக்கு கைத் தொழில் ஆசிரியர்கள் தேவையில்லை என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டு இருக்கிறதா ? அப்படியென்றால், அந்தத் துறையில் பணி யாற்றிய ஆசிரியர்களுக்கு வேறு வேலை வாய்ப்புக்கள் கொடுக்க வழிவகை செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : இந்தபகுதி கைத்தொழில் ஆசிரியர் களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அதை நிவர்த்திக்க என்ன நடவடிக்கை சர்க்கார் எடுக்கப் போகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுடைய பகுதிநேர வேலைக்கு ஏற்ற சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

புதுத் தொடக்கப் பள்ளிகள்

* 388 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அனுமதியின்றியே ஊராட்சி மன்ற ஒன்றிப்பு கள் புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறந்துகொள்ளலாம் என்று இம்மாநில அரசு ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Panchayat Union Councils can open new Elementary Schools without consulting the Education Department subject to the fulfilment of two conditions, viz., (i) that the population of the area is not less than 300 and (ii) that there is no elementary school within a radius of 1 mile. The Panchayat Union Councils should however obtain recognition for such schools within three months. In all other cases, Panchayat Union Councils should consult the Education Department before opening new schools.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know whether any allotment will be made by the Government for the schools or whether the Panchayat Union Councils have to make good the deficit from the local cess charge raised by themselves without any aid from the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Local Cess Fund is generally collected. In addition the schools will be eligible for grants.

திரு. எஸ். முருகையன் : தலைவர் அவர்களே, முன்பு ஒரே பஞ்சாயத்தாக இருந்தபோது பள்ளி இருந்தது. ஆனால், இப்பொழுது தனித் தனியாகப் பிரிக்கப்பட்டபிறகு, தனியாகப் பள்ளி வேண்டும் என்றால், அதற்கு என்ன விளக்கம் என்று அறிய விரும்புகிறேன்.

22nd March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல ஒரு ரெவின்யூ கிராமத்தில், 300 ஜனத்தொகை இருக்கிறபோது பள்ளி இல்லாவிட்டால் ஒரு பள்ளியை ஆரம்பிக்கலாம், ஒரு மைலுக்கு உள்ளே இருந்தாலும் ஆரம்பிக்கலாம். புதிதாகப் பஞ்சாயத்து வந்திருக்கிறது என்கிற காரணத்திற்காக, ஆரம்பிக்க வேண்டும் என்றால், கல்வி அதிகாரிகளுடைய அனுமதி பெற்றுத் தான் செய்யவேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் பதில் சொல்லும்போது, ஒரு மைலுக்குள்ளே ஒரே பஞ்சாயத்திலே வேறு எலிமெண்டரி பாடசாலை இருந்தால், புதிதாக அனுமதிக்க முடியாது என்று சொன்னார்கள். ஒரே பஞ்சாயத்திலே, குறிப்பாக 100, 150 ஜனத்தொகையையே கொண்ட இடத்தில் எலிமெண்டரி ஸ்கூல் மானேஜ்மெண்டால் நடத்தப்படுகிறதே. 1,000 ஜனத்தொகை இருந்தும், பள்ளியே இல்லாமல் இருக்கும் இடத்திற்குப் பள்ளி வேண்டும் என்றால் கொடுப்பதில்லையே. அப்படியிருக்கும் முறையைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு அளித்த விடையை கனம் அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஒரு மைலுக்குள்ளே இருந்தால், கிராமத்தில் ஜனத் தொகை 300-க்குக் குறைவாக இருந்தாலும், கல்வி அதிகாரிகள் அனுமதி பெற்றுப் பள்ளிக்கூடத்தை வைக்கலாம்.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : சார், கிராமங் களிலே 300 ஜனத்தொகை இருந்து, ஒரு மைலுக்கு மேல் இருந்தால் கொடுக்கலாம் என்கிறார்கள். நகரங்களிலே, வார்டு களிலே, பக்கத்திலே பள்ளிகள் வேண்டும் என்றால், இந்தச் சட்டத்தை 'கோட்' செய்கிறார்கள். கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். நகரங்களிலே கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை விட்டுவிட்டு, ஜனத்தொகைக்குத் தக்கவாறு நகரங்களிலும் பள்ளிகள் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மறுபடியும் கூறுகின்றேன். நகரத்தில் அம்மாதிரி விதியை அனுசரிக்கக் கூடாது என்று இல்லை. ஆனால் கல்வி இலாகா அதிகாரியின் அனுமதியின் பேரில் வைக்கலாம்.

திரு. நா. துரைப்பாண்டியன் : சார், ஒரு மைல் ரேடியஸ் உள்ளாக பள்ளி வைக்கக் கூடாது என்கிறார்கள். வழியிலே ஏரி, குளம் இருந்து, அப்படிப்பட்ட இடங்களில் கல்வி அதிகாரி களுடைய அனுமதி கேட்டுத்தான் செய்யவேண்டுமோ அல்லது பஞ்சாயத்து யூனியன்களே வைக்கலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மறுபடியும் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களிலே, கல்வி அதிகாரிகள் அதையும் மனதில் கொண்டு, அனுமதி அளிப்பார்கள். அவர்கள் அனுமதியின் பேரில் பள்ளி வைக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கல்வி இலாகா அனுமதி பேரில் வைக்கலாம் என்கிறார்கள். கல்வி அதிகாரிகளை எத்தனை தடவை கேட்டாலும் கொடுக்க முடியாது என்கிறார்கள். இதற்கு அமைச்சருடைய பதில் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது கல்வி அதிகாரிகளுடைய பொறுப்பு. அனுமதிக்கவில்லையென்றால், அது அவர்கள் பொறுப்பு. ஆனால், சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கொடுக்கலாம்.

ஆசிரியர்களுக்கு மாநில விருது

* *389* **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாநில விருது பெற்ற ஆசிரியர்கள், ஆசிரியைகள் எத்தனை பேர் ?

(இ) விருதுகள் அளிப்பதில் அரசாங்கம் கடைபிடிக்கும் விதி முறைகள் யாவை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) அறுபத்தி இரண்டு ஆசிரியர்களுக்கு 1963-64-ம் ஆண்டிற்குரிய அரசாங்க விருதுகள் 1964-65-ல் வழங்கப்பட்டன ; அவர்களில் 8 பேர் ஆசிரியைகள்.

(இ) குறைந்தது 15 ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாயிருந்து, கல்விக்காகப் பாராட்டத்தக்க வகையில் மிகச்சிறந்த பணியாற்றியிருப்பவர்களுக்கு அரசாங்க விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் மாவட்டக் குழுக்களால் ஆறு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த ஆறு ஆசிரியர்களில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்காகவும் இரண்டு ஆசிரியர்களை மாநில அளவில் நிறுவப்பட்டுள்ள குழு தேர்ந்தெடுக்கிறது.

திரு. எஸ். முருகையன் : சார், இது போன்ற விருதுகள் வழங்கும்போது, அரிசனங்களுக்கு விசேஷச் சலுகை கொடுத்து வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரிசன ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது.

ஆர்.ஸி. மிஷன் பள்ளி, மேலூர்

* *390* **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூரில் உள்ள ஆர்.ஸி. மிஷன் பள்ளிக்கூடத்திற்காக அண்மையில் நில ஆர்ஜிதம் ஏதேனும் செய்து கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அது பொது நலனுக்குப் பயன்படுத்தப் படுவது எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) It has been brought to the notice of the Government that the land acquired has not been used for the purpose for which it was acquired. Action is being taken to resume the lands.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட வழக்கிலே நிலம் பள்ளிக்கூடத்திற்காக உபயோகிக்கப்பட வேண்டும் என்று இருந்தும், மத சம்பந்தமான கோயில் கட்டப்படுவதாகத் தெரிகிறது. பொது உபயோகத்திற்கு என்று வாங்கிவிட்டு, அதை 'மிஸ்-யூஸ்' செய்வதைத் தடுக்க ப்ரொவிஷன் இல்லை என்று சொல்லுகிறார்களே, அது சரியா ? அதன் பேரில் அரசாங்கம் இந்த வழக்கில் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே நிலம் கொடுக்கப்பட்ட தன்னோக்கம், பள்ளிக்கூடத்திற்கு விளையாட்டு மைதானம் வேண்டும், திறந்த வெளி இருக்க வேண்டும் என்பது. அந்த நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கே கட்டடங்கள் எழுப்புவதாகத் தெரிந்தது. நிலம் கொடுக்கப்பட்டதன் நோக்கத்திற்கு மாறாக வேறு வகையில் பயன்படுத்தப்படுகிறது என்றால், அந்த நிலத்தை அரசாங்கம் வாபஸ் பெறும் அதிகாரம் இருக்கிறது. இந்த இலாகா தக்க நடவடிக்கை எடுக்கிறது.

உயர்நிலைப் பள்ளி, களம்பூர்

* *391* **கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் களம்பூர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்திற்காக அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இது எப்போது அனுமதிக்கப்பட்டது ?

(உ) கட்டடம் கட்ட ஆரம்பமாகிவிட்டதா ?

(எ) இல்லையாயின் அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 23,700 was sanctioned for the construction of an additional block for the school.

(*b*) In August 1964.

(*c*) & (*d*) No. It took some time to decide as to who should execute the scheme.

The amoun sanctioned has now been placed at the disposal of the Divisional Engineer (Highways), Tiruvannamalai. He is taking steps to construct the building under the *tender scheme*.

MR. SPEAKER : Questions are over.

[22nd March 1966

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—REQUEST FOR HALF-HOUR DEBATE.

திரு. கே. ஏ. மதியழகன் : இன்று கேள்வி நேரத்தின்போது, கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களுடைய 423-வது எண்ணுள்ள கேள்விக்குக் கனம் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலையொட்டி அரை மணி நேர விவாதம் ஏன் வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் குறிப்பிட்ட இரண்டரை லட்ச ரூபாய் விவகாரத்திற்காக சர்க்கார் சில நிபந்தனைகள் போட்டிருந்தது. அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு நிலத்தை எடுத்துக்கொள்வதாக அந்த நிறுவனத்தார் சொல்லியிருந்தார்கள். 1950-ஆம் ஆண்டு நிபந்தனைகள் போடப்பட்டன. அந்த நிபந்தனைகள் அச்சடித்தே கொடுத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளின்படி ஒவ்வொரு வருஷமும் டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் அந்தப் பண்ணைகளைப் பார்வையிடவேண்டும். இது ஐந்தாவது கண்டிஷன்.

'(vi) that, if the firm had failed to abide by any of the conditions, the amount of subsidy granted shall be liable to summary recovery with interest and costs as arrears of land revenue.'

இது ஆறாவது கண்டிஷன். இப்படிப் பல நிபந்தனைகள் இருக்கின்றன. உணவுப் பயிர்கள் மட்டுமே விளைவிக்கப்படவேண்டும், வேறு விளைவிக்கக் கூடாது. வருஷா வருஷம் கணக்கைக் கொடுக்கவேண்டும். இப்படியெல்லாம் நிபந்தனைகள் போட்டு, அதற்குப் பிறகு 1958-வது வருஷத்தில், நம்முடைய சர்க்கார், சர்க்கார் வக்கீலை வைத்துக்கொண்டு, அந்த நிறுவனத்திடமிருந்து இரண்டரை லட்ச ரூபாய் வசூலிக்கவேண்டும் என்பதற்காக நோட்டீஸ் அனுப்பியது. நோட்டீஸ் அனுப்பியதற்குப் பிறகு நிலத்திற்குச் சொந்தக்காரர் . . .

MR. SPEAKER : I am not going to hear all the details.

SRI K. A. MATHIALAGAN : I am referring to the impropriety of the Government . . . .

கனம் சபாநாயகர் : "அதிலே நிறைய விவரம் இருக்கிறது. விசாரிக்கவேண்டிய விஷயங்கள் இருக்கின்றன" என்று வேண்டுமானால் கனம் அங்கத்தினர் சொல்லட்டும். ஆனால், அரை மணி நேர விவாதத்தை அனுமதிப்பதா இல்லையா என்று முடிவு செய்வதற்குள்ளாகவே, அது அனுமதிக்கப்பட்டதாகக் கருதி அவ் விவாதத்தின்போது பேசவேண்டியதை எல்லாம் இப்பொழுதே கனம் அங்கத்தினர் பேசிவிடுகிறார்களே, அது சரியல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : தொகையை வசூலிக்க முடியாத நிலையில், தரிசு நிலத்தைக் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். நம்முடைய நிபந்தனைகளில் கூட அப்படி இல்லை. விதைப் பண்ணைக்கு ஒதுக்கியது கூட 258.96 ஏக்கர் தான், சுமார்

22nd March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

500 ஏக்கரைத் தள்ளியிருக்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நிதி வந்தால் ஏதோ செய்யப்படும் என்று சொல்கிறார்கள். இப்படி விரயம் ஆகிறது. . . .

MR. SPEAKER : I am not going to hear all these things. அரை மணி நேர விவாதம் வேண்டும் என்று அங்கத்தினர் கேட்கிறார். அவ்வளவு தானே?

SRI K. A. MATHIALAGAN : Sir, there has been an improper transaction.

கனம் சபாநாயகர் : இப்படியே நீங்கள் அரை மணி நேரம் பேசி விடுவீர்கள் போலிருக்கிறதே.

திரு. கே. ஏ. மதியழகன் : அருள் கூர்ந்து அரை மணி நேரம் தனியாக ஒதுக்கி இதைப் பற்றி விவாதித்தால் நலமாக இருக்கும் என்பதற்காகத்தான் கூறுகின்றேன். அரசாங்கம் தன் கடமையில் தவறி விட்டது; உடந்தையாக இருந்திருக்கிறது; பணம் கேட்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுக்கும் தெரியும். தாங்களும் திருநெல்வேலிச் சீமையிலிருந்து வருகிறீர்கள். மிகப் பெரிய வசதி படைத்தவர்கள் எல்லாம் இப்படிச் சில சட்ட நுணுக்கங்களுக்குள் நுழைந்து கொண்டு, இரண்டரை லட்ச ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள்.

MR. SPEAKER : Let the hon. Member please resume his seat. This is not the way of requesting for a half-hour debate. The hon. Member should first briefly make a request to the Speaker to raise a half-hour debate on any matter of urgent importance which has been the subject matter of a question. If and when the Speaker allows it and fixes the time and date for the debate, the hon. Member can speak on the facts of the case, and not till then. Now the hon. Member is speaking on the facts of the case as if the debate has been allowed.

SRI K. A. MATHIALAGAN : I am giving the reasons . . . .

MR. SPEAKER : No reasons or details are necessary at this stage. In the opinion of the hon. Member, is the half-hour debate sufficient?

SRI K. A. MATHIALAGAN : One hour or more.

MR. SPEAKER : Does the hon. Member want one hour or two hours?

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டது போல், இந்த விஷயம் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியிலே—நான் கேள்விப்பட்டது—இது சம்பந்தப்பட்ட ரிகார்டுகள், ஃபைல்கள், விவரங்கள் இவற்றையெல்லாம் அவர்கள் வரவழைத்துப் பார்த்து, அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சில யோசனைகளும் கூறியிருக்கிறார்கள். இனி, அவற்றை அரசாங்கம் எவ்வாறு நிறைவேற்றுவது, எவ்வாறு கவனிப்பது என்ன என்பதுதான் பிரச்னை. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறார்களோ

[திரு. எம். பக்தவத்சலம்] [22nd March 1966

அதைப்பற்றி வேண்டுமானுல் ஒரு விவாதம் வேண்டும் என்று கேட்கலாமே தவிர, இதைப்பற்றி ஒரு முறை பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்து, ஒரு முடிவு தெரிவித்து விட்ட பிறகு, பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக்கு ஒரு மதிப்புக் கொடுக்காமல், அவர்கள் என்ன முடிவு சொல்லியிருக்கிறூர்களோ அவற்றைப்பற்றிச் சிந்திக்காமல், மறுபடியும் அதைக் குறித்து நாம் அரை மணி நேரமோ, ஒரு மணி நேரமோ இங்கே விவாதிக்க வேண்டும் என்று கோருவதென்ருல அது முறையல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER: Was the hon. Member, Sri Mathialagan, a Member of the Public Accounts Committee at that time?

SRI K. A. MATHIALAGAN: Yes, Sir.

MR. SPEAKER: Did the hon. Member give any Minute of Dissent in regard to this matter?

SRI K. A. MATHIALAGAN: No Minute of Dissent is allowed in the Public Accounts Committee.

MR. SPEAKER: The hon. Member can ask, whether the Report of the Public Accounts Committee can be discussed in any other form? I think there is no necessity for an half-hour debate in regard to this matter.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67—*cont.*

DEMAND NO. XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,30,15,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.'

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, "மதம் மாறிய தாழ்த்தப்பட்டோருக்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு இந்து ஹரிஜனங்களுக்குக் கொடுத்துவரும் சர்க்கார் சலுகைகள் அனைத்தும் வழங்குவதுபற்றி விவாதிக்க" என்கிற என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 5,30,15,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes be reduced by Rs. 100.'

MR. SPEAKER: Now the Demand and the cut motion are before the House for discussion.

*கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன் வைக்கப்பட்டுள்ள "ஹரிஜன நலத்துறை" மானியத்தின் கொள்கை விளக்கம் என்ற புத்தகத்தில், ஐந்தாம்

22nd March 1966] [திரு. பூ. கக்கன்]

பக்கத்தில், "பள்ளிகள்" என்ற தலைப்பில், இரண்டாவது பாராவில், ஆருவது வரியில் உள்ள "ஹரிஜன" என்ற வார்த்தைக்குப் பதிலாக, "ஆதிவாசி" என்ற வார்த்தைகள் இருக்க வேண்டும். அவ்வாறு கனம் அங்கத்தினர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 9-வது பக்கத்தில், 7-வது வரியில், "மாணவர்களுக்கு" என்ற வார்த்தை வருகிறது. அதை "மாணவியர்களுக்கு" என்று திருத்திக் கொள்ளுமாறும் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாநில சர்க்கார், குறிப்பாக ஹரிஜன நலப் பணியிலே இதர மாநில சர்க்கார்களைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறது என்று நான் சொல்லாமலேயே தங்களுக்கும் மன்றத்திற்கும் தெரியும். குறிப்பாக, மத்திய சர்க்காரிலே இதற்கென்று பணி செய்து வருகின்ற சம்பந்தப்பட்ட மந்திரி அவர்களே வாயார வாழ்த்தியிருக்கிறூர்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 550 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,225 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சென்ற வருஷம் வரை 1,221 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. நடைமுறை ஆண்டில் 532 லட்ச ரூபாய் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட செலவுத் தொகை 54.3 கோடி ரூபாயாக இருக்கும் என்று அரசாங்கம் நினைக்கிறது. குறிப்பாக, முழு மானியத் திட்டத்தின் கீழ் 21.6 கோடியும், மத்திய அரசு மானியம் பெறும் திட்டங்களின் கீழ் 14.2 கோடியும், திட்டப்படி சேராதது 18.5 கோடியும் இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகையால், படிப்படியாக, கூடுதலாகவே செலவுசெய்து இந்த அரசாங்கம் இந்த ஹரிஜன நல இலாகாவின் மூலமாக ஆதிவாசிகள், பின்தங்கிய ஹரிஜன மக்கள் இவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பள்ளிகளைப் பொறுத்தமட்டில், குறிப்பாக நமது மாநிலம் அதிகமாகச் செலவு செய்கிறது. கல்விக்கு அடுத்தபடியாக வருவது மனைக்கட்டுகளுக்காக ஆகும் செலவு. மனைக்கட்டுகள் வழங்குவதைத் துரிதப்படுத்தி, எவ்வளவு தூரம் கூடுதலாகக் கொடுக்க முடியுமோ அவ்வாறு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதே மாதிரி, கல்விக்காகவும் படிப்படியாக அதிகமாகச் செலவு செய்து, இந்த மாநிலத்தில் உள்ள குழந்தைகள் முன்னேற்றம் அடையும் பொருட்டு, கல்வித் துறையில் அவர்கள் வெற்றியைக் காண்பதற்கு அரசாங்கம் பாடுபட்டு வருகிறது என்பதை நான் இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, 1961-62-ல் இருந்து எடுத்துப் பார்த்தால் அதற்கு முன் இருந்ததை விட்டுவிடலாம்—நாம் கல்விக்காக 1961-62-ல் 3.6 கோடி செலவு செய்திருக்கிறோம். 1962-63-ல் 4.2 கோடி செலவு

செய்திருக்கிறோம். 1963-64-ல் 4.5 கோடி செலவு செய்திருக்கிறோம். 1964-65-ல் 4.9 கோடி செலவு செய்திருக்கிறோம். 1965-66-ல் 5 கோடி செலவு செய்திருக்கிறோம். 1966-67-ல் 5.3 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இப்படிப் படிப்படியாக நம்முடைய செலவுகள் உயர்ந்து வந்திருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் மானியக் கோரிக்கைகளில் கண்டுள்ளதற்கும் அதிகமாகக் கல்வித்துறையில் ஸ்காலர்ஷிப் அளிப்பதற்கோ, மனைக்கட்டுகள் வழங்குவதற்கோ செலவழிக்க வேண்டுமென்றாலும் நம் அரசாங்கம் அதற்குத் தகுந்த வழிமுறைகளைக் கண்டுபிடித்துச் செலவழிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** கனம் தலைவர் அவர்களே, நமது உள்துறை அமைச்சர் அவர்கள் ஹரிஜன நலத்துறை மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,30,15,500 கோரியிருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகு ஆதிதிராவிட ஹரிஜன மக்கள் விரிவாக முன்னேறியிருக்கிறார்கள் என்று சொல்லி வருகிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் சேரிகள் எல்லாம் வெள்ளிப் பாத்திரங்களாகக் காட்சி அளிக்கின்றன என்ற கருத்தைக் கூறி வருகிறார்கள். அதையொட்டி . . . .

கனம் திரு. பூ. கக்கன்: எல்லாச் சேரிகளும் வெள்ளிப் பாத்திரங்களாகக் காட்சி அளிக்கின்றன என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதை மிகைப்படுத்திக் கூறக்கூடாது. சேரிகளில் உள்ள ஒன்றிரண்டு பேர்களிடத்திலாவது வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கின்றன என்று சொன்னேன்.

புலவர் கா. கோவிந்தன்: கனம் அமைச்சர் கூறியதை வைத்துக்கொண்டு நானும் பல சேரிகளுக்குப் போகிறபோது குடிக்கத் தண்ணீர் கேட்கிற நேரத்தில் எல்லாம் யாராவது ஒருவராவது எந்த ஓரிடத்திலாவது ஒரு முறையாவது வெள்ளிப் பாத்திரத்தில் தண்ணீர் கொடுக்கிறார்களா என்று பார்த்தேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, சேரிகளில் வெள்ளிப் பாத்திரங்கள் காட்சி அளிக்கின்றன என்று. ஆனால் அப்படி யாரும் கொடுக்கவில்லை. ஆகவே வெள்ளிப் பாத்திரங்களில் கொடுங்கள் என்று கேட்டேன். "எங்களை என்ன கேலி செய்கிறீர்களா? எங்களிடம் வெள்ளிப் பாத்திரம் ஏது? தகரக் குவளைகள் கூட வெள்ளை வெளேர் என்றுதான் இருக்கும். அதைப் பார்த்துவிட்டுச் சொல்லியிருப்பார்கள், அதை நம்பி நீங்களும் கேட்கிறீர்களே" என்ற பதிலைத்தான் நான் சென்ற சேரிகளிடத்தெல்லாம் கேட்டு வந்தேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அவர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். முன்னேற்றம் ஏட்டிலே இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சென்ற ஆண்டு ஹரிஜன மானியத் துறை புத்தகம் போட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் அட்டையில் உள்ள

படத்தில் முன்னேற்றம் இருக்கிறது. சென்ற ஆண்டு படத்தில் ஒரு மாணவனைப் போட்டார்கள். இந்த ஆண்டு படத்தில் ஒரு மாணவர், ஒரு மாணவி போட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு காளைமாடு போட்டார்கள். இந்த ஆண்டு காளை மாட்டோடு ஒரு உழவனைப் போட்டு அவன் கையிலே ஏரைக் கொடுத்து அவனைச் சேற்றிலே இறக்கிவிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டோ தண்ணீர்க் குடத்தோடு ஒரு பெண்ணைப் போட்டார்கள். இந்த ஆண்டு மேல்மட்டத் தொட்டியைக் கட்டி, குழாயில் தண்ணீர் பிடிப்பதுபோல ஒரு பெண்ணைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் குழாயில் இருந்து தண்ணீர்தான் வரவில்லை. (கனம் திரு. பூ. கக்கன்: இப்படிப் புத்தகத்திலேயே தண்ணீர் வடியும் என்று கனம் அங்கத்தினர் நினைக்கிறார்களா?)

இப்படி ஏட்டிலே முன்னேற்றம் இருக்கிறதே தவிர நாட்டிலே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். சேரி என்ற பெயரை விட்டுவிட்டு இப்போது காலனி என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள் என்றும், அவர்களுடைய தொழிலின் அடியாக பறையர்கள் என்றும் இருந்துவந்த பெயரை நீக்கிவிட்டு ஹரிஜன மக்கள் என்ற பெயரை வைத்திருக்கிறார்கள். இதுதான் முன்னேற்றமே தவிர வேறு எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை.

அடுத்து, கல்வித்துறையைப் பொறுத்தவரையில் நிறையப் பணம் செலவு செய்து வருவதாகக் கூறினார்கள். இதிலே உபகாரச் சம்பளம் வழங்கப்படுவதை எடுத்துக்கொண்டால் மெட்ரிக் படிப்புக்கு முன் படிப்போர்கள் எவ்வளவு பேர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்போர்கள் எத்தனை பேர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் இத்துறை எப்படி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். 1962-63-ல் மெட்ரிக் படிப்புக்கு முன் படிப்போர் 117,000 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் படிப்போர் 3,000 பேர்களுக்குத்தான் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. 1963-64-ல் மெட்ரிக் படிப்புக்கு முன் படிப்போர் 134,600 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு மேல் படிப்போர் 3,300 பேர்களுக்குத்தான் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குக் கீழ் படிப்பவர்கள் 1,84,500 பேர்கள் உபகாரச் சம்பளம் பெற்றிருக்கிறார்கள். அதற்கு மேல் படிப்பவர்கள் 3,900 பேர்கள் உபகாரச் சம்பளம் பெற்றிருக்கிறார்கள். 1965-66-ஐ எடுத்துக் கொண்டால் எஸ்.எஸ்.எல்.ஸி.-க்குக் கீழ் படிப்போர் 218,700 பேர்கள் உபகாரச் சம்பளம் பெற்றிருக்கிறார்கள். அதற்கு மேல் படிப்போர் 3,281 பேர்கள்தான் உபகாரச் சம்பளம் பெற்றுள்ளார்கள். இது முன்னேற்றத்தைக் காட்டுமா? எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படிக்கிறவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு? அதற்குமேல் உபகாரச் சம்பளம் பெற்று படிக்கிறவர்களுடைய எண்ணிக்கை எப்படிச் சரிந்துபோய் இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

வைத்தியநாதன் அவர்கள் அறிக்கையில் ஒன்று கூறினார்கள். உத்தியோகங்களில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சில சதவிகிதம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். "படித்த அரிசன மாணவர் எண்ணிக்கை அவர்களுக்கு ஒதுக்கிய இட எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவு" என்பதை வைத்தியநாதன் அவர்கள் தம் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். கல்வி முன்னேற்றம் அந்த இனத்தில் எவ்வளவு வளர்ந்திருக்கிறது, எவ்வளவு வீழ்ந்திருக்கிறது என்பதை அது காட்டுகிறது.

வைத்தியநாதன் அவர்கள் மேலும் சொன்ன கருத்துக்கள் "அரிசன மாணவர்களுக்கு வேலை தேடித்தருவதற்காக என்றே, சென்னை, கோவை, திருச்சி, மதுரை மாநகரங்களில் தனி நிலையங்கள் அமைத்து, (1) உத்தியோகத் தேர்வுகளுக்குச் செல்லும் அரிசன மாணவர்களுக்கு அத்துறையில் பயிற்சி அளிக்கத் தனிப்பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டும். (2) எம்.பி. எஸ்.சி. தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளிக்க வேண்டும் (3) அலுவலகத்தில் பணிபுரியும் அரிசனத்தவர்களுக்குத் துறைத் தேர்வுகளில் வெற்றி பெறத் தக்க பயிற்சிகள் அளிக்க வேண்டும்" என்பனவாகும். இப்படி அவர்கள் கூறியது 1963-இல். இப்போது 1967-ஆம் ஆண்டுக் காலத்தில்தான் அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கு நம் அரசாங்கம் முன் வந்திருக்கிறதே தவிர இதுவரை ஏனோதானோ என்றுதான் இருந்துவிட்டது.

அடுத்து, மனைகள் வழங்கும் விஷயமாகவும் நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது பற்றி பரமேசுவரன் குழு 1964-ல் சமர்ப்பித்த அறிக்கையில் இந்த மாநிலத்திலே 60 லட்சம் மக்கள் இருக்கிறார்கள், அவர்களில் மனைகள் உள்ளவர்கள் 24 லட்சம் மக்கள்தான். பாக்கியுள்ள மனைகள் இல்லாத 36 லட்சம் மக்களுக்கு 3 லட்சம் மனைகளாவது வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மனைகள், பாதைகள், சுடுகாடுகள் இவை தவிர மொத்தம் 15 கோடி ரூபாய் வேண்டும், இரண்டு அல்லது மூன்று ஆண்டு கால அளவில் முடிக்க தாலுக்காவுக்கு ஒரு தாசில்தார், இரண்டு சர்வேயர்கள், ஒரு பிர்க்காவுக்கு ஒரு ஆர்.ஐ. தேவை. (3) நன்செய்யாக இருப்பினும் புன்செய்யாக இருப்பினும் 5 சென்ட் நிலம். (4) வீடு கட்ட வசதியற்றவர்களுக்கு ரூ. 150 மதிப்புள்ள பொருள்கள், ஆறு அல்லது ஏழு மாத அளவில் வழங்கப்பட வேண்டுமென்பதாகவெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த 15 கோடியைத் தருவதாக ஒதுக்கியிருப்பதாகவும் இந்த 15 கோடி ரூபாய் ஹரிஜனங்களுக்கு மட்டும் அல்ல, வீடு இல்லாத எல்லா ஏழை மக்களுக்குமாக ஒதுக்கியிருக்கிறது என்றும், அதில் 3 கோடி ரூபாய் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு என்றும், மாநில அரசு இதற்கு 1 கோடி, 70 லட்சம் ஒதுக்கியது என்றும் கூறி 1966-67-ல் 28 லட்சம்தான் கோரப்பட்டது. 15 கோடியில் ஐந்தில் ஒரு பங்காகிய 2 கோடி 60 லட்சம் ஒதுக்கப்படவில்லை. **இது போதுமா?**

ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், "இப்போது ஒதுக்கப்படுகிற தொகை, சிப்பந்திகளை வைத்துக் கொண்டு ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் கொடுப்பது என்றாலே மொத்தத்தில் 20 சதவிகிதம் மனைக்கட்டுக்கள் கொடுப்பதற்குக் கூட 14 ஆண்டு ஆகும்" என்பதாக. இந்த அலுவல்களை மட்டும் கவனிப்பதற்காக பரமேசுவரன் குழு செய்துள்ள சிபார்சு மாநில முழுவதற்குமாக தாசில்தார்கள் 169 கொடுக்கவேண்டும் என்பது. ஆனால் கொடுத்திருப்பது 40 பேர்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் 539 பேர்களைக் கொடுக்கவேண்டும் என்றார்கள். கொடுத்திருப்பது 42 பேர்கள். சர்வேயர்கள் 256 பேர்கள் கொடுக்கவேண்டும் என்றார்கள். கொடுத்திருப்பது 75 பேர்கள். இது போதுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாலைகள் அமைத்துக்கொடுப்பது என்றால் இதனைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். வேறு சிலருக்குரிய நிலத்தை வாங்குவதற்கு ஹரிஜன இலாகாவில் வழி இல்லை என்று முன்பு சொல்லி வந்தார்கள். அதை முன்பே நாங்கள் சுட்டிக்காட்டிய போதெல்லாம் "அவர்களுக்குப் பீதி இருக்கிறது" என்று சொன்னார்கள். டைரக்டர் அவர்கள் சிபார்சு செய்து இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் நிலம் வாங்கிக் கொடுத்தால் கிராமப் பணித் திட்டத்தின் கீழ் ஒப்புக்கொண்டால் அதற்கு வழிவகை செய்யப்படும் என்பதாகப் புதிய உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஒருவருக்கு 1,000 ரூபாய் கொடுக்கிற நிலை இருக்கிறது. முன்பு ஒரு வீட்டுக்கு ஆயிரம் ரூபாய் போதும் என்று ஒதுக்கப்பட்டது. இப்போதும் அதே தொகையை ஒதுக்குவது போதாது. இன்றைக்கு ஒரு வீடு கட்டுவது என்றால் 5,000 ரூபாய் ஆகும். இந்த நிலையில் ஒரு வீட்டுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது போதுமானதுதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

உழவு மாடுகள்பற்றி வைத்தியநாதன் அறிக்கையில் பதினைந்தாயிரம் குடும்பத்திற்கு ஒரு ஜதை தான் வழங்க முடிகிறது என்கிறபோது அதனால் ஹரிஜன மக்களுடைய பொருளாதார நிலை எந்த அளவுக்கு உயர்த்தப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தொழில்கள் என்று எடுத்துக்கொண்டால் இன்றையதினம் அவர்களுக்கு என்ன என்ன தொழில்கள் கொடுக்கப்படுகின்றன. தோல் பதனிடுதல், பாய் முடைதல், கயிறு முறுக்குதல், கூடை முடைதல், தேனீ வளர்த்தல், பிரம்பு பின்னுதல், செங்கல் அறுத்தல் என்பதாக அரிசன முன்னேற்றம் என்ற பெயரால் அவர்கள் வழி வழியாகச் செய்து வந்த தொழிலிலேயே ஈடுபட கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொடுத்தல் எந்த வகையில் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

[புலவர் கா. கோவிந்தன்] [22nd March 1966

அடுத்தபடியாக, பால் சொஸைடிகள் 201 சொஸைடிகள் ஆரம்பித்து இருக்கிறார்கள். அங்கே எத்தனை மாடுகள் இருக்கின்றன. எவ்வளவு பால் கறக்கின்றன என்ற விவரங்கள் கொடுக்கப்படவில்லை. என்னுடைய வட்டத்திலே எந்த சொஸைடியும் நல்ல முறையிலே செயல்படவில்லை, அவ்வளவும் பாழ்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும். நிலக்குடியேற்றத்தை எடுத்துக்கொண்டால் 55 நிலக் குடியேற்றக் காலனிகள் இருக்கின்றன. இதற்காக 32 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டும் கூட பலன் இல்லை. இந்த நிலக்குடியேற்றக் காலனிகள் சரியாகச் செயல்படவில்லை என்று மதிப்பீட்டுக் குழு கூடத் தெரிவித்திருக்கிறது. ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை அவர்களுக்கு அடைமானம் செய்து கொடுக்கிறோம். அப்படிச் செய்துகொடுக்கிற நேரத்திலே ஒரு கண்டிஷன் இருக்கிறது. அந்த நிலங்களை ஹரிஜன மக்கள்தான் உபயோகப் படுத்தவேண்டும். மற்றவர்கள் உபயோகப்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. அப்படியிருந்தும்கூட ஹரிஜனங்கள் அல்லாத ஜாதி ஹிந்துக்கள் அந்த நிலங்களில் பயிர்செய்யத் தொடங்கி விடுகிறார்கள். அப்படி அவர்கள் பயிர் செய்யத் தொடங்கியவுடனே அந்த நிலங்களை அரசாங்கம் ரெஸ்யூம் செய்துகொள்கிறது என்பதைக் கூறி, ஹரிஜனங்களுக்கு நிலம் ஒதுக்கியதிலே வேறு யாராவது பயிர்செய்தால் அவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படிச் செய்தால்தான் ஹரிஜனங்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு வழியிருக்கும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. சுப்பிரமணியம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நல மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய புலவர் அவர்கள் பேசும்பொழுது சேரிக்குப் போகக்கூடிய நேரத்தில் தண்ணீர் கேட்கும்பொழுது குவளைப் பாத்திரத்தில்தான் கொடுக்கிறார்கள், வெள்ளிப் பாத்திரத்தில் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். நான் சேரியிலேயே இருக்கக்கூடியவன். நம்முடைய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு ஹரிஜனங்களுடைய நிலைமை எப்படி இருந்தது, இப்பொழுது அவர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதை ஒப்பிட்டுப்பார்த்தால் உண்மை தெரியும். அவர்கள் வெள்ளிப் பாத்திரம் வைத்திருந்தால்கூட போகிறவர்களுக்கு எல்லாம் கொண்டுவந்து கொடுப்பார்கள் என்று நினைக்க முடியாது. இங்கேயுள்ள மெம்பர்களுடைய வீட்டில் எத்தனை பேர்களுடைய வீட்டில் வெள்ளிப்பாத்திரம் இருக்கிறதோ எனக்குத் தெரியாது. . . .

புலவர் கா. கோவிந்தன்: நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள், அவர்களுடைய வீடுகளிலேயெல்லாம் வெள்ளிப்பாத்திரங்கள் இருக்கின்றன என்று சொன்ன காரணத்தாலேதான் அவர்களுடைய பொருளாதார நிலை அந்த அளவுக்கு உயரவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்காக நான் அப்படிச்சொன்னேன்

22nd March 1966]

திரு. ரா. சுப்பிரமணியம்: அதற்குப் பிறகு ஹரிஜனங்களுடைய எண்ணிக்கை மேற்படிப்புக்குப் போகும்பொழுது குறைவாக இருக்கிறது. பிரி மெட்ரிக்லே அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஹரிஜனங்களுக்கு மட்டும் அந்த நிலை இல்லை. எல்லா வகுப்புக்களிலும் உள்ளவர்கள் எல்லாம்கூட மேற்படிப்புக்கு அதிகமாகச் செல்வதில்லை, கீழேதான் அதிகமாகப்படிக்கிறார்கள். ஹரிஜன நல இலாகா டைரக்டராக இருப்பவர் ஒரு ஐ.ஏ.எஸ். ஸீனியர் ஆபீசர் ஆகவும், அவர் போர்டு மெம்பர் தகுதியை உடைய ஒருவராகவும் இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. கல்வி விஷயத்தில் நாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆனால் எவ்வளவு செய்தாலும் இன்னும் குறைகள் இருந்து வருகின்றன. அதிகமாக இருக்கின்றன. ஹரிஜனங்களுடைய குறைகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல, பல நூற்றாண்டுக் காலமாக இருந்து வருகின்ற குறைகள், அவைகளை நீக்குவதிலே நாம் எவ்வளவு தான் செய்தாலும், குறைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே அதிகமாக நாம் செய்தாலும் அது தெரியவில்லை.

கனம் சபாநாயகர்: தேவைகளா, குறைகளா, குறைகள் என்று சொன்னால் அது வேறுமாதிரி கருதப்படும்.

திரு. ரா. சுப்பிரமணியம்: தேவைகளைப்பற்றி நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வருஷத்திற்கு ஒதுக்கப் பட்டிருக்கின்ற தொகை 5 கோடியே 30 லட்சம் ரூபாய். ஹரிஜனங்களுக்கும், மலை வாசிகளுக்கும் ஒதுக்கியிருப்பதை மட்டும் கணக்குச் சொல்கிறேன். பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கியதைச் சேர்க்கவில்லை. அவர்களுக்கு மட்டும் 4.72 தான் செலவழிக்கிறோம். இது மொத்த தொகையில் 2.5 சத விகிதம் தான் வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிப்பதற்கு ஒதுக்கியிருக்கிற மொத்தத் தொகையிலே 1.26 சத விகிதம் தான் செலவழிக்கிறோம். இந்தவிதமாகத் தான் நாம் ஹரிஜனங்களுக்கு ஒதுக்குகிறோம். ஹரிஜனங்கள் சமுதாயத்திலே 20 சத விகிதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தமாதிரி 1½ சத விகிதம், 2½ சத விகிதம் என்று ஒதுக்கினால் எந்தவிதமான முன்னேற்றமும் செய்யமுடியாது. ஆகவே அதிகப் பணம் ஒதுக்கி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமேஸ்வரன் கமிட்டியில் சில முக்கியமான சிபாரிசுகள் செய்தார்கள். நானும் கூட ஒரு மெம்பராக இருந்தேன். அவர்கள் தெரிவித்த பல சிபாரிசுகளையும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். ஆனால் நாங்கள் எதை முக்கியமான சிபாரிசுகள் என்று கருதினோமோ அதை ஒத்துக்கொள்ளவில்லை. ரொம்ப வருத்தமாக இருக்கிறது. அநேகமாக ஒரு சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருப்பவராகவும், போர்டு மெம்பர் பதவிக்குச் சமமான தகுதியுடையவரையும் இந்த இலாகாவுக்கு டைரக்டராகப் போடவேண்டும் என்று சொல்லப்பட்டது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அடிப்படையை மாற்றி அவர்களை அப்பர் டிவிஷன் கிளார்க்குகளாக உயர்த்தவேண்டும். அவர்களுக்குத் தனிச்சலுகை கொடுத்து அதிகமாகச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொன்னோம்.

வீட்டு மனை ஆர்ஜிதம் செய்வதிலே ஸ்டாம்ப் அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னோம். அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். வீட்டு மனைகளுக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று சொன்னோம். அது சென்ட்ரல் கவர்ன் மெண்ட்டின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். பரமேஸ்வரன் கமிட்டியில் சொல்லப்பட்ட சிபாரிசுகளில் முக்கியமான அம்சம் வீட்டு மனை ஆர்ஜிதத்தைத் துரிதப்படுத்த வேண்டும், நிறைய ஸ்டாம்ப் போடவேண்டும், இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிற காரணத்தால் அதைக் கவனிப்பதற்கு ஐ.ஏ.எஸ். ஆபீசர் இருக்கவேண்டும். அவருக்கு போர்டு மெம்பர் பதவியையொத்த தகுதியும்—போர்டு மெம்பராகவே இருக்க வேண்டுமென்பதில்லை—அவர் சீனியர் ஐ. ஏ. எஸ். ஆபீசராகவும் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் ஜில்லாக் கலெக்டர் களிடத்திலே போகும்பொழுது மரியாதையும், மதிப்பும் இருக்கும், அவர்கள் நல்லவிதமாகக் காரியத்தைச் செய்யமுடியும். ஆகவே இதை புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பு சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீசர் திரு. சிவசுப்பிரமணியம் இருந்தார். அவர் நல்ல விதமாக காரியங்களைத் தயக்கம் இல்லாமல் செய்தார். அதே மாதிரி இப்பொழுதும் போடுவதற்கு வழிசெய்யவேண்டும். வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்வதிலே ஒரு திட்டத்தின் அடிப் படையில் இதைசெய்யவேண்டுமென்று ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ திட்டங்கள் போடுகிறோம், ஹரிஜனங்களுக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதற்கு ஒரு திட்டம் போட்டால் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிடுமோ தெரியவில்லை. ஆகவே, 3 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் என்று திட்டம் போட்டு இதை முடிக்கவேண்டுமென்று இருந்தால் இதில் எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. இந்த வெல் டெவலப்டு பிளாட்ஸ்களுக்காக 1961-ஆம் வருஷத்திலே வெள்ளம் வந்த காலத்திலே 4 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் ஒதுக்கினோம் என்று சொன்னார்கள். அதிலே 2½ லட்சம் ரூபாய் தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. பாக்கியுள்ள தொகை செலவழிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே இந்த வெல் டெவலப்டு பிளாட்ஸ் அதிகமாகப்போடவேண்டும். அப்படிப் போடும்பொழுது தரை மட்டம் வரையிலே போட்டு அத்துடன் நிறுத்திவிடுகிறார்கள். அதனுடைய அகலம் ¾ அடிதான் இருக்கிறது. அப்படி ¾ அடியோடு நிறுத்திவிட்டால் அதற்குமேல் சுவர் வைக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே அதை கூரை மட்டம் வரையிலே உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிரி மெட்ரிக் நிலையில் உள்ள எல்லோருக்கும் நான்ரெசிடென்சியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும். உயர்தரப் பள்ளிகளிலே படிக்கின்ற ஹரிஜனமாணவர்களுக்கும் உயர்தரப்பள்ளி உள்ள எல்லா ஊரிலும் ஹாஸ்டல் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாதிரி கல்லூரிகளில் படிக்கின்ற ஹரிஜன பையன்களுக்கும் அதே ஹாஸ்டல் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஹாஸ்டல் வசதியில்லாததால் அவர்கள் படிப்பை விட்டுவிட்டுப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. மெடிக்கல் ஸ்டூடென்ஸ் பொறுத்தவரை

யில் அவர்கள் மூன்று அட்டெம்ப்ட் செய்தும்கூட 100, 150 பேர்கள் பெயிலாகி கஷ்டப்படுகிறார்கள். இது சம்பந்தமாக கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி அவர்கள் மூன்றுமுறை பெயிலானாலும்கூட தொடர்ந்து படிப்பை நீடிக்கலாம் என்று ஒரு ஸ்பெஷல் கன்செஷன் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஹரிஜனங்களுக்கு 16 சத விகிதம் பேர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டு மென்று P.I.P. வைத்தியநாதன் ரிப்போர்ட்டின் பெயரில் கவர்ன்மெண்ட் ஜி.ஓ.எண் : 39, பப்ளிக், 9-1-1965 தேதியன்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால் அது அமல் ஆக்கப்படு வதாகத் தெரியவில்லை. அதை அமலாக்கினால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக பொருளாதார விஷயத்தில். . . . . (மணியடிக்கப்பட்டது)

MR. SPEAKER : There are 37 hon. members who wish to speak on this Demand. We have to allot 1½ hours for Leaders. Then we have only 150 minutes. So it works out to 4 minutes for each hon. Member. Hon. Members are requested not to take more than 4 minutes each.

THE HON. SRI R. VENKATARAMAN : I think we can cut down the number of speakers.

MR. SPEAKER : There are 16 speakers from Opposition side and 21 speakers from Congress side.

திரு. மு. கருணாநிதி : காங்கிரஸ் பக்கத்திலிருந்து பேசுபவர் களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER : I cannot suggest that. Each hon. Member may please take 4 minutes.

* திரு. சீ. சிவசுப்பிரமணியம் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். நம்முடைய நாட்டை எத்தனையோ அரசர்கள் ஆண்டி ருக்கிறார்கள். ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹரிஜன மக்கள் முன்னேற்றத்திற்காக, எவ்வளவோ காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை சந்தோ ஷமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹரிஜனங்களைப் பொறுத்தவரை மனைக்கட்டு பிரச்னை ரொம்ப முக்கியமானது. இப்போது ஒதுக்கியிருக்கும் தொகை நிச்சயமாக அதற்குப் போதாது. இதற்கு அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜாதி இந்து நண்பர்கள் ஹரிஜனங்கள் நிச்சயமாக முன்னேற வேண்டுமென்று எண்ணினால் நிச்சயமாக அவர்கள் முன்னேறி விடுவார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் அப்படி இல்லை. ஜாதி இந்து மக்களுக்கு இன்னும் மன மாற்றம் பூரணமாக

[திரு. சீ. சிவசுப்பிரமணியம்] [22nd March 1966

ஏற்படவில்லை. குறிப்பாக, எம்.எல்.ஏ.-க்களுக்கே மனமாற்றம் ஏற்படவில்லை. ஏதோ சட்டசபையிலே பேசுகிறார்களே தவிர, வெளியே அந்த மாதிரி நடந்து கொள்வதில்லை. நம்முடைய அமைச்சரவை இதுவரை எடுத்துக் கொண்டிருக்கும் காரியங்கள் மேலும் மேலும் வளர வேண்டும்.

ஹரிஜனப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கிடையாது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். பாடப் புத்தகங்கள் பிள்ளைகளுக்குக் காலா காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. சரியான காலத்தில் பள்ளிப் புத்தகங்கள் வழங்கவேண்டும். மதிய உணவு காண்ட்ராக்டர்கள் மதிய உணவுக்காக கொடுக்கப்படும் 15 பைசா போதாது என்று கூறியிருக்கிறார்கள். அதை 20 பைசாவாக உயர்த்தவேண்டும். ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு உடை வழங்கப்படுகிறது. மற்றப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கும் உடை வழங்கப்பட வேண்டும். மனைக் கட்டு வழங்குவதற்காக அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் என்றைக்கு அங்கிருந்து மாற்றிக் கொண்டு போகலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே தவிர நிலையாக அங்கிருந்து வேலை செய்ய வேண்டுமென்று இருப்பதில்லை. அந்த அதிகாரிகள் நல்ல விதமாகத்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் ; நல்ல முறையில் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களுக்குச் சீக்கிரம் ப்ரொமோஷன் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் மாற்றிக் கொண்டு போய்விடுகிறார்கள். ஹரிஜன முன்னேற்றப் பணியிலே ஈடுபட்டிருக்கும் இந்த அதிகாரிகளுக்குத் தனிச் சலுகை கொடுத்து தனிச் சம்பளம், ப்ரொமோஷன் எல்லாம் கொடுத்து அவர்களை ஒரு இடத்திலே நீடித்து இருக்கச் செய்ய வேண்டும்.

குடிதண்ணீர் பிரச்னையும் கஷ்டமாக இருக்கிறது. ஹரிஜன நல இலாகா இந்தத் திட்டத்தை நல்ல முறையில் எடுத்துச் செய்ய வேண்டும். ஹரிஜன பால் வழங்கும் சொசைடிகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. அதிகமான பால் வழங்கும் சொசைடிகளை ஏற்படுத்தி, ஹரிஜன மக்களுக்குக் கடன் கொடுத்து, இனாம் கொடுத்து திட்டத்தை நடத்தவேண்டும். ஹரிஜன புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் இந்தப் புறம்போக்கு நிலங்கள் ஹரிஜன மக்களுக்குப் பயன்படவில்லை. ஏனைய ஜாதி மக்கள் அனுபவித்து வருகிறார்கள். சர்க்கார் நடவடிக்கை எடுத்து அந்த நிலங்களை கண்டுபிடித்து ஹரிஜன மக்களுக்கு வழங்கவேண்டும். சிதம்பரத்தில் நந்தனார் கல்விக் கழகம் இருக்கிறது. சுவாமி சகஜானந்தா இருக்கும் போது குறிப்பிட்ட மெம்பர்களை நந்தனார் கல்விக் கழகத்தில் போட்டிருந்தார்கள். அவர்களே இன்னும் இருக்கிறார்கள். ஆகவே, அதைச் சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

22nd March 1966] [திரு. சீ. சிவசுப்பிரமணியம்]

பரமேஸ்வரன் கமிட்டி நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறது. நிலம் கொடுப்பதற்காக ரூபாய் 15 கோடி கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் இந்த அரசாங்கத்தைப் பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த 15 கோடி ரூபாயை நிச்சயமாக ஒதுக்கிக் கொடுத்து, ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுகளைக் கொடுத்து முன்னேறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன மானியத்தின் மீது பேசும்போது இந்தச் சர்க்கார் ஹரிஜனங்களுக்காகச் செய்த காரியங்களைப் பற்றியெல்லாம் ஆளுங்கட்சி சார்பில் பேசினார்கள். தீண்டாமை ஒழிப்புக்காகச் சட்டம் செய்து அதை பிரசாரம் செய்ய குழுவைப் போட்டு, தீண்டாமை பற்றிப் பஜனை நடத்தி, மற்றும் பல காரியங்களையும் செய்த பிறகு கூட, இன்றைய தினம் தீண்டாமை பூரணமாக ஒழிக்கப்பட்டு விட்டதா என்று பார்த்தால் எதிர்பார்த்த அளவு இல்லையென்றுதான் கூற வேண்டும்.

சிதம்பரத்தில் இறந்து போன ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பிணத்தை பொது நடைபாதையில் எடுத்துக் கொண்டு போகக் கூட அனுமதியில்லை என்று பரமேஸ்வரன் கமிட்டி அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள். மகிழம்பாடி பஞ்சாயத்தில் ஹரிஜன மக்கள் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் மேல் ஜாதிக்காரர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். சர்க்கார் அந்த மேல் ஜாதிக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கும் வகையில் தண்ணீர் கொடுப்பதைத் தடுக்க ஸ்டே ஆர்டர் கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஹரிஜனங்கள் பெரும்பான்மையாக உள்ள பஞ்சாயத்து போர்டுகளில் அவர்கள் தலைவராக வர வாய்ப்பு இருந்தால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் மேல் ஜாதிக்காரர்கள் கொடுக்கும் தொல்லைகளுக்கு உதவியாக சர்க்கார் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நீடித்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் மனைகள் கொடுத்திருக்கிறோம் என்று பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் மனைகள் கொடுக்கப்பட வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று பரமேஸ்வரன் கமிட்டி அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இன்னும் ஐந்து லட்சம் பேர்களுக்கு மேலாக மனைகள் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்டுள்ள மனைகளும் ஒழுங்கான முறையில் கொடுக்கப்படவில்லை. இந்தக் குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது அமைச்சரவையிலே இருப்பவர்கள் கோபப்படுகிறார்கள். வேண்டியவர்களுக்குத்தான் இந்த மனைகள் கொடுக்கப்படுகின்றன. அதற்கு உதாரணத்தைக் கூடச் சொல்ல முடியும். தாளக்குடியில் ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்காக நடவடிக்கை

[திரு. து. ப. அழகமுத்து] [22nd March 1966

எடுத்துக் கொள்ளப்பட்டது. அதிலே ஒருவர் தலையிட்டு மூன்று ஆண்டுகளாக அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள முடியாமல் தடை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய பெயரைக் குறிப்பிடுவது சரியல்ல; நாகரிகம் கருதி அவருடைய பெயரைக் குறிப்பிட நான் விரும்பவில்லை. ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் மூன்று வருஷமாகியும் இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. அவர் தமக்கு வேண்டியவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதாகச் சொல்லி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் என்று மகஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில்தான் சர்க்கார் நிலங்கள் ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது இருந்து வருகிறது. அவர்கள் விவசாயத்திற்காக நிலம் வேண்டுமென்று மனுச் செய்து கொண்டும் அவை ஒழுங்காகக் கொடுக்கப்படவில்லை. மதிய உணவு போடுவதாகக் கூறுகிறார்கள். ஹரிஜன பிள்ளைகளுக்கு ஒழுங்கான முறையில் உணவு கொடுக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. காண்டிராக்ட்யாருக்கு கொடுப்பது என்பதிலே விவகாரம் இருந்து கொண்டிருக்கிறதே தவிர, சோறு ஒழுங்காகப் போடுகிறார்களா என்றால் இல்லை. ஆசிரியர்கள் அதைப் பற்றிக் குறைபாடு சொன்னால் அந்த ஆசிரியர்களை மாற்றிவிடுகிறார்கள். இதிலே அரசாங்கம் தலையிட்டுக் கொண்டிருக்கிறது. ஹரிஜன பிள்ளைகள் அதிகமாக இருக்கிற பஞ்சாயத்து யூனியன்களில் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். இடைகாலத்தில் கொடுத்தார்கள்; பின்னால் நிறுத்திவிட்டார்கள். இந்த நிலை போக்கப்படவேண்டும்.

10-00 a.m. அரிஜனங்கள் வசிக்கக்கூடிய தெருக்களுக்கு மின்சார விளக்கு வசதி செய்து கொடுப்பதில் பெரிய உதவிகளை செய்கிறோம் என்று குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜனத் தெருக்களில் எல்லாம் மின்சார விளக்குகள் கிடைக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இப்போது இரண்டும் கெட்டான் நிலையில் ஹரிஜனத் தெருக்கள் இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களைக் கேட்டால், எங்களிடம் பணம் இல்லை சர்க்கார் உதவி கிடைக்கும் என்று சொல்லிவிடுகிறார்கள், பஞ்சாயத்துக்கள் விளக்கு வசதி செய்து கொடுக்கும் என்று ஹரிஜன நல இலாகாவும் இருந்து விடுகிறது. இந்த இரண்டும் கெட்டான் நிலையில் அரிஜன மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக மின்சார விளக்குகள் கிடைப்பதில் மிக காலதாமதம் ஏற்படுகிறது.

பிற்பட்ட வகுப்பினருக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கின்ற விஷயத்தில் கொடுக்கப்படுகின்ற உதவி போதுமானதாக இல்லை. இப்போது இருக்கின்ற முறையை மாற்றி வருமானத்தின் அடிப்படையில் கொடுக்கப்போவதாக சொல்லுகிறார்கள். அப்படியானால் எந்த முறையை பின்பற்றப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஒவ்வொரு தடவையும் ஸ்காலர்ஷிப் வழங்கப்படும் போது, மார்க் அடிப்படையில் வழங்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி பார்க்கும்போது, இருக்கின்ற பணத்திற்கு ஏற்றாற்போல் தான் மார்க் எண்ணிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதோடு

22nd March 1966] [திரு. து. ப. அழகமுத்து]

கொடுக்கிற பணத்தை ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆண்டு கடைசி வரையில் கொடுக்கிறார்கள், கொடுக்கப்படுகின்ற பணத்தை இரண்டாகப்பிரித்து எண்ணிக்கையை அதிகமாக்கிக் காட்டப்படுகிறது. அதோடு ஸ்காலர்ஷிப்புக்காக கொடுக்கப்படுகின்ற செக்கை பாங்குக்கு கொண்டுபோனால் பணம் இல்லை என்று சில நேரங்களில் சொல்லி விடுகிறார்கள். டி.டி.கே. இந்திய நிதி அமைச்சராக இருந்த நேரத்தில் சொன்னார், " நான் நிதி மந்திரியாக இருக்கும் வரை சர்க்கார் திவாலாக ஆவதற்கு சம்மதிக்க மாட்டேன் " என்று கூறினார். ஆனால் மாநில சர்க்கார் கொடுக்கின்ற செக்கை பாங்கில் கொண்டு கொடுக்கும்போது அக்கௌண்டில் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மேலும், மாணவர்கள் ஸ்காலர்ஷிப்புக்காக அப்ளிகேஷன்களை அனுப்பிவைத்தால் அவைகள் ஹரிஜன நல இலாகாவிற்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அதையும் எப்போது சொல்கிறார்கள் என்றால், யாராவது அதை தேடிப் போய் பார்த்து, சாங்ஷன் செய்யுங்கள் என்று சொல்லப்போகும்போதுதான் அப்ளிகேஷனே வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட முறையில் நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆதிவாசிகளுக்கு ரோடு வசதிகள் செய்து கொடுப்பதாக குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். பச்சைமலைப் பகுதியில், 30, 40 கிராமங்களுக்கு ரோடு வசதியில்லாமல் இருக்கிறது. இந்தப் பகுதிகளைச் சேர்த்து ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆக்கவேண்டும் என்று கோரியிருந்தோம். அதைப்பற்றி பின்னால் கவனிக்கலாமென்று அரசாங்கம் சொல்லிவிட்டது. இதை ஒரு பஞ்சாயத்து யூனியனாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. பொன்னையன் :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். வால்பாறை பிரதேசத்தில் ஆண்களுக்கு ஒரு ஆஸ்டலும், பெண்களுக்கு ஒரு ஆஸ்டலும் கட்டவேண்டும் என்று முன்பே சொல்லி வந்திருக்கிறேன். அங்கு பெண்களுக்கு ஒரு ஆஸ்டல் மிகவும் தேவையாக இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் அவசியம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்கள் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வசித்தால்—அதில் தீ பிடித்து விட்டால், அதற்கு பத்து ரூபாய்தான் உதவியாக கொடுக்கிறார்கள், ஆனால் பட்டா நிலங்களில் வீடு கட்டி வசித்து வந்தால் 30 ரூபாய் அதோடு பத்து ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இப்படி இடத்தைப் பொறுத்து கொடுக்காமல் அவர்களுடைய உடமைகளைப் பார்த்து பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹவுஸ் ஸைட் (வீட்டு மனை) விஷயமாக எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக சொல்லவில்லை, நாம் ஆட்சியில் வந்து 16, 17 வருடங்கள் ஆகின்றன, அரசாங்கத்தில் வந்து இவ்வளவு காலமாகியும் இந்தப் பிரச்னை தீர்ந்த பாடில்லை. ஆகவே

இதை ஒரு 'பாஸ்ட் ப்ரொகிராம்' மாக வைத்து, மலையிடம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காலேஜில் படிக்கின்ற மாணவர்களுக்கு, போதிய அளவில் ஆஸ்டலில் இடம் கிடைப்பதில்லை. காலேஜ் எங்கிருக்கிறதோ அங்கே இடம் கிடைக்கவில்லை என்ற நிலை வரும்போது, அங்கேயே லோக்கலாக இருக்கின்ற ஒரு ஹோட்டலை தேர்ந்தெடுத்து, அதை ரிக்கனைஸ் பண்ணி, அதில் மாணவர்களை தங்குவதற்கு ஏற்பாடு செய்து ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்கின்ற விஷயத்தில் இப்போது 1,750 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு இந்த உதவி இல்லை என்று தெரிகிறது. இப்போதுள்ள நிலைமையில் ஒரு மில் தொழிலாளிக்கே ரூ. 2,500-க்கு மேல் வருமானம் வருகிறது. ஆகவே இந்தத் தொகை பெரிதல்ல. இதை ரூ. 3,000 என்ற அளவுக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப் விஷயத்தில் 350 ரூபாய்க்கு மேல் சம்பாதித்தால் உதவி கிடையாது என்று சொல்லுகிறார்கள். 350 ரூபாய் என்பது சாதாரண தொகைதான் இந்த காலத்தில். ஆகவே இதை நினைத்தால் மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் கொடுக்கின்ற ஸ்காலர்ஷிப்பும் பெரும்பாலும் மாணவர்களுக்கு கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் எந்தெந்த இடங்களில் எல்லாம் ஹாஸ்டல் வேண்டுமென்று கேட்கின்றார்களோ அந்த இடங்களில் எல்லாம் ஹாஸ்டல்களை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மலைப்பிராந்தியங்களில் 30, 40 செட்டில்மெண்ட்கள் அங்கங்கே இருக்கின்றன. இந்த இடங்களில் இருக்கின்றவர்களுக்கு எந்தவிதமான வைத்திய வசதியும் இல்லாமல் இருக்கிறது. டிபார்ட்மெண்டிலிருந்து மொபைல் வான் மூலமாக இந்த இடங்களுக்கு விசிட் செய்து, வைத்திய வசதி செய்து கொடுத்தால் நல்லதாக இருக்கும். காரணம் இந்த செட்டில்மெண்டில் வசிக்கும் ஆட்கள் காடுகளை விட்டு வெளியே வருவதில்லை. ஆகவே 10, 15 நாட்களுக்கு ஒரு தடவை வான் மூலமாக இந்த இடங்களுக்கு சென்று வைத்திய வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட செட்டில்மெண்ட் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கேயுள்ள பிள்ளைகளை எல்லாம் ஒன்று சேர்த்து, அவர்களுக்கு என்று தனியாக ஒரு ரெஸிடென்ஷியல் ஹாஸ்டல் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

. கீழ்நாட்டிலுள்ள அரிஜன மக்களுக்கு உழவு மாடு கொடுப்பது, கிணறுகள் வெட்டிக் கொடுப்பது முதலிய உதவிகளைச் செய்து கொடுக்கிறோம். அதே போன்று மலைப்பிரதேசத்தில் இருக்கும் அரிஜன மக்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. ஆகவே மலைப்பிரதேசத்தில் இருக்கும் அரிஜனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும்,

முர்ரா கன்றுகள், சிந்திக் கன்றுகள் இவைகளை வாங்கிக் கொடுத்தால், அவர்களுடைய பொருளாதார வசதியைப் தெரிவித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது, மலைப்பிரதேசங்களில் இருக்கின்ற அரிஜனங்கள், ஆதிவாசிகள் இவர்கள் இன்னும் நல்ல முறையில் முன்னேறவில்லை, அவர்களுடைய பொருளாதார நிலைமை இன்னும் முன்னேறவில்லை. கீழ்நாட்டிலுள்ள அரிஜனங்களுக்கு செய்து கொடுக்கின்ற உதவிகளை எல்லாம்—அதாவது மாடுகள் வாங்கிக்கொடுப்பது, மான்யங்கள் கொடுப்பது மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்கின்ற சலுகைகளை கொடுப்பது இவைகளை எல்லாம் மலைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கும் கொடுத்தால் தான் அவர்கள் முன்னேற முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. தா. சின்னசாமி**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1966-67-ம் ஆண்டுக்கான அரிஜன மான்யக்கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இதே சட்டமன்றத்தில் அதிகமாக பேசாமல் இப்படிப்பட்ட நேரத்தில் மட்டும் பேசுகின்ற எங்களைப் போன்றவர்களுக்கு கொஞ்சம் அதிக நேரம் தரவேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் சபாநாயகர்: இதுவே ஒரு நிமிஷம் ஆகிவிட்டது. . . . பேசுங்கள் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. தா. சின்னசாமி: நன்றி. அரிஜனங்களுக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கின்ற தனித் தொகுதியிலிருந்து வந்திருக்கிறவர்கள், அதிலும் ஆளும் கட்சியிலிருக்கின்றவர்கள் அரிஜனங்கள் முன்னேறிவிட்டார்கள், ஆதிவாசிகள் முன்னேறிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எங்கள் தொகுதியிலிருந்து அவர்களுக்கு இருக்கின்ற குறைகளை இந்த சட்டசபையில் எடுத்துச் சொல்வதற்குத்தான் எங்களை வோட்டு போட்டு அனுப்புகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் அவர்களுக்கெல்லாம் செய்தாகிவிட்டது, அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள், முன்னேறியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுடைய குறைகளை சொல்வதாகத் தெரியவில்லை. ஆனால் நீருக்குள்ளே காற்று இருந்தாலும் வெளியே குமிழியாக தெரிந்துவிடும் என்று சொல்வார்கள். அதுபோல, இவர்கள் இப்படி எத்தனை ஆண்டுகளுக்குத்தான் சொல்லிக் கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

எங்கள் பக்கத்தில், மாசிலாமணி என்ற ஆசிரியர்—அவர் ஹரிஜன இனத்தை சேர்ந்தவர். அவர் சின்னசேலத்தில்—பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் ஒரு பையனை கையால் அடித்து விட்டார் என்ற காரணத்திற்காக அந்த இடத்திலுள்ள 20 பேர்கள் சேர்ந்து அவரை பள்ளிக்கூடத்திலிருந்து நாற்காலியோடு வெளியே கொண்டு வந்து போட்டு

விட்டார்கள். காரணம் அவர் தாழ்த்தப்பட்ட ஆதி தமிழன் என்ற ஒரு கொள்கையினால்தான். இன்னொன்று, பிச்சைபிள்ளை என்பவர், ஆடு இன அபிவிருத்தி நிலையத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் ஒரு அரிஜன். அவரை எப்படியாவது அங்கிருந்து, ஆட்டு இன வளர்ச்சி நிலையத்தை விட்டு ஓட்டிவிடவேண்டும் என்று எண்ணி—15 நாட்களுக்கு முன்னால் நான்கு பேர்கள் சேர்ந்து அவரை அடித்து, பாதிப் பிணமாக்கிவிட்டார்கள். அவர் நமது உள்துறை அமைச்சர் அவர்களை பார்ப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் உண்மையில் அரிஜன நலத்துறையாக இருப்பதற்கு, அரிஜனங்களுக்கு எம்.பி.பி.எஸ். படிப்புக்கும், என்ஜினியரிங் காலேஜில் படிப்பதற்கும் சீட் கொடுப்பதை ஹரிஜன நல இலாகா டைரக்டரிடத்தில் ஒப்படைத்தால் நலமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டங்கள், மாடு கொடுக்கும் திட்டங்கள், முன்னேற்றத் திட்டங்கள் என்று வாயினால் சொன்னால் போதாது. ஏழைகள் கண்ணீர் கூரிய வாள் என்று சொல்வார்கள். அந்த முறையில் அதிகப் பணியாளர்களைப் போட்டு திட்டங்களை நிறைவேற்றவேண்டும். கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும், கனம் அமைச்சர் ராமைய்யா அவர்களும், கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களும், கனம் அமைச்சர் கக்கன்ஜி அவர்களும் நல்ல முறையில் வரும் காலம், இறந்த காலம், நிகழ் காலம் ஆகிய காலங்களை அறிந்து செய்வது போல் ஏழைகளுக்கு நல்ல முன்னேற்றகரமாக காரியங்களைச் செய்யவேண்டும். எங்கள் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு கனம் உள் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி காலனி ஏற்பாடு செய்து, வீட்டு வசதி செய்து கொடுக்க, எந்தெந்த முறையில் செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சி அங்கத்தினர்கள் நாங்கள் முன்னேறி இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திருமதி அ. கிருஷ்ணவேணி**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

என்னுடைய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேனியில் அருந்ததிய மக்கள் சுமார் 65 குடும்பங்களுக்கு வீடு இல்லாமல் கம்பம் செல்லும் ரஸ்தாவில் உள்ள பாலத்திற்கு அடியிலும், ஆற்றங்கரையிலும், பிரேதங்களை அடக்கம் செய்யும் மயானக் கரையிலும், சிறு சிறு குடிசைகள் போட்டுக்கொண்டு குடியிருக்கிறார்கள். மழை காலத்தில் ஆற்றில் தண்ணீர் வந்தால் முதலில் குடிசைக்குள் புகுந்து விடும். நான் இதை நேரடியாகப் பார்த்திருக்கிறேன். ஆகையால் ஏழை ஹரிஜன மக்கள், 65 குடும்பங்கள் வீடில்லாமல் தவித்துக்கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு அல்லிநகர் கிராமத்தில் பட்டா நிலமாக இருந்தாலும், புறம்போக்கு தரிசு நிலமாக இருந்தாலும், நில ஆர்ஜிதம் செய்து குடி இருக்க வீடு கட்டிக்

கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு போக்குவரத்து வசதி, விளக்கு வசதி எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த 65 குடும்பங்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஹரிஜன நலப் பள்ளிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. கள்ளர் சீரமைப்பு துறையில் ஆரம்பப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் 200-க்கு மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. ஹரிஜன நலத் துறையில் இருக்கும் ஹரிஜன நலப் பள்ளிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. பொதுவாக, பெரியகுளம் தாலுகாவை எடுத்துக் கொண்டால் அம்மச்சியாபுரம், குன்னூர், தேனி பொம்மிநாயக்கன் பட்டி என்ற நான்கு இடங்களில்தான் மேற்படி பள்ளிகள் இருக்கின்றன. மேலும் 20 ஹரிஜன நலப் பள்ளிகளாவது மேற்படி தாலுகாவில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நடைபெற்று வரும் ஹரிஜன நலப் பள்ளிகளில் இரண்டொரு பள்ளிகளையாவது உயர்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன ஹாஸ்டல்களுக்காக கட்டட வாடகை ரூ. 200, ரூ. 250 கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் ஹரிஜன நலத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு வாடகை கொடுக்கும் பணத்தைக் கொண்டு சொந்தமாக கட்டடங்களைக் கட்டி விடலாம்.

விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ட்யூட்டர்கள் போடவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ட்யூட்டர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போட வேண்டும் என்று இருப்பதை இந்த 1966-ம் ஆண்டிலேயே நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உழவு மாடுகள் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதை நான் வரவேற்கிறேன். ஒரு கிராமத்தில் மாடுகள் வேண்டுமென்று 10 மனுக்கள் போடுகிறார்கள் என்றால், அதில் கொஞ்சம் வசதியான ஹரிஜனங்களும் மனு போட்டுவிடுகிறார்கள். இப்போது சீட்டு குலுக்கித்தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சீட்டு விழுவதும் கொஞ்சம் வசதியானவர்களுக்குத் தான் விழுகிறது. மனுக்கள் வரும்போது, ஒரு கிராமத்திலிருந்து 10 மனுக்கள் வந்தால், அந்த மனுக்கள் போட்டவர்களில் பரம ஏழையாக இருப்பவர் யார் என்று நேரடியாக அமைச்சர் அவர்கள் கூப்பிட்டு, சீட்டுக் குலுக்கும் முறையை ஒழித்து விட்டு, பரம ஏழையாக இருக்கிற ஹரிஜனுக்கு இனாம் உழவு மாட்டைக் கொடுக்க அமைச்சர் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்பைப் பொறுத்த வரையில், மதுவிலக்குச் சட்டத்தை கட்டாயமாக அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று போலீஸ் எல்லாம் போட்டு நிறைவேற்றுகிறோமே, அதே போன்று இதையும் கட்டாயமாக அமலுக்குக்கொண்டுவர முக்கியமாக ஒருவரைப் போட்டு இந்தச் சட்டத்தையும் அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எத்தனையோ கிராமங்களில் ஹரிஜன ஆசிரியர்களை ஹரிஜன் என்று தெரியாதவரை குடி இருக்கும் வீடுகளில் குடியிருக்க அனுமதிக்கிறார்கள். ஜாதி வித்தியாசம் தெரிந்த உடனே அவர்கள் காலி பண்ணவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஹரிஜன நலத் துறையிலேயே ஹரிஜன ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து குடியிருக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*** திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இலாகாவிலே அவர்கள் ஓரளவுக்கு ஹரிஜனங்களுக்காகவும், பின்தங்கிய வகுப்பினர்களுக்காவும், அவர்கள் முன்னேற்றம் அடைவதற்காக வேலை செய்து வந்த போதிலும் கூட அவர்களுடைய குறைகள் நிறைய இருக்கின்றன. அவர்களுக்குப் போதிய பணம் ஒதுக்கப்படவில்லை என்பதைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைகள் வழங்குவதிலே குறிப்பாக ஒரு கிராமத்திலே 10 வீடுகளோ, 20 வீடுகளோ கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற 80 வீட்டுக்காரர்களுக்கும் அந்த வசதி செய்யப்படவில்லை. இப்போது ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் அந்த கிராமத்தில் உள்ள அத்தனை ஹரிஜனங்களுக்குமாவது அதைக் கொடுத்தால் அது ஓரளவுக்கு நல்ல முறையில் இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால் 10 வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்தவுடனே மற்ற 90 வீட்டுக்காரர்களும் நமக்கும் முறைப்படி வரும் என்று காங்கிரஸை ஆதரிக்க வேண்டும் என்று செய்வதாகக் கருதப்படுகிறதே தவிர கிராம மனைக்கட்டுப் பிரச்னையைத் தீர்ப்பதாக இல்லை. கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டு போவதைவிட ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால், ஒரு தாலுகாவை எடுத்துக் கொண்டால் இருக்கக் கூடிய அத்தனை ஹரிஜனங்களுக்கும் வழங்கினால் நலமாக இருக்கும்.

அடுத்து மோஸ்ட் பாக்வேர்ட் என்று பின்தங்கிய வகுப்பினரில் ஒரு சிலரை எடுத்திருந்தார்கள். அவர்களுக்கு ஹரிஜனங்களைப் போல சில சலுகைகள் செய்யப்பட்டு வந்தது. இப்போது அந்த முறையில் கொடுக்கப்பட்டு வருகிறதா? அல்லது நிறுத்தப்பட்டு விட்டதா? என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. காகா கலேல்கர் என்ற ஒருவரை பிரெஸிடெண்ட் அவர்கள் நியமித்து இந்தப் பின்தங்கிய வகுப்பினரும், ஆதித் திராவிட

களும் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள், இன்னும் என்ன செய்யவேண்டுமென்று ஒரு குறிப்பு எடுக்கப்பட்டது. அவர்கள் பின் தங்கிய வகுப்பினருக்குச் செய்யவேண்டிய வேலைகள் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ஒருசில இடங்களில் அவர்கள் ஹரிஜனங்களுக்கும் கீழாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டது எதுவும் நடைமுறையில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகையால் ஹரிஜனங்களுக்கும் கேவலமாக இருக்கக்கூடிய பின் தங்கிய மக்களுக்கு, அதற்காக தனி இலாகா ஏற்படுத்தி, பணத்தை இன்னும் அதிகமாக ஒதுக்கி, அவர்களுக்கு வீட்டு வசதி, மனைக்கட்டு வசதி, படிப்பு வசதி எல்லாம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய சர்க்காரில் கொடுக்கப்பட்டு வந்த உபகாரச் சம்பளம் இன்றைக்கு நிறுத்தப்பட்டுவிட்டது பின் தங்கிய மக்களுக்கு. . . .

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, மத்திய சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட பணம் நிறுத்தப்பட்டு விட்டது என்பது உண்மை அல்ல. அவர்களால் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கி. இரா. சம்பந்தம் : ஏற்கனவே மத்திய சர்க்காரும் கொடுத்து வந்தார்கள். மாகாண சர்க்காரும் கொடுத்து வந்தது. இப்பொழுது மாகாண சர்க்கார் ரூ. 750 கொடுக்கிறது. மத்திய சர்க்காரால் ஏற்கனவே ரூ. 1,200 கொடுக்கப்பட்டு வந்தது. அது நிறுத்தப்பட்டு விட்டது என்றுதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்களா ?

திரு. கி. இரா. சம்பந்தம் : மாகாண சர்க்கார் கல்லூரி மாணவர்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் இப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ரூ. 1,200 முன்பு கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டுவிட்டது. இப்பொழுது மத்திய சர்க்கார் மொத்தமாக பணம் கொடுக்கிறார்கள். அதிலிருந்து பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது பொருளாதார அடிப்படையில், 'மெரிட்' படி கொடுக்கவேண்டும் என்று அதை அமைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பின்தங்கிய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஜனத்தொகையில் முக்கால் பங்கு ஹரிஜனங்களும், பின்தங்கிய மக்களுமாக இருக்கிறார்கள். அவர்களை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்று சொல்லும்பொழுது அந்த அளவுக்கு பணம் ஒதுக்கி உதவி செய்தால்தான் அவர்கள் முன்னேற்றம் அடைய முடியும். அவர்கள் முன்னேற்றம் அடைவது இப்பொழுது கஷ்டமாக இருக்கிறது. கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி இருக்கிறது, அவர்களுக்கு ஒதுக்கப்படும் பணம். மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் போதாமல் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் கூடியவரையில்

எப்படியாவது செய்யவேண்டுமென்றுதான் இருக்கிறார்கள். இப்பொழுதுகூட எட்டயப்ப நாயக்கர் ஹாஸ்டலில் 20, 30 மாணவர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தபொழுது, அமைச்சர் அவர்கள் இப்பொழுது அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மாதிரி பின்தங்கியவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இலாகாவிற்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் ஏழை மக்களுடைய குறைகளை, சிறப்பாக ஹரிஜனங்களுடைய, தாழ்த்தப்பட்டவர்களுடைய குறைகளை அனுதாபத்துடன் கவனிக்கிறார்கள். குறைகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரும்பொழுது, அவைகளை மிக அனுதாபத்துடன் கவனித்து, துரிதமாக காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி இந்த இலாகாவிலும் துரிதமாக காரியங்களை நிறைவேற்றினால் சௌகரியமாக இருக்கும்.

எதிர்க்கட்சியினர் சொல்லியபடி அநேக குறைகள் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால், மகாத்மா காந்தியடிகள் பொருளாதாரத் துறையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு பல வருஷங்களுக்கு பல திட்டங்கள் போட்டதற்கு இணங்க, நமது ராஜ்ய சர்க்கார் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக தொகை ஒதுக்கி, பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தபோதிலும், மனைக்கட்டைப் பொறுத்தவரையில், இன்னும் காரியங்கள் துரிதப்படுத்தப்படவேண்டும். இப்பொழுது வீடுகள் கட்டுவதற்கென்று கொஞ்சம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் மிகவும் தாமதப்படுகிறது. ஆகவே, வீடுகள் கட்டுவதை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, எல்லோருக்கும் மனைக் கட்டுகள் வழங்கினால், அது மிகவும் உபயோகமாக இருக்கும். அடமானம் செய்வதிலே பல மாமூல் வழக்கங்களினால், 'பார்மாலிடீஸ்' செய்து முடிக்கவேண்டியிருப்பதால் மிகவும் காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஹரிஜனங்களுக்கு ஒதுக்குகிற மனைக்கட்டுகள் விஷயமாக மிக துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்பெஷலாக விதி போட்டு, மனைக் கட்டுகளை ஆர்ஜிதம் செய்வதை துரிதப்படுத்தினால் மிகவும் உபயோகமாக இருக்கும். அப்படி மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்வதோடு, அவர்களுக்கு வேண்டிய ரஸ்தா வசதி, மின்சார வசதி இவைகளையும் செய்து கொடுத்துவிட்டால், மிகவும் சௌகரியமாக இருக்கும்.

ரெவின்யூ கோர்ட்டுகளில் ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டி மனுக் கொடுத்து, பல கேஸ்கள் ஹரிஜனங்கள் மீது போடப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான கேஸ்கள் கோர்ட்டில் இருக்கின்றன. ஹரிஜன விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றுவதற்காக கேஸ்கள் போடப்படுகின்றன. கோர்ட்டில் ஆங்கிலத்தில் தான் கேஸ்கள் நடப்பதால் ஏழை விவசாயிகளுக்கு ஒன்றுமே

தெரிவதில்லை. இதனால் அவர்கள் அநேக முறை விவசாயத்தை விட்டு விட்டு கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்தக் கேஸ்களை துரிதமாக நடத்தவேண்டும். அதோடுகூட இந்தக் கேஸ்களை தமிழிலே நடத்தினால், மிகவும் பிரயோசனமாக இருக்கும். இதனால் ஏழை விவசாயிகளுக்கு அதிகமாக செலவு ஆகிறது.

ஹாஸ்டல்களுக்கு அநேக இடங்களில் கட்டடம் இல்லை. அவைகளுக்கெல்லாம் கட்டடம் கட்டிக்கொடுத்தால் மிகவும் பிரயோசனகரமாக இருக்கும். ஒவ்வொரு ஹாஸ்டலிலும் அதிகமாக மாணவர்களை சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு பெண் ஹாஸ்டல் வைத்தால், பெண்கள் படிப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

முன்பெல்லாம் பால் வழங்கும் சங்கங்களை வைத்திருந்தார்கள். பசுக்கள் வாங்குவதற்கு நிதி வசதி செய்து தரப்பட்டது. இந்த சலுகைகள் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கின்றன. பசுக்கள் வாங்குவதற்கு அவர்களுக்கு பண உதவி செய்தால் நலமாக இருக்கும். குடிசைத் தொழில் செய்வதற்கு, கோழி வளர்ப்பது போன்ற காரியங்களுக்கு உதவி செய்தால் ஏழை ஹரிஜனங்களுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும். உபகாரச் சம்பளம் கொடுப்பதை அதிகப்படுத்தவேண்டும். விலைவாசி கூடியிருக்கிற காரணத்தினால், ரூ. 2,000-க்கு குறைவாக இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்.

சென்ற மாதத்தில் அதிக மழையினால் வெள்ளம் ஏற்பட்டு, அநேக வீடுகள் இடிந்துபோய்விட்டன. நாகப்பட்டிணம் ஆர்.டி.ஓ., கொடவாசல் தாசில்தார் ஆகியோர் வந்து பார்த்தும், வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்காக கொடுக்கப்படும் ரூ. 15, 30 இன்னும் கொடுக்கப்படவில்லை. அந்த மக்களெல்லாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, ரோடில் வந்து குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பணம் வரும் என்று எதிர்பார்த்து வீடுகள் கட்டாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு காலாகாலத்தில் வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கு பண உதவி செய்துகொடுத்தால், மிகவும் உபயோகமாக இருக்கும்.

அரசாங்கம் ஹரிஜன முன்னேற்றத்திற்காக பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அமைச்சர் கக்கன் அவர்கள் இன்னும் அதிகமாக ரூபாய் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜன மக்களைப் போலவே இன்னும் தாழ்த்தப்பட்ட நிலைமையில் உள்ள பிற்பட்ட ஜாதியினர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுத்தால், மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மா. தண்டாயுதபாணி: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1956-ம் ஆண்டு முதல் 1966-ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட

[திரு. மா. தண்டாயுதபாணி] [22nd March 1966

35 கோடி ரூபாய் நாம் ஹரிஜனங்களுக்கும், பின்னிலை வகுப்பினருக்கும் செலவு செய்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை ஓரளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இருந்தாலும், பூரணமாகச் செய்து விட்டோம் என்று நாம் கூற முடியாது. எவ்வளவுதான் நாம் முன்னேற்றப்பாதையில் அவர்களை இட்டுச் சென்றாலும்கூட, பழைய மூட பழக்க வழக்கங்களிலிருந்து அவர்களைச் சீர்திருத்திக் கொண்டுவருவதற்கு இன்னும் சில காலம் பிடித்தால்கூட, ஆச்சரியப்படுவதற்கு இல்லை. குறிப்பாக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்கு மனை நிலம் ஆர்ஜிதம் செய்துகொடுத்து, வீடுகள் கட்டிக்கொடுக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய ஒரு அங்கத்தினர் கூறியது போல, ஒரு ஹரிஜனக் காலனியில் 50 குடிசைகள் இருந்தால், 10 வீடுகள் நாம் கட்டிக் கொடுக்கிறோம். 10 வீடுகள் மட்டும் கட்டிக்கொடுத்தால், மீதியிருக்கிற 40 வீடுகளில் இருப்பவர்கள் சர்க்காரால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடுகிறது. அதோடு மட்டுமல்ல, வீடுகட்டுவதற்கு நாம் வழங்குகின்ற தொகை ரூ. 750. ரூ. 250 உழைப்பாகக் கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். விலைவாசி ஏறியிருக்கிற இந்த நேரத்தில் ரூ. 1,000-க்குக் கட்டப்படுகிற வீடுகள் எத்தனை காலத்திற்கு இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். அதில் கூட ஒன்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஜன்னல் வைப்பதற்கு அவர்கள் நிர்ணயம் செய்திருக்கிற தொகை ரூ. 6. ரூபாய் 6-ல் கம்பி கட்டி, சட்டம் அடித்து ஒரு ஜன்னல் வைக்கவேண்டும் என்று சொன்னால், அந்தக் கட்டடம் எத்தனை நாட்களுக்கு நீடித்திருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலையை மாற்றி நிலத்தை ஆர்ஜிதம் செய்து அதை மட்டமாக செய்து, அவர்களுக்கு வழங்கிவிட்டால், அதுவே அவர்களுக்கு ஒரு பெரிய நல்ல முறையாக அமையும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நில ஆர்ஜிதம் செய்வதுபற்றி பல புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தாலுகா வாரியாக நாம் எடுத்துக் கொண்டால், வழங்கப்பட்ட நிலங்கள் மிகமிகக் குறைவு, வந்திருக்கிற மனுக்கள் மிகமிக அதிகம். அதற்குக் காரணம் ஒவ்வொரு ஜில்லாவிலும் நான்கு தாசில்தார்கள் போட்டிருக்கிறோம். அவர்கள் அந்த மனுக்களை பரிசீலனை செய்வதற்கு ஏறத்தாழ 6 மாத காலம் ஆகிவிடுகிறது. இப்படி காலதாமதத்தை தவிர்ப்பதற்கு இன்னும் அதிகமாக தாசில்தார்களைப் போட்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளே எல்லோருக்கும் வீட்டு மனை வழங்குவதற்கு நாம் திட்டமிடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குடிதண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில் 'ஆர்.டபிள்யூ.எஸ். வெல்' என்று முன்பெல்லாம் அமைக்கப்பட்டது. அந்தக் கேணி இருக்கிற இடத்தைப் பார்த்தால் ஹரிஜனங்கள் வாழ்கின்ற பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. அந்த இடமும் சர்க்கார் புறம்போக்குதான். தண்ணீர் நன்றாக இருக்கிறதா, இல்லையா என்று கூடப் பரிசீலனை செய்யப்

22nd March 1966] [திரு. மா. தண்டாயுதபாணி]

படவில்லை. அந்தக் கிணறு இருக்கிற பகுதிகளில் இப்பொழுது கிணறு வெட்டுவது சிரமமாக இருக்கிறது. அந்த முறையை மாற்றி, ஹரிஜனங்கள் குடியிருக்கிற குடியிருப்பு இடங்களுக்கு அருகிலே நல்ல தண்ணீர் இருக்கிற இடத்தில் கிணறு வெட்டுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புறம்போக்கு நிலங்களை நாம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த நிலங்களில் ஹரிஜனங்கள் பெருவாரியாக சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், பஞ்சாயத்துக்கள் அவர்களை வெளியேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஹரிஜனங்களை, அவர்கள் சாகுபடி செய்துகொண்டிருக்கும் நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். அந்த முறையை மாற்றி, சாகுபடி செய்துகொண்டிருக்கும் ஹரிஜனக் குடி மக்களுக்கு அந்த நிலத்தை ஜாரி செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹாஸ்டல்கள் நடத்திவருகிறோம். இதிலே 3 10–30 a.m.
வகையான ஹாஸ்டல்கள் இருக்கின்றன. ஹரிஜன நல இலாகாவே மேற்கொண்டு நடத்தும் ஹாஸ்டல் ஒன்று. அடுத்தபடியாக, தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹாஸ்டல். அதற்கு மானியம் வழங்குகிறோம். இன்னொன்று, ஹரிஜன நல இலாகா மானியம் வழங்குவது. அந்த ஹாஸ்டலை நடத்தும் நிர்வாகிகள் எந்த இடத்தில் அப்படிப்பட்ட ஹாஸ்டல்கள் இருக்கின்றனவோ அங்குள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் இருந்து சான்று இதழ் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மானியம் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த மாதிரி ஒரத்தநாடு தாலுகாவில், வடசேரி, வாண்டையார் இருப்பு என்கிற இடங்களிலே இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. இரண்டு ஆண்டுக் காலமாக அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சான்று இதழ் கொடுக்க மறுக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலே, ஒவ்வொரு ஹாஸ்டலிலும் 50 மாணவர்கள் இருப்பதால், அவற்றை நிர்வாகம் செய்வது மிக்க சிரமமாக இருக்கிறது. அவற்றை ஹரிஜன நல இலாகாவேகூட மேற்கொண்டு நடத்தலாம். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரத்தநாட்டிலே பெண்கள் விடுதி ஒன்று வாடகை வீட்டில் நடத்தப்பட்டுவருகிறது. அதற்கு இந்த ஆண்டாவது ஒரு நல்ல கட்டடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஸ்காலர்ஷிப் வழங்குகிறோம். அந்தமாதிரி கொடுக்கும்போது, பின்னால் 4, 5 ஆண்டுகளுக்குப் பிறகு, வாங்கிய தொகை சரியில்லை என்று சொல்லி அதைத் திருப்பி வசூலிக்கத் தொடங்குகிறார்கள். அது மிகக் கஷ்டமாகப் போய்விடுகிறது. அப்படிக் கொடுப்பதற்கு முன்பாகவே, தொகை வாங்க அந்த மாணவனுக்குத் தகுதி இருக்கிறதா, இல்லையா என்பதைப்

[திரு. மா. தண்டாயுதபாணி] [22nd March 1966

பரிசீலிக்க வேண்டும். தகுதி உள்ளவனுக்கே வழங்கினால், இது போன்ற சிரமங்கள் பின்னால் ஏற்படாது. ஆகவே, இயன்றவரை ஆரம்பத்திலேயே தகுதியைப் பற்றிப் பரிசீலிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி பட்டியலிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, இராமநாதபுரத்திலே 68 சங்கங்களும், மதுரையிலே 56 சங்கங்களும், தஞ்சையிலே மூன்றே மூன்றும் தான் இருக்கின்றன. அதை அதிகரிக்க வேண்டும், தஞ்சைக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

* **திரு. வி. எஸ். அருணாசலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சரால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். இநல ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் குறைந்து கொண்டே போகிறது என்பது பலருடைய அபிப்பிராயம். ஆனால் என்னுடைய அனுபவத்தில் ஏறத்தாழ, 1946 முதல் இந்த சமூக சேவையில் நான் ஈடுபட்டு வருகிறேன். முந்தி இருந்த என்னுடைய தொகுதி சட்டசபை உறுப்பினரும், தற்போது முதல் அமைச்சரும், இந்த சமூகத் தலைவர் திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்களும், முன்னாள் அமைச்சர் திரு. பரமேச்வரன் அவர்களும், எனக்கு ஊக்கம் அளித்து, அவர்களுடைய தொடர்பால் நான் 1946 முதல் இந்நாள் வரை இந்தச் சமூக சேவையில் ஈடுபட்டிருக்கிறேன். இந்த 20 ஆண்டில், பல காரியங்கள் மக்களுக்குப் பயன்பட்டு, நல்ல முறையிலே என்னுடைய தொகுதி மக்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நானும் என் தொகுதி மக்களும் மறக்க மாட்டோம். ஏனென்றால், முன்னேறவில்லை, முன்னேறவில்லை என்று சொல்பவர்கள், அதற்கு ஆதாரம் என்ன என்று சொல்லவேண்டும். இன்றைக்கு இருக்கும் நிலையில் இந்த அரசாங்கம் அரிசன மக்களுடைய முன்னேற்றத்திற்குப் பல வகைகளிலும் பாடுபட்டு வருகிறது. இரண்டு படி அரிசியை சாதம் வடித்து ஏறத்தாழ 100 பேர்களுக்கு பந்தி சரியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால், எப்படி மக்களுக்குத் திருப்தி ஏற்படுத்த முடியும்? ஐந்துகோடியை பத்துகோடியாக ஆக்கவேண்டும் என்று கேட்கவேண்டும். அப்படி அதிகமாகத் தொகைகளை ஒதுக்க முற்படவேண்டும்.

ஹரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதில், ரூ. 1,000 என்று சொல்லி, ரூ. 250 லோனாகவும், ரூ. 750 இனாமாகவும் கொடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட வீடுகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தால், அந்த மக்களுக்குக் கஷ்டம் தான் அதிகமாக இருக்கிறது. இந்த லோனைக் கொடுக்க அவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, லோன் என்று ஒன்றும் இல்லாமல், ரூ. 1,000 ஐயும் இனாமாகவே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் இந்த 1,000 ரூபாயையும் போதாது. குறைந்தது இதை ரூ. 2,000 என்றாவது அதிகரிக்கவேண்டும்.

22nd March 1966] [திரு. வி. எஸ். அருணாசலம்]

ஹரிசனக் குடிமக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் முற்படவேண்டும். நிதியில்லை என்கிற குறை இருக்கிறது. இருந்தாலும், மற்ற வசதிகளுக்கு எப்படியிருந்தாலும், குடி மனைக்கு மட்டுமாவது துரிதமாக ஆவன செய்ய வேண்டும். குடிமனை சம்பந்தப்பட்டவரை நிதி இல்லை என்று எதையும் நிறுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காலேஜில் அதிகம் மாணவர்கள் சேர முடியவில்லை. என்னுடைய தொகுதியில் காலேஜில் படிக்கும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதிலே முன்னேற்றம் இருக்கிறது. ஆனாலும், காலேஜில் சேர்க்கும்போது நான் படும் பாடும் கஷ்டமும் அதிகமாக இருக்கிறது. ஹரிசன மாணவர்களுக்கு மார்க்கு கணக்கு என்று வைக்காமல், எல்லோரையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று வைத்துவிடவேண்டும். அப்படிப்பட்ட கொள்கையை அரசாங்கம் மேற்கொண்டால் ஹரிசன மாணவர்கள் எல்லோரும் படிக்க வசதியாக இருக்கும் என்று சொல்லி உரையை முடிக்கிறேன்.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் பிரேரணைமீது எங்கள் கட்சி சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து, சில வார்த்தைகள் கூறலாம் என நான் இருக்கின்றேன். அரிசன நல இலாகா, மனை வழங்க வேண்டும் என்று ரூ. 15 கோடியை ஒதுக்க வேண்டும் என்றது. இந்த அரசாங்கம் அதற்கு ஒரு குழுவை அமைத்து, அந்த குழு பல சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்திலே, அரிசன மக்களை விட பிற்பட்ட மக்களும் அதிகத் தாழ்மையான நிலையில் இருக்கிறார்கள். வேண்டுமானால், அரிசன மக்களுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டுப் போங்கள். ஆனால், பிற்பட்ட மக்களுக்கு, அவர்கள் கொடுக்கின்ற பணத்தை வாங்கிக்கொண்டு மனையைக் கொடுங்கள் என்றால் ஏன் இந்த அரசாங்கம் முயற்சி செய்யவில்லை என்று கேட்கிறேன். பல கிராமங்களில் பல பிற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களையும் குடிமக்களாக இந்த சர்க்கார் பார்க்கவில்லை என்றுதான் சந்தேகம் அடையும் நிலையில் இருக்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: சந்தேகப் படுகிறவர்களுக்கு எப்பொழுதும் சந்தேகம் தான்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: பல தடவைகள் கேட்டிருக்கிறோம். மனைகள் கொடுத்திருக்கிறீர்களா? ஏழை, பிற்பட்ட மக்கள் மனை வேண்டும் என்று பணம் கொடுக்கிறோம் என்றாலும் நில ஆர்ஜிதம் செய்ய அமைச்சர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அரிசன நல இலாகா என்று வைத்து விட்டு, பிற்பட்ட இலாகாவையும் இதில் ஏன் சேர்க்க வேண்டும்? பிற்பட்ட மக்கள் லிஸ்டு என்று தயாரிக்கப் பட்டிருக்கிறது. அதை ஒழித்துக் கூட விடலாம். பிராமணர்களைத் தவிர மற்ற எல்லாரும் பிற்பட்ட லிஸ்டில் இடம் பெற்று

இருக்கிறார்கள். ஆனால் அந்த பிற்பட்ட மக்களுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்படுகிறதா, அரிசனமக்களுக்குச் சமமாக சலுகைகள் கொடுக்கப்படுகிறதா என்றால், இல்லை என்கிற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். ஐந்து, பத்து ஆண்டுகளுக்கு முன்பாக வழங்கப்பட்ட மனைகளில் வீடுகள் கட்ட முடியாத நிலை இருக்கிறது. எல்லோரும் எல்லா இடத்திலிருந்தும் மனுக்கள், விண்ணப்பங்கள் போடுகிறார்கள். விண்ணப்பம் கொடுத்து விட்டால் மட்டும் மனையை ஆர்ஜிதம் செய்யப் புகுவது நல்லதல்ல. தேவைதானா என்று பார்க்கவேண்டும்.

ஸ்காலர்ஷிப்புக்கு என்று பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதை மனமார வரவேற்கிறேன். அது ஒன்றுதான் 100—க்கு 200 மடங்கு பயன் கொடுக்கக் கூடியது. கொடுத்திருக்கிற இந்த அறிக்கையிலே பிற்பட்ட மக்களுக்கு சென்ற ஆண்டில் தோராயச் செலவு ரூ. 72.80 லட்சம்; வரும் ஆண்டில் ரூ. 51.52 லட்சம் தான்; எதற்காகக் குறைவு ஏற்படவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கீழே இருக்கிறது, படித்துப் பாருங்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : படித்துத்தான் சொல்லுகிறேன். தோராயச் செலவு 1965-66-ல் ரூ. 72.80 லட்சம் ; 1966-67-ல் ரூ. 51.52 லட்சம் இந்த விளக்கக் குறிப்பின் 4-வது பக்கத்தில் 1965-66-ம் ஆண்டுக்கான தோராய செலவு, இதர பின்னிலை வகுப்பினருக்காக, 72 லட்சம் 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில், 1966-67-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, இதர பின்னிலை வகுப்பினருக்கு, 51 லட்சம் 52 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்குக் குறைவானேன் ? எதற்காகக் குறைய வேண்டும் ?

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், கடலூர் கலைக் கல்லூரியிலும் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கும் ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் அளிக்காமல் நான்-ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் அளிக்கப்பட்டதைப் பற்றி நான் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், கடலூர் கலைக் கல்லூரியிலும் படிக்கின்ற பிற்பட்ட மாணவர்கள் ஹாஸ்டலில் தங்கியிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஹாஸ்டலில் தங்கிப் படிக்கின்ற பிற்பட்ட மாணவர்களுக்கு என்ன ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கிறார்கள் ? 124 ரூபாய் பிச்சைக் காசு கொடுக்கிறார்கள். ஏன் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கின்றவர்களுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கவில்லை? 258 மாணவர்கள் இந்த நிலையில் இருக்கிறார்கள் என்று நான் ஒரு மாதத்திற்கு முன்பு சொன்னேன். கடலூர் கலைக் கல்லூரியில் படிக்கும் பிற்பட்ட மாணவர்கள், அண்ணாமலை யூனிவர்ஸிடியில் படிக்கும் பிற்பட்ட மாணவர்களைப் பொறுத்து மட்டும் எதற்காகப் பேதம் காட்டப்பட வேண்டும் ? அவர்களும் மாணவர்கள் இல்லையா ? அவர்களும் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கவில்லையா ? அவர்களுக்கு நான்-ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுப்பானேன் ? ஏன் ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கக் கூடாது ? மந்திரியிடம் எம்.எல்.ஏ. சொல்லி, அதைச் செய்து

விட்டால் மட்டும் போதாது. மாவட்டந்தோறும் செய்யவேண்டும். இப்பொழுது இந்த இலாகாவின் மூலமாகப் பிற்பட்ட மக்களுக்குத் தீங்கு தான் இழைக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டைத் தான் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பிற்பட்ட மக்களுக்கு இந்த அரசாங்கம் துரோகம் செய்கிறது என்று குற்றஞ் சாட்டி உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***திரு. ஆதி. அப. சவுந்தரவேல் சேர்வை :** கனம் சபாநாயகர் அவர்களே, அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை நான் ஆதரிக்கின்றேன். அரிசன நலத்திற்காக இந்த அரசாங்கம் செய்திருக்கும் சாதனையைக் குறித்த இந்தக் குறிப்பை யாரும் பாராட்ட வேண்டும். ஆதரிக்க வேண்டும். வரவேற்கவேண்டும். இதைக் குறை சொல்லிப் பேசுவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லை என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட இந்த மானியத்தை நான் மறுமுறையும் ஆதரிக்கிறேன்.

இப்பொழுது அரிசன நலனுக்காக அனுசரிக்கப்படும் முக்கிய குறிக்கோள் என்னவென்றால், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும், அவர்களுக்குப் படிப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும், அவர்களுக்குக் குடியிருக்க இடங்கள் ஒதுக்கிக் கொடுக்கவேண்டும். இந்தத் திட்டத்திலே எங்கள் ஜில்லாவைப் பொறுத்த அளவுக்கு, போடிநாயக்கனூர் தொகுதியில் பல இடங்களில் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆகியும், வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், அரிசனங்களுக்கு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. அதையும் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதிலே குறிப்பாக, 'நகரசுத்தித் தொழிலாளர்கள்' என்ற அடிப்படையில், அவர்களுக்கு வீடு கட்ட ஆறு லட்ச ரூபாய் வரை ஒதுக்கப் பட்டிருக்கிறது. போடிநாயக்கனூர் நகரத்திலே அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு என்று இடங்கள் நகரசபையினரால் கொடுக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. அதை அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வேண்டிய மானியத்தை நகரசபைக்கு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எனது போடிநாயக்கனூருக்குப் பக்கத்தில் அகமலை கிராமம், கொட்டகுடி கிராமம் என்று இரு கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களில் ஆதிவாசிகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் போக்குவரத்துக்கு வசதி இல்லாத அளவுக்கு, பாதைகள் அபிவிருத்தி இல்லாத அளவுக்கு அங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு ரோடு வசதி அமைத்துக் கொடுத்து, ஆதிவாசிகளுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் போடி வட்டாரத்தில் உள்ள இந்தக் கொட்டகுடியிலும், அகமலையிலும் வசிக்கும் மலைவாசிகளுக்கும் அளிக்கவேண்டும்.

குறிப்பாகக் கல்வி வசதியும், தொழில் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டு, மறுமுறையும் இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன் நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச முன்வருகிறேன்.

மலை ஜாதி மக்களுக்கும், அரிசன மக்களுக்கும், அருந்ததிய மக்களுக்கும் வேண்டிய சலுகைகளை அரசாங்கம் செய்து வருகிறது. 1957-ல் மலை ஜாதி மக்களுக்கு ஒரு ஸீட் ஒதுக்க நமது தலைவர் திரு. காமராஜ் அவர்கள் முன்வந்தார்கள். மலை ஜாதி மக்கள் முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காக ஒரு ஸீட் அவர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். 1966-ம் வருஷம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மலை ஜாதி மக்களுக்கு ஏதோ ஓரளவில் வேண்டிய வசதிகள் செய்து வருகிறது, இந்த அரசாங்கம். இன்னும் மலை மேலிருக்கிற மக்களுக்கு வசதிகள் எட்டாமல் இருக்கின்றன. காரணம், பத்து, இருபது மைல் தூரத்தில் மலை மேல் இருக்கும் மக்களுக்குப் போக்குவரத்து வசதி, வீட்டு வசதி, பள்ளிக்கூட வசதி ஆகியவைகளெல்லாம் போதுமான அளவு இல்லாமல் இருக்கிறது. போக்குவரத்து வசதி முக்கியமாகச் செய்யப்பட வேண்டும். முக்கியமாக ஆபீசர்களோ, பஞ்சாயத்து சேர்மனோ போதிய முயற்சி எடுத்துச் செய்யாத காரணத்தால், இன்னும் பல இடங்களில் கொஞ்சம் குறைபாடாக இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்கவேண்டும். கொல்லி மலை, பச்சைமலை, பெரியமலை, கல்ராயன்மலை, பாலமலை, காளிமலை இப்படிப்பட்ட மலைகளுக்கெல்லாம் எம்.எல்.ஏ. க்களும் அதிகாரி களும், மற்றவர்களும் ஒவ்வொரு மலையாகப் போய்ப் பார்த்து வேண்டிய வசதியைச் செய்து, எப்படி எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ அதற்கெல்லாம் வகை செய்து, அங்குள்ள பிற்பட்ட ஆதிவாசி மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டும். அதற்கு முக்கியமாக போக்குவரத்து வசதி செய்துகொடுக்க வேண்டும். அதற்கு என்று தனியாக அதிகாரி போட்டால் கூட நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி, பள்ளிக்கூட வசதி போன்றவை இன்னும் மலை ஜாதி மக்களுக்கு எட்டாமல் கொஞ்சம் குறைபாடாக இருக்கிறது. நானும் 1959-இலிருந்து ஹாஸ்டல் கட்டுவதைப்பற்றிச் சொல்லி வருகின்றேன். கோணமடு, கொல்லிமலை, முள்ளக்குரிச்சி ஆகிய இடங்களில் ஹாஸ்டல் கட்டவேண்டும் என்று சொல்லி வருகிறேன். கோணமடு ஹாஸ்டலைத் தவிர, மற்ற இரண்டு இடங்களிலும் ஹாஸ்டல்கள் கட்டப்பட்டுவிட்டன. கோணமடுவில் ஹாஸ்டல் கட்டாமல் சின்னப் பள்ளிக்கூடத்திலேயே அந்த ஹாஸ்டலை நடத்துகிறார்கள். அதிலே 20 நாள் சாப்பாடு இருந்தால், பத்து நாளைக்குச் சாப்பாடு இல்லை. பள்ளிக்கூடம் காலியாக இருக்கிறது. உடனடியாக அமைச்சர் அவர்கள் கவனித்து. அந்த ஹாஸ்டலைக் கட்டி மக்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மலை ஜாதி மக்களுக்குப் படிப்பு வசதி இல்லாததால், அவர்கள் ஏதோ 4, 5, 6 வது வகுப்பு வரை படித்துவிட்டு அத்துடன் நின்று விடுகிறார்கள். அவர்களுக்கு எந்த ஆபீசிலும் உத்தியோகம் கிடைப்பதில்லை. இந்தக் குறைந்த படிப்புக்கு என்ன உத்தியோகம் கொடுக்க முடியும்? என்று கேட்டு, உத்தியோகம் கொடுப்பதில்லை. 6, 7-ம் வகுப்புவரை படித்த இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு சின்ன வேலையாவது கொடுத்தால் அவர்களும் நாளடைவில் முன்னுக்கு வரமுடியும். பஞ்சாயத்திலோ, சொஸைட்டியிலோ, லைப்ரரியிலோ, நகர காங்கிரஸிலோ, தாலுக்கா காங்கிரஸிலோ வேலை கொடுத்தால் நல்லது. ஆதி வாசிகளுக்கென்று தனியாக இவைகளில் ஸீட்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மலை ஜாதி மக்களுக்கென்று மேல் சபையில் ஒரு ஸ்தானம், எம்.எல்.ஸி. என்கிற ஸ்தானம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். அமைச்சருக்கும் கனம் சபாநாயகருக்கும் கூடத் தெரியும். ஏப்ரலிலிருந்து நான்கு ஸீட்டுகள் இருக்கிறாப் போல் தெரிகிறது. அதிலே மலை ஜாதி மக்களுக்கும் ஸீட் ஒதுக்கி, அவர்களும் மேல் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பார்லி-மெண்டுக்கும் ஒரு ஸீட் 1967-ல் வருகிற தேர்தலுக்கு மலை ஜாதி மக்களுக்காக ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கே. பி. பழனிசாமி:** தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த அரிசன நல மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் நான் கூற விரும்பு கிறேன். குறிப்பாக, நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்து சுமார் 18 ஆண்டுகள் ஆகின்றன. இதற்குமுன்பு எத்தனையோ கஷ்டங்களை நாம் அடைந்திருக்கிறோம், அரிசனங்களைப் பொறுத்த வரையிலும். ஆனால், 18 ஆண்டுகளுக்குள்ளே ஓரளவுக்கு இந்த சமூகத்தினர் படித்து, அதற்குத் தகுந்தவாறு உத்தியோகங்களைப் பெற்றுக்கொண்டு வந்தாலும்கூட, உத்தியோக வசதி இன்னும் பல இடங்களில் செய்து கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசாங்கத்திலும் ஓரளவு விகிதாசாரப்படி உத்தியோகங்கள் கொடுக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆனால், லோகல் பாடீஸ்ஸை எடுத்துக்கொண்டாலும், முனிசிபாலிடீஸ், பஞ்சாயத்து யூனியன்கள் இவற்றை எடுத்துக் கொண்டாலும், அங்கே இந்த விகிதாசாரமுறை அனுசரிக்கப் படவில்லை. அரிசன, பிற்பட்ட இனத்தவர்கள் படித்து முன்வந் தாலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும் முனிசிபாலிடி அலுவலகங்களிலும் ஏறத்தாழ 40 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்றால், அவர்களில் ஒருவர் இருவர்கூட அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்வதில்லை. அதைப் பல பேர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அங்கும்கூட அரிசனங்களை நியமிக்க ச்ர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக அரிசனங்களுடைய முன்னேற்றத்திற்காக நாம் பல சலுகைகளைக் கொடுத்து வருகிறோம். மனைக்கட்டுக்காகவும், ஸ்காலர்ஷிப்புக்காகவும் செலவிடுகிறோம். மாடு வாங்க முன்பு 400 ரூபாய் கொடுத்து வந்ததைக்கூட 100 ரூபாய் உயர்த்தி 500 ஆகக் கொடுக்கிறோம். இவை எல்லாம் வேண்டற்பாலது. அந்தச் சமூகம் பல ஆண்டுகளாகத் தீண்டப்படாத சமூகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆகவே அவர்களுக்குச் சர்க்கார் உதவி செய்வதைப் பாராட்டுகிறேன். மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் பத்து, இருபது ரூபாய் முதலிருந்தாலும் அதைக் கொண்டு சிறு சிறு தொழில்களைச் சமூகத்தினரிடையே கலந்து செய்து பிழைத்துக்கொள்ள முடியும் ஆனால், அரிசனங்களோ பல ஆண்டுகளாகத் தீண்டப்படாதவர்கள் என ஒதுக்கி வைக்கப் பட்டவர்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகுதான் சட்டத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்பைக் கொண்டு வந்தோம். இன்னும் அவர்கள் நல்லமுறையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவேண்டும்.

குறிப்பாக, வீடு கட்டிக்கொள்வதற்காக அவர்களுக்கு 250 ரூபாய் கடனாகவும், 750 ரூபாய் மானியமாகவும் கொடுக்கிறார்கள். விலைவாசிகள் எல்லாம் உயர்ந்திருக்கிற காரணத்தினால் இந்த ஆயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை. தச்சுவேலை என்றால் ஒரு தச்சருக்கு ஒரு நாளைக்கு 6 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. கொத்துவேலை செய்பவர்கள் ஒரு நாளைக்கு ரூ. 7 கேட்கிறார்கள். வீட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருள்களின் தரத்தைத்தான் குறைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு வீட்டிற்கு 1,250 ரூபாய் வரையிலாவது கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரிசன மக்கள் ஹைஸ்கூல்களிலும் படிக்கிறார்கள், காலேஜுகளிலும் படிக்கிறார்கள். காலேஜில் படிக்கக்கூடிய அரிசன மாணவர்களுக்கு நாம் சாப்பாட்டுக்காக 45 ரூபாய் கொடுக்கிறோம். அதேநேரத்தில் காலேஜில் படிக்கக்கூடிய பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நாம் 60 ரூபாய் கொடுக்கிறோம். 'We are showing disp rity' சாப்பாட்டிற்கு இப்படி அரிசன மாணவர்கள் என்றால் 45 ரூபாய், பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றால் 60 ரூபாய் என்று இருக்கும்படியான வேறுபாட்டை நாம் ஒழிக்கவேண்டும். அரிசன மாணவர்களுக்கும் ரூ. 60 கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். எல்லோருக்கும் ஒரே மாதிரியாகச் செய்ய வேண்டும்.

அதுபோலவே அரிசன மக்கள் பலர் பல ஆண்டு காலமாக புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருகிறார்கள். சிலர் பட்டா நிலங்களிலும் இருக்கிறார்கள். தீ விபத்து ஏற்படுகிறது என்றால் திரும்பவும் சேதம் அடைந்த குடிசையைப் போட்டுக் கொள்ள பட்டா நிலத்தில் உள்ளவர்களுக்கு 30 ரூபாய் கொடுக்கப் படுகிறது. ஆனால் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டிக் கொண்டிருக்கிற அரிசன மக்களாக இருந்தால் 10 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இடம் எப்படி இருந்தாலும்—தீ விபத்தினால் வீட்டை இழந்து தவிப்பவர்களுக்கு—நாம் ஒரேவிதமான உதவியைத்தான் அளிக்கவேண்டும். புறம்போக்கு நிலத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் இவர்களுக்கும் 30 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கு கோவை போன்ற நகரங்களில் 1,500 ரூபாய் கொடுக்கிறார்கள். அது வெறும் பாறைப் பகுதி. 1,500 ரூபாயில் கிணறு வெட்ட முடியாது. 1,500 ரூபாயைக் கொண்டு வெட்ட ஆரம்பித்த கிணற்றைப் பூர்த்தி செய்ய அவர்கள் கடன் கேட்டால் கொடுப்பதில்லை. ஆகவே, முதலில் 1,500 ரூபாய் கொடுக்கிறபோதே, திரும்பவும் அந்தக் கிணற்றைப் பூர்த்தி செய்யக் கடன் கேட்டால் 1,500 ரூபாய் வரை கொடுக்க ப்ரொவிஷன் இருக்க வேண்டும். அப்போதுதான் இந்த 1,500 ரூபாய் கொடுப்பதன் பயனை அவர்கள் பெறமுடியும். கடந்த 18 ஆண்டு காலங்களில் நாம் சிறப்பாகப் பலவகையில் அரிஜனங்களுக்கு உதவி செய்து வந்தாலும்கூட இன்னும் அதிகமான நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைமுன் விவாதத்தில் இருக்கக்கூடிய ஹரிஜன நலத் துறை மானியம் சம்பந்தமாக என் கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சில லட்சம் ரூபாய்கள் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்கி இருக்கக் கூடிய தொகை போதுமானதல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தத் தொகை ஹரிஜனங்களுக்கு மாத்திரம் செலவழிக்கப்படவில்லை. பின் தங்கிய வகுப்பினர், மலை சாதியினர், ஹரிஜனங்கள் ஆகிய எல்லோருக்குமாகச் செலவழிக்கப்படுகிறது. அவ்வாறு செலவழிக்கப்படுகிற நிலையில் நாம் பார்க்கிறபோது இன்றைய தினம் சமுதாயத்தில் பின்தங்கி இருக்கக்கூடியவர்கள்தான் சமுதாயத்திற்கே அஸ்திவாரமாக இருக்கக்கூடியவர்கள். அம்மாதிரி இருக்கக்கூடிய மக்கள் பொருளாதாரத் துறையில், சமுதாயத் துறையில், கல்வித் துறையில் முன்னேற வேண்டுமென்று சொன்னால் பல கோடி ரூபாய்களை ஹரிஜனங்களுக்காகவே என்று செலவிடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அந்த ஜில்லாவில் அதிகமான கோரிக்கைகள் இருந்து கொண்டிருப்பது குடியிருப்பு மனைகள் வேண்டும் என்பதற்காகத் தான். சென்ற ஆண்டில் தஞ்சை ஜில்லாவில் 78 ஏக்கரா நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 73 ஏக்கராவுக்காக ஒதுக்கி இருக்கக்கூடிய தொகை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய். இது போதுமானது அல்ல. மேலும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். மற்ற மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை ஓரளவு இருந்தபோதிலும் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [22nd March 1966

தஞ்சை ஜில்லாவில் சென்ற வருஷம் டிசெம்பர் மாதம் கனமான மழை பெய்து ஹரிஜனங்களுடைய குடிசைகள் எல்லாம் மழையில் நனைந்து ஆயிரக்கணக்கான பேர்கள் வீடு இழந்திருக்கிறார்கள். அப்படிச் சேதமான வீடுகளுக்கு அரிஜன இலாகாவில் உதவித் தொகை கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரெவின்யூ இலாகா சில ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இருந்துவிட்டார்கள். ஹரிஜன நல இலாகா ஹரிஜனங்களுக்காக வேலை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதுபோன்ற வேலைகளை ஹரிஜன நல இலாகா மூலமாகவே செய்யவேண்டும். ரெவின்யூ இலாகாவை அவர்கள் நம்பிக்கொண்டிருக்க விட்டுவைப்பது சரியாக இருக்காது. வெள்ளம், புயல், தீ போன்ற காரணத்தினால் ஆபத்து ஏற்படுகிறபோது ஹரிஜன இலாகா மூலமாகவே ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய ஆவன செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அது விஷயத்தில் ஹரிஜன இலாகாதான் முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்வதற்கு நான் விரும்புகிறேன்.

தரிசு நிலத்தை வழங்குவதிலும் ஹரிஜனங்களுக்கு நாம் முன் சலுகை அளிக்கவேண்டும். தரிசு நிலங்களை கனம் அங்கத்தினர்கள் சொன்னதுபோல பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருப்பதால் அவர்கள் அங்கே ஹரிஜனங்கள் குடியிருக்க மறுப்பது மாத்திரம் அல்ல. ஏற்கனவே குடியிருந்து வந்தவர்களையும்கூட வெளியேற்ற முயலுகிறார்கள். அந்த நிலையை மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றையதினம் அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு நாம் கொடுக்கிற தொகையைக்கூட நிறுத்திவிடலாம். காரணம், இன்றையதினம் வீட்டிற்காக ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் 2 ஆயிரம் செலவழித்தாலும் வீடு கட்ட முடியாத நிலை இருப்பதால் வீடு கட்டும் வேலை ஆயிரம் ரூபாயில் நடைபெறுவது கஷ்டமாக இருக்கிறது. அதற்கு ஒதுக்கக்கூடிய தொகையைக் குடியிருப்பு மனைகள் வாங்கிக்கொடுக்க ஒதுக்க வேண்டும். மத்திய அரசாங்கம் மானியம் வழங்குகிறார்கள். அந்தத் தொகையை மனை, நிலம் வாங்கப் பெறவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்காக காலனி சொசைடி என் தொகுதியில் பிச்சன்கோட்டகம் என்ற கிராமத்தில் 82 ஏக்கர் நிலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிலத்திற்கு வடிகால் வசதி கிடையாது. அதுபோல் பாசனத்திற்கும் வசதி கிடையாது. ஹரிஜன இலாகா அந்தப் பொறுப்பை ஏற்பதில்லை. கூட்டுறவு சங்கத்தினுடைய பொறுப்பு அது என்கிறார்கள். ஆனால் வடிகால் வசதி ஏற்படுத்துவது என்றால் ஆயிரக்கணக்கில் செலவாகும். அவர்களுடைய கூட்டுறவு சங்கத்தினிடம் பணம் எங்கே இருக்கிறது? இதுபோல பாசன வசதி, வடிகால் வசதி முதலியவற்றை ஹரிஜன இலாகாவே செய்துதரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

22nd March 1966] [திரு. ஆ. கு. சுப்பையா]

உத்தியோகங்கள் கொடுக்கிற முறையில் பார்க்கிறபோதுகூட 16 சதவிகிதம் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இது போதாது. குறைந்தது 20 சத விகிதமாவது ஒதுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடக் கட்டடங்களை எடுத்துக்கொண்டால் தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய கட்டடங்கள் ஓலையால் வேய்ந்த கட்டடங்களாக இருக்கின்றன. அம்மாதிரி இடங்களில் கல் 11-00 a.m.
கட்டடங்களாகக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கோட்டூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியிலே படிக்கின்ற ஏழை ஹரிஜன மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக ஒரு ஹாஸ்டல் ஆரம்பித்துக் கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே ஒரு விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதையும் ஆரம்பித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஆண்டே ஆரம்பிக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பட்டது).

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கத்தால் ஹரிஜன மக்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் அது மிகப் பெரிய சாதனை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வியை எடுத்துக் கொண்டால் பி.டி. படிப்பதற்கு பி.ஏ., எம்.ஏ. படித்தவர்களை எடுக்கும்பொழுது 100 எம்.ஏ. படித்தவர்களையும், 25 பி.ஏ. படித்தவர்களையும் எடுத்துக்கொண்டு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. ஏழை மக்கள் கஷ்டப்பட்டு பி.ஏ., எம்.ஏ., என்று படித்து விடுகிறார்கள், அவர்கள் மேலும் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்ற முறையிலே எம்.ஏ. படித்தவர்களை எடுத்துக் கொள்வதில் 50 பேர்களை அதிகமாக்கி, பி.ஏ. படித்தவர்களில் 25 பேர்களையும் அதிகமாக்கி ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே ஒரு ஹரிஜன ஆசிரியரும், ஆசிரியையும் அவர்கள் கணவன் மனைவியாக இருந்தால் அவர்கள் இருவரும் வேலை பார்க்கக்கூடிய காரணத்தால் அவர்களுக்கு 1,500 ரூபாய்க்குமேல் வருமானம் வருகின்ற காரணத்தால் அவர்களுக்கு 7, 8 பிள்ளை குட்டிகள் இருந்தாலும் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் சலுகை கிடைப்பதில்லை. ஆகவே கணவன் மனைவி இருவரும் வேலை பார்ப்பவர்களாக இருந்தால் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் சலுகையை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே ஸ்காலர்ஷிப்பைக் கொடுத்து விட்டுப் பிறகு அவர்களிடமிருந்துகூட வரியாக அதை வசூலித்துக்கொண்டால் நல்லது. ஏனென்றால் வசதி படைத்தவர்கள்கூட அதிகமாக ஸ்காலர்ஷிப் வாங்கிவிடுகிறார்கள். இதனால் சாதாரண ஏழைகளுக்குக் கிடைக்காமல் போய் விடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அடுத்தபடியாக, பொருளாதாரத் துறையிலே ஹரிஜன மக்களை முன்னேற்றத்திற்குக்

கொண்டுவர வேண்டுமென்பதற்காக கிணறு வெட்ட 1,500 ரூபாய் கொடுக்கிறோம். அதை 2,000 ரூபாயாக உயர்த்திக்கொடுத்தால் நல்லது. அடுத்தபடியாக இந்த நிலக்குடியேற்றத்திற்காக நாம் பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். பல இடங்களில் வேலைகள் அரைகுறையாக இருக்கின்றன. எங்கெங்கெல்லாம் பணம் ஒதுக்கியிருக்கிறோமோ அந்த இடங்களில் எல்லாம் இன்னும் இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் பார்த்து அவற்றை நிவர்த்தி செய்து கொடுப்பதின் மூலம் பல குடும்பங்களுக்கு அவர்கள் பிழைப்பதற்கு வழிசெய்துகொடுத்தவர்களாவோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அங்கத்தினர்கள் பலர் குறிப்பிட்டார்கள், மனை ஆர்ஜிதம் செய்வதற்காக தாமதம் ஆகிறது என்று. நாடு முன்னேறவேண்டுமென்று நாம் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு எப்படி முன்னேறிக்கொண்டிருக்கிறோமோ அதே போன்று ஹரிஜன மக்களுக்கு வீட்டுமனை இல்லை, இடம் இல்லை, சுடுகாடு இல்லை, பாதையில்லை என்ற இந்த பிரச்னைகளையெல்லாம் மூன்றாண்டுத் திட்டம் ஒன்று போட்டு அதற்காக அதிகமாகத் தொகையை ஒதுக்கினால் தீர்த்துவிடலாம். அடுத்தப்படியாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்துக் கொண்டுவருகிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற 1,000 ரூபாய் போதவில்லை, வீடுகளின் எண்ணிக்கையும் போதவில்லை. கூட்டுறவு மூலம் வீடு கட்டிக் கொடுப்பதற்கு பத்தில் ஒரு பாகம் கொடுப்பது என்று கொடுக்கிறார்கள். ஆனால் அது நடைமுறையில் எந்த ஊரிலாவது இருக்கிறதா என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்களைக் கேட்டால் எமர்ஜன்சி, கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையும் தளர்த்தி கூட்டுறவு மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் துறையில் பலபேர்கள் ப்ரமோஷன் கிடைப்பதிலே கஷ்டப்படுகிறார்கள். இதில் கெடுபிடி இருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டரிலிருந்து சர்க்கிளாகவோ, சர்க்கிளிலிருந்து டிஸ்டிரிக்ட் சூப்பரண்டெண்டென்ட் ஆப் போலீஸ் ஆகவோ வரமுடியவில்லை; ஆகவே அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்தி உண்மையிலேயே யார் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதிலே இருக்கக்கூடிய குறைகளை நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போலீசுக்கு ஆள் எடுப்பதிலே, எத்தனையோ பேர்கள் 5, 6 அடி என்று வளர்ந்து வேலைக்கு லாயக்கில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போலீசுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும். ஹரிஜனங்களுக்கு 50 சதவிகிதம் என்று கொடுத்தால் அதை நான் மிகவும் வரவேற்கிறேன். அந்த அடிப்படையில் அதைச் செய்து கொடுக்க வேண்டும். நகரசுத்தித் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதில்லை என்ற நிலைதான் இருந்து வருகிறது. முனிசிபாலிடி போன்ற இடங்களில் வேலைசெய்கிறவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்துவிட்டால் பிறகு அவர்களுடைய சம்பளத்திலிருந்து அந்தத் தொகையை வசூல் செய்து கொள்ளலாம் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடைசியாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கு ஹாஸ்டல் வைத்து இருக்கிறோம். நான் இதைப் பற்றி இந்தச் சட்ட மன்றத்திலே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பெண்களாக இருந்தாலும் சரி, ஆண்களாக இருந்தாலும் சரி அவர்கள் ராட்டைகளில் நூற்கவேண்டும். நாங்கள் எல்லாம் ராட்டைகளில் நூற்றிருக்கிறோம். ஆகையால் ஹாஸ்டல்களில் ராட்டைகளில் நூற்கச் செய்ய வேண்டும். தேவாரம், திருவாசகம் எல்லாவற்றையும் படிப்பதற்கு வசதி செய்ய வேண்டும். பெண்கள் ஹாஸ்டல்களுக்கு பக்கா பில்டிங்ஸ் கட்டிக் கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. நா. துரைப்பாண்டியன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக்கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் பலர் ஹரிஜனங்கள் இந்த அரசாங்கத்தின் மூலமாக, சட்டத்திட்டத்தின் காரணமாக அதிகமாக முன்னேறவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலே சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்த நிலையையும், இப்பொழுது இருக்கக்கூடிய நிலையையும் உற்று நோக்கினால் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள் என்பது தெரியும்; அதை நாம் மறுக்க முடியாது. நாம் சட்டங்கள் போட்டாலும், இந்தச் சட்டங்களிலே பல ஊழல்கள் இருக்கின்றன என்பது என்னுடைய அபிப்ராயம். பொருளாதாரத்தில் முன்னேற்றமடையவேண்டுமென்பதற்காகப் பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்ற சட்டம் தீட்ட வேண்டியபொழுது மதத்தின் பேரால் இவர்களுடைய பொருளாதாரம் உயர்ந்துவிட்டதா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரே வீட்டில் பிறந்த இருவரில் ஒருவர் கிறிஸ்தவராகவும், மற்றொருவர் ஹிந்துவாகவும் இருக்கிறார்கள் என்றால், ஹிந்து பின்தங்கியவர் என்று கருதி அவருக்கு சர்க்கார் சலுகை அளிக்கிறது. ஆனால் கிறிஸ்தவர்களுக்கு அப்படி அளிக்கப்படுவதில்லை. கன்னியா குமரி ஜில்லா நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்தது தான். அங்கேயுள்ள கிறிஸ்தவர்களைப் பின்தங்கியவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள கிறிஸ்தவர்களைப் பின்தங்கியவர்கள் என்று குறிப்பிடவில்லை. அப்படிப்பட்ட குறிப்பை நீக்கவேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் கருவிகள்கூட கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் அரசாங்கத்தின்பேரில் கிறிஸ்தவர்களுக்குப் பகை உணர்ச்சி வளர்ந்து கொண்டிருக்கின்றது. ஸ்காலர்ஷிப்புக்கு வருமானம் ரூ. 350-க்குக் குறைய இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருவன் தினம் ஒரு ரூபாய்க்குக் கூலி வேலை செய்தாலும் கூட வருஷத்திற்கு வருமானம் 365 ரூபாய் ஆகிவிடுகிறது. ஆனால் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அவர் பொய்க்கணக்கை எழுதவேண்டிய நிலையை நாம் உருவாக்கிவிடுகிறோம். ஆகவே விலைவாசி உயர்வின் காரணமாக எந்த அளவுக்குக் கூலி அதிகமாக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு இதையும் அதிகப்படுத்தி நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராம அதிகாரிகள் கொடுக்கின்ற சர்டிபிகேட்டைக் காரணமாக வைத்து ஸ்காலர்ஷிப்

வழங்குகிறார்கள். சால்வன்ஸி சர்டிபிகேட் கொடுக்கும்பொழுது அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் இருக்கிறது என்றாலும் ஸ்காலர்ஷிப்புக்கு குறைத்து எழுதி வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். பின்னால் ஸ்காலர்ஷிப் கொடுத்துவிட்ட பிறகு திடீரென்று யாராவது மனுப்போட்டால் அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டவேண்டிய நிலைமை வருகிறது. ஆகவே கொடுக்கும்பொழுதே நன்றாக யோசிக்கவேண்டும். ஸ்காலர்ஷிப் கொடுத்துவிட்டால் திருப்பி வாங்கவேண்டுமென்ற நிலைமையே இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிணறுகள் வெட்டுவதற்கு 2 ஏக்கருக்கு ரூ. 1,500 கொடுக்கலாம் என்று இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் 1,500 ரூபாயை வாங்கி கிணறு எடுக்கும்பொழுது சில கஷ்டங்கள் இருக்குமானால் அவர்கள் கூடுதலாக 500 ரூபாய் செலவழிக்கவேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தைக் கடன் வாங்குவதால் அதற்கு வட்டிக்குமேல் வட்டி ஏறி கடைசியில் நிலத்தையே அடைமானம் வைத்து, பிறகு விற்றுவிடக்கூடிய நிலைமை வந்துவிடுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியனிலிருந்து அந்தப் பணத்தை எடுத்துக் கிணறு வெட்டிக் கொடுத்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தாற்போல், தாழ்த்தப்பட்ட மக்களாக உள்ள ஐந்து ஏக்கர் உள்ள சிறு விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட கடன் கொடுக்கிறார்கள். அதற்கு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். அந்த ஐந்து ஏக்கர் நிலத்தையே ஜாமீனாகக் கொண்டு கடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் மந்திரி அவர்கள் எங்கள் ஜில்லாவுக்கு வந்திருந்தபோது கூடன்குளத்தில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் கட்டிக் கொடுப்பதாக இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சொன்னார்கள். இன்றுவரை ஹாஸ்டல் வரவில்லை. அதைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தீண்டாமையைப் பற்றிப் பார்க்கும்போது 1964-65-ல் 166 தீண்டாமைக் கேஸ்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டை விட அதிகமான கேஸ்கள் போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. போலீஸ்காரர்கள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று குறிப்பிட்டாலும் கூட, இதைப் பார்க்கும்போது மக்கள் மத்தியில் தீண்டாமையுணர்ச்சி அதிகமாகி விட்டதோ என்றுதான் நினைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும் எந்தச் சமுதாயத்தினர் அந்தக் கிராமத்தில் அதிகமாக இருக்கிறார்களோ அவர்கள் வம்பு செய்து கொண்டிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் மேல் ஜாதி என்பவர்களுக்கு அதிகமான இடையூறுகள் இருக்கின்றன என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், கனம் அங்கத்தினர்களுக்கும் தெரியும். இந்த நிலைமை மாற, ஹரிஜனக் குடும்பத்திலே கலப்பு விவாகம் செய்கிறவர்களுக்கும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கிற இந்தச் சலுகைகளையெல்லாம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நலத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கம் சிறந்த முறையிலே ஹரிஜன மக்களை முன்னேற்றம் அடையச் செய்திருக்கிறது. எனினும் எந்த அளவு வேகமாக அந்த மக்கள் முன்னேற வேண்டுமென்று எதிர்பார்த்தோமோ அந்த அளவுக்கு முன்னேற்றம் இல்லாததைப் பற்றி வருத்தமடைகிறேன். இன்று ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது. அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். கிராமங்களில் ஹரிஜன மக்கள் வீடின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டிக் கொடுத்தாலும், ஒரே கிராமத்தில் இரண்டு வித வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று, 200, 300 ரூபாய் கடனைக் கொடுத்து 500 ரூபாய் அளவிலே கட்டிக் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில இடங்களில் 1,000 ரூபாயிலே கட்டிக் கொடுக்கிறார்கள். ஒரு வீடு இலவசமாக இருக்கிறது; இன்னொன்றுக்குத் தவணைத் தொகை செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. 300 ரூபாய்க்குக் கட்டிய வீடுகளைப் பார்க்கும்போது

"ஆவின மழை பெய்யாது இல்லம் விழ
அதனடியே ஹரிஜன மகன் அவதிப்பட
தாசில்தார் தவணைத் தொகை தயங்காமல் கேட்க
தலைகுனிந்து நிற்கின்றான் ஹரிஜன மகன்தானே"

என்ற நிலையிலேதான் ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள். வீடு இடிந்து விழுந்து விடுவதற்காக ஆறு ஆண்டு தவணைத் தொகை கட்டுகிறான். அவன் தவணைத் தொகை கட்டாவிட்டால் ஜப்தி செய்வதிலே தீவிரமாக இருக்கிறார்கள். இது மிகவும் வேதனையான நிலைமையாகும். அதிகத் தொகை இலவசமாகவே கொடுத்து உறுதியான வீடுகளை கட்டிக் கொடுப்பது மிகவும் அவசியமாகிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டு ஹரிஜன ஹாஸ்டல்கள்—மாணவ மாணவிகளுக்கு இருக்கவேண்டும். தீண்டாமையை ஒழிக்கச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஜாதி ஒழிய வேண்டுமென்பதற்காக, 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்றும், 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று வீர பாரதியும், இன்று ஜாதிகள் அறவே இருக்கக்கூடாது என்று கவிபாடும் புலவர் கோவிந்தன் அவர்களும், அரசாங்கத்தின் சட்டமும் இருந்தும் இன்னும் அந்த ஜாதியை ஒழித்தபாடில்லை. தீண்டாமை ஒழிப்புக்கான சட்டத்தை நல்ல முறையில் போட்டால் அது இந்த நாட்டுக்கும், வருங்கால சமுதாயத்திற்கும் நன்றாக இருக்கும். பாட்டாளி மகன் குடும்பம் முதல் பணக்காரன் குடும்பம் வரை அவர்களுடைய வீட்டுப் பெண்களின் பிரசவ காலத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு எல்லோரும் அரசாங்க ஆஸ்பத்திரியில் கண்டிப்பாக அனுமதிக்கப்பட்டு, குழந்தை பிறந்தவுடன் ஆஸ்பத்திரியிலேயே குழந்தையை விட்டு விட்டு அவர்கள் இல்லத்திற்குச் சென்றுவிட வேண்டும். அந்தக் குழந்தைகளை அரசாங்கமே பராமரிக்கும் பொறுப்பை ஏற்று அவர்களைத் தொழில் திறமை

யுள்ளவர்களாகவும், நாட்டுப் பற்று உள்ளவர்களாகவும் வளர்த்தால் ஜாதியை அடியோடு ஒழித்து விடலாம். பிறகு ஜாதியே இருக்காது.

கிராமங்களிலே தீண்டாமையைப் போக்க சர்க்கார் முழு கவனம் எடுத்துக் கொள்வதோடு, சட்டத்தில் தவறு இருந்தால் அதையும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்காக சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கின்ற, பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும், இதர துறையிலும் இழிந்த நிலையில் இருக்கின்ற சமூகத்தவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சியைப் பாராட்டுகிறேன். நம்முடைய நாட்டில் ஜாதி சமய பேதமற்ற சமுதாயத்தை சிருஷ்டிக்க வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஜாதியின் அடிப்படையில் மட்டும் சலுகைகளை வழங்குவது நல்லதல்ல என்று கூற ஆசைப்படுகிறேன். ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானத்தைக் கன்னியாகுமரியில் நிறைவேற்றியது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று கொடுக்கிற சலுகை ஜாதி அடிப்படையில், மத அடிப்படையில் இராமல், பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் இதுகாறும் செயல்பட ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது கொடுக்கிற சலுகைகள் எல்லாம் ஜாதியின் அடிப்படையில்தான் இருக்கின்றன. அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல் ஒரு ஹரிஜன தகப்பனுக்குப் பல குழந்தைகள் இருந்து, அதிலே இந்துவாக இருப்பவர்களுக்கு மட்டும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவே தவிர, அதிலே யாராவது ஒருவன் கிருஸ்தவ மதத்தைத் தழுவி விட்டால் அவனுக்கு அந்தச் சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய காரணத்தால் அவனுக்குச் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. அவன் சலுகையைப் பெற வேண்டுமென்றால் இந்து மதத்தைத் தழுவ வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. இந்த மதப் பாகுபாடு இல்லாமல் இந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அவ்வளவும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த ஹரிஜனங்களுக்கும், கொடுக்க வேண்டும். கிறிஸ்துவர்களாக அவர்கள் மாறிவிட்ட காரணத்தாலேயே உடனே அவர்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேறியவர்களாக ஆகிவிடமாட்டார்கள். சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் சட்டத்தைத் திருத்தி கிறிஸ்தவர்களாக மாறிய ஹரிஜனங்களுக்கும் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். மீனவ சமுதாயத்தினரையும் தாழ்த்தப்பட்டவர் வகுப்பு பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். மீனவர் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் அவர்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மிகவும் இழிந்த நிலையில்

தாழ்ந்த நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கும் எல்லாச் சலுகைகளையும் அளிக்கும் வகையில், அவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாலும் அவர்கள் மதம் மாறிவிட்டால் சலுகை வழங்கப்படுவது இல்லை. அதையும் சற்றுக் கவனிக்க வேண்டும்.

அவர்களும் மிகவும் தாழ்ந்த நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கவனித்து அவர்களுக்கும் வேண்டிய சலுகைகள் வழங்க முன்வர வேண்டும். அதோடு, ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக மனைகளைத் தேர்ந்தெடுக்கும் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எங்கள் பகுதியில் ஒரு குறிப்பிட்ட நிலத்தைத் தேர்ந்தெடுக்கும்போது அங்கிருக்கிற பின்தங்கிய வகுப்பினர் கமிட்டியைச் சார்ந்த பல தலைவர்கள் இன்ன இடத்தில்தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த இடத்தின் சொந்தக்காரர் "இந்த இடத்தை எனக்கு விட்டு விடுங்கள், இதை என் பிள்ளைகளுக்கு வீடுகட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிறேன். எனக்குச் சொந்தமாக உள்ள பூமி பக்கத்தில் இருக்கிறது. அதைக் கொடுக்கிறேன்" என்று சொன்னால் அதிகாரிகள் அதற்கு இணங்கினாலும் தலைவர்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். ஆகவே சொந்த விருப்பு வெறுப்பைப் பாராமல் இடம் வசதியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். தண்ணீர் வசதியிருக்கிறதா, போக்குவரத்து வசதியிருக்கிறதா, அந்த மனை வீடு கட்ட ஏற்றதா என்று பார்த்து கட்சி விவகாரமோ அல்லது அரசியல் விவகாரமோ வேறு எந்தக் காரணத்தையும் வைக்காமல் உடனடியாக வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதி மிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்திருப்பதாக இங்கு எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் திட்டை சுப்பிரமண்யம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மையில் இந்த நாட்டில் ஹரிஜன மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல முடியும். அவர்கள் சொல்வதைப் போல் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்த இனத்திலுள்ள ஒரு சிலர் முன்னேற்றம் அடைந்திருக்கிற காரணத்தினால் அந்த இனம் பூராவும் முன்னேற்றம் அடைந்து விட்டது என்ற பிரசாரத்தை ஒருசிலர் செய்து வருகிறார்கள் என்பது மட்டுமல்ல; அப்படிச் செய்து வருகிற காரணத்தினால் பல குழப்பங்களும் பல சண்டை சச்சரவுகளும் ஏற்படுகிறது என்பதை நிச்சயமாக மறுக்க முடியாது. அவர்கள் சொன்னார்கள், எங்கள் கட்சியைச் சார்ந்த புலவர் கோவிந்தன் அவர்கள் சேரியைப் பார்க்காதவர்கள், நான் சேரியில் வசிப்பவன், ஆகவே

நான் சொல்கிறேன் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், சேரியில் வசிப்பவர்களை விட சேரியில் இல்லாமல் இருக்கிற எங்களைப் போன்றவர்களுக்குத்தான் அங்குள்ள கஷ்ட நஷ்டங்கள் அதிகமாகத் தெரியும் என்று சொன்னால் அது மிகையாகாது. நான் ஒரு முறை திட்டைக்கே சென்றிருக்கிறேன். அவர்கள் இருக்கும் வீட்டைப் பார்த்தேன். அது சேரியா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அந்த இடத்திலிருந்து கொண்டு பேசுகிறபோது எங்களைப் பார்த்து புலவர் அவர்களைப் போன்றவர்கள் தெரியாமல் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டில் தீண்டா மையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பாடுபட்டு வந்ததைப்போன்று எங்கள் மதிப்பிற்குரிய முன்னாள் தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள் இந்த நாட்டில் தோன்றியிராவிட்டால் தீண்டாமை ஒழிப்பை இவ்வளவு தீவிர மாக அமல் படுத்த முடிந்திருக்காது என்று நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அவர்களின் கஷ்ட நஷ்டங்களை நாங்கள் நன்றாக அறிந்திருக்கிறோம். சேரிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. பக்கத்திலுள்ள அயன் நன்செய் நிலங்களையும் திருத்தி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படு கின்றன. அதை விட பக்கத்தில் ஜாதி இந்துக்கள் வாழ்கிற பகுதிகளில் பல காலியிடங்கள் உள்ளன. அந்த இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்தால் உண்மை யில் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே போல் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் ஹரிஜனப் பள்ளிகள் இருந்தால் அங்குதான் அவர்கள் பணிபுரிய வேண்டும் என்பதை விட ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களில் உள்ள பள்ளிகளில் வேறு ஜாதிக்காரர்களை ஆசிரியர்களாகப் போட்டு, ஹரிஜன ஆசிரியர்களை மற்ற ஜாதிக்காரர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்களாகப் போட வேண்டுமென்று கட்டாயமாகச் செய்தால் நலமாகயிருக்கும். அதேபோல் ஹரிஜன விடுதிகளில் வார்டர்க ளாக மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகிறவர்களைப் போட்டு மற்றவர்களுக்கு வேறு இடங்களில் வேலை கொடுப்பது நலமாக இருக்கும். தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் என்ற பெயரால் நடைபெற்று வருகிற பிரசாரங்கள் சேரிகளில் நடத்தப் படுவதை மாற்றி மற்ற ஜாதிக்காரர்கள் வசிக்கும் தெருக்களில் நடத்தப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றினால் கூட பரவா யில்லை. மனம் மாறவேண்டுமென்பது ஜாதி இந்துக்களுக்குத் தானே தவிர எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதை ஹரிஜனங்கள் யாரும் மறுக்க மாட்டார்கள். ஆகவே, இந்தப் பிரசாரம் மற்ற இடங்களில் நடத்தப்பட வேண்டுமே தவிர ஆயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்து ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதி களில் செய்து வருவது அவ்வளவு நல்லதல்ல. அதோடு ஹரிஜனங் களுக்கு இருப்பதுபோல் பின்தங்கிய வகுப்பினரின் நலனைக் கவனிக்க என்று ஒரு தனி இலாகா ஏற்படுத்தி ஒரு தனி அமைச்ச ரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போது ஹரிஜனங்களைத் தவிர மற்ற ஜாதிக்காரர்கள் அத்தனை பேர்களையும், அவர்கள் முதலியா

ராக இருந்தாலும் சரி, பிள்ளையாக இருந்தாலும் சரி எல்லோ ரையும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி பிற்பட்ட வகுப் பினர் இனத்தில் சேர்க்கப்படுகிற காரணத்தினால் இந்த பிற்பட்ட வகுப்பினரின் தொகை அதிகமாக வளர்ந்து கொண்டே வருகிறது. ஆகவே, அவர்களுடைய நலனைக் கவனிப்பதற்காக ஒரு தனி இலாகா இருந்தால் கூட நலமாக இருக்கும் என்று நான் கருது கிறேன். அது மட்டுமல்ல. மற்ற ஜாதிக்காரர்களுக்கு அவர்களைப் பற்றித் தெரியாது என்று திட்டை சுப்பிரமணியம் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், யாரும் தவறாக கொள்ளக்கூடாது. இந்த நாட்டில் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதில் மற்ற ஜாதிக்காரர்களுக்குள்ள அக்கறை ஹரிஜன சமூகத்தில் இருப்பவர்கள் ஒரு சிலருக்கு இல்லை என்பதைத் திட்டவட்டமாக என்னால் சொல்லமுடியும்.

திரு. ரா. சுப்பிரமணியம்: வெள்ளி டம்ப்ளர் எங்கே என்று கேட்டேன்' என்று சொன்னதற்குப் பதில் சொன்னேன். என் வீட்டிற்கு அவர் வந்தார்களா என்று எனக்குத் தெரியாது. என் வீட்டிற்குப் போயிருந்தால் வரவேற்கிறேன். என் வீடு மட்டுமல்ல, அங்கு ஐந்தாறு மாடி வீடுகள் இருக்கின்றன.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் மாடி வீடு என்று சொல்ல வில்லை: ஐந்தாறு மாடி வீடுகள் இருக்கின்றன என்று கேட்பதில் மகிழ்ச்சி. அதுமாதிரி வரவேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. எங்களுக்கு அதில் அக்கறையில்லை என்று நினைக்கக் கூடாது. நான் ஒன்று சொல்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல் வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். பல இடங்களில் பள்ளர், பறையர், சக்கிலியர் என்று இவர்களுக்குள் உள்ள சண்டை சச்சரவுகள், பேதாபேதம் மற்ற ஜாதிக்காரர்களிடம் இல்லை என் பதை நான் சுட்டிக்காட்ட முடியும்.

கனம் திரு. பூ. கக்கன்: அங்கத்தினர் அவர்களைப் போன்றவர் கள் இவ்வாறு சொல்லி ஹரிஜனங்களிடத்தில் உள்ள ஒற்றுமை யைக் குலைப்பதற்கு முன்வருவது நல்லதல்ல.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒற்றுமையைக் குலைக்காமல் ஒற்று மையை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். பகிரங்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் அமைச்சர்கள் சபையில் கூட, அமைச்சர்கள் பட்டியலைப் பார்க்கிறபோது அந்த இனங்கள் சேர்க்கப்படவில்லை என்பதை நான் நிரூபித்துக் காட்ட முடியும். அந்த வித்தியாசங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் என் நோக்கமே தவிர அதை வளர்க்க வேண்டும் என்பதல்ல. இதை நான் குறிப்பிடக் காரணம், குடியானவர்கள் இருக்கிற தெருவி லுள்ள கிணற்றில் மற்றவர்கள் தண்ணீர் எடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்து விட்டு சேரிகளில் கிணறுகள் தோண்டும் போது பள்ளர்களுக்கு, பறையர்களுக்கு, சக்கிலியர்களுக்கு என்று தனித்தனியாகக் கேணிகள் அரசாங்கத்திலேயே வெட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதை நான் காட்டத் தயாராக இருக்கிறேன்.

என் இந்த பேதாபேதங்கள்? அக்கிரஹாரமாக இருந்தாலும் அத்தனை பேர்களும், அத்தனை ஜாதிக்காரர்களும் தண்ணீர் எடுக்க முடிய வேண்டும். ஆனால் பறையர்கள், பள்ளர்கள், சக்கிலியர்கள் இவர்கள் ஒரேயிடத்தில் இருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் சண்டை சச்சரவு வளரக் கூடாது என்பதற்காகத் தனித் தனியாகக் கிணறுகள் வெட்டப்படுவதன் மூலம் தீண்டாமை ஒழிப்பு ஏற்பட முடியுமா என்பதைச் சுட்டிக்காட்டத் தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு ஒரு காரணமும் அல்ல. என் பகுதி மட்டும் ஐந்து ஆண்டுகளாக ஏறத்தாழ 3,040, ஏக்கர் அயன் நன்செய் நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிற இந்த நேரத்தில் தரிசு நிலங்களாக விடப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமலாக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் கூகூர் என்ற கிராமத்தில் வெள்ளம் வந்த காலத்தில், தேர்தலுக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்று பேசுகிறார்களே அல்லாது, அந்தக் காலத்தில் திரு. ஸ்ரீ பிரகாசா என்று நினைக்கிறேன், அல்லது திரு. விஷ்ணுராம் மேதி அவர்களோ அங்கு தேர்தல் காலத்தில் அடிக்கல் நாட்டி விட்டு இத்தனை ஆண்டுகளாகியும் அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாமல் அப்படியேயிருக்கிறது, காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது). அடுத்து ஒன்றை மட்டும் கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கக் கூடிய ஹரிஜன மாணவர்களுக்கு மதிய உணவிற்காக15 பைசா கொடுக்கப்படுகிறது. ஆனால், பஞ்சாயத்துப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை. ஆகவே யூனியன் பள்ளிகளில் படிக்கக்கூடிய ஹரிஜன மாணவர்களுக்கும் இந்த 15 பைசா வீதம் மதிய உணவிற்காகக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டசபை, பாராளுமன்றத்திற்கு ரிசர்வ் சீட்டுக்கள் ஒதுக்கப்படுகின்றன. அதேபோன்று பஞ்சாயத்துக்களிலும், ஹரிஜன அங்கத்தினர்கள் எடுக்கப்படாமல் இருந்தால் ரிசர்வேஷன் இருக்கிறது. அதே போன்று நம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களின் காலத்திலேயே, பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களாக ஹரிஜனங்கள் வருவதற்கு இந்த 379 பஞ்சாயத்து யூனியன்களில் குறைந்த பட்சம் 30 பஞ்சாயத்து யூனியன்களிலாவது விசேஷ சீட்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11–30 a.m. * **திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நல இலாகா மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விடுதலைக்குப் பின்பு, அரிஜன நல இலாகா ஏற்பட்ட பின்னால் தான் அரிஜன மக்கள் இன்றைக்கு ஓரளவுக்கு உத்யோகத்தில் மட்டுமல்ல, தொழிலிலும் முன்னேறி வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது இந்த இலாகாவினுடைய வேலைகளினால் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. தேவைகள் எவ்வளவோ இருக்கின்றன, தேவைகள் என்பது அரிஜனங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும்

தான் இருக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டில் அபிவிருத்திகள் ஏற்பட்ட பிறகு நம்முடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ஒவ்வொருவரும் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அரிஜன மக்களுக்கு மட்டும் தான் குறைகள் இருக்கின்றன என்று சொல்வது சரியல்ல, எல்லோருக்கும் குறைகள் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் என்னென்ன விதத்தில் குறைகளை நிவர்த்தி செய்யலாம் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அப்படியில்லாமல் அரிஜன மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வது ஏதோ வெளியில் அவர்களுடைய வோட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காகத்தான் என்று சொல்ல முடியும். காரணம் இன்றைக்கு அவர்கள் மிக விழிப்போடு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிச் சொல்வது தவறு என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இருக்கக்கூடிய குறைகளை எப்படித் தீர்ப்பது என்பதைப்பற்றிச் சொல்லவேண்டியது தான். இந்தக் குறிப்பில் சொல்லியிருப்பதை எடுத்துக் கொண்டால்—இதைப்பற்றி சொன்னால், உடனே ஆளும் கட்சியிலுள்ளவர்களும் முதலில் ஆதரித்துவிட்டு, பின்னால் அவர்களும் குறை சொல்லுகிறார்கள் என்று சொல்வார்கள்—ஆனால் இருக்கக்கூடிய நிலைமையை எல்லாரும் எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். அதில் எந்தவிதமான தவறும் இல்லை. முக்கியமாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி பங்களூரில் இருப்பது போன்று நம் மாநிலத்திலும் கொண்டு வரவேண்டும் என்று முன்பே சொல்லியிருந்தேன். அன்றைக்கு நான் சொன்னதற்கு அமைச்சர் சரியாகப் பதில் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அரசினர் இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது போதாது. நிச்சயமாக சென்னையிலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பயிற்சி கொடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டும், இந்த 1966-67-வது ஆண்டிலாவது நிச்சயம் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, "வீடு ஒன்றுக்கு 2,000 ரூபாய் செலவில் 1966-67-ல் ஆதிவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒன்றுள்ளது. இதில் 1,000 ரூபாய் உதவித் தொகையாகவும், 1,000 ரூபாய் கடனாகவும் வழங்கப்படும், இவ்வீடுகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்கட்டப்படும்" என்று குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. வீடு கட்டுவதற்காக உதவியைப் பெறுவதற்கு, கூட்டுறவு சங்கங்களை அமைத்து, அதில் தலைவர் போன்றவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்து, பணம் பெற்று, அதற்குப் பின்னால் வீடுகளைக் கட்டுவது என்பது சீக்கிரத்தில் நடைபெறுமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தொகையை அரிஜன நல இலாகா மூலமாகக் கொடுத்து உதவுவது தான் நல்லது. 1,000 ரூபாய் உதவியாகக் கொடுக்கிறோம். 1,000 ரூபாய் கடனைக் கொடுக்கிறோம், இதை இலாகா மூலமாகவே திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விவசாயத்திற்காக நாம் ரெவின்யூ இலாகா மூலமாகக் கடன் தொகையைக் கொடுக்கிறோம், அதே போன்று அரிஜன இலாகா மூலமாகக் கொடுப்பதுதான் நல்லதாக இருக்கும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வீடுகள் கட்டுவது என்றால்,

சீக்கிரத்தில் எந்தச் சங்கத்தின் மூலமாகவும் வீடுகள் கட்டிக் கொள்ள முடியாது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சாலைகள் இணைத்துக் கொடுப்பதைப்பற்றி இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. "சரியான சாலை வசதிகள் இன்மையே ஆதிவாசிகள் விரைவில் முன்னேறுததற் குரிய முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்" என்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலை இணைப்பு என்பது மிகவும் முக்கிய மானதொன்று. ஆனால் இதில் எங்கள் ஜில்லா மட்டும் விடப்பட் டிருக்கிறது. வட ஆற்காடு, திருச்சி, கோவை, சேலம், மதுரை இந்த மாவட்டங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மற்ற இடங்களிலாவது எப்படியாவது போகலாம் ஆனால் மலைப்பிர தேசங்களில் செல்வது மிகக் கஷ்டமாக இருக்கிறது. நானே என் தொகுதியிலுள்ள பல இடங்களுக்கு ஐந்து மைல், ஆறு மைல், ஏழு மைல் நடந்துதான் போய்க் கொண்டிருக்கிறேன், ஜீப்கள் கூடப் போக முடியாத இடங்கள் இருக்கின்றன. எங்கள் பகுதியில் செம்மன்அறை, அரக்கோடு, கோக்கோடு, அள்ளிமாயா இந்த இடங்களுக்கெல்லாம் எந்தவிதமான சாலை இணைப்பும் இல்லை. இதைச் சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டும். இன்னும் தள்ளி வைத்துக்கொண்டே இருக்கக் கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய நிலையங்களைப் பொறுத்தளவில், ஜாதி இந்துக்கள் செய்யக் கூடிய வேலைகள் எல்லாம் இங்கு செய்து காட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. நான் இருக்கும் இடத்தில் பார்க்கின்றேன், இந்த சமுதாய நிலையத்தில் இருக்கின்ற சமூக சேவகிகள் அரிஜன குழந்தைகளைக் குளிப்பாட்ட கற்றுக் கொடுப் பது மட்டுமல்ல, குறிப்பாக குழந்தைகளை குளிப்பாட்டி, சீவி, சிங்காரித்து, மதிய உணவு எல்லாம் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் ஃபிக்சட் சம்பளம் 110 ரூபாய் என்றிருக்கிறது. வேறு துறைகளில் எல்லாம் வருடந்தோறும் அலவன்ஸ் கூடுதலாகிக் கொண்டே போகும். வருடம் தோறும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று ஏறிக் கொண்டேயிருக்கும். ஆனால் இவர்களுக்கு 110 ரூபாய்தான் சம்பளம், வேறு எதுவும் இல்லை என்று சொல்வது அவ்வவு நியாயமல்ல. இப்போதிருக்கிற விலைவாசி உயர்வை முன்னிட்டா வது இதை மாற்றிக் கொடுக்க வேண்டும், அதிகாரிகள் மகா நாட்டில் இதைபற்றிப் பரிசீலனை செய்திருப்பதாகவும் இவர் களுக்கு அசிஸ்டென்ட்ஸ்களுடைய ஸ்கேல் அளவில் சம்பளம் கொடுக்கலாம் என்று யோசித்திருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையிலாவது சீக்கிரம் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் நாம் சாங்ஷன் செய் கின்ற பணத்தை எல்லாம் நல்ல முறையில் செலவு செய்ய முடியும். அவர்கள் சரியான முறையில், வேலை செய்யாவிட்டால், அவர் களுக்கு வேலை செய்வதற்கு மனம் இல்லாவிட்டால் எந்த முன் னேற்றமும் நடைபெறாது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், நிலங்களை அக்வயர் செய்வதில், சில மாவட்டங் களை மட்டும் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத் தைப் பொறுத்தவரையில் பூஜ்யம் தான். இதற்கு என்ன சொல் லப்பட்டிருக்கிறது என்றால் "மலைப் பகுதியில் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய இதற்கு மேலும் வசதிகள் இல்லை" என்று சொல்லியிருக் கிறார்கள். ஏன் வசதியில்லை? நான் சொல்லுகிறேன் குன்னூர் பகுதியில் வெல்லிங்டன் அருகில், தனிப்பட்டவர்களுடைய நிலம் இருக்கிறது. அதாவது சின்னவண்டிச் சோலையில் போட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேந்த இடத்தில் இந்த இடம் இருந்தது, அதை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று கலக்டர் அவர்களே உத்தரவு போட்டு சாங்ஷன் செய்துவிட்டார், இதற்கான ரிப்போர்ட்டையும் கலக்டர் அவர்கள் அனுப்பியாய் விட்டது. அரிஜனநல இலாகாதான் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது, நீலகிரி ஜில்லாவை விட்டுவிடக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** சார், அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரிஜனங்களுக்கு மனைகள் வழங்குவது என்று ஒரு திட்டம் நடந்து கொண்டு வரு கிறது. அவர்களுக்கு வெறும் மனைகள் மட்டும் கொடுத்துவிட்டால் எப்படி அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வார்கள் என்பது தெரிய வில்லை. ஆகவே மனைகள் கொடுப்பதோடு, ஒவ்வொரு குடும்பத் திற்கும் 100, அல்லது 150 ரூபாய் கொடுத்தால் நலமாக இருக்கும். அதோடு வீடுகளுக்கு மனைகள் வழங்குகின்ற பிரச்னையில், இன்னும் ஐந்து வருடங்களுக்குள் ஒரு கிராஷ் ப்ரோகிராம் மாதிரி போட்டு, இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் எனறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வேடசெந்தூர், குஜிலியம்பாறை இந்த இடங்களில் அரிஜனங்கள் அனேகம் பேர்கள், கோரைப் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழி லில் அவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இடையி லுள்ள தரகர்கள் வந்து அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்ப தாகத் தெரிகிறது. ஆகவே இவர்களுக்கு கூட்டுறவு முறையில் ஏதாவது திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், கவர்ன்மென்ட் அரிஜன் ஹாஸ்டல் கள் வேடசெந்தூர், குஜிலியம்பாறை இந்த இடங்களில் இருக் கின்றன. இதற்குக் கட்டட வசதி போதாமல் இருக்கிறது. இதைப்பற்றியும் கவனிக்கவேண்டும். அதோடு, காசிப்பாளையத்தில் ஒரு பெண்கள் (கேர்ல்ஸ்) ஹாஸ்டல் ஏற்படுத்த சர்க்கார் முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திண்டுக்கல் பகுதியில் குஷ்டரோகி களாக அதிகமான பேர்கள் அரிஜனங்கள் இருக்கிறார்கள். இவர் களுக்கு விரல்கள் போய், கைகளும், கால்களும் சரியில்லாமல்

கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. இவர்களுக்கும் ஏதாவது 'ஓல்ட் ஏஜ்' பென்ஷன் கொடுப்பது போன்று அரிஜன இலாகாவிலிருந்து பென்ஷன் உதவி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்காலர்ஷிப் அரிஜனங்களுக்கும், மற்றும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இவ்விதம் உதவி பெற்றவர்கள் பின்னால் அரசாங்கத்தை மறந்து விடுகிறார்கள். இதற்கு நான் சொல்கின்ற ஒரு யோசனை என்னவென்றால், அரசாங்கத்திலிருந்து கொடுக்கும் தொகையிலுள்ள பாதியை, இதை வாங்கிப் படிக்கும் மாணவர்கள் வெளியில் வந்தபின்னால் தாங்கள் வேலை பார்த்துச் சம்பாதிக்கின்ற நேரத்தில் பாதித் தொகையை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவரலாம். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 2,000 ரூபாய் வாங்கினார்கள் என்றால் 1,000 ரூபாய் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடவேண்டும். வெளியில் வந்தபின்னால் சம்பாதித்தால் கொடுத்தால் போதும். சம்பாதிக்கவில்லையென்றால் கொடுக்க வேண்டிய தேவையில்லை, இவ்விதம் திரும்பப் பெற்றுக் கொள்வதினால், மேலும் இவ்வாறு உதவி கேட்கின்ற மற்ற மாணவர்களுக்கும் கொடுத்து உதவ முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. பி. ஜயராஜ்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஹரிஜன மக்களுடைய நலனுக்காக அரசாங்கம் பல திட்டங்களின் மூலமாகப் பல பணிகளைச் செய்து வருகிறது. குறிப்பாக இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தில் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதில் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் காலதாமதம் ஆகிறது. கிட்டத்தட்ட தஞ்சை ஜில்லாவிலே டிஸ்ட்ரிக் வேல்ஃபேர் ஆபீசரிடம் பெண்டிங்காக 2,000-க்கு மேற்பட்ட பெட்டிஷன்கள் இருக்கின்றன. நில ஆர்ஜிதம் செய்ய தாசில்தார்கள் மூன்று தாலுக்காக்களுக்கு ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் பார்த்தால், தஞ்சை ஜில்லாவில் கிட்டத்தட்ட 240 பெட்டிஷன்களுக்குத் தான் கவனித்து மனை வழங்க முடியும். 2,000-க்கு மேற்பட்ட பெட்டிஷன்கள் இருக்கும்போது ஒரு வருஷத்தில் எப்படிச் செய்ய முடியும்? இன்னும் 20 ஆண்டுகள் ஆனாலும் கூட வீட்டு மனைப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. அந்த அளவுக்கு குறைகள் அதிகமாக ஆகியிருக்கிறது. ஹரிஜனங்களுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வதை விட குறிப்பாக எங்கெங்கே ஹரிஜனங்கள் நத்தம் ஜாரி மனைகளில் இருக்கிறார்களோ அந்த நிலங்களை அப்படியே கொடுக்கலாம். நத்தம்ஜாரி என்பது அரசாங்க மனைகள். அவைகளை ஒரு சிலர் அனுபவ ரீதியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே

நத்தம்ஜாரி மனைகள் எங்கு இருக்கின்றனவோ அவைகளை வழங்க ஏற்பாடு செய்தால் ஒரு சில ஆண்டுகளில் இந்தக் குறையைப் போக்க முடியும்.

அடுத்தபடியாக, கல்வி என்ற முறையில் ஹரிஜன நல இலாகா வினால் நடத்தப்படும் பாடசாலைகள் எந்த அளவுக்கு அவைகளின் கட்டடங்கள் இருக்கின்றன என்று பார்க்கும்போது ஓரளவுக்குப் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளைவிட நல்ல முறையில் அமைய வில்லை. அங்கே தளவாட சாமான்கள் கூட நல்ல முறையில் இல்லை. ஹரிஜன நல இலாகா கல்விக்கூடங்களுக்குத் துரிதமாகக் கட்டடம் கட்டிக் கொடுத்து வசதி செய்து கொடுக்க வேண்டும். தீபாவளி, பொங்கல் போன்ற நேரங்களில் மாணவிகளுக்கு உடை கொடுக்கிறார்கள். மாணவர்களுக்குக் கொடுப்பது கிடையாது. மாணவர்களுக்கும் உடை கொடுத்தால் அவர்களுக்கும் திருப்தி ஏற்படும். அங்கே மாணவர்களாக இருக்கிறவர்களும் ஏழைகளாக இருக்கிறவர்கள்தான் படிக்கிறார்கள். இந்த ஆண்டு மாணவர் களுக்கும் உடை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாயவரத்தில் உள்ள விடுதியில் 60-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த விடுதி தனியார் கட்டடத்தில் இருக்கிறது. அங்கு குடி தண்ணீர் வசதி கிடையாது. டிஸ்ட்ரிக்ட் வெல்ஃபேர் கமிட்டியில் சொல்லும்போது, சொந்தக் கட்டடமாக இருந்தால் தான் ஓவர்ஹெட் டாங்க் கட்டி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். பக்கத்தில் இருக்கிற காவிரியில் குளிக்கிறார்கள். சின்ன மாணவர்களாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு அந்த விடுதியிலேயே குளிக்கவும், குடி தண்ணீர் பெறவும் வசதி செய்ய வேண்டும். இல்லையென்றால் அரசாங்கக் கட்டடமாகக் கட்டி இந்த வசதிகளைச் செய்தால் மாணவர்கள் நல்ல முறையில் படிக்க வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல சட்டங்களின் மூலமாக உத்தியோகத்தில் 16 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும் கூட, பஞ்சாயத்து யூனியன் வந்த பிறகு அந்தவிதத்தில் வழங்குவதில்லை. பஞ்சாயத்து யூனியன் தலைவர் டிஸ்ட்ரிக்ட் எம்ப்ளாய்மென்ட் ஆஃபீசரைக் கேட்கிறார். அவர்கள் ஆட்களை அனுப்பும்போது தங்களுக்கு வேண்டியவர்கள் வருகிறார்களா இல்லையா என்று பார்த்து வேலை கொடுக்கிறார். ஹரிஜன மக்களுக்கு வேலை கொடுப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன்களில் இந்தச் சலுகை வழங்கப்படாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உத்தரவு போட்டு, பஞ்சாயத்து யூனியனில் பிரதிநிதித்துவம் கொடுக்கிறார்களா என்று கவனித்தால் ஓரளவு பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக நல்ல பல சலுகைகள் கிடைக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று பள்ளிக் கட்டடம் கட்டுகிற முறையைப் பார்க்கும்போது, தஞ்சை ஜில்லாவில் பாடசாலைகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கொல்லாபுரம் என்ற இடத்தில் கட்டடம்

கட்டுவதைப் பற்றி 4-5 ஆண்டுகளாக வெல்ஃபேர் ஆபீசருக்கு மனுப்போட்டும் கவனிக்கப்படவில்லை. சென்ற ஆண்டு இருந்த வெல்ஃபேர் ஆபீசர் நல்ல முறையில் செயல்பட்டார்கள். என்ன காரணமோ, ஒரு சிலர் சிபாரிசு காரணமோ அவா மாற்றப்பட்டு வேலை செய்கிற விருப்பத்திற்கு மாறாக இருக்கிறவர்களை நியமிக்கிறார்கள். தஞ்சை ஜில்லா வெல்ஃபேர் ஆபீசர் இரண்டு முறை மாற்றப்பட்டுவிட்டார். ஆர்.டி.ஓ. வாகப் போக விருப்பம் உள்ளவர்களைப் போட்டால் எந்த முறையில் வேலை செய்வார்கள் என்று பார்க்கவேண்டும். ஆகையால், ஹரிஜன நலத் துறையில் . . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. சி. மாணிக்கம்** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நல மானியத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய தொகுதி பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்ட மன்றத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக, ஹரிஜன மக்களுக்குள்ள சில குறைகளை எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லி எனக்கும் சலிப்பு ஆகிவிட்டது. இனிமேல் என்ன செய்யப் போகிறேன்? என்னுடைய பதவிக் காலம் முடியப் போகிறது. என்னுடைய பதவிக் காலம் முடிந்த பிறகாவது செய்து கொடுப்பார்களோ மாட்டார்களோ தெரியாது.

என்னுடைய தொகுதியில் ஹரிஜன கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. வருஷத்திற்கு ஒரு கிராமம் தீப்பிடித்து வெந்து கொண்டே இருக்கிறது. இதற்கு என்னுடைய தொகுதி மக்களைக் குறை சொல்ல முடியாது. அரசாங்கத்தைத் தான் குறை சொல்ல வேண்டும். ஏன் என்றால் 1962-ம் ஆண்டிலேயே ஒரு கிராமம் வெந்து விட்டது என்பதைச் சுட்டிக்காட்டி அரூரில் தீ அணைப்பு நிலையம் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அது அரசினரின் காதில் நுழையவே இல்லை. வருஷத்திற்கு 80,100 150 வீடுகள் தீயினால் எரிந்து போகின்றன. தீயணைக்கும் நிலையம் இருந்தால் 10, 8 மைல்கள் இருந்தாலும் ஓடோடிச் சென்று தீயை அணைத்து விடலாம். மக்களும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிப்பார்கள்.

குடிதண்ணீர் பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லியும் இன்னும் அந்த வசதி செய்யப்படவில்லை. தீண்டாமையைப் பற்றி 1962-ம் ஆண்டிலே சட்டசபை உறுப்பினராக வந்த சமயத்தில் சொந்த கிராமத்தில் உள்ள குறையைச் சொன்னேன். ஒரு டீக் கடையில் ஒரு கிளாசில் டீ குடித்ததால் டீக்கு ஒரு அணாவும், கிளாசிற்கு 6 அணாவும் கொடுத்தேன் என்று சொன்னேன். சம்பந்தப்பட்ட இலாகாவில் அல்லது போலீஸ் இலாகாவில் இது வரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால், இல்லவே இல்லை. அது மட்டுமல்ல. என்னுடைய பகுதியில் தீண்டாமை என்றால், சுடுகாட்டிலே தீண்டாமை உண்டு, பாதையிலே தீண்டாமை உண்டு. அரூருக்கு மூன்றாவது மைலில் ஒரு ஹரிஜன் செத்து விட்டார். பஞ்சாயத்து ரோட்டில் போக விடாமல் பக்கத்து ரோடில் போக வேண்டுமென்று அங்கே ஒரு போராட்டமே செய்தார்கள். அந்தச் சாவுக்கு நான்

போயிருந்தேன், நான் நேரில் பார்த்த சம்பவம். அப்போது பஞ்சாயத்து ரோடில் தடுப்பது நியாயம் இல்லை என்று சொன்னேன். சட்டம் இருந்தால் இருக்கட்டும், பார்க்கலாம் என்று சொன்னார்கள். அதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடத்தில் சொன்னேன். காதில் போட்டுக் கொண்டார்களா ? தீண்டாமை ஒழியுமா ? இந்த சமுதாயத்திற்குச் சம்பந்தப்பட்ட 40 பேர்கள் இந்த மன்றத்தில் இருந்தும் என்ன என்று காதில் போட்டுக்கொள்ளாமல் இருந்தால் என்றைக்கு தீண்டாமை ஒழிவது ? தீண்டாமை எப்படி ஒழியும் ? அம்பேத்கார் சரித்திரத்தை தமிழில் போடக் கூடாதா ? தமிழில் போட்டால் எங்களைப் போன்றவர்கள் படித்து விட்டுச் சட்ட மன்றத்தில் பேசுவார்கள் என்ற காரணத்தினால் தான் இங்கிலீஷில் இருக்கிறதே தவிர வேறு இல்லை. நானும் நான்கு ஆண்டுகளாகத் தேடித் தேடி துருவிப் பார்க்கிறேன். எந்த லைப்ரரியில் பார்த்தாலும் கிடையாது. அந்தப் புத்தகம் இருந்தால் இந்த 40 ரிசர்வ் தொகுதியிலிருந்து வந்தவர்கள் படித்துவிட்டு, அவர் கேட்ட கேள்விகளைக் கேட்பார்களே என்று தான் அதைத் தமிழில் போடாமல் இருக்கிறார்கள். எல்லாப் புத்தகங்களும் தமிழில் இருக்கின்றன. ஏன் அம்பேத்கார் புத்தகமும் தமிழில் இருக்கக் கூடாது ?

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் பல ஊழல்கள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்குவது பற்றி பல ஊழல்கள் இருக்கின்றன. ஏரி புறம்போக்கு, ஓடை புறம்போக்கு, காட்டு புறம்போக்கு என்றெல்லாம் இருக்கக்கூடிய நிலங்களில் ஹரிஜனங்கள் நெடு நாட்களாக ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். 10, 15 ஆண்டு காலமாக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான ஆதாரமும் இல்லை. எழுந்திரு என்றால் எழுந்திருக்க வேண்டியிருக்கிறது, ஓடு என்றால் ஓடவேண்டியிருக்கிறது. இதைபற்றி பல முறை சொல்லியாகிவிட்டது. கணக்குப் பிள்ளையைப் பார்த்தால் முதலில் வரும்பொழுது மேலே ஒரு துண்டும், கீழே ஒரு வேஷ்டியும் கட்டிக் கொண்டு வருகிறார். பிற்பாடு அவர் நிலைமையே மாறிவிடுகிறது. அவர்களுக்கு பால், மாடு, இப்படியெல்லாம் பல வசதிகளைச் செய்துகொண்டு, அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு வேண்டியதைச் செய்கிறார்கள். கணக்குப்பிள்ளை என்ன காரணத்தினாலோ என்னவோ ஹரிஜனங்களுக்குப் பட்டா கொடுப்பதில் ஒத்துழைப்பதில்லை. இந்த நெருக்கடியான நிலையில் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள், அது போக, ஹரிஜனங்களுக்காக . . . (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. சு. சின்னய்யன்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஹரிஜன மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தீண்டாமை என்கின்ற தீய வழக்கம் தீயத் தொடங்குகிற நாளாச்சே ஹரிஜனங்களுக்குள்ளே தீண்டாமை இருக்கிறது, மற்றவர்களுக்குள்ளேயும் தீண்டாமை இருக்கிறது என்று சொல்லுகிற கருத்து உண்மைக்குப் புறம்பான கருத்து என்று நான் நம்புகிறேன். சில வருஷங்களுக்கு முன்னால் இருந்த

நிலைமையும் இன்றைக்குத் தீண்டாமைப் படாதவர்கள் நிலையையும் பற்றி நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கிற பொழுது, உள்ளபடியே நாம் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறோம், தீண்டாமை எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது என்பதைப்பற்றி நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். இதற்கு முன்னால் பேசியவர்கள் சிலர் தீண்டாமை அப்படியே இருக்கிறது என்று சொன்னார்கள். தீண்டாமை முழுக்கப் போய்விட்டது என்று நான் சொல்ல முடியாது. எங்கேயோ குக்கிராமத்தில் ஒரு சில இடங்களில் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால், அந்தக் காலம் முதற்கொண்டு இந்தக் காலம் வரைக்கும் பல பெரியவர்கள். அவதார புருஷர்கள் தோன்றித் தீண்டாமையை ஒழிப்பதற்குப் பல நல்ல காரியங்களைச் செய்து வந்திருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகள் சகாப்தத்தில் மாபெரும் முயற்சிகளினாலும், நல்ல கொள்கைகளினாலும் மனித சமுதாயத்தில் பிறந்தவர்களெல்லாம் மனிதர்களாக வாழ வேண்டும் என்பதற்காக மகாத்மா காந்தியடிகளின் சிஷ்யர்கள் மிகத் தீவிரமாகப் பிரசாரம் செய்து, உருப்படியான வேலைகளைச் செய்த காரணத்தினால் தீண்டாமை நாளுக்கு நாள் குறைந்து, இன்றைக்குத் தீண்டாமை என்பது இல்லாத முறையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படியிருந்த போதிலும், தீண்டாமை இருக்கிறது, ஹரிஜனங்களுக்குள்ளேயே இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு உயர்ந்த ஜாதியினராக இருந்தாலும், அவர்களுக்குள் தீண்டாமை இருக்கிறது, ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்ளாமல் கூட இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி எங்கேயாவது ஓரிரண்டு இடத்தில் இருக்கலாம். ஹரிஜனங்களுக்குள்ளேயே தீண்டாமை இருக்கிறது என்று சொல்லுவது அபத்தம் என்று நான் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியது போல், இப்படித் தாறுமாறாகப் பிரசாரம் செய்து ஹரிஜனங்களுக்குள்ளேயே பாகுபாடு உண்டாக்கி, இந்தச் சந்தர்ப்பத்தில் பிளவு ஏற்படுத்தி ஹரிஜனங்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று மாற்றுக் கட்சியினர் நினைத்தால் அது தவறுதலாக முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்று செய்யுமாறு இந்த அரசை மிகவும் வணக்கத்தோடு கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம், திருச்சி, கோவை ஆகிய ஜில்லாக்களில் ஹரிஜனங்களில் மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடியவர்கள் பாய் தைக்கக்கூடியவர்கள். அவர்கள் மின்சார அபிவிருத்தியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் விவசாயத்தில் மிகவும் திறமையுள்ளவர்கள். புறம்போக்கு நிலம் அதிகமாக இருக்கக் கூடிய இடத்தில் புறம்போக்கு நிலங்களை கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளின் மூலம் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய

வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு மாற்றுக் கைத்தொழில்கள், காடேஜ் இண்டஸ்டிரீஸ் ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நல்ல முறையில் மாற்றுத் தொழில்கள் அமைத்துக்கொடுக்க வேண்டும். தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிற அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

இன்னொன்றும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். செருப்புத் தைப்பவர்களுக்குத் தையல் மெஷின்கள் கொடுக்கப்படுகின்றன. எங்கள் சேலம் , ஜில்லாவை எடுத்துக் கொண்டால் செருப்புத் தைப்பவர்கள் ஒரு கிராமத்தில் 100 குடும்பங்களுக்கும் அதிகமாக இருக்கிறார்கள். இந்த நாகரிகமான காலத்தில் பட்டிக்காட்டில் இருக்கிற கிராமத்தில் இருக்கிற நபர்கள்கூட சாதாரணமாக கொண்டானோ, திம்பனோ கையினால் தைக்கின்ற செருப்பை வாங்காமல் மேல் பட்டைகளானது மெஷினில் தைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு கிராமத்தில் ஒருவருக்காவது தையல் மெஷின் கொடுக்க வேண்டும். ஜில்லாவுக்கு 10 மெஷின்கள் கொடுத்தால் எப்படி சாத்தியமாக இருக்கும். தயவு செய்து அவர்களுக்கு வேண்டிய மெஷின்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** திரு. எஸ். முருகையன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் கேட்டிருக்கும் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சிக்காரர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எல்லா ஹரிஜனங்களுக்கும் வீட்டு மனை கொடுக்கவேண்டும் என்ற ஒரு திட்டம் சர்க்காரில் 10 ஆண்டு காலமாக இருந்துவந்த போதிலும் கூட, குறிப்பிட்ட 5 சதவிகிதத்தினருக்குக் கூட இன்னும் மனைக்கட்டுகள் வழங்கப்படாமல் இருந்து கொண்டு வருகிறது. இதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அண்மையில் ஒரு கமிட்டி போட்டு பரிசீலித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியினுடைய சிபார்சுகளை உடனடியாக நிறைவேற்றினால், மனைக்கட்டுகள் கிடைப்பதற்கு வேண்டிய வசதி இருக்கும். இதுபோன்ற கமிட்டியை நியமித்தால், அந்தக் கமிட்டியினர் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பார்த்து, உடனடியாக அவர்களுடைய சிபார்சுகளை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய பகுதியில் இரண்டு ஆண்டு காலமாக 4, 5 கிராமங்களில் வீட்டுப் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருந்துகொண்டு வருகிறது. அதாவது, குளக்கரைவாடி, வீரவானூர், லாடபுரம், நடுப்பட்டு, அடராப்பட்டு, கல்லேரி இந்தப் பகுதிகளில் மூன்று ஆண்டுகளாக அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட இடங்களை வாங்கிக்கொடுப்பதிலே உள்ள சிரமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இடத்தைக் கொடுக்கிறோம் என்று எழுதி முதலில் கொடுத்துவிடுகிறார்கள். அப்படி எழுதிக் கொடுத்துவிட்டதற்குப் பிறகு அந்த நிலச் சொந்தக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், ஹரிஜன மக்களைச் சந்தித்து ‘உங்களுக்கு உடனே

[திரு. எஸ். முருகையன்] [22nd March 1966

நாங்கள் மனைக்கட்டுகள் கொடுக்கிறோம்' என்று சொல்லி கையெழுத்துப் போடச் சொல்லி, இது எங்களுக்குத் தேவையில்லை என்று எழுதி அனுப்பிவிடுகிறார்கள். அதுபோன்று அனுப்பி விட்ட காரணத்தினால் இது போன்ற கிராமங்களில் மனைக்கட்டு கொடுப்பது காலதாமதம் ஆகிறது. குளக்கரைவாடி என்ற ஊரில் எல்லா வேலையும் முடிந்து மனையை அளந்துவிடுகிற நேரத்தில் அப்படி ஒரு மனுவை எழுதி வாங்கி, அங்கு குடியிருப்பவர்கள் அந்த மனை இப்பொழுது தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லக்கூடிய அளவில் எழுதி கையெழுத்து வாங்கி அனுப்பி விட்ட காரணத்தினால், கெஜெட்டில் கூட அம்மாதிரி வந்துவிட்டது. ஆனால், ஹரிஜனங்களைப் பார்த்துக் கேட்டால் 'நாங்கள் எப்பொழுது தேவையில்லை என்று சொன்னோம், சொல்லவில்லையே, நிலச்சொந்தக்காரர்கள் மனுப்போட்டவர்களிடம் ஏதோ சொல்லிக் கையெழுத்து வாங்கிவிட்டார்கள்' என்று சொல்லுகிறார்கள். அது போன்ற மனுக்களைப் பார்க்கிறபொழுது அதிகாரிகள் அந்த கிராமங்களுக்குச் சென்று 'இது போல வந்திருக்கிறது, இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்' என்று விசாரித்து ஆராய்ந்தால், இம்மாதிரி மனைக்கட்டு கொடுப்பதிலே உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க முடியும்.

1963-வது ஆண்டிலே திருவண்ணாமலையில் இடைத்தேர்தல் வந்த போது காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் ஹரிஜன நலத் துறை அதிகாரியிடம் சொல்லி, அவர்களுடன் அந்தப் பகுதிக்கு வந்து சுற்றிப்பார்த்தார்கள். நாங்கள் நினைத்தோம் இந்த நேரத்திலாவது எல்லோருக்கும் மனைக்கட்டு கொடுக்கக்கூடிய நிலை வந்திருக்கிறதே என்று நினைத்தோம். இடைத் தேர்தல் முடிந்தவுடன் இன்று வரையில் அந்த மனுக்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. எந்தக் கிராமத்திலும் மனைக்கட்டுகள் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. கிராம மக்களுக்கு ஏதோ 5 செண்டுகள் நிலம் பிரித்துக் கொடுக்கப்போகிறோம். அதைக் காலா காலத்தில் கொடுத்தால் தான், அவர்கள் வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்வதற்கு வசதியாக இருக்கும்.

சென்ற ஆண்டு கூட நான் அமைச்சர் அவர்களைச் சந்தித்துச் சொன்னேன். எனது தொகுதியில் ஒரு கிராமத்தில் உள்ள பள்ளியில் ஹரிஜனங்களைச் சேர்க்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள், பஞ்சாயத்து யூனியன் பள்ளி அது, 15 ஆண்டு காலமாக அந்த ஊரிலுள்ளவர்கள், ஹரிஜனப் பிள்ளைகள் 2 மைல் நடந்து சென்று படிக்கிறார்கள். ஹரிஜன பிள்ளைகளை அந்தப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுவது கிடையாது. என்று உள்துறை அமைச்சரிடத்தில் சொன்னேன். உடனே அமைச்சர் அவர்கள் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார். நானும் அப்பொழுதே எழுதிக் கொடுத்தேன். டி.டி.ஸி. மீட்டிங்கிலும் சொன்னேன். மாவட்ட ஹரிஜன நல இலாகா. அதிகாரியிடமும் சொன்னேன். இன்று வரையில் அந்தக் கிராமத்துக்கு வந்து அந்தப் பள்ளியில் ஏன் ஹரிஜனங்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்று கூட கேட்கவில்லை. இந்த அளவில் சர்க்கார் இருந்தால் எப்படி தீண்டாமை ஒழியும்? அதைப் பற்றி அமைச்சரிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்று வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த கிராமத்தின் பெயர் ராத்தம், அது போளூர் வட்டாரத்தில் இருக்கிறது.

22nd March 1966] [திரு. எஸ். முருகையன்]

எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடியில் 12.00 noon.
முஸ்லிம்கள் ஒரு தனிக் கல்லூரி வைத்திருக்கிறார்கள். அதே போல வேலூரில் கிறித்தவர்கள் ஒரு தனிக் கல்லூரி வைத்திருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப்புக்கு மனுப்போட்டால் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மனுவை உடனடியாக மாவட்ட நலத்துறை அதிகாரி அவர்களுக்கும் அனுப்பி தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கல்லூரி நிர்வாகிகள் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். 60 சதவிகிதம் மார்க்கு வாங்கியிருந்த பின் தங்கிய மாணவனை விட்டு விட்டு, 42 சதவிகிதம் வாங்கியிருந்த ஷ கல்லூரி நிர்வாகிகளுக்கு வேண்டிய மாணவனுக்கு பெற்றுக் கொடுக்கிறார்கள். 60 சதவிகிதம் மார்க் வாங்கிய அவனுககு வருவாயும் அதிகம் இல்லை. அது போன்ற குறைகளை நிவர்த்திக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதோடு, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு அரிஜன் மெம்பர் இருப்பது போல, ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திலும். ஒரு அரிஜன் நிச்சயமாக மெம்பராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று போடவேண்டும்.

குடிநீருக்காக மேல் நிலை கட்டும்போது, கிராமங்களில் அரிஜனங்களுக்கு சப்ளை செய்யப்படுவதில்லை. முதலிலேயே, அரிஜனங்களுக்கும் முதலில் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று மேநீர் நிலையம் கட்டும்போதே கட்டாயப் படுத்திவிட வேண்டும்.

எங்கள் ஊரில் அரிஜன நல ஆலோசனைக்கு கமிட்டி போட்டு இருக்கிறார்கள். திருவண்ணாமலையில் இருக்கும் அந்தக் கமிட்டிக்கு செங்கம் தாலுகாவிலிருந்து மெம்பர்களைப் போட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவரிடத்தில் சொல்லும்போது, அவர்கள் இவையெல்லாம் ஆர்.டி.ஓ. சிபாரிசு செய்கிறார்கள் என்கிறார்கள். திருவண்ணாமலையிலேயே 6,000, 7,000 அரிசன மக்கள் இருக்கிறார்கள். அவர்களில், பல காங்கிரஸ்காரர்களேகூட இருக்கிறார்கள். செங்கம் தாலுகாவிலிருந்து கொண்டு வருவானேன் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இது போன்று கட்சிப் பாகுபாடு செய்வது நல்லதல்ல. அங்கே இருக்கிற காங்கிரஸ்காரரையே போட்டாலும் பரவாயில்லை. ஏதாவது ஒருவர் ஒன்று சொல்ல வேண்டும் என்றால், வேறு தாலுகாவிற்குச் சென்று கேட்பது . . . (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. எஸ். முத்துலிங்கம்** : கனம் சபாநாயகர் அவர்களே, அரிசன மானியத்தின் மீது எங்கள் கட்சியின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியாகிய வந்தவாசி தாலுகாவில் பல அரிசன காலனிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமல், அந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் காலனிகளுக்கு அரசாங்கம் உடனடியாக மின்சாரம் வழங்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. எஸ். முத்துலிங்கம்] [22nd March 1966

அரிசன மக்கள் பல கிராமங்களில் குடி தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமங்களில் அரசாங்கம் உடனடியாக அவர்களுக்குக் கிணறுகள் எடுத்துக் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசனக் கிராமங்களுக்கு, எவ்வளவோ நாட்களாகக் கேட்டும், ரோடு வசதி யில்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அப்படிப் பல கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக சில அரிசனக் காலனிகளில், சுடுகாட்டுக்குப்போகவே பாதை யில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சாங்க்ஷன் ஆகியும் ரோடுகள் இன்னும் சரிவர அமைக்க வில்லை. அது டிலே பட்டு வருகிறது. ஆகவே, அவைகளை உடனடியாக அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கெள்ளுகிறேன்.

அரிசன மக்கள் படிக்க ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அந்த ஸ்காலர்ஷிப்பெல்லாம் காலாகாலத்தில் வழங்கப்படுவது கிடையாது. அதற்கான பாரங்களையும், அங்கே யிருக்கும் ஆபீசில்; டைரக்டர் ஆபீசிலிருந்து அந்த அந்த ஜில்லா தலைநகரங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் தலைநகரத்தில் இருக்கும் டி.டபிள்யூ.ஓ. அவர்கள் காலாகாலத்தில் கொடுக்காமல் கஷ்டம் ஏற்படுகிறது. எம்.எல்.ஏ.-க்களாகிய நாங்கள் கேட்டாலும், அவர்கள் எங்களிடத்தில் நம்பிக் கொடுப்பதும் கிடையாது. சாதாரணமாக யாராவது மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் எம்.எல்.ஏ.-க்களாகிய எங்களிடம் தான் ரிப்போர்ட் செய்யவேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில் மக்கள் பிரதிநிதியாகிய நாங்கள், மக்களுக்குத் தொண்டு ஆற்றுவதற்காக, அந்த அதிகாரியிடம் போகவேண்டியிருக்கிறது. அவர்கள் 'உங்களிடம் கொடுக்க முடியாது' என்கிற நிலையை உருவாக்குகிறார்கள். அப்படியென்றால், அவர்களை மட்டும் நாங்கள் எப்படி நம்புவது என்பது புரியவில்லை. ஆகவே, அந்த பாரம்கள் காலாகாலத்தில் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது கிராமப் பகுதிகளில் ஹாஸ்டல்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றிலே அமைக்கப் பட்டிருக்கும் வார்டன்கள் சரியாக வேலை செய்வதில்லை. வார்டன்கள் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அனுபவம் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும்; வயது 35, 40 உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களால்தான் நல்ல பணி செய்ய முடியும். இப்பொழுது போல செகண்டரி கிரேட் வாத்தியார்களைப் போட்டால், அவர்கள் பள்ளி மாணவர்களைப் போல இருப்பதால் பணி செய்ய முடியவில்லை. ஏற்கனவே இருந்தாற்போல, உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரையே போடுவது நலமாக இருக்கும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மதம் மாறிய கிருத்துவர்களுக்கும், அரிசனங்கள் போலவே எல்லாச் சலுகைகளும் கொடுக்கப் படவேண்டும். அப்படிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

22nd March 1966] [திரு. எஸ். முத்துலிங்கம்]

அடுத்து, சில அரிசன மாணவர்கள் ஆஸ்டலில் இடம் இல்லாமல் தவிக்கிறார்கள். அதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இதோடு என் உரையை முடிக்கிறேன்.

*திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. எந்த அளவிலே அரிஜன மக்களையும், பிற்பட்ட மக்களையும்; ஆதிவாசிகளையும் முன்னேற்றம் செய்ய வேண்டும் என்று முழு மூச்சோடு பணிகள் பல செய்கிறோம் என்பதை இந்த மானியக் கோரிக்கையை அதிகமாக்க வாய்ப்பு இருக்கிறது என்பதில் இருந்து தெளிவாகிறது. மூன்றரைக் கோடி மக்கள் கொண்ட இந்த மாநிலத்தில், கிட்டத்தட்ட இரண்டு கோடி மக்கள் ஆதிவாசிகள், பிற்பட்ட சமூகத்தினர், அரிஜனங்கள் இருப்பார்கள். இரண்டு கோடி மக்களுக்கு ரூ. 5 கோடி செலவு செய்கிறோம் என்பது மிகமிகக் குறைவானதுதான் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். ஏன் இந்தத் துறை மிக முக்கியமானது என்று கூறுகிறேன் என்றால், பிற்பட்ட சமூகத்தினரையும், அரிசனங்களையும், ஆதிவாசிகளையும் முன்னேற்றிவிட்டால், சமுதாயத்திலே ஒரு புரட்சி ஏற்படும், பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஆகவே இந்த மான்யக் கோரிக்கைக்கு அதிகம் தொகை கொடுத்து, அதிகமான வசதிகளையும் செய்து தருவது அவசியம் மாத்திரமல்ல, அவசரமும் கூட என்று சொன்னால் அது மிகையாகாது. அமைச்சரவர்கள் அடுத்த வரவு செலவுத் திட்டத்திலேயாவது, இந்த 5 கோடி என்பதை 10 கோடி என்று கொடுக்கும் அளவுக்கு போனாலும், அந்தப் பணத்தை பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வரும்போது, பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப் படுவது வரவேற்கத்தக்கது. அவர்களுக்குப் பிற சலுகைகளைக் குறைத்தாவது, படிப்புக்குக் கொடுத்தாக வேண்டும். இன்றைக்குப் பள்ளிக் கூடத்தில் சம்பளம் இல்லை என்று சொல்லுவதன் காரணமாக, பலருக்குப் பெருத்த பயன் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் நம்முடைய சர்க்காரை வாழ்த்துகிறார்கள். கல்லூரிப் படிப்புக்குப் போகும் போது அந்த மாணவர்களுக்கு இன்னும் சற்று அதிகமாகச் சலுகைகள் கொடுக்க வேண்டும். இன்றைக்கு சற்றேறக் குறைய 147 லட்ச ரூபாய் பிற்பட்ட இனத்தவருக்கு என்று கொடுப்பது மிகக் குறைவானது. ஆண்டுதோறும் வருகின்ற மனுக்களைப் பார்த்தால், அவைகளில் 50 சத விகிதம் மாணவர்களுக்காவது கொடுக்கிறோமா என்றால், இல்லை. எப்படிக் கொடுக்கிறோம்? அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 1,500 என்று இருக்கவேண்டும், அல்லது குறைவாக இருக்கவேண்டும். பிற்பட்ட இனத்தவர் என்கிற காரணத்தால் மட்டுமல்லாமல். பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையில் இருக்கிறவர்கள் என்றும், ஆக இரண்டு நிலைகளையும் சேர்த்துப்பார்த்து, கொடுக்கும் சலுகை 50 சத விகிதம் பேர்களுக்குக்கூடக் கொடுக்க முடியவில்லை. இதை

அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதை இரண்டு முறைகளில் சீர்திருத்த வேண்டும் என்ற யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று குறைந்தது 70, 75 சத விகிதம் மனுக்கள் போடும் மாணவர்களுக்காவது சமாளித்து உதவி கொடுக்கப் படவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், ஆண்டுக்கு 1,500 ரூபாய் வருமானம் என்கிற உச்ச வரம்பை நீக்கி, சற்றேறக்குறைய மூவாயிரம் ரூபாய் அளவுக்கு உச்ச வரம்பை உயர்த்தினால்தான் பல பேர்கள் இதனால் பயன் அடைய முடியும். சாதாரணமாக ஆண்டுக்கு 1,500 ரூபாய் வருமானத்தை யாருமே பெற்றுவிட முடியும். அந்த வருமானத்திற்கு மேலே இருந்தால், அவர்களுக்கு எந்தவித வசதியும் இல்லை என்று சொன்னால், சாதாரண கீழ் மட்டத்தில் இருக்கும் மக்களும் நடுத்தர மக்களும் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால், உச்ச வரம்பை உயர்த்துவதோடு, ஸ்காலர்ஷிப்புக்காகக் கொடுக்கும் பணத்தையும் அதிகமாக ஒதுக்கி, இந்த நிலைமையைச் சமாளிப்பது மிகவும் அவசியம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் கொடுக்கும் ஸ்காலர்ஷிப் விஷயத்திலே, டெக்னிகல் கோர்ஸ், தமிழ்ப்பண்டிதர் படிப்பு, ஃபிஸிகல் இன்ஸ்ட்ரக்டர் ட்ரெயினிங், சட்டப் படிப்பு, போஸ்ட்-க்ராஜுவேட் படிப்பு போன்றவற்றுக்காக மிகவும் குறைவான அளவில் உதவிச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய ஸ்காலர்ஷிப்புக்காக வரும் மனுக்களில் பத்தில் ஒரு பங்கு, இருபதில் ஒரு பங்கு, கூட நம்மால் கொடுத்துச் சமாளிக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகையல், சற்றேறக்குறைய இத்தகைய நிலைகளில் எல்லாம் 40 சத விகித மனுக்களையாவது ஏற்றுக்கொண்டு, உதவி கொடுக்கக்கூடிய அளவு பண வசதி செய்து கொடுப்போமானால், அவர்களுடைய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

குற்றப் பரம்பரையினருக்கு (எக்ஸ்-க்ரிமினல் ட்ரைப்ஸ்) வீடு கட்டிக் கொடுப்பதற்கும், மற்ற உதவி செய்வதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பல இடங்களில் சென்று பார்த்தால், நாம் ஒதுக்கிய வேகத்திற்கேற்ப வேலைகள் நடத்தப்படுகின்றனவா என்று சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். குறிப்பாக, சென்னைக்குப் பக்கத்தில் பம்மல் ஸெட்டில்மென்ட் இருக்கின்றது. அங்கே குற்றப் பரம்பரையினர் வாழ்ந்து வருகிறார்கள். அந்த இடத்தைப் பார்த்தால், அந்தக் காலத்தில் அது குதிரை லாயமாக இருந்திருக்க வேண்டும். அதைத்தான் இன்று வீடாக மாற்றியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அது இருக்கும் நிலையைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருக்கிறது. வீடு கட்ட நல்ல விஸ்தாரமாக இடம் இருக்கிறது. வீடு கட்டுவதற்காகப் பணத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இத்தனை இருந்தும், அங்கே நல்ல வீடுகள் கட்டப்படவில்லை என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் போது, எதற்காக இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்காகக் கட்டப்படுகிற வீடுகளை வசதியாகக் கட்டுவதோடு கூட, இன்னும் அதிகமாகவும் கட்டவேண்டும். அந்தக் காலத்தில் இருந்த எண்ணிக்கையைத்தான் கணக்கெடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு அதைக் காட்டிலும் அவர்கள் பெருகிவிட்டார்கள். வெளியே இருக்கலாம் என்றாலும், குற்றப் பரம்பரை

யினர் என்ற காரணத்தால், பயந்து கொண்டு வீடு கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இந்த நிலைமையில், அவர்களுடைய வீட்டு வசதியைப் பெருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சென்னை நகரத்தில் சேரிச் சீர்திருத்தம் மிக மிகத் தாமதப்பட்டு நடந்து வருகிறது. இந்த வேலையை இன்றைக்கு ஹௌஸிங் யூனிட்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதிகளை ஏற்றுக் கொண்டிருக்கிற போர்டார் ஏதோ கால தாமதம் செய்கிறார்கள் என்றால், அதைக் கேட்டுத் திருப்திப் பட்டுவிட முடியாது. அதிகாரத்தை அரிசன நல இலாக்காவிற்குக் கொடுக்கவேண்டும். ஏதோ அந்த ஹௌஸிங் யூனிட் செய்துவிடும் என்று உட்கார்ந்து கொண்டே இருப்போமானால், இன்னும் எத்தனை ஆண்டுகளானாலும், இவைகளெல்லாம் சீர்திருத்தப்பட்டுவிடுமா என்ற சந்தேகம் எழும்புகிறது. ஆகவே, உடனடியாக அரிசன நல இலாக்காவிற்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்து, சேரிச் சீர்திருத்தத் திட்டத்தைச் சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கு என்ன துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. டி. பி. ஏழுமலை: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து, இந்த மானியத்தைத் தலைமை தாங்கி நடத்துகிற அமைச்சர் அவர்களையும் அதிகாரிகளையும், இந்தச் சர்க்காரையும் நான் பாராட்டுகிறேன். இந்தப் பாராட்டுதல், மேலும் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கும், அரிசனங்களுடைய முன்னேற்றத்தைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்கே தவிர, ஏதோ அவர்கள் செய்த வேலைக்கு நன்றி சொல்கிற அளவிற்கு இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

இந்த மக்களுடைய முன்னேற்றத்தைக் கவனிக்கிறபோது, அவர்களுக்குக் கல்வி, பணம், பதவி என்கிற இந்த மூன்று அம்சங்களில் தாராளமாகக் கொடுத்தால் அவர்களுடைய முன்னேற்றத்தைக் கணிசமாக நாம் பார்த்துக் கொள்ளலாம். அந்த வகையில் முன்னேற்றத்தைக் காண்பது பார்ப்பதற்கு நல்லதொரு காட்சியாக அமையும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பணம் என்று சொல்கிறபோது, எல்லாவித ஏற்றுமதி இறக்குமதி, மற்றும் சாதாரண சில்லரைக் கடைகள் வைத்து நடத்திப் பணம் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கலாம். குறிப்பாக அரிசி ரேஷன் கடைகள் போன்றவற்றுக்கெல்லாம் அரிசன மக்களுக்கு ஒரு சலுகை கொடுத்தால், அவர்களுக்கும் இதை நடத்த வேண்டிய அளவிற்கு ஒரு உதவி செய்தால் அவர்கள் நல்ல பண வசதி பெற்று, பொருளாதாரத்தில் முன்னேறுவதோடு, தீண்டாமையும் நீங்க ஏதுவாக இருக்கும், மற்றவர்களுக்கும் அவர்கள் உதாரணமாக இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். அடுத்தது, பதவி. இப்பொழுது சட்டசபையில் அரிசன வகுப்பைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இருக்கிறோம் என்று சொன்

[திரு. டி. பி. ஏழுமலை] [22nd March 1966

ஞல் மற்றவர்களுக்கு இது ஒரு சாட்சியாக இருக்கிறது. அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், எங்களைப் போன்றவர்களைப் பார்த்து, தாங்களும் அப்படி முன்னேறி வரவேண்டும், எல்லா விஷயங்களிலும் தாங்கள் மற்றவர்களுக்கு ஈடாக இருக்கவேண்டும் என்று உணர்ச்சி அவர்களுக்குத் தானே வரும். ஆகவே, பதவியும் இந்தச் சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமாக இருக்கும் என்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். பதவி என்று சொல்லுகிறபோது, அது ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களும் இதை முக்கியமாக மேற்கொள்ளவேண்டும் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதோ எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் பரிந்து பேசுவதினாலேயே இந்தச் சமுதாயம் உயர்ந்து விடும் என்று சொன்னால் அதை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். மகாபாரதத்தில் துரியோதனாதிகளுக்கு சகுனி எப்போதும் கொஞ்சம் அதிகமாகவே ஈடுபடுகிற மாதிரி ஆதரவு கொடுத்து வந்தார். ஆனால், கடைசியிலே, துரியோதனாதியருடைய பரம்பரையே அழிந்து விட்டது. ஆகையால், பரிந்து பேசுவதனால் இந்தச் சமுதாயத்திற்குப் பிரயோசனம் இல்லை என்பதை மிகப் பணிவோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும், குடிமனை வசதி, பாதை வசதி, குடி தண்ணீர் வசதி, இவை அரிசன மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் வசதிகளாகும். இந்த மூன்றையும் அவர்களுக்குச் செய்தால் ஓரளவு போதுமானதாக இருக்கும். குடிமனை என்று சொல்லுகிற போது, நான் ஒரு விஷயத்தை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கனம் உறுப்பினர் திரு. பரமேசுவரன் அவர்களுடைய தலைமையில் ஒரு கமிட்டி போட்டு, அது ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டைச் சரியாகப் பார்த்து, அதில் இருக்கின்ற விஷயங்களை நன்றாக நிறைவேற்றவேண்டும் என்று நான் மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரிசன மக்களாக இருக்கிறவர்கள், எங்கே குடியிருந்தாலும், பத்துப் பதினைந்து வருஷம் ஓரிடத்தில் குடியிருந்தாலும், அந்த இடத்தை அவர்களுக்கே உடனே பட்டா போட்டுக் கொடுக்கவேண்டும் என்று நான் மிகப்பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வைத்தியக் கல்லூரியில் படிக்கும் அரிசன மாணவர்கள் மூன்று தடவை பரீட்சை எழுதலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரிசன மக்கள் மிகத் தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எத்தனையோ ஆண்டுகளாகப் படிப்பு என்றால் என்ன என்றே தெரியாதிருந்தவர்கள். இந்தச் சர்க்கார் வந்த பிறகு தான் அந்த சமூகத்தினருக்குப் படிக்கவேண்டும் என்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள். வைத்தியக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் மூன்று தடவை பரீட்சை எழுதலாம் என்று இருப்பதற்குப் பதிலாக ஐந்து தடவை பரீட்சை எழுதலாம் என்று சலுகை கொடுத்தால் அவர்கள் இந்தப் பரீட்சையில் தேறி, வைத்தியர்களாகி, நல்ல டாக்டராக வர நல்ல சந்தர்ப்பம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

22 nd March 1966] [திரு. டி. பி. ஏழுமலை]

அடுத்தது, பாதை வசதி. பல காலனிகளுக்குப் பாதை வசதி இல்லாத ஒரு குறை இருக்கிறது. அதற்குக் காரணம், அங்கே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்தும் கூட அந்தப் பாதை வசதி போடுவதற்குக் குறுக்கே நிற்கிறார்கள். ஆகவே, சர்க்காரே அப்படிப் பாதை வசதி இல்லாத அரிசனக் காலனிகளைத் தேர்ந்தெடுத்து, நம்முடைய அரிசன நல இலாக்காவிலேயே அந்தப் பாதை வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. நா. இராசாங்கம்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று நடந்து வருகிற இந்த அரிசன நல மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட விவாதத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மானியத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலை ஜாதியினருக்கும், பிற்பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியானது மிகக் குறைவாக இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டின் மொத்த வருவாய் 188 கோடி ரூபாய். அதிலே இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்க்கும்போது, மூன்றரைக் கோடி மக்களுக்கு தலா ஐம்பது ரூபாய் விகிதாசாரம் வருகிறது. அறுபது லட்சம் ஜனத்தொகை கொண்ட அரிசன மக்களுக்கு பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒன்றரை கோடி ரூபாய் போக, பாக்கித் தொகையைக் கணக்கிட்டால் 7 ரூபாய் விகிதாசாரம் வருகிறது. ஆகவே, மொத்தத்தில் அரிசனங்களுக்கு விகிதாசாரப்படி சேரவேண்டிய தொகை பத்தில் ஒரு பங்கு தான் இந்த அரசாங்கம் இன்றைக்கு நிதியாக ஒதுக்கி இருக்கிறது. இது மிக மிகக் குறைவு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குச் சமாதானம் செய்ய முற்படலாம். அந்தச் சமாதானம் எப்படி இருக்கும் என்று நான் கருத வேண்டுமானால், மற்றவர்களுக்கும் கொடுக்கிறதில் இவர்களுக்கும் பங்கு உண்டு என்று சொல்லலாம். உரிமை இருக்கலாம், உண்டு என்பதற்கு. ஆனால், வாய்ப்பு இருக்காது. இது கண்கூடாகக் கண்ட விஷயம். நான் மூன்று ஆண்டுகளாகவே சொல்லி வருவதுண்டு. இந்த மக்கள் அரசியல், பொருளாதார சமத்துவத்தில் முன்னேற வேண்டும் என்று இந்த அரசாங்கம் உண்மையாகக் கருதியிருந்தால், சீக்கிரமாக இவர்கள் முன்னேறவேண்டும் என்ற எண்ணம் இருந்தால், இதை ஐந்து ஆண்டுக்குள் நிறைவேற்ற முடியும் என்ற உண்மையான கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தால் இதை நடத்தியிருக்க முடியும். ஆனால் என்ன நிலைமை? நிதி ஒதுக்கினோம் என்று கணக்குச் சொல்லலாம். ஆனால், சம்பிரதாயத்திற்காக நாம் சொல்லிக்கொண்டே வருகிறோமே யொழிய வேறு இல்லை. உதாரணமாக, அவர்களுக்கு நில ஆர்ஜிதம் பண்ணிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். நடவடிக்கை எடுத்து, நிலக்காரர்களுக்கு அரசாங்கம் பணம் கொடுத்து அந்த நிலங்களை ஏழை ஹரிஜனங்கள் வசம் கொடுத்தோம். அரிஜனங்கள் நிலம் தங்களுக்கு இனமாகக் கொடுக்கப்பட்டது என்று எண்ணினார்கள். அந்த எண்ணம் தான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால்,

[திரு. நா. இராசாங்கம்] [22nd March 1966

நிலைமை என்ன? நிலக்காரர்கள் இன்றையதினம் கேஸ் கொடுத்திருக்கிறார்கள். அவர்களோடு கோர்ட்டில் வழக்காட இந்த ஏழை ஹரிஜனங்களிடம் பணம் இல்லை. கோர்ட்டுக்குப் போக அருகதை இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் என் பகுதியில் புளிச்சப்பள்ளம், வானூர் போன்ற இடங்களில் கடந்த எட்டாண்டுகளாக இன்னும் கோர்ட்டில் வழக்கு முடிவு கூறப்படாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் இதுபற்றித் துரிதமாக நடவடிக்கை எடுக்க முன் வருவதில்லை. ஏழை ஹரிஜனங்களுக்கும் உதவி செய்ய வருவதில்லை. இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் நிலவெளியேற்றச் சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகியவற்றைக்கொண்டு ஏழை ஹரிஜன விவசாயிகளின் மீது நிலச்சுவாந்தார்கள் வழக்குத் தொடர்கிற போது அவர்களை எதிர்த்து வழக்காட இவர்களுக்கு வசதியில்லை. கோர்ட் பீஸ் ஸ்டாம்ப் ஒட்டுவதில் இருந்து இவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று பலகாலமாகக் கேட்டுக்கொண்டு வந்தோம். அதுபற்றி இவ்வாண்டு ஒன்றும் குறிப்பிடவில்லை. இனிமேலாவது ஹரிஜனங்களுக்கு கோர்ட் பீஸ் ஸ்டாம்பு சலுகையும், கோர்ட்டில் வழக்காட வக்கீல்கள் உதவியும் அளிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் நாட்டில் 380 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அவற்றில் தங்களுடைய சொந்தத் திறமை காரணமாக யாருடைய உதவியும் இன்றி இரண்டே இரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தான் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர் சேர்மெனுக வர முடிந்திருக்கிறது. அப்படி வந்திருக்கிறவர்கள் கூட எப்போது பதவி இழக்க வேண்டியிருக்குமோ என்கிற சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சிக்கல்கள் எல்லாம் அரசியல் காரணமாக வருகிற சிக்கல். தனிப்பட்ட முறையில் எந்தத் தாழ்த்தப்பட்ட மகனும் தன் சொந்தத் திறமையால் முன்னுக்கு வந்தாலும் கூட அவனை எப்படி வீழ்த்துவது என்கிற சூழ்நிலைதான் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில ஆர்ஜிதத்தைப் பற்றி திரு. பரமேசுவரன் அவர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள சிபார்சுகளைக் காலதாமதமின்றி சீக்கிரமாக நிறைவேற்றவேண்டும். அடுத்தபடியாக, கைத்தொழில் சம்பந்தமாக ஹரிஜன மாணவர்கள் 16 சத விகிதம் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்பதாக வைத்தியநாதன் கமிட்டியும், மத்திய அரசாங்கத் திட்டமும் இருக்கிறது. இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். அப்படியே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்டவரை இடத்தைக் கொடுத்துவிட்டார்கள்.

அடுத்து, ஒரு பள்ளியில் ஒரு பிரிவில் 32 மாணவர்கள் இருந்தால் அவர்களில் 5 பேர்கள் தாழ்த்தப்பட்ட இனத்து மாணவர்களாக இருக்கவேண்டும். அந்த ஐந்து பேர்களில் 2 பேர்களுக்குத்தான் சர்க்கார் உதவி மான்யம் கொடுக்கிறது.

22nd March 1966] [திரு. நா. இராசாங்கம்]

மூன்று பேர்களுக்கு எந்தவிதமான உதவியும் கொடுப்பதில்லை. உதவி பெறுகிற இரண்டு மாணவர்கள் தான் ஹாஸ்டலில் இடம் பெறுகிறார்கள். உதவி பெருத 3 மாணவர்களுக்கு ஹாஸ்டலிலும் இடம் இல்லை. ஆகவே அவர்கள் தங்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போகவேண்டிய பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். 16 சத விகிதம் என்ற அடிப்படையில் சேர்க்கப்படுகிற 5 மாணவர்களுக்கும் ஹரிஜன இலாகாவில் இருந்து ஸ்காலர்ஷிப் கொடுத்தாகவேண்டும். அதற்குரிய பரிசீலனையைக் கனம் அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறத்தில் அவர்களுடைய வீட்டுப் பிரச்சினை, மனை வழங்கும் பிரச்னை இவற்றைக் கலெக்டர்கள், தாசில்தார்கள் போன்றவர்கள் கவனித்துக்கொள்கிறார்கள். அங்கே பல தாமதங்கள் ஏற்படலாம். ஜனநாயகத்தின் பேரால் நடைபெறுகிற சர்க்கார் இரண்டு பக்கத்தார்களுக்கும் இடையூறு இல்லாமல் காரியம் செய்கிறோம், காலதாமதமாகிறது என்று காரணம் கூறலாம். ஆனால், சென்னையைப் பொறுத்தவரையில் இந்த நகரைப் பொறுத்தவரையில் ஹரிஜனங்களுடைய கூட்டுறவுக் காலனிகளை எடுத்துக்கொண்டால் பலவிதமான தலையீடுகளும், காலதாமதமும் ஏற்பட்டு வருகின்றன. அதிகமாக டைரக்டருடைய தலையீடு, அரசாங்கத்தினுடைய தலையீடு இருக்கும்—உதாரணமாகச் சொல்கிறேன். கஸ்தூரிபா காந்தி ஹவுஸ் சைட் என்பதாக ஷெனாய்நகர், வடசென்னை-30, டிவிஷன் 51-ல் 101 ஏக்கர் வேகன்ட் லாண்டு இருக்கிறது. அதை பல கம்பெனிகளிலும், அரசாங்கத்திலும் வேலை செய்து வருகிற ஹரிஜனங்களுக்காக வீடு இல்லாத ஏழைகளுக்காக எடுத்துக் கொள்ளப்போகிறபோது ஹவுஸிங் போர்ட் அதை ரிலீஸ் செய்யாது காலதாமதம் செய்துகொண்டிருக்கிறது. அதையும் சர்க்கார் சீக்கிரம் ரிலீஸ் செய்துகொடுத்தால் நூற்றுக்கணக்கான நிலமில்லாத ஏழை ஹரிஜன மக்கள் நன்மை அடைவார்கள். அதேபோல பெரம்பூரில் டி.எஸ். நம். 104, ப்ளாக் நம். 9 உம்; டி.எஸ். நம். 57, 66 ப்ளாக் 13-லும், அதுபோல ஐயனாவரம் ஆர்.எஸ். 478/1, 2. ஆர். எஸ். 479 பெரம்பூர் ஆகிய இடங்களிலும் அதே கோரிக்கையை அவர்கள் விட்டிருக்கிறார்கள்.

MR. SPEAKER : The hon. Member can give all these details in a petition.

திரு. நா. இராசாங்கம்: அதேபோல ஐயனாவரம் 9/9 சோலை தெரு, ஆர்.எஸ். நம். 49, டி.எஸ். 19 நான்கு பேருக்கு 4½ க்ரவுண்டு. அதை இரண்டு பேருக்கு 1½ கிரவுண்டு கொடுத்து விட்டு பாக்கியை மற்றவர்களுக்குக் கொடுப்பதாகத் தெரிகிறது, அதையும் ஹரிஜன இலாகா பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன இலாகாவில் ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டியதை விரைவுபடுத்த வேண்டும். சம்பள ஏற்றம் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டும்.

[22nd March 1966

[திரு. ம. தண்டாயுதபாணி தலைமை]

திரு. க. ர. நல்லசிவம்: கனம் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் எந்த அளவு சலுகை வேண்டுமென்பதைப் பற்றி அதிகமாகச் சொன்னார்கள். உண்மையிலே கல்வித்துறையைப் பொறுத்த வரையில் அந்தச் சமூகத்தினர் ஆரம்பக் கல்வியையாவது எல்லோரும் பெறத்தக்கதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். கல்வி என்ற தலைப்பில் இங்கு பேசப்படுவதெல்லாம் ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவை ஆகும். என்னைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன இலாகா மூலமாக ஸ்காலர்ஷிப் பாரம் கொடுக்க வேண்டுமென்று எனக்கு அனுப்பப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் நான்கைந்து பேர்களுக்காவது ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டதுண்டு. தகுதியுள்ள யாரும் வருவதே கிடையாது. ஐந்தாறு வருஷங்களாக ஒரு கத்தையாகக் கட்டி வைத்திருக்கிறேன். அதாவது முறையாக ஆரம்பக் கல்வி படித்தவர்களால் தான் உயர்நிலைக் கல்வி பெற முடியும். உயர்நிலைக் கல்வி பெற்றவர்களால் தான் மேல் நிலைக் கல்வி பெறமுடியும். இன்றைக்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இத்தனை தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் சேர்த்துக்கொள்ளபடவேண்டுமென்று நாம செய்திருக்கிறோம். அங்கே ராமன் மகன் குப்பன், குப்பன் மகன் ராமன் என்பதாக வெறும் பெயரைமட்டும் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர ஹரிஜனக் குழந்தைகளே கிடையாது என்று சொல்ல முடியும்.

எனக்குத் தெரிந்தவரையில் நன்றாகச் சொல்வேன். இன்றைக்கு கல்வித்துறையில் யார் முன்னேறியிருக்கிறார்கள் என்றால் யார் மதம் மாறியிருக்கிறார்களோ அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். அல்லது கிராமத்தைவிட்டு யார் நகரங்களுக்குத் தொழிலை நாடி ஓடிச்சென்றுவிட்டார்களோ அவர்களுடைய குழந்தைகள் முன்னேறியிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் உள்ள ஹரிஜனங்களுடைய குழந்தைகள் அப்படியே இருக்கிறார்கள். இதை அழுத்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

அதற்கடுத்தபடியாக இவர்கள் கல்வித்துறையில் முன்னேற வேண்டுமென்று சொன்னால் வாழ்க்கையில் ஏதாவது நலம் இருக்க வேண்டும். அதெல்லாம் இல்லாமல் அவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று சொன்னால் அது சொல்லளவில்தான் நிற்க முடியும். இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் சர்க்கார் தன்னுடைய நடைமுறையை மாற்றிக்கொள்ளவேண்டும். பொருளாதாரத்துறையில் அவர்கள் எல்லாவகையிலும் ஊன்றிக் கொள்ள வாய்ப்பு அளிக்கவேண்டும். இன்றைக்கு பல்வேறு கூட்டுறவுகள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்தவரையில் பெருவாரியான நிலங்கள் புன்செய். கீழ் பவானி ஆயக்கட்டில் உண்மையாக இவர்களுடைய சங்கம் வரமுடியவில்லை. ஆகவே ஜனங்களுக்கு நிலம் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும் அல்லது அவர்களுக்கு சிறு வியாபாரம் செய்துகொண்டு முன்னேறுவதற்கான வழிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

22nd March 1966] [திரு. க. ர. நல்லசிவம்]

அடுத்தபடியாக, வீட்டு நிலம் சம்பந்தமாக பலர் பல கருத்துக் 12-30
களைச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் நிலம் p.m.
கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்கிறார்கள். என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில் 3 தாசில்தார்கள் போடப்பட்டிருக்கிறார்கள், ஜில்லா ஹரிஜன நல இலாகா அதிகாரி ஒருவரை போட்டிருக்கிறார்கள். கீழ்நிலைக் குமாஸ்தாக்கள் 30 பேர்கள் போட்டிருக்கிறார்கள். என்னுடைய தாலூகாவுக்கு மட்டும் 15 அதிகாரிகளாவது வேண்டும். அப்படி இருந்தால்தான் அங்கேயுள்ள வேலைகளைக் கவனிக்கமுடியும். எங்கள் பகுதியிலே 5 ஹரிஜனங்கள் வீட்டுக்காக நிலம் கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் கொடுத்து 4, 5 ஆண்டுகள் ஆகியும்கூட அது போவதும் வருவதுமாகத்தான் இருக்கிறதே ஒழிய இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. அந்த விண்ணப்பங்கள் ஜில்லா ஹரிஜன நல இலாகா அதிகாரியின் கைக்குப் போகும், பிறகு அங்கிருந்து இங்கே வரும். அங்கேயிருப்பவர்கள் கோர்ட்டுக்கு போவார்கள். பிறகு ஸ்டே ஆகும். இப்படியேதான் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தெளிவாக இதற்கு உத்தரவு போடவேண்டும் அல்லது அதற்காகச் சட்டமாவது செய்யவேண்டும். நாம் ஒன்று வைத்துக்கொள்ள வேண்டும். ஐந்து ஏக்கருக்கு மேலே வைத்திருக்கின்றவர்களிடத்திலேதான் நிலத்தை எடுக்கவேண்டுமென்று ஒன்று வைத்துக்கொள்ளவேண்டும். அதிகாரிகள் அங்கே லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அப்படிப்பட்டவை ஒன்று இரண்டுதான் இருக்கும். ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நிலமாக இருந்தால் அதில் அக்கறை எடுத்துக் கொண்டு அதிகாரிகள் பாக்கெட்டில் பணத்தைப்போட்டு காரியத்தை முடித்துவிடுகிறார்கள். அதோடு நில ஆர்ஜிதம் என்று எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு குறிப்பிட்ட வருஷத்தை நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். இப்பொழுது 4, 5 வருஷம் அல்லது 10 வருஷம் என்றுகூட இதற்கு ஆகிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட காலத்தை வைத்துக்கொண்டு அதற்குள் செய்ய, வேண்டும். நில ஆர்ஜிதத்தை உடனுக்குடன் செய்யவேண்டியதில் கவனம் செலுத்தவேண்டும். எனக்கு இந்த வீடுகள் கட்டிக் கொடுப்பதில் நம்பிக்கையே கிடையாது. அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து விட்டு பிறகு அந்தக் கடனை வசூலிப்பது என்பது ரொம்பச் சிரமமாக இருக்கும். முதலாவது, வீட்டு நிலம் கொடுப்பதற்கு சரியான ஏற்பாடுகள் செய்யுங்கள். பெருவழித்துறைப் புறம்போக்குகள் இருக்கின்றன. அவற்றில் தேவைப்பட்டதை வைத்துக்கொள்ளலாம். தேவைப்படாததை, அப்படிப்பட்ட பகுதிகளை ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும். ஹரிஜனங்களிலே, மிக, மிகப் பின்தங்கியவர்கள் அருந்ததியர்கள், சக்கிலியர்கள் என்று சொல்லப்படுபவர்கள்தான். கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன். அவர்களில் எத்தனை பேர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள், எத்தனை பேர்கள் கலெக்டர்களாக இருக்கிறார்கள், எத்தனை பேர்கள் பெரிய உத்தியோகத்திலே

இருக்கிறார்கள், என்ற கணக்கைக் கொடுத்தால் மிகப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன். அவர்கள் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகைகளில் சிலவற்றைக் கூட அனுபவிக்கமுடியாத நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதில் குறிப்பிட்டு கவனம் செலுத்தி அவர்களுக்கும் அந்தச் சலுகைகள் கிடைக்கச்செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கை மிகவும் முக்கியமானது. ஹரிஜன நல இலாகா என்று பெயர் இருந்தாலும்கூட ஹரிஜன நலத்திற்கு மட்டுமல்லாமல் பின்னிலை வகுப்பினர் ஆகியோர்கூட முன்னேறுவதற்காக இயங்கிவருகின்ற துறை. நம்முடைய சமுதாயத்திலே இவர்கள்தான் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். ஜாதி அடிப்படையில் வைத்துக் கொண்டாலும் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்து முடிவுக்கு வருவதற்காக இந்த விவாதம் உறுதியாக இருக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் நன்மைகள் செய்திருப்பதைப்பற்றி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கல்விக்கு முக்கியமாகச் செலவழிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு சலுகையாகக் கொடுப்பதுமட்டும் 1½ கோடி ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது. படித்திருக்கலாம், பட்டம் பெற்றிருக்கலாம். திரு. நல்லசிவம் அவர்கள் சொன்னதுபோல் குறிப்பிட்ட பிரிவினர் முன்னேறாமல் இருக்கலாம். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஹரிஜனங்களில் எத்தனைபேர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள், எத்தனைபேர்கள் பதவியில் இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டாம், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டபிறகும்கூட, ஹரிஜன முன்னேற்றத்திற்கு இந்த அளவுக்கு தொகை செலவுசெய்யப்பட்ட பிறகும்கூட எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு வேற்றுமை குறைந்திருக்கிறது, எந்த அளவுக்கு தீண்டாமை ஒழிந்து இருக்கிறது, என்று பார்ப்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. படித்தவர்களுக்கு வேலைக்குப் போகவேண்டுமென்ற ஆசைதான் இருக்கும் ஆனால் அவர்களுக்கு ஆசை இருந்தால் மட்டும் போதுமா? அரசாங்கம் வேலை கொடுத்தால்தான் முடியும். தனிப்பட்டவர்களிடத்திலே போய் இத்தனை ஸ்தானங்கள் ஒதுக்க வேண்டுமென்று கேட்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. அப்படி அரசாங்கம் சொன்னால்கூட அவர்கள் கேட்கமாட்டார்கள். அரசாங்கத்திலே நூற்றுக்கு இத்தனை சதவீதம் பின்னிலை வகுப்பினருக்கு அளிக்க வேண்டுமென்று விகிதாச்சாரம் வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஹரிஜனங்களுடைய நிலை என்ன? கடந்த 15 வருஷத்திலே என்ன முன்னேறியிருக்கிறது என்று பார்த்தால் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள், சர்க்கார் பதவியில் கிளார்க் ஆக இருக்கக் கூடியவர்கள் எல்லாம் சேர்த்துப் பார்த்தால் 3 சதவிகிதம்தான் ஹரிஜனங்களாக இருக்கிறார்கள். [illegible] சதவிகிதம் இருக்கவேண்டுமென்று லட்சியம் இருந்தாலும்கூட 3 சதவிகிதம்கூட அவர்கள் இல்லாத நிலைமை

தான் இருக்கிறது. தொடர்ந்து வந்தது, ப்ரமோஷன் அப்படித்தான் வரக்கூடியது என்றால் அதை விட்டுவிடலாம். ஆனால் நேரடியாக நடக்கக்கூடிய தேர்வுகளிலும், சாதாரண கிளார்க்குக்கு நடக்கக்கூடிய தேர்வுகளிலும் அவர்கள் வரக்கூடிய நிலை இல்லை. அவர்களுக்குத் தகுதியில்லை அதனால் கொடுக்கவில்லை என்று சொல்லி அந்தந்த வருஷம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கோட்டா கூட போய்விடுகிறது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, 16 சதவிகிதம் அவர்களுக்கு கோட்டா ஒதுக்கியும்கூட, அவர்களில் தகுதியுள்ளவர்கள் இல்லாத காரணத்தால் அவர்கள் போதுமான அளவு வரமுடியவில்லை என்று சொன்னால் கல்வித் துறையிலே எந்த அளவுக்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே ஹரிஜனங்களுக்கு ரொம்பச் செய்துவிட்டோம் என்று திருப்திப்படுவதற்கு இல்லை. பின்னிலையில் உள்ளவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்துவிட்டோம், தீண்டாமையை சட்டம் இயற்றி ஒழித்துவிட்டோம் என்று சொல்வதற்கில்லை. தீண்டாமை எந்த அளவுக்கு ஒழிந்திருக்கிறது, ஒற்றுமை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, ஜாதி அடிப்படை இன்னும் ஏன் இருக்கிறது, இவ்வளவு விசேஷ கவனம் செலுத்தியும் ஹரிஜனங்கள் முன்னுக்கு வரவில்லை என்பதன் காரணங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மேல் பதவிக்காக அவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்று ஒதுக்கவேண்டும். ரயில்வேயில் கூட இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ப்ரமோஷனுக்கு வரமுடியாதபடி ஏதாவது செய்து விடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிர்வாகத்திலே சலுகை கொடுக்கவேண்டுமென்று உத்தரவைத் திருத்திவிட்டால் மட்டும் போதாது, பொருளாதார சமத்துவத்தை உயர்த்தினால்தான் முடியும். மேல் ஜாதியினரின் மனப்பான்மையை மாற்றினால்தான் பின்னிலையில் உள்ளவர்களை முன்னுக்குக் கொண்டுவரமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வேறுபாடு, ஜாதி வேறுபாடு, தீண்டாமை இவையெல்லாம் நம்முடைய நாட்டிலே பல காலமாக அடக்குமுறையாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, அதை மாற்றுவது என்பது பொருளாதார சமத்துவத்தையும், மனமாற்றத்தையும் ஏற்படுத்தினால்தான் முடியும், அப்போதுதான் அவர்கள் சுலபமாக முன்னேற்றமடைய முடியும். கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் காந்திஜி அவர்கள் கூறியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். காந்திஜி அவர்கள் நிலச்சீர்திருத்தத்திலே மிகவும் நிதானமாக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்:

"I would warn the Hindu brethren against the tendency which one sees now-a-day of evploiting the supressed classes of a political end. To remove untouchability is a penance that Caste Hindus owe to Hinduism and to themselves. The purification required is not of untouchables', but of the so-called superior castes." என்று.

யார் 'ப்யூரிஃபை' பண்ணிக் கொள்ளவேண்டும்? யார் இந்த பேதத்திற்குப் பொறுப்பாளிகள்? யார் அவர்களை அடக்கி வைத்திருந்தார்களோ, யார் அவர்களை இழிந்தவர்களாகவும்

தங்களை உயர்ந்த ஜாதியினராகவும் நினைத்துக் கொண்டு அவர்களை அடக்கி வைத்திருந்தார்களோ, அவர்கள் தங்கள் மனப் பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றுதான் காந்திஜி அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமை வேண்டுமென்று விரும்பவில்லை; மேலிடத்தில் இருப்பவர்கள்தான் தீண்டாமை இருக்க வேண்டுமென்று விரும்பு கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு ஏதோ சலுகைகளை மட்டும் கொடுத்து விட்டால் போதாது. அதையும் காந்திஜி அவர்கள் கூறுகிறார்கள். நானாகச் சொன்னால் வேறு எண்ணத்துடன் சொல்வதாகத் தோன்றும். எனவே, காந்திஜி அவர்கள் கூறியிருப்பதைக் கூறுகிறேன்.

'We must not throw a few miserable schools a tthen' என்று கூறியிருக்கிறார். ஏதோ சில பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொடுத்து அவர்கள் மத்தியில் தூக்கி எறிந்து விடுவதால் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து விட்டதாகத் திருப்தி அடைய முடியாது. காந்திஜி அதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

"We must treat them as our blood-brothers as they are in fact. We must return to them the inheritance of which we have robbed them."

அவர்களுக்கு உரியவற்றிலிருந்து எதைத் திருடியிருக்கிறோமோ அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கூறு கிறார்கள். அவர்களிடத்தில் இருந்து எதைத் திருடியிருக்கிறோம்? எதைக் கவர்ந்திருக்கிறோம்? தீவிரப் புரட்சி வேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள் அவ்வாறு சொல்லவில்லை. நிதானமாக சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டுமென்று சொன்ன, சுதந்திரத் திற்காக மக்களை ஒன்றுதிரட்டிய மகான் கூறிய வார்த்தைகளைத் தான் நான் எடுத்துக் கூறுகிறேன். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் வரையில் ஹரிஜனங்கள் பின்னிலையில் இருந்து முன்னேற முடியாது. அதுவரை அவர்களுக்கு ஏதோ சில சலுகைகளை மட்டும் செய்வதால் அவர்களுக்குள்ளேயே சில போட்டிகள்தான் ஏற்பட முடியும். ஏதோ சில அமைச்சர்கள் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக வந்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடாது. மேல் ஜாதியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய பிரச்னையை எடுத்துக் கொள்ளவேண்டும். காந்திஜி அவர்கள் சொன்னபடி நடக்கிறோமா? அரசியல் காரியத்திற்கு அவர்களைப் பயன்படுத்துகிறவர்கள், அவர்களுடைய வாக்குகள் தேவையாக இருப்பவர்கள் அந்த முன்னேற்றத்தைப் பற்றிப் பேசவேண்டாம். அரசியல் கட்சி லாபத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று காந்திஜி சொல்லியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசும்போது அவர்கள் வீட்டில் எல்லாம் வெள்ளிப் பாத்திரம் இருக்கும் என்று சொல்லிக் கொண்டு வருவதால் மட்டும் நியாயம் வழங்கியதாக ஆகாது. நான் கடுமையான பதத்தை உபயோகப்படுத்த விரும்பவில்லை. ஹரிஜன மக்கள் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள்? என்ன தொழில் செய்கிறார்கள்? இதையெல்லாம் பார்க்கவேண்டும். நகரத்தில் இருப்பவர்கள் நகர சுத்தித் தொழிலாளர்களாகவும், தோல் பதனிடும் தொழிலாளர் களாகவும் இருக்கிறார்கள். கிராமத்தில் இருப்பவர்கள் விவசாயத்

தொழிலாளர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்தில் வளமான தொழில்களை விட்டு விட்டு, மற்றவர்கள் செய்ய முடியாத தொழில்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரே வேலையை ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செய்தால் கூலி ஒன்று, அதையே கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர் செய்தால் கூலி வேறு என்ற நிலையை முன்னேற்றம் அடைந்த ஜில்லாக்களில் பார்க்கலாம். ஆகவே, ஜாதி உணர்ச்சி மாறி வர்க்க உணர்ச்சி ஏற்பட வேண்டும். அந்த மக்களை இன்று நிலப் பிரபுத்துவ அமைப்புத்தான் சுரண்டிக் கொண்டிருக்கிறது. ஜாதி என்று கூறி அவர்களுக்குச் சலுகைகளைக் கொடுப்ப தாகக் கூறுவது அவர்களுக்கு நன்மை பயக்காது. ஏற்றத் தாழ்வைப் போக்க இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

அவர்களுடைய குடியிருப்புக்கு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குடியிருப்பு மனை நிலங்கள் எல்லாம் நிலப் பிரபுக்களுக்குச் சொந்தமானது. குடியிருப்பவர்களிலே பெரும்பாலோர் ஹரிஜனங்கள். அவர்களை அதிலிருந்து வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருந்தாலும் பல நிர்ப்பந்தங்களின் காரணமாக ஹரிஜன மக்கள் வெளியேற்றப் படுகிறார்கள். பெரும்பாலும் ஹரிஜனங்கள்தான் குத்தகைக்கு விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகள். அவர்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது? நிறைவேற்றப் பட்டிருக்கக்கூடிய சட்டங்கள் எந்த அளவில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்றன? நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் ஹரிஜனங்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? நிலச்சீர்திருத்தச் சட்டத்தால் அவர்களுக்கு நிலத்திலே என்ன உரிமை ஏற்பட்டிருக்கிறது? அத்தகைய உரிமைகளை வழங்காமல் காந்திஜி கூறியபடி அவர்களை அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் நிலைதானே இருக்கிறது. அவ்வாறு அவர்களை அரசியலுக்குப் பயன்படுத்தாமல், அந்த மக்கள் பொருளாதாரத்திலே சமத்துவம் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

நாட்டிலே ஏற்பட்டுள்ள இந்த 15 வருஷ முன்னேற்றத்தை யார் பங்கு போட்டுக் கொண்டார்கள்? பெருந்தொழில்கள் எல்லாம் யார் கையில் இருக்கின்றன? பஸ் போக்குவரத்து யார் கையில் இருக்கிறது? ஹரிஜனங்கள் எவ்வளவு பேர் அதிலே ஈடுபட்டிருக் கிறார்கள்? எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக் கிறது; குப்பன் கூட ஜனாதிபதியாகலாம் என்று சொல்கிறார்களே! சோஷலிச சமுதாயம், சம வாய்ப்பு என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, எந்த அளவுக்கு சம வாய்ப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது? பொருளாதாரக் கொள்கையிலே மாற்றம் ஏற்பட்டால்தான் சமுதாய அமைப்பிலே ஜாதி வேற்றுமையின்றி சம சந்தர்ப்பம் ஏற்பட முடியும். இல்லையென்றால் ஆளுங் கட்சியினர் என்ன செய்தாலும் பலன் இருக்காது; அதிருப்திதான் இருக்கும். இன்றுள்ள நிலைமை தேர்தல் சமயத்தில், மாரியம்மன் கோயில் கட்ட ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைதான். நகரத்தில் இருக்கும் முனிசிபல் நகரசுத்தித்

தொழிலாளர்களுக்கு இன்னும் பத்து வருஷம் போனால் அதிகச் சம்பளமும், அதிக வசதியும் செய்து கொடுக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டே தீரும். தற்போது ஸ்லம் க்ளியரன்ஸ் டிப்பார்ட்மெண்ட் வேறு, ஹரிஜன முன்னேற்றம் வேறு என்று வைத்திருக்கிறார்கள். இரண்டும் ஹவுசிங் போர்டில் தனித்தனியாக இருக்கிறது. அவர்கள் ஹரிஜனங்களுக்குப் பாதகமான காரியங்களைத்தான் செய்கிறார்கள். அவர்களை அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து நாலைந்து மைல்களுக்கு அப்பால் அனுப்பும் பாவ காரியங்களைச் செய்யவேண்டாம். அவர்கள் இருக்கும் இடங்களிலேயே வீடு கட்டித் தரவேண்டும்.

கிராமத்தில் உள்ள ஹரிஜன விவசாயத் தொழிலாளியை கோவிலுக்கு வா என்று அமைச்சர் அவர்களே அழைத்தாலும் கூட அவன் வருவதற்குப் பயப்படுவான். ஏனென்றால் அவன் அந்த நிலப் பிரபுவிடம் மறு நாள் கடனுக்குப் போய் நிற்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் பலர் பெருத்த கடன் சுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அறுவடைக் காலத்தில் கிடைக்கக்கூடிய தானியத்திற்கு ஈடாக முன்னாலேயே கடன் 10 ரூபாய்க்கு 2½ ரூபாய் வட்டி வீதம் வாங்கி விடுகிறார்கள். பல கிராமங்களில் இந்த நிலைமைதான் இன்று இருக்கிறது. இந்த நிலையில் எப்படி ஹரிஜன மக்களை முன்னேற்றமடையச் செய்ய முடியும்? அவர்களுக்கு கடன் நிவாரணத்திற்கு என்ன செய்திருக்கிறீர்கள்? கிரெடிட் சொசைடிகளில் கடன் கிடைப்பது ரொம்பக் கஷ்டம். இப்படிப் பட்டவர்கள் தாங்கள் பாடுபட்டுச் சம்பாதிப்பதையாவது அனுபவிக்கும் வகையில் கடன் வசதி செய்து கொடுப்பது ரொம்பவும் அவசியம். இதிலே அரசாங்கம் தலையிட வேண்டும்.

சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டு மனை கொடுக்கவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்களுக்காக ஒவ்வொரு பகுதியிலும் ஒரு இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் தொழில் செய்த பலனை அவர்களே முழுவதும் அனுபவிக்கும் வகையில் உதவி செய்யவேண்டும். அதற்காகக் கொஞ்சம் அதிகப் பணமானாலும் கூட அந்தமாதிரி ஏற்பாடு செய்யவேண்டும். ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு சொசைட்டி அமைத்து பஸ் போக்குவரத்தில் அவர்கள் ஈடுபடவும் வழி செய்து கொடுக்கவேண்டும். இப்போது பஸ் தொழிலை நடத்துகிறவர்கள் எல்லாம் தங்களுடைய சொந்த முதலைப் போட்டா நடத்துகிறார்கள்? பத்தாயிரம் ரூபாய் இருந்தால் அதைக் கொண்டு கூட்டுறவு சொசைட்டி அமைத்து அவர்களுக்கும் பொருளாதார சுபிட்சத்தில் பங்கீட்டு முறையில் உதவி செய்யவேண்டும். வீடு கட்டும் மனை வழங்குவதற்காக 15 கோடி ரூபாய் வேண்டுமென்று அதற்காகப் போடப்பட்ட கமிட்டி கூறியிருக்கிறது. அதற்கான விவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தீவிரமாக அமல் படுத்துவதற்கு ஆண்டுக்கு 45 லட்சம் ரூபாய் என்று ஒதுக்குவது யானைப் பசிக்கு சோளப்பொரி போடுவது போலாகும். இதை தீவிரப்படுத்த, மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு உதவி அளித்து வருகிறார்கள். மற்ற ராஜ்யங்களோடு நம் ராஜ்யத்தை

ஒப்பிட்டுப்பார்த்தால் அதில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது, அதை கடிதத்தில் எழுதிக்கொடுக்கிறேன். இதுமாதிரி பல இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்று விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னிலை வகுப்பினரை எடுத்துக் கொண்டால், ரொம்ப முன்னிலையில் இருக்கக்கூடிய ஜாதிக்காரர்கள் கூட தாராள மனப்பான்மை கொண்டு ஹரிஜனங்களை சமமாக நடத்தினாலும் நடத்துவார்கள். டாக்டர் ராஜன் அவர்கள் வீட்டில் ஒரு ஹரிஜனை சமையல்காரராக வைத்திருந்தார். அதுபோல் இருக்கிறவர்கள் கூட செய்து விடுவார்கள். ஆனால் இடையில் இருக்கிறவர்கள், பொருளாதாரத் துறையில் இன்னும் மட்டமாக இருப்பவர்கள் அவர்களோடு சமமாக உட்கார இன்னும் அவர்களுக்கு தயக்கம் இருக்கிறது. நான் சொல்வது பொது இடங்களில், சொந்த இடங்களில் அல்ல. முதலில் பொது இடங்களில் இதைச் செய்து விட்டால் பிறகு தனிப்பட்டமுறையில் வரட்டும். பல வீடுகளில் சமத்துவம் எல்லாம் இருக்கிறது, ஆனால் மற்ற சில விஷயங்களுக்கு வந்தால் கோளாறு ஏற்படுகிறது. அவர்கள் ஆதிக்கம் போய் விடுமோ என்று நினைக்கிறார்கள். வன்னியகுல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் ஒரு கோடி பேர்கள் இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில் எடுத்துப் பார்த்தால் அவர்கள் பகுதிகளில் வசிக்கும் ஹரிஜனங்களுக்கும் இவர்களுக்கும் எந்தவித வித்தியாசமும் கிடையாது. ஆகவே, ஹரிஜனங்களுக்கு மட்டும் விட்டுமனைகள் வாங்கிக் கொடுக்கும்போது அதே கிராமத்தில் உள்ள மோசமான நிலையில் இருக்கக் கூடியவர்களான இவர்களுக்கும் அவர்களுக்கும் போட்டி, பொறாமை ஏற்படுகிறது. அதனால் நில ஆர்ஜிதம் தடைபடுகிறது. ஆகவே ஒரு பெரிய திட்டம்போட்டு நகரங்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் நாலைந்து ஏக்கர்கள் என்று வாங்காமல் 50 அல்லது 100 ஏக்கர்கள் என்று வாங்கி இவர்களையும், வறுமையின் அடிப்படையில் பின்னிலையில் இருக்கக்கூடிய இவர்களையும் சேர்த்து இரண்டு பேர்களும் ஒன்றாக வாழவேண்டுமென்ற அடிப் படையில் குடியேற்றம் செய்யவேண்டும், இதைச் செய்ய முடியுமா என்று பார்த்து எந்தளவிற்கு இதை விஸ்தரிக்கமுடியும் என்று பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஷவரத் தொழிலாளிகள், சலவை செய்வது போன்றவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகள் இவர்கள் சமுதாயத்திற்கு அவசியமானவர்கள். அவர்கள் எப்படி ஜீவனம் நடத்துகிறார்கள் என்பதல்ல. மற்றவர்கள் உடுக்கும் துணிகளை ஆரோக்கியமான முறையில் சலவை செய்து கொடுக்கவேண்டும். ஆரோக்கியமான முறையில் ஷவரத் தொழிலாளிகள் ஷவரம் செய்யவேண்டும். இவர்களில் 90 சதவிகிதத்தினரும் பொருளாதார பலஹீனத்தால் ஆரோக்கியக் குறைவான முறையில் இருப்பதால் இவர்களுக்கெல்லாம் அதிகமான சலுகைகள் கொடுத்து, கடன் வசதி போன்றவை செய்து கொடுத்து அவர்கள் சமுதாயத்தின் தேவைகளை திறம்படச்செய்ய ஒரு திட்டத்தை வகுக்க

வேண்டுமென்றும், இவையெல்லாம் நான்காவது திட்டத்திலாவது இடம் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள மான்யத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கனம் உறுப்பினர் இராசாங்கம் அவர்கள் தந்துள்ள வெட்டுப்பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கு நான் கூற விரும்புகிறேன். இந்த மான்யத்திலே குறிப்பிடுகிற இந்தப் பிரச்னை ஒரு கட்சிக்கு மாத்திரம் உரிய பிரச்னை அல்ல என்பதை இருதரப்பாருமே உணர்ந்திருக்கவேண்டும். இது ஒரு தேசியப் பிரச்னை. வெளிநாட்டுக்காரன் படையெடுக்கிற நேரத்தில் எப்படி எல்லாக் கட்சிக்காரர்களும் ஒரு அணியில் நின்று தேசிய எழுச்சியோடு வெளிநாட்டு படையெடுப்பை தகர்த்திட முனைகிறார்களோ அதேபோல் சமுதாயத்திலே நீண்ட நெடுங்காலமாக புரையோடி விட்டிருக்கிற ஒரு புண்ணை அகற்றுவதற்கு இதை ஒரு தேசியப் பிரச்னையாகக் கொண்டு இரு தரப்பாரும் தங்களுடைய யோசனைகளை வழங்க வேண்டும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆளும் கட்சியிலுள்ளவர்கள் பாராட்டுகிறார்கள், பிறகு குறை கூறுகிறார்கள், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் குறை மாத்திரமே கூறுகிறார்கள், என்றெல்லாம் இங்கு பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நண்பர் எழுமலை அவர்கள் பேசுகிற நேரத்தில் நாங்கள் பாராட்டுவதெல்லாம் மேலும், மேலும் இந்த முயற்சியில் அரசினர், ஊக்கப்படுத்தப்படவேண்டும் என்பதற்காகத்தான் என்று குறிப்பிட்டார்கள். வேலை வாங்குவதற்கு தடவிக்கொடுப்பது ஒரு முறை, தட்டிக்கொடுப்பது ஒரு முறை, தார் குச்சி போடுவது இன்னொரு முறை. அதில் எதிர்கட்சியிலுள்ளவர்கள் இந்த இரண்டு முறையில் எந்த முறையை எடுத்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஜனநாயகம் உணர்ந்தவர்களுக்கு நான் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். தேசியப் பிரச்னையாகக் கருதவேண்டிய இந்த தீண்டாமை ஒழிப்பு பன்னெடு நாட்களாக நம்முடைய நாட்டில் பல பெரியவர்களால் நடத்தப்பட்டு வருகிற ஒரு மிகப்பெரும் காரியமாகும். அதில் நாம் முழுவதும் வெற்றி பெறவில்லை. அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்வதில் நாம் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்ள வேண்டிய அவசியம் கூட கிடையாது. மொத்தத்தில் இந்த நாட்டில் இருக்கிற உயர் ஜாதிக்காரர்கள் என்று கருதிக் கொண்டிருக்கிற அத்தனை பேர்களுமே இந்தப் பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட வேண்டியவர்களே தவிர வேறு இல்லை. அந்த வகையில்தான் இந்தப் பிரச்னையை நாம் அணுகவேண்டும். எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதற்கான திட்டங்களையும், எப்படி எப்படி அது ஒழிக்கப்பட இயலும் என்ற வழிவகைகளையும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம் இதழ் ஆசிரியர்களையும், ஏடு நடத்துகிறவர்களையும் இந்த மன்றத்தின் மூலம், கனம் துணைத் தலைவர் அவர்களே, தங்கள்

விவாதங்களை வெகுவாக தங்களுடைய ஏடுகளில் அவர்கள் பிரசுரிக்கத் தவறியிருந்தாலும் இந்த விவாதத்திலே பொதுப்படையாக தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும் என்ற அளவில் சொல்லப்பட்ட கருத்துக்களை நாட்டிலே நடைபெறுகிற ஏடுகள் ஒழுங்காக, விரிவாக வெளியிடுவார்களேயானால் அது மெத்த பயன் தரத்தக்க ஒரு அம்சமாக இருக்கும் என்பதை இந்த மன்றத்தில் ஒரு வேண்டுகோளாக அவர்களுக்கு விடுக்க விரும்புகிறேன். தீண்டாமை என்பது ஏதோ ஒருவருக்கொருவர் தொட்டுக் கொள்வது அல்லது அதைத் தடுப்பது என்ற முறையிலே அமைந்தது மட்டுமல்ல. உரிமைகள் வழங்காமை, சலுகைகள் தரப்படாமை, ஒற்றுமை இல்லாமை இவைகள் அத்தனையும் தீண்டாமை என்கிற பட்டியலில்தான் அடங்கும். ஆகவே, தீண்டாமை என்பது ஏதோ ஒருவரை ஒருவர் தொடுவதைத் தடுக்கிற ஒன்றுதான் என்ற வகையில் நாம் பொருள் கொள்ளலாகாது. ஒருவரை ஒருவர் தொடுவது என்பது மிகச் சுலபமாகச் செய்து விடக்கூடிய காரியமாகக் கூட இருக்கும். ஆனால் மனதிலே இருக்கிற அழுக்கை அகற்றியாக வேண்டும். மனதிலே இருக்கிற புகைச்சல், நமைச்சல் இவற்றைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற அளவில்தான் தீண்டாமை ஒழிப்பு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நண்பர் ஏழுமலை அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். துரியோதனியருக்கு சகுனி பரிந்துரை கூறி உசுப்பி விட்டு கலைத்ததைப் போன்று எதிர்க்கட்சிக்காரர்கள் ஹரிஜன மக்களை உசுப்பி விட்டார்கள் என்று சொன்னார்கள். சகுனி என்ற குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஹரிஜன மக்களை துரியோதனியரோடு சேர்த்தாரே அதற்காக உள்ளபடி வருந்துகிறேன். இது பரிந்துரைத்து, யாரையும் உசுப்பி விடுவதற்காக நடைபெறுகிறதல்ல என்ற மனப்பக்குவத்தோடு இந்தப் பிரச்னையை நாம் வெகு உன்னிப்பாக முனைந்து அணுகிடவேண்டும். இதில் ஒரு பரிதாபம் என்னவென்றால் நாம் எல்லா இலாகாக்களையும், எல்லா நிர்வாகங்களையும் ஆராய்கிற நேரத்தில் ஒன்று என் கண்ணை உறுத்திற்று. (1-00 p.m.) எந்த ஒரு இலாகாவிலும், ஹரிஜன நல இலாகாவில் உள்ள கீழ்நிலையில் உள்ள ஒரு சிப்பந்தி பெறுகிற சம்பளம் வேறு எந்த இலாகாவிலும் யாரும் பெறவில்லை. பத்து ரூபாய் பெறுகிற லைப்ரேரியன்ஸ், பத்து ரூபாய் சம்பளம் பெறுகிற இரவுப் பள்ளி ஆசிரியர்கள், 25 ரூபாய் பெறுகிற இரவுப் பள்ளி ஆசிரியர்கள் இந்த பரிதாபத்திற்குரிய ஹரிஜன நல இலாகாவில்தான் இருக்கிறார்கள். அப்படி பத்து ரூபாய் பெறுகிற லைப்ரேரியன்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால் அவர்கள் 24 பேர்கள், 25 ரூபாய் சம்பளம் பெறக்கூடிய இரவுப் பள்ளி ஆசிரியர்கள் 25 பேர்கள், பத்து ரூபாய் சம்பளம் பெறக் கூடிய இரவுப் பள்ளி ஆசிரியர்கள் மூன்று பேர்கள். எண்ணிக்கையில் குறைவாகத்தானே இருக்கிறது, இவர்களுக்கு கொஞ்சம் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கக்கூடாதா என்ற என்னுடைய வேண்டுகோளை ஆவலோடு கலந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன். 188 கோடி ரூபாய் ஏறத்தாழ 3½ கோடி மக்களுக்கு செலவு செய்

வதற்காக பல மான்யங்கள் மூலமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. 188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்ற இந்த மான்யங்களில் ஹரிஜன நல மான்யத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 5 கோடி சொச்சம்தான். இந்த 188 கோடி ரூபாயை 3½ கோடி மக்களுக்கு பிரிக்கும்போது தலைக்கு 50 ரூபாய் அளவுக்கு வருகின்றது. அதேமுறையில், கிட்டத்தட்ட 60 லட்சம் அளவுக்கு இருக்கக்கூடிய ' ஆதி திராவிட மக்களுக்கு கிடைக்கின்ற தொகையைக் கணக்கிட்டால் தலைக்கு 7 ரூபாய் என்கின்ற அளவுக்கு வருகிறது. அப்படிச் சொல்லும்போது, ஐம்பதும் ஏழும் சேர்த்து 57 ரூபாய் கிடைக்கவில்லையா என்று நமது மதிப்பிற்குரிய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்கக்கூடும். ஆனால், 50 ரூபாய் அளவுக்கு கிடைக்கின்ற வசதிகள், வாய்ப்புகள் இவைகளை எல்லாம் ஆதி திராவிட மக்கள் அனுபவிக்க இயலாதவர்களாக, இதை பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்த அளவில் ஆதி திராவிட மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த ஐந்து கோடி ரூபாய் போதாது என்பதை பல ஆண்டுகளாக, எதிர்க்கட்சியின் தரப்பிலிருந்து மட்டுமல்ல, ஆளும் கட்சியிலிருந்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. போன ஆண்டு நான்கு கோடி சொச்சம்தான் தரப்பட்டிருந்தது. இப்போது என்ன கருணை வந்ததோ தெரியவில்லை, சில பல லட்சங்களை சேர்த்து, பார், பார் ஐந்து கோடி அளவுக்கு ஆக்கியிருக்கிறோம் என்று சொல்வதற்கு தகுந்த முறையில் உயர்த்தியிருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் போதாது என்று சொல்லும்போது, ஒரு கோடி, இரண்டு கோடி உயர்த்துவது அல்ல, குறைந்தது 25 கோடி அல்லது 30 கோடி அளவுக்கு மான்யத்தில் ஒதுக்கப்பட்டால்தான் இந்தக் கொள்கையில் வெற்றி பெற்றவர்களாக ஆக முடியும். ஏறத்தாழ 66 லட்சம் மக்களை கொண்டிருக்கின்ற ஒரு பெரிய சமுதாயப் பிரச்னையாக இதை நாம் ஆராய வேண்டும். இவர்கள் அன்னியில், பின்னிலை வகுப்பினர் என்றும், பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் இவர்களுடைய பிரச்னை எல்லாம் மிக முக்கியமான பிரச்னையாக கருதவேண்டிய காரணத்தால் இதில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிக மிக குறைவு என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் வைத்துள்ள நூலில் முன்னுரையாக கூறியிருப்பது, "ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், ஏனைய பின்னிலை வகுப்பினர்களின் நல்னுக்கான 1966-67 மானியக் கோரிக்கையை நான் சமர்ப்பிக்கின்றேன் . ." என்கிற வாசகங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த நூலின் தலைப்பில் "ஹரிஜன நலத் துறை" என்று அமைந்திருக்கிறது. இந்தத்துறைக்கு அரிஜன நலத்துறை என்ற பெயர் இருக்கவேண்டுமா என்கின்ற வாதம் பல நேரங்களில் பல பெரியோர்களால் எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்தில் கூட ஆளும் கட்சி தரப்பிலிருந்தும், எதிர்கட்சி தரப்பிலிருந்தும் இதே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கூட, ஷெட்யூல்ட் காஸ்ட் என்று தான் இருக்கிறது. மத்திய சர்க்காரில்

இருக்கக்கூடிய அமைச்சருக்குக்கூட "சமூக பாதுகாப்பு அமைச்சர்" என்று தான் பெயர் வைத்திருக்கிறார்கள். அரிஜன நல இலாகா என்று இருப்பதை எல்லா பின்னடைந்த மக்களையும் இணைக்கின்ற வகையில், எல்லோருக்கும் இதில் நியாயம் வழங்கப்படுகிறது என்பதை காட்டுகின்ற வகையில், இதை "சமூக பாதுகாப்பு இலாகா" என்கின்ற தலைப்பில் அழைக்கலாம். இப்படி சொல்லுகின்ற காரணத்தால், அரிஜனங்களுக்கு ஏதோ அதிகமாக செலவு செய்கிறது என்று எண்ணி, அவர்கள் மீது மற்ற வகுப்பினர்கள் கோபப்படுகிறார்களே, எரிச்சல் படுகிறார்களே, அவர்கள் திருப்தி அடைவதற்கும் இது ஓரளவுக்கு ஏதுவாக இருக்கும். அரிஜன மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அரிஜன இலாகாவை, சமூக பாதுகாப்பு இலாகா என்று வைத்துக் கொள்வதின் மூலம், அரிஜனங்களுக்கு மட்டும்தான் காரியங்கள் செய்து கொள்ளுகின்ற இலாகா என்றில்லாமல், பொதுவாக, பின்தங்கியவர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள், சார்பிலும் இந்த மான்யம் வழங்கப்படுகிறது என்கிற அளவில் சமூக பாதுகாப்பு இலாகா என்று பெயர் மாற்றுவது மிக பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லும்போது, உண்மையில் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்ல. இவர்களை தாழ்த்தியவர்கள் பன்னெடுங் காலமாக இருந்து வருகின்ற உயர் ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் இவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதி வந்தாலும், இவர்கள் தாழ்ந்தவர்களாக ஆகிவிட மாட்டார்கள். அரிஜன் என்று அவர்களுக்கு பெயர் வழங்கப்படுவதற்கு காரணம், உத்தமர் காந்தியார், இவர்கள் கடவுளின் பிள்ளைகள், இவர்கள் கடவுளின் மக்கள் என்று சொல்லப்படுகின்ற முறையில்தான் அரிஜன் என்று பெயர் வழங்கப்படுவதற்கு காரணமாக இருந்து வந்திருக்கிறது. இந்தப் பெயரை வைத்துக்கொள்கின்ற முறையில், கடவுளின் பிள்ளைகள் என்று நினைத்துக்கொள்ளலாமே தவிர--இவர்களுடைய நிலை எவ்வாறு இருக்கிறது என்றால், ஒரு குழந்தைக்கு ராஜா என்று பெயரிட்டு, அந்தக் குழந்தையின் கையில் திருவோட்டை கொடுத்து, நாலு தெருவையும் சுற்றி வா என்று சொல்லுவது போலத்தான்—நீ கடவுளுடைய பிள்ளை என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் சமுதாயத்தில், தீண்டப்படாதவர்களாக, ஊரில் கிணறு இருந்தால், அதிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று ஒதுக்கப்படுகின்ற நிலை, கொடுமைகள் இவற்றை எண்ணிப்பார்க்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக யார் யார் உழைத்தார்கள், யார் யார் போரிட்டார்கள் என்கின்ற போட்டிப் பிரச்சனைகளைப்பற்றி நாம் ஆராய வேண்டிய அவசியமில்லை. உழைத்தவர்கள், போரிட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்துகின்றோம், பெரியார் உழைத்தார், உத்தமர் காந்தியார் பாடுபட்டார், அம்பேத்கார் பாடுபட்டார், அவர் இல்லாவிட்டால் இந்த அளவுக்கு தனித் தொகுதி முறை கூட வந்திருக்க முடியாது. ஆதி திராவிட மக்களுக்கு இந்த அளவுக்கு பாடுபட்ட பல பெரியவர்களை நாம் பார்க்கின்றோம். இப்படிப்பட்டவர்களில் டாக்டர் அம்பேத்கார்

அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுப் பட்டார் என்பதற்காக, மராட்டிய மாநிலத்தில் அவர்களுடைய காரியாலயங்களிலும், கல்வி நிலையங்களிலும் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திரு உருவப்படத்தை வைப்பது என்று மாராட்டிய மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்த வழியில் நம்முடைய மாநில அரசு இந்த பழங்குடி மக்களின் மாபெரும் தலைவராக விளங்கிய டாக்டர் அம்பேத்காரின் திரு உருவப்படத்தை காரியாலயங்களிலும் கல்வி நிலையங்களிலும் வைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உபகாரச் சம்பளங்கள், கொடுக்கப்படுகின்ற விஷயத்தில், தாழ்த்தப்பட்டவர்களானாலும், பின்தங்கிய வகுப்பினரானாலும், கொடுக்கப்படுகின்ற தொகை போதுமானதாக இல்லை என்பதை பல உறுப்பினர்களும் எடுத்துக்காட்டினார்கள். மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்களும் இப்போது வரம்பாக வைத்திருக்கின்ற 1,500 ரூபாய் என்றிருப்பதை 3,000 ரூபாய் அளவுக்கு ஆக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இதைக்குறித்து பல ஆண்டுகள் இங்கே பேசப்பட்டிருக்கின்றது என்றிருந்தும், அரசியலார் கவனித்ததாக தெரியவில்லை. வழங்கப்படுகின்ற உபகாரச் சம்பளங்கள் போதுமானதாக இல்லை, வர வர குறைந்து கொண்டேயிருக்கிறது என்பதற்கும், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இங்கே தரப்பட்டிருக்கின்ற நூலின் மூலமாக சில விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இவ்வாறு எடுத்துச் சொன்ன நேரத்தில் முழுவதையும் படித்துப்பாருங்கள் என்று அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு சொன்னார்கள். நான் முழுவதையும் படித்தபிறகுதான் இதைக் குறிப்பிடுகிறேன். இதில் குறிப்பிட்டிருப்பது, பின்னிலை வகுப்பினருக்கு, 1965-66-ல் 72.80 லட்சமாக இருந்தது, 1966-67-ல் 51.52 லட்சம் மதிப்பீடு என்ற அளவில் சொல்லியிருக்கிறார்கள். பின்னிலை வகுப்பினருக்கு மட்டுமல்ல, தகுதியுள்ள வகுப்பினருக்கு 1964-65-ல் 52.75 லட்சம் என்றிருந்தது, 1965-66-ல் 58.57. லட்சம் என்று உயர்ந்து, திரும்பவும் 1966-67-ல் 53.82 லட்சமாக குறைந்திருக்கிறது. அதைப்போலவே, பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்கு 1965-66-ல் 11.13 என்பதிலிருந்து 1966-67-ல் 9.69 லட்சம் என்கின்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. இதே போன்றுதான் பின்னிலை வகுப்பினருக்கு 1965-66-ல் 72.80 லட்சத்திலிருந்து 1966-67-ல் 51.52 லட்சம் என்கின்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. இவ்விதம் ஏன் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பை சரியாக படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு முறை அல்ல, பல முறை படித்தாலும் கூட, இதே குறைவு தான் தெரிகிறது, அப்படி மதிப்பீடு தானே என்று சொன்னாலும் கூட, ஓரளவுக்கு உயர்ந்தாலும் நிச்சயமாக 70 லட்சத்தை எட்டி பிடிக்க முடியாது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த நிலையை மாற்றவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கடலூரிலிருந்து, அண்ணாமலை பல்கல
கழகத்தில் படிக்கின்ற மாணவர்களில் 258 பேர்களுக்கு--அவர்க
பின்னிலை வகுப்பினர் என்று கருதுகிறேன்--அவர்கள் தற்போது
அங்குள்ள விடுதியில் இருந்தாலும், உபகாரச் சம்பளங்க
பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் என்றிருந்தும், உபகாரச் சம்பள
இதுவரையிலும் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதை
பற்றி நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதே சட்டமன்றத்தி
சொல்லியிருக்கிறார்கள். இந்த 258 பேர்களுக்கும் உபகார
சம்பளம் கொடுப்பதாக இருந்தால் அதற்கு ஏறத்தாழ 80 ஆயிர
ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இதுவரையி
கவனிக்கப்பட்டதாக தெரியவில்லை. அவர்கள் விடுதியில் இரு
தாலும், அவர்கள் இந்த உபகாரச் சம்பளம் பெறுவதற்கு தகு
பெற்றிருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு இதத் தொகை வரு
என்று நினைத்துக்கொண்டு, அவர்கள் இப்போது மிகவும் கஷ்ட
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுடை
மேல் படிப்பையும் தொடர முடியாத அளவுக்கு இந்த மாணவர்க
பாதிக்கப்படுவார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுடை
கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

வீடுகள் கட்டிக்கொள்வதற்காக ஆயிரம் ரூபாய் தருகிறோ
என்று சொல்லுகிறார்கள். மேடையில் இதைப்பற்றி சொல்லு
போது, கேட்பதற்கு மிக குளிர்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆன
இந்த ஆயிரம் ரூபாய் எப்படி தருகிறார்கள் என்பதைப் பார்த்தா
யார் வேண்டுமென்று விரும்புகிறாரோ அவர் 250 ரூபா
தரவேண்டும். 250 ரூபாய் ரொக்கமாக தரமுடியவில்லை என்றா
250 ரூபாய் அளவுக்கு பொருட்களாக தரவேண்டும், இல்
யென்றால், 250 ரூபாய் அளவுக்கு உழைப்பாக தரவேண்டு
அப்படி தருவதாக இருந்தால், சர்க்கார் 750 ரூபாய் போட்
இந்த இலாகா வீடுகட்டித்தரும். இந்த 250 ரூபாயை தருவதற்
ஏழை நிலையிலிருக்கின்ற ஆதிதிராவிட சகோதரன் எங்
போவான் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். பொருளாக
கொடு என்றாலும் இயலாது. உழைப்பாகக் கொடு என்றா
அவன் உழைப்பைப் பெற்று, 250 ரூபாய் உழைப்பு அ
உன்னுடையது என்று கூறிவிடுவார்கள். ஒரு ஆண்டு கால
உழைத்தாலும் ஒரு ஏழை உழவனுக்கு 250 ரூபாய் வருமான
கிடைப்பதாக நான் அறியவில்லை. ஆகவே, வீடு கட்ட 2
ரூபாய் உழைப்பு தேவைப்படாது என்று கூறி, 50 ரூபாய்க்
உழைத்திருக்கிறாய், மிச்சம் 200 ரூபாய் கொடு என்பார்கள். இ
காவிலிருந்து அனுப்பப்படுகிற அதிகாரிகள் அல்லது கி
அமைப்பு அதிகாரிகள் 250 ரூபாய் உழைப்பையும் வாங்கிக்கொண்
வீட்டை 750 ரூபாய் பெறுமானமுள்ள வீடாகக்கட்டி
தருவார்கள். ஆகவே, வீடு கட்டும் திட்டத்திலே இந்த நி
உருவாகியிருப்பது சரியல்ல. கொடுப்பது கொடுக்கிறோம். 1,0
ரூபாயாகக் கொடுத்து விடுவோம் என்ற நிலைமையில் அமைச்
அவர்கள் மனமிரங்கி அந்த முயற்சியில் ஈடுபடவேண்டுமென்
கேட்டுக்கொள்கிறேன்.

மனைகள் வழங்கப்படுகின்றன. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் கனம் அங்கத்தினர் திருமதி குழந்தை அம்மாள் கூட மனைகள் வழங்குகிறீர்களே, வீடுகள் எப்படிக் கட்டிக்கொள்ளுவது, பணம் வேண்டாமா என்று கேட்டார்கள். அப்போது உடனே அமைச்சர் அவர்கள் எழுந்து கோபமாகச் சொன்னார்கள் 'மனைகள் தான் வழங்க முடியும், வீடுகள் எப்படி கட்டிக் கொடுக்க முடியும்?' என்று. அமைச்சர் அவர்கள் இல்லை என்று மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். என்னிடத்தில் நிகழ்ச்சிக் குறிப்பு இருக்கிறது. 'வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமா?' என்று அமைச்சர் அவர்கள் ஆதங்கப்படுகிறார். நான் அமைச்சர் அவர்களைத் திருப்பிக் கேட்க விரும்புகிறேன். தரப்படுகிற மனைகளில் வீடு கட்டிக் கொள்ளவசதி பெற்ற ஆதித் திராவிட மக்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரியாதா? அல்லது அந்த இலாகாவிற்குத் தெரியாதா? அவர்கள் வீடு கட்டிக்கொள்ளும் வசதி பெற்றவர்களாகவா இருக்கிறார்கள்? அது இருக்கட்டும். மனைகள் வழங்கப்படுவதாவது ஒழுங்காக வழங்கப்படுகிறதா? நான் கேள்விப்பட்டேன். செங்கற்பட்டு மாவட்டத்தில், ஸ்ரீ பெரும்புதூர் பகுதியில் வெள்ளைக் கோட்டை என்ற இடம். அங்கே ஹரிஜனங்களுக்கு மனைகள் ஜாரி செய்து கொடுத்தார்கள். எப்படித் தெரியுமா? ஹரிஜனங்களிடம் இருந்த மனைகளை வாங்கி ஹரிஜனங்களுக்குக் கொடுத்தார்கள். நிலத்தை வைத்திருந்த ஹரிஜன் செய்த பாவம் சென்ற தேர்தலில் முதல் அமைச்சரை எதிர்த்து நின்ற திரு. அண்ணாமலை அவர்களை ஆதரித்தது தான். அந்தப் பாவத்திற்காக, ஹரிஜனத் தோழர்களுடைய நிலம் பிடுங்கப்பட்டு வேறு ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் இப்போது வழக்குப் போட்டிருக்கிறார்கள், ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பற்றி அதிகமாகக் கூற விரும்பவில்லை. ஹரிஜனங்களின் நிலத்தை எடுத்து ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதில் என்ன லாபம்? வெல்லத்திலே பிள்ளையாரைச் செய்து, அதையே கொஞ்சம் கிள்ளி, அதற்கே படைத்தாலும், அந்த மாதிரி ஹரிஜனங்களுடைய நிலத்தைப் பிடுங்கி, ஹரிஜனங்களுக்குத் தருவதில் என்ன லாபம் இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்னொன்று, சேலம் மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுவில் எங்கள் நண்பர் திரு. ஆறுமுகம் அவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்ற முறையில் ஒரு வினாவை எழுப்பி இருக்கிறார்கள். "1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டப்படி தீர்வை ஏற்படாத புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்திற்கு ஒப்படைத்து உள்ளது. தீர்வை ஏற்படாத புறம்போக்கு நிலங்களை நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்தவர்களுக்கு மேற்படி பஞ்சாயத்து பட்டா வழங்கலாமென்று தீர்மானம் கொடுத்தாலும், 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டப்படி பட்டா வழங்க முடியாத நிலைமை உள்ளது என்று நில வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவிப்பது உண்மையா?" என்று கேட்டிருக்கிறார். அதற்கு என்ன பதில் வந்திருக்கிறது தெரியுமா? "பஞ்சாயத்துச் சட்டத்தின், பிரிவு 72 (1) (ஏ)-க்குத் திருத்தம் கொண்டுவரும்

வரையில், பஞ்சாயத்து தீர்மானம் கொடுத்தாலும் அடமானம் செய்ய இயலாது" என்று பதில் வந்திருக்கிறது. இப்போது அனுபவஸ்தர்களாக இருக்கிறவர்கள் ஆயிரத்துக்கு உட்பட்ட ஹரிஜனப் பெருங்குடி மக்கள். அவர்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று பஞ்சாயத்து தீர்மானமே போட்டிருக்கிறது. பஞ்சாயத்து தீர்மானம் போட்டும் கூட, அதைப் பட்டா செய்து தர முடியாத நிலைமையில் பஞ்சாயத்துச் சட்டத்தின் 72 (1) (ஏ) பிரிவு தடுக்கிறது, அது திருத்தப்பட்டால் தான் நாங்கள் அதை அனுமதிக்க முடியும் என்று மாவட்ட ரீதியிலே மாவட்ட ஆட்சி ஆணையாளர் பதில் அளித்து விட்டார். நான் அவருடைய நிலைமையை இங்கே எடுத்துச் சொன்னேன். அந்த நிலைமையிலிருந்து அவரை விடுவித்து ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் தாங்கள் அனுபவித்து வந்த நிலங்களை பஞ்சாயத்து தீர்மானம் போட்டு தருவதற்கு முன் வந்தால், அந்த நிலங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஏற்ற முறையில் பஞ்சாயத்துச் சட்டத்தின் 72 (1) (ஏ) பிரிவுக்கு அரசாங்கம் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உழவுக்காக ஹரிஜனங்களுக்கு ஒரு ஜோடி மாடுகள் தரப்படுவதாக இருக்கிறது. 400 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் உழவு மாடுகளுக்கு, உழவுக் கருவிகளுக்கு, விவசாயிகளுக்கான பொருட்களுக்கு தரப்படுவதாக இருக்கிறது. 400 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்றெல்லாம் இங்கே ஏட்டிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலான ஹரிஜன மக்கள் இந்த மாடுகளைத் தேர்தல் நேரத்திலே தேர்தல் சின்னத்திலே பார்க்கிறார்களே தவிர, வேறு விதத்தில் பெரும்பாலான ஹரிஜன மக்கள் பார்ப்பதாகத் தெரியவில்லை. தையல் தொழில், கருமார் தொழில், தச்சுத் தொழில்—இப்படிப்பட்ட தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு, அதிக தகுதி பெற்றவர்களுக்கு, அதற்கான கருவிகளும், வசதி வாய்ப்புகளும், வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இவைகள் எல்லாம் கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, எடுத்துச் சொன்ன உதாரணத்தைப் போல, கடலிலே பெருங்காயத்தைக் கரைத்த மாதிரி இருக்கிறதே தவிர வேறு இல்லை. அவர்கள் தந்திருக்கிற பட்டியல் ஒரு ஆயிரம் பேருக்கு வீடுகள்; ஆயிரம் பேர்களுக்கு உழவு மாடுகள், 5,000 பேர்களுக்கு தொழிற் சாதனங்கள் கருவிகள்; 2 லட்சம் பேர்களுக்கு உபகாரச் சம்பளம். 60 லட்சத்துக்கு மேற்பட்ட ஆதித்திராவிடர்கள் இருக்கிற சமுதாயத்தில், 2 லட்சம் பேர்களுக்கு, 3 லட்சம் பேர்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்பட்டு விடுகிற காரணத்தினால், அந்த சமுதாயத்தின் குறைகள் முழுமையாக நீங்கி விட்டதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த உதவிகளெல்லாம் ஏட்டுத் திட்டங்களாக இனித்துக்கொண்டிருக்கின்றன. இந்த உதவிகள் உரிய நேரத்தில் போய்ச் சேருவதில்லை; சேரவேண்டியவர்களுக்குச் சேருவதில்லை. ஒழுங்காகப் போய்ச் சேருவதில்லை; இடையிலே இவைகள் என்ன என்னவோ ஆகிவிடுகின்றன. தரப்படுகிற உதவிகள், இடையிலே லஞ்ச லாவண்ணியங்களால்

கரைக்கப்பட்டு அவர்கள் கையில் போய்ச் சேருகிற நேரத்தில் அவர்கள் நல்ல பயனை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற உபகாரச் சம்பளம், சலுகைகள் ஆகியவைகளை, இவர்களைப் போல் மதம் மாறிய கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் தரவேண்டுமென்று எதிர்க் கட்சியின் சார்பில் நண்பர் ராஜாங்கம் வெட்டுப் பிரேரணை தந்திருக்கிறார். இந்தச் சலுகைகள் மத அடிப்படையில் வழங்கப் படுகிற சலுகைகள் அல்ல. இதை நாம் நன்றாக உணர்ந்திருக் கிறோம். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், பின்னிலையில் இருக்கிறவர்கள், பட்டியலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் என்ற அடிப்படையில்தான் சலுகைகள் வழங்கு கிறோமே தவிர, இந்து ஹரிஜன, கிரிஸ்தவ ஹரிஜன் என்றெல்லாம் பார்த்து சலுகை வழங்குவதில்லை. இதுதான் நம் கொள்கை. ஆனால் கொள்கைக்கு முரணாக இந்து ஹரிஜன் என்று நற்சாட்சிப் பத்திரம் தந்தால்தான், இந்து ஹரிஜன் என்று மெய்ப்பிக்கப் பட்டால்தான் வழங்கப்படும் என்று இருக்கிறதே அது மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களின் பலன்கள் உரியவர்களிடத்தில் ஒழுங்காகப் போய்ச் சேரவில்லை என்று நான் மாத்திரமல்ல, சமூகப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த நிபுணர் குழு—எக்ஸ்பெர்ட் க்ரூப் ஆஃப் தி ஸோஷல் செக்யூரிட்டி டிப்பார்ட்மென்ட்—என்ற குழு திட்டக் குழுவிடனித்தில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தது, அதிலே விளக்கியிருக்கிறார்கள். "திட்டத்தினால் உருவாக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் பயன் மிகச் சிறிய அளவிலேயே பிற்பட்ட வகுப்பாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, சிறிய பாசனங்கள், சிறு கைத்தொழில்கள், கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகளுக்காகத் திட்டப்பட்ட திட்டங்களின் பயன், வெகுவாகப் பிற்பட்ட இனத்தவருக்குப் போய்ச் சேரும் என்று நான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் நிகழ்ச்சிகள் ஏமாற்றம் தருவதாகவே இருக்கின்றன" என்று திட்டக் குழுவுக்கு அந்த நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. இதைத் தான் என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் இருக்கும்போது குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார்கள். 'நாம் பணம் செலவழிக்கிறோம்; இன்னும் நாராளமாகத் தருவ தற்கு அமைச்சர் அவர்கள் மனமுவந்து முன் வருகிறார்கள்; ஆனால் செலவழிக்கப்படும் பணம் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேரவில்லை; அது எப்படி இருக்கிறது என்றால், ஒரு அரசன் அமைச்சரைப் பார்த்து நாம் இவ்வளவு பணம் செலவழிக் கிறோமே, ஏன் அது மக்களிடத்தில் சேரவில்லை என்று வினவ, உடனே அமைச்சர் அங்கே இருந்து ஐஸ் கட்டியை எடுத்து மன்னர் கையில் கொடுத்து, 10 பேர்களைச் சுற்றி உட்கார வைத்துக் கொண்டு, மன்னர் கையிலிருந்து அமைச்சர் ஐஸ் கட்டியை வாங்கி, அதைப் பக்கத்தில் இருந்த தளபதியிடம் கொடுக்க, தளபதி உதவி தளபதியிடம் கொடுக்க, உதவி தளபதி பக்கத்தில் இருந்த பிரதானியரிடம் கொடுக்க, இந்த மாதிரி 10 பிரதானியர்களிடம்

கொடுத்துக் கொடுத்து, கடைசியில் அதை மன்னர் கையில் கொடுக்கச் சொன்னார், மன்னர் கையில் கிடைத்தது சொட்டு தண்ணீர் தான்" என்று விளக்கினார். இப்படித் தான் பல பேர் கைக்கு மாறுகிற காரணத்தினால், ஏழை வீட்டுக்கு ஒரு சொட்டு தண்ணீர்தான் போய் சேருகிறது என்று அமைச்சர் சொன்னதாக அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கினார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு ஒரு சொட்டு கண்ணீர்தான் போய்ச் சேருகிறது. செலவழிக்கிற பணம் ஒழுங்காக அவர்களுக்குத் தரப்படாத காரணத்தினால்தான் கண்ணீருக்குத் தான் ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், பின்னிலையில் இருக்கிறவர்கள் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

சமுதாய சீர்திருத்தத்தைப்பற்றி பேசுகின்ற அதே நேரத்தில் பொருளாதார முன்னேற்றமும் அரிசனங்களுக்கும், மற்றவர் களுக்கும் தேவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சமுதாயச் சீர்திருத்தம் என்பது வயலைப் பண்படுத்துவது போல. பொருளாதார முன்னேற்றம் என்பது அதிலே பயிரிடுவது போல. பண்படுத்தாத வயலில் பயிரிட முடியாது. அதுபோலவே பயிர் செய்வதற்கு பண்படுத்தாமலும் இருக்க முடியாது. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது, சமுதாய சீர்திருத்தமும், பொருளாதார முன்னேற்றமும் ஒன்றுக் கொன்று தொடர்பு உடையது. அந்த வகையில் இரண்டும் அமைவதற்கு இந்த அரசாங்கத்தார் ஏற்ற வழிகளையெல்லாம் காணவேண்டும்.

சமுதாய சீர்திருத்தம் என்று சொல்லும்பொழுது, தீண்டாமை முழுவதும் ஒழிந்துவிட்டதா? இல்லை என்று நான் மாத்திரம் அல்ல, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, ஆளும் கட்சி தரப்பிலிருந்தே பலபேர் திட்டவட்டமாகச் சொல்லு கிறார்கள். கிராமத்திற்குப் போய்ப் பார்த்தால் கிணறுகளில் கூட இன்றையதினம் தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கு பல உதாரணங்களை நான் சொல்ல முடியும். திருச்சி மாவட்டத்தில் மகிழம்பாடி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத் திலுள்ள மக்கள் ஆதித்திராவிட மக்கள். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு அந்த வழியாகச் சென்ற கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களை அந்த மக்கள் சந்தித்து 'நாங்கள் தண்ணீர் கிடைக்காமல் தவிக்கிறோம்' என்று சொன்னார்கள். மனம் இளகி கலைவாணர் திரு. என். எஸ். கே. அவர்கள் தண்ணீர் தொட்டி கட்டிக்கொள்ளுவதற்காக பணம் கொடுத்தார்கள். கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. கிடைத்த தண்ணீர் உப்புத் தண்ணீர். அதுமாத்திரமல்ல. அவர்களுக்குப் போதுமான அளவுக்கு அந்தத் தொட்டியிலே தண்ணீர் நிரப்பப் படுவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது அந்தக் கிராமத்தில் இருக்கிற அரிசனங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் ஒரு தீர்மானம் போட்டு, அதற்காக குழாய்கள் தருவிக்கப்பட்டு, குழாய்கள் போடுவதற்கு

பள்ளங்கள் கூட வெட்டப்பட்டன. அந்தத் தண்ணீர் உயர் ஜாதிக்காரர்கள் இருக்கிற இடத்திலிருந்து—அங்கே ஒரு பெரிய தண்ணீர் தொட்டி இருக்கிறது. அந்தத் தண்ணீர் தொட்டியிலிருந்து குழாய்கள் அமைத்து, அந்தத் தண்ணீரை அரிசனங்கள் இருக்கிற இடத்திற்குக் கொண்டு வரவேண்டும். இதை உயர் சாதி இந்துக்கள் எதிர்க்கிறார்கள் கொண்டுவரக்கூடாது என்று. அங்கே வந்துகூட இவர்கள் தொடப்போவது இல்லை. அவர்கள் தொட்ட தண்ணீரை இவர்கள் தொடக்கூடாது. எவ்வளவு அக்கிரமம்? பயங்கரமான நிலைமை. அதற்காக அவர்கள் ஒரு 'ஸ்டே' வாங்கினார்கள். அந்த 'ஸ்டே' முறியடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு உயர் சாதி இந்துக்கள் அமைச்சரை நாடினார்கள். அமைச்சரவையாலே மறுபடியும் 'ஸ்டே' போடப்பட்டது? எதற்கு? உயர்சாதி இந்துக்கள் பயன்படுத்துகிற தண்ணீரை குழாய் வழியாக . . . .

கனம் திரு. பூ. கக்கன் : அமைச்சர் அவை இந்த மாதிரி உத்தரவு போடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(எதிர்க்கட்சித் தரப்பில் ஒரு அங்கத்தினர் : உண்மைக்கு மாறான ஒன்றை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.)

திரு. செ. மாதவன் : 'ஜாயிண்டு ரெஸ்பான்சிபிலிடி ஆஃப் தி காபினட்' தானே?

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் என்றாலே திரு. கக்கன் என்பது அல்ல. இப்போது நான் குறிப்பிட்டது அமைச்சர் அவையிலே உள்ள மதிப்பிற்குரிய திரு. மஜீத் அவர்களைக் குறிக்கும்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதிலே எந்த உத்தரவும் போடவில்லை. 'ஸ்டே' கொடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட இரு தரப்பினர்களும் சர்க்காரை அணுகலாம். ''ஸ்டே' கொடுப்பது என்பது சாதாரணமாக நல்ல விதத்தில் தீர்க்கமாக ஆலோசித்து ஒரு முடிவு எடுப்பதற்காகக் கொடுப்பது. அதிலே உத்தரவாக ஒன்றும் போடவில்லை.

திரு. மு. கருணாநிதி : நல்லவிதத்தில் யோசித்துக் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். யோசிக்காமலா கொடுப்பார்கள்? உயர் சாதி இந்துக்களின் ஓட்டுகள் கிடைக்காமல் போய்விடுமா, கிடைக்குமா என்று தீர யோசித்துத்தான் 'ஸ்டே' கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தண்ணீர் அரிசனங்கள் இருக்கும் இடத்திலுள்ள தொட்டிக்குக் கொண்டுவரப்பட்டால் ஒரு வேளை அங்கு தண்ணீர் போதாமல் போய்விடுமோ என்ற ஒரு பயத்தின் காரணமாக இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டதா என்றால் இல்லை. இதை ஆராய்ந்த என்ஜினியர் அழுத்தந்திருத்தமாக சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள். அரிசனச் சேரிக்குப்போனது போக மேலும் தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுக்கு 'கபாசிடி' இருக்கிறது என்று கூட என்ஜினியர் ஒரு நற்சாட்சிப்பத்திரம் தந்திருக்கிறார். அரிசனங்கள் தொட்ட தண்ணீரை தொட முடியாது என்று சொன்னால் கூட, ஏதோ பழங்காலத்தில் இருந்த பத்தாம்பசலி கொள்கை என்று சொல்லிவிடலாம். உயர்சாதி இந்துக்கள் தொட்டதை இவர்கள் தொடுவது கூட பாவம் என்ற அளவுக்கு குழாய் வைப்பதை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள். இந்த நிலைமையிலே எப்படி தீண்டாமையை நாம் ஒழிக்க முடியும்? அரசாங்கம் எப்படி அவர்களுக்கு செவி சாய்த்தார்கள் என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் மிகவும் வருத்தத்தோடு கேட்கிறேன். கிராமங்களில் உள்ள ஓட்டல்களில் அரிசனங்களுக்கென்று ஒரு தகர குவளை வெளியில் மாட்டப்பட்டிருக்கிறது, அதிலே அவர்கள் காபி வாங்கிக்கொள்ளலாம், டீ வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவுக்கு அவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இது தீண்டாமையை ஒழிப்பதற்கு எப்படி அடையாளமாகும்? சுடுகாட்டில் கூட தனித்தனி இருப்பது ஏன்? இந்த சுடுகாட்டில் சாதி இந்துக்கள் பிணம் தான் வேகும், இந்த சுடுகாட்டில் அரிசன பிணங்கள் தான் வேகும் என்ற அளவுக்கு தனித்தனி சுடுகாடுகள் ஏன்? என்றைக்கு ஆண்டவன் சன்னிதானத்தில் அர்ச்சகராக ஒரு ஆதித்திராவிட தோழர் செல்லுகிறாரோ, அன்றைக்குத் தான் இந்த நாட்டில் தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று பொருள் கொள்ள முடியும். அது மாத்திரமல்ல. தீண்டாமையை ஒழிப்பதற்கு வாரங்கள் நடத்தினால் போதாது, தீண்டாமையை ஒழிப்பதற்கு நாட்களை நடத்தினால் போதாது. நான் ஒன்று சொல்லுகிறேன். அரசாங்கமே ஒரு சட்டம் போடவேண்டும் எந்த ஓட்டலானாலும் சரி—பார்ப்பனர்கள் நடத்துகிற ஓட்டலானாலும் சரி, அல்லது சைவர்கள் நடத்துகிற ஓட்டலானாலும் சரி, அங்கே சர்வாக வேலை செய்வதற்கு 50 சதவிகிதம் அரிசனங்களுக்கு இடம் தந்தால் தான் லைசென்சு கொடுக்கமுடியும் என்று நகர சபை சட்டத்தைத் திருத்துங்கள். அப்படிப்பட்ட நிலைமையில் தான் மனமாற்றம் ஏற்படும். ஏதோ வாரங்கள் கொண்டாடுகின்ற காரணத்தினால், நாட்கள் கொண்டாடுகின்ற காரணத்தினால் இவைகளையெல்லாம் மாற்றிவிட முடியாது. மனமாற்றம் ஏற்படவேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். அரிசனங்களுக்கு உள்ளே இருக்கிற சாதிப் பிரிவுகளை அவர்கள் அகற்றிக்கொள்ளவேண்டும் என்று திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் எடுத்து உரைத்தார்கள். அரிசனங்களில் சற்று முன்னேறியவர்கள் தாங்கள் அரிசனங்கள் என்று சொல்லக்கூட சில பேர் பயப்படுகிறார்கள். அவர்கள் அந்த நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். திட்டை ஆர். சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறேன். உள்ளபடியே சமுதாயத்தில் எந்த அளவுக்கு உயர்ந்திருந்தாலும், எந்த அளவுக்கு சமுதாயத்தில் முன்னேறியிருந்தாலும், அரிசனங்கள் இருக்கிற அந்தச் சேரிக்குள்ளேயே தன்னுடைய வீட்டை அமைத்துக்கொண்டு, அவர்களோடு வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அவர்களுடைய வீடு அந்தக் குடிசைகளை விட பெரியதாக இருந்தாலும் அது வேறு விஷயம். அவர்களின் மத்தியில் இருக்கிறார்கள் என்ற அளவில், அவர்களில் அவரும்

[திரு. மு. கருணாநிதி] [22nd March 1966

ஒருவர் என்று சொல்லக்கூடிய அளவில் அவர் வாழ்ந்து வருகிறார் என்பதற்காக அவர்களை நான் பாராட்டக்கூட கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை சமுதாயத்தில் உருவாகவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். நண்பர் பழனி அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார். பொருளாதாரத் துறையில் அரிசனங்கள் உயரவேண்டுமானால், லைசென்சு, பெர்மிட் இவைகளையெல்லாம் வழங்குவதில் அரிசனங்களுக்கு தனிச் சலுகை அளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். தனிப்பட்ட சிலரை உயர்த்தத்தான் இது பயன்படும் என்றாலும், தனிப்பட்ட சிலர் வளர்ச்சி சமூக வளர்ச்சியாகாது என்றாலும், பொதுவாக அரிசன சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடியது அல்ல என்றாலும், இதையாவது இந்த அரசாங்கம் ஒழுங்காக செய்திருக்கிறதா என்பதற்கு ஒரு உதாரணம் அளிக்க விரும்புகிறேன். திருவண்ணாமலையில் முத்து என்ற ஒரு நபர் நெல் அவிக்கிற கூலியாக இருந்தவர் தன்னுடைய உழைப்பால் முயற்சியால் முன்னேறி, அந்த முயற்சியின் வெற்றியின் விளைவாக ரூ. 30,000 செலவில் ஒரு அரிசி ஆலையைக் கட்டினார். ஆலையைக் கட்டினதும் அவர் குடும்பமே காங்கிரசில் சேர்ந்துவிட்டது. அது வேறு விஷயம். ஆலை கட்டியவுடனே லைசென்சு கிடைக்காதோ என்பதற்காகக் கூட சேர்ந்திருக்கலாம். இப்பொழுது ஆறு ஆண்டு காலமாகிறது. இந்த ஆறு ஆண்டு காலத்தில் முத்து அந்த ஆலைக்காக லைசென்சு பெற முடியவில்லை. ஏனென்றால் அவர் அரிசனத் தோழர். மந்திரியே முயன்றும் கூட கிடைக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். மந்திரியின் முயற்சிக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காங்கிரசுகாரராக இருந்தால் லைசென்சு பெறுவதில் வெற்றி கிட்டியிருக்கும். பாவம், அவர் அரிசனனாகப் பிறந்த காரணத்தினால் அந்த லைசென்சு, ஆறு ஆண்டு காலம் ஆகியும் பெற முடியவில்லை போலும்.

மத்திய சர்க்காரில் கிராமப் போஸ்டு ஆபீசு தொடங்குவதாக இருந்தால், அந்த போஸ்டு ஆபீசு சம்பந்தமாக முதல் சலுகையாகச் செய்வது, அப்ளிகேஷன் போட்டிருக்கிறவர்களைப் பார்த்து, அதில் ஒரு அரிசன அப்ளிகேஷன் போட்டிருந்தால் அவரைத் தான் அந்த அஞ்சல்துறை அலுவலராக தேர்ந்தெடுக்கிறார்கள். அதைப் போல மாநில சர்க்காரும் அந்த முறையை வளர்க்க வேண்டும். ஏறத்தாழ இந்த நாட்டிலே இருக்கிற ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு கிராம முனிசிபுகள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் காலி வருகின்ற நேரத்தில், முதல் சலுகை ஆதித் திராவிடருக்குத் தான் தருவது, அரிசன மக்களுக்குத் தான் தருவது என்ற முறை இருக்கவேண்டும். உயர் சாதி இந்துக்களாக இருந்தால் தான் மதிக்கப்படுவார்கள், அடங்குவார்கள் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. பொது மக்களோடு எங்கெங்கு தொடர்பு கொள்ளவேண்டுமோ அப்படிப்பட்ட எல்லா சட்டங்களிலும் தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும், சமுதாயம் நல்ல

22nd March 1966] [திரு. மு. கருணாநிதி]

வகையில் வளரவேண்டும், அதற்குப் பாடு படவேண்டும் என்று கருதி இந்த அமைச்சரவை காரியங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, அகில இந்திய அரிசன் லீக் மாநாட்டில், திரு. வி. கே. கிருஷ்ண மேனன், “உலகத்தில் 10 பேருக்கு 4 பேர் பசியால் வாடுகிறார்கள்; அந்த நான்கு பேரில் ஒருவர் இந்தியர்; அது போன்று பத்து இந்தியர்களில் ஒரு ‘ஹரிஜன்’ பசியால், வறுமையால், வாடுகிறார்” என்றார்கள். அதே போல, அரிசன நலம் பற்றி ஆராய்ந்த பாராளுமன்றக் குழுத் தலைவர் காங்கிரஸ் உறுப்பினர் திரு. இளையபெருமாள், எம்.பி., “தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க முடியாதபடி அரிசனங்களில் பொருளாதார நிலை இருக்கிறது. அதனால் தங்களைப்போலவே தோட்டி வேலை செய்ய பயிற்சி அளிப்பதில் அவர்கள் நம்பிக்கை கொள்கிறார்கள்” என்று திரு. இளைய பெருமாள் ஒரு அறிக்கையின் மூலம் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இவர் கூற்றுப்படி பார்த்தால், 18 ஆண்டுகள் காங்கிரஸ் ஆண்ட பிறகு, இதற்கென்று ஒரு இலாகாவை தோற்றுவித்து, அரிசன நல இலாகா என்று குறித்து, பலபேர்கள் எம்.எல்.ஏ.களாக வந்து, பத்தாண்டு காலமாக திரு. கக்கன் அமைச்சராகப் பதவியில் அமர்ந்தும், ஒரு அரிசனச் சிறுவன் மனித மலத்தை, வாளியிலே சுமக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைப் பார்த்தால், நாகரிகம் உள்ள சமுதாயத்திலே, அறிவுடைய வருங்காலத்திற்கு நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம். ஆக, ஏட்டில் புள்ளி விவரங்களைப் போடுவதோடு மட்டும் நிற்காமல், அனுபவ ரீதியாக, நடைமுறையில் அரிசனங்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

* **கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன மானியத்திலே அநேக கனம் அங்கத்தினர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் சிறந்த பல கருத்துக்களைச் சொல்லி, இந்த இலாகா வேலையை மேலும் ஊக்குவிக்க நல்ல வார்த்தைகளைச் சொன்னார்கள். அரசாங்கம் செய்யும் பணியையும் போற்றி, பாராட்டி மேலும் பணிகளைச் செய்ய வாய்ப்புக்களைக் கொடுக்க யோசனைகள் பல சொன்னதற்காக அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உதவித் தலைவர், திரு. கருணாநிதி அவர்கள் பேசும்போது, சில அன்பர்கள் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், “இவர்கள் தானா நமக்கு வாழ்வு அளிக்க வந்தவர், வாழ்வு அளிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள்” என்று நினைக்கும் வகையில் பேசினார்கள். சொல்வது லெகுவு; ஆனால் செய்வது கடினம். வீடு கட்டுவது சிரமம், குறை சொல்லுவது லகுவானது. நம் நாட்டிலே குறிப்பாக, பாரத நாட்டிலே, விசேஷமாக தமிழகத்திலே, பல ஆண்டுகளாகவே, ஏழை அரிசன மக்கள் நடத்தப்பட்ட வரலாறு, அவர்கள் எவ்வாறு பொது இடங்களிலும், ரஸ்தாக்களிலும் போகமுடியாமல் தடுக்கப்பட்டார்கள், எப்படி சமுதா

யத்திலே நடத்தப் பட்டார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் நன்கு தெரியும். அந்தக் காலத்தில் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பலபேர்கள் பாடுபட்டு இருந்தாலும் கூட, அதைப் பற்றி சொல்லியிருந்தாலும் கூட மக்களுடைய மனதை மாற்ற, விசேஷமாக இந்துக்களுடைய நடுவிலே அரும் பாடுபட்டு, அவர்கள் மனதை மாற்றி, அரிசனங்களும் இந்துக்கள்தான், சமுதாயத்தில் அவர்கள் தீண்டத்தகாதவர்கள் அல்ல, என்பதை எடுத்து உரைத்துப் பாடுபட்டவர் தேச பிதா மகாத்மா காந்தி. அவர்கள் செய்த சேவை, மகத்தானது. அதைப் பின்பற்றி, பல அன்பர்கள் குறிப்பிட்டபடி, பலர் சேவை செய்திருக்கிறார்கள். அவர்களில் டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் மகாத்மா காந்தியினுடைய கொள்கையைப் பின்பற்றி, அதில் மிக்க அக்கறை கொண்டு பணி செய்திருக்கிறார்கள் என்பதை என் போன்ற ஊழியர்கள் மறக்க மாட்டார்கள். அதற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். நாம் எத்தனை பாடுபட்டாலும், நாடு அடிமையாக இருந்தால், எந்த விதமான முன்னேற்றமும் பெறமுடியாது. நாட்டின் அடிமைத்தனத்தை அகற்றி, சுதந்தரத்தைப் பெறுவதற்காக பாடுபட்டு, இன்றைக்கு அரிசனங்களுக்கு நல்ல முறையிலே திட்டங்கள் பல தீட்டி, சீராகப் பணியாற்றி வருகிறோம் என்பதை, குறிப்பாக, இந்த மன்ற அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல் தமிழக மகா ஜனங்களும், விசேஷமாக அரிசன மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும். சுதந்தரம் வந்த பிறகு இந்த அரிசன மக்களுக்கு நாட்டில் மதிப்பும் மரியாதையும் பெற்று, பொது இடங்களிலும் பொது ரஸ்தாக்களிலும் மற்றவர்களோடு சரிநிகர் சமானமாக, எந்த எந்த ஜாதிக்காரர்கள் தாங்கள் உயர் ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்தார்களோ அவர்களோடு சரிநிகர் சமானமாக உட்கார்ந்து சாப்பிடவும், இருக்கவும், சந்தர்ப்பம் அளித்து, இந்த அரசாங்கம் சாதித்திருக்கும் வரலாற்றினை அரிசன சகோதரர்கள் ஒருகாலும் மறக்க மாட்டார்கள். ஏழை அரிசன மக்களுக்கு அநேகக் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்திக்க அரசாங்கம் பாடுபடுகிறது. திட்டம் தீட்டி எவ்வாறு குறைகளைப் போக்கலாம், என்னென்ன வழிகளிலே வேலை செய்யலாம், என்னென்ன ஒத்தாசைகள், உதவிகள் செய்யலாம் என்றெல்லாம் கவனித்துப் பணிகள் செய்து வருகிறது. திட்டமிட்டு வேலைசெய்யும் நேரத்தில் நல்ல வெற்றிகளையும் கண்டு கொண்டே இருக்கிறோம். முன்பெல்லாம், விசேஷமாக நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள அரிசனக் குழந்தைகள் படிக்க முன்வரமாட்டார்கள். அது இன்றைக்கு மாறியிருக்கிறது. ஆனால், கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் சொன்னார்கள். அவர்கள் பகுதியில் அரிசனக் குழந்தைகள் அவ்வாறு பள்ளிக்குப் போவதில்லை என்று சொன்னார்கள். அது உண்மையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சாதாரணமாக இன்றைக்கு ஏழை அரிசனக் குழந்தைகள் பள்ளிக்குப் போகவேண்டும் என்று முன் வருவதைக் காண்கிறோம். ஆரம்பப் பாடசாலைக்கு மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிக்கும், படிக்கவேண்டும் என்றும், அரசாங்கம் கொடுக்கும் உதவிகளையும் சலுகைகளையும் பெற்று,

பட்டம் பதவிகள் பெறவேண்டும் என்கின்ற எண்ணமும் வந்திருக்கிறது. கல்வித் துறையிலும், கல்வி இலாகா, அரிசன நல இலாகா இவைகளின் மூலமாகவும் வசதிகளைப் பெற்று, அதிகமாகப் படிக்க வேண்டும் என்கிற எண்ணமும், உயர்ந்த நிலைக்குத் தாங்கள் வர வேண்டும் என்கிற எண்ணமும் அரிசன மக்களிடையே வந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். உடனடியாக எல்லோருமே எல்லாவற்றையும் அடைந்துவிடவேண்டும் என்றால் அது சிரமமாகத்தான் இருக்கிறது. திரு. கருணாநிதி சொன்னபடி, கிராமங்களிலே ஒரு சில இடங்களிலே, ஹோட்டல்களிலே டம்ளர்களை வைத்து, காப்பி கொடுக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலேயும் கூட, தண்ணீர் கொண்டுவர எதிர்ப்பு இருக்கிறது. ஆனால், எங்கோ நடக்கிற ஒன்றை வைத்துக்கொண்டு, பூராவும் அப்படித்தான் என்று சொல்லிவிடக் கூடாது. மெம்பர்கள் கடமை, மக்களுக்குத் தொண்டு செய்கிறோம் என்கிறவர்கள் கடமை, சட்டசபையில் வந்து சொல்வதோடு மட்டும் சரியாகிவிடாது. ஏதோ ஓட்டு வாங்கிவிட வேண்டும் என்று மட்டும் செய்தால் போதாது. குறைகளை அங்கத்தினர்களே உடனடியாகக் கவனிக்கலாம், அல்லது அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லலாம், ஜாதி இந்துக்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களுடைய கடமை என்ன என்று அவர்களுக்கு உணர்த்தலாம். அரசாங்கம் மட்டுமல்லாமல், இங்கே இருக்கின்ற ஆளும் கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல், மதிப்பிற்குரிய திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்ட வண்ணம், இதை ஒரு தேசியப் பிரச்சினையாக எண்ணி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தீண்டாமை என்கிற பிசாசினை போக்கி, தீய பழக்கத்தை ஒழித்து, அந்த மக்கள் உயர்ந்த நிலைக்கு வர,

"எல்லோரும் ஒன்றென்ற காலம் வந்ததே"

என்று மகாகவி பாரதியார் பாடியவண்ணம், நாம் பணிபுரிய வேண்டும். பாட்டுப் பாடினால் வந்து விடுமா? நடைமுறையில் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் வேண்டும்.

அரிசன மக்களுக்கு கல்வியில் முன்னேற்றம் வேண்டும் என்று மகாத்மா காந்தி பாடுபட்டார்கள். மதிப்பிற்குரிய திரு. கலியாண சுந்தரம் சொன்னபடி, முன்னேற்றம் அடைவது மட்டுமல்ல, ஜாதிப் பகைமை, ஜாதிப் பூசல் இவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்கள். அவர்களுடைய வார்த்தைகளையே எடுத்துச் சொன்னார்கள். ஜாதி இந்துக்கள் எல்லோரும், பிராயச்சித்தமாக என்ன செய்ய வேண்டும் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னதையே எடுத்துச் சொன்னார்கள். அதை கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும். தீண்டாமை என்கிற தீய பழக்கத்தை ஒழிக்க என்னென்ன பிரயத்தனங்கள் செய்துவருகிறோம் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால், நன்றாக விளங்கும், தீண்டாமையைப் போக்குவதில், பிராயச்சித்தம் செய்துகொள்ள ஜாதி இந்து சகோதரர்கள் முன் நிற்கவேண்டும். அதற்கு முன்பு அரிசனங்களுக்குள்ளேயே இருக்கும் பாகுபாடுகளை, இருக்கின்ற தீய பழக்கங்களை, எடுத்துச் சொல்லிக் கொண்டு இருந்தால், ஜாதி

இந்துக்கள் அதைச் சொல்லிக்கொண்டே தங்கள் தீய பழக்கத்தைக் கைவிடமாட்டார்கள். அந்த வகையில் செய்வது மணலைக் கொண்டு கயிறு திரித்தது போலத்தான் என்று மகாத்மா சொல்லியுள்ளார்கள். ஆகவே, ஜாதி இந்துக்கள் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நாம் ஆவன செய்ய வேண்டும்.

தோழர் கருணாநிதி ஏதாவது பிரசாரம் செய்கிறார்களா? எல்லாம் சட்ட சபைக்குள்ளே தான் . . .

திரு. மு. கருணாநிதி: நான் எழுதிய 'தாயில்லாப் பிள்ளை' என்கிற படக் கதை, ஒரு அரிசன சிறுவன், ஒரு பார்ப்பனர் வீட்டில் வளருவது போல. அந்தக் கதையே பிரசார நோக்கம் கொண்டது என்பது அமைச்சர் கக்கனுக்குத் தெரியாதா?

கனம் திரு. பூ. கக்கன்: பொதுவாகப் பார்த்தால், இந்த அரிசன நல மானியக் கோரிக்கையில் பேசின பல கனம் அங்கத்தினர்கள் கட்சித் தேர்தல் பிரசாரம் மாதிரித்தான் பேசினார்கள். நாட்டிலுள்ள அரிசன மக்களிடம் சென்று, "எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் பேசிய பேச்சைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக்கொள்ளும் வண்ணம் புத்தக ரூபமாகப் போட்டு, மக்களிடத்தில் காண்பிக்கக் கூடும். "உங்களுக்காகத்தான் நாங்கள் இது எல்லாம் பேசியிருக்கிறோம், இதெல்லாம் உங்களுக்காகத்தான் பண்ணியிருக்கிறோம்" என்று அவர்கள் சொல்லக் கூடும். நாங்கள் அரிசன மக்களுக்காக ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்துவிடவில்லை. "அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை" என்று பிரசாரம் செய்வதற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அரசாங்கத்தின் மீது குறை கூறி எதிர்க்கட்சி நண்பர்கள் எவ்வளவுதான் சொன்னாலும், குறிப்பாக மக்களிடத்தில் ஒரு தப்புப் பிரசாரம் செய்வதற்காக அவர்கள் எவ்வளவு தான் யத்தனித்தாலும், அரிசன மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஒருகாலும் இவர்களுடைய பேச்சைக் கேட்க மாட்டார்கள். யார் நன்மை செய்கிறார்கள் என்று அரிசன சகோதரர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், அரிசன மக்களுடைய மதிப்பையும், மானத்தையும், மரியாதையையும் காப்பாற்றுவதற்காக பாடுபட்டது யார், நாட்டிலே ஆலயப் பிரவேசச் சட்டம் கொண்டுவந்தது யார், குறிப்பாக எத்தனையோ சட்டங்களைக் கொண்டுவந்து அரிசன மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பாடுபட்டது யார் என்றெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சட்டத்தின் மூலமாக நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. மக்களிடத்திலே மனமாற்றம் வேண்டும் என்றாலும், சட்டத்தின் மூலமாகவும் சில காரியங்களைச் செய்யத்தான் வேண்டும். ஆகவே, நல்ல சட்டங்களை கொண்டுவந்து, நடைமுறையில் நல்ல முறையில் நடத்திக்கொண்டு வருகிற இந்த அரசாங்கம், அரிசன மக்களுக்கு எவ்வளவு தூரம்,

ஒத்தாசை உதவி செய்ய முடியுமோ அதைச் செய்துகொண்டிருக்கும் என்று இந்தச் சமயத்தில் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இது பிரசாரம் இல்லையா?

கனம் திரு. பூ. கக்கன்: மற்றவர்கள் சொன்னதற்கு நானும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

மதிப்பிற்குரிய திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, குறிப்பாக, பொருளாதாரத் துறையில் அரிசன மக்களை உயர்த்தாமல் மற்றபடி அவர்களின் நிலையை அவ்வளவாக உயர்த்திவிட முடியாது என்று சொன்னார்கள். பொருளாதாரத் துறையில் அரிசன மக்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை; குறிப்பாக, அரசாங்கத்தை நடத்துகின்ற கட்சியினுடைய கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான், இந்த நாட்டில் ஜனநாயக முறையிலே சோஷலிசம் வரவேண்டும், ஏழை–பணக்காரர் வித்தியாசம் இந்த நாட்டில் ஒழியவேண்டும், மக்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கவேண்டும், பாட்டுக்குத் தகுந்த பாட்டம் கிடைக்கவேண்டும் என்ற அந்த நோக்கத்தில்தான் திட்டமிட்டு வேலை செய்து கொண்டு வருகிறோம். எவ்வளவு சீக்கிரம் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொண்டுவரவேண்டியதுதான். என்றாலும், பக்குவமாகக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. வரி போட்டுச் சில காரியங்களைச் செய்யும்போது, அரசியல் கட்சிக்காரர்கள் ஜனங்களிடத்தில் போகும்போது, "இதெல்லாம் செய்கிறார்கள், வரி போட்டுவிட்டார்கள்" என்று சொல்லக்கூடும். ஆகவே, பக்குவமாகத்தான் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அரிசன நலத்திற்காக ஒதுக்கப்பட்ட மானியம் போதாது, அதிகம் கேட்கவேண்டும், 25 கோடி ரூபாய் கேட்கவேண்டும் என்றெல்லாம் மதிப்பிற்குரிய திரு. கருணாநிதி அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் 25 கோடி ரூபாய் கேட்கச் சொன்னால், நான் 100 கோடி ரூபாய் கூடக் கேட்பேன். 100 கோடி ரூபாய் கேட்டுவிட்டால், அது கிடைக்கவேண்டும் அல்லவா? வெறுமனே பேசிவிட்டு போவதா? சொல்வது ரொம்ப எளிது. ஆனால், செய்வது ரொம்பக் கடினம். 100 கோடி கேட்கலாம். 1,000 கோடி கேட்கலாம், 2,000 கோடி கேட்கலாம். பணம் வேண்டுமானால், அந்தப் பணத்திற்கு மக்களிடம் தான் நாம் செல்ல வேண்டியிருக்கிறது. கிடைக்கக் கூடிய பணம் எல்லாவற்றையும் நாம் ஒரு துறைக்கே செலவிட்டு விடவும் முடியாது. சுகாதாரம், கல்வி போன்ற இதர துறைக்ளுக்கும் செலவிடவேண்டியிருக்கிறது. அரிசன நல இலாக்காவிற்கும் மற்ற இலாக்காக்களுக்கும் நாம் தொகை ஒதுக்கி செலவு செய்யவேண்டியிருக்கிறது. எல்லா தொகையையும் ஒரே இலாகாவிற்கு கொண்டுவந்து செலவு செய்துவிட முடியாது. இருந்தாலும், இதர இலாக்காக்களுக்குச் சற்று குறைந்தாலும், அரிசன நல இலாகாவிற்கு ஓரளவு அதிகத் தொகை ஒதுக்கி, எவ்வளவு தூரம், அரிசன, ஆதிவாசி, பிற்பட்ட மக்களுக்கு

ஒத்தாசை உதவி செய்யவேண்டுமோ அதை அரசாங்கம் செய்து கொண்டு வருகிறது. இனியும் செய்து கொண்டு வரும். மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கமும் சரி, எவ்வளவு தூரம் அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு முன்வந்து நல்ல பணி செய்து வருகிறது என்பதை இந்த மன்றத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள், எடுத்த எடுப்பிலேயே, வெள்ளிப் பாத்திரங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். இவ்வாறு பல இடங்களில் அவர்கள் பிரசங்கம் செய்திருக்கிறார்கள். "எல்லா வீட்டிலும் வெள்ளிப் பாத்திரம் இருக்கிறது என்று கக்கன் சொன்னார்; இருக்கிறதா உங்கள் வீட்டில் வெள்ளிப் பாத்திரம்?" என்ற வகையில் பல கூட்டங்களில் அவர்கள் மக்களைப் பார்த்துக் கேட்டுவருகிறார்கள். கக்கன் அப்படிச் சொன்னார், கக்கன் இப்படிச் சொன்னார் என்று வெளியிலே கூட்டங்களில் சொல்லிச் சொல்லி வந்த அந்த ஞாபகத்தினாலோ என்னவோ, அவர்கள் இங்கும் அந்தப் பிரச்னையை முதலில் எடுத்துக்கொண்டார்கள். "ஒரு சில இடங்களில் வெள்ளிப்பாத்திரம் இருப்பதையும் பார்க்கிறோம்" என்று நான் என்றைக்கோ ஒரு நாள் சொன்னேன், "ஓரிரு இடங்களில்" என்று தான் சொன்னேன். "ஒரு சில இடங்களில் இல்லை" என்று சொல்ல முடியுமா? அரிசன வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் இருவர் கூட அப்படி இல்லை என்று சொல்லிவிட முடியுமா? நான் பொதுவாகச் சொன்னது என்னவென்றால், அரிசன மக்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று சொன்னேனே அல்லாது, அரிசனங்கள் வீட்டில் எல்லாம் வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கின்றன, அவர்கள் எல்லாரும் உயர்ந்த நிலைமைக்கு வந்து விட்டார்கள் என்று நான் ஒருகாலும் சொல்லவில்லை என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது, "பறையன் என்ற பெயரை 'அரிசன்' என்று மாற்றிவிட்டால், அது ஒரு பெரிய மாற்றமா? முன்னேற்றம் கண்டுவிட்டதாகச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்கள். இன்னும் அவர்களைப் 'பறையர்' என்றே சொல்லிக் கொண்டிருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் ஆசைப்படுகிறாரா என்று தெரியவில்லை. அவர்களுடைய கட்சியும் அவ்வாறு ஆசைப்படுகிறதா என்று தெரியவில்லை. முன்பு ஒரு தடவை, "கக்கன் மந்திரியாக இருக்கும்போது நான் ஏன் மந்திரியாக இருக்கக்கூடாது?" என்று சொல்லப்பட்டது போல, எப்போதுமே "பறையர்" என்ற வார்த்தையே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்போல் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அண்ணா அவர்கள் சொன்னதை அடிக்கடி 'ட்விஸ்ட்' செய்து பேசவே முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா

அவர்கள், "கக்கன் மந்திரியாக இருக்கும்போது நான் ஏன் மந்திரியாக இருக்கக்கூடாது?" என்று குறிப்பிட்டது, ஜாதி அடிப்படையில் அல்ல என்று பல முறை இந்த மன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இவ்வாறு சொல்லி அரிசனங்களுடைய ஓட்டுக்களைப் பெற்றுவிடலாம் என்று கக்கன் அவர்கள் அந்த ஆசை வைக்கவேண்டாம்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள், "பறையர்கள்" என்ற வார்த்தையைச் சொல்லியிருக்காவிட்டால், நான் சொல்லியிருக்கப் போவதில்லை. அப்படி அவர்கள் சொன்னதையொட்டி, மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்களும் இம்மாதிரி சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கே இந்தச் சபையிலே மதிப்பிற்குரிய கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் மானியக் கோரிக்கையின் போது நல்ல பதில் சொல்லியிருக்கிறார். "எத்தனையோ மந்திரிகள் இருக்கும்போது இந்த மந்திரியைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு ஏன் சொன்னார்கள்?" என்று அன்றைக்கே கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: கனம் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர்களைப் பொறுத்தவரையில், பொருளாதாரத் துறையிலும் மற்றத்துறையிலும் வளர்ச்சி இல்லை. ஆனால், இந்தப் பெயர் மாற்றம் தான் இருக்கிறதேயொழிய, எந்தவிதமான பொருளாதார மாற்றமும் இல்லை என்று குறிப்பிடுவதற்காக நான் அப்படிச் சொன்னேனே தவிர, அவர்கள் என்றென்றும், 'பாணன்'; 'பறையன்' என்ற பெயர்களிலேயே அழைக்கப்பட வேண்டும், அவர்களை அந்த நிலைமையிலேயே வைக்கவேண்டும் என்ற கருத்தோடு நான் சொல்லவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: அப்படி அவர்கள் முன்பு பேசவில்லை.

திரு. மு. கருணாநிதி: கனம் உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்குப் பதில் சொல்ல முடிந்தால் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமே தவிர . . .

கனம் திரு. பூ. கக்கன்: அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: பதில் சொல்ல முடியாமல் தான் இப்படிச் சொல்கிறார்கள், கனம் அமைச்சர் அவர்கள்.

முடிந்தால், எடுத்துவைத்த பிரச்னைகளுக்குப் பதில் சொல்லுங்கள். ஒரு ஜாதியின் பக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெறுப்பு இருப்பதாகக் கற்பனை செய்து, அனாவசியமாக, உண்மைக்கு மாறான வார்த்தைகளை இந்த மதிப்பிற்குரிய, பெருந்தன்மைமிக்க மன்றத்தில் சொல்லாதீர்கள்.

[22nd March 1966

கனம் திரு. பூ. கக்கன் : உண்மைக்கு மாறாக நான் எப்போதும் பேசமாட்டேன். ஆனால், அவர்கள் தான் உண்மைக்கு மாறாகப் பேசுகிறார்கள். அதனால் தான், நான் பதில் சொல்லும்போது, அவர்கள் ஆத்திரப்பட்டு என்னுடைய பேச்சின்போது குறுக்கிடுகிறார்கள்.

கல்வியைப் பற்றி மதிப்பிற்குரிய பல கனம் அங்கத்தினர்கள் இங்கே எடுத்துக் காண்பித்தார்கள். அவர்கள் சொல்லும்போது, "ஆரம்பப் பாடசாலைகளில் படித்துவிட்டால், உயர்நிலைப் பள்ளிக்குப் போய், அங்கிருந்து காலேஜ் படிப்புக்குப் போகவேண்டும்; காலேஜுக்குக் குறைவாகத்தான் போகிறார்கள்" என்று சொன்னார்கள். படிக்கிறவர்கள் எல்லாம் காலேஜ் படிப்புக்குப் போவது இல்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் திட்டை சுப்பிரமணியம் அவர்கள் சொன்னபடி, ஜாதி இந்துக்களுடைய குழந்தைகளெல்லாம் காலேஜுக்குப் போய்விடுகிறார்கள் என்பது இல்லை. அரிசனப் பிள்ளைகள் எவ்வளவு தூரம் படிக்க விரும்புகிறார்களோ அந்த அளவுக்கு அரசாங்கச் சலுகைகளைப் பெற்று காலேஜ்களில் பலர் படித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். எத்தனையோ பேர்கள் காலேஜுக்குப் போய்ப் பட்டம் பெற்றிருக்கிறார்கள்; பல உத்தியோகங்களை வகிக்கிறார்கள். அப்படியிருக்க, காலேஜ் படிப்புக்கு அரிசன மக்கள் இதுவரை போகவில்லை என்று குற்றஞ் சாட்டிச் சொல்வது நல்ல உதாரணம் அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வைத்தியநாதன் ரிபோர்ட் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலேயே ரொம்ப நாளாகப் பாட்டாளிச் சமுதாயமாக இருந்த இந்த சமுதாயம், அதிக பர்சென்டேஜ் பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே பெற வாய்ப்பு இல்லை. இப்போது தான் வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அரிசனங்கள் உத்தியோகத் துறையில் வந்திருக்கும் எண்ணிக்கையைப் பார்க்கும்போது இதர ஜாதி இந்துக்களைக்காட்டிலும் அதிகமாக வந்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வீடு கட்டுவதற்கு இப்பொழுது கொடுத்திருக்கிற பணம் போதாது, மேலும் கூடுதலாக ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே ரூ. 500 இனாமாகவும், ரூ. 250 கடனாகவும் கொடுத்து வந்தார்கள். அது போதாது என்று, ரூ. 250 இனாமாகவும், ரூ. 750 கடனாகவும் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். இன்னும் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் நல்லது என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள் கூட, வீடு கட்டுவதற்குக் கூடுதலாகத் தொகை கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். வீடு கட்டுவதற்குக் கூடுதல் தொகை கொடுக்கவேண்டும் என்பதை நானும் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், நம்முடைய நிதி நிலைமைக்குத் தக்கவாறு எவ்வாறு தொகையை உயர்த்திக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்வது என்பதில் நாம் அதிகமாக அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த ஆயிரத்துடன், கூட்டுறவு சொசைட்டி வாயிலாக இரண்டாயிரம், மூவாயிரம் செலவு செய்து

22nd March 1966] [திரு. பூ. கக்கன்]

வீடு கட்டிவிடலாமா என்று தான் அரசாங்கம் பரிசீலனை செய்தது. நாட்டுக்கு வந்த சோதனை காரணமாக, அதை நிறுத்தி வைத்துவிட்டோம். மேலும், அவ்வாறு செய்யவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். கூட்டுறவு வாயிலாக வீடு கட்டும்போது, நல்ல வீடு கட்டுவதற்கும், கூடுதலாகக் கடன் வாங்கினாலும், கடனை அவர்கள் பல வருஷத் தவணைகளில் திருப்பிக் கட்டவும் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 100 வீடுகள் கட்டினால் அவற்றில் 10 வீடுகள் அரிசனங்களுக்கும், 90 வீடுகள் பணக்காரர்களுக்கும் என்று இருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு இல்லை. வீடு கட்டுவதிலே அரிசன மக்களுக்கு ஒத்தாசை உதவி என்ன செய்யவேண்டுமோ, அதை நம்முடைய நிதி நிலைக்குத் தக்கபடி செய்ய முடியும். எல்லோருக்கும் ஒரேயடியாகக் கட்டிக் கொடுத்துவிட முடியாது. முதலிலே பட்ஜெட்டைச் சமர்ப்பித்துப் பேசிய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள், 15 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டு, அரிசனங்களுக்கு மட்டுமல்லாமல், இதர அன்பர்களுக்கும் ஏழைகளுக்கும் மனைக்கட்டுகள் வழங்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத் தவிர இம்மாநிலத்தில் அரிசனங்களுக்கு 170 லட்சம் ரூபாய் ஒதுக்கி வீடுகள் கட்டத் தக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த வருஷம் மட்டும் 44 லட்சம் சொச்சம் ரூபாய் ஒதுக்கி, மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதற்குச் செலவு செய்வதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். நிலம் கிடைப்பதிலே இருக்கும் பிரச்னை தெரிந்ததே. அரசாங்கக் கொள்கை, முதலிலே சர்க்கார்ப் புறம்போக்கு இடங்களைப் பார்க்கிறது. அது இல்லாவிட்டால் புஞ்சை நிலங்களைப் பார்க்கிறது. அதுவும் இல்லாவிட்டால்தான் நஞ்சை நிலங்களுக்குப் போவது. நஞ்சை நிலங்களை அனாவசியமாக முதலில் எடுத்துக்கொள்வதில்லை. உணவு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய இடங்களை அதிகமாக எடுக்கக்கூடாது என்று அரசாங்கம் எண்ணுகிறது. குறிப்பாக, விவசாய மக்களுக்குக் கஷ்டம் இல்லாத வகையில் புறம்போக்கு நிலங்களை எங்கெங்கே கொடுக்க முடியுமோ அங்கங்கே கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதாக இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பால் சொஸைடிகள் நன்கு நடைபெறவில்லை என்று சொன்னார்கள். ஒன்றிரண்டு சொஸைடிகள் நல்லமுறையில் நடைபெறாமல் இருக்கலாம். குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் என்று சொன்ன கருத்தின்படி பார்த்தால் இன்றைக்கு மிக நல்ல முறையில் பல பால் சொஸைடிகள் நடைபெற்று வருகின்றன. அதுவும் மதுரை, ஈரோடு, கோவை போன்ற வட்டாரங்களில் மில்க் கோவாப்ரேடிவ் சொஸைடி ஏற்படுத்தி, அதன்மூலம் இந்த பால் சொஸைடிகள் நல்லமுறையில் நடக்க வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் பலபேர்கள் நன்மை

[திரு. பூ. கக்கன்] [22nd March 1966

அடைந்து வருகிறார்கள். ஆகவே, இதனால் பயனில்லை என்று சொல்லி இவற்றை நிறுத்த வழி தேட வேண்டாம் என்று இந்தச் சமயத்தில் வேண்டிக்கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

திட்டை சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது நாம் ஒதுக்கியிருக்கிற தொகை கடலில் கரைத்த பெருங்காயம் போல் ஆகிவிடுகிறது என்றார்கள். நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அரசாங்கத்தின் பொருளாதார நிலைமட்டும் சரியாக இருந்தால்—திட்டை சுப்பிரமணியம் அல்ல, திரு. கருணாநிதி அல்ல, திரு. கலியாணசுந்தரம் அல்ல—இவர்களை எல்லாம்விட நான் இந்தச் சமூகத்தினருக்கு இன்னும் அதிகமாக என்ன, என்ன செய்யலாம் என்று எண்ணுவேன். நாம் நடக்கக்கூடியதைச் சிந்திக்கவேண்டும். அரிசனங்களுடைய வீட்டுவசதிக்காக பரமேசுவரன் கமிட்டியார் 15 கோடி தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். நாமும் 15 கோடி மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். அவர்களும் உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன். அவர்களுடைய உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாமும் எல்லா வீடு இல்லாத ஏழைகளுக்கும் வீட்டு மனைகள் கொடுக்க திட்டமிட்டிருக்கிறோம்.

அரிசனங்களுடைய ஜனத்தொகைக்கு ஏற்ப அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். குறிப்பாக அரிசனங்களுடைய ஜனத்தொகை ஓரளவு கூடியிருக்கிறது. அதை வைத்தியநாதன் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன.

பரமேசுவரன் கமிட்டி அறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. குறிப்பாக, அதிகப்படியான அதிகாரிகள் போடுவது பற்றிக் குறிப்பிடப்பட்டது. அதிகாரிகள் போட முடியாது என்பது அல்ல. மேலும் போர்டு மெம்பர் ஒருவரை க்ஷேமநல அதிகாரியாகப் போட வேண்டும் என்றார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்தது. இப்போது அது தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தது. இப்போது வந்திருக்கிற டைரக்டர் அவர்களும் அரிசன சகோதரர் தான். இந்த இலாகாவின் பணிகளைச் சிறப்பாகக் கவனிப்பார்கள் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீசர்—இத்துறைக்கு ஏற்றவராக கிடைக்கும் போது அவரைப் போடுவதற்கும் அரசாங்கம் முன் வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் பெரு மழை, புயல் வந்தபோது—மன்ற அங்கத்தினர்களுக்குத் தெரியும்—வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டித்தர ஏற்பாடு செய்தோம். தொடங்கப்பட்ட வேலை பூர்த்தியாகாமல் இருக்கிறது. அதைச் சீக்கிரம் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கலெக்டரிடமும் குறிப்பிட்டிருக்கிறோம். இதில் அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு அவற்றைப் பூர்த்தி செய்து கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

22nd March 1966] [திரு. பூ. கக்கன்]

ஹைஸ்கூல் இருக்கிற இடங்களில் எல்லாம் ஹாஸ்டல் நிறுவ வேண்டுமென்று சொன்னார்கள். ஹாஸ்டல் எங்கெங்கே நிறுவப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் விவரமாக என்னுடைய அறிக்கையில் கொடுத்திருக்கிறேன். நிதி வசதிக்கேற்ப இத்துறையிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

மதிப்பிற்குரிய அன்பில் தர்மலிங்கம் அவர்கள் சொல்லும்போது அரிசனங்களுக்குள்ளேயே சாதி பாகுபாடு இருக்கிறது. அது ஒழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல இது ஒரு சாபக்கேடு. இதற்குப் பிராயச்சித்தமாக உயர்சாதிக்கார நண்பர்கள் தான் இந்த சாதி வேறுபாட்டை அடியோடு ஒழிக்க அதிக அக்கறை காட்ட வேண்டும்.

அரிசன இலாகாவில் வேலை செய்கிற அதிகாரிகளுக்கு விசேஷமான சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கம் எல்லாவற்றையும் பரிசீலித்து வருகிறது. அடிக்கடி மாற்றாது, அங்கேயே இருக்கும்படியான நிலைமையையும் ஏற்படுத்தியிருக்கிறோம். மத்திய அரசாங்கம் கொடுக்கிற பணத்தையும் பெற முன் வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அழகமுத்து அவர்கள் அவர்களுடைய வட்டாரத்தில் இருக்கிற கஷ்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். "மேல் சாதி இந்துக்கள் தொல்லை கொடுக்க அரசாங்கம் சாதகமாக இருந்து வருகிறது" என்று சொன்னார்கள். அரசாங்கம் அவ்வாறு இருக்காது என்று சொல்கிறேன். சில கிராமங்களில் கொடூரத் தன்மை உடையவர்கள் இருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அரசாங்கம் அவர்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தீங்கு இழைக்கப்படும் போது கடுமையான நடவடிக்கை எடுக்கும். ஐ.ஜி. அவர்களுக்கும் கூடச் சொல்லியிருக்கிறோம். பல பேர் 'உள்ளே' கூட தண்டனை அனுபவித்து வருகிறார்கள். தீண்டாமை அறவே ஒழிய வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர்களும்கூட அரசாங்கத்திற்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தர முன் வரவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதிய உணவு சரியாகக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அரிசன நல இலாகாவிலே இருந்து மட்டுமல்ல, அங்கங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்களிலும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். எல்லா இடங்களிலும் கொடுப்பது என்பது முடியாது. கல்வி இலாகாவின் மூலமாக கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் 6 பைசாவும் அங்கேயுள்ள அன்பர்கள் 4 பைசாவும் மொத்தம் 10 பைசா இதற்காகக் கொடுக்கப்படுகிறது. அரிசன நல இலாகா மூலம் 15 பைசா கொடுத்துவருகிறோம். அந்தந்த இடங்களிலே உள்ளவர்களுக்குக் கொடுக்கும்பொழுது அங்கே ஜாதி இந்துக்கள் இருந்தாலும்கூட அவர்களுக்கும் 15 பைசாதான் கொடுக்கிறோம். ஆகவே, இது குறைவாக இருக்கிறது என்று சொல்லமுடியாது என்பதை நான் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரத்திற்கு 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். அரிசன மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருந்தால் வழங்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். புதிதாக மின்சாரம் கிராமங்களுக்கு வழங்குவதற்கு அனுமதி கொடுக்கும்பொழுது அரிசனங்கள் இருக்கிற இடத்திற்கும் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லித்தான் அனுமதி கொடுக்கிறோம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே மின்சாரம் வழங்கப் பட்டிருக்கிற கிராமங்களிலே அரிசனங்கள் தெருக்களிலே மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிறது. எலக்ட்ரிசிடி போர்டு மின்சாரம் கொடுப்பதில்லை, அங்கே தனி கம்பெனியார் தான் கொடுக்கிறார்கள். ஆகவே தனியாகத் தொகையை ஒதுக்கி அப்படி பட்ட கிராமங்களுக்கு மின்சார வசதிசெய்து கொடுக்கலாம் அல்லவா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்காகத்தான் முன்பு 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்ததை இப்பொழுது மூன்று லட்சமாக ஒதுக்கியிருக்கிறோம். குறிப்பாக இதில் பஞ்சாயத்து போர்டாரும் அக்கறை எடுத்துக்கொண்டு செய்தால் அரசாங்கம் ஈவுத் தொகை கொடுக்கலாம். ஹரிஜன நல இலாகாவிலிருந்து வரட்டும், வரட்டும் என்று நினைத்துக்கொண்டு இருப்பது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. அழகமுத்து அவர்கள் சொல்லும்பொழுது செக் கொடுத்தால் பணம் கொடுப்ப தில்லை என்று சொன்னார்கள். நான் அதற்கு முன்பே பதில் சொல்லிவிட்டேன். பச்சை மலைப் பகுதியில் ரோடுவசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஹரிஜன நல இலாகா கொஞ்சம்தான் இதற்குப் பணம் கொடுக்கமுடியும். இதர இலாகாவினர் தான் போடவேண்டும். இருந்தாலும்கூட ரொம்ப அவசியமாக இருந்தால் பிரையாரிடி கொடுத்து கலெக்டரிடம் சொல்லி ஹரிஜன நல இலாகா மூலம் செய்து தருகிறோம். கொள்ளிமலைப் பகுதியிலே ரோடுகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்.

திரு. பொன்னையா அவர்கள் வால்பாறை பகுதியில் பெண்கள் விடுதி வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பல இடங்களிலே விடுதிகள் ஏற்படுத்திக்கொண்டே வருகிறோம். மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்துவதைக் காட்டிலும் மாணவிகளுக்கு ஏற்படுத்துவதில்தான் அதிக அக்கறை காட்டப்படுகிறது, அவர் களுக்குத்தான் போதுமான விடுதிகள் கட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அவர்கள் தாய்க்குலம், யார் கஷ்டப்பட்டாலும் அவர்களைக் கஷ்டப்படவிடக்கூடாது. இது சம்பந்தமாக கலெக்டர் அவர்களிடத்திலே ரிப்போர்ட் வாங்கி அதைப் பரிசீலனை செய்ய லாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஹரிஜன மக்கள், பின்தங்கியவர்கள் இவர்களுக்குக் கொடுக்கப்படும் மத்திய சர்க்கார் மானியத்தைப்பற்றி சொன்னார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது பின்தங்கிய வகுப்பினருக்கு தனியாக ஒரு இலாகா வேண்டுமென்று சொன்னார்கள். ஹரிஜன நல இலாகாவிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்று சொன்னார்கள்.

ஏழை ஹரிஜன மக்கள், ஆதிவாசிகள், பின்தங்கிய மக்கள் எல்லோரும் ரொம்ப நாளாகக் கஷ்டப்பட்டவர்கள். அவர்கள் இப்பொழுதுதான் ஒற்றுமையாக இருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது பிரிவினை எண்ணத்தைச் சொல்லி அவர்களைக் கெடுதிக்கு ஆளாக்கக்கூடாது. திரு. பொன்னையா அவர்கள் பின்தங்கியவர்களுக்கு அதிகமாக வந்துவிட்டது, குறைந்து வந்து விட்டது என்று சொன்னார்கள், அதற்காக எல்லாம் சர்ச்சை பண்ணுவதிலே அர்த்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

கனம் சபாநாயகர் : அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் இன்னும் வேண்டும் ?

கனம் திரு. பூ. கக்கன் : 15 நிமிடங்கள் வேண்டும். நான் பதில் சொல்லவேண்டிய நேரத்தை எல்லாம் தங்கள் குறுக்கீடுகள் மூலம் அங்கத்தினர்கள் எடுத்துக்கொண்டார்கள், ஆகவே அங்கத்தினர் கள் நான் பதில் சொல்லும்வரை இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. சின்னசாமி அவர்கள் குடியேற்றத்தைப் பற்றியும் வீட்டு வசதியைப்பற்றியும் சொன்னார்கள். அவர்கள் இருந்து வருகிற பக்கத்திலே கூட மனைக்கட்டுகள் கொடுத்திருக் கிறோம். நிலக் குடியேற்றத்திற்கும் வசதிசெய்து கொடுத்திருக் கிறோம். ஜாதி ஹிந்துக்களும் குடியேறவேண்டுமென்று சொன்ன தால் நூற்றில் பத்து சதவீதம் அவர்களுக்கும் கொடுக்கவேண்டு மென்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் மூலம் ஹரிஜனங்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்லமுடியாது.

திருமதி கிருஷ்ணவேணியம்மாள் அவர்கள் அல்லிநகரம் பக்கத் திலே இருக்கிற ஹரிஜனங்களுக்கு நிலம் ஜாரி செய்து தரவேண்டு மென்றும், தனியாக அவர்களுக்குப் பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அரசாங்கத்தின்மூலம் சொந்தக் கட்டடம் கட்டவேண்டுமென்று ஆசைதான். ஆனால் பணம் வேண்டியிருக்கிறது. திட்டமிட்டுப் படிப்படியாக இதை யெல்லாம் கட்டிக்கொண்டே வருகிறோம். இந்த வருஷத்திலே சில விடுதிகள் கட்டுவதற்கு அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனியாகப் பள்ளிகள் ஹரிஜனங்களுக்கு வேண்டுமென்று சொன்னார்கள். ஹரிஜனங்களுக்குத் தனியாகப் பள்ளிகள் கொடுக்கக்கூடாது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்து இருக் கிறது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற எண்ணம் பையன் களுக்கு ஏற்படாமல் இருக்கவேண்டும், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றபடி இருக்கவேண்டும் என்றுதான் அரசாங்கம் அந்த வகையில் முடிவெடுத்திருக்கிறது. ஹரிஜன நல இலாகாப் பள்ளிகளை, அந்த இலாகாவும், அரசாங்கப் பள்ளிகளை அரசாங்கமும்தான் நடத்தும். எட்டாவது ஸ்டாண்டர்டுக்கு மேல் புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் வைப்பதாக இருந்தால் கல்வி இலாகா நடத்தவேண்டுமென்று இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனிலே பாடசாலை இல்லை, அரசாங்கப் பாடசாலை இல்லை, வேறு வழியே இல்லை என்று சொன்னால்தான், அதுவும் டி.இ.ஓ. பார்த்துச் சொன்னால்தான் அதைக் கவனிக்கமுடியும்.

[திரு. பூ. கக்கன்] [22nd March 1966

அடுத்தபடியாக, சீட்டுக் குலுக்காமல் மாட்டுக் கடன்களைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் குலுக்காமல் செய்தால் ஒருவருக்கே கொடுத்தார்கள் என்று புகார்கள் வரும். ஆகவே, இப்பொழுது இருக்கிற முறையே நல்லது என்று நினைக்கிறேன். குறிப்பாக திரு. சம்பந்தம் அவர்கள் அதிகப்பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அரசாங்கம் நிதி நிலைமைக்குத் தக்கபடிதான் நிதி ஒதுக்கவேண்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வைத்தியநாதன் ரிப்போர்ட் பற்றிக் குறிப்பிட்டார்கள். பின் தங்கிய மக்களுக்கு, ஹரிஜன மக்களுக்கு உத்தியோகத் துறையில் எவ்வளவு தூரம் ஒத்தாசை உதவிகளைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய அரசாங்கம் முன் வரும்.

கனம் தியாகராஜபிள்ளை அவர்கள், வீடு கட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக வீட்டு மனைகளை அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். துரிதமாக வீட்டு மனைகளைக் கொடுப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி கலெக்டரிடமிருந்து குவார்ட்டர்லி ரிப்போர்ட் கேட்கிறோம். எங்காவது குறைவாக இருக்கிறது என்றால் அதிகமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மதிப்புக்குரிய கலியாணசுந்தரம் அவர்கள் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், மற்றச் சட்டங்கள் எல்லாம் அவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாகப் பாதகமான சட்டங்களாகத்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். உழைக்கக்கூடிய அந்த மக்களுக்கு நல்ல முறையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் சட்டங்கள் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் அரசாங்கம் தயங்குவதே இல்லை.

திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்கள் பேசும்போது வீடு கட்டுவதற்கு ஆயிரம் ரூபாய் போதாது என்று சொன்னார்கள். அதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். மூடப் பழக்க வழக்கங்கள் விரைவிலே போகாதா என்றார்கள். விரைவிலே போகாது, ஆயிரம் ஆண்டுகளானாலும் போகாது என்று நாம் பேசிக்கொண்டிருந்தால் அது சரியல்ல. எல்லோரும் சேர்ந்து அதைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்'.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்பதற்கேற்ப பிரயத்தனம் செய்தால் முடியாத காரியமல்ல. எல்லோரும் அதிகமாக ஈடுபாடுகொண்டு உழைத்தால் இந்தப் பாகுபாட்டை எல்லாம் ஒழித்து விடலாம்.

நில ஆர்ஜிதம் செய்வதற்கு அதிகாரிகளைக் கூடுதலாக நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். கலெக்டர் அவர்கள் பார்த்துக் கூடுதலாக தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், சர்வேயர்கள் தேவை என்று கேட்டால் அரசாங்கம் அதிலே அக்கறை எடுத்துக் கொள்ளும்.

22nd March 1966] [திரு. பூ. கக்கன்]

குடிதண்ணீரைக் கிணறுகளைப் பொதுவான கிணறுகளாக வெட்ட வேண்டும்; ஹரிஜனங்களுக்குத் தனி, மற்றவர்களுக்குத் தனி என்று வெட்டக்கூடாது என்று சொன்னார்கள். பொது இடங்களில் யாருக்கும் தண்ணீர் எடுக்க உரிமை இருக்கிறது. ஆகவே, பொதுக் கிணறுகளைப் பொதுவான இடத்தில் வெட்டி உதவிபுரிய தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

வடசேரி வாண்டையார் இருப்பு விடுதிகளில் இருக்கும் மாணவர்கள் மானியம் பெற சான்றிதழ் பெறுவதில் தலைமையாசிரியர்கள் இடையூறாக இருக்கிறார்கள்; அந்த விடுதிகளை அரசாங்கத்தின் சார்பாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அந்த விடுதிகளை இந்த வருஷம் எடுத்துக்கொள்ள தக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு இங்கு வந்திருக்கிற அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன். சில ஆசிரியர்களுடைய அபிப்பிராய பேதத்தினால் ஏழைக் குழந்தைகளுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது. அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் அந்த விடுதிகளை எடுத்துக்கொள்ள தக்க ஏற்பாடு செய்வோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வீடு கட்டுவதற்கான பணம் முழுவதையும் அரசாங்கம் கொடுக்க வேண்டும்; அவர்களிடத்தில் இருந்து 250 ரூபாய் வாங்கக்கூடாது என்று சொன்னார்கள். பூராவும் கொடுத்து விடுவதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் பலர் பயன் பெற முடியாமல் போகலாம். மேலும் அவர்களும் அந்தத் திட்டத்தை நல்ல முறையில் உணர வேண்டுமென்றால் ஒரு தொகை அவர்களே கொடுத்தால்தான் முடியும். எப்படிப் பஞ்சாயத்து யூனியன்களில் ரோடு போடுவது போன்றவற்றுக்கு அவர்களிடமிருந்தும் ஒரு தொகை வசூலிக்கப் படுகிறதோ அதே போன்றுதான் இதிலேயும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

ஹரிஜன மாணவர்களைப் பொறுத்தவரை மார்க்கைப் பாராது அவர்களைக் காலேஜில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது கூட மார்க்கைப் பார்ப்பதாகச் சொல்ல முடியாது.

மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது பக்கத்திலேயே நில ஆர்ஜிதம் செய்கிறார்கள். அப்படி ஏன் செய்கிறார்கள் என்று சொன்னார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நான் அப்படிச் சொல்லவில்லை.

கனம் திரு. பூ. கக்கன் : நீங்கள் அப்படித்தான் சொன்னீர்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அஃபிஷியல் காப்பி என்னிடத்தில் இருக்கிறது இதை வேண்டுமானாலும் பாருங்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் கொடுக்கிற சலுகைகளைப் பற்றிப் பிச்சைக் காசுகள் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அது பிச்சைக் காசாகத் தோன்றலாம். ஏழைகளுக்குப் பெரிய உபகாரமாகத் தெரியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஐந்நூற்று ஐம்பது ரூபாய் கொடுக்க வேண்டிய இடத்தில் 140 ரூபாய்தானே கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஏன் என்றுதான் கேட்டேன்.

கனம் திரு. பூ. கக்கன்: பிச்சைக் காசு என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை, காரணம் கேட்டால் சொல்லியிருக்கலாம். மூன்றாவது ஆண்டு இறுதிக் கட்டத்தில் எல்லா மாணவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும். மறுபடியும் 8 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது போன வருஷம் ஒதுக்கியதைக் காட்டிலும் இந்த வருஷம் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முதலில் பட்ஜெட்டில் குறைவாக ஒதுக்கினாலும் போகப் போக அதிகமாக அரசாங்கத்திடம் இருந்து வாங்கிச் செலவழிக்கப்படுகிறது. 1964-65-ல் ஒரிஜினல் பட்ஜெட் 55.80 லட்சம்; அடிஷனல் அலாட்மெண்ட் 14 லட்சம்; ஆக மொத்தம் 70 லட்சம். 1965-66-ல் ஒரிஜினல் பட்ஜெட் 64.80 லட்சம்; அடிஷனல் அலாட்மென்ட் 8 லட்சம். ஆகவே, இதிலே கொடுத்திருக்கும் தொகையேதான் இருக்கும் என்று நினைப்பது சரியல்ல.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: 1965-66-க்கு பாக்வேர்ட் க்ளாஸஸ்-க்கு எக்ஸ்பெண்டிச்சர் 72.80 லட்சமாகக் காட்டியிருக்கிறார்கள். ஃபைனல் எஸ்டிமேட் 5 சதவிகிதம் சேர்த்து அடுத்த ஆண்டிற்கு அதிகப்படியாக இருக்கவேண்டும். ஆனால், 51.52 லட்சம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஜாதி ஏழ்மையின் அடிப்படையில் ஸ்காலர்ஷிப்ஸ் கொடுத்து வந்தோம். மத்திய அரசாங்கம் பொறுத்தமட்டில் ஜாதி அடிப்படையில் கொடுப்பது நல்லதல்ல என்று சொன்னார்கள் நம் மாநிலம் பொறுத்த மட்டிலும் அல்ல, பாரத நாடு பூராவிற்கும் அதைக் கையாண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கொடுப்பதை நம் மாநிலத்தில் உள்ள பிற்பட்ட வகுப்பினருக்கு ஹரிஜன நல இலாகா மூலம் பொருளாதார அடிப்படையில் நிதிவசதிக்குத் தக்கவாறு யார் ஏழ்மையாக இருக்கிறார்கள் என்று பார்த்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களில் பின்தங்கியவர்களைப் பார்த்து, யார் ஏழைகளாக இருக்கிறார்கள் என்று பார்த்து கொடுத்து வருகிறோம். நீங்கள் கையாளும் கொள்கையை இங்கேயும் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஏழை மக்கள் பலர் படித்துப் பட்டம் பெற்று முன்வந்திருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு, அவர்களுக்கு மேலும் உதவி செய்ய அரசாங்கம் எண்ணுகிறது. திரு. சௌந்தரவேல் அவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பல லட்சம் ரூபாய் ஒதுக்கி வீடு கட்டிக் கொடுக்க உதவி செய்ய முன்வந்திருக்கிறோம். எந்தெந்த நகரசபைகளில் இருந்து வீடு கட்டிக் கொடுக்கப் பணம் கேட்கிறார்களோ அப்படிப் பணம் கொடுத்து ஒத்தாசை உதவி செய்ய, பாதி மான்யம், பாதி கடனுகக் கொடுத்து உதவி செய்திருக்

கிறது. கடனுகக் கேட்டாலும் கொடுத்துதவி, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

திரு. கொளந்தைசாமி கவுண்டர் அவர்கள் வெள்ளி மலை, பச்சை மலையில் இருக்கும் ஆதிவாசிகளுக்கு மனைக் கட்டுகள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆறு, ஏழு வகுப்புகள் படித்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஏழு வரை படித்த அவர்களுக்கு என்ன வேலை கொடுக்கமுடியும்? ஹாஸ்டல்களில் ஏதாவது ப்யூன் வேலை கொடுக்கலாம். அவர்கள் மீது மத்திய அரசாங்கமும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது, மாநில சர்க்காரும் அக்கறை எடுத்து அவர்களுக்கு உதவி அளிக்கிறது. அவர்கள் குழந்தைகளுக்குப் படிக்க வசதி, சாப்பாடு வசதி இவை செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். இந்த விளக்க அறிக்கையைப் பார்த்தாலே தெரியும். அவர்களுக்குப் பல வீடுகள் கட்டவேண்டுமென்று சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. திரு. சுப்பையா அவர்கள், தஞ்சை ஜில்லாவில் 75 ஏக்கர்கள்தான் மனைக்கட்டுக்காக எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள், தஞ்சாவூர் நெல் களஞ்சியம் அங்கு நன்செய்தான் ஜாஸ்தி. ஆகவே அதிகமாக எடுக்கமுடியாது. நன்செய் நிலங்களைக்கூட எடுத்து வீடு கட்டிக் கொடுத்து வருகிறோம். உத்தியோகத்தில் 20 சதவிகிதம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். பாப்புலேஷனுக்குத் தக்கபடி கொடுத்திருக்கிறோம். 20 சதவிகிதம் உயர்த்திக் கொடுப்பது என்பது இயலாத காரியம். திருமதி பொன்னம்மாள் அவர்கள் மாணவிகளுக்காக சர்க்கார் சொந்தக் கட்டடம் கட்டவேண்டுமென்று சொன்னார்கள. மனைக் கட்டுகள் ஜாரி செய்து கொடுப்பது துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நகர்சுத்தித் தொழிலாளர்கள்பற்றியும் சொன்னார்கள். நிதி நிலைமைக்குத் தக்கபடி எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அந்த அளவு உதவி செய்ய சர்க்கார் முன்வரும்.

இன்னும் ஐந்து நிமிடங்கள்தான் இருக்கிறது. திருவாளர்கள் துரைபாண்டியன் அவர்கள், நடராஜன் அவர்கள், தர்மலிங்கம் அவர்கள், மாதா கவுடர் அவர்கள், நஞ்சுண்ட ராவ் அவர்கள், ஜயராஜ் அவர்கள், மாணிக்கம் அவர்கள், சின்னையன் அவர்கள், முருகையன் அவர்கள், முத்துலிங்கம் அவர்கள், திருமதி அனந்த நாயகி அவர்கள் இவர்கள் எல்லாம் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து எந்தக் கருத்துக்கள் நன்றாக இருக்கிறதோ, எதைச் செய்ய முடியுமோ அதைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வரும். திருமதி அனந்த நாயகி அவர்கள் பேசும்போது 10 கோடி வாங்கவேண்டும், அதிகமாக வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். மனுக்களில் 40 சதவிகிதத்திற்காவது ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், பின்தங்கிய மாணவர்களுக்கு எவ்வளவு தூரம் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பின்தங்கிய வகுப்பு மக்கள் அறிவார்கள். ஸ்காலர்ஷிப் கொடுப்பது

இந்த ஆண்டு கொடுப்பதைவிட அடுத்த ஆண்டு ஜாஸ்தியாக வரும். கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு மேல் இப்போது அவர்களுக்கு உதவி கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

திரு. ஏழுமலை அவர்கள் பட்டா துரிதமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். எங்களால் இயன்ற மட்டும் எவ்வளவு தூரம் துரிதப்படுத்த முடியுமோ அது செய்யப் படும். திரு. ராசாங்கம் அவர்கள் ஒதுக்கப்பட்ட பணம் குறைவு என்று சொன்னார்கள். ஆர்ஜிதம் செய்வதில் ஒரு சிலர் நீதி மன்றத் திற்கு போய் விடுகிறார்கள் என்றும் அதனால் தாமதம் ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். ஜனநாயகத்தில் நீதி மன்றத்திற்குப் போகக் கூடாது என்று தடுக்க முடியாது. எங்கெங்கு சமரசம் செய்யமுடியுமோ அதைச் செய்கிறோம். சீக்கிரம் வாதாடி நம் உரிமையைப் பெற முயற்சித்து, அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய் வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார் முன்வரும். ஸ்காலர்ஷிப், நில ஆர்ஜிதம் செய்வது இவை துரிதப்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதைச் செய்துதான் வருகிறோம். திரு. நல்லசிவம் அவர்கள் ஐந்து ஏக்கர்கள் நிலம் உள்ளவர்களின் நிலங்களை எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். 2½ ஏக்கர் களுக்குள் இருந்தால் தொடுவதில்லை. புறம்போக்கு, புன்செய், அது இல்லாவிட்டால் நன்செய் போன்றவை, சொற்ப நிலம் உடை யவர்களிடம் இருந்து நிலத்தை அரசாங்கம் எடுக்காது. கூட்டுறவு முறையில் வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வரும். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மனமாற்றம், ஜாதி இந்துக்கள் பிராயச்சித்தம் செய்வது இவற்றில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள்.
2-30 p.m. அரசியல் சட்டங்கள் திருத்தப்படவேண்டுமென்றால், அவ்வாறு திருத்துவதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். கனம் அங்கத்தினர் திரு. ராசாங்கம் அவர்களும் இதே கருத்தைத்தான் வெட்டுப் பிரேரணை யில் சொல்லியிருக்கிறார்கள். சலுகை கொடுக்கின்ற விஷயத்தில் அரசியல் சட்டத்தில் ஷெட்யூல் வகுப்பினர் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அவர்களுக்கு இடவசதி, பிற சலுகைகள் இவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரை, உத்தியோகச் சலுகை போன்ற ஒரு சில சலுகைகள் தவிர மாகாண அரசாங்கம் கொடுக்கும் எல்லா விதமான உதவிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டப்படி என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட முடியுமோ அவற்றைக் கொடுத்து வருகிறார்கள். மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் மதம் மாறியவர்கள் உயர்ந்துவிட்டார்கள் என்று அரசாங்கம் நினைக்கக்கூடாது, அவர்களுக்கும் இந்த சலுகைகளை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். மதம் மாறியவர்கள் கிறிஸ்தவர் என்று ஆகிவிட்டால், சில குறிப்பிட்ட சலுகைகள் இல்லாமல் ஆகிவிடுகிறது, கிறிஸ்தவர்கள் என்று இருந்தாலும் அவர்களுக்கும் சட்டப்படி என்னென்ன சலுகைகள் உண்டோ அவையெல்லாம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் கிறிஸ்தவர்கள்

என்றோ கிறிஸ்தவர்கள் அல்லாதார் என்றோ பாகுபாடு காட்ட வில்லை. அவர்கள் ஏதோ கிறிஸ்தவர்களுடைய ஆதரவைப் பெறுவ தற்காக இப்படிச் சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை. இந்த மாநில சர்க்காரைப் பொறுத்து யாராக இருந்தாலும் இந்த அரசாங்கம் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அரசாங்க விதிகளுக்கு உட்பட்டுத்தான் சலுகைகளைக் கொடுத்துக் கொண் டிருக்கிறது. மத்திய சர்க்கார் சட்டங்களுக்குட்பட்டுச் சில சலுகைகளைக் கொடுத்து உதவுகிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாநில சர்க்கார் கொடுப்பது போலவே எல்லாவிதமான சலுகைகளையும் மத்திய சர்க்காரும் கொடுக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்தக்கூடாதா?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரைப் பொறுத்தளவில் சில சட்டங்கள் இருக்கின்றன, அவற்றை மாற்றவேண்டுமென்றால் பாராளு மன்றத்தில் இருக்கிறவர்கள்தான். செய்யவேண்டும். நாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, திரு. ராசாங்கம் அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள் கிறேன்.

திரு. மு. கருணாநிதி : உதவிச் சம்பளம் பெறுவதற்கும், உத்தியோகம் பெறுவதற்கும் மனுக்கள் எழுதுகின்ற நேரத்தில், பின்தங்கிய வகுப்பினர், அரிஜன வகுப்பினர், ஷெட்யூல்ட் காஸ்ட் என்று மட்டும் எழுதினால் போதாது, பள்ளர், பறையர், கள்ளர் என்றெல்லாம் தனியாக எழுதவேண்டும் என்று வற்புறுத்தப்படு கிறது. ஏதோ புலவர் கோவிந்தன் அவர்கள் 'பறையர்' என்று சொல்லிவிட்டதாக அமைச்சர் அவர்கள் மிகவும் வருத்தமடைந் தார்கள். அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அளவுக்கு அவர்கள் சொல்லவில்லை. "பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை' என்று பாரதியார் பாட்டு இருக்கிறது. அதோடு "மெட்ராஸ் சர்வீஸ் மான்யுவல்" என்கின்ற புத்தகத்தில் கூட "சக்கிலியன், பள்ளன், பறையன்" என்று 'ர்' என்ற எழுத் துக் கூட இல்லாமல் 'ன்' என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எலக்ஷன் விதிகளிலே குறிப்பிட்டுக் காட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் தாங்களும் ஹரிஜனங்கள் என்று ஏமாற்றுதல் நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் இது போடப்பட்டிருக்கிறது. ஜாதி ஒழிய வேண்டும் என்றுதான் நாம் எல்லோரும் பாடுபட்டுக்கொண்டிருக் கிறோம். இருந்தாலும், இந்த நேரத்தில் மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் இதைச் சொல்லியிருக்கவேண்டியதில்லை என்பதைத்தான் நான் சொன்னேன்.

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,30,15,500 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Thursday, the 24th March 1966.

2-35 p.m. The House then adjourned.

IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 172. *Notification issued with G.O. Ms. No. 237, Revenue, dated the 3rd February 1966, regarding the cancellation of inam estates Embakkottai in Nattani and Embakkottai in Neikuppai groups of Arantangi taluk, Thanjavur district from the Schedule to the notification. [Laid on the Table of the House under section 73 (5) of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).]*

B. Reports, notifications and other papers.

† 66. *Speech by Minister for Public Health on Demand for Medical Grants, 1966-67 (English and Tamil).*

† 67. *Policy note on Special Water-supply and Drainage Schemes)English and Tamil).*

* Laid on the table of the House on 21st March 1966.

† Despatched to Members on 19th March 1966.

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 377 at page 362.]

(*a*) Yes.

(*b*) (i) *Madras to Tirupathi* :

Via—Gumudipoondi, Tada, Kalahasti and Renigunta :

(ii) *Madras to Tirupathi* :

Via—Tiruvallore, Tiruttani, Puttur and Renigunta;

(iii) *Madras to Ramanathapuram* :

Via—Tambaram, Chingleput, Madurantakam, Tindivanam, Villupuram, Madapet, Panruti, Cuddalore, Chidambaram, Mayuram, Tiruvarur, Mannargudi,Pattukkottai, Arantangi, Karaikudi, Devakottai, R. S. Mangalam and Devipattinam;

(iv) *Madras to Krishnagiri* :

Via—Tambaram, Kancheepuram, Tiruvathipuram, Arni, Polur, Chengam, Uthangarai and Mathur;

(v) Madras to Vellore and Madras to Tindivanam as holiday specials.

(*c*) Proposals for opening the following routes are under consideration :—

(1) *Madras to Krishnagiri* :

Via—Sriperumbudur, Sunkuvarchatram, Kaveripakkam, Vellore, Ambur and Natrampalli; and

(2) *Madras to Neyveli* :

Via—Tambaram, Chingleput, Madurantakam, Chunampet, Merkanam, Pondicherry and Cuddalore.

(அ) ஆம்.

(இ) (1) **சென்னை—திருப்பதி:**

கும்முடிப்பூண்டி, தடா, காளஹஸ்தி, ரேணிகுண்டா வழியாக.

(2) **சென்னை—திருப்பதி:**

திருவள்ளூர், திருத்தணி, புத்தூர், ரேணிகுண்டா வழியாக.

(3) **சென்னை—இராமநாதபுரம்:**

தாம்பரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம், மடப்பட்டு, பண்ருட்டி, கடலூர், சிதம்பரம், மாயூரம், திருவாரூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, தேவக்கோட்டை, ஆர். எஸ். மங்களம், தேவிப்பட்டினம் வழியாக.

(4) **சென்னை—கிருஷ்ணகிரி:**

தாம்பரம், காஞ்சிபுரம், திருவத்திபுரம், ஆரணி, போளூர், செங்கம், ஊத்தங்கரை, மாத்தூர் வழியாக.

(5) விடுமுறை நாட்களில் சென்னையிலிருந்து வேலூருக்கும், சென்னையிலிருந்து திண்டிவனத்திற்கும் தனி பஸ்கள் விடப்பட்டன.

[22nd March 1966

(உ) கீழ்க்கண்ட வழிகளில் பஸ்களைவிடும் செயற் குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

(1) **சென்னை—கிருஷ்ணகிரி:**

ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம், காவேரிப்பாக்கம், வேலூர், ஆம்பூர், நாட்ராம்பள்ளி வழியாக.

(2) **சென்னை—நெய்வேலி:**

தாம்பரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், சூணாம்பட்டு, மரக்காணம், புதுச்சேரி, கடலூர் வழியாக.

APPENDIX II.

[*Vide* answer to starred question No. 381 at page 367.]

A.—In March 1950, the Government sanctioned a subsidy of Rs. 1,39,600, being half the expenditure incurred by M/s Agricultural Farm, Limited, Tirunelveli, for having reclaimed the lands measuring 1961 acres in Ramayyanpatti, Pudugramam and Killikulam villages, subject to the following conditions :—

(i) that the farms were continued to be maintained and cultivated every year to the satisfaction of the Director of Agriculture ;

(ii) that only food crops were raised in the land ;

(iii) that the expected additional quantity of foodgrains was actually realised and given to the Government procuring agency ;

(iv) that the audited accounts of the farm were submitted to Government through the Director of Agriculture every year with a statement of area cultivated, crops raised and the quantity of foodgrains realised and to such other conditions as might be imposed by the Director of Agriculture.

(v) that the company shall, at all times, allow the Director of Agriculture or Collector, Tirunelveli or any other officer authorised to inspect the farm and to peruse accounts;

(vi) that, if the firm had failed to abide by any of the conditions, the amount of subsidy granted shall be liable to summary recovery with interest and costs as arrears of land revenue.

However the condition (ii) above was amended subsequently according to which non-food crops could also be grown.

2. A cropping programme was drawn up for each year up to 1954–55. The progress subsequent to 1954–55 was poor. It was attributed to seasonal conditions and lack of irrigational facilities due to lack of supply of water in the wells. The Government directed the issue of fresh notice, directing the firm to bring under cultivation, the entire area according to the scheme drawn up by the Director of Agriculture and that the subsidy should be recovered, if the firm failed to carry out the instructions. The

22nd March 1966]

firm represented in September 1958 for expunging the conditions of grant. In October 1958, the Government in consultation with the Government Pleader instructed the Director of Agriculture to take steps to recover the amount from the firm in consultation with the Collector of Tirunelveli. The firm volunteered to surrender lands, measuring about 560 acres in Killikulam village in lieu of the subsidy to the Government. The Firm subsequently offered the entire area of 712·84 acres in that village. The Collector valued the lands at Rs. 1,52,307. As the financial position of the company was such that it was impossible for it to repay the subsidy, it was recommended to the Government that the offer of the firm might be accepted. The Government accepted the offer.

3. Out of the extent of 712·84 acres of lands surrendered by the Agricultural Farms, Limited, Tirunelveli, an extent of 258·96 acres was allotted to the Agricultural Department for opening a State Seed Farm. The question of placing the balance area at the disposal of the proposed Land Development Corporation of the Government of India is under consideration.

திருநெல்வேலியிலுள்ள மெசர்ஸ் வேளாண்மைப் பண்ணை லிமிடெட், ராமையன்பட்டி, புதுக் கிராமம், கிள்ளிக்குளம் கிராமங்களில் 1961 ஏக்கரா பரப்புள்ள நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்வதற்கான செலவில் ஒரு பாதியை, அதாவது 1,39,600 ரூபாயை அரசாங்கம் 1950-ம் ஆண்டு மார்ச் மாதம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகையாக வழங்கியது, அந்த நிபந்தனைகளாவன :—

(i) வேளாண்மைத் துறை நெறியாளருக்குத் திருப்தி அளிக்கும் வகையில் இப் பண்ணைகள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நிர்வகிக்கப் பட்டும், சாகுபடி செய்யப்பட்டும் வரவேண்டும்.

(ii) இந் நிலங்களில உணவுப் பயிர்கள் மட்டுமே விளைவிக்கப்பட வேண்டும்.

(iii) எதிர்பார்த்த அளவு உபரி தானிய விளைச்சலைப் பெற்று அதனை அரசாங்கக் கொள்முதல் அதிகாரிகளிடம் வழங்க வேண்டும்.

(iv) சாகுபடி செய்யப்பட்ட பரப்பு, விளைவிக்கப்பட்ட பயிர்கள், விளைந்த தானியங்களின் அளவு, இவையடங்கிய விவர அறிக்கை ஒன்றுடன், இப் பண்ணையில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் வேளாண்மைத் துறை நெறியாளர் மூலம் அரசாங்கத்துக்கு ஒவ்வோர் ஆண்டும் அனுப்பப்பட வேண்டும். மற்றும் வேளாண்மைத் துறை நெறியாளர் விதிக்கின்ற மற்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் இந்த அறிக்கையைத் தயாரிக்க வேண்டும்.

(v) வேளாண்மைத் துறை நெறியாளர், திருநெல்வேலி கலெக்டர் அல்லது அனுமதி பெற்ற இன்னோர் அதிகாரி இந்தப் பண்ணையை மேற்பார்வையிடவும், கணக்குகளைப் பார்வையிடவும் இக் கம்பெனி எல்லா நேரங்களிலும் அனுமதிக்க வேண்டும்.

(vi) கம்பெனி இந்த நிபந்தனைகளில் எதையாவது பின்பற்றத் தவறினால், அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள உதவித் தொகை, அதற்குரிய வட்டி, செலவு இவற்றுடன் சேர்த்து நில வருவாய் நிலுவையைப் போலவே சுருக்க வகையில் வசூலிக்கப்படுவதற்கு உட்படும். என்றாலும், மேற்சொன்ன (ii) நிபந்தனை பின்னர்த் திருத்தப்பட்டது, அதன்படி உணவு தானியப் பயிர்களல்லாத மற்றப் பயிர்களையும் பயிரிடலாம்.

[22nd March 1966

2. 1954–55 வரை ஒவ்வோர் ஆண்டும் பயிர் செய்யவேண்டிய பயிர்களின் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. 1954–55-க்குப் பிறகு முன்னேற்றம் அவ்வளவாக இல்லை. பருவ நிலைமைகளும் கிணறுகளில் போதுமான அளவு தண்ணீர்ப் பாசன வசதிக்குக் கிடைக்காததும் இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. வேளாண்மைத் துறை நெறியாளர் வகுத்த திட்டப்படி இப்பகுதி முழுவதையும் சாகுபடியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்றும், கம்பெனி இந்த உத்தரவை நிறைவேற்றத் தவறினால் உதவித் தொகையை வசூலித்துவிட வேண்டுமென்றும் உத்தரவிட்டு அரசாங்கம் புதிய அறிக்கையொன்றை வெளியிடும்படி ஆணை பிறப்பித்தது. மானிய நிபந்தனைகளை நீக்கும்படி இக்கம்பெனி 1958–ம் ஆண்டு, செப்டம்பரில் முறையிட்டது. 1958, அக்டோபரில் அரசாங்க வக்கீலைக் கலந்து அரசாங்கம் வேளாண்மைத் துறை நெறியாளர், திருநெல்வேலி கலெக்டருடன் கலந்து ஆலோசித்து கம்பெனியிடமிருந்து சேரவேண்டிய தொகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி உத்தரவிட்டது. உதவித் தொகைக்குப் பதிலாக, கிள்ளிக்குளம் கிராமத்தில் சுமார் 560 எக்கரா பரப்புள்ள நிலத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க இக் கம்பெனி தானாகவே முன் வந்தது. பின்னர் இந்தக் கிராமத்திலுள்ள 712·84 எக்கர் நிலம் முழுவதையும் அரசாங்கத்திற்கு வழங்க முன்வந்தது. கலெக்டர் இந் நிலங்கள் 1,52,307 ரூபாய் மதிப்புள்ளவையென்று தெரிவித்துள்ளார். கம்பெனியின், உதவித் தொகையைத் திருப்பித் தரும் நிலையில் கம்பெனியின் பொருளாதார நிலை இல்லாததால், கம்பெனியின் விருப்பத்தை ஏற்கலாமென்று அரசாங்கத்திற்குப் பரிவுரை வழங்கப்பட்டது. அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டது.

3. திருநெல்வேலி, வேளாண்மைப் பண்ணை லிமிடெட் வழங்கிய 712·84 எக்கரா மொத்த நிலப் பரப்பில் 258·96 எக்கரா நிலம் அரசாங்க விதைப் பண்ணை ஒன்றைத் துவங்குவதற்கு அது வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிலத்தை இந்திய அரசாங்கம் நிறுவவிருக்கும் நில அபிவிருத்தி கார்ப்பொரேஷன் பொறுப்பில் விடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 24th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மோட்டார் வாகனங்கள் எடைபோடுதல்

** 392 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சென்னையில் போலீஸ் கமிஷனர் ஆபிசில் (புதிய) லாரி, மோட்டார் கார், பஸ், டிராக்டர், ஆட்டோ ரிக்ஷா ஆகியவைகள் 1965 ஜனவரி மாதம் முதல் இன்று வரையில் எடைபோட வந்தவை எத்தனை?

(இ) இதனால் அரசாங்கத்துக்கு எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது ?

(உ) விவசாயத்திற்கு உபயோகிக்கப்படும் டிராக்டர் அதைச் சார்ந்தவைகளுக்கும் விலக்கு அளிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Number of vehicles registered in Madras City during the period from 1st January 1965 to 21st January 1966—

Motor cycles and Scooters	2,051
Motor-cars	3,052
Lorries	438
Buses	283
Tractors	64
Trailers	54

(*b*) Rs. 1,23,558.

(*c*) Tractors used solely for agricultural purposes and also those that are used for transporting the agricultural produce of the owners are exempt from payment of motor vehicle tax but not from registration fees.

மோட்டார் வாகன வரி வருவாய்

** 393 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) மோட்டார் வாகன வரிச் சட்டத்தின் வரி வருவாயில் தங்களுக்கு பங்கு தரவேண்டுமென பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் மூலமாக கேட்டுக்கொண்டனவா ?

(இ) ஆமெனில், அதற்கு சர்க்கார் அளித்த பதிலென்ன ?

[24th March 1966

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) Yes. The Tiruchirappalli North District Development Council at its meeting held on 18—10—1965 passed a resolution in this regard, and the Collector of Tiruchirappalli was informed that the recommendation of the District Development Council cannot be accepted.

எச்சரிப்பு இசைக் கருவி

* 394 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

9—8—1965-ல் கேள்வி எண் 129-க்கு சட்டசபையில் அளித்த பதிலையொட்டி " singing Media முறை சென்னையில் பரிட்சார்த்தமாக நடத்தப்பட்டு வருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆம். மௌண்ட் ரோடில், எல்டாம்ஸ் சாலை அருகில், ஜெமினிக்கும் எல்டாம்ஸ் சாலை சதுக்கத்திற்கும் இடையே ஒரு பர்லாங்கு வரையில் எச்சரிப்பு ஒலிக் கருவி அமைக்கப்பட்டுள்ளது.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த இசைக் கருவி வைத்திருப்பதன் விளைவாக என்ன பலன் கிடைத்திருக்கிறது ? அதைத் தொடர்ந்து எல்லா இடங்களிலும் அமல் நடத்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த 'ஸிங்கிங் மீடியன்' இப்போது பரீட்சார்த்தமாக வைத்திருக்கிறோம். சாதாரணமாக வேகமாகப் போனால்தான் அது ஒலிக்கும். ஆனால் நம் நகரில் அவ்வளவு வேகமாகப் போக முடியவில்லை. ஆகையால் அது ஒலிக்கும் ஒலியும் குறைவாகத்தான் இருக்கிறது. அவசரப்பட்டு முடிவு செய்யவேண்டாம் என்று அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

Prevention of damage to crops

* 395 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any scheme to produce sufficient number of spraying units fitted with engines, for prevention of damage to crops from pests, either in the private or public sector; and

(b) if so, the details thereof ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No Sir.

(b) Does not arise.

'Kisan Front Festival

* 396 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have proposed to observe the "Pongal Day" falling on January 14 as 'Kisan Front Festival' all over the State; and

24th March 1966]

(b) if so, the object thereof and the various activities proposed to be conducted, in connection therewith ?

கனம் திரு. பூ. கக்கன் : 1966, ஜனவரி, 14-ந் தேதி பொங்கல் நாளன்று உழவர் திருநாளை "ஏர்முனை விழா" என்ற பெயரில் இம்மாநிலம் முழுவதிலும் கொண்டாடும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து, நமது பிரதம மந்திரி ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி திடீரென்று காலமானதால் இவ்விழா ரத்து செய்யப்பட்டது. வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தைச் சிறப்பாக வலியுறுத்துவதே இவ்விழாவின் நோக்கமாகும். ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், வேளாண்மைப் பொருட்காட்சிகள், திரைப்படக் காட்சிகள், கிராமிய நடனங்கள், வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்தன.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த ஆண்டிலிருந்து உழவர் திருநாள் கொண்டாடவேண்டுமென்று அரசாங்கம் விரும்பியிருக்கிறது. ஆனால் பல்லாண்டு காலமாகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த பொங்கல் நாட்களை உழவர் திருநாளாகக் கொண்டாடி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அந்தக் கட்சிக்கும் உதவிகள் ஒத்தாசைகள் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் கட்சி ஒன்றும் இல்லை. பொங்கல் பண்டிகை வேறு, ஏர் முனை விழா வேறு. ஏர் முனை விழா கொண்டாடுவது அரசாங்கத்தின் நோக்கம். அது வேறு, இது வேறு.

திரு. செ. மாதவன் : சார், உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு உற்சாகமூட்ட இப்படிப்பட்ட விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அப்படியானால் இதற்குத் தனித் திட்டம் தீட்டி பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : முக்கியமாக இந்த விழா கொண்டாடுவது எதற்காக என்று மன்றத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

1. Utilization of all available land for cultiation.

2. Increasing the number of crops raised on the land.

3. Increasing the yield of the land through improved cultivation.

4. Stepping up production of local manures (compost and green manure).

5. Cultivation of subsidiary food crops such as potato, tapioca and also vegetables.

6. Production of subsidiary food like milk, meat, eggs and fish.

[24th March 1966

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத் தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முனிசிபாலிட்டியும் 75 ரூபாய் இந்த விழாவுக்காகச் செலவு செய்ய லாம் என்றும், ஒவ்வொரு பஞ்சாயத்தும் 25 ரூபாய் செலவு செய்ய லாம் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : அடுத்த ஆண்டிலிருந்து உழவர் திருநாள் இலாகா சார்பில் கொண்டாடப்படும் என்று எதிர்பார்க் கிறோம். அப்படி கொண்டாடப்படுமானால், உழவர் திருநாள் கிராமப் பகுதிகளில் வெகு விமரிசையாக கொண்டாடப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கிராமப் பகுதிகளில் மட்டுமல்ல, முனிசிபாலிடி, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து போர்டு எல்லை களுக்குள்ளும் கொண்டாடவேண்டும் என்பது அரசாங்கத்தி னுடைய அவா ஆகும். இது இன்று நேற்று அல்ல, பல ஆண்டு களாக தமிழ் நாட்டுப் பெருமக்களால் கொண்டாடப்படும் விழா இது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொண்டாடுகிறார்கள் என்பதற்காக இப்பொழுது அரசாங்கம் இதைக் கொண்டாட முன் வருகிறது என்று சொல்லுவது நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது முனிசிபல் நகரமாக இருக்கிற இடங்களில் உழவர் திருநாள் கொண்டாடப்படும் என்று சொன்னார்கள். (கனம் சபாநாயகர் : பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள்ளும் கொண்டாடப் படும் என்று மந்திரி அவர்கள் சொன்னார்). பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள்ளும் கொண்டாடப்படும் என்று சொன்னார்கள். மிகவும் நன்றி. கழக சார்பில் எல்லா கிளைக் கழகங்களும் இதில் பங்கு கொண்டு கிராமப்புறங்களில் கொண்டாடிக் கொண்டு வருகிறோம். அதே போல காங்கிரஸ் கட்சி சார்பிலும் கொண்டாடவேண்டும் என்று சொல்லி, எல்லா கட்சிகளும் இந்த விழாவை பெரிய திருநாளாக கொண்டாடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது கட்சி விஷயம் அல்ல. இதில் கட்சியை புகுத்தவேண்டாம். அரசாங்கத்தினுடைய எண்ணம் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம பஞ்சாயத்து அக்கறை எடுத்துக்கொண்டு இந்த விழாவை கொண்டாடவேண்டும் என்பது தான்.

திரு. எம். எஸ். மணி : இந்த உழவர் திருநாளை ஏர்முனை விழா திருநாள் என்று பெயர் மாற்ற காரணம் என்ன ? ஏர்முனை விழா திருச்சி மாவட்டத்தில் பூராவும் கொண்டாடப்பட்டது. திருச்சி நகரத்தில் நடந்த காய்கறி கண்காட்சியில் அதிகமாக நல்ல விளைந்த காய்கறிகளைக் கொண்டு வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட காய் கறிகள் வெளியில் கிடைப்பதில்லை என்று மக்கள் புகார் கூறு கிறார்கள். இயற்கையாக விளைந்த காய்கறிகள் அங்கு வைக்கப் பட்டிருந்தத

24th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : நன்றாக விளைந்த காய்கறிகளை மட்டும் அங்கு கொண்டு வைத்தார்கள் என்பது இல்லை. அவர்கள் விசேஷ மாக காய்கறி உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். வீணாக தரிசாகக் கிடக்கும் நிலங்களில் காய்கறி உற்பத்தி செய்வதற்கு அங்கு இருக்கும் பஞ்சாயத்து யூனியன் சிறப்பாக பணி புரிந்து வருகிறார்கள்.

திரு. ப. உ. சண்முகம் : ஜனவரி 14-ம் தேதி அறுவடை நாள்; ஆகவே, அறுவடை நாள் கொண்டாடாமல் ஏர்முனை விழா கொண் டாடுவதில் என்ன பொருள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏர் இல்லாமல் அறுவடை கிடையாது. அதைத்தான் விளக்குகிறது அது.

திரு. ப. உ. சண்முகம் : பொன் ஏர் கட்டுதல் என்று தமிழ் நாட்டில் ஒரு வழக்கம் வைத்திருக்கிறார்கள். ஏர்முனை விழா என்பதை ஏன் அறுவடை திருவிழா என்று மாற்றக்கூடாது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதோ ஒரு பெயர் வைத்தோம், அதை மாற்றுவதற்கில்லை.

திரு. செ. மாதவன் : ஏர்முனை விழாவோடு சேர்ந்து தரிசு நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்ததாகக் கூறினார்கள். அதற்கெல்லாம் ஒரு நிலப்படை அமைக்க அரசாங்கத்தினிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : தமிழகத்திலுள்ள விவசாயிகளெல்லாம் நிலப்படையைச் சேர்ந்தவர்கள்தான். நிலத்தை உழுது உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கமாகும்.

சமூக சேவகர்களின் சம்பளம்

***397 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நீலகிரி ஹரிஜன நல இலாகா மூலம் நடத்தும் கம்யூனிட்டி சென்டர்களில் வேலை செய்யும் சமூக சேவகர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறது ?

(இ) அவர்களின் சம்பளத்தை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) நிலையான சம்பளமாக மாதம் 100 ரூபாயும், நிலையான பயணப்படியாக மாதம் 10 ரூபாயும் அளிக்கப்படுகிறது.

[24th March 1966

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லாத் துறைகளிலும் இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கும், சிப்பந்திகளுக்கும், நாம் 'ஸ்கேல் ஆப் பே' நிர்ணயித்திருக்கும்பொழுது, இந்த ஹரிஜன நல இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு மாத்திரம் ஸ்கேல் ஆப் பே நிர்ணயிக்காமல் ஃபிக்ஸட் பே கொடுப்பது நல்லதா? அதை மறு பரிசீலனை செய்து, அவர்களுக்கும் ஸ்கேல் ஃஆப் பேஃ பிக்ஸ் பண்ணுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : இதில் மறுபரிசீலனை செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஐந்து மைல் சுற்றளவில் தான் இவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதை முன்னிட்டு அரசாங்கம் முன்பே பரிசீலனை செய்து இவர்களுக்கு ஃபிக்ஸட் பே கொடுத்தால் போதும் என்று ஏற்கனவே முடிவு செய்தது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவர்கள் என்னென்ன பணி செய்கிறார்கள்? அவர்களுடைய சேவைகளின் மூலம் என்னென்ன அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்தது உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அவ்வப்பொழுது முன்னேற்றத்தைப் பற்றி பரிசிலனை செய்யப்படுகிறது. குறிப்பாக தீண்டாமையை ஒழிக்கவேண்டியது இவர்களுடைய முக்கியமான பொறுப்பு. கிராமங்களில் சென்று எங்கெங்கு தீண்டாமை இருக்கிறதோ அதை ஒழிக்க பாடுபடவேண்டும், அரிசனங்களை ஓட்டலில் விடாமல் தடுத்தால் அதையெல்லாம் கவனிக்கவேண்டிய பொறுப்பு இவர்களுடையது. அதோடுகூட அரசாங்கம் செய்த சாதனைகளைப் பற்றியும் மக்களிடத்தில் சொல்லவேண்டும். அரசாங்கம் என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்ற விவரங்களை அரிசனங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப் பொறுப்பும் இவர்களுடையதுதான். ஏழைக் குழந்தைகளுக்கு அன்றாடம் கஞ்சி வார்ப்பது, பால் கொடுப்பது போன்ற பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வதும் இவர்கள் மூலம் செய்யப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி : இந்த சமூக சேவகர்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் ஏதாவது கோரிக்கை கொடுத்தார்களா? அமைச்சர் அவர்கள் அதைக் கவனிப்பதாக உறுதி கூறினார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அமைச்சரிடம் கொடுக்கவில்லை. அரிசன நல ஆலோசனைக் குழுவில் இது பரிசீலனை செய்யப்பட்டது. சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று சில டி.டபிள்யூ. ஓஸ். சொன்னார்கள். இருந்தாலும், அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து இப்பொழுது ஒன்றும் சம்பளத்தை உயர்த்துவதற்கில்லை என்று முடிவு செய்துவிட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தவர்கள் தான் இந்த உத்தியோகத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி படித்தவர்களுக்கு செகண்டரி பள்ளியில் படித்து

24th March 1966]

முடித்தவர்களுக்கு ரூ. 150 சம்பளம் கிடைக்கிறது. எஸ்.எஸ், எல்.ஸி. பாஸ் செய்தவர்களுக்கு 5 மைல் சுற்றளவுக்குள் வேலை செய்யவேண்டும் என்ற ஒரு காரணத்தைக் கொண்டு மட்டும் ரூ. 100 சம்பளம் கொடுப்பது சரிதானா?

கனம் திரு. பூ. கக்கன் : எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணினவர்கள் மட்டும் அல்ல, பாஸ் பண்ணாதவர்களையும் சமூக சேவையில் ஈடுபட்டிருக்கிறவர்களையும், இதில் ஆர்வம் காட்டுகிறவர்களையும் நியமித்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இவர்களுக்கு தகுதி, திறமை என்பது வெறும் படிப்பின் அடிப்படையில் மட்டுமல்ல, அரிசன முன்னேற்றத்தில், தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதில் இருக்கும் நம்பிக்கையையும் பொருத்ததா? இந்த வேலைக்கு அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டும் எடுக்கப்படுகிறார்களா? அல்லது, மேல் ஜாதியினரிடையே தீண்டாமையை ஒழிக்க வேண்டியது போன்றவைகளை பரப்பவேண்டிய அவசியம் இருக்கக் கூடிய காரணத்தினால், மேல் ஜாதியைச் சேர்ந்தவர்களும் இந்த வேலைக்கு நியமிக்கப்படுகிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : படிப்பை பார்த்து மட்டுமல்ல, அவர்களுடைய சேவை, திறமையையும் பார்த்துத்தான் அவர்களை நியமிக்கிறோம். குறிப்பாக, அரிசனங்கள் மட்டும் அல்ல, ஜாதி இந்துக்களைச் சேர்ந்தவர்களையும், அவர்கள் இதில் ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால், இந்தப் பணியில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தால், அப்படிப்பட்டவர்களையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. இராசாங்கம் : அரிசன முன்னேற்றத்தைப்பற்றி அதிகமாக பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லுவதும், தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபடுவதும், சிறு குழந்தைகளைப் பாது காப்பதும் ஆகிய காரியங்களில் இவர்கள் ஈடுபடுகிறார்கள், அவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி-யில் தேர்வு பெறாமல் இருந்தால்கூட அதைப்பற்றி கவலைப்படாமல், தேர்வு பெற்றவர்களுக்கு மற்ற இடங்களில் என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அந்த சம்பளத்தை இவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : மற்ற இடங்களில் கொடுக்கப்படும் சம்பளம் என்பது இல்லை. ஏற்கனவே இதை அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறது. அவர்கள் ஒரே இடத்தில் வேலை செய்பவர்கள். ஆகவே, அவர்களுக்கு ரூ. 10 ஃபிக்ஸட் படியும், ரூ. 100 சம்பளமும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. நா. இராசாங்கம் : அவர்கள் ஒரே இடத்தில் வேலை செய்பவர்கள் என்பது அல்ல. ஐந்து மைல் சுற்றளவில் நான்கு புறமும் சென்று வேலை செய்யவேண்டும். அவர்களுக்கு 'மன்த்லி [illegible]' இருக்கிறது. 10,12 கிராமங்களுக்குக்கூட அவர்கள் போ[illegible]

என்றால், அங்குள்ள அதிகாரிகள் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அலைச்சல் அதிகமாக இருக்கிறது. அதை உத்தேசித்தாவது அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அலைச்சல் அதிகம் இல்லை. ஐந்து மைல் சுற்றளவில் தான் வேலை செய்யவேண்டும். மாலையில் திரும்பி விடலாம். அதிகமாக அலைச்சல் ஒன்றுமில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த மாநிலம் முழுவதும் இருக்கக் கூடியவர்களுக்கு ஒரே மாதிரியாக சம்பளம் உயர்த்துவதற்கு உத்தேசம் இல்லை என்று சொல்லிவிட்டாலும், மலைப் பிரதேசத்தில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு ஹில் அலவன்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மலைப் பிரதேசத்தில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு ஹில் அலவன்ஸ் கொடுப்பது பற்றி இதுவரையில் பரிசீலனை செய்யப்படவில்லை. இனி பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நில ஆர்ஜித அதிகாரிகளுக்கு விசேஷப்படி

*398 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாகாவில் ஹரிஜனங்களுக்கு மனைக் கட்டுக்காக நில ஆர்ஜிதம் செய்ய நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத்துடன் விசேஷப்படி (Special Fees கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. எம். எஸ். மணி : விசேஷ படி கொடுக்காத காரணத்தினால் அவர்கள் தவறாக நடக்கிற நிலைமை ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : விசேஷ படி கொடுக்காத காரணத்தினால் தவறாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பதில்லை. அப்படி அவர்கள் தவறாக நடந்துகொண்டால் அது தப்பிதம். அரசாங்கத்தில் வேலை செய்கிறவர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், படி இவைகளை வைத்து சரியாக பணி செய்கிறார்கள் என்பதில்லை. விசேஷ படி கொடுக்காத காரணத்தினால் வேலைத் திறமையும், சேவையும் குறைந்து விடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : நில ஆர்ஜிதம் செய்யும் வேலை தாமதப்படுவதினால், அதிக நில ஆர்ஜித உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வெப்பொழுது தேவையாக இருக்கிறதோ அப்பொழுது அதிகாரிகள் தேவையாக இருப்பது பற்றி, தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சர்வேயர் அதிகமாக வேண்டும் என்று ஜில்லா கலெக்டர் அவர்கள் கேட்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அவ்வப்பொழுது கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள்

*399 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட ஹரிஜன நலக்கமிட்டி, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒதுக்கியுள்ள தொகையை குடியிருப்பு மனைகள் வாங்கிக்கொடுக்க அனுமதி கோரி தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு அனுப்பியதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இதைக் குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், ஆலோசனை எப்பொழுது முடியும்? கூடிய சீக்கிரம் அந்த வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றி, மனைக்கட்டு வழங்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மனைக் கட்டும் கொடுக்கிறார்கள். வீடும் கட்டிக் கொடுக்கிறார்கள். அன்றைக்கே, ஹரிஜன மானியத்தின் போதே, தெரிவித்தேன், வெகு சீக்கிரம் முடிவு எடுக்கப்படும். நில ஆர்ஜிதம் செய்வதில்தான் அதிக அக்கறை காட்டப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்த வீடு கட்டுவதற்கு ரூ. 250 கடனாகவும், ரூ. 750 உதவித் தொகையாகவும் கொடுக்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. ஆகவே, வேலை செய்கிற கண்ட்ராக்டர்கள் வேலையை எடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை உயர்த்த அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தொகை மலைப் பிரதேசங்களுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. கீழே இருக்கும் வேறு ஜில்லாக்களில் அப்படிச் செய்யவில்லை. ஏற்கனவே குறைவாக இருந்தது என்றுதான் இப்பொழுது அது ரூ. 1,000-க்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. இன்னும் உயர்த்த வேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்வதற்கு இப்பொழுது ஒன்றும் இல்லை.

திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் : சார், இந்த திட்டத்திலே, கட்டிய வீடுகள் நல்ல முறையிலே இல்லாததால் அவை இடிந்து விழுகின்றன. இப்பொழுது அகவிலையும் அதிகமாகி, சாமான்களின் விலை ஏறியிருப்பதால், நல்ல முறையிலே வீடுகள் கட்டுவதற்காக, மறுபரிசீலனை செய்து அந்தந்தத் தொகையைக் கூட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதற்காகத்தான் கூட்டுறவு முறையிலே கட்டுவதற்குக் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டு இருக்கிறது. இப்பொழுது இருக்கும் தொகை ரூ. 1,000. அதை மேலே கூட்டுவதாக இப்பொழுது எந்த முடிவும் செய்வதற்கில்லை.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, இந்த மனைக் கட்டுகள் வழங்குவதில், ஊருக்குப் புறம்பாக கொடுப்பதற்குப் பதிலாக, உயர் ஜாதிக்காரர்கள் வசிக்கும் இடத்தின் மத்தியில் மனைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய முயற்சித்தால், ஜாதி ஒழிப்புக்கும், தீண்டாமை ஒழிப்புக்கும் ஆக்கம் கொடுத்ததாக இருக்கும் என்பதை அரசாங்கம் உணருகிறதா ? இனிமேலாவது நில ஆர்ஜிதம் செய்கிறபோது, உயர் ஜாதிக்காரர்கள், இந்துக்கள் வசிக்கும் இடத்தின் மத்தியில் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தலைவர் அவர்களே, 'உயர் ஜாதி இந்துக்கள் மத்தியில்' என்றால், கனம் அங்கத்தினர் மந்தைச் சாவடியைச் சொல்லுகிறாரா அல்லது அவர்கள் வசிக்கும் தெருவைச் சொல்லுகிறாரா என்று தெரியவில்லை. புறம்போக்கு நிலம் இருந்தால், ஊரின் பக்கத்தில், ஜாதி இந்துக்கள் இருக்கும் பக்கமாக இருந்தாலும் அது ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அதிலே ஒன்றும் வித்தியாசம் காட்டுவது இல்லை.

திரு. மு. பொ. வடிவேலு : சார், தற்சமயம் கட்டும் வீடுகளின் சுவர் ஒரு அடிதான் வைக்கப்படுகிறது. அதனால்தான் அது விழுந்து விடுகிறது. அதை ஒன்றரை அடியாக அதிகப்படுத்த அரசாங்கம் உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : பணத்தை அதிகப்படுத்தினால், சுவரையும் விரிவாக்கலாம்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்கள் சொல்கிறபடி, தொகையை அதிகரிக்க வேண்டும். அதற்காகத்தான் இப்பொழுது கூட்டுறவு முறையில் செய்தால் குறைகள் ஏற்படாது என்று சர்க்கார் யோசித்து வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்பொழுது நாம் மூலக் கேள்வியை விட்டு வெகு தூரம் போய்விட்டோம் என்று நினைக்கிறேன். கேள்வி தொகையில் வீடு கட்ட ஒதுக்கப்பட்ட பணத்தை

மனைக்கட்டு வாங்கி வழங்க செலவழிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு வந்தது பற்றியது. அந்தத் தொகை அப்படி செலவழிக்கப்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரம், தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை. வீடு கட்டினாலும், கட்டாவிட்டாலும், மனைக் கட்டுக்கள் கொடுக்க எவ்வளவு தூரம் முடியுமோ அந்த வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவிப்பணம்

*400 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-ல் திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லூரிகளில் புகுமுக (P.U.C.) வகுப்பு படிக்கும் பின்தங்கிய (Bc) வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்துள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு உதவித்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1,019.

(இ) 566.

திரு. எம். எஸ். மணி : சார், இதிலே பல பேர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. கொடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நம்முடைய நிதி நிலைக்குத் தக்கபடி கொடுக்கப்படுகிறது. அதிகப்படியாக, எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. முடிந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது.

திரு. செ. மாதவன் : சார், தனிப்பட்ட கல்லூரி நிறுவனங்களிலிருந்து மனுக்கள் அனுப்பப்பட காலதாமதம் ஏற்படுகிறது. சிலருடைய மனுக்கள் அனுப்பப்படாமல் இருக்கிறது என்கிற குற்றச்சாட்டு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? டைரக்டராகவே அரிசன வெல்பேர் டைரக்டருக்கு அனுப்ப உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி ஒன்றிரண்டு வந்திருக்கிறது. பிரின்சிபால் காலதாமதம் செய்யக்கூடாது. எப்படியிருந்தாலும் பிரின்சிபால் மூலம் வருவதைத்தான் ஒத்துக்கொள்ள முடியும். மாணவர் படிக்கிறாரா, படிக்கவில்லையா என்று யார் கண்டார்கள். ஆகவே, பிரின்சிபால் மூலம் தான் வரவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், திருச்சி மாவட்டத்தில் பி.யு.சி. வகுப்பில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவிச்சம்பளம் கொடுப்பதில், 1,019 பேர்கள் விண்ணப்பம் கொடுத்

தார்கள் என்றும், அவர்களில் 566 பேர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டது என்றும், அமைச்சர் பதில் கொடுத்திருக்கிறார்கள். கேட்டவர்களில் சிலருக்கு நிராகரிக்கப்பட்டதன் காரணம் என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு காரணம், பணம் இல்லாத, போதாத காரணம் தான். அடுத்து, சில மாணவர்களுடைய அப்ளிகேஷன்கள் சரியில்லை என்று தள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. நா. துரைப்பாண்டியன் : சார், இந்தக் கல்லூரி முதல்வருக்கு 'செக்' அனுப்பிவிடுவதால், அவர்கள் அதை தங்கள் உபயோகத்திற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு வைத்துக் கொண்டு இருப்பதாக ஏதாவது 'கம்ப்ளெயிண்ட்' வந்திருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரி 'கம்ப்ளெயிண்ட்' வந்ததாக ஞாபகம் இல்லை.

அரசாங்க மருத்துவ மனைகள்

*** 401 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள சில பிரிவுகளை தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) The following units from the Raja Mirasdar Hospital, Thanjavur have already been shifted to the New Medical College Hospital, Thanjavur :—

(i) Medical,

(ii) Surgical, and

(iii) Pædiatric.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, புதிய மருத்துவ மனைக்கு ஒரு சில பிரிவுகள் மட்டும் மாற்றப்பட்டு இருப்பதாக கனம் அமைச்சர் குறிப்பிட்டார்கள். அங்கே கண்காணிப்பாளர் ஒருவரே இருப்பதால், மேற்பார்வை பார்க்க—சூப்ரெண்டைப் பற்றிச் சொல்லுகிறேன்—கஷ்டமாக இருப்பதால், நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்பட்டு இருப்பதாக அரசாங்கம் உணருகிறதா ? அப்படி இருந்தால், அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தமாதிரித் தகவல் அரசாங்கத்திற்கு ஒன்றும் இல்லை.

*** 402 கேள்வி.—திரு. ந. சவுந்திரபாண்டியன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரத்தில் நடைபெற்றுவரும் மருந்தகத்திற்கு Hospital கட்டடம் கட்ட உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இதற்கு வேண்டிய அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ்வேலையை நிறைவேற்றுமாறு அகஸ்தீஸ்வரம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகபுரம் ஆஸ்பத்திரிக் கட்டடத்திற்காக ஊர்க்காரர்கள் நிலம் இனாமாக வழங்கியும், பல ஆண்டுகளாகியும், கட்டடம் கட்டவில்லை. ஆகவே, உடனடியாக, வெகு விரைவில், கட்டிமுடிக்க அரசாங்கம் ஆணையிடுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அவர்கள் கொடுத்த நிலம், கட்டடம் கட்டுவதற்கு தகுதியில்லாததாக இருந்தது. மிகவும் பள்ளமான இடத்தில் இருந்ததால், அதை லெவல் படுத்தி, மறுபடியும் ஏற்கனவே போட்டதை மாற்றி, எஸ்டிமேட், அதிகப்படியான தொகைக்குப் போட்டு, ரிவைஸ்ட் ப்ரொபோசல் கால்ஃபார் செய்து, இப்பொழுது கட்டுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்று கூற விரும்புகிறேன்.

*** 403 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரியில் சாங்ஷன் செய்யப்பட்ட படுக்கைகள் எத்தனை ?

(இ) 1965-ல் தினசரி சராசரி எத்தனை in-patients இருந்தார்கள் ?

(உ) சாங்ஷன் செய்யப்பட்ட படுக்கை எண்ணிக்கையை உயர்த்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இருபத்தெட்டு.

(இ) எழுபது.

(உ) கள்ளக்குறிச்சி மருத்துவ மனையில் புதிய அறுவை சிகிச்சைக் கூடம் ஒன்றை நிறுவியதால், முன்பிருந்த கூடம் காலியாகி உள்ளது. இதில் மேலும் பன்னிரண்டு படுக்கைகள் போட்டு இக்கூடத்தைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[24th March 1966

9-00 a.m. **திரு. ஆ. துரையரசன் :** தமிழ்நாட்டில் தாலூகா தலைமை மருத்துவ மனைகள் மொத்தம் எத்தனை கட்டத் திட்டமிடப் பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : விவரம் வேண்டு மென்றால், அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், தாலூகாத் தலைமை ஆஸ்பத்திரிகளைப் பொறுத்த வரையில், சில இம்ப்ரூவ் மென்ட் ஸ்கீம்கள் புதிதாகப் போட்டு, அவற்றில் இருபது ஸ்கீம்களை இவ்வாண்டு எடுத்துக்கொள்ளத் திட்டம் இருக்கிறது.

திரு. தா. சின்னசாமி : கள்ளக்குறிச்சியிலுள்ள பிரசவ விடுதிக்கு ஏராளமானவர்கள் பிரசவத்திற்காக வருகிறார்கள். அங்கே தண்ணீர் சப்ளை சரிவர இல்லாததால், சுகாதாரக் குறைவாக இருக்கிறது. தண்ணீர் வசதி செய்து கொடுத்தால், கள்ளக் குறிச்சி சுகாதார நிலையத்தில் உள்ள பிரசவ விடுதி நல்ல சுகாதார நிலையில் இருக்கமுடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தண்ணீர் கொடுக்க எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் சொல்கிற அளவுக்கு அந்த மருத்துவ மனையில் தண்ணீர்க் கஷ்டம் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் "இன்-பேஷன்ட்கள் எழுபது பேர்கள்" என்று சொன்னார்கள். இந்த எழுபது பேர்களுக்கும் சாங்ஷன் செய்யப்பட்ட படுக்கைகள் இருந்தனவா ? அல்லது படுக்கை இல்லாமல் பேஷன்டுகளை வராந்தாவில் படுக்க வைத்ததாகச் சொல்கிறார்களே, அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : படுக்கைகளின் எண்ணிக்கை 28 தான். அதிகப்படியாக இருப்பவர்கள் வராந்தாவிலும் இருக்கலாம் ; உள்ளேயும் இருக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கள்ளக்குறிச்சியிலிருந்து எண்பது மைல் தூரம் வரைக்கும் போனால்தான் ஏதாவது ஒரு பெரிய ஆஸ்பத்திரியைப் பார்க்க முடியும். ஆகையால், இது மிகப் பின் தங்கிய ஒரு பகுதியாக இருக்கும் காரணத்தால், இந்த ஆஸ்பத்திரியில், இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறபடி, 12 படுக்கைகளைச் சேர்த்தால் கூடப் போதாது. ஆகவே, அந்த ஆஸ்பத்திரியின் அந்தஸ்தை உயர்த்த ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதிலே தற்போது இருக்கிற படுக்கைகள் 28. பன்னிரண்டு படுக்கைகளிலிருந்து இருபத்தெட்டாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது ஏற்கனவே காலியாக இருக்கும் மெடர்னிடி ப்ளாக்கைக் கம்ப்ளீட் செய்து, படுக்கை வசதி செய்து கொடுத்து, அதை 40 ஆக ஆக்கவேண்டும் என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

24th March 1966]

* 404 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of cases of suicides recorded, in the course of post mortem examinations at General Hospital, Madras and Erskine Hospital, Madurai during the year 1965; and

(b) the number out of them detected to be due to consumption of bug poison and rat poison?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (a) 371 cases in the Government General Hospital, Madras and 212 cases in the Government Erskine Hospital, Madurai.

(b) The total number of suicides on account of consumption of bug poison in the Government General Hospital and in the Government Erskine Hospital is 53 and 28 respectively. No case of suicide due to consumption of rat poison was detected in these two hospitals.

இராமேஸ்வரம்-இலங்கை கப்பல் போக்குவரத்து

* 405 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவது பற்றி அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகியுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்குமிடையில் புதிய கப்பல் போக்குவரத்து இந்தியக் கப்பல் கார்ப்பரேஷன் மூலம் நடத்தப் பட வேண்டுமென இந்திய அரசு தீர்மானித்துள்ளது. இந்தக் கப்பல் போக்குவரத்து இம் மாதம் 31-ம் தேதி துவங்க இருக்கிறது.

திரு. செ. மாதவன் : ஒரு மாதத்திற்கு எத்தனை கப்பல்கள் என்று முடிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? முன்பிருந்த துறைமுகம் தனுஷ்கோடியில் இருந்தது. இப்பொழுது இராமேஸ்வரம், மண்டபம் பக்கத்தில் புதிதாகக் கப்பல் துறைமுகம் அமைக்கத் திட்டங்கள் உண்டா ? அல்லது, ஏற்கனவே இருந்த பகுதியிலேயே ஆரம்பிக்கத் திட்டம் உண்டா ?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : A regular bi-weekly service between Rameswaram and Talaimannar Pier will commence with effect from 31st March 1966. T.S.S. "Irwin" will leave Rameswaram on Mondays and Thursdays at 2-00 p.m. reaching Talaimannar at about 5-30 p.m. She will make return voyages from Talaimannar on Tuesdays and Fridays leaving Talaimannar at 10-00 a.m. reaching Rameswaram at about 1-30 p.m. The running time is 3½ hours.

திரு. செ. மாதவன் : இராமேசுவரத்திலேயே இப்பொழுது துறைமுக வசதிகள் இருக்கின்றனவா ? பிரயாணிகள் அங்கே தங்கியிருந்து, அங்கிருந்து பிரயாணத்தைத் துவங்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்கிறதா ?

[24th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனுஷ்கோடி வரையில் இருந்த ரயில் பாதையும், தனுஷ்கோடியில் இருந்த இரயில்வே நிலையமும் புயல் காற்று ஏற்பட்டு அகற்றப்பட்ட பிறகு, அந்தப் பக்கத்திலிருந்து இலங்கைக்குப் போவதை நிறுத்திவிட்டார்கள். தூத்துக்குடியிலிருந்து கொழும்புவுக்கு போவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், நான் மற்ற சகாக்களுடன் இராமநாதபுரம், பாம்பன் பக்கம் போனபோது, அங்குள்ள தொழிலாளர்களும் மற்றவர்களும் தங்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது, எப்படியாவது மீண்டும் தனுஷ்கோடியிலிருந்தோ அல்லது இராமேசுவரத்திலிருந்தோ போக்குவரத்து ஏற்படுத்த வேண்டும் என்று கோரினார்கள். அதற்கு மேல் நான் மத்திய அரசாங்கத்திடம் தெரிவித்தேன். அது சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் தெரிவித்தேன். அவர்கள் அதை உடனே ஏற்றுக்கொண்டு, அதன் பேரில் இதைப் பரிசீலனை செய்து, கொஞ்சம் உடனடியாகவே, சீக்கிரத்திலேயே, வருகிற 31-ந் தேதி முதற்கொண்டு போக்குவரத்து ஏற்படக்கூடிய வகையிலே, ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஜெட்டி போன்றவையெல்லாம் கட்டப்பட்டுவிட்டது. 31-ந் தேதியிலிருந்து கப்பல் போக்குவரத்து ஏற்படப் போகிறது. கனம் அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல், வாரத்தில் இப்பொழுது இரண்டு நாட்கள் கப்பல் விடப்படும். பின்னால் அவசியம் இருந்தால் மேலும் கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்குப் போவதற்கு இர்வின், கோஷன் என்ற பெயரில் இரண்டு கப்பல்கள் இருந்தன. அவை தினசரி போய்க்கொண்டிருந்தன. இப்பொழுது ஒரு கப்பல் மட்டும், வாரத்தில் இரண்டு நாட்கள் விடவேண்டியிருப்பதால், போக்குவரத்துத் தேவைக்கு அது போதுமானதாக இருக்குமா ? இன்னொரு கப்பல் விடுகிற நிலை என்ன ஆயிற்று ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றுமே இல்லாததற்கு இப்பொழுது ஒரு கப்பல் விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறார்கள். நான் முன்பு கூறியது போல, இதற்கு மேல் போக்குவரத்து அதிகம் இருந்தால், மேலும் கவனிக்கப்படும். அதற்காக, இம் மாதம் 31-ந் தேதி நான் இராமேசுவரம் போகிறேன். இது சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகள், ஷிப்பிங் கார்ப்பரேஷன் தலைவர், மற்றும் எல்லோரும் வருகிறார்கள். இதைப்பற்றியெல்லாம் அவர்களுடன் கலந்து, இதற்குமேல் அவசியம் இருந்தால் எப்படி விஸ்தரிப்பது என்பதைப்பற்றி நான் பேசலாம் என்று இருக்கிறேன்.

Travancore-Cochin allottees

* 406 Q.—Sri A. KUNJAN NADAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any appeal is pending on the integration of Travancore-Cochin allottees working in the Highways Department (Technical staff);

24th March 1966]

(b) if so, how many;

(c) whether it is pending with the State Government or with the Government of India; and

(d) whether the Government would take early steps for the disposal of these appeals ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) One.

(c) State Government.

(d) Will be placed before the next meeting of the State Advisory Committee.

திரு. எ. சுவாமிதாஸ் : இன்டெக்ரேஷனைப் பொறுத்தவரையில், கன்யாகுமரி மாவட்டப் பகுதி தமிழ்நாட்டோடு சேர்ந்து கிட்டத்தட்ட பத்து வருஷம் ஆகிறது. இவ்வளவு கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? உடனடியாக விரைவில் முடிக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்டெக்ரேஷன் விஷயத்தில் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது என்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. இதிலே சில சிக்கல்கள் இருந்தன. நான் இப்பொழுது அளித்த விடையில், ஒரே ஒரு அப்பீல்தான் பெண்டிங்காக இருக்கிறது என்று இன்டெக்ரேஷன் பற்றிய விவரம் கூறியதிலிருந்து மற்றவையெல்லாம் கூடிய சீக்கிரத்திலேயே முடிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள்.

Rubber plantation workers

* 407 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Rubber Plantation Labour Workers in Kanyakumari district have struck work since three weeks ; and

(b) if so, the reasons therefor and the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes. The workers in certain rubber plantations in Kanyakumari district struck work from 29th November 1965.

(b) The workers represented by the Kanyakumari District Estate Workers' Union of Nagercoil issued a notice on 5th November 1965, intimating their intention to go on strike on 22nd November 1965, if their demands were not conceded by the managements. The Labour Officer took up conciliation ; and on his advice, the union postponed the strike to 29th November 1965. The conciliation failed and the workers went on strike from 29th November 1965. Subsequently, the Deputy Commissioner also tried conciliation which also failed. The Government examined the conciliation report and passed necessary orders. They also prohibited the strike under the Industrial Disputes Act, 1947.

[24th March 1966

All the local workers resumed work on 11th January 1966. The workers who were out of station were allowed time till 19th January 1966 and all have resumed work.

திரு. எம். எஸ். மணி : அந்த ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்கள் என்ன கோரிக்கைகள் வைத்தார்கள் என்பதை அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது எல்லாம் முடிந்து போய்விட்டது. இதற்கு இன்னும் விவரங்கள் வேண்டும் என்றால், தனிக் கேள்வி வேண்டும்.

'லேபர் கோர்ட்' நீதிபதிகள்

* 408 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லேபர் கோர்ட் நீதிபதிகளுக்கு ஜப்தி செய்ய உத்திர விடும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) இல்லை எனில், காரணமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணத்தை, நிலவரி பாக்கியிருந்தால் எப்படி வசூலிக்கப்படுமோ அவ்வாறே வசூலிக்க 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தில் தனி விதித்துறை இருக்கிறது.

போலீஸ் நிலையம், கோயம்புத்தூர்

* 409 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை போலீஸ் நிலையத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பழனிச்சாமி கவுண்டர் என்பவர் இறந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The individual died by committing suicide by taking poison while he was being taken to Kovilpalayam police station in Coimbatore district.

திரு. செ. மாதவன் : போலீஸ் கஸ்டடியில் அவர் வைக்கப்பட்ட பின்னர் இந்த பாய்சன் எடுத்தாரா ? அல்லது அதற்கு முன்பாக எடுத்தாரா ? கஸ்டடியில் இருக்கும்போது எடுத்தார் என்றால் கஸ்டடியில் இவருக்கு எப்படிப் பாய்சன் கிடைத்தது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் 145 பிரகாரம் விசாரணை நடந்தது. பஞ்சாயத்தார்கள் இருந்தார்கள். பஞ்சாயத்தார்கள் உள்பட ஆர்.டி.ஓ. அவர்கள் இதை விசாரித்து

24th March 1966]

'There was no external or internal injury on his body and that the accused might have committed suicide by taking parathion poison.'

என்று முடிவு செய்தார்கள். போஸ்ட் மார்டத்திலும் இதுதான் புலப்பட்டது. கெமிகல் எக்சாமினேஷனும் விசாரணை செய்தார்கள். பெரத்தியன் பாய்சன் மூலமாகத் தான் தற்கொலை செய்துகொண்டிருக்கவேண்டும் என்று புலனாயிற்று.

திரு. செ. மாதவன் : இவர் கைது செய்யப்பட்டு எவ்வளவு நேரம் கழித்து இறந்தார் ? அவர் போலீஸ் கஸ்டடியில் இருக்கும்போது எப்படி பாய்சன் கிடைத்தது ? அது விசாரிக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப் பற்றி விசாரித்த ஆர்.டி.ஓ. அவர்கள் இதில் ஒன்றும் ஃபவுல் ப்ளே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதிக ஜாக்கிரதையாக இருந்திருக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

பாதுகாப்புப் பயிற்சி

* 410 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளி மாணவர்களுக்குப் பாதுகாப்பு பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசாங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு ஏதேனும் கருத்து தெரிவித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Instructions have been issued to train teachers and students in Civil Defence measures and first-aid.

புஷ்பம் கல்லூரி, தஞ்சாவூர்

* 411 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :
திரு. வை. சங்கரன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை, பூண்டியிலுள்ள புஷ்பம் கல்லூரி மாணவர்கள் வகுப்புக்கு வராமல் இருந்தது சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆமெனில் அதற்கான காரணம் என்ன ? என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) மாணவர்களால் ஏற்கனவே செலுத்தப்பட்ட சிறப்புக் கட்டணத்தைக் கல்லூரி நிர்வாகத்தினர் நிலுவையாக [illegible] செலுத்தவேண்டும் என்று கேட்டதாகவும் அத்தகைய

[24th March 1966

நிலுவைகளைச் செலுத்தாத மாணவர்களை மேல் வகுப்புக்கு அனுப்பாமல் நிறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. இது குறித்து விசாரணை செய்யுமாறு உயர்நிலைக் கல்வி நெறியாளர் கேட்கப் பட்டுள்ளார்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

Failure of Government to prevent closure of Textile Mills.

Sri M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion—

" That the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, viz.

' Failure of the Government to prevent closure of Textile Mills, which is spreading from area to area, the latest being partial closure of the Pandyan Mills at Madurai, causing unemployment and under-employment for thousands of textile workers in the State '. "

கொஞ்சகாலமாக முதலாளிகள் மில்களை மூட ஆரம்பிக்கிறார்கள். நம் அரசாங்கமோ அதிகமாக மில்களைத் திறக்க முயற்சிக்கிறது. முதலாளிகள் மில்களை மூட ஆரம்பிப்பதற்கு முக்கியமான காரணம் இரண்டாவது வேஜ் போர்டு டெக்ஸ்டைல் கமிட்டி நியமிக்கப்பட்டு அது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பது தான். இப்போது இருக்கிற கணக்குப்படி 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் வேலை இழந்திருக்கிறார்கள். ஆறு, ஏழு மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. நேற்று மதுரையில் இருந்து தகவல் வந்திருக்கிறது. பாண்டியன் மில்லில் இரண்டு ஷிப்ட் வேலை நிறுத்தப்பட்டு ஒரு ஷிப்டு வேலை தான் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இது தவிர திறமைக் குறைவினாலும் சண்டை காரணமாகவும் மூடப்படுகிற மில்கள் வேறு இருக்கின்றன. கோயம்பத்தூரில் உள்ள ஸ்டேன்ஸ் மில் மூடப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலாவது அரசாங்கம் குறுக்கிட்டு, இண்டஸ்ட்ரியல் ரெகுலேஷன் ஆக்ட் பிரகாரமாவது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க முன்வரவேண்டும். இல்லாவிட்டால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். நாம் தேச உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று இருந்தும் கூட—உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கக்கூடிய வகையில் முதலாளிகளால் மில்கள் மூடப்பட்டு வரும் ஒரு நிலைமையை வலியுறுத்திக் கூறுவதற்காகத் தான் இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, அவசரமாக இந்தத் தீர்மானத்தை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டது என்ற குற்றச்

24th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சாட்டை நான் ஒருகாலும் ஒப்புக்கொள்ள முடியாது. அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. நடவடிக்கை எடுத்துக் கொண்டும் வருகிறது என்று நான் கூறுவேன். முதலாளிகள் சில மில்களை மூடி இருப்பதற்கும், மூட இருப்பதற்கும் பல காரணங்கள் உண்டு. ஒன்று, தொழிலதிபர்கள் கூறுவது போதிய கடன் வசதி கிடைப்பது இல்லை என்பதாகும். கடன் வசதியை அவர்களுக்குப் பெருக்குவதற்கு எந்த அளவு அரசாங்கம் உதவி செய்யக்கூடும் என்பதில் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. தொழிலதிபர்களுடைய பிரதிநிதிகள் சிலரும், தொழிற்சங்கங்களுடைய பிரதிநிதிகள் சிலரும் தொழில் அமைச்சரோடு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலதிபர்களுடைய பிரதிநிதிகள் சிலரையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சிலரையும் நாளை தம்மை வந்து சந்திக்க லேபர் கமிஷனர் அவர்கள் அழைத்திருக்கிறார்கள். லேபர் கமிஷனர் அவர்களிடம் பேசுவார். நாளை பகல் 2 மணிக்கு அவர்கள் தொழில் அமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதில் அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதோடு மேலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. வேறு என்ன செய்ய முடியும்? ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உகந்ததா, இல்லையா என்கிற முடிவை உங்களிடம் விட்டுவிடுகிறேன். ஆனால் நான் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வது இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாம் என்பது தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் எதையும் அவசரப் பிரேரணைக்கு உகந்தது என்று ஒத்துக்கொண்டதில்லை. ஆனாலும் இது விஷயத்தில் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறியிருப்பது எனக்கு ஆறுதல் அளிக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்பதற்காக வேண்டுமானால் இதை நான் வற்புறுத்தவில்லை.

III.—PRIVILEGE MATTER.

Dismissal of a temple servant of Meenakshisundareswarar Devasthanam, Madurai.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைக்கு இது பற்றிய விஷயம் தெரியவேண்டும் என்பதற்காகச் சில வார்த்தைகள் சொல்கிறேன். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. அது மிகவும் புகழ் பெற்ற இடம் கூட. அந்த தேவஸ்தானத்தில் பணி புரிந்து கொண்டிருந்த சிப்பந்தி ஒருவர் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். ஒரு சிப்பந்தியை வைத்துக்கொள்வதற்கோ வேலையில் இருந்து நீக்குவதற்கோ அங்கே உள்ள அதிகாரிகளுக்குச் சட்டப்படி பூரணமான அதிகாரம் இருக்கலாம். அதைப்பற்றிய பிரச்னைக்குள் நான் போகவில்லை. ஆனால் இந்தச் சபையின் கவனத்திற்கு நான்

கொண்டுவர வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ள திரு. முத்துசாமி முதலியார் என்பவருக்கு முதலில் கொடுக்கப்பட்டுள்ள சார்ஜ் ஷீட்டிலும் சரி, வேலையில் இருந்து அவரை நீக்கியுள்ள உத்தரவிலும் சரி என்னுடைய பெயர் அனாவசியமாக இழுக்கப் பட்டிருக்கிறது. அதாவது "திரு. கலியாணசுந்தரம் அவர்களிடத்தில் போய் தேவஸ்தானத்திலுள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசியது குற்றம்" என்பதாக முதலில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். 'கலியாணசுந்தரத்தைச் சந்தித்து தேவஸ்தானத்தைப்பற்றி எடுத்துக் கூறிய குற்றத்திற்காக' என்று வேலையில் இருந்தும் நீக்கப்பட்டிருக்கிறார். ஒரு ஊழியரை வேலையில் இருந்து நீக்குவதற்கு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. நான் அதற்குள் போகவில்லை. ஆனால், இப்படி அவர் போட்டுள்ள உத்தரவுகளில் அனாவசியமாக, தகாத முறையில் என் பெயரைச் சேர்த்து இழுத்திருக்கிறார் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதன் காரணமாக நடந்த ஒரு நிகழ்ச்சியையும் நான் இந்தச் சபையினருக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு திரு. முத்துசாமி முதலியார் என்பவர் என்னைச் சந்தித்து அந்த தேவஸ்தானத்து நிர்வாகஸ்தர்கள்—தர்மகர்த்தாக்கள்—அந்த தேவஸ்தானத்து சிப்பந்திகள் ஆகியவர்களுக்கிடையே இருந்த ஒரு முக்கியமான தாவாவைப் பற்றிச் சொன்னார்கள். அதில் நியாயம் சிப்பந்திகள் பக்கம் இருப்பதை நான் உணர்ந்தேன். குறிப்பாக, முதலில் இருந்த நிர்வாகஸ்தர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலத்தை அந்த தேவஸ்தானத்தையே சேர்ந்த 90 ஊழியர்களுக்கு மனைக்கட்டிக் கொள்வதற்காகப் பிரித்துக் கொடுத்தார்கள். இனாமாக அல்ல. கிரயத்திற்கே கொடுத்தார்கள். இவர்களும் அந்தப் பணத்தைக் கட்டிவிட்டார்கள். ஆனால் பின்னால் வந்த நிர்வாகஸ்தர் 'அம்மாதிரி சுத்த கிரய சாசனமாகக் கொடுத்தது சரியல்ல. ஊழியர்களுடைய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள், நிலம் கொடுக்க முடியாது' என்று சொன்னார்கள். இதுபற்றித்தான் முதல் அமைச்சர் அவர்களிடமாவது சொல்லி—சமரசம் செய்து வைக்க முடியுமா என்று அந்த எழுத்தர் திரு. முத்துசாமி முதலியார் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். சிப்பந்திகளுடைய சங்கத்தார் கொடுத்த மகஜரையும் வைத்து, நானும் ஒரு கடிதம் எழுதி அதனுடன் இணைத்து முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். அவர்களுக்கு அந்த நிலம் சுத்த கிரயமாகக் கூடக் கொடுக்கவேண்டாம், 90 வருஷத்திற்கு குத்தகையாகக் கூடக் கொடுத்து மனை போட்டுக் கொள்ள அனுமதிக்கலாம் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் அதை அந்த இலாகாவின் பரிசீலனைக்கு அனுப்பியிருப்பார்கள். இதன்மீது என்ன நடந்திருக்கிறது என்று பார்க்கிறபோது—அந்த எழுத்தர் திரு. முத்துசாமி முதலியார் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்மீது நடவடிக்கை எடுத்து அவரை வேலையிலிருந்து

நீக்கிவிட்டார்கள் என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்கும், தங்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இதற்கு முன்பு 1955-ஆம் ஆண்டிலே எஜுகேஷன் டிபார்ட்மெண்டில் ஒரு கல்வியதிகாரி, ஒரு ஆசிரியருக்கு சார்ஜ் ஷீட் கொடுத்தார். இன்ன தேதியிலே திரு. கலியாணசுந்தரம், எம்.எல்.ஏ. அந்த ஆசிரியருடைய வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டார். இதைப்போல திரு. ஜீவானந்தம் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். நான் அப்பொழுது இந்தச் சபையில் உரிமைப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறேன். எம்.எல்.ஏ. ஒருவருடன் தொடர்பு வைத்தார், அல்லது பேசினார் என்பதற்கெல்லாம் குற்றச் சாட்டுக் கொண்டுவந்தால் அதில் என்ன ஜனநாயக முறை இருக்கிறது என்பது புரியவில்லை. அவரை வேலையிலிருந்து நீக்கியிருப்பது இந்தச் சபையை எப்படிப் பாதிக்கும் என்று கேட்கலாம். ஊழியர்கள் எம்.எல்.ஏ.-க்களுடன் தொடர்பு வைக்கமுடியுமா என்பதற்கு விதி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுடைய விதிகளில் 18-வது விதியில் அரசாங்க ஊழியர்கள், சட்டசபை அங்கத்தினர்களையோ அல்லது பார்லிமெண்ட் அங்கத்தினர்களையோ அணுகி அவர்கள் மூலம் மேலதிகாரிகளுடைய கவனத்திற்கு விஷயங்களைக் கொண்டு வருவது கூடாது என்று இருக்கிறது. அந்த விதிகள் தேவஸ்தான ஊழியர்களுக்குப் பொருந்துவதில்லை. அவர்களுக்கு அறநிலையப் பாதுகாப்பு விதிகள் என்று பிரத்தியேகமாக இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுடைய விதிகள் தேவஸ்தான சிப்பந்திகளுடைய விதிகளுக்குப் பொருந்தாது என்று இருக்கும் பொழுது இதில் என்ன குற்றம் இருக்கிறது? ஒருவர் எம்.எல்.ஏ. இடம் ஒரு மனுவைக் கொடுத்து அதை அவர் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறபோது, அந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிவிட்டார் என்று சொல்லமுடியாது, இதில் எல்லாம் தலையிடுவதற்கு இல்லை என்றுதான் பதில் வரும், அதுவும் இலாகாவிலிருந்துதான் பதில் வரும்—ஒரு எம்.எல்.ஏ. யினுடைய பெயரைக் காட்டி எக்ஸிகியூடிவ் ஆபீஸர், அவர் அரசாங்க ஊழியர், குற்றப்பத்திரிக்கை கொடுத்தால் என்ன அர்த்தம்? எம்.எல்.ஏ.-க்கள் அரசாங்கத்திடம் சொல்லலாமா, சொல்லக்கூடாதா? இதே போல் ஒரு ஹெல்த் ஆபீசர் ஏதாவது கூறினார் என்றால் நான் அதை அரசாங்கத்திடம் கூறினால் அதற்கு இப்படி ஏதாவது வருகிறது என்றால் சட்டசபை அங்கத்தினர்கள் அச்சத்திற்கு இடம் இல்லாமல் சுதந்திரமாக எப்படி வேலை செய்யமுடியும்? எப்படி இந்தச் சபையினுடைய அங்கத்தினர்கள் அரசாங்கத்தை அணுகமுடியும்? அப்படி அணுகும் போது இப்படியெல்லாம் குறுக்கிட்டு இருக்கிறது, அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்வதில் இன்டர்ஃபெயரன்ஸ் இருந்தால் அது பிரீச் ஆஃப் பிரிவ்லெஜ் தான். 1955-ம் ஆண்டிலே சொன்ன பொழுது அதைச் சபாநாயகர் பிரீச் ஆஃப் பிரிவ்லெஜ் என்று எடுத்துக்கொள்ளவில்லை. நிராகரித்துவிட்டார். ஆனால் அந்த ஆசிரியர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை வாபஸ் பெறப்பட்டது, கைவிடப்பட்டுவிட்டது. அதற்குப்பிறகு அந்த ஆசிரியர்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th March 1966

தொடர்ந்து பணியாற்ற நேர்ந்தது. அது போகட்டும். இந்த சம்பவத்திலே எக்ஸிக்யூடிவ் ஆபீஸர், அரசாங்க ஊழியர், அவர் சட்டசபை அங்கத்தினருடைய கடமையில் தலையிடக்கூடிய முறையில் உத்தரவு பிறப்பித்திருக்கிறாரா என்று பார்த்து இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கும் தக்க முறையில் யோசனை கூற வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டு நிர்வாகம் சம்பந்தமாக சில தகவல்களைத் தங்களிடத்திலே கொடுக்கிறேன். அதையும் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். புனித ஸ்தலங்களில் எல்லாம் இருக்கக்கூடிய ஊழியர்களைப் பழிவாங்கக் கூடாது. முதலமைச்சர் அவர்கள் அறநிலையப் பாதுகப்புப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சபையில் ஒரு விவாதம் இருக்கவேண்டுமென்று கூறி, இந்த ரெக்கார்டுகளையும் சம்பந்தப் பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. மு. கருணாநிதி: கனம் தலைவரவர்களே, நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்து வைத்துள்ள இந்தப் பிரச்னை யின் மீது நானும் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களிடம் வெளியிலே இருக்கின்றவர்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய சில குறைகளை எடுத்துச் சொல்வதற்கும், அவைகளுக்கான நிவாரணம் பெறுவ தற்கும் உரிமைப் பெற்றிருக்கிறார்கள் என்ற அளவில், இந்த மன்ற உறுப்பினர்களும் அந்தக் கோரிக்கைகளை ஏற்று உரியவர்களிடத் தில் அதைப் பற்றி எடுத்துக்கூறுகின்ற ஒரு முறை நீண்ட நெடு நாட்களாக இருக்கின்ற மரபேயாகும். ஆனால், மன்ற உறுப்பினர் கள் அந்தக் கோரிக்கைகளை உரியவர்களிடத்திலே எடுத்து வைத்த பிறகு, பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கையை எடுத்து வைக் கின்றவர்களுக்கு மேல் நிலையில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் கோரிக்கையை எடுத்து வைக்கின்றவர்களின் மேல் நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு மேலும், மேலும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கக்கூடிய வகை ஏற்படுகிறது. குறிப்பாக, திரு. கலியாண சுந்தரம் அவர்கள் எடுத்து வைத்திருக்கின்ற பிரச்னையில் தேவஸ் தானத்திலே இருக்கின்ற நிலம் அங்கு வேலை செய்கின்ற ஏறத்தாழ 90 ஊழியர்களுக்கு வீடுகட்டிக்கொள்வதற்காகத் தரப்பட்டிருக்கிற நிலம், அதைக் குறிப்பிட்ட ஒரு முதலாளிக்குத் தரவேண்டுமென்று உத்தரவு மாற்றப்பட்டதால் அந்த ஊழியர்கள் சங்கக் காரியதரிசி யாக இருக்கின்ற திரு. முத்துசாமி என்பவர், தனிப்பட்டவருக்கு இடம் வேண்டுமென்ற அளவிலே அல்ல, ஊழியர் சங்கத்தின் காரியதரிசி என்ற முறையிலே அரசியல் தலைவர் என்ற முறையிலோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலோ திரு. கலியாணசுந்தரம் அவர்களை நாடி அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்ததையும், அந்தச் சங்கத்தினுடைய காரியதரிசி எடுத்து வைத்ததையொட்டி திரு. கலியாணசுந்தரம் அவர்கள் அதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்ததையும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கின்ற பலன்களையும் நாம் ஆராய வேண்டியதில்லை. அதன் காரணமாக சங்கத்தினுடைய காரியதரிசி மீது, "நீங்கள்

24th March 1966] [திரு. மு. கருணாநிதி]

இன்னொரு அரசியல் தலைவரோடு தொடர்பு கொண்ட காரணத்தால் தண்டிக்கிறேன்" என்று உத்தரவு பிறப்பித்திருப்பது சட்டமன்ற உறுப்பினரைப் பற்றிக் குறிப்பிட்டு இருப்பது சட்டமன்ற உறுப் பினர்களுடைய உரிமையைப் பறிப்பது ஆகும். ஆகவே, அந்த வகையில் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்து வைத்த உரிமைப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு விடுவதற்கு தாங்கள் முனைந்து நியாயம் வழங்கவேண்டுமென்று கூறி முடித்துக்கொள் கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னையைப்பற்றித்தான் நாம் கவனம் செலுத்த வேண்டும். மற்றொரு உரிமைப் பிரச்னை கனம் உறுப்பினரைச் சார்ந்தது. அவர்களே பாதிக்கப்படக்கூடியதாக அது இருந்தது. அந்த பிரச்னையிலே தாங்கள் கொடுத்த தீர்ப்பை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்தப் பிரச்னைக்கும், அந்தப் பிரச்னைக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அந்தப் பிரச்னையிலே கனம் உறுப்பினரே பாதிக்கப்பட்டார்கள். இந்தப் பிரச்னையிலே கனம் உறுப்பினருடைய உரிமையல்ல; உறுப்பினருக்குத் தெரிவித் தார்கள், அதைப்பற்றிய பிரச்னைதான். கனம் உறுப்பினர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தேவஸ்தான ஊழியர்கள், அதைச் சேர்ந்த ஊழியர்கள் மட்டுமல்ல, அறநிலையப் பாதுகாப்புச் சட்டப் படி அரசாங்க ஊழியர்களாகவும் அவர்கள் கருதப்படுவார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு உள்ள விதிகள் எல்லாம் அவர்களுக்கும் அமையும். கவர்ன்மெண்ட் செர்வன்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ் என்று இருக்கிறது. அதில் நியாயம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். அதைப்பற்றிக் கனம் உறுப்பினர்களுக்குக் கருத்துக்கள் இருக்க லாம். ஆனால், விதி இருக்கிறது. அந்த விதியின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பொலிடிக்கல் ப்ரஷர் கொண்டுவரக்கூடாது என்பதை யாரும் மறுக்கமுடியாது, என்பது ஒரு மரபு. சர்க்காரிலே உத்தியோகத்திலே இருக்கின்றவர்கள், பணிபுரிகின்ற வர்கள் பொலிடிக்கல் பிரஷர் கொண்டு வருவதால் பணிகள் சரிவர நடைபெறாது. டிசிப்ளின் இருக்காது. மேலே இருப்பவர்கள் 9-31 a.m. ஏதாவது கேட்டால், நான் எம்.எல்.ஏ. விடம் சொல்லுகிறேன்; மந்திரியிடம் சொல்லுகிறேன் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இதற்கு ஒரு வரம்பு இருக்கிறது. மரபு இருக்கிறது. நல்லபடியாக மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்றால் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் கவர்ன்மெண்ட் சர்வண்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்று எனக்கு நினைவுக் வருவதைத் தெரிவித்துக் கொள் கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர் என்சினியரிங் இலாகா சூப்பர்வைசர் என்று நினைக் கிறேன்—முன்பு இருந்த ஒரு சபாநாயகர் அவர்களிடம் சென்று, தனக்குப் ப்ரொமோஷன் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று

[திரு. எம். பக்தவத்சலம்] [24th March 1966

சொன்னார்—எழுதிக் கொடுக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். அந்தச் சபாநாயகர் அவர்களும் அவர் கூறியதை ஏற்றுக்கொண்டு எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். 'அவருக்கு வரவேண்டிய ப்ரொமோஷன் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்; அந்தப் ப்ரொமோஷனை அவருக்குக் கொடுக்கவேண்டும்' என்று எழுதினார். எனக்கும் தெரியாது, அனுபவம் இல்லை. நானும் அப்படியே இலாகாவுக்கு அனுப்பிவிட்டேன். இலாகாவில் பரிசீலனை செய்து பார்த்து, அவர் பொலிடிகல் பிரஷர் கொண்டு வருவது கவர்ன்மெண்ட் செர்வன்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ்க்கு விரோதமாக இருக்கிறது; ப்ரொமோஷனுக்கும் நியாயமில்லை; ப்ரொமோஷனைப் பற்றிக் கவனிப்பதற்கு முன்பு அவர் மீது டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்கவேண்டுமென்று எழுதினார்கள். பாவம் ஏழை உத்தியோகஸ்தர்—எனக்கே அதைப் பற்றித் தெரிந்திருந்தால் நான் அதை அனுப்பியிருக்க மாட்டேன்; ஸ்பீக்கரே கொடுத்திருந்தாலும் நான் அனுப்பியிருக்கமாட்டேன்—என்ற காரணத்தால் கூடியவரை அவரைப் பாதுகாக்கலாம் என்ற எண்ணத்தோடு பூராவையும் கவனிக்காமல், அவர்தான் ஸ்பீக்கரைப் போய்ப் பார்த்தார் என்று எப்படிச் சொல்ல முடியும்; அவர் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எழுதினேன். அதன் பேரில் இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஸ்பீக்கர் லெட்டரில் 'பேரர்' என்று இருக்கிறது என்று எழுதினார்கள். முட்டாள்தனமாகப் போயிற்றே, கவனிக்காமல் போனோமே என்று நினைத்துக் கொண்டேன். ஸ்பீக்கரிடமும் சொன்னேன்—இனிமேல் வந்தால் நீங்கள் ஒன்றும் எழுதாதீர்கள்; நானும் அவரிடம் சொல்லிவிடுகிறேன் என்று சொன்னேன்.

திரு. மு. கருணாநிதி: யார் என்று சொல்லாமல், ஒரு ஸ்பீக்கர் செய்து விட்டார் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். இதற்கு முன்பு பல சபாநாயகர்கள் இருந்திருக்கிறார்கள். இது எல்லோரையும் பாதிக்கிற காரணத்தால் எந்த சபாநாயகர் என்று பெயரை அறிவிப்பார்களானால் நலமாக இருக்கும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: யாரும் பாதிக்கப்படவில்லை. பெயரைச் சொல்வது பொருத்தமல்ல; முறையல்ல. இந்தச் சபாநாயகர் அல்ல என்பதை மட்டும் உறுதியாகக் கூற விரும்புகிறேன். நான் அந்த சபாநாயகரிடம் சொன்னேன்—அவர் மறுபடியும் உங்களிடம் வந்தால் திரும்பவும் உங்களிடம் வரவேண்டாம் என்று சொல்லுங்கள் என்று சொன்னேன். திருப்பித் திருப்பி எழுதிக் கொண்டே இருந்தார்கள். எனக்கு எழுதக்கூடாது; இப்படியெல்லாம் எழுதுகிறாரே என்று சொன்னேன்.

தேவஸ்தான ஊழியர்கள்கூட புதிய சட்டப்படி சர்க்கார் ஊழியர்களாகக் கருதப்படக் கூடியவர்கள்தான். அவர்களுக்கு ஏதாவது குறை இருந்தால், தேவஸ்தான நிர்வாகிகள் சரியான நியாயம் வழங்கவில்லை என்றால் டெபுடி கமிஷனருக்கு அப்பீல்

24th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

செய்யலாம் என்று புதிய சட்டத்திலே மாறுதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எக்சிக்யூட்டிவ் ஆபீசர்கள் சர்க்கார் ஊழியர்களாகக் கருதப்பட வேண்டுமென்று சொல்லி இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதிலே உரிமைப் பிரச்சினை ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதலமைச்சர் அவர்கள் கூறிய உதாரணம் இதற்குப் பொருந்துமா என்பதுதான் என்னுடைய சந்தேகம். அவர்கள் கூறிய சம்பந்தப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர் தன்னுடைய பதவி உயர்வுக்காகச் சபாநாயகரை அணுகி, சபாநாயகர் சிபாரிசு செய்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட ஒருவரையே பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம், கவலை முதலமைச்சர் அவர்களுக்கு இருந்ததைப் பாராட்டுகிறேன். அவரைக் கெடுப்பதிலே லாபம் இல்லை என்ற நல்லெண்ணத்தோடு செய்தார்கள். நான் சொன்னதிலே சம்பந்தப்பட்ட பிரச்சினை அவருடைய சொந்த விஷயமல்ல; அவருடைய வேலை சம்பந்தப்பட்டது அல்ல. வேலை நேரத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு விதி அல்லது சம்பளம் பஞ்சப்படி போன்ற விஷயம் அல்ல. அவர்களுக்கும் தர்மகர்த்தாவுக்கும் இடையே ஏற்பட்ட நிலம் சம்பந்தமான தாவா, எல்லோருக்கும் பொதுவான விஷயம். சொந்த விஷயமாக இருந்தால் மேலதிகாரிகளுக்கு அப்பீல் பண்ணலாம். இந்த விஷயத்திலே அரசாங்கத்திடம் இருந்து பதில் வர வேண்டுமென்ற காரணத்தால், ஒரு எம்.எல்.ஏ. மூலமாகக் கொடுத்து 'இல்லை' என்ற பதிலாவது சீக்கிரமாக வந்தால் சூட் போடவாவது ஏதுவாக இருக்குமென்ற காரணத்தால்—இல்லை என்ற பதிலைப் பெறத்தான் என் மூலமாக முயற்சி செய்தார்கள் என்று நினைக்கிறேன்—அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர முயன்றார்கள். அரசாங்க ஊழியர்களுக்குப் பொருந்தும் விதிகள் இவர்களுக்கும் பொருந்தும்; அமலாக்கப்பட்டிருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், அதிலே ஒரு முக்கியமான விதி விடப்பட்டிருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள், பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆகியவர்களை அணுகக்கூடாது என்று அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் பற்றிய விதியிலே தெளிவாக இருக்கிறது; ஆனால் அது தேவஸ்தான விதிகளில் இல்லை; விடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவ்வாறு அணுகுவது முறைதான் என்று தெரிகிறது; இல்லையென்றால் இந்த விதி விடப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதிலே எடுக்கப்பட்ட நடவடிக்கையால் நிச்சயமாக அங்கத்தினர்களின் கவுரவம் பாதிக்கப்படுகிறது. என்னை ஒன்றும் அது நேரடியாகப் பாதிக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் என்னை என்ன செய்ய முடியும்? அந்தக் கோயிலுக்குச் சென்றால் உள்ளே வராதே என்று சொல்லமுடியுமா? என்னைத் தடுக்க முடியுமா? என்னை அடிக்கமுடியுமா? அதைச் செய்தால் நான் கவனித்துக்கொள்வேன். இந்த நிலைமை இருந்தால் இனி எந்த ஒரு மனுவையும் சபாநாயகர் அவர்கள் மூலமாகவே கொடுக்கவேண்டுமென்ற [illegible]

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th March 1966

உருவாகும். ஒவ்வொரு நாளும் பல பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன; இவ்வாறு இங்கிருக்கும் 206 அங்கத்தினர்களும் சபாநாயகர் மூலமாகத்தான் எல்லாவற்றையும் கொடுக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் அது காரிய சாத்தியமாயிராது. பல தொல்லைகள் ஏற்படும்.

கனம் சபாநாயகர்: சபாநாயகர் மூலமாக எல்லாவற்றையும் கொடுக்க முடியாது. அந்த சப்ஜக்டைப் பற்றிய விஷயம் இங்கே வந்தால்தான் கொடுக்க முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அந்த விஷயத்தை விவாதிக்கிற சூழ்நிலையை உண்டாக்கி அந்த மாதிரி மனுக்களைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்பட்டால் சபையினுடைய நேரத்தில் பெரும்பகுதி இதற்கே போய்விடும். தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், மதுரை நகர மக்கள் இதைத் தப்பாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்காகவும் மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சபாநாயகர் அவர்களுக்குச் சங்கடத்தைக் கொடுக்க விரும்பவில்லை; அவர்களே இதிலே தலையிட்டுச் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஜனநாயகத்தைக் காப்பதிலே எனக்கும் மிகுந்த அக்கறை உண்டு. ஜனநாயகத்தைக் காப்பதிலே சில மரபுகள் இருக்கின்றன. ஜனநாயகம் என்ற பெயரால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றால் அது ஜனநாயகத்தைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும். மன்ற உறுப்பினருடைய உரிமைக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட ஒருவர் அவருக்கு அக்கறையுள்ள விஷயத்தை உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார். அவருக்குச் சம்பந்தம் இல்லாத வேறு விஷயம் அல்ல. குறைபாடு இருந்தால் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள இடம் இருக்கிறது. கனம் உறுப்பினர் கூறியது போல் கோர்ட்டுக்குப் போகலாம். இந்த மன்றத்தைப் பொறுத்த மட்டில் உரிமைப் பிரச்சினை எழவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: டிரஸ்டிகள் பழி வாங்கும் உணர்வில் நடக்கக்கூடாது. டிரஸ்டிகள் ஒழுங்கானவர்களா? அவர்கள் இஷ்டம் போல் வேண்டியவர்களுக்குப் பாரபட்சமாகச் செய்யலாமா?

My submission is the subject-matter of privilege is not about the policy of the Board of Trustees to enforce the contract. The contract is sacred. But here the Executive Officer has taken action against an employee alleging that he had the courage to approach Sri M. Kalyanasundaram and seek remedy through him with Government. That is the subject-matter of privilege. That interferes with my duty . . . .

24th March 1966]

MR. SPEAKER: I am not questioning that. Now, the point is whether writing of a letter by an hon. Member bringing the matter to the notice of Government or any superior authority will come under "privilege."

SRI M. KALYANASUNDARAM: The Hon. Speaker has to consider how it is improper for an employee of a Devasthanam or otherwise, to approach a Member of the Assembly to make a sympathetic representation on his behalf to Government. That is the point on which the Hon. Speaker should exercise his mind. So many courses of remedy may be open to the aggrieved person. Approaching a Member may be one such thing. What is improper in this? Even supposing that he rushed to me straightway and wanted me to make a representation to Government, how is it improper?

MR. SPEAKER: The hon. Member referred to an earlier ruling in 1956. I think it is against the hon. Member.

SRI M. KALYANASUNDARAM: It is against me. I know that. But still it was held that the action of the concerned District Educational Officer was improper. The then Education Minister Sri C. Subramaniam . . .

MR. SPEAKER: Government might have taken note of it. That is a different matter. But can we take note of it as a breach of privilege?

SRI M. KALYANASUNDARAM: I realise my limitations. I am not very confident because the earlier rulings are against me. But still the force of my case is not weakened. We cannot create new privileges. That is why I am not able to convince you, Sir, and convince you strongly that there is a specific case of breach of privilege. To that extent I realise my limitations. The earlier rulings and everything are against me. But I am only trying to impress on the Hon. Speaker that this is a case of impropriety on the part of the Government employee. The Executive Officer is a Government employee. It is open to Government to issue executive instructions not to create such situations in future. This House can seek that remedy or assurance from the Government to that effect.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை ஒரு விவாதமாகவே தொடர்ந்து நடத்திக் கொண்டு போவதற்கு நான் உடன்படமாட்டேன். ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தில் சில வரம்பு முறை இருக்கிறது. எல்லாவற்றிலுமே அரசாங்கம் தலையிடுவது என்பது முடியாத காரியம்; அதற்கு இடமில்லை. அததற்கு அதிகாரம் இருக்கிறது. ஏரியா கமிட்டிக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. டிரஸ்டிக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. கமிஷனருக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. அரசாங்கம் நேரடியாக எல்லாவற்றிலும்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th March 1966

தலையிட முடியாது. ஆகவே அததற்கு லிமிட்டேஷன் இருக்கிறது. கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்றால் கோர்ட்டுக்குப் போகட்டும். சாதாரண பிரஜைக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், ஒரு வரம்பிற்கு உட்பட்டவர்களுக்கும், ரெஸ்ட்ரிக்ஷன், கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது, உரிமைகள் பற்றி. அதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு மேலே தங்கள் காலத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

MR. SPEAKER: I think the documents which the hon. Member Sri M. Kalyanasundaram had given, do not in any way relate to the matter before me.

SRI M. KALYANASUNDARAM: It retlates to the . . .

MR. SPEAKER: It does not relate to any proceedings or subject-matter pending here.

திரு. மீ. கலியாணசுந்தரம்: தேவஸ்தானம் புனிதமானது. அது இவர்கள் . . . .

MR. SPEAKER: The hon. Member may have a lot of grievances. But they must come under my jurisdiction for me to deal with. Otherwise I can only sympathise.

SRI M. KALYANASUNDARAM: I do not want to embarass you, Sir.

MR. SPEAKER: I reserve my ruling.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1966-67.

(1) DEMAND NO. XXI—CINCHONA.

(2) DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT

(3) DEMAND NO. XLV—CAPITAL OUTLAY ON FORESTS.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 26.79,500 under Demand No. XXI—Cinchona.'

Sir, on the recommendation of the Governor, I move -

"That the Government be granted a sum not exceeding Rs. 1,51,51,200 under Demand No. XXXV—Forest Department."

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த 35-வது வன இலாகா டிமாண்டின் மீது என் பெயரிலுள்ள 'காட்டிலாக்கா பராமரித்து

24th March 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

வரும் காடு இல்லாத காலி நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தத் தவறிவிட்டதைச் சுட்டிக்காட்ட' என்ற வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

"That the allotment of Rs. 1,51,51,200 under Demand No. XXXV—Forest Department be reduced by Rs. 100."

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 92,92,200 under Demand No. XLV—Capital Outlay on Forests."

MR. SPEAKER: The Demands and the cut motion are before the House for discussion.

திரு. மு. பொ. வடிவேல்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, வனத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மான்யத்தின் மீது எங்களுடைய கட்சி அங்கத்தினர் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முன் காலத்தில் எல்லாம் ஏராளமாக மழை பெய்தது. அப்படி மழை பெய்ததற்குக் காரணம் காடுகள் நல்லமுறையில் வளர்ச்சி அடைந்திருந்தன. இப்போதெல்லாம் காடுகள் பெரும்பான்மையான அளவில் கிராமப் புறங்களில் வெட்டப்பட்டு வருகிறது. மொத்த நிலப்பரப்பில் 16 சத விகிதம் தான் காடுகள் இருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காடுகள் அழிவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, வெள்ளாடுகள் மேய்வது. இரண்டாவதாக, கிராமப்புறங்களில் உள்ளவர்கள் அவற்றை விறகுக்காக வெட்டுவது. இவ்விரண்டு காரணங்களினாலும் காடுகள் நல்லமுறையில் விளங்க முடியவில்லை. வெள்ளாடுகள் மேய்வது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருந்தாலும் திருட்டுத்தனமாக ஏராளமான வெள்ளாடுகள் ஆலங்காயம் ப்ளாக் நரசிங்கபுரம் காடுகளில் ஏராளமாக அனுமதிக்கப்பட்டு அதனால் காடுகள் அழிந்து கொண்டு வருகின்றன. காடுகள் அழிந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் மழை பெய்வது அரிதாகி விடுகிறது. மழையின்மையின் காரணமாக விவசாயம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையை எடுத்துக்கொண்டால் ஏராளமான சந்தனக் காடுகள் இருக்கின்றன. 1964-65-ல் 1,400 டன் சந்தன மரம் விற்கப்பட்டு சுமார் 1 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தம் கிடைக்கக் கூடிய சந்தன மரத்தில் 40 சதவிகிதம் ஜவ்வாது மலையில் தான் கிடைப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட மரத்திற்கு ஸ்பைக் என்ற நோய் வருவதால் சந்தன மரம் அழிந்து போகக்கூடிய நிலைமை ஏற்படு

கிறது. இதைத் தவிர்ப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரம் தெரிந்து கொள்ள முடியவில்லை. கடந்த ஆண்டு அறிக்கையில் பார்க்கும் போது, டெக்ஸிக் கோட்டையில் இந்த வியாதி சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருந்தது. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக ஏதாவது பலன் கிடைத்ததா? ஆராய்ச்சியின் முடிவு என்ன, என்பதும் தெரியவில்லை. இந்த வியாதியைப் போக்குவதற்கு எந்தவிதமான முயற்சிகளும் எடுத்திருப்பதாக இந்த அறிக்கையிலிருந்து தெரியவில்லை. ஆகவே, இந்த வியாதியைப் போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏதாவது கவர்ச்சிகரமான விதத்தில் விளம்பரம் போட்டு அதன் மூலமாக இந்த நோயைத் தீர்ப்பதற்கு யாராவது முன்வந்தால் அரசாங்கம் சன்மானம் அளிக்கும் என்று விளம்பரம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜவ்வாது மலையில் சந்தன மரத்தை இன்னும் கூடுதல் அளவில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக சந்தன மரம் தானாக வளருவதில்லை. பக்கத்தில் இன்னொரு மரம் சேர்ந்து வளர வேண்டும். அந்த மரத்திலிருந்துதான் சந்தன மரம் தனக்கு வேண்டிய உணவை எடுத்துக்கொண்டு வளரும். தானாகவே வளருவதற்கான சக்தியைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இதைப் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காடுகளில் ஏராளமான மைனர் மகசூல்கள் கிடைக்கின்றன. முக்கியமாக கடுக்காய் மரத்திலிருந்து நல்ல பயன் கிடைக்கிறது. இதைத் தனியாக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற இடங்களில் லெதர் இன்டஸ்ட்ரி இருக்கிறது. இதன் மூலமாக நமக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது. இதற்கு மிகவும் பயன்படுவது இந்தக் கடுக்காய் மரத்திலிருந்து கிடைக்கின்ற பொருட்கள். ஆகவே இன்னும் அதிகமாகக் கடுக்காய் மரத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் 100 ஏக்கர் என்று ஏரிகள் இருந்தால் அதில் கரிவேல மரங்களை நடுகிறார்கள். ஆனால் 100 ஏக்கர் இருந்தால் தான் கரிவேல மரங்களை நடலாம் என்று சொல்லப்படுகிறது. அவ்விதமில்லாமல், பஞ்சாயத்துக்களில் 25 ஏக்கர், 30 ஏக்கர், 50 ஏக்கர் என்றிருந்தாலும் அந்த ஏரிகளிலும் கரிவேல மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்படி நடுவதால் இந்த மரங்களிலுள்ள சாயம் தண்ணீரில் இறங்கி அந்தத் தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்படும்போது, விவசாயம் நல்ல முறையில் பலன் தரும் என்று தெரிகிறது. அதே நேரத்தில் விறகுக்கும் உதவக்கூடியது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் சரி, 100 ஏக்கர் என்று

நிர்ணயிக்காமல் 25 ஏக்கர், அல்லது 30 ஏக்கர் என்றிருந்தாலும் அந்த ஏரிகளில் கரிவேல மரங்களை நடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேஸ்ட் புறம்போக்குகள், காடுகள், பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதில் பல தகராறுகள் நடைபெறுகின்றன. அதாவது, சில காடுகளை பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் பாரஸ்ட் டிப்பார்ட்மென்டார் அவை தங்களுக்குத் தான் என்று சொல்கின்றார்கள். காரணம், சரியாக எல்லை வரை பறுத்துக்கொடுக்காமல் இருப்பது தான். ஆலங்காயம் பிளாக்கில் நெல்லிவாசல் நாடு, புதூர்நாடு, புங்கப்பட்டு நாடு போன்ற இடங்களில் காடுகளில் உள்ள எல்லை சரியாக சர்வே செய்யப்படவில்லை. இதன் காரணமாகப் பஞ்சாயத்துத் தலைவர் தங்கள் எல்லையிலுள்ள காடுகள் என்று நினைத்துக்கொண்டு ஏலத்திற்கு விடுகின்றார், அப்போது பாரஸ்ட் டிப்பார்ட்மென்டார் வந்து, நீ விடக் கூடாது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும், ஒன்றில், பஞ்சாயத்துக்கு விட்டுக் கொடுத்து விட வேண்டும், அல்லது, பாரஸ்ட் டிப்பார்ட்மென்டே வைத்துக்கொள்ளவேண்டும், இரண்டில் ஒன்றைச் செய்வது தான் முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எல். ஆர். பாரஸ்ட் என்று இருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், பஞ்சாயத்துத் தலைவர்கள் போய், தங்களுக்கு கிணறு வெட்டவேண்டும், அல்லது ரோடு போடவேண்டும் என்று சொல்லும்போது, எல். ஆர். பாரஸ்ட்காரர்களைத்தான் இவர்கள் அணுகவேண்டும். அப்படிக் கேட்கும்போது, ஸ்கெட்ச்-கள், மேப்-கள் இவை சுலபமாகக் கிடைப்பதில்லை. இவை சுலபமாகக் கிடைக்கின்ற முறையில், மேப்-கள், ஸ்கெட்ச்-கள் இவை எல்லாம், கிராமக் கர்ணங்களிடம் இருக்கக்கூடிய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டிலாகாவிலிருந்து சில பள்ளிக்கூடங்களை நடத்துகின்றார்கள். இதை அரிஜன நல இலாகாவுக்கோ, அல்லது பஞ்சாயத்து யூனியனுக்கோ மாற்றிவிடவேண்டும். எல்லாத் துறைகளிலும், வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் துரை, துரை என்று அழைத்து வரக்கூடிய பழக்கம் இருந்தது. இப்போது பல இலாகாக்களிலும் போய்விட்டது, ஆனால் காட்டிலாகாவில் இன்னும் அந்த முறை இருந்து கொண்டிருக்கிறது. இந்த முறையில் மலைவாசிகள் பாரஸ்ட் டிப்பார்ட்மென்ட்காரர்களைப் பார்த்துப் பயப்படக்கூடிய நிலைமை தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. காட்டிலாகாவிலிருந்து நடத்தக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள 10 மாணவர்களைப் பார்த்தேன், அவர்கள் வாட்ச்மென், கார்ட் போன்ற படிப்பு படிக்கின்றார்கள், அவர்கள் எல்லாம், பாரஸ்டரைக் கண்டால், துரை வந்துவிட்டார், துரை வந்துவிட்டார் என்று தான் சொல்லுகிறார்கள். இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நான் அதிகாரிகளைப் பற்றி தவறாகச் சொல்லுவதாக

எடுத்துக்கொள்ள வேண்டாம், ஆனால் இருக்கின்ற நிலைமை இது. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை எல்லாம் அரிஜன நல இலாகாவிடம் ஒப்படைத்துவிட வேண்டும், அல்லது, பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்துவிடவேண்டும், அது தான் நலமாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் சால்வேஜ் பார்ம் நடத்துவதற்காக 100 ஏக்கர் காடுகள் கூட்டுறவு முறையில் நடத்துவதற்காக காட்டிலாகாவிடம் இருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றியும் அரசாங்கம் நன்றாகச் சிந்தித்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரம் அடைந்து 18, 19 ஆண்டுகள் ஆகியும் மலைவாசிகள், மலையில் வசிக்கின்ற மலையாளிகள், இவர்கள் மலையிலிருந்து கீழே வரவேண்டுமென்றாலும், கீழேயிருந்து மேலே போகவேண்டுமென்றாலும், மிகக் கடினமாக இருக்கிறது. அவர்களுக்கு பஸ் போக்குவரத்து போன்ற எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி வந்துவிட்டால் காட்டுப் பொருட்கள் திருடு போய்விடும் என்று சொல்லக்கூடும். இதைத் தடுப்பதற்கு அங்கங்கே செக் போஸ்ட்கள் இருக்கின்றன, அவற்றின் மூலமாக கண்காணித்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட மலைப்பிரதேச மக்கள், நாகரீகமாக வாழவேண்டும் என்ற எண்ணம் நமக்கிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நல்லவிதமான போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் கார்டுகள், பாரஸ்ட்டர்கள், போன்றவர்கள் லஞ்சம் வாங்குகின்றார்கள், இதை நான் குறையாகச் சொல்லவில்லை, காரணம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் போதவில்லை. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை இன்னும் சற்று உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பறவை இனத்தைப் பொறுத்தவரையில், ஜவ்வாது மலையில் பச்சைப் புறா என்று ஒரு இனம் இருந்து வருகிறது. இதை போபாலிலிருந்தும், பரோடாவிலிருந்தும் மகாராஜாக்கள் வந்து பிடித்துக்கொண்டு போவதாகச் சொல்லுகிறார்கள். வைத்தியத்திற்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது என்று கருதி இந்த பச்சைப் புறாக்களை பிடித்துச் செல்வதாகத் தெரிகிறது. இதன் காரணமாக இந்த பச்சைப் புறா இனம் அழிந்து கொண்டே வருகிறது, இது நமது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ என்னவோ தெரியவில்லை. இவ்விஷயத்தில் அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்தி, பச்சைப் புறா இனவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பொன்னையன்:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதலாவதாக, சிங்கோனா பிளான்டேஷனைப்பற்றி ஒரு சில வார்த்தைகள்

சொல்ல விரும்புகிறேன். சிங்கோனா பிளான்டேஷன் சர்க்காருடைய நிறுவனமாக இருந்து கொண்டிருக்கிறது. எங்கள் ஆனைமலைப் பகுதியிலும் நீலகிரி பகுதியிலும் சிங்கோனா பிளான்டேஷன் நடந்து வருகிறது. இதில் முன்னால் அநேகமாக நஷ்டம் தான் வந்து கொண்டிருந்தது. சமீபகாலத்தில் ஓரளவுக்கு அது குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. அங்கு இருந்த உத்தியோகஸ்தர்களைக் கூட, அதாவது சூப்ரண்டண்ட ஆக இருந்தவர்களை அசிஸ்டென்ட் சூப்ரன்டன்டாகவும், அசிஸ்டென்ட் சூப்ரன்டன்டாக இருந்தவர்களை ஓவர்சீயர்களாகவும் தரத்தை மாற்றியிருக்கிறார்கள், இப்படியெல்லாம் நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக நான் சொல்வது, இப்போது மட்டுமல்ல, முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். இந்த சிங்கோனா இருக்கும் இடங்களில் எல்லாம் டீ பிளான்டேஷன் வைத்தால் நலமாக இருக்கும். டீ பிளான்டேஷன் ஸ்டர்லிங், டாலர் சம்பாதிக்கக் கூடிய பொருள். அதோடு இங்கேயே தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு வேண்டிய ஆஸ்பத்திரி போன்ற வசதிகள், டெக்னிக்கல் நபர்கள் முதலியவை இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் டீ பிளான்டேஷனை வைக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிங்கோனா பிளான்டேஷன் இருக்கும் இடத்தில் 1,000, 1,500 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருக்கின்ற இடத்தின் பக்கத்தில்—ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கும் தேயிலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் சிங்கோனா பிளான்டேஷனில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை. 10-00 a.m. உதாரணமாக, சம்பளத்தை எடுத்துக் கொண்டாலும் மிக மிகக் குறைவான சம்பளம். இந்தக் காலத்தில், விலைவாசி அதிகமாக இருக்கிறது. தவிர, சமீபத்திலே தேயிலை எஸ்டேட்டுகளுக்கு வேஜ் போர்டு போட்டு கூலி நிர்ணயம் செய்ததில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய கூலிக்கும், சிங்கோனா தொழிலாளர்களுடைய கூலிக்கும் மிக மிக வித்தியாசம் இருக்கிறது. சட்டங்களைக் கூட சரியாகப் பிரயோகிக்கவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு தொழிலாளி ஐந்து வருஷம் தொடர்ந்து வேலை செய்தால் அவனுக்கு கிராச்சுயிட்டி கொடுக்கவேண்டும். வருஷத்திற்கு 15 நாள் சம்பளம் போட்டு கிராச்சுயிட்டி கொடுத்தால் நலமாக இருக்கும். பிராவிடென்ட் ஃபண்ட், ஃபாக்டரி வொர்க்கர்சுக்கு கொடுத்திருக்கிறார்கள். இங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பிராவிடென்ட் ஃபன்ட் இல்லை. அந்த பிராவிடென்ட் ஃபன்ட் வசதியையும் செய்து கொடுக்கவேண்டும். போனஸ் ஆக்ட் பிரகாரம் கவர்ன்மென்ட் நிறுவனமாக இருந்தாலும் போனஸ் கொடுக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். 1964-65-ம் ஆண்டுக்கு அவசியம் போனஸ் கொடுக்கவேண்டும்.

கங்காணிகள் ஒழிப்புச் சட்டம் வந்த பிறகு எல்லாக் கங்காணிகளையும் ஒழித்து விட்டோம். அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் இந்தப் பிரச்னை இருப்ப

தால் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்களுக்கு நஷ்ட ஈட்டையும் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிளான்டேஷனில் வேலை செய்கிற தொழிலாளர் குழந்தைகளுக்கெல்லாம் புது ஆட்களை எடுக்கும்போது அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்கவேண்டும். வேறு ஆட்களைக் கொண்டுவரக் கூடாது.

சின்கோனா பிளான்டேஷனில் ஏன் தேயிலைத் தோட்டம் போடவேண்டும் என்று சொல்லுகிறேன் என்றால், பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டத்தின் கீழ் 3,000 சொச்சம் ஏக்கர் சோலையாறு டாமுக்கு ஆர்ஜிதம் செய்து விட்டோம். அதனால் 3,000 சொச்சம் பேர்களுக்கு வேலை இல்லை. அவர்களுக்காகவாவது தேயிலைத் தோட்டம் போட்டால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, ஃபாரஸ்ட் டிபார்ட்மென்டைப் பொருத்தவரையில் என்னுடைய தொகுதியில் ஃபாரஸ்ட் இருக்கிறது. கிராஸ் ஹில்ஸ் என்ற இடத்தில் சுமார் 9,000 ஏக்கர் நிலத்தில் ஒன்றுமே விளைவதில்லை. ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்டில் பல செடிகள் வைத்துப் பார்த்தார்கள், வாட்டில் வைத்துப் பார்த்தார்கள்; ஒன்றும் பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது. ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்ட்டுக்குப் பிரயோசனமாக இருந்தால் கொடுக்க வேண்டுமென்று கேட்கமாட்டேன். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த 9,000 ஏக்கர் நிலமும் சும்மா இருப்பதற்குப் பதில், அங்கு போய் வாழ விரும்புகிறவர்களுக்கு, குடும்பத்திற்கு ஐந்து ஏக்கர் வீதம் கொடுத்தால், மண்ணையோ, சாம்பலையோ போட்டு, எருவெல்லாம் போட்டு, விவசாயத்திற்குப் பக்குவப் படுத்தி விடுவார்கள். அங்கு இருக்கிற ஆதிவாசிகளுக்கு, மலைவாசிகளுக்கு குடும்பத்திற்கு ஐந்து ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மலைவாசிகள் ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்ட்டில் வேலை செய்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் விலைவாசியில் கொடுக்கும் கூலி கட்டி வருவதில்லை. ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து விட்டுத்தான் தங்கள் சொந்த வேலைகளைச் செய்யவேண்டும். அவர்கள் உண்மையாகப் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள் இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது. குழி போடுவது, நாற்று நடுவது எல்லாம் இவர்கள்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

நம் ஃபாரஸ்ட் அடர்த்தியான ஃபாரஸ்ட். பெரிய மரங்களெல்லாம் இருக்கின்றன. நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுவது, பெரிய மரங்களுக்கு அடியில் புஷ்ஸ் இருக்கின்றன, அந்த புஷ்ஷை அழித்து விட்டு அந்த மரங்களின் நிழலில் கார்டமம் போடலாம் என்பதுதான். நான் கேரளாவுக்குப் போனபோது

கூடப் பார்த்தேன். மரத்தை அழிக்காமல், புஷ்ஷை அழித்து அந்த இடங்களில் கார்டமம் போடலாம் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வனத் துறை பற்றி வந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகின்றேன்.

நகர் வளம் சொல்ல வந்த கம்பன், மிக அழகான ஒரு கருத்தைக் கூறுகின்றான்—

“பந்தினை இளையவர் பயிலிடம் மயிலூர்க்
கந்தனை அனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பகவனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்”

என்று ஒரு அழகான கருத்தைக் கூறுகின்றான்.

அயோத்தி என்ற நகரின் வளத்தைக் கூற வந்த கம்பன், அந்த நகரத்தின் ஊடே இருக்கிற சந்தன வனங்கள், சண்பக வனங்கள், பூஞ்சோலைகள் ஆகியவற்றைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறுகிறான். பந்தை விளையாடுகிற பெண்கள், சண்பக வனத்தில் சென்று பந்து விளையாடினார்கள் என்று கூறுகின்றான். அதே போல அறிவு பெறுகிற மாணவர்கள், பூஞ்சோலைகளில் சென்று அவர்கள் அறிவு பெறுகின்றார்கள் என்று சொல்லுகின்றான். இதற்கெல்லாம் காரணம் இந்த விதமான காடுகள் நிறைந்த ஒரு நகரம், வனங்கள் நிறைந்த ஒரு நாடு, நல்ல அருமையான மழை வளம் பெருகும் நிலைமையில் நிச்சயமாக இருக்கும். அது மட்டுமல்ல. இந்தக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது போல அந்த நாட்டிலே வீசுகிற காற்று சுத்தப்படும். ஆக, இந்த அமைப்புகளையெல்லாம் முன்னர் அறிந்த இந்திய நாட்டுப் பழங்குடி மக்கள் வனத்துறை பற்றி மிக உன்னிப்பான கவனத்தை வைத்து, அதை ஆங்காங்கு வளர்த்து வந்தார்கள் என்று அழகான பாட்டில் தெளிவாகப் பாடியிருக்கின்றார்.

சாதாரணமாக, நிலத்தைத் தமிழ் நாட்டிலே அகத்துறை இலக்கணத்தை வைத்துப் பிரித்த பெரியவர்கள்—

“சேயோன் மேயமைவரை உலகம்
மாயோன் மேய காடுறை உலகம்”

என்று இரு பகுதியாகப் பிரித்தார்கள். ஒன்று முருக வேள் இருக்கிற “சேயோன் மேயமைவரை உலகம்”. நீண்டு வானளாவ இருக்கிற மலை சூழ்ந்த, மலை அருகில் இருக்கின்ற இடம், வனப் பிராந்தியம் என்று குறிஞ்சி நிலம் என்று வைத்தார்கள். மற்றொன்று “மாயோன் மேய காடுறை உலகம்” என்று கூறுகிற போது திருமால் இருக்கிற, காடுகள் நிறைந்த பகுதி என்று ஒரு வகையான நிலத்தைப் பிரித்தார்கள். “காடுறை உலகம்” முல்லை என்று வழங்கப்படுகின்றது. அங்கு வசிக்கின்றவர்கள் ஆயர்கள்

என்றும், அவர்கள் தொழில் ஆனிறை மேய்ப்பது என்றும் கூறுவார்கள். "மேயமைவரை உலகம்" என்ற இடத்தில் வசிக்கின்றவர்கள் வேடர்கள்; அவர்கள் தொழில் தேன் எடுத்தலும், தினை புனத்தலும் ஆகும் என்று குறிப்பிடப்படுகின்றது. ஆக, வனத்துறை என்று சொல்லப்படுகின்ற ஒன்று வனங்களை வைத்துப் பாதுகாத்தல், வனங்களை உற்பத்தி செய்தல், காடுகளையும் பாதுகாத்தல், மலை நிலத்தில், சமவெளியில் இருக்கின்ற காடுகளைப் பாதுகாத்தல், உண்டாக்குதல் என்ற நிலைமை ஏற்படுகின்றது. அந்த வகையிலே இப்போது இந்தத் துறையானது காடுகளைப் பற்றியும், வனங்களைப் பற்றியும் முழு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கின்றது என்று சொல்ல ஆசைப்படுகின்றேன். இருந்தாலும் கூட, விண்ணை மயக்கும் என்று கூட இலக்கணத்தில் வரும், வனத்தையும் காட்டையும் ஒன்றாக வைக்கக் கூடாது. என்னைப் பொறுத்த வரையில், காட்டு இலாகா ரெவின்யூ இலாகாவுக்குப் போகவேண்டும் என்று சொல்லுவேன். காடுகள் என்று சொல்லக் கூடியது, சமவெளிப் பிரதேசத்தில் இருக்கின்ற ஒன்று—அது வனம் அல்ல. அது மக்கள் தாங்கள் வைத்திருக்கின்ற ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும், ஏதோ விறகு வெட்டி எடுத்துக்கொள்ளுவதற்கும் இயற்கை ஆண்டாண்டு காலமாக பல நூறு ஆண்டுகளாக வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கின்ற பகுதி. அதை வனத்துறை என்று வைத்துக் கொண்டால் சுற்றுப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு இடையூறாக இருக்கின்றது என்று தாழ்ந்த வணக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் புதுக்கோட்டையிலும் மற்றப் பகுதியிலும் பார்த்திருக்கின்றேன். புதர்கள் நிறைந்த காடுகள் இருக்கின்றன. ஆனால் அது வனம் இல்லை. அறந்தாங்கி பகுதியில் நான் ஒரு தடவை சென்று பார்த்தேன். வனப் பிராந்தியம் என்று வைத்துக் கொண்டு பாசனத்திற்கு அதைக் கொடுக்க வனத்துறை மறுத்தது. அது நியாயம் அல்ல. உள்ளபடியே அது ஒரு தொடர்பான பகுதி. ரெயில்வே லைன் குறுக்கே இருக்கின்றது. இந்தப் பக்கம் சமவெளி, நன்செய்ப் பிரதேசமாக இருக்கின்றது. அந்தப் புறம் ஃபாரஸ்ட் இலாகா தங்களுக்குச் சொந்தம், வனப் பிராந்தியம் என்று கூறுகின்றார்கள். உள்ளபடியே நல்ல பகுதி. இதையெல்லாம் நன்செய் நிலமாக இருக்கவேண்டுமென்று கேட்டும்கூட மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இடர்பாடெல்லாம் இருக்கக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். வனம் என்று சொல்லக் கூடிய பகுதியிலே வன விலங்குகள் இருக்கின்றன. குற்றாலத்தைப் பற்றிப் பேசுகிறபொழுது

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் கோல நீல வண்டு யாழ்செய் குற்றாலம்"

என்று மிக அழகாகச் சொன்னார்கள்.

"போதும், பொன்னும் உந்தி அருவி புடை சூழக்
கூதல்மாரி நுன்துளி தூங்கும் குற்றாலம்"

என்று ஞான சம்பந்தப் பெருமான் சொல்லுவது போல் அழகு அழகாக சிறு சிறு நீர்வீழ்ச்சிகள், சிறு சிறு நீர் ஓடைகள் இருக்கக் கூடிய மலைப் பிராந்தியம். நம்முடைய தமிழகத்தில் நிறைய வனம் இருந்ததாகச் சொல்லுவார்கள்.

"மந்தியும் அறியா அரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச்சுடர் பூம்காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"

என்றெல்லாம் ஆற்றுப்படையில் கூறியிருக்கின்றார்கள். மலையைப் பற்றிச் சொல்லுகிற பொழுது தமிழ் இலக்கியத்தில் கணக்கு வழக்கே இல்லை. மலை வளம், வன வளம் இவற்றைப்பற்றி நிறைய இலக்கியங்கள் பேசுகின்றன. மலை என்பதும், வனம் என்பதும் மிக இன்றியமையாதவை என்பதை மட்டும் நாம் மனத்திலே கொள்ள வேண்டும். வன விலங்கைக் கூட விளக்குகிறேன்.

"சிங்கமும் வெம்களிறு முடன் விளையாடும் ஒரு பால்
சினப் புலியும் மடப்பிணையும் திளைத்திடும் ஒரு பால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒரு பால்"

என்றெல்லாம் மீனாக்ஷியம்மை குறம் கூறுகின்றது. அந்த வகையிலே வன விலங்கைப்பற்றி நினைக்கக்கூடிய ஒரு அம்சம் இருக்கின்றது. தமிழகத்து ஆட்சியில் வனத்தை அழியவிடாமல் நல்ல வகையில் இன்னும் வளப்பம் காணும் முறையில் பணியாற்றி, அதன் வழியாகக் காற்றைச் சுத்தமாகவும் மழை வளப்பம் கொண்டதாகவும் வைத்துக்கொள்ளவேண்டும்.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி."

என்று வள்ளுவர் கூறியபடி, மழை வளப்பத்தை உண்டாக்கும் முறைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை மன நிறைவோடு வரவேற்று, முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று நடந்துகொண்டிருக்கிற வன இலாகா மான்யக் கோரிக்கையின் மீது எனது கட் மோஷனைக் கொடுத்திருக்கிறேன். அதை ஒட்டி நான் சில கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக நம் நாடு விவசாயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நாடு. விவசாயத்திற்கு முக்கியமாக மழை பெய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிற நாடு. காடு இருந்தால் தான் மழை பெய்யும் என்று அந்த நாள் முதற்கொண்டு இந்த நாள் வரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், காடு இருக்கிற பகுதியிலாவது மழை பெய்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. குறிப்பாக எனது தொகுதியிலே சர்க்கார் காடு என்று சொல்லாவிட்டாலும், சர்க்காரால் துவக்கி வைக்கப்படாமலேயே எனது பகுதியிலே நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் சவுக்கைக் காடாகத் தான் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் காடாக இருக்கிறது. சவுக்கைக் காடாக இருந்தாலும், வருஷத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவை கூட மழை பெய்வதில்லை.

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [24th March 1966

அதற்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை. அப்படியானால் ஆராய்ச்சி தவறா, இயற்கையே மாறிவிட்டதா என்று கூட எனக்குப் புரியவில்லை. இந்த நிலையில் காட்டுக்கும், விவசாயத்திற்கும், மழைக்கும் இருக்கிற சம்பந்தத்தைப்பற்றி நெடுக இன்னும் சில ஆராய்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கின்றன. நாம் ஆராய்ச்சிக்குப் போகவேண்டிய அவசியமில்லை. அதற்கு மாற்றுப் பரிகாரம் ஏதாவது இருக்குமா என்று நாம் சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். பண்டைய காலத்தில் இருந்த காடுகளுக்கும், இந்தக் காலத்தில் இருக்கிற காடுகளுக்கும் என்னென்ன மாறுபாடுகள் இருக்கின்றன, வேறுபாடுகள் இருக்கின்றன, அவை அழிந்துவிட்டனவா என்று பார்க்கவேண்டும். எனக்கு முன்பு பேசியவர்கள் காட்டுக்கு முக்கியம் மழை என்று சொன்னார்கள். ஆனால், மழைக்கு முக்கியம் காடு என்று சொல்லுகிறார்கள். கோழிக்கு முந்தி முட்டையா, முட்டைக்கு முந்தி கோழியா என்று புரியவில்லை. காடு இருந்தால் மழை பெய்யும், மழை பெய்தால் காடு இருக்கும் என்று சொல்லுவார்கள். எது முந்தி என்று இருந்தாலும் கூட நமக்கு வேண்டியது காடு, மழை இரண்டும். பண்டைக் காலத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாக இல்லை, அதனால் காடுகள் அதிகமாக இருந்தன, அப்பொழுது காடுகளை அழிப்பதற்கு ஆள் இல்லை என்று எல்லாம் சொன்னார்கள். இந்தக் காலத்தில் மக்கள் பெருக்கம் அதிகமாகி விட்டதால், மக்களுக்கு விறகு அதிகம் தேவையாக இருக்கிறது, அதனால் காடுகள் அழிகின்றன, அதற்கெல்லாம் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அதை வரவேற்க வேண்டியதுதான். மற்றபடி காடு இல்லாத காடு என்று சொல்லப்படுகிற காட்டு இலாகாவைச் சேர்ந்த நல்ல நிலங்களும், குறிப்பாக எனது தொகுதியிலே தரிசு நிலங்களும் இருக்கின்றன, அந்த மாதிரி இடங்களில் இரண்டு, மூன்று இடங்களைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஏற்கனவே நான் கேள்வி கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்கு திருப்தியாக இல்லை. இந்த நேரத்திலாவது அமைச்சர் அதற்குத் தகுந்த முறையில் பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். அதாவது எனது தொகுதியில் கிளியனூரில் தானமான்யம் என்ற இடத்தில் 200 ஏகர் காட்டு இலாகாவினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கரம்பு நிலம். அங்கு காலிலே தைக்கிற முள் கூடக் கிடையாது. ஒரு செடி கூட முளைக்கிறதில்லை. மாடுதான் மேய்ந்து கொண்டு சும்மா கிடக்கிற நிலம். விவசாயத்தை அதிகமாகப் பெருக்கவேண்டும் என்று நாம் கருதுகிறோம். நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுத்தால் பலன் இருக்கும் என்று கேட்டபொழுது, இது கேள்வியாக இல்லை. அபிப்பிராயமாக இருக்கிறது என்று திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. ஆனால், இப்பொழுது தயவு செய்து அமைச்சர் அவர்கள் இதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 200 ஏக்கர் நிலங்கள் காடு இல்லாமலேயே தரிசாக கிடக்கிறது. உடனே நடவடிக்கை எடுத்து, அந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்தால், விவசாயத்திற்கு ஒழுங்காக இருக்கும். காட்டைக்

24th March 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

கூட அதில் வைத்து உற்பத்தி செய்யுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. இனிமேல் நான் சொன்ன பிறகு, காடு வைத்தால் அதில் பலன் இருக்காது. ஏற்கனவே காடு வைத்திருந்தால் பாதகம் இல்லை. ஆனால், நான் அபிப்பிராயம் சொன்னபிறகு காடு வைத்தால் பலன் இருக்காது. ஆகவே, நான் சொன்ன அபிப்பிராயத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மரக்காணத்தில் பல ஏக்கர் நிலங்கள் ஒரு காலத்தில் காடாக இருந்தது. அந்தக் காடுகளையெல்லாம் வெட்டிவிட்டு, சவுக்கை மரங்களை வைத்து இப்பொழுது பயிர் செய்து விட்டார்கள். சவுக்கை நாற்றுகள் வைத்து, அவைகள் நட்டதிலிருந்து இரண்டு, மூன்று வருடங்கள் வரைக்கும், ஆடு மாடுகள் போகாமல் பார்த்துக்கொண்டால் போதும். ஆளுக்கு எட்டாத உயரத்திற்கு மரங்கள் வளர்ந்துவிட்டால் ஆடு மாடுகள் போவதினால் ஒன்றும் பாதகம் ஏற்படாது. சுமார் 10, 15 அடி உயரம் மரங்கள் வளர்ந்துவிட்டபோதிலும் ஆடு மாடுகளை இப்பொழுது அங்கே விடுவதில்லை. ஆடு மாடுகள் உள்ளே வந்தால் உடனே கட்டாயமாக அவைகளை ஓட்டிக்கொண்டு போய் பவுண்டில் விடுகிறார்கள். பழைய காலத்தில் ஆடு மாடுகளை அடைக்கிற பவுண்டுக்குக் கொடுத்த தொகையும், இப்பொழுது கொடுக்கிற தொகையும் பார்த்தால், இன்றைக்கு நான்கு மடங்காக அதிகரித்திருக்கிறது. அதனால் விவசாயிகள் ரொம்பவும் தவிக்கிறார்கள். தயவு செய்து விதிவிலக்குக் கொடுக்கவேண்டும். அந்த சவுக்கு கன்றுகளை ஆடு மாடுகள் கடிக்காது. சவுக்கை மரங்கள் ஆளைவிட அதிகமான அளவு உயரத்திற்கு வளர்ந்துவிட்ட ஒரு சூழ்நிலை இருப்பதினால், ஆடு மாடுகள் போவதற்கு அனுமதிக்கலாம் என்ற உத்தரவை அமைச்சர் அவர்கள் போடுவார்கள் என்று நம்புகிறேன்.

அதே மாதிரி மரக்காணத்திலிருந்து குட்டைக் குப்பம் வரை காட்டிலாகா, திட்டத்திட்டாக நிலப்பரப்பை பாதுகாத்து வருகிறது. அங்கெல்லாம் வெறும் மணல் பரப்பாகத்தான் இருக்கிறது. ஒரு செடி கூடக் கிடையாது. அதை இந்த காட்டிலாகா பராமரித்துக் கொண்டு இருக்கிறது. அங்கே, ஆடு மாடுகள் வீட்டை விட்டு வெளியே வந்தால் போதும். இங்கேதான் கால் வைக்க வேண்டும். உடனே இவர்கள் பிடித்து பௌண்டிலே போட்டுவிடுகிறார்கள். விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். என்னிடத்திலே வந்து முறையிடுகிறார்கள். அதற்காகத்தான் நான் கூட பல முறை அமைச்சரைக் கண்டு, ஆடு மாடுகளைப் பௌண்டிலே அடைப்பதையாவது நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டும், உப கேள்விகள் போட்டும் பார்த்தேன். அவர்கள் சொல்வது, பயிர்களை அழிக்காமல் இருந்தால், கண்டிப்பாக பௌண்டிலே அடைக்க மாட்டார்கள் என்கிறார்கள். இந்த ஆடு மாடுகள் பயிர்களை அழிக்க சந்தர்ப்பமே கிடையாது. இருந்தும், இந்த ஆடு மாடுகள் பௌண்டிலே அடைக்கப் படுகின்றன.

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [24th March 1966

அமைச்சர் இங்கே சொல்லுவதற்கும், அங்கே காரியங்கள் நடப்பதற்கும், அதிக வித்தியாசம் இருக்கிறது. தயவு செய்து அதைப் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் இன்றைக்குப் பேச வந்ததே, முக்கியமாக சவுக்கை மரம் சம்பந்தமாக உள்ள குறைபாட்டை எடுத்துச் சொல்வதற்காகத் தான். அதனால் சர்க்காருக்கு ஆதாயம் இருக்கிறதா அல்லது இல்லையா என்கிற அந்தப் பிரச்னைக்கு நான் வரவில்லை. ஆனால், எங்கள் பகுதியில், எல்லா விவசாயிகளும் சவுக்கை பயிர் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அப்படிச் செய்து, மரக்காணத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு சவுக்கை மிலாறுகளை எடுத்துச் சென்றால், 25 மைலுக்கு அப்பால் உள்ள திண்டிவனம் சென்று அங்கே உள்ள பாரஸ்ட் ஆபீசரிடம் அனுமதி வாங்கிவரவேண்டியிருக்கிறது. இந்த விவரம் சில விவசாயிகளுக்குத் தெரியாது. 'நம் நிலத்தில் பயிர் செய்ததுதானே, அதைப் பாண்டிக்குக் கொண்டு போனால் ரூ. 20, 30 கிடைக்கும், அதற்கு மாட்டுக்குப் பிண்ணாக்கு, தவிடு வாங்கலாம், அல்லது தன்னுடைய தேவைக்கு வேண்டிய காய்கறிகளை வாங்கி வரலாம்' என்று நினைத்து விவசாயி அங்கே வண்டியோடு ரோடில் ஏறினால் போதும், அடுத்த கிராமத்தில் கொண்டு போய் மணியக்காரரிடத்தில், மாட்டையும், வண்டியையும் பிடித்துக் கொடுத்து விடுகிறார்கள். அது அங்கேயே கிடக்க வேண்டியதுதான். மாட்டுக்கு ஜாமீன் கொடுத்து ஓட்டி வருகிறார்கள். ஆனால், மணியக்காரரை, 'கேஸ் என்ன ஆயிற்று' என்று கேட்டால், அவர் 'தகவல் தெரியாது' என்கிறார். போட்ட வண்டி அங்கேயே மக்கி மண்ணாகிப் போய்விடுகிறது. இந்த நிலையில் அங்கே உள்ள விவசாயிகளுக்கு இந்த சர்க்காருடைய காட்டிலாகாவினால் என்ன நன்மை இருக்கிறது என்றுதான் புரியவில்லை. இதைப் பரிசீலனை செய்து, விறகு விற்கும் விவசாயிகளுக்கு பாதகம் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கேதான் காவல் செய்வதற்கு பாரஸ்ட் ரேஞ்சர், பாரஸ்டர், கார்டு, வாட்சுமேன் இன்னும் எத்தனையோ சிப்பந்திகள் இருக்கிறார்களே அவர்கள் அங்கேயே வேலைசெய்வதை விட்டு, வண்டி வெளியே வந்தால் போதும், ரோட்டு மேலே வந்தால் வண்டிகளை மடக்கி மடக்கி மணியக்காரரிடம் கொண்டுவிட்டு வண்டி எல்லாம் பாழாகும் வகையில் செய்கிறார்கள். அது விவசாயிகளுக்குப் பாதகமாகவும் இருக்கிறது. ஆபத்தாகவும் இருக்கிறது. எங்களைப் போன்றவர்களுக்கு வேதனையாகவும் இருக்கிறது. அதற்குத் தக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியிலே, ஏரிகளிலெல்லாம் கருவைக் கன்றுகளை வைத்து நடுகிறார்கள். ஏரியில் தண்ணீர் நிறைய வரும்போது, இந்தக் கன்றுகள் மூழ்கிச் செத்துப் போகின்றன. இதனால் எந்தவித பயனும் இல்லாமல் போகிறது. ஆகவே, இந்தக் கன்றுகளை நடும் போது, மலையாளத்திலே தென்னம் பிள்ளைகளை கரை மடித்துவிட்டு

24th March 1966] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

கரைமேல் நடுவதுபோல, கரை மடித்து விட்டு நட்டால், தண்ணீர் அதிகமாக வந்தாலும், இந்தச் சின்ன கன்றுகளுக்கு பாதகம் ஏற்படாமல் இருக்கும். பின்னால் தண்ணீர் குறையும் போது தானாகவே வளர்ந்துவிடும். அதை விட்டு விட்டு, சும்மா கருவைக் கன்றுகளை ஊர் ஊராக நட்டுவிட்டு கன்று நட்டார்கள், கன்று நட்டார்கள் என்று சொன்னால் மட்டும் போதாது. இவ்வளவு சிரமப்பட்டு, செலவு செய்து செய்யப் படுகிறது நல்ல முறையிலே நடத்தப்பட்டு, மக்களுக்குப் பயன் அளிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக, சவுக்கை மிலாறுகளை பாண்டிச்சேரிக்கு எடுத்துப் போவதைத் தடுக்காமல், அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் அந்த விவசாயிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும், அதற்கான உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவு எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, எனது பெயரில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தி, இதிலே தான் இருக்கிறது முக்கியமான சமாசாரம் என்று சொல்லி என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

திரு. நா. துரைப்பாண்டியன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வனத்துறை ஆய்வுரையைப் படிக்கும் போது, என்னுடைய ஜில்லாவாகிய திருநெல்வேலி ஜில்லாவிற்கு எந்த விதமான முக்கியத்துவமும் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக வன விலங்குகள், பறவைகள் இவற்றை வளர்ப்பது பற்றி நல்ல முறையிலே பணிகள் செய்யப் படுவதை வரவேற்கிறேன். ஆனால், சர்க்காருடைய பாதுகாப்பில் பல ஊர்களிலும் இந்த வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதே சமயத்தில், நாங்குநேரிப் பகுதியில், மூன்றடைப்பு என்கிற ஊர் இருக்கிறது. அங்கே மரங்கள் இருக்கின்றன; லட்சக் கணக்கான பறவைகள் மழை காலத்தில் வந்து தங்குகின்றன. பல இடங்களிலிருந்தும் அந்தப் பறவைகள் வருகின்றன. அங்கே ஒரு போர்டு மட்டும் தொங்குகிறது. சர்க்காரிலே எழுதி வைத்திருக்கிறார்கள். "தின்று பார்க்கவும்" என்றிருக்கிறது. ஆனால் ஒரு சில மாதங்கள் கழித்து பார்க்கிறபோது, பறவைகளையும் காணவில்லை, அந்த போர்டையும் காணோம். அந்த ஊரில் உள்ளவர்களெல்லாம் மாமிசம் சாப்பிடுகிறவர்கள். என்றாலும், கட்டுப்பாடாக யாராக இருந்தாலும் அந்தப் பறவைகளைச் சுடக் கூடாது என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு மக்களே ஆர்வத்தோடு பறவைகளைக் காப்பதில் விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏற்கனவே அங்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புகளையும், வசதிகளையும் சர்க்கார் நன்கு பயன் படுத்தி, தக்க வகையில் அதைப் பெரிதாகச் செய்ய வேண்டும். அங்கே உள்ள பெரிய ஏரி

[திரு. நா. துரைப் பாண்டியன்] [24th March 1966

மணிமுத்தாரோடு சேர்ந்தது. அதை நல்ல வகையில் ஆழப்படுத்தி, வருஷம் பூராவும் அதிலே தண்ணீர் தங்கும் வகையில் வலுப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பறவைகள் வருஷம் முழுவதும் அந்த இடத்தை விட்டுப் போகாமல் இருக்கும். அந்த வகையில் தக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் குந்தவளம் என்கிற ஊர் இருக்கிறது. அங்கேயும் ஏராளமான பறவைகள் வருகின்றன. அங்கே உள்ள குளத்தைப் பலப்படுத்தி, தண்ணீர் தேங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மான் வளர்ப்பும் மிக முக்கியமானதுதான். அந்தக் காலத்திலேயே மானின் அழகைப் பார்த்து சீதை, அந்தக் கவர்ச்சியான அழகு உள்ள மான் வேண்டும் என்று கேட்க, அதன் மூலம் ஒரு கதையே வளர்ந்தது ராமாயணத்தில் தெரிகிறது. அந்த அளவுக்கு மான்களை ஊர் ஊராக வளர்க்க வேண்டும் என்பது வரவேற்கத்தக்கது. கிண்டியில் சர்க்காரிலே மான் வளர்ப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது தமிழகத்திலேயே சிறந்ததாக இருக்கிறது. அதே மாதிரி ஒவ்வொரு கிராமத்திலும், பஞ்சாயத்துக்கள் மூலமாக, பொலிக்காளைகள் கொடுத்து வளர்ப்பது போல, மைனர் பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்துக்கள் மூலம் மான், மிளா, மயில் இவற்றை வளர்க்க அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாடு ஆடு மேய்ச்சலுக்கு வரி மூலம் வாங்குவது மாநிலத்தில் பூராவாக கிட்டத்தட்ட 5½ லட்சம் ரூபாய் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு ஜில்லாவாகப் பார்க்கும்போது, ஒரு சிறிய தொகைதான் வரும். அதன் காரணமாக பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் வேலை செய்கிறவர்கள் ஊர்களில் உள்ள ஜனங்களை இம்சிக்கிறார்கள். ஆகவே இந்த வரியை இல்லாது செய்துவிட்டால் நலமாக இருக்கும். கிராம மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். ஒரு பக்கத்திலே, கால்நடைகளை விருத்தி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். மறு பக்கத்தில், உணவுப் பஞ்சத்தை ஒழிக்க ஓரளவு மாமிசம் உண்பது பயனுள்ளதாக இருக்கும் என்றும் சொல்லுகிறோம். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது, இந்தக் கால்நடைகளை வளர்க்க வசதியாக அந்த வரியை ரத்து செய்துவிடவேண்டும் என்பதுதான்.

மலை ஓரத்தில், ஆடு மாடுகளுக்கு புல் வெட்டி வந்தால், ஒரு கட்டுக்கு இவ்வளவு என்று வரி வசூலிக்கிறார்கள். அம்மாதிரி சர்க்காரிலே இருக்கிறதோ என்னவோ, அங்கே உள்ள அதிகாரிகள் அப்படி வசூலிக்கிறார்கள். புல், விறகு இவற்றைக் கொண்டு வந்தால் அவற்றிக்கு வரி வசூலிக்கிறார்கள். அந்த ஊர் விவசாயிகள், புல், விறகு இவற்றைக் கொண்டு வந்து விற்று வாழ்க்கை நடத்துகிறவர்கள். அவர்களை இந்த உத்தியோகஸ்தர்கள் இம்சிக்கிறார்கள். ஆகவே, இந்த வரியையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ருல்

24th March 1966] [திரு. நா. துரைப் பாண்டியன்]

இல்லை என்றால் அந்த அதிகாரிகளுக்கு, 'புல்' வெட்டிக் கொண்டு வந்தால், அதை மறித்துப் பிடுங்க கூடாது என்று உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொளுகிறேன்.

அடுத்தாற்போல், கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரை கடற்கரை ஓரமாக நிறைய நிலம் இருக்கிறது. காற்றுக் காலத்தில் மணல் தான் வீசுகிறதே தவிர, எந்தவிதமான பலனும் உருவாவதில்லை. விவசாயிகள் அதைத் தாங்களாகவே பட்டா வாங்கி அதில் ஏதாவது செய்யலாம் என்றால், அந்த அளவிற்குப் பிரியம் அவர்களிடம் இல்லை. ஆகவே, கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரை கடற்கரை ஓரமாக உள்ள இடங்களில் சவுக்கு மரம் வைத்து வளர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். 10-30 a.m.

மான் வளர்ப்பு சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாங்குனேரி தாலூகா வறண்ட பிரதேசம். அங்கு ஒரே ஒரு இடத்தில் மட்டும் செழிப்பாகப் புல் இருக்கிறது. நாங்குனேரியிலிருந்து களக்காட்டுக்குப் போகும் ரோடில் ஏர்வாடிப் பக்கம் ஏராளமான நிலம் காட்டிலாகாவிற்குச் சொந்தமாக இருக்கிறது. அதில் சின்னச் சின்ன கன்றுகள் வைத்து வளர்க்கிறார்கள். அந்த இடத்தை மான் வளர்ப்புக்கான இடமாகத் தேர்ந்தெடுத்து அங்கு மான், மிளா, மயில் இப்படிப்பட்டவைகளை வைத்து வளர்க்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, காட்டிலாகா மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். கிராம ஓரங்களில் எல்லாம் காட்டிலாக்காக்காரர்கள் கல் ஊன்றி விடுகிறார்கள். அவர்களுடைய லிமிட்டை வீட்டு ஓரங்களிலே வைத்துக்கொள்ளுகிறார்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் புதுப்பட்டணம், கால்நாட்டான்குடி என்ற கிராம ஓரங்களில், வயல் ஓரங்களில், வீட்டு ஓரங்களில் காட்டிலாக்காக்காரர்கள் நிலம் எடுத்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்குப் பெரும் கஷ்ட நஷ்டமாக இருக்கிறது. அந்தக் காட்டிலாகா எல்லைக்குள்ளே கால்நடைகள் போய்விட்டால், விரட்டியடித்துத் தொந்தரவு பண்ணுகிறார்கள். கிராம ஓரங்களில், விவசாய நில ஓரங்களில் நிலங்களைக் காட்டிலாகா எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதி இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஆயிரம் அடி தூரமாவது குடியிருப்பு இடத்திலிருந்து காட்டிலாகா எல்லை தள்ளியிருக்க வேண்டும். காட்டிலாகா நிலங்கள் எல்லாம் அப்படித்தான் தள்ளியிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கும் காட்டிலாவிற்கும் இதனால் அடிக்கடி தொந்தரவாக இருக்கிறது. ஏழை விவசாயிகளைக் கேஸ் போட்டுக் கஷ்டத்திற்கு உள்ளாக்குகிறார்கள். கிராம நிலத்திலிருந்தும், குடியிருப்பிலிருந்தும் ஆயிரம் அடிக்குத் தள்ளிதான் காட்டிலாகா நிலங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற விதி அவசியம் செய்யப்படவேண்டும்.

கனம் சபாநாயகர் : ஆயிரம் அடி விட்டுவிட்டாலும், இடையிலே இருக்கிற இடத்தில் வீடு கட்டினால் என்ன செய்வது ?

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இப்பொழுது எடுக்கிறபோது அம்மாதிரி செய்தால் போதும் என்று தான் சொல்லுகிறேன்.

கனம் சபாநாயகர் : பின்னால் 'என்க்ரோச்மென்ட்' செய்து விட்டால் என்ன செய்வது ?

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : அது எப்படியிருந்தாலும் கிராம நிலங்களை ஒட்டி எடுத்துக்கொள்வதால் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதற்கு நான் குறிப்பிட்டபடி ஒரு விதி கண்டிப்பாகச் செய்யவேண்டும்.

கிழக்கு இராமனதபுரம் பகுதியில் காட்டிலாகாவே பனை மரம் வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். என்ற இரண்டு மூன்று தடவை இந்த மன்றத்திலே நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். இப்பொழுது அங்கேயிருக்கும் பனை மரங்களெல்லாம் அழிக்கப் பட்டு சுண்ணும்புக் காளவாயிலே போய்ச் சேர்ந்து கொண்டிருக் கின்றன. இளம் மரமாக இருக்கும்போதே, அழித்துவிடுகிறார்கள். புறம்போக்கில் இருந்த மரங்களெல்லாம் பெரும் பகுதி அழிந்து போய் விட்டன. பனைமரங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அழிய ஆரம்பித்து விட்டன. எங்கள் ஜில்லாவில் நூற்றுக்குத் தொண்ணூறு வீடுகள் பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய ஓலை களினால் வேயப்பட்டவை. பனை கைமரங்கள், பனையோலை, பனை நார் முதலியவைகளைக் கொண்டே எங்கள் பக்கத்து வீடுகள் பெரும்பாலும் அமைக்கப்படுகின்றன. இப்பொழுது பனை மரங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அழித்துவருவதனால், பனையோலை கிடைப்ப தில்லை; பனை மரம் கிடைப்பதில்லை. அந்தப் பொருள்களுக்கு இப்பொழுது ரொம்ப கிராக்கி வந்துவிட்டது. அதனால் பெருத்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கு இராமனதபுரம் பகுதி ரொம்ப வளமான பனை மரம் உண்டாகக்கூடிய இடங்கள். தென்னை அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்லி பனை மரத்தை அழிக்கிறார்கள். பனை மரத்தை அழித்துத் தென்னை அபிவிருத்தி செய்யக் கூடாது. அதை நிச்சயமாகத் தடை செய்யவேண்டும். காட்டிலாகாவிலே பனை மரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பனை மரத்திலிருந்து வீடுகட்ட கைமரங்கள், ஓலை, நார் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன. பனை ஓலையைக் கொண்டு அந்நாய் பிராந்தியங்களில் குடிசைத் தொழில்கள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. செட்டிநாட்டிலே பெண்களெல்லாம் தனிமுறை தனி முறையாக நல்ல அழகான பெட்டிகள் எல்லாம் பின்னுகிறார்கள்.

அவர்களுக்கு அது நல்ல தொழிலாக இருக்கிறது. பனைமரம் அழிந் தால் இந்த நல்ல தொழிலே நசித்துப் போகும். ஆகையால், பனை மரங்களை விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பனை யிலிருந்து நல்ல உணவு கிடைக்கிறது. மத்திய உணவு அமைச்சர் அவர்கள் கூட ஒரு கருத்துத் தெரிவித்தார்கள். "முன்பு ஒரு நேரம் கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள், இப்பொழுது கள் இல்லாததால், எல்லா வேளையும் அரிசி உணவே சாப்பிட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால் அரிசி அதிகமாகத் தேவைப் படுகிறது" என்று கூட ஓரிடத்தில் பேசியிருக்கிறார்கள். பனை மரத்திலிருந்து கள் கிடைத்தது என்பது மட்டுமல்ல. பதநீர் கிடைக்கிறது. நுங்கு கிடைக்கிறது. பனம்பழம் கிடைக்கிறது. பனங்கிழங்கு கிடைக்கிறது. பனங் கோந்தை கிடைக் கிறது. அம்மாதிரி இன்றியமையாத உணவுப் பண்டங்கள் பனை மரத்திலிருந்து கிடைக்கின்றன. எங்கள் பக்கத் திலே பனைமரம் பலன் தரும் காலத்தில் பார்த்தாலும் ஒரு வேளை அரிசி உணவு சாப்பிட்டு, மற்ற நேரம் பூராவும் இப்படிப் பட்ட உணவையே நல்ல பிரியமாகச் சாப்பிடுவதுண்டு, ஆகையால், இந்தப் பனை மரம் ரொம்ப இன்றியமையாததாக இருக்கிறது. உணவுப் பஞ்சம் நாட்டில் இவ்வளவு ஏற்பட்டிருப்பதைத் தவிர்க்கக் கூடிய மிகவும் பிரயோசனமாக இருக்கும் பனை மரம் புறக்கணிக்கப் படுகிறது. அதைக் கட்டாயமாக அபிவிருத்தி செய்யவேண்டும். காட்டிலாகாவிற்குச் சொந்தமான நிலங்களிலும் சரி, புறம் போக்கு நிலங்களிலும் சரி, பனை மரத்தை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

காட்டிலாகாவில் இப்பொழுது மரங்களை வளர்ப்பதில்தான் ஒரே ஆர்வமாக இருக்கிறார்கள். மரங்களைத்தான் வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். காட்டிலாகாவிலே நல்ல தரமான தழை உரம் கிடைப்பதற்கும் ஆங்காங்கு ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயத்தைப் பெருக்குவதற்கு மிக இன்றியமையாத தழை உரங்களைக் காட்டிலாகாவிலேயே சேமித்துக் கொடுக்கக் கூடிய நிலையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அமைச்சர் அவர்கள் விவசாயத்திலே நல்ல அனுபவம் உள்ளவர்கள். தழை உரத்தைப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்கள் டிபார்ட் மெண்டிலேயே எங்கெங்கே காட்டிலாகா நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு பகுதியைத் தழை உரத்திற்காக ஒதுக்க வேண்டும். அங்கு நிறைய தழை உரத்தை உற்பத்தி பண்ணி, பக்கத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு சல்லிசான விலையில் கிடைக்கக்கூடிய நிலை இருந்தால், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு ரொம்ப லாயக்காக இருக்கும்.

எனக்கு முன்பு பேசியவர்கள் கூட, ஆடு மாடுகள் மேய்வதினால் கஷ்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வகையில் ஏதோ சின்ன தொகை தான் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. விவசாயி களெல்லாம் தங்களுடைய ஆடு மாடுகளைப் பக்கத்தில் உள்ள காடுகளுக்கு எந்தவித பாதகமும் இல்லாமல், அனுப்பி, மேயவிடு

[24th March 1966

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]

வதை அனுமதிக்கவேண்டும். மரம் உயரமாக வளர்ந்த பிறகு ஆடுமாடுகளைக் காட்டிலே 'ஃப்ரீ'யாக மேய அனுமதிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப் புறங்களில் எல்லாம், கிராமக் காடு வளர்ப்புத் திட்டம் இருக்கிறது. கருவேலமரம் வளர்ப்பது எவ்வளவு பிரயோசனமாக இருக்கிறது என்று சொன்னார்கள். முன்பு பேசியவர்களும் சொன்னார்கள். ஏரிகளில் முட்டு முட்டாகக் குவித்து மரங்கள் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது நல்லதல்ல, தரையிலே தான் வைக்கவேண்டும். கருவேலமரம் தண்ணீரில் இருந்தால் சரியாக வராது என்று சொல்கிறவர்கள், சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். அது தண்ணீரிலேயே வளரும் மரம். தண்ணீர் வரும்போது அதில் மூழ்கியிருந்து, பிறகு தண்ணீர் குறைந்தவுடனே வளர்ந்து மேலே வந்துவிடும். ஆகவே, எல்லா ஏரிகளிலும் கம்ப்ளீட்டாக கருவேலமரம் வைக்க வேண்டும். இத்தனை ஏக்கரில் நான் வைக்கவேண்டும், இந்த இடத்தில் தான் வைக்கவேண்டும் என்பது இல்லை. எல்லா ஏரிகளிலும் கம்ப்ளீட்டாகக் கருவேல மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால், கருவேல மரங்களினால் கால்நடைகளுக்கு நல்ல உணவு கிடைக்கும். அவர் விவசாயத்திற்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும். அதை ஒரு திட்டமாக எடுத்துக்கொண்டு எல்லா இடங்களிலும் கருவேல மரங்களை வளர்க்கவேண்டும். ஆனால், அந்தமாதிரி இடங்களில் பாதுகாப்பு இல்லை. அந்த மரங்களை வளர்த்தாலும் கூட பாதுகாப்பு வேண்டும். அதற்குக் காவல் வேண்டும். அரசாங்கமே அந்த ஏரிகளில் இருக்கிற மரங்களைப் பாதுகாக்க காவலுக்காகும் செலவை ஏற்றுக்கொண்டால்தான் நல்லதாக இருக்கும். மண் வளமான இடங்களாக ஆவதற்கு இப்படிச் செய்வது மிக முக்கியம். ஜமீன்தார் காலத்தில் அந்தமாதிரி பாதுகாக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த நிலை எல்லாம் போய்விட்டது. மற்ற இடங்களிலும் வளமான மரங்களை உண்டு பண்ணலாம். அந்தமாதிரியான இடங்களை எடுத்துக்கொண்டு நல்ல மரங்களை வளர்ப்பதற்கு நாம் பிரயாசைப் படவேண்டும். தழை உரங்கள் மிக அவசியமாக இருக்கிறது. காடுகளில் தழை உரத்திற்காகவே இடம் ஒதுக்க வேண்டும். விவசாய அபிவிருத்தியும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. இராசாங்கம் : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, காட்டிலாகா மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். காடுகளை அழித்தலிலும், காடுகளை உண்டாக்குவதிலும் அரசாங்கம் கடந்த 7 ஆண்டுகளாகத் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதைப் பார்க்கிறோம். காடுகளை அழித்தல் என்கிறபோது விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக என்று சொன்னார்கள். விவசாய அபிவிருத்தி என்பதாக காடுகளை அழித்து வந்திருக்கிற காரணத்தினால் இன்றைக்கு

24th March 1966] [திரு. நா. இராசாங்கம்]

விவசாய உற்பத்திதான் குறைந்தது. நாம் நல்ல எண்ணத்தில் செய்திருந்தாலும் அது இப்போதுதான் சரியில்லை என்பது புரிகிறது. முன்பு மரம் நடும் விழாவில் ஒரு அதிகாரி பேசும் போது ஒரு பக்கத்தில் சர்க்கார் மரத்தை அழிக்கவேண்டும் என்கிறது, இன்னொரு பக்கத்தில் உண்டாக்க வேண்டும் என்கிறது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அழிப்பது என்பது கூடாதென்பதே அவர்கள் கருத்து.

இன்றையதினம் காட்டிலாகா மரத்தை உண்டாக்குவது என்கிறபோது சவுக்குக் காடுகளையே உண்டாக்குகிறார்கள். சவுக்குக் காடுகளை உண்டாக்குவது என்பதை தனிப்பட்டவர்களிடத்தில் விட்டுவிடலாம். சர்க்கார் காட்டு இலாக்கா மூலமாக மரங்களை வைத்து வளர்ப்பது, பாதுகாப்பது என்றால் அது தேக்கு, கருங்காலி, சந்தனம் போன்ற உயர்ந்த மரங்களாகவே இருக்க வேண்டும். இது போன்ற உயர்ந்த மரங்களை வைத்தே பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அப்போது தான் சர்க்காருக்கு லாபம் கிடைக்கும். அந்த மாதிரி பார்க்கிற போது இன்றைய தினம் கொள்ளிடக் கரையோரமாக 12 மைல் தூரம் சவுக்கை வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக விலை உயர்ந்த மரங்களை வைத்துப் பராமரிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காடுகள் இல்லாத காரணத்தினால் பறவைகள் இல்லாமல் போய்விட்டன. மனிதர்கள் வாழ்வதற்கே உயிர் கொடுக்கிற பறவைகள் எல்லாம் முன்பு இருந்திருக்கின்றன. குறிப்பாக வௌவால் என்ற பறவை இருக்கிறது. அது நம் எல்லோருக்கும் தெரியும். வௌவாலை எடுத்துக்கொண்டால் அது மிக அத்தியாவசியமான மருந்துகளுக்கு எல்லாம் பயன்படுகிறது என்கிறார்கள். ஆனால் இன்றைய தினம் கிராமப்புறங்களில் வௌவால்களையே பார்க்க முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற சிறுசிறு காடுகள் அழிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்தபடியாக வேடந்தாங்கல் என்ற இடம் இருக்கிறது. பல்வேறு நாடுகளில் இருந்து பறவைகள் வந்து அங்கே தங்குகின்றன. அது ஒரு காடு இல்லை. நூறு நூற்றைம்பது மரங்கள் தான் இருக்கின்றன. சுற்றிலும் உள்ள குளம், குட்டை ஆகியவற்றின் நீர் ரொம்ப ஆபாசமாக இருக்கின்றது. அதற்கென்றே தனியான நிர்வாகம் இருக்கிறது. அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்தி, புதுத் தண்ணீர் விட்டால் போகிறவர்கள் குளிக்கவோ, அருந்தவோ கூட மிக உபயோகமாக இருக்கும், அதற்கு அந்த நிர்வாகம் ஆவன செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் மலையைச் சுற்றிலும் ஓரத்தில் உள்ள இடங்களை எல்லாம் காட்டிலாக்கா என்றே குறித்துவிடுகிறார்கள். மலைசாதி மக்கள் கீழே இறங்கி, ஏற வழியில்லை. காலைக் கீழே வைத்தால் காட்டிலாக்கா ஆகிறது. அது கூடாது. கீழே குடிசை போட்டுக் கொள்ள வேண்டுமென்றாலும் முடிவதில்லை. ஆகவே குறிப்பிட்ட

ஒவ்வொரு இடத்திலும் சில பகுதிகளை ஒதுக்கித்தரவேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, எனக்கு நேரம் இல்லாத காரணத்
தினுல் என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

* திரு. பி. வி. சிராமுலு: கனம் தலைவர் அவர்களே,
இந்தக் காட்டிலாகா மானியத்தைப் பற்றி என் கருத்துக்களைக்
கூற முற்படுகிறேன். குறிப்பாக, இந்த இலாக்கா ஆண்டு ஒன்றுக்கு
3½ லட்சம் டன் விறகு விற்று வருகிருர்கள் என்பதைப் பார்க்கும்
போது பத்தாண்டு காலத்திற்குப் பிறகு இந்த நாட்டில் விறகுப்
பஞ்சமே வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. அதோடு
மட்டுமல்ல. நான் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இந்த
இலாக்காவைப் பற்றிக் கூறும்போது எரிபொருள் வாயு நம் நாட்டுக்
குத் தேவை, வெளிநாடுகளில் எல்லாம், அண்டை நாடுகளில்
எல்லாம் எரிபொருள் வாயு தயார் செய்து ஒவ்வொரு வீட்டிற்கும்,
ஒவ்வொரு ஹோட்டலுக்கும் கொடுத்து உதவி வருகிருர்கள்
என்று கூறி வந்திருக்கிறேன். ஐந்தாயிரம் ரூபாய்க்கு விற்பனை
யாகும் ஹோட்டல்கள் என்ற அளவில் எடுத்துக்கொண்டால்
18-இல் இருந்து 28 ரூபாய்க்குள் அவைகளுக்கு எரிபொருள்
வாயுவுக்குச் செலவழித்தால் போதும். இந்த நாட்டில்
இந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டால் 2,000 ரூபாய்க்கு
விற்கும் ஹோட்டல் என்றுல் 300, 400 ரூபாய்க்கு தினமும்
விறகு வாங்க வேண்டியிருக்கிறது. அதுவும் விறகுப்
பஞ்சம். இதைப் போக்கவேண்டுமென்றுல் அரசாங்கமே எரி
பொருள் வாயுவைத் தயாரித்து சப்ளை செய்வதற்கான நடவடிக்
கையை இந்த காட்டிலாகா மேற்கொண்டாகவேண்டும்.
இன்றைக்கு தனிப்பட்ட ESSO கம்பெனி, கால்டெக்ஸ்
கம்பெனி, ஆகியவை எரிபொருள் வாயுவைத் தயாரித்து சிலிண்டர்
களில் அடைத்து 90 ரூபாய் அல்லது 100 ரூபாய் என்கிற அளவில்
விற்று வருகிருர்கள். தனிப்பட்ட கம்பெனி இன்று அப்படி எரி
பொருள் வாயுவைத் தயார் செய்து பெரும் முதலாளிகளாகப்
பார்க்கிருர்களே தவிர அரசாங்கமே தங்கள் இலாக்கா மூலமாக
இதை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் 40 அல்லது 30 ரூபாய்க்கு
நம்மால் மக்களுக்குக் கொடுக்க முடியும். இதற்கும் அரசாங்கம்
ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காடு வளர்ப்புத் திட்டம் கூட ஏரி, குளங்கள், அல்லது கண்மாய்
கள், ஆறுகள் ஆகியவற்றின் ஓரத்தில் வைக்க வேண்டுமென்று
இருந்தது. குறிப்பாக சேலம் மாவட்டம் மிகமிகப் பின்தங்கிய
மாவட்டம். சாத்தனூரை எடுத்துக்கொண்டால் பெண்ணை
யாற்றுக்கு ஒரு திட்டம் வகுத்து அந்த ஆற்றின் இரு பக்கங்களி
லும் காடுகள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு இருக்கிறது. அது
போல கே. ஆர். பி.-க்கு இரண்டு பக்கத்தில் மலை இருந்தும் கூட
காட்டிலாக்கா அங்கே கவனம் செலுத்தாமல் இருக்கிறது. அந்த
இரண்டு மருங்கிலும் சவுக்கு மரங்களையோ, யூகலிப்ட்ஸ் மரங்
களையோ வைப்பதைத் தவிர வேறு தேக்கு போன்ற மரங்களை
வைக்க கவனம் செலுத்த வேண்டும். அந்த கே.ஆர்.பி.

பகுதியில் இரு மருங்கிலும் காடுகளை வளர்த்து பார்ப்பதற்கு
அழகுள்ளதாகவும் செய்யவேண்டும். அதோடு மட்டும் அல்ல.
குறிப்பாக நாம் ஜப்பான், சீனு போன்ற நாடுகளில் இருந்து
கற்பூரம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறேம். கிட்டத்தட்ட
1½ கோடி ரூபாய்க்கு இறக்குமதி செய்கிறேம். இவ்வளவு
கற்பூரம் இறக்குமதி செய்தும் கூட காட்டிலாகா இந்த ஆண்டுதான்
பழநி மலையில் 1,400 ஏக்கராவில் கற்பூரம் உற்பத்தி செய்யத் திட்ட
மிட்டுச் செயல்படுகிறது. 1967-வது ஆண்டிலாவது அந்நியச்
செலாவணியை மிச்சப்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த
இலாகா கிட்டத்தட்ட ஒரு கோடி இருபத்தைந்து லட்சம் மானியம்
கேட்டிருக்கிறது. அந்த அளவுக்காவது அதை உற்பத்தி செய்ய
ஆவன செய்ய வேண்டும். கற்பூரம் நம் நாட்டு தேவாலயங்கள்,
ஏனைய தொழில்கள், ஏனைய மருந்துகள் ஆகியவற்றுக்கு எல்லாம்
பயன்படுகிற முக்கிய பொருளாக இருக்கிறது. நாமோ
ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய் அளவுக்கு இறக்குமதி செய்து
வருகிறேம். இதை உன்னிப்பாகக் கவனித்து கற்பூரத்தை நல்ல
முறையில் நம்முடைய மாநிலத்திலேயே வளர்க்க ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு கேள்விக்கு கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள்
பதில் சொல்லும்போது, சேஷசாயி ப்ரதர்ஸ் கம்பெனிக்காக
காட்டு இலாகா பதினைந்து லட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாய்
மூங்கிலை விற்க காண்ட்ராக்ட் கொடுத்திருப்பதனுல் நமக்கு எவ்வித
நஷ்டமும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதைப் பார்க்கும்
பொழுது அமைச்சர் அவர்கள் நஷ்டம் இல்லை என்று பதில்
சொன்னர்கள். ஆனுல் அந்த இலாகா டிரேட் காண்ட்ராக்ட்
பிரகாரம் நமக்கு நஷ்டம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று
அக்கவுண்டன்ட் ஜெனரல் குறிப்பிட்டிருக்கிருர்கள். அக்கவுண்
டன்ட் ஜெனரல் குறிப்பிட்டது உண்மையா, அல்லது அமைச்சர்
அவர்கள் சொன்னது தவறு. இந்த இரண்டையும் பரிசிலனை
செய்து அமைச்சர் அவர்கள் வேண்டிய விளக்கம் தர வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வெ. எல்லம நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே,
இன்று வனத்துறை மானியத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு
வந்துள்ளதை ஆதரித்து என்னுடை கருத்துக்களைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். வனத்துறை இலாகாவானது இந்த
நாட்டின் வளத்திற்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. பல
உறுப்பினர்கள் சொன்னதுபோல் நாட்டின் வளம், மழையையும்,
காட்டு வளத்தையும் நம்பியிருக்கிறது. எனது தொகுதியைப்
பொறுத்த வரையில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு மேல் மலைப்
பிராந்தியத்தைச் சேர்ந்ததுதான். அந்தப் பகுதியிலே நல்ல முறை
யிலே காட்டுவளத்தை உண்டாக்குவதற்குப் புதிதாக தேக்கு
மற்றும் கற்பூரம் போன்ற மரங்களைப் பயிரட்டு நல்ல முறையில்
அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இருப்பினுங்கூட
இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வனத்துறையைச்
சேர்ந்தவை, புஞ்சைக் காடுகளைப்போன்று தான் இருக்கின்றன.

போள்வலாம்பட்டிப் பகுதியிலே வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் 2,500 ஏக்கராக்களுக்கு மேற்பட்ட பிராந்தியம் வெறும் காடாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே மரங்கள் நட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மரங்கள் செம்மையாக வளரவில்லை. அங்கேயிருக்கின்ற மண் வளத்திற்குத் தகுதியான மரங்களைப்பார்த்து, மண் வளத்தை ஆராய்ந்து, அதற்கேற்ற மரங்களைப் பயிரிடுவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பாரஸ்ட் இலாகாவிலே சேர்ந்த பகுதிகளிலே ஆதிவாசிகள் மூன்று ஆயிரம், நான்கு ஆயிரம் பேர்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான வாழ்க்கை வசதி இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்கள் பாரஸ்ட் இலாகாவிலே வேலை செய்யும்பொழுது அவர்களுக்குக் கிடைக்கின்ற கூலி மிகமிகக் குறைவு என்று கேள்விப்படுகிறேன். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை அன்றாட வாழ்க்கைச் செலவுகளைச் சரி செய்யக் கூடிய அளவிலே உயர்த்துவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அங்கே குடியிருப்பு வசதி கிடையாது. பண்டைக் காலத்திலே குடிசைகளிலே குடியிருந்ததைப் போல் தான் அவர்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் காலனிகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம். ஆனால் மற்றவர்கள் இன்னும் விலங்குகளைப்போல் வாழ்கிறார்கள். இந்த இலாகாவிலுள்ள அதிகாரிகள், நான் மேலதிகாரிகளைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை, ரேஞ்சர் போன்ற அதிகாரிகள், கீழே வேலை செய்யக்கூடியவர்களை விலங்குகள் போல் நடத்துகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மனிதர்களாக நடத்தப்படுவதற்கு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இருப்பினும் அந்த வழக்கம் குறைந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அறிவு வளர்ச்சியடையக் கூடிய நிலையில் ஆவன செய்ய வேண்டும். அங்கேயுள்ளவர்களுக்கு நிலத்தை வைத்துக் கொண்டு சாகுபடி செய்ய முடியாதநிலை இருக்கிறது. ஐந்து ஏக்கர் நிலம் வரையிலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிலங்களைச் சாகுபடி செய்து கொள்வதற்குப் போதிய வசதிகள் அளிக்கப்படவில்லை. நிலங்களையெல்லாம் ஒன்றுசேர்த்துக் கூட்டுறவு முறையில் அவர்கள் சாகுபடி செய்துகொண்டு வாழ்க்கை வசதிசெய்து கொள்வதற்கு ஆவன செய்துகொடுக்கவேண்டுமென்று நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவை எல்லாம் நல்ல பாசன வசதி கிடைக்கக்கூடிய நிலங்கள்; அப்படிப் பாசன வசதி கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தும்கூட அவர்கள் மிகமிகக் கஷ்டப்படுகிறார்கள். பால மலை, புங்கஞ்சேரி, வெள்ளியங்கிரி, போன்ற பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். வெள்ளியங்கிரி அடிவாரத்திலே கிட்டத்தட்ட 500 அல்லது 600 பேர்களுக்கு மேலே 10 பேர்கள், 5 பேர்களாகக் குடியிருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரு இடத்தில் பாரஸ்ட் இலாகாவில் இடம் அமைத்துக்கொடுத்து, அவர்கள் குடியிருப்பதற்கு பெரிய கிராமமாகச் செய்துகொடுக்க,

அவர்கள் வாழ்வதற்கு வாழ்க்கை வசதி செய்து கொடுத்தால் அவர்கள் மூலமாக பாரஸ்ட் இலாகாவில் பணிபுரிவதற்கும் ஆட்கள் கிடைக்கலாம், அவர்களும் ஒரே இடத்தில் இருந்து நாகரிகமாக வாழ்வதற்குப் பழக்கப்படுத்திக்கொள்ளலாம். இதையும் அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலையிலே மழைபெய்கின்ற தண்ணீரானது கீழே விவசாயம் செய்கின்ற நிலங்களிலே வெள்ள காலங்களிலே புகுந்து நிலங்களைச் சாகுபடிக்குத் தகுதியற்றதாக்கி விடுகிறது. 1964-ஆம் ஆண்டில் பெய்த கடுமழையின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மணல் படிந்து விட்டது. இதைத் தடுக்க வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டபொழுது அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க இயலாது என்று கூறிவிட்டார்கள். அங்கேயுள்ள விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ஏக்கர்களுக்குச் சாகுபடி செய்ய வசதி செய்து கொடுக்கலாம். பாசனத் திட்டத்தின் மூலம் வசதிகள் செய்யலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே பாரஸ்ட் இலாகா நிலங்களையும், மற்ற நிலங்களையும் பிரிக்கக்கூடிய வகையில் எல்லையில் அணைக்கட்டுகள் அமைத்து அல்லது வெள்ளத் தடுப்பு நிலையங்களை அமைத்துத் தண்ணீரைத் தேக்கினால் மண் அரிப்பு ஏற்படாமல் செய்து அந்தத் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு, நிலங்களைக் கெட்டுப்போகாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். இதற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். புக்கஞ்சேரி, முண்டத்துறையிலிருந்து கீழே வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்த முண்டத்துறையிலே ஒரு அணையைக் கட்டினால் நல்லது. இது சிறுபாசனத் திட்டத்திலே சேர்க்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இதையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை இந்த ஆண்டாவது செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆ. துரையரசன்:** கனம் சட்டமன்றத் தலைவரவர்களே, காட்டு இலாகா மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். மரம் நடு விழா என்று ஒரு விழா நாட்டிலே நடத்தப்பட்டு வந்தது. சமீப காலத்திலேகூட அங்கொன்றும் இங்கொன்றுமாக அந்த விழா நடத்தப்பட்டது என்று அறிகிறேன். இந்த விழாவை ஆரம்பத்திலே துவக்கி வைத்தவர்கள் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. முன்ஷி அவர்கள். இந்த மரம் நடு விழா நடைமுறையிலே வெ[illegible] பெற்றதா என்றால் இல்லை. ஆண்டுக்காண்டு மரம் நடுவிழா [illegible]த்—பொ[illegible]லே அந்தந்த மாவட்டத்திலே, வட்டார மட்ட[illegible]ப்பத்தி அதிகாரிகள் ஒரு நாளைக் குறிப்பிட்டு 4, 2 குழிகளைத் [illegible]ளவிலே 2, 1 செடிகளை நட்டு, 4, 5 தினங்களுக்குப் பிறகு அந்தச் [illegible]ான்றவை பட்டுப்போகவும், நாம் மீண்டும் அதைப்பற்றிக்

மலைகளில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதிலே அரசாங்
கத்திற்கு அக்கறை இருக்கிறது. அந்த அக்கறை செயல்படு
வதிலே அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அபிப்பிராய
பேதம் இருக்குமோ என்று அஞ்சுகிறேன். கமர்ஷியல் கிராப்ஸ்
என்று சொல்லக்கூடிய பொருள்கள் அங்கே உற்பத்தி செய்யப்படு
கின்றன. ரப்பர் எஸ்டேட்டுகளை அரசாங்கம் நடத்த வேண்டு
மென்ற முறையிலே பப்ளிக் செக்டாரிலே சில இடங்களில் ரப்பர்
போட்டு நடத்தி வருகிறார்கள். ஆனால் வெறும் அதிகாரிகளை
மட்டும் போட்டிருக்கிற காரணத்தால் அங்கெல்லாம் அரசாங்கப்
பணம் விரயமாகிக் கொண்டுதான் இருக்கிறது; நஷ்டமாகி இருக்
கிறது. இந்த நிலையை நாம் ஒவ்வொரு இலாகாவிலும் பார்க்
கிறோம்; தொழில் இலாகாவிலும் பார்க்கிறோம். அனுபவம்
வாய்ந்த, எஸ்டேட்டைச் சார்ந்தவர்களை காண்ட்ராக்ட் சர்வீ
சில் போடலாம்; அவர்களைப் பர்மனென்டாகப் போட வேண்டு
மென்று சொல்லவில்லை. அவர்களைக் காண்ட்ராக்ட் சர்வீசில்
போட்டால் அவர்களுடைய அனுபவத்தையெல்லாம் உபயோ
கித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் இருக்கும்.

நண்பர் ராமையா அவர்கள் இலங்கை இந்தியர் ஒப்பந்தத்தில்
கையெழுத்துப் போட்டு வந்தவர். ஒப்பந்தம் சரியா தவறா
என்ற பிரச்னைக்கு நான் வரவில்லை; அது முடிவாகிவிட்டது.
அந்த முடிவை நிறைவேற்றும் போது பல லட்சக் கணக்கான
பேர்கள் வரப் போகிறார்கள். இலங்கையிலே தேயிலை இல்லா
விட்டால் இலங்கை அரசாங்கமே ஸ்தம்பித்து விடக்கூடிய நிலைமை
ஏற்பட்டு விடும். அதிலிருந்து அவர்களுக்கு 125 கோடி ரூபாய்
அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இலங்கை இந்தியர்களை
எல்லாம் அனுப்பட்டும்; நமக்குக் கவலை இல்லை. அங்குள்ள
அவ்வளவு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களையும் வரவழைத்
துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துபவர்களில் நானும்
ஒருவன். அங்கிருந்து வருபவர்கள் 35, 40 வயது உள்ளவர்களாக
இருக்கக்கூடும். இந்த ஊரிலும் அனுபவம் உள்ளவர்கள் இருக்
கிறார்கள். இருவரையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருந்தால் இவ்வளவுதான் சம்பளம்;
பி.ஏ. படித்திருந்தால் இவ்வளவு சம்பளம்; ஃபாரஸ்ட் இலாகா
சம்பந்தப்பட்ட பரீட்சைகள் பாஸ் பண்ணியிருந்தால் இவ்வளவு
சம்பளம் என்ற ரெட் டேபிசம் வந்து கொண்டே இருக்கிறது.
அமைச்சர் அவர்கள் 'காடிகாரிகல்'-ஆகச் சொன்னார்கள்; முத
லமைச்சர் அவர்களும் குறுக்கே எழுந்து பேசும்போது 'காடி
காரிகல்'-ஆகச் சொன்னார்கள். அனுபவம் வாய்ந்தவர்களைக்
காண்ட்ராக்ட் பேஸிஸில் எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள்.
அதோடு இலங்கையிலிருந்து வரக் கூடியவர்களின் அனுபவத்தை
யும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய
அதிகாரிகள் நல்ல முறையில் அட்மினிஸ்ட்ரேஷனைக் கவனித்துக்
கொள்ளலாம்; கவனித்துக் கொள்வார்கள்.

அட்மினிஸ்ட்ரேஷன் அவர்களிடம் விட்டு ப்ரொடக்ஷன்
லைன்டை அனுபவமுள்ளவர்களிடம் கொடுத்தால் மிக உதவியாக

இருக்கும். ஆகவே அரசாங்கம் ரெட் டேப்பிஸத்தை விட்டு
விட்டு, மூன்று வருடங்களாகச் சொல்லிக் கொண்டிருப்பதை
விட்டு, இதில் உடனடியாக முடிவு எடுக்க வேண்டும். தேயிலை
பற்றிச் சொன்னார்கள். உணவு அமைச்சர் அவர்களுக்கு இதில்
மிக்க அக்கறை உண்டு. அவர் பால்ய வயதிலிருந்து அன்னிய
நாடுகளில் இருந்தவர். அந்த நாட்டில் உள்ள நம் இந்தியர்களின்
பண்பு எல்லாம் தெரிந்தவர்கள். அவர்களை இங்கு கொண்டு
வந்து குடியமர்த்த வேண்டுமென்று சொல்லும்போது, மலைப்
பகுதிகளில் எவ்வளவு ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன.
வருகிறவர்களுக்குப் புனரமைப்பு செய்து கொடுக்க எந்தெந்த
பேஸிஸில் எப்படி எப்படிச் செய்ய முடியும் என்பதை அரசாங்கம்
கொள்கை அளவில் முடிவு செய்யவேண்டும். அந்தத்
தொழிலாளர்கள் வந்த உடனேயே தேயிலைத் தோட்டத்தை
ஆரம்பிக்க முடியாது. நம் அரசாங்கம் அவர்களுக்கு என்ன செய்ய
முடியும் என்பதை முடிவு செய்ய வேண்டும். காலஞ்சென்ற லால்
பகதூர் சாஸ்திரி அவர்கள் பார்லிமெண்டிலும், அரசாங்க ஸ்டேட்
மெண்ட்ஸிலும் உறுதி கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம்
அவர்கள் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் என்ற அளவில் சொல்லி
யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் எனக்குப் பதில் சொல்
லும்போதும் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் இம்
மாதிரி தேயிலை எஸ்டேட் போடுவது என்றால் அவர்களுக்கு எந்த
அளவிற்கெல்லாம் உதவி கொடுக்க முடியும், என் போன்றவர்கள்,
தேசத்தில் பொது வேலை செய்யக்கூடியவர்கள், அவர்களை
புனரமைப்புச் செய்வதில் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிச்
சிந்திக்கலாம். அப்படிச் சிந்திக்கக் கூட முடியாமல் இருக்கிறது.
மத்திய அரசாங்கம் என்ன செய்வார்கள், மாநில அரசாங்கம்
என்ன செய்வார்கள், எவ்வளவு ஆயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன,
ரப்பர் எஸ்டேட் போடுவதற்கு இடமிருக்கிறதா, எவ்வளவு இட
மிருக்கிறது என்ற ஒரு ஐடியா வரும்படி இந்த அரசாங்கம் தன்
கொள்கையைச் சொன்னால் மிக உதவியாக இருக்கும். இந்த
வருடத்திலிருந்தே வர ஆரம்பிக்கப்போகிறார்கள். குட்டி வியா
பாரிகள் இப்போது வருகிறார்கள். எஸ்டேட்ஸில் உள்ளவர்கள்
வரும் காலம் விரைவில் இருக்கிறது. பர்மாவிலிருந்து வந்திருப்ப
வர்கள் ஆங்காங்கு அலைகிறார்கள். ஒரு வழியில் அவர்கள் கஷ்டத்
தைப் போக்க ஓரளவிற்கு அரசாங்கம் உதவி செய்கிறது. அவர்
களைப் பார்க்கச் சங்கடமாக இருக்கிறது. பர்மாவிலிருந்து வந்
துள்ள அகதிகளின் நிலைமை இப்படியிருக்க இலங்கையில் இருந்து
வருகிறவர்களுக்கு இடம் வன இலாகாவாகத்தான் இருக்க முடியும்.
வன இலாகா தன் கன்சர்வட்டிவ் மைன்டை வைத்துக் கொண்டு
இதெல்லாம் நாஷனல் வெல்த், இதைப்பற்றி யாரும் பேசாதீர்கள்
என்று சொல்வதை மாற்றிக் கொள்ள வேண்டும். அரசாங்கத்
தின் கொள்கை என்ன? மத்திய அரசாங்கம் என்ன நினைக்கிறது?
மக்களின் பிரதிநிதிகளாக இங்கு வந்திருக்கிறவர்கள் என்ன
நினைக்கிறார்கள் என்பதை வைத்துக் கொண்டு மனதை மாற்றிக்
கொள்ளவேண்டும். திரு. பக்தவத்சலம் அவர்களிடம் ஃபாரஸ்ட்
இலாகா இருந்தபோது அவரைக் கூட்டிக்கொண்டு ஒரு
இடத்திற்குப் போனோம். இது நாஷனல் வெல்த், இங்கு அந்த

[திரு. ஆ. துரையரசன்] [24th March 1966

நடுவதற்கு மட்டும்தான் உத்தரவு போடப்பட்டதே தவிர,
தண்ணீர் விடுவதற்கு இல்லை என்று சொல்லக்கூடிய பரிதாப நிலை
யிலே பொதுமக்களுடைய வரிப்பணம் லட்சக்கணக்காக, பாழடிக்
கப்பட்டு வந்தது. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால்,
செடியை நடுவதைத்தான் பார்த்து இருக்கிறோம், நம்முடைய
சர்க்காரிலே மரத்தையே நடுவதற்குத் தலைப்படுகிறார்கள்.
மரத்தை வேரோடு கொண்டுவந்து எப்படி நடுவது என்றே புரிய
வில்லை. கிராமப்புறங்களிலேகூட இந்த விழா வேடிக்கையாக
இருக்கிறது. இதை நான் இங்கே வேடிக்கைக்காக எடுத்துச்
சொல்லவில்லை. அந்தத் திட்டம் ஒழுங்காகச் செயல்படவில்லை
11-00 a.m. என்பதைச் சுட்டிக்காட்டவே இந்த விவரங்களைத் தங்கள் மூலமாக
அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சாலை ஓரங்களில் சில செடிகளை நடுகிறார்கள். மக்களுக்கு
அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற, பலன் தருகிற செடிகளை
நட்டால் நலமாக இருக்கும். புளிய மாம் போன்ற தேவை
யானவற்றை நடலாம். தற்போது நிழல் கூடத் தராத மரங்களை
எல்லாம் நடுகிறார்கள். இதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து
பலன் தரக்கூடிய மரங்களாக நடுவதற்கு உத்தரவிட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களுடைய இலாகாவிலே ஒப்படைக்கப்பட்
டிருக்கிற காடுகள் ரெவின்யூ ஃபாரஸ்ட்ஸ், ரிசர்வ் ஃபாரஸ்ட்ஸ்
என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.
ரெவின்யூ ஃபாரஸ்ட் என்று சொல்லப்படுவதில் ஒரு சில நிலங்கள்
பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. பரம்பரை
பரம்பரையாக ஜமீன் நிலங்களாக இருந்த நேரத்தில் சில விவ
சாயிகள் அந்த நிலங்களை உழுது சாகுபடி செய்து வந்தார்கள்.
ஒரு சிலர் பர்பெச்சுவல் லீஸ்—சாசுவதக் குத்தகை—பெற்றிருந்
தார்கள். தரிசு நிலங்களை எல்லாம் ஜமீன்தார்கள் இனாமாகக்
கொடுத்து அதிலே விவசாயிகள் உழுது கொண்டிருந்தார்கள்.
அந்த நிலமெல்லாம் இன்றைக்குக் காட்டிலாகாவுக்குச் சொந்தம்
என்று கூறி எடுத்துக் கொண்டார்கள். அதிலே மரம் இருக்கிறதா,
செடி இருக்கிறதா என்பதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை.
தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள்
காட்டிலாகாவுக்குச் சொந்தம் என்றும், ரெவின்யூ இலாகாவுக்குச்
சொந்தம் என்றும் தரிசாகக் கிடக்கிற நிலைமையைப் பார்க்க
முடியும். பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் போகத்
தரிசாகக் கிடக்கும் நிலங்களை எல்லாம் ஏழை விவசாயிகளுக்குப்
பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கனம்
அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.
வேல
...டைய நாட்டிலே இன்னும் ஏராளமான எஸ்டேட்டுகள்
அல்ல...ன்றன. நாட்டுக்குத் தேவையான பல பண்டங்களை—
யிருந்த... கிராம்பு, ரப்பர் போன்ற பண்டங்களை—உற்பத்தி
இடத்தில் ...டிய பல எஸ்டேட்டுக்கள் இருக்கின்றன. நம்முடைய
அவர்கள் ...நாயக சோஷலிசத்தை உருவாக்குவது என்று ஒரு

24th March 1966] [திரு. ஆ. துரையரசன்]

புறத்தில் சொல்லி ஜமீன்தார்களையும், இனாம்தார்களையும் ஒழித்து விட்டு, மறுபுறத்தில் ஆளுங்கட்சிக்கு ஆக்கம் தருபவர்களாக இருக்கிற எஸ்டேட் சொந்தக்காரர்களை உருவாக்கிக் கொண்டிருக் கிறோம். முதலில் இந்த எஸ்டேட்டுகளை எல்லாம் தேசிய மயமாக்கும் நிலைமையை உருவாக்கினால் நாங்கள் ஆளுங்கட்சிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த இலாகாவிலே பணியாற்றுகிற காவலர்கள், எங்கள் கட்சித் தரப்பில் பேசிய வடிவேலு அவர்கள் சொன்னது போல், லஞ்சம் வாங்குகிறார்கள். ஆனால், அவர்கள் லஞ்சம் வாங்கும் அவசியத்தை ஏற்படுத்திக் கொடுத்ததே நம்முடைய சர்க்கார் தான் என்று என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் போதுமானதாக இல்லை. பக்கத்திலே அவரவர்களுடைய தோட்டங்களிலே வேலை செய்து விட்டு தோட்டத்தில் இருக்கும் விறகை வெட்டிக் கொண்டு காட்டுவழியாகப் போனாலும், அது காட்டில் இருந்து வெட்டிக் கொண்டு போவதாகச் சொல்லி, இரண்டு ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். அவ்வாறு கொடுக்காவிட்டால் பெயர், ஊரைக் குறித்து பல வழக்குகளைப் போடுகிறார்கள். என்னுடைய வட்டாரத்தில் ஒரே நாளில் 70, 80 பெண்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் அப்பாவிகள். இதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு காவலர்களைப் பற்றிப் புகார் எழுதினேன். மேலதிகாரிகள் விசாரணை செய்ய நட வடிக்கை எடுத்தார்கள். இந்த நிலைமைகளைத் தடுக்க அவர் களுடைய ஊதியத்தை உயர்த்த அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

ஜமீன் இனாம் காடுகளாக இருந்த நேரத்தில் காட்டு வழியாகப் பொதுப் பாதைகள் இருந்தன; பொது வாரிகள் இருந்தன. அந்த வாரிகளைப் புதுப்பிக்க வேண்டுமென்றால் காட்டு இலாகா அனுமதி இல்லாமல் புதுப்பிக்க முடியாது. பஞ்சாயத்து தீர்மானம் நிறை வேற்றி, கூட்டு மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும் அனுமதி பல இடங்களில் வழங்கப்படவில்லை. பல பொதுப் பாதைகளைச் செப்பனிட்டுக் கொள்ள முடியாத சூழ்நிலையும், வாரி களைச் செப்பனிட்டுக் கொள்ள முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. இதிலே உடனடியாகக் கவனம் செலுத்தி அவசரமாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, வன இலாகா மானியத்தில் சென்ற முறை நான் பேசியபோது அமைச்சர் மன்றாடியார் அவர்கள் கொள்கை அளவில் சில விஷயங் களை ஒத்துக்கொண்டார்கள். வன இலாகா நேஷனல் வெல்த்— தேசியச் சொத்து. அது, வியாபாரப் பொருள்கள் பல உற்பத்தி செய்து அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கக் கூடிய அளவிலே மிக மிக அவசியமான ஒன்று. குறிப்பாக, ரப்பர், டீ போன்றவை

[திரு. கே. டி. கோசல்ராம்] [24th March 1966

மரங்கள் இருக்கின்றன என்று சொல்லி யாரையும் கிட்டேயேவா
விடக்கூடாது என்று சொன்னார்கள். அவரைக் கூப்பிட்டுக்
கொண்டு போனேன். அங்கே ஓரே மணல் காடு, மனிதன் கால்
வைக்க முடியாது, மணலைத் தவிர ஒரு மரம் கிடையாது. அதை
நேரடியாகப் பார்த்தார்கள். இதேமாதிரி திரு. சஞ்சீவி ரெட்டி
யார் அவர்களிடம் இந்த பாரஸ்ட் இலாகா இருந்தபோது அவர்
களையும் கூட்டிக் கொண்டு போனேன். அதிகாரிகள் ஃபைலைப்
பார்த்து முடிவு செய்ய முடியாத அளவிற்குக் கொண்டு வந்து
விட்டார்கள். அதிகாரிகள் நாஷனல் வெல்த் என்று சொல்வதை ஒப்
புக்கொள்கிறேன். இருக்கிற நிலைமையை காட்டிக்காரிக்கலாகச்
சொல்ல வேண்டும். ஆக, இந்த இரண்டு விஷயங்களையும், ரப்பர்
எஸ்டேட்டை முன்னுக்குக் கொண்டு வர அனுபவம் வாயந்தவர்
களிடம் காண்ட்ராக்ட் பேஸில் அமைப்பது, இலங்கையிலிருந்து
வரக்கூடியவர்களைப் புனரமைப்புச் செய்வதற்கு இந்தத் தேயிலைத்
தோட்டத்திற்கு இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எந்த
அளவில் என்ன செய்ய முடியும் என்பதைச் சொல்லிவிட்டால் மிக
உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை
முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மதிப்
பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வனத்துறை
மான்யக் கோரிக்கையின் மீது பல கருத்துக்களை கனம் மெம்பர்
கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நான் என் நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். வனத்துறை எவ்வளவு தூரம்
வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று பார்க்கும்போது வருவாயை
வைத்துப் பார்ப்போமானால் 1964-65-ம் வருடத்தில் மூன்று கோடி,
ஏழு லட்சம் ரூபாய் வருவாய் அங்கிருந்து வந்திருக்கிறது.
அதற்கு முன்பு இரண்டு கோடிக்குக் கொஞ்சம் மேலாக இருந்த
வருவாய் மூன்று கோடி அளவிற்கு வந்திருக்கிறது என்று
சொன்னால் ஏற்கனவே வந்து கொண்டிருந்த வருவாய் அதற்குப்
பிறகு திட்டங்கள் வகுத்து, செடிகள் வைத்து புதுப்புது முறை
களைக் கையாண்டு, இருக்கக்கூடிய ஆலைகளுக்குத் தேவையான
மரங்கள் கொடுப்பது, மூங்கில் கொடுப்பது போன்ற இந்த வகை
களைச் சேர்த்துத்தான் இந்த வருவாய் அதிகரித்துக் கொண்டே
வருகிறது. ஆகவே, திட்டம் போட்ட நோத்தில், அந்த லட்சியம்
பூர்த்தி ஆகிற நிலையில் வருவாய் நிச்சயமாக உயர்ந்து கொண்டே
போகும் என்ற நம்பிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரி
வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது நிறைவேற இருக்
கிறது. 5,878 ஏக்கரில், ஏற்கனவே இருந்ததையும் சேர்த்து, தேக்கு
பயிரிடப்பட்டிருக்கிறது. மாச்சஸுக்கு வேண்டியது என்ற வகை
யில் 7,500 ஏக்கர் பயிரிடப்பட்டிருக்கிறது. சவுக்கு என்று சொல்
லும்போது, சிலர் சொன்னார்கள், சர்க்காருடைய முக்கியத்துவம்
இதற்கு எதற்கு, தனியார்களே இதை வளர்த்துக் கொண்டிருக்
கிறார்களே என்று சொல்கிறார்கள். அதை விட்டுவிட்டுச் சொல்
கிறேன். சர்க்கார் திட்டங்கள் மூலம் காட்டு இலாகா அக்கறை

24th March 1966] [திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

எடுத்துச் செய்த அளவில் 3,540 ஏக்கர்கள் மேலும் நடப்பட்டு
வளக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. வாட்டில் அன்ட்
ப்ளுகம் 23,138 ஏக்கர்கள் பயிரிடப்பட்டு இருந்து கொண்டிருக்
கிறது. மூங்கிலை எடுத்துக் கொண்டால், இப்போது 2,000 சதுர
மைலுக்கு மூங்கில் காடுகளில் இருக்கிறது. புதுத் திட்டங்
கள் போட்டு அதன் மூலம் நமக்கு இது அதிகம் தேவையாக இருக்
கிறது என்ற முறையில் 5,561 ஏக்கர் மூன்றாவது திட்டத்தின்
இறுதியில் இருக்கும் நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்
கள் ரப்பர் பற்றிச் சொன்னார்கள். 2,956 ஏக்கர் ரப்பர் பயிரிடப்
பட்டிருக்கிறது. ரப்பர் என்று சொல்லும்போது நான்காவது
திட்டத்தில் கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு பாக்டரி ஏற்பாடு
செய்வதற்கு, 1966-67-ல் ஒன்று வர இருக்கிறது. அது வரும்
போது அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்களே—இலங்கையி
லிருந்து வருகிறவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கொடுத்தால்—
அவர்கள் திறமையானவர்கள், அனுபவம் உள்ளவர்கள், படித்த
வர்கள் என்று சொல்லவில்லை என்று சொன்னாலும்—அவர்களால்
இதைச் செய்யமுடியும் என்று சொன்னார்கள். இந்த பாக்டரி
வரும்போது அவர்களை உபயோகித்துக் கொள்கிற ஒரு நிலை
ஏற்பட்டால் அது யோசிக்கப்படும் என்று தங்கள் மூலம் அவர்
களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காட்டு இலாகா பாதுகாப்பில் இருந்து வருகிற பல ஸாங்க்
சுவரீஸ் இருக்கின்றன. பட்சிகள் சரணாலயம், வொயில்ட் அனி
மல்ஸ் சரணாலயம் இவற்றிற்கு மக்களுடைய வரவேற்பு நிறைய
இருக்கிறது. பல இடங்களிலிருந்து வருகிறவர்கள் எல்லாம்
அவசியம் முதுமலைக்குச் சென்று பார்க்கவேண்டும், வேடந்தாங்க
லுக்குச் சென்று பார்க்கவேண்டும், கோடிக்கரைக்குச் சென்று
பார்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டு அங்குள்ள மக்களின்
ஒத்துழைப்பு இருக்கிற காரணத்தினால் நல்ல முறையில்
எல்லோரும் இவற்றைக் காண வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு
அவை நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன
என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். அதைப்போலவே முதுமலையைப்பற்றிச் சொன்னார்கள்.
அங்கு போவதற்கும் வருவதற்கும் சௌகரியங்கள் செய்து
கொடுக்கவேண்டும் என்று. அதைப் பற்றியும் அரசாங்கம்
கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

வேடந்தாங்கலில் இப்போது சில வசதிகள் செய்து கொடுக்கப்
பட்டிருக்கின்றன. அங்கு வந்து தங்கிப்போவோருக்கு ஒரு
ரெஸ்ட் ஹவுஸ் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உண
வருந்திச் செல்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதை
நமது முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவேண்டும் என்று
கேட்டிருக்கிறோம். கூடிய சீக்கிரத்தில் நமது முதலமைச்சர் அவர்
கள் திறந்து வைப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்] [24th March 1966

பொதுவாக இன்டஸ்ட்ரீஸ் வளரவேண்டும் என்று சொன்னால் காட்டினுடைய முக்கியத்துவத்தையும் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும். காகிதம் செய்வதில், விஸ்கோஸ்போன்ற பாக்டரிகளுக்கெல்லாம் காட்டிலாகா மூலமாகத்தான் அவர்களுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கான திட்டங்களையும் நாம் வகுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், விவசாயிகளை எடுத்துக்கொண்டாலும், காடுகளில், நன்றாக மரங்கள் வளர்ந்தால்தான் மழை பெய்ய முடியும், அதோடு விவசாயத்திற்குப் பல வழிகளிலும் காடு உதவுகிறது என்பதை விவசாயி என்ற முறையில் நான் சொல்லுகிறேன். நல்ல பச்சைத் தழைகள் வேண்டும், விவசாயத்திற்கு முக்கியமாக மழை பெய்ய வேண்டுமென்றால், காடுகளில் நல்ல மரங்கள் இருக்கவேண்டும்; காடு நன்றாக வளர்ச்சி அடைந்திருந்தால்தான் அதிகமான மழை பெய்ய முடியும், அதன் மூலமாகக் குளங்களிலும், ஏரிகளிலும், அணைகளிலும் நீரைத் தேக்கி வைத்து, விவசாயத்திற்கு உபயோகித்துக்கொள்ள மிக வசதியாக இருக்கும். நான் முன்பு சொன்னது போல், விவசாயத்திற்கு நல்ல தழை உரங்கள் வேண்டும்; நல்ல தழை உரங்கள் கிடைக்க வேண்டுமென்றால் நிச்சயமாக நாம் காடுகளைப் பெருக்கியாக வேண்டும்.

காடுகள் என்று சொல்லும்போது, காடுகள் குன்றுகளில் தான் இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியதில்லை. சாதாரண தரை மட்டமாக இருக்கக் கூடிய இடங்களிலும் காடுகளைப் பெருக்கலாம். இவ்விதம் பல காடுகள் இருக்கின்றன, அந்தந்த ஜில்லாக்களில், அந்தந்த தாலுகாக்களில், அந்தந்த பஞ்சாயத்துக்களில், இப்படி கணக்கைச் சொல்லிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்ட காடுகளில்கூட முன்பெல்லாம் முக்கியமாக செங்கற்பட்டு பக்கத்திலுள்ள காடுகளில் எல்லாம் மான்களை அதிகமாக அதாவது சென்னையிலிருந்து 10, 15 மைல் தூரத்தில் போய் பார்க்கலாம் என்ற நிலை இருந்திருக்கின்றது என்பதை நாம் படித்துத் தெரிந்து கொள்ள முடிகின்றது. அந்த முறையில் இருந்த ஒரு துண்டைதான் இப்போது கிண்டியில் பார்க்கின்றோம். அங்கேயே இப்போது ஆயிரக்கணக்கான மான்களை நாம் பார்க்கின்றோம். மற்றவை எல்லாம் அழிந்து விட்டன என்று சொல்லலாம். இந்த மாதிரியான காடுகள் நமக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. வன விலங்குகள் நமக்கு அதிகமாக இருக்கவேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம்.

இந்த நிலைமையில் காட்டு இலாகாவாக இருந்தாலும் சரி, வனத் துறையாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டும் என்று சொல்லும்போது, அங்கங்கே இருக்கின்ற பொது மக்கள், கிராம மக்கள் இவர்களின் ஒத்துழைப்பு அதிகமாக இருந்தால்தான் நாம் இதில் வெற்றி காணமுடியும். கிராமத்தில் ஏழை எளியவர்கள்தான் விறகுக்கு காட்டிலிருந்து மரங்களை எடுத்துக்கொண்டு செல்லுகின்றார்கள், பணக்காரர்களுக்கு என்றால் அரசாங்கம் சலுகை காட்டுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன பிரயோசனம்? ஏழை எளியவர்களாக

24th March 1966] [திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

இருந்தாலும்சரி, பணக்காரர்களாக இருந்தாலும்சரி, யார் நினைத்தாலும் காட்டை கலபமாக அழித்து விடலாம். இந்த நிலை இருக்கக்கூடாது. பெரியவர்களாக இருந்தாலும்சரி, சிறியவர்களாக இருந்தாலும்சரி, ஏழை எளியவர்களாக இருந்தாலும்சரி, பணக்காரர்களாக இருந்தாலும்சரி, காட்டை அழிக்க முற்படாமல், காடுகளை வளர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் காடுகளை நன்றாக வளர்க்க முடியும்.

அதைப்போலவேதான் மேலே இருக்கின்ற காடுகளிலுள்ள மரங்களையும் நாம் வளர்க்கின்றோம். தரை மட்டத்தில் இருக்கின்ற காடுகளை எடுத்துக்கொண்டால், செங்கற்பட்டு, தென்னாற்காடு போன்ற இடங்களில் அங்கிருக்கின்ற வசதிகளுக்கேற்ப பல செடிகளை வளர்க்கின்றோம். க்யாஷூ செடிகளை வளர்க்கின்றோம். இப்படிப் பட்ட முந்திரிச் செடிகளை வளர்ப்பதின் மூலமாக அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் வந்திருக்கிறது. 1964-65-ல் அரசாங்கத்திற்கு 2 லட்சத்திற்கு மேல் வருவாய் வந்திருக்கிறது. வருகின்ற ஆண்டில் இன்னும் அதிகமாக கிடைக்கும் என்று நினைக்கிறேன். மணல் பாங்கான சமுத்திர மட்டத்தில் இருக்கின்ற நிலத்தில் இது நன்றாக வளருகின்றது. பல இடங்களில் வைத்திருக்கிறோம். சில இடங்களில் நன்றாக வளருகிறது, சில இடங்களில் நன்றாக வளருவதில்லை. நன்றாக வளராத இடத்தை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு காட்டிலாகாவினர் வெட்டியாக இதில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. ஒரு சில இடங்களில் இப்படி ஏற்பட்டுவிடுகின்றன. இதை வைத்துக்கொண்டு எல்லா ஸ்கீம்களும் இப்படித்தான் கெட்டுப் போய் விடுகின்றன என்று சொல்லிவிட முடியாது. அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். காட்டிலாகாவின் மூலமாக அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வருவாய் ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதைத் தெரிவித்தேன்.

கனம் ஸ்ரீராமுலு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். 'அதாவது அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும்போது, 15 லட்சம் ரூபாய் அதிகமாக வந்திருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்' என்று சொன்னார்கள். நான் கொடுத்த கணக்கு என்னவென்றால், சென்ற ஆண்டு 13 லட்சம் ரூபாய், அதற்கு அடுத்த ஆண்டு 14 லட்சம் ரூபாய், பின்னால் 15 லட்சம் சில்லரை ரூபாய் என்றுதான் சொன்னேன். 'சேஷசாயி பிரதர்ஸ்-க்கு மூங்கில் கொடுத்ததில் எந்தவிதமான நஷ்டமும் வரவில்லை என்றும் சொன்னார்கள்' என்று சொன்னார்கள். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். . . அதாவது . . .

திரு. செ. மாதவன்: நான்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். அதாவது ஆண்டு ஒன்றுக்கு 15½ லட்சம் ரூபாய்க்கு மூங்கில் கொடுப்பதற்காக ஆறு ஆண்டுகளுக்கு காண்டிராக்ட் செய்திருக்கிறது அரசாங்கம். இந்த 'டெர்ம்ஸ் ஆஃப் காண்டிராக்ட்'டில் ஏற்பட்ட ஊழல் காரணமாக 1½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அக்கௌன்டன்ட்-ஜெனரல் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள் என்பதை அன்றைக்கும் சொன்னேன். இதை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதில் ஊழல் நடந்திருக்கிறது என்று சொல்ல நான் தயாராக இல்லை. அவ்விதம் ஊழல் ஒன்றும் இதில் நடைபெறவில்லை. காண்டிராக்டர்களுக்கு மூங்கில் வெட்டுவதற்கு என்று இத்தனை ஏக்கர் கூப்பு ப்பட்டிருக்கிறது. அவர்கள் சேஷசாயி பிரதர்ஸ்-க்கு சில டணங்களைச் சொல்லி, சப்ளை செய்கிறார்கள். மலைக்கு மேலே ந்து எடுத்துக் கொண்டு வந்து இன்னின்ன இடத்தில் எந்த ாவுக்கு கொடுக்கவேண்டும் என்று கணக்கு வகுத்துக்கொடுத் க்கிறார்கள். அதன்படித்தான் அவர்கள் செய்கின்றார்கள். வே இதில் எந்தவிதமான தவறுதலும் இல்லை என்பதை இந்தச் தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. சீராமுலு : மேற்படி காண்டிராக்டில் பார்வர்ட் காண்டிராக்ட் என்றுதான் இருக்கும். எக்ஸ் கோடவுன் என்று சொல்வதுபோல், எக்ஸ் பாரஸ்ட் என்று இராது. சேஷசாயி பிரதர்ஸ்-க்கு ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு கொடுத்திருக்கிறார்கள். இவ்விதம் காண்டிராக்ட் கொடுத்ததில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அக்கௌன்டன்ட்-ஜெனரல் சொல்லியிருப்பதோடு, இந்த டெர்ம் ஆப் காண்டிராக்டை மாற்றவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் நான் சொன்னேன்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : காண்டிராக்டில் எந்தவிதத் தவறும் இல்லை. மேலே இருந்து யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு வரலாம். சேஷசாயி பிரதர்ஸ்-காரர்களே நேரடியாகக் கொண்டு வரலாம். ஆனால் அப்படியில்லாமல் அவர்கள் ஒரு இடத்தில் கொண்டு மூங்கில்களைக் கொடுப்பதற்கு இத்தனை பைசா என்று கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. வேறு எந்தவிதமான தவறும் இல்லை. இதை நான் நேரடியாகப் போய் பார்த்திருக்கிறேன். காண்டிராக்ட்-காரர்களும் வந்து என்னைப்பார்த்துப் பேசினார்கள், சேஷசாயி பிரதர்ஸ் காரர்களும் என்னைப் பார்த்து பேசினார்கள். இன்னின்ன இடத்தில் தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சமாதானம் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இப்படியில்லாமல் வெட்டப்படுகின்ற இடத்திலிருந்து நேரடியாகக் கொண்டு போகின்றோம். யாராவது விரும்பினாலும் எடுத்துக்கொண்டு போகலாம். அவர்கள் காண்டிராக்ட்-காரர்கள் மூலம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காட்டிலாகாவில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் எழுந்தார் . . .

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I am not yielding.

திரு. ப. உ. சண்முகம் : On a point of order, Sir. அன்றையதினம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது

அரசாங்கத்திற்கு எந்த விதமான நஷ்டமும் வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அக்கௌன்டன்ட்-ஜெனரல் அவர்கள் . . . .

MR. DEPUTY SPEAKER : That is not a point of order. The Hon. Minister may continue his speech.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அன்றையதினமே இன்னும் சில விஷயங்களைச் சொல்லியிருக்கக் கூடும். ஆனால் யாரும் அதற்குத் தகுந்த சப்லிமென்டரி கேள்வி கேட்கவில்லை. கேட்டிருந்தால், இந்த விவரங்களைச் சொல்லியிருப்பேன். இதேபோல் மற்றும் சில மெம்பர்கள் சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பொதுவாக உள்ள விஷயங்களைத்தான் நான் சொன்னேன். 11-30 a.m.

குறிப்பாக சொன்ன விஷயங்களை எடுத்துக்கொண்டால், கனம் அங்கத்தினர் திரு. வடிவேலு அவர்கள் ஸ்பைக்நோய் (டிஸீஸ்) வருவதைப்பற்றி சொன்னார்கள். ஸ்பைக் டிசீஸ் வந்து சந்தன மரங்கள் கொஞ்சம் பாழ்பட்டன—இல்லை என்று சொல்லுவதற்கில்லை. ஒரு சில இடங்களில் இல்லையே தவிர நோய் இருக்கத்தான் இருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்காமல் இல்லை. மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், நம் மாநில அதிகாரிகளும், மத்திய சர்க்காரின் உதவியைக் கொண்டு இன்றைக்கு ரிசர்ச் செய்து என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இதுவரையில் சந்தன மரங்களைக் கூட வொயில்ட் க்ரோத் என்று நினைத்து வந்தோம். ஆனால் ஆராய்ச்சி செய்து, இன்றைக்கு 200 ஏக்கர்களுக்கு மேலாக காடுகளில் சந்தன மரத்தைப் பயிர் செய்து அதன் மூலமாகச் சந்தனச் செடிகளை உண்டாக்க முடியும் என்றும், அப்படி உண்டாக்கும் போது ஸ்பைக் டிஸீசில் போய்க்கொண்டிருக்கும் மரங்களுக்குப் பதிலாகக்கூட புதிதாக மரங்களை உற்பத்தி செய்யமுடியும் என்று திட்டங்களைப் போட்டு செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கருவேல மரங்களையெல்லாம் நிறைய குளங்களில், ஏரிகளில், கண்மாய்களில் நட்டுக்கொண்டிருக்கிறோம். நட்டுவிட்டுப் பஞ்சாயத்துக்களுக்குத் திருப்பி கொடுக்கிறோம். பஞ்சாயத்துக்கள் முன் வந்து செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டால், செய்தும் கொடுக்கிறோம். அதே போல வேண்டாம் என்று சொல்லும்போதுகூட, அவர்களிடம் எடுத்துச் சொல்லி, சம்மதம் வாங்கி பயிர் செய்துகொண்டிருக்கிறோம். ஹைப்ரிட், யூகலிப்டஸ் கூட வைக்கிறோம். கருவேல மரங்கள் வைக்கும் போது தண்ணீரால் கெட்டு விடுகின்றன என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் சொன்ன போதுகூட, விளக்கத்தை அவர்களே கொடுத்து விட்டார்கள். நடுகிற போதுகூட தண்ணீர் நின்று கொண்டிருக்கும் இடத்தை விட்டுத் தொலைவில்தான் நடுகிறார்கள். மரங்கள் செத்து விடுவது என்பது இல்லை. இதனால் பஞ்சாயத்துக்களுக்கு நல்ல வருவாய் கூட வருகிறது. இதில் இருக்கிற ஒரு கஷ்டத்தையும் சொல்ல எண்ணுகிறேன். சென்ற ஆண்டு பஞ்சாயத்துத் தலைவராக

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்] [24th March 1966

இருந்தவர் மரங்கள் நடவேண்டுமென்று சொன்னார்கள். எலெக்ஷன் வந்தது. புதிய பஞ்சாயத்துத் தலைவர் வந்து விட்டார். புதிதாக வந்தவர் நடவேண்டாம் என்று சொல்லுகிறார். நடுவதற்காக நாங்கள் நர்சரி எல்லாம் உண்டாக்கி வைத்திருக்கிறோம். சர்க்கார் திட்டமெல்லாம் வகுத்து, காட்டிலாகா மூலமாக 50 ஏக்கர் நிலத்தில் நட வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கும் போது, புதிதாக வந்தவர் நடக்கூடாது என்றால், நடுவதா, வேண்டாமா என்ற பிரச்னைகள் எல்லாம் வருகின்றன. இந்த விவாதத்திலே பேசிய கனம் அங்கத்தினர்களெல்லாம் சென்ற ஆண்டு மேய்ச்சல் தரை கெட்டு விடுகிறது என்று சொன்னவர்கள்கூட இந்த ஆண்டு அதிகமாக நடவேண்டுமென்று சொல்லக்கூடிய முறையில் நல்ல எண்ணம் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தேன் அதை குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

'துரை' வந்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆங்கிலேயர் இருந்த காலத்தில் 'துரை, துரை' என்று அழைத்த பழக்கமே தவிர 'துரை' என்று அழைக்க வேண்டுமென்று எந்த உத்தரவும் கொடுக்கவில்லை. மதிப்பாக இருக்கவேண்டுமென்று 'துரை' என்று கூப்பிடலாம். கூப்பிடும்போது பெயர் சொல்லிக் கூப்பிடலாம். பெயரே 'துரை' என்று இருந்தால் 'துரை' என்று கூப்பிட வேண்டியிருக்கும். எந்த விதத்தில் அழைத்தாலும் காட்டு இலாகா அதிகாரிகள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள், வேறு விதமாக நடந்துகொள்ள மாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. பொன்னையன் அவர்கள் பேசும்போது, டீ ப்ளான்டேஷன் பற்றிச் சொன்னார்கள். இன்று சின்கோனா வருவாய் எப்படி இருக்கிறது என்று சொன்னால், இன்று நல்ல வருவாய் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லப் பிரியப்படுகிறேன். இந்த ஆண்டிலே சென்ற இரண்டு ஆண்டுகளில் இருந்ததைவிட அதிக கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சி. சி. சின்கோனா ரூ. 80, ரூ. 85 இருந்தது. இந்த ஆண்டு, ரூ. 400, ரூ. 430, ரூ. 440 என்ற அளவுக்கு நான்கு மடங்குக்கு மேல் ஐந்து மடங்கு வரையில் பணம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டதன் காரணமாக, சின்கோனாவில் இருக்கிற நிலங்களைக்கூட சர்க்காரில் எடுத்துக்கொண்டு காட்டிலாகா மூலமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைக்கூட மாற்றி, ஓரளவுக்கு எடுத்துக் கொண்டு, 6,500 ஏக்கரில் சின்கோனா பயிர் செய்வது—இப்போது 5,500 ஏக்கருக்குமேல் இருக்கிறது—என்று இன்னும் 1,000 ஏக்கரில் பயிர் செய்யவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் பொன்னையன் சொன்னது போல 3,000 ஏக்கருக்கு மேல் சும்மா இருக்கிறது. 1,000 ஏக்கர் காட்டிலாகாவுக்குக் கொடுத்து விட்டார்கள். இன்னும் 2,000 ஏக்கரும் காட்டிலாகாவுக்கு வந்து விடும். அதில் என்ன பயிர் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

24th March 1966]

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

கிராஸ் லான்ட்ஸ் இடத்தைப் பற்றி 9,000 ஏக்கர் தரிசாகக் கிடக்கிறது என்று சொன்னார்கள். அது இந்த வனத் துறையினுடைய இலக்கணத்தின் பிரகாரம் பார்த்தால் நிச்சயமாக இதிலெல்லாம் மரங்களை நட்டுச் செய்கிற பொறுப்பு எடுத்துச் செய்ய முடியும். இதற்காக மற்றவர்களுக்குக் கொடுத்து விடுவது என்பது அல்ல, கொடுக்கவில்லை என்பதும் அல்ல. கொடுக்கிறோம். குமரி கல்டிவேஷனுக்கு முன்வருகிறவர்களுக்கு, அந்தந்த ஏரியாவில் என்ன என்ன செடிகளை வைத்துச் செய்ய முடியும் என்று சொல்லுகிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்கிறோம். முன்வந்து செய்கிறவர்களுக்கு பிரித்துப் பிரித்து பல இடங்களில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறையில் இதிலே ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். கிராஸ் லான்ட்ஸ் என்ற இடத்தில் நிறைய மான்கள் இருக்கின்றன. நிறைய புல் வளருவதால் மான்கள் நிறைய மேய வருகின்றன. இந்தக் காரணத்தினால் அப்படியே அதை வைத்திருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பேசும்போது கம்பராமாயணத்திலிருந்து அழகான பாட்டு ஒன்றைப் பாடினார்கள். எனக்குக்கூட பாட வேண்டுமென்ற ஆசைதான். எனக்கு 100 பாட்டுக்கு நுனி தெரியும், 1000 பாட்டுக்கு அடி தெரியும். அந்த அளவில் போக வேண்டாமென்று விட்டு வைக்கிறேன். அவர்கள் சொன்ன கம்ப ராமாயணப் பாடலை வைத்துப் பார்க்கும்போது, முதலில் சொன்னார்கள், சந்தோஷமாக இருந்தது. அவர்கள் கருத்தைப் போல் பார்த்தால், கம்ப ராமாயணக் கருத்தைப் போல் பார்த்தால், சென்னை நகரத்தில் மான்கள் ஓடிக்கொண்டிருக்கவேண்டும். காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இந்தப் பாடலைச் சொல்லி, காடுகளே வேண்டியதில்லை, நிலப்பரப்பில் காடுகள் தேவையில்லை என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் பாடிய பாட்டு கம்ப ராமாயணத்தில் நகர் படலப் பாட்டு. நகரம் இருக்கிறது என்றால் அதைச் சுற்றிக் காடுகள் இருக்கவேண்டும், மலையாக இருக்க வேண்டும் என்பது மாத்திரம் அல்ல, நல்ல தரையாக, சமுத்திர மட்டத்தில் உள்ள தரையாக, இருந்தால் கூட காடுகள் இருக்க வேண்டும், மான்கள் வரவேண்டும், பெண்கள் ஆடவேண்டும்—பெண்கள் மலையில் ஆடிக்கொண்டிருக்க மாட்டார்கள்—இப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்றால் நகரத்தைச் சுற்றி காடுகள் தேவை என்று தான் சொல்லப் பிரியப்படுகிறேன். அன்று கம்பன் சொன்னான். இப்போது அப்படி இருக்க வேண்டும் என்று தான் நினைக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் பாட்டின் கருத்து மிக நல்ல முறையில் அமைந்து விடும் என்று நினைக்கிறேன்.

[illegible]ம் அங்கத்தினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சில கருத்[illegible] எடுத்துச் சொன்னார்கள். மணல் தரையாக இருக்கிற [illegible]களையெல்லாம் கூட காடுகள் என்று வைத்துக் கொண்டிருக்

[24th March 1966

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

கிறோம் என்று சொன்னார்கள். மணல் தரை என்றால் என்ன வர முடியும் என்று முயற்சி செய்து பார்க்கவேண்டும். அதே போல ஏரிகளில் கருவேல மரங்களை நடவேண்டுமென்று சொன்னார்கள். நான் இதற்கு முன்பேயே பதில் சொல்லிவிட்டேன்.

கால்நடைகள் மேய வசதி என்று சொன்னார்கள். மேய்வதற்கு புல் இருக்கிறது என்று சொன்னால், சவுக்கு வைத்தாலும், யூகலிப்டஸ் வைத்தாலும், 3-4 ஆண்டுகளுக்குப் பிறகு மேய விடலாம். மேய விடுவதற்குத் தொகை வைத்திருக்கிறோம்; எருமைக்கு இவ்வளவு, ஆட்டுக்கு இவ்வளவு—வெள்ளாடுகளைத் தான் விட மாட்டார்கள்—செம்மறி ஆடுகளை விடுவார்கள்—என்று வைத்திருக்கிறோம். வெள்ளாடுகள் எல்லாம் தோட்டங்களை அழிக்கின்றன என்று சொன்னார்கள். அது உண்மை. பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள், பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், ஆங்காங்கு இருக்கக் கூடிய சட்ட சபை அங்கத்தினர்கள் எல்லோரும் கூடி, பஞ்சாயத்து போர்டு தீர்மானம் போட்டு, வெள்ளாடுகளை அதிகமாக இருக்கக் கூடாது, இருந்தாலும் கட்டி வைத்துக் கொள்ளவேண்டும் என்று அவசியம் எடுத்துச் சொன்னால் இன்னும் நன்றாகக் காடுகள் வளர வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சவுந்தரபாண்டியன் அவர்கள் பேசும்பொழுது பட்சி சாலையத்தைப்பற்றி சொன்னார்கள். அவர்கள் பக்கத்துக்கு நான் சென்ற பொழுது பார்த்திருக்கிறேன். அங்கு ஒரு பட்சி சாலையம் இருந்துகொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் பாதுகாத்து, வளர்ச்சி அடையும்படி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். சர்க்கார் அதற்கும் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. காடுகள் அழிக்கப்படுவதைப்பற்றி சொன்னார்கள். தலைச்சுமையாக விறகு தூக்கிக்கொண்டு வருபவர்களை காட்டிலாகா அதிகாரிகள் மிகவும் தொந்தரவு செய்வதாகச் சொன்னார்கள். நான் முன்பு சொன்னதுமாதிரி, ஏழைகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, காடுகள் அழிக்கப் படாமல் ஓரளவுக்கு கவனம் செலுத்தினால் தான் காடுகள் நன்றாக இருக்கும். தினம் தலைச்சுமையாகத் தான் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்று அனுமதித்தால், அது அப்படியே போய்விடும். அதற்காகத் தான் தலைச்சுமையாக இருந்தாலும் கூட காட்டு இலாகாவில் பெர்மிட் வாங்கிக்கொள்ளவேண்டும், பெர்மிட் வாங்கி தலைச்சுமையாகக் கொண்டுவரலாம் என்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறோம்.

கிழக்கு இராமனாதபுரத்தைப்பற்றி திரு. கரியமாணிக்கம் அம்பலம் சில விஷயங்களைச் சொன்னார்கள். நான் முன்பு சொன்ன அளவிலே இதற்கு பதில் அடங்கிவிட்டது. அவர்களுக்கு இது பற்றி தகவல் கிடைத்துவிட்டது என்று நான் கருதுகிறேன். நான் முன்பு சொன்னதுபோல மரங்கள் நடும் பணியை இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்று கருதுகிறேன். அதைத் தான்

24th March 1966]

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

அவர்களும் சொன்னார்கள். இந்த விஷயத்தில் பஞ்சாயத்து போர்டுகள் அதிகமாக அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்து போர்டுகள் அக்கரை எடுத்துக் கொண்டு அதிகமாக மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்வதால், அதன் மூலம் அவர்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம். அது அவர்களுக்கு பெரிய வருவாய் தரக்கூடிய ஒரு அம்சமாக அமைந்து விடும். எனக்குத் தெரியும் சேலத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. மல்லூர் ஏரி என்று அதற்குப் பெயர். நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அங்கு கருவேல் மரங்களை நட்டார்கள். இப்பொழுது அந்த பஞ்சாயத்துப் போர்டுக்கு அந்த மரங்களின் மூலம் ஒரு ஆண்டுக்கு ரூ. 4,000, 5,000-க்கு மேலாக வருமானம் வருகிறது என்று கேள்விப்படுகிறேன். காட்டு இலாகாவின் மூலம் நடும் மரங்களும் இதைப்போலவே தான் வரவேண்டும். பஞ்சாயத்து போர்டுகள் மரங்கள் நடுவதுமட்டுமல்லாமல், பழத் தோட்டங்கள், தென்னை மரங்கள் இதைப்போல பலன் தரக்கூடிய மரங்களை நடவேண்டும். கனம் மெம்பர் ஒருவர் பேசும்பொழுது ரோடு ஓரங்களில் மரங்கள் நடுவது பற்றி சொன்னார்கள். இதைக் கவனத்தில் கொண்டு காட்டு இலாகா மூலம் செய்வதற்கு தயாராக இருக்கிறோம். இப்பொழுது இதை ஹைவேஸ் இலாகா மூலம் செய்துகொண்டிருக்கிறோம். ரோடு ஓரங்களில் நல்ல பலன் கொடுக்கக் கூடிய புளிய மரம் போன்ற மரங்களை நட்டால், அம்மாதிரி நடக் கூடியவர்களுக்கு ஒரு சலுகை கொடுப்பது என்று சர்க்கார் வைத்திருக்கிறார்கள். அந்த நிலையில் கூட மரங்களை நடவேண்டும், நட்டு வளர்க்கவேண்டும் என்பது தான் சர்க்கார் திட்டம் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஸ்ரீராமுலு அவர்கள் சொன்ன விஷயத்திற்கு ஆரம்பத்திலேயே பதில் சொல்லிவிட்டேன். ஸ்ரீமான் எல்லம நாயுடு அவர்கள் சில விஷயங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். நானும் நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். எனது ஜில்லாவைச் சேர்ந்த இடம் வெள்ளையங்கிரி மலை. அந்த மலைப்பிராந்தியத்திற்கு ரோடு போட வேண்டும் காட்டு இலாகா மூலம் என்று சொல்லி, காட்டு இலாகா மூலம் அகலமான ரோடு போடுவதற்கு ஏற்பாடு செய்தோம். நான் அங்கு சென்று திறப்பு விழா கூட நடத்தினேன். அதே மாதிரி பல இடங்களில் ரோடுகள் வேண்டும் என்று மற்ற அங்கத்தினர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். ரோடுகள் போடுவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து போர்டுகள் முன்வந்து, காட்டு இலாகாவில் இருக்கக்கூடிய இடங்களில் ரோடுகளை மெயிண்டெனன்ஸ் செய்வதை தாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று சொன்னால், எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்; உடனே நாங்கள் இடத்தைக் கொடுக்கிறோம். காட்டு இலாகாவே அதிகமான தொகை செலவழித்து மெயிண்டெனன்ஸ் செய்யவேண்டுமென்று சொன்னால் முடியாது. பஞ்சாயத்து போர்டுகள் ரோடு மெயிண்டெனன்ஸை ஏற்றுக்கொண்டு, தார் போடுவது, ரோடுகளை செப்பனிடுவது இவைகளைச் செய்ய முன்

[24th March 1966

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]

வந்தால் காட்டு இலாகா மூலம் இருக்கக் கூடிய ரோடுகளை அவர்களுக்குக் கொடுக்க தயாராக இருக்கிரோம். அதை அவர்கள் செய்யவேண்டும் என்று நான் பிரியப்படுகிறேன்.

திரு. எல்லம நாயுடு அவர்கள் சிறிய டாம்ஸ் கட்டவேண்டும் என்று சொன்ஞர்கள். அது மிகவும் நல்ல யோசனை. அதைப் பற்றி என்ன செய்ய முடியும் என்பதைப் பரிசீலிக்கலாம். சிறிய டாம் போட்டு, தண்ணீர் ஓரளவுக்கு நின்று சென்ருல், கீழே இருக்கக்கூடிய ஊற்று நன்ருக இருக்கும். நல்ல யோசனையை அவர்கள் சொன்ஞர்கள்.

திரு. துரையரசன் அவர்கள் மரம் நடு விழாவைப்பற்றி சொன்ஞர்கள். பயிரிடும் மரங்களை தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டும் என்று சொன்ஞர்கள். நட்ட மரங்களுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும் என்று சர்க்கார் தனியாக உத்தரவு போடவேண்டிய அவசியமில்லை. மரங்களை நட்டு அவைகளை நல்ல முறையில் வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் மரம் நடு விழா நடந்து கொண்டிருக்கிறது. அதற்காகத் தான் நான் குறிப்பிட்டேன். பஞ்சாயத்து போர்டுகள் மரம் நடு விழாவில் அதிக அக்கரை கொள்ளவேண்டும். பழத்தோட்டங்கள், தென்னை மரங்கள் இம்மாதிரி நல்ல பலன் தரக்கூடிய மரங்களை பஞ்சாயத்து போர்டுகள் வளர்ப்பதற்கு முன்வந்தால்,. நான் சொல்லுகிறேன் அவர்கள் வரி போடாமலேயே கூட பஞ்சாயத்தை நடத்த முடியும். புறம்போக்காக இருக்கிற இடங்களில் மரங்களை நட்டு பழம் கொடுக்கக்கூடிய மரங்கள், தென்னை மரங்கள் போன்றவைகளை நட்டால், அதன் மூலம் பஞ்சாயத்து போர்டுகளுக்கு வருமானம் அதிகமாக வரும். சாதாரணமாக பஞ்சாயத்து போர்டுக்கு ரூ. 7,000 வருமானம் வருகிறது என்ருல், அதன் மூலம் ரூ. 10,000 வருவாய் கிடைத்துவிட்டால், வரியே கூட வேண்டாம் என்று சொல்லக் கூடிய நிலை ஏற்படும். ஆகவே, பஞ்சாயத்து போர்டுகள் இதில் அக்கறை செலுத்துவது மிகவும் நல்லது. பஞ்சாயத்து போர்டு வரி இல்லாமல் நடக்கிறது, மரங்களை நட்டு அதன் மூலம் அதிக வருவாய் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிற நிலை ஏற்பட்டால், மிகவும் சந்தோஷமாகக் கூட இருக்கும்.

பெரிய மரங்களை நட்டுவிடுகிருர்கள் என்று சொன்ஞர்கள். பெரிய கிளைகளை வெட்டி நட்டால் கூட துளிர்த்து வரக்கூடிய மரங்கள் இருக்கின்றன. நல்ல மரங்கள் கூடிய சீக்கிரம் வளர வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இம்மாதிரி செய்யப்படுகிறது. வேருடன் பிடுங்கி நட்டால் கூட, அதை ஒழுங்காக புதைத்து, விடாமல் தண்ணீர் ஊற்றிஞல், அது வளர்ந்து வரக்கூடிய நிலை இருக்கிறது. வேப்பமரம் அம்மாதிரி நட்டால் துளிர்க்கும். மரத்தை பிடுங்கி நட்டு விடுகிருர்கள், அது நல்லதல்ல என்று சொன்ஞர்கள். அது நல்லது என்று கூட நான் சொல்லுகிறேன். கூடிய சீக்கிரம் வளர்வதற்கு நல்ல வசதியாக இருக்கிறது, அம்மாதிரி வளர்க்க முடியும் என்ற உறுதி எனக்கு நிச்சயம் உண்டு என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

24th March 1966]

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]

தஞ்சை ஜில்லாவில் கால்வாய் ஓரங்களில் மரங்கள் நடுவதைப் பற்றி சொன்ஞர்கள். காட்டு இலாகாவைச் சேர்ந்த இடம் சும்மாக் கிடக்கிறது என்று சொன்ஞர்கள். கால்வாய் ஓரங்களில் தஞ்சாவூர் ஜில்லாவில் மரங்களை நடலாம் என்று சொன்ஞர்கள். கால்வாய் ஓரங்களில் இருக்கக்கூடிய இடங்களை காட்டு இலாகாவுக்குக் கொடுத்தால், மரங்கள் நட்டுக்கொடுப்பதில் சந்தோஷம். தேக்கு போன்ற மரங்களை நட்டு, வளர்ச்சி அடைவதற்கு ஸ்கீம் போட்டு வைத்திருக்கிரோம். அதன் மூலம் காடுகளை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிரோம்.

திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் சொன்ன விஷயத்தைப் பற்றி முன்பே சொன்னேன். புதிய பாக்டரி வருகிற சமயத்தில் என்ன நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் யோசனை செய்து பரிசீலிக்கலாம்.

சின்கோனு குறித்து இரண்டு வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். சின்கோனுவுக்கு நல்ல எதிர் காலம் இருக்கிறது. திரு. துரையரசன் அவர்கள் சொன்னது போல, உடனடியாக அந்த மரங்களிலிருந்து குவினைன் சற்று அதிகமாக கிடைக்கவேண்டுமென்பதற்காக புதியதாக ஒரு முறை இப்பொழுது கையாளப்பட்டு வருகிறது. ரோஸ் செடிகளை வெட்டி வைத்து, இரண்டையும் ஒட்டிவைப்பது போல், இந்த மரங்களைப் பொறுத்தும் செய்து கொண்டிருக்கிரோம். 3 சதவிகிதம் கிடைக்கக்கூடிய குவினைன் 6 சதவிகிதம் கிடைக்கக்கூடிய வழி வகை செய்தவுடன், அதன் மூலம் செலவாகிற கணக்கில் நமக்கு பெர்ஸெண்டேஜ் குறைந்து விடும். அதைப்போல பல நல்ல மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களிலிருந்து குவினைன் அதிகமாக கிடைக்கக்கூடிய பட்டைகளை எடுத்து, சாதாரண மரங்களில் ஒட்டி வைத்து வளர்க்கும்பொழுது, அந்த ஒட்டு சில நாட்களில் அப்படியே ஒட்டிக்கொண்டு, அந்த மரத்தினுடைய பட்டையை 2, 3 ஆண்டுகளுக்கு பிறகு எடுத்துப் பார்த்தோமாஞல் குவினைன் அதிகமாக கிடைக்கக் கூடிய நிலையைப் பார்க்கிரோம். ஆகவே, சின்கோனு நல்ல முறையில் வளர்ச்சி அடைய வேண்டும் என்று இதில் அக்கரை கொண்டு காரியங்களைச் செய்து கொண்டு வருகிரோம்.

மற்றபடி இந்த மான்யக் கோரிக்கைக்கு நல்ல ஆதரவு இருப்பது பற்றி மிகவும் பெருமைப்படுகிறேன், சந்தோஷப்படுகிறேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் நான் சொன்னது போல நல்ல ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை உங்கள் முன்னிலையிலே வைத்து, இதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 26,72,500 under Demand No. XXI—Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion Demand No. XXXV—Forest Department was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,51,51,200 under Demand No. XXXV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 92,92,200 under Demand No. XLV—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made

(4) DEMAND No. XXII—KHADI.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 26,83,000 under Demand No. XXII—Khadi.'

திரு. சா. ராமசாமி : சார், கதர்த் துணிக்குக் கொடுக்கப்பட்டு வரும் ரிபேட் (தள்ளுபடி) தொகையைக் கைத்தறித் துணிகளுக்குக் கொடுக்கின்ற அளவுக்குக் குறைப்பது பற்றி விவாதிக்க என்று, என் பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 26,83,000 under Demand No. XXII—Khadi—be reduced by Rs. 100."

MR. DEPUTY SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

**திரு. எம். எஸ். மணி :* கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, காதி மானியத்தின் மீது கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்தினைச் சொல்ல விரும்பு கிறேன்.

இன்றைய தினம், காதி அபிவிருத்தி செய்வதற்காக, பஞ்சாயத்துக்கள் சர்க்கா வழங்க என்று ரூ. 1,500 லோன் கொடுக்கிறார்கள். லோன் கொடுப்பதன் நோக்கம் வீட்டில் இருக்கிற பெண்கள், ஏழை எளியவர்கள், தங்களுடைய கைகளால் நூல் நூற்று அன்றாட ஜீவனத்திற்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்று இந்தக் கடன் கொடுக்கிறார்கள். அந்த வகையில் பஞ்சாயத்துக் களிலிருந்து சர்க்கா வாங்கி அப்படிப்பட்ட ஏழை எளியவர் களுக்கும், பெண்களுக்கும் கொடுக்கிறார்கள். அவர்களும் நூலை நூற்று காதி டிபார்ட்மெண்டுக்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பப்படும் நூலை நான் அறிந்த வரையில், பல இடங்களிலே,

'நூல் சரியாக இல்லை' என்று திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். அப்படி அனுப்பிவிடுவதால், அவர்களுக்கு மேற்கொண்டு அதில் நாட்டம் ஏற்படுவதில்லை. சர்க்காவைத் தூக்கி மூலையில் வைத்து விடுகிறார்கள். அதில் ஒன்றும் பலன் இல்லை என்று கருதிவிடு கிறார்கள் எனவே, அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க, முதலி லேயே சில சலுகைகளைச் செய்தால், அவர்களுக்கு நூல் நூற்பதில் நல்ல எண்ணம் வரும். ஊதியம் கிடைக்கும் என்கிற எண்ணமும் ஏற்படும். அவர்களும் நல்ல உற்சாகத்தோடு அதில் ஈடுபட்டு வேலை செய்வார்கள். கதரை விற்பனை செய்யும் போது ஒரு நிர்ப்பந்தத்தை அனுசரித்து வருகிறார்கள். பஞ்சாயத்து யூனி யன்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களெல்லாம் கட்டாயமாக கதர்த் துணியை வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப் படுகிறார்கள். ஆசிரியைகள், பெண்கள், பொங்கல் நேரத்தில் குறைந்த பட்சம் ரூ. 100-க்கு வாங்கவேண்டும் என்று அவர்கள் தலையில் கட்டுகிறார்கள். அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பெண்களாக இருப்பவர்கள், கதரில் இரண்டு, கைத்தறியில் இரண்டு சேலை என்று வைத்துக் கொண்டால் அவர்களுக்கு வசதி யாக இருக்கும். கடனுக்குக் கொடுக்கிறோம் என்பதற்காக, அவர் கள் தலையில் இப்படிக் கட்டுவதால், அதன் தரம் குறைவாக மதிக் கப்படுகிறது. எந்த ஒரு சாமானுக்கும் டிமாண்ட் இருந்தால்தான், நல்ல முறையில் மதிக்கப்படும். வலுக்கட்டாயமாகப் புகுத்து வதால், அதை மோசமானதாகக் கருதுகிறார்கள். அது மட்டு மல்ல, இப்படி வாங்கும்போது சில அதிகாரிகளும் உடன் செல்லு கிறார்கள். அவர்கள் வாங்கித்தான் ஆகவேண்டும் என்று நிர்ப் பந்தம் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை ரத்து செய்தால், நல்ல விற்பனைக்குரியதாக இருக்கும்.

கதருக்கு இன்றையதினம் அதிகமாக விளம்பரம் கொடுக்கப் படுகிறது. விளம்பரம் எதற்காகக் கொடுக்கிறோம்? இந்தத் துணி விற்பனை ஆக வேண்டும். எல்லோரும் வாங்கி அணிய வேண்டும் என்பதற்காக விளம்பரம் செய்யப்படுகிறது. அப்படி விளம்பரம் செய்கின்றபோது, அணிகிறவர்களுடைய தேவைக்குத் தக்க கரைகள் வேண்டும் என்று கேட்டால், அப்படிப் போட்டுத் தருவதில் என்ன குறை இருக்கிறது? திருச்சி மாவட்டத் தில், லால்குடி பஞ்சாயத்து யூனியனில், திருச்சி மாவட்டத்திலேயே இரண்டாவதாக கதர் விற்பனை செய்திருக்கிறது—அதை நல்ல முறையில் துவக்கி வைத்தவரே அந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்கிற ஹோதாவில், அவர்கள் அணிய வேண்டும், நான் அணியவேண்டும், இன்னும் எங்கள் போன்றவர் கள் அணியவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காக, காதி டிபார்ட்மெண்டுக்கு எழுதி, 50 கருப்பு சிவப்பு கரை போட்ட வேட்டி தேவை என்று கேட்டு, நெய்யப்பட்டது. அந்த வேட்டி களும் எங்களுக்கு வந்து சேர்ந்தன. முதலிலே பத்து வேட்டி களை எடுத்து, விநியோகம் செய்தோம். இது எப்படியோ அர சாங்கத்திற்குத் தெரிந்தது. அவர்கள் உடனே, 'அப்படி நெய்

யக் கூடாது; அந்த 50 வேட்டிகளையும் திரும்ப வரவழையுங்கள்' என்று உத்தரவு போட்டு, நாங்கள் கட்டியிருந்த வேட்டியையும் திரும்ப வாங்கி விட்டார்கள். இப்படி பாகுபாடு நாங்கள் பார்ப்பதில்லை. கதர் கட்ட வேண்டும் என்று அதிகாரி கேட்டதற்கு இணங்க, கதர் கட்ட முன் வந்து, வேண்டிய கரைகளில் நெய்து கொடுங்கள் என்றால் அப்படிக் கொடுக்கப்படுவதில்லை. அப்படியென்றால், ஒரு சிலர்தான் கதரை அணியவேண்டும் என்று விரும்புகிறார்களா? கைத்தறி அணிகிறவர்கள் கூட விருப்பம் இருந்தால் கதரை அணிகிறோம். எல்லா மக்களும் அணிகிற அளவுக்கு கரைகளைக் கொடுத்தால் என்ன? அது மட்டுமல்ல. இன்றைய தினம் காதி அலுவலகத்தில் நடைபெறும் சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஏழை எளியவர்கள், தங்களுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும், அதற்காக அவர்களே தங்களுக்குத் தேவையான நூல்களை நூற்கவேண்டும் என்று காந்தியார் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த திட்டத்தில் ஏழை எளியவர்கள் வாழ்க்கை நடைபெறும் என்று இருந்தது. ஆனால், காதி அலுவலகத்திலே, ஏழை எளியவர்களுக்கு துணிகள் தைக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட பெண்களுக்கும், பர்மா அகதிகளுக்கும் இந்த வேலைகள் கொடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் இந்த வேலைகள் செய்யப்படும் போது, கூலி மிகக் குறைவாக இருக்கிறது. உதாரணமாக, ஒரு பாவாடை தைக்க 16 பைசா கொடுக்கப்படுகிறது. ஒரு புஷ் ஷர்ட் தைக்க 65 பைசா கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் பிளாஸ்டிக்கிலே பை போடவேண்டும் என்றால் அதிகமாக 10, 12 பைசா சிலவாகிறது. ஏழைப் பெண்கள் இப்படித் தைத்து அலுவலகத்திலே கொடுத்தால், 4, 5 மாதம் ஆனாலும், கூலி பட்டுவாடா செய்யப்படுவதில்லை. இப்படியிருந்தால் அவர்கள் எப்படி கதர் தைக்க முன் வருவார்கள்? இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். கதர் துணி தைக்க வேண்டுமானால் ஏழைப் பெண்களுக்கும், பர்மா அகதிகளுக்கும் சலுகையாகக் கொடுக்க வேண்டும் என்றும், கூலியையும் அதிகமாக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைய தினம் காதி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாகவே, நெசவாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அதுவும் கதர் நெசவாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காதி போர்டிலிருந்து அவர்கள் வீடு கட்டுவதற்கென்று ரூ. 1,000 மானியம் வழங்குகிறார்கள். திருச்சியிலே 10, 15 ஆண்டுகளாக நெசவு செய்துக் கொண்டிருந்தவர்களுக்கு வீடு கட்ட பணத்திற்கு மனுச் செய்தோம். அவர்களுக்குக் கொடுக்கப்படாமல், அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் தினம் பதிவு செய்துக்கொண்டவர்களுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக சம்மந்தப்பட்ட அதிகாரி, டெபுடி டைரக்டர் அமைச்சர் முதலியவர்களிடம் கூறியதற்குப் பிறகு, இப்பொழுது திருச்சி நெசவாளர்களில் 8 பேர்களுக்குப் பணம் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகக் கொடுக்க

வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதிலே சொந்த வீடு இருக்கிறவர்களுக்குக்கூட பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை உடனடியாக கண்டுபிடித்து, கொடுத்த பணத்தை ரெகவர் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த டிபார்ட்மெண்டிலே, மாவட்ட கிராம கைத்தொழிலையும் இணைத்திருக்கிறார்கள். அதிலே மதுவிலக்கு அமலுக்கு வந்த பிறகு, பதநீர் இறக்கும் தொழிலிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த தொழில் வருஷத்திலே தை மாதம் முதல் வைகாசி மாதம் வரை, ஐந்து மாதம்தான் நடைபெறும். பதநீரை இறக்கி, இறக்குகிற தொழிலாளர் வீட்டு பெண்கள் நகரில் சென்று விற்று வருவாய் தேடுவார்கள். அவர்கள் அந்த வருவாயை முழு ஆண்டுக்கும் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கென்று பெடரேஷன் ஒன்று அமைத்து, அதன் மூலம் பதநீரை இறக்குகிறவர்கள் விற்பனை செய்ய வேண்டும். தாங்கள் இறக்கும் பதநீரை இந்த பெடரேஷனிடம் அவர்கள் விற்பனை செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் கொடுக்கும் விலை ஒரு லிட்டருக்கு 15 காசு. இப்படிப் பதினைந்து காசுக்குக் கொடுக்க தொழிலாளர்களால் முடியவில்லை. அப்படி விற்கவில்லை என்றால், அவர்களுக்கு லைசென்ஸ் கிடைக்காது. விற்பனை செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஒரு குடும்பத்திலே பதநீர் இறக்குகிறார்கள் என்றால், ஒருவர் இறக்க, மூன்று பெண்கள் தலைமேல் தூக்கிச் சென்று, தெருத் தெருவாகப் போய் விற்பனை செய்வார்கள். இன்றைக்கு அது தடை செய்யப்பட்டிருப்பதால், எங்களுடைய திருச்சியில் கிட்டத்தட்ட 400 பெண்களும், ஆண்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இராமநாதபுரத்திலே 15 காசு கட்டுப்படியாகலாம், கரூரில் 15 பைசா சரியாக இருக்கலாம். அங்கெல்லாம் ஏக்கருக்கு ஆயிரக் கணக்கான மரங்கள் இருக்கின்றன. ஆனால், திருச்சி நகரத்தைப் பொருத்த 12-00 noon.
வரை, ஒரு பர்லாங்கிற்கு ஒரு மரம் என்று தான் இருக்கிறது. அங்கெல்லாம் ஒரு மரத்தில் இரண்டு லிட்டர் வரை இறக்கலாம்; ஆனால், திருச்சியில் அரை லிட்டர்தான் கிடைக்கும். ஒரு மரத்திற்கு அரை லிட்டர் கிடைப்பதே கஷ்டம். இங்கே எப்படி 15 பைசாவுக்குக் கொடுக்க முடியும்? 15 பைசாவுக்கு பெடரேஷன் வாங்கி என்ன விலைக்கு விற்கிறது என்றால், 40 பைசாவிற்கு விற்கிறது. அதைக் குளிர்ப்படுத்தி 40 பைசாவிற்கு விற்கிறார்கள். இந்தப் பதநீரை 12 மணிக்கு மேல் உபயோகித்தால் தரம் கெட்டுவிடும். தரம் கெட்டுப் புளிப்பாக மாறிவிடும். அதற்கு மேலே சாப்பிட்டால் கள்ளாக மாறிவிடும். இதைக் கூட இந்த அதிகாரி புரிந்து கொள்ளாமல் எப்படியாவது கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தத்தை வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாகப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, நேரடியாகப் பதநீர் இறக்குகிறவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதோடு, அவர்களே தெருத் தெருவாக விற்பதற்கும் அனுமதிக்க வேண்டும். அப்படி அனுமதித்தால்தான் சுத்தமான பதநீர் கிடைக்கும். சில பேர் அதிலே

வேறு எதையோ கலந்துவிடுகிறார்கள் என்றால் கலந்துவிடுகிறவர் களுக்கு நல்ல தண்டனை கொடுக்கலாம். அதை ஓரளவு பரிசீலனை செய்து, எவ்வளவு கலக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து, அதன் காரணமாக அவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம். இல்லை யென்றால், திருச்சியிலே 400-க்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கையை விடவேண்டிய நிலைமையிலே இன்றைய தினம் இருக்கிறார்கள். எனவே, உடனடியாக அதைக் கவனிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில் மரம் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வாடகை கொடுக்கிறார்கள். அதுவே கரூர் பக்கத்திற்குச் சென்றால் இன்னும் குறைவாக இருக்கும். காரணம், அங்கே மரம் அதிக மாக இருக்கிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம் போக்கு நிலங்களில் ஏராளமான மரங்கள் இருக்கின்றன. ரோடு களிலும் ஏராளமான மரங்கள் இருக்கின்றன. இந்த மரங்களை யெல்லாம் யார் நேரடியாகப் பதநீர் இறக்குகிறார்களோ அவர் களுக்கு மான்யமாக அல்லது குறைந்த வாடகைக்கு விட்டால், அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை கொஞ்சம் உயர்த்திக்கொள்ள வசதியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது தவிர, இப்படிக் கொடுக்காவிட்டால் இறக்கக்கூடாது என்று சொல்கிறார்களே தவிர, அதற்கு என்ன காரணம் சொல்லு கிறார்கள்? ‘பதநீர் இறக்கி நீங்கள் எல்லாம் வெல்லம் காய்ச்சி விடுங்கள்’ என்று சொல்லிவிடுகிறார்கள். திருச்சி நகரத்திலே வெல்லம் காய்ச்சுவதென்றால் அதற்கு ஏராளமான விறகு தேவைப் படும். இந்த விறகு வாங்கி வெல்லம் காய்ச்சுவதைவிட வேறு தொழிலிலே கூட ஈடுபட்டுவிடலாம். திருச்சியிலே அது பயன்தரத் தக்க தொழில் அல்ல. காரணம், பக்கத்தில் காடு கிடையாது. காடு இல்லாத காரணத்தால், விறகு அதிக விலைக்கு விற்கிறது. அதிக விலைக்கு விறகு வாங்கி வெல்லம் காய்ச்ச முடியவில்லை என்று சொன்னால், ஏதாவது செய்யுங்கள்’ என்று குறிப்பிடுகிறார்கள். ஏதாவது செய்யுங்கள் என்று சொல்கிறார்களே என்று எதையாவது செய்தால், தாழ்த்தப்பட்ட, மிகவும் வாழ்க்கையில் பின்னடைந்த நாடார் சமூகத்தைச் சேர்ந்த திருச்சி வட்டத்தைச் சேர்ந்த அத்தனைபேரும் சிறைக்குத்தான் போகவேண்டும். ஆகவேதான் அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கேட்டுக்கொண்டேன். உடனடியாக அவர்களுக்கு அனுமதி மட்டும் இன்றைய தினம் வழங்கியிருக்கிறார்கள். என்றாலும், வேறு தெருவிலே விற்க முடி யாது. பதநீரை அந்தத் தெருவிலேயே விற்றுக்கொள்ளலாம் என்கிறார்கள். அப்படியானால், 300 பேர்களும் ஒரே தெருவில் வசிப்பதால், இந்த 300 பேர்களும் சேகரிக்கும் பதநீர் அத்தனையை யும் அவர்களுடைய தெருவிலேயே விற்பது என்பது நடைமுறை சாத்தியம் அல்ல. இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிவர் கவனிக் காததால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதை இந்த மன்றத்தின் மூலமாக, தங்கள் மூலமாக, இந்த அமைச்சரவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்த நிலைமையைப்

பற்றி ஆராய்ந்து, அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. நா. மகாலிங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக் கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்பு கிறேன். கதர் இலாகாவுக்காகவும் கிராமக் கைத் தொழில்களுக் காகவும் கேட்டிருக்கக்கூடிய இந்த மானியம் ஒரு சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. கிராமத்திலே இருக்கக் கூடிய பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காகத்தான் மகாத்மா காந்தி யடிகள் இந்தக் கதர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். நாம் சுதந்திரம் பெற்றுப் பதினெட்டு ஆண்டுகள் ஆகியும், இப்பொழுது எவ்வளவு தூரம் இந்தக் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலே வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்த் தால் எதிர்பார்த்த அளவு இந்தத் துறையில் நாம் முன்னேற வில்லை என்பதைத்தான் பார்க்க முடிகிறது. இந்த இலாகாவிற்கு 26 லட்சம் ரூபாய் மானியக் கோரிக்கை அமைச்சர் அவர்கள் கோரு கிறார் என்று சொன்னால், இது மிகவும் குறைவாக இருக்கிறது. இதை எப்பொழுது அதிகப்படுத்தப் போகிறார்கள் என்று தெரிய வில்லை. தொழில் இலாக்கா மானியக் கோரிக்கை, இன்னும் பல மானியக் கோரிக்கைகள் என்று சொன்னால், அவற்றுக்கெல்லாம் கோடிக்கணக்காக மானியக் கோரிக்கைகள் வந்து அவற்றின் மூலம் எத்தனை பேர்கள் தொழில் வாய்ப்பு பெறுகிறார்கள் என்று பார்த்தால் மிகக் குறைவான எண்ணிக்கை என்றுதான் சொல்ல வேண்டும். தொழில் துறையில் இன்றைய தினம் சாதாரணமாக ஒரு நூற்பு ஆலை வைப்பதென்றால், இருபதாயிரம் ரூபாய் செல வாகிறது. ஒரு ஆளுக்கு வேலை கொடுப்பதற்கு. கிராமங்களிலே இருக்கும் லட்சக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றால், அதுவும் நம்முடைய ராஜ்யத்தில் சதுர மைலுக்கு 750 பேர் மக்கள் வாழ்க்கை நடத்தக்கூடிய இந்த ராஜ் யத்தில், எல்லோருக்கும் தொழிற்சாலைகளிலேயே வேலை வாய்ப்புக் கொடுத்துவிட முடியாது. ஆகையால், கிராமக் கைத்தொழில் களை அபிவிருத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியமாக இருக் கிறது. இவ்வாறு செய்யவேண்டும் என்றால், ஏதோ காந்தி சொன்னார், அதற்காக நாம் கதர் இலாக்காவை நடத்துகிறோம் என்ற முறையில் வெறும் 26 லட்சம் ரூபாய் செலவிட்டு நடத்துவ திலே பிரயோசனம் கிடையாது. ராஜ்யத்திலே அடு[illegible] பத்தாண்டுகளில் வரக்கூடிய இளைஞர்கள், யுவதிகள் இவர்க[illegible] ளுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கொடுக்க நாம் என்ன செய்ய வே[illegible] என்பதற்காக ராஜ்ய அரசாங்கம் திட்டமிட வேண்டும். அ[illegible] திட்டமிட்டு, அதற்காக நாம் பணம் எவ்வளவு செ[illegible] வேண்டும் என்பதை இந்தத் திட்டமிடுவதில் சேர்த்தா[illegible] போதுமான பலன் இல்லை என்று நான் சொல்லிக்கொள்[illegible] கிறேன்.

[illegible] றேன். மிக [illegible] முறையின் [illegible] லமாகக் [illegible] கப் பல [illegible] செய்தால்

தரக் குறைவான அரிசி மார்க்கெட்டுக்கு வராது. பல்வேறு பாகங்களில் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் வழியேற்படும். கிராமங்களில் அதை வாங்கி உபயோகிப்பதற்குச் சரியான அமைப்பு இல்லை. திட்டக் கமிஷன் அங்கத்தினராக இருக்கக் கூடிய திரு. பார்வே அவர்கள் மகாராஷ்டிரத்தின் நிதி அமைச்சராக இருந்தபோது ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். இன்றுள்ள ராஜ்ய அமைப்பில் ஐ.ஏ.எஸ். உத்தியோகஸ்தர்கள் பெருந்தொழில்களின் முன்னேற்றத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகிறார்களே தவிர பெருவாரியான உயர்தர அதிகாரிகளும், இலாகாவும் சேர்ந்து ஒரு கூட்டான முயற்சியுடன் சிறு கைத்தொழில்களை, கிராம கைத்தொழில்களை, அபிவிருத்தி செய்ய உதவவில்லை என்பதான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு நாமும் சிந்தித்துப் பார்த்தோமென்று சொன்னால்—கிராம கைத்தொழில்கள் முன்னேற்றத்திற்கு கூட்டாகச் சிந்தித்துச் செயல்பட்டாகவேண்டும் என்பதை உணர்வோம். அப்படியின்றி காதி இலாகா, கிராம கைத்தொழில் இலாகா என்று சொல்லி அதற்கென்று சிறு தொகை வைத்து நாமும் சில காரியங்கள் செய்கிறோம் என்பதாகச் செயல்படுவது பிரயோசனம் இல்லை. மூன்றாவது திட்ட இறுதியில் ஒரு கோடியே இருபது லட்சம் பேர் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான்காவது திட்ட இறுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமான தொழில்கள் ஏற்படுவதனால் மட்டும் குறைந்துவிடாது. கிராம கைத்தொழில்கள் வளர்ச்சிக்கென்று தனியான முறையில் கவனம் செலுத்தப்படவேண்டும். பல்வேறு நிர்வாகத் திட்டங்களைப் பற்றி அரசாங்க இலாகா பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய பொறுப்பு என்ன, நாம் எந்த வகையில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பு இந்தத் துறையில் வருஷா வருஷம் நல்ல கண்காட்சிகள் ஏற்படுத்தப்படுவதுண்டு. இப்போது அத்தகைய கண்காட்சிகள் நடத்துவது இல்லை. சில வருஷங்களுக்கு முன்னால்—இத்துறையில் மிகவும் ஈடுபாடுள்ள திரு. ஜயாமூர்த்தி அவர்கள் பொறுப்பில் அகில இந்திய கண்காட்சி ஏற்படுத்தப்பட்டது. அது மிகச் சிறந்த கண்காட்சியாக இருந்தது. அது போல கண்காட்சிகள் ஏற்படுத்தப்படவேண்டும். இன்னும் அனுபவம் வாய்ந்த பலரையும் உபயோகப்படுத்திக்கொள்ள முயற்சி எடுத்தாக வேண்டும்.

கடைசியாக இந்த மானியக் கோரிக்கை இன்று விவாதத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் அதனுடைய அறிக்கை அங்கத்தினர்களுக்கு வந்து சேரவில்லை என்று சொல்லிவிட்டு இந்த மானியத்தை ஆதரித்து என் கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. பழனிசாமி: கனம் தலைவர் அவர்களே, இந்த கைத்தொழில் மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் நமக்குத் துணி வேண்டுமென்றால் அயல்நாட்டில் இருந்து வந்தது. அதுவும் அந்நியர்கள் இங்கிருந்து பருத்தியை தங்கள் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து துணியை இங்கே இறக்குமதி செய்து நமக்கு அதிக விலைக்குக் கொடுத்து வந்தார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு அந்த நிலை அடியோடு மாற்றப்பட்டுவிட்டது. நமக்குத் தேவையான துணியை நாமே இங்கு உற்பத்தி செய்து கொள்வதற்கு வேண்டிய ஊக்கம் பலவகையிலும் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக இப்போது உற்பத்தி செய்யப்படுகிற கதர் துணியை எடுத்துக்கொண்டால்—நம் நாட்டிலேயே மில்லில் உற்பத்தி செய்யக்கூடிய துணி இதைவிட மலிவான விலையில் கிடைக்கிறது என்று சொன்னால் கூட ஒரு மில்லைக் கட்ட வேண்டுமென்றால் 30 லட்சம் முதலீடு செய்யவேண்டியிருக்கிறது. கதர் உற்பத்திக்கு அவ்வளவு செலவு வேண்டியதில்லை. பத்து இருபது ரூபாய் இருந்தால் போதும், உற்பத்தி செய்யலாம். குறிப்பாக நம் நாட்டில் பலர் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள இவர்களுக்கு இந்த கதர் உற்பத்தி மிகவும் பிரயோசனமாக இருக்கும். குறிப்பாக எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் தாராபுரம், பல்லடம், அவிநாசி போன்ற வறண்ட பகுதிகளில் ஏழை ஜனங்கள், ஹரிஜன மக்கள் இன்றைய தினம் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் சம்பாதித்து வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்பேர்ப்பட்ட சிறந்த கதர்த் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்வது சர்க்காரின் கடமை. குறிப்பாக விஞ்ஞான ரீதியாக எல்லாவிதமான தொழில்களையும் நடத்துகிறோம். இருந்தும் இதுபோன்ற சிறு குடிசைத் தொழில்களின் மூலமாகத்தான் பரவலான முறையில் நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க முடியும். காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சியை வளர்த்துக் கொள்ள இப்படிச் செய்கிறார்கள் என சிலர் சொல்லக்கூடும். அது அப்படி அல்ல. ஏழைமக்களுடைய பிரச்சினை அது. கதரை எடுத்துக்கொண்டால் நாகரீகமானவர்கள் அணிந்துகொள்ளக் கூடிய வகையில் நைஸாக இருப்பதில்லை என்றும் சொல்வார்கள். இப்போது கதரிலேயே மென்மையான நூல்களை உண்டாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களும் அதை விரும்புகிறார்கள். ஒருசில இடங்களில் ரிபேட்டைக் குறைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்.

சிலர் அந்த இலாகாவில் வேலை செய்கிறவர்கள் கதரைத்தான் உடுக்க வேண்டும் என்பதாக வற்புறுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இதில் வற்புறுத்தப்படுவது ஒன்றும் இல்லை. இந்த திட்டத்தை அமல் நடத்துகிறவர்களே கதரை உபயோகப்படுத்துவது இல்லை என்றால் நாட்டு மக்களுக்கு அதனிடத்தில் எவ்வாறு மதிப்பு உண்டாகும்? ஆகவே, அவர்கள் கதர் உடுத்திக் கொள்ள துணி கொடுக்கப்படுகிறது. அதை மிகைப்படுத்திக் கூறுகிறார்கள்.

[திரு. கே. பி. பழனிசாமி] [24th March 1966

கதரோடு கிராமக் கைத்தொழில்பற்றிச் சொன்னார்கள். கிராமக் கைத்தொழில் என்கிறபோது கைக்குத்தல் அரிசி, தோல் பதனிடுதல் ஆகிய தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. தோல் பதனிடும் முறையில் கூட மின்சாரத்தை உபயோகப்படுத்த ஆரம்பித்த பின்னர் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஆயிரம் ரூபாய் வரையிலாவது உதவி செய்து வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூட கைக்குத்தல் அரிசியைப் பற்றி திரு. என். மகாலிங்கம் அவர்கள் சொன்னார்கள். மில் அரிசியின் தரத்தைவிட இது உயர்ந்தது. நல்ல தரமுள்ள இந்தக் கைக்குத்தல் அரிசிக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கதர் மானியக் கோரிக்கையில் கிராம கைத்தொழிலும் இணைந்திருக்கிறது. மகாத்மா காந்தி அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது இந்தப் புனித இலாகா என்று சொல்ல வேண்டும். அந்த இலாகா நன்றாகச் செயல்படவேண்டும். இப்போது பல கிராமங்களில் தச்சு வேலை, கொல்லப்பட்டறைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு ஜில்லாவிலும் சுமார் 20 முதல் 25 வரை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இன்றையதினம் செயல்படுபவை எவ்வளவு என்று அமைச்சர் சொல்லவேண்டும். இதிலே 20 என்று பெயரளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறபொழுது, 2, 3 தான் செயல்படுகிறது என்பது எனக்குத் தெரிந்த உண்மை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். சரியான சூப்பர்விஷன் கிடையாது. இந்த அரசாங்கம் ஒரு உத்தரவை, அந்த உத்தரவு உண்மையாக இருக்கும் என்றால், போட்டிருக்கிறார்கள். வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது பட்டக்காரர் அவர்களுடைய ஜில்லாவிலே ஒரு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர் இருக்கிறார். அவரிடம் ஒரு ஜீப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறோம். அவர் அந்த ஜில்லாவை முழுக்க முழுக்கச் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு அவர் 100 லிட்டர் அதாவது 22½ காலன் பெட்ரோல்தான் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலே சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடாது என்றுதானே அர்த்தம். அவர் எப்படி ஜில்லா முழுவதும் சூப்பர்வைஸ் செய்ய முடியும்? இத்தனை லிட்டருக்குமேல் உபயோகிக்கக்கூடாது என்றால், அவர் எப்படி ஒழுங்காக சூப்பர்வைஸ் பண்ண முடியும்? எஃபெக்டிவ் சூப்பர்விஷன் இருந்தால்தான், இந்தக் கைத்தொழில்களையெல்லாம் அபிவிருத்தி செய்யக்கூடிய ஏதுக்கள் இருக்க முடியும்.

திரு. மகாலிங்கம் அவர்கள் சொன்னமாதிரி, நான்கூட சென்ற பட்ஜெட்டில் பேசியிருக்கிறேன், திறமை வாய்ந்த, நம்பிக்கை கொண்ட ஆற்றல் படைத்த ஆட்கள் இருக்கிறார்கள், அவர்களை இந்த அரசாங்கம் உபயோகப்படுத்திக்கொள்வதே இல்லை. சுதந்திரத்திற்கு முன்னால் திட்டமிட்ட திட்டத்தில், [illegible]

24th March 1966] [திரு. கே. டி. கோசல்ராம்]

புரோகிராமிலே கிராமக் கைத்தொழில்கள், காதி இவைகள் எல்லாம் இடம் பெற்றன. அந்தக் கிராமக் கைத்தொழில்களைச் சரியாகச் செயல் படுத்த வேண்டுமென்றால், வெளியிலே இருக்கிறவர்களை பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நண்பர் அய்யாமுத்துபற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் காதி செகரட்டரியாக இருந்தபோது மூலைமுடுக்குகளில் எல்லாம் காதியை உற்பத்தி செய்தார். அவர் எந்தக் கட்சியிலும் இருக்கலாம். கட்சியைப்பற்றி நான் சொல்லவில்லை. கதரில் நம்பிக்கை கொண்டவர்கள், காந்தியடிகளைப்பற்றி நம்பிக்கை கொண்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஜில்லாக்களிலே இருக்கின்ற வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் ஆபீசரையும், காதி ஆபீசரையும் நன்றாக சூப்ரவைஸ் செய்யக் கூடிய அளவுக்குச் செய்தால்தான், இந்தக் கிராமக் கைத்தொழில்களை நன்றாக இயங்க வைக்க முடியும் என்ற யோசனையை நான் இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். கைக்குத்தல் அரிசியைப்பற்றிச் சொன்னார்கள். முன்னுக்குப்பின் முரணாகச் செய்யப்பட்டுவருகிறது.

கைக்குத்தல் அரிசிதான் நல்லது என்பதை சமுதாயத்தில் எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். இப்பொழுது நாம் அரிசியாகக் கொடுப்பதற்குப் பதிலாக நெல்லாகக் கொடுக்க வேண்டும். ஒரு பக்கம் கைக்குத்தல் அரிசிக்காக சப்ஸிடி கொடுக்கிறோம். இன்னொரு புறத்திலே அரிசியைக் கொடுக்கிறோம். ஆகவே, அப்படியில்லாமல் அரிசிக்குப் பதிலாக நெல்லைக் கொடுத்துவிட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும். கிராம மக்கள் அவரவர்கள் உரல், உலக்கை எல்லாம் வைத்திருக்கிறார்கள், அவர்களுக்கு நெல்லைக் கொடுத்தால் அவர்கள் கைக்குத்தல் அரிசியாக சாப்பிடுவார்கள். அடுத்தபடியாக எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் பதநீரைப் பற்றிச் சொன்னார்கள். அவர் சொன்ன குறை, குறைவாகச் சொன்னார் என்றுதான் நான் சொல்வேன். திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இருந்த காலத்தில் தான் இந்த புரொகிபிஷன் கொண்டு வரப்பட்டது. அப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் ரெஸ்டிரிக்ஷன் போட்டார்கள், எல்லா இடங்களிலும்தான் போட்டார்கள். திருநெல்வேலி ஜில்லா கெஜட்டை எடுத்துப்பார்த்தால் பனைமரத்து ஜில்லா என்று இருக்கும். அந்த ஜில்லாவிலே ரெஸ்டிரிக்ஷன் வேண்டாமென்று சொன்னேன். நான் அப்பொழுது சொன்னேன், "ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களே, உங்களுடைய ஜில்லாவிலே கரும்பு விவசாயம் நடைபெறுகிறது. அந்தக் கரும்பினுடைய சாரிலேயிருந்து இல்லிசிட் டிஸ்டிலேஷன் வடிக்கலாம். ஆகவே கரும்புக்கு ரெஸ்டிரிக்ஷன் போடுவீர்களா, அப்படிப் போடுவீர்கள் என்றால், எங்களுடைய ஜில்லாவிலே நீங்கள் பதநீருக்கு ரெஸ்டிரிக்ஷன் போடுங்கள்" என்று சொன்னேன். அதிலிருந்து திருநெல்வேலி ஜில்லாவிலே அந்த முறை எடுக்கப்பட்டது. பனை மரத்திலிருந்து பதநீரை இறக்கலாம், ஆனால் கொண்டு வரக்கூடாது என்று திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே இருக்கிறது. லைசென்ஸ் வாங்கலாம், ஆனால் விற்றால் பிடிக்கலாம். என்ன கொடுமை இது!

பதநீர் நல்ல வைட்டமின் உள்ளது என்று உலகத்திலே உள்ள மருத்துவத்துறையினர் ஒத்துக்கொள்கிருர்கள். சாராயம் போன்ற வைகளில் தான் உடம்புக்குக் கெடுதியான வஸ்துக்கள் இருக்கின்றன என்று சொல்கிருர்கள். அப்படிப்பட்ட பதநீரை உபயோகிக்கக்கூடாது என்ற அளவுக்கு இருக்கிறது. செங்கல் பட்டு மாவட்டத்தில், அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் இங்கு இல்லை, பதநீருக்கு லைசென்ஸ் கேட்டார்கள். நான் எழுதிக்கொடுத் தேன். ஒரு வருஷம் ஆகிறது, இன்னும் ஒன்றும் தெரியவில்லை. திரு. மன்ருடியார் அவர்கள் அமைச்சராக வந்ததற்குப் பிறகு அந்த அதிகாரத்தை காதி போர்டு ஏற்றுக்கொண்டது. இதிலே போலீஸ் இலாகா வேறு குறுக்கே இருக்கிறது. நாகப்பட்டிணத் திலோ, வேதாரண்யத்திலோ யாரோ ஒரு அதிகாரி தவறு செய்து விட்டால், பதநீர் லைசென்ஸையே ரத்து செய்துவிட்டார்கள். யாரோ எங்கோ தவறு செய்தால் அதற்கு ஏழை மக்களா கண்ணீர் விட வேண்டும்? அதிகாரிகள் செய்த தவறுக்கு அவரைத் தண் டிக்கவேண்டுமே தவிர, பொதுமக்களுக்குக் கஷ்டத்தையும், நஷ்டத் தையும் ஏற்படுத்துவது சரியா என்பதைப் பார்க்க வேண்டும். பதநீர் நல்ல சத்து உள்ளது என்று சொல்கிருர்கள், அது ஒரு இடத்தில் 15 பைசா. இன்னொரு இடத்தில் 40 பைசா. கூட்டுறவு, கூட்டுக்கொள்ளை அடிப்பது என்பதை நான் எப்பொழுதும் சொல்லிக்கொண்டே வருகிறேன். அதை எல்லாவற்றிலும் நுழைக்க வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பத நீர் விஷயத்தில் நிச்சயமாகச் சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் லிபரலைஸ் பண்ணவேண்டும். ஒரு ஹரிஜனைக்கூடத் தொடுவான், ஆனல் ஒரு பனைமரம் ஏறுபவனைத் தொடமாட்டான். அப்படிப் பட்ட கீழ்நிலையில் இன்றைக்கு அவர்கள் இருக்கிருர்கள். மது விலக்கு வந்த பிறகு அவர்களுக்கு மிகவும் கஷ்டம். அவர்களுக்கு உதவிகள் செய்யவில்லை. கொல்லர்களுக்கு எவ்வளவோ உதவி கள் செய்தோம். ஆனல் இவர்களுக்கு அதுமாதிரிச் செய்ய வில்லை. அவர்கள் எல்லாம் பதநீர் இறக்கி கிராமத்திலேயே கொண்டுவந்து கிராம மக்களுக்குக் கொடுத்துதவி, அந்தத் தொழி லாளர்கள் நல்வாழ்வு வாழக்கூடிய வகையில் ரெஸ்டிரிக்ஷன்களை நீக்குவதற்கு நெல்லை ஜில்லாவில் செய்ததுபோல் செய்யத் தவறினல், நான் பொது மக்களிடத்திலே கிளர்ச்சி செய்வதற்குக் கூடத் தயாராக இருக்கிறேன். ரத்தம் கொதிக்கக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம் புத்தூர் போன்ற மாவட்டங்களில் எல்லாம் நெல்லையில் இருப் பதைப் போலவே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் சட்டமன்றத் தலைவர் களே, அமைச்சர் அவர்களால் காதிக்கு மானியக்கோரிக்கை 26 லட்சத்து 83 ஆயிரம் ரூபாய்க்கு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த 26 லட்சத்து 83 ஆயிரம் ரூபாயில் தனித்தனியாக காதிக்கு எவ்வளவு, கிராமத் தொழில்களுக்கு எவ்வளவு என்று குறிப்பிடாத காரணத்தால், நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல போதிய அளவு வசதி இல்லாமல் இருக்கிறது. விளக்க அறிக்கை

அப்படிக் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், எவ்வளவு விரயம் ஆகியிருக்கிறது என்பது தெரியக்கூடாது என்பதற்காகத் தாளு என்று எங்களைப் போன்றவர்களுக்கு சந்தேகம் இருக் கிறது.

காதி போர்டிலிருந்து 7, 8 ஆண்டுகளுக்கு முன்பாக மணிமுத் 12-30 p.m
தாறில் அம்பர் சர்க்கா டிரெய்னிங் என்ற முறையில் மாணவர் களைச் சேர்த்து மாதம் 40 ரூபாய் ஸ்டைஃபண்ட் கொடுத்து பயிற்சி அளித்தார்கள். அவ்வாறு பயிற்சி கொடுக்கப்பட்டவர் களுக்கு இதுவரை வேலை கொடுக்கவில்லை. அந்தப் பணம் எல்லாம் வீண் விரயந்தான். அவ்வாறு வேலை இல்லாமல் இருப்ப வர்களுடைய பெயர்கள் என்னிடத்தில் இருக்கின்றன. ஒருசிலர் இதை எதிர்பார்க்காமல் வேறு வேலைக்குச் சென்று விட்டார்கள். இந்த நிலையில் இந்தப் பயிற்சிக்காகச் செலவழிக்கப்பட்ட பணம் வீண் விரயமாக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் மக்களுக்கு வேண்டிய பல வசதிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட மன்றமாகும். அவர்களைக் கதர் விற்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தப்படுவதன் காரணமாக, மன்றத்தின் பெருமை கெட்டுவிடும் நிலைமை இருக்கிறது. அவர்கள் விவசாயிகளுக்கு வேண்டிய பல கருவிகளை வாங்கிக் கொடுப்பது, அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பது ஆகியவற்றைக் கவனிக்க வேண்டியவர்கள், கதரை விற்கக் கூடிய ஜவுளிக் கடையாக பஞ்சாயத்து யூனியன் மன்றம் மாறியிருக்கிறது. கைத்தறித் துணிகளைக் கோவாப்பரேட்டிவ் சொசைடிஸ் மூலமாக விற்பது போல் கதரை விற்பதற்கும் கடைகளைத் திறந்து அதன் மூலம் விற்கலாம். பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்கிற ஊழியர் களுக்கெல்லாம் பொங்கல் அட்வான்ஸ், தீபாவளி அட்வான்ஸ் ஆகியவற்றைக் கொடுக்கிருர்கள்; ஆனல் அதைக் கொடுக்கும் போது இவ்வளவு ரூபாய்க்குக் கதர் வாங்கினல்தான் கொடுப்போம் என்ற கண்டிப்பை ஏற்படுத்துகிருர்கள். கோடீஸ்வரர்கள்தான் கதரை எடுக்க முடியுமே தவிர, சாதாரணமானவர்களால் கதரை வாங்கிப் பயன் படுத்த முடியாது. கதர் துணி 3 மாதத்திற்கு மேல் வருவதே இல்லை. 100 ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஆசிரியர், 80 ரூபாய் சம்பாதிக்கக் கூடிய பியூன் எப்படிக் கதரை வாங்க முடியும்? எப்படி அவர்களுக்கு அது கட்டுப்படியாகும்? கதரை வசதியுள்ளவர்கள் கட்டிக் கொள்ளட்டும்; இவர்கள் கண்டிப்பாகக் கதர் வாங்க வேண்டுமென்று வற்புறுத்தப்படக்கூடாது.

கிராமக் கைத்தொழில்கள் இதிலே இணைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் வி. ஃபீல்டுமென் வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் 500-க்கு மேற்பட்ட வி. ஃபீல்டுமென் இருப்பதாக அறிகிறேன். அவர்களை எல்லாம் மார்ச் மாதத்தோடு எடுத்து விடப் போவதாகத் திட்டவட்டமாகச் சொல்லப்படுகிறது. அப்படியானல் அவர்களுக்கு மாற்று வேலைக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது? அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்

போது இதைப் பற்றிக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களை எடுத்து விடப் போகிறோம் என்று அறிவிக்கப்படுகிற அதே நேரத்தில், பி. ஃபீல்டுமென் பயிற்சிக்கு போன மாதத்தில் விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறார்கள். பயிற்சியடைந்த மூன்று நான்கு ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் வீட்டுக்குப் போகும் நிலைமையில் இருக்கும்போது தொடர்ந்து பயிற்சிக்கு ஆள் எடுக்கும் நிலைமை ஏன்? இதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தொழில் விஸ்தரிப்பு அதிகாரிகள் (இ. ஓ. இண்டஸ்ட்ரிஸ்) இருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்தோடு இவர்களை எடுத்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. ஒருசில இடங்களில் இவர்களைப் பி. டி. ஓ. க்களாகப் போட்டிருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கிறது. அதையும் பரிசீலனை செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கும் வகையில் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேந்தமங்கலம் பஞ்சாயத்து யூனியனில் தோல் பதனிடும் சாலை ஒன்று இருக்கிறது. அது கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்படவில்லை. அங்குள்ள ஒரு சூப்பர்வைசர் அந்த ஊரிலேயே இருக்க வேண்டுமென்பதற்காக அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். நல்ல செடிகளை, மாதுளைச் செடி, கொய்யாச் செடி போன்றவற்றை வைத்து அழகுபடுத்தியிருக்கிறார். எவ்வளவு பேர் அங்கே தோல் வாங்கிப் பதனிடுகிறார்கள்? அதற்காக எவ்வளவு பேருக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது? கோவாப்பரேட்டிவ் சங்கத்தின் ஜெனரல் பாடி மீட்டிங் கூட்டப்பட்டதா? இதையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்று டைரக்டருக்கும், வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் ஆபீசருக்கும் பஞ்சாயத்து யூனியனிலிருந்து எழுதி அனுப்புகிறார்கள். ஆனால் அங்குள்ள சூப்பர்வைசர் ஆபீசரைச் சரி செய்து அங்கிருந்து அதற்குப் பதிலே வரமுடியாதபடி செய்து விடுகிறார். யூனியன் எழுதியதன் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாமலே செய்து விடுகிறார் அந்த சூப்பர்வைசர். அந்தத் தோல் பதனிடும் சாலையில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? மாதம் 20 ரூபாய் ஸ்டைபண்ட் கொடுத்து ட்ரெயினிங் கொடுத்தோம். அவர்கள் சும்மா இருக்கிறார்கள். அந்தப் பயிற்சியினால் பலன் ஏற்படவில்லை. நல்ல முறையிலே இன்ஸ்பெக்ஷன் இல்லை. மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் நாங்கள் ஒரு கேள்வி கேட்டோம். அந்தத் தொழிலில் அனுபவம் இல்லாதவர்களை ஏன் தலைவராகப் போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டோம். இப்போது அந்தத் தோல் பதனிடும் சாலையின் தலைவராக இருப்பவர் பருத்தி வியாபாரம் செய்பவர். அவருக்குத் தோல் பதனிடும் வேலையைப் பற்றித் தெரியாது. அவர் ஒரு காங்கிரஸ்காரர் என்ற காரணத்தால் போடப்பட்டிருக்கிறார். இதைப் பற்றிப் பல முறை டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். இப்போது [illegible] மன்றத்தில்

கூறுகிறேன். அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே முக்கியமான விஷயங்களை எல்லாம் கனம் மெம்பர்கள் சுருக்கமாகச் சொன்னதற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, ஆண்டுக்கு ஆண்டு கதர் விற்பனை நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், மக்களிடம் கதரை வாங்க வேண்டுமென்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதுதான். கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களுடைய ஓய்வு நேரத்திலே கதர் நூற்பதை ஒரு வேலையாக வைத்துக் கொண்டு இருப்பதால், அது நல்ல வளர்ச்சியடைந்து, அதிலே அவர்கள் 8 மணி நேரம் ஒரு நாளைக்குச் செலவழிப்பதால் ஒரு நாளைக்கு, 2, 3 ரூபாய் கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய ஒரு தரமான தொழிலாக இது அமைந்திருக்கிறது. ஸ்ரீமான் மகாலிங்கம் அவர்கள் பேசும்போது ஆங்காங்கு கிராமங்களில் படித்து வருகின்ற குழந்தைகள், எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் வரை, இதிலே ஈடுபடச் செய்யும் முயற்சியை எடுக்கவேண்டுமென்ற நல்ல கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கிணங்க புதிய மாதிரி சர்க்கா வருகின்ற நேரத்திலே, இந்த வாய்ப்பை அவர்களுக்கும் கொடுத்து அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு வேலை செய்தார்களானால், நல்ல நிலை ஏற்பட முடியும் என்று கருதுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிலே கண்டிப்பாகக் கதர் விற்பனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள் என்று இப்போது பேசி முடித்த கனம் மெம்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்த மெம்பர் அவர்களும் குறிப்பிட்டார்கள். யாரையுமே கதரை வாங்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. உயர்ந்த துணி வாங்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் கூட இதிலே புதிய டிசைன்கள் வருகின்ற நேரத்திலே வாங்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் ஏராளமான பேர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : அமைச்சர் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று சொன்னார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 10,000 ரூபாய் பெருமான கதர் துணியைக் கொடுத்து விட்டு இதை விற்று விடவேண்டுமென்று ஆணையிட்டு விடுகிறார்கள். ஆகவே, அந்தத் துணியை விற்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கட்டாயப்படுத்தி விற்கிறார்கள், பஞ்சாயத்து யூனியனில். நீங்கள் சொல்லலாம், வற்புறுத்தவில்லை என்று. இவ்வளவு ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள துணியை விற்கவேண்டுமென்று டார்ஜட் பிக்ஸ் செய்து விடுகிறார்கள். ஆகவே, அங்குள்ளவர்களை வற்புறுத்து, [illegible], வாங்கவேண்டுமென்று சொல்லி.

[24th March 1966

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கட்டா
யப்படுத்தி அதன் மூலம் வாங்கியதாக ஒரு புகாரும் எனக்கு வர
வில்லையென்று சொல்லிக் கொள்கிறேன். கலெக்டர்களுக்கு
எழுதினேன், இதை வாங்கவேண்டும், இந்த ஆண்டு கதர் துணியை
ஆங்காங்கு மக்களிடத்திலே புகுத்துவதற்கு அல்லது அவர்கள்
அதைவாங்கும் நிலையை ஏற்படுத்துவது நல்லது என்று எழுதி
னேன். நான் பெருமைப்படுகிறேன். இந்த ஆண்டு அதிகமாக
நல்ல விற்பனையானது எனக்கு தெரியும். ஆனால் வற்புறுத்தலின்
பேரில் வாங்கினார்கள் என்று சொன்னால், அப்படி எந்தவிதமான
புகாரும் என்னிடம் வரவில்லை என்று தான் சொல்வேன். துணி
வேண்டுமென்றால் வாங்கிக் கொண்டு போகலாம். கவர்ச்சியான
துணிகள் இப்போது இதில் நிறைய வந்து கொண்டிருக்கின்றன,
ஆகையால் வாங்குகிறார்கள். மற்ற கடைகளில் கூட வியாபாரம்
குறைந்துவிட்டது என்று சொல்லும் நிலையில் கதர் எம்போரியா
கிராம உத்தியோக் பவன், கதர் துணிகள் விற்கும் கடைகள்
இவற்றில் ஏராளமான பேர்கள் கதர் துணிகள் வாங்கிக் கொண்
டிருக்கிறார்கள். புது மாதிரியான சில்க் சேலைகள் கட்ட வேண்டு
மென்று எண்ணுகிற பெண்மணிகள் அப்படிப்பட்ட நல்ல துணி
கள் கதரில் இருப்பதைப் பார்த்து அவற்றை வாங்கிச் செல்கிறார்
கள். அந்த அளவிற்கு இப்போது கதர் ப்ராபல்யம் அடைந்திருக்
கிறது. நீங்கள் கூட வாங்கிப் போட்டால் நன்றாகயிருக்கும்.
அதில் தவறு எதுவும் இல்லை. இதன் பலன் கிராம மக்களுக்குத்
தான் போய் சேருகிறது. நடுவில் உள்ளவர்களுக்குப் போக
வில்லை,

திரு. மு. கருணாநிதி : நீங்களும் வாங்கிப் போட வேண்டு
மென்று வேண்டுகோள் விடுத்தார் அமைச்சர் அவர்கள். அந்த
வேண்டுகோளை நிறைவேற்றுகிற வகையில்தான் கதர் என்பது
ஒரு கட்சிக்காரர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல, எல்லோரும்
அதை அணியலாம் என்ற வகையில் கறுப்பு சிவப்பு கரை போட்ட
வேட்டிகள் வேண்டுமென்று கேட்கப்பட்டு அது அனுப்பவும்பட்டு
மறுபடியும் அவை திரும்ப வாங்கப்பட்டன. ஆகவே, கதரை
காங்கிரஸ்காரர்கள் மட்டும்தான் உடுத்தவேண்டுமா அல்லது தேசிய
முறையில் அதை எல்லோரும் உடுத்தலாம் என்றிருக்கிறதா என்
பதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

கனம் திரு ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : நீங்களும்
ஏராளமாகப் போடலாம். கதர் விற்பனையில் லால்குடி பஞ்
சாயத்து யூனியன் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.
அதற்காக நான் பெருமைப்படுகிறேன். திரு. தர்மலிங்கம் அவர்
கள்தான் அதற்கு சேர்மன் என்று நினைக்கிறேன். திரு. மணி
அவர்கள் சொல்லும்போது, வேட்டிக்கு ஆர்டர் கொடுத்திருந்
தோம், 50 வேட்டிகளுக்கு ஆர்டர் கொடுத்தோம். ஆனால் சர்க்கார்
கொடுக்கவேண்டாம் என்று சொன்னதாகச் சொன்னார்கள்.
அப்படி ஒரு உத்தரவும் போடவில்லை. நான் [illegible]

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்]
24th March 1966]

போயிருந்தபோது நாதி ஜில்லா ஆபீசர் இதைப் பற்றி என்னிடம்
சொன்னார்கள். சர்க்காரிலிருந்து உத்தரவு போய் வாபஸ்
பெற்றுக் கொண்டதாகச் சொன்னது உண்மைக்குப் புறம்பாக
இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேனே தவிர, வேறொன்றும்
இல்லை. யாரும் என்னிடம் அப்படி புகார் சொல்லவில்லை.

திரு. எம். எஸ். மணி : பொங்கல் விழாவிற்காக கதர் அணிய
வேண்டும் என்று சொல்கிறபோது அந்தத் துவக்க விழாவில் திரு.
தர்மலிங்கம் அவர்களை அழைத்து அதை துவக்கி வைத்தார்கள்.
உடனடியாக கதர் வாங்கவேண்டுமென்று சொன்னால் எங்களுக்கு
தேவையான கரையைப் போட்டுக் கொடுப்பீர்களா? என்று
கேட்டதற்கு சரி என்று ஒத்துக்கொண்டு 50 வேட்டிக்கு ஆர்டர்
கொடுத்தோம். நெய்யப்பட்டு, அந்த 50-ம் எங்கள் கைக்கும் வந்து
விட்டன, வந்து பத்து வேட்டியை உடுத்தியும் விட்டோம். பிறகு
அதை திரும்ப கொடுத்துவிடுங்கள் என்று கேட்டபோது, ஏன்
என்று கேட்க, 'எனக்கு வேலை போய்விடும்' என்று அவர்கள்
சொன்னார்கள்.

கனம் உதவி சபாநாயகர் : மறுபடியும் அதைச் சொல்ல
வேண்டாம்.

The hon. Member is simply repeating. Probably the Hon. Minister has no information.

திரு. எம். எஸ். மணி : அதிகாரிகள் பயந்து துணிகளை வாங்கி
அவை டிப்போவில் இருக்கின்றன.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : The
District Officer was instructed to supply the dhoties என்று
சுருக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன். வேண்டாம் என்று சொல்ல
வில்லை. பதிலாக கொடுக்கவேண்டியதைக் கொடுத்து விடுங்கள்
என்று சொல்லியிருக்கிறோமே தவிர, கொடுக்க வேண்
டாம் என்று உத்தரவு ஒருகாலும் போடவில்லை.

திரு. மு. கருணாநிதி : திரு. மணி அவர்கள் சொன்னதை
அமைச்சர் அவர்கள் நம்புகிறார்கள் என்றால், அதில் உண்மை
இருக்கும் என்றால், அதிகாரிகள் மறுபடியும் திரும்பப் பெற்று
டிப்போவில் வைத்திருப்பார்கள் என்றால் மறுபடியும் அதை
வழங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவார்களா அல்லது
உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதில்
நம்புவது, நம்புவதற்கில்லை என்ற பிரச்னைக்குள்ளே போக
வேண்டாமென்று நான் கருதுகிறேன்.

பதனீர் இறக்குவது பற்றி திரு. மணி அவர்களும், திரு. கோசல்
ராம் அவர்களும் சொன்னார்கள். திருச்சிக்கு நான் சென்றிருந்த
போது எனக்கு சில தகவல்கள் கிடைத்தன. சில பாகங்களில்
பதனீர் இறக்கக் கூடியவர்கள் விற்பனை செய்யவேண்டும், அப்படி

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

விற்பனை செய்து கொள்ள சம்மதப்பட்டால் செய்து கொள்ளலாம் என்று சொன்னால் சிலவிடங்களில் விற்பனை செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். மற்றவர்கள் ஒரு ஃபெடரேஷன் முறையில் பதனீரைக் கொண்டு வந்து கூலரில் வைத்து கொடுக்கிறார்கள். வெல்லம் காய்ச்சினால் அதிக வருவாய் கிடைக்கிறது. இப்போது கொடுக்கிற தொகை குறைந்த தொகையாக இருக்கிறது என்று சொல்லும்போது அது சரியல்ல. வெல்லமாகக் காய்ச்சி கருப்புக் கட்டியாக விற்பனை செய்தார்கள் என்று சொன்னால் ஆறு பைசா அளவில்தான் கிடைக்கும். இந்த அளவில் விற்கும்போது 15 பைசா கிடைக்கும். அவர்களுக்கு இதில் அதிகம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. பதனீர் என்று சொல்லி—போதை வஸ்து என்று சொல்லவில்லை—சில பட்டைகளை தட்டிப் பிழிந்து விற்பனை செய்கிறார்கள். அது கூடாது என்றுதான் முயற்சி செய்து வருகிறோம். வேறு ஒரு காரணமும் அல்ல.

கனம் மகாலிங்கம் அவர்கள் பேசும்போது கைக்குத்தல் அரிசி பற்றி சொன்னார்கள். திரு. கோசல்ராம் அவர்கள், நெல் கேட்கிறார்கள், நெல் கொடுத்தால் கைக்குத்தலுக்கு வேலை ஆங்காங்கு அதிகமாக இருக்கும் என்று சொன்னார்கள். 10 மெட்ரிக் மெஷர்ஸ் கொடுத்தால், அதை வீட்டில் குத்தி எடுக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவதில்லை. மில்களுக்குத்தான் கொண்டு போக நினைக்கிறார்கள். இங்கு 150-க்கும் மேலாக கைக்குத்தல் அரிசி சொஸைட்டிகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் விற்பனையாகி இருப்பது 25 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கைக்குத்தல் அரிசி. கைக்குத்தல் அரிசிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து அந்த இன்டஸ்ட்ரி நல்ல முறையில் வளரவேண்டுமென்று நல்லமுறையில் முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது. வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் நல்ல முறையில் வளர்ச்சி அடையவேண்டுமென்று சொன்னார்கள்.

இன்னும் சில விஷயங்களைப்பற்றி குறிப்பாகச் சொன்னார்கள். ஜீப் போதாது, பெட்ரோல் போதாது, அதிகம் பெட்ரோல் கொடுக்கவேண்டுமென்றும், இன்னொரு ஜீப் கொடுக்கவேண்டும் என்றும், பலயிடங்களுக்கும் சென்று பார்க்க உபயோகமாக தக்க வசதிகள் செய்து தர வேண்டுமென்றும் திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். சர்க்காரில் ஒரு நல்ல யோசனை இருந்து கொண்டிருக்கிறது. ஜில்லாவிற்கு ஒரு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஆபீசர் என்ற அளவில் இருப்பதற்கும், இரண்டு ப்ளாக்குகளுக்கு ஒரு ஈ.ஓ. (சி.) இருந்து பார்த்து வேலை செய்வதற்கும் ஒரு எண்ணம் இருக்கிறது. அதைச் செய்தால் நீங்கள் சொல்கிற எண்ணம் பிரதிபலிக்கிற வகையிலே வேலை செய்யமுடியும் என்று கருதுகிறேன்.

ஆகவே, கதர் திட்டம் நல்ல வளர்ச்சி அடைந்து பல நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறது. மக்களுக்கும் இதில் நல்ல ப்ரியம் இருந்து கொண்டிருக்கிறது. கதர் திட்டத்தையும், வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ் துறை இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொண்டால், மக்கள் இதில் மிகவும் நல்ல முறையில் ஈடுபட்டிருக்

[திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்]

கிறார்கள். முக்கியமாக முன்பொரு தடவை இன்டஸ்ட்ரீஸ் டிமான்டில் வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ்-கான ஒரு பாகம் தொகை சேர்க்கப்பட்டுவிட்டதால், இங்கு குறைச்சலாக தெரிகின்றது. இந்தத் திட்டங்கள் எல்லாம் நல்ல திட்டங்கள். மகாத்மாஜீ வகுத்த திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். இதில் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இதில் முக்கியமாக நாட்டிலுள்ள மக்கள், முக்கியமாக கிராமத்திலுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக சட்டசபை மெம்பர்கள் ஒத்துழைத்து—மக்களுக்கு இந்தத் திட்டத்தினால் உள்ள நன்மைகளை எல்லாம் எடுத்துக் கூறி—ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மணி: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபொழுது, பதனீர் இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். ஆனால், இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுத்துவிட்டு, விற்பனை செய்வதற்கு லைசென்ஸ் கொடுப்பதில்லை. அமைச்சர் அவர்கள் இதற்கு காரணம் சொல்லுகின்ற நோக்கில் இதில் கலப்படம் இருக்கிறது என்று சொன்னார்கள். கலப்படம் இருந்தால், தண்டனை கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆகவே, இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கும்போது, விற்பனை செய்வதற்கு ஏன் லைசென்ஸ் கொடுக்கக் கூடாது? அவர்கள் விற்பனை செய்து கொள்வதற்கு என்ன வழி வகை செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அவர்கள் விற்பனை செய்யக் கூடாது என்று அரசாங்கம் கூறுகிறது என்று சொல்லும் பழியை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. குறிப்பிட்ட இடத்தில் விற்பனை செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கோசல்ராம்: கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நாகப்பட்டினம், வேதாரண்யம் போன்ற பகுதியில் விற்பனைக்கு கொடுத்திருந்த லைசென்ஸை திடீரென்று நிறுத்துவதற்கு காரணம் என்ன? அமைச்சர் அவர்கள் சொன்னது போல், அவர்கள் ஏதாவது கலப்படம் செய்தார்களா? அல்லது அதிகாரிகள் ஏதாவது தவறுகள் செய்தார்களா? அப்படியென்றால் அதிகாரிகள் செய்த தவறுக்காக இவர்களுடைய லைசென்ஸை நிறுத்தியிருப்பது சரியா? என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதியில் கூட்டுறவு மூலமாக பதனீர் விற்பனை லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், கூட்டுறவு சங்கத்திலுள்ளவர்களும், போலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து கொண்டு, பதனீருக்குப் பதில் கள் விற்பனை செய்வதற்கு முன் வந்தால் யார் தான் லைசென்ஸ்

கொடுப்பது நல்லது என்று சொல்வார்கள்? (குறுக்கீடு) காரணம் அந்த கூட்டுறவு சொஸைட்டியின் பிரசிடென்டே இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்.

திரு. கே. டி. கோசல்ராம் : அதிகாரிகளும், போலீசாரும் செய்த தவறுகளுக்காக 'காமன் மென்' தண்டிக்கப்படலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : 'காமன் மென்' தண்டிக்கப்படவில்லை. கூட்டுறவு சொஸைட்டியின் லைசென்ஸ் தான் நிறுத்தப் பட்டிருக்கிறது.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 26,83,000 under Demand No. XXII—Khadi."

The Demand was put and carried and the Grant was made.

(5) DEMAND NO. X—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,74,70,900 under Demand No. X—Administration of Justice."

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத்தில் ஆளும் கட்சியினர் தலையிடுவதால் நியாயம் மறை கிறது என்பதைச் சுட்டிக்காட்ட என்னுடைய வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 1,74,70,900 under Demand No. X—Administration of Justice—be reduced by Rs. 100."

MR. DEPUTY SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

The time allotted for this Demand is one hour. So, the House, will sit till five minutes to two.

திரு. செ. மாதவன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீதி மன்ற மான்யத்தில் நீதிமன்றங்களின் அடிப்படையாக இருக்கின்ற சப்-மாஜிஸ்டிரேட்-களைப்பற்றி இந்த மன்றத்தில் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சட்ட கமிஷனும் இவர்களைப்பற்றி பரிசீலித்தது. உயர்நீதி மன்றமும் தனது சிபாரிசை இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய சங்கத்தின் வாயிலாகவும் குறைகளை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் அரசாங்கம் உயர்நீதிமன்றம் கொடுத்த சிபாரிசுகளை பரிசீலனை செய்து கொண்டுதான் இருக்கிறதே ஒழிய, எந்தவிதமான முடிவுக்கும் வரவில்லை என்பதை சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். மொத்தம் இந்த மாநிலத்தில் 123 சப்-மாஜிஸ்டிரேட்-கள் இருக்கிறார்கள். அவர்களுடைய ரேங்க்கை உயர்த்து

வதிலோ, பிரமோஷனுக்கு ஸ்கோப்பை அதிகரிப்பதிலோ, அவர்களுக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவி வழங்குவதிலோ, சம்பள உயர்வு கொடுப்பதிலோ அரசாங்கத்திற்கு என்ன தகராறு இருக்கின்றது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த மாநிலத்தில் மொத்தம் இருக்கின்றவர்கள் 123 பேர்கள் தான் ஜுடிஷியலுக்கு அடிப்படையாக இருக்கின்றவர்கள் இவர்கள். இரண்டு ஆண்டுகள் அட்வகேட்-களாக இருந்தால், சப்-மாஜிஸ்டிரேட்-டாக வரலாம், மூன்று ஆண்டுகள் அட்வகேட்-டாக இருந்தால், டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-பாக வரலாம் என்றிருக்கும்போது இவர்களுக்கு டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-பாக வருவதற்கு ஏன் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது? இவ்விஷயத்தில் உயர்நீதி மன்றம் கொடுத்திருக்கின்ற சிபாரிசுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களின் கீழ் நீதிபதிகள் இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் உயர்நீதி மன்றத்தில் சொல்லக்கூடிய கருத்துக்களை ஏற்காமல் அதற்கு மாறாக, நீதித் துறையில் தலையிடுவது ஜனநாயக பாரம்பரியத்திற்கு பொருந்தாது என்பதை குறிப்பிட்டு காட்ட ஆசைப்படுகிறேன். சுதந்திரத்திற்குப் பின்னால் அரசாங்கம் இந்த ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால், நீதித் துறையில் உயர்நீதி மன்றத்தில் சொல்லப்படுகின்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல் தன்னிச்சையாக நடந்துகொள்கின்ற நிலையும் நீதிமன்றங்கள் சொல்லுகின்ற கருத்துக்கள் கேலிக்கூத்தாக ஆகி வருகிறது என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக ஒரு நீதிபதி, அந்த நீதிபதியின் மீது உயர்நீதி மன்றம் நடவடிக்கை எடுத்து ஓர் ஆண்டு சஸ்பென்ட் செய்திருக்கிறது. ஆனால் சஸ்பென்ட் செய்யப்பட்ட நீதிபதி அரசாங்கத்திற்கு ஸபார்டினேட்—அரசாங்கத்திலிருந்து அவர்களுடைய சம்பளத்திற்கு பணம் கொடுக்கப்படுகிறது—என்கிற எண்ணத்தில் —அரசாங்கம் உயர்நீதி மன்றம் கொடுத்த கருத்தை ஏற்காமல் அதை மாற்றி அமைத்து மாறாக அரசாங்கமே ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இது எப்படி பொருந்தும் என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு மாறாக அரசாங்கம் தீர்ப்பு அளித்திருக்கிறது, வழக்கு என்ன? சாதாரண வழக்கில் சஸ்பென்ட் செய்யப்பட்ட அந்த நீதிபதி தவறாக நடந்து இருக்கின்றார். இது தான் முதல் குற்றச்சாட்டு, கஸ்டம்ஸ் வழக்கில் விலை உயர்ந்த மதிப்புள்ள பொருட்களை கையாள்வதில் தவறியிருக்கிறார், இது இரண்டாவது குற்றச்சாட்டு. இவ்விதமான இரண்டு பயங்கரமான குற்றச்சாட்டுகளை சொல்லி அவருக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற போது, அதை அலட்சியப்படுத்தக்கூடிய முறையில் இந்த அமைச்சரவையும், இந்த அரசாங்கமும் நடந்திருக்கிறது என்றால், நிச்சயமாக இது இந்த நாட்டில் ஜனநாயக பாரம்பரியத்தை வளர்க்காது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. செ. மாதவன்] [24th March 1966

நீதிமன்றங்கள் இருக்கின்ற கட்டடங்கள் எல்லாம் வெள்ளைக்
காரன் காலத்தில் கட்டப்பட்டன. இதைப்பற்றி பல முறை இந்த
மன்றத்தில் பலராலும் எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. உதாரணத்
மன்றங்கள் இயங்கி வருகின்றன. இதை நமது முதலமைச்சர்
திற்கு சொல்லவேண்டுமென்றால், மதுரையில் மகாலில்தான் நீதி
அவர்களே வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அங்கே ஒரு ஜில்லா
நீதிபதி நீதிமன்றத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது அவர்
தலையிலேயே ஒரு கல் விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதை
அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
இந்த இடத்தை மாற்றவேண்டும் என்று திட்டம் போட்டு,
அதற்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கும் உத்தரவிடப்பட்
டிருப்பதாக தெரிகிறது. ஆனால் இன்னும் எந்தவிதமான வேலையும்
நடைபெறாத நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. ஏதாவது
ஒரு நீதிபதிக்கு காயம் ஏற்பட்ட பின்னால் தான் அரசாங்கம்
இதனுடைய முக்கியத்துவத்தை உணருவார்களோ என்னவோ
தெரியவில்லை. மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம்
இந்த இரண்டு மாவட்டங்களையும் சேர்த்துத்தான், நீதிமன்றங்கள்
மகாலில் இருந்து வருகின்றன. புதிய கட்டடம் கட்டி நீதி
மன்றங்களை மாற்றும்போது, மதுரை மாவட்டத்திற்கு தனியாக
நீதிமன்றங்களை அமைத்துவிட்டு, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு
தனியாக அமைக்கலாம் என்றும் கருத்து இருப்பதாக தெரிகிறது.
இதைப்பற்றி உயர்நீதி மன்றத்திலும் விசாரித்திருப்பதாக
தெரிகிறது, மாவட்ட பிரதிநிதிகளும் இதைப்பற்றி தங்கள்
கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இது சம்பந்தமாக
இந்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்
கொள்ளவில்லை.

குத்தகைதாரர் சட்டங்கள் (டெனன்ஸி லா) சம்பந்தமான
வழக்குகளை விசாரிப்பதற்கு ஆர்.டி.ஓ-க்கள் அதிகாரப்படுத்தப்
பட்டிருக்கிறார்கள். அவருக்கு பல வேலைகள் இருக்கின்றன. இந்த
அதிகாரத்தை நீதிமன்றத்திற்கு கொடுத்துவிடவேண்டும் என்ற
கருத்து இந்த மன்றத்தில் பல முறை வைக்கப்பட்டிருக்கின்றது.
அப்போது நாங்கள் சொன்னதால் இதுவரை கேட்கவில்லை.
இப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இதற்காக தீர்மானம்
போட்டிருக்கிறது. இப்போதாவது இதைப்பற்றி பரிசீலித்து
குத்தகைதாரர்கள் சம்பந்தமான வழக்குகளை பரிசீலிப்பதில்
இருக்கின்ற கஷ்டங்களை உணர்ந்து, இதை ஆர்.டி.ஓ. விடமிருந்து
1-00 மாற்றி நீதிமன்றத்தினிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கேட்டுக்
p.m. கொள்ளுகிறேன். நீதிபதிகளாகப் பணி புரியக் கூடியவர்களுக்கு,
நகரப் புறத்தில் இருக்கிறவர்களுக்கு, மாவட்டங்களில் இருக்
சிறவர்களுக்கு, வீட்டு வசதி செய்யும் வாய்ப்பே இல்லை. சிறு
கிராமங்களில், சிறு பஞ்சாயத்துக்களில் இருக்கிறவர்களையெல்லாம்
யாரையாவது அனுப்பி வீட்டைத் தேடிக்கொள்ளும் நிலைமை
இருக்கிறது. நீதிபதிகள் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்ற
காரணத்தினால் அவர்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்திக்
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

24th March 1966] [திரு. செ. மாதவன்]

ஸ்பெஷல் கோர்ட்ஸ் அமைக்கலாம் என்று அரசாங்கத்திற்கு
கிரிமினல் பரோஸீஜர் கோடில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஸ்பெஷல் கோர்ட்ஸ் அமைக்கும்போது அதை எதிர்கட்சி
களை பழி வாங்க, மிரட்ட பயன்படுத்தக் கூடாது என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். கரூர் கலவர வழக்கு என்ற ஒரு வழக்கு
இருக்கிறது. கரூரே பெரிய நகரம் தான். அதற்காக ஏற்படுத்தப்
பட்டுள்ள ஸ்பெஷல் கோர்ட்டை அங்கேயே வைக்கலாம். பல்வேறு
மாற்றங்கள் ஏற்பட்டு, பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு
திருச்சியில் வைக்கப்பட்டது. காரணம், இந்த வழக்கிலே எதிர்க்
கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் பங்கு
பெற்றிருக்கிறது. அவர்கள் இந்த வழக்கில் பணத்தைச்
செலவழித்து வேறு ஊருக்குப் போகவேண்டுமென்ற காரணத்
தினால் தான் அரசாங்கம் இப்படி ஸ்பெஷல் கோர்ட்டை மாற்றி
மாற்றி வேறு வேறு ஊர்களில் வைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது.
இந்தக் கோர்ட்டை கரூரில் வைப்பதில் தவறு என்ன? இதற்கென்று
ஒரு ஏ.பி.பி. போட்டிருக்கிறார்கள். ஏ.பி.பி. போடுவதற்குச்
சட்டங்கள் இருக்கின்றன. மாவட்ட கலெக்டர் சிபாரிசு செய்ய
வேண்டும். இதற்கு இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஏ.பி.பி-யாக
நியமிக்கப்பட்டிருக்கிறார். நீதிபரிபாலனத்தில் நம்பிக்கை ஏற்படாத
அளவுக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்து,
அரசாங்க கஜானாவிலிருந்து அவர்களுக்குப் பணம் கொடுத்தால்,
அது எப்படி பொருத்தமாக இருக்கும்? யார் என்பதைக் கூட
நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. காரணம் அமைச்
சருக்கும் அமைச்சர் அவைக்கும் தொடர்பு இருக்கிறது. சொன்னால்
அமைச்சர் அவர்கள் வருத்தப்படுவார்கள். இப்படிப்பட்ட நிலை
இருப்பதால் நீதி பரிபாலனத்தில் மக்களே நம்பிக்கை இழந்து
விடக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

உயர்நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதில் நமது அரசாங்கத்
திற்கு ஒரு பங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே
கொள்கையை நிர்ணயிக்கவேண்டும். அரசாங்கத்தின் ஆளாக,
அரசாங்க அதிகாரியாக பப்ளிக் ப்ராஸிக்யூட்டர், அட்வகேட்-
ஜெனரல் முதலியவர்கள் இருக்கிறார்கள். பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்
அட்வகேட்-ஜெனரலாக வருகிற ஒரே காரணத்தை வைத்து உயர்
நீதிமன்ற நீதிபதி பதவி கொடுக்கலாம் என்ற கன்வென்ஷனைப்
பின்பற்றி வருகிறது. இது தவறான கன்வென்ஷன் என்று எங்கள்
சார்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அரசாங்கத்
திற்காக வாதாடக் கூடியவர்கள், அரசாங்கத்தின் கொள்கையை
நிறைவேற்றுகிறவர்கள். அரசாங்கம் செய்வது தவறு. அகில
இந்திய சட்டக் கமிஷனும் இதைப் பரிசீலித்திருக்கிறது, நம்
அரசாங்கம் இதை கவனத்தில் வைக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாவட்ட நீதிபதிகளிலிருந்து உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியக்
கிறார்கள். இதற்கு கோட்டா வைத்திருக்கிறார்கள். இந்த
கோட்டா குறைக்கப்படவேண்டும். பாரிலிருந்து, அட்வகேட்டு
களிலிருந்து அதிகப்படியான நீதிபதிகளை நியமிக்கவேண்டும் என்ற

கொள்கையை சட்டக் கமிஷன் வற்புறுத்தி இருக்கிறது. இந்திய தலைமை நீதிமன்ற நீதிபதிகளும் அந்த மாதிரியான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். பல உயர்நீதி மன்ற தலைமை நீதிபதிகளும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்கலாம். அரசாங்கம் தன்னுடைய சிபாரிசை ஜனாதிபதி அவர்களுக்குச் சொல்லும் போது இந்தக் கருத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி வழங்குவது என்பது சர்க்காருடைய கடமை. காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு கொள்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீதியை விலைக்கு விற்பது போல சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு என்பதை சட்டம் உணர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் உணர மறுக்கிறது. இந்த ஆண்டு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பு கூடக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு எவ்வளவு தூரம் உண்மை என்று ஆராயவேண்டும். நீதி மன்றத் துறையில் வருமானம் என்ன, செலவு என்ன என்று பார்க்கும்போது கட்டுபடியாக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மிச்சப்படலாம், மிச்சப்படாமல் போகலாம். வெள்ளைக்காரன் ஆட்சிக்கு வந்த பிறகு தான் நீதி மன்றங்கள் மூலமாக வருமானம் வரவேண்டும் என்று புகுத்தினான். அதற்கு முன் கிடையாது. 1947-ம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னாலே, உலகத்திலே எந்த நாட்டிலேயும் இல்லாத அளவுக்கு நீதியை விலைக்கு விற்கும் பண்பை இந்த அரசாங்கம் தான் கைக்கொண்டிருக்கிறது. 1955-ம் ஆண்டிலே இந்த மன்றத்திலே காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு தான் இந்த கோர்ட் ஃபீஸ் ஆக்ட் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவு என்ன என்பதை கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஆராய்ந்திருப்பார்கள். 1954-55-ல் நீதி மன்றங்களின் மூலமாக அரசாங்கத்திற்குக் கிடைத்தது ரூ. 1,54,001. அதற்குப் பிறகு தான் சட்டம் வந்தது. சட்டம் வந்ததற்குப் பின்னாலே, 1961-62-ம் ஆண்டிலிருந்து முழுக்க முழுக்க லாபம் சம்பாதிக்கிறது இந்த இலாகா என்று கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எவ்வளவு லாபம்? 1964-65-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி ரூ. 75 லட்சம் இந்த இலாகாவிற்கு நீதித் துறையிலிருந்து லாபம் கிடைத்திருக்கிறது. 1965-66-ம் ஆண்டில் ரூ. 69 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. லாபம் என்று செலவு போக உள்ள வருமானத்தை மட்டும் கணக்கிட்டுச் சொல்லுகிறேன். ஆனால் நீதியின் அடிப்படையிலே கிரிமினல் ஜஸ்டிஸ் இனமாகக் கொடுக்கக்கூடிய கொள்கை எந்த ஜனநாயக அரசாங்கத்திற்கும் உண்டு. சர்வாதிகார அரசாங்கத்திற்கும் இருக்கிறது; ஆனால் ஜனநாயக அரசாங்கத்திற்கு நிச்சயம் உண்டு. கிரிமினல் ஜஸ்டிஸ் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு வருமானமே கிடையாது. கிரிமினல் கோர்ட் நிர்வாகத்திற்கான செலவுகளெல்லாம் போக, 1964-65-ல் ரூ. 75 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது. 1965-66-ல் ரூ. 69 லட்சம் லாபம் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், கிரிமினல் கோர்ட்டுகளுக்குச் செலவு [illegible]

பணத்தையும் சேர்த்து சிவில் கோர்ட்டுக்குச் செல்லும் பொது மக்களிடத்திலிருந்து வசூலித்து விட்டு, மேற்கொண்டும் கிட்டத் தட்ட ஒரு கோடி ரூபாய் வசூலிக்கிறது என்றால், இது ஜனநாயக அரசாங்கமா? அல்லது நீதியை விலைக்கு விற்கும் அரசாங்கமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

நீதி பரிபாலனம் செய்கிறார்களே நான்-ஜுடிஷியல் ஸ்டாம்ப் விற்று, அதிலேயாவது ஒழுக்கக் கேடான முறை இல்லாமல் இருக்கிறதா என்று பார்த்தால், உள்ளபடியே இல்லை. அதற்கான காரணம் கொடுக்கவும் இல்லை. இன்றைக்கு ஸ்டாம்ப்-களை பிளாக் மார்க்கெட்டில் பகிரங்கமாக விற்கிறார்கள். இதை நீதிபதிகளே உணருகிறார்கள். கோர்ட்டிலே கூட பேசப்படுகிறது. ட்ரெஷரீஸ் சப்ளை செய்யும் என்று சொல்லுகிறார்கள். வென்டார்ஸ் போடுகிறார்கள். அவர்கள் பிளாக் மார்க்கெட் செய்கிறார்கள். கோர்ட்டுகளுக்கு ஸ்டாம்ப் ஒட்டும் முறையை மாற்றி வேறு முறையைப் பரிசீலிக்கலாம் என்று சட்டக் கமிஷன் சொல்லியிருக்கிறது, அதையும் பரிசீலிக்கவேண்டும்.

ஜுடிஷியல் பவர் போலீஸ் இலாகாவிற்குக் கொடுக்கப்படக் கூடாது என்று ஒரு பிரச்னை. இது பல முறை வற்புறுத்தப்படுகிற பிரச்னை. இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் என்றால், பல மாநிலங்களில் அந்த மாதிரி இருக்கிறது, அதனால் வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது வெள்ளைக்காரன் போட்ட சட்டம். அவனுக்கு அது தேவைப்பட்டது. நகரப்புறத்தில் தன் கையில் நிர்வாகத்தை வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆகவே, போலீஸ் அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டிய நிலை இருந்தது. அந்த முறையை ஜனநாயக அரசாங்கம் பின்பற்றக் கூடாது. அதை மாற்ற வேண்டும்.

உயர் நீதி மன்ற அதிகாரிகள் மாவட்ட நீதி மன்றங்களுக்குச் சென்று பரிசீலிக்கும் முறை இருந்து வந்தது. அந்த முறையை இந்த ஆண்டு நிறுத்தி விட்டார்கள். என்ன காரணம் என்றால், செலவைக் குறைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். கீழே உள்ள நீதி மன்றங்களுக்குச் சென்று பரிசீலிக்கும் வாய்ப்பு உயர் நீதி மன்றத்திற்கு இருக்க வேண்டும். செலவைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுவது சரியான காரணம் இல்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மன்றத்திலே எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு பிரிவு இருக்கிறது. உயர் நீதி மன்ற தலைமை நீதிபதிக்கு இடைக் கால கவர்னராக இருக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூட இப்படிப்பட்ட சூழ்நிலை நம் மாநிலத்துக்கு ஏற்பட்டதைப் பற்றி வருத்தம் தெரிவித்தார். இந்த அரசாங்கம் இது பற்றி இது வரையில் மத்திய அரசாங்கத்துடன் எந்தத் தொடர்பும் ஏற்படுத்தவில்லை. ஒரு உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி பல மாதங்களாகத் தொடர்ந்து இருந்துகொண்டு,

நாட்டு மக்களிடத்தில் சுற்றுலா வந்து கொண்டு, சட்டத்தை நிர் வகிக்கக் கூடியவர்கள், இன்டர்ப்ரிட்டேஷன் கொடுக்கும் நிலைமை யில் இருக்கக் கூடியவர்களுக்கு இப்படிப்பட்ட சிக்கலான சூழ் நிலையை உண்டாக்குவது இந்த அரசாங்கத்தின் செயலற்ற தன் மையைக் காட்டுகிறது. உடனடியாக இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருடன் தொடர்பு கொண்டு . . . . .

கனம் திரு. பூ. கக்கன் : செயலற்ற தன்மை ஒன்றும் இல்லை. சட்டப்படி என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்திருக்கிறார் களே தவிர இதிலே செயலற்ற தன்மை ஒன்றும் இல்லை.

திரு. செ. மாதவன் : நான் சட்டத்தைச் சொன்னேன். அமைச் சருக்குப் புரியாவிட்டால் மறுபடியும் சொல்லுகிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. இந்த நிலைமையைச் சுட்டிக் காட்டி யோசனை சொல்லலாம். சட்டத்தைப் படித்துப் பாருங்கள். இங்கேயே சட்டம் இருக் கிறது.

உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி போஸ்ட்டை எப்படி ஃபில்- அப் செய்வது என்பதில் நம் அரசாங்கத்திற்கு ஒரு பங்கு கொடுக் கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கருத்து தெரிவிக்க உரிமை இருக்கிறது. கருத்தைத் தெரிவிப்பதில் இந்த அரசாங்கம் சரிவரச் செயல்படவில்லை. தமிழ்நாட்டில் இருக்கிற, தமிழ் நாட்டு உயர்நீதி மன்ற நீதிபதிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் களாக இருக்க வேண்டும். குறிப்பாக, தலைமை நீதிபதி தமிழ் நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தத் தவறி இருக்கிறது அரசாங்கம். என்ன காரணம்? எங்கேயோ ஒரு குழப்பம் இருக்கிறது. ஒரு மாநிலத்தில் குழப்பம் இருக் கிறது என்பதற்காக இந்த அரசாங்கம் பழிவாங்கப்படக் கூடாது. நம் மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் கிடைக்க அதைப் பெற்றுத் தர இந்த அரசு முயற்சியில் ஈடுபடவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்து, நீதிபதிகளின் வயதை நிர்ணயிக்கக்கூடிய கொள்கை யிலே இந்த அரசாங்கம் குழப்பிக்கொண்டே இருக்கிறது. உயர்நீதி மன்ற நீதிபதிகளின் வயதை உயர்த்துவதற்காக அரசியல் சட்டத்தை திருத்துவதுபற்றி இந்த மன்றத்தில் சிபார்சு செய்யப் பட்டபொழுது, மாவட்ட நீதிபதிகளின் வயதை உயர்த்துவது பற்றி யோசிக்கப்படுமா என்று நாங்கள் கேட்டோம். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் 'அதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை' என்று சொல்லிவிட்டார். ஆனால், இப்பொழுது முதல் அமைச்சர் அவர்கள் என்ன காரணத்தைக் கொண்டோ மாவட்ட நீதிபதிகளின் வயதை 58-ஆக உயர்த்திவிட்டோம் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் மீது நீதிபதிகளின் கண் இருக்கவேண்டும், கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்று ஜனநாயகத்தை தவறாக பிரயோகிக்கக்கூடிய முறையில் இந்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. நீதிபதிகளுக்கு உத்தியோக வயது 55, மேற்கொண்டு நீதிபதியை பதவியில் நீடிப்பதற்கு இந்த

அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு, உரிமை உண்டு, அந்த மூன்று ஆண்டுகளுக்கு அரசாங்கத்தின் தயவில் மாவட்ட நீதிபதிகள் பணி புரியவேண்டும் என்று உத்தரவு கூறுகிறது. இது சரியா? இது ஜனநாயகத்தைப் பின்பற்றக்கூடிய முறையா? நீதிபதி சுதந்தி ரமாக, தன் இச்சையாக எப்படி நீதி வழங்க முடியும்? அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் அமைச்சர் வழக்கே நீதிமன்றத் திற்குச் செல்லலாம். அப்பொழுது அமைச்சரின் தயவை மாவட்ட நீதிபதி எதிர்பார்க்கவேண்டுமா? மூன்று ஆண்டுகளுக்கு, 53 வயதுவரை அமைச்சர் தயவை அன்றாடம் எதிர்பார்க்கக் கூடிய சூழ்நிலையில் ஒரு உத்தரவு போடுவது ஜனநாயகத்தை கேவலப் படுத்துவதாகும் என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மாவட்ட நீதிபதிகளின் வயதை 58-ஆக உயர்த்தினார்கள். ஆனால் ஸப்-ஜட்ஜ், டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப், ஸப்-மாஜிஸ்டிரேட் ஆகியோர்களின் வயதை உயர்த்த மறுக்கிறார்கள். அதற்குக் காரணம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுகிறார்கள். டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப், ஸப்-ஜட்ஜாக இருப்பவர்களுக்குத்தான் மாவட்ட நீதி பதியாக, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாக, பிரமோஷன் ஆகும். மாவட்ட நீதிபதிகளுக்கு 58 வயது, மற்ற நீதிபதிகளுக்கு 55 வயது என்றால், அவர்களுடைய பிரமோஷன் பாதிக்கப்பட்டதா? எப்படி ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாமல் சொல்லுகிறார்கள்? உயர் நீதி மன்ற நீதிபதிகளின் வயதை உயர்த்தியபோது, மாவட்ட நீதிபதி களின் வயதை உயர்த்த மறுத்தார்கள். இப்பொழுது மாவட்ட நீதிபதிகளின் வயதை உயர்த்தியிருக்கிறபொழுது, டிஸ்ட்ரிக்ட் முன்சிப், ஸப்-ஜட்ஜ் ஆகிய நீதிபதிகளின் வயதை உயர்த்த மறுக் கிறார்கள். முன்னுக்குப் பின் முரணான கொள்கையை அரசாங்கம் பின்பற்றுகிறது.

பஞ்சாயத்து கோர்ட்டுகள்பற்றி 1962-ம் ஆண்டில் தேர்தல் முடிந்ததிலிருந்து அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறோம். கோர்ட்டு அமைச்சரோ, சட்ட அமைச்சரோ, முதல் அமைச்சரோ யாரும் இந்த சட்டத்தை பரிசீலித்ததாகத் தெரியவில்லை. பஞ்சா யத்து சட்டத்தின் 196 பிரிவில் இருக்கிற சட்டப்படி பஞ்சாயத்து கோர்ட்டு நிறுத்தப்பட்டால், நிறுத்தப்பட்டவுடனே, அந்த அதிகாரம் வில்லேஜ் கோர்ட்ஸ் ஆக்டின்கீழ் ஒரு கோர்ட்டு நியமிக்கப்பட்டு, அந்தக் கோர்ட்டுக்கு மாற்றப்படவேண்டும். இதுவரைக்கும் அம்மாதிரி மாற்றப்படவில்லை. ஏற்கனவே வழக்குப் போட்டிருந்தால் அந்த வழக்குகளின் கதி என்ன? ஏதாவது திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவேண்டும். முனிசிபாலிடி எல்லையில் கோர்ட்டு இல்லையா என்று சொன் னார்கள். முனிசிபாலிடியில் கோர்ட்டு இருக்கிறது. பஞ்சாயத்து சட்டத்தில் இருக்கிறது. ஆனால், நடைமுறையில் இல்லை. கோர்ட்டு வேண்டுமா, வேண்டாமா என்பது கொள்கைப் பிரச்னை. அரசாங்கம் எந்த முடிவுக்கு வேண்டுமானாலும் வரட்டும். பஞ்சாயத்து சட்டத்தில் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, அந்த அரசாங்கத்தை எப்படி செயல்படுத்துவது என்பது பற்றி பஞ்சாயத்து இலாகா, உள்துறை இலாகா பரிசீலிக்காமலேயே

இருப்பது அரசாங்கம் மக்களுக்கு நல்ல சேவை செய்வது ஆகாது, அதையும் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் நாட்டிலே வழக்குகள் சிறந்த முறையில் நீதிமன் றங்களில் முடிவு செய்யப்பட்டு வருகின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள நான் பிரியப் படுகிறேன். இருந்தாலும்கூட, வழக்குகள் துரிதமாக பைசல் செய்யப்படவில்லை என்ற ஒரு கருத்து நிலவி வருகிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் உயர்நீதி மன்றம் சென்னையில் மாத்திரம்தான் செயல்படுகிறது. அதனுடைய பிரிவு ஒன்றை மதுரையிலாவது, திருச்சியிலாவது வைக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளு கிறேன். ஏனென்றால், வழக்காடுபவர்கள் தென் கோடியிலிருந்து இங்கே சென்னைக்கு வருவது மிகவும் சிரமாக இருக்கிறது. செலவும் அதிகமாக ஆகிறது. இப்பொழுது ஆங்காங்கு பஞ்சா யத்து கோர்ட்டுகளை எடுத்துவிட்டனர். கிராம அதிகாரிகளுக்கு முன்போலவே அந்த வழக்குகளை விசாரிக்க அனுமதி கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து கோர்ட்டுகளில் தாக்கல் செய்த வழக்குகளில் தீர்ப்பான பிறகும்கூட டிகிரிய எப்படி நிறைவேற்ற வேண்டும் என்ற நிலையே தெரியாமல் இருந்து வருகிறது. அதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தென் ஆற்காடு ஜில்லாவின் ஜில்லா தலைநகரம் கடலூர். ஸப்-கோர்ட்டை இப்பொழுது சிதம்பரத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி, விருத்தாசலத்திலிருந்து வழக்காடுபவர்கள் சிதம்பரத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சிக்கும் சிதம்பரத்திற்கும் கிட்டத்தட்ட 60 மைல். திருக்கோவிலூருக்கும் சிதம்பரத்திற்கும் சுமார் 68 மைல். விருத்தாசலத்திற்கும் சிதம்பரத்திற்கும் 30 மைல். சிதம்பரம் மையமாக இல்லை. விருத்தாசலம் மையமாக இருக்கிற காரணத் தினால், சிதம்பரத்திலிருக்கிற ஸப்-கோர்ட்டை விருத்தாசலத்திற்கு மாற்றவேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக, வறியோர்க்கும், எளியவர்களுக்கும் சிறந்த முறையில் அரசாங்கம் வழக்குச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும், இப்பொழுது ஜில்லா முன்சீப் கோர்ட்டில் வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த வழக்குகளை சீக்கிரம் பைசல் செய் வதற்குத் மொபைல் கோர்ட்டாக ஒரு ஜில்லா முன்சீபை நியமித்து, எங்கெல்லாம் வழக்குகள் பைசல் ஆகாமல் தங்கியிருக் கிறதோ அந்த ஊருக்குச் சென்று வழக்குகளை பைசல் செய்ய அனுமதி கொடுக்கவேண்டும், அதுபோல மொபைல் கோர்ட்டு அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், கோர்ட்டுகளில் தமிழையே நாம் அதிகமாக கையாண்டு வருகிறோம் வாக்கு மூலங்கள்—பதிவு செய்ய வேண்டியது கூட தமிழிலேயே இருக்கவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது 145 ஸி.ஆர்.பி.ஸி.யின் கீழுள்ள மனுக்களை ஆர்.டி.ஓ. (S. D. M.) க்கு அனுப்பி விசாரிக்கிறார். ஆர்.டி.ஓ விசாரிப்பதில்லை. அந்த மனு போலீஸுக்கு அனுப்பப்படுகிறது. திரும்பி அங்கிருந்து ரிபோர்ட்டு வந்தவுடன் அதை ஆர்.டி.ஓ. விசாரிப்பதில்லை, எஸ்.டி.எம்.-க்கு அனுப்பிவிடுகிறார். ஆகவே, 145 பிரிவின்கீழுள்ள மனுக்களை எஸ்.டி.எம்.-இடம் கொடுத்து, அவரே போலீஸுக்கு அனுப்பி, ரிபோர்ட்டு வந்தவுடன் மறுபடியும் அவரே விசாரிக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆர்.டி.ஓ. 'மியர் போஸ்டு ஆபீஸாக' இல்லாமல் இருக்கவேண்டும் என்ற நிலையில்தான் சொல்லுகிறேன்.

ஸப்-மாஜிஸ்டிரேட்டிடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உதவி தாசில்தாருக்கு அனுப்பப்படுகின்றன. வழக்குகள் அங்கு சென்றால் சீக்கிரம் முடிவதில்லை. உதவி தாசில்தாருக்கு அநேக வேலைகள் இருக்கின்றன. அவருக்கு அடிக்கடி ஊரைவிட்டு வெளியே செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, ஸப்-மாஜிஸ்டிரேட்டிடம் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் துணை தாசில்தாருக்கு அனுப்பப்படாமல், ஸப்-மாஜிஸ்டிரேட்டே விசாரிக்கவேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது புதியதாக துவக்கப்படுகிற கோர்ட்டுகளுக்கு சரியான முறையில் கட்டடங்கள் இருப்பதில்லை. பிரைவேட் பில்டிங்கில் நடந்து கொண்டிருக்கின்றன. வக்கீல்கள் உட்காருவதற்கும், சாட்சிகள் உட்காருவதற்கும் தனியாக இட வசதி ஒன்றும் கிடையாது. உதாரணமாக, உளுந்தூர்பேட்டை எஸ்.டி.எம். கோர்ட்டில் கட்டட வசதி சரியாக கிடையாது. தனியார் கட்டடத்தில் இருக்கிறது. அதை வசதியுள்ள நல்ல வேறு கட்டடத்திற்கு மாற்றவேண்டும். நீதிமன்றங்களின் தலைவர் களுக்கும், அதிகாரிகளுக்கும் ஆங்காங்கு வீட்டுவசதி இருப்ப தில்லை. அதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடுகூட, கோர்ட்டுகளில் நாற்காலிகள், மேஜைகள் மிகவும் பழைமையாக இருக்கின்றன. நாற்காலிகளில் மூட்டைப் பூச்சி தொந்தரவு அதிகமாக இருக்கிறது. மேலும், நாற்காலிகள் துணியைக் கூட கிழித்துவிடுகின்றன. இது போன்ற நிலை இல்லாமல் கோர்ட்டுகளுக்கு நல்ல நாற்காலிகள் சப்ளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோர்ட்டில் சப்ளை செய்யப்படுகின்ற பாரங்கள் நல்ல பேப்பரில் இல்லை. எழுதிக்கொண்டே இருக்கும்பொழுது 'நிப்" குத்திக் கொள்ளுகிறது. போதுமான பாரங்களும் கிடைப்பதில்லை.

ஆகவே, நல்ல பேப்பரில் போதுமான அளவில் பாரங்கள் கிடைக் கும்படி வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

கட்டடங்கள் கட்டுவது யுத்த நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது யுத்த நெருக்கடி தீர்ந்து விட்டது என்று நினைக்கிறேன். ஆகவே, துரிதமாக கட்டடங்கள் கட்டிக்கொடுக்க முயற்சி எடுத்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளு கிறேன்.

திரு. கே. பொன்னையன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீதிபரிபாலனத் துறை மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த் தைகள் பேச விரும்புகிறேன். வால்பாரைக்கு வாரத்திற்கு ஒரு தடவை மாஜிஸ்டிரேட் கோர்ட்டு வருகிறது. காலை 11 மணிக்கு வந்து, மாலையில் 4 மணிக்கு திரும்பிவிடுகிறது. அதற்குள் பைசல் செய்கிற வழக்கு ஒன்றிரண்டுதான். 12 மணி அளவுக்கு வால்பாரைக்கு வந்து, 4 மணிக்கு பொள்ளாச்சிக்கு புறப்பட்டு விடுகிறது. அதற்குள் காரியம் ஒன்றும் ஆவதில்லை. வக்கீல்களும், கட்சிக்காரர்களும் வந்து காலையிலிருந்து காத்திருந்துவிட்டு வேதனைப்பட்டுக்கொண்டு போகிறார்கள். அதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, வால்பாரையில் நிரந்தரமாக ஒரு ஸப்- மாஜிஸ்டிரேட் கோர்ட்டு ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொள்ளாச்சி தாலூகா ஏறக்குறைய 4 லட்சம் ஜனத்தொகை கொண்டது. அது டிவிஷன் தலைநகரமும்கூட. அது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். வால்பாரையில் வாழும் 80,000 மக்களும் பொள்ளாச்சியோடு நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறோம். காலேஜ், பாலிடெக்னிக் போன்ற பெரிய ஸ்தாபனங்களெல்லாம் அங்குதான் இருக்கின்றன. எங்களுக்குள்ள பெரிய குறை வால்பாறையிலிருந்து, உடுமலைப் பேட்டைக்கு, டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்கு, 80 மைல் தூரம் சென்று காரியங்களை பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பொள்ளாச்சியில் ஒரு டிஸ்ட்ரிக்ட் கோர்ட் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். இதை சர்வகட்சிகளும் ஒத்துக் கொள்ளுகின்றன. சமீபகாலத்திலே, பொள்ளாச்சி முனிசிபாலிடிகூட ஏகமனதாக ஒரு தீர்மானம் போட்டு, சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏற்கனவே கோயம்புத்தூரில் இரண்டு சப்-கோர்ட்டுகள் இருக் கின்றன. ஒரு கோர்ட்டையாவது பொள்ளாச்சிக்கு மாற்றினால் நலமாக இருக்கும். ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை பொள்ளாச்சிக்கு வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. பி. ஜயராஜ் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீதி நிர்வாகத் துறை மானியத்தை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். தஞ்சை ஜில்லாவிலே, நன்னிலம் தாலூகாவில் ஏற்கனவே இருந்த சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை திருவாரூருக்கு மாற்றிவிட்டார்கள். ஒவ்வொரு தாலூகா

தலைநகரத்திலும் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது. ஆனால், அதிகமான ஜனத்தொகை கொண்ட, நன்னிலம் தாலூகாவில் இல்லை. அங்கிருந்து மக்கள் நாகை தாலூகா, திருவாரூர் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாக நன்னிலத்தில் ஒரு சப்-கோர்டையோ அல்லது திருவாரூருக்கு மாற்றியதையோ திருப்பிக் கொண்டுவந்து அங்கே வைக்க வேண்டும். இன்றையதினம் மக்கள் அங்கிருந்து 25, 30 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. நீதி என்று சொல்லும்போது, ஏழை மக்கள் நீண்டதூரம் செல்லமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். மற்ற தாலூகா தலைநகரங்களில் இருக்கும்போது நன்னிலத்தில் மட்டும் இல்லாமல் இருப்பது வருந்தத் தக்கதாக இருக்கிறது.

பண்ணையாள்களுக்கும், வாரதார்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று ரெண்ட் கோர்ட்டுகள் அமைத்திருக்கிறோம். ஆனால் ஆயிரக்கணக்கான கேசுகள் அந்த அந்த வருஷத்திலேயே முடிவு செய்யப் படாமல் ஏழை விவசாய மக்கள் அவதிப்படு கிறார்கள். ஆகவே, அந்த அந்த வருஷக் கேசுகளை அந்த அந்த வருஷமே பைசல் செய்ய வேண்டும் என்று சர்க்கார் துரிதப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு தாசில்தார். ஆர்.டி.ஓ. இவர்களைப் போடுகிறார்கள். அவர்கள் அந்த தாலூகாவிலே வேலை செய்தவர்களாக இருப்பதால், விவசாயி களுக்கு அவர்களுடைய விருப்பு வெறுப்புக் காரணமாக நியாயம் கிடைப்பதில்லை. ஆகவே, வேறு அரசாங்க அதிகாரிகளையோ, அல்லது நீதி இலாகாவிலிருந்தோ போட்டால்தான் சரிவர நியாயம் வழங்கப்படும் என்று கருத்து இருக்கிறதனால், அதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அந்த கோர்ட்டுகளில் நடக்கும் கேசுகளை தமிழிலேயே நடத்த வேண்டும். ஆங்கிலத்தில், இருப்பதால், அந்த விவசாய தொழிலாளர்களுக்கு தங்கள் வாதங்களை தெளிவாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அந்த நடவ டிக்கைகளை தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் அதிகாரிகளையும் நான் கூறிய வண்ணம் மாற்றிப் போடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. அ. ஆறுமுகம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆந்திராவிலே ரீஜனல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடியிலே, நான்- அபிஷல் மெம்பர்களைப் போட்டு இருக்கிறார்கள். இங்கே கலெக்டரை மட்டும் போட்டு இருக்கிறார்கள். அதனால் சரியான முறையில் நீதி வழங்கப்படுவதில்லை. ஜனநாயக நாட்டில் இங்கேயும் இரண்டு மெம்பர்களை, ஒரு எம்.எல்.சி., ஒரு எம்.எல்.ஏ. . . .

MR. DEPUTY SPEAKER : This is not relevant to the Demand under discussion.

திரு. அ. ஆறுமுகம் : திருவண்ணாமலையில் ஒரு சப்-கோர்ட் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது 50 மைல் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலையில் ஒரு சப்-கோர்ட்டை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

[24th March 1966

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திலே பேசும்போது, நியாயம் வழங்கும்போது, மக்களுக்கு, அதிகமாக நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை உண்டாகும் முறையில் நீதி மன்றங்கள் நடைபெற வேண்டும். நீதி மன்றங்களிலும் மக்களுக்கு நம்பிக்கை குறைந்தால், ஜனநாயகத்திற்கு அபாயம்தான் ஏற்படும். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன்கள், சில வக்கீல்கள் இவை ஒன்று சேர்ந்து விட்டால் போதும். உதாரணமாக மதுவிலக்குக் கேசுகளை நடத்தும் முறைகளைப் பார்த்தால் அதில் இருக்கும் அபாயம் விளங்கும். இவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு, அதை ஒரு பிஸினஸ் மாதிரி ஆக்கிவிட்டு, நடத்துகிறார்கள் என்றால் நீதி எப்படி நிலைபெறும்? போலீஸ் காரர்கள், வக்கீல்கள் இவர்கள் சேர்ந்து கொண்டு, 500 கொண்டுவா, 1,000 கொண்டுவா அப்பொழுதுதான் பேசமுடியும் என்று கேட்கும் நிலைமை இருக்குமேயானால், நீதியை நிலைநாட்டுவது எப்படி? நான் பொதுவாகச் சொல்லுகிறேன். எந்த ஒரு குறிப்பிட்ட நீதிபதியையும் பற்றிச் சொல்லவில்லை. அந்த வகையில் நீதி மன்றங்களின் நிலைமை இருக்கிறது. வேண்டுமானால் நம்முடைய பிரதம நீதிபதியோடு பேசி, ஒழுங்கு படுத்தவேண்டும்.

என்னுடைய அபிப்பிராயம் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுகளையே எடுத்து விடலாம். ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டை மட்டும் வைத்துக்கொண்டு ஒழுங்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதி மன்றங்களிலே பணம் வாங்குகிறார்கள், ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்று சொல்லுகிறோம். அதே நேரத்திலே, அங்கே போகின்ற கட்சிக்காரர்களுக்கு உட்காரவோ, தங்கவோ வசதிகளைக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. இதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டமே போட்டு, பள்ளிக் கூடங்களுக்கு பர்னிசர், லேபரடரி சாமான்கள் இவை வாங்க திட்டம் போடுவது போல, திட்டம் போட்டு இங்கெல்லாம் கூட பர்னிசர் முதலியவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும். இன்னும் ஐந்து வருஷத்திலாவது அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டும் என்று யோசனை கூற விரும்புகிறேன்.

இன்னொன்று, இப்பொழுது பப்ளிக் ப்ராஸிக்யூடர், அஸிஸ்டெண்ட் பப்ளிக் பராஸிக்யூடர் இவர்களை நியமனம் செய்வது, பல மாவட்டங்களிலும் நடந்திருப்பதைப் பார்த்தால், ஏதோ காங்கிரஸ் கட்சிக்கு பழைய காலத்தில் உதவி செய்தவர்கள், அல்லது எதிர்காலத்தில், வருகிற 67 தேர்தலில் உதவியாக இருக்கக் கூடியவர்கள், இவர்களாகப் பார்த்து அவர்களுக்கு வழங்கும் பதவிபோல காணப்படுகிறது.

பொதுவாக, இன்றைக்கு சட்டப் படிப்பின் தரம் குறைந்து போயிருக்கிறது. எஞ்ஜினியரிங், மெடிகல் முதலிய படிப்புகளுக்கு இடம் கிடைக்காதவர்கள்தான் சட்டப் படிப்புக்கு போகிறார்கள். முன்பெல்லாம், சட்டத் துறைக்கு மரியாதை இருந்தது, ஒரு கவுரவம் இருந்தது. அந்தத் துறையிலே பெரிய

24th March 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நிபுணர்கள் இருந்தார்கள். இந்தத் தலைமுறையில் பார்த்தால், சட்டப் படிப்பில் ஆகட்டும், சட்டங்களை அர்த்தம் செய்வதில் ஆகட்டும், தரம் குறைந்து வருகிறதைப் பார்க்கிறோம். இது நாட்டுக்கு நல்லதல்ல. தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டப் படிப்பு படித்துவிட்டு, ஏதோ சிபாரிசில், அஸிஸ்டெண்ட் பப்ளிக் பராஸிக்யூடர், ப்ராஸிக்யூடர், முன்சீப் என்று ஏதாவது உத்தியோகம் கிடைக்க வழி செய்து கொள்ளுகிறார்கள். அப்பேர்பட்டவர்களால் நல்ல பலன் கிட்டாது. சட்டத்தை நன்றாகப் பயின்று, அதை ஒரு கலையாகப் போற்றி, எப்படி எப்படி அர்த்தம் செய்வது, எப்படி சமுதாயத்திற்கு உதவி செய்வது, நிர்வாகத்திற்கு, எக்ஸிக்யூடிவ்வுக்கு உதவிசெய்வது என்று உயர்ந்த பணிபுரிவதில் சட்ட நிபுணருக்கு பங்கு உண்டு. நம்முடைய ஜனநாயகத்திலே, அரசாங்கம், லெஜிஸ்லேசர், நீதி மன்றம் ஆக இந்த மூன்றும் இணைந்து, அவரவர்கள் பாத்திரத்தை சரியாகச் செய்ய வேண்டும். இவைகள் மூன்றுக்குமே உதவக் கூடியவர்கள் சட்ட நிபுணர்கள், அந்தச் சட்ட நிபுணர்கள் இன்றைக்கு எப்படி இருக்கிறார்கள் என்றால், எப்படியாவது 1-30 p.m. பட்டத்தைப் பெற்று ஏதாவது ஒரு உத்தியோகத்தை பெறுவதற்கு அரசாங்கத்தின் தயவுக்காகக் காத்துக் கொண்டு இருக்கலாம் என்ற எண்ணம் வந்திருப்பது துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். பெரும்பாலும் சட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு அந்த எண்ணந்தான் இருக்கிறது. அவர்களையும் இந்த அரசாங்கம் தங்களுடைய நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். அப்படிச் சில பதவிகள் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு நான் சில உதாரணங்கள் காட்ட முடியும். அவர்களுடைய தரத்தைப் பற்றியோ, அறிவைப் பற்றியோ, ஆற்றலைப் பற்றியோகூட அவ்வளவாகக் கவலைப்படாமல், வேறு சில காரணங்களுக்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி முறை நீதி வழங்கும் துறையில் இருக்கக்கூடாது; இம்மாதிரி பலவீனங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நீதி நிர்வாக மானியத்தின்கீழ் கனம் உறுப்பினர்கள் எல்லாம் பேசிய கருத்துக்களைத் தொடர்ந்து நானும் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நான் சொல்லப்போகிற வார்த்தைகள், கனம் மன்றாடியார் அவர்களோ அல்லது அவர்கள் அங்கம் வகிக்கின்ற இந்த அமைச்சரவையோ பெரிய மாறுதல்களைக் கொண்டுவந்து விடுவார்கள் என்ற கருத்திலே எனது கருத்துரையை இந்த மன்றத்தில் இப்பொழுது சமர்ப்பிக்கவில்லை. ஆனால், ஒரு புதிய விவாதம் துவக்கி, அந்த விவாதத்தின் பலனாக, நாட்டில் இருக்கிற வழக்கறிஞர்கள், நாட்டிலே நீதி நிர்வாகத்திலே ஈடுபட்டிருப்பவர்கள், நியாயத்திற்காக வாதாடுபவர்கள், இந்த நாட்டின் அரசியல் சாசனத்திலே ஏற்றுக்கொண்டிருக்கிற நம்முடைய சமுதாய நீதி, பொருளாதார நீதி ஆகிய இந்தப் பெரிய அற நெறிகளுக்காகப் பாடுபடுபவர்களுக்காக ஓர் புதிய சிந்தனை ஒரு புதிய மார்க்கம் தேவை என்பதற்காக இதனை ஒரு நகல் திட்டம் என்று வேண்டுமானால் வைத்துக்

[திரு. கே. ஏ. மதியழகன்] [24th March 1966

கொள்ளுங்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீதி நிர்வாக நகல் திட்டமாகவோ அல்லது மதியழகன் வகுத்துள்ள நகல் திட்டமாக வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்—அந்த வகையிலே இன்றைக்கு இந்த நீதி நிர்வாகத் துறையிலே, சாதாரண விவகாரங்களைப் பற்றிச் சொல்வதைவிட கொள்கை ரீதியிலே ஏற்படுகிற ஒரு மாறுதலைப்பற்றிக் குறிப்பிடுவது என்னுடைய பேச்சாக இன்றைக்கு நான் அமைத்துக் கொள்ளு கிறேன்.

இன்றைக்கு சட்டம் இருக்கிறது. சட்டம் என்பது ஏதோ எழுத்துப் பின்னல் அல்ல. நாலைந்து சட்ட நிபுணர்கள் சேர்ந்து செய்கிற காரியம் அல்ல. சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப, சமுதாய வாழ்க்கைக்கேற்ப சட்டம் அமைகிறது. சமுதாயத்தின் உருவம் வேறாக அமையும்போது, சட்டத்தையும் மாற்றிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. சமுதாயத்தின் அறைகூவல் எப்படி இருக்கிறதோ அந்த அறைகூவலைச் சமாளிக்கும் வகையில் இன்றைக்குச் சட்டங்களும் மாறிக்கொண்டு வருகின்றன. சமுதாயத்திற்கு எப்படிச் சட்டங்கள் வளைந்து கொடுக் கின்றனவோ, அதே மாதிரி தான் அந்தச் சட்டத்தை நிர்வகிக் கின்ற நிறுவனங்கள், அதற்காக இருக்கும் அதிகாரிகள் இவர்க ளெல்லாம் கூட இன்றைக்கு நம் அரசியல் சாசனத்திலே எந்த சமுதாய, பொருளாதார நீதிகளை வைத்துக்கொண்டிருக்கிறோமோ, அதை நம்புகிறவர்களாகவும், அந்த எண்ணங்களைப் பிரதிபலிக்கிற வல்லவர்களாவும் இருக்கவேண்டும். திருடியவனுக்குத் தண்டனை, 'கொலை' செய்தவனுக்குத் தண்டனை என்று இல்லாமல், இந்த நாட்டில் கொள்ளையடிக்கிற காரியங்களையும், இந்த நாட்டிலே ஒருவனுக்கு ஒருவன் தீங்கு செய்துகொள்ளுகிற காரியங் களையும் தடுத்து ஏழைகள், சாதாரண நடுத்தர மக்கள், மற்றவர்கள் எல்லோரும் சுக போகமாக இருக்கும் வகையில் சக்தி படைத்த நீதி ஏற்பட வேண்டும் என்றால், ஒரு புரட்சித் திட்டம் தேவை 'புரட்சித் திட்டம்' தேவை என்கிற நோக்கில், அந்த நீதி 'for the people and by the people' என்று அப்ரகாம் லிங்கன் சொன்னதைப் போல, 'மக்களுக்காக மக்களால்' என்று இருக்க வேண்டும். 'மக்களுக்காக மக்களால்' என்று சொல்லுகிறபோது, மக்களுக்கு அதிலே பங்கு இருக்க வேண்டும். மக்களுக்கு நீதி நிர்வாகத்திலே பங்கு கொள்ளுகிற பெரு வாய்ப்பு கிடைக்க வேண்டும். மக்களுக்காக என்று சொல்கிற நேரத்தில், மக்களுடைய மொழியில் அல்லது அவர்கள் எந்த மொழி பேசுகிறார்களோ அந்த மொழியிலே நீதி நிர்வாகம் இருக்க வேண்டும். சட்ட நுணுக்கங்கள், சிக்கல்கள், கோளாறுகள், உள்ளே இருக்கும் பலவீனங்கள், ஓட்டை உடைச்சல்களைச் சொல்லி ஏமாற்றுகிற நிலைமை மாற வேண்டும். பணக்காரர்களுக் குத்தான் நியாயம் கிடைக்கும் என்ற தன்மை இல்லாமல், ஏழை எளியவர்களுக்கும் நல்ல வகையிலே நீதி கிடைக்க வாய்ப்பு ஏற்பட வேண்டும். அரசியல் சட்டத்திலே "equality before the law and 'equal protection of law' என்றெல்லாம் சொல்லப் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்தின் சந்நிதானத்தில் சகலரும் சமமானவர்கள். சகலருக்கும் சட்டத்தின் சம பாதுகாப்பு

24th March 1966] [திரு. கே. ஏ. மதியழகன்]

இருக்கிறது என்று சொல்கிறோம். ஆனால் இவைகளெல்லாம் எல்லோருக்கும் இருக்கவேண்டும். ஒருசிலருக்குத்தான் என்று இருக்கக்கூடாது. 'ஈக்வல் ப்ரொடெக்ஷன்' என்று சொல்லலாம் க்வாலிடி ஆப் லா' என்றும் சொல்லலாம். இதிலே ஒரு கருத்தை என்னுடைய திட்டத்திலே நான் சொல்லிக்கொள் வேன். இன்றைக்கு ஹெல்த் சர்விஸ், மெடிகல் சர்விஸ் என்றெல் லாம் இருக்கிறது. கம்யூனிடி டெவலப்மென்டில் கிராம சேவக், கிராம சேவிகை என்று இருக்கிறார்கள். அதே வகையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒவ்வொரு சட்ட அதிகாரி நியமிக்கப் பட்டு மக்களுக்கு அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டிருக்கிற பொருளாதார, சமுதாய நீதி முதலியவைகள் காப்பாற்றப்பட வகை செய்யப்பட வேண்டும். ஜனநாயகத்திலே மக்களுக்குப் பல உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர் களுக்குப் பல சட்ட பிரச்னைகள் இருக்கின்றன. சாதாரண விவசாயிகளுக்கெல்லாம் பல பெரிய பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் சட்ட உதவி அளிக்கப்படவேண்டும். மங்கோலிய நாட்டில் பெரிய ஜட்ஜுகள் ஆங்காங்கு போய் சட்டங்களை ஏழை எளிய மக்களுக்குச் சொல்லுகிறார்கள். மக்க ளெல்லாரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். ஆனால், நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளை சாதாரண ஏழைகள் ஏற முடியாமல், நீதி அங்கே பேதப்படுகிறது, என்றால், வக்கீல் என்கிற விளக்கு அவர்களுக்கு வேண்டும். அந்த விளக்கை விலை கொடுத்து ஏழையால் வாங்கமுடியவில்லை. அது கிடைக்காத நிலையில் எவ்வளவோ நீதி குறைவுபடுகிறது. இதற்காக 'லீகல் பெனிபிட் பண்டு' வேண்டும். சட்ட உதவி அளிப்பதெற்கென்று ஒரு நிதி வேண்டும். இதன் மூலம் வரும் பணத்தைக்கொண்டு ஏழை எளிய வர்களுக்கு வேண்டிய சட்ட உதவி அளிக்கும் வகையில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் வகை செய்யவேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக நீதி தவறுவதற்கு இன்னொரு காரணம், ஒரே மாஜிஸ்ட்ரேட், ஒரே ஜட்ஜ் நீதி சொல்வதாகும். சோஷலிச நாடுகளில், ஒரே ஜட்ஜ், ஒரே மாஜிஸ்ட்ரேட் மட்டும் உட்கார்ந்து கேஸ்களை விசாரிப்பதில்லை. மூன்று ஜட்ஜ்கள் அல்லது மூன்று மாஜிஸ்ட்ரேட்களுக்குக் குறையாமல், உட்கார்ந்து கேஸ்களை விசாரித்து நீதி வழங்குகிறார்கள். அங்கே குறைந்த பட்சம் மூன்று பேர்களாவது உட்கார்ந்திருக்கிறார்கள். பெரிய ஹைகோர்டிலிருந்து சாதாரண கோர்ட் வரையில் இதுதான் நிலைமை. ஆனால், நம் நாட்டில் அந்த முறை இல்லாததால் பல கெடுதல் வர இடம் ஏற்படுகிறது. எதேச்சாதிகாரமாக, தப்பாகக் கூட நீதி சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட இடம் இருக்கிறது. இன்னொரு கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போனால், நமக்குப் பணம் நஷ்டம் எல்லாம் ஏற்படுகிறது. கால தாமதம் ஏற்படுகிறது. இதைக் குறைப்பதற்கு மூன்று ஜட்ஜ்களாவது குறைந்த பட்ச மாக இருந்து விசாரித்து நீதி வழங்குகிற அளவுக்கு நம்முடைய நீதிமன்றங்கள் மாற வேண்டும்.

இதற்கும் அடுத்தபடியாக, பெண்மணிகள் வழக்கறிஞர் களாகவும், பெண்மணிகள் நீதிபதிகளாகவும் வர அதிக வாய்ப்புகள் அமையவேண்டும் நம்முடைய சமுதாய நீதி கருணையை

அடிப்படையாகக் கொண்டது. 'ஜஸ்டிஸ்' என்பது கருணையினுடைய வடிவமாக, மனிதாபிமானத்தின் அடிப்படையில் இருக்கும் காரணத்தினால், பெண்மணிகள் வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாவும் வருவதற்கு இன்னும் ஊக்குவிக்கவேண்டும். அதிக எண்ணிக்கையில் பெண்மணிகள் இந்தத் துறையில் வர வாய்ப்பு அளிக்கவேண்டும்.

அதே மாதிரி ஏழைகளினுடைய தலைவாயிலுக்கும் இந்த நீதி நிர்வாகம் எட்டவேண்டும். அவனுக்கும் நீதி கிடைக்கவேண்டும். நண்பர் வழக்கறிஞர் திரு. நாராயணசாமி அவர்கள் சொன்னார்கள். பெரிய இடங்களில் இருக்கும் கோர்ட்கள் கிராமங்களுக்குப் போக வேண்டும். மொபைல் கோர்ட் ஏற்படவேண்டும். நீதி வழங்குவதில் எதேச்சாதிகாரம் கூடாது. நடமாடும் கோர்ட் கிராமங்களுக்குப் போய் நீதி ஏழைகளின் தலைவாயிலுக்குப் போக வேண்டும். அது மட்டும் அல்ல. சுப்ரீம் கோர்ட், என்பது கன்யா குமரியிலிருந்து இமாசலம் வரையில் 1,500 மைல் தூரம் இருக்கும் இந்தப் பரந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுக்கும் நீதியும் நியாயமும் வழங்க வேண்டுமானால், ஸர்க்கூட் ஸிட்டிங்ஸ் வைக்க வேண்டும். நடமாடும் ஸிட்டிங்ஸ் வைக்க வேண்டும். தென்னகத்தைப் பொறுத்த வரையில் சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு பகுதி பங்களூரிலோ, ஐதராபாத்திலோ, திருவனந்தபுரத்திலோ, சென்னையிலோ வைத்தாகவேண்டும். அதேபோல், ஹைகோர்ட்டைப் பொறுத்தும், ரீஜினல் கோர்ட்டுகள் வைக்க வேண்டும். பல மண்டல கோர்ட்டுகள், பல ரீஜினல் கோர்ட்டுகள் வைக்கவேண்டும் என்று நான் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. இன்றைக்கு அடிப்படை உரிமைகள் என்று இருக்கின்றன நமக்கு. ஃபண்டமென்டல் ரைட்ஸ் என்ற பெயரில், அடிப்படை உரிமைகள் இவற்றையெல்லாம் பெறுவதற்கு, சுப்ரீம் கோர்ட்டுக்கோ அல்லது ஹைகோர்ட்டுக்கோ தான் போக வேண்டும் என்னும்போது, இதெல்லாம் சாதாரணமாக ஏழைகள் போக முடியாது. கோர்ட் கட்டணத்தைப்பற்றிக் கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டில் தான் கோர்ட் கட்டணம் அதிகம். ஸிவில் வழக்குகளில் கோர்ட் கட்டணம், அபராதம் முதலியவைகளை அதிகமாக வாங்கி, க்ரிமினல் வழக்குகளுக்குச் செலவிடுகிறார்கள். கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்களுக்கும் தெரியும். க்ரிமினல் வழக்குகளுக்குச் செலவு செய்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகச் சாதாரணமாகவே கோர்ட் கட்டணம் வாங்குகிறார்கள். சட்டக் கமிஷனும் மாற்றவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அம்மாதிரியான நீதி நிர்வாகக் காரியத்தைச் சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவும் முதல் அப்பீல் இரண்டாம் அப்பீல் இவைகளில் மிகச் சாதாரணமாக, கால் அளவு அரை அளவு தான் கட்டணம் வசூலிக்கவேண்டும்.

போலீஸ்காரர்கள் சட்டத்திலே தவறு செய்வதனால் ஏழைகள் எவ்வளவோ காரியங்களில் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கெல்லாம் அம்புட்ஸ்மென் முறை வரவேண்டும். லஞ்ச ஊழல் பற்றிக் கண்டுபிடிப்பதற்கெல்லாம் விஜிலன்ஸ் கமிஷன் இருக்கிறது என்று சொல்லலாம். போலீஸ்காரர்கள் நாட்டு மக்களுக்கு நல்ல

பணி செய்யும் வகையில் அமைவதற்கான வகையில் ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ் எல்லாம் நல்ல முறையில் அமையவேண்டும். போலீஸ் அதிகாரிகள் எல்லாம் நல்ல வழியிலே செயல்படும் வண்ணம் அமையவேண்டும்.

நீதியில் அரசாங்கம் குறுக்கிடப்படாமல் இருப்பதற்கு, சூபர்ஆனுவேடட் ஜட்ஜுகளுக்கு கவர்னர், அம்பாஸடர், வைஸ்-சான்ஸலர் போன்ற வேலைகளும், திரு. சாக்லாவுக்கு மந்திரி வேலை கொடுத்ததைப் போன்று மந்திரி வேலைகளும் கொடுக்கக்கூடிய நிலைமை மாறவேண்டும்.

நீதி நிர்வாகத்தைச் செய்கிறவர்கள் நல்ல சமுதாயப் பொருளாதார நீதியிலே நம்பிக்கை உடைய நல்லவர்களாக இருக்க வேண்டும். பழைய கொள்கைகளை உடையவர்களாக இருக்கக் கூடாது. புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் வகையில் நீதிபதிகள் தமிழ் மொழியிலே சட்டம் நீதியை வழங்குவதற்கான காலம் வரவேண்டும். அதைப்பற்றி மந்திரி உரையிலே சொல்லவே இல்லை. அந்த உறுதி இந்தச் சர்க்காருக்கு இருக்குமானால் நிச்சயமாக இந்த நாட்டிலே அதைச் செய்ய முடியும் என்று சொல்கிற நேரத்தில் நான் இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றவற்றை எல்லாம் எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் விளக்கிவிட்டார்கள்.

சென்னைப் பட்டிணத்தில் கமிஷனருக்கு மாஜிஸ்ரேட் அதிகாரம் இருக்கிறது. இதை டெபுடி கமிஷனர் உபயோகிக்கிறார்கள். சாதாரணமாக யாராவது பெய்ல் கேட்டால், கொடுப்பதில்லை. டெபுடி கமிஷனரைப் பொறுத்தவரையில் இன்று என்ன செய்து வருகிறார்கள் என்றால்—அவருக்கு வேண்டிய ஒரு பெண்—ஒரு அட்வகேட் அம்மையார் இருக்கிறார்கள். அந்த அம்மையார் மூலமாகச் சென்றால் உடனே பெய்ல் கொடுத்துவிடுகிறார்கள். மற்ற வக்கீல்கள் யார் மூலமாவது சென்றால் கொடுப்பதில்லை. காலதாமதப்படுத்துகிறார்கள். இதை என்னால் நிரூபிக்க முடியும் இதையும் கவனிக்கவேண்டும்.

நீதியில் தலையிடுவது இல்லை என்று சொன்னாலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு ஜில்லா நீதிபதி இருக்கிறார். அவர் முதன் மந்திரியின் ஊருக்கு அருகேயுள்ள பொன்னேரியைச் சேர்ந்தவர்கள். கிட்டத்தட்ட 7 வருஷமாகவே அவர்கள் அங்கே இருக்கிறார்கள். மாஜிஸ்ட்ரேட்டாக நான்கு வருஷம், சப்-ஜட்ஜாக 2 வருஷம், டிஸ்ரிக்ட் ஜட்ஜாக ஒரு வருஷம் ஆகிறது—கடந்த 7 வருஷங்களாக அவர் அங்கேயே இருந்து வருகிறார். அவரைப்பற்றி பல லஞ்ச ஊழல்கள் சம்பந்தப்பட்ட புகார்கள் இருக்கின்றன.

MR. DEPUTY SPEAKER: The hon. Member is making a serious allegation. Has he got any evidence to substantiate it?

SRI K. A. MATHIALAGAN: Yes, Sir. I am having it. If the Chair wants it, I can pass it on to the Hon. Minister.

MR. DEPUTY SPEAKER: Yes, the hon. Member may do so.

[24th March 1966

திரு. கே. ஏ. மதியழகன் : சாதாரண ஊழியர்களை எல்லாம் மாற்றிக்கொண்டு தவருன வழியில் அவர் ஈடுபட்டு வருகிருர். இதையும் கவனிக்கவேண்டும். அடுத்து என் பேச்சை முடிப் பதற்குள் நான் இரண்டே இரண்டு கருத்துக்கள் சொல்ல வேண்டி யிருக்கிறது.

இந்த நாட்டில் நீதி நிர்வாகத்தில் சில மாறுதல்கள் ஏற்பட வேண்டும். முதலாவதாக நான் சொல்ல விரும்புகிற யோசனை—

'(1) Neither the police nor the Ministers are above the law; and Ministers who promulgate orders in contravention of the law or instigate acts or omissions by the police or the statutory authorities contrary to law are themselves privy to a breach of the law, and are liable to be proceeded against civilly or criminally for their tortious acts or criminal offences.

(2) There should be a provision for impeachment of the Ministers or civil officers in the Indian Constitution, as in England or in the United States.'

என்பதாகும். இன்றைக்கு இந்த நாட்டில் அப்படி இல்லை. 300 பேர்கள் சுடப்பட்டார்கள் என்றுலும் அதற்கு பகிரங்க விசாரணை கிடையாது. சட்டபூர்வமாக—டிஸ்சார்ஜ் ஆப் பப்ளிக் டியூட்டி— என்ற முறையில் செயல்பட்ட நிகழ்ச்சியாகச் சொல்லிவிடு கிருர்கள். இங்கிலாந்து நாட்டில் இருப்பதுபோல அமெரிக்க நாட்டில் இருப்பதுபோல பகிரங்க விசாரணைக்கூடம் இங்கே நிறுவ வேண்டும். இம்பீச்மெணட் ஆப் மினிஸ்டர்ஸ் என்பதும் இருக்கவேண்டும். அது இல்லாத காரணத்திஞல்தான் இன்றைய தினம் எத்தனையோ துப்பாக்கி சூடுகள் நடைபெற்று வருகின்றன. ஆனுல் எந்த ஒரு துப்பாக்கி சூடுபற்றி விசாரணை தஸ்தாவேஜு இந்தச் சபையில் வைக்கப்பட்டிருக்கிறதா என்றுல் இல்லை. அதற்கு என்ன பொருள்? ஐக்கியநாட்டுச் சபையிலே கொடுக்கப் பட்டுள்ள உத்தரவாதம் போல் இங்கே இம்பீச்மெண்ட் ஆப் மினிஸ்டர்ஸ் கொண்டுவந்து—பகிரங்கமாக விசாரணைக்கூடம் நிறுவ முன்வந்தால்தான் பலவிதமான அலங்கோலக் காரியங்கள் தடுத்துநிறுத்தப்படும்.

ஐ. நா. சபையின் மனித உரிமைப் பிரகடனத்தில்:

'Whereas recognition of the inherent dignity and of the equal and inalienable rights of all members of the human family is the foundation of freedom, justice and peace in the world.

Whereas disregard and contempt for human rights have resulted in barbarous acts which have outraged the conscience of mankind, and the advent of a world in which human beings shall enjoy freedom of speech and belief and freedom from fear and want has been proclaimed as the highest aspiration of the common people.

Whereas it is essential, if man is not to be compelled to have recourse, as a last resort, to rebelion against tyranny and oppression that human rights should be protected by the rule of law,

24th March 1966] [திரு கே. ஏ. மதியழகன்]

Now, therefore, The General Assembly proclaims the Universal Detclaration of Human Rights . . . . .'

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இதனுடைய முக்கியமான அம்சம் அடிப்படை உரிமை உத்தரவாதம் செய்யப்பட வேண்டும் என்பதுதான். இல்லாவிட்டால் ஒரு கொடுங்கோல் அரசை, ஒரு எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்க வேண்டுமென்றுல் பலாத்கார முறைகளைத் தவிர வேறு வழி இல்லாமல் போய்விடும். தமிழகத் திலே கடந்த ஆண்டு நிகழ்ந்த கொடூரமான இரத்த வெறிச் சம்பவத்தை நாம் அறிவோம். இன்றைக்கு பஞ்சாபிலே நடப்பது என்ன, கேரளத்தில் தலை தூக்கியது என்ன, மத்திய பிரதேசத் திலே தோன்றியுள்ளது என்ன, இதற்கெல்லாம் காரணம் என்ன?

'Whereas it is essential if man is not to be compelled to have recourse, as a last resort, to rebellion against tyranny and oppression, that human rights should be protected by the rule of !aw . . .'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இத்தகைய ஒரு பலாத் கார முறைக்கு, வன்முறைக்கு இழுத்துச் செல்லும் ஒரு நிர்ப்பந் தத்திற்கு உலக சமுதாயத்தை ஆளாக்காதிருக்க நீதி நிர்வாகம் நியாயம் குன்றுத வகையில், மனித உரிமையின் அடிப்படையைக் காப்பாற்றும் முறையில் நீதி நிர்வாகமும், மன்ற துறையும் செயல் படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : கனம் அவைத் தலைவர் அவர்களே,

MR. DEPUTY SPEAKER : How long will the Hon. Minister take for his reply?

*THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, I will finish my reply within ten minutes.

இந்த விவாதத்தில் கலந்துக்கொண்டவர்கள் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிச் சொன்னுர்கள். இந்த விவாத்தை ஆரம் பித்து வைத்த திரு. மாதவன் அவர்கள் ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பாகச் சொன்னுர்கள். ஏதோ கரூரில் ஸ்பெஷல் பி.பி. விஷயமாகவும்—எபி.பி., பி.பி இவர்கள் நியமனத் தைப்பற்றி குறிப்பிட்டார்கள். திரு. கலியாணசுந்தரம் அவர்களும் குறிப்பிட்டார்கள். இது எல்லாம் அந்த அந்த ஜில்லாவில் உள்ள கலெக்டர்கள், ஜில்லா நீதிபதிகள்—பாரில் இருக் கக்கூடிய வக்கீல்களின் தரத்தை அவர்களுடைய திறனைக் குறித்து எழுதுகிருர்கள் உத்தியோகத்திற்குத் தேவைப் படுகிறபோது அரசாங்கம் அந்தத் தகுதியைப் பார்த்துப் போடுகிறது. யாரையோ யாரோ வேண்டுமென்றே போடுவது இல்லை. அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்த்துப் போடுவதில்லை. ஆகவே, இத்தகைய ஒரு கருத்தை அதற்குக் கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் ஒன்றும் வேண்டியவர், வேண்டாதவர் என்பது ஒன்றும் இல்லை. ஏதாவது ஒரு கட்சியை அவர் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறித்து அனுப்பப்

[24th March 1966

[திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்]

படுகிறது. அதற்காக கட்சியைப் பார்த்துப் போடுகிருர்கள் என்று குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

கவர்னர் நியமனம் பற்றியும் சொன்ஞர்கள். இது மத்திய சர்க்காருடைய நியமனம் இல்லை. இந்திய ஜனதிபதி அவர்கள் அரசியல் அமைப்பு—155, 160-ஆவது செக்ஷன்கள்படி நியமனம் செய்கிருர்கள். அவர் யாரையோ கலந்து செய்வது போன்று சொல்வது நியாயம் இல்லை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. மாதவன் : நான் சொன்னது, A High Court Judge has been appointed as Governor. It comes under Article 214 of the Constitution என்பதைப்பற்றி.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : நீங்கள் குறிப்பிட்டது திரு. சந்திரா ரெட்டி அவர்கள் கவர்னராக இருக் கிருர் என்பதைப் பற்றி என்று நினைக்கிறேன். அது சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டால் செய்யப்படுவது என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். திரு. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் பேசும்பொழுது சிதம்பரத்திற்கு கோர்ட்டு மாற்றப்பட்டதைப்பற்றிச் சொன் ஞர்கள். இதைப்பற்றியெல்லாம் ஹைகோர்ட்டை நாங்கள் யோசனை கேட்கிருேம். கேஸ்கள் வருவது, சிவில் ஸுட்கள் எத்தனை வருகிறது என்ற கணக்கை எல்லாம் பார்க்கிருேம். கடலூரிலிருந்து சிதம்பரத்திற்கு மாற்றப்பட்டிருப்பது டெம்ரரி யாகத்தான் செய்திருக்கிருர்கள். இதைப்பற்றி யோசனைகள் கடலூரிலிருந்து, திண்டிவனத்திலிருந்து, சிதம்பரத்திலிருந்து அங்கேயிருக்கின்ற பார்களில் இருந்து வந்திருக்கின்றன. சமீபத் திலேதான் டெம்பரரியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதை எக்ஸ்பரிமெண்டல் ஸ்டேஜ் என்று கூட வைத்துக் கொள்ளலாம். அதைப்பார்த்தபிறகு தான் முடிவு எடுக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கோர்ட் பீஸ் லெவியைப்பற்றிச் சொல்லும்பொழுது அதன்மூலமாக பெரிய லாபம் வந்திருக்கிறது என்று சொன்ஞர்கள். 1955-56, 1956-57-க்குப் பிறகு மிகவும் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. முன்பு 7 லட்சத்து 72 ஆயிரமாக இருந்தது 1956-57-இல் 4 லட்சத்து 31 ஆயிரத்து 668 ஆகக் குறைந்தது, அதற்கு பிறகு மைனஸ் ஆகிக் கொண்டே வந்திருக்கிறது. ஆகவே இதையெல்லாம் பார்த்தால் லாபம் வந்துகொண்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

திரு. செ. மாதவன் : ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன் ஞர்கள்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : I am not yielding.

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister may continue.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : திரு. பொன்னையா அவர்கள் பேசும்பொழுது வால்பாறைக்கு கோர்ட் வேண்டுமென்றட சொன்ஞர்கள். கேஸ்கள் துரிதமாக முடிப்பதற்கு

24th March 1966]

[திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்]

வழி இருக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். சிவில் கேஸ்கள் வருகின்றபொழுது அது ஜட்ஜஸ் உடைய தவறு என்று சொல் வதற்கு இல்லை. வக்கீல்களுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பொறுத்து நாட்கள் இழுத்துக்கொண்டு போகுமே தவிர வேறு சிலாக்னஸ் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் பற்றி சொன்ஞர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இது துரிதமாக நடக்கவேண்டுமென்று முயற்சி நடக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கலெக்டர்கள் ஆர்.டி.ஓ.-க்கள் எல்லாம் பார்த்து தெரிவித்தால் கிராம முன்சிப்பை நியமிக்க அநேகமாகப் பாதி ஜில்லாக்களிலே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இன்னும் சில ஜில்லாக்களிலிருந்து தகவல் வர இருக்கின்றன. கூடிய சீக்கிரம் வருமென்று எதிர்பார்க் கிருேம். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்பொழுது தங்கு வதற்கு வசதிகளை எல்லாம் செய்துகொடுக்கவேண்டுமென்று சொன்ஞர்கள். இந்த ஸ்கீம் பல இடங்களில் இருந்தாலும் கூட இப்பொழுது எமர்ஜென்சி காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருக் கிறது. புதிய மேஜை, நாற்காலி போன்றவைகள் போடவேண்டு மென்று எனக்குப்பின்ஞலே, இந்தப் பக்கத்திலே இருந்து ஒரு உறுப்பினர் சொன்ஞர்கள். அதுவும் கவனிக்கப்படும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்பொழுது, மதுரை என்று நினைக்கிறேன், மதுரையிலே ஒரு செங்கல் விழுந்தது என்று சொன்ஞர்கள். அதையும் ஜாக்கிரதையாக மனதிலே வைத்துக்கொண்டு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு இடம் பார்த்து வைத்திருக்கிருர்கள். புதிய கட்டிடம் கட்ட வேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, புதிய கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் பல விஷயங்களைப்பற்றிச் சொன்ஞர்கள். இதையெல்லாம் மனதிலே வைத்து பல நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்றுதான் அரசாங்கம் விரும்புகிறது. முடிப்பதற்கு முன்ஞலே, ஒரு இடத்திலே தற்பொழுது முதலமைச்சர் ஆக இருக்கின்றவர்கள், முன்பு ஹோம் மினிஸ்டராக இருந்தபோது,

"They should take pride in the manner in which justice was administered in Madras. Even outsiders who have visited the State have praised it. They had observed that there was no delay in disposal of criminal cases and that arrears on the civil side were also very low."

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆக, வெளியார்கள் எல்லாம் இங்கேயுள்ள ஜஸ்டிஸ் அட்மினிஸ்ரேஷனைப்பற்றி நல்ல முறையிலே உயர்த்திப் பேசி இருக்கிருர்கள். நல்ல முறையிலே நாம் எல்லாம் பெருமைப்படவேண்டும். இதிலே கோளாறுகள் இருக்கின்றன, எதற்காக இதைச் செய்கிருர்கள், அதைச் செய்கிருர்கள் என்பதெல்லாம் சரியல்ல. அப்படிச் சொல்வது நம்மை நாமே தாழ்த்திக்கொள்வதாகும். நம்மை நாம் உயர்த்திக் கொள்வதற்கு

[திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்]

முயற்சி செய்யவேண்டும். உயர்த்திக்கொள்ளவேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு, உங்களுக்கு என்றால் உங்கள் மூலமாக மற்றவர் களுக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, ஒரு ஜில்லாவிலே இருக்கின்ற ஜட்ஜ் அவர்கள் அதே ஜில்லாவிலே தொடர்ந்து இருக்கக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. சில இடங்களில் மூன்று வருஷங்களுக்கு மேலே இருக்கக்கூடாது என்று இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்தவர் செங்கல்பட்டு மாவட்டத்திலேயே 7 வருஷங்களுக்கு மேலாக இருக்கிறார்கள், நீதி பரிபாலனம் நன்றாக நடக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்களே, அவர்கள் இதற்கு அருள்கூர்ந்து விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். I have raised the point in my speech, sir.

MR. DEPUTY SPEAKER: The hon. Member may put a separate question regarding that.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: நான் சொன்னதுபோல் மற்றவர்கள் எல்லாம் நம்மைப் புகழ்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,74,70,900 under Demand No. X—Administration of Justice."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

2-00 p.m. The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

*173. *Notification issued with G.O. Ms. No. 98, Education, dated the 29th January 1966 approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Tiruvannamalai Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14(3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

*174. *Notification issued with G.O. Ms. No. 99, Education, dated the 9th January 1966 approving the list of all the parks and play-fields set out in the schedule of the notification in the area within the jurisdiction of the Rasipuram Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

*175. *Notification issued with G.O. Ms. No. 134, Education, dated the 3rd February 1966 approving the list of all the Parks and Play-fields set out in the Schedule of the Notification in the area within the jurisdiction of the Erode Municipal Council, the same having been previously published as required by sub-section (2) of section 3 of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

B. Reports, Notifications and other papers.

† 68. Policy note on Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes (1966-67).

* Laid on the Table of the House on 22nd March 1966.

† Despatched to Members on 21st March 1966.

INDEX TO
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

EIGHTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18th, 19th, 21st, 22nd and 24th March 1966.

Volume XXXVII (Nos. 1 to 5).

PAGES

A

ACCIDENTS—
Avoidance, scheme 115–116

ACTS—
Bonus Act, extension to State—owned Industrial Establishments .. 12–13

AGRICULTURE—
'Kisan Front Festival' observance on 'Pongal Day' 494–497
Pests, prevention of damage to Crops 494

ALAGAMUTHU, Sri T. P.—
Accidents, scheme for avoidance 115–116
Backward Class students, scholarships 503–504
Budget, 1966–67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 397–399
National Defence Fund, collection by cine artistes 8–9
Planning Adviser, Madras State 13–16
Pushpam College, Poondi (Thanjavur) 511–512
Schools, Physical Training Instruction Classes, use of Hindi words of Command 122–123
Taxes, income from motor vehicles taxation 493–494
Vigilance Commission, appointment 222–225

ANANDAN, Sri L.—
Taluk Headquarters Hospital, Kallakurichi increase of bed strength 505–506

ANANDANAYAKI, Srimathi T. N.—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health .. .. } 250–253
Medical .. .. }
Public Health .. .. }
Motor Vehicles Acts—Administration 39–43
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 441–443

PAGES

A—*cont.*

APPAVOO THEVAR, SRI A.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health 254-265

ARANGANNAL, SRI RAMA.—
- Alleged distorted reporting in 'The Hindu' (Privilege Matter) .. 236
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health 311-320
- Counterfeit currency notes, seizure from running car 116-117
- Discussion for short duration, order served on Sri Umanath, M.P. 184-188
- Estimates Committee Report, 1964-65, action taken 222
- Motor Vehicles, 'Singing Media' System 494

ARUMUGAM, SRI A.—
- Budget, 1966-67, Voting—
  - Administration of Justice 593
  - Capital Outlay on Road Transport Schemes, Road Transport Schemes 90-91
- High School at Kalambur, additional block 382

ARUMUGAM, SRI R. S.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health 286-290

ARUNACHALAM, SRI V. S.—
- Budget, 1966-67, Voting—
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 410-411

B

BALAKRISHNAN, SRI A. G.—
- Budget, 1966-67, Voting—
  - Administration of Justice 582
  - Capital Outlay on Forests, Cinchona, Forest Department 522-523, 531-533

BHAKTAVATSALAM, Sri M.—
- Alleged distorted reporting in 'The Hindu' (Privilege Matter) .. 236-237, 238
- Committee on Subordinate Legislation, association of Council Members with (R) 245
- Discussion for short duration, order served on Sri Umanath, M.P. 184-185, 199-207

PAGES

B—*cont.*

BHAKTAVATSALAM, SRI M.—*cont.*
- Dismissal of a temple servant, Meenakshi Sundareswarar Devasthanam, Madurai (Privilege Matter) 517-519, 520, 521-522
- Failure to prevent closure of Textile Mills (A.M.) 512-513
- Repatriation of Ceylon Nationals of Indian Origin (A.M.) 228, 230-231

BRASS VESSELS—
- Manufacture 363-366

BUILDINGS—
- Planning Commission's advice 225-226

C

CALLING ATTENTION—
- Collection of betterment tax and consequent distress of ryots of Tirunelveli district 244-245

CATTLE—
- Cattle diseases, new medicines 117-118

CEMENT—
- Cement factory, Tiruchirappalli 2-4

CHAIR—
- Announcements—
  - Alleged distorted reporting in "The Hindu" 17
  - Discussion for short duration on the order served on Sri Umanath, M.P., time allotted 126-127
  - Privilege Matter—
    - Action taken against an employee of Madurai Meenakshi-Sundareswarar Devasthanam 239
    - Subordinate Legislation Committee, nomination to 245
- Rulings and observations—
  - Adjournment Motion—
    - *Repatriation of Ceylon Nationals of Indian origin*—Consent withheld on the ground that the subject-matter relating to another country, was to be considered only in the Parliament despite the fact that the House was directly interested in the problem 230-231
  - Debate—
    - After a Minister had replied to a debate, it was not in order for a Member to rise, under the pretext of seeking clarification, and introduce new points which did not arise in the course of the debate 103
  - Parliamentary Etiquette—
    - It was desirable that Members refrained from referring to the ruling of the Speaker of the Lok Sabha in support of their case and thus avoid entering into arguments for or against it 196

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Privilege Matters—

Alleged distorted reporting in 'The Hindu'—Raising a matter of privilege, a Member pointed out that the newspaper, '*The Hindu*' did not publish the fact that the Opposition Members had accepted the challenge throw t by the Minister for Industries on the reference of a matter to the Privileges Committee and stated that it was a suppression of fact.

The Leader of the House expressed the view that inasmuch as the newspaper did not publish anything distorted or misleading and that there was only an omission to mention the acceptance by the Members, of the challenge thrown by the Minister, it could not be considered as a privilege matter.

The Chair observed that though there was a qualified acceptance of the challenge of the Minister by the Members, it could not be construed as a regular and direct acceptance. However the newspaper which had given the caption 'Challenge' should have indicated that there was a qualified acceptance of the challenge and failure to indicate this was an omission. The Chair expressed the hope that the newspaper would not commit such mistakes in future, and held that it was not necessary to refer the matter to the Committee of Privileges. 231-239

Dismissal of an employee of Meenakshi Sundareswarar Devasthanam, Madurai.—On 24th March 1966, a Member raised a matter of privilege in regard to the dismissal of an employee of Meenakshi Sundareswarar Devasthanam, Madurai. The Member stated that the Executive Officer had framed charges against the temple servant for presenting a petition containing allegations against the administration of the temple to the Member who, in turn, presented it to the Chief Minister. The Member pointed out that that action of the Executive Officer amounted to an unwarranted interference with his work and reflected on his action as a Member of the House, and hence a breach of privilege had been committed and, as such, the matter should be referred to the Committee of Privileges.

The Chief Minister contended that the Government servants and also those on a par with them, should conform to rules and regulations in their conduct and service and they should not bring political influence in the affairs of the administration. He added that in the present case, the charge was only against the servant, and the personal rights of the Member were not involved; hence, there was no breach of privilege.

The Chair reserved its ruling 513-522

Prosecution of a Member for forwarding to the Chief Minister a petition containing allegedly false accusations.—On the matter of privilege raised by a Member on 10th March 1966 in regard to the prosecution of another Member for his forwarding to the Chief Minister a petition containing allegedly false accusations against the Police officials (Vol. XXXV—pp. 347-362), the Chair held that there was no *prima facie* case for referring the matter to the Committee of Privileges and made the following observation.—

'Parliamentary privilege is the sum of peculiar and special rights which are exemptions from the ordinary law of the land .. ..'

From the history of the House of Commons in England, it was found that with the growth of Parliamentary democracy and realisation of the rights of the citizens and also the maturity

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

Privilege Matter—*cont.*

of political wisdom, several of the privileges had been curbed and even in 1704, they had resolved not to create any new privileges.

In India, a Non-Official Bill called 'The Parliamentary Privilege Bill' brought forward in 1959 to define parliamentary privileges, was rejected by the Lok Sabha.

Though the Members enjoyed absolute privilege in certain respects, they were not to exercise it in an unguided fashion or in an uncontrolled manner.

If absolute privilege was created for letters and petitions written or forwarded by the Members, containing allegations and accusations against others outside the House and if those were not genuine, the persons accused might be seriously affected and in such cases it was not fair to restrict or deny their rights to go before a court of law .. ..

Though the specific case need not go before the Committee of Privileges, it could consider this question in a general manner or a Committee of eminent politicians or the Commonwealth Parliamentary Association or the Presiding Officers might consider this question in greater detail and evolve a healthy parliamentary tradition 239-243

Questions and answers—

A Minister of this State cannot answer a question relating to the defect, if any, in the administration or procurement in another State 120

CHEEMAICHAMY, SRI K.— 1

Jawans, welfare of families 9-10

National Defence Fund, total collection 121

Rice, polishing 4

Tank Factory, Avadi .. ..

CHINNADURAI, SRI G. E.—

Budget, 1966-67, Voting— 26-28

Motor Vehicles Acts—Administration 11-12

Workers, tea plantations, effect of Bonus Act .. ..

CHINNARAJE, SRI C. K.—

Budget 1966-67, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration 144-145

CHINNASAMY, SRI T.—

Budget, 1966-67, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 401-402

CHINNAYAN, SRI S.—

Budget, 1966-67, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 435-437

C—*cont.* PAGES

CHIRANJEEVULU NAIDU, SRI C.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. Public Health .. } 298-299
Discussion for Short Duration, Order served on Sri Umanath, M.P. .. 193
CIVIL DEFENCE—
Training to students .. 511
COLLEGE—
Pushpam College, Poondi (Thanjavur) .. 511-512
COMMISSION—
Vigilance Commission, appointment .. 222-225
COMMITTEES—
Estimates Committee Report, 1964-65 .. 222
Subordinate Legislation, nomination to .. 245
CORRUPTION—
Arrests .. 225
COURTS—
Labour Court Judges, power to order attachment .. 510
CURRENCY—
Counterfeit currency notes, seizure from running car .. 116-117

D

DEFENCE—
See Industries.
DEFENCE PERSONNEL—
Welfare of families .. 10-11
DHAKSHINAMOORTHY GOUNDER, SRI A. S.—
Budget, 1966-67, Voting.—
Capital Outlay on Forests
Cinchona .. Forest Department .. } 529-531
Capital Outlay on Public Health
Medical .. Public Health .. } 287-288
Irrigation, dams in Erode taluk .. 217-218
Seepage water, utilisation in Lower Bhavani Ayacut area .. 373-374
DHANDAYUTHAPANI, SRI M.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribers, Castes and Other Backward Classes 407-410
DHARMALINGAM, SRI A. P.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. Public Health .. } 279-282
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 425-428

D—*cont.* PAGES

DISCUSSION FOR SHORT DURATION—
Order served on Sri Umanath, M.P. .. 183-207
Order served on Sri Umanath, M.P., time allotted (Ann.) .. 126-127
DURAIPANDIAN, SRI N.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Forest Department
Cinchona .. Forest Department .. } 535-537
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 421-422
DURAIYARASAN, SRI A.—
Budget, 1966-67, Voting.—
Capital Outlay on Forests
Cinchona .. Forest Department .. } 545-547
Capital Outlay on Public Health
Medical .. Public Health .. } 296-297
Raja Mirasdar Hospital, Thanjavur, shifting of some units to Thanjavur Medical College .. 504

E

ELECTRICITY—
Installation of 33 K. V. Sub-Station in North Arcot District .. 211-212
Irregular supply to agricultural pumpsets in Arkonam taluk .. 211-212
ELLAMMA NAIDU, SRI V.—
Budget, 1966-67, Voting.—
Capital Outlay on Forests
Cinchona .. Forest Department .. } 543-545
ELUMALAI, SRI T.P.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward classes. 443-445

F

FERTILISERS—
Sewage water, use as .. 366-367
FINANCIAL BUSINESS—
Budget, 1966-67, Voting—
Administration of Justice .. 582-604
Capital Outlay on Forests
Cinchona .. Forest Department .. } 522-562
Capital Outlay on Public Health
Medical .. Public Health .. } 246-336
Capital Outlay on Road Transport Schemes
Road Transport Schemes .. } 65-104
General Sales Tax and Other Taxes and Duties—Administration. 127-183
Khadi .. 562-583
Motor Vehicles Acts—Administration .. 17-65

F—*cont.*

PAGES

FOODGRAINS.—
Andhra rice, supply for Madras City 119–120
Control, enforcement of maximum prices 118–119
Rice, polishing 121

G

GANESAN SRI SAW.—
Budget 1966-67, Voting.—
Motor Vehicles Acts—Administration 17, 43–47

GOVINDAN, PULAVAR, K.—
Budget, 1966–67, Voting.—
Capital Outlay on Public Health
Medical .. .. }
Public Health .. .. } 246
Capital Outlay on Road Transport Schemes
Road Transport Schemes .. .. } 65
General Sales Tax and Other Taxes and Duties—Administration. 136–138
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 388–392
Craft teachers, higher elementary school 379–380
Memorial Fund, Dr. B. C. Roy 218–220
Misuse of subsidy granted for reclamation of lands 367–371

H

HALF-HOUR DEBATE—
Lands, misuse of subsidy granted for reclamation, request negatived 384–386

HANDLOOMS—
Co-operative Silk Weavers' Societies 215–216

HARIJAN WELFARE—
House-sites 501–503
Pay of Social Workers in Community Development Centres run by Harijan Welfare Department 497–500
Special allowance for land acquisition staff 500–501

HOME GUARDS—
Number of battalions 7

HOSPITALS—
General Hospital, Madras and Erskine Hospital, Madurai, suicide cases recorded 507
Hospital at Azhagappapuram, Kanyakumari district, building .. 505
Raja Mirasdar Hospital, Thanjavur, shifting of some units to Thanjavur Medical College 504
Taluk Headquarters Hospital, Kallakurichi, increase of bed strength. 505–506

PAGES

I

INDUSTRIES—
Defence—Oriented Industries, starting 4–5
Small Scale Industries, development 1–2
Spinning mills at Pettai 212–214

IRRIGATION—
Ayyankulam tank at Vedasandur, Madurai District 217
Dams in Erode Taluk 217–218
Seepage water, utilisation in Lower Bhavani Ayacut area 373–374
See Taxes.
Thathuvaneri Scheme, Tirunelveli district 216–217
Tirumangalam Main Canal, supply of water 372–373

J

JAGADAMBAL VELAYUDAM, SRIMATHI—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health .. .. }
Medical .. .. } 254–256
Public Health .. .. }

JAWANS—
Welfare of families, payment of salary 10–11

JAYARAJ, SRI P.—
Budget, 1966–67, Voting—
Administration of Justice 592–593
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 432–434

JEEVARATHNAM, SRI R.—
Budget, 1966–67, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. 140–143

JOTHI VENCATACHELLUM, SRIMATHI—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health .. .. }
Medical .. .. } 246, 320–336
Public Health .. .. }

JUDGES—
See Courts.—

K

KAKKAN, SRI P.—
Budget, 1966–67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 386–388, 469–487

KALYANASUNDARAM, SRI M.—
Alleged distorted reporting in 'The Hindu' (Privilege Matter) .. 231–235, 237–238
Andhra rice, supply 119–120

K—*cont.* PAGES

KALYANASUNDARAM, SRI M.—*cont.*
- Budget, 1966-67, Voting—
  - Administration of Justice 594-595
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 304-311
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration .. 153-159
  - Motor Vehicles Acts—Administration .. 47-56
  - Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 450-456
- Discussion for short duration, order served on Sri Umanath, M.P. .. 191-193
- Dismissal of a temple servant, Meenakshi Sundareswarar Devasthanam, Madurai (Privilege Matter) .. 512-516, 519-520, 521-523
- Failure to prevent closure of Textile Mills (A.M.) .. 512-513
- Foodgrains control, enforcement of maximum prices .. 118-119
- Repatriation of Ceylon Nationals of Indian Origin (A.M.) .. 229-230, 231

KAMALANATHAN, SRI M.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 247-250
  - Motor Vehicles Acts—Administration .. 33-35

KANCHI MANIMOZHIAR, SRI—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Road Transport Schemes, Road Transport Schemes .. 66-69

KARCHA GOWDER, SRI T.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 277-279

KARIAMANICKAM AMBALAM, SRI KR. RM.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Forests, Cinchona, Forest Department .. 537-540
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 273-275

KARUNANITHI, SRI M.—
- Bonus Act, extension to State-owned Industrial Establishments .. 12-13
- Budget, 1966-67, Voting—
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration .. 127
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 456-460

PAGES.

K—*cont.*

KARUNANITHI SRI M.—*cont.*
- Civil Defence, training to students .. 511
- Discussion for short duration, order served on Sri Umanath, M.P. .. 193-196, 197-199
- Dismissal of a temple servant, Meenakshi Sundareswarar Devasthanam, Madurai (Privilege Matter) .. 516-517, 518
- Elementary Schools, opening by Panchayat Union Councils .. 380-382
- Planning Adviser, Madras State .. 13-16
- Repatriation of Ceylon Nationals of Indian Origin (A.M.) .. 228-229, 230
- Sewage water, use as fertiliser .. 366-367

KOSALRAM, SRI K. T.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Forests, Cinchona, Forest Department .. 547-550
  - Khadi .. 572-574

KOTHANDARAMA BAGAVATHAR, SRI C.—
- Budget, 1966-67, Voting—
  - Motor Vehicles Acts—Administration .. 21-24
- Handloom Co-operative Silk Weavers' Societies .. 215-216

KRISHNAMOORTHY, SRI V.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Road Transport Schemes, Road Transport Schemes .. 91-96
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 411-413
- Death of Palanisamy Gounder, at Coimbatore Police Station .. 510-511

KRISHNAVENI, SRIMATHI A.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 253-254
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 402-404

KULANDAISAMY GOUNDER, SRI M.—
- Budget, 1966-67, Voting—
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 414-415

KUNJAN NADAR, SRI A.—
- Travancore—Cochin allottees, appeal on integration .. 508-509

L

LAKSHMIKANTHAM, SRIMATHI P. K. R.—
- Budget, 1966-67, Voting—
  - Capital Outlay on Public Health, Medical, Public Health .. 283-285

PAGES

L—*cont.*

LAKSHMINARASAMMA, SRIMATHI B.—

Budget, 1966-67, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration 139–140

LANDS—

Reclamation, misuse of subsidy 367–371

LEGISLATIVE ASSEMBLY—

Before conclusion of the items in the agenda for the day, when the Chair announced that the House would adjourn, a Minister drew the attention of the Chair to the fact and moved a motion for the House resuming its sittings. The motion was adopted, the House resumed its sittings and concluded the consideration of the items in the agenda for the day 502

LOANS—

See Rice Mills.

M

MADHAVAN, SRI S.—

Budget, 1966-67, Voting—

Administration of Justice 582–590

Capital Outlay on Public Health / Medical / Public Health 258–261

Ganges and Cauveri, linking of 374–378

National Defence Fund, total collection 9–10

N.C.C. Training in Colleges, enforcement 123

Paddy and Rice Movement Control Order, 1965, ratification of Government of India 120–121

R.C. Mission School at Melur, acquisition of Land 382–383

Repatriation of Ceylon Nationals of Indian Origin (A.M.) .. 227–228

Schools, concessions to poor students 123–124

Shipping service, Ramesvaram to Ceylon, revival 507–508

Vigilance Commission, appointment 222–225

MAHALINGAM, SRI N.—

Budget, 1966-67, Voting—

Khadi 567–570

MANI, SRI M. S.—

Budget, 1966-67, Voting—

Capital Outlay on Road Transport Schemes / Road Transport Schemes 80–84

Capital Outlay on Public Health / Medical / Public Health / Khadi 295–298

National Defence Fund, collection by cine artistes 562–567

Small-Scale Industries, Development of 8–9

MANICKAM, SRI C.—

Budget, 1966-67, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 434–435

PAGES

M—*cont.*

MATHA GOWDER, SRI J.—

Budget, 1966-67, Voting—

Capital Outlay on Public Health / Medical / Public Health 292–295

Capital Outlay on Road Transport Schemes / Road Transport Schemes 88–90

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 428–431

National Defence Fund, total collection 9–10

Social Workers in Harijan Welfare Department, pay 497–500

Tea plantation, effect of Bonus Act on workers 11–12

MATHIALAGAN, SRI K. A.—

Budget, 1966-67, Voting—

Administration of Justice 595–601

General Sales Tax and Other Taxes and Duties—Administration .. 158–172

MEMORIAL FUND—

Dr. B. C. Roy Memorial Fund 218–220

MOOKIAH THEVAR, SRI P. K.—

Jawans, payment of salary to families 10–11

Tirumangalam Main Canal, supply of water 372–373

MOTION(S)—

Adjournment Motion—

Failure to prevent closure of textile mills—not pressed by member. 512–513

Repatriation of Ceylon Nationals of Indian Origin—Consent withheld as the matter relates to a foreign country and comes within the purview of Parliament 227–231

MOTOR VEHICLES—

'Singing Media' system 494

Weighment 493

MUNU ADHI, SRI—

Budget, 1966-67, Voting—

Capital Outlay on Public Health / Medical / Public Health 291–292

Capital Outlay on Road Transport Schemes / Road Transport Schemes 84–88

MURUGAIYAN, SRI P.—

Corruption, particulars of persons arrested 225

MURUGAIYAN, SRI S.—

Budget, 1966-67, Voting—

Capital Outlay on Road Transport Schemes / Road Transport Schemes 73–77

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 437–439

M—*cont.*

PAGES

MUTHULINGAM, SRI S.—
Budget, 1966–67, Voting—
Motor Vehicles Acts—Administration 24–26
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.. 439–441

N

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI N.—
Budget, 1966–67, Voting—
Administration of Justice 582 601 604
Capital Outlay on Forests
Cinchona 522–523
Forest Department 550–553 554,555 561
Khadi 562,577–578 578–579 579–581

NALLASIVAM, SRI K. R.—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. } 302–304
Public Health .. .. }
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.. 448–450

NANJUNDA ROW, SRI S.—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. } 297–298
Public Health .. .. }
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.. 431–432
Irrigation, Ayyankulam tank at Vedasandur, Madurai district .. 217
Rice polishing 121

NARAYANAN, SRI R.—
Panchayats, irregularities in Tittagudi Town Panchayat 122

NARAYANASAMI PILLAI, SRI K.—
Budget, 1966–67, Voting—
Administration of Justice 590–592

NATARAJA GOUNDER, SRI K. S.—
Budget, 1966–67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.. 423–424

NATIONAL CADET CORPS—
Training in Colleges, enforcement 123

NATIONAL DEFENCE FUND—
Collection by cine artistes 8–9
Total collections 9–10

PAGES

P

PADDY AND RICE MOVEMENT CONTROL ORDER, 1965—
Ratification by Government of India 120–121

PALANISWAMY, SRI K. P.—
Budget, 1966–67, Voting—
Khadi 571–572
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 415–417

PALANISWAMY GOUNDER, SRI K. N.—
Budget, 1966–67, Voting—
Capital Outlay on Public Health .. .. } 267–269
Medical .. .. }
Public Health .. .. }

PANCHAYAT(S)—
Sakkampettai Panchayat, audit of accounts 7–8
Sirkali Major Panchayat, conversion into Municipality 361–362
Tittagudi Town Panchayat, irregularities 122

PAPERS LAID ON THE TABLE—
Demand for Capital Outlay on Public Health (1966–67), Speech by Minister 337
Demand for Medical Grants, 1966–67, Speech by Minister (English and Tamil) 486
Demand for Public Health Grants, 1966–67, Speech by Minister .. 337
Handloom Industry, review of progress 104
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Notification 483
Industrial Development in Madras State, 1965–66, review 104
Motor Vehicles Taxation Act, 1931, Notification 296
Nationalised Transport, review for 1965–66 296
Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation). Act, 1959, Notifications 604–605
Public Service Commission Regulations, 1954, amendment Notification. 207
Road Transport in Madras State review for 1965–66 298
State Electricity Board, Annual Administration Report for 1963–64 208
Water-supply and Drainage Schemes (Special), Policy note (English and Tamil) 488
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes Demand, Policy note 605

PERIANNAN, SRI V. R.—
Budget, 1966–67, Voting—
Khadi 574–577

PLANNING ADVISER—
Madras State 15–16

PLANNING FORUMS—
Seminars 121–122

P—*cont.* PAGES

PLANTATIONS—
- Research Course in Agricultural Colleges 367
- Rubber plantation workers in Kanyakumari district, strike .. 509–510

POLICE—
- Accommodation while on duty outside headquarters 5–6
- Death of Palaniswamy Gounder, at Coimbatore Police station .. 510–511

PONNAMMAL, SRIMATHI A. S.—
- Budget, 1966–67, Voting—
  - Capital Outlay on Public Health } 275–276
  - Medical } 275–276
  - Public Health } 275–276
  - Capital Outlay on Road Transport Schemes } 77–80
  - Road Transport Schemes } 77–80
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 419–421

PONNIAN, SRI K.—
- Budget, 1966–67, Voting—
  - Administration of Justice 592
  - Capital Outlay on Forests } 526–529
  - Cinchona } 526–529
  - Forest Department } 526–529
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 399–401

PONNUSAMY, SRI S.—
- Budget, 1966–67, Voting—
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration. 151–153

PORTS—
- Minor Ports, development 220–222

PRINTING—
- Regional Printing Presses (additional) 379

PRIVILEGES—
- Alleged distorted reporting in 'The Hindu' 231–239
- Dismissal of a temple servant, Meenakshi Sundareswarar Devasthanam, Madurai 513–522

PRIVILEGE MATTER—
- Alleged distorted reporting in "The Hindu" (Announcement) .. 17

PROJECTS—
- Long term Projects, postponement 225–226
- Projects and Schemes, review 226

R

RAJAGOPALASAMY, SRI R.—
- Budget, 1966–67, Voting—
  - Capital Outlay on Public Health } 282–283
  - Medical } 282–283
  - Public Health } 282–283

R—*cont.* PAGES

RAJANGAM, SRI N.—
- Budget, 1966–67, Voting—
  - Capital Outlay on Forests } 540–542
  - Cinchona } 540–542
  - Forest Department } 540–542
  - Capital Outlay on Public Health } 301–302
  - Medical } 301–302
  - Public Health } 301–302
  - Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 386, 445–447

RAJATHI KUNCHITHAPATHAM, SRIMATHI—
- Budget, 1966–67, Voting—
  - Capital Outlay on Public Health } 271–273
  - Medical } 271–273
  - Public Health } 271–273
- Spinning Mills at Pettai 212–214

RAMAIAH, SRI V.—
- Collection of betterment tax and consequent distress of ryots of Tirunelveli district (C.A.St.) 244–245

RAMASAMY, SRI S.—
- Budget, 1966–67, Voting—
  - Capital Outlay on Public Health } 246
  - Medical } 246
  - Public Health } 246
  - Motor Vehicles Acts—Administration 31–33
- Cement Factory, Tiruchirappalli 2–4

RAMASAMY, SRI S. J.—
- Bus Routes (new) 362–363
- Cattle disease, new medicines 117–118
- Electricity, installation of 33 K. V. sub-station in North Arcot district 211–212
- Electricity, irregular supply to agricultural pumpsets in Arkonam taluk 211–212
- Motor Vehicles, weighment 493

RAMASWAMY NAIDU, SRI S.—
- Budget, 1966–67, Voting—
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration. 132–136

RESOLUTION(S)—
- Committee on Subordinate Legislation, Association of Council Members with 245

RICE MILLS—
- Loans to Owners 378–379

RIVER VALLEY SCHEME—
- Ganges and Cauveri, linking of 374–37

S

PAGES

SAMBANDAM, Sri K. R.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. 269-271
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes. 404-406
Sirkali Major Panchayat, Conversion into municipality .. 361-362

SAMPANGHI, Sri R.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. 286-287

SANKARAN, Sri V.—
Agriculture, prevention of damage to crops from pests .. 494
Bonus Act, extension to the State owned industrial establishments. 12-13
Brass Vessels, manufacture .. 363-366
Budget, 1966-67, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration. 145-151
Motor Vehicles Acts—Administration .. 29-31
Buildings, minimum construction and postponement of long-term projects ..
Defence personnel, welfare of families .. 225-226
Express buses between Madurai and Cochin .. 10-11
General Hospital, Madras and Erskine Hospital, Madurai, number of suicide cases recorded in post-mortem examinations .. 113-115
Industries, Defence-oriented .. 507
Kisan Front Festival', observance on 'Pongal Day' .. 4-5
N.C.C. Training in Colleges, enforcement .. 494-497
Planning Forums, regional seminars .. 123
Plantation Crops, research course .. 125-126
Ports (Minor), development .. 367
Printing, Regional Printing Presses (additional) .. 220-222
Projects and Schemes, review .. 379
Pushpam College, Poondi (Thanjavur) .. 226
Rice-mill owners, loans .. 511-512
Rubber plantation workers in Kanyakumari district, strike .. 378-379
Schools, concessions to poor students .. 509-510
Schools, penalty fee on students failing in examination .. 123-124
Technical posts, re-employment .. 126
.. 226-227

SCHOLARSHIPS—
Backward class students .. 503-504

PAGES

S—cont.

SCHOOLS—
Concessions to poor students .. 123-124
Elementary Schools (new), opening by Panchayat Union Councils .. 380-382
High School of Kalambur, additional block .. 383
Penalty for failed students .. 126
Physical training instruction classes, use of Hindi words of Command .. 122-123
R.C. Mission School at Melur, acquisition of land .. 382-383

SELVARAJAN, Sri M. S.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. 261-264
Capital Outlay on Road Transport Schemes / Road Transport Schemes .. 69-73
Collection of betterment tax and consequent distress of ryots of Tirunelveli District (C. A.) .. 244
Irrigation, Thathuvaneri Scheme, Tirunelveli district .. 216-217

SENGOTTUVELU, Sri N. P.—
Budget, 1966-67, Voting—
Motor Vehicles Acts, Administration .. 28-29

SERVICES—
Technical posts, re-employment .. 226-227
Travancore-Cochin allottees, appeal on integration .. 508-509

SHANMUGAM, Sri P. U.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. 266-267
Motor Vehicles Acts—Administration .. 35-39

SHIPPING—
Shipping service, Rameswaram to Ceylon, revival .. 507-508

SIVASUBRAMANIAM, Sri S.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 395-397
Harijan Welfare Special Allowance for land acquisition staff .. 500-501
Jeep Bus, Chidambaram taluk .. 113
State awards to teachers .. 382

SOUNDRAVEL SERVAI, Sri AT. AP.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. 413-414

SOUNTHARAPANDIAN, SRI N.—
Hospital at Azhagappapuram, Kanyakumari district, building .. 505

SRIRAMULU, SRI P. V.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Forests
Cinchona .. ..
Forest Department .. .. } 542-543
General Sales Tax and Other Taxes and Duties-Administration .. 127-132

SUARES, SRIMATHI A.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. ..
Public Health .. .. } 256-258

SUBBIAH, SRI A. K.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 417-419
House-sites to Harijans 501-503

SUBRAMANIAM, SRI R.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 392-395

SWAMIDHAS, SRI A.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health
Medical .. ..
Public Health .. .. } 276-277
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 424-425

T

TANK FACTORY—
Avadi 4

TAXES—
Collection of betterment tax and consequent distress of ryots of Tirunelveli district (C.A.) 244-245
Income from motor vehicles taxation 493-494

TEACHERS—
Craft teachers (part-time) in Higher Elementary schools 379-380
State awards 382

TEA PLANTATION—
Bonus Act, effect on workers 11-12

THANGAVELU, SRI A.—
Budget, 1966-67, Voting—
Motor Vehicles Acts—Administration 17-21
Home Guards, number of battalions 7
Labour Court Judges, powers 510
Policemen, accommodation while on duty outside headquarters .. 5-6
Sakkampettai Panchayat, audit of accounts 7-8

THIAGARAJA PILLAI, SRI M. D.—
Budget, 1966-67, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 406-407

TRANSPORT AND COMMUNICATIONS—
Bus Routes (new) 362-363
Express buses between Madurai and Cochin 113-115
Jeep Bus, Chidambaram taluk 113

V

VADIVEL, SRI M. P.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Forests .. ..
Cinchona .. .. } 523-526
Forest Department .. ..

VEERABAHU, SRI A. P. C.—
Discussion for Short Duration, Order served on Sri Umanath, M. P. 188-191

VENKATARAMAN, SRI R.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Road Transport Schemes .. .. .. } 65,
Road Transport Schemes .. .. } 96-103
General Sales Tax and Other Taxes and Duties-Administration .. 127, 172-183
Motor Vehicles Acts—Administration 17, 56-65

VISWANATHAN, SRI C. G.—
Budget, 1966-67, Voting—
Capital Outlay on Public Health .. ..
Medical .. .. } 299-301
Public Health .. ..

D
V9,11,31'N166
N166.37

132842
சென்னை-600 008